ஸ்ரீ

வசிட்டமுனிவர்

ஸ்ரீராமருக்குபதேசித்தருளிய

தமிழ்

# ஞானவாசிட்ட

## வமலராமாயனம்.

இஃது,

வீரை-ஆளவந்தாரென்னுமுனிவர்

அருளிச்செய்த மூலமும்,

பிறசை - அருணாசலசுவாமிகள்

இயற்றிய உரையுடன்

பேறை-தசாவதானம்,

செகநாதப்பிள்ளையவர்களால்

நூதன கருத்துரையமைத்துப் பரிசோதித்தபிரதிக்கிணங்க,

38 AVADANAM PAPPIAYER ST. CHOOLAY.

இரண்டாம் புத்தகம்.

பிருங்கிமாநகரம்.

வேம்புலிமுதலியாரவர்கள் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களது

சென்னை - சூளை,

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1911.

உ

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

## சச்சிதாநந்தப்பிள்ளை பாடியது.

துங்கநல்வசிட்டனிராமனுக்குரைத்த துலங்குமத்துவிதமாம்பொருள்சேர்
தொந்தமாமொழிவாசிட்ட நூற்கவிதை சொலுமீராயிரத்தைம்பத்தைம்பா
புங்கவவடநூன்மொழிபொருட்டீஇப் போதருஞ்சுருதியோடுத்தி (ன்
புகலனுபவத்தாற்பதவுரைகருத்தைப் புனைந்தனன்மானதுகாட்டிச்
சிங்கவெவ்வனத்தின்மான்பிடிப்பதுபோற் செவ்வியமானிடவடிவாற்
றேர்ந்தெனைவவ்வியசுத்தவாசனையைப் பூரணதிஷ்டியாற்சேதித்
திங்குறுஞ்சுத்தவாசனைமொழியா லேவிடச்செய்துதன்னருள்சேர்த்
திலங்குறும்பிறையாற்றுறையருணாச லேசன்மெய்ஞ்ஞானதேசிகனே.

இஃது, இருங்குன்றம்,

## வேதகிரிநாய்க்கர் பாடியது.

அம்புவியோ ரெளிதுணர்ந்து மும்மலமற்றருள்வடிவ மாகவெண்ணி
வெம்பலறஞானவா சிட்டநூற்கினிதினுரை விரித்துரைத்தான்
எம்மனவந்தத்துவித வுண்மைதெரிந்தெனையாண்ட விறைவனெங்குஞ்
செம்பதுமத் தடந்திகழும் பிறைசையருணாசலதே சிகனெங்கோனே.

இஃது, செங்கல்பட்டு,

## வயித்திய-வெங்கடாசலமுதலியார் பாடியது.

நானிலத்தெவருந்தேர்ந்து நண்ணுமெய்ப்பொருளைச்சேர
ஞானவாசிட்டநூற்கு நற்பதவுரையமைத்தான்
தானமாநிலையைக்காட்டித் தற்பதாநந்தத்தாழ்த்து
மானவண்பிறைசைவாழு மருணாசலேசன்மாதோ.

இஃது, உபாத்தியாயர்,

## பாரிப்பாக்கம்-முனியப்பமுதலியார் பாடியது.

திருவளருமீமாஞ்சை நூலினுத்தரபரிச் சேதவேதாந்த முழுதுந்
தேர்ந்தவற்றுளவனு பவந்தழீஇயறிஞருந் தெளிவிலெம்போலியருமே
செறிகரதலாமலக மெனவெளிதினோர்ந்துகதி சேரவாசிட்டமென்னுந்
திகழ்ஞானநூனவர சக்கவிக்குரைசெய்து சென்னையச்சிற்பதித்தான்

மருவுமடி யவர்கள்பவ மெருவசிற்சோதியே மானிடச்சட்டைசாத்தி வளமிக்கவிந்திர னகர்க்கிணைமெனும் பிறைசை வந்தவதரித்துநாகை வாழுமருணுசல மகாகுருவினருள்பெற்று மகிமைபெறுமிந்த்ரபீட மரபினைவிளக்கமெய்ப் போதபாஸ்கரனுகி வனசமெல்லடிவருந்த வுருகுமன்பிலியையாட் கொளவேண்டிவலிவிலீண்டுற்றுவாவெனவழைத்துள்,ளுவந்தருகிருத்தியாமைக்கயல்சிறைப்பறவையொத்திதயவாசகமலத், துன்னிநோக்கித்தடவியாதரித்தைம்பூதவுடல்பொறிபுலாதியோயாதுழலுமந்தக்கரணமல்லலிீயுணர்வெண வுணர்த்தவொருமொழியமுதினைச் சரசமுடனூட்டியெந் நாளுங்குணுதீத சாந்தபதசகசநிட்டை சார்ந்துநவநவமா யனுபவித்தானந்த சாகரத்தாடியுலகைத் தாணுவிற்புருடனுய்க் கண்மெகிழ்மீறநற் ருயினுங்கருணைகூர்ந்த சமரசசுபாவமெய்ஞ் ஞானவருணுசல சதாநந்தகுருநாதனே.

இஃது, சீர்காழி,

## நாராயணசாமிமுதலியார் பாடியது.

அள்ளருங்கொடிய விருண்மலபாண்டத் தழுந்திடாதாருயிர்க்கென்றும்
தெள்ளருவசிட்ட ஞானநல்லுரையாற் றேவர்கண்மூவர்மற்றியார்க்கு
முள்ளருமங்கைக் கனியெனவொளிரு மொருதனிப்பொருடனைத்தெரித்
தள்ளரும்பிறையாற் றினிதமர்ந்தருணு சலனருட்டேசிகன்ருனே, (தான்

இஃது, புதுப்பேட்டை,

## அப்பாசாமிநாய்க்கர் பாடியது

கற்றவருங்கல்லாதவென்போல்வாருங் கைக்கனிபோற் றெரிந்துசுக துக்கபேத, மற்றிணையில்வீடுபெறக் கருணைகூர்ந்தே யமலவாசிட்ட நூற் குரைவகுத்தா, னுற்றதிரிவிதபாசப்புணரிதன்னி லுழல்வேனைத்தடுத்தடிமைகொண்டபெம்மா, னெற்றவழுமேடைதிகழ் பிறைசைவாழுமெம்பிரானருணுசலேசன்ருனே.

## சாரம்-குமரப்பமுதலியாரவர்கள் பாடியது.

ஆளவந்தானல் லறிஞர்கள்சில்லோ ரறிந்திடவாசிட்டநூலைக்
கோளவந்தீர மொழிபெயர்த்திட்டான் குவலயத்தவருந்தேர்ந்துய்யச்
சோளநாட்டிற்கொண் டிலதமாம்பிறைசைத் தோன்றருணுசலக்குரிசி
னீளுரைவகுத்தா னிவர்தமிலியாவர் நிகழ்த்துமினருளுடையவரே.

## இஃது, சிதம்பரம்,
## சுப்பிரமணியபண்டிதரவர்கள் பாடியது.

உலகில்வாழுயிர்கள்பவப்பிணியொழிந்தேயொழிவில்பேரின்பமார்ந்துய்ய
நலமிகுஞான வாசிட்டவெற்பி னண்ணுமெய்ப்பொருளதாமருந்தை
யலகில்பேரருளால் வழங்கினன்விண்டோ யணிமதிற்பிறைசையம்பதியி
லிலகுறுமருணா சலசிவயோகி யென்னுமோர்ஞானபண்டிதனே.

## இஃது, ஷை பள்ளிக்கூடத்துத்தலைமை
## உ-நாராயணமுதலியாரவர்கள்பாடியது.

உலகமகிழ்தருதரங்கம் பாடியில்வாழ்சபாபதிமா லுரைத்தானகத்
திலகமெனபலகலைக்குட் சிறந்துளவாசிட்டவுரை திருட்டித்தந்தான்
இலகமனமுனிவரர்க்கு மிந்திரபீடத்தவர்க்கு மிறும்பூதெய்தப்
பலகலையுமுணர்ந்தருணா சலப்பிரமம்பிறைசைவளம் பதியினானே.

அடிகளாடியா ரவைமகிழ்ந்துரைத்தல்.

## இஃது, திருக்குராத்தியாதீனம்
## தருமசிவஞானியார் கருத்து.

அன்புள்ளசோதரரே யாமாத்மபோதமுறத்
தென்பிறைசைநங்குரவன் செய்யுரையை - முன்புரமக்
கன்னோனளித்தவறி வக்குவினாற்கண்டுசொலாப்
பன்னுமன்மெய்ப்பரமாவோம்.

## இஃது, பாடி-நாராயணமுதலியார் கருத்து.

வானலோகத்தின்செல்வ மன்னியபிறைசைநாதன்
ஞானவாசிட்டநூற்கு நவிற்றியவுரையைநாடின்
மோனமாமுணர்வைப்பற்றி முன்னியவனுபவிக்குத்
தேனதாருசிக்குமின்றேற் சேடனுந்திகைப்பன்மாதோ.

## இஃது, சிந்தாதிரிப்பேட்டை,
## கந்தப்பமுதலியார் கருத்து.

மறுவிலாஞானநூற்கு மன்னுரைவகுத்தவற்றுற்
சிறுமைதீர்ந்துயிர்கடாமே சிவமெனவிளங்கச்செய்த
பிறைசையையுடையநோக்கி யாஞ்செய்பேரிலக்கணத்தாற்
குறுகியபயனேதென்னக் குறுமுனிகுறுகினானல்.

## இஃது, சண்முகஞானபுரம் - முருகப்பிள்ளைகருத்து.

மனுகுலத்தவர்க்குரைத்த வசிட்டமெய்ஞ்ஞானநூற்குத்
தனமலிபிறைசையையன் றரணியோருய்யச்செய்த
வினிமையாமுரையைநாடி யாஞ்செயுமிசைஞானத்தா
லனகமாம்பயனேதென்ன வனுமனுமலமந்தானே.

### இஃது, மானம்பதி,

## இராமசாமிகவிராயர் பாடியது.

கருதரியசதுர்வேத முடிவில்வளர்சிற்சுகக் கடலாகிநாமரூபக், கற்
பனையிறந்தெதி ரறத்திகழ்சுவானுபவ காட்சியினையாவருக்குங், கைத்தல
த்தாமலகமென்னத்தெறித்திடக் கனிவுகூர்ந்தலகின்ஞான, காவியங்களி
னரியஞானவாசிட்டமாங் கனமுற்றவிந்தநூற்கு, வெருவறச்சொன்முடிபு
பொருண்முடிபுமனுபவவிலாசமுந்தோன்றவைத்து, விரிவுபெறுமுலகமெ
ன வோதுதிரிபுடியினடு வீறுபரமார்த்தநிலையின், வேறற்றவத்துவிதசொ
ரூபமேதானென்ன வியக்குமனுபவசித்தியா, மேதகையவுலகிறும் பூதுறத்த
பனனின்விளங்குமாறுரையிட்டனன், பொருதிரைப்புணரியினுண் மொ
க்குளிற்றோன்றியழி பொய்யுடலையானெனுமுயிர்ப், போதமதறத்தனது
பூங்கழலென்முடிமிசைப் பொலிவுறவிருத்தியாண்ட, புனிதன்மலர்வாவி
தொறு மஞ்சிறையவோதிமட் புட்குலம்வசிக்கவாசப், பூம்பொழின்மிசைக்
கரும் புயல்வந்துலாவுமம் பொன்னிவளநாட்டினிசியின், மருவுவெண்மதி
யினொளிபொழிதவளமாடங்கள்வானினுமுயர்ந்துகாட்ட, வண்டுகிற்கொ
டிகணின றசையுமுயர்தென்பிறைசை மாநகர்க் கிறைவனடியார், மருமல
ர்க்கரமுகிழ்த் தேத்துமிந்திரபீட மரபினுக்குரிமைபூண்ட, மாசிலாநலமரு
வு மெந்தையருணசல மகாகுருசிகாமணியரோ.

### இஃது, ஈசூர்கிராமம்,

## கணக்கு-சண்முகராயப்பிள்ளை பாடியது.

அற்புதமானவின்சொல் லாலுளவசிட்டநூற்குச்
சொற்பதவுரையமைத்தான் றொல்லைமாவினைகள்போக்கி
தற்பதாநந்தாதீத சாகரத்திடைகரைத்த
வற்புதன்பிறைசைவாழு மருணசலேசன்றானே.

சாற்றுக்கவிகள் முற்றிற்று

உ

சிவமயம்.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

மணிநெடுங்கடனிகர் மாமறைமுடியுந் - துணிவுறுமனமுஞ் சொல்லுந் தொடரொணா - வகோசரசுயம்பிர காசமாம்பிரமஞ் - சுகோததிமதியாய்த் துலங்குறுதனையே - நவநவமாயனு பவித்திடநாடித் - தவபரஞ்சிவன் சகமெனவிளங்க - சகமுகமாகித்தனையுணராவுயிர்க் - ககமுகமாம்பரனருளபனுருவுகொண் - டருமறைமுடிவி னமையுமுப்பதத்துப் - பொருளாரோபிதத் திருமையும்போக்கி - யிலங்கதிட்டானத் திருமையுமொருமையாய்த் - துலங்குமத்துவித சுவானுபவமே - நமதுருவென்ன நவின்றதுதானா - வமைதருலீலையை யறிவோருருவாய் - மனதினிலுதித்த வசிட்டனுக்கருளி - தனையுணர்பவர்க்கெலாஞ் சாற்றெனவவனுந் - தவநிலையெவருந் தாங்குதற்குதித்துப் - புவிமுதலெலவையும் பொய்யெனத்தெளிவா-யுணர்ந்தவிராமற் குயர்பேரறிஞர் புணர்ந்துளதயரதப் புரவலனவையின்-மூவறுதிவச மொழிந்தமெய்ஞ்ஞானப் - பாவனாதீதப் பரமவாக்கியத்தை-நான்மறைப்பொருளு நவரசக்கவியுமாந் - தேன்மழைபிலிற்றுஞ் சிறந்தநாவுடைய - தவத்திறையவனாய்த் தழைத்தவான்மீகி - பவைத்துயரொருவப் பரத்துவன்றனக்கு - மோனமார்வசிட்டமுனிமொழியதனான்-ஞானவாசிட்ட மென்னுநாமந்தழீஇ - யிலக்கஞ்சுலோகத் திசைத்தனனதனிற்-பலப்படவழங்குமுப் பஃதிராயிரத்தி - னருளினாற்காஸ்மிர பண்டிதனாறு-யிரமெனத்தெளிவா யெடுத்தவிர்நூற்கு - மூதுரைசெய்தனர் மும்மடிதேவனும் - பேதியாதிராமப் பிரமேந்திரயோகியுஞ்-சமுத்திரதரணிதத் துவபோதினியென - வமைத்தனருரையவ ரன்றியும்பலரே - பண்டிதருணரும் பான்மையாலெளிய - தொண்டருமுணர்ந்துதஞ் சுகம்பெறவந்த - வடநூலதனின் வருமொழிபெயர்த்துத் - திடஞானமூவர்க்குத் தெளித்தருள்செவ்வேள் - மகத்தின்மகத்தாய் வயங்குமப்பொருளே - யிகத்தணுவுக்கணு வாயிலங்குதல்போற் - குறுகியகுறுமுனி கோவுக்கருளிய - மறுவறுசெந்தமிழ் வாரியிற்குளித்துப் - பஞ்சவிலக்கணப் பதப்பொருண்மணிகளைச் - செஞ்சொலினூலின் சிறப்பொடுபுனையும் - போதமார் முனிவன் புகழ்திருவீழாவாழ் - மாதவப்பட்டன் வமிசத்துதித்த - வாளவந்தானெனு மற்புதமூர்த்தி - கோளறவனுபவங் கொண்டினிதியற்றிய - வருங்கவியீராயிரத்தைம்பானைந்தி - னொருங்குளபொருளை யுலகோருணர்ந்து-பவக்கடல் கடந்து பரமானந்தச் - சிவக்கடலதனிற் றிளைத்திடும்பொருட்டுப்-பதவுரை முதலிய பண்பாற்பகரென - சதமகனுலகொரீஇத் தரணியினிடைவரு - பாகீரதியின் பவங்கெடப்பொதியை - யோகிகமண்டலத்துற்றதைச்சையிற் - கங்கைபெற்றவன் கவிழ்த்ததாற்பெருகுந் - துங்கமாம் பொன்னித் துறைதொறுங்கொழித்த - மணிகளினொளிவான் மல்கியகுவளை - யணிமலர்விரிந்த வரியவயலுறுஞ் - சேதகந்தெறித்த திகழ்முலை

யளிமரைப் - போதரும்பென்னப் பொலிதருகடைசிய - ருண்டமதுவி
னோங்கியவெறியான் - மண்டியவிழியைக் கொண்டையென்றயர்ப்பர்-பறி
த்திடுங்களையெனப் பதுமாகரத்தை - வெறித்திடப்புனலில்வெறுப்பொடு
நோக்குவர் - கட்டகளையின் குவைதொறுங்கதிர்மணி - விட்டினிதூர்ந்து
விளைதரும்வளைகள் - சூலினாலறிவிலர் தோற்றம்போற்றலைநெரீஇக் - கா
லொடுநிறைதரக் காய்த்துச்செஞ்சாலிகண் - மேலவர்முறையென விபுலை
யிற்பணிதரப் - பாலுளவுயிரெலாம் பலபலபயன்பெறத் - தேவருமக்களுந்
தென்புலத்தவர்களுந் - தாவருந்தாபதர் தாந்தாம்பயன்பெறூஉம் - வளம
லிசோழ வளநாடுடையது - இளமலிதேவ கணமெலாங்கெழுமுற - வாசி
லாக்கயிலையீ தென்னவம்பிகையொடு - மாசிலாமணியுறைமணிமதிட்கோ
யிலு - மணத்தின்முழக்கமு மவிகுடைமுழக்கமுங் - குணத்தினைப்பொரு
த்துங் கோடாதசெல்வமு - மோங்கியமாடத் தும்பரின்மகளிர் - தேங்கிய
பதியைத் திகைப்புறநகைக்குஞ் - சுந்தரமேனிலைத் துயல்வருமணத்தா -
லந்தரமெல்லா மருமணங்கமழுந் - தரங்கமாநகரந் தன்னில்வாழியோக-
வரங்கண்மிகுத்த வர்த்தகசிரோமணி-யிவன் றன்வேழ்விவே தியர்வேழ்வி
யைத்தரு-மிவனிறைகோன்மன் னவனிறைகோற்றரு-மிவன்கூழ்சூத்திர
ரவர்கூழினைத்தரு-மிவன்மணிமதிப்புமற் றவர்மனமதிப்புறுந்-தானப்பெ
ருந்தனவாணிகர்தம்மிற்-சேனைக்குடையனாய்ச் சிறந்தகுலத்தினன்-அழகி
னைப்பருகுவா னரிவையர்மனமும் - விழிகளுமளியாய்விழைவொடுமொய்
த்த - தண்ணறுமாத்தித் தாரொடுமணித்தொடை - திண்ணரும்புயமேற்
சேர்த்தரியணையின் - வேத்தவையிஃதென் விவகாரங்களி - னுத்தவராம
ணடாத்தரிச்சந்திரன் - அடுத்தவர்தம்மை யட்டதிக்கும்புகழ் - மடுத்துறக்
காத்தலின்வண்டுழாய்மார்பன் - றந்தையுளமறிந் தந்தநெறியினைச் - சி
ந்தைமகிழ்வுறச்சந்ததஞ்செய்பவ - னறிவினும்பொறையினு மருளினும
டியார் - குறியறிந்தொழுகு குணத்தினுமாத்ம - விசாரணைக்குரிய விவே
கினுமறிஞ - ருசாவினுமன்பினு மொப்பிலாதோங்கிய - அப்புவள்ள
லருந்தவத்துதித்த - செப்பருஞ்சபாபதி செம்மல்கேட்ப - வடநூலுரை
யை மகிழ்வொடுதழீஇத் - தடமுளஞானநூற் கருத்தினையுந்தழீஇ - யா
சானருளுப தேசார்த்தத்திற் - பேசாதருமம் பெற்றியையுந்தழீஇச் - சகச
நிட்டையினிற் சர்வம்பிரமமாய் - நிகழனுபவத்தையு நிலைபெறத்தழீஇ -
யவதாரிகைமுத லைவகையாகச் - சுவைதரும்மொழியாற் சுவானுபவ
சித்தி - யெனப்பெயர்தரித்திங் கிசைத்தனனிந்திரன் - மனமகிழ்நந்
தன வனமெனச்சிறந்த - பொன்னிநாடகத்துப் பொலிதிருத்துருத்தியி
ன் - மன்னுமுத்தரவே தீசர்சந்நிதிமரூஉ - மறையவர்மறையொலி வய
ங்குவதொருசா - ரிறையவர்வேள்வி யிலங்குவதொருசார் - தவவைசி
யர்புரி தருமமதொருசார் - சிவபணிசெயுஞ்சூத் திரர்திரளொருசா - பிர
மஞானத்தைப் பேசுவோரொருசார் - பரமயோகத்தைப் பயில்பவரொரு
சா - ரரியவெண்சித்தி யடைபவரொருசா-ருரியசற்கரும முஞற்றுவரொரு

சார் - குயில்கிளிஞானங் கூறுவதொருசார் - பயில்பரமாமிசப் பண்ணவர் நனிசூழ்ந் - திருமருங்குந்துதித் தேத்தவீற்றிருக்கு - மருமலர்ப்பொதும் பர்காவணமெனக்கவியுங் - கயிலைமரபிற் களங்கின்றிவந்த - வயர்வறுசுத் த்தவேதாந்தபரம்பரை - சுகக்கடல்வடிவாய்ச் சுகத்திளையளிக்குஞ் - சகக் குருசங்கராசாரியசுவாமிகண் - மைந்தருளத்தின் மயக்கறநாட்டிய - விந் திரபீடத் தெழிற்கரபாத்திர-தேவனருள்பெறு தெத்தாத்ரையதேசிகன்- சேவடிமுடியணி செங்கமலபொற்பத - வாசான்கழன்முடி யாகவணிந்த வன் - றேசார்சச்சிதானந்தசுயம்புவே - யோருருவநிரதிசயவாநந்தப் - பே ருருவாகப் பிறங்குபேரருளாற்-றிருவளர்நாகையிற் றினகரனெனவுதித் - தரும்பொருணன்கி னந்தமாம்வீட்டைச் - சார்தற்குரியசா தனங்களுறன் கடைந்தோ - ரோரிருமருங்கு மூவப்புறச்சூழ - வேகாகார விருந்தவிசமர் ந்து - ஸ்வாகாகாரமந்திரந்தொடரா - வேதமுடிவின் விளங்குமாவாக்கிய- சோதனைசெய்ததிற் சுத்தமாகியபொரு - ளிரண்டுமொன்ருக விலங்கத் விதத்தைச் - சிரவணமுதலை வகையினுற்றெளிய - வருளருணசல வற்புத ன்சரணந் - தெருள்பெறமுடியிற்சேர்த்தவன்சென்னையி - லிந்திரமீட வெழிற்கரபாத்திர - சுந்தரன்பெயராற்றுலங்குமடாதிபன் - சுத்தவளவர் கோன் ஞென்னுடனிற் - சித்தோருருவாய்ச்சிறந்தவடிவுகொண்-டடியா ர்பவமொரீஇ யானந்தபோத - வடிவாவிளக்க வந்தவதரித்தோன் - துரி யாதீதத் தொல்லுருவிளங்க - வரிதானஞானபூமிகளினுலபர - உணர்வை யகற்றி யுயர்பரவுணர்வின் - மணமுறமருவி வாழ்ந்திடவைப்போன்-ஞான நூலனைத்து நவிலவறியா - மோனமீதென்னமுன்புறக்காட்டிச் - சமாதிய னுபவஞ் சகசத்திற்பெற்றுச்-சுமாவிருந்ததுவதாய்த் துலங்கிடச்செய்வோ- னிளமகப்பசியினுக் கேந்தியகொங்கைபா - ளளவறிந்தூட்டு மன்னையே போலச் - சாருமாணுக்கர் சாதனவொழுங்கினே-டோருமெய்ஞ்ஞானமுண ர்த்துமெம்மடிக - ளில்லறமுற்றுே னென்னினும்பாச - மில்லறத்தவருஞ் சகானினேத்துவோன் - தத்துவாதீதத் தனிப்பெருங்காசி - முத்தித்தல மெனமொழிவிசாலாட்சி - யோடுமெகிழ்வி னுறைவிசுவேசன் - சூடுமெதிநதி தோன்றவப்பெயரே - வளமெனமனைத்து மருவியெஞ்ஞான்று - முளமகி ழ்வுடனல மோங்கிய பிறையாற்று. ☞ அருணசலசுவாமிகளெனுந் திரு நாமம்புனைந் திலங்குதேசிகனே.

---

இவ்வுரைச் சிறப்புப்பாயிர மிந்நூலுரை யாசிரியர்க்கடியனாகிய
சென்னைமாநகரஞ் சாலைவிநாயகர் கோயிலாதீனத்துக்குரிய

**அருணாசலவையரால் செய்யப்பட்டது.**

## ஆத்மஸ்வரூப வணக்கம்.

எவனருளினிலுலகுயிற்பரமிலகுறும்
எவனொளிவினிலினன்மதியரியொளிபெறும்
எவனிலைதனினளவிலமதரிலைபெறும்
அவனகிலமுநிறையடிகளெம்மகமே.

## உபாசனாமூர்த்தி வணக்கம்.

சத்தாதியைந்தாந் தனிப்புண்டரீகபுர
வித்தானகற்பகஞ் சிங்காரவேள் - சித்தாஞ்
சபையிலானந்தனருட் சத்திதண்டியைவர்
உபயபதம்போற்றியுரைப் பாம்.

## வேதாந்தசந்தான சமயாசாரியர் வணக்கம்.

ஆனந்தமோருரு வாகியயன்சுதர்க் காலடியின்
மோனந்தனினின் றுணர்த்துபுத்தேண்மறை முப்பொருளின்
ஞானந்தனியென நாட்டியசங்கர நாதனருள்
தானந்தமில்வித்தை யாரண்யன்றாள்களைச் சாற்றுதுமே.

## அருளிறையடிகள் வணக்கம்.

எனதுசிற்சுகமேயெனதுருவாக வியைந்திடவெனதுதேட்டரவே
தனிவருமருணாசலகுருபதமுந் தனித்தசெங்கமலபொற்பாதன்
புனிதநற்பதமும்புகழ்தெத்தாத்திறையன் பொற்பதமுங்கரபாத்திர
னெனுஞ்சதாசிவப்பிரம்மேந்திரயோகீச ரிருபதாம்புயமுமென்சிரமே.

## அவையடக்கம்.

பொறிபதிசேடனும் புகலொணாச்சுக
வறிவினைவிரித்தநூற் கருத்தஞ்செப்புதல்
எரிசுடர்விளங்கும்வான் முதன்மற்றியாவை
மறுவறுகண்மணி மதித்தன்மானுமே.

துரியாதீதப் பொருட்சுவையைச் சொல்லாத்தமியே னுரைசெயினும்
பெரியோரெள்ளா திவ்வுரையைப் பிரமரசமாய்க் கைக்கொள்வர்
அரிதாங்கரும்பின் ரசந்தனைக்கல் லாக்கித்தரினு மஃதறிந்தோர்
வுரியவஃதேரசமாக வுட்கொண்டுவப்போ டிருத்தலினே.

**பாயிரமுற்றிற்று.**

# ஞானவாசிட்டக் கதையினகராதி.


| கதை. | பக்கம். |
|---|---|
| **பாயிரம்.** | |
| வைராக்கியப்பிரகரணம் | க |
| வ-ல் சுகர்கதை | கஉஉ |
| முமூட்சுப்பிரகரணம் | கசரு |
| ஞானவிண்மகன்கதை | கஎசு |
| லீலைகதை | உகக |
| கற்கடிகதை | உஎஎ |
| அயிந்தவர்கதை | ஙகஉ |
| வஞ்சவித்திரன்கதை | ஙகஅ |
| மனத்தின்கதை | ஙஉச |
| பாலன்கதை | ஙஙஎ |
| சித்தன்கதை | ஙசச |
| உற்பத்திப்பிரகரணம் | ஙசுஉ |
| சுக்கிரன்கதை | சகரு |
| தாமவியாளகடர்கதை | சசரு |
| வீமபாசதிடர்கதை | சஎஉ |
| தாசூரன்கதை | சஅஅ |
| கசன்கதை | ருசுஎ |
| திதிப்பிரகரணம் | ருஅ0 |
| சனகராசன்கதை | ருஅச |
| புண்ணியபாவனன்கதை | சுகக |
| மாவலிகதை | சுசச |
| பிரகலாதன்கதை | சுஎசு |
| காதிகதை | எககூ |


பாயிரமுள்பட பிரகரணம் ச-க்கு கதைகள் ககூ-க்கு

கவிதை ச0கூஉ.

ஞானவாசிட்டக் கதையினகராதி

முற்றிற்று.

# ஞானவாசிட்டப்பாடலினகராதி.


| பாடல். | பக்கம். | பாடல். | பக்கம். |
|---|---|---|---|
| அ | | அ | |
| அகங்கரத்தினை | ௭௧௪ | அயனுரைசெய் | ௨௮௯ |
| அங்காரமுகில் | ௬௫ | அடனொடுமா | ௨௧0 |
| அகத்தனிற் | ௫௬௯ | அய்யதுன்பமு | ௬௫௬ |
| அகத்தியன்கவர் | ௬௪௯ | அரக்கியெனு | ௨௯௨ |
| அகமகமென் | ௫௯௨ | அரசனோக்கி | ௩௨௨ |
| அகமிதங்களிச் | ௨௪0 | அரிந்தபொழுது | ௩௨௨ |
| அகமெனவொழி | ௬௧௮ | அருந்தவப்பய | ௪௩௨ |
| அகல்பூதக்கொது | ௯௭ | அருந்தவன்சொல் | ௨0௨ |
| அகிலசத்தியுடை | ௩௨௬ | அருந்துமட் | ௬௫௩ |
| அகிலசத்தியுமா | ௪௪௯ | அருள்செய்வல்ல | ௩௬ |
| அக்கருத்தினுடன் | ௭௩௩ | அலைசெய்வாத | ௨௨ |
| அங்கத்தறைந்து | ௩௩௫ | அலையுமந்த | ௩௭0 |
| அங்கவன்பின் | ௬௩௩ | அவரெலாநிரம்ப | ௩௪௨ |
| அங்குலங்கள் | ௨௪௧ | அவனுரைப்ப | ௩௫௬ |
| அசைதருமினிய | ௫௫0 | அவன்சங்கற்ப | ௧௮௮ |
| அடக்கமாயுரை | ௩௮௮ | அவன்மனையா | ௨௨௮ |
| அண்டக்கலம் | ௪௮௭ | அவிவேகிக்கு | ௬௨ |
| அடைத்தகால | ௪௨௭ | அவ்வகையாம் | ௨0௭ |
| அடையவேண்டி | ௬௧ | அவ்வறிவுசங் | ௧௩௫ |
| அடைவதற் | ௩0௪ | அவ்வாறுணவிவ் | ௬௮0 |
| அண்டமென்னு | ௬௮௮ | அழிவிலாததா | ௬௫௪ |
| அண்டநிரைபல | ௩00 | அளவிறந்த | ௬௪௨ |
| அதனுக்கிணை | ௨௭௭ | அறக்குறைவை | ௧௬௬ |
| அதிலோரிரவி | ௩௧௪ | அறத்தின்வடி | ௪௨௫ |
| அதினோர்கோடி | ௩௨௭ | அறவிலாசமாய் | ௬௫௯ |
| அதுபுகன்றவவன் | ௭௨௯ | அறவுநொய்தா | ௬௯௭ |
| அதுவுஞ்சிறிதா | ௩௧௬ | அறவேகொடி | ௩௩௧ |
| அத்தமனமுதய | ௪௯௪ | அறிந்துளதெ | ௩௯௨ |
| அத்தமியாத | ௧௯௮ | அறிபவத்தாசை | ௩௭௩ |
| அத்திறந்தானே | ௭௪௧ | அறியான்போல | ௭௩0 |
| அந்தணன்வே | ௭௨௧ | அறிவதாயறி | ௪௭௧ |
| அந்தநெறியால | ௬௮0 | அறிவறுமனத் | ௩௫0 |
| அந்தமற்றொன் | ௩௪௫ | அறிவுதோன்றி | ௭௧0 |
| அந்தோவந்தோ | ௧௬௭ | அறிவெனும்விதை | ௫௬௩ |
| அப்படியன்றோ | ௭௪௧ | அறுவகையவத்தை | ௩௯௪ |
| அப்படியேயுன் | ௨௨௨ | அறைந்தபதமைந் | ௩௯௭ |
| அப்பதத்தினி | ௪௯௫ | அற்பகாலத்தி | ௩௯௩ |
| அப்பரிசோ | ௫0௯ | அற்பமதாஞ் | ௭௭ |
| அப்புமழை | ௨௫௯ | அற்பமாயெழுந் | ௫௬௩ |
| அமைவில்காற் | ௭௧௧ | அற்பமுள்ள | ௭௧0 |

| பாடல். | பக்கம். | பாடல். | பக்கம். |
|---|---|---|---|
| அ | | ஆ | |
| அற்புதமீதொன் | ௩௮௩ | ஆயவன்றனை | ௧௩௦ |
| அற்புதங்கள் | ௧௭௦ | ஆயவாறக்கண | ௬௮௧ |
| அற்புதமாயமு | ௩௦௭ | ஆயிடையாவ | ௭௩௧ |
| அனந்தமாம்பிற | ௬௪௫ | ஆயிரவருடஞ் | ௭௧௮ |
| அனந்தமாய் | ௭௩௯ | ஆயுதங்களெரி | ௪௯௨ |
| அனித்தமான | ௫௩௪ | ஆரியர்பேணுவ | ௧௬௩ |
| அனித்தமிச்சக | ௬௧௧ | ஆர்த்தனகேட் | ௪௯௯ |
| அனைத்தினும் | ௫௭௧ | ஆலிக்குமின்ப | ௪௫௪ |
| அனைத்துயிர் | ௬௧௮ | ஆவதாகியதா | ௪௯௦ |
| அனைத்தையும் | ௪௮௪ | ஆவதாயகால | ௭௦௫ |
| அனையகுற்ற | ௧௧௫ | ஆவாவிப்போ | ௯௯௪ |
| அனையவன்கனல் | ௭௩௫ | ஆனதிறத்தாற் | ௫௨௪ |
| அனையவன்றன் | ௩௪௯ | ஆனந்தநிராந | ௪௯௦ |
| அனைவருக்குமே | ௬௩௭ | ஆன்மாவைய | ௧௫௪ |
| அன்னவன்கேட் | ௧௩௦ | ஆன்றதோர் | ௨௪ |
| அன்னாண்முணி | ௪௨௩ | ஆன்றவம்மனம் | ௪௪௭ |
| அன்னாரொக்கு | ௬௭௮ | இ | |
| அன்னால்வர் | ௧௫௮ | இகலறவுணர்வு | ௧௨௭ |
| அன்னாளந்த | ௩௨௦ | இங்குநின்றுளா | ௨௭௪ |
| அன்னாளிவனை | ௪௨௨ | இங்குற்றசமாதி | ௪௩௭ |
| அன்னாணிழல் | ௨௧௨ | இச்சையாம்வி | ௬௪௬ |
| அன்னேயன்னே | ௬௩௫ | இஞ்ஞானபதமேழு | ௩௯௯ |
| அன்றெனிலொ | ௫௭௨ | இடரில்பதமொ | ௪௪௫ |
| ஆ | | இடிக்குமுகிலி | ௩௨௯ |
| ஆங்கப்படியே | ௬௭௪ | இடும்பைகூர் | ௪௭௬ |
| ஆங்கவனிலை | ௧௩௩ | இட்டமாமிளவ | ௩௬௦ |
| ஆண்டுசென்றளவே | ௭௩௭ | இதமானவுதாரி | ௬௩௦ |
| ஆதரச்செருக்கு | ௯௪ | இதனியல்புரை | ௪௮௨ |
| ஆதரித்தநற்குண | ௭௧ | இதனைமுன்னி | ௧௮௦ |
| ஆதலானுன் | ௪௩௧ | இதுகாரணமா | ௨௮௦ |
| ஆதலால்வருத்த | ௧௧௮ | இதுகொலோ | ௭௩௭ |
| ஆதலால்வீரரான | ௪௮௬ | இதுநமக்கிது | ௪௭௨ |
| ஆதலால்விரை | ௨௯௫ | இதுபுகலக்கேட் | ௨௫௮ |
| ஆதலாற்பரமந் | ௫௬௮ | இதுபொருட்டா | ௬௩௨ |
| ஆதலான்முதற் | ௨௩௬ | இதுவறிவுக்கு | ௩௯௧ |
| ஆதலினாலிவர் | ௨௯௩ | இதுவேசுருக்க | ௬௭௦ |
| ஆதலினாற்பதகருட | ௩௧௦ | இத்தனைநாண் | ௬௦௪ |
| ஆமளவிலடுத்த | ௭௨௩ | இத்திறத்திவ | ௪௫௬ |
| ஆயதேயத்திலைம் | ௬௫௭ | இத்திறமேழு | ௩௯௦ |
| ஆயமறையோ | ௨௨௯ | இந்நிலையிலதா | ௧௧௯ |
| ஆயமனத்தின் | ௩௬௨ | இந்தக்கதையை | ௩௨௪ |
| ஆயவன்பை | ௪௫௮ | இந்தநம்பொ | ௬௧௧ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **இ** | |
| இர்தப்புவனத் | ௫௩௧ |
| இந்தப்பொருளை | ௨௧௧ |
| இந்தமந்திரிதன் | ௬௫௯ |
| இந்தமனமே | ௩௨௩ |
| இந்தயாக்கை | ௨௩௭ |
| இந்தவருந்ததி | ௨௨௬ |
| இந்தவினைவின் | ௩௦௧ |
| இந்தவுரைகேட் | ௨௩௧ |
| இப்பருவத்தநர் | ௮௨ |
| இப்பாரிலூண | ௭௨௪ |
| இப்பெரியசெல்வனை | ௪௬ |
| இமையோரிறை | ௪௨௧ |
| இம்மொழிகளாலி | ௫௦௦ |
| இயற்கைகுணஞ் | ௪௯௮ |
| இயற்கையாகி | ௫௮௧ |
| இயாரினுமிரா | ௩௮ |
| இராகவகேளி | ௧௪௫ |
| இராசதகுண | ௫௫௯ |
| இராமன்மனத் | ௧௪௦ |
| இருதயத்தாசை | ௫௭௫ |
| இருதயத்துணர்வா | ௩௮௫ |
| இருதுவேயாண் | ௫௪௩ |
| இருந்தமந்திரிக | ௩௬௧ |
| இரும்பாலிரும்பு | ௩௯௪ |
| இருவருமவ்வயி | ௨௪௬ |
| இருவர்விழியு | ௪௨௨ |
| இருளன்றியொ | ௨௦௬ |
| இலங்கியசிந்தா | ௬௦௯ |
| இலதுளதாமுளதிலதா | ௪௧௦ |
| இல்லதுள்ளதா | ௬௫௮ |
| இல்லாவிடத்து | ௬௯௨ |
| இல்லுறவுபகை | ௬௩௯ |
| இவனதுநற்குலப் | ௨௫௧ |
| இவனவனனீ | ௭௪௨ |
| இவனென்று | ௬௯௫ |
| இவனேதேட | ௯௦௧ |
| இவன்சுற்றனி | ௬௩௧ |
| இவற்றைவிட் | ௫௫௧ |
| இவையறிந்தோர் | ௩௯௫ |
| இவையெனுமனைத்துஞ் | ௩௭௬ |
| இவ்வண்ணம | ௪௩௩ |
| இவ்வகைபல | ௪௬௭ |

| | பக்கம். |
|---|---|
| **இ** | |
| இவ்வகையேசிற் | ௫௧௧ |
| இவ்வளவான | ௫௬௪ |
| இவ்விரண்டிலா | ௫௮௯ |
| இழிவுயர்விரண்டு | ௬௨௮ |
| இறப்பிலாவிந்த | ௨௦ |
| இறப்பென்னு | ௨௫௫ |
| இறையவன்மா | ௭௨௬ |
| இறையுமோர்சுக | ௫௫௮ |
| இறைவன்முதற் | ௨௧௩ |
| இனத்தாற்படரு | ௨௭௯ |
| இனமிகழுமென் | ௫௬ |
| இனிப்பிறவா | ௫௮௭ |
| இனியனவினி | ௬௧௭ |
| இனையசுபம் | ௩௯௬ |
| இனையமாநகராஞ் | ௫௫௬ |
| இனையவர் | ௪௭௦ |
| இனையவன் | ௨௫௦ |
| இன்பங்கரை | ௨௧௬ |
| இன்பமிதாமின்ப | ௪௮௯ |
| இன்னசிருட்டி | ௭௦௭ |
| இன்னசுபாவந் | ௪௯௪ |
| இன்னதன்றெனி | ௬௫௦ |
| இன்னபோதும | ௧௧௧ |
| **ஈ** | |
| ஈங்கிதுபுகல | ௩௮௭ |
| ஈங்குரைசெய் | ௫௦௬ |
| ஈசனேபடை | ௧௨௬ |
| ஈதவருரைத்த | ௧௨௭ |
| ஈதுபுலைச்சேரி | ௪௦௭ |
| ஈதுமோரைய | ௩௮௪ |
| ஈரித்தகுடனர | ௭௬ |
| ஈறுறுசைசவ | ௯௦ |
| ஈன்றநியதி | ௪௨௮ |
| **உ** | |
| உச்சமுறுபதம் | ௫௨௬ |
| உடலைநோக்குதி | ௭௧௨ |
| உடலையரிந்து | ௫௩௬ |
| உடலொடுவிண் | ௩௪ |
| உண்டவின்ப | ௬௫௩ |
| உம்பரோடிம | ௪௬௩ |
| உரியபுண்ணிய | ௫ |
| உரைசெயூசிகதை | ௩௧௨ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| உ | |
| உரைபகர்வோ | ௧௯௯ |
| உலகளித்தவயன் | ௧௫௨ |
| உலகெதுநாமா | ௪௪௮ |
| உளத்தினிலனே | ௫௭௫ |
| உளத்துறசமத் | ௪௭௩ |
| உளமொழிங்கு | ௪௦௧ |
| உள்ளத்தின்முடி | ௬௦௧ |
| உள்ளப்பகைவன் | ௩௬௯ |
| உள்ளமுடலே | ௩௧௯ |
| உள்ளினும்புற | ௫௬௦ |
| உள்ளிலொளி | ௬௯௫ |
| உள்ளுறுசங்கற்ப | ௩௭௮ |
| உள்ளுறுதொழில் | ௫௭௩ |
| உன்னலென்னு | ௭௦௦ |
| உன்னுருவைநீ | ௬௪௩ |
| உன்னுறுமன | ௧௮௩ |
| ஊ | |
| ஊகபுந்தியால | ௬௬௧ |
| ஊகமின்மூகர்க் | ௫௭௭ |
| ஊகமுளதே | ௧௭௪ |
| ஊக்கமுளதாய் | ௩௭௧ |
| ஊனமிலாஞான | ௧௬௦ |
| எ | |
| எக்கருமத்தினு | ௫௨௫ |
| எங்கேயெங்கே | ௬௭௫ |
| எங்கேயெனினு | ௩௨௬ |
| எண்டிசையு | ௭௨௭ |
| எண்ணிலாவரு | ௪௮௫ |
| எண்ணுறுபெருங்கு | ௧௫ |
| எதிருறுதோற்ற | ௪௭௦ |
| எதிர்நிழல்போல | ௨௬௧ |
| எத்தன்மையினு | ௬௭௮ |
| எத்திறத்தோ | ௮௪ |
| எந்தவெந்த | ௩௭௩ |
| எந்தையப்பொ | ௬௫௭ |
| எமதுவிதியன்றி | ௪௨௬ |
| எய்தாநின்றுள | ௨௯௫ |
| எய்துபோதினி | ௬௫௨ |
| எரிகாக்குமமுதே | ௪௩ |
| எல்லாமாமிய | ௨௫௬ |
| எல்லையிலாவண் | ௫௯௭ |
| எல்லையிற்றிசை | ௧௭௯ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| எ | |
| எல்லையின்றிய | ௨௪௩ |
| எவ்வுழிநின்றனே | ௨௯௪ |
| எழுதிநீகிரியின் | ௭௪௩ |
| எழுந்தசங்கற்ப | ௫௬௫ |
| எழுந்தெழுந்து | ௫௯௪ |
| எழுவகையர்ம் | ௪௦௨ |
| எழுதுவோனு | ௪௧௫ |
| எனதற்றெண் | ௪௯௪ |
| எனதுதாதைமு | ௬௭௭ |
| எனவவருரைத்த | ௫௬௬ |
| எனவினவனு | ௭௧௭ |
| எனவுரைத்தமல | ௧௨௧ |
| என்பதானதுதி | ௬௮௯ |
| என்பதுசொல்லிய | ௨௦௩ |
| என்பளவில் | ௨௫௩ |
| என்பனநிறைந்த | ௫௪௯ |
| என்புகுளிரும் | ௬௮௫ |
| என்றதாமனு | ௪௬௪ |
| என்றலுமிவ்வாங் | ௪௫௮ |
| என்றலுமிராமன் | ௩௭௪ |
| என்றவாணியை | ௨௩௯ |
| என்றவிண்ணோர் | ௬௮௪ |
| என்றழுதுவவள் | ௪௦௭ |
| என்றுன்வசிட்ட | ௩௨௫ |
| என்றுகாலன் | ௧௯௩ |
| என்றுகொண்டதிதி | ௭௩௫ |
| என்றுசுக்கிரனே | ௪௪௩ |
| என்றுமுன்னமெ | ௬௬௬ |
| என்றுரைசெய் | ௪௩௮ |
| என்னலுமுயர் | ௫௬௨ |
| என்னலுமுனிவன் | ௧௨௮ |
| என்னலுமுனிவனை | ௫௪௨ |
| என்னவிவர்க | ௩௨௦ |
| என்னவுரைத்து | ௬௬௭ |
| என்னவோதிய | ௭௧௬ |
| என்னையகன் | ௨௧௫ |
| என்னவுரைத்த | ௧௯௦ |
| என்னவெள்ளி | ௬௭௧ |
| என்னிங்குள்ளதப் | ௬௬௯ |
| என்னுடைமை | ௩௮௧ |
| ஏ | |
| ஏகியதீவுகடோ | ௬௪௦ |

| பாடல். | பக்கம். |
| --- | --- |
| **ஏ** | |
| ஏகுதல்வருதறு | ௫௧௫ |
| ஏதமற்ற | ௬ |
| ஏற்றமாமகங்கார | ௪௮௧ |
| **ஒ** | |
| ஒட்டலர்சேனை | ௨௬௦ |
| ஒருகணந்திசை | ௫௩௮ |
| ஒருகணமுமொழி | ௧௭௧ |
| ஒருகாலமரன் | ௫௨௮ |
| ஒருகால்விரிஞ்ச | ௩௧௩ |
| ஒருங்குணர் | ௧௮ |
| ஒருகோணந்தனிற் | ௨௨௩ |
| ஒருபகற்றனி | ௬௫௨ |
| ஒருவருக்குநா | ௨௬௫ |
| ஒருவருங்காணு | ௩௪௧ |
| ஒழியாததுயர் | ௪௮௮ |
| ஒழிவறுமுயறசி | ௪௭௫ |
| ஒழிவிலுலகின் | ௭௦௩ |
| ஒழிவிற்றியான | ௧௮௬ |
| ஒன்றிலேதோன் | ௬௪௦ |
| ஒன்றெனும்பர | ௬௨௭ |
| **ஓ** | |
| ஓங்குஞ்சின்மா | ௬௭௨ |
| ஓங்குமாசையா | ௭௧௩ |
| ஓடுநன்னதியிலி | ௩௪௦ |
| ஓதிற்றொன்றுங் | ௩௩௧ |
| ஓதுகின்றபொருண் | ௧௫௭ |
| ஓரிடம்விட்டோ | ௪௧௩ |
| ஓவாதவன்றனுள் | ௬௭௫ |
| **க** | |
| கசனுயர்சமாதி | ௫௭௮ |
| கடவுளர்முனிவர் | ௩௮௫ |
| கடிகையிரண்டினி | ௨௫௫ |
| கடியபாதகங்களு | ௩௫௯ |
| கடுமனவன்பேய் | ௬௯ |
| கட்டியாம்பனி | ௨௩௮ |
| கணத்திலிரதத் | ௫௧௭ |
| கணத்தினிறக்கு | ௬௯௩ |
| கண்டவப்படியே | ௭௪௦ |
| கண்டனவெல்லா | ௫௨௫ |
| கண்டனவனைத்து | ௩௭௬ |
| கதலிவனத்தை | ௩௨௮ |
| கதிவிரும்பலாற் | ௨௬௭ |
| **க** | |
| கரசரணமயவுடலை | ௫௦௭ |
| கரசரணுதிமட்ட | ௪௮௦ |
| கரியாய்க்சமமாய் | ௪௧௬ |
| கருகியகங்குலி | ௧௬௪ |
| கருகியநிறமுங் | ௩௫௨ |
| கருடவாகனத்து | ௭௦௮ |
| கருதியதளித்தே | ௪௧ |
| கருத்தயருந்து | ௪௦௪ |
| கருதிற்றென்ன | ௫௩௭ |
| கருத்தசனுற் | ௩௦௫ |
| கருத்தின்வல்லமை | ௩௪௫ |
| கருத்தெனுமான் | ௮௩ |
| கருமமேயேது | ௪௪௦ |
| கருமவ்வகையால் | ௫௭ |
| கருமுகிற்றலங்க | ௨௬௯ |
| கருமேருவை | ௨௮௧ |
| கலைமுனியே | ௧௪௩ |
| கலையெலாநிறை | ௫௪௪ |
| கழுத்துறுகொடி | ௩௫௧ |
| களிகொணுடகத் | ௨௪௩ |
| கற்பகோடி | ௨௭௦ |
| கற்பதான | ௪௩௦ |
| கற்பமாங்கண | ௧௧௩ |
| கற்பனவனைத் | ௪௩௯ |
| கற்றவராரியர் | ௧௧௪ |
| கற்றறிந்திலார் | ௬௬௩ |
| கன்றியபந்தமா | ௬௨௫ |
| **கா** | |
| காகதாலீயம் | ௪௪௦ |
| காட்சியென்னு | ௨௭௭ |
| காண்பரியபனங் | ௧௯௭ |
| காண்பானுங் | ௫௯௧ |
| காதலாற்கட்டி | ௬௧௭ |
| காதலித்தவர்க்கு | ௫௪௧ |
| காதலும்பயமும் | ௩௫ |
| காதலெனுமனைவி | ௬௭ |
| காதலென்னுங் | ௭௦௩ |
| காதல்செறி | ௧௪௨ |
| காமமுதல்வினை | ௬௬ |
| காயமென்றுரை, | ௫௫௭ |
| காலமேகாரண | ௬௩௪ |
| காலமொருகான் | ௫௯௬ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **கா** | |
| காலவேற்றுமை | ௪0 |
| காலனகர்ரிகரா | ௪0௪ |
| காலனிதுகேட்ட | ௧௮௮ |
| காலனீதுரைப்ப | ௪௩௪ |
| காவின்மதர்வண் | ௭௪ |
| காற்றிலாதவிள | ௯௭௩ |
| காற்றிலேயசைவுங் | ௩௩௮ |
| கானத்திடை | ௫௩௭ |
| **கி** | |
| கிருதமுதலுக | ௫௩0 |
| **கீ** | |
| கீற்றுப்பலசே | ௪௧வ |
| **கு** | |
| குடும்பபாரத்தை | ௩௫0 |
| குடும்பவலையிற் | ௪௨௧ |
| குரைசெய்சங்கி | ௭௧௫ |
| குற்றமுமிளைப்பு | ௯௩ |
| குன்றுதவறுகுண | ௫௨0 |
| **கூ** | |
| கூறுவாயெனு | ௭௩௪ |
| **கே** | |
| கேட்டகுரிசில | ௩௩௨ |
| கேட்டநான்முக | ௪௬௩ |
| கேட்டவண்மகவு | ௫௪௩ |
| கேட்டவேந்தன் | ௩௨௧ |
| கேதமிகுந்த | ௬௮௯ |
| கேவலமாகி | ௩௭௭ |
| **கை** | |
| கைப்பிணெடுபுளி | ௯௯ |
| கையினாலறையு | ௫௧௩ |
| **கொ** | |
| கொடிகுடை | ௨௨௭ |
| கொடிதிதுகொடி | ௪௮௧ |
| கொடியகொலை | ௬௮௩ |
| கொண்டபாவனை | ௧0௯ |
| கொதுகினீடிரள | ௨௨௪ |
| கொள்ளற்பால | ௫௮௧ |
| **கோ** | |
| கோசகாரப்புழு | ௩௯௬ |
| கோசலதேசங் | ௪௩௬ |
| கோசலத்துங் | ௬௪௧ |
| கோத்திரன்புரவி | ௫௩௮ |
| **ச** | |
| சகக்காரணமா | ௧௯௪ |
| சகத்திலேபுறத் | ௬௩0 |
| சங்கஞ்செய் | ௪௪௭ |
| சங்கற்பசாலங் | ௨௧௮ |
| சங்கற்பநாசத்தா | ௬0௩ |
| சஞ்சரித்துயர் | ௪௫௮ |
| சடகுனியமா | ௧௯௫ |
| சதவுருத்திரன் | ௭ |
| சதுமறைநூல் | ௨௫ |
| சத்தசத்தென்ன | ௬௨௩ |
| சத்தியம்பிரம | ௧௮௧ |
| சந்ததமிவ்வாறெண் | ௪௬௮ |
| சந்துறுநரம்போ | ௮௫ |
| சமமாகிச்சொரு | ௫௮௬ |
| சரமழைகணை | ௧௫௯ |
| சரற்பருவமேக | ௬0 |
| சராசரமாமுலக | ௩0௬ |
| சலநின்றுங்கரை | ௭௨.௧ |
| சற்குணத்தாற் | ௫௯0 |
| சனகனெனுமன்ன | ௧௩௭ |
| சனனமஞ்சினர்க் | ௬௧௨ |
| **சா** | |
| சாக்கமொன்று | ௫௪௭ |
| சாதகத்தாலன்றி | ௨௪௭ |
| சாதல்வாழ்தல் | ௪௬0 |
| சாதனங்கண் | ௬௮௬ |
| சாதிகுலங் | ௫௨0 |
| சாலுவ்நாட்டிற் | ௪௩௨ |
| **சி** | |
| சிங்கமெனுமுங் | ௨௯௯ |
| சித்தப்பிரம | ௬௯0 |
| சித்தமாறித்தெளி | ௫ |
| சித்தர்பொன்றுவர் | ௧௧0 |
| சித்தவஞ்சனை | ௩௩௯ |
| சித்தவிண்ணிற் | ௩௬௬ |
| சித்தனியல்பு | ௩௮௬ |
| சிந்தனையாங்கள | ௧௩௮ |
| சிந்தனைவயத்தனாகி | ௩௧ |
| சிந்துநாமனுங் | ௨௬௭ |
| சிலர்சிலர்கள் | ௫௧௧ |
| சிலர்மயேந்திர | ௫௧௨ |
| சிலையரக்கர்குல | ௩0௮ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **சி** | |
| சிறக்குஞ்சுவண | ௩௧௪ |
| சிறிதறிந்தவர் | ௬௬௪ |
| சிறியசகப்பழங் | ௯௮ |
| சின்னுண்மெய் | ௬௩ |
| **சீ** | |
| சீவனுயிருந்து | ௪௪௬ |
| சீவனின்முத்தி | ௨௮௮ |
| சீவனெவ்வறி | ௧௭௮ |
| சீவனென்னின்ற | ௧௮௨ |
| சீவன்முத்தனுநீ | ௭௧௩ |
| **சு** | |
| சுத்தமாம்பரத்தா | ௩௪௭ |
| சுத்தமாய்ச்சொ | ௬0௬ |
| சுத்தமாய்ப்பரம | ௭௧௭ |
| சுத்தவறிவாத | ௨00 |
| சுத்தவாதனை | ௧௪௮ |
| சுரர்குருவின் | ௫௮௪ |
| சுழுத்திபோலாறி | ௬௨௨ |
| **சூ** | |
| சூக்கமெய்யினேடி | ௨௭௩ |
| சூழுறுமின்ப | ௬௨௨ |
| சூனியம்பகுதிமா | ௬௨௭ |
| **செ** | |
| செந்திருவாணி | ௩௪௬ |
| செபமுந்தவமு | ௨௧௨ |
| செப்பியவறிவு | ௩௭௮ |
| செயலருந்துயரு | ௪௭௪ |
| செயனுஞ்செயலி | ௬௯௮ |
| செயல்செயலின் | ௫௧௫ |
| செயல்செய்கால | ௧௯௧ |
| செய்யத்தக்கண | ௬௫௪ |
| செருவிறல்வேந்தன் | ௨௬0 |
| செல்லாதமாயை | ௫௯௯ |
| செல்லுறுநதி | ௧௮௩ |
| செறியந்தரத்தே | ௪௧௯ |
| சென்னெல்வா | ௪௮0 |
| **சொ** | |
| சொருபம்விட்டக | ௩௮௯ |
| சொன்னதன் | ௩௯௮ |
| சொன்னவுலக | ௪௧௭ |
| **சோ** | |
| சோகமிலமோக | ௫௮௫ |
| சோகமுறு | ௪௧௪ |
| சோலைதோறுழ | ௩௫௩ |
| **ஞா** | |
| ஞானநோக்கினு | ௨௭௧ |
| ஞானபூமிவை | ௩௯௪ |
| ஞானபூரணமெ | ௭௪௩ |
| ஞானமுற்றவர் | ௬௬௪ |
| ஞானவிண்மக | ௩ |
| ஞானவிண்ணுய் | ௧௯௨ |
| **ஞே** | |
| ஞேயமின்றிய | ௨௪௧ |
| **த** | |
| தருமவர்கடம்மிற் | ௧௭௨ |
| தக்கபிரமகரும | ௫௩௫ |
| தங்கள்சங்கற்பத் | ௩௪௪ |
| தடமானவதன் | ௩0௨ |
| தண்டலைத்தோலு | ௫௬௯ |
| தத்துவம்பயில் | ௨௩௮ |
| தந்திரியிலெழுமி | ௧௭௫ |
| தந்தைசொற்படியே | ௩0 |
| தந்தைதன்சரணமா | ௨௬ |
| தந்தையன்னைபி | ௫௩௩ |
| தந்தையிவனிற்பி | ௫௨ |
| தமரவண்டுசூழ் | ௨௭0 |
| தம்பியரோடு | ௨௭ |
| தருபயஞ்செய் | ௧௬௯ |
| தலைமைநான்முகன் | ௧௩ |
| தலைவர்தலைமே | ௫௯௮ |
| தவங்களாற்றெ | ௪௭௬ |
| தவமேற்கொண்டு | ௩௧௫ |
| தளர்ந்தனனெ | ௫௫௩ |
| தளையாரிற்கும் | ௩௬௩ |
| தள்ளின்மேரு | ௭௧௬ |
| தற்பரவிசும்பி | ௫௫௪ |
| தனதுசுபாவத் | ௫0௬ |
| தனதுவாதனை | ௬௨0 |
| தனியேயந்த | ௫௩௩ |
| தனைத்தான்சிதற | ௩௨௭ |
| தனைமுதலாய் | ௨௫௭ |
| தனையரிவிருவர் | ௩௫௮ |
| தனையறியுமிட்டை | ௪00 |
| தனையனொருவ | ௫௩௨ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **த** | |
| தனையுண்டாக்கு | ௨௭௮ |
| தன்னதுள்ளூற | ௬௫௫ |
| தன்னுயிர்கேழ்வ | ௨௨0 |
| தன்னுருவமாய் | ௫0௨ |
| தன்னுள்விகற்பி | ௧௩௪ |
| தன்னைக்கொண் | ௩௬௮ |
| **தா** | |
| தாக்கற்றென்றி | ௬௯௭ |
| தாங்கினீர்பல | ௩௯௧ |
| தாங்குகின்ற | ௨௩௬ |
| தாமத்துடனி | ௫௮௩ |
| தாமனும்வியாளன் | ௪௬௯ |
| தாமனோடு | ௪௫௭ |
| தாயரிவராற் | ௨௫௪ |
| தாரதனமிகு | ௫௨௩ |
| தாவுமுதரக்கண | ௨௮௪ |
| தாழ்வுமுயர்வு | ௩௬௯ |
| தானலாதான | ௩௮0 |
| தானவருய்க | ௭0௭ |
| தானவரென | ௪௮௩ |
| தானவாதிபன் | ௪௬௧ |
| தானுகுமிகநோய் | ௩0௩ |
| தானேசங்கற்பித் | ௫0௮ |
| **தி** | |
| திகழுநான்முகன் | ௧௨ |
| திழ்கந்தவனற் | ௫௧௮ |
| திசைகாலமாதி | ௫௧௫ |
| திதிகாதலரு | ௬௮௨ |
| திரிகத்ததேசங் | ௪௩௩ |
| திருந்தியவிவன் | ௧௨௩ |
| திருப்பாற்கடலிற் | ௬௮௩ |
| திறல்விரோதன் | ௨௬௬ |
| **தீ** | |
| தீதடையாச்செல்வர் | ௫௮ |
| தீயமனத்தொடு | ௨௮௭ |
| தீயவனுமந்திரி | ௨௯௮ |
| தீராமவரே | ௬௨௧ |
| தீர்க்கத்தக்கது | ௫௮௨ |
| **து** | |
| துக்கசுகங்களி | ௨0௪ |
| துணிவுறுதிட | ௪௫௫ |
| துதிகொடாசுரன் | ௪ |
| துதித்தனனிறைஞ் | ௭௩௮ |
| துதிப்பார்துணையே | ௨௮௪ |
| துயர்களும்விகா | ௫௬௧ |
| துனிசெய்சங்கற் | ௫௬௧ |
| துனிமனச்செரு | ௪௫௩ |
| துனைதருபல் | ௪௯௩ |
| துனையுமனத்தா | ௭0௨ |
| துன்னுமுறப்பத்தி | ௪ |
| துன்னுறுமமரர் | ௨௮ |
| **தூ** | |
| தூயதாயிகத்தினி | ௧௫0 |
| **தெ** | |
| தெரிக்கும்பொ | ௬௭௨ |
| தெரித்தறியும் | ௨0௮ |
| தெரிந்துணர் | ௫௧௪ |
| தெரியாவறிவிற் | ௨௭௧ |
| தெரிவுறுவயத்தி | ௧௧௬ |
| தெருளுறுமகார்க் | ௧௫ |
| தெளிபரமவனு | ௨௩௪ |
| தெளிவுடையசித் | ௫௯௫ |
| தெள்ளமுததாரணை | ௩0௯ |
| தென்றிசைசென் | ௪0௩ |
| **தே** | |
| தேகத்தைநோக் | ௫௭௬ |
| தேங்கமலத்தய | ௧௫௧ |
| தேசிகன்சொற் | ௫௮௮ |
| தேயஞேயத்தின் | ௬௨௧ |
| தேயநீடியில்லா | ௨௩௫ |
| தேயவாதனைநீங்கி | ௬௨௯ |
| தேவபூசை | ௬ |
| தேவரிற்றேசுமிக்க | ௩௭ |
| தேவருபசாந்தி | ௭0௬ |
| தேவர்தானவ | ௬௬0 |
| **தொ** | |
| தொலைவறுமாபத் | ௮0 |
| தொல்லுலகிற்றே | ௧00 |
| தொழிலின்றிக்கா | ௬௩௪ |
| தொழுதுமுன்னிரு | ௧௨௫ |
| தொன்மையாமந்த | ௨௩௩ |
| **தோ** | |
| தோலிலன்றியறி | ௬௯௨ |
| தோன்றியவை | ௪௧௨ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **ந** | |
| நடுவின்முடிவினி | ௬00 |
| நண்புறுமிவனெ | ௩௫௪ |
| நம்மாலதுசேர் | ௨௧௯ |
| நயந்தெதல்லா | ௬௭௯ |
| நரையுறுதீவா | ௯௫ |
| நலங்கியசிறை | ௪௫௧ |
| நல்கியப்பாதி | ௩௫௪ |
| நல்லறுசிறுவ | ௧௯ |
| நல்லபுந்தியும் | ௬௪௭ |
| நல்லவருந்தீய | ௧௬௨ |
| நல்லனநூல்க | ௪௫௫ |
| நல்லாரிடத்தி | ௨௮௫ |
| நல்வினஞ்சேர்த | ௭௩௧ |
| நல்லோர்தீமை | ௬௮௫ |
| நல்வசிட்டன்முக | ௧௪௧ |
| நனிமொழியாய் | ௫0௨ |
| நன்றிதருமுண்மை | ௪௯௨ |
| நன்றுநன்றெ | ௧௨௩ |
| **நா** | |
| நாசமுற்பத்தி | ௨௬௨ |
| நாட்டினியல்பு | ௬௬௬ |
| நாமுடனென்னு | ௫௭௧ |
| நாலிரண்டுவரு | ௭௨௮ |
| நானெனும்பிரி | ௩௯0 |
| நானெனும்பொ | ௪௭௭ |
| நானேநீயாய் | ௬௯௧ |
| **நி** | |
| நிகரறுசந்தோட | ௧௬௫ |
| நிகரில்பரம | ௧௯௧ |
| நிதியுமரசுஞ்செய | ௭௮ |
| நிராசையாகியே | ௬௫௬ |
| நிருவிகற்பசமாதி | ௭0௫ |
| நிருவிகற்பவான் | ௨0௧ |
| நிலைபெறும் | ௪௬௫ |
| நிலையானவிச்சீவன் | ௨0௫ |
| நிறைபவந்திரு | ௧௬௭ |
| நிறையெழின் | ௩௧ |
| நிற்பநடப்பவெனு | ௧௯௬ |
| நினைவறவெளி | ௩௩ |
| நின்னைநீங்காது | ௨௬௨ |
| **நீ** | |
| நீட்த்தகுமன்னு | ௬௯௮ |
| நீத்தனன்பிறவி | ௪௩௯ |
| **நெ** | |
| நெடுங்காலம் | ௪0௮ |
| நெறியிடைவந் | ௪௫0 |
| **நொ** | |
| நொய்யதாயொ | ௬௪௬ |
| நொய்யநெடு | ௫0௫ |
| **நோ** | |
| நோக்கப்பட்ட | ௬௯௬ |
| நோக்கியதேசநீதி | ௨௯ |
| **ப** | |
| பகருமெல்லையிற் | ௨௭௫ |
| பகர்வரிதாய் | ௧௯௮ |
| பகுதமன்றியே | ௫௮0 |
| பகைமனம்வெற் | ௪௫௧ |
| பகையெலாந்துரந்து | ௧௧௨ |
| பகைவேந்தன் | ௨௫0 |
| பக்கத்தொடு | ௨௧௫ |
| படர்பூதந்தொ | ௧0௧ |
| படர்மதத்தாற் | ௪௯௬ |
| படிகநன்மணி | ௩௮௨ |
| பண்டுநான்பூசை | ௨௬௪ |
| பண்டைலீலைதன் | ௨௭௨ |
| பதம்பணிந்து | ௪௪ |
| பந்தத்துருவங் | ௧௮௪ |
| பந்தமுற்றனன் | ௧௭ |
| பயம்வந்துபிடி | ௪௬௭ |
| பரத்தினதொளி | ௪௭௧ |
| பரத்துவகேள்வ் | ௫௨௮ |
| பரந்துநாட்டங் | ௭௧௧ |
| பரமமாமீசனு | ௭0௮ |
| பரமமேயெங்கு | ௩௩௮ |
| பரலோகஞ்சேர் | ௫௩௨ |
| பரமாதித்தனே | ௬௧0 |
| பராபரங்கண் | ௫௨௭ |
| பரிசவிதையிரதத் | ௫௧௬ |
| பருவங்கடொறும் | ௬௩௮ |
| பருவங்களிலே | ௧௮௫ |
| பல்லவங்கடனே | ௭00 |
| பல்வகைதானே | ௫௫௭ |
| பறக்கின்றபரவை | ௫௯௫ |
| பற்றிலாதமனத் | ௬௭௪ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **ப** | |
| பற்றுவான்பற்று | ௭௧௪ |
| பற்றுவிடென்றி | ௬௧௨ |
| பனிவார்கடளிற் | ௬௯௧ |
| பன்மையாம் | ௪௮௬ |
| பன்னுகாரணமொ | ௧௭௮ |
| **பா** | |
| பாகமார்பதிகம் | ௮ |
| பாரியையுடையோ | ௮௯ |
| பாலகனுயஞ்ஞா | ௬௦௦ |
| பாவமகன்று | ௨௮௭ |
| பாவமதாயா | ௫௩ |
| பாவனைதீர் | ௧௭௩ |
| பாவனைமுற்றிட | ௫௧௮ |
| பாவனையும்பாவ | ௪௦௨ |
| பாழிப்புவிமேலு | ௨௮௧ |
| **பி** | |
| பிணிசெயாபத்து | ௧௧௪ |
| பிரமமாஞ்சுத்த | ௫௭௮ |
| பிரமனுமேசிருட்டி | ௩௧௭ |
| பிரமவொளியாற் | ௧௯௩ |
| பிராணசத்தி | ௭௧௦ |
| பிருகுமுனிவன் | ௪௨௫ |
| பிருகுவுமைந்தன் | ௪௪௪ |
| பிறக்குமுதலே | ௭௦௪ |
| பிறப்பிலாப்பிரம | ௫௪௯ |
| பிறப்பிறப்பாம்பூ | ௪௧௩ |
| பிறப்பிறப்பாம்பெய | ௭௧௯ |
| பிறப்பெனுமாயை | ௩௭௫ |
| பிறவிக்கடலிற்கா | ௩௭௨ |
| பிறவியாபரணங் | ௫௩௯ |
| பிறிதிமொருவன் | ௩௩௦ |
| பிறிவாம்பொருளி | ௧௮௫ |
| பிறைநெடுஞ்சர | ௨௬௮ |
| பின்னருமுரைப் | ௪௪௧ |
| பின்னர்மூவாண்டிற் | ௩௫௭ |
| பின்னுமீதோர் | ௬௭௬ |
| பின்னுறத்தாழ்ந் | ௧௦௪ |
| பின்னுறுபக்கத்தி | ௭௨ |
| **பு** | |
| புகல்கசன் | ௭ |
| புகன்றநாமகளை | ௨௬௪ |
| புகையார்வன | ௩௩௨ |
| **பு** | |
| புண்ணியனுணர் | ௬௪௪ |
| புதியனசக்க | ௨௨௯ |
| புரவலனிணைவா | ௨௬௩ |
| புரையுடனெகிழ்வு | ௯௧ |
| புலன்களிற்ப | ௫௭௩ |
| புவனமியாவையு | ௬௯௦ |
| புவியெலா | ௬௨௫ |
| புறப்பேறுகளை | ௬௦௮ |
| புறப்பொருள் | ௬௨௩ |
| **பூ** | |
| பூமகளுமலைமகளும் | ௨௪௫ |
| பூமகள்போலங்கி | ௩௧௦ |
| பூன்றவடிவுங் | ௬௮௬ |
| **பெ** | |
| பெண்மைபாதி | ௧ |
| பெத்தவாசை | ௬௨௬ |
| பெரியவரறிவு | ௧௪ |
| பெரியவர்தம் | ௫௪௦ |
| பெரியவர்நண்ப | ௧௦௭ |
| பெருகத்திரண்ட | ௩௬௭ |
| பெருகியவித் | ௫௧௦ |
| பெருவெளியாயு | ௨௪௭ |
| பெறற்கொணுத | ௫௮௦ |
| **பே** | |
| பேரியதன்விசா | ௬௦௮ |
| பேதமில்லாச்சா | ௭௦௬ |
| பேதமுறுபுந்தியே | ௫௦௩ |
| பேதிக்குமனமெ | ௬௦௫ |
| பேரினல்வீமன் | ௪௮௪ |
| பேனமுந்திரையு | ௬௨௪ |
| **பை** | |
| பைந்தொடியாரா | ௭௫ |
| **பொ** | |
| பொய்யாகவுரை | ௨௩௨ |
| பொருகடலிற்றி | ௪௧௭ |
| பொருவில்சகத் | ௩௧௮ |
| பொருளினுமேல் | ௬௨௦ |
| பொருள்களெலாம் | ௧௦௯ |
| பொன்னுட்டண | ௪௨௦ |
| பொன்னுலகத்தினிற் | ௧௦ |
| பொன்னுலகுதரி | ௧௦௩ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **போ** | |
| போகமுறுபாவ | ௧௩௯ |
| போதவாணியும் | ௨௭௩ |
| போதம்பாதியாகி | ௩௩௪ |
| போத்திராமன் | ௨ |
| **ம** | |
| மகரநீர்கடல் | ௯௬ |
| மகிழ்வுசோர்வு | ௧௧௭ |
| மங்கலப்புனல் | ௭௧௫ |
| மங்காதஞானவிசும் | ௨௨௦ |
| மடங்கல்வீரியத் | ௬௧௫ |
| மடமையின்செறிவே | ௨௩ |
| மடமையுந்துயரு | ௩௭௯ |
| மடமையொடு | ௧௬௧ |
| மடிமிசைகொண்டு | ௩௨ |
| மடிமிசைவந்திரு | ௪௮ |
| மடிவறுபிறவி | ௪௭௮ |
| மட்டிலாவிருபடை | ௨௫௦ |
| மட்டிலாததாய் | ௨௪௨ |
| மணிப்பூண்களும் | ௬௮௧ |
| மண்டியசுழுத்தி | ௧௮௧ |
| மண்ணுமன்ன | ௫௯௮ |
| மண்ணுகரும் | ௮௧ |
| மண்ணுலகிற் | ௭௨௦ |
| மதியைமேகம்போ | ௬௪௯ |
| மத்தவயிராவதமோ | ௨௩௨ |
| மந்தமாருதஞ் | ௫௫௦ |
| மந்தாநிலத்தா | ௪௨௦ |
| மந்திரிமுன்னுரை | ௩௦௨ |
| மந்திரியெனலா | ௪௫௩ |
| மயலிலாமை | ௬௪௭ |
| மயலின்மையகித்த | ௬௧௩ |
| மரணமாமன்னன் | ௯௪ |
| மலினவூன்றுன்று | ௩௫௬ |
| மழையாலவியுங் | ௨௮௨ |
| மறுகுவாதனே | ௫௭௬ |
| மறைநெறிகண் | ௬௩௬ |
| மற்றினியிந்த | ௪௮௭ |
| மற்றுமளவில் | ௪௨௪ |
| மற்றுமொன்று | ௩௮௮ |
| மற்றுநாளேழு | ௧௩௧ |
| மனத்திருளகற்று | ௩௫௨ |
| மனத்தின்வடிவு | ௧௯௫ |
| மனத்துயருமாபத் | ௬௪ |
| மனநிறைந்திடி | ௬௪௮ |
| மனநிறைந்துமான | ௪௭ |
| மனமணிபேதச் | ௪௫௬ |
| மனமிலாநிலே | ௬௪௧ |
| மனமெனும்வி | ௪௫௨ |
| மனமேபுருடன் | ௪௩௧ |
| மனவானகத்தி | ௩௧௭ |
| மனவானமும்வா | ௨௧௮ |
| மனேயவட்கு | ௭௨௫ |
| மனேவியுமகரும் | ௧௧௨ |
| மன்னற்குறையாது | ௨௧௩ |
| மன்னவரெண் | ௨௫௦ |
| மன்னவர்வணங்க | ௩௬ |
| மன்னவவுனக் | ௩௪௭ |
| மன்னவனெப்படி | ௨௯௮ |
| மன்னவன்கண்டுள | ௪௧௧ |
| மன்னவன்சனகன் | ௧௩௨ |
| மன்னுசரற்கசன | ௧௦௨ |
| **மா** | |
| மாண்டுவாளா | ௩௨௩ |
| மாதவன்கையை | ௪௩௬ |
| மாதவன்முனிவு | ௪௨ |
| மாந்தர்தமிள | ௧௧௭ |
| மாமடஞ்செறி | ௮௭ |
| மாமாயைநின்ற | ௭௩௨ |
| மாய்வுற்றவேந்தை | ௨௧௭ |
| மாலதற்குரைப் | ௭௩௯ |
| மாலறவெங்கனி | ௫௬௮ |
| மாவலிப்பெய | ௯௫௧ |
| மாளாதகாதலெ | ௫௧௩ |
| மாருனவிதி | ௪௦௫ |
| மானும்வேடனு | ௮ |
| **மி** | |
| மிகமாலுறுபல் | ௩௬௪ |
| மிகமுயன்று | ௧௪௩ |
| மிகவருகாமாதி | ௨௦௩ |
| மிகவுணங்குசாரீர | ௧௦௫ |
| மிக்கவறிவால் | ௬௪௫ |
| மின்னிடத்திற் | ௭௯ |

| பாடல். | பக்கம். | பாடல். | பக்கம். |
|---|---|---|---|
| **மீ** | | **மெ** | |
| மீட்டணுகாதக | ௫௧ | மெய்தரிநிமித்த | ௨௩ |
| மீட்டுரைப்பா | ௨௯௩ | மெய்ம்முறைமுனி | ௧௩௩ |
| மீட்டுமெழுந்து | ௩௨௮ | மெய்யாகியசச் | ௬௬௮ |
| மீண்டுரைசெப் | ௪௪௫ | மெய்யானப்பொரு | ௫௦௧ |
| மீளவுநின்றுணர் | ௨௯௧ | மெய்யுணர்வுறு | ௪௮௩ |
| **மு** | | மென்றேல் | ௪௨௬ |
| முக்குணந்தானே | ௫௫௯ | **மே** | |
| முச்சுடர்வந்துறி | ௨௯௦ | மேடமாதத்திற் | ௫௪௦ |
| முடிவறுகாலங் | ௫௬௭ | மேயதன்புத்தி | ௫௫௫ |
| முடிவிலாதிரந்த | ௨௭ | மேருகந்தரமும் | ௪௫௯ |
| முடிவிலாவிசும்பி | ௫௪௮ | மேருமந்தரமே | ௫௫௫ |
| முடிவின்ஞான | ௩௩௪ | மேருவின்குவட் | ௮௬ |
| முடிவுகனவுஞ்ஞா | ௨௦௯ | மேலோனுகி | ௬௮௮ |
| முதிர்பருவத்தளர் | ௭௩ | மேவலுற்றபோ | ௭௦௧ |
| முதுதுயர்பூட்டாற் | ௮௮ | மேவுகதையாற் | ௩௧௨ |
| முத்தியைநயக் | ௧௭௬ | மேவுதற்கரிதாய்க் | ௮௭ |
| முந்தியகாலத்தி | ௫௧௯ | மேன்மூன்றுடை | ௫௫௨ |
| முந்துதான்கண்ட | ௭௩௬ | மேனியிற்புறத்தி | ௫௭௯ |
| முந்துறுசகத்தி | ௪௪௦ | **மை** | |
| முயல்வறத்தா | ௪௪௬ | மைந்தரொருப | ௩௧௬ |
| முழுருதருணமாதி | ௧௨௦ | மைம்மலமாமோக | ௧௨௨ |
| முழுதுங்காண்ப | ௬௫௮ | **மொ** | |
| முழுதுசத்தியுமாய் | ௩௩௭ | மொய்யுடனுனே | ௫௭௦ |
| முழுதுணர் | ௪௩௬ | **மோ** | |
| முழுதுமாய்முழு | ௨௫௮ | மோகவற்சனுபி | ௬௧௧ |
| முற்பிறப்பின் | ௧௪௬ | **யா** | |
| முனிமொழிகேட்டு | ௩௯ | யாதியார்பெற்றதெ | ௫௪ |
| முனையார்முள் | ௩௩௩ | யாதினிற்றேன் | ௫௦௪ |
| முன்னவனீங்கின் | ௩௯ | யாதினுமுயர்ந்து | ௬௨௮ |
| முன்னஞ்செய்தவ | ௪௦௬ | யாழுடையகாளை | ௭௨௮ |
| முன்னநாஞ்சொ | ௬௬௨ | யானுர்முன்ன | ௬௯௧ |
| முன்னமொரு | ௪௧௮ | யானிவையிரண்டு | ௬௧௬ |
| முன்னனுபவத் | ௨௬௩ | யானென்றொருவ | ௩௨௯ |
| முன்னியவகத்த | ௫௭௦ | **யோ** | |
| **மூ** | | யோகநெறியால் | ௨௪௯ |
| மூகமாய்ச்சடமாய் | ௩௮௨ | **வ** | |
| மூவகையுலகி | ௪௭௧ | வசனமாந்தொழி | ௧௧௯ |
| மூவராகிநின்ற | ௬௮௭ | வஞ்சமினீள்புகழ் | ௨௯௧ |
| மூவரிலிருவர் | ௩௪௦ | வஞ்சவிந்திரன் | ௩ |
| **மெ** | | வடிவுபொருள் | ௨௨௫ |
| மெத்துகின்ற | ௩௭௧ | வண்மையாலந்த | ௫௫௩ |
| மெத்தென்றசரி | ௫௮௭ | வதனமாறுங் | ௪௨௭ |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **வ** | |
| வந்திறைஞ்சு | ௧௫௪ |
| வந்துறுபோதினன் | ௬0 |
| வந்துயராதனத்தி | ௨௨௧ |
| வந்துறுசித்தர்க் | ௧௨௪ |
| வரம்பறவிரிந்து | ௫௪௮ |
| வரிசடைபலவுங் | ௪௩௪ |
| வருங்கற்பகவிண் | ௬௭0 |
| வருடமோர்பத் | ௭௪௪ |
| வருத்தமற்ற | ௪௭௫ |
| வருந்திநின்று | ௨௮௩ |
| வருந்திமுயன்று | ௩௬௬ |
| வருந்திமெய்ஞ்ஞா | ௫௪௫ |
| வருந்துகிற்பது | ௫௮௨ |
| வரைகளினும் | ௭௨௫ |
| வரையிலெழு | ௭0 |
| வலம்புரித்தொ | ௭0௯ |
| வலியெலாமிழந்து | ௪௬௮ |
| வழிபடுமிதனை | ௨௧ |
| வழுவறுசத்துவ | ௫௮௫ |
| வளர்புலமாமராத் | ௫௯ |
| வளைதருமூப்பால் | ௩௫௯ |
| வனம்படிந்தங் | ௭௨௨ |
| வன்பிறவிப்பேராற் | ௪0௬ |
| வன்மரங்களே | ௫௨௯ |
| **வா** | |
| வாக்குமுகங்கண் | ௨௯௬ |
| வாசுதேவப்பேர் | ௪௩௭ |
| வாடாவசரீரி | ௨௧௭ |
| வாதனைப்பாசத் | ௪௯௫ |
| வாதனையென் | ௬௧௪ |
| வாதனைவடிவ | ௫௭௪ |
| வாதனைவலையை | ௪௪௬ |
| வாயுவடிவாயு | ௨௮௬ |
| வாவுமனத்தை | ௩௯௫ |
| வாழிவாணி | ௨௭௬ |
| வாளாசித்திரம் | ௬0௫ |
| வாளாவயரே | ௫௩௪ |
| வானதிக்கரை | ௪௩௫ |
| வானதிமூழ்க | ௫௪௫ |
| வானமிகராம | ௫௨௨ |
| வானரம்புரவி | ௩௫௫ |
| வானவர்தானவ | ௨௨௪ |
| **வா** | |
| வாஞர்மதிபோதினி | ௨௧௪ |
| வானிடையோவி | ௩00 |
| வானேகுகதிரிர | ௬0௭ |
| வான்முதலா | ௫௩0 |
| **வி** | |
| விகற்பமிறந்தச | ௨௮௧ |
| விடயமியாவையு | ௬௬௩ |
| விடலருமசைவு | ௧௨௯ |
| விண்ணிற்பிறந் | ௧௮௯ |
| விதறியோடுமன | ௩௩௩ |
| விதியின்வசத்தா | ௩௩0 |
| விரிஞ்சனுருவாமனத் | ௫௨௧ |
| விருத்தர்மறையவர் | ௪௯ |
| விருத்தராய்நடுக்கு | ௯௨ |
| விலங்குறுசிங்கம் | ௪௬௬ |
| விழிப்பதுவுமிமை | ௬0௨ |
| விழுந்தான்புவன | ௪௨௩ |
| விழுமியர்சுப | ௯௭ |
| விளக்குமிரவியுமலரு | ௪௯௧ |
| விளிவருந்திற | ௬௬௧ |
| விஞயவள்ளலுக் | ௬௫0 |
| வினையதுவயத்தி | ௪௪௩ |
| வினையமுறவரக்கி | ௨௯௭ |
| வினையர்சுற்றமு | ௨௪௪ |
| வினையின்முயல் | ௧௮௭ |
| **வீ** | |
| வீடுபெற்றிரண்டு | ௬௧௪ |
| **வெ** | |
| வெங்காதற்பெரு | ௫௨௩ |
| வெம்புறுமூப்பான் | ௩௫௮ |
| வெம்மாயவாழ் | ௬0௨ |
| வெலற்கரிய | ௫0 |
| வெறியாரும்பொ | ௫௯0 |
| **வே** | |
| வேண்டியகால | ௬௪௫ |
| வேண்டுவன | ௪0௯ |
| வேந்தவையிருந்தோ | ௩௪௮ |
| வேரறுபொய்யாய் | ௬௮ |
| வேறிலாதெவ்விட | ௪௯௧ |
| வேறொருமாயா | ௨௪௮ |
| **வை** | |
| வையஞ்சுத்தமல் | ௫௩௫ |

உ

ஓம்.

சிவமயம்.

# ஞானவாசிட்டம்.

## வைராக்கியப்பிரகரணம்.

(அவதாரிகை.)

வடமொழியிலுள்ள ஞானவாசிட்டநூலைத் தமிழ்ச்செய்யுளில் மொழிபெயர்க்கப்புகுந்த இந்நூலாசிரியர் இஃது நிர்விக்கினமாய் நிறைவேறும் பொருட்டு விநாயகமூர்த்தியைச் சகுணமாகவும் நிர்க்குணமாகவும் உபாசனைசெய்கின்றார்.

பெண்மைபாதியன் பெற்றகளிற்றினை
யண்மைதூர மறவகத்துன்னுவாந்
திண்மைஞானச் சிறப்புயர்வாசிட்ட
முண்மையாக வொருங்குரைசெய்யவே.

(இதன்பதப்பொருள்.)

திண்மைஞானச்சிறப்பு - திடம்பொருந்திய வாக்கியார்த்த போதச்சிறப்பினால், உயர்வாசிட்டம் - மேன்மையாக விளங்கிய ஞானவாசிட்டத்தை, உண்மையாக - கீர்வாணத்திலுள்ள பிரகாரமாக, ஒருங்குரைசெய்ய - தமிழ்ச்செய்யுளான் முழுதுஞ் சாற்றும்பொருட்டு, பெண்மைபாதியன்-உமைபாகனாகிய பரமசிவன், பெற்றகளிற்றினை - ஈன்றருளிய யானைமுகத்தினையுடைய விநாயகமூர்த்தியை, அண்மைதூரமற-அணிமை சேய்மையின்றி, அகத்துன்னுவாம் - இடைவிடாம லுள்ளத்தின்கட் சிந்திப்பாம்—என்றவாறு.

(இதன்பொழிப்புரை.)

திடம்பொருந்திய வாக்கியார்த்த போதச்சிறப்பினால் மேன்மையாக விளங்கிய ஞானவாசிட்டத்தைக் கீர்வாணத்திலுள்ள பிரகாரமாகத் தமிழ்ச்செய்யுளான் முழுதுஞ் சாற்றும்பொருட்டு உமைபாகனாகிய பரமசிவன் ஈன்றருளிய யானைமுகத்தினையுடைய விநாயகமூர்த்தியை அணிமை சேய்மையின்றி இடைவிடாம லுள்ளத்தின்கட் சிந்திப்பாம்—என்பதாம்.

(பதசாரம்.) அர்த்தநாரீசுரனே - பெண்மைபாதிய னென்றார், மறந்து நினையாமல் மூர்த்திமயமாய்ச் சிந்திப்பதை - அண்மைதூர மறவகத் துன்னுவாமெனறார், நிச்சயித்தறியும் பரோட்சஞானத்தை - திண்மை ஞான மென்றார், இரட்டுறமொழிதலென்னு முத்தியால், திண்மைஞான ச்சிறப்பு - நிச்சலமான விலக்கியார்த்த போதவிசேடத்தினல், உயர்வாசிட்டம் - மேலான வசிட்டோபதேசமான சுவானுபூதி நூலை, உண்மையாக-உள்ளவனுபவப் பிரகாரமாக, ஒருங்குரைசெய்ய - முழுதையுஞ் சொல்லாமற் சொல்லும்பொருட்டு, பெண்மைபாதியன் - சிற்சத்தியபின்னனான சத்தன், பெற்றகளிற்றினை - சுதந்தரமாகவடைந்திருக்கின்ற நிரதிசயாநந்தமென்னும் யானையை, அண்மைதூரமற - ஞானுஞ்ஞான நீங்கும்படியாக, அகத்துன்னுவாம் - தன்மயமானவுள்ளத்திற் றன்மயமாகச் சிந்திப்பாமெனக்கொள்க. (ப - ரை.) சிதான்மசத்தியைப் பெண்மையென்றார், அதற்கபின்னமாக விளங்கிய சத்தனைப்பாதியனென்றார், சத்திசத்தனைக்கியத்தி லுதயமாகாநின்ற சுவானுபூதியை-பெற்றகளிற்றென்றார், ஞானுஞ்ஞான மின்றிச் சுயஞ்சித்தாயுணர்தலை - அண்மைதூர மறவகத் துன்னுவாமென்றார், வசிட்டரா லனுக்கிரகிக்கப்பட்ட மேலான வபரோட்சஞானமாகிய சுவானுபூதி நூலை திண்மைஞானச்சிறப்புயர் வாசிட்டமென்றார், அவ்வுண்மைஞான வொழுங்கின்படியே முழுதுமறைதலை-உண்மையாக வொருங்குரை செய்யவென்றார். * ஏகாரம் - ஈற்றசை. அனுபூதி மேலீட்டி லெதிரில்லாமற் சகலமுந் தன்மயமாக விளங்குஞ் சுவானுபூதியை மதங்கொண்டு சஞ்சரிக்கு மாண்யானையாகக் கூறினர்.

(இதனது தாற்பரியம்.) இந்நூலிற் கூடஸ்த பிரமைக்கியத்தி லிதயமாகாநின்ற சுவானுபூதி சாட்சாத்காரத்தை விநாயகமூர்த்தியாகக் கூறினதாம். (க)

---

## (அ—கை.) கவியினளவு கூறுகின்றது.

போற்றிராமன் புகல்வயி ராக்கியந்
தோற்று நூற்றிரு பத்திரண் டாஞ்சுகன்
சாற்றுசீரிரு பத்தைந்து தற்பதத்
தேற்றம் வேண்டினர் சீரிருபத்தெட்டே.

(இ-ள்.) போற்றிராமன் - அறிஞராற்புகழப்பட்டவிராகவன், புகல் வயிராக்கியம் - சொல்லுகின்ற வைராக்கியப்பிரகரணத்தில், தோற்றும் - தோன்றுகின்ற (செய்யுள்,) நூற்றிருபத்திரண்டாம - நூற்றிருபத்திரண்டாகும், சுகன் - சுகமுனிவரது (சரிதையை,) சாற்றுசீர் - சொல்லுகின்ற செய்யுள், இருபத்தைந்து - இருபத்தைந்தாம், தற்பதத்தேற்றம்வேண்டினர்சீர் - பிரமநிச்சயுத்தையடைய விரும்பின முமூட்சுக்களின் (சரிதையைச் சொல்லுகின்ற செய்யுள்,) இருபத்தெட்டு - இருபத்தெட்டாகும்— எ-று. ஏகாரம் - ஈற்றசை.

சீரென்கிற சினைப்பெயர் கவியென்கின்ற முதற்பெயரை யுணர்த்துத லாற் சினையாகு பெயராம்.

(இ-ள.) அறிஞராற் புகழப்பட்ட விராகவன் சொல்லு கின்ற வயிராக்கியப் பிரகரணத்தில் தோற்றுகின்றசெய்யுள் நூற் றிருபத்திரண்டாகும். சுகமுனிவரது சரிதையைச்சொல்லுகின்ற செய்யுள் இருபத்தைந்தாம். பிரமநிச்சயத்தை யடைய விரும் பின முமூட்சுக்களின் சரிதையைச் சொல்லுகின்றசெய்யுள் இரு பத்தெட்டாகும்—என்பதாம். (உ)

ஞானவிண்மக னாற்பத்துநாலதா
மானலீலை மகிமைதொண்ணூறதா
மானவூசியு மையெட்டுமேழுமா
மீனமற்றசீ ராய்ந்தவரீரைந்தே.

(இ-ள்.) ஞானவிண்மகன் - சிதாகாசபுருடன் கதையின் செய்யுள், நாற்பத்துநாலதா - நாற்பத்துநான்காகும், மானலீலைமகிமை - பெருமை பொருந்தியலீலை (கதையின்செய்யுள்,) தொண்ணூறதாம் - தொண்ணூ றும், ஆனவூசியும் - ஞானவடிவமான கற்கடி (கதையின்செய்யுள்,) ஐயெட்டுமேழுமாம் - நாற்பத்தேழாம், ஈனமற்ற சீராய்ந்தவர் - குறைவி ன்றிய செல்வத்தை யாராய்ந்தவர்கள் (கதையின்செய்யுள்,) ஈரைந்து - பத்தாம்—எ-று. ஏகாரம் - ஈற்றசை.

(இ-ள.) சிதாகாசபுருடன் கதையின் செய்யுள் நாற்பத்து நான்காகும். பெருமைபொருந்திய லீலைகதையின் செய்யுள் தொ ண்ணூறுகும். ஞானவடிவமான கற்கடி கதையின் செய்யுள் நாற் பத்தேழாம். குறைவின்றிய செல்வத்தை யாராய்ந்தவர்கள் கதை யின்செய்யுள் பத்தாம்—என்பதாம். (ரு)

வஞ்சவிந்திரன் வன்கதையொன்பதா
நெஞ்சினுக்கிரு பத்திருநீள்கவி
தஞ்சபாலகன் றன்கதையெட்டதா
மெஞ்சுசித்த னிருபதுமாறுமே.

(இ-ள்.) வஞ்சவிந்திரன்வன்கதை - கிர்த்தரமேந்திரனது வன்மை பொருந்திய கதையின்செய்யுள், ஒன்பதாம் - ஒன்பதாகும், நெஞ்சினுக்கு- மனத்தின் கதைக்கு, இருபத்திருநீள்கவி - இருபத்திரண்டு நீண்டசெய்யு ளாம், தஞ்சபாலகன்றன்கதை - நம்புதலுள்ளபாலகன் கதையின்செய்யுள்,

எட்டதாம் - எட்டாகும், எஞ்சுசித்தன் - குறைவைச்செய்கின்ற சித்தன் கதையின்செய்யுள், இருபதுமாறும் - இருபத்தாறும்—எ-று.

(இ-ளா.) கிர்த்தரமேந்திரனது வன்மை பொருந்திய கதையின் செய்யுள் ஒன்பதாகும். மனத்தின்கதைக்கு நீண்டசெய்யுள் இருபத்திரண்டாகும். நம்புதலுள்ள பாலகன் கதையின்செய்யுள் எட்டாகும். குறைவைச் செய்கின்ற சித்தன் கதையின் செய்யுள் இருபத்தாறும்—என்பதாம். (ச)

துன்னுமுற்பத்தி சொல்லெழுபத்தொன்று
நன்னர்வெள்ளியு நாற்பத்தோடேழதா
மன்னதாமனு மையெட்டுமூன்றுமா
மின்னவீம னிருபதுமைந்துமே.

(இ-ள்.) துன்னுமுற்பத்திசொல் - பொருந்திய வுற்பத்திப்பிரகரணத்தைச் சொல்லுகின்ற செய்யுள், எழுபத்தொன்றும் - எழுபத்தொன்றாகும், நன்னர்வெள்ளியும் - நன்மைபொருந்திய பிருகுவின் (கதையின் செய்யுள்,) நாற்பத்தோடேழதாம் - நாற்பத்தேழாகும், அன்னதாமனும் - அத்தன்மையையுடைய தாமவியாளகடர் (கதையின்செய்யுள்,) ஐயெட்டுமூன்றுமாம் - நாற்பத்துமூன்றும், இன்னவீமன் - இத்தன்மையவாகிய வீமபாசதிடர் (கதையின்செய்யுள்,) இருபதுமைந்தும் - இருபத்தைந்தாம்—எ-று. ஏகாரம் - ஏற்றசை.

(இ-ளா.) பொருந்திய வுற்பத்திப்பிரகரணத்தைச் சொல்லுகின்ற செய்யுள் எழுபத்தொன்றாகும். நன்மைபொருந்திய பிருகுவின் கதையின் செய்யுள் நாற்பத்தேழாகும். அத்தன்மையையுடைய தாமவியாளகடர் கதையின்செய்யுள் நாற்பத்து மூன்றும். இத்தன்மையவாகிய வீமபாசதிடர் கதையின் செய்யுள் இருபத்தைந்தாம்—என்பதாம். (ரு)

துதிகொடாசுரன் றொல்கதைநூற்றெட்டா
மதிநெடுங்கசன் வண்கதைநாலைந்தாந்
திதியெனுங்கதை யேழாஞ்சனகன்றன்
முதியநற்கதை முப்பதுமாறுமே

(இ-ள்.) துதிகொள் - பெரியோர்கள் தோத்திரத்தை யேற்கத்தக்க, தாசுரன் - தாசுரமுனிவரது, தொல்கதை - பழமையான கதையின்செய்யுள், நூற்றெட்டாம் - நூற்றெட்டாகும், மதிநெடுங்கசன் - அறிவிற்பெரிய கசமுனிவரது, வண்கதை - வளம்பொருந்திய கதையின்செய்யுள், நாலைந்தாம் - இருபதாகும், திதியெனுங்கதை - திதியென்னும் பிரகரணத்

தின்செய்யுள், ஏழாம் - ஏழாம், சனகன்றன் - சனகராஜாவின், முதியநற் கதை - முதிர்ந்த நன்மையான கதையின்செய்யுள், முப்பதுமாறும் - முப் பத்தாறுமாகும்—எ-று.

(இ-ரை.) பெரியோர்கள் தோத்திரத்தை யேற்கத்தக்க தாசுரமுனிவரது பழமையான கதையின் செய்யுள் நூற்றெட்டாகும். அறிவிற்பெருகிய கசமுனிவரது வளம்பொருந்திய கதையின் செய்யுள் இருபதாகும். திதியென்னும் பிரகரணத்தின் செய்யுள் ஏழாம். சனகராஜாவின் முதிர்ந்த நன்மையான கதையின் செய்யுள் முப்பத்தாறாகும்—என்பதாம். (சு)

உரியபுண்ணிய னொன்பதுநாற்பது
நரகின்மாவலி நாலுடனைம்பதாம்
பிரகலாதன் பிழைப்பெழுபத்திரண்
டரியகாதியு மைந்துடன்முப்பதே.

(இ-ள்.) உரியபுண்ணியன் - தனக்குரித்தான புண்ணியபாவனன் கதையின் செய்யுள், ஒன்பதுநாற்பது - நாற்பத்தொன்பதாகும், நரகின் மாவலி - பாதாளலோகத்திலுள்ள மாவலிச்சக்கிரவர்த்தி கதையின்செய் யுள், நாலுடனைம்பதாம் - ஐம்பத்துநான்காம், பிரகலாதன்பிழைப்பு - பிர கலாதனுய்ந்தகதையின்செய்யுள், எழுபத்திரண்டு - எழுபத்திரண்டாம் அரியகாதியும் - அருமையானகாதிமுனிவரது கதையின்செய்யுள், ஐந்து டன்முப்பது - முப்பத்தைந்தாம்—எ-று.

(இ-ரை.) தனக்குரித்தான புண்ணியபாவனன் கதையின் செய்யுள் நாற்பத்தொன்பதாகும். பாதாள லோகத்திலுள்ள மாவலிச்சக்கிரவர்த்தி கதையின்செய்யுள் ஐம்பத்துநான்காம். பிரகலாதனுய்ந்த கதையின்செய்யுள் எழுபத்திரண்டாம். அருமையான காதிமுனிவரது கதையின் செய்யுள் முப்பத்தைந் தாம்—என்பதாம். (எ)

சித்தமாறித் தெளிந்தவுத்தாலக
னொத்தவெண்பதுக் கொன்றுகுறைபவாஞ்
சுத்தநாற்பது மாறுஞ்சுரகுவாம்
பத்துமேழுமாம் பாசவிலாசரே.

(இ-ள்.) ஆறி - விஸ்ராந்தியடைந்து, தெளிந்த - தெளிவுற்ற, சித் தம் - மனத்தையுடைய, உத்தாலகன் - உத்தாலகமுனிவரது கதையின் செய்யுள், ஒத்தவெண்பதுக்கொன்று குறையவாம் - பொருந்திய வெழு பத்தொன்பதாகும், சுத்தம் - பரிசுத்தமான, சுரகுவாம் - சுரகுராசாவின்

(கதையின்செய்யுள்,) நாற்பதுமாறுமாம் - நாற்பத்தாறுகும், பாசவிலாசர்-பாசவிலாசமுனிவரது (கதையின்செய்யுள்,) பத்துமேழுமாம் - பதினேழாகும்—எ-று.

**(இ-ள.) விஸ்ராந்தி யடைந்து தெளிவுற்ற மனத்தையுடைய உத்தாலகமுனிவரது கதையின்செய்யுள் பொருந்திய வெழுபத் தொன்பதாகும். பரிசுத்தமான சுரகுராஜாவின் கதையின் செய்யுள் நாற்பத்தாறுகும். பாசவிலாச முனிவரது கதையின் செய்யுள் பதினேழாகும்—என்பதாம்.** (௮)

> **ஏதமற்ற வெழுபதுமாறுமே**
> **வீதகவ்வியன் மேலெழுபத்தொன்றும்**
> **போதமுந்துப சாந்திபுசுண்டனு**
> **மோதநூறு கவியிலொன்றில்லையே.**

(இ-ள்.) ஏதமற்ற - மாசற்ற, வீதகவ்வியன் - வீதகவ்வியமுனிவரது, (கதையின்செய்யுள்) எழுபதுமாறும் - எழுபத்தாறுகும், போதமுந்து-ஞானமுதன்மையான, உபசாந்தி - உபசாந்திப்பிரகரணத்தின், மேல்-மேன்மையான (செய்யுள்,) எழுபத்தொன்றும் - எழுபத்தொன்றுகும், புசுண்டனும் - புசுண்டமுனிவரது (கதையின்செய்யுள்,) ஓத - சொல்ல, நூறுகவியிலொன்றில்லை - தொண்ணூற்றொன்பதாகும்—எ-று.

**(இ-ள.) மாசற்ற வீதகவ்வியமுனிவரது கதையின்செய்யுள் எழுபத்தாறுகும். ஞானமுதன்மையான உபசாந்திப்பிரகரணத்தின் மேன்மையான செய்யுள் எழுபத்தொன்றுகும். புசுண்டமுனிவரது கதையின் செய்யுள் சொல்லத் தொண்ணூற்றொன்பதாகும்—என்பதாம்.** (௯)

> **தேவபூசை சிறந்தவெழுபதா**
> **மேவும்வில்வ மிகுபதினுறதா**
> **மேவமற்ற சிலைக்கதையெட்டதாந்**
> **தாவிலர்ச்சுனன் சாற்றிருபத்தொன்றே.**

(இ-ள்.) சிறந்த-மேலான, தேவபூசை - ஞானதேவாராதனைக் கதையின்செய்யுள், எழுபதாம்-எழுபதாகும், மேவும்வில்வம் - பொருந்தாநின்ற வில்வபலக் கதையின்செய்யுள், மிகுபதினுறதாம் - மிகுந்தபதினுறுகும், ஏவமற்ற - நீக்கமற்ற, சிலைக்கதை - சிலைக்கதையின் செய்யுள், எட்டதாம்-எட்டாகும், தாவிலர்ச்சுனன் - அவாவிற்றுவாதவருச்சுனன் கதையின் செய்யுள், சாற்றிருபத்தொன்று - சொல்லுகின்ற விருபத்தொன்றுகும்—எ-று. எவ்வமென்பது ஏவமெனவிகாரமாயிற்று.

(இ-ளா.) மேலான ஞானதேவாராதனைக் கதையின்செய்யுள் எழுபதாகும். பொருந்தாநின்ற வில்வபலக் கதையின் செய்யுள் மிகுந்த பதினாறாகும். நீக்கமற்ற சிலைக்கதையின் செய்யுள் எட்டாகும். அவாவிற்றுவாத வருச்சுனன் கதையின் செய்யுள் சொல்லுகின்ற விருபத்தொன்றாகும்—என்பதாம். (௧௦)

சதவுருத்திரன் றன்கவிமுப்பதா
முதவுமையைந்தோ டொன்றென்பர்பேய்க்கதை
முதுபகீரதன் முப்பத்துமூன்றதா
மெதிர்சிகித்வச னெண்பதுமும்மையே.

(இ-ள்.) சதவுருத்திரன்கவி - சதவுருத்திரர் (கதையின்செய்யுள்,) முப்பதாம் - முப்பதாகும், பேய்க்கதை - வேதாளக்கதையின் (செய்யுள்,) உதவும் - உதவாநின்ற, ஐயைந்தோடொன்பர் - இருபத்தாறுகுமென்று சொல்லுவார்கள், முதுபகீரதன் - அறிவில்முதிர்ந்த பகிரதராசன் (கதையின்செய்யுள்,) முப்பத்துமூன்றதாம் - முப்பத்துமூன்றாகும், எதிர்சிகித்துவசன் - விஷயத்தையெதிர்க்கின்ற சிகித்துவசவரசன் (கதையின்செய்யுள்,) எண்பதுமும்மை - இருநூற்றுநாற்பதாகும்—எ-று.

(இ-ளா.) சதவுருத்திரர்கதையின் செய்யுள் முப்பதாகும். வேதாளக்கதையின் செய்யுள் உதவாநின்ற இருபத்தாறுகுமென்று சொல்லுவார்கள். அறிவில் முதிர்ந்த பகிரதராசன் கதையின் செய்யுள முப்பத்து மூன்றாகும். விஷயத்தை யெதிர்க்கின்ற சிகித்துவசவரசன் கதையின்செய்யுள் இருநூற்று நாற்பதாகும்—என்பதாம். (௧௧)

புகல்கசன்பதின் மூன்றுபொய்யாமவ
னிகழுநாலைந்து நீண்டவிரதங்க
ளிகலில்பத்தொன்ப தாமிக்குவாகுவி
னகிலஞான மறுபதுமாறுமே

(இ-ள்.) புகல்கசன்-சொல்லாநின்ற கசமுனிவரது (கதையின்செய்யுள்,) பதின்மூன்று-பதின்மூன்றாகும், பொய்யாமவன்-மித்தியாபுருடனது, நிகழும்-விளங்காநின்ற (கதையின்செய்யுள்,) நாலைந்து - இருபதாகும், நீண்டவிரதங்கள் - நெடியவிரதசூயை (கதையின்செய்யுள்,) இகலில் பத்தொன்பதாம், மாறுபாடில்லாத பத்தொன்பதாம்அகிலஞானம் - பூர

ணஞானத்தைச்சொல்லுகின்ற, இக்குவாகுவின் - இக்ஷுவாகுவரசனது, (கதையின்செய்யுள்,) அறுபதுமாறும்அறுத்தாராம்—எ-று.

(இ-ன.) சொல்லாநின்ற கசமுனிவரது கதையின் செய்யுள் பதின்மூன்றாகும். மித்தியாபுருடனது விளங்காநின்ற கதையின் செய்யுள் இருபதாகும். நெடியவிரதசூயைகதையின் செய்யுள் மாறுபாடில்லாத பத்தொன்பதாகும் பூரண ஞானத்தைச் சொல்லுகின்ற இக்ஷுவாகுவரசனது கதையின்செய்யுள் அறுபத்தாறும்—என்பதாம். (கஉ)

மானும்வேடனு மற்றிருபத்தைந்தா
மானயோக மறுபதுமெட்டுமா
மோனவுண்மை மொழிந்துளவாசிட்ட
ஞானநூற்கதை நாற்பதுமூன்றுமே.

(இ-ள்.) மானும்வேடனும் - மிருகவியாதன் (கதையின்செய்யுள்,) இருபத்தைந்தாம் - இருபத்தைந்தாகும், ஆன - அனுபவமான, யோகம் - ஞானபூமியாகிய நிருவாணப்பிரகரணத்தின் செய்யுள், அறுபதுமெட்டுமாம் - அறுபத்தெட்டாகும், மோனவுண்மை - மௌனநிச்சயத்தை, மொழிந்துள - சொல்லி யிருக்கின்ற, வாசிட்டஞானநூற்கதை - வாசிட்டமென்னு ஞானசாஸ்திரத்தின் கதையானது, நாற்பதுமூன்றுமே - நாற்பத்துமூன்றாகும்—எ-று.

(இ-ன.) மிருகவியாதன் கதையின் செய்யுள் இருபத்தைந்தாகும். அனுபவமான ஞானபூமியாகிய நிருவாணப்பிரகரணத்தின் செய்யுள் அறுபத்தெட்டாகும். மௌனநிச்சயத்தை சொல்லியிருக்கின்ற வாசிட்டமென்னு ஞானசாஸ்திரத்தின் கதையானது நாற்பத்துமூன்றாகும்—என்பதாம். (கங)

பாகமார்பதி கம்பதினுன்கதா
மாகவேயிரண் டாயிரத்தைம்பது
மாகவிக்கைந் ததிகமிவ்வாசிட்டம்
யோகஞானத்தி னுண்மையுரைக்குமால்.

(இ-ள்.) பாகமார் - பக்குவநிறைந்த, பதிகம் - பதிகங்காப்புட்படச் (செய்யுள்,) பதினுன்கதாம் - பதினுன்காம், ஆக - ஆகக்கூடுந்தொகை, மாகவி - பெருமைபொருந்திய செய்யுள், இரண்டாயிரத்தைம்பதுக் கைந்ததிகம் - இரண்டாயிரத்தைம்பத்தைந்தாம், இவ்வாசிட்டம் - இந்தஞான வாசிட்டமானது, யோகஞானத்தின் - அயிக்கிய ஞானத்தினது, உண்மையுரைக்கும் - சத்துவத்தைச்சொல்லும்—எ-று.

(இ-ரை.) பக்குவநிறைந்த பதிகங் காப்புட்படச்செய்யுள் பதினன்காம். ஆகக்கூடுந் தொகைச்செய்யுள் பெருமை பொருந்திய இரண்டாயிரத் தைம்பத்தைந்தாம் இந்த ஞானவாசிட்டமானது அயிக்கியஞானத்தினது தத்துவத்தைச் சொல்லும்—என்பதாம்

**அயிக்கியஞானமென்பது**—கூடஸ்தபிரமைக்கியமான வத்துவிதஞானமெனக்கொள்க. யோகத்தினுண்மையையும் ஞானத்தினுண்மையையும் கூறினதென்றுன் முரணென்னையுளவெனின், இஃது சுசாதிமுதலிய பேதமிறந்தசாத்தியமான சுயம்ஞானமாதலினானும் பிராண பந்தன மனோநிக்கிரகமுதலியசாதனமே யோகமாதலினானும் இவ்விரண்டையு மொப்பாகக் கூறுதல் கூடாமையான் முரணேயாம். இந்நூலினுத்தாலகர் முதலியநால்வர் யோகானுஷ்டானஞ் செய்ததாகக் கூறினமையால். யோகத்தினுண்மையையு முரைத்ததாக நிகழ்த்தலாமேயெனின் இவர்கள் ஞானானுஷ்டானத்தைச்செய்து பிரமஞானத்தை யடைந்தபின் உத்தாலகர்க்கும், வீதகவ்வியருக்கும், அநிச்சாப்பிராரத்துவத்தாலும், புசுண்டயோகிக்கு இச்சாப்பிராரத்துவத்தாலும், சூடாலைக்கு பரேச்சாப் பிராரத்துவத்தாலும், அனுபவித்துத்தீரும்படி வந்தயோகத்தைக் கெவுணமாகக்கூறி ஆத்மஞானத்தையே முக்கியமாகக் கூறினதேயன்றி அவ்வியோகத்தை ஞானத்துடனொருபொருளாகக் கூறப்பட்டதன்றெனக்கொள்க. இவை இந்நூலாசிரியர் உரைத்தல்.

(இ-ள்) இப்பதின்மூன்று கவிதையினானு மேனையகவிகள்வந்துசேராமற் கதையையு மதன்கவியையும பகுத்தளவு கூறினதென்பதாம். (கச)

## நூல் வரலாறு.

### முற்றிற்று.

## நூல்.

### அவதாரிகை.

வசிட்டோபதேசமான சுவானுபவத்தைக் கீர்வாண சுலோகமாய்ச் சொல்லப்புகுந்த வடநூலாசிரியர் இந்நூல் நிர்விக்கினமாய் நிறைவேறி யாவருஞ் சிரவணஞ் செய்யும் பொருட்டு ஆத்மஞான சாட்சாத்கார ஸ்வரூபத்தை நிருபாதிக நிட்டையினாலுஞ் சோபாதிக நிட்டையினாலும் விலட்சண சலட்சணமாக வுபாசனைசெய்கின்றார்.

### வேறு.

பொன்னுல கத்தினிற் புவியி லந்தரத்
தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது
மன்னுசிற் சோதியே வடிவ மியாவுமாய்த்
துன்னுவ தப்பொரு டொழுதி றைஞ்சுவாம்.

(இ-ள்.) மன்னுசிற்சோதியே - நிலைபெற்ற ஞானப்பிரகாசமே, பொன்னுலகத்தினில் - சுவர்க்கலோகத்திலும், புவியில் - பூலோகத்திலும், அந்தரத்து - அந்தரிட்சலோகததிலும், என்னுடையுட்புறத்து - என்னுடையவசத்திலும் புறத்திலும், இலங்குகின்றது - விளங்காநின்றது, வடிவமியாவுமாய் - படிவங்களனைத்துமாய், துன்னுவது - நிறைந்திருக்கின்றது, அப்பொருள் - அவ்வஸ்துவை, தொழுதிறைஞ்சுவாம - திரிகரணங்களாலும் இரண்டறத் தொழுது வணங்குவாம்—எ-று.

(இ-ரை.) நிலைபெற்ற ஞானப்பிரகாசமே சுவர்க்கலோகத்திலும், பூலோகத்திலும், அந்தரிட்சலோகத்திலும், என்னுடைய அகத்திலும், புறத்திலும் விளங்காநின்றது படிவங்களனைத்துமாய் நிறைந்திருக்கின்றது. அவ்வஸ்துவைத் திரிகரணங்களாலும் இரண்டறத்தொழுது வணங்குவாம்—எ-ம்.

சிற்சோதியேயென்னுந் தேற்றேகாரம் ஆத்மப்பிரகாசத்தையன்றி வேறின்றென்பதையுணர்த்தியதாம். என்னுடையுட்புறத்தென்றதனாலும் சுவர்க்கமுதலிய புறத்தைச் சொல்லுதலினாலும் அவனுடைய வுள்ளென்பதூஉங்கொள்க. அவனுடைய வுட்புறமாவன சாமவேத மகாவாக்கியத்தின் முற்பதமாகியதற்பதத்தினருத்தமான வீசுரனும், அவனுக்குள்ளாகின்ற வீசுரசாட்சியாகிய பிரமமும், புறம்பாகின்ற மாயைமுதலான சகல தத்துவங்களுமாம். இம்மூன்றிலு நிறைந்திருப்பதுதோன்ற புறம்பான

தத்துவங்களைப்பொன்னுலகத்தினிற்புவியிலந்தரத்தென்றார். என்னுடை யுட்புறமாவன அவ்வாக்கியத்தி னிரண்டாம்பதமாகிய தொம்பதத்தினரு த்தமான சீவனும் அவனுக்குள்ளாகின்ற சீவசாட்சியாகிய கூடஸ்தனும் அவனுக்குப் புறம்பாகின்ற வவித்தைமுதலான தத்துவங்களுமாம. இம் மூன்றிலு நிறைந்திருப்பதுதோன்ற என்னுடை யுட்புறத்தென்றார். அவ் வாக்கியத்தின் மூன்றாம்பதமாகிய அசிபதத்தினருத்தமான கூடஸ்தபிர மைக்கியமே விளங்குவதென்பது தோன்ற இலங்குகின்றதென்றார். இவ் வாக்கியத்தினகண்டார்த்தத்தில் சமஷ்டி,வியஷ்டி,சூத்தாசூத்தங்களாயிரு க்கின்ற சீவேசுர கூடஸ்தபிரமமாகிய சைதன்னியங்களிலும் அபிமானி அந்தக்கரணங்களான சடசித்துக்களிலும்பிரிதிவுமுதலானபஞ்சபூதபௌ திகங்களாகிய சடங்களிலும் ஏகப்பிரகாரமாய்விளங்குகின்ற சச்சிதானந்த சுவானுபவமாகிய ஞானுத்மாவை மன்னுசிற்சோதியென்றார். அந்த ஞா னுத்மாவாகிய தானே சொரூபமுதல் ஸ்தம்பபரியந்தமாயுள்ள சகல வடி வங்களுமாய் நிறைந்துவிளங்கிய சுவானுபூதி சாட்சாத்காரமான வஸ்து வென்பதுதோன்ற வடிவம்யாவுமாய்த் துன்னுவதென்றார் தானேதானய் விளங்குவதை தொழுதிறைஞ்சுவா மென்றார். இந்நூலில் ஆறுபிரகரண ங்களினுலு நிரூபிக்கப்பட்ட நிருவாணபதமாத்ம சாட்சாத்கார ஸ்வரூப மே இதற்குச் சுதந்தர வந்தரங்க விஷ்டமுள்ள கடவுளாதலால் அதற்கே யிச்செய்யுளால் வணக்கஞ்சொல்லப்பட்டது. (கரு)

(**இதனது - தாற்பரியம்.**) அத்துவைதசித்தாந்தமான வேதாந்தங்களி னது மகாவாக்கியார்த்தத்தின்படியே விலட்சணமாகிய கூடஸ்தபிரமைக் கிய ஞானுத்மவியாபகத்தை நிருபாதிக நிட்டையினுலும பின்பு சலட்சண மான சர்வமுஞ் சச்சிதானந்த பிரமமென்கிற வாத்மஞான சாட்சாத்காரத் தை சோபாதிக நிட்டையினுலும் துவிதமின்றி வணக்கங்கூறியதாம். ஞா னுத்மாவே இஷ்டமான கடவுளென்பதற்கு ஆத்மாவே யெல்லாமென்கிற சுருதுவாக்கி யத்திலும் இந்த வாத்மாவானதுஆதியந்தமில்லாததுசுயம் பிரகாச முள்ளதென்று இந்நூலிற் சொல்லப்போகின்றபடியினுலும் அவ் வாத்மாவினிடத்திற் சூரியனுஞ் சந்திரனு நட்சத்திரங்களு மின்னல்களு மக்கினியும் பிரகாசிக்கவில்லை அதன்காந்தியாலிதெல்லாம் விளங்குகின்ற தென்றுசுருதிசொல்லுகையாலும்விஞ்ஞாதாவையாதினுலறியலாமென்று யாக்கியவர்க்கர் சொல்லியிருக்கிறபடியினுலும் தனது சுவானுபூதியே பிர மாணமாகவுடைய சாந்தமான தேசிகக்கு நமஸ்காரமென்று அரியினுற் சொல்லப்பட்டபடியாலும் இவைகளே பிரமாணமென்று சொல்லப்பட்ட து. தொழுதிறைஞ்சுவா மென்று சாமானியமாகக் கூறினமையால் விசே டமாகத் திரிகரணங்களும் வருவிக்கப்பட்டன. மனத்தினுலிரண்டறச் சிந் திப்பதற்கு உதாரணம். **சசிவன்னபோதம்.** பூசனையுமதுகல பொருளுமறி

தமையு-மீசனையும்வேறதற வறிவதறிவெனவே-வாக்கினுலிரண்டறத் துதிப்பதற்கு உதாரணம். ஒழிவிலொடுக்கம். கன்னிக்கதலிதனை நாகழிப்பான் கண்போலத் தன்னையறியாவறிவே தான்மீளச்-சொன்னுலு நாவென்ற நாவேபோனுனென்ற சொல்லளவே-யாமன்றித் தானெதிராக-தேகத்தினு லிரண்டறவணங்குவதற்கு உதாரணம். திருமந்திரம் தன்னையறியத் தனக்கொருகேடில்லைத்-தன்னையறியாமற் றுனேகெடுகின்ருர். தன்னையறியு மறிவையறிந்தபின் - றன்னையர்ச்சிக்கத் தானிருந்தானே - மற்றும் வருவனவற்ருற்காண்க.

---

## கடவுள் வணக்கங்கூறி, நூற்பெருமை நுவலுகின்றது.

திகழுநான் முகன்முதற் றேவர் மூவருஞ்
சகலவே தங்களுஞ் சாத்தி ரங்களும்
புகலுஞா னத்தினுற் புரண மானது
நிகரில்வா சிட்டமா நிபுண ஞான நூல்

(இ-ள்.) திகழும் - பிரகாசியாநின்ற, நான்முகன் முதற்றேவர் மூவரும் - பிரமன்முதலிய கடவுளராகிய மும்மூர்த்திகளாலும், சகலவேதங்களும் - சமஸ்த சுருதிகளாலும், சாத்திரங்களும்-சகலசாத்திரங்களாலும், புகலும் - சொல்லப்பட்ட, ஞானத்தினுல் - ஆத்மஞானத்தினுல், புரணமானது - நிறைந்திருக்கின்றது, நிகரில் - சமானமில்லாத, வாசிட்டமா நிபுணஞானநூல்-வாசிட்டமென்னுஞ் சிறப்பாகிய ஞானசாஸ்திரம்-எ-று.

(இ-ரை.) வாசிட்ட மென்னும் சிறப்பாகிய ஞானசாஸ்திரமானது பிரகாசியாநின்ற பிரமன்முதலிய கடவுளர்களாகிய மும்மூர்த்திகளாலும், சமஸ்தவேதங்களாலும், சகல சாஸ்திரங்களாலும், சொல்லப்பட்ட ஆத்மஞானத்தினுல் நிறைந்திருக்கின்றது என்பதாம்

(ப - ரை.) சுயம்புவடிவமான மும்மூர்த்திகளினது சுவானுபூதி யென்னும் பாரம்பரிய வுபதேசமொழியினுல் விளங்குகின்ற வாத்மஞானத்தையே - யிந்நூலிற் கூறுதலால் - மூவரும் புகலு ஞானமென்ருர், அநாதிநித்தியமாயிருக்கின்ற வேதங்க டமக்கந்தரங்கமான மகாவாக்கியத்திற் கூறிய கூடஸ்த பிரமைக்கியமென்னு மாத்மஞானத்தையே - இந்நூலிற் கூறுதலால் சகல வேதங்களும் புகலுஞானமென்ருர், சுவானுபூதி மான்களாகிய சத்துக்களா லனுபவித்துச் சொல்லப்பட்ட வனுபூதி வசனங்களாகிய சாஸ்திரங்களாற் கூறப்பட்ட வாத்மஞானத்தையே - இந்நூலிற்

கூறுதலால் சாத்திரங்களும் புகலுஞானமென்றார், இம்மூன்றினுலுமொரு தன்மையவாகச் சொல்லப்பட்ட வாத்மஞானமானது - இந்நூலினிறைந் திருத்தலான் ஞானத்திற் புரணமானதென்றார். 'சமானமில்லாதபிரம ஞானமிதில் விசேடமாய்விளங்குதலால் - நிகரில்வாசிட்டமா நிபுணஞான நூலென்றார். (இ-ம்.) இந்நூற்சுருதி குருசுவானுபவத்தை விளங்குகின்ற பிரபலச்சுருதியாம். (கசு)

தலைமைநான் முகன்மனத் தாம ரைக்கினன்
சிலையில்ரா கவன்றிருச் செவிக்குத் தெள்ளமு
துலைவில்வான் மீகிவாக் குதித்த தத்துவ
நிலைமைவா சிட்டமா நிபுண ஞானநூல்.

(இ-ள்.) நிலைமை - நிலைபெற்ற, வாசிட்டமாநிபுணஞானநூல் - வாசிட்டமாகிய மேலான ஞானசாத்திரமானது, தலைமைநான்முகன் - முதன்மையாகியபிரமதேவனது, மனத்தாமரைக்கு-இதயகமலத்துக்கு, இனன்-ஞானசூரியனுகவும், சிலையில்ராகவன் - தனுசையெடுப்பதற்குமனமில்லாத (மூமூட்சுப்பருவத்தையுடைய) விராமனது, திருச்செவிக்கு - சிறப்பாகிய சிரவணத்துக்கு, தெள்ளமுது - தெளிவாகிய வானந்தாமிர்தமாகவும் உலைவில்வான்மீகி - சலனமில்லாத வான்மீகிரிஷியினுடைய, வாக்குதித்த தத்துவம் - (அனுபூதி) வசனத்தினுலுதயமாகிய சத்தாகவும் விளங்குகின்றது—எ-று.

(இ-ரை.) நிலைபெற்றவாசிட்டமாகிய மேலானஞானசாஸ்திரமானது முதன்மையாகிய பிரமதேவனது இதயகமலத்துக்கு ஞானசூரியனுகவும். தனுசை எடுப்பதற்கு மனமில்லாத மூமூட்சுப் பருவத்தை அடைந்த ஸ்ரீராமனது திருச்செவிக்குத் தெளிவாகிய ஆநந்தாமிர்தமாகவும், சலனமில்லாத வான்மீகரிஷியினுடைய அனுபூதி வசனத்தினு லுதயமாகிய சத்தாகவும் விளங்குகின்றது—என்பதாம்.

மனத்தாமரை யென்றதனுன் ஞானமென்பது வருவிக்கப்பட்டது.

(ப-ம்.) பிரமசங்கற்பமான சீவேஸ்வரசகத்தை பிரமப்பிரகாசமாகப் பிரகாசிப்பிக்குஞ் சுயம்பிரகாசமாக விந்நூல்விளக்குதலின் தலைமைநான் முகன் மனத்தாமரைக்கினனென்றும் விஸ்வரூபமான வஸ்துவி னுதரூபமாயவந்தசீவேஸ்வர சகத்துமுதலியவற்றிலுள்ள விடயாநந்தங்களைப் பூரணுநந்தமாகவாநந்திப்பிக்கு நிரதிசயாநந்தமாக விந்நூலறிவித்தலின் இராகவன் றிருச்செவிக்குத் தெள்ளமுதென்றும்அறிதலிறந்து சத்தாமாத்திரமாகவிளங்கு நிருவிகற்பசமாதி யனுபவமுள்ள சத்துக்கள் வாக்கினுற் சீவேஸ்வரசகங்கள்சத்தாமாத்திரமாக விளங்குகின்றதென்னுமனுபவத்தை

யிந்நூல் விளக்குதலின்உலேவில் வான்மீகிவாக்குதித்த தத்துவமென்றுங் கூறினர்.

(இ-ம்.) இந்நூல் சீவேஸ்வரசகங்கள் சசசிதாநந்தப் பிரமமயமென்பதை யறிவிக்கின்றதாம.

பெரியவ ரறுவுறு பெருமை சான்றது
விரிவுறு சிறியவர் மேவொ ணாதது
வரிசையி லுயர்ந்தது வசிட்ட சங்கிதை
யரியமெய்ஞ் ஞானநூ லனைத்தின் மிக்கதே.

(இ-ள்.) பெரியவர்-(அறிவிற்பெரிய) மகத்துக்களால, அறிவுறு-(தன்மயமா) யறியத்தக்க, பெருமைசான்றது - மேன்மைநிறைந்தது, விரிவுறு சிறியவர்-(மனோசங்கற்பம்) விரியப்பெற்ற வற்பவறிவை யுடையவர்களால் மேவொணாதது-(அனுபவமா) யறியத்தகாதது, வரிசையிலுயர்ந்தது-(அறிவிக்கத்தக்க) முறைமையிற்சிறந்தது, வசிட்டசங்கிதை - வாசிட்டநூலானது, அரியமெய்ஞ்ஞானநூல் - அரிதற்கரிய மெய்ஞ்ஞானத்தை (யறிவியாநின்ற) ஞானசாத்திரங்கள், அனைத்தின்மிக்கது - எல்லாவற்றிலு மேலானதாம்-எ-று.

(இ-ரை.) அறிவிற்பெரிய மகத்துக்களால் தன்மயமா யறியத்தக்க மேன்மை நிறைந்தது. மனோசங்கற்பம் விரியப்பெற்ற அற்ப அறிவுடையவர்களால் அனுபவமா யறியத்தகாதது. அறிவிக்கத்தக்க முறைமையிற் சிறந்தது. (ஆதலால்) வாசிட்ட நூலானது அறிதற்கரியமெய்ஞ்ஞானத்தை அறிவியாநின்றஞான சாஸ்திரங்கள் எல்லாவற்றிலும் மேலானதாகும்—எ-ம்.

(ப-ம்.) சகலமுந் தமதாத்மஞானமாக வியாபித்து விளங்குஞ் சத்துக்களாலுணரத்தக்க நூலென்பார், பெரியவரறிவுறு பெருமை சான்றதென்றும் சகலமுந் தனக்கு வேறனவனாத்மாவாய் வியாபித்தறியும் அசத்துக்களா லறியக்கூடாத திந்நூலென்பார், விரிவுறுசிறியவர் மேவொணாததென்றும் ஆத்மஞானத்தை யறிவிக்குமரபினில் மேலான ஞானபூமியின் முடிவான துரியாதீதத்தை யிந்நூல் விளக்குமென்பார், வரிசையிலுயர்ந்தது வசிட்டசங்கிதையென்றும் அபரோட்சஞானத்தை யுணர்த்து நூல் போலாது பரோட்ச ஞானனுபவத்தை யுணர்த்துவ திந்நூலென்பார். அரியமெய்ஞ்ஞான நூலனைத்தின் மிக்கதென்றுங் கூறினர்.

(இ-ம்.) சகலமும் பிரமாநந்த சாட்சாத்காரமாகவிளங்கு மதீதானுபூதியையுணர்த்தும்பிரபலச்சுருதியா யிருக்கின்ற திந்நூலென்பதாம். (கஅ)

## அருள்வடிவமாயிருத்தல்.

தெருளுறு மகர்க்கிதஞ் செய்யு மன்பினு
லருமைவா சிட்டநூற் கன்னை யொப்பளோ
வுரியதாய் பிறவியை யுள்ள தாக்குவள்
பெருமைவா சிட்டமிப் பிறப்பை மாற்றுமே.

(இ-ள்.) தெருளுறுமகர்க்கு - தன்னைத்தெரிந்துகொள்ளும் அறிவில்லாத புத்திரருக்கு, இதஞ்செய்யுமன்பினுல் - ஞானகாரத்தையூட்டி யாத்மசமரக்ஷணையென்னும் இதத்தைச் செய்யாநின்ற தயையினுல், அருமைவாசிட்டநூற்கு - அரியவாசிட்டநூலாகிய வன்னைக்கு, அன்னையொப்பளோ - விடயாகாரத்தையூட்டித் தேகசம்ரட்சணை செய்யாநின்ற தாயானவள் சமானமாவாளோ, உரியதாய் பிறவியை யுள்ளதாக்குவள் - தேகத்திற்குரித்தான தாயானவள் விடயவாசனையையுண்டாக்கிச் சநநத்தைமாருமனிலைபெறச்செய்வள், பெருமைவாசிட்டம் - பெருமைபொருந்திய வாசிட்டநூலென்னுந் தாயானவள், இப்பிறப்பைமாற்றும் - பிரமானந்த வாசனையை யுண்டாக்கி இச்சநநத்தை நீக்குவாள்—எ-று.

(இ-ரை.) தன்னைத் தெரிந்துகொள்ளும் அறிவில்லாப்புத்திரருக்கு ஞானகாரத்தை ஊட்டி ஆத்ம சம்ரக்ஷணை என்னும் இதத்தைச் செய்கின்ற தயையினுல் அரியவாசிட்ட நூலாகிய தாய்க்கு விஷயாகாரத்தை ஊட்டித் தேகசம்ரக்ஷணை செய்யாநின்ற தாயானவள் சமானமாவாளோ ? தேகத்திற்குரிய தாயானவள் விஷயவாசனையை உண்டாக்கிச் சனனத்தை மாருமல் நிலைபெறச்செய்வள், பெருமைபொருந்திய வாசிட்டநூலென்னுந் தாயானவள பிரமானந்த வாசனையையுண்டாக்கி இச்சனனத்தை நீக்குவாள்—என்பதாம்.

(இ-ம்.) இந்நூலனித்தியமான விடயாநந்தத்தை மாற்றி நித்தியமானபிரமாநந்தத்தைக் கொடுக்கின்ற கருணையின் மிஞ்சினதாம். (கக)

## நூற்பெருமை

## நுவன்றவை யடக்கங் கூறுகின்றது.

எண்ணுறு பெருங்குணத் திராமன் றன்மய
நண்ணுற வசிட்டனே நவின்ற ஞானநூல்

பண்ணுறு தமிழினற் பாடு கேன்சுதை
மண்ணுறு கலத்தினும் வைக்கு மேழையேன்.

(இ-ள்.) எண்ணுறு - எண்ணத்தகுந்த, பெருங்குணத்து - மகாசாந்த குணத்தையுடைய, இராமன் - இராகவன், தன்மயநண்ணுற - தனதாத்ம ஸ்வரூபத்தையடைய, வசிட்டனவின்ற - வசிட்டமுனியானவ ரனுக்கிர கஞ்செய்த, ஞானநூல் - (ஞானார்த்தத்தையே வான்மீகமுனிவரால் வடமொழியிலருளிச்செய்யப்பட்ட விவ்வாசிட்டமென்னும்) ஆதமஞானசாத்திரத்தை, பண்ணுறு தமிழினல் - இசையமைந்த தென்மொழியினல், சுதை- (சொர்ன்னபாத்திரத்தில் வைக்கத்தகுந்த) அமிர்தத்தை, மண்ணுறுகலத்தினும் - மிர்த்திகாபாத்திரத்திலும், வைக்குமேழையேன் - வைக்கத்துணியுமேழையேனாகியயான், பாடுகேன்-விருத்தமாகப்பாடுவேன்-எ-று.

(இ-ரை.) எண்ணத்தகுந்த மஹா சாந்தகுணத்தையுடைய ஸ்ரீராமன் தனதாத்ம ஸ்வரூபத்தையடைய வசிட்டமுனியானவர் அநுக்ரகஞ்செய்த ஞானார்த்தத்தையே வான்மீகமுனிவரால் வடமொழியி லருளிச்செய்யப்பட்ட இவ்வாசிட்டமென்னும் ஆத்மஞானசாஸ்திரத்தைஇசையமைந்த தென்மொழியினல் சொர்ன்ன பாத்திரத்தில் வைக்கத்தகுந்த அமிர்தத்தை மிர்த்திகாபாத்திரத்திலும் வைக்கத்துணியு மேழையேனாகியயான் விருத்தமாகப்பாடுவேன்—என்பதாம்

(ப-ம்.) ஆதியிலிராகவருக்கு வசிட்டருபதேசித்த வாத்மஞானசாரங்களை பின்பு வான்மீகமுனிவரால வாசிட்டமென்னும் பெயரைத்தரித்து வடமொழியிற் பரத்துவாசருக்குச் சொன்ன காந்தாசம்மிதமான காவியப் பிரபந்தத்தை, தமிழ்ப்பாவிற்சொல்லத் துணிந்ததேதென்னில், சொர்ன்னபாத்திரத்திலும், மிர்த்திகாபாத்திரத்திலும், அமைந்திருக்கின்ற வமிர்தத்துக்குப் பாத்திரபேதமேயன்றி ரஸபேதமில்லாததுபோல வடமொழிக்குந் தென்மொழிக்குஞ் சத்தபேதமேயன்றி யருத்தபேதமில்லாமையாலும் சொர்ன்னபாத்திர முள்ளவர் சிலரும், மிர்த்திகாபாத்திர முள்ளவர் பலருமாவதுபோல தேயவியற்கையால் வடமொழியுணர்ந்தோர் சிலருந் தென்மொழியுணர்ந்தோர் பலருமாதலாலும் வடநூலுணர்ந்தோர்க்கு மேனையோர்க்கு மெளிதிற் பயன்படுதலாலு மெனக்கொள்க.

(இ-கு.) இத்தமிழ்நூல் சர்வத்திர சாதாரணமாயிருந்து பக்குவருக்குச் சுவாநுபூதியை விளைவிக்கின்றபடியால் சீவகாருணியமுள்ள சத்துக்கள் மிகுந்த வகமகிட்சியோடும் மேன்மையாகக் கொள்வரென்பதாம். ()

## அவையடக்கங்கூறி யதிகாரியிலக்கணங் கூறுகின்றது.

பந்தமுற் றனன்பர பதத்தைச் சேர்கவென்
றந்தநிச் சயமுளா னறிவி லானலான்
சிந்தனைத் துயர்கெடச் சித்தைச் சேர்ந்துளா
னிந்தநூற் குரியவ னென்று கொள்கவே.

(இ-ள்.) இந்தநூற்குரியவன்-இவ்வாசிட்டநூலுக் கதிகாரியானவன், அறிவிலானலான் - அஞ்ஞானியுமல்லன், சிந்தனைத்துயர்கெட - மனோதுன்பநீங்கும்படி, சித்தைச்சேர்ந்துளானலன் - ஞானத்மாவையடைந்த சீவன்முத்தனுமல்லன், பந்தமுற்றனன் - (யான்) பந்தத்தை யடைந்திருக்கின்றேன், பரமபதத்தைச்சேர்கவென்று - இதைநீக்கி யினி மோக்ஷத்தைச் சேரக்கடவேனென்று சிந்திக்கும், அந்தநிச்சயமுளானென்று - அந்நிச்சயத்தை யுள்ளவனேயென்று, கொள்க - கொள்ளக்கடவது—எ-று. அலானென்பதைச் சித்தைச்சேர்ந் துளானென்னு மிடத்துங்கூட்டுக.

**(இ-ரை.) இவ் வாசிட்டநூலுக் கதிகாரியானவன் அஞ்ஞானியுமல்லன். மனோதுன்ப நீங்கும்படி ஞானத்மாவையடைந்த ஜீவன்முத்தனுமல்லன். "யான் பந்தத்தையடைந்திருக்கின்றேன். இதைநீக்கி இனி மோட்சத்தைச்சேரக்கடவேன்" என்று சிந்திக்கும் அந்நிச்யத்தை யுள்ளவனே என்று கொள்ளக்கடவது—எ-ம்.**

(இ-ரீ.) சேறுனது தேற்றாங்கொட்டையினற் றெளியமாட்டாதது போல, அஞ்ஞானமயமா யிருக்கின்றவன் றெளியமாட்டாமையா லிந்நூலினது சாரத்தையறிதற் கவனதிகாரியல்லனென்றும், தெளிந்தசலத்தைத் தெளிவிக்கத் தேற்றாங்கொட்டை வேண்டுவதில்லாததுபோல, சின்மாத்திரமாய் விளங்குகின்றவனுக் கிந்நூலவசியம் வேண்டுவதின்றாகையால், இந்நூலுக் கவனுமதிகாரியல்லனென்றும், கலங்கனீருக்குத் தேற்றாங்கொட்டை வேண்டுவதுபோல, அஞ்ஞானந்தமு ஞானோதயமுமுண்டாயிருக்கின்ற சாதன சதுட்டயமுள்ள முமூட்சுப்பருவத்தையுடையவனே யிந்நூலுக் கதிகாரியாவனென்றுமாம். பிஷட்டபேஷண ஞாயம் போல, ஞானி இந்நூற்கதிகாரியன்றென்றுலுமாம். இச்செய்யுளி லிந்நூற்குரிய வதிகாரியைக்கூறுதலா லதற்கினமான விடயம், பிரயோசனம், சம்பந்தம், குறிப்பாயிருக்கின்றன. நூலிற்கும் நூலிற்சொல்லப்பட்ட விடயத்துக்குங் கூறுவதுங் கூறப்படுவதுமாகியதே சம்பந்தமெனக்கொள்க.()

## அதிகாரி குருமுகமாய் விசாரித்தல்.

ஒருங்குணர் குரவனு முயர்வான் மீகனை
மருங்குறப் பரத்துவன் வணங்கி வன்பவ
நெருங்குவெந் துயரிலே நின்ற தெங்ஙன
மருங்குணத் திராமனீ யருளிற் கூறென்றான்.

(இ-ள்.) ஒருங்குணர்குரவனும் - முழுதையுமுணர்ந்த வாசாரியாகிய, உயர்வான்மீகனை-மேலான வான்மீகிமுனிவரை, மருங்குற-மருங்காக, பரத்துவன்வணங்கி - பரத்துவாசமுனிவர் நமஸ்காரஞ்செய்து, வன்பவநெருங்கி வெந்துயரில் - கொடியபிறவியிற்செறிந்த வெவ்விய சம்சாரதுன்பத்தில், அருங்குணத்திராமன் - அரியசத்துவகுணத்தையுடைய விராமன், நின்றதெங்ஙனம் - இருந்ததெப்படி, நீ - தேவரீர், அருளிற்கூறென்றான் - கிருபையினு லனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று மிருதுவாகக் கேட்டார்—எ-று.

(இ-ம.) முழுதையுமுணர்ந்த ஆசாரியராகிய மேலான வான்மீகமுனிவரை அடைந்து பரத்வாசமுனிவர் நமஸ்காரஞ் செய்து கொடியபிறவியிற்செறிந்த மஹா சம்ஸாரதுன்பத்தில் அரிய சத்வகுணத்தையுடைய ஸ்ரீராமன் இருந்ததெப்படி? தேவரீர் கிருபையால் அனுக்ரகஞ் செய்ய வேண்டுமென்று மிருதுவாக விண்ணப்பித்தார்—என்பதாம்.

(ப-ம.) சீடனுலறியவேண்டுவன வனைத்தையு மறிவிக்கத்தக்க சாமர்த்தியமுள்ள வாசிரியரென்பதுதோன்ற ஒருங்குணர் குரவனுமென்றார், சீடனுக்குரிய பயபத்தி முதலானவைதோன்ற மருங்குறப் பரத்துவன் வணங்கியென்றார், பரத்துவாசர் நிட்காமனு புண்ணியபரிபாகத்தினுற் சாதனசதுஷ்டயம் வந்ததனுற் றனதாத்மஸ்வரூப முதயமாகாநின்ற வவசரத்திற் சகலமுந் துக்கவடிவமாகக்கண்டுந் தன்னுடைய சுவானுபூதி பிரத்தியட்சமாய்த் துன்பநீங்காததனுற் சம்சாராக்கினியெரிக்குந் துன்பத்துக்குச் சகிக்கமாட்டாதவரா யிராம ரெந்தநிச்சயத்தினு லிச்சமுசாரத்தோடு கூடியிருந்தாரோ வந்த நிச்சயத்தைத் தெரிந்துகொண்டா லதுவேநமக்கு மனுபவமாமென்னு மபிப்பிராயங்கொண்டு வன்பவநெருங்கு வெந்துயரிலேநின்ற தெங்ஙன மருங்குணத்திராமனென்றார்.

(இ-ர.) பரிபக்குவமான சீடன் சீவன்முத்தித் தன்மையை விசாரித்ததாம். (உஉ)

## விசாரித்தசீடனது மோகநிவர்த்தியின் பொருட் டதனுற்பத்திகூறல்

நல்லது சிறுவநீ யுரியை நானது
சொல்லுவன் கேட்குதி துயர்செய் மோகநீ
வெல்லலா மோகந்தான் சகத்தின் வேறன்றி
மல்லல்வா னிறம்படைத் தென்ன வந்துறும்.

(இ-ள்.) சிறுவ - புதல்வனாகிய பரத்துவாசரே, நீ - நீ கேட்டவினா, நல்லது - பரமசுகத்தைவிளக்கு நன்மையுள்ளதாம், நீயுரியை - நீ நிருவாணசுகத்தைக் கேட்பதற்குரித்தான சாதனசதுஷ்டய சம்பத்துள்ளவன், நானதுசொல்லுவன்கேட்குதி - யானதைச் சொல்லுவேன் கேட்பாயாக, துயர்செய்மோகம் - துன்பஞ்செய்கின்ற வஞ்ஞானத்தை, நீவெல்லலாம்- நீ செயஞ்செய்யலாம், மோகந்தான் - மோகமானது, சகத்தின்வேறன்றி- சகத்சம்பந்தமாய், மல்லல்வான - வளமைதங்கிய வாகாயத்தில், நிறம்ப டைத்தென்ன - இல்லாத நீலநிறமுண்டானதுபோல, வந்துறும் - பிரம த்தினிடத்தி லில்லாததாகவந்து பொருந்தும்—எ-று.

(இ-வை.) புதல்வனாகிய பரத்வாசரே! நீகேட்டவினா பரம சுகத்தை விளக்கு நன்மையுள்ளது. நீயும் நிருவாணசுகத்தைக் கேட்பதற்கு உரித்தான சாதன சதுஷ்டய சம்பத்துள்ளவன், யானதைச் சொல்லுவேன், கேட்பாயாக. துன்பந்தரு மஞ்ஞா னத்தை நீ செயிக்கலாம், மோகமானது ஜகத்சம்பந்தமாய்வளமை தங்கிய ஆகாயத்தில் இல்லாத நீலநிற முண்டானதுபோல பிரமத் தினிடத்தி லில்லாததாக வந்து பொருந்தும்—என்பதாம்.

(ப-ம்.) நாமனுக்கிரகஞ்செய்யும் பிரமாநந்தாபரோட்ச சாட்சாத்கார த்தினாற் செநநமரணதுன்பத்தைக்கொடுக்கு மயக்கநீங்குமென்பார், நான் சொல்லுவன் கேட்குதி துயர்செய்மோகநீ வெல்லலாமென்றார், நிருமல மான வாகாயத்தை நீலநிறமாய்ப்பார்க்கும் பிராந்தியுண்டாவதுபோலச் சொச்சமான நிரதிசயாநந்த சுவானுபூதிப் பிரத்தியட்சத்தை சகத்தாகக் காண்கின்ற மோகமுண்டானதென்பார், மோகந்தான் சகத்தின்வேற ன்றி மல்லல்வானிறம்படைத் தென்னவந்துறுமென்றார்.

(இ-ம்.) ஆகாயத்தி னீலநிறமிலலாதிருந்துந் தெரிவின்மையினாலிரு ப்பதாய்த் தோற்றுவதுபோலப் பிரமஞானத்திற் சகத்மோக மித்தையா யிருந்துஞ் சுவானுபவமின்மையாற் பரமார்த்தம்போலத் தோற்றப்படு

கின்றதென் றத்தியாரோபவுத்தியா லறிவித்ததாம். அத்தியாரோபமாவது, எதார்த்தமான சச்சிதாநந்தப் பிரத்தியட்சத்தை யில்லாத நாயரூப வடிவமான சகமாக விபரீத பாவனையாற் காண்குதல். (உரு)

## மாயாவிலக்கணங்கூறியதை நிவிர்த்திக்கு மனுபூதியிலக்கணங்கூறல்.

இறப்பிலா விந்த மோக மிறையுமீட் டெண்ண மின்றி
மறப்பதே நல்ல தென்று மதித்துயர் மனத்தி னுக்குத்
திறப்படக் காணப் பட்ட தில்லெனச் சித்தினாலே
யுறப்பெறு மெப்போ தப்போ துயர்பர சுகம தாமே.

(இ-ள்.) இறப்பிலாவிந்தமோகம் - நித்தியமாகக்காணப்பட்ட விம்மோகமாகியசகததை, இறையுமீட்டெண்ணமின்றி - எவ்வளவேனுந் திரும்பநினையாமல், மறப்பதே - மறந்துவிடுவதே, நல்லதென்றுமதித்து-நன்மையென்று நிச்சயித்து, உயர்மனத்தினுக்கு - ஸ்வரூபசமஸ்க்காரமான மகாமனதுக்கு, திறப்படக்காணப்பட்டது - உள்ளதுபோலத் தோற்றப்பட்ட சகமானது, இல்லென - எதார்த்தமா யில்லவேயில்லையென்று, சித்தினால்-ஞானத்தினால், உறப்பெறுமெப்போது - உண்டாவதெப்போதோ, அப்போதுயர்பரசுகமதாம்-அப்போதே மேலான நிருவாணசுகமாம்-எ-று.

(இ-னா.) நித்தியமாகக் காணப்பட்ட இம் மோகமாகிய ஜகத்தை எவ்வளவேனுந் திரும்ப நினையாமல் மறந்துவிடுவதே நன்மை என்று நிச்சயித்து ஸ்வரூபசம்ஸ்காரமான மஹாமனதுக்கு உள்ளதுபோலத் தோற்ற ஜகமானது யதார்த்தமாயில்லவேயில்லையென்று ஞானத்தினால் உண்டாவதெப்போதோ! அப்போது மேலான நிருவாணசுகமாகும்—என்பதாம்.

(இ-ம்.) மாயையென்பதிருந்தன்றோ விறக்கவேண்டு மதுண்டாவது யழிவது மெதார்த்தமாயின்றாகலின், இறப்பிலா விந்தமோகமென்றும், சகசானுபவப் பிரக்ஞையினால் மோகஸ்மரணம் விடவேண்டுவதாகையால் இறையுமீட்டெண்ணமின்றி மறப்பதே நல்லதென்றும், துரியாதீதத்திற் கரைந்து வெளிப்படுமறிவுக் கப்போதே சகலசகங்களும் பிரமாநந்த சாட்சாத்காரமாக விளங்குதலால், உயர்மனத்தினுக்குத் திறப்படக்காணப்பட்ட தில்லெனச்சித்தினாலே யுறப்பெறுமெப்போதப்போ துயர்பரசுகம் தாமென்றுங் கூறினார். ஆத்மாவினின்று மாகாயந் தோன்றிற்றென்னும் பிரமாணத்தின்படியே யுபாதானகாரணத்தைத்தவிர வுபாதேயம் வேறாக

நிரூபிக்கப்படாதென்னுஞ் சுருதியினாலுஞ் சுவர்ன்னத்தைத்தவிர கடக மகுடாதிக ளிடையுயர்ந்து வேறுபடாததென்னு முத்தியினாலும், திருக் குரூபமான வாத்மாவினிடத்தி லுண்டான திரிசயப்பிரபஞ்சந் திருக்கு வைத்தவிர வேறில்லையெனக்கொள்க.

(இ-ம்.) உபதேசித்த மகாவாக்கியார்த்தந்தோன்ற தான்சின்மாத்தி ரமாக விளங்குந் திருஷ்டியினாற் சகலமுஞ் சின்மாத்திரமாய் விளங்கு மென்னு மனுபவம்வந்தா லதுவே நிரதிசயாநந் தாபரோட்ச சாட்சாத்கா ரமாயென்று சூசகமா யபவாதவுத்தியா லறிவித்ததாம். இவை குருமுக த்தாற் றெரிந்துகொள்க; அபவாதமாவது, விபரீதபாவனையாற் பார்க்கி ன்றவில்லாத நாமரூபவடிவமாகிய சகத்தை எதார்த்தமான சச்சிதாநந்த வடிவமாகத் தெளிவினாற் காண்குதல். (உச)

## திருக்குவைச்சொல்லி திரிசியதிருஷ்டி நீங்காவிடிற் பரமசுக முண்டாகாதெனல்.

வழிபடு மிதனை விட்டு மற்றுள நூல்க ளென்னுங்
குழிகளிற் புரண்டஞ் ஞானக் குணத்தினாற் பிறப்போர்க் கெல்லா
மொழிவற வொருவர் செய்தற் குரித்தன்றாய்த் தானே யுண்டாங்
கழிதலிற் பரம வின்பங் கற்பங்க ளாலுங் கூடா.

(இ-ள்.) ஒழிவற - சதோதயமாய், ஒருவர்செய்தற்கு - ஒருவராலுண் டாக்குவதற்கு, உரித்தன்றாய் - உரியதல்லாததாய், தானேயுண்டாம்-சுய மாகவுண்டான, கழிதலில் - நாசமில்லாத, பரமவின்பம் - நிருவாணசுக மானது, வழிபடும் - வழிபடாநின்ற, இதனைவிட்டு - (பரஞானமான) விந் தத் திரிசிய விஸ்மரணத்தைவிட்டு, உள - அபரஞானத்தையுடைய, நூல் களென்னும் - சாத்திரங்களென்கின்ற, குழிகளிற்புரண்டு - படுகுழிகளி லுழன்று, அஞ்ஞானக் குணத்தினால் - அறிவின்மையாகியகுணத்தினால், பிறப்போர்க்கெல்லாம் - சனிப்பவரனைவர்க்கும், கற்பங்களாலுங்கூடா - எக்காலத்திலும் பொருந்தாதாம்.

(இ-ரை.) சதோதயமாய் ஒருவரால் உண்டாக்குவதற்கு உரி யதல்லாததாய்ச் சுயமாக உண்டான நாசமில்லாத நிருவாணசுக மானது வழிபடாநின்ற பரஞானமான இந்தத் திரிசியவிஸ்மரண த்தைவிட்டு, அபரஞானத்தையுடைய சாஸ்திரங்களாகிய படுகுழி களிலுழன்று அறிவின்மையாகிய குணத்தினாற் பிறப்பவரனைவர் க்கும் எக்காலத்திலும் பொருந்தாதாம்—என்பதாம்.

(இ-ம்.) சாத்திரஞானஞ் சிரமத்தின் பொருட்டேயன்றித் திரிசிய விஸ்மரணம்போல நித்தியசித்த பரப்பிரமவிடயாபரோக்ஷானுபவமான விசிராந்தியைக் கொடாதென்பதாம். வழிபடு மிந்நூல்விட்டு மற்றுள நூல்களென்கின்ற பாடமுமுண்டு. (௨௫)

## திரிசிய விஸ்மரணமான வாசனுத்தியாகம்.

## பெரியோர்க்குஞ் சம்மதமாமெனல்.

அலைசெய்வா தனையைச் சேட மறவிட நல்ல தென்று
நிலைபெறு முத்தி யென்று நிமலமா நெறியீ தென்றுந்
தலைமையோர் பகர்வ ரன்ன திருவகைச் சநந நல்கி
யுலைதரு மலின மொன்றை தொழித்திடுஞ் சுத்த மொன்றே.

(இ-ள்.) அலைசெய்வாதனையை - சஞ்சலத்தைவிளைக்கின்ற வாசனையை, சேடமற - பற்றற, விடல் - விடுதலையே, நல்லதென்றும் - நன்றென்றும், நிலைபெறு முத்தியென்றும் - நிலைபெற்றமோக்ஷமென்றும், நிமலமாநெறியீதென்றும் - மாசற்றமார்க்கமிதுவென்றும், தலைமையோர்பகர்வர் - மேலானசத்துக்கள்சொல்லுவார்கள், அன்னதிருவகை - அவ்வாசனையிரண்டுவிதமாம், (அவற்றில்) சநநநல்கி - பவத்தைக்கொடுத்து, உலைதரு - நடுக்கத்தைச் செய்யாநின்ற, மலினமொன்று-அசுத்தவாசனையொன்று, அதொழித்திடும் - அச்சநநத்தை நிவிர்த்தி செய்கின்ற, சுத்தமொன்று - சுத்தவாசனை யொன்றும்—எ-று.

(இ-ரை.) சஞ்சலத்தை விளைக்கின்ற வாசனையைப் பற்றற விடுதலையே நன்றென்றும், நிலையான முத்தி என்றும், மாசற்ற மார்க்கமிதுவென்றும் மேலானசத்துக்கள் சொல்லுவார்கள். அவ்வாசனை இரண்டுவிதமாம். அவை பிறப்பைக் கொடுத்து நடுக்கஞ்செய்யும் அசுத்தவாசனை ஒன்று, அச்சனனத்தை நிவிர்த்திசெய்கின்ற சுத்தவாசனை ஒன்று—என்பதாம்.

(இ-ம்.) வாசனுத்தியாகமே விதேகமுத்தியெனச் சொல்லி யதன் சாமானிய விலக்கணத்தைச் சொன்னதாம். (௨௬)

## வாசனையை நிவிர்த்திக்கும்பொருட் டதன் விசேடண நிரூபித்தல்.

மடமையின் செறிவே மெய்யாய் மலியகங் காரந் துன்றிப்
படர்தரு பிறப்பை மேன்மேற் பயில்விக்கு மலின மென்ப
ரடர்மறு சநநநீங்கி யங்குர மின்றிச் செந்தீச்
சுடமுளை யாவித் தொக்குஞ் சுத்தவா தனைய தென்பர்.

(இ-ள்.) மடமையின்செறிவேமெய்யாய் - அஞ்ஞானத்தினதுமயமே தகமாய், மலியகங்காரந்துன்றி - மிகுந்தவகம்பாவநிறைந்து, படர்தருபிறப்பை-வளராநின்றபலசநநத்தை, மேன்மேல - மேலுமேலும், பயில்விக்கும் - உண்டாக்குவதை, மலினமென்பர் - அசுத்துவாசனையென்று பெரியோர்கள் சொல்லுவார்கள், அடர்மறுசநநநீங்கி - நெருங்கிய மறுபவம் விட்டிருக்கின்ற, அங்குரமின்றி - முளையில்லாமல், செந்தீச்சுட - சிவந்தவக்கினியினுல்வறுக்க, முளையாவித்தொக்கும்-முளையாதவிதைக்குச் சமானமான, அது - அவ்வாசனையை, சுத்தவாதனையென்பர் - சுத்தவாசனையென்று சத்துக்கள் சொல்லுவார்கள்—எ-று.

(இ-ஙா.) அஞ்ஞானமயமே தேகமாய். மிகுந்த அகம்பாவ நிறைந்து வளராநின்ற பலஜனனத்தை மேலுமேலும் உண்டாக்குவதை அசுத்தவாசனையென்று பெரியோர் சொல்லுவார்கள். நெருங்கிய மறுபிறப்பை விட்டிருப்பதும் சிவந்த அக்கினியினுல் வறுக்க முளையாதிருக்கும் விதைக்குச் சமானமானது மாகிய அவ் வாசனையைச் சத்துக்கள் சுத்தவாசனை என்று சொல்லுவார்கள்—என்பதாம்.

(ப-ரி.) ஆத்மஸ்வரூபத்தை மறந்து விடயாகாரத்தில் ரம்மிப்பதை மடமையென்ருர்.

(இ-ு.) அஞ்ஞான சமஸ்க்காரமான வசுத்தவாசனையுள்ளவன் பெத்தனென்றும், ஞானசமஸ்க்காரமான சுத்தவாசனையுள்ளவன் முத்தனென்றுஞ் சொல்லப்பட்டதாம். (உஎ)

## சுத்தவாசனையடைந்த சீவன்முத்த லக்கணங்கூறல்.

மெய்தரி நிமித்த மாகத் தரிப்பதாம் விளம்புஞ்சுத்த
மெய்தினர் பிறவி யான வநர்த்தத்தி னென்று மெய்தார்

நொய்தினி னோக்க வேண்டு நோக்கெலா நோக்கி யின்பஞ்
செய்திடுஞ் சீவன் முத்தி சேர்ந்தவ ரென்ன லாமே.

(இ-ள்.) மெய்தரிநிமித்தமாக - பிராரப்ததேகத்தைத் தாங்கும்பொருட்டு, தரிப்பதாம் - தரிப்பதாகிய, விளம்புஞ்சுத்தம் - சொல்லாநின்ற சுத்தவாசனையை, எய்தினர் - அடைந்து, பிறவியானவநர்த்தத்தின்-சநநமாகிய வநர்த்தத்தில், என்றுமெய்தார் - எப்போதுஞ் செல்லாதவர்களை, நொய்தினில் - சூட்சுமமான (ஞானுனுபவத்தினுல்,) நோக்கவேண்டும் - பார்க்கவேண்டிய, நோக்கெலாம் - ஞானவிஷயங்களனைத்தையும், நோக்கி - பார்த்து, இன்பஞ்செய்திடும் - சிதாநந்தசுகத்தைவிளைக்கும், சீவன்முத்தி சேர்ந்தவரென்னலாம் - சீவன்முத்தித் தன்மையை யடைந்தவர்களென்று சொல்லலாம்—எ-று.

(இ-ரை.) பிராரப்ததேகத்தைத் தாங்கும்பொருட்டுத் தரிப்பதாகிய சொல்லாநின்ற சுத்தவாசனையை யடைந்து ஜனனமாகிய அநர்த்தத்தில் எப்போதும் செல்லாதவர்களை சூட்சுமமான ஞானுனுபவத்தினுல் பார்க்கவேண்டிய ஞானவிஷயங்களனைத்தையும் பார்த்து சிதாநந்த சுகத்தை விளைக்கும் ஜீவன்முத்தித்தன்மையை அடைந்தவர்களென்று சொல்லலாம்.

(இ-ம்.) பிராரத்தம் புசிக்கும்படி முடிவாகவந்த தேகத்தைத் தரித்திருக்கு நிமித்தஞ் சுத்தவாசனையைத் தரித்தவ னிச்சநநத்திலழுந்தானென்பதாம். (உ அ)

## சீவன்முத்த ரிலக்கணங்கூறி இராமன் சீவன்முத்தனுன நெறியைச் சொல்லத் தொடங்குதல்.

ஆன்றதோர் சீவன் முத்திப் பதத்தினை யடைந்தி ராமன்
பூன்றமா மனத்த னுன நெறியினைப் புகலக் கேட்பிற்
சான்றவிக் கேள்வி யாலே சரைமர ணங்க டீர்தி
தோன்றலே யெனவான் மீகித் தொன்முனி சொல்ல லுற்றுன்.

(இ-ள்.) ஆன்றது - மாட்சிமைப்பட்டதான, ஓர் - ஒப்பற்ற, சீவன்முத்திப்பதத்தினை யடைந்து-சீவன்முத்தித் தன்மையைப்பெற்று, இராமன்-இராகவன், பூன்றமாமனத்தனுன - பூரணமகாமனதுடனேயிருந்த, நெறியினை - மார்க்கத்தை, புகலக்கேட்பின் - சொல்லக்கேட்குமிடத்தில், சான்றவிக்கேள்வியால் - அறிவுவிளங்கிய விச்சிரவணத்தினுல், சரைமரணங்கடீர்தி - சராமரணங்களை நீக்குவாய், தோன்றலேயென-புதல்வனே

யென்று, வான்மீகித்தொன்முனி - பழயவான்மீகிமுனியானவர், சொல்லலுற்ருன் - சொல்லத்தொடங்கினர்—எ-று.

(இ-ரை.) மாட்சிமைப்பட்டதான ஜீவன்முத்தித்தன்மையை அடைந்து இராகவன் பூரண மஹா மனதுடனேயிருந்த மார்க்கத்தைச் சொல்லக் கேட்குமிடத்தில் அறிவுவிளங்கிய இச்சிரவணத்தினல் ஜராமரணங்களை நீக்குவாய் புதல்வனே! என்று பழய வான்மீகமுனியானவர் சொல்லத்தொடங்கினர்—என்பதாம்.

(இ-ம்.) வான்மீகிமுனிவர் பரத்துவாசருக்குத் தம்மா லனுக்கிரகிக்கப்பட்ட சுவானுபவமான தபரோக்ஷமாம்பொருட் டிராமனறிந்த சுவானுபவ மபரோக்ஷமாகுநிமித்தம் வசிட்டமுனிவ ருபதேசித்த கதைகளைச் சொல்லத்தொடங்கினதாம். (உக)

## இராமன் தீர்த்தயாத்திரை விரும்பல்.

சதுமறை நூல்க ளியாவுந் தரித்தனள் விநோதத் தாலே
யெதுபய மென்ன வஞ்சா திருந்தனன் சின்னுட் பின்னுண்
முதுபய னதிக ளியாவு முனிவர திடமுங் காண்பான்
கதுமெனக் காத லானுன் கார்நிறக் கமலக் கண்ணன்.

(இ-ள்.) சதுமறை - நான்குவேதங்களையும், நூல்களியாவும் - கலைகளனைத்தையும், தரித்தனன் - அப்பியாசித்து, விநோதத்தால் - விளையாட்டினுல், எதுபயமென்ன - யாதுபயமென்று, அஞ்சாது - (ஒன்றிற்கும்) பயப்படாமல், சின்னுளிருந்தனன் - சிறிதுநாளிருந்தார், பின்னுள்-(விளையாட்டுப்பருவநீங்கின) பிற்காலம், கார்நிறக்கமலக்கண்ணன் - மேகவண்ணனை தாமரைக்கண்ணையுடைய விராமன், முதுபயனதிகளியாவும்-மேலான விலாபத்தைக் கொடுக்கத்தக்க புண்ணியதீர்த்தங்க ளனைத்தையும், முனிவரதிடமும்-சத்துக்களுடைய புண்ணியாச்சிரமங்களையும், கதுமென-சீக்கிரமாக, காண்பான்-தரிசிக்கும்பொருட்டு, காதலானுன்-ஆசித்தான்-எ.

(இ-ரை.) நான்கு வேதங்களையும், சகல சாஸ்திரங்களையும் அப்பியாசித்து விளையாட்டினுல் யாது பயமென்று ஒன்றுக்கும் பயப்படாமற் சிறிதுநாள் இருந்தார். விளையாட்டுப்பருவ நீங்கின பிற்காலம் மேகவண்ணனை தாமரைக்கண்ணையுடைய ஸ்ரீராமன் மேலான லாபத்தைக் கொடுக்கத்தக்க புண்ணியதீர்த்தங்க ளனைத்

தையும், சத்துக்களுடைய புண்ணியாசிரமங்களையுஞ்சீக்கிரமாகத் தரிசிக்கும்பொருட்டு ஆசைப்பட்டனன்—என்பதாம்.

(ப-ம்.) இனி மோகபயமான சகசம்பந்தங்களுக்குப் பயந்து அதை நிவிர்த்திசெய்வாரென்பார், விநோதத்தாலே யெதுபயமென்ன வஞ்சாதிருந்தனனென்றார்.

(இ-ம்.) சித்தசுத்திவந்து அதனாற் சாதனசதுஷ்டயமுண்டாயதனாற் சற்குரு வெளிப்படு நிமித்தந் தீர்த்தயாத்திரைசெய்யப் புண்ணிய பரிபாகத்தினாற் றனக்குத்தானே விருப்பமுண்டான தென்பதாம். (௩௦)

## பிதாவைவினவல்.

தந்தைதன் சரண மான நகமெனுந் தாது பூத்த
வந்தமில் கமலப் போதை யன்னம்போ லணைந்து தாழ்ந்து
முந்தைநன் னதிக டேவ ராலய முனிவர் கான்க
ளெந்தைநின் னருளிற் காண்பா னெண்ணிய தென்ற னுள்ளம்.

(இ-ள்.) நகமெனுந்தாதுபூத்த - நகமென்னுங் கேசரங்களையுடைய, தந்தைதன் - பிதாவினது, சரணமான - பாதமென்னும், அந்தமில்-குவியாத, கமலப்போதை - அம்போருகத்தை, அன்னம்போல்-அமிசம்போல, அணைந்து - (இராம) னடைந்து, தாழ்ந்து - நமஸ்கரித்து, முந்தைநன்னதிகள் - பழமையான புண்ணிய தீர்த்தங்களையும், தேவராலயம் - தேவாலயங்களையும, முனிவர்கான்கள் - முனிவர் தபோவனங்களையும், எந்தை-என்பிதாவே, நின்னருளில் - உமதுதயையினால், காண்பான் - தரிசிக்கும் பொருட்டு, என்றனுள்ளம் - என்மனது, எண்ணியது-நினைத்தது—எ-று.

இஃது வியஸ்தரூபக கற்பிதவுபமான வலங்காரம்.

(இ-கா.) நகமென்னுங் கேசரங்களையுடைய பிதாவினது பாதமாகிய குவியாத அம்போருகத்தை அன்னம்போல ஸ்ரீராமன் அடைந்து நமஸ்கரித்து பழமையான புண்ணிய தீர்த்தங்களையும், தேவாலயங்களையும், முனிவர் தபோவனங்களையும், எமது பிதாவே உமதுதயையினால் தரிசிக்கும்பொருட்டு என்மனது நினைத்தது—என்பதாம். (௩௧)

## தீர்த்தயாத்திரைக்குப் பிரவேசித்தல்.

முடிவிலா திரந்த தெல்லா முடிவுறா தில்லை நின்னா
லடியனேன் முன்னம் வேட்ட வரமுநீ யருடி யென்னப்
படிபுகழ் வசிட்டனோடும் பார்த்திப னினிதி னெண்ணிக்
கடிதுபோய் மீடி யென்னக் கார்கழல் வணங்கிப் போனான்.

(இ-ள்.) முடிவிலாதிரந்ததெல்லாம்-முடிவில்லாமல் யாசிக்கப்பட்ட சகலமும், நின்னால் - உம்மால், முடிவுறாதில்லை - முடிவுபெறாததில்லை, அடியனேன் - அடியேன், முன்னம்வேட்ட - முந்தினதாகவிரும்பிக் (கேட்ட,) வரமுநீயருடியென்ன - வரத்தையுந் தேவரீரருளவேண்டுமென்று கேட்க, படிபுகழ் - உலகம்புகழாநின்ற, வசிட்டனோடும் - வசிட்டமுனிவரோடும், பார்த்திபன் - தசரதரானவர், இனிதினெண்ணி - இனிமையாகவாலோசித்து, கடிதுபோய்மீடியென்ன - சீக்கிரமாகப் போய்வாவென்று சொல்ல, கார் - மேகவண்ணனான இராமன், கழல்வணங்கி - பிதாவினது பதத்தினமஸ்கரித்து, போனான் - தீர்த்தயாத்திரைக்குப் பிரயாணமாயினார்—எ-று.

(இ-ரை.) முடிவில்லாமல் யாசிக்கப்பட்ட சகலமும் உம்மால் முடிவுபெறாததில்லை. அடியேன் முந்தினதாக விரும்பிக்கேட்ட வரத்தையுந் தேவரீர் அருளவேண்டுமென்று கேட்க உலகம் புகழாநின்ற வசிட்டமுனிவரோடும் தசரதரானவர் இனிமையாக ஆலோசித்து சீக்கிரமாகப் போய்வாவென்று சொல்ல மேகவண்ணனான இராமன் பிதாவின்பதத்தை நமஸ்கரித்துத் தீர்த்தயாத்திரைக்குப் பிரயாணமாயினார்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) புத்திரன் முந்தினதாகப் பிதாவினனுக்கிரகம் பெற்றுக்கொள்ளவேண்டிய விதிப்படிக்குச் சித்தசுத்திக்கேதுவான தீர்த்தயாத்திரைக் கனுக்கிரகம் பெற்றுக்கொண்டதாம். (௩உ)

## பின்னோர்களோடுந் தீர்த்த யாத்திரையின் மகிழ்ச்சியடைதல்.

தம்பிய ரோடு நன்னா ளேகித்தந் நாடு நீங்கிப்
பம்பிய நதியுங் கானும் பற்றற்றோ ரிடனும் பாலை
வெம்பிய நிலனும் வேலைக் கரைகளும் விலங்கற்சார்வும்
வம்பிய லலங்கல் வீரனேக்கினன் மகிழ்ச்சி கூர.

(இ-ள்.) தம்பியரோடும் - தம்பிமார்களுடன், நன்னாள் - சுபதினத்தில், ஏகி - பிரயாணப்பட்டு, தந்நாடுநீங்கி - தமது கோசலமண்டலத்தைக்கடந்து, பம்பியநதியும் - பரவியநதிகளையும், கானும் - தபோவனங்களையும், பற்றற்றோரிடனும் - துறவிகளாச்சிரமங்களையும், வெம்பிய - வெவ்விதாகிய, நிலனும் - பாலைவனங்களையும், வேலைக்கரைகளும் - சமுத்திரதீரங்களையும், விலங்கற்சார்வும் - மலைச்சார்புகளையும், வம்பியல்-வாசனைபொருந்திய, அலங்கல் - புஷ்பமாலையை (யணிந்த,) வீரன் - சுத்தவீரனை (விராமன்,) மகிழ்ச்சிகூர - இன்பமிக, நோக்கினன் - தரிசித்தார்—எ-று.

(இ-ரை.) தம்பிமார்களுடன் சுபதினத்திற் பிரயாணப்பட்டுத் தமதுகோசலமண்டலத்தைக்கடந்து பரவியநதிகளையுந் தபோவனங்களையுந் துறவிகளாச்சிரமங்களையும் வெவ்விதமாகிய பாலைவனங்களையுஞ் சமுத்திரதீரங்களையு மலைச்சார்புகளையும் வாசனைபொருந்திய புஷ்பமாலையையணிந்த சுத்தவீரனை இராமன் இன்பமிகத் தரிசித்தார்—என்பதாம். (௫௫)

## மீண்டு நகரமெய்தல்.

துன்னுறு மமரர் போற்ற மானிடர் துதிப்பமீண்டு
தன்னுயர் சிவலோ கத்தைச் சார்தரு மீச னென்னப்
பொன்னுல கத்தை மேவும் புரந்தரன் புதல்வ னென்ன
மன்னுறை யயோத்தி புக்கான் மலர்சொரிந் தியாரு மேத்த.

(இ-ள்.) துன்னுறும் - நெருங்கிய, அமரர்போற்ற - தேவர்கள் புகழவும், மானிடர்துதிப்ப - மனிதர்தோத்திரஞ்செய்யவும், மீண்டு - (தீர்த்தயாத்திரையினின்றுந்) திரும்பி, தன்னுயர் - தனதுமேலான, சிவலோகத்தை - சிவபுரத்தை, சார்தருமீசனென்ன - அடைகின்ற வீசனைப்போலவும், பொன்னுலகத்தை - தேவலோகத்தை, மேவும் - பொருந்தாநின்ற, புரந்தரன் - தேவேந்திரனுடைய, புதல்வனென்ன - குமாரனாகிய சயந்தனைப்போலவும், மன்னுறை - தசரதமகாராசன் வாசஞ்செய்கின்ற, அயோத்தி - அயோத்தியாபுரியை, யாரும் - அனைவரும், மலர் சொரிந்து - புட்பங்களைத் தூவி, ஏத்த - துதிசெய்ய, புக்கான் - இராமர்புகுந்தார்—எ-று.

(இ-ரை.) நெருங்கிய தேவர்கள் புகழவும், மனிதர் தோத்திரஞ்செய்யவும் தீர்த்தயாத்திரையினின்றுந் திரும்பித் தனது மேலான சிவபுரத்தை அடைகின்ற ஈசனைப்போலவும், தேவலோ

கத்தைப் பொருந்தா நின்ற தேவேந்திரனுடைய குமாரனான சயந்தனைப்போலவும், தசரதமஹாராஜன் வாசஞ்செய்கின்ற அயோத்தியாபுரியை அனைவரும் புஷ்பங்களைத்தூவித் துதிசெய்ய இராமர் புகுந்தார்—என்பதாம்.

(ப-ே.) ஆடவர் புட்பத்தினாலும், மாதர்கள்பொரியினாலும், அஞ்சலி கொடுத தேத்தினரென்பார், மலர்சொரிந்தியாரு மேத்தவென்றார்.

(இ-உ-௪-ே.) ஸ்நானமுதலியவைகளைக் கிரமமாகச்செய்து வந்தாரென்பதாம். (ஙச)

## தினசரிதை காரணமாகவுண்டான குணங்களையுரைத்தல்.

நோக்கிய தேச நீதி நுவல்வுற்றும் புலருமுன்னே
சேக்கைநின் றெழுந்து நித்த நியமங்கள் செய்துந் தாதை
நீக்கமில் சரணந் தாழ்ந்து நெடுந்தவ வசிட்டன் முன்னோர்
வாக்கினன் ஞான நீதி வாய்ந்தபல் கதைகள் கேட்டும்.

(இ-ள்.) நோக்கிய - (இராமனானவர்) தான்பார்த்த, தேசநீதி நுவல்வுற்றும் - தேசாசாரங்களைச்சொல்லியும், புலருமுன்னே - உதயமாதற்கு முன்னமே, சேக்கைநின்றெழுந்து - சயனம்விட்டெழுந்திருந்து, நித்த நியமங்கள்செய்தும் - நித்தியகருமங்களைச்செய்தும், தாதை - பிதாவான தசரதருடைய, நீக்கமில்சரணந்தாழ்ந்தும் - பிரிவில்லாதபாதங்களை நமஸ்காரஞ்செய்தும், நெடுந்தவம் - நெடியதவமுள்ள, வசிட்டன்முன்னோர் - வசிட்டர்முதலானமுனிவர்களுடைய, வாக்கினல் - வசனங்களினால், ஞானநீதிவாய்ந்த - ஞானநீதிபொருந்திய, பல்கதைகள்கேட்டும் - நானாவிதமான கதைகளைக் கேள்விப்பட்டும்—எ-று.

(இ-ா.) இராமனானவர் தான்பார்த்த தேசாசாரங்களைச் சொல்லியும், உதயமாவதற்கு முன்னமே சயனத்தைவிட்டெழுந்திருந்து நித்திய கருமங்களைச் செய்தும், பிதாவான தசரதருடைய பிரிவில்லாதபாதங்களை நமஸ்காரஞ்செய்தும், நெடியதவமுள்ள வசிட்டர் முதலான முனிவர்களுடைய வசனங்களினால் ஞானநீதி பொருந்திய நானாவிதமான கதைகளைக் கேள்விப்பட்டும்—என்பதாம்.

(ப-ம்.) ஆலயங்களிற்செய்யும் பணிகள்முதலிய வாசாரமுள்ளசரிதைத்தொழிலினு லாத்மப்பிரயோசன மில்லையென் றறிவித்தாரென்பார், நோக்கிய தேசநீதி நுவல்வுற்றென்றும், நித்திய கருமங்களுக்கு வேண்டிய மந்திர செபங்களான கிரியாமார்க்கங்களிலும், அதிற் பிராணுயாமமுதலிய சாதனங்களான யோகமார்க்கங்களிலும், ஆத்மப்பிரயோசன மில்லையென் றறிந்தாரென்பார், நித்த நியமங்கள் செய்துமென்றும், ஞானசாஸ்திர சிரவணஞ் செய்தாரென்பார், ஞானநீதிவாய்ந்த பல்கதைகள்கேட்டுமென்றுங் கூறினுர்.

(இ-ம்.) சரிதை கிரியை யோகமென்னு மிம்மூன்றுபாதமுங் கடந்து ஞானபாதத்தில் விருப்பமுற்ற ரென்பதாம். (ருரு)

## (இதுவுமது.)

**தந்தைசொற் படியே தானை தன்னுடன் வேட்டை கண்டும்**
**பந்துமித் திரர்கள் பின்னோர் தம்மொடும் பருகி ராநீத**
**திந்துவு மமுதும் போல நிருபருக் கினிய செய்து**
**மைந்துட னீரைந் தாண்டு புக்கன னனைய நாளில்.**

(இ-ள்.) தந்தை - பிதாவினுடைய, சொற்படியே - வசனத்தின்படியே, தானைதன்னுடன் - படைகளுடன், வேட்டைகண்டும் - வேட்டையாடியும், பந்து - பந்துசனங்கள், மித்திரர்கள் - இஷ்டசனங்கள், பின்னோர்தம்மோடும் - தம்பிமார்களோடும், பருகி - போசனஞ்செய்து, ராநீத்து - இரவைச்சுகமாகத்தள்ளி, இந்துவும் - குளிர்ச்சியான சந்திரனைப்போலவும், அமுதும்போல - மதுரமான அமிர்தத்தைப்போலவும், நிருபருக்கு - அரசர்களுக்கு, இனியசெய்தும் - இனிமையைச்செய்தும், ஐந்துட னீரைந்தாண்டு - பதினைந்துவருடங்களை, புக்கனன் - போக்கினுன், அனையநாளில் - அந்நாளில்—எ-று.

(இ-ஸா.) **பிதாவின் உத்திரவுப்படி படைகளோடு வேட்டையாடியும், பந்துஜனங்கள், இஷ்டஜனங்கள், தம்பிமார்களோடு போசனஞ்செய்து இரவைச்சுகமாகத்தள்ளி குளிர்ச்சியான சந்திரனைப்போலவும், மதுரமான அமிர்தத்தைப்போலவும், அரசர்களுக்கு இனிமையைச்செய்தும் பதினைந்துவருடங்களைப் போக்கினுர் அந்நாளில்—என்பதாம்.**

(ப-ம்.) சீவவிமிசையைக் கண்டவதனுற் சீவகாருணிய முண்டானதென்பார், வேட்டைகண்டென்றும், புசிப்புகளிலு மிராசபோகங்களிலுமென்னசுக மிருக்கின்றதென்றதில் விராகமுற்றுரென்பார், பருகியென்றும், நிருபருக்கினியசெய்தென்றுங் கூறினுர்.

(இ-ம்.) சிவகாருணியமும், பாசவயிராக்கியமு முண்டானதென்பதாம். இதிலீசுரபத்தியும், பிரமஞானமு மமைந்து கிடைக்கின்ற தெனவறிக. (ருசு)

## இக்குணங்களுள்ள விராமனது வயிராக்கிய விலக்கணங்கூறல்.

நிறையெழின் மேனி யெல்லா நெடுஞ்சரற் கால நீர்போற்
குறைவுற நெடுங்கட் செய்ய குளிர்முகம் விளர்ப்பத் தும்பி
யுறையும் வெண் கமலம் போல வொருகையாற் கபோலமேந்தி
யறைகழ லிராம னம்பு யாசனத் திருப்ப தானன்.

(இ-ள்.) நிறையெழில் - நிறைந்தவழகையுடைய, மேனியெல்லாம் - சரீரமுழுதும், நெடுஞ்சரற்காலநீர்போல் - நெடியசரற்காலத்திற் (குறைந்துவரு) மாற்றுச்சலத்தைப்போல, குறைவுற (தினந்தோறுங்) குறைந்துவர, நெடுங்கண் - நெடியகண்களையுடைய, செய்ய - செவ்விய, குளிர்முகம் - குளிர்ந்தமுகமானது, தும்பியுறையும - வணடுகள்மொய்க்காநின்ற, வெண்கமலம்போல - வெண்டாமரைப் பூப்போல, விளர்ப்ப - வெளுத்துவர, ஒருகையால் - ஓர்கரத்தினல், கபோலமேந்தி - கன்னத்தைத் தாங்கிக்கொண்டு, அறைகழலிராமன் - சத்தியாநின்ற வீரகண்டையைத் (தரித்தபாதத்தையுடைய) விராகவன், அம்புயாதனத்து - பதுமாசனத்தில், இருப்பதானன் - இருக்கத்தொடங்கினர்—எ-று.

(இ-ரை.) நிறைந்த அழகையுடைய சரீர முழுவதும் நெடிய சரற்காலத்திற் குறைந்துவரும் ஆற்றுச்சலத்தைப்போலத் தினந்தோறுங் குறைந்துவர, நெடிய கண்களையுடைய செவ்விய குளிர்ந்த முகமானது வண்டுகள் மொய்க்காநின்ற வெண்டாமரைப் பூப்போல வெளுத்துவர, ஓர்கரத்தினற் கன்னத்தைத் தாங்கிக்கொண்டு சப்திபாநின்ற வீரகண்டையைத்தரித்த பாதத்தையுடைய இராகவன் பதுமாசனத்தில் இருக்கத்தொடங்கினர்-எ-ம். (ருஎ)

## நிராசையாற் சாதன சதுஷ்டய முதித்தல்.

சிந்தனை வயத்த னுகிச் செய்தொழி லனைத்தும் விட்டு
புந்திநைந் தியார்க்குங் கூறுன் புனையுமோ வியமே போலச்

சந்தத மிருப்பை நோக்கித் தமரடி தாழ்ந்து வேண்ட
நொந்தயர் முகத்த னாகி நோக்கரு நியமஞ் செய்தான்.

(இ-ள்.) சிந்தனைவயத்தனாகி - சிந்தனாவசனாய், செய்தொழிலனைத் தும்விட்டு - செய்யத்தக்க செயல்களியாவையும்விடுத்து, புந்திநைந்து - புத்திதளர்ந்து, இயார்க்குங்கூறான் - எவர்க்குஞ் சொல்லாதவராய், புனையுமோவியம்போல-எழுதின சித்திரத்தைப்போல, சந்ததம்-சதாகாலமும், இருப்பைநோக்கி-இருத்தலைப்பார்த்து, தமர்-பரிசனங்கள், அடிதாழ்ந்து-தனதுபாதத்தில்வணங்கி, வேண்ட-வேண்டிக்கொள்ள, நொந்து-மனது நொந்து, நோக்கரும - பார்த்தற்கரிய, அயர்முகத்தனாகி - தளர்ந்தமுகத்தை யுடையவராய், நியமஞ்செய்தான் - நித்தியகன்மங்களைச்செய்தார்.

(இ-ரை.) சிந்தனாவசனாய்ச் செய்தக்க செயல்கள் யாவையும் விடுத்துப் புத்திதளர்ந்து எவர்க்குஞ் சொல்லாதவராய் எழுதின சித்திரத்தைப்போலச் சதாகாலமும் இருத்தலைப்பார்த்துப் பரிசனங்கள் தனது பாதத்தில் வணங்கி வேண்டிக்கொள்ள மனநொந்து பார்த்தற்கரிய தளர்ந்த முகத்தையுடையவராய் நித்தியகன்மங்களைச் செய்தார்—என்பதாம்.

(ப-ம்.) நித்தியாநித்திய வஸ்துவை விவேகித்தாரென்பார், சிந்தனைவயத்தனாகியென்றும், இகபரவிச்சையை நீக்கினாரென்பார், செய்தொழிலனைத்தும்விட்டென்றும், சமாதிசட்க சம்பத்தி வந்ததென்பார், புந்திநைந்தியார்க்குங் கூறானென்றும், மோக்ஷவிருப்பத்திற் றதேகமாயிருந்தாரென்பார், ஓவியமேபோலச் சந்ததமிருப்பென்றுங் கூறினார்.

(இ-உ-க-ம்.) இராமரதுவிரத்தியினாற் றிரிகரணங்களுமெலிந்துநான்குசாதனமுநிறைய குருதரிசனத்திற்கபேட்சையுமுண்டாயிற்றென்பதாம்.

## ஆசாரியரையறிவிக்க விசுவாமித்திர ரெழுந்தருளுதல்.

மடிமிசை கொண்டு தாதை வருந்துவ தென்கொ லென்ன
வடிபணிந் தயர்வொன் றில்லென் றனையவ னிருந்த நாளிற்
படிபுகழ் காதி மைந்தன் வருதலும் பணிந்து போற்றி
முடியுடை வேந்தர் வேந்தன் பூசனை முறையிற் செய்தான்.

(இ-ள்.) தாதை - பிதாவான தசரதன், மடிமிசைகொண்டு-ஒருநாள் தன்மடியின்மேல்வைத்துக்கொண்டு, வருந்துவதென்கொலென்ன-வருத்

தப்படுவ தென்னவென்றுகேட்க, அடிபணிந்து-பாதத்தைவணங்கி, அயர் வொன்றில்லென்று - வருத்தமொன்றுமில்லையென்று, அனையவனிருந்த நாளில் - அவ்விராமன் சும்மாயிருந்தகாலத்தில், படிபுகழ் - உலகம்புகழா நின்ற, காதிமைந்தன் - விசுவாமித்திர முனியானவர், வருதலும் - (இரா ஜசபைக்கு) வரவும், பணிந்துபோற்றி - வணங்கித் தோத்திரஞ்செய்து, முடியுடை - மகுடத்தையுடைய, வேந்தர்வேந்தன் - அரசர்க்கரசனான தச ரதன், பூசனை - ஆராதனையை, முறையிற்செய்தான்-விதிப்படிசெய்தார்.

(இ-ள்.) பிதாவானதசரதன் ஒருநாள் தன்மடிமேல் வைத் துக்கொண்டு வருத்தப்படுவதென்ன? என்றுகேட்க, அவர் திரு வடிகளை வணங்கி வருத்தமொன்றுமில்லை என்று சும்மாயிருந்தகா லத்தில் உலகம் புகழாநின்ற விசுவாமித்திர முனிவரானவர் இரா ஜசபைக்கு வரவும் அவரை வணங்கித் தோத்திரஞ்செய்து மகுட த்தைத்தரித்த அரசர்க்கரசனான தசரதன் ஆராதனையை விதிப் படி செய்தார்—என்பதாம்.

(இ-ட்.) தீவரதர பக்குவத்தையுடைய விராமருக்கு விஸ்ராந்தியுண் டாகும்பொருட்டு யாகசம்ரக்ஷணையை முன்னிட்டு முனிவந்ததாம். (ருக)

## அரசனுநந்தித்தல்.

நினைவற வெளிதின் வந்த நின்னுயர் காட்சி யாலே
வினையெலாந் தவிர்ந்து வெய்யோன் மேவிய கமல மொத்தே
னினையதோ ரின்ப மென்று மியைந்திலேன் மழையி லாநா
ணனைதரு மழையு மந்த னண்ணிய கண்ணு மொத்த.

(இ-ள்.) நினைவற-(அடியேன்) சிந்தியாதகாலத்திலும், எளிதின்வந்த-(கிருபையினு) லெளிதாக வெழுந்தருளிய, நின்னுயர்காட்சியால் - தேவ ரீரது மேலான தரிசனத்தினுல், வினையெலாந்தவிர்ந்து - வினைகளனை த்து நீங்கி, வெய்யோன் - சூரியனுல், மேவிய - (விகசித்தலை) யடைந்த, கமலமொத்தேன் - தாமரைப்பூவுக் கொப்பானேன், இனையது - இப்படிப் பட்டதான, ஓரின்பம் - ஒப்பற்றசுகத்தை, என்றுமியைந்திலேன் - எப் போதுமடைந்திலேன், மழையிலாநாள் - மழையினறியகாலத்தில் (வருந் தும்பயிரை,) நனைதருமழையும் - குளிர்விக்கின்றமழையையும், அந்தனண் ணிய - குருடனடைந்த, கண்ணும் - கண்ணையும், ஒத்தது - (நின்காட்சி) யொத்திருக்கின்றது—எ-று.

(இ-ள்.) அடியேன் சிந்தியாத காலத்திலும் கிருபையினல் எளிதாக எழுந்தருளிய தேவரீரது மேலானதரிசனத்தினல் வினைகளனைத்துநீங்கிச் சூரியனல் விகசித்தலையடைந்த தாமரைப்பூவுக் கொப்பானேன். இப்படிப்பட்ட ஒப்பற்ற சுகத்தை எப்போது மடைந்திலேன். மழையில்லாத காலத்தில் வருந்தும்பயிரைக் குளிர்விக்கின்ற மழையையும், குருடனடைந்த கண்ணையும் நின்காட்சி ஒத்திருக்கின்றது—என்பதாம்.

(ப-ரை.) நசிக்கின்ற விடயானந்தமும், சுலபமாகின்ற சுழுத்தியானந்தமும், விக்கினமுள்ள சமாதியானந்தமு மல்லாத பேராநந்தமென்பார், இனையதோரின்பமென்று மியைந்திலேனென்றார், நின்னுயர் காட்சியாலே வினையெலாந் தவிர்ந்தென்பதற் குதாரணம். பாகவதம் புருடனுடைய கண்களுக்குச் சூரிய தரிசன மெப்படியோ வப்படியே, சாதுக்களாயுஞ் சமசித்தமுள்ளவராய் மிகவு மென்னிடத்தில் வைக்கப்பட்ட மனமுள்ளவராயு மிருக்கின்றவர்களுடைய தரிசனத்தை முடிவாகவுடையதே பந்தம். (௪௦)

## (இதுவுமது.)

உடலொடு விண்சென் மார்க்க முற்றென வொழிந்த வாவி
கடமுற வந்த தென்னக் கனைகட லமுத கும்ப
மிடமுற வெய்திற் றென்ன வெந்தைநீ வந்தவின்பஞ்
சடமெலாங் குளிர்ப்ப நின்றென் றளர்வெலா மகற்றிற்றன்றே.

(இ-ள்.) உடலொடு - இத்தேகத்தோடு, விண்சென்மார்க்கம் - ஆகாயகமனம்பண்ணுநெறி, உற்றென - வந்ததுபோலவும், ஒழிந்தவாவி - நீங்கியசீவன், கடமுற - அச்சரீரத்திற்புக, வந்தென - (மீள) வந்ததுபோலவும், கனைகடல் - ஆரவாரிக்கின்ற பாற்கடலின்கண் (ணுண்டாகிய) அமுதகும்பம் - (தேவலோகத்தி லக்கினிக் கோட்டைக்குள் ளிருக்கும்) அமுதகலசமானது, இடமுறவெய்திற்றென்ன - (என்) னிடத்தில் வந்தது போலவும், எந்தைநீ - எமது பிதாவாகிய தேவரீர், வந்தவின்பம் - எழுந்தருளிய சுகமானது, சடமெலாம் - தேகமுழுமையும், குளிர்ப்ப - (கங்கையைப்போல) குளிர்விக்கும்படி, நின்று - இருந்து, என்றளர்வெலாம்-என (துள்ளத்தின்) றளர்ச்சியையெல்லாம், அகற்றிற்று - நீக்கினது—எ-று.

(இ-ள்.) இத்தேகத்தோடு ஆகாயகமனம்பண்ணு நெறிவந்ததுபோலவும், நீங்கியஜீவன் அச்சரீரத்திற்புக மீளவந்ததுபோலவும், ஆரவாரிக்கின்ற பாற்கடலின்கண் உண்டாகிய தேவலோகத்

தில் அக்கினிக்கோட்டைக்குள்ளிருக்கும் அமுதகலசமானது என்னிடத்தில் வந்ததுபோலவும், எமது பிதாவாகிய தேவரீர் எழுந்தருளிய சுகமானது தேகமுழுமையும் கங்கையைப்போல குளிர்விக்கும்படி யிருந்து எனதுள்ளத்தின் தளர்ச்சியை எல்லாம் நீக்கினது—என்பதாம்.

(ப-ம்.) முனிதரிசனந் துக்கத்தை நிவிர்த்திசெய்ததென்பார், என்றளர்வெலாமகற்றிற்றென்றார்.

(இ-உ-க-ம்.) முனிவரவிலுண்டான சுகத்தின் பெருமையைச் சொல்லியதாம். (௬௧)

## முனிவந்த கருமத்தை யரசன் வினவுதல்.

காதலும் பயமும் வம்புங் கதமும்வன் பிணியுமில்லா
மாதவ விவணீ வந்த வரவிது புதுமைத் தாகும்
யாதுநீ கருதிற் றன்ன தியன்றன னுணர்த்து கென்றான்
மேதகு முனிவன் கேட்டு மெய்புள கெறிந்து சொல்வான்.

(இ-ள்.) காதலும் - இராகத் (துவேடங்களும்,) பயமும்-(விடயத்துக்) கஞ்சுதலும், வம்பும் - நிலையின்மையும், கதமும்-(வீணான) கோபமும், வன்பிணியும் - கொடிய (சநந) வியாதியும், இல்லா - இல்லாத, மாதவ - மகாதவத்தையுடைய முனியே, இவண் - இவ்விடத்தில், நீவந்தவரவிது-தேவரீரெழுந்தருளிய வரவானது, புதுமைத்தாகும் - அதிசயமாம், யாதுநீகருதிற்று - எதுநீர் நினைத்ததோ, அன்னதியன்றனன் - அதைத்தரவிசைந்தேன், உணர்த்துகென்றான் - அறிவியுமென்றரசன்கேட்டான், மேதகு - மேலான, முனிவன்கேட்டு - விசுவாமித்திரமுனிவ (ரிவ்வசனத்தைக்) கேட்டு, மெய்புளகெறிந்து சொல்வான் - தேகத்தில் மயிர்க்குச்செறிந்து சொல்லுவார்—எ-று.

(இ-ரை.) இராகத் துவேஷங்களும், விஷபத்துக்கஞ்சுதலும், நிலையின்மையும், வீணனகோபமும், கொடிய ஜனனவியாதியும் இல்லாத மஹாதவத்தையுடை முனிவரே! இவ்விடத்தில் தேவரீர் எழுந்தருளிய வரவானது அதிசயமாம். எது நீர்நினைந்ததோ? அதைத்தர இசைந்திருக்கிறேன். அறிவிக்கவேண்டுமென் றரசன் கேட்க, மேலான விசுவாமித்திர முனிவர் இவ்வசனத்தைக் கேட்டுத் தேகத்தில் மயிர்க்குச்செறிந்து சொல்லத்தொடங்கினர்-எ-ம்.

(இ-ள்.) புத்திரனது மனோதுக்கத்தைத் தீர்க்கு மந்தரங்கமுடைய தசரதமகாராஜன் விசுவாமித்திர முனிவர் கருத்தின்படி நடக்கச் சம்மதித்ததாம். (சஉ)

## அவசியஞ் செய்யவேண்டிய வேள்விக்குதவி வேண்டல்.

மன்னவர் வணங்கவாழ்வோய் வசிட்டன்சொன் மறுதோய்பானு
தன்னுயர் குலத்தில் வந்தோ யாதலாற் றக்க சொன்னாய்
முன்னுறு செந்தீ வேள்வி முயல்வதற் கிடையூ றாகி
யின்னல்செய் யரக்கர்க்காற்றா தெய்தின னிரங்கல் வேண்டும்.

(இ-ள்.) மன்னர்வணங்க - அரசர்கள்பணிய, வாழ்வோய்-வாழ்கின்ற தசரதமஹாராசாவே, வசிட்டன்சொல் - ஆசிரியராகிய வசிட்டரதுவாக்கியத்தை, மறுதோய்-தடுக்காதவரே, பானுதன்னுயர்குலத்தில் - மேலான சூரியவமிசத்தில், வந்தோயாதலால் - வந்துதித்தவராதலால், தக்கசொன்னாய் - உமக்குத்தகுந்தவசனத்தைச்சொன்னீர், முன்னுறு - முதன்மையாகிய, செந்தீவேள்வி - சிவந்தவக்கினியையுடைய யாகத்தை, முயல்வதற்கு - முயற்சிப்பதற்கு, இடையூறாகி - விக்கினமாய், இன்னல்செய்-தீமைசெய்யாநின்ற, அரக்கர்க்கு-இராக்ஷதர்களுக்கு,ஆற்றாது-சகிக்கமாட்டாமல் எய்தினன்-வந்தேன், இரங்கல்வேண்டும் - தயவுசெய்யவேண்டும்—எ-று.

(இ-ரை.) அரசர்கள்பணிய வாழ்கின்ற தசரதமஹாராஜாவே! ஆசிரியராகிய வசிட்டரது வாக்கியத்தைத் தடுக்காதவரே! மேலான சூரியவமிசத்தில் வந்துதித்தவராதலால் உமக்குத்தகுந்த வசனத்தைச்சொன்னீர். முதன்மையாகிய சிவந்தவக்கினியையுடைய யாகத்தை முயற்சிப்பதற்கு விக்கினமாய்த் தீமைசெய்யாநின்ற இராக்ஷதர்களுக்குச் சகிக்கமாட்டாமல் வந்தேன், தயவுசெய்யவேண்டும்—என்பதாம். (சங)

## நிருதர்க் கியமனை விராகவனைக் கேட்டல்.

அருள்செய வல்ல நீயென் றரும்புகல் புகுந்தே னின்னை [ன்
வெருளுறும் புலிபோன் மொய்ம்பன் விண்ணவர்க்கிறைபோல்வீர
மருளுறு மரக்கர் காலன் வாய்மைநின் முதன்மை மைந்தன்
றெருளுறு மிராம னென்னுஞ் சிகைமுடிச் சேயையீவாய்.

(இ-ள்.) நீ - நீர், அருள்செயவல்லையென்று - கொடுக்கத்தக்கவரென்று, நின்னை - உம்மை, அரும்புகல்புகுந்தேன் - அரியதஞ்சமென்றடைந்தேன், வெருளுறும் - பயப்படுத்துகின்ற, புலிபோன்மொய்ம்பன் - வியாக்ரமத்தைப்போல பலமுள்ளவன், விண்ணவர்க்கிறைபோல் - தேவேந்திரனைப்போல, வீரன் - வீரமுள்ளவன், மருளுறும் - மயக்குகின்ற, அரக்கன்காலன் - இராக்ஷதர்க்கியமனானவன், வாய்மை-சத்தியசந்தனான, நின்-உம்முடைய, முதன்மைமைந்தன் - முந்தினகுமாரனான, தெருளுறும்-தெளிவுபொருந்திய, இராமனென்னும்-இராகவனென்கின்ற, சிகைமுடி-மயிர்முடியையுடைய, சேயை - குழந்தையை, ஈவாய் - தருவாய்—எ-று.

(இ-னா.) நீர் கொடுக்கத்தக்கவரென்று உம்மை அரியதஞ்சமென்றடைந்தேன். பயப்படுத்துகின்ற வியாக்ரமத்தைப்போலப் பலமுள்ளவனும் தேவேந்திரனைப்போல வீரமுள்ளவனும் மயக்குகின்ற இராக்ஷதர்க்கியமனானவனுமான சத்தியசந்தனான உம்முடைய முந்தினகுமாரனாகிய தெளிவுபொருந்திய இராகவனென்கின்ற மயிர்முடியையுடைய குழந்தையைத்தருவாய்—என்பதாம்

(ப-ர்.) இராமனிராக்ஷத சங்காரியென்பார், அரக்கர்காலனென்றார். ()

## இராமனது சத்தியையுரைத்தல்.

தேவரிற் றேசுமிக்க வென்பெருஞ் சேமந்தன்னா
லேவரு நிருதர்சேனை யிராமனே யெளிது கொல்லுங்
காவல சிறுவனென்னுங் கவலையை யொழியென்போல்வா
ரோவலிற் சங்கையான கருமத்தி னுள்ளம்வையார்.

(இ-ள்.) தேவரிற்றேசுமிக்க - தேவர்களிலுங்கீர்த்திமிகுந்த, என்பெருஞ்சேமந்தன்னால் - எனது மிகுந்தகாவலினால், ஏவருநிருதர்சேனை - ஏவுதற்கரியவிராக்ஷதசேனையை, இராமனேயெளிதுகொல்லும் - இராகவனே யெளிதாகக்கொல்வான், காவல - அரசனே, சிறுவனென்னுங் கவலையை யொழி - பாலனென்கின்ற வச்சத்தைவிட்டுவிடு, என்போல்வார் - என்னையொத்த முனிவர்கள், ஓவலிற்சங்கையான கருமத்தில் - வருத்துஞ்சந்தேகமான காரியத்தில், உள்ளம்வையார் - மனம்வையார்கள்—எ-று.

(இ-னா.) தேவர்களிலுங் கீர்த்திமிகுந்த என்து மிகுந்தகாவலினால் ஏவுதற்கரிய விராக்ஷதசேனையை இராகவனே யெளிதாகக்

கொல்வான். அரசனே பாலனென்கின்ற வச்சத்தைவிட்டுவிடு; என்னையொத்தமுனிவர்கள், வருத்துஞ் சந்தேகமான காரியத்தில் மனம்வையார்கள்—என்பதாம்.

(ப-ம்.) யாகவிக்கினர்களைத் தம்மாலுஞ் செயிக்கக்கூடாத தென்பார், இராமனே யெளிதுகொல்லுமென்றார். (௩௫)

## இராமன் பெருமையை யறிவித்தல்

இயாரினு மிராமன்மேன்மை வசிட்டனு மியானுமாதி
யாரிய ரறிவர்மாட்சி யறம்புகழ் வேண்டினந்தப்
பேரிய லானையீதி பெருமையோர் கொடாததுண்டோ
வீரிய வரக்கர்மாய்தல் மெய்யென விளம்பிவிட்டான்.

(இ-ள்.) இயாரினும் - யாவரிலுஞ் (சிறந்த,) இராமன்மேன்மை-இராமனதுபெருமையை, வசிட்டனுமியானுமாதியாரியரறிவர்-வசிட்டருநானுமுதலிய வாசிரியர்களறிவார்கள், மாட்சி - பெருமையையும், அறம் - தருமத்தையும், புகழ் - கீர்த்தியையும், வேண்டின் - வேண்டுவையாயின், அந்தப்பேரியலானையீதி - அம்மகாகுணசாலியான விராமனைக்கொடும், பெருமையோர்கொடாததுண்டோ - பெருந்தகைமையை யுடையவர்க (ளிரப்பவர்க்குக்) கொடாத பொருளுண்டோ, (கொடுப்பின்) வீரியவரக்கர்மாய்தல் - சௌரியமுள்ள விராக்ஷதர்களிவனானாசமடைவது, மெய்யென விளம்பிவிட்டான் - சத்தியமென்றுசொன்னார்—எ-று.

(இ-ணை.) யாவரிலுஞ் சிறந்த இராமனது பெருமையை வசிட்டரு நானுமுதலிய வாசிரியர்களறிவார்கள். பெருமையையும், தருமத்தையும், கீர்த்தியையும் வேண்டுவையாயின் அம்மகா குணசாலியான விராமனைக்கொடும். பெருந்தகைமையை யுடையவர்களிரப்பவர்க்குக்கொடாத பொருளுண்டோ? சௌரியமுள்ளவிராக்ஷதர்கள் இவனானாசமடைவது சத்தியமென்று சொன்னார்-எ-ம்.

( :-ம்.) திருமாலேவந் தவதரித்தாரென்பார், இயாரினுமிராமன் மேன்மையென்றும், உமக்கு முமதுவமிசத்துக்குஞ் சத்துக்களனுக்கிரகத்தினான் மாட்சிமையும், யாகசம்ரக்ஷணை செய்வதினாற் றருமமும், இராக்ஷச சங்காரத்தினாற் கீர்த்தியும் வேண்டுமானா லிராமரைக் கொடுமென்பார், மாட்சியறம்புகழ் வேண்டினந்தப் பேரி லானையீதியென்றுங் கூறினார்.

(இ-உ-க-ம்) இராமனிராக்ஷத சங்காரார்த்த முதித்தவரெனச் சூசகமாயறிவித்ததாம். (௬௯)

## புத்திரனது ஸ்வரூபந் தெரியாமற் றசரதன் பரிதபித்துக்கூறுதல்.

முனிமொழி கேட்டுமன்னன் முகூர்த்தமொன் றயர்ந்துசோர்ந்து
தனியொரு சிறுவன்மூவைம் பருவத்தன் சமர்கண்டில்லான்
பணிசெய்வல் லரக்கர்க்காற்றான் பகைஞர்கோ ளறிதறேற்றா
னனிகமோ டேகியானே யவரொடு மரும்போர்செய்வேன்.

(இ-ள்.) முனிமொழிகேட்டு - விசுவாமித்திரரது வசனத்தைக்கேட்டு, மன்னன் - தசரதன், முகூர்த்தமொன்று - இரண்டுநாழிகைநேரம், அயர்ந்துசோர்ந்து - வருந்தி, தனியொருசிறுவன் - தனியனானவொரு பாலன், மூவைம்பருவத்தன் - பதினைந்து வயதுள்ளவன், சமர்கண்டில்லான் - யுத்தஞ்செய்தறியான், பணிசெய்வல்லரக்கர்க்காற்றான் - நடுக்கஞ்செய்யும் வல்லமையையுடைய விராக்ஷதர்களுடன் (போர்செய்ய) வலியில்லாதவன், பகைஞர்கோளறிதறேற்றான் - சத்துருக்கள் கோட்பாடறிதலிற் றெளிவில்லாதவ (னாதலால்,) அனிகமோடேகி - சதுரங்கசேனையோடுபோய், யானேயவரொடு மரும்போர்செய்வேன் - அடியேனேயவ் விராக்ஷதர்களோ டரியயுத்தஞ்செய்வேன்—எ-று.

(இ-ரை.) விசுவாமித்திரரது வசனத்தைக்கேட்டுத் தசரதன் இரண்டுநாழிகைநேரம் வருந்தி, தனியனான வொருபாலன் பதினைந்துவயதுள்ளவன், யுத்தஞ்செய்தறியான், நடுக்கஞ்செய்யும் வல்லமையையுடைய விராக்ஷதர்களுடன் போர்செய்ய வலியில்லாதவன், சத்துருக்கள் கோட்பாடறிதலிற் றெளிவில்லாதவனாதலால் சதுரங்கசேனையோடுபோய் அடியேனே யவ்விராக்ஷதர்களோ டரியயுத்தஞ் செய்வேன்—என்பதாம்.

(இ-ர்.) புத்திர வாஞ்சையினா லவனையனுப்ப மனமில்லாமல் விசனமடைந்தவராய், இராக்ஷதர்யுத்தத்துக்குச் சத்தியில்லாதிருந்து மிருப்பது போலச் சொன்னதாம். (௭௦)

## புத்திரவாஞ்சையை யறிவித்தல்.

முன்னவ னீங்கின்மற்ற மூவரும் வாழாரியானு
மின்னுயிர் வாழேனின்று விராவண னெழிந்தோரியாவ

ரன்னவர்க் கஞ்சேன்முன்ன மிராவண னமர்க்குமஞ்சேன்
வென்னிடப் பொருதும்வீரர் வீரங்க ணிலைமைத்தாமோ.

(இ-ள்.) முன்னவனீங்கின் - மைந்தரில் முதல்வனாகிய விராமன்பிரிந்தால், மற்றமூவரும்வாழார் - மற்றமூன்றுபேரு முயிருடன்வாழார், யானுமின்னுயிர்வாழேன்-நானுமினியவுயிரோடும் வாழமாட்டேன், இன்று-இப்போது, இராவணனெழிந்தோரியாவர் - இராவணனீங்கிேனா ரியாவராயினும், அன்னவர்க்கஞ்சேன் - அவர்களுக்குப் பயப்படேன், முன்னமிராவணனமர்க்குமஞ்சேன்-முன்பிராவணனதுயுத்தத்துக்கும் பயப்படேன் வென்னிடப்பொருதும்வீரர் - (பகைவர்) முதுகுகாட்டப் போர்செய்யும் வீரர்களுடைய, வீரங்கணிலைமைத்தாமோ - வீரங்கணிலையாயிருக்குமா.

(இ-ா.) மைந்தரில் முதல்வனாகிய இராமன் பிரிந்தால் மற்றமூன்றுபேரு முயிருடன்வாழார்; நானு மினியவுயிரோடும் வாழமாட்டேன்; இப்போது இராவணனீங்கினோரியாவராயினும் அவர்களுக்கும் பயப்படேன்; முன்பிராவணனது யுத்தத்துக்கும் பயப்படேன்; பகைவர்முதுகுகாட்டப் போர்செய்யும் வீரர்களுடைய வீரங்க ணிலையாயிருக்குமா—என்பதாம்.

(ப-ம்.) ஈசுரநியமப்படி செயாபசெயமுண்டாகுமென்பார், வீரங்கணிலைமைத்தாமோவென்றார்.

(இ-பி.) அறுபதினாயிரம்வருடஞ் சென்றபின்பு யாகத்திலுற்பவமான புதல்வனைப்பிரிந்தா னமதுயிரும் பிரியுமென்னும் வருத்தத்தை முனிவருக்கிரக்கம்வரும்படி யறிவித்ததாம். (௪அ)

---

## இக்காலத்தி லிராக்கதர்களைக் கொல்லுஞ்சத்தி யெங்களுக் கின்றெனல்.

காலவேற் றுமையா லெல்லாப் பொருள்களுங் கலங்கி வேறு
மேலவ ரிளைத்தோ ராவர் வெய்யவன் குலத்துப் பூமி
பாலனு மியான்மேற் செய்வ தியாதெனப் பரிகேன் மூப்பாற்
சாலவு மென்றான் மன்னன் றுபதன் முனிந்து சொல்வான்

(இ-ள்.) மன்னன் - தசரதவரசன், காலவேற்றுமையால் - காலவேறுபாட்டினால், எல்லாப்பொருள்களும் - சகலவஸ்துக்களும், கலங்கிவேறும்-மயங்கிவேறுபடும் மேலவரிளைத்தோராவர் - வலியோரெளியராவர், வெய்யவன் குலத்துப்பூமிபாலனுமியான் - சூரியவமிசத்திற்றோன்றிய பூமிக்

கரசனாகிய யான், மூப்பால் - வயோதிகத்தினால், மேற்செய்வதியாதென-இனிச்செய்வதியாதென்று, சாலவும் - மிகவும், பரிகேன் - துயருறுகின்றேன், என்றான் - என்றுசொன்னான், தாபதன் - அதற்குமுனிவர், முனிந்துசொல்வான் - கோபித்துச்சொல்வார்—எ-று.

(இ-ள்.) தசரதவரசன் காலவேறுபாட்டினால் சகலவஸ்துக்களும் மயங்கி வேறுபடும் வலியோரெளியராவர், சூரியவமிசத்திற்றோன்றிய பூமிக்கரசனாகிய யான் வயோதிகத்தினால் இனிச்செய்வ தியாதென்று மிகவும் துயருறுகின்றேன் என்றுசொன்னான். அதற்கு முனிவர் கோபித்துச்சொல்வார்—என்பதாம்.

(இ-கு.) இக்காலம் பலமுள்ள வரக்கரமருக் கிராமனையனுப்ப மனமில்லையென்பதைக் குறிப்பாற் காட்டினதாம். (சக)

## பயபத்தி யுண்டாகும்பொருட்டு முனிகோபித்தல்.

### வேறு.

கருதிய தளித்தே னென்று கழறிய வாய்மை பொய்த்தாய்
செருவுயர் சிங்கமாநீ சிறுவிலங் கியற்கை செய்தாய்
மருவிய கிளைஞ ரோடும் வாழ்தியாம் போது மென்று
பெருமுனி முனிய மண்விண் பெரும்பயம் பிடித்த தன்றே.

(இ-ள்.) கருதியதளித்தேனென்று - விரும்பியதைக்கொடுத்தேனென்று, கழறியவாய்மைபொய்த்தாய் - சொன்னசத்தியந்தவறினாய், செருவுயர்சிங்கமாநீ - போரிலுயர்ந்த கேசரிபோன்ற வரசனாணநீ, சிறுவிலங்கியற்கை செய்தாய் - அற்பமிருகத்தி னியலபைச்செய்தாய், மருவியகிளைஞரோடும்வாழ்தி - பொருந்திய (மனைவி புத்திரர் முதலிய) சுற்றத்தாரோடு நீவாழ்வாய், யாம்போதுமென்று - நாமேகுதுமென்று, பெருமுனி முனிய - மகாமுனியான விசுவாமித்திரர்கோபிக்க, மண் - பூவுலகர்க்கும், விண்-வானுலகர்க்கும், பெரும்பயம்பிடித்தது - மகாபயமுண்டாயிற்று-எ.

(இ-ள்.) விரும்பியதைக் கொடுத்தேனென்று சொன்ன சத்தியந்தவறினாய். போரிலுயர்ந்த கேசரிபோன்ற வரசனான நீ அற்பமிருகத்தி னியல்பைச்செய்தாய். பொருந்திய மனைவிபுத்திரர் முதலிய சுற்றத்தாரோடு நீ வாழ்வாய்; நாமேகுது மென்று மகாமுனியான விசுவாமித்திரர் கோபிக்க பூவுலகர்க்கும், வானுலகர்க்கும், மகாபயமுண்டாயிற்று—என்பதாம்.

(ப-ம்.) மண்ணுள்ளோ ரிக்கோபத்தா லிவ்வரச வம்சத்துக் கிடர்வரி னமக்கெத்துய ருண்டாமோவெனவும், விண்ணுளோ ரிராமருக்கிடர்வந் திராவணசங்கார மாகாவிடி னமக்கவனு லின்னமென்ன துன்பம்வருமோ வெனவு நடுங்கினுரென்பார், மண்விண் பெரும்பயம்பிடித்ததென்றுர்.

(இ-ம்.) துட்ட நிக்கிரகஞ் செய்விக்கும்படியான கோபமுண்டாயிற் றென்பதாம். (௫0)

---

## பிரதிஞ்ஞையைக் காக்கும்படி ஞாயங்கூறல்.

மாதவன் முனிவு நோக்கி வசிட்டனு மனு குலத்தே
சாதனுய் தசரதப்பேர் தரித்தனை சபதங் காவாய்
நீதுறிற் பிறிதார் காப்பார் திருத்திநீ நிறுத்தி நீதி
மேதினி கடவா தென்றுல் வேந்தநீ கடக்கற் பாற்றே

(இ-ள்.) மாதவன் முனிவுநோக்கி - தவத்தின்மிகுந்த விசுவாமித்தி ரருடைய கோபத்தைப்பார்த்து, வசிட்டனும் - வசிட்டமுனிவரும், மனு குலத்தேசாதனுய் - மனுவம்சத்திற்பிறந்தவனுய், தசரதப்பேர் - தசரதச் சக்கரவர்த்தியென்னு நாமத்தை, தரித்தனை - பெற்றிருக்கின்றநீ, சபதங் காவாய் - சொன்னசத்தியத்தைக் காப்பாற்றிக்கொள், நீதுறில் - உன்வா க்குபிறழுமானல், பிறிதார்காப்பார் - வேறேயார் கார்க்கவல்லவர், திருத் திநீ நிறுத்துநீதி - திருத்தஞ்செய் தும்மானிறுத்தப்பட்ட விராசநீதியை, மேதினிகடவாதென்றுல் - பூமியிலுள்ளவர்கள் கடவாமற்காப்பாராயின், வேந்தநீ - இராசாவேநீ, கடக்கற்பாற்றே - கடக்குந்தன்மைத்தோ-எ-று.

(இ-கா.) தவத்தின் மிகுந்த விசுவாமித்திரருடைய கோப த்தைப்பார்த்து வசிட்டமுனிவரும் மனுவம்சத்திற் பிறந்தவனுய் தசரதச் சக்கரவர்த்தியென்னு நாமத்தைப்பெற்றிருக்கின்ற நீ சொன்ன சத்தியத்தைக் காப்பாற்றிக்கொள். உன்வாக்குப் பிறழு மானல் வேறே யார் காக்கவல்லவர்; திருத்தஞ்செய் தும்மா னிறு த்தப்பட்ட விராசநீதியை பூமியிலுள்ளவர்கள் கடவாமற் காப்ப ராயின் இராஜாவே நீ கடக்குந்தன்மைத்தோ—என்பதாம்.

(இ-ம்.) வாக்கியபரிபாலனஞ்செய்யு மரபிற்குரிய நீரதை யெப்படி யுங்காக்கவேண்டு மென்பதாம். (௫க)

## (வேறு)—குருவாக்கிய பரிபாலனம்.

எரிகாக்கு மமுதென்ன விம்முனிவ னனிகாக்கு
 மிராமன் றன்னைச்
செருவாழ்க்கை யரக்கர்செயுந் தீங்கணுகா தெனக்கேட்ட
 திண்டோள் வேந்த
னருள்வாய்த்த குமரனெது செய்கின்றா னெனவுழைய
 ரங்கை கூப்பி
விரிதீர்த்த மாடிவரு நாடொடங்கி யுறுதுயரம்
 விளம்ப லுற்றார்.

(இ-ள்.) எரிகாக்குமமுதென்ன - அக்கினியினலிரக்ஷிக்கப்பட்ட வமுதத்தைப்போல, இம்முனிவன் - இவ்விசுவாமித்திரரிஷி, நனிகாக்கும் - மிகவுங்காப்பார், இராமன்றன்னை - இராகவனை, செருவாழ்க்கை - போரையே, வாழ்வாகவுடைய, அரக்கர்செயும் - இராக்ஷதர்கள் செய்கின்ற, தீங்கணுகாது - தீமைநெருங்காது, எனக்கேட்ட - என்று (வசிட்டமுனி சொல்லக்) கேட்ட, திண்டோள்வேந்தன் - வலியபுயத்தையுடைய தசரத மகாராசனானவன், அருள்வாய்த்தகுமரன் - (பெரியோர்கள்) கிருபையினாற்கிடைத்த விராமன், எதுசெய்கின்றானென-என்னசெய்கின்றானென் (றிராமனது பரிசனங்களைக்) கேட்க, உழையரங்கைகூப்பி - ஏவலாள ரழகியகையைக் குவித்துக்கொண்டு, விரிதீர்த்தம் - பரந்தநதிகளில், ஆடிவரும் - ஸ்நானஞ்செய்துவந்த, நாடொடங்கி - நாள்முதலாக, உறுதுயரம்- அடைந்திருக்கின்ற துக்கத்தை, விளம்பலுற்றார் - சொல்லத்தொடங்கினார்கள்—எ-று.

(இ-பா.) அக்கினியினா லிரக்ஷிக்கப்பட்ட வமுதத்தைப்போல இவ்விசுவாமித்திரரிஷி இராகவனை மிகவுங் காப்பார். போரையே வாழ்வாக வுடைய இராக்ஷதர்கள் செய்கின்ற தீமை நெருங்காது யென்று வசிட்டமுனி சொல்லக்கேட்ட வலியபுயத்தையுடைய தசரதமகாராஜனானவன், பெரியோர்கள் கிருபையினாற் கிடைத்த விராமன் என்னசெய்கின்றானென் றிராமனது பரிசனங்களைக்கேட்க, ஏவலாள ரழகியகையைக் குவித்துக்கொண்டு பரந்தநதிகளில் ஸ்நானஞ் செய்துவந்த நாள் முதலாக அடைந்திருக்கின்ற துக்கத்தைச் சொல்லத்தொடங்கினார்கள்—என்பதாம்.

(ப-ம்.) புத்திரன்படுந் துக்கத்தை வெளிப்படுத்து நிமித்தம், குமரனேது செய்கின்றனென்றார்.

(இ-ரீ.) இரகுவம்சத்துக்குநல்லகதியுங்கீர்த்தியுமுண்டாகும்பொருட்டிராமனே முனிகாப்பது மவனரக்கரைக் கொல்வது நிச்சயமென் றனுப்பும்படிதசரதருக்கு வசிட்டமுனி குறிப்பினாற்சொல்ல வப்படியே குறிப்பினாற் சம்மதித்ததாம். (ருஉ)

## இராமரது விரத்தியைக்கூறல்.

பதம்பணிந்து வேண்டியபின் பண்டைநிய மஞ்சிறிது
பண்ணு நிற்கு
மிதந்தருமா தருநிதியு மில்லமும்பொய் யாதலினு
லென்னே யென்னுஞ்
சிதம்படுநற் றுகிலடிசில் சீதநீ ராதிகளிற்
சிந்தை தீரு
மதந்தவிர்சந் நியாசியர்போன் மானமிரா சதமகிழ்ச்சி
மறுக்க மாற்றும்.

(இ-ள்.) பதம்பணிந்து - (நாங்கள்) பாதத்தைவணங்கி, வேண்டியபின் - வேண்டிக்கொண்டபின்பு, பண்டைநியமம் - பழமையான நித்திய கருமங்களை, சிறிதுபண்ணுநிற்கும் - சிலவற்றைச்செய்கின்றார், இதந்தருமாதரும் - இதத்தைக்கொடுக்கின்றமகளிரும், நிதியும்-செல்வமும், இல்லமும்-வீடும், பொய்யாதலினால் - மித்தையாதலினால, என்னேயென்னும்- (என்னபிரயோசன) மென்கின்றார், சிதம்படுநற்றுகில் - வெள்ளிய நல்ல வஸ்திரமும், அடிசில் - அறுசுவையுண்டியும், சீதநீர் - குளிர்ந்தசலமும், ஆதிகளில் - முதலியவற்றில், சிந்தைதீருந் - கருத்தில்லாதிருக்கின்றார், மதந்தவிர் - செருக்குநீங்கிய,சந்நியாசியர்போல் - துறவினர்களைப்போல, மானம் - அபிமானத்தையும், இராசதம் - இராசப்பிரவிர்த்தியையும,மகிழ்ச்சி - (சுகங்களிற்) சந்தோஷித்தலையும், மறுக்கம் - (துக்கத்தில்) வருந்துதலையும், மாற்றும் - நீக்கியிருக்கின்றார்—எ-று.

(இ-ரை.) நாங்கள் பாதத்தைவணங்கி வேண்டிக்கொண்டபின்பு பழமையான நித்தியகருமங்களிற் சிலவற்றைச்செய்கின்றார், இதத்தைக்கொடுக்கின்ற மகளிரும், செல்வமும், வீடும் மித்தையாதலினால் என்னபிரயோசன மென்கின்றார்; வெள்ளிய நல்லவஸ்திரமும், அறுசுவை யுண்டியும், குளிர்ந்த ஜலமும் முத

லியவற்றில் கருத்தில்லா திருக்கின்றார்; செருக்குநீங்கியதுறவினர்களைப்போல அபிமானத்தையும், இராசப்பிரவிர்த்தியையும், சுகங்களிற் சந்தோஷித்தலையும், துக்கத்தில் வருந்துதலையும் நீக்கியிருக்கின்றார்—என்பதாம். (ருந)

(இதுவுமது.)

இடரில்பத மொழிந்தபல தொழிலாற்போம் வாணாளென்
திரங்கிப்பாடு
மடர்செல்வ மாபத்துக் கிடமென்றே யாசைதவிர்ந்
தியார்க்குமீயும்
படர்கின்ற கருத்தறியே மிவர்க்காரே நற்குணங்கள்
பயிற்றவல்லார்
தொடர்செய்கை யிதுவென்று தொழுதுரைத்தார் முனிகேட்டுச்
சொல்வதானான்.

(இ-ள்.) இடரில் - துன்பமில்லாத, பதமொழிந்த - (சீவன்முத்தி)ப் பதத்தைநீங்கிய, பலதொழிலால் - நானாவிதமான செய்கைகளினால், வாணாள் - ஆயுளானது, போமென்று - கழியுமென்று, இரங்கிப்பாடும் - துக்கத்தோடுஞ்சொல்லுகிறார், அடர்செல்வம் - நிறைந்தசம்பத்தானது, ஆபத்துக்கிடமென்று - ஆபத்துக்கிடமா யிருக்கின்றதென்று, ஆசைதவிர்ந்து - அவாவைவிட்டு, இயார்க்குமீயும்-சகலருக்குங்கொடுக்கின்றார், படர்கின்ற-வியாபித்திருக்கின்ற, கருத்தறியேம் - நினைவையாங்களறிந்திலேம், இவர்க்கு - இவ்விளவரசருக்கு, யார் - எவர்கள், நற்குணங்கள் - (அரசிற்குரிய) நற்குணங்களை, பயிற்றவல்லார் - கற்பிக்கவல்லவர்கள், தொடர்செய்கை யிதுவென்று - (இப்போது) தொடர்ந்திருக்கின்றசெயலிதுவென்று,தொழுதுரைத்தார்-வணங்கிச்சொன்னார், முனிகேட்டு-முனிவரதைக்கேட்டு, சொல்வதானான்-சொல்லத்தொடங்கினார்—எ-று.

(இ-ரை.) துன்பமில்லாத சீவன்முத்திப்பதத்தை நீங்கிய நானாவிதமான செய்கைகளினால் ஆயுளானது கழியுமென்று துக்கத்தோடுஞ் சொல்லுகிறார், நிறைந்த சம்பத்தானது ஆபத்துக்கிடமா யிருக்கின்றதென்று அவாவைவிட்டு சகலருக்குங் கொடுக்கின்றார், வியாபித்திருக்கின்ற நினைவை யாங்களறிந்திலேம், இவ்விளவரசருக்கு எவர்கள் அரசிற்குரிய நற்குணங்களை கற்பிக்கவல்லவர்கள்? இப்போது தொடர்ந்திருக்கின்ற

செயலிதுவென்று வணங்கிச்சொன்னார். முனிவரதைக்கேட்டு சொல்லத்தொடங்கினர்—என்பதாம்.

(ப-ஃ.) பொருளினு லிம்மைக்கோ ரிதமும், மறுமைக்கோர் பதமும், விரும்பாம லிப்பீடை யெப்போது நீங்குமென்கின்ற வபிப்பிராயங்கொண்டு, பாத்திரா பாத்திரம்பாராமற் கொடுத்தாரென்பார், ஆசைதவிர்ந்தி யார்க்குமீயுமென்றார்.

(கு-உ-க-ம்.) இராமனது விசாரணையாலுண்டான நிராசையைவிசள மாகக் கருதிச்சொன்னதாம்.

## முனிவ ரிர்ராமனதபிப்பிராய மறிவித்தல்

இப்பெரிய செல்வனைநீ ரினக்கலையிற் றனிக்கலைபோ
 லீங்குத்தம்மின்
கைப்படுமிம் மாமோகங் காதலினு லாபத்தாற்
 கலந்ததன்றாற்
செப்பரிய நிராசையினுல் விவேகத்தால் வருமுணர்வின்
 செல்வமாகுந்
தப்பில்பல யூகத்தான் மோகம்போய்த் தளர்வறுந்தற்
 பதத்திலெம்போல்.

(இ-ள்.) இப்பெரியசெல்வனை - இம்மகத்தான செல்வமுள்ள விராமனை, இனக்கலையில்-கூட்டமாயிருக்கின்ற மான்களில், தனிக்கலைபோல்-தனித்தமானைக் கொண்டுவருவதுபோல, நீர் - நீங்கள், ஈங்குத்தம்மின்-இவ்விடத்திற்கொண்டுவாருங்கள், கைப்படும் - (இப்போ) துண்டாயிருக்கின்ற, இம்மாமோகம் - இந்த மகாமோகமானது, காதலினுல் - ஆசையினுலும், ஆபத்தால் - ஆபத்துகளினுலும், கலந்ததன்று - வந்ததன்று, செப்பரிய - சொல்லுதற்கரிதாகிய, நிராசையினுல் - விராகத்தினுலும், விவேகத்தால் - விவேகத்தினுலும்,வரும்-வராநின்ற, உணர்வின்செல்வமாகும்-ஞானசம்பத்தாம், தப்பில் - குற்றமற்ற, பலயூகத்தால் - (ஆத்மவிசாரணைக்குரிய) பலயுத்திகளால், மோகம்போய்-மயக்கநீங்கி, எம்போல் - எங்களைப்போல, தற்பதத்தின்-பிரமத்தில், தளர்வறும்-விஸ்ராந்தியடைவர்—எ-று.

(இ-ள.) இம்மகத்தான் செல்வமுள்ளவிராமனை 'கூட்டமாயிருக்கின்ற மான்களில் தனித்தமானைக் கொண்டுவருவதுபோல' நீங்கள் இவ்விடத்திற் கொண்டுவாருங்கள். இப்போதுண்டாயிருக்கின்ற இந்த மகாமோகமானது ஆசையினுலும்,

ஆபத்துகளினுலும் வந்ததன்று. சொல்லுதற்கரிதாகிய விராகத்திஞலும், விவேகத்திஞலும் வராநின்ற ஞானசம்பத்தாம். குற்றமற்ற ஆத்மவிசாரணைக்குரிய பலயுத்திகளால் மயக்கநீங்கி எங்களைப்போல பிரமத்தில் விஸ்ராந்தியடைவர்—என்பதாம்.

விஸ்ராந்தியென்பது சித்தத்துக் காத்மாகாரமாயிருக்கை.

(இ-ம்.) இராமன் வருந்துவது நிருவாணசுக மடைவதற்குக் காரணமேயன்றி வேறின்றென்பதாம். (ருரு)

## இராமர் சபைக்கு வருதல்.

மனநிறைந்து மானமுடன் மானவருக் கேற்றவெலா
மகிழ்ந்துசெய்யு
மெனமுனிவன் புகல்போதி லிராமனுந்தா தையைத்தொழுவா
னேகித்தாதை
கனைகழல்கள் முனிவர்பதங் கலைமறையோ ரடிகுரவர்
கால்கடாழ்ந்து
தனதிருதாள் வணங்கினரைத் தலையாற்சொல் லால்விழியாற்
சற்கரித்தான்.

(இ-ள்.) மனநிறைந்து-(இராமர்) மனதுபூரணத்தையடைந்து, மானமுடன் - பெருமையோடும், மானவருக்கு-மனிதர்களுக்கு, ஏற்றவெலாம்-தகுந்தவனைத்தையும், மகிழ்ந்துசெய்யுமென - இன்புற்றுச்செய்வாரென்று, முனிவன்புகல்போதில் -,முனிவர்சொல்லுகின்ற சமயத்தில், இராமனும்-ஸ்ரீராகவனும், தாதையை - பிதாவை, தொழுவானேகி - நமஸ்கரிக்கும்பொருட்டுச் (சபைக்கு) வந்து, தாதை - பிதாவினுடைய, கனைகழல்கள்-ஆரவாரிக்கின்ற வீரக்கழலணிந்த(பாதங்களையும்,) முனிவர்பதம்-வசிட்டர் விசுவாமித்திரர்களுடைய பாதங்களையும், கலைமறையோரடி - கலைஞானமுள்ளபிராமணர்களுடையபாதங்களையும், குரவர்கால்கள்-வித்தியாகுருக்களுடைய பாதங்களையும், தாழ்ந்து - வணங்கி, தனதிருதாள் - தனதுபயபாதத்தில், வணங்கினரை - நமஸ்கரித்தவர்களை, சொல்லால் - (முகமன்) வசனத்திஞலும், தலையால் - (சிரக்கம்பத்) திஞலும், விழியால் - கண்சைகையினுலும், சற்கரித்தான் - அங்கீகரித்தார்—எ-று.

(இ-ஊ.) இராமர்மனது பூரணத்தையடைந்து பெருமையோடும் மனிதர்களுக்குத் தகுந்தவனைத்தையும் இன்புற்றுச் செ

ய்வாரென்று முனிவர் சொல்லுகின்ற சமயத்தில் ஸ்ரீராகவனும் பிதாவைநமஸ்கரிக்கும்பொருட்டுச் சபைக்குவந்துபிதாவினுடைய ஆரவாரிக்கின்ற வீரக்கழலணிந்த பாதங்களையும் வசிட்டர் விசுவாமித்திரர்களுடைய பாதங்களையும், கலைஞானமுள்ள பிராமணர்களுடைய பாதங்களையும், வித்தியாகுருக்களுடைய பாதங்களையும் வணங்கி தனதுபயபாதத்தில் நமஸ்கரித்தவர்களை முகமன்வசத்தினாலும், சிரக்கம்பத்தினாலும், கண்சைகையினாலும்அங்கீகரித்தார்—என்பதாம்.

மகாரிஷிகளிருக்க முன்பு பிதாவுக்கு நமஸ்காரஞ் செய்யலாமோவெனின் ? அவர் பரமகுருவானதினாலஃதுவிதியே யெனக்கொள்க. முன்பு ரிஷிகளுக்கு நமஸ்காரஞ்செய்ததாகக் கிரந்தத்தில் வியாக்கியானஞ்செய்வாருமுளர்.

(இ-ம்.) இராமன் சீவன்முத்தியைப்பெற்றுப் பூரணமனதுடன் பூமிபாலனஞ் செய்யும்பொருட்டு போதிக்க வழைப்பித்ததாம். (ருசு)

---

## முன் பிதா போதித்தல்.

மடிமிசைவந் திருத்தியென மன்னுரைப்ப வாராது
மடித்ததூசைப்
படிமிசையிட் டிருத்தலுமே பார்த்திபன்பார்த் துயருணர்வு
படைத்தமைந்தா
முடிவறுநன் னலங்களுக்கு முன்னியல்பாத் திரமானாய்
மூர்க்கர்போல
நொடியுமினி மனந்தளர்ந்து நோக்கினிய மெய்வாடி
நோதல்வேண்டாம்

(இ-ள்.) மடிமிசை - மடியின்மேல், வந்திருத்தியென - வந்திருப்பாயென்று, மன்னுரைப்ப - அரசன்சொல்ல, வாராது - வராமல், மடித்ததூசை - மடித்தவஸ்திரத்தை, படிமிசை - பூமியின்கண், இட்டிருத்தலும் விரித்ததிலிருந்தமாத்திரத்தில், பார்த்திபன்பார்த்து - அரசனோக்கி, உயருணர்வு - மேலானவறிவை, படைத்தமைந்தா - அடைந்த புத்திரனே, முடிவுறு - முடிவில்லாத, நன்னலங்களுக்கு - நற்சுகங்க(ளிருத்தற்கு), முன்னியல்பாத்திரமானாய் - நினைக்கத்தகுந்த ஸ்தானமானநீ, மூர்க்கர்போல - மூடர்போல, நொடியும் - நொடிநேரமாகிலும், இனி - மேல்,

மனந்தளர்ந்து - மனஞ்சோர்ந்து, நோக்கினிய - பார்த்தற்கழகான, மெய் வாடி - தேகமெலிந்து, நோதல்வேண்டாம் - துக்கிக்கவேண்டாம்—எ-று.

(இ-ள.) மடியின்மேல்வந்திருப்பாயென்று அரசன்சொல்ல, வாராமல் மடித்தவஸ்திரத்தைப் பூமியின்கண்விரித்ததிலிருந்தமாத்திரத்தில் அரசனேக்கி மேலான வறிவையடைந்த புத்திரனே! முடிவில்லாத நற்சுகங்க ளிருத்தற்கு நினைக்கத்தகுந்த ஸ்தானமாண நீ மூடர்கள்போல நொடிநேரமாகிலும் இனி மனஞ்சோர்ந்து பார்த்தற்கழகான தேகமெலிந்து துக்கிக்கவேண்டாம்—எ-ம்.

(இ-ம்.) சுகமிருத்தற்கு ஸ்தானமான வறிவுள்ளவன் றுக்கிக்கவேண்டுவதின்றென்பதாம். (௬எ)

## (இ து வு ம து.)

விருத்தர்மறை யவர்குரவர் விளம்புபதந் தனைமோக
மேவா தான
கருத்துடைய வுன்போல்வார் கலந்தனரா னீவாளா
கவலாநின் ருய்
வருத்துறு மாபத்தெல்லாம் வன்மோக மறிலருகும்
வாராதென்று
பெருத்தமுடி மன்னவர்கோன் பேசியபின் வசிட்டனிவை
பேசலுற்ருன்.

(இ-ள்.) விருத்தர் - முதியோராயும், மறையவர் - பிரமரிஷியாயுமிருக்கின்ற, குரவர் - நம்மாசாரியராகிய வசிட்டர், விளம்புபதந்தனை - சொல்லிய (நிருவாண) பதத்தை, மோகமேவாதான-ஆசையைப்பொருந்தாத, கருத்துடைய வுன்போல்வார் - மனதையுடைய வுன்னையொத்தவர்கள், கலந்தனர் - அடைந்தார்கள், நீவாளாகவலாநின்ருய் - நீயேன் வீணுக வருந்துகின்ருய், வருத்துறுமாபத்தெல்லாம் - துன்பத்தைச்செய்யாநின்ற வாபத்துக்களனைத்தும், வன்மோகமறில் - வலியமோகநீங்கினல், அருகும் வாராதென்று - உனதுபக்கத்திலும் வரமாட்டாதென்று, பெருத்தமுடி - மகாமகுடத்தையுடைய, மன்னவர்கோன் - அரசர்க்கரசனுகிய தசரதன், பேசியபின் - சொன்னபின்பு, வசிட்டன் - வசிட்டமுனியானவர், இவைகளைச் சொல்லத்தொடங்கினர்—எ-று.

(இ-ள.) முதியோராயும், பிரமரிஷியாயுமிருக்கின்ற நம்மாசாரியராகிய வசிட்டர் சொல்லிய நிருவாண பதத்தை, ஆசையை

ப்பொருந்தாத மனமுடைய வுன்னையொத்தவர்களடைந்தார்கள். நீயேன் வீணாக வருந்துகின்றாய்; துன்பத்தைச் செய்யாநின்றவாபத்துகளனைத்தும் வலிய யோகநீங்கினால் உனதுபக்கத்திலும் வரமாட்டாதென்று மகாமகுடத்தையுடைய அரசர்க்கரசனாகிய தசரதன் சொன்னபின்பு வசிட்டமுனியானவர் இவைகளைச் சொல்லத்தொடங்கினார்—என்பதாம்.

(ப-ரை.) குருவாக்கியத்தையடைந்து மோகத்தை நிவிர்த்திசெய்யுங் குறிப்பைச் சூசிப்பித்தாரென்றார், குரவர் விளம்புபதந்தனை யுன்போல்வார் கலந்தனரென்றார்.

(இ-ம்.) ஆசிரியருபதேசத்தினால் விளங்கு மாத்மானுபவத்தினால் மோகத்தை வெல்லவேண்டுமென்பதாம். (௫அ)

## விசுவாமித்திரர் இராமர் யனோதுன்பத்துக் கேதுவான சிந்தையை நான்குவிதமாக வினாவுதல்.

வெலற்கரிய தீமுயற்சி விடயமெனும் பகையெளிதின்
வென்றசூரா
கலக்குறுபே தையர்க்குரித்தா மடஞ்செறிமோ கக்கடலிற்
கவிழேலென்று
னலக்குறுகோ சிகன்புகல்வா னன்மனையை யெலிநலியு
நலிவுபோல
வலக்கணுறு காரணமென் காதலித்த தேததனை
யடைதியன்றே.

(இ-ள்.) வெலற்கரியதீமுயற்சி-செயித்தற்கரிய கொடிமுயற்சிக் (கிடமாகிய,) விடயமெனும்பகை - விடயங்களென்கின்ற சத்துருக்களை, எளிதின்வென்றசூரா - எளிதிற்செயித்தவதிசூரனே, கலக்குறுபேதையர்க்கு- கலங்குகின்ற வறிவில்லாதவர்களுக்கு, உரித்தாம் - உரியதாயிருக்கின்ற, மடஞ்செறி - அஞ்ஞானநிறைந்த, மோகக்கடலில் - மோகசமுத்திரத்தில், கவிழேலென்றான் - வீழாதேயென்றுசொன்னார், நலக்குறு-நன்மைபொருந்திய, கோசிகன்புகல்வான் - விசுவாமித்திரர் சொல்லுவார், நன்மனையை - நல்லவீட்டை, எலிநலியுநலிவுபோல - கீழெலியறுத்தழிக்கு மழிவைப்போல, அலக்கணுறுகாரணமென் - (நீ மோகத்தினாற்)றுன்பப்படுங்

காரணமென்ன, (சொல்வாயாகினதுநீங்கி) காதலித்ததேது - நீயிச்சித்திருப்பதெதுவோ, அதனையடைதி - அதனையடைவாய்—எ-று.

(இ-ள.) செயித்தற்கரிய கொடிய முயற்சிக்கிடமாகிய விடயங்களென்கின்ற சத்துருக்களை எளிதிற்செயித்த வதிசூரனே! கலங்குகின்ற வறிவில்லாதவர்களுக் குரியதாயிருக்கின்ற அஞ்ஞானநிறைந்த மோகசமுத்திரத்தில் வீழாதே யென்று சொன்னர். நன்மைபொருந்திய விசுவாமித்திரர் சொல்லுவார், நல்லவீட்டைகிழெலியறுத்தழிக்கு மழிவைப்போல நீ மோகத்தினுற் றுன்பப்படுங் காரணமென்ன? சொல்வாயாகினதுநீங்கி நீ யிச்சித்திருப்பதெதுவோ அதனை யடைவாய்—என்பதாம்.

(ப-ம்.) விடயங்களைத் துன்பமென்றறிந்த நீ சுகமாயிருக்க, என்வீணுகத் துக்கிக்கின்ருயென்பார், விடயமெனும் பகை யெளிதின் வென்றசூரா மோகக்கடலிற் கவிழேலென்றும், நித்தியாநந்தமாகிய மோக்ஷத்தை விரும்பினுரென்றறிவிப்பார், காதலித்ததே தென்றுகூறினுர்.

(இ-ம்.) துன்பத்தை நிவிர்த்திப்பதின்பொருட் டதற்கேதுவைவினவினதாம். (ருக)

## முனிவர்வினுவுக் குத்தரஞ்சொல்லத் தொடங்குதல்.

மீட்டணுகா தகத்துயர்போம் விளம்பென்ன முகிற்குரலால்
வெம்மைதீர்ந்து
வாட்டமறு மயிலென்ன மகிழ்ந்திடர்போ யருண்மூர்த்தி
மடவனேனைச்
சேட்டமுறு மாதவநீ செப்பெனமுன் செப்புதலாற்
செப்புகின்றேன்
கேட்டருடி மேலவர்சொன் மறுக்குனரியா ரெனவினிது
கிளத்தலுற்ருன்.

(இ-ள்.) மீட்டணுகாது - திரும்பிவராமல், அகத்துயர்போம் - மனேதுக்கநீங்கும், விளம்பென்ன - சொல்லென்று (விசுவாமித்திரரிஷி) கேட்க, முகிற்குரலால் - மேகத்தினது சத்தத்தினுல், வெம்மைதீர்ந்து-உஷ்ணநீங்கி, வாட்டமறுமயிலென்ன-களிப்புற்ற மயிலைப்போல, இடர்போய்-துக்கநீங்கி, மகிழ்ந்து - (இராமர்) சந்தோஷித்து, மடவனேனை - அறியா

மையையுடையவென்னை, அருண்மூர்த்தி - கிருபாவடிவமுள்ளவராகிய, சேட்டமுறு - சிரேட்டமுள்ள, மாதவ - மகாதவத்தையுடைய விசுவாமித்திரரே, நீ - தேவரீர், செப்பென - சொல்லென்று, முன்செப்புதலால் - முன்சொல்லியபடியால், செப்புகின்றேன் - சொல்லுகின்றேன், கேட்டருடி - கேட்டருள்வாய், மேலவர்சொல் - பெரியோர்கள் வாக்கியத்தை, மறுக்குனரியாரென - தடுக்கின்றவர்யாவரென்று, இனிது-இனிமையை, கிளத்தலுற்றான் - சொல்லத்தொடங்கினர்—எ-று.

(இ-ள்) திரும்பிவராமல் மனோதுக்க நீங்கும். சொல்லென்று விசுவாமித்திரரிஷிகேட்க? மேகத்தினது சத்தத்தினால் உஷ்ணநீங்கி, களிப்புற்ற மயிலைப்போல துக்கநீங்கி, இராமர் சந்தோஷித்து அறியாமையையுடைய வென்னை கிருபாவடிவமுள்ளவராகிய சிரேட்டமுள்ள மகாதவத்தை யுடைய விசுவாமித்திரரே! தேவரீர் சொல்லென்று முன்சொல்லியபடியால் சொல்லுகின்றேன். கேட்டருள்வாய். பெரியோர்கள் வாக்கியத்தைத் தடுக்கின்றவர் யாவரென்று இனிமையை சொல்லத்தொடங்கினர்-எ-ம்.

(ப-ு.) சீடன் றனக்குதயமான வனுபவத்தைக்கூற வாசிரியரதைத் திருத்திவருதலாற் றடையற்ற வாநந்தமுதயமாய்த் துக்கநிவிர்த்தி யுண்டாமென்பார், மீட்டணுகா தகத்துயர்போம் விளம்பென்றார்.

(இ-ம்.) துக்கத்தை நிவர்த்திசெய்து பரமசுகத்தை யடையும்பொருட்டுத்தரஞ்சொல்வதாம். (௬௦)

---

## சிந்தாஸ்வரூபமு மதனளவு மதனிருப்பு மதன்காரணமுமான நான்குசங்கைக் குத்தரஞ் சொல்லி யிதனாற் பயனின்றெனல்.

தந்தையிவ னிற்பிறந்து வளர்ந்து பல கலைதரித்துச்
சதாசாரத்தால்
வந்துயர்நன் னதியாடி வாரிதிசூழ் புவியுழன்று
வருதலோடு
மிந்தநெடுஞ் சகமோகத் திச்சையெலாந் தீர்ந்ததிதி
லின்பமில்லை

யந்தமுறல் பிறப்பதற்கே பிறப்பதுமீட் டிறப்பதற்கே
யநித்தமியாவும்.

(இ-ள்.) தந்தையிவன் - பிதாவாகிய வித்தசரதனது, இல்பிறந்து-மனையிலுதித்து, வளர்ந்து - விர்த்தியடைந்து, பலகலைதரித்து - சகலவித்தைகளையுமப்பியாசஞ்செய்து, சதாசாரத்து - நல்லவாசாரப்படி, வந்து-நடந்து, உயர்நன்னதியாடி-மேலான புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, வாரிதிசூழ் - சமுத்திரஞ்சூழ்ந்த, புவியுழன்று - பூமியைப் பிரதக்ஷணஞ்செய்து, வருதலோடும் - வரவும், இந்தநெடுஞ்சகமோகத்து - இந்நெடியசகப்பிராந்தியில், இச்சையெலாந்தீர்ந்தது - ஆசைகளனைத்து நீங்கிற்று, இதிலின்பமில்லை - இச்சகத்தி (லெவ்வளவேனுஞ்) சுகமில்லை, அந்தமுறல் - நாசமடைதல், பிறப்பதற்கே - சநிப்பதற்கேயாம், பிறப்பது-சநிப்பது, மீட்டிறப்பதற்கே - திரும்பமரணத்துக்கேயாம் (ஆதலால்), யாவும் - சகலமும், அநித்தம் - மித்தையாம்—எ-று.

(இ-ள.) பிதாவாகிய வித்தசரதனது மனையிலுதித்து விர்த்தியடைந்து, சகல வித்தைகளையுமப்பியாசஞ் செய்து, நல்லவாசாரப்படி நடந்து, மேலானபுண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைப் பிரதக்ஷணஞ்செய்து வரவும் இந்நெடிய சகப்பிராந்தியில் ஆசைகளனைத்துநீங்கிற்று. இச்சகத்திலெவ்வளவேனுஞ் சுகமில்லை. நாசமடைதல் சநிப்பதற்கேயாம். சநிப்பது திரும்பமரணத்துக்கேயாம். ஆதலால், சகலமும்மித்தையாம்—என்பதாம்.

(ப-ம்.) சீவேஸ்வரசக மித்தையென்பார், அநித்தியமியாவுமென்றார். ()

## (இதுவுமது)

பாவமதா யாபத்து பயிலிடமாய்த் தம்மிற்றும்
பற்றின்றியுந்
தாவுமனக் கற்பனையாற் சம்பந்த மாயிருப்புச்
சலாகைபோலாய்
மேவுபெருஞ் செல்வத்துக் கிடமாகு மெப்பொருளும்
விடயத்தாலும்
பூவலயத் தாலுமெது பயன்யாமார் வருவதெது
பொய்பொய்யொய்யாம்.

(இ-ள்.) எப்பொருளும் - எவ்வஸ்துக்களும், பாவமதாய் - தீமையாயும், ஆபத்துபயிலிடமாய் - ஆபத்துச்சேர்வதற்கு ஸ்தானமாகியும், தம்மிற்றும்பற்றின்றியும் - ஒன்றற்கொன்று சம்பந்த மில்லாததாகியும், தாவும

னக்கற்பனையால் - தாவாநின்றமனோசங்கற்பத்தினால், சம்பந்தமாம் - சம்பந்தமாயும், இருப்புச்சலாகைபோலாய் - இருப்புச் சலாகையைப்போல (வன்மை) யாகியும், மேவுபெருஞ்செல்வத்துக்கு - பொருந்தாநின்ற மகாசம்பத்துக்கு, இடமாகும் - ஸ்தானமாகின்றன, (ஆதலால்) விடயத்தாலும் - விடய (போகத்) தினாலும், பூவலயத்தாலும் - இராச்சியத்தினாலும், ஏது பயன் - என்னபிரயோசனம், யாமார் - அகம்பாவமெப்படிப்பட்டது, வருவதேது - வந்திருப்பதாகிய தேகமெப்படிப்பட்ட (தென்றுவிசாரிக்கின்), பொய்பொய்பொய்யாம் - (ஆத்மவிதிரித்தமானவிச்சகலமு) மித்தையேயாம்—எ-று.

(இ-ரை.) எவ்வஸ்துக்களும் தீமையாயும், ஆபத்துச்சேர்வதற்கு ஸ்தானமாகியும், ஒன்றற்கொன்று சம்பந்தமில்லாததாகியும் தாவாநின்ற மனோசங்கற்பத்தினால் சம்பந்தமாயும், இருப்புச்சலாகையைப்போல வன்மையாகியும், பொருந்தாநின்ற மகாசம்பத்துக்கு ஸ்தானமாகின்றன. ஆதலால், விடயபோகத்தினாலும், இராச்சியத்தினாலும், என்னபிரயோசனம் ? அகம்பாவ மெப்படிப்பட்டது ? வந்திருப்பதாகியதேகமெப்படிப்பட்டதென்றுவிசாரிக்கின் ஆத்மவிதிரித்தமான விச்சகலமு மித்தையேயாம்—என்பதாம்.

(ப-ம்.) யானெனதென்பது முதலிய சகலமுமித்தையென்பார், யாமார்வருவதேது பொய்யாமென்றார்.

(இ-உ-க-ம்.) பாவமேரூபமாகியும், விடயவஸ்துக்களே யளவாகியும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததே இருத்தலாகியும், சங்கற்பமே காரணமாகியும் இருக்கின்ற விச்சமுசாரத்தை விசாரிக்கிற் பயனின்மையு மித்தையுமாயிருத்தலி னெப்படி நீக்கிக்கொள்வோமென்னுஞ் சிந்தையைச சொன்னதாம். (சுஉ)

## பயனின்றியவிதனாற் றுன்பப்படுங் காரணமுரைத்தல்.

யாதியார் பெற்றதென விவ்வண்ண நினைவேற்கு
வழிச்செல்வோர்க்கு
மோதுகா னலிலம்பு முறைமைபோற் பொருண்முழுதின்
மூளாவாசை
பேதியா வித்துயர்போ னெறிநாடிற் பெருந்தருதான்
பெற்றதீயால்

வேதல்போல் வேகின்றேன் மிடறடைகல் லாந்திறவா
வெய்யமோகம்.

(இ-ள்.) யாதியார் பெற்றதென - (அனைத்து மித்தையாதலா லிவற்றி) லியாரெதைப்பெற்றார்களென்று, இவ்வண்ணநினைவேற்கு - இப்படி விசாரிக்கின்றவெனக்கு, வழிச்செல்வோர்க்கு - மார்க்கத்திநடப்பவருக்கு, மோதுகானலின் - அலைமோதாநின்றகானற் (சலத்தை கானலெனக்கண்டுவிழி), அம்பு-சலப் (பிராந்திவாராத), முறைமைபோல் - தன்மையைப்போல, பொருண்முழுதின் - வஸ்துக்களனைத்திலும், ஆசை - இச்சை, மூளா - உண்டாகாது, பேதியாவித்துயர்போம் - பேதிக்கப்படாதவிவ் (விடய) துன்ப நீங்குகின்ற, நெறிநாடின் - மார்க்கத்தை நாடுமிடத்தில், பெருந்தருதான் - முதிர்ந்தமரமானது, பெற்றதீயால் - தானடைந்தவக்கினியினால், வேதல்போல் - வேகின்றதுபோல, வேகின்றே-வேகிறேன், திறவாவெய்யமோகம் - தீர்க்கக்கூடாதவெவ்வியமோகமானது,மிடறடைகல்லாம் - கண்டத்தையடைக்கின்ற கல்லாகும்—எ-று.

(இ-கா.) அனைத்து மித்தையாதலால் இவற்றிலியாரெதைப் பெற்றார்களென்று இப்படி விசாரிக்கின்றவெனக்கு மார்க்கத்திநடப்பவருக்கு அலைமோதாநின்ற கானற்சலத்தைக் கானலெனக் கண்டு விழிசலப்பிராந்தி வாராத தன்மையைப்போல வஸ்துக்களனைத்திலும் இச்சை வுண்டாகாது, பேதிக்கப்படாத விவ்விடய துன்பநீங்குகின்ற மார்க்கத்தை நாடுமிடத்தில் முதிர்ந்தமரமானது தானடைந்த வக்கினியினால் வேகின்றதுபோல வேகிறேன், தீர்க்கக்கூடாத வெவ்விய மோகமானதுகண்டத்தையடைகின்ற கல்லாகும்—என்பதாம்.

(இ-ம்.) ஒருவருக்குஞ் சுகத்தைக்கொடாத விம்மோகத்தினால் வீணாக வருந்துகின்றே னென்பதாம். (சுரு)

---

சம்சாரந் துன்பமென்றுரைத்து இத்துன்பத்தை நிவிர்த்திப்பிக்கும் பொருட்டதைத் தனமுதலிய பதினொருவித தோஷமாகக் காண்குதலை இப்பிரகரணத்திற் கூறுவான் றொடங்கி இச் சம்சாரத்துக்குக் காரணமான தனதோஷந் தை முதலிற் கூறுகின்றது.

---

• அவையாவன தனம், ஆயுள், அகங்காரம், மனது, ஆசை, தேகம், பாலியம், எவ்வனம், வனிதையர், வார்த்திகம், காலம் என்பனவாம்.

இவைகளின் வைப்புமுறையை மேல்வருமிடங்கடோறுங்காண்க.

இனமிகழு மென்றஞ்சி யித்துயருக் கழுதாற்றே
 னீன்றமாதர்
தனமுதலா மாபத்தோர்க் கெனச்சிந்தா வினஞ்சுழலுந்
 தானமாகுங்
கனமிலதா யுதாரமதா மென்னினுமின் பம்பயவாக்
 கயவரென்ன
வனகரெனத் தரமறியா தரசரைப்போ லடைந்தார்பா
 லணுகுஞ்செல்வம்.

(இ-ள்.) இனமிகழுமென்றஞ்சி - உறவினரா னிந்திக்கப் படுமென்று பயந்து, இத்துயருக்கு - இத்துன்பத்தை, அழுதாற்றேன் - வாய்விட்டழு தாற்றிலன், ஈன்றமாதர் - மக்களையுடைய சம்சாரமானது, முதலாமாபத் தோர்க்கென - தலைமையான வாபத்துள்ளவர்களுக்குச் (சுகமாகாதது) போல, சிந்தாவினஞ்சுழலும் - சிந்தாசமூகஞ் சுழலுதற்கு, தானமாகும்-இடமாயிருக்கின்ற, தனம் - திரவியமானது,இன்பம்பயவா - ஆநந்தத்தை க்கொடாது, கயவரென்ன - கீழ்மக்களெனவும், அனகரென் - மேன்மக்க ளெனவும், தரமறியாது-தாரதம்மியம்பாராமல், அரசரைப்போல் - (வண ங்கினவர்கள் வசத்திற்சாருகின்ற) வேந்தரைப்போல, அடைந்தார்பால்-கதியாயடைந்தவர்களிடத்தில், அணுகுஞ்செல்வம்-சேருகின்றசெல்வமா னது, உதாரமதாமென்னினும் - உக்கிரிஷ்டமானாலும், கனமிலதாம் - (ம கான்களை நிந்திப்பதற் கேதுவாதலின்) சிறப்பில்லாததாம்—எ-று.

(இ-ை.) உறவினரா னிந்திக்கப்படுமென்று பயந்துஇத்துன் பத்தை வாய்விட்டழுதாற்றிலன் ; மக்களையுடைய சம்சாரமானது தலைமையான வாபத்துள்ளவர்களுக்குச் சுகமாகாததுபோல, சிந் தாசமுகஞ் சுழலுதற்கு இடமாயிருக்கின்ற திரவியமானது ஆநந் தத்தைக்கொடாது. கீழ்மக்களெனவும் மேன்மக்களெனவும் தார தம்மியம்பாராமல் வணங்கினவர்கள் வசத்திற் சாருகின்ற வேந்த ரைப்போல கதியாயடைந்தவர்களிடத்தில் சேருகின்ற செல்வமா னது உக்கிரிஷ்டமானாலும் மகான்களை நிந்திப்பதற்கேதுவாதலின் சிறப்பில்லாததாம்—என்பதாம்

(இ-ப்.) சிந்தனைக்கேதுவாயுஞ் சஞ்சலமுள்ளதாயு மூடமாயுமிருக்கி ன்ற வித்தனத்தி லென்னசுகமென்பதாம். (சுச)

தனம் யாகாதி கிரியைகளை முன்னிட்டுச் சுகத்தைக் கொடுக்குமெனில் அப்படியுங் கொடாதெனல்.

கருமவகை யால்விரிந்த காமாதி பாப்புரைப்பாற்
காதனீங்குந்
திருவெனுஞ்சூ றைக்காற்றாற் பனிபோலச் சிதறாதோர்
சேராசேர்ந்தோ
ரிருவகைக்குங் குளிர்ந்தினிய னன்றியறி வோரறிஞ
ரெளியோர்சூரர்
பொருவிலெவ ருந்திருவாற் புழுதிசெறி சுடர்மணிபோற்
புன்மைசேர்வர்.

(இ-ள்.) கருமவகையால் - (தனத்தைக்கொண்டுசெய்யுங்) கிரியாபேதங்களால், விரிந்த - மிகுந்ததாயும், காமாதிபாப்பு - இராகத்துவேடங்களென்னும் விடத்தினால், உரைப்பால் - (சத்துக்கள்) வாக்கியாமுதங்களின், காதல் - இரசமாகியபிரியமும், நீங்கும் - (கைப்பாக) நீக்குவதாயுமிருக்கின்ற, திருவெனுஞ் சூறைக்காற்றால் - செல்வமென்னுஞ் சுழல்காற்றினால், பனிபோல - பனியைப்போல, சிதறாதோர் - (அறிவு) மயங்காதா (ரார்,) சேரார்-பரசனங்களும், சேர்ந்தோர் - சுசனங்களுமாகிய, இருவகைக்கும் - இருதிறத்தவர்களுக்கும், குளிர்ந்தினியன் - குளிர்ந்தினிமையுள்ளவரும், நன்றியறிவோன் - செய்நன்றியறிபவரும், அறிஞர் - அறிவுடையவரும், எளியோர் - எளியவர்களும், சூரர் - வீரர்களும், பொருவிலெவரும் - (இன்னஞ்) சமானமில்லாதவேனையோரும், திருவால் - செல்வத்தால், புழுதிசெறி - புழுதியினான்மறைபட்ட, சுடர்மணிபோல் - ஒளிருகின்றவிரத்தினம்போல, புன்மைசேர்வர் - ஈனமடைவார்கள்—எ-று.

(இ-ா.) தனத்தைக்கொண்டு செய்யுங் கிரியாபேதங்களால் மிகுந்ததாயும், இராகத்துவேடங்களென்னும் விடத்தினால் சத்துக்கள் வாக்கியாமுதங்களின் இரசமாகிய பிரியமும் கைப்பாக நீக்குவதாயு மிருக்கின்ற செல்வமென்னுஞ் சுழல்காற்றினால் பனியைப்போல அறிவுமயங்காதாரார்? பரசனங்களும் சுசனங்களுமாகிய இருதிறத்தவர்களுக்கும் குளிர்ந்தினிமையுள்ளவரும், செய்நன்றியறிபவரும், அறிவுடையவரும், எளியவர்களும், வீரர்களும், இவ்

னஞ் சமானமில்லாத வேனையோரும், செல்வத்தால் புழுதியினுன் மறைபட் டொளிருகின்ற விரத்தினம்போல ஈனமடைவார்கள்-எ.

(இ-ா.) செல்வம் சுவர்க்கபோக மமதையினு லாத்மார்த்தத்தைக்கிரிக்கவொட்டாமல் வருத்துமென்றும், அஃதுள்ளவனில்லவ னிலக்கண மின்னதென்றுங் கூறினதாம். (சுரு)

---

**இத்தன மநர்த்தநிமித்தமேயன் றியர்த்த நிமித்தமாகாதேன முடித்து நிறுத்தமுறையான் இத்தனத்தை யனுபவிக்கும் பொருட்டு வேண்டியவாயுளேப்பின்வைத்தஃதோருகணமு நிலேயன்றேனத் தூஷித்தல்.**

---

தீதடையாச் செல்வர்மொழி திறம்பாத சூரர்நடுத்
தெரிந்துநோக்கு
நாதரிவர் மிகவரியர் நாகஞ்சூழ் குழிவல்லி
நனேபோற்செல்வஞ்
சாதனத்துக் கரிதுளத்தை யிழுத்திமைப்பி லிறுந்தலேகீழ்த்
தளிரிஞன்ற
வோதுதுளி யொத்தவுயிர் மத்தரென வகாலத்தி
லுடல்விட்டோடும்.

(இ-ள்.) தீதடையாச்செல்வர் - குற்றமற்றசெல்வர்களும், மொழிதிறம்பாதசூரர் - சொற்றவறாதவீரர்களும், நடுத்தெரிந்து-சமதிருஷ்டியாய், நோக்குநாதர் - பார்க்குமரசர்களுமாகிய, இவர்மிகவரியர் - இவர்கள்மிகவுமரியர்கள், உளத்தையிழுத்து-மனதைக்கிரிகிப்பதாயும், இமைப்பிலிறும்-கணத்தினசிப்பதாயுமிருக்கின்ற, செல்வம் - தனமானது, நாகஞ்சூழ்-சர்ப்பஞ்சூழ்ந்த, குழி - அந்தகூபத்திலுள்ள, வல்லிநனேபோல் - கொடியினரும்பைப்போல, சாதனத்துக்கரிது - கிட்பலமாம், (இனியாயுடேணம்) தலேகீழ் - தலேகீழயிருக்கின்ற, தளிரில் - இலே (யினுனி) யில், நான்ற - தொங்கிய, ஓதுதுளியொத்த - சொல்லப்பட்ட (மழைத்) துளிக்கொப்பாகி.., உயிர் - பிராணனுனது, மத்தரென - உன்மத்தரைப்போல, அகாலத்தில் - காலமல்லாதகாலத்தில், உடல்விட்டோடும்-தேகத்தைவிட்டோடிப்போகும்—எ-று.

(இ-ா.) குற்றமற்ற செல்வர்களும், சொற்றவறாத வீரர்களும், சமதிருஷ்டியாய்ப் பார்க்குமரசர்களுமாகிய இவர்கள் மிகவுமரியர்கள். மனதைக் கிரிகிப்பதாயும், கணத்தினசிப்பதாயு மிருக்

கின்ற தனமானது சர்ப்பஞ்சூழ்ந்த அந்தகூபத்திலுள்ள கொட்டி னரும்பைப்போல நிட்பலமாம். (இனியாயுடேணம்) தலைகீழயிருக் கின்ற இலையினுனியிற் ெறுங்கிய மழைத்துளிக் கொப்பாகச் சொ ல்லப்பட்ட பிராணனானது உன்மத்தரைப்போல காலமல்லாத கா லத்தில் தேகத்தைவிட் டோடிப்போகும்—என்பதாம்.

(ப-ம்.) குற்றமற்ற ஞானச்செல்வ மிருத்தலின், தீதமடையாச்செல் வரென்றார்.

(இ-ம்.) உயர்ந்தோரை நிந்திக்கச்செய்யுஞ் செல்வமும், அதையனுப விக்குமாயுளுந் துன்பமேயென்பதாம். (சுசு)

## கன்மிகளுக்காயினுஞ் சுகங்கொடுக்குமென்னி லவர்க்குங் கொடாதெனல்.

வளர்புலமா மராத்தீண்ட மனமயர்வோர் மெய்யுணர்வு
வாய்த்திலாதோர்
தளர்வறு காரணம்வாணுட் டனிமோக மெனுமுகிலிற்
சார்மின்போலு
மளவுபடு முடன்மெய்யென் றழுந்திநா மிதின்மகிழே
மாகாயத்தைப்
பிளவிடமா யுவைப்பிடிக்கத் திரைநோக்க வெளிதிதனைப்
பேணவொண்ணு.

(இ-ள்.) வளர்புலமாம் - வளர்கின்றவைம்புலமென்னும், அராத்தீ ண்ட - சர்ப்பந்தீண்ட, மனமயர்வோர் - மனந்தளர்பவர்களும், மெய்யுண ர்வு-உண்மைஞானம், வாய்த்திலாதோர் - அடையாதவர்களுமான (விவ ர்களுடைய), வாணுள் - ஆயுளானது, அளவுபடுமுடல் - மட்டிடப்படுஞ் சரீரத்தை, மெய்யென்றழுந்தி - ஆத்மபுத்திபண்ணி, தனிமோகமெனும்- ஒப்பற்ற மோகமென்கின்ற, முகிலில் - மேகத்தில், சார்மின்போலும் - பொருந்திய மின்னலைப்போலு (மிருக்கின்ற), இதில் இவ்வாயுளில், மகி ழேம் - சந்தோஷியேம், ஆகாயத்தை - (நிரந்தரமான) வந்தரத்தை, பிள விட - பிளக்கவும், வாயுவை - (சஞ்சலமுள்ள) காற்றை, பிடிக்க - பிடிக்க வும், திரைநோக்க - (தோன்றித் தோன்றியழியாநின்ற) அலைகளைக் நோ க்கவும், எளிது - இலேசாம், இதனை - இவ்வாயுளை, பேணவொண்ணு - (நிலையென) விரும்பக்கூடாது—எ-று.

(இ-ரை.) வளர்கின்ற வைம்புலமென்னும் சர்ப்பந்தீண்ட மனந்தளர்பவர்களும் உண்மைஞானம் அடையாதவர்களுமான விவர்களுடைய ஆயுளானது தளர்வடைவதற்குக் காரணமாம். மட்டிடப்படுஞ் சரீரத்தை ஆத்மபுத்திபண்ணி ஒப்பற்றமோகமென்கின்ற மேகத்தில் பொருந்திய மின்னலைப்போலு மிருக்கின்ற இவ்வாயுளில் சந்தோஷியேம். நிரந்தரமான வந்தரத்தைப்பிளக்கவும் சஞ்சலமுள்ள காற்றைப்பிடிக்கவும் தோன்றித்தோன்றி யழியாநின்ற அலைகளைக்கோக்கவும் இலேசாம். இவ்வாயுளை நிலையென விரும்பக்கூடாது—என்பதாம்.

(பு-ர்.) மோகமென்பதைத் தேகமெனவும், உடலென்பதை யுயிரெனவுங் கொள்க.

(இ-°.) கன்மிகளுக் காத்மவிவேகத்தைக் கொடாமற் சநநத்தைக் கொடுப்பதுமன்றிக் கணமுநிலையில்லாததினு லிவ்வாயுளிற் சுகமின்றென்பதாம். (௬௭)

## ஆயுளிரிச்சை வியர்த்தமாமெனல்.

சரற்பருவ மேகமெனத் தைலந்தீர் விளக்கென்னத்
தரங்கமென்னத்
திரப்படநீங் குவதாகிச் சிறிதுமிளைப் பாருத
சிந்தைத்தாகிப்
பரப்புடைய சேட்டையதாய்ச் சூனியமாம் வாணுளின்
பயனைநாடிற்
றுரப்பரிய துயராக்கு மொட்டகத்துக் குயிர்தொலைக்குஞ்
சூலேபோல.

(இ-ள்.) சரற்பருவமேகமென - சரற்காலமுகிலைப்போலவும், தைலந்தீர்விளக்கென்ன - நெய்யில்லாத தீபத்தைப்போலவும், தரங்கமென்ன-(கடலி) னலையைப்போலவும், திரப்படநீங்குவதாகி - நிலையாகக்கெடுகின்றதாயும்,சிறிதுமிளப்பாருத - எவ்வளவேனும்விஸ்ராந்தியில்லாத, சிந்தைத்தாகி - சிந்தையாயும், பரப்புடைய - விஸ்தாரமுள்ள, சேட்டையதாய்-மூடமாயும், சூனியமாம் - (புருடார்த்த) சூனியமாயு (மிருக்கின்ற, வாணுளின்பயனை - ஆயுளின்பிரயோசனத்தை, நாடில் - ஆராயில், ஒட்டகத்துக்கு - ஒட்டியிருக்கின்றவடலையுடைய இப்பிக்கு, உயிர்துலைக்கும் - உயிரைப்பிரிக்கின்ற, சூலேபோல - கருத்தைப்போல, துரப்பரிய - நீக்கக்கூடாத, துயராக்கும் - துன்பத்தையுண்டாக்கும்—எ-று.

(இ-ள்.) சரற்கால முகிலைப்போலவும், நெய்யில்லாத தீபத்தைப்போலவும், கடலினலையைப்போலவும், நிலையாகக்கெடுகின்றதாயும், எவ்வளவேனும் விஸ்ராந்தியில்லாத சிந்தையாயும், விஸ்தாரமுள்ள மூடமாயும், புருடார்த்த சூனியமாயுமிருக்கின்ற ஆயுளின் பிரயோசனத்தை ஆராயில் ஒட்டிருக்கின்ற வுடலையுடைய இப்பிக்கு உயிரைப்பிரிக்கின்ற கருப்பத்தைப்போல நீக்கக்கூடாத துன்பத்தை யுண்டாக்கும்—என்பதாம்

வடநூலாசிரியர் அசுவதரியென்னுந் திருட்டாந்தமித்தேயத்திற்கதிரிசயமாதலால், அது திரிசயமாம்பொருட் டிந்நூலாசிரியர் முத்திப்பியை, ஒட்டகமெனக்கூறினர்.

(இ-ு.) கணமுநிலையின்றி விரும்பினவர்களுக்குத் துக்கத்தைக் கொடுக்கின்றவாயுளி லென்னபிரயோசனமென்பதாம். (சுஅ)

---

## விஸ்ராந்தியடையு மாயுளே சபலமாமெனல்.

அடையவேண் டியதடைந்து மேற்றுயர மற்றின்ப
மளவிலாதாய்க்
கடையதாந் தருவிலங்கு பறவைகள்போல் வீணாள்கள்
கழியாதாகித்
தடையிலா மனனத்தால் வாழ்வதே யுயர்வாணாள்
சநநந்தீர்ந்தோ
ருடையபிறப் புயர்ந்ததாங் கிழவேச ரிப்பிறப்பா
மொழிந்தவெல்லாம்.

(இ-ள்.) அடையவேண்டியதடைந்து - அடையத்தக்க (வாத்மஞானத்தை) யடைந்து, மேற்றுயரமற்று - இனித்துன்பநீங்கி, இன்பம் - ஆனந்தமானது, அடவிலாதாய் - அளவற்றதாய், கடையதாம் - கீழான, தரு - விருக்ஷங்களும், விலங்கு - மிருகங்களும், பறவைகள்போல் - பக்ஷி (களுமாகிய விவை) களைப்போல, வீண் - வீணாக நாள்கள் - காலத்தை, கழியாதாகி - போக்காமல், தடையிலா - தடையற்ற, மனனத்தால் - (ஆத்ம) விசாரத்தால், வாழ்வதே-சீவிப்பதே, உயர்வாணாள் - மேலானவாயுளாம், சநநம் - (மறு) பவத்தை, தீர்ந்தோருடைய - ஒழிந்தவருடைய, பிறப்பு - சநநம், உயர்ந்ததாம் - மேலானதாம், ஒழிந்தவெல்லாம் - ஏனையவனைத்தும், கிழவேசரிப்பிறப்பாம்-கிழக்கழுதையின்பிறவியாம்—எ-று.

(இ-ள.) அடையத்தக்க வாத்மஞானத்தை யடைந்துஇனித் துன்பநீங்கி ஆனந்தமானது அளவற்றதாய் கீழானவிருக்ஷங்களும், மிருகங்களும், பக்ஷிகளுமாகிய விவைகளைப்போலவீணாக காலத்தைப் போக்காமல் தடையற்ற ஆத்மவிசாரத்தால் சீவிப்பதேமேலானவாயுளாம். மறுபவத்தைஒழிந்தவருடையசநநம்மேலானதாம் வனையவனைத்தும் கிழக்கழுதையின் பிறவியாம்—என்பதாம்.

சநநமென்பது ஆயுளெனக்கொள்க.

(ப-ம்.) ஆத்மாவில் ரமிக்கின்ற வாயுளிருத்தலின், மனனத்தால் வாழ்வதே யுயர்வாணுளென்றார்.

(இ-ம்.) ஆத்மப் பிரயோசனத்தை யடைந்ததிற் சீவிக்குமாயுளைத்தவிரமற்றதி லென்னசுகமென்பதாம். (சுக)

## பயனின்றிய வாயுளே சுமையாமெனல்.

அவிவேகிக் குப்பாரஞ் சாத்திரமெய் யறிவிலோர்க்
கங்கம்பார
நவில்சாந்தி யில்லாதோர்க் குளம்பார மவாவினர்க்கு
ஞானம்பாரஞ்
செவிதான வுருவாணுன் மனம்புந்தி யகங்காரஞ்
செயல்களெல்லாங்
குவிபார மாஞ்சுமடர் சுமைபோலப் புந்திநலங்
கூடாதார்க்கே.

(இ-ள்.) அவிவேகிக்கு - விவேகமில்லாதவருக்கு, சாத்திரம் - நூலானது, பாரம்-சுமையாகும், மெய்யறிவிலோர்க்கு - உண்மைஞானமில்லாதவருக்கு, அங்கம்பாரம் - சரீரஞ்சுமையாகும், நவில்சாந்தியில்லாதோர்க்கு-சொல்லாநின்ற சாந்தமிலலாதவருக்கு, உளம்பாரம் - மனஞ்சுமையாகும், அவாவினர்க்கு - காமா (திதோஷ) முடையவருக்கு, ஞானம்பாரம்-(ஆத்ம) ஞானஞ்சுமையாகும், செவிதானவுரு - அழகியதேகமும், வாணுள்-ஆயுளும், மனம் - மனதும், புந்தீ - புத்தியும், அகங்காரமும், செயல்கள்-தொழில்களுமாகிய, எல்லாம் - அனைத்தும், புந்திநலம் - அறிவிற்சுகம், கூடாதார்க்கு - அடையாதவர்களுக்கு, சுமடர்சுமைபோல - கீழமக்களெடுக்குஞ் சுமையைப்போல, குவிபாரமாம் - திரண்டசுமையாகும்—எ-று.

(இ-ள.) விவேகமில்லாதவருக்கு நூலானது சுமையாகும்; உண்மைஞானமில்லாதவருக்குச் சரீரஞ்சுமையாகும்; சொல்லாநின்ற சாந்தமில்லாதவருக்கு மனஞ்சுமையாகும்; காமாதிதோஷமுடையவருக்கு ஆத்மஞானஞ் சுமையாகும்; அழகியதேகமும், ஆயுளும், மனதும், புத்தியும், அகங்காரமும், தொழில்களுமாகிய வனைத்தும் அறிவிற்சுக மடையாதவர்களுக்கு கீழ்மக்களெடுக்குஞ் சுமையைப்போல திரண்டசுமையாகும்—என்பதாம்.

(ப-பி.) பயன்பெறுதவாயுளின் விபகாரங்களனைத்துந் துன்பமேயென்பார் குவிபாரமென்றூர்.

(இ-பீ.) அறிவிலின்பமனுபவியாமல் அநாத்மாவான சகலமுமியானெனதெனத் தாங்கிவருந்துகின்றவனுயுளி லென்னசுக மென்பதாம். (எ0)

---

**இவ்வாயுள் துன்பநிமித்தமேயன்றிச் சுகநிமித்த மன்றேனமுடித்து நிறுத்தமுறையான் அவ்விரண்டிலுங் கருத்தா போகத்தாவென்னு மவிமான முண்டாதலா லதன்பின் னகங்காரம்வைத் தஃதையுந் தூஷித்தல்.**

---

சின்னுண்மெய்ப் பயின்றிளமை தீநட்பை விடுமறிஞர்
திறம்போனீங்கு
மன்னுது சுகநிலேம்மை மரணத்தின் பாத்திரமாம்
வாணுள்போல
வின்னுத தில்லேயிடர் மோகத்தால் வாளாவந்
தெங்கும்வாளா
துன்னுகின் றதுபொல்லாப் பொய்யகங்கா ரப்பகையாற்
று ஹுக்கென்கின்றேன்.

(இ-ள்.) இளமை - எவ்வன (வாயுளானது), சின்னுள் - சிலநாள், மெய் - தேகத்தில, பயின்று - பழகி, தீநட்பைவிடும் - துர்ச்சனருறவை விடுகின்ற, அறிஞர் - ஞானிகள், திறம்போல - தன்மையைப்போல, நீங்கும் - பிரியும், சுகம் - இன்பமும், நிலேமை - நிலேயும், மன்னுது - நிலேபெருமல், மரணத்தின்பாத்திரமாம் - நசிப்பதற்கிடமாயிருக்கின்ற, வாணுள் போல - ஆயுளேப்போல, இன்னுதது - தீதானது,இல்லேயாம்-(வேறென்) றில்லேயாம், (இனியகங்காரதூடணம்) இடர்மோகத்தால் - துன்பமான மோகத்தினுல், வாளாவந்து - விருதாவாகவுண்டாய், எங்கும் - எவ்விடங்

களிலும், வாளாதுன்ஞநின்றது - விருதாவாக நிறைந்திருக்கின்றதான, பொல்லா - தீமையாகிய, பொய் - மித்தையான, அகங்காரம் - அகங்கார மென்னும், பகையால் - சத்துருவினுல், துணுக்கென்கின்றேன் - அச்சப் படுகிறேன்—எ-று.

(இ-ள.) எவ்வனவாயுளானது சிலநாள் தேகத்தில்பழகிதுர் ச்சனருறவைவிடுகின்ற ஞானிகள் தன்மையைப்போற் பிரியும். இன்பமும், நிலையும்நிலைபெருமல் நசிப்பதற்கிடமாயிருக்கின்றஆயு ளைப்போலத் தீதானது வேறென்றில்லையாம். (இனியகங்காரதூட ணம்) துன்பமான மோகத்தினுல் விருதாவாகவுண்டாய் எவ்விட ங்களிலும் விருதாவாக நிறைந்திருக்கின்றதான தீமையாகிய மி த்தையான அகங்காரமென்னும் சத்துருவினுல் அச்சப்படுகி றேன்—என்பதாம்.

(இ-ம்.) பயனின்றித் தேகத்தைச்சுமந்து கெடுகின்றவாயுளி லெப் போதுஞ் சுகமில்லையென்றும், அதையபிமானித்த வகங்காரத்தி லென் னசுகமென்றுஞ் சொன்னதாம். (எக)

## மித்தையாவஸ்துக்களை நானென்றபிமானிக்கு மகம்பாவத்தாற் கலங்குகிறேனெனல்.

மனத்துயரு மாபத்தும் வளர்தொழிலு மகங்கரத்தால்
வருமிதைப்போற்
கனத்தபகை யிலதுநெடுங் காலம்வினை யிதுசேர்ந்து
கலங்காநின்றே
னனத்தொடுதண் ணீர்நுகரே னரும்போகம் விளம்புவதென்
னகங்காரஞ்சேர்
தினத்தொழில்க ளோமமுண வனைத்தும்பொய் யகங்காரந்
தீர்தன்மெய்யே.

(இ-ள்.) மனத்துயரும் - மனோதுக்கமும், ஆபத்தும் - ஆபத்துகளும், வளர்தொழிலும் - விருத்தியாகின்ற வியாபாரங்களும், அகங்காரத்தால் வரும் - அகங்காரத்தினுலுண்டாகும், இத்தைப்போல் - இதைப்போல, கனத்தபகையிலது - பெரியசத்துருவேறில்லை, நெடுங்காலம் - வெகுகா லம், வினையிது-சத்துருவானவிவ் (வகங்காரத்தை), சேர்ந்து - அடைந்து, கலங்காநின்றேன் - கலங்குகின்றேன், அனத்தொடுதண்ணீர் - அன்னத்

தோடு சலத்தையும், நுகரேன் - புசியேன், அரும்போகம் - அரியபோகத்தை, விளம்புவதென் - சொல்லுவதென்ன, அகங்காரஞ்சேர் - அகம்பாவஞ்சேர்ந்த, தினத்தொழில்கள்-நித்தியகன்மங்களும், ஓமம்-யாகங்களும், உணவு - புசிப்புகளுமாகிய, அனைத்தும்பொய் - எல்லாமித்தையேயாம், அகங்காரம் - (இவ்) வகங்காரமானது, தீர்தன்மெய் - விடுதலே தத்துவமாம்—எ-று.

**(இ-ள்.) மனோதுக்கமும், ஆபத்துகளும், விருத்தியாகின்ற வியாபாரங்களும், அகங்காரத்தினாலுண்டாகும்; இதைப்போல பெரியசத்துரு வேறில்லை. வெகுகாலம் சத்துருவான விவ்வகங்காரத்தை யடைந்து கலங்குகின்றேன்; அன்னத்தோடு சலத்தையும் புசியேன்; அரியபோகத்தை சொல்லுவதென்ன? அகம்பாவஞ்சேர்ந்த நித்தியகன்மங்களும், யாகங்களும், புசிப்புகளுமாகிய எல்லாமித்தையேயாம். இவ்வகங்காரமானது விடுதலே தத்துவமாம்—என்பதாம்.**

(ப-ு.) உலோகவாசனையாற்செய்யுங்கிரிஷியாதிகளை, தினத்தொழிலென்றும், சாஸ்திரவாசனையாற் செய்யு மியாகாதிகளை, ஓமமென்றும், தேகவாசனையாற் புசிக்கு மறுசுவையுண்டிகளை, உணவென்றுங்கூறினார்.

(இ-ு.) மனோதுக்க முண்டாவதற்குக் காரணமாகிய நித்தியகன்ம முதலியவற்றி லகம்பாவஞ்செய்யு மித்தையான வகங்காரத்தி லென்ன சுகமென்பதாம். (எஉ)

## அகம்பாவ நீங்கும்வகை வினாவுதல்.

**அகங்கார முகில்படர வாசைமலே மல்லிகையவ்
வளவிற்றுகு
மிகுந்துயரிவ் வகங்காரத் தொழில்பிரிந்தும் பேதைமையின்
மிகவுநொந்தேன்
செகந்தனிலா பத்திடமாய்த் திறந்துறப்ப தாயுள்ளாய்த்
தியக்கமாயு
முகந்தவிசா ரமுமுணர்வு மிலாவகங்கா ரம்போமா
றுபதேசிப்பாய்**

(இ-ள்.) அகங்காரம் - அகங்காரமாகிய, முகில்படர-மேக (மெம்மட்) டிருக்கின்றதோ,ஆசை - இச்சையென்னும, மலேமல்லிகை - குடசமஞ்சரி, அவ்வளவிற்றுகும் - அம்மட்டும் விருத்தியடையும், மிகுந்துயர் - மிகுந்த

துன்பமாகிய, இவ்வகங்காரத்தொழில் - இந்தவகங்காரத்தினது செயலை, பிரிந்தும்விட்டும், பேதைமயின் - (என்னை) யறியாமையினால், மிகவுநொந்தேன் - மிகவும்வருந்தினேன், சகந்தனில - உலகத்தில், ஆபத்திடமாய்- ஆபத்துக்குஸ்தானமாயும்திறந்துறப்பதாய்-நிலையில்லாததாயும், உள்ளாய்- மனதின்கண்ணிருப்பதாயும், தியக்கமாயும் - உன்மத்தமாயும, உகந்த-முடிந்த, விசாரமும் - விசாரணையும், உணர்வுமிலா - அறிவுமில்லாத, அகங்காரம் - அகங்கார்மானது, போமாறு -தீரும்படி, உபதேசிப்பாய் - அனுக்கிரகிப்பாய்—எ-று.

(இ-ள்.) அகங்காரமாகிய மேகமெம்மட்டிருக்கின்றதோ! அம்மட்டும் இச்சையென்னும் குடசமஞ்சரி விருத்தியடையும், மிகுந்த துன்பமாகிய இவ்வகங்காரத்தினது செயலைவிட்டும் என்னை யறியாமையினால் மிகவும்வருந்தினேன், உலகத்தில்ஆபத்துக்கு ஸ்தானமாயும், நிலையில்லாததாயும், மனதின்கண்ணிருப்பதாயும், உன்மத்தமாயும், முடிந்த விசாரணையும்அறிவுமில்லாத அகங்கார மானது தீரும்படி அனுக்கிரகிப்பாய்—என்பதாம்.

(ப-ம்.) அறிவுள்ள பரமாங்காரமிருத்தலின், உணர்வுமிலா வகங்காரம்போமாறென்றார்.

(இ-ம்.) ஆசைக்குப்பீசமாயும், ஆபத்துக்கு ஸ்தானமாயும், மூடசிரேட்டமாயுமிருக்கின்ற வகங்காரத்தி லென்னசுகமென முடித்ததாம், (எரு)

---

அகங்காரத்தைச்சொல்லி நிறுத்தமுறையான் அவ்வகங்காரவசத்தாற் சங்கற்ப விகற்பாத்மகமான மனமுண்டாதலா லதன் பின் மனதைவைத் தூஷைதயுந் தூஷித்தல்.

---

காமமுதல் வினைக்குடைந்து கற்றவர்நற் றொழிலகலும்
　　கடுங்காற்றுற்ற
மாமயிலின் பீலிபோன் ரதிதூர நகர்நாய்போல்
　　வாளாசுற்று
மாமதுகிஞ் சிலுங்கிடையா தருநிதிபெற் றூலுமகிழ்ந்
　　தமைந்துட்கொள்ளாச்
சேமமுறு கரண்டகநீர் தரியாபோற் றிரியுமனத்
　　தீயதன்றே.

(இ-ள்.) காமமுதல் வினைக்குடைந்து - இராகாதி தோடங்களுக்குச் சிதைந்து, கடுங்காற்றுற்ற - பெருங்காற்றிலகப்பட்ட, மாமயிலின் - பெரியமஞ்ஞையின், பீலிபோன்று - இறகைப்போல, கற்றவர்நற்றெழிலகலும் - சாதுசங்கத்தினின்றுநீங்கிச் (சஞ்சலிக்கும்), நகர்நாய்போல் - ஊர்ஞாளியைப்போல, அதிதூரம் - நெடுந்தூரம், வாளா - (மனது) விருதாவாக, சுற்றும் - (விடயங்களிற்) சுழலும், ஆமதுகிஞ்சிலுங்கிடையாது - பயனுனதற்பமுஞ் சித்தியாது, சேமமுறுகரண்டகம் - காப்புற்ற பூங்குடலையானது, நீர் - சலத்தை, தரியாபோல் - (தன்னிற்) றரியாததுபோல,அருவதிபெற்றாலும் - அரியதிரவியங்கிடைத்தாலும், மகிழ்ந்தமைந்துட்கொள்ளா - களிப்புற்றுப்பொருந்த வுட்கொள்ளாமல், மனத்தீயது - தீயமனமானது, திரியும் - சுழலும்—எ-று.

(இ-கை.) இராகாதி தோடங்களுக்குச் சிதைந்து பெருங்காற்றி லகப்பட்ட பெரிய மஞ்ஞையின் இறகைப்போல சாதுசங்கத்தினின்று நீங்கிச் சஞ்சலிக்கும் ஊர்ஞாளியைப்போல நெடுந்தூரம் மனது விருதாவாக விடயங்களிற்சுழலும்; பயனுன தற்பமுஞ்சித்தியாது. காப்புற்ற பூங்குடலையானது சலத்தை தன்னிற்றரியாததுபோல அரியதிரவியங் கிடைத்தாலும் களிப்புற்றுப்பொருந்த வுட்கொள்ளாமல் தீயமனமானது சுழலும்—என்பதாம்.

(இ-ம்.) பிரயோசன மொன்றுமில்லாமல் வீணுகச்சுழல்கின்ற மனதினுலென்னசுக முண்டாமென்பதாம். (எச)

மனமிச்சாவசத்திற்சென் றென்னை வருந்துகின்றதெனல்.

காதலெனு மனைவியின்பின் செல்கின்ற மனமென்னுங் கடியஞாளி
பேதைமைமே வியவென்னைப் பிணந்தின்னு மாறுபோற் பிடுங்கித்தின்னு
மோதுபெருங் காற்றினுன் முறிந்தெழுந்த துரும்புபோன் மோகமெய்த
வாதைமனம் பெரும்பாழின் மிகவீழ வதிதூர மலங்கத்தள்ளும்.

(இ-ள்.) காதலெனுமனைவியின் - ஆசையென்னுமில்லாளின், பின்செல்கின்ற - பின்றெடர்கின்ற, மனமென்னும் - மனமென்கின்ற, கடிய

ஞாளி - கோரமுள்ளநாயானது, பிணந்தின்னுமாறுபோல் - பிணத்தைப் பிடுங்கித்தின்னுந் தன்மையைப்போல, பேதைமைமேவியவென்னை-அறிவின்மைபொருந்தியவென்னை, பிடுங்கித்தின்னும் - பிடுங்கிப்புசிக்கும், மோதுபெருங் காற்றினல் - அடிக்கின்றசண்டமாருதத்தினல், முறிந்தெழுந்ததுறும்புபோல் - சின்னபின்னமாய்முறிபட்டெழுந்த திரணத்தைப் போல, மோகம் - மயக்கமும், மாதை - துன்பமும், எய்த - அடையும்பொருட்டு, மனம் - மனமானது, பெரும்பாழின்மிகவீழ - மகாசூனியத்தில் விழும்படி, அதிதூரமலங்கத்தள்ளும் - அதிதூரத்தின்மலங்கும்படி (யென்னைத்) தள்ளிவிடும்—எ-று.

(இ-ள.) ஆசையென்னு மில்லாளின்பின் ெறுடர்கின்ற மனமென்கிற கோரமுள்ள நாயானது பிணத்தைப் பிடுங்கித்தின்னுந் தன்மையைப்போல அறிவின்மைபொருந்திய வென்னை பிடுங்கிப் புசிக்கும். அடிக்கின்ற சண்டமாருதத்தினல் சின்னபின்னமாய் முறிபட்டெழுந்த திரணத்தைப்போலமயக்கமும், துன்பமுமடையும்பொருட்டு மனமானது மகாசூனியத்தில் விழும்படி அதிதூரத்தின் மலங்கும்படி என்னைத் தள்ளிவிடும்—என்பதாம்

(இ-°.) மோகத்தைவுண்டாக்கி வீணுகவென்னை வருத்துகின்ற விச்சாவசமானமனதினு லென்னசுக மிருக்குமென்பதாம். இஃது உபமானகற்பிதவிபஸ்தரூபக வலங்காரம். (எ௫)

மித்தையானமன மேன்னைப் பலகன்மத்திற்றள்ளி வருத்துகின்றதேனல்.

வேரறுபொய் யாய்ச்செறிந்த வடிவாகிவிசாரத்தால்
விரோதமாகுங்
கோரமனம் பேய்பிடித்த சிறுவரைப்போற் பலதொழிலிற்
கூட்டாநிற்கும்
பாரகன்று பாதலம்போம் பாதலத்தி னின்றகன்று
பாரின்மீளுஞ்
சோரமனங் கிணற்றுமரம் பழங்கயிற்று லெடுப்பதுபோற்
ெறுழிலிற்றள்ளும்.

(இ-ள்.) வேரறு - காரணமில்லாத,பொய்யாய்ச்செறிந்த- மித்தையாகநிறைந்த, வடிவாகி - உருவமாய்,விசாரத்தால் - விசாரணையால்,விரோத

மாகுங்கோரமனம் - வேறுபடாநின்ற கொடியமனமானது, பேய்பித்த - பிசாசம்பற்றிய, சிறுவரைப்போல - பாலரைப்போல, பலதொழிலிற்கூட்டாநிற்கும் - (என்னை) நானாவிதமான விருத்திகளிற் கூட்டுவிக்கும், பாரகன்று - பூமியினின்றுநீங்கி, பாதலம்போம் - பாதாளத்துக்குச்செல்லும், பாதலத்தினின்றகன்று - பாதாளத்தினின்றுநீங்கி, பாரின்மீளும் - பூமிக்குவரும், சோரமனம் - கள்ளமனமானது, கிணற்றுமரம்-கூபத்தின்கட்(கிடக்கின்ற)மரத்தை, பழங்கயிற்றால்-நைந்தகயிற்றால், எடுப்பதுபோல்-(கட்டி) யெடுப்பதுபோல, தொழிலிற்றள்ளும்-(என்னையுயர்வுதாழ்வான) விருத்திகளிற்றள்ளும்—எ-று.

(இ-ரை.) காரணமில்லாத மித்தையாக நிறைந்த உருவமாய் விசாரணையால் வேறுபடாநின்ற கொடிய மனமானது பிசாசம் பற்றிய பாலரைப்போல என்னை நானாவிதமான விருத்திகளிற் கூட்டுவிக்கும். பூமியினின்றுநீங்கி பாதாளத்துக்குச் செல்லும், பாதாளத்தினின்றுநீங்கி பூமிக்குவரும், கள்ளமனமானது கூபத்தின்கட்கிடக்கின்ற மரத்தை நைந்தகயிற்றால் கட்டி எடுப்பதுபோல என்னை யுயர்வுதாழ்வான விருத்திகளிற் றள்ளும்—என்பதாம்.

(இ-ம்.) விசாரமின்றிய விடத்துண்டாய்த் தான் சுழல்வதுமன்றி யென்னைப் பவத்திற்சுழற்றுகின்ற மனதினாற் சுகமென்னவென்பதாம்.()

### வன்மையுள்ளமனதை நசிப்பிக்கவேண்டுமெனல்.

கடுமனவன் பேய்கனலிற் கொடிதாகு மலைகளினுங்
 கடத்தற்கொண்ணு
நெடுவயிரத் தினும்வலிது கடல்பருகி மேருவினை
 நேரேபேர்த்துச்
சுடுகனலை விழுங்குகினு நிறுத்தரிது புனல்முழுதுந்
 தோன்றுமூலங்
கெடுமூலகி துண்டெனிலுண் டிலதாகி லிலதிதனைக்
 கெடுத்தல்வேண்டும்.

(இ-ள்.) கடுமனவன்பேய் - விடம்போன்ற மனமென்னும் வலியபேயானது, கனலிற்கொடிதாகும் - அக்கினியிலுங்கொடுமையாம், மலைகளினுங்கடத்தற்கொண்ணு-வரைகளைக்காட்டிலுங் கடத்தற்கரியதாம், நெடுவயிரத்தினும்வலிது - நீண்டவச்சிரத்திலும் வன்மையாம், கடல்பருகி -

வாரியைக்குடித்தாலுங் (குடிக்கலாம்), மேருவினை நேரேபேர்த்து - மகாமேருவை யடியோடே பிடுங்கினும் (பிடுங்கலாம்,) சுடுகனலை - சுடாநின்றவக்கினியை, விழுங்குகினும் - விழுங்கினலும் (விழுங்கலாம்), நிறுத்தரிது-(இம்மனதை) நிறுத்தக்கூடாது, புலன்முழுதுந்தோன்றுமூலம்-விடயங்களனைத்து முண்டாவதற்குக்காரணமாம், கெடுமுலகு - நசிக்காநின்ற சகமானது, ஈதுண்டெனிலுண்டு - இம்மனதுண்டானலுண்டு, இலதாகிலிலது - இல்லையானலில்லையாம், இதனைக்கெடுத்தல்வேண்டும் - இம்மனதை நசிப்பிக்கவேண்டும்—எ-று.

(இ-ள்.) விடம்போன்ற மனமென்னும் வலியபேயானது அக்கினியிலுங்கொடுமையாம். வரைகளைக்காட்டிலுங் கடத்தற்கரியதாம். நீண்டவச்சிரத்திலும் வன்மையாம். வாரியைக் குடித்தாலுங் குடிக்கலாம், மகாமேருவை யடியோடே பி[illegible]ம் பிடுங்கலாம், சுடாநின்ற வக்கினியை விழுங்கினலும் விழுங்கலாம், இம்மனதை நிறுத்தக்கூடாது விடயங்களனைத்து முண்டாவதற்குக் காரணமாம். நசிக்காநின்ற சகமானது இம்மனதுண்டானலுண்டு; இல்லையானலில்லையாம். இம்மனதை நசிப்பிக்கவேண்டும்.

(பா-ம்.) அமுதமயமான மனதிருத்தலின் - கடுமனவன்பேயென்றார்.

(இ-ம்.) மனது, அநர்த்தரூபமான சகத்துக்குக்காரணமாதலா லதையெவ்விதத்திலுங் கெடுக்காவிடிற் சுகமில்லையென்பதாம். (௭௭)

மனோதூடணத்தைமுடித்து நிறுத்தமுறையான்
அஃது நிரந்தரம் போகத்தை யிச்சிப்பதனு லதன்பின்
னுசையைவைத் ததனையுந் தூஷித்தல்.

வரையிலெழு வனம்போல மகிழ்ச்சியிட ரிவையனைத்து
மனத்திற்றோன்றும்
புரையில்விவே கத்தின்மனம் பொன்றிலவை பொன்றுமெனப்
புந்திசெய்தேன்
கரைதலறு மோகமெனுங் காரிருளிற் றெழிற்கடங்காக்
காதலல்லா
லுரைதருசா மாதிகளா மூலுகநிரை யுணர்வெனும்விண்
ணுலாவுமன்றே.

(இ-ள்.) வரையிலெழுவனம்போல் - மலையிலுண்டான காடுபோல, மகிழ்ச்சியிடர் - சுகதுக்கங்களாகிய, இவையனைத்தும்-இவையாவும், மனத்திற்றோன்றும் - மனதிலுண்டாகும், புரையில்விவேகத்தின்-குற்றமற்ற விவேகத்தினால், மனம்பொன்றில்-மனநசித்தால், அவைபொன்றுமென-அச்சுகதுக்கங்கெடுமென்று, புந்திசெய்தேன் - அறிந்தேன், (இனியாசாதூடணம்) கரைதலறுமோகமெனும்-கடினமானமோகமென்கின்ற, காரிருளின் - கறுத்தவிருட்டினையுடைய, தொழிற்கடங்கா - செயலிலமைதிபிறவாத, காதலல்லால் - ஆசையென்னுமிராத்திரியில், உணர்வெனும்விண் - ஆத்மாகாயத்தில், உரைதருகாமாதிகளாம் - சொல்லப்பட்ட காமக்குரோதமென்கின்ற, உலூகநிரை - கோட்டான்கூட்டமானது, உலாவும் - விளையாடும்—எ-று.

(இ-ரை.) மலையிலுண்டான காடுபோல சுகதுக்கங்களாகிய இவையாவும் மனதிலுண்டாகும் குற்றமற்ற விவேகத்தினால் மனநசித்தால் அச்சுகதுக்கங் கெடுமென்று அறிந்தேன். (இனியாசாதூடணம்) கடினமானமோகமென்கின்ற, கறுத்தவிருட்டினையுடைய செயலிலமைதிபிறவாத ஆசையென்னு மிராத்திரியில் ஆத்மாகாயத்தில் சொல்லப்பட்ட காமக்குரோதமென்கின்ற கோட்டான் கூட்டமானது விளையாடும்—என்பதாம்.

(இ-ம்.) சுகதுக்கத்துக்குப் பீசமான மனதை விவேகஞானத்தாற்கெ[illegible] சுகமேதென்பதாம். (எஅ)

## ஆசையே யக்கினியாக வருத்துகின்றதெனல்.

ஆதரித்த நற்குணங்க ளாகுவினாற் றந்திரிபோ
லாசையாலே
சேதமுறுஞ் சொருபநிலை செறிதரவல் லமையில்லாச்
சிந்தையேங்கண்
மீதுவலை யுறுபுட்போன் மெலியவரு மாசைத்தீ
வெதுப்பநொந்தேன்
கோதிலமு திற்குளித்துங் குளிராதென் றென்மனத்திற்
குறிக்கின்றேனால்.

(இ-ள்.) ஆதரித்த நற்குணங்கள் - (என்னால்) விரும்பப்பட்ட சற்குணங்கள், ஆகுவினாற்றந்திரிபோல்-எலியினால் யாழ்நரம்புகெடுவதுபோல, ஆசையால் - இராகத்தினால், சேதமுறும் - கெடும், சொருபநிலைசெறிதர-

ஆத்மஞானத்தையுடைய, வல்லமையில்லா - பலமில்லாத, சிந்தையேங்கள் - சித்தத்தையுடையநாங்கள், மீதுவலேயுறுபுட்போல் - மேலுள்ளவலேயிலகப்பட்ட பறவையைப்போல, மெலியவரும்-மெலியும்படியுண்டாகும், ஆசைத்தீ - அவாவக்கினியானது, வெதுப்ப - எரிக்க, நொந்தேன் - வருந்தினேன், கோதிலமுதிற்குளித்தும் - குற்றமற்ற வமிர்தத்தின்முழுகினுலும், குளிராதென்று - (என்னறிவு) சீதளமாகாதென்று, என்மனத்திற குறிக்கின்றேன் - என்மனதிலெண்ணுகிறேன்—எ-று.

(இ-ஶா.) என்னுல் விரும்பப்பட்ட சற்குணங்கள் எலியினுல் யாழ்நரம்பு கெடுவதுபோல இராகத்தினுல்கெடும். ஆத்மஞானத்தையடைய பலமில்லாச் சித்தத்தையுடைய நாங்கள் மேலுள்ள வலேயிலகப்பட்ட பறவையைப்போல மெலியும்படி யுண்டாகும் அவாவக்கினியானது எரிக்கவருந்தினேன். குற்றமற்ற வமிர்தத்தின் முழுகினுலும் என்னறிவு சீதளமாகாதென்று என்மனதிலெண்ணுகிறேன்—என்பதாம்

(இ-ப்.) இவ்விசசை விஸ்ராந்தியைக் கொடாதென்பதாம். (எக)

## ஆசையைக் கிழக்கணிகையாகத் தூஷித்தல்.

பின்னுறுபக் கத்திருள்போற் பேராண்மைத் தீரரையும்
பீதிசெய்யு
நன்னயனங் குருடாக்கு முபசாந்தத் தோர்தமையு
நடுக்கஞ்செய்யுங்
கின்னமுறு காதலெனுங் கிழமடந்தை யொருபொருளுங்
கிட்டாதேனு
மின்னிதிய நயந்தெவர்க்கும் பின்றொடரு மனோரதமு
மெய்தாதாகும்.

(இ-ள்.) பின்னுறுபக்கத்திருள்போல் - அபரபக்ஷத் தமாவாசையிருளேப்போல, பேராண்மைத்தீரரையும் - மகாவலிமையுள்ள தீரர்களேயும், பீதிசெய்யும் - அச்சஞ்செய்விக்கும், நன்னயனம் - நல்லறிவாகியகண்ணே, குருடாக்கும் - கெடுக்கும், உபசாந்தத்தோர்தமையும் - உபசாந்தமுடைய சத்துக்களேயும், நடுக்கஞ்செயயும் - நடுங்குவிக்கும், கின்னமுறும் - ஆந்ல்த வடிவமான, காதலெனும் - ஆசையென்கின்ற, கிழமடந்தை - கிழத்தாசியானவள், ஒருபொருளும் - ஓர்வஸ்துவும், கிட்டாதேனும் - (தனக்குக்)

கிடையாததாயினும், இன்னிதியநயந்து - இனியதிரவியத்தைவிரும்பி, எவர்க்கும்பின்ளுெடரும் - யாவர்க்கும் பின்செல்லுவள், மனோரதமு மெய்தாதாகும் - தனதிஷ்டமுமடையாததாம்—எ-று.

**(இ-ள.) அபரபக்ஷத் தமாவாசை யிருளைப்போல மகாவலிமையுள்ள தீரர்களையும், அச்சஞ்செய்விக்கும் ; நல்லறிவாகிய கண்ணைக்கொடுக்கும் ; உபசாந்தமுடைய சத்துக்களையும் நடுங்குவிக்கும் ; ஆந்தைவடிவமான ஆசையென்கின்ற கிழத்தாசியானவள் ஓர் வஸ்துவும் தனக்குக் கிடையாததாயினும், இனியதிரவியத்தை விரும்பி யாவர்க்கும் பின்செல்லுவள். தனதிஷ்டமு மடையாததாம்—என்பதாம்.**

(இ-ம்.) யாதிடத்திலுந் தன்மனோரத நிறைவேறும லவரவர் நற்குணங்களை மாறுபடுத்தி வீணுகவருத்துகின்ற வாசையினு லென்கஎசுக மென்பதாம். (அ௦)

---

**ஆசையோன்றிலு மமைதிபிற வாமல் வருத்துகின்றதேனல்.**

---

முதிர்பருவத் தளர்ச்சியான் முடியாத நடனகதி
 முயல்வாளாகி
மதிமகிழ்ச்சி யறநடிக்கு மாடுங் கூத் தியைப்போல
 வருத்துமாசை
யெதிர்கிடைத்தற் கரும்பொருளிற் சென்றெய்து மமைந்தாலு
 மின்பந்தேடுங்
கதியறவோ ரிடத்துறைபா துலேகின்ற வானரம்போற்
 காதருனே.

(இ-ள்.) முதிர்பருவத்தளர்ச்சியால் - வார்த்திகபருவத்திலுண்டாகுந் தளர்வினுல், முடியாதநடனகதி - (தன்னுற்) சத்தியில்லாதநடனத்தை, முயல்வாளாகி - முயற்சிப்பவளாய், மதிமகிழ்ச்சியற - மனக்களிப்பில்லாமல், நடிக்கும்-நடனஞ்செய்கின்ற, ஆடுங்கூத்தியைப்போல -'நாடகக்கணிகையைப்போல, ஆசைவருத்தும் - (என்னை) யிச்சைவருத்துகின்றது, எதிர்கிடைத்தற்கு - நேரேபெறுதற்கு, அரும்பொருளில் - கூடாதவஸ்துக்களை, சென்றெய்தும் - அடையப்போம், அமைந்தாலும் - கிடைத்தாலும், இன்பந்தேடும் - (பின்னுஞ்) சுகத்தையே நாடும், கதியற - திரமில்லாமல், காதருன் - ஆசையானது, வானரம்போல்-குரங்கைப்போல, ஓரிடத்துறையாதுலேகின்றது - ஓரிடத்திலுந் தங்காமலலேகின்றது—எ-று.

(இ-ள.) வார்த்திகப்பருவத்தி லுண்டாகுந் தளர்வினால், தன்னாற் சத்தியில்லாத நடனத்தை யுபற்சிப்பவளாய் மனங்களிப் பில்லாமல் நடனஞ்செய்கின்ற நாடகக்கணிகையைப்போலஎன்னை இச்சை வருத்துகின்றது. நேரேபெறுதற்குக் கூடாதவஸ்துக்களை அடையப்போம். கிடைத்தாலும் பின்னுஞ் சுகத்தையேநாடும். ஆசையாலது திடமில்லாமல் குரங்கைப்போல ஓரிடத்திலுந் தங் காமலலைகின்றது—என்பதாம்.

(இ-பு.) முடியாத காரியத்தின்முயன் றொன்றிலுமமைதி பிறவாம ற்சுழன்று வருந்துகின்ற வாசையா லென்னசுகமென்பதாம். (அக)

---

## ஆசாவிபாதிக் கவுஷதங்கூறல்.

காவின்மதர் வண்டென்ன பாதலம்விண் டிசையனைத்துங் கணத்துலாவும்
வாவிவளர் மயலொன்றே வருத்தமனைத் தினும்பெரிய வருத்தநல்கு
மேவுமர ணுறைபவர்க்குந் துயர்செய்யு மாசையெனும் விசேிகைக்குத்
தேவர்புகழ் மந்திரமாஞ் சிந்தையற லுலகிடர்போஞ் சிந்தையற்றால்.

(இ-ள்.) காவில் - பூங்காவில், மதர் - (மதுவுண்டு) களித்த, வண்டென்ன - அளியைப்போல, பாதலம்-பாதாளமும், விண் - ஆகாயமும், திசையனைத்தும் - எட்டுத்திக்கு (மாகியவிவை) யனைத்திலும், கணத்துலாவு - க்ஷணத்திற்சுற்றிக்கொண்டுவரும், வாவிவளர் - தாவிவளராநின்ற, மயலொன்றே - ஓராசையே, வருத்தமனைத்தினும் - துன்பங்களெல்லாவற் றினும், பெரிய - மகத்தான, வருத்தநல்கும் - (பிறவித்) துன்பத்தைக் கொடுக்கும்,மேவுமரண்-விரும்பப்பட்டகோட்டைக்குள், உறைபவர்க்கும்- வசிப்பவர்களுக்கும், துயர்செய்யும் - துக்கத்தைச்செய்யும், ஆசையெனும்- அவாவென்கின்ற, விசேிகைக்கு - விசேிகாவியாதிக்கு, சிந்தையறல் - சிந்தாத்தியாகமே, தேவர்புகழ் - அமரர்கள்துதிக்கும், மந்திரமாம் - மந்தி ராவுஷதமாம், சிந்தையற்றால் - (அச்) சிந்தாத்தியாகம்வந்தால், உலகிடர் போம் - சகத்துன்பநீங்கும்—எ-று.

(இ-ஊ.) பூங்காவில் மதுவுண்டுகளித்த அளியைப்போல பாதாளமும், ஆகாயமும், எட்டுத்திக்குமாகிய விவையனைத்தி

லும் க்ஷணத்திற்சுற்றிக்கொண்டுவரும் தாவிவளராநின்ற ஓராசையே துன்பங்களெல்லாவற்றினும் மகத்தான பிறவித்துன்பத்தைக் கொடுக்கும். விரும்பப்பட்ட கோட்டைக்குள் வசிப்பவர்களுக்கும் துக்கத்தைச்செய்யும். அவாவென்கின்ற விடேசிகா வியாதிக்கு சிந்தாத்தியாகமே அமர்கள்துதிக்கும் மந்திராவுஷதமாம். அச்சிந்தாத்தியாகம்வந்தால் சகத்துன்பநீங்கும்—என்பதாம்.

(ப-ம்.) சுகத்தைக்கொடுக்கு மோக்ஷாபேக்ஷையிருத்தலின், துயர்செய்யுமாசையெனும் விடேசியென்றார்.

(இ-ம்.) தசதிசையிலுஞ் சுழன்று வருத்தத்தைக் கொடுக்கின்ற வாசையைச் சிந்தாத்தியாகத்தாற் கெடுக்காவிடி லென்னசுக மென்பதாம். ()

---

## ஆசை யாவரையுங் கெடுக்குமெனல்.

பைந்தொடியா ராசைநோய் கெம்பீர மனிதரையும்
 பதுமந்தன்னை
முந்திரவிக் கதிர்போலு மிளிர்விக்குங் கனவிடியின்
 முனைகூர்வாளும்
வெந்தவிருப் புப்பொறியு மெனக்கொடிய மனவேட்கை
 மேருவொத்தோர்
சுந்தரனா னியர்தீரர் சூரரையெல் லாமிமைப்பிற்
 றுரும்புசெய்யும்.

(இ-ள்.) ஆசை - இச்சையானது, பைந்தொடியார்-பசுமையானசொன்னவளையலையணிந்தமாதரும், நோய் - வியாதியும் (போலும்), பதுமந்தன்னை-தாமரைமுகையை, முந்திரவி - முதன்மையான சூரியனது, கதிர்போலும் - கிரண (மலர்த்துவது) போலும், கெம்பீரம் - ஆழ்ந்தகருத்தையுடைய, மனிதரையும் - புருடர்களையும், மிளிர்விக்கும் - (பகிர்முகமாய்) வெளிப்படுத்தும், கனவிடியின்முனை - வச்சிரத்தின் முனையையும், கூர் - (முனையிற்) கூருள்ள, வாளும் - வாளாயுதத்தையும், வெந்த - (அக்கினியினால்) வெந்த, இருப்புப்பொறியுமென - அயப்பொறியையும்போல, கொடிய - கொடுமையான, மனவேட்கை - மனோராகமானது, மேருவொத்தோர் - மகாமேருவுக்கொப்பான (வுயர்வுள்ள) வர்களையும், சூரரை - வீரர்களையும், எல்லாம் - மற்றியாவரையும், இமைப்பில் - நொடியில், துரும்புசெய்யும் - திரணமாக்கும்—எ-று.

(இ-ள்.) இச்சையானது பசுமையான சொன்ன வளையலைய ணிந்தமாதரும், வியாதியும்போலும், தாமரைமுகையைமுதன்மை யானசூரியனது கிரணமலர்த்துவதுபோலும், ஆழ்ந்த கருத்தையு டையபுருடர்களையும் பகிர்முகமாய்வெளிப்படுத்தும் வச்சிரத்தின் முனையையும், முனையிற்கூருள்ளவாளாயுதத்தையும் அக்கினியினால் வெந்த அயப்பொறியையும்போல, கொடுமையான மனோராகமா னது மகாமேருவுக்கொப்பான வுயர்வுள்ளவர்களையும், அழகுள்ள ஞானவான்களையும், திடமுள்ளவர்களையும், வீரர்களையும், மற்றி யாவரையும் நொடியில் திரணமாக்கும்—என்பதாம்.

(ப-ம்.) இச்சையானது, அந்தர்முகியையும் பகிர்முகியாக்குமென்பார். கெம்பீரமனிதரையு மிளிர்விக்குமென்றும், அதற்கு மிஞ்சினவலிமை யில் லையென்பார், எல்லாமிமைப்பிற் றுரும்புசெய்யுமென்றுங் கூறினர்.

(இ-ம்.) யாதிலும் வல்லமையுள்ள விச்சாத்தியாகம் வாராவிடி லெ ன்னசுக முண்டாமென்பதாம். (அரு)

ஆசாதூடணமுடித்து நிறுத்தமுறையான் இப்போக மனுபவித்தந்த ஸ்தானந் தேகமர்தலா லதனை யதன்பின்வைத் தஃதையுந் தூஷித்தல்.

ஈரித்த குடனரம்பாற் செறிந்துபல விகாரியா
யிரங்கவாடிப்
பூரித்த வுடல்பிறப்பிற் பொலிந்தாலுந் துன்பத்தின்
பொருட்டேயாகும்
பாரித்த சிற்றின்பஞ் சிறுதுன்ப மனுபவிக்கும்
பகர்ந்தமெய்போ
னேரிட்ட குணமிலதுந் துயருளது நீசமுமா
நிலைவேறுண்டோ.

(இ-ள்.) ஈரித்தகுடல் - குளிர்ந்தகுடலினாலும், நரம்பால் - நரம்பினா லும், செறிந்து-நெருக்குற்று, பலவிகாரியாய்-சட்பாவவிகாரமுடையதாய், இரங்க-இரங்கும்படி, வாடி- (ஒருபோது) வாடியும், பூரித்த - (ஒருபோது) பருத்துமிருக்கின்ற, உடல் - தேகமானது, பிறப்பில் - (சம்சார) வுற்பத் தியில், பொலிந்தாலும் - பிரகாசித்தாலும், துன்பத்தின்பொருட்டேயா

கும் - துக்கநிமித்தமேயாம், பாரித்த - அதிகரித்த, சிறு - அற்ப (விஷயத்தால்) , இன்பம் - சுகத்தையும், சிறு - அற்ப (விஷயத்தால்) , துன்பம்- துக்கத்தையும், அனுபவிக்கும் - அனுபவியாநின்ற, பகர்ந்தமெய்போல் - சொல்லியவித் தேகத்தைப்போல, நேரிட்ட-நேரான, குணமிலதும்-குணமில்லாததும், துயருளதும் - துக்கமுள்ளதும், நீசமுமாம்-ஈனமுமாயிருக்கின்ற, நிலைவேறுண்டோ - தன்மையது வே (றென்) றுண்டோ—எ-று.

(இ-ள்.) குளிர்ந்தகுடலினாலும், நரம்பினாலும், நெருக்குற்று சட்பாவவிகாரமுடையதாய் இரங்கும்படி ஒருபோது வாடியும் ஒருபோது பருத்துமிருக்கின்ற தேகமானது சம்சாரவுற்பத்தியில் பிரகாசித்தாலும் துக்கநிமித்தமேயாம். அதிகரித்த அற்ப விஷயத்தால் சுகத்தையும், அற்பவிஷயத்தால் துக்கத்தையும், அனுபவியாநின்ற சொல்லிய வித்தேகத்தைப்போல நேரானகுணமில்லாததும், துக்கமுள்ளதும், ஈனமுமாயிருக்கின்ற தன்மையது வேறொன்றுண்டோ—என்பதாம்.

(இ-ம்.) மாமிசபிண்டமாகிய, சரீரமான தின்பம்போல விளங்கினாலுந்துன்பமேயாதலா லதிலென்னசுக முண்டாமென்பதாம். (அச)

## (இதுவுமது.)

அற்பமதாஞ் சுகாசுகத்தி லழுந்துமுட னிலையெனினு
மழிவென்றாலு
நற்பலமென் னகங்கரனுக் ககமாகிப் பொறிபசுக்க
ணாலோடாறுங்
கற்பனைசெய் மனத்தொழும்பு மாசைமனை வியும்வாயாங்
கடையுமாங்கே
பற்பலபல் லென்புகளாந் தோரணமு நாக்குரங்கும்
பயின்றுதோன்றும்.

(இ-ள்.) அகங்கரனுக்கு - அகங்காரனென்னுங் (கிரகஸ்த) னுக்கு, அகமாகி - வீடாய், பொறி - இந்திரியங்களாகிய, பசுக்கள் - துஷ்டபசுக்கள், நாலோடாறும் - பத்தும், கற்பனைசெய் - சங்கற்பஞ்செய்யாநின்ற, மனத்தொழும்பும் - மனமாகியவடிமையும், ஆசை - இச்சையென்கின்ற, மனைவியும்-இல்லாளும், வாயாங்கடையும்-வாயென்னும்வாயிலும், ஆங்கு- அவ்விடத்திற் (கட்டும்) , பற்பல - பலபலவான, பல்லென்புகளாம் - தந்தங்களென்கிற, தோரணமும் - தோரணமும், நாக்குரங்கும் - நாவாகிய வானரமும், பயின்று - பொருந்திதோன்றும் - தோன்றுகின்ற, அற்பம்-

அற்ப (விஷய) த்தால், சுகாசுகத்தில் - இன்பதுன்பங்களில், அழுந்துமுடல் - அமிழாநின்ற தேகமானது, நிலையெனினும் - நித்தியமானாலும், அழிவென்றாலும் - அநித்தியமானாலும், நற்பலமென்-நல்லபயன்யாது-எ.

(இ-ள்.) அகங்காரனென்றுங் கிரகஸ்தனுக்கு வீடாய் இந்திரியங்களாகிய துஷ்டபசுக்கள் பத்தும் சங்கற்பஞ்செய்யாநின்ற மனமாகிய வடிமையும், இச்சையென்கின்ற இல்லாளும், வாயென்னும் வாயிலும், அவ்விடத்திற் கட்டும் பலபலவான தந்தங்களென்கிற தோரணமும், நாவாகிய வானரமும், பொருந்தி தோன்றுகின்ற அற்பவிஷயத்தால் இன்பதுன்பங்களி லமிழாநின்ற தேகமானது நித்தியமானாலும், அநித்தியமானாலும் நல்லபயன்யாது.

(ப-ம்.) ஞானமுண்டான தேகமிருத்தலின், அகங்காரனுக்ககமாகிய உடலினற்பய மென்னென்றார்.

(இ-ம்.) அகங்காரத்துக் கிடமாகிய வித்தேகமிருந்ததினாலும், போனதினாலு மென்னசுக மென்பதாம். (அரு)

## (இதுவுமது.)

நிதியுமர சுஞ்செயலு மிவ்வுடம்பும் வேண்டுவன
நிற்கினன்றே
விதியில்வரு காலனாற் சிலநாளி லிவையெலாம்
வீந்துபோகு
முதிரமொடு தசையுடைத்தா யுடைவதியல் பாய்த்தாழ்ந்தோ
ருயர்ந்தோரொத்தே
யதிகசரா மரணமுறுந் தரமறியா திவ்வுடலி
லழகென்கொல்லோ.

(இ-ள்.) நிதியும் - செல்வமும், அரசும் - நாடும், செயலும் - தொழிலும், இவ்வுடம்பும் - (இவைகளையனுபவித்தற்குரிய) வித்தேகமும், நிற்கினன்றே - இருக்குமாயின், வேண்டுவன - விரும்பத்தக்கவையாம், விதியில்வருகாலனால் - நியதிப்படி வாராநின்ற கூற்றுவனால், சிலநாளில்-சிறிதுதினத்தில், இவையெலாம் - (சொல்லப்பட்ட) விவைகளனைத்தும், வீந்துபோகும் - நசிக்கும், உதிரமொடு தசையுடைத்தாய் - இரத்தமாமிசமுடையதாய், உடைவதியல்பாய் - கெடுவதேசுபாவமாய், தாழ்ந்தோருயர்ந்தோரொத்து - தரித்திரனுக்குஞ் செல்வனுக்கு மொருதன்மையவாய், அதிக - மிகவும், தரமறியாது - பகுத்தறியாமல், சராமரணமுறும் - சரை

யுமரணமும்பொருந்தும், இவ்வுடலினழகென்கொல் - இத்தேகத்தி லழகென்னையுள—எ-று.

(இ-ரை.) செல்வமும், நாடும், தொழிலும், இவைகளை யனுபவித்தற்குரிய வித்தேகமும் இருக்குமாயின் விரும்பத்தக்கவையாம். நியதிப்படி வாராநின்ற கூற்றுவனால் சிறிதுதினத்தில் சொல்லப்பட்ட விவைகளனைத்தும் நசிக்கும். இரத்தமாமிசமுடையதாய், கெடுவதே சுபாவமாய் தரித்திரனுக்குஞ் செல்வனுக்கு மொருதன்மையவாய் மிகவும் பகுத்தறியாமல் சரையும் மரணமும் பொருந்தும். இத்தேகத்தி லழகென்னையுள—என்பதாம்.

(இ-ம்.) தனக்குபகரிக்கின்ற செல்வனுக்கும் அதற்கியலாத தரித்திரனுக்குந் தாரதன்மியம்பாராத வித்தேகத்தி லென்னசுக மிருக்குமென்பதாம். (அசு)

தேகமநித்தியமெனமுடித்து நிறுத்தமுறையான்
அதற்கு முந்தினவவஸ்தை பாலியமாதலா லதனை யதன்பின்வைத்
தலைதையுந் தூஷித்தல்.

மின்னிடத்திற் சரற்கால மேகத்திற் கந்தர்வ
　　வியன்மூதூரி
னன்னிலைமை யெண்ணுவோ னெவனவனே யுடனிலைமை
　　நாடுகிற்போன்
மன்னுகிலா தசைந்துபல தொழிற்றரங்கஞ் செறிபிறவி
　　வாரிதன்னி
லென்னபிறப் பெய்துகினு மிளமைமிரு துபரத்துக்
　　கேதுவாகும்.

(இ-ள்.) மின்னிடத்தில் - மின்னலிடத்திலும், சரற்காலமேகத்தில்- சரற்பருவ முகிலினிடத்திலும், வியன் - விசாலமுள்ள, கந்தர்வமூதூரில்- கந்தர்வநகரத்திலும், நன்னிலைமையெண்ணுவோன்-நல்லநிச்சயபுத்திவைப்பவன்எவன் - யாவனோ, அவன்-அவனே, உடனிலைமை நாடுகிற்போன்- சரீரத்தைமெய்யாக நாடுபவன், (இனிப்பாலதூடணம்) மன்னுகிலாதசைந்து - நிலையில்லாமற் சலனத்தையடைந்து, பலதொழிற்றரங்கஞ்செறி - நானாவிதமான செய்கைகளென்னு மலைகணிறைந்த, பிறவிவாரிதன்னில்- பவசமுத்திரத்தில், என்னபிறப்பெய்துகினும்-எச்சநநமெடுத்தாலும், இள

மை - (அதற்குரிய) பாலப்பருவமானது, மிகுதுயரத்துக்கேதுவாகும் - மிகுந்ததுன்பத்துக்குக் காரணமாம்—எ-று.

(இ-ரை.) மின்னலிடத்திலும், சரற்பருவமுகிலினிடத்திலும், விசாலமுள்ள கந்தர்வநகரத்திலும், நல்லநிச்சய புத்திவைப்பவன் யாவனோ அவனே சரீரத்தை மெய்யாக நாடுபவன். (இனிப்பால தூடணம்) நிலையில்லாமற் சலனத்தை யடைந்து நானாவிதமான செய்கைகளென்னு மலைகணிறைந்த பவசமுத்திரத்தில் எச்சநந மெடுத்தாலும் அதற்குரிய பாலப்பருவமானது மிகுந்த துன்பத்துக்குக் காரணமாம்—என்பதாம்.

கந்தர்வ நகரமென்பது, சிலர் மரணக்குறியிற்காணும் ஆகாயத்தில் விசித்திரவன்னங்களாய் மாடகூடமாதிகளாகப் பரிணமித்துக் கணத்தில் வேறுபாடடைகின்ற சூரியகிரணங்களாம்.

(இ-ங்.) அசத்தியமான தேகத்தைச் சத்தியமாக நம்புதலினு லென்னசுகமுண்டா மென்பதாம். (அஎ)

---

## சலனமுள்ளது சைசவமெனல்.

தொலைவறுமா பத்தெளிமை சொல்லின்மை மடமாசைத்
துவட்சியெய்தி
யுலைவுறுசை சவத்துடனே யுலையியல்பா மனங்கூடி
யோதநீரி
னலைமடவார் விழியனலின் கொழுந்தொடுமின் னிவைக்கெல்லா
மலைவுகற்பித்
தலைத்லுறு நாய்போல மலமருந்து மற்பத்தான்
மகிழும்வாடும்.

(இ-ள்.) தொலைவறுமாபத்து - நீங்காதவாபத்தையும், எளிமை-தளர்வையும், சொல்லின்மை - பேச்சின்மையையும், மடம்-அறியாமையையும், ஆசை - இச்சையையும், துவட்சி - துவளலையும், எய்தி - அடைந்து, உலைவுறு - சஞ்சலப்படுகின்ற, சைசவத்துடன் - குழந்தைப் பருவத்தோடும், உலையியல்பாமனங்கூடி - சஞ்சலசுபாவமானமனதுசேர்ந்து, ஓதநீரினலை-கடலினலைகளும், மடவார்விழி - மாதர்களுடைய கண்களும், அனலின் கொழுந்து - அக்கினிக்கொழுந்துகளும், மின் - மின்னல்களும், இவைக்கெல்லா மலைவுகற்பித்து - இவையனைத்திற்குஞ்சஞ்சலமற்பியாசிப்பித்து, அலைதலுறும் - அலையப்பட்ட, நாய்போல - ஞாளியைப்போல, மலமருந்

தும் - மலத்தைப்புசிக்கும், அற்பத்தால் - அற்ப (விடய)த்தால், மகிழும்-சந்தோஷிக்கும், வாடும் - துக்கிக்கும்—எ-று.

(இ-ள்.) நீங்காதவாபத்தையும், தளர்வையும், பேச்சின்மையையும், அறியாமையையும், இச்சையையும், துவளலையும் அடைந்து சஞ்சலப்படுகின்ற குழந்தைப்பருவத்தோடும் சஞ்சலசுபாவமான மனதுசேர்ந்து கடலினலைகளும், மாதர்களுடையசண்களும், அக்கினிக்கொழுந்துகளும், மின்னல்களும் இவையனைத்திற்குஞ் சஞ்சலமற்பியாசிப்பித்து அலையப்பட்டஞாளியைப்போலமலத்தைப்புசிக்கும், அற்பவிடயத்தால் சந்தோஷிக்கும்,துக்கிக்கும்—எ-ம்.

(இ-ர்.) அலைமுதலானவைகளினு மதிகசஞ்சலத்தையுடைய பாலப்பருவத்தி லென்னசுகமென்பதாம. (அஅ)

---

## சைசவமறியாமைக் கிடமாமெனல்.

மண்ணுகரும் விண்மதியை வரவழைக்கு மிம்மடமை
மகிழ்ச்சியாமோ
நண்ணுகுரு தாய்தந்தை யுற்றோர்மூத் தோரெவர்க்கு
நடுக்கங்கூரும்
புண்ணுறுசை சவம்பயத்துக் கிடமாகுங் குற்றமெலாம்
பொதிந்தகூடா
மெண்ணுமவி வேகவிடன் வாழ்மனையாம் யார்க்குமிதி
லின்பமெய்தா.

(இ-ள்.) மண்ணுகரும் - மண்ணைப்புசிக்கும், விண்மதியை - ஆகாயத்திலுள்ள சந்திரனை, வரவழைக்கும் - (தன்னிடத்தில்) வாவென்றுகூப்பிடும், இம்மடமை - இவ்வறியாமை, மகிழ்ச்சியாமோ - சுகத்தின் (பொருட்டா)மா, நண்ணுகுரு - அடையாநின்ற வுபாத்தியாயருக்கும், தாய் - மாதாவிற்கும், தந்தை - பிதாவிற்கும், உற்றோர் - உறவினர்க்கும், மூத்தோர்-முன்பிறந்தவருக்கும், எவர்க்கும் - மற்றெவருக்கும், நடுக்கங்கூரும் - நடுக்கமிகுகின்ற, புண்ணுறு - நோதலுள்ள, சைசவம் - பாலப்பருவமானது, பயத்துக்கிடமாகும் - அச்சத்துக்கு ஸ்தானமாம், குற்றமெலாம்பொதிந்தகூடாம் - பிழைகளனைத்துநிறைந்தபஞ்சரமாம், எண்ணும்-குறிக்கப்பட்ட, அவிவேகவிடன் - அவிவேகமென்னுந்தூர்த்தன், வாழ்மனையாம் - வாழ்தற்குவீடாகும், யார்க்கும் - யாவருக்கும், இதிலின்பமெய்தா - இப்பவத்திற் சுகமுண்டாகாது—எ-று.

(இ-ள.) மண்ணைப்புசிக்கும் ஆகாயத்திலுள்ள சந்திரனை தன்னிடத்தில் வாவென்று கூப்பிடும் இவ்வறியாமை சுகத்தின்பொருட்டாமா? அடையாநின்ற வுபாத்தியாயருக்கும், மாதாவிற்கும், பிதாவிற்கும், உறவினர்க்கும், முன்பிறந்தவருக்கும், மற்றெவருக்கும் நடுக்கமிருகின்ற நோதலுள்ள பாலப்பருவமானது அச்சத்துக்கு ஸ்தானமாம். பிழைகளனைத்து நிறைந்தபஞ்சரமாம். குறிக்கப்பட்ட அவிவேகமென்னுந் தூர்த்தன்வாழ்தற்கு வீடாகும். யாவருக்கும் இப்பருவத்திற் சுகமுண்டாகாது—என்பதாம்.

(ப-ு.) பிறக்கையிற்றானே துறக்கின்ற விவேகமிருத்தலின், அவிவேகவிடன் வாழ்மனையாமென்றார்.

(இ-ு.) அறியாமைமுதலிய சகல குற்றமு நிறைந்திருக்கின்றபாலப்பருவத்தா லென்னபயனென்பதாம். (அக)

பாலதூடணமுடித்து நிறுத்தமுறையான் அதின்முயற்சியே
யௌவனமாதலா லதனை யதன்பின்வைத்
தஃதையுந் தூஷித்தல்.

இப்பருவத் தநர்த்தமகன் றிடரில்வீ ழெவ்வனத்தி
லேறிநெஞ்சா
மொப்பரிய பொந்திலுறை காமனெனும் பேயறைய
வுள்ளம்வாடுஞ்
செப்பரிய விரிவுடைத்தாய்த் தெளிந்து பரி சுத்தமாய்ச்
சிறந்ததேனு
மைப்புயனு ணதிநீர்போன் மதிகலங்கு மெவ்வனத்தின்
மயங்குநாளில்.

(இ-ள்.) இப்பருவத்தில் - இவ்வாலப்பருவத்திலுள்ள, அநர்த்தமகன்று - அநர்த்தங்களைக்கடந்து, இடரிலவீழ் - துன்பத்தில்விழுகின்ற, எவ்வனத்திலேறி - எவ்வனப்பருவத்தையடைந்து, நெஞ்சாம் - மனமென்னும், ஒப்பரியபொந்திலுறை - (இழிவிற்) சமானமில்லாத பொந்தில் வசிக்கும், காமனெனும்மன்மதனென்கின்ற, பேயறைய - பேயடிக்க, உள்ளம் வாடும் - மனமெலியும், மதி - அறிவானது, செப்பரிய - சொல்லுதற்கரிய, விரிவுடைத்தாய் - (வித்தியாப்பியாசத்தினால்) விஸ்தாரமுடையதாய்,

தெளிந்து - (குருபணியாற்) றெளிவுற்று, பரிசுத்தமாய் - (சற்கிருத்தியத்திறை்) பரிசுத்தமதாகி, சிறந்ததேனும்-சிறப்புள்ளதானாலும், மைப்புயல்-கார்காலத்தினது, நதிநீர்போல் - ஆற்றுச்சலம்போல, எவ்வனத்தில்-எவ்வனப்பருவத்தில், மயங்குநாளில்-சேருங்காலத்தில், கலங்கும்-கலக்கமாம்.

(இ-ரை.) இவ்வாலப்பருவத்திலுள்ள அநர்த்தங்களைக் கடந்து துன்பத்தில்விழுகின்ற எவ்வனப்பருவத்தையடைந்து மனமென்னும் இழிவிற் சமானமில்லாத பொந்தில்வசிக்கும் மன்மதனென்கின்ற பேயடிக்கமனமெலியும். அறிவானது சொல்லுதற்கரிய வித்தியாப்பியாசத்தினால் விஸ்தாரமுடையதாய் குருபணியாற் றெளிவுற்றுச் சற்கிருத்தியத்தினாற் பரிசுத்தமாகிச் சிறப்புள்ளதானாலும்கார்காலத்தினது ஆற்றுச்சலம்போல எவ்வனப்பருவத்தில் சேருங்காலத்தில் கலக்கமாம்—என்பதாம்.

(இ-ம்.) தெளிந்த வறிவையுங் கலக்குகின்ற காமத்தையுடைய வெவ்வனத்தினா லென்னசுகமென்பதாம். (௧0)

## எவ்வனங் காமத்துக் கிடமாமெனல்.

கருத்தெனுமான் மருண்டோடி விடயமெனுங் குயில்விழக் காயமென்னு
மருத்தலத்தி லெவ்வனமாங் கடுங்கான லெழுந்துமிக வளராநிற்கும்
பெருத்ததுயரிளமைநல மெவ்வளவுண் டவ்வளவும் பெருகாநிற்கு
மருத்திகளு மெவ்வனமவ் வளவும் விரைந் தெழுந்துமிக வநர்த்தஞ்செய்யும்.

(இ-ள்.) கருத்தெனுமான்-மன்தென்னுமறிவானது, மருண்டோடி-மயங்கிப்போய், விடயமெனும் - விடயங்களென்கின்ற, குழியில்விழ - படுகுழியில் வீழும்பொருட்டு, காயமென்னும் - தேகமென்கின்ற, மருத்தலத்தில் - பாலைநிலத்தில், எவ்வனமாம் - எவ்வனமென்கின்ற, கடுங்கானல்-கொடிய பேய்த்தேரானது, எழுந்து - உண்டாகி, மிகவளராநிறகும் - மிகவும்வளரும், பெருத்ததுயர் - மிகுந்ததுன்பமானது, இளமைநலம் - எவ்வனத்தினின்பம், எவ்வளவுண்டி - எம்மட்டிருக்கின்றதோ, அவ்வளவும் - அம்மட்டும், பெருமாநிற்கும் - வளரும், அருத்திகளும் - ஆசைகளும், எவ்வனமவ்வளவும் - இளமை யெம்மட்டிருக்கின்றதோ வம்மட்டும், விரைந்

தெழுந்து - வேகமுற்றெழுந்து, மிகவநர்த்தஞ்செய்யும் - மிகவுமநர்த்தங்களைச்செய்யும்—எ-று.

(இ-கா.) மனமென்னு மறிவானதுமயங்கிப்போய் விடயங்களென்கின்ற படுகுழியில் விரும்பொருட்டுத் தேகமென்கிற பாலைநிலத்தில் எவ்வனமென்கிற கொடிய பேய்த்தேரானது உண்டாகி மிகவும்வளரும். மிகுந்த துன்பமானது எவ்வனத்தினின்பம் எம்மட்டிருக்கின்றதோ அம்மட்டும் வளரும். ஆசைகளும் இளமை யெம்மட்டிருக்கின்றதோ வம்மட்டும் வேகமுற்றெழுந்து மிகவு மநர்த்தங்களைச்செய்யும்—என்பதாம்.

(இ-ஃ.) மனதுமயங்கி விடயத்திற் சென்று துன்பவின்பங்களில்வருந்து மநர்த்தத்துக் கேதுவான வெவ்வனத்தி லென்னசுகமென்பதாம். ()

## சற்குணமுள்ள வெவ்வன மரிதெனல்.

எத்திறத்தோ ரெவ்வனமா மிடையூற்றைக் கடந்தெளிதி
 னேறவல்லோ
ரத்திறத்தோ ரேபுருட ரவர்களே தொழற்குரியோ
 ரவரேசான்றோர்
மெய்த்திறத்தோர் சேரிடமாய் விநயநிதி படைத்தருளால்
 விளங்காநிற்குஞ்
சுத்தகுண வெவ்வனமிவ் வுலகிலுள தோவிசும்பிற்
 சூழ்காடுண்டோ.

(இ-ள்.) எவ்வனமாம் - எவ்வனமென்கின்ற, இடையூற்றைக்கடந்து-விக்கினத்தைத்தாண்டி,எளிதின் - இலேசாக,ஏறவல்லோர் - (முத்தியிற்) சேரவலியுள்ளவர்கள், எத்திறத்தோர் - எத்தன்மையுள்ளவர்களோ, அத்திறத்தோரே - அத்தன்மையுள்ளவர்களே, புருடர் - புமான்கள், அவர்களே - அப்புருடர்களே,தொழற்குரியோர் - (எல்லாராலும்) வணங்குதற்குரியர், அவரேசான்றோர் - அவர்களே யறிஞர்கள், மெய்த்திறத்தோர் - உண்மைநிலையுள்ளசத்துக்கள், சேரிடமாய் - சார்தற்குஸ்தானமாயும். விநயநிதிபடைத்து - விநயசம்பத்தைப்பெற்று, அருளால் - கருணையினல், விளங்காநிற்கும் - பிரகாசியாநின்ற, சுத்தகுணவெவ்வனம்-பரிசுத்தமான குணத்தையுடைய வெவ்வனமானது, இவ்வுலகிலுளதோ - இச்சகத்தின்கணுண்டோ, விசும்பில் - ஆகாயத்தில், சூழ்காடுண்டோ - நிறைந்தவனமுண்டோ—எ-று.

(இ-ள.) எவ்வனமென்கின்ற விக்கினத்தைத் தாண்டிஇலே சாக முத்தியிற்சேர வலியுள்ளவர்கள் எத்தன்மையுள்ளவர்களோ அத்தன்மையுள்ளவர்களே புமான்கள். அப்புருடர்களே எல்லாராலும் வணங்குதற்குரியர், அவர்களே யறிஞர்கள். உண்மைநிலையுள்ள சத்துக்கள் சார்தற்கு ஸ்தானமாயும் விநயசம்பத்தைப் பெற்று கருணையினால் பிரகாசியாநின்ற பரிசுத்தமான குணத்தையுடைய வெவ்வனமானது இச்சகத்தின் கணுண்டோ? ஆகாயத்தில் நிறைந்தவனமுண்டோ?—என்பதாம்.

(ப-ர்.) சுவானுபூதியைச் சமாதியிலிருந்து சாதித்து சகசமாக்குதற்கெவ்வனஞ் சகாயமாதலின், சுத்தகுணமெவ்வன மிவ்வுலகி லுளதோவென்றார்.

(இ-ம்.) விடயசுகத்தை நீக்கிப் பரமசுகத்தை யடைவிப்பதற் கேதுவான வெவ்வனமில்லாவிடி னென்னசுகமென்பதாம். (கஉ)

---

எவ்வனதூடணமுடித்து நிறுத்தமுறையான் அதற்குமுக்கியமான போகத்துக்குத் ததுந்ததாயுஞ் சருவவிடய சமஸ்டிரூபமாயு மிருக்கின்றது ஸ்த்ரீகளாகையா லவர்களை யதன்பின் வைத்தவாது தேகசட்சுக்களைத் தூடித்தல்.

வேறு.

சந்துறு நரம்போ டென்பு தசைசெறி பாவை யொப்பா
ரெந்திரத் தியங்கு மங்க பஞ்சரத் தினிமை யென்னே
கந்தமென் குழலார் கண்ணிற் றோறசை கண்ணீர் புண்ணீர்
சிந்தையிற் பிரித்து நோக்கிற் சீரிதேன் மோகஞ் செய்வாம்

(இ-ள்.) சந்து - கணுக்களும், உறுநரம்பு - பொருந்திய நரம்புகளும், என்பு - எலும்புகளும், தசை - மாமிசங்களும், செறி - நெருங்கிய, பாவையொப்பார் - விரதமையையொத்த மகளிருடைய, எந்திரத்தியங்கும்-சூத்திரத்திலாடும், அங்கபஞ்சரத்தினிமையென்னே - சரீரமாகியகூட்டி லென்னசுகம், கந்தமென்குழலார்-வாசனையுள்ள மிருதுவானகூந்தலையுடைய மாதர்கள், கண்ணில் - நேத்திரத்தில், தோல் - தோலையும், தசை - மாமிசத்தையும், கண்ணீர் - கண்ணீரையும், புண்ணீர் - இரத்தத்தையும், சிந்தையில் - மனதினால், பிரித்துநோக்கில் - பகுத்துப்பார்க்கில், சீரிதேல்-சிறப்பாயின், மோகஞ்செய்வாம் - இச்சிப்பாம்—எ-று.

(இ-ள.) கணுக்களும், பொருந்திய நரம்புகளும், எலும்புகளும், மாமிசங்களும் நெருங்கிய பிரதிமையையொத்த மகளிரு

டைய சூத்திரத்திலாடும் சரீரமாகிய கூட்டிலென்னசுகம். வாச ஊயுள்ள மிருதுவான கூந்தலேயுடைய மாதர்கள் நேத்திரத்தில் தோலேயும்,மாமிசத்தையும், கண்ணீரையும், இரத்தத்தையும் மன தினுல் பகுத்துப்பார்க்கில் சிறப்பாயின் இச்சிப்பாம்—என்பதாம்.

(இ-ம்.) மாதர்களுடலேயும், நேத்திரத்தையும், பகுத்துப்பார்க்கி லிவைகளி லென்னசுக முண்டென்பதாம். (கூரு)

## மகளிர்தன தூடணம்.

மேருவின் குவட்டின் வீழும் விரிதிரைக் கங்கை நீர்போ
லாரமுற் றிலங்குகின்ற வணியிழை மடவார் கொங்கை
யூரயன் மயானந் தன்னி லுற்றபோ துருண்டைச் சோற்றி
னேருறு கவளம்போல நிரைநிரை நாய்க டுய்க்கும்.

(இ-ள்.) மேருவின்குவட்டின்-மகாமேருவினுச்சியினின்றும், வீழும்-வீழாநின்ற, விரிதிரை - விரிந்தவலேயையுடைய, கங்கைநீர்போல் - கங்கா சலத்தைப்போல, ஆரமுற்றிலங்குகின்ற - முத்துமாலேபொருந்தி விளங் குகின்ற, அணியிழை-அழகியவாபரணத்தையணிந்த, மடவார்கொங்கை-மாதர்களுடைய தனங்களானவை, ஊரயல் - ஊர்ப்புறத்திலுள்ள, மயா னந்தன்னில் - சுடுகாட்டில், உற்றபோது - அடைந்தகாலத்தி (லிதனே), நேருறு - நேராகக்கிடைத்த, உருண்டைச்சோற்றின் - பிடித்தவன்னத் தின், கவளம்போல - கவளத்தைப்போல, நிரைநிரை-வரிசைவரிசையாக (வந்து), நாய்கடுய்க்கும் - ஞாளிகளானவை புசிக்கும்—எ-று.

(இ-ரை.) மகாமேருவி னுச்சியினின்றும் வீழாநின்ற விரிந்த வலேயையுடைய கங்காசலத்தைப்போல முத்துமாலேபொருந்தி விளங்குகின்ற அழகிய வாபரணத்தையணிந்த மாதர்களுடைய தனங்களானவை ஊர்ப்புறத்திலுள்ள சுடுகாட்டிலடைந்தகாலத்தி லிதனேநேராகக்கிடைத்த பிடித்தவன்னத்தின் கவளத்தைப்போல வரிசை வரிசையாக வந்து ஞாளிகளானவை புசிக்கும்—எ-ம்.

(இ-ம்.) ஆபரணங்களா லலங்கரிக்கப்பெற்றும், அந்தத்தினுய்கள் முதலானவை பட்சிப்பதற்கு யோக்கியமாயிருக்கின்ற ஸ்த்ரீகளினது தனத்திலென்ன வழகிருக்கின்றதாம். (கூச)

## மகளிரைச் சுவாலையாகவு மிந்தனமாகவுந் தூடித்தல்.

மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழியாற் றீக்குந்
தீவினைச் சிகைசேர் மாத ரெனுங்கனல் றிரணம் போல
யாவரைச் சுடாது தூரத் தெரிகின்ற நரகத்தீக்குப்
பாவையர் குளிர்ந்த மேனி பசையிலா விறக தாமே.

(இ-ள்.) மேவுதற்கரிதாய் - அடைதற்கரிய சூடுள்ளதாயும், கேசம்புகையதாய் - கூந்தலென்னுந்தூமமுள்ளதாயும், விழிதீக்கும் - கண்ணென்னுந்தீக்கின்ற தொழிலையுடையதாயுமிருக்கின்ற, தீவினை-பாவமென்னும், கனல் - அக்கினியின், மாதரெனுஞ்சிகை - மகளிரென்னுஞ் சுவாலையானது, சேர் - சேருகின்ற, திரணம்போல - துரும்பைப்போல, யாவரைச் சுடாது - எவரைத்தானெரிக்காது, தூரத்தெரிகின்ற-சேய்மையிலெரிகின்ற, நரகத்தீக்கு - நாகாக்கினிக்கு, பாவையர்குளிர்ந்தமேனி - மடவாருடைய குளிர்ந்ததேகமானது, பசையிலாவிறகதாம் - உலர்ந்தகாட்டமாம்.

(இ-ரை.) அடைதற்கரிய சூடுள்ளதாயும், கூந்தலென்னுந் தூமமுள்ளதாயும், கண்ணென்னுந்தீக்கின்றதொழிலையுடையதாயுமிருக்கின்ற பாவமென்னும் அக்கினியின் மகளிரென்னுஞ் சுவாலையானது சேருகின்ற துரும்பைப்போல எவரைத்தா னெரிக்காது. சேய்மையினுலெரிகின்ற நரகாக்கினிக்கு மடவாருடைய குளிர்ந்த தேகமானது உலர்ந்த காட்டமாம்—என்பதாம்.

(இ-ம்.) இம்மையிற் காமாக்கினியாலெரிப்பது மறுமைக்கு நரகாக்கினியை யுண்டாக்குவதுமான மின்னரிடத்தி லென்னசுகமென்பதாம்.()

## மகளிரை வலையாகவுந் தூண்டிலி னிரையாகவுந் தூடித்தல்.

மாடமஞ் செறிந்த நெஞ்சின் மனிதராம் புட்பிடிக்கக்
காமனும் வேடன்வீசும் வலையொப்பார் கருங்கண் மாதர்
தீமனச் சேருர்சன்மச் சிறுகுழி மீனு மாந்தர்க்
கேமவா தனைக்கயிற்றுத் தூண்டிலுக் கிரையு மொப்பார்.

(இ-ள்.) கருங்கண்மாதர் - கரியவிழிகளையுடைய மகளிர்கள், மாமடஞ்செறிந்தநெஞ்சின் - மிகுந்தவறியாமை நிறைந்தமனதையுடைய, மனி

ராம்புட்பிடிக்க- மானிடராகிய பக்ஷியைப்பிடிக்கும்பொருட்டு, காமனும் வேடன் - மன்மதனுகிற கிராதனுனவன், வீசும்வலையொப்பார்- எறியாநின்றவலைக்குச் சமானமாவார்கள், தீமனச்சேறுர் - கொடியமனமென்கின்ற வளறுநிறைந்த, சன்மச்சிறுகுழி - பிறவியென்னுஞ் சிறுகுளத்தில், மீனுமாந்தர்க்கு - மனிதராகிய மீனைக்கவர்தற்கு, எமவாதனைக்கயிற்று - காலவாதனையென்னும் பாசத்திற் (பூட்டிய, தூண்டிலுக்கு - தூண்டின் (முள்ளினுள்ள), இரையுமொப்பார் - இரையாகிய மாமிசத்துக்கிணையாவார்—எ-று.

(இ-ரை.) கரியவிழிகளையுடைய மகளிர்கள் மிகுந்த வறியாமைநிறைந்த மனதையுடைய மானிடராகிய பக்ஷியைப்பிடிக்கும் பொருட்டு மன்மதனுகிற கிராதனுனவன் எறியாநின்றவலைக்குச் சமானமாவார்கள். கொடிய மனமென்கின்ற வளறுநிறைந்த பிறவியென்னுஞ் சிறுகுளத்தில் மனிதராகிய மீனைக்கவர்தற்கு காலவாதனையென்னும் பாசத்திற் பூட்டியதூண்டின் முள்ளினுள்ள இரையாகிய மாமிசத்துக் கிணையாவார்—என்பதாம்.

தூண்டிலிலென்னு மேழாம்வேற்றுமை தூண்டிலுக்கென நான்காம் வேற்றுமை மயக்கமாயிற்று.

(இ-ம்.) அறிவிலரான மனிதரைப் பிடித்துக் காமத்திலழுத்தித் துக்கம்விளைவிப்பதற்குக் காரணமான மாதரிடத்தென்னசுகமென்பதாம். ()

## மகளிரின்பத்தைத் தூடித்தல்

முதுதுயர் பூட்டாற்பூட்டி முடிவில்கா மாதியென்னும்
புதுமணி வைத்தசெப்பாம் பூவைய ரின்பம்வேண்டே
னிதுதசை யிதுநெய்த்தோரென் பிதுநரம் பிதுவென் றெண்ணில்
விதுமுக மாதர்வேட்கை விரோதமாஞ் சிறிதுநாளில்.

(இ-ள்.) முதுதுயர் - மிகுந்ததுக்கத்தை, பூட்டி-பூட்டி (யிருக்கின்ற), பூட்டு-பூட்டாகவும், முடிவில்காமாதியென்னும் - முடிவில்லாத விராகத்துவேஷங்களென்கின்ற, புதுமணிவைத்தசெப்பாம் - மிகுந்த விரத்தினங்கள் வைத்திருக்குஞ் சம்புடமாகவுமிருக்கின்ற, பூவையரின்பம்வேண்டேன் - மாதர்களதுசுகத்தைவிரும்பேன், இதுதசை - இதுமாமிசம், இதுநெய்த்தோர் - இதுவிரத்தம், இதுவென்பு - அஸ்தி, இதுநரம்பென்று- இதுநரம்பென்று, எண்ணில் - விசாரிக்கில், விதுமுகமாதர் - சந்திரகாந்தனத்தையுடைய மகளிரது, வேட்கை - ஆசையானது, சிறிதுநாளில்-சில தினத்தில், விரோதமாம் - பகையாம்—எ-று.

(இ-ரை.) மிகுந்ததுக்கத்தைப் பூட்டியிருக்கின்ற பூட்டாகவும், முடிவில்லாத விராகத்துவேஷங்களென்கின்ற மிகுந்த விரத்தினங்கள்வைத்திருக்குஞ் சம்புடமாகவுமிருக்கின்ற மாதர்களது சுகத்தை விரும்பேன். இதுமாமிசம், இதுவிரத்தம், ஈதஸ்தி, இது நரம்பென்று விசாரிக்கில் சந்திரவதனத்தையுடைய மகளிரது ஆசையானது சிலதினத்தில் பகையாம்—என்பதாம்.

(ப-ம்.) மோக்ஷலட்சுமியி னித்தியசுக மிருத்தலின், பூவையரின்பம் வேண்டேனென்றார்.

(இ-பு.) துக்கத்தைக்காப்பதாயும், இராகாதி தோஷங்களுக் கிடமாயுமிருக்கின்ற மாதர்களினுருவத்தை விசாரிக்கி லதிலென்ன சுகமிருக்கின்றதாம். (கூஎ)

---

## மகளிரின்ப நீங்கலே பேரா நந்தமெனல்.

பாரியை யுடையோன் யாவ னவனுக்கே பற்றும் போக
நாரியை யில்லாதாற்குப் போகத்தி னலமெங் குண்டாங்
காரிகை தன்னை நீங்கிற் கருத்துரு சகத்து நீங்கும்
பேரியல் சகத்து நீங்கிற் பிரிவில்பே ரின்பமுண்டாம்.

(இ-ள்.) பாரியையுடையோன் யாவன் - மனைவியை யுடையவனெவனோ, அவனுக்கேபோகம்பற்றும் - அவனுக்கேபோகத்திலாசையுண்டாம், நாரியையில்லாதாற்கு - மனைவி யில்லாதவனுக்கு, போகத்தி னலமெங் குண்டாம் - புணர்ச்சியினின்ப மெவ்விடத்துண்டாகும், காரிகைதன்னை நீங்கில் - போகத்துக்கிடமான பெண்ணைவிடில், கருத்துருசகத்துநீங்கும் - மனதின்கண்ணுள்ள வுலகபந்தம்போம், பேரியல்சகத்துநீங்கில் - நாமமாத்திரமானவுலகநீங்கினால், பிரிவில்பேரின்பமுண்டாம் - நீங்காதபேராநந்தமுதயமாம்—எ-று.

(இ-ரை.) மனைவியையுடையவ னெவனோ அவனுக்கே மோகத்திலாசையுண்டாம். மனைவியில்லாதவனுக்குப் புணர்ச்சியினின்ப மெவ்விடத்துண்டாகும். போகத்துக் கிடமான பெண்ணைவிடில் மனதின்கணுள்ள வுலகபந்தம்போம். நாமமாத்திரமான வுலகநீங்கினால் நீங்காத பேராநந்தமுதயமாம்—என்பதாம்.

(இ-ம்.) மகளிரிச்சையை நீங்குங்காரணத்தினற் றிரிசயநீங்கிச் சுகமும்யமாமென்பதாம். (கூஅ)

## மகளிரின்பத்தை விரும்பேனெனல்.

வந்துறு போதினன்றாய் வரியளிச் சிறகு போலச்
சந்ததஞ் சலித்துத் தள்ளற் கரியதாம் போகந் தன்னை
முந்துநோய் மரணமூப்பு முதலவாந் துயர்கட் கஞ்சிச்
சிந்தையில் விரும்பே னெங்ஙன் சேர்வரும் பதத்தைச்சேர்வேன்.

(இ-ள்.) வந்துறுபோதினன்றாய் - (விசாரமின்றி) வருஞ்சமயத்தி னின்பமாகியும், (வந்தபின்) வரியளிச்சிறகுபோல - இசை (பாடாநின்ற) வண்டினதிறகைப்போல, சந்ததஞ்சலித்து-எக்காலமுஞ்சஞ்சலிப்பதாயும், தள்ளற்கரியதாம் - நீக்குதற்கரிதாயு (மிருக்கின்ற), போகந்தன்னை - மகளிரனுபோகத்தை, முந்துநோய் - முதன்மையான வியாதியும், மரணம் - இறப்பும், மூப்பு - வயோதிகமும், முதலவாம்-ஆதியான, துயர்கட்கஞ்சி- துன்பங்களுக்குப்பயந்து, சிந்தையில்-மனதில், விரும்பேன்-இச்சிக்கேன், எங்ஙன் - எப்படி, சேர்வரும்பதத்தைச்சேர்வேன் - இனியடைதற்கரிய பிரமபதத்தை யடைவேன்—எ-று.

(இ-ரை.) விசாரமின்றி வருஞ்சமயத்தி னின்பமாகியும், வந்தபின் இசைபாடாநின்ற வண்டினதிறகைப்போல எக்காலமுஞ் சஞ்சலிப்பதாயும், நீக்குதற் கரிதாயுமிருக்கின்ற மகளிரனுபோகத்தை (முதன்மையான வியாதியும், இறப்பும், வயோதிகமும், ஆதியான துன்பங்களுக்குப் பயந்து) மனதில் இச்சிக்கேன், எப்படி இனியடைதற்கரிய பிரமபதத்தையடைவேன்—என்பதாம்.

(இ-ம்.) வரும்போதின்பமும் வந்தபின் றுன்பமுமாய் வருத்துகின்ற மாதர்கள் சுகத்தைநீக்கிப் பரமசுகத்தை யடைவேனென்பதாம். (கூக)

ஸ்த்ரீதூடணமுடித்து நிறுத்தமுறையான் ஸ்த்ரீ முதலிய போகங்களை யனுபவிப்பதற்குச் சத்தியில்லாதிருந்து மவைகளி லிச்சை யுள்ளது மூப்பாகையா லதனை யதன்பின் வைத்ததனைதையுந் தூடித்தல்.

ஈறுறு சைசவத்தை யெவ்வனம் விழுங்கு மித்தை
மாறுறு சரைவிழுங்கு மயக்கநோய் வருத்த மிக்க

பேறுறு சரைகைக் கொண்டாற் பேரறி வகன்றிட் டோடும்
வேறுறு வணங்கான் முன்னே மெல்லிய லகலுமாபோல்.

(இ-ள்.) ஈறுறு - முடிவுபெறாத, சைசவத்தை-பாலபருவத்தை, எவ்வனம்விழுங்கும் - எவ்வனமானது விழுங்கிவிடும், இத்தை-இவ்வெவ்வனத்தை, மாறுறு - வேறுபடுத்துகின்ற, சரைவிழுங்கும் - மூப்பானதுவிழுங்கும், மயக்கம் - மயக்கமும், நோய் - வியாதியும், வருத்தம் - துன்பமு(மாகிய விவைகளை) மிக்கபேறுறு - மிகவும்பயனாகவுடைய, சரைகைக்கொண்டால் - வார்த்திகம்வந்தால், வேறுறுமணங்களால் - இரண்டாம் (விவாகத்தில்வந்த) மனைவியால், முன்னைமெல்லியல் - முன்னுள்ளமனைவியானவள், அகலுமாபோல் - (புருடன்மனதினின்று) நீங்குவதுபோல, பேரறிவகன்றிட்டோடும் - முதிர்ந்தவறிவு பிரிந்தோடும்—எ-று.

(இ-ரை.) முடிவுபெறாத பாலப்பருவத்தை எவ்வனமானது விழுங்கிவிடும். இவ்வெவ்வனத்தை வேறுபடுத்துகின்ற மூப்பானது விழுங்கும். மயக்கமும், வியாதியும், துன்பமுமாகிய விவைகளை மிகவும் பயனாகவுடைய வார்த்திகம்வந்தால் இரண்டாம் விவாகத்தில்வந்த மனைவியால் முன்னுள்ள மனைவியானவள் புருடன்மனதினின்று நீங்குவதுபோல முதிர்ந்த வறிவு பிரிந்தோடும்.

(இ-ம்.) தெளிந்தவறிவையு நீக்குந்துன்பமயமான வயோதிகப்பருவத்திலென்னசுக மிருக்கின்றதாம். (க00)

## சரையின் துற்குணங்களை யுரைத்தல்.

புரையுட னெகிழ்வு சோர்வு பொருந்திய லோபந் துன்பங்
கரையுறு கருமந் தன்னில் வலியின்மை கடுநோய் தோற்றம்
வரைபொருள் செயமாட்டாமை மைந்தரே முதலோர் நிந்தை
சரை நரை வருகாலத்துத் தருந்துயர் விவித மாகும்.

(இ-ள்.) சரைநரைவருகாலத்து - வார்த்திகம்வரும்போதில், புரையுடல் - நவத்துவாரமுள்ள சரீரத்தில், நெகிழ்வு - தளர்வும், சோர்வு - மறதியும், பொருந்தியலோபம் - அமைந்திராநின்றவாசையும், துன்பம்-துயரமும், கரையுறு - (செய்தற்) களவுள்ளனவாகிய, கருமந்தன்னில் - காரிகங்களில், வலியின்மை - (செல்லுதற்குச்) சத்தியில்லாமையும், கடுநோய் தோற்றம் - கொடியவியாதியுண்டாதலும், வரைபொருள்-குறிக்கப்பட்ட வஸ்துக்களை, செயமாட்டாமை-சம்பாதிக்கத்தடுமாற்றமும், மைந்தர்முத

லோர் - புத்திரன் முதலியவர்களாற் (செய்யப்பட்ட) நிந்தை - பழிப்பு (மாகியவிவை) தருந்துயர் - கொடாநின்ற துக்கமானது, விவிதமாகும் - நாஞுவிதமாகும்—எ-று.

(இ-ள.) வார்த்திகம்வரும்போதில் நவத்துவாரமுள்ள சரீரத்தில் தளர்வும், மறதியும், அமைந்திராநின்ற வாசையும், துயரமும், செய்தற்களவுள்ளனவாகிய காரியங்களில் செல்லுதற்குச் சத்தியில்லாமையும், கொடிய வியாதியுண்டாதலும், குறிக்கப்பட்ட வஸ்துக்களை சம்பாதிக்கத் தடுமாற்றமும், புத்திரன்முதலியவர்களாற் செய்யப்பட்ட பழிப்புமாகிய விவைகொடாநின்ற துக்கமானது நாஞுவிதமாகும்—என்பதாம்.

(இ-ம்.) சரீரத்தளர்ச்சிமுதலான நாஞுவிதங்களாலுந் துன்ப மனுபவித்தற்குரிய வயோதிகப்பருவத்தி லென்னசுகமிருக்கின்றதாம். (க0க)

## சரையிலுள்ள நிந்தையையு மாசையையுமுரைத்தல்.

விருத்தராய் நடுக்குவோரை மித்திரர் மைந்தருற்றூர்
கருத்துறு மாதர்தாசர் நகைசெய்வர் காணுஞதாய்
வருத்தமுஞ் சரையுமுற்று வலிகுண மிழந்தமூப்பை
யருத்திவந் தடையுங்கட்டை மரங்கழு கடையுமாபோல்

(இ-ள்.) விருத்தராய் நடுக்குவோரை - வயோதிகப் பருவம்வந்து (சரீர) நடுங்கப்பட்டவர்களை, மித்திரர் - இஷ்டர்களும், மைந்தர் - புத்திரர்களும், உற்றூர் - உறவினர்களும், கருத்துறுமாதர் - விரும்பப்பட்டமகளிரும், தாசர் - அடிமைகளும், நகைசெய்வர் - சிரிப்பார்கள், காணுஞ தாய் - பார்ப்பதற்குச் சகிக்கப்படாதவடிவமாய், வருத்தமும் - துன்பத்தையும், சரையும் - நரையையும், உற்று - பொருந்தி, வலி - வலிமையையும், குணம் - (நற்) குணங்களையும், இழந்த - நீங்கின, மூப்பை - வார்த்திகத்தை, கட்டைமரம் - வெட்டுப்பட்டமரத்தில், கழுகடையுமாபோல் - கழுகடைவதுபோல, அருத்திவந்தடையும்-ஆசைவந்துபொருந்தும்-எ-று.

(இ-ள.) வயோதிகப் பருவம்வந்து சரீரநடுங்கப்பட்டவர்களை இஷ்டர்களும், புத்திரர்களும், உறவினர்களும், விரும்பப்பட்டமகளிரும் அடிமைகளும் சிரிப்பார்கள். பார்ப்பதற்குச்சகிக்கப்படாதவடிவமாய் துன்பத்தையும் நரையையும்பொருந்தி வலிமை

யையும் நற்குணங்களையும் நீங்கின வார்த்திகத்தை வெட்டுப்பட்ட மரத்தில் கழுகடைவதுபோல ஆசைவந்துபொருந்தும்—எ-ம்.

(இ-ம்.) எல்லாராலு நகைசெய்வதாயுந் துன்பமயமானவாசை குடிகொண்டிருப்பதாயுமிருக்கின்ற வயோதிகப்பருவத்திற் சுகமின்றென்பதாம். (கO௨)

---

## சரையினுல்வரு மச்சத்தை யுரைத்தல்.

குற்றமு மிளைப்புமேவிக் குறிதன்றி யுளத்தைச்சுட்டுத்
துற்றவா பத்துக்கெல்லாந் தோழியா மாசைதுன்னு
முற்றதோர் பரலோகத்துக் குறுதியே தென்றுமூப்பிற்
பற்றுறு பரிகாரந்தீர் பயமிகப் படருமன்றே.

(இ-ள்.) குற்றமும் - பிழையையும், இளைப்பும் - மெலிவையும்,மேவி-பொருந்தி, குறிதன்றி - நெடியதாய், உளத்தைச்சுட்டு - மனதையெரித்து, துற்றவாபத்துக்கெல்லாம் - நிறைந்தவாபத்துக்களனைத்திற்கும், தோழியாமாசை - பாங்கியானவிச்சையை, துன்னும் - பொருந்துகின்ற, மூப்பில்-வயோதிகத்தில், ஒர்பரலோகத்துக்கு - ஒப்பற்றபரலோகத்தில், உற்றது-பொறுந்தினதான, உறுதியேதென்று-நன்மையென்னவென்று, பற்றுறு - (நம) திச்சையினுலுண்டான (வினைகளை), பரிகாரந்தீர் - நீக்கக்கூடாத, பயமிக ப்படரும் - அச்சமிகவுமதிகரிக்கும்—எ-று.

(இ-ா.) பிழையையும் மெலிவையும் பொருந்தி நெடியதாய் மனதையெரித்து நிறைந்தவாபத்துகளனைத்திற்கும் பாங்கியான விச்சையை, பொருந்துகின்ற வாயோதிகத்தில் ஒப்பற்ற பரலோகத்தில் பொருந்தினதான நன்மையென்னவென்று நமதிச்சையினுலுண்டான வினைகளை நீக்கக்கூடாத அச்சமிகவுமதிகரிக்கும்.

(ப-ம்.) பரகதிக்குறுதிதேடும் வார்த்திகமிருத்தலின், மூப்பிற்பற்றுறுபரிகாரந்தீர் பயமிகப்படருமென்றார்.

(இ-ம்.) மனதைவேகச்செய்கின்ற வாபத்துகளுக்குச் சகாயமானவிச்சையும், இளமையிற்செய்திருக்கின்ற தீவினைகளை யிப்போது பரிகரிக்கக்கூடாமையான் மறுமைக்கென்செய்வோமென்னும்பயமுமிகுந்திருக்கின்ற வார்த்திகத்திலென்னசுக மிருக்கின்றதாம். (கO௩)

## சரையிற்சத்தியின்மையு மஃதுணவாதலுங்கூறல்.

ஆதரச் செருக்குமல்கு மருந்துதற் கரிதுமூப்பிற்
காதல்செய் வலியிலாமை கருத்தெலாம் வெந்துசோரும்
போதுறு நீருர்முற்றற் பூசினைப் பெருங்காய்போல
மேதகு காலன்மாந்தர் வெண்ணரைத் தலையைத்தின்னும்.

(இ-ள்.) மூப்பில் - வார்த்திகத்தில், ஆதரச்செருக்குமல்கும்-(விடய) விச்சையிற்களிப்புமிகும், அருந்துதற்கரிது - (அதைப்) புசித்தற்குச்சத்தியின்றும். காதல்செய் - இச்சிப்பதை (யனுபவிப்பதற்கு), வலியிலாமை - வல்லமையில்லாததினுல், கருத்தெலாம் வெந்துசோரும்-நினைப்பனைத்து மெரிந்துவாடும், போதுறுநீருர் - பருவகாலத்தினீறுபூத்த, முற்றல்-முதிர்ந்த, பூசினைப்பெருங்காய்போல் - பூசினையின்பெரியபழம்போல, மேதகு காலன் - மேன்மையானகாலனுனவன், மாந்தர் - மனிதர்களுடைய, வெண்ணரைத்தலையைத்தின்னும் - வெண்மையான நரையையுடையசிரசைப்புசிப்பான்—எ-று.

(இ-ா) வார்த்திகத்தில் விடய விச்சையிற் களிப்புமிகும், அதைப் புசித்தற்குச் சத்தியின்றும், இச்சிப்பதை யனுபவிப்பதற்கு வல்லமையில்லாததினுல் நினைப்பனைத்து மெரிந்துவாடும், பருவகாலத்தினீறுபூத்த முதிர்ந்த பூசினையின் பெரியபழம்போல மேன்மையான காலனுனவன் மனிதர்களுடைய வெண்மையான நரையையுடைய சிரசைப்புசிப்பான் —என்பதாம்

(இ-ம்.) விரும்பப்படும் பதார்த்தங்களிருந்து மனுபவிக்கக்கூடாத துக்கத்தையுடையதாயும், காலனழிப்பதற்குப் பக்குவமாயுமிருக்கின்றவார்த்திகப்பருவத்தி லென்சுகமிருக்கின்றதாம். (கoச)

## சரையை மரணவரச துக்கங்கமாக வருணித்தல்.

மரணமா மன்னன் முன்னர் வருநரைக் கவரிவீசித்
திரளுறு வியாதியாதி யாகிய சேனைசெல்லுந்
தரமறு நரைவெண் சார்ந்தார் சரீரமா மனைக்குளாபத்
துரவலி யின்மைசோர்வா மொண்டொடிமகளிற் வாழ்வார்.

(இ-ள்.) மரணமாம்-இறப்பாகிய,மன்னன்முன்னர்-அரசன்முன்னே, வருநரைக்கவரி-வருகின்றநரையென்னும் வெண்சாமரையை, வீசி-வீசிக்

கொண்டு, திரளுறு-கூட்டமுள்ள, வியாதிபாதியாகிய - (தேக) வியாதிகளு(மந்தக்கரண) வியாதிகளுமான, சேனைசெல்லும் - படைகடைக்கும், தரமறுநரை-தகுதியில்லாதநரையென்னும், வெண்சார்ந்தார்-வெண்சுண்ணந்தீற்றிய, சரீரமாமனைக்குள் - தேகமாகியவீட்டுக்குள், ஆபத்து - ஆபத்தும், உரவலியின்மை - அறிவின்சத்தியும், சோர்வாம் - சோர்வுள்ள (ரோகமுமான), ஒண்டொடிமகளிர் - ஒளிபொருந்திய வளையலையணிந்த மாதர்கள், வாழ்வார் - வாழ்வார்கள்—எ-று.

(இ-ள.) இறப்பாகிய அரசன்முன்னே வருகின்ற நரையென்னும் வெண்சாமரையை வீசிக்கொண்டு கூட்டமுள்ள தேகவியாதிகளு மந்தக்கரணவியாதிகளுமான படைகடைக்கும். தகுதியில்லாத நரையென்னும் வெண்சுண்ணந்தீற்றிய தேகமாகிய வீட்டுக்குள் ஆபத்தும் அறிவின்சத்தியும் சோர்வுள்ள ரோகமுமான ஒளிபொருந்திய வளையலையணிந்த மாதர்கள் வாழ்வார்கள்-எ-ம்.

(இ-ம்.) மரணத்துக்கங்கமாகியு மாபத்துமுதலியவற்றிற் கிடமாகியுமிருக்கின்ற விவ்வயோதிகப்பருவத்திற் சுகமின்றெனபதாம். (க0ரு)

சரைதூடணத்தைமுடித்து நிறுத்தமுறையான் இப்பருவத்தைச் சங்கரிக்குங் காலமுண்டாதலா லதன்பின் னதனைவைத் தூஷித்தல்

நரையுறு தீவாணாளாம் பேயுட னண்ணி வாழ்வென்
சரைவெலற் கரிதி யார்க்கு மீடணை மூன்றுந் தள்ளு
நிரைபவத் தவிஞ்ஞைபாகி நிகழின்பப் பொருள்க ளெல்லாம்
புரையுறு மெலியா நூல்போற் காலனாற் பொன்று மன்றே.

(இ-ள்.) நரையுறு - நரைபொருந்திய, தீவாணாளாம் - கொடியமுதிர்வயதாகிய, பேயுடனண்ணி - பிசாசோடுங்கூடி (வாழ்வதினால்), வாழ்வென் - சுகமென்ன, ஈடணைமூன்றும் - ஈடணாத்ரயங்களையும், தள்ளும்-(அற்பமாக)நீக்கும், சரை - (இச்சையையுடைய) மூப்பை, வெலற்கு - கெடுத்தற்கு, இயார்க்கும் - எவர்க்கும், அரிது - அரிதாகும், (இனிக்காலதூடணம்) நிறைபவத்து - வரிசையாகவந்தசநநத்தில், அவிஞ்ஞையாகி - அஞ்ஞானமயமாய், நிகழ் - விளங்காநின்ற, இன்பப்பொருள்களெல்லாம் - சுகவஸ்துக்களனைத்தும்புரையுறு - குற்றம்பொருந்திய, எலியானூல்போல்-ஆகுவினாற்றந்துவைப்போல, காலனாற்பொன்றும் - கூற்றனாற்கெடும்.

(இ-ள்.) நரைபொருந்திய கொடிய முதிர்வயதாகிய பிசாசோடுங்கூடி வாழ்வதினால் சுகமென்ன? ஈடணாத்ரயங்களையும் அற்பமாகநீக்கும் இச்சையையுடைய மூப்பைக்கெடுத்தற்கு எவர்க்கும் அரிதாகும். (இனிக்காலதூடனம்) வரிசையாகவந்த சநநத்தில் அஞ்ஞானமயமாய் விளங்காநின்ற சுகவஸ்துக்களனைத்தும் குற்றம்பொருந்திய ஆகுவினாற் றந்துவைப்போல கூற்றனாற் கெடும்—என்பதாம்.

(இ-பு.) ஈடணாத்ரயங்களாலுள்ள துன்பங்களுக்கு மிகுந்த துன்பங்களைக் கொடாநின்றசரையினாலும், சநநத்திற் சுகம்போலத் தோற்றுமதனையுங்கெடுக்கின்றகாலத்தினாலு மென்னசுக மிருக்கின்றதாம். (கoகூ)

## காலம் மகான்களையு மழிக்குமெனல்.

மகரநீர் கடல்குடிக்கும் வடமுகக் கனலே போலச்
சகலமும் விழுங்குங்காலன் சகத்திடை விழுங்கா தில்லைப்
புகலரும் பெரியோரேனும் பொழுதொரு கணமுந் தாழா
னகிலமும் விழுங்கித் தானே யகிலமாய் நிற்குமன்றே.

(இ-ள்.) மகரம் - மகரமச்சங்களுறைகின்ற, கடல் - உத்தியின், நீர் குடிக்கும் - சலத்தைப்பானஞ்செய்யாநின்ற, வடமுகக்கனலேபோல-வடவாமுகாக்கினியைப்போல, சகலமும் - எல்லாவற்றையும், விழுங்குங்காலன்-புசிக்கின்றகாலனால், சகத்திடை-உலகத்தின்கண், விழுங்காதில்லை-புசிக்கப்படாததில்லை, புகலரும் - சொல்லுதற்கரிய, பெரியோரேனும்-மகத்துக்களாயினும், பொழுதொருகணமுந்தாழான் - (நியுதிக்குப்பின்) னொருக்ஷணநேரமும்பொறான், அகிலமும்விழுங்கி-சகலத்தையும்புசித்து, தானேயகிலமாய்நிற்கும - அவனேசமஸ்தமுமாயிருப்பன்—எ-று.

(இ-ரை.) மகரமச்சங்களுறைகின்ற உத்தியின் சலத்தைப்பானஞ்செய்யாநின்ற வடவாமுகாக்கினியைப்போல எல்லாவற்றையும் புசிக்கின்றகாலனால் உலகத்தின்கண் புசிக்கப்படாததில்லை, சொல்லுதற்கரிய மகத்துக்களாயினும் நியுதிக்குப் பின்னொரு க்ஷணநேரமும் பொறான். சகலத்தையும் புசித்து அவனே சமஸ்தமுமாயிருப்பன்—என்பதாம்.

(இ-பு.) பஞ்சபூதத்தைக் கெடுப்பதுமன்றிச் சத்துக்கள் வடிவங்களையுங்கெடுத்துச் சூனியமாகமிஞ்சுங் காலத்தினா லென்னசுகமென்பதாம்.

## காலம் பலமான சராசரங்களையுங் கெடுக்குமெனல்.

விழுமியர் சுபத்தின் பாலர் மேருவை யொப்போ ரெல்லாம்
பழுதறு கருடன் கொல்லும் பாம்பெனக் காலன் கொல்லும்
புழுதியோ டிலை துரும்பு பொன்மலை புணரி வெள்ளஞ்
செழுமயேந் திரமுங் காலன் சிதைத்துத்தன் வடிவமாக்கும்.

(இ-ள்.) விழுமியர் - சிறந்தவரசர்களும், சுபத்தின்பாலர் - நன்மையினையுடைய பிரமாதிகளும், மேருவையொப்போரெல்லாம் - மகாமேருவுக் கிணையான (விருத்திராசுரன்முதலிய) யாவரையும், பாம்பு - சர்ப்பத்தை, கொல்லும் - கொல்லாநின்ற, பழுதறுகருடனென - குற்றமற்றகலுழனைப்போல, காலன்கொல்லும் - காலனழிப்பான், புழுதியோடு - துகளுடன், இலை - இலையும், துரும்பு - திரணமும், பொன்மலை - மகாமேருவும், புணரிவெள்ளம் - சமுத்திரத்துவெள்ளமும், செழுமயேந்திரமும் - செழித்தமயேந்திரகிரியு (மாகியவிவைகளை), காலன் - காலனானவன், சிதைத்து - கெடுத்து, தன்வடிவமாக்கும் - தன்வசமாக்குவன்—எ-று.

(இ-கா.) சிறந்தவரசர்களும், நன்மையினை யுடைய பிரமாதிகளும், மகாமேருவுக்கிணையான விருத்திராசுரன் முதலிய யாவரையும் சர்ப்பத்தைக்கொல்லாநின்ற குற்றமற்ற கலுழனைப்போல காலனழிப்பான். துகளுடன் இலையும், திரணமும், மகாமேருவும், சமுத்திரத்து வெள்ளமும், செழித்த மயேந்திரகிரியுமாகிய விவைகளை காலனானவன் கெடுத்து தன்வசமாக்குவன்—எ-ம்.

(ப-ர்.) சர்வத்தையுந் தன்மயமாக்குங் காலமிருத்தலின், மயேந்திரமுங் காலன்சிதைத்துத் தன்வடிவமாக்குமென்றார்.

(இ-ம்.) உலகத்தின்கண் மகத்தாகியு மற்பமாகியு மிருக்கின்றவைகளைக் கெடுத்துச் சூனியமாக்குங் காலத்தினு லென்னசுகமென்பதாம். ()

## காலத்தின் சிருட்டியாதியைச் சொல்லுதல்.

வேறு.

அகல்பூதக் கொதுகிரையு மண்ட மெனுங் காயுகுத்த
வத்தியாயும்
பகலவனே கண்ணாகப் பகற்பொழுது பார்வையாற்
பதங்கள்பார்த்துக்

சகமெனுந்தொல் வனத்துலக பாலரெனும் பழம்பறித்துத்
தானேதின்னுந்
திகழுலகா மணிமாலைக் குணமூன்றுற் கோத்தணிந்து
சிந்துங்காலன்.

(இ-ள்.) அகல்பூதக்கொதுகிரையும் - விரிந்தசீவமசகங்கள் சப்திக்கின்ற, அண்டமெனுங்காய் - அண்டங்களென்னும்பழங்களை, உகுத்தவத்தியாயும் - உதிர்த்தவத்தி விருக்ஷமாகியும், பகலவனேகண்ணுக - சூரியனே நேத்திரமாக, பகற்பொழுதுபார்வையால் - மத்தியானமென்னுங் கண்களால், பதங்கள்பார்த்து - பக்குவம்பார்த்து, சகமெனுந்தொல்வனத்து - உலகமென்கின்ற பழையகாட்டில, உலகபாலரெனும்பழம்பறித்து- உலகபாலரென்னுங் கனிகளைக்கொய்து, தானேதின்னும் - தானேபுசிப்ப(வனுகியுமிருக்கின்ற) , காலன் - காலனுனவன், திகழுலகாமணி - பிரகாசிக்கின்ற வுயர்ந்தோர்களென்னு மிரத்தினங்களை, மாலை - வரிசையாக, குணமூன்றால் - முக்குணங்களென்னுங் (கயிற்) றில், கோத்து - கோர்வைமிட்டு, அணிந்து - தரித்து, சிந்தும் - கெடுப்பான்—எ-று.

(இ-ை.) விரிந்த சீவமசகங்கள் சப்திக்கின்ற அண்டங்களென்னும் பழங்களை யுதிர்த்த அத்திவிருக்ஷமாகியும், சூரியனே நேத்திரமாக மத்தியானமென்னுங் கண்களால் பக்குவம் பார்த்து உலகமென்கின்றபழையகாட்டில்உலகபாலரென்னுங்கனிகளைக்கொய்து தானே புசிப்பவனுகியு மிருக்கின்ற காலனுனவன் பிரகாசிக்கின்ற வுயர்ந்தோர்களென்னு மிரத்தினங்களை வரிசையாக முக்குணங்களென்னுங் கயிற்றில் கோர்வையிட்டு தரித்துக்கெடுப்பான்—எ-ம்.

(ப-ம்.) உலகமாலையை நிர்மாலியமாகத் தள்ளுவனென்பார், சிந்துங் காலனென்றூர்.

(இ-ம்.) முத்தொழிற் கேதுவாகியுஞ், சூனியமாகியு மிருக்கின்றகாலத்தின் னென்னசுகமென்பதாம். (௧௦௧)

## காலமுலகத்திலுள்ள யாவையுங் கெடுக்குமெனல்.

சிறியசகப் பழங்குடிலிற் சிதறுலக மணியமனுஞ்
செப்பிற்சேர்க்கு

மறிவில்பல பூதமாம் விலங்குகளும் பறவைகளு
மளவற்றெங்கு
முறியவுலர் சகத்பாலை தனில்வேட்டை யாடிநெடு
முதுகற்பத்திற்
பொறிவடவைத் தாமரைசேர் கடல்விளையாட் டோடைகளாய்ப்
பொருந்துங்காலன்.

(இ-ள்.) சிறியசகப்பழங்குடிலில் - சிறியவுலகமென்னுஞ்சீர்ணித்தவீட்டில்,சிதறுலகமணி - சிந்தாநின்ற வுலகத்தாரென்னு மிரத்தினங்களை, யமனுஞ்செப்பிற்சேர்க்கும் - மிருத்துவென்னுஞ் சம்புடத்திற்சேர்க்கின்ற, காலன் - காலனனவன், அறிவில்பலபூதமாம் - உணர்வற்ற பலசீவர்களாகிய, விலங்குகளும்-மிருகங்களும், பறவைகளும் - பட்சிகளும், அளவற்று-அளவின்றி, எங்குமுறிய - எவ்விடத்திலுங்கெட, உலர்சகப்பாலைதனில் - பசையற்றவுலகமாகிய பாலைவனத்தில், வேட்டையாடி-வேட்டைசெய்து, நெடுமுதுகற்பத்தில்-மகாகற்பத்தில், பொறிவடவைத்தாமரை-பிரகாசமுள்ளவடவானலமென்னுந் தாமரையானது, சேர்-சேர்ந்திருக்கின்ற, கடல் - சமுத்திரத்தை, விளையாட்டோடைகளாய் - விளையாடாநின்றகுளமாக, பொருந்தும் - சேர்வன்—எ-று.

**(இ-கா.)** சிரிய வுலகமென்னுஞ் சீர்ணித்தவீட்டில் சிந்தாநின்ற வுலகத்தாரென்னு மிரத்னங்களை மிருத்துவென்னுஞ் சம்புடத்திற்சேர்க்கின்ற காலனனவன் உணர்வற்ற பலசீவர்களாகிய மிருகங்களும், பக்ஷிகளும், அளவின்றி எவ்விடத்திலுங்கெட பசையற்ற வுலகமாகிய பாலைவனத்தில் வேட்டை செய்து மகாகற்பத்தில் பிரகாசமுள்ள வடவானலமென்னுந் தாமரையானது சேர்ந்திருக்கின்ற சமுத்திரத்தை விளையாடாநின்ற குளமாகச் சேர்வன்—என்பதாம்.

(இ-ம்.) சகலவுயிர்களையு நாசஞ்செய்து மகத்தையு மற்பமாக விளையாடுங்காலத்தினு டென்னசுகமிருக்கின்றதாம். (௧௧0)

**காலம் சகலத்தையு மற்பமாகக் கெடுக்குமெனல்.**

கைப்பினொடு புளிப்புக்கார்ப் பினிவைமுதலாஞ் சுவைபடைத்த
கனபூதத்தா
லொப்பரிய பாறயிரை யாதியாய் வருகின்ற
வுததிதன்னுற்

றுப்புடையன் விவிதமாந் தோற்றமுள சகங்களினுற் சுற்றிச்சுற்றி
வைப்புடைய வவற்றவற்றும் பெருங்கற்பம் பலகாலும் வட்டஞ்செய்யும்.

(இ-ள்.) கைப்பினொடு புளிப்புக்கார்ப்பு - கசப்பும் புளிப்புமுறைப்பு மாகிய, இவைமுதலாம் - இவைமுதலான, சுவைபடைத்த - (அறு) சுவை யையுடைய, கனபூதத்தால் - மிகுந்த (வசர) வுயிர்களாலும், ஒப்பரியபாற யிரை - சமானமில்லாதக்ஷீரததிகளை, ஆதியாய்வருகின்ற வுததிதன்னுல்- முதலாகவாராநின்ற (சத்த) சமுத்திரங்களினுலும், விவிதமாம் - நானு விதமாகிய, தோற்றமுள - சிருஷ்டிகளுள்ள, சகங்களினுல் - உலகங்களி னுலும், றுப்புடையன் - உணவையுடைய (காலனுனவன்), சுற்றிச்சுற்றி - சுழன்றுசுழன்று, வைப்புடையவவற்றவற்றும் - நிலைபெற்றவ்வவைகளில், பெருங்கற்பம் - மகாகற்பத்தில், பலகாலும் - எப்போதும், வட்டஞ்செய் யும் - சுற்றிக்கொண்டுவருவான் —எ-று.

(இ-ஊ.) கசப்பும் புளிப்பு முறைப்புமாகிய இவை முத லான அறுசுவையையுடைய மிகுந்த வசரவுயிர்களாலும் சமான மில்லாத க்ஷீரததிகளை முதலாக வாராநின்ற சத்தசமுத்திரங்களி னுலும் நானுவிதமாகிய சிருஷ்டிகளுள்ள உலகங்களினுலும் உண வையுடைய காலனுனவன் சுழன்று சுழன்று நிலைபெற்றவ்வவைக ளில் மகாகற்பத்தில் எப்போதும் சுற்றிக்கொண்டுவருவான்-எ-ம்.

காலம் காலனெனத் திணமயங்கி நின்றது.

(இ-சு.) சகங்களே புராதனமாகவும், சீவகோடிகளேபதார்த்தங்களா கவும், சத்தசமுத்திரங்களே நெய்பாறயிராகவும், புசித்தெப்போதுஞ் சுழ ன்றுகொண்டிராநின்ற விக்காலத்தினுற் சுகமின்றென்பதாம. (௧௧௧)

---

காலநூடண முடித்து அதனையுஞ் சங்கரிக்கின்ற
சங்காரசத்தியின் குணங்களையுரைத்தல்.

தொல்லுலகிற் றோன்றுகின்ற சராசரமாம் பொருளனைத்துந் தொலைத்துமாற்றி
வெல்லரிய சங்கார காளராத் திரிமிகவும் வெருட்சிமிக்க

வல்லபமா நடையுடைத்தாய் மாதர்கண மனைத்துமுடன்
மருவப்பட்டு
புல்லரிய சகமோகப் பொறிவனத்திற் புலிப்பேடு
போலவாழும்.

(இ-ள்.) தொல்லுலகிற்றோன்றுகின்ற - பழமையாகிய சகத்திலுண்டாகின்ற, சராசரமாம்பொருளனைத்தும் - தாவரசங்கமமான வஸ்துக்களனைத்தையும், தொலைத்துமாற்றி - கொன்று, வெல்லரிய - வெல்லுதற்கரிய, சங்காரகாளராத்திரி - சங்காரசத்தியானவள், மிகவும்வெருட்சி- மிகவும்பயங்கரமும், மிக்கவல்லபமாம் - மிகுந்தவல்லபமுமாகிய, நடையுடைத்தாய் - நடையையுடையவளாய், மாதர்கணமனைத்தும் - துற்காதி சத்திகளனைத்தும், உடன்மருவப்பட்டு - (தன்) னுடன் பொருந்தப்பெற்று, புல்லரிய - சாரக்கூடாத, சகமோகம் - உலகமோகமென்னும், பொறிவனத்தில் - பொலிவானகாட்டில், புலிப்பேடுபோல - பெண்புலியைப் போல, வாழும் - வாழ்வாள்—எ-று.

(இ-ரை.) பழமையாகிய சகத்திலுண்டாகின்ற தாவரசங்கமமான வஸ்துக்களனைத்தையும் கொன்று வெல்லுதற்கரிய சங்கார சத்தியானவள் மிகவும் பயங்கரமும், மிகுந்த வல்லபமுமாகிய நடையையுடையவளாய் துற்காதிசத்திகளனைத்தும் தன்னுடன் பொருந்தப்பெற்று சாரக்கூடாத உலகமோகமென்னும் பொலிவானகாட்டில் பெண்புலியைப்போலவாழ்வாள்—என்பதாம்.

(இ-ங்.) உலகத்திலுள்ள சகலவஸ்துக்களையுஞ்சங்காரஞ்செய்து பிராந்திவடிவமான சகத்திற் சகலசத்திகளுக்குஞ் சத்தியா யெதிரற்றிருக்கின்றது சங்காரசத்தி யென்பதாம். (கக உ)

## சங்காரசத்தியினடனச்சிறப்புரைத்தல்.

படர்பூதந் தொலைத்திரதம் பயில்புவியாம் பானபாத்
திரங்கைப்பற்றி
மடல்சூழற் பலங்கழுநீர் வனசமென வுலகநிரை
மாலைசூடி
விடுகோடை யிடிநகைக்கு நரவரிவை விளையாட்டு
விகங்கமாக
நெடுநீள்வன் புயமாம்பஞ் சரத்தினிடை யேந்துகின்ற
நெறியதாகி.

(இ-ள்.) படர்பூதந்தொலைத்து - மிகுந்தசீவர்களைக்கொன்று, இரதம் பயில் - இரசம்பொருந்திய, புவியாம்பானபாத்திரம் - பூமியாகிய மதுபாத்திரத்தை, கைப்பற்றி - கரத்திலேந்தி, உலகநிறையெனும் - (மூன்) றுலகமென்கின்ற, மடல்சூழ் - இதழ்களையுடைய, உற்பலங்கழுநீர்வனசம் - நீலோற்பலஞ் செங்கழுநீர் தாமரைமல (ரென்னுமிவைகளாற்றொடுத்த), மாலைசூடி - அலங்களைப்புனைந்து, விடுகோடையிடிநகைக்கும் - எறியாநின்ற கோடையிடியைப்போல மந்தகாசஞ்செய்கின்ற, நரவரியை - நரசிங்கத்தை, விளையாட்டுவிகங்கமாக-லீலைக்குரிய கிளிப்பிள்ளையாக, நெடும்- நீண்ட, நீள்வன்புயமாம் - மிகுந்த பராக்கிரமத்தையுடையபுசமாகிய, பஞ்சரத்தினிடை - கூட்டில், ஏந்துகின்ற - ஏந்திக்கொண்டிருக்கின்ற, நெறியதாகி - தன்மையையுடையவளாய்—எ-று.

(இ-ள்) மிகுந்த சீவர்களைக்கொன்று இரசம்பொருந்திய பூமியாகிய மதுபாத்திரத்தைக் கரத்திலேந்தி மூன்றுலகமென்கிற இதழ்களையுடைய நீலோற்பலஞ் செங்கழுநீர் தாமரைமலரென்னு மிவைகளாற்றொடுத்த அலங்களைப்புனைந்து எறியாநின்ற கோடையிடியைப்போல மந்தகாசஞ்செய்கின்ற நரசிங்கத்தை லீலைக்குரிய கிளிப்பிள்ளையாக நீண்ட மிகுந்தபராக்கிரமத்தை யுடைய புசமாகிய கூட்டில் ஏந்திக்கொண்டிருக்கின்ற தன்மையையுடையவளாய்—என்பதாம்.

வடநூலில் ரசாயின்பாத்திர மென்பாருமுளர்.

(ப-ம்.) ஆகாயம்போன்ற வடிவந் தனக்கவயவமென்பதுதோன்ற புவியாம்பான பாத்திரங் கைப்பற்றி யுலகநிரை மாலைசூடியென்றும், சகலத்தையுஞ் சங்கரிக்குங் கோரமுள்ள சத்தியென்பதுதோன்ற, நரவரியை விளையாட்டு விகங்கமாக வேந்துகின்றதென்றுங் கூறினர்.

(இ-ம்.) காளராத்திரி விசுவத்தைத் தன்வயமாக்குமென்பதாம். ()

## (இதுவுமது.)

மன்னுசரற் ககனம்போன் மாசின்றிச் சுரவீணை
மதுரமேவி
முன்னுயர்கா லனைக்கேளீ இக் கோகிலக்குஞ் சாய்க்கொண்டு
முழுதுமின்மை
யென்னுமடற் சிலைதாங்கி யெழுதுயரா கியகணைக
ளேந்தியெங்குந்
துன்னுநட னம்புரிந்து தன்வசமாய் மிகவிளங்கிச்
சுற்றுநிற்கும்.

(இ-ள்.) மன்னுசரற்ககனம்போல் - நிலையான சாற்காலத் தாகாயத்தைப்போல, மாசின்றி - (சரீரத்திற்) களங்கமின்றி, சுரவீணைமதுரமேவி- சுரவீணை(இனிசையையொத்த) மதுரவசனத்தைப் பொருத்தி (யிருக்கின்ற), முன்னுயர்காலனை-பழைய மகாகாலனை, கேளீஇ - விளையாட்டின் பொருட்டு, கோகிலக்குஞ்சாக்கொண்டு-குயிற்பார்ப்பாகக் கைக்கொண்டு, முழுதுமின்மையென்னும் - சர்வபாவமென்கின்ற, அடற்சிலைதாங்கி - வெற்றி (பொருந்திய) வில்லைத்தரித்து, எழுதுயராகியகணைகளேந்தி - உண்டாகின்ற துன்பங்களாகிய வம்புகளைத்தரித்துக்கொண்டு, எங்கும் - எவ்விடத்திலும், தன்வசமாய் - தனதிச்சைப்படி, துன்னுநடனம்புரிந்து- பொருந்திய நிருத்தஞ்செய்து, மிகவிளங்கிச்சுற்றுநிற்கும் - மிகவும்பிரகாசித்துச் சுழன்றுகொண்டிருக்கின்றாள்—எ-று.

(இ-வா.) நிலையான சாற்காலத்தாகாயத்தைபோல சரீரத்திற்களங்கமின்றி சுரவீணையினிசையையொத்த மதுரவசனத்தைப் பொருந்தியிருக்கின்ற பழைய மகாகாலனை விளையாட்டின்பொருட்டு குயிற்பார்ப்பாகக் கைக்கொண்டு சர்வாபாவ மென்கின்ற வெற்றிபொருந்திய வில்லைத்தரித்து உண்டாகின்ற துன்பங்களாகிய வம்புகளைத் தரித்துக்கொண்டு எவ்விடத்திலும் தனதிச்சைபடி பொருந்திய நிருத்தஞ்செய்து மிகவும் பிரகாசித்துச் சுழன்றுகொண்டிருக்கின்றாள்—என்பதாம்.

(இ-ஃ.) காளராத்திரி சர்வத்தையுஞ் சங்கரிக்கின்ற மகாகாலனையுந் தனது விநோதக்கருவியாய் வைத்திருக்குமென்பதாம். (ககச)

## (இதுவுமது)

பொன்னுலகு தரியணியாம் புணர்பாவ மெனுநூலாற்
        பூட்டிக்கட்டும்
பன்னரகச் சிலம்புகளைப் பாதலமாம் பதத்தணியும்
        பானுத்திங்க
ளென்னுமணி சேரிமவா னெனுமெலுப்பு மணிமேரு
        வென்னும்பொற்பூண்
டன்னிருகா தினுந்தரிக்குஞ் சக்கரவெற் பணிகலையாய்த்
        தழுவுமன்றே.

(இ-ள்.) பொன்னுலகு -சுவர்க்கம, தரியணியாம் - (சிரத்திற்) றரிக்குமாபரணமாம், புணர்பாவமெனும் - பொருந்தினதீவினையென்கின்ற, நூலால் - தந்துவினலை, பூட்டிக்கட்டும் - கோத்துக்கட்டப்பட்ட, பன்னரகச் சிலம்புகளை - பலநகரமென்னுநூபுரங்களை, பாதலமாம்பதத்தணியும் - பா

தாளமென்கின்ற பாதத்திற்றரிப்பள், பானுத்திங்களென்னும் - சூரியசந்திரரென்கின்ற, அணி - குண்டலாபரணங்களையும்,சேர் - சேர்ந்த, இமவானெனும் - இமயமலையென்கின்ற, எலுப்புமணி - அஸ்தியாபரணத்தையும், மெருவென்னும்-மகாமேருவென்கின்ற, பொற்பூண்-சொன்னுபரணத்தையும், தன்னிருகாதினும்-தனதிரண்டுசெவியிலும், தரிக்கும் - (கீழணிமேலணியாகத்) தரிப்பள், சக்கரவெற்பு - சக்கரவாளகிரியை, அணிகலையாய் - (அறையிற்) றரிக்கப்பட்டமேகலையாக, தழுவும் - (சங்காரசத்தியானவள்) தரிப்பள்—எ-று.

(இ-ன.) சுவர்க்கம் சிரத்திற்றரிக்கு மாபரணமாம். பொருந்தின தீவினையென்கின்ற தந்துவினல் கோத்துக் கட்டப்பட்ட பலநரகமென்னு நூபுரங்களை பாதாளமென்கின்ற பாதத்திற் றரிப்பள். சூரியசந்திரரென்கின்ற குண்டலாபரணங்களையும், சேர்ந்த இமயமலையென்கின்ற அஸ்தியாபரணத்தையும், மகாமேருவென்கின்ற சொன்னுபரணத்தையும், தனதிரண்டுசெவியிலும் கீழணி மேலணியாகத் தரிப்பள். சக்கரவாளகிரியை அரையிற்றரிக்கப்பட்ட மேகலையாக சங்காரசத்தியானவள் தரிப்பள்—என்பதாம்.

(இ-ḥ.) சங்காரசத்தி, சுவர்க்கமுதல் னரகபரியந்தங்களை விசித்திரமானவாபரணங்களாகத் தரிக்குமென்பதாம். (ககரு)

## (இதுவுமது)

பின்னுறத்தாழ்ந் தலைந்திலங்கு முருகன்வா கனமேடம்
பீலிசூடு
முன்னயனப் பெருங்குழிகள் பயன்செய்யு மதிச்சடைதாழ்
முடிகள்பூணுங்
கன்னியுமை குழற்கவரி மலைநிகர்பை ரவராடுங்
கபந்தமேவும்
பன்னயனக் குழிவிளங்கு மிந்திரன்றன் மேனியெனும்
பலியோடேந்தும்.

(இ-ள்.) பின்னுறத்தாழ்ந்து - பின்பக்கத்திற்றாழ்ந்து, அலைந்திலங்கும் - அசைந்துவிளங்காநின்ற, முருகன்வாகனம் - சுப்பிரமணியரது வாகனமென்கின்ற, மேடம் - வருடையும்,பீலி - மயிலையும், சூடும் - தரிப்பள், முன்னயனப்பெருங்குழிகள் - மூன்றுகண்களென்னும் பெரியபள்ளங்களால், பயஞ்செய்யும் - அச்சஞ்செய்யப்பட்ட, மதி - சந்திரனை (யணிந்த), சடை.தாழ் - சடிலநான்ற (வுருத்திரர்களின், முடிகள்பூணும் - சிரசைத்

தரிப்பவள், கன்னி - கன்னியாகிய, உமை - பரமேஸ்வரியினுடைய, குழற்கவரி - கூந்தலென்னுஞ்சாவரத்தையும், மலைநிகர்பைரவர் - பருப்பதத்துக்கொப்பானபைரவர்களின், ஆடுங்கவந்தம் - துள்ளுகின்றகவந்தங்களையும், மேவும் - தரிப்பள், பன்னயனம் - ஆயிரங்கண்களென்கின்றகுழிபள்ளம், விளங்கும் - பிரகாசியாநின்ற, இந்திரன்றன் - தேவேந்திரனது, மேனியெனும் - சரீரமென்கின்ற, பலியோடு - பிக்ஷாபாத்திரத்தை, ஏந்தும்- தரிப்பள்—எ-று.

(இ-ள்.) பின்பக்கத்திற்றாழ்ந்து அசைந்து விளங்காநின்ற சுப்பிரமணியரது வாகனமென்கின்ற வருடையும், மயிலையும் தரிப்பள். மூன்றுகண்களென்னும் பெரியபள்ளங்களால் அச்சஞ்செய்யப்பட்ட சந்திரனையணிந்த சடிலநான்ற வுருத்திரர்களின் சிரசைத் தரிப்பள். கன்னியாகிய பரமேஸ்வரியினுடைய கூந்தலென்னுஞ் சாமரத்தையும், பருப்பதத்துக்கொப்பான பைரவர்களின் துள்ளுகின்ற கவந்தங்களையும் தரிப்பள். ஆயிரங்கண்களென்கின்ற குழிபள்ளம் பிரகாசியாநின்ற தேவேந்திரனது சரீரமென்கின்ற பிக்ஷாபாத்திரத்தைத்தரிப்பள்—என்பதாம்

(ப-ம்.) சங்கார கிருத்தியமுள்ள வுரித்திரரையுஞ் சங்கரிப்பவளென்பார் மதிச்சடைதாழ்முடிகள்பூணுமென்றார்.

(இ-ம்.) கோரசத்தி உருத்திரன் முதலிய சகலரையுந் தன்வயமாக்குமென்பதாம். (ககசு)

## (இதுவுமது.)

மிகவுணங் குசாரீர கட்வாங்கப் பங்குகளால்
விளக்கந்துன்று
மகமுடைத்தாய் தனைத்தானே பயஞ்செய்து புவனமெலாந்
தொலைத்துமாற்று
மகிலமுமா மொருவடிவின் முடிவட்ட மெனுங்கமலத்
தலங்கலோடு
நிகரினட னம்புரிந்து பெருங்கற்பந் தனில்விளங்கா
நிற்குமன்றே.

(இ-ள்.) மிகவுணங்குசாரீரம் - மிகவுமிளைத்தசரீர (சம்பந்தமான),கட்வாங்கப்பங்குகளால்-நரம்புகளால் கோக்கப்பட்ட சிரக்கபாலமாலைகளால், விளக்கந்துன்றும் - பிரகாசமிகுந்த, மகமுடைத்தாய் - ஆகாயத்தை யுடையவளாய், தனைத்தானேபயஞ்செய்து - தனக்குத்தானேபயங்கரமாய், புவனமெலாம்-உலகங்களனைத்தையும்,தொலைத்துமாற்றும் - நாசஞ்செய்வள்,

அகிலமுமொருவடிவின் - விஸ்வரூபங்கொண்ட விட்டுணுவினது, வட்ட மெனும் - விருத்தமாகிய, முடி - சிரங்களென்கின்ற, கமலத்து - தாமரை மலர்களாற் (றொடுத்த), அலங்கலோடும் - மாலைகளுடன், நிகரில் - ஒப்ப ற்ற, நடனம்புரிந்து - நிருத்தஞ்செய்து, பெருங்கற்பந்தனில் - சர்வசங்கார காலத்தில், விளங்காநிற்கும் - பிரகாசித்துக்கொண்டிருப்பள்—எ-று.

(இ-ள்) மிகவுமிளைத்த சரீரசம்பந்தமான நரம்புகளாற் கோக்கப்பட்ட சிரக்கபாலமாலைகளால் பிரகாசமிகுந்த ஆகாயத் தையுடையவளாய் தனக்குத்தானே பயங்கரமாய் உலகங்களனைத் தையும் நாசஞ்செய்வள். விஸ்வரூபங்கொண்ட விட்டுணுவினது விருத்தமாகிய சிரங்களென்கின்ற தாமரைமலர்களாற் றொடுத்த மாலைகளுடன் ஒப்பற்ற நிருத்தஞ்செய்து சர்வசங்காரகாலத்தில் பிரகாசித்துக்கொண் டிருப்பள்—என்பதாம்.

மாகமென்பது, மகமெனக் குறுகிநின்றது, முன்கவியில் ருத்திரகபா லமும், பின்னர் விஷ்ணுகபாலமும் சொல்லப்பட்டமையால், கட்வாங்க மென்பது, பிரமகபாலமெனவமையும்.

(ப-ம்.) பிரம விஷ்ணுக்களைச்சங்கரித்தாளென்பார், கட்வாங்கமென் றும் முடிவட்டமென்றுங் கூறினர்.

(இ-ம்.) சங்காரசத்தி சிருஷ்டி திதி கிருத்தியமுள்ள பிரமவிஷ்ணுக் களையுந் தன்வயமாக்கிச் சர்வசூனிய மயானத்தி னிருத்தஞ்செய்யும் பரமே ஸ்வரசத்தியாம். (கள)

**சகத்தைத் தனமாகவும், சீவனை யாயுள்முதலிய வோன்பதாகவும், பரத்தை காலயாகவும் பதத்துத்தூஷித்து மேலிவைக் கேல் லாங் காரணமான விசுரசத்தியைச்சோல்லி அதனையுஞ் சத்தாமாத்திரத்திலடக்கி அச்சத்தோன்றுமே சேட மேன்பதை வேளிப்படுத்து நிமித்தம் நியதி சத்தி முதலியவற்றையு மித்தையேன நீக்குகின்றது.**

பொருள்களெலாம் பொருளன்றாங் கடியமன மகங்காரத்தின்
பொருட்டேயாகுந்
தெருளுறுபா வங்களெலா மபாவமாம் பவமுடிவு
தெரியாதாகு

மருளுமதி யாகுலத்தா லுளம்வெதும்பு மாசைநோய்
வளராநிற்கு
மிருண்மயறீர் பவரரிய ரெவ்வனந்தான் வருத்தத்தா
லேகாநிற்கும்

(இ-ள்.) பொருள்களெலாம் - (இப்பொழுதுசொல்லப்பட்ட) வஸ்துக்களியாவும், பொருளன்றும் - (நித்திய) வஸ்துக்களல்லவாம், கடியமணம் - கொடியமனமானது, அகங்கரத்தின்பொருட்டேயாகும்-அகங்காரநிமித்தமேயாம், தெருளுறுபாவங்களெலாம் - தெரியப்பட்ட பொருள்களியாவும், அபாவமாம் - இல்லாததாகப்போகின்றன, பவமுடிவுதெரியாதாகும் -சநநங்களின் முடிவுதெரியவில்லை, (ஆதலின்) மதிமருளும் - அறிவுமயங்கும், ஆகுலத்தால் - வியாகுலத்தினால், உளம்வெதும்பும்-மனம்வருந்தும், ஆசைநோய் - இச்சாவியாதிகள், வளராநிற்கும் - (யாவர்க்கு) மிகுந்திருக்கின்றன, இருண்மயறீர்பவர் - இருண்டமயக்கமான விச்சைதீருஞ்சத்துக்கள், அரியர் - அரியராம், எவ்வனந்தான்- (புருடார்த்தசாதனத்திற்குரிய) வெவ்வனமானது, வருத்தத்தா லேகாநிற்கும் - (பயனின்றிய) முயற்சியினாற்றானே கழிகின்றது—எ-று.

(இ-னா.) இப்பொழுது சொல்லப்பட்ட வஸ்துக்களியாவும் நித்தியவஸ்துக்களல்லவாம். கொடியமனமானது அகங்காரநிமித்தமேயாம். தெரியப்பட்ட பொருள்களியாவும் இல்லாததாகப்போகின்றன. சநநங்களின் முடிவு தெரியவில்லை. அறிவுமயங்கும். வியாகுலத்தினால் மனம்வருந்தும். இச்சாவியாதிகள் யாவர்க்கு மிகுந்திருக்கின்றன. இருண்டமயக்கமானவிச்சை தீருஞ் சத்துக்கள் அரியபுருடார்த்த சாதனத்திற்குரிய வெவ்வனமானது பயனின்றிய முயற்சியினாற்றானேகழிகின்றது—என்பதாம்.

(இ-ம்.) நித்தியமான வாத்மார்த்தத்தையடைய முயற்சியாமல்வீணுக்கழிக்குங் காலத்துக்கு விசனப்பட்டதாம். (கக அ)

---

## சாதுசங்க மரிதெனல்.

பெரியவர்நண் பதிதூரஞ் செல்கதிகிட் டாதுண்மை
பெற்றகோணுதாங்
கரியமன மோகிக்கு முண்மகிழ்ச்சி தூரமதாங்
கருணைதோன்று

விரியுமிழி வதிதூரத் தினுமணுகு நிலைமைபோய்
வேறும்வீழ்வோர்
திரியவுட னெழுவர்சிறி யவர்கூட்ட மெளிதரிது
தெளிந்தோர்கூட்டம்.

(இ-ள்.) பெரியவர்நண்பதிதூரம் - மகான்களிடத்தன்பானது நெடுந்தூரமாம், (ஆதலின்) செல்கதிகிட்டாது - அடையத்தக்கமோக்ஷமார்க்கங் கிடையாது, (ஆதலின்) உண்மைபெறற்கொணுதாம் - ஆத்மதத்துவம் பெறுதற்கரிதாம், கரியமனம் - களங்கமனது, மோகிக்கும் - (பிறற்சுகந் தனதுசுகமா யனுபவிக்கு மைத்திரியில்லாமையான்) மயங்கும், (ஆதலின்) உண்மகிழ்ச்சி தூரமதாம் - (பிறர்செய்யுஞ் சற்கிருத்தியத்தி லாநந்திக்கு முதிதையின்மையா) னகமகிழ்ச்சிதூரமாம், கருணைதோன்று - (பிறர்துக்கந் தன்றுக்கமாகப்பார்க்குந்தயையின்மையாற்)கிருபையுண்டாகாது, விரியுமிழிவு-பரவுகின்ற வீனமானது, அதிதூரத்தினுமணுகும்-(பிறர்செய்யுந் தீவினையிலுபேட்சையில்லாததினு) லதிதூரத்திலிருந்தாலும் வரும், நிலைமைபோய் - தைரியம்போய், வேறும் - அதைரியமாம், திரிய - கெடும்படி, வீழ்வோர் - (நரகத்தில்) வீழ்பவர், உடனெழுவர் - திரும்பவுஞ் (சுவர்க்கத்தி) லேறுவார்கள், சிறியவர்கூட்டமெளிது - மூடர்கள்சங்கமெளிதாம், தெளிந்தோர்கூட்டம் - தெளிந்தசாதுக்கள் சங்கமானது, அரிது - அரிதாம்—எ-று.

(இ-கா.) மகான்களிடத் தன்பானது நெடுந்தூரமாம். ஆதலின், அடையத்தக்க மோக்ஷமார்க்கங் கிடையாது. ஆதலின் ஆத்மதத்துவம் பெறுதற்கரிதாம் களங்கமனது பிறர்சுகந் தனதுசுகமா யனுபவிக்கு மைத்திரியில்லாமையான் மயங்கும். ஆதலின், பிறர்செய்யுஞ் சற்கிருத்தியத்தி லாநந்திக்கு முதிதையின்மையா னகமகிழ்ச்சி தூரமதாம். பிறர்துக்கந் தன்றுக்கமாகப் பார்க்குந் தயையின்மையாற் கிருபையுண்டாகாது. பரவுகின்ற வீனமானது பிறர்செய்யுந் தீவினையிலுபேட்சையில்லாததினு லதிதூரத்தி லிருந்தாலும் வரும். தைரியம்போய் அதைரியமாம். கெடும்படி நரகத்தில்வீழ்பவர் திரும்பவுஞ் சுவர்க்கத்திலேறுவார்கள். மூடர்கள்சங்கமெளிதாம். தெளிந்தசாதுக்கள் சங்கமானது அரிதாம்—எ-ம்.

(இ-ங்.) சற்சங்கமில்லாததினற் றத்துவஞானமு மற்சரமுதலியவற்றுன்மைத்திரி முதலியனவுமில்லாமற் சுழல்வார்களென்பதாம். (கககூ)

## சீவேஸ்வரசகங்க டத்துவத்தி லேக்கியமாமெனல்.

வே று.

கொண்டபாவனை பிறவியாம் பூதங்கள் குலேந்துபோந்
திசைதோன்று
கண்ட தேசங்கள் பிறசொலாத் திரிந்திடுங்
கனதிரிதுகளாகு
முண்டெனுந்தன்மை விழுங்கிட வுலகுபோ மும்பர்போம்
புவனம்போ
மண்டுவாரிபோ முடுக்கள்போந் தானவர் வானவர்
கணம்போகும்.

(இ-ள்.) கொண்ட - (தோன்றிநசிக்கின்றவஸ்துக்களிற்) பெறற, பாவனை - பாவனையானது, பிறவியாம் - பவபந்தமாம், பூதங்கள் - (வாசனு சமஸ்காரமுள்ள) சீவபரம்பரைகள், குலேந்துபோம் - கலேந்து (சுவர்க்கநரகங்களிற்) செல்லும், திசை - திக்குகள், தோன்ற - (அதைப்பகுக்குஞ் சூரியனின்மையாற்) ரேற்றுவாம், கண்டதேசங்கள்-தரிசித்ததேயங்கள், பிறசொலாத்திரிந்திடும் - மறுபேருள்ளதாகமாறுபடும், கனகிரிதுகளாகும் - கனமானமலேகள்சிதறிப்போம், உண்டெனுந்தன்மை - சத்தாசாமாணியமானது, விழுங்கிட - வியாபிக்க, உலகுபோம் - (அந்தரக்ஷ) லோக நசிக்கும், உம்பர்போம் - தேவலோகநசிக்கும், புவனம்போம் - பூலோகநசிக்கும், மண்டுவாரிபோம் - நெருங்கிய சமுத்திரம்வற்றும், உடுக்கள்போம் - நக்ஷத்திரங்கள் சிதறும், தானவர் - அசுரர்களும், வானவர் - தேவர்களு (மாகிய விருவருடைய), கணம்போகும் - கூட்டங்களு நசிக்கும்—எ-று.

(இ-டா.) தோன்றி நசிக்கின்ற வஸ்துக்களிற்பெற்ற பாவனை யானது பவபந்தமாம். வாசனுசமஸ்காரமுள்ள சீவபரம்பரைகள் கலேந்து சுவர்க்கநரகங்களிற்செல்லும், திக்குகள் அதைப்பகுக்கு ஞ் சூரியனின்மையாற் ரேற்றுவாம். தரிசித்த தேயங்கள் மறுபேருள்ளதாகமாறுபடும். கனமானமலேகள் சிதறிப்போம். சத்தாசாமாணியமானது வியாபிக்க அந்தரக்ஷலோக நசிக்கும். தேவலோக நசிக்கும். பூலோக நசிக்கும். நெருங்கிய சமுத்திரம்வற்றும். நக்ஷத்திரங்கள் சிதறும் அசுரர்களும், தேவர்களுமாகிய விருவருடைய கூட்டங்களு நசிக்கும்—என்பதாம்.

(இ-ீ.) சத்தாமாத்திரத்திற்பாவனையாலுண்டானவனைத்து மித்தையிருக்க நாமெப்படி நித்தியமாவோ மென்பதாம். (கஉo)

(இதுவுமது.)

சித்தர் பொன்றுவர் துருவனுஞ் சிதைகுவன் சிவனயன்
　　　　றிருமார்பன்
றத்துவந்தனி லொன்றுவர் காலமுந் தருமமு
　　　　முடிவாகு
மத்தவானும்போ மயக்கமே தருவதாய் வாக்கொடு
　　　　செவிக்கெட்டாச்
சுத்தமாம்பொரு ளொன்றினு லிகழ்வுறத் தொல்லுல
　　　　கிழிவாகும்.

(இ-ள்.) சித்தர்பொன்றுவர் - சித்தர்களு நசிப்பார்கள், துருவனுஞ் சிதைகுவன் - துருவனுங் கெடுவான், சிவனயன்றிருமார்பன் - மும்மூர்த்திகளும், தத்துவந்தனிலொன்றுவர் - பரதத்துவத்திற்கலப்பார்கள், காலமும் - (சிருஷ்டியாதியைச் சங்கற்பத்தாலுண்டாக்கு மீஸ்வரசத்தியான) காலமும், தருமமும் - (ஞாயமா) விதிக்கிற நியமனசத்தியும், முடிவாகும்- அந்தமாம், மத்தவானும்போம் - பருத்தவாகாயமு நாசமாம், மயக்கம் - (மாயா) மயக்கத்தை, தருவதாய் - நிவிர்த்திசெய்யும்பொருட்டு, கொடுப்பவராயும், வாக்கொடுசெவிக்கெட்டா - வசனத்துக்குங் கேள்விக்குமெட்டாத (தத்துவ ஸ்வரூபராயும்), சுத்தமாம்பொருள் - களங்கரகிதமான ஞானமூர்த்தி (யராயுமிருக்கின்ற), ஒன்றினுல் - ஒன்றுன (பரமேஸ்வர) னுல், இகழ்வுற - நிந்தைபொருந்த, தொல் - பழமையாக (த்தோன்றுகின்ற), உலகிழிவாகும் - சகத்தீனமாம்—எ-று.

(இ-ரை.) சித்தர்களுநசிப்பார்கள். துருவனுங்கெடுவான் மும்மூர்த்திகளும் பரதத்துவத்திற்கலப்பார்கள் சிருஷ்டியாதியைச் சங்கற்பத்தாலுண்டாக்கு மீஸ்வரசத்தியான காலமும், ஞாயமா விதிக்கிற நியமனசத்தியும், அந்தமாம். பருத்தவாகாயமுநாசமாம். மாயாமயக்கத்தை நிவர்த்திசெய்யும் பொருட்டுக் கொடுப்பவராயும். வசனத்துக்குங் கேள்விக்கு மெட்டாத தத்துவஸ்வரூபராயும், களங்கரகிதமான ஞானமூர்த்தியராயுமிருக்கின்ற ஒன்றுன பரமேஸ்வரனுல் நிந்தைபொருந்த பழமையாகத் தோன்றுகின்ற சகத்தீனமாம்—என்பதாம்.

(இ-ம்.) பரிசுத்தமான ஞானத்தில் மும்மூர்த்திமுதலிய பேதங்களில்லாதிருக்க நாமெப்படி யிருப்போமென்பதாம். (கஉக)

## சகத்துண்மையென்பதை நிந்தித்தல்.

இன்னபோது மங்கலங்களா மிருதுவீதி
யாத்திரைக் கிதுகால
மன்னதே யுறவிச் சுகமிருந்தவா
வற்புத முளபோக
மென்னவென்ன வாளாநினைத் துலகங்க
ளிறக்கின்ற வுயர்ந்தோரை
யுன்னிமுந் துறும்பகலெலாந் தேடிடா
தொழியுமேற் றுயிலுண்டோ.

(இ-ள்.) இன்னபோது - இக்காலம், மங்கலங்களாம் - மதனோற்சவமாம், ஈது - இது,இருது-வசந்தகாலமாம், இயாத்திரைக்கிதுகாலம் - (தேச) யாத்திரைக்கிது (நல்ல) காலமாம், அன்னதே - அவ்வளவு சிறப்புள்ளதே, உறவு - பந்துக்களாம், இச்சுகமிருந்தவா - இந்தச்சுகமிருந்தபிரகாரமும், அற்புதமுளபோகமும், - அதிசயமுள்ளபோகமும்,என்ன - என்னவியப்புள்ளதாம், என்ன - (இப்படி) யென்று, வாளாநினைத்து - விருதாவாகச் சிந்தித்து, உலகங்களிறக்கின்ற - சகத்துளார் நசிக்கின்றூர்கள், உயர்ந்தோரை - மகான்கள் (சரித்திரத்) தை, உன்னி - (தான்செய்யச்) சிந்தித்து, முந்துறும்பகலெலாந்தேடிடாது - முன்னதாயிருக்கின்ற பகற்காலங்களிலெல்லாந்தேடாமல், ஒழியுமேல் - (அக்காலம்வீணகப்) போகுமானல், துயிலுண்டோ - (இரவி) னித்திரையுண்டாமோ—எ-று.

(இ-னா.) இக்காலம் மதனோற்சவமாம். இது வசந்தகால மாம், தேசயாத்திரைக்கிது நல்லகாலமாம். அவ்வளவு சிறப்புள்ளதே பந்துக்களாம். இந்தச்சுகமிருந்த பிரகாரமும், அதிசயமுள்ளபோகமும், என்னவியப்புள்ளதாம். இப்படியென்றுவிருதாவாகச் சிந்தித்து சகத்துளார் நசிக்கின்றூர்கள். மகான்கள் சரித்திரத்தைத் தான்செய்யச் சிந்தித்து முன்னதாயிருக்கின்ற பகற்காலங்களிலெல்லாந் தேடாமல் அக்காலம் வீணகப்போகுமானல் இரவினித்திரையுண்டாமோ—என்பதாம்.

(இ-ம்.) போகங்களை யற்புதமென்று வீணகக்கருதி பிரமவிசாரத்தை விரும்பாயலிருப்பதற்கு விசனப்பட்டதாம். (கஉஉ)

## சம்சாரசுக முடிவிற் றுன்பமாமெனல்.

மனைவியு மகரும் பொன்னு மமதைசெய் தமுதம்போல
நினைவினு னேயஞ்செய்து நீணிலத் துள்ள வெல்லா
மனையவர்க் காகச்செய்வ ரருத்திக ளான வெல்லாம்
வினையுற முடியுங்காலே விடங்களின் மயக்கஞ் செய்யும்.

(இ-ள்.) மனைவியும் - இல்லாளையும், மகரும் - புத்திரர்களையும், பொன்னும் - தனத்தையும், அமுதம்போல - அமுதத்தைப்போல, மமதைசெய்து - (என்னுடையதென்) றபிமானித்து, நினைவினுனேயஞ்செய்து-மனதினுலிச்சித்து, நீணிலத்துள்ளவெல்லாம் - நீண்டபூமியின்கண்ணுள்ள (தனதுசெல்வங்க) ளனைத்தையும், அனையவர்க்காகச்செய்வர்-அந்தமனைவி புத்திரர்களுக்காகவே செய்வார்கள், அருத்திகளானவெல்லாம் - (அவ்) விருப்பமுள்ளவைகளாகியவனைத்தும், வினையுறமுடியுங்காலே - வினையினுனசிங்குங்காலத்தில், விடங்களின் - விடங்களினும், மயக்கஞ்செய்யும் - (அதிக) துக்கத்தைச்செய்யும்—எ-று.

(இ-ரை.) இல்லாளையும், புத்திரர்களையும், தனத்தையும், அமுதத்தைப்போல என்னுடையதென் றபிமானித்து மனதினுலிச்சித்து நீண்ட பூமியின்கண்ணுள்ள தனது செல்வங்களனைத்தையும் அந்த மனைவி புத்திரர்களுக்காகவே செய்வார்கள். அவ்விருப்பமுள்ளவைகளாகிய வனைத்தும் வினையினு னசிக்குங்காலத்தில் விடங்களினும் அதிக துக்கத்தைச்செய்யும்—என்பதாம்.

(இ-ஃ) தனதுசெல்வங்களைத் தானபிமானித்திருக்கின்ற மனைவி புத்திரர்களுக்குக் கொடுக்கும்போதிற் சுகமாயு மவைநசிக்கும்போது துக்கமாயும் வருத்துமென்பதாம். (கஉரு)

## எதிரற்ற செல்வமு நசிக்குமெனல்.

பகையெலாந் துரந்துதள்ளிப் பாக்கியம் பலவந்தெய்த
விகலறத் துய்க்குநாளி லெவ்விடத் திருந்தோ வந்து
மிகையறு காலன்கொல்லும் விதமா மிடத்தினின்று
வருந்தின்வந் தோன்றுவார்போன் மனைவிசேய்முதலாமாயை

(இ-ள்.) பகையெலாம்-சத்துருக்களனைத்தையும், துரந்துதள்ளி-துரத்திவிட்டு, பாக்கியம் - செலவம், பலவந்தெய்த - அனேகம்வர, இகலறத்துய்க்குநாளில் - (அவைகளை) எதிரில்லாம லனுபவிக்குங்காலத்தில், எவ்விடத்திருந்தோவந்து - எங்கிருந்தோவந்து, மிகையறுகாலன்கொல்லும் - கேடற்றகால னுசஞ்செய்வான், மனைவிசேய்முதலாமாயை - மனைவிபுத்திரர்முதலானமாயைகள், விவிதமாமிடத்தினின்று-நானாவிதமானவிடங்களிலிருந்து, வருந்தின்வந்தொன்றுவார்போல் - மார்க்கத்தில்வந்து கூடுவார்போலவாம்—எ-று.

(இ-ரை.) சத்துருக்களனைத்தையும் துரத்திவிட்டு செல்வம் அனேகம்வர அவைகளை எதிரில்லாம லனுபவிக்குங்காலத்தில் எங்கிருந்தோவந்து கேடற்றகால னுசஞ்செய்வான், மனைவி புத்திரர் முதலான மாயைகள் நானாவிதமான விடங்களிலிருந்து மார்க்கத்தில்வந்து கூடுவார்போலவாம்—என்பதாம்.

(இ-ரி.) சார்வபூம னனுபவிக்குஞ் சுகமும்சம்சாரமு மாயாசம்பந்தமாதலாற் கெடுமென்பதாம. (கஉச)

## பிரமராயுளு மித்தையெனல்.

கற்பமாங் கணகாலத்திற் கமலயோ னிகளுமாய்வர்
சிற்பமாங் கலைகளாலே செறிந்தகா லத்தின்சால
வற்பமு மகத்துநாடி யளப்புறு புந்திபொய்யாம்
பற்பல தீதின்மாலும் பயிலுமன் னுயிர்களெல்லாம்.

(இ-ள்.) கற்பமாங்கணகாலத்தில் - கற்பமாகியக்ஷணநேரத்தில, கமலயோனிகளுமாய்வர் - பிரமாக்களுநசிப்பார்கள், சிற்பமாங்கலைகளால் - சிறிதாகிய காலநுட்பத்தினால், செறிந்த - நெருங்கிய, காலசாலத்தின் - காலசமுகத்தின், அற்பமும் - அணுத்துவத்தையும், மகத்தும் - மகத்துவத்தையும், நாடி - சிந்தித்து, அளப்புறுபுந்திபொய்யாம் - அளவுசெய்யும் புத்தியானது மித்தையாம், பயிலுமன்னுயிர்களெல்லாம் - சொல்லிய சீவர்களனைத்தும், பற்பலதீதின்மாலும்-நானாவிதமான தீமையில்மயங்குவர்.

(இ-ரை.) கற்பமாகிய க்ஷணநேரத்தில் பிரமாக்களு நசிப்பார்கள்; சிறிதாகிய காலநுட்பத்தினால் நெருங்கிய காலசமுகத்தின் அணுத்துவத்தையும், மகத்துவத்தையும் சிந்தித்து அளவுசெய்யும் புத்தியானது மித்தையாம். சொல்லிய சீவர்களனைத்தும் நானாவிதமான தீமையில் மயங்குவர்—என்பதாம்.

(இ-ம்.) பிரமன்முதலிய யாவராயுளு மித்தையாதலால், அற்பாயுசுந் தீர்க்காயுசு மின்றென்பதாம். (கஉரு)

## கருமபல முதலிய யாவுமித்தையெனல்.

கற்றவ ரரியர்சாலக் கருமமுந் துயரினலே
யுற்றசூ னியமாமெல்லா முயிர்தரித் துழல்வதெங்ஙன்
னற்றவத் தினமுமேலாஞ் செல்வமு மந்தச்செய்கை [ம்
முற்றுமாய்ந் துளத்தேதோன்று மியாமுமம் முறையிற்செல்வோ

(இ-ள்.) சால - மிகவும், கற்றவரரியர் - கற்றுணர்ந்த பெரியோர்களரிதாயிருப்பர், கருமமும் - (வர்ணச்சிரமத்துக்குரித்தாய்நிறைந்த) கிரியைகளும், துயரினல் - துன்பத்தினல், எல்லாம்-சகலமும், உற்றசூனியமாம்-பொருந்திய விரசமில்லாததாம், எங்ஙன் - எப்படி, உயிர்தரித்துழல்வது-சீவிப்பது, அற்றவத்தினமும் - அப்படிசிறப்புள்ள நாள்களும், மேலாஞ் செல்வமும் - மேலானசம்பத்தும், அந்தச்செய்கை - அத்தொழில்களுமாகிய முற்றுமாய்ந்து - யாவுநசித்து, உளத்துதோன்றும் - நினைப்புமாத்திரமாய்த்தோற்றும், இயாமுமம்முறையிற்செல்வோம் - நாமுமந்தமார்க்கத்திற்செல்வோம்.—எ-று.

(இ-ள்.) மிகவும் கற்றுணர்ந்த பெரியோர்களரிதாயிருப்பர், வர்ணச்சிரமத்துக்குரித்தாய் நிறைந்த கிரியைகளும் துன்பத்தினல் சகலமும் பொருந்திய விரசமில்லாததாம். எப்படி சீவிப்பது? அப்படிசிறப்புள்ள நாள்களும், மேலானசம்பத்தும், அத்தொழில்களுமாகிய யாவுநசித்து நினைப்புமாத்திரமாய்த்தோற்றும். நாமுமந்த மார்க்கத்திற்செல்வோம்—என்பதாம்.

(இ-ம்.) நல்லதினங்கள் முதலியயாவு மில்லாதிருக்க நமக்கென்ன கதியென்று வியசனப்பட்டதாம். (கஉசு)

## உயர்வுதாழ்வு நிலையன்றெனல்.

பிணிசெயா பத்துச்செல்வம் பிறப்பிறப் பென்பவெல்லாங்
கணிதமாங் கணத்திற்போகா தனவில்லைக் கடியசூரன்
றுணிவனே ரேழையாலே றூறுட றுணியுமொன்றாற்
பணிதரு கீழோர்மேலாம் பலவட்டம் வருமிவ்வாறே

(இ-ள்.) பிணிசெயாபத்து-துன்பஞ்செய்கின்றவாபத்தும், செல்வம்-சம்பத்தும், பிறப்பு - சநநமும், இறப்பு - மரணமும், என்பவெல்லாம்-என்பனவனைத்தும், கணிதமாம்-கணிதநூலிற் (சொல்லுவ) தான, கணத்தில்-க்ஷணத்தில், போகாதனவில்லை - நசியாதவையில்லை, கடியசூரன் - கொடியவீரன், ஒரேழையால் - வீரமில்லாதவொருவனுல், துணிவன் - நசிப்பன், ஒன்ருல் - ஒருவனுல், நூலுடறுணியும் - நூறுபேர்கொல்லப்படுவார்கள், பணிதருஙீழோர் - வணங்கத்தகுமீனர்கள், மேலாம் - மேலானப்ரபுவாவார்கள், இவ்வாறு-இவ்வண்ணம், பலவட்டம்வரும் - (சகத்தி) னிடையின்றிச் சக்கரமாகச்சுழலும்—எ-று.

(இ-ை.) துன்பஞ்செய்கின்ற வாபத்தும், சம்பத்தும், சநநமும், மரணமும் என்பனவனைத்தும் கணிதநூலிற் சொல்லுவதான க்ஷணத்தில் நசியாதவையில்லை. கொடியவீரன் வீரமில்லாதவொருவனுல் நசிப்பன். ஒருவனுல் நூறுபேர் கொல்லப்படுவார்கள், வணங்கத்தகுமீனர்கள் மேலான ப்ரபுவாவார்கள். இவ்வண்ணம் சகத்தினிடையின்றிச் சக்கரமாகச் சுழலும்—என்பதாம்.

(இ-ம்.) சுகதுக்கமுதலியயாவுங்கணத்தினசிப்பதுமன்றிவரம்பில்லாமற் சுழலுமென்பதாம். (கஉஎ)

## இராசபோகங்களி லிச்சையுண்டாகாதெனல்.

அனையகுற் றங்களாங்காட் டெரியினு லறவும்வெந்த
நினைவினீ ரிற்கானற்போ னெடியபோ கங்கடோன்ரு
வினையுறு மரணம்வாழு ளிரண்டையும் விரும்புகில்லே
னினையதோ ரிடருமின்றி யிருந்தவா றிருக்கின்றேனல்.

(இ-ள்.) அனையகுற்றங்களாம்-அப்படிப்பட்ட தோஷங்களென்னும், காட்டெரியினுல் - காட்டுத்தீயினுல், அறவும்வெந்த-மிகவும்வெந்த, நினைவில் - (என்) மனதில், நீரில் - சலத்தில், கானல்போல்-கானற்சலந்(தோன்றுதது) போல, நெடியபோகங்கடோன்ரு - பரவியசெல்வாபேக்ஷையுண்டாகாது, வினையுறு - இராசப்ரவிர்த்தியிற் செல்கின்ற, வாழுள்-ஆயுளும், மரணம் - இறப்புமாகிய,இரண்டையும்-(இவ்)விரண்டையும், விரும்புகில்லேன் - இச்சிக்கேன், இனையது-இப்படிப்பட்டதாகிய, ஓரிடருமின்றி - ஓர்துன்பமுமில்லாமல், இருந்தவாறு - (இப்பொழு) திருக்கின்றபடியே, இருக்கின்றேன் - இருக்கிறேன்—எ-று.

(இ-ள.) அப்படிப்பட்ட தோஷங்களென்னும் காட்டுத்தீயினுல் மிகவும் வெந்த என்மனதில் சலத்தில் கானற்சலந்தோன்றுததுபோல பரவிய செல்வாபேக்ஷை யுண்டாகாது, இராசப்ரவிர்த்தியிற் செல்கின்ற ஆயுளும் இறப்புமாகிய இவ்விரண்டையும் இச்சிக்கேன் இப்படிப்பட்டதாகிய ஓர் துன்பமுமில்லாமல் இப்பொழுதிருக்கின்றபடியே இருக்கிறேன்—என்பதாம்.

(இ-°.) முன்சொன்ன தனமுதலான தோஷாக்கினியினுலெரிக்கப்பட்டிருக்கின்ற நான், போகமுதலியவற்றில் விரும்பாமற்சும்மாயிருக்கின்றேனென்பதாம். (கஉஅ)

## சித்தத்தியாகம் விரும்பல்.

தெரிவுறு வயத்தில்வந்த புந்தியாற் சித்தந்தன்னைப்
பரிகரி யாதுவிட்டாற் பரிகரிப் பதுமற்றெந்நாள்
விரிவிடம் விடமதன்று விடயமே விடமாந்துன்பம்
புரிவிடங் கொல்வதோர்மெய் புலன்மறு பிறப்புங்கொல்லும்.

(இ-ள்.) தெரிவுறுவயத்தில்வந்த-அறிவின்வசமாய்வந்த, புந்தியால்-(உமது) புத்தியினுல், சித்தந்தன்னை - (என்) மனதை, பரிகரியாதுவிட்டால் - நிவிர்த்தி செய்யாமற்போனுல், பரிகரிப்பது - நிவிர்த்திசெய்வது, மற்றெந்நாள் - இனியெக்காலம், விரிவிடம்விடமதன்று - ஆலகாலவிடம் விடமன்று, விடயமேவிடமாம் - விடயமேவிடமாகும், துன்பம்புரிவிடம்-துன்பஞ்செய்கின்றவிடமானது, ஓர்மெய் - ஒருசரீரத்தை, கொல்லும் - கெக்குடும், புலன்மறுபிறப்புங்கொல்லும் - விடயவிடமானதினிவருந் தேகங்களையுங்கெடுக்கும்—எ-று.

(இ-ை.) அறிவின்வசமாய்வந்த உமது புத்தியினுல் என்மனதை நிவிர்த்திசெய்யாமற்போனுல் நிவர்த்திசெய்வது இனியெக்காலம்? ஆலகாலவிடம்விடமன்று; விடயமேவிடமாகும். துன்பஞ்செய்கின்றவிடமானது ஒருசரீரத்தை கெடுக்கும் விடயவிடமானதினிவருந் தேகங்களையுங்கெடுக்கும்—என்பதாம்.

(இ-ீ.) முன்சாதன சதுஷ்டயமுண்டாய்அதனுல் விடயதோஷதிருஷ்டியுண்டான விவ்விவேக மிருக்கும்போதே மனோநாசஞ் செய்யாவிடில் விடயமெப்போதும் வருத்துமென்பதாம். (கஉகூ)

## சீவன்முத்த ரிலக்கணம்.

மகிழ்வுசோர் வுறவுசார்வு வாழ்வுசா வென்பவெல்லாந்
திகழ்வதா மறிவுசான்றோர் சிந்தையிற் பந்தமாகாப்
புகலுறு மாயுவாயுச் சிதறிய புயனீரொக்கு
நிகரறு போகமேக மிசையெழு நெடுமின்போலும்.

(இ-ள்.) மகிழ்வு - சுகமும், சோர்வு - துக்கமும், உறவு-பந்துக்களும், சார்வு - மித்திரர்களும், வாழ்வு - ஆயுளும், சாவு - மரணமும், என்பவெல்லாம் - என்பனவனைத்தும், திகழ்வதாம்-விளங்காநின்ற, அறிவுசான்றோர்-ஞானவான்கள், சிந்தையிற்பந்தமாகா - மனதைப்பந்தப்படுத்தாவாம், புகலுறுமாயு - சொல்லாநின்றவாயுளானது, வாயுச்சிதறிய-காற்றினாற்சிந்திய, புயனீரொக்கும் - மேகசலத் (திவலையை) யொப்பாகும், நிகரறுபோகம்-சமானமில்லாத (விடய) போகமானது, மேகமிசையெழு - முகிலுண்டாகாநின்ற, நெடுமின்போலும் - பெரியமின்னலுக்கொப்பாகும்—எ-று.

(இ-கை.) சுகமும், துக்கமும், பந்துக்களும், மித்திரர்களும், ஆயுளும்,மரணமும் என்பனவனைத்தும் விளங்காநின்றஞானவான்கள் மனதைப் பந்தப்படுத்தாவாம் சொல்லாநின்றவாயுளானது காற்றினாற்சிந்திய மேகசலத்திவலையையொப்பாகும், சமானமில்லாத விடயபோகமானது முகிலுண்டாகாநின்ற பெரியமின்னலுக்கொப்பாகும்—என்பதாம்.

(இ-ம்.) மித்தையான சுகதுக்கமுதலியயாவுஞ் சத்துக்களை வருத்தாதென்பதாம். (கந௦)

---

## ஆத்மஞானத்தை யபேக்ஷித்து விசனப்படுதல்.

மாந்தர்த மிளமைநில்லா திவையெலா மனத்தினெண்ணிச்
சாந்திகொள் பெரியோர்நீவிர் சமாதியோ கத்தைச்சார்மி
னேய்ந்தவென் சிந்தைசிவ நாயகன் வசமாகைக்கே
யேய்ந்தது நிலையுமெய்தா திறைவனைப் பிரிந்தாள் போல.

(இ-ள்.) மாந்தர்தம்-மனிதர்களுடைய, இளமைநில்லாது - (முத்திக்குச்சாதனமான) வெவ்வனம்நிலையில்லாதது, இவையெலாமனத்தினெண்ணி - இவையனைத்துமனத்திற்சிந்தித்து, சாந்திகொள்பெரியோர் - உப

சாந்தத்தையுடையவறிஞர்களாகிய, எல்லாம் - (நீங்க) ளனைவரும், சமாதி யோகத்தைச்சார்மின் - சமாதிநிஷ்டையையுடைவீர்கள், ஆய்ந்தவென்சிந்தை - ஆராய்ந்தறிந்தவென்மனமானது, சீவனுயகன்வசமாகைக்கேயேய்ந்தது - கூடஸ்தபிரமவைக்கியத்தை யடைவதற்கே யிசைந்தது, இறைவனைப்பிரிந்தாள்போல - நாயகனைப்பிரிந்த நாயகியைப்போல, நிலையும் - (ஆத்ம) நிச்சயத்திலும் (விடயவிச்சையிலும்), எய்தாது - சேராது—எ-று.

(இ-ள.) மனிதர்களுடைய முத்திக்குச்சாதனமான வெவ்வனம் நிலையில்லாதது இவையனைத்து மனதிர்சிந்தித்து உபசாந்தத்தையுடைய வறிஞர்களாகிய நீங்களனைவரும் சமாதிநிஷ்டையை யடைவீர்கள், ஆராய்ந்தறிந்த வென்மனமானது கூடஸ்தபிரமவைக்கியத்தையடைவதற்கேயிசைந்தது, நாயகனைப்பிரிந்த நாயகியைப்போல ஆத்மநிச்சயத்திலும் விடயவிச்சையிலும் சேராது-எ-ம்.

சாந்தியையடையும்பொருட் டென்றுற் சித்தத்தில் முத்திரைவைக்கப்பட்டதென் றுரியத்திற் பாடபேதமுமுள.

(இ-ம்.) விஸ்ராந்தியடையுநிமித்த மனதையடக்கவேண்டு மென்பதாம்.

## நிச்சயம் விசாரித்தல்

ஆதலால் வருத்தங்குற்ற முபாதியோ டையமின்றி
மீதுறு மோகமின்றி விளங்கிய நிலைமையேது
காதல்செய் யின்பமிக்க விடையமாங் கனலில்வீழ்ந்துந்
தீதுறு நிலமையேது தீயினு ளிரதம்போல.

(இ-ள்.) ஆதலால் - ஆகையினுல், வருத்தம் - துன்பமும், குற்றம் - பிழையும், உபாதியோடு - உபாதிகளும், ஐயம் - சந்தேகமும், இன்றி-இல்லாமல், மீதுரு - மேலிடப்பட்ட, மோகமின்றி - மோகமில்லாமல், விளங்கிய - பிரகாசித்தநிலைமையேது - நிலையானபதமியாது, காதல்செய் - இச்சிக்கும், இன்பமிக்க - சுகமிகுந்த, விடயமாங்கனலில் - விடயமாகிய வக்கினியில், வீழ்ந்தும் - விழுந்தாலும், தீயினுளிரதம்போல - அக்கினியில் (வைத்த) விரசகுளிகையைப்போல, தீதுராநிலைமையேது - தீதடையாத நிலையானபதமியாது—எ-று.

(இ-ள.) ஆகையினுல் துன்பமும், பிழையும், உபாதிகளும், சந்தேகமும் இல்லாமல் மேலிடப்பட்ட மோகமில்லாமல்

பிரகாசித்த நிலையானபதமியாது, இச்சிக்கும் சுகமிருந்தவிடய மாகிய வக்கினியில் விழுந்தாலும் அக்கினியில்வைத்தவிரசகுளி கையைப்போல தீதடையாத நிலையான பதமியாது—என்பதாம்.

(இ-ம்.) எவற்றிற்கும் விலக்ஷணமா யவைகளிற் கூடியுங் கூடாமலு மிருக்கின்றவஸ்து யாதென்று வினவினதாம். (கரு௨)

## மெய்யுணர் வினவுதல்.

வசனமாந் தொழிலேயன்றி வருபவந் தான்வேறின்று
வசைதரு புனலையன்றி யளக்கர்வே றிலாததேபோ
னசையுறு பெரியோரெங்ங னவையுறு துயரந்தீர்ந்தா
ரிசையநீ ருணர்ந்ததந்த நிலையினை யெனக்குச்சொல்வாய்.

(இ-ள்.) அசைதருபுனலையன்றி - அலைவுள்ளசலத்தையன்றி, அளக் கர்வேறிலாததேபோல் - சமுத்திரம்வேறில்லாததுபோல, வசனமாந்தொ ழிலேயன்றி - வாக்குவியாபாரமேயன்றி, வருபவந்தான் - வராநின்ற சம் சாரமானது, வேறின்று - வேறின்றாம், நசையுறுபெரியோர் - ஒழுக்கமுள் ளசத்துக்கள், எங்ஙனவையுறுதுயரந்தீர்ந்தார் - எப்படிகுற்றமுள்ள துன் பத்தை நீங்கினார்கள், இசைய - பொருந்த, நீருணர்ந்தது - தேவரீருணர்ந் திராநின்ற (தியாது), அந்தநிலையினை - அந்நிச்சயத்தை, எனக்குச்சொல் வாய் - அடியேனுக்கனுக்கிரகஞ்செய்வாய்—எ-று.

(இ-ரை.) அலைவுள்ள சலத்தையன்றி சமுத்திரம் வேறில்லா ததுபோல வாக்குவியாபாரமேயன்றி வராநின்ற சம்சாரமானது வேறின்றாம். ஒழுக்கமுள்ள சத்துக்கள் எப்படி குற்றமுள்ள துன்பத்தை நீங்கினார்கள், பொருந்த தேவரீருணர்ந்திராநின்ற தியாது, அந்நிச்சயத்தை அடியேனுக் கனுக்கிரகஞ்செய்வாய்.

(இ-ம்.) மகான்களினது துக்கநிவிர்த்தியான தடையற்ற வாநந்தத் தைப்பெற விரும்பினதாம். (கருரு)

விஸ்ராந்தி வருமளவு மோன்றையும் விடுநபேனேனல்.

இந்நிலை யிலதாவேனு முளதிபம் பாராவேனு
மந்நிலை யையமின்றி யகங்கர மின்றியானே

துன்னுற மாட்டேன்செய்வ தேதினிச்சோறும் வேண்டே
னன்னய நீரும்வேண்டே னலம்பெறு துயிலும் வேண்டேன்.

(இ-ள்.) இந்நிலையிலதா - இவ்விஸ்ராந்திபதமில்லையா, எனும் - இருக்கின்றதென்றால், உளதியம்பாரா - எதார்த்தமாகவே (யெனக்கொருவருஞ்) சொல்லமாட்டார்களா, எனும் - சொல்லுவார்களாயின், அந்நிலை - அவ்விஸ்ராந்திபதத்தை, யானே - சுயம்நானே, துன்னுறமாட்டேன் - அடையமாட்டேன், (அப்போது) ஐயமின்றி - சந்தேகமின்றியும், அகங்கரமின்றி - அகம்பாவமின்றியுமிருக்கின்ற (யான்), இனி - மேல், செய்வதேது - செய்வதியாதென்னில், சோறும்வேண்டேன் - அன்னமும்விரும்பேன், நன்னயநீரும்வேண்டேன் - மதுரமான சலத்தையும்விரும்பேன், நலம்பெறுதுயிலும் வேண்டேன் - அழகிய வஸ்திரத்தையும் விரும்பேன்.

(இ-கை.) இவ்விஸ்ராந்தி பதமில்லையா! இருக்கின்றதென்றால் எதார்த்தமாகவே யெனக்கொருவருஞ் சொல்லமாட்டார்களா? சொல்லுவார்களாயின், அவ்விஸ்ராந்திபதத்தை சுயம்நானே அடையமாட்டேன், சந்தேகமின்றியும் அகம்பாவ மின்றியு மிருக்கின்ற யான் மேல்செய்வ தியாதென்னில் அன்னமும்விரும்பேன், மதுரமானசலத்தையும் விரும்பேன், அழகியவஸ்திரத்தையும் விரும்பேன்—என்பதாம் (கஙௌச)

## நித்திய கன்மங்கள் செய்யேனெனல்.

முழுகுத ருனமாதி நியமங்கண் முழுதுஞ் செய்யேன்
விழுமிய கருமஞ்சம்பத் தாபத்தின் மேவே னியாக்கை
நழுவுவ தன்றியொன்று நயக்கிலன் மவுனியாகி
யெழுதுமோ வியம்பொற்காமங் கோபம்பற் றின்றி நிற்பேன்.

(இ-ள்.) முழுகுதருனமாதி - ஸ்நானந்தானமுதலான, நியமங்கண் முழுதும் - நித்தியகருமங்களனைத்தையும், செய்யேன்-செய்யமாட்டேன், விழுமியகருமம் - நன்மையான விராசவிபகாரத்திலும், சம்பத்தாபத்தின்-சுகாசுகத்திலும், மேவேன் - செல்லேன், இயாக்கைநழுவுவதன்றி - சரீரநழுவுவதையல்லாமல் ஒன்றுநயக்கிலேன் - மற்றொன்றையும்விரும்பேன், மௌனியாகி - மௌனத்தையுடையவனாய், எழுதுமோவியம்போல்-எழுதப்பட்ட சித்திரத்தைப்போல, காமங்கோபம் - இராகத்துவேஷங்களில், பற்றின்றிநிற்பேன் - இச்சையற்றிருப்பேன்—எ-று.

(இ-ஸா.) ஸ்நானந்தானமுதலான நித்தியகருமங்களனைத்தையும் செய்யமாட்டேன், நன்மையான விராச விபகாரத்திலும் சுகாசுகத்திலும் செல்லேன், சரீர நழுவுவதையல்லாமல் மற்றொன்றையும் விரும்பேன், மௌனத்தை யுடையவனாய் எழுதப்பட்ட சித்திரத்தைப்போல இராகத்துவேஷங்களில் இச்சையற்றிருப்பேன்.

(இ-ம்.) கன்மங்களின்முயலாம னிஷ்கன்மனாயிருந்து தேகத்தை விடுவேனென்பதாம். (கரு)

## வசனியாதிருத்தல்.

எனவுரைத் தமலசீத மதியென வினியோ னின்சொல்
வினவுநல் விவேகந்தன்னால் விரிந்தலர் மனத்திராமன்
மனமகிழ் முனிவர்முன்னர் வாய்மொழி யமைந்து நின்றான்
கனமுகின் முன்னர்கேகா ரவந்தவிர் கலாபிபோன்றே.

(இ-ள்.) அமலசீதமதியென - களங்கமற்ற குளிர்ந்தபூரணசந்திரனைப்போல, இனியோன் - இனிமையுள்ளவனாயும், இன்சொல் - இனியவசனத்தினாலும், வினவும் - விசாரிக்கின்ற, நல்விவேகந்தன்னால் - ஆத்மவிவேகத்தினாலும், விரிந்தலர்மனத்திராமன் - விகசிதமான மனதையுடையவனாயுமிருக்கின்ற விராமரானவர், மனமகிழ்முனிவர்முன்னர் - அகங்களிக்கின்ற முனிவர்கள்முன்னே, எனவுரைத்து - (இப்படி) யென்றுசொல்லி, கனமுகின் முன்னர் - கனமாகிய மேகத்தின்முன்னே, கேகாரவந்தவிர்கலாபிபோன்று - கேகாவென்னுஞ் சத்தத்தைத்தவிர்ந்த மயிலைப்போல, வாய்மொழியமைந்துநின்றான் - வசனியாமற் சும்மாயிருந்தார்—எ-று.

(இ-ஸா.) களங்கமற்ற குளிர்ந்த பூரண சந்திரனைப்போல இனிமை யுள்ளவனாயும் இனியவசனத்தினாலும் விசாரிக்கின்ற ஆத்ம விவேகத்தினாலும் விகசிதமான மனதை யுடையவனாயுமிருக்கின்ற விராமரானவர் அகங்களிக்கின்ற முனிவர்கள் முன்னே இப்படியென்று சொல்லி கனமாகிய மேகத்தின் முன்னே கேகாவென்னுஞ் சத்தத்தைத்தவிர்ந்த மயிலைப்போல வசனியாமற் சும்மாயிருந்தார்—என்பதாம்.

(இ-ம்.) சபையிலிராமர் தனதவிப்பிராயத்தை முனிவர்களுக் கறிவித்தவர்க ளவிப்பிராயந் தெரிந்துகொள்ளுநிமித்த மௌனமாக விருந்தாரென்பதாம். (கருசு)

முதலாவது வைராக்கியப்பிரகரணம்-முற்றிற்று.

ஆக பதிகங் காப்புட்படச் செய்யுள்-௱௩௬.

# ௬-ல், சுகர்கதை.

(அவதாரிகை.)

முன்கதையிற் சுயமாயுண்டான சாதனசதுஷ்டயத்தி லிரண்டாஞ்சாதனமான நிராசையினும் சீவேஸ்வாசசங்களாகக் காணப்பட்ட யாவையு மனுர்த சடதுக்கமேனத் தேவத்தன்மை நிறைந்த சபையிற் சோல்லிய விராம னனுபவத்தினு லிவன் சகல பந்தங்களு நீங்கிச் சைதன்னியமாத்திரமா யிருப்பதை யுணர்ந்தோரில் விசுவாமித்திர முனிமேற் சர்வவியாபகமான சாக்ஷாத்காரமே நீயேன்றறிவிப்பிக்கும்பொருட்டிவ்வனுபவமுள்ள சுகமுனியின்கதையை நிரூபிக்கின்றர்.

---

## ௧. மகிழ்ச்சியடைதல்.

மைம்மல மாமோகத்தை மாய்த்திடும் புதுமைத்தான
செம்மல்வா சகங்கள்கேட்டுத் திருந்தவை யிருந்தோரெல்லா
மிம்மொழி கேட்பபோல வெழப்புள குவகைமிக்கார்
விம்மல்சேர் சித்தர்சேனை விண்மிசைக் களித்தவன்றே

(இ-ள்.) மைம்மல - களங்கமுள்ள, மாமோகத்தை-மகாசம்சாரத்தை, மாய்த்திடும் - கெடுக்கப்பட்ட, புதுமைத்தான - அதிசயமான, செம்மல் வாசகங்கள்கேட்டு - இளவரசான விராமன்வசனங்களைக்கேட்டு, திருந்தவை யிருந்தோரெல்லாம் - திருத்தமான (தசரதன்) சபையிலிருந்தசகலரும், இம்மொழிகேட்பபோல - இவ்வசனத்தைக் கேட்கவந்ததுபோல, புளகெழ - மயிர்க்குச்செழ, உவகைமிக்கார்-களிப்பின்மிகுந்தார்கள், விம்மல்சேர் சித்தர்சேனை - ஒலித்தலையுடைய சித்தர்கணங்கள், விண்மிசைக் களித்த - ஆகாயத்தின்கண் மகிழ்ந்தன—எ-று.

(இ-ம்.) களங்கமுள்ள மகா சம்சாரத்தை கெடுக்கப்பட்ட அதிசயமான இளவரசான விராமன் வசனங்களைக்கேட்டு திருத்தமான சதரதன் சபையிலிருந்த சகலரும் இவ்வசனத்தைக் கேட்கவந்ததுபோல மயிர்க்குச்செழ களிப்பின்மிகுந்தார்கள், ஒலித்தலையுடைய சித்தர்கணங்கள் ஆகாயத்தின்கண்மகிழ்ந்தன—எ-ம்.

(இ-ம்.) ஆகாயத்திற சித்தர்சபையும் பூமியிலிராசசபையு மிராமனது வைராக்கியவசனத்தைக் கேட்டாநந்தத்தை யடைந்தனவென்பதாம். (க)

## சித்தர்கண் மகிழ்தல்.

நன்றுநன் றென்னுஞ்சொல்லு நன்மலர் மழையுங்கூடி
யொன்றியோர் கடிகைப்பாதி யிழிந்தபின் னூழிகாலம்
வன்றுய ருழன்றுசிந்தை மயங்கிய யாங்களெல்லா
மின்றிரா கவன்சொலென்னு மின்னமு தமையப்பெற்றோம்.

(இ-ள்.) நன்றுநன்றென்னுஞ்சொல்லும் - நல்லதுநல்லதென்னும்வசனமும், நன்மலர்மழையும் - நல்லபுஷ்பமாரியும், கூடியொன்றி - சேர்ந்து, ஓர்கடிகைபாதி - அரைநாழிகைநேரம், இழிந்தபின் - (சபையில்) வந்து நிறைந்தபின்பு, ஊழிகாலம் - கற்பகாலம், வன்றுயர் - வலியதுன்பத்தோடும், உழன்று - விண்ணிற்சஞ்சரித்து, சிந்தைமயங்கிய - மனோமயக்கமுள்ள, யாங்களெல்லாம் - நாங்களனைவரும், இன்று - இன்றையத்தினம், இராகவன் சொலென்னும் - இராமன்வசனமென்கின்ற, இன்னமுதமையப்பெற்றோம் - இனியவமுதங் கிடைக்கப்பெற்றோமென்று (சித்தர்கள் சொன்னார்கள்)—எ-று.

(இ-ரை.) நல்லது நல்லதென்னும் வசனமும், நல்லபுஷ்பமாரி யுஞ்சேர்ந்து அரைநாழிகைநேரம் சபையில்வந்து நிறைந்தபின்பு கற்பகாலம் வலியதுன்பத்தோடும் விண்ணிற்சஞ்சரித்து, மனோமய க்கமுள்ள நாங்களனைவரும், இன்றையத்தினம் இராமன் வசன மென்கின்ற இனியவமுதங் கிடைக்கப்பெற்றோமென்று சித்தர் கள் சொன்னார்கள்—என்பதாம்.

(இ-ம்.) இராமன் வைராக்கியவசனத்தினாற் சித்தர்கள் மயக்கந் தெளிந்ததென்பதாம். (உ)

## சித்தர்கள் சபைக்குவருதல்.

திருந்திய விவன்சொலாலே
தெளிவுறு சிந்தைபெற்றோம்
பெருந்தகை முனிவர்சொல்லும்
பொருளினிப் பெறுதுமென்னப்

பொருந்திய விண்ணினின்று
  பூதலத் திழிதலோடு
மிருந்தபே ரவையோரெல்லா
  மெழுந்தெதிர் கொள்வதானார்.

(இ-ள்.) திருந்தியவிவன்சொலால் - திருத்தமான வ்விராமன்வசனத்தினல், தெளிவுறுசிந்தைபெற்றேம் - தெளியப்பட்ட சித்தத்தையடைந்தோம், பெருந்தகைமுனிவர் - (இதற்கு)மேன்மையானமுனிவர்கள், சொல்லும் - போதிக்கும், பொருளினிப் பெறுதுமென்ன - வஸ்துவைமேலடைவோமென்று, பொருந்தியவிண்ணினின்று - தாங்களிருந்த வாகாயத்தினின்று, பூதலத்திழிதலோடும் - (சித்தர்கணங்கள்) பூமியிலிறங்கவும், இருந்தபேரவையோரெல்லாம் - மகாசபையி லிருந்தோரனைவரும், எழுந்தெதிர்கொள்வதானார் - எழுந்திருந் தெதிர்கொள்வதானார்கள்—எ-று.

(இ-ை.) திருத்தமான வ்விராமன் வசனத்தினல், தெளியப்பட்ட சித்தத்தையடைந்தோம், இதற்கு மேன்மையானமுனிவர்கள் போதிக்கும் வஸ்துவைமேலடைவோமென்று, தாங்களிருந்த வாகாயத்தினின்று சித்தர்கணங்கள் பூமியிலிறங்கவும், மகாசபையிலிருந்தோரனைவரும்எழுந்திருந் தெதிர்கொள்வதானார்கள்.

(ஓ-ி.) விஷயதோஷதிருஷ்டி நிருபணத்தினன் மனந்தெளிந்த சித்தர்கள்மே லாத்மானுபவத்தையுந் தெரிந்துகொள்ள வாத்மராமன் சபைக்குவந்ததாம். (ரு

## சித்தரு நாருஞ் சந்தித்தல்.

வந்துறு சித்தர்க்கெல்லாம் வசிட்டனுங் காதிசேயு
முந்துபூ சனைகள்செய்தார் முனிவருக் கவருஞ்செய்தா
ரந்தநல் லவைபின்வேந்து மருச்சனை யவர்க்குச்செய்தா
னந்துமன் னவர்க்குமன்னுர் நன்சொலாற் பூசைசெய்தார்.

(இ-ள்.) வந்துறுசித்தர்க்கெல்லாம் - வந்தடைந்தசித்தர்களனைவர்க்கும், வசிட்டனுங்காதிசேயும் - வசிட்டரும்விசுவாமித்திரரும், முந்துபூசனைகள்செய்தார் - முந்தியாராதித்தார்கள், முனிவருக்கவருஞ்செய்தார்- (பின்பிந்த) முனிவர்களுக் கச்சித்தர்களும் பூசித்தார்கள், அந்தநல்லவையில் - அந்நற்சபையிலுள்ள, வேந்தும் - அரசனுனதசரதனும், அவர்க்கு-

அச்சித்தர்களுக்கு, அருச்சனைசெய்தான் - பூசைசெய்தான், நந்துமன்ன வர்க்கும் - ஆக்கமுள்ள வவ்வரசனுக்கும், அன்னார் - அச்சித்தர்கணங்கள், நன்சொலால்-முகமன்வசனத்தினால், பூசைசெய்தார்-ஆராதித்தார்கள்-எ.

(இ-ரை.) வந்தடைந்த சித்தர்களனைவர்க்கும் வசிட்டரும், விசுவாமித்திரரும் முந்தியாராதித்தார்கள்; பின்பிந்த முனிவர்களுக் கச்சித்தர்களும் பூசித்தார்கள். அந்நற்சபையிலுள்ள அரசனான தசரதனும் அச்சித்தர்களுக்குப்பூசைசெய்தான், ஆக்கமுள்ளவவ்வரசனுக்கும் அச்சித்தர்கணங்கள் முகமன்வசனத்தினால் ஆராதித்தார்கள்—என்பதாம்.

(இ-ம்.) சித்தர்களுஞ் சபையிலுள்ளோரு மொருவருக்கொருவர்வணங்குங் கிரமமறிவித்ததாம். (ச)

## இராமனது நிராசையைப் புகழ்தல்.

தொழுதுமுன் னிருந்தசெங்கட் டோன்றற்கு முபசாரங்கள்
பழுதில்பூ மழையானல்ல மொழிகளாற் பரிந்துசெய்து
விழுமிய குணத்தான்மிக்கோன் விரத்திபாய் விளம்புஞ்சொற்கள்
முழுதுநல் லுதாரமாகி முடிவிலற் புதமாமென்றார்.

(இ-ள்.) தொழுதுமுன்னிருந்த - வணங்கிமுன்னேயிருந்த, செங்கட்டோன்றற்கும் - செவ்வியகண்களையுடைய விராமருக்கும், உபசாரங்கள்-முகமன்வசனங்களை, பழுதில்பூமழையால் - பழுதற்ற புஷ்பவருஷத்தினாலும், நல்லமொழிகளால் - அன்பான வசனங்களாலும், பரிந்துசெய்து - அன்புசெய்து, விழுமியகுணத்தான்மிக்கோன்-(முனிகளே) நன்மையான (மைத்திரியாதி) குணங்களின்மிகுந்த விராமர், விரத்தியாய் விளம்புஞ்சொற்கள் - துறவாகச்சொல்லியவசனங்கள், முழுதுநல்லுதாரமாகி - முற்றுங்கெம்பீரமுடையதாய், முடிவிலற்புதமாமென்றார் - அளவற்றவதிசயமுள்ளதாமென்று (சித்தர்கள்) சொன்னார்கள்—எ-று.

(இ-ரை.) வணங்கி முன்னேயிருந்த செவ்விய கண்களையுடையவிராமருக்கும், முகமன்வசனங்களை பழுதற்றபுஷ்பவருஷத்தினாலும் அன்பானவசனங்களாலும் அன்புசெய்து, முனிகளே நன்மையான மைத்திரியாதி குணங்களின் மிகுந்தவிராமர், துற

வாகச்சொல்லிய வசனங்கள்முற்றுங் கெம்பீரமுடையதாய், அள வற்ற வதிசய முள்ளதாமென்று சித்தர்கள் சொன்னார்கள்-எ-ம்.

(இ-ம்.) இராமனது வைராக்கியவசன மாச்சரியகரமுள்ள வாழ்ந்த கருத்தாக விருக்கின்றதென் றதிசயித்ததாம். (௫)

## சித்தர்கள் தங்களை யிகழ்தல்.

ஈசனே படைத்ததாகி யெண்ணிறீ முயற்சிமிக்க
மாசுறு மாயைதன்னில் வருசுக மரிதுசாலத்
தேசுறு சதுரச்சிந்தைச் செல்வனுக் குணரற்பாற்றேற்
பேசுறு நாங்களெல்லாம் பேதைய ரென்னச்சொன்னார்.

(இ-ள்.) ஈசனேபடைத்ததாகி - தேவநிர்மானமாய், எண்ணிறீ-அள வற்றதீமையைச் (செய்ய), முயற்சிமிக்க - உற்சாகமிகுந்த, மாசுறுமாயை தன்னில் - குற்றம்பொருந்திய சம்சாரத்தில், வருசுகமரிது - வராநின்ற சுகமரியதாம், சால-மிகவும், தேசுறு-பிரகாசம்பொருந்திய, சதுரச்சிந்தை சிறந்தவைராக்கியசித்தமுள்ள, செல்வனுக்கு - இராமனுக்கு, உணரற்பா ற்றேல் - (அச்சம்சாரமிட்டமென்) றுணரும்பகுதியதாயின், பேசுறும் - (நமக்குமிஷ்டத்தைக்கொடுக்குமென்று சொல்லப்படும், நாங்களெல்லாம்- (அவரால் வெறுக்கப்பட்டவைகளை விரும்புதலின் றேவரிஷிகள் முதலிய) யாங்களனைவரும், பேதையரென்ன - அறிவில்லாதவர்களென்று, சொன் னார் - (அச்சித்தர்கள்) சொன்னார்கள்—எ-று.

(இ-ரை.) தேவநிர்மாணமாய், அளவற்ற தீமையைச்செய்ய, உற்சாகமிகுந்த குற்றம்பொருந்திய சம்சாரத்தில் வராநின்ற சுகமரியதாம், மிகவும்பிரகாசம்பொருந்தியசிறந்தவைராக்கிய சித் தமுள்ள இராமனுக்கு, அச்சம்சாரமிஷ்டமென்றுணரும் பகுதிய தாயின் நமக்கு மிஷ்டத்தைக் கொடுக்குமென்று சொல்லப்படும். அவரால் வெறுக்கப்பட்டவைகளை விரும்புதலின் றேவரிஷிகள் முதலிய யாங்களனைவரும் அறிவில்லாதவர்களென்று அச்சித்தர் கள் சொன்னார்கள்—என்பதாம்.

(ப-ம்.) மாயை, பிரமசந்நிதியிலாரோபித்ததென்பார், ஈசனேபடை த்ததாய் யென்றும், சகரக்ஷகரான விராமனிச்சய மிப்படியிருக்க, போதா யனர் முதலிய முனிகளுலகாசாரத்தை வைப்புறுத்திச் சொல்லிய தறியா மையென்பார், நாங்களெல்லாம் பேதையரென்னச் சொன்னரென்றுங் கூறினர்.

(இ-ம்.) மாயாரகிதரான விராமருக் கம்மாயாசகிதரான யாங்களறி விற் சமானமாகே மென்பதாம். (௬)

## இராமனுரைத்த வனுபவமே நிச்சயமெனல்

ஈதவ ருரைத்தவின்ன ரிராமனை யினிதுநோக்கிக்
காதிசே யுரைப்பானீயே களங்கமில் புந்தியாலே
தீதற வனைத்துங்கண்டாய் தெளிவுறப் பிறிதொன் றில்லைப்
போதமார் சுகனுநீயும் புந்தியா லொப்பீரன்றே.

(இ-ள்.) ஈதவருரைத்தபின்னர் - இப்படியச்சித்தர் (கணங்கள்) சொல்லியபின்பு, இராமனையினிதுநோக்கி - இராகவனை யன்பாகப்பார்த்து, காதிசேயுரைப்பான் - விசுவாமித்திரர் சொல்லுவார், நீயே-நீசுயமாகவே, களங்கமில்புந்தியால் - குற்றமற்றவறிவினல், தீதறவனைத்துங்கண்டாய் - குற்றமறயாவையுமறிந்தாய், தெளிவுற - (இனி) தெளிவாயறிய (வேண்டியபொருள்), பிறிதொன்றில்லை - வேறென்றில்லை, போதமார் - ஞான நிறைந்த, சுகனும் - சுகமுனியும், நீயும் - நீரும், புந்தியாலொப்பீர் - அறிவினற் சமானமாவீர்கள்—எ-று.

(இ-ை.) இப்படியச்சித்தர்கணங்கள் சொல்லியபின்பு, இராவகனை யன்பாகப்பார்த்து, விசுவாமித்திரர் சொல்லுவார். நீ சுயமாகவே குற்றமற்றவறிவினல் குற்றமறயாவையு மறிந்தாய், இனி தெளிவா யறியவேண்டிய பொருள்வேறென்றில்லை, ஞானநிறைந்த சுகமுனியும் நீரும் அருவினற் சமானமாவீர்கள்—என்பதாம்.

(இ-ம்.) சுயமாயுண்டான நிராசையே வாத்மானுபவத்தைக் கொடுக்கு மென்பதாம். (எ)

## சுகமுனியி னனுபவத்தை விசாரித்தல்.

இகலற வுணர்வுற்றோரு மிளைப்பற நயப்பரென்று
மகமுனி யுரைப்பக்கேட்ட வள்ளலு முனைப்பானையா
வகமறு முணர்வுண்டாயு மாறுதன் முன்னமின்றிச்
சுகமுறப் பின்னுண்டான தெங்ஙனஞ் சுகனுக்கென்றான்.

(இ-ள்.) இகலறவுணர்வுற்றோரும் - எதிரறஞானத்தைப் பெற்றவர்களும், இளைப்பறநயப்பரென்று - விஸ்ராந்தியை யடைய விரும்புவார்க

ளென்று, மகமுனியுரைப்ப - யாகத்துக்குரிய (விசுவாமித்திர) முனிசொல்ல, கேட்ட - (இதைக்) கேட்ட, வள்ளலுமுரைப்பான் - இராமருஞ்சொல்வார், ஐயா - (என்) னையனே, சுகனுக்கு - சுகமுனிக்கு, அகமறுமுணர்வுண்டாயும் - அகம்பாவமற்றவறிவுண்டாயிருந்தும், ஆறுதல் - விஸ்ராந்தியானது, முன்னமின்றி - முன்னில்லாமல், சுகமுற - இன்பமுற, பின்னுண்டானதெங்ஙனம் - பின்புண்டானதெப்படி, என்முன் - என்றுகேட்டார்—எ-று.

(இ-ள.) எதிரற ஞானத்தைப் பெற்றவர்களும், விஸ்ராந்தியையடைய விரும்புவார்களென்று, யாகத்துக்குரியவிசுவாமித்திர முனிசொல்ல, இதைக்கேட்டஇராமருஞ்சொல்வார். என்னையனே சுகமுனிக்கு அகம்பாவமற்ற வறிவுண்டாயிருந்தும், விஸ்ராந்தியானது முன்னில்லாமல், இன்பமுற பின்புண்டானதெப்படி என்று கேட்டார்—என்பதாம்.

(ப-ம்.) அபரஞானம்வந்தும், அகிலமைதிபெறுமனுபவமான பரஞானம்வேண்டுமென்பார், இகலறவுணர்வுற்றோருமிளைப்பற நயப்பரென்றார்.

(இ-ம்.) பரமசுகத்தைப் பெறவிரும்பினதாம். (அ)

## சுகமுனியி னனுபவத்தை யுரைத்தல்.

என்னலு முனிவன்சொல்வா னெழுபிறப் பறுக்குஞானந்
துன்னிய சுகனுநின்போற் றொல்லுல கியல்பைநாடி
மன்னிய விவேகமுண்டாய் மாசறு முணர்வுபெற்று
மந்நிலை யையமாகி யாறுத லற்றானன்றே.

(இ-ள்.) என்னலும் - (இப்படி) யென் (றிராமன்) கேட்கவும், முனிவன்சொல்வான் - (விசுவாமித்திர) முனிவர்சொல்லுவார், எழுபிறப்பறுக்குஞானம் - எழ்பவங்களைக்கெடுக்கின்ற ஞானமானது, துன்னிய-நிறைந்த, சுகனும் - சுகப்பிரமரிஷியும், நின்போல் - உன்னைப்போல், தொல்லுலகியல்பைநாடி - முன்னுள்ள சகசுபாவத்தை விசாரித்து, மன்னிய விவேகமுண்டாய் - நிலைபெற்ற விவேகமுள்ளவராய், மாசறு முணர்வுபெற்றும் - களங்கமற்ற ஞானத்தையடைந்தும், அந்நிலையையமாகி - அந்நிச்சயத்திற்சந்தேகமுள்ளவராய், ஆறுதலற்றான் - விஸ்ராந்தியடைந்திலன்.

(இ-ள.) இப்படியென் றிராமன்கேட்கவும், விசுவாமித்திர முனிசொல்லுவார். எழ்பவங்களைக் கெடுக்கின்ற ஞானமானது நிறைந்த சுகப்பிரமரிஷியும், உன்னைப்போல் முன்

னுள்ள சகசுபாவத்தை விசாரித்து நிலைபெற்ற விவேகமுள்ளவராய், களங்கமற்ற ஞானத்தை யடைந்தும், அந்நிச்சயத்திற் சந்தேகமுள்ளவராய், விஸ்ராந்தியடைந்திலன்—என்பதாம்.

(இ-ர்.) களங்கமற்ற ஞானத்தையடைந்தும் அநித்தியமாகத் தள்ளப்பட்ட வஸ்து சேடங்கணீங்காத வதனல் விஸ்ராந்தியுண்டாகவில்லையென்பதாம். (௯)

## மாயாஸ்வரூபம் வினவுதல்.

விடலரு மசைவுவிட்டு விடயத்தின் மீண்டநெஞ்சன்
வடவரை யுறையுந்தாதை மருங்குற வெய்தி யிந்த
விடருறு மாயைவந்த தெங்ஙன மிறப்ப தெங்ஙன்
றொடர்பிலா ருடையதெம்மட் டென்றிது தோன்றிற்றென்றான்.

(இ-ள்.) விடலருமசைவுவிட்டு - விடுதற்கரியசஞ்சலத்தைநீக்கி, விடயத்தின் - விடயபோகத்தி (னின்றும்), மீண்டநெஞ்சன் - திரும்பியமனதையுடையசுகரும், வடவரையுறையுந்தாதை - மகாமேருவில்வசிக்கின்ற பிதாவின், மருங்குறவெய்தி - பக்கத்திலடைந்து, இந்தவிடருறுமாயை - இத்துக்கமயமானது, வந்ததெங்ஙனம் - வந்ததெப்படி, இறப்பதெங்ஙன் - நசிப்பதெப்படி, தொடர்பில் - தொடர்ச்சியில்,ஆருடையது - ஆரையுடையது, எம்மட்டு-எவ்வளவுள்ளது, என்றிதுதோன்றிற்றென்றான் - எப்போதீதுண்டாயிற்றென்றுகேட்டார்—எ-று.

(இ-ரை.) விடுதற்கரிய சஞ்சலத்தைநீக்கி, விடயபோகத்தினின்றும் திரும்பிய மனதையுடைய சுகரும், மகாமேருவில்வசிக்கின்ற பிதாவின் பக்கத்திலடைந்து இத்துக்கமயமான மாயையானது வந்ததெப்படி? நசிப்பதெப்படி? தொடர்ச்சியில் ஆரையுடையது? எவ்வளவுள்ளது? எப்போதீதுண்டாயிற்றென்றுகேட்டார்.

இவன்சித்தஞ்சாபல்யமற்றதாய் மிக்கபங்கமுள்ளபோகங்களினின்றும், மழைக்காலினின்றுஞ்சாதகங்கள்போலநிவிர்த்தித்ததென்னும், சுலோகார்த்தத்தை விடயத்தின் மீண்ட நெஞ்சனென்னும் பதத்திலடக்கினார்.

(ப-ம்.) மாயை சீவனையுடையதா அல்லது ஈசனையுடையதா வென்பாராருடையதென்றார்.

(இ-ம்.) மாயையின்துற்புத்தி ஸ்திதிலயத்தை விசாரித்ததாம். (௧௦)

## அனுபவம் விளங்காமை.

அன்னவன் கேட்டவெல்லா மறிவுற வுரைத்தபோது
முன்னநா னுணர்ந்தவாறே மொழிந்தனை யெனவச்சொல்லா
னன்னிலை பெறாமைகண்டு நல்லுணர் வெனக்குத்தோன்றா
மன்னவன் சனகனென்பான் வழுவறு முணர்வின்மிக்கோன்.

(இ-ள்.) அன்னவன் - அந்தச்சுகரானவர், கேட்டவெல்லாம் - வினு வினவனைத்தும், அறிவுற - (அவ) னறிவிற்பொருந்த, உரைத்தபோது - சொல்லியசமயத்தில், முன்னநானுணர்ந்தவாறே - முன்பியானறிந்தபிர காரமே, மொழிந்தனையென - சொன்னீரென்றுசொல்ல, அச்சொல்லால் - அவ்வசனத்தினால், நன்னிலைபெறாமைகண்டு - நன்னிச்சயமடையாமை யைப்பார்த்து, நல்லுணர்வு - சுகபோகமானது, எனக்குத்தோன்றா - எனக் குத்தெரியாது, மன்னவன் - அரசனாகிய, சனகனென்பான் - சனகரென்பவர், வழுவறும் - குற்றமற்ற, உணர்வின்மிக்கோன் - ஞானத்தில்மிகுந்தவர்.

(இ-ரை.) அந்தச் சுகரானவர் வினுவினவனைத்தும் அவனறி விற்பொருந்த சொல்லிய சமயத்தில் முன்பியானறிந்தபிரகாரமே சொன்னீரென்று சொல்ல அவ்வசனத்தினால் நன்னிச்சயமடை யாமையைப் பார்த்து சுகபோதமானது எனக்குத்தெரியாது, அர சனாகிய சனகரென்பவர் குற்றமற்றஞானத்தில்மிகுந்தவர்—எ-ம்.

(ப-ம்.) ஆசாரிய ரறிவில்லைத் துபதேசிக்குமதீதானுபவத்தி லமைய வில்லையென்பார், நானுணர்ந்தவாறே மொழிந்தனையென்றும், சீடனறித லைவிட்டனுபவத்தி லழுந்தவில்லையென் றறிந்தாரென்பார், அச்சொல்லா னன்னிலைபெறாமைகண்டென்றுங்கூறினார்.

(இ-°.) ஆசாரிய ரறிவிப்பதெல்லா மதீதின்றிய வனுபூதியெனக் கொள்ளவேண்டுமென்பதாம். (கக)

## பக்குவசோதனை.

ஆயவன் றனையேகேட்கென் றருளொடு தாதையேவப்
போயினன் சனகன்வாழும் பொன்மனை வாயிற்சேர்ந்தான்
றாயவன் வரவுகேட்டுச் சோதிப்பான் கருதிமன்ன
னேயின னில்லைநாளே ழிருந்தனன் விகற்பமில்லோன்.

(இ-ள்.) ஆயவன்றனையேகேட்கென்று - அச்சனகரையேகேட்கக்கடவாயென்று, அருளொடுதாதையேவ - கிருபையுடன்பிதாவானவரனுப்ப, போயினன் - (மகாமேருவினின்றுபூமியிற்) சென்று, சனகன்வாழும்பொன்மனை - சனகராசன்வாழாநின்ற சுவர்ணமயமானவீட்டினது, வாயிற்சேர்ந்தான் - வாயலிலடைந்தான், தூயவன்வரவுகேட்டுச் - மேலான சுகப்பிரமரிஷியினுடையவரவைத் (தூதர்களாற்) கேட்டு, சோதிப்பான்கருதி- சோதிக்கும்பொருட்டு நினைத்து, மன்னன் - அரசன், எயினனில்லை - (காணச்) சென்றானில்லை, விகற்பமில்லோன் - விகற்பமின்றிய சுகமுனியானவர், நாளேழிருந்தனன் - ஏழுநாளிருந்தார்—எ-று.

(இ-ரை) அச்சனகரையே கேட்கக் கடவாயென்று கிருபையுடன் பிதாவானவரனுப்ப, மகாமேருவினின்று பூமியிற்சென்று சனகராசன் வாழாநின்ற சுவர்ணமயமான வீட்டினது வாயலிலடைந்தான், மேலானசுகப்பிரமரிஷியினுடைய வரவைத்தூதர்களாற்கேட்டு சோதிக்கும்பொருட்டு நினைத்து அரசன் காணச் சென்றானில்லை, விகற்பமின்றிய சுகமுனியானவர் ஏழுநாளிருந்தார்—என்பதாம்.

(இ-ம்.) சுகமுனிவரது சாந்தியாதிகுணங்களைச் சோதிக்கும்பொருட்டு முன்வாயிலிற் றடைசெய்ததாம். (கஉ)

## (இதுவுமது.)

மற்றுநா ளேழும்வேறோ ரிடத்துற வைத்தபின்னர்
பொற்றிர ளழகாரந்தப் புரத்திடை நாளேழ்வைத்துச்
சிற்றிடை மகளிர்போகஞ் சிறந்தவூ ணளிப்பத்துய்த்தான்
குற்றமுங் குணமுநாடான் குளிர்நிறை மதியமொத்தான்.

(இ-ள்.) மற்றுநாளேழும் - பின்னுமேழுநாள், வேறோரிடத்துறவைத்தபின்னர் - மற்றோரிடத்திலிருக்கும்படி வைத்தபின்பு, பொற்றிரளழகார்-மிகுந்தபொன்னினாற்செய்யப்பட்டழகுநிறைந்த, அந்தப்புரத்திடை- அந்தப்புரத்தில், நாளேழ்வைத்துச் - ஏழுநாளிருத்தி, சிற்றிடைமகளிர் - சிறியவிடையையுடைய மடவார்களால், போகம்-(சந்தனபுஷ்பமுதலான) போகங்களையும், சிறந்தவூண் - அறுசுவையுண்டிகளையும், அளிப்ப - கொடுப்பிக்க, துய்த்தான் - புசித்தான், குளிர்நிறைமதியம் - குளிர்ந்தபூரண சந்திரனுக்கு, ஒத்தான் - சமானமுள்ள சுகமுனியானவர், குற்றமும் - (இவ்விடயங்களின்) குற்றத்தையும், குணமும் - குணத்தையும், நாடான்-ஆராய்ந்திலன்—எ-று.

(இ-ள்.) பின்னுமேழுநாள் மற்றோரிடத்திலிருக்கும்படி வைத்தபின்பு மிகுந்த பொன்னினாற்செய்யப்பட் டழகுநிறைந்த அந்தப்புரத்தில் ஏழுநாளிருத்தி சிறியவிடையையுடைய மடவார்களால் சந்தனபுஷ்பமுதலான போகங்களையும் அறுசுவை யுண்டிகளையும் கொடுப்பிக்கப் புசித்தான், குளிர்ந்த பூரணச்சந்திரனுக்குசமானமுள்ள சுகமுனியானவர் இவ்விடயங்களின் குற்றத்தையும் ஆராய்ந்திலன்—என்பதாம்

(இ-ரி.) இடையேழுநா ளோர்வாயலிற் றடுத்தலாற், குரோதசோதனையையும், கடையேழுநாளந்தப்புறத்திற் போகங்களைக் கொடுத்தலாற் காமசோதனையையுஞ் செய்ததாம். (கரு)

## சுகதுக்கங்களி லழுந்தாமை.

மன்னவன் சனகன்றந்த போகத்தின் மகிழ்ச்சியாவு
மன்னவன் முன்னஞ்செய்த வவமதித் துன்பமியாவு
மின்னவன் மனதைச்சற்று மிழுத்தில விளமென்றென்றல்
பொன்னசலத்தின்மிக்க பொருப்பினை யிழுக்கவற்றோ.

(இ-ள்.) மன்னவன் - அரசனாகிய, சனகன்றந்த - சனகராற்கொடுக்கப்பட்ட, போகத்தின் - போகங்களின், மகிழ்ச்சியாவும் - சுகமனைத்தும், அன்னவன் - அவன், முன்னஞ்செய்த - முன்செய்யப்பட்ட, அவமதித்துன்பமியாவும்-அவமானமானதுக்கமனைத்தும், இன்னவன்மனதை - இச்சுகமுனியினதுமனதை, சற்றுமிழுத்தில - எவ்வளவேனு மசைக்கவில்லை, இளமென்றென்றல் - இளமையுமென்மையுமுள்ள தென்றலானது, பொன்னசலத்தில் - அழகியமலைகளில், மிக்க - பெரிதாகிய, பொருப்பினை - மேருவை, இழுக்கவற்றோ - அசைக்குந்திறத்ததோ—எ-று.

(இ-ள்.) அரசனாகிய சனகராற் கொடுக்கப்பட்டபோகங்களின் சுகமனைத்தும் அவன்முன் செய்யப்பட்ட அவமானமான துக்கமனைத்தும் இச்சுகமுனியினது மனதை எவ்வளவேனு மசைக்கவில்லை, இளமையு மென்மையுமுள்ள தென்றலானது அழகிய மலைகளில் பெரிதாகிய மேருவை அசைக்குந் திறத்ததோ—எ-ம்.

(இ-ரி.) மனமானது போகாபோகங்களிற் சலியாமற் சமதிருஷ்டியிலிருந்ததாம். (சுக)

## சந்தித்து வினவுதல்.

ஆங்கவ னிலமைநோக்கி யடிபணிந் தரசன்போற்றித்
தாங்குல கத்தின்செய்கை தவிர்ந்துபே றனைத்தும்பெற்றோ
யீங்குறு பொருளே தென்ன வெங்ஙன மாயைதோன்றிற்
றோங்கிய தெங்ஙன்போவ துள்ளவா றுரைசெய்யென்றான்.

(இ-ள்.) ஆங்கவனிலைமைநோக்கி - அவ்விடத்தவ ரகமகிழ்ச்சியைப் பார்த்து, அரசன் - சனகராசன், அடிபணிந்து - நமஸ்கரித்து, போற்றி - துதித்து, தாங்குலகத்தின்செய்கை-தாங்காநின்றசகவியாபாரத்தை, தவிர்ந்து - நீங்கி, பேறனைத்தும்பெற்றோய் - இலாபமனைத்தையுமடைந்த சுகப்பிரமரிஷியே, ஈங்குறுபொருள் - இவ்விடத்தி லெழுந்தருளியகாரியம், ஏதென்ன - என்னவென்றுகேட்க, எங்ஙனமாயைதோன்றிற்று - எப்படி மாயையுண்டாயிற்று, எங்ஙனோங்கியது - எப்படிவளர்ந்தது, எங்ஙன்போவது - எப்படிநசிக்கும், உள்ளவாறு - உள்ளபிரகாரம், உரைசெய்யென்றான் - (குருவே) யருளுமென்று சுகமுனிகேட்டார்—எ-று.

(இ-ரை.) அவ்விடத்தவ ரகமகிழ்ச்சியைப்பார்த்து சனகராசன் நமஸ்கரித்து துதித்து தாங்காநின்ற சகவியாபாரத்தை நீங்கி இலாபமனைத்தையு மடைந்த சுகப்பிரமரிஷியே! இவ்விடத்தி லெழுந்தருளிய காரியம் என்னவென்று கேட்க எப்படி மாயையுண்டாயிற்று, எப்படிவளர்ந்தது, எப்படிநசிக்கும் உள்ளபிரகாரம் குருவேயருளுமென்று சுகமுனிகேட்டார்—என்பதாம்.

(இ-ம்.) ஸ்வரூபப்பிரத்தியக்ஷம் விளங்கும்பொருட்டு மாயாவுற்பத்தி ஸ்திதிலயந் தெரியவேண்டுமென்பதாம். (கரு)

## சனகர் வாக்கியத்தை யொப்புக்கொள்ளுதல்.

மெய்ம்முறை முனிவர்கேட்ப வேந்தனும் வியாசன்சொன்ன
வம்முறை யுரைத்தலோடு மறிஞனும் விவேகத்தான்முன்
னிம்முறை யறிந்தேனீயு மெந்தையி னதுவேசொன்னீர்
மொய்ம்முறை நூல்களெல்லாமொழிபொரு ளொன்றேயென்றார்.

(இ-ள்.) மெய்ம்முறை - உண்மை (யாகக்கேட்கவேண்டிய) கிரமத்தை, முனிவன்கேட்ப - சுகப்பிரமரிஷிகேட்க, வேந்தனும்-சனகராசனும்,

வியாசன்சொன்ன - வியாசர் (முன்) சொல்லிய, அம்முறையுரைத்தலோடும் - அவ்வண்ணஞ்சொன்னமாத்திரத்தில், அறிஞனும்-ஞானவானாகிய சுகரும், விவேகத்தால் (சுய) விவேகத்தினால், முன் - முன்னமே, இம்முறை-இவ்வண்ணம், அறிந்தேன் - தெரிந்தேன், நீயும்-நீரும், எந்தையின் - என்பிதாவைப்போல, அதுவேசொன்னீர் - அவ்வருத்தத்தையே சொன்னீர், மொய்ம்முறை நூல்களெல்லாம் - நிறைந்த (வேதாந்த) சாஸ்திரங்களனைத்தும், மொழிபொருளொன்றேயன்றார் - சொல்லப்பட்ட வாக்கியார்த்தங்களேகமேயென்று சொன்னார்—எ-று.

(இ-ள.) உண்மையாகக் கேட்கவேண்டிய கிரமத்தை சுகப்பிரமரிஷிகேட்க சனகராசனும் வியாசர்முன் சொல்லிய அவ்வண்ணஞ் சொன்னமாத்திரத்தில் ஞானவானாகிய சுகரும் சுயவிவேகத்தினால் முன்னமே இவ்வண்ணம்தெரிந்தேன், நீரும் என்பிதாவைப்போல அவ்வருத்தத்தையேசொன்னீர், நிறைந்த வேதாந்த சாஸ்திரங்களனைத்தும் சொல்லப்பட்ட வாக்கியார்த்தங்களேகமேயென்று சொன்னார்—என்பதாம்

(இ-பி.) மகாவாக்கியார்த்தங்களபேதமென்றறிந்ததாம். (கசு)

---

சங்கற்பமயமான மாயாரூபத்தைச் சுருதிப்பிரமாணமா யறிந்தும், வியாசர் சனகரப்படியே போதித்தும், தனக்கு விஸ்ராந்தி வாராததினுற் றனதனுபவத்தைச் சொல்லி மேலதைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு வினவின்சுகருக் கப்பிரகாரமே விஸ்ராந்தி யடையும்பொருட்டப ரோக்ஷானுபவத்தை யரசனுபதேசித்தல்.

வேறு.

தன்னுள்விகற் பித்தெழுந்த விகற்பம்போகிற்
  றவிர்ந்திடு மாயையிற்பயனேர் சற்றுமில்லை
யின்னவகைத் தோருண்மை யியம்பவேண்டு
  மியாவர்மயக் கமுமாற்று மிறைவவென்ன
மன்னனதற் குரைசெய்வான் முனிவநீயே
  மதித்துணர்ந்தும் பிதாவுரைக்க மறுத்துங்கேட்டா
யன்னிலையே நிச்சயமிங் ககண்டஞான
  வாகாய புருடனுள னயலொன்றில்லை.

(இ-ள்.) தன்னுள்-ஆத்மாவில், விகற்பித்தெழுந்த - (ஸ்புரணரூபமாய்) வேறுபட்டுதித்த, விகற்பம் - (மாயா) வேற்றுமையானது, போகில் - (உதித்தவிடத்)தொடுங்குமாயின், தவிர்ந்திடும்-கெடாநின்ற, மாயையில்-மாயையினிடத்தில், பயனோர்சற்றுமில்லை - பிரயோசனமோ ரணுவளவாகினுங்கிடையாது, இன்னவகைத்து - அஃதித்தன்மைத்து, ஒருண்மை - ஒப்பற்ற நிச்சயமான (வாத்மஸ்வரூபத்தை), இயம்பவேண்டும் - சொல்லவேண்டும், இயாவர்மயக்கமுமாற்றும் - சகலருடைய மயக்கங்களையுங்கெடுக்கின்ற, இறைவவென்ன - குருவேயென்றுகேட்க, மன்னனதற்குரைசெய்வான்-அதற்கரசன் சொல்லுவான், முனிவ - சுகரே, நீயேமதித்துணர்ந்தும் - நீரேவரையறுத்தறிந்தும், பிதாவுரைக்க - பிதாவாகிய வியாசமுனிவர்சொல்ல, மறுத்தங்கேட்டாய்-தடுத்துங்கேட்டாய், அந்நிலையேநிச்சயம்-அந்தநிலையேசத்தியம், (ஆனாலும்) இங்கு-இவ்விடத்தில், அகண்டபரிபூரணமான, ஞானவாகாய - சிதாகாயமே சாக்ஷாத்கரித்த, புருடனுளன்-ஆத்மாவேயுள்ளது, அயலொன்றில்லை - வேறொரு வஸ்துவுமில்லை—எ-று.

(இ-ரை.) ஆத்மாவில் ஸ்புரணரூபமாய் வேறுபட்டுதித்தமாயாவேற்றுமையானது உதித்தவிடத் தொடுங்குமாயின் கெடாநின்ற மாயையினிடத்தில் பிரயோஜனமோ ரணுவளவாகினுங் கிடையாது. அஃதித்தன்மைத்து ஒப்பற்ற நிச்சயமான வாத்மஸ்வரூபத்தைச் சொல்லவேண்டும், சகலருடைய மயக்கங்களையுங் கெடுக்கின்ற குருவேயென்று கேட்க அதற்கரசன் சொல்லுவான், சுகரே! நீரே வரையறுத்தறிந்தும் பிதாவாகிய வியாசமுனிவர் சொல்ல தடுத்துக்கேட்டாய், அந்தநிலையே சத்தியம்; ஆனாலும் இவ்விடத்தில் பரிபூரணமான சிதாகாயமே சாக்ஷாத்கரித்த ஆத்மாவேயுள்ளது, வேறொரு வஸ்துவுமில்லை—என்பதாம்.

(ப-ரை.) ஆத்மவிதிரித்தமாகத்தோற்றப்பட்ட சகலவடிவங்களும், அத்துவிதாத்ம சாக்ஷாத்காரமாய்ப் பிரகாசிக்கின்றதென்பார், ஆகாயபுருடனுளனயலொன்றில்லையென்றார்.

(இ-பு.) ஆத்மஸ்புரணத்தி லுதித்த நிச்சயத்தை ஆத்மசாக்ஷாத்காரமாகவறியின், விஸ்ராந்தியுண்டாமென்றுபதேசித்ததாம். (கஎ)

(இதுவுமது)

அவ்வறிவு சங்கற்பத் தாற்கட்டுண் ணூறு
மதுவிடில்வீ டுறுமந்த வறிவுதன்னைச்

செவ்விதினீ யறிந்தனையாற் போகத்திச்சைச்
 செகக்காட்சி யனைத்தினையுந் தீர்த்தியானா
யெவ்வமற நிறைமனத்தா லடையற்பால
 யாவுமடைந் தாய்காட்சிக் கெட்டாதொன்றிற்
கவ்வையற வடைகின்றாய் முத்தனானாய்க்
 கருத்திலுறு மயக்கமெனுங் கவலைதீர்வாய்

(இ-ள்.) அவ்வறிவு-அந்தஞானமானது, சங்கற்பத்தாற்கட்டுண்ணும்-(தனது) சங்கற்பத்தினாற்பந்தப்படும், அதுவிடில்வீடுறும்-அச்சங்கற்பநீங்கினாற் பந்தநிவிர்த்தியாம், அந்தவறிவுதன்னை - அப்படிப்பட்ட (வாத்ம) ஞானத்தை, செவ்விதினீயறிந்தனையால் - செவ்வையாகநீ (யிப்போ) தறிந்தாயாதலால், போகத்திச்சை - போகங்களிடத்தாசையையும், செகக்காட்சி யனைத்தினையும் - திரிசயதிருஷ்டியாவையும், தீர்தியானாய் - விட்டுநீங்கினாய், எவ்வமற - துன்பநீங்க, நிறைமனத்தால் - பூரணமனதினால், அடையற்பால - பெறத்தக்க, யாவுமடைந்தாய் - சர்வத்தையும் (பிரமமயமாகப்) பெற்றாய், காக்ஷிக்கெட்டாதொன்றில் - காண்பதற்கோசரமாகிய வஸ்துவினிடத்தில், கவ்வையறவடைகின்றாய்-இரண்டறக்கலக்கின்றாய், முத்தனானாய் - (சீவன்) முத்தனானாய், கருத்திலுறு - மனதிலுண்டான, மயக்கமெனும் - (மாயா)மயக்கமென்கின்ற, கவலைதீர்வாய் - கவலை (யொன்றினையும்) விடுவாய்—எ-று.

(இ-ளா.) அந்தஞானமானது தனது சங்கற்பத்தினாற் பந்தப்படும். அச்சங்கற்பநீங்கினாற் பந்தநிவிர்த்தியாம். அப்படிப்பட்ட வாத்மஞானத்தை செவ்வையாக நீ யிப்போ தறிந்தாயாதலால் போகங்களிடத் தாசையையும், திரிசயதிருஷ்டி யாவையும் விட்டு நீங்கினாய். துன்பநீங்க பூரணமனதினால் பெறத்தக்க சர்வத்தையும் பிரமமயமாகப்பெற்றாய், காண்பதற்கோசரமாகிய வஸ்துவினிடத்திலிரண்டறக்கலக்கின்றாய், சீவன்முத்தனானாய், மனதிலுண்டான மாயாமயக்க மென்கின்ற கவலையொன்றினையும் விடுவாய்—என்பதாம்.

(இ-ம்.) யாதொன்று தனது விஸ்மரணத்தான்மறைபட்டதுபோலவுமதன்விடுதியில் வெளிப்பட்டதுபோலவும்விளங்குகின்றதோ வச்சைதன்னியமே சர்வமாய் விளங்குகின்றதென் றறிந்தாற் சந்தேகநீங்குமென்பதாம். (கஅ)

## விஸ்ராந்தியடைதல்.

சனகனெனு மன்னவர்கோ னிவ்வாறோதத்
தன்னிலையாம் பரம்பொருளிற் றளர்ச்சியாறி
வனகசுகன் பயனீங்கி சோகமாறி
யயர்வகன்று செயலடங்கி யையந்தீர்ந்து
கனகவரை யேறிநிரு விகற்பமான
கலங்காத சமாதியிற்சிற் ககனத்துற்றான்
றினகரனைச் செறிவருட மீரைஞ்ஞூற்றிற்
றிரியொடுநெய்ம் மாண்டவிந்த தீபம்போன்றே.

(இ-ள்.) சனகனெனும் - சனகனென்கின்ற நாமத்தையுடைய, மன்னவர்கோன் - அரசர்க்கரசன், இவ்வாறோத - இந்தப்பிரகாரமுபதேசிக்க, தன்னிலையாம்பரம்பொருளில் - தனக்குத்தானே யிடமாயிருக்கின்ற பரவஸ்துவில், தளர்ச்சியாறி - விஸ்ராந்தியடைந்து, அனகசுகன் - களங்கமற்ற சுகப்பிரமரிஷியானவர், பயநீங்கி - (சநந) வச்சந்தவிர்ந்து, சோகமாறி - (மரண) துன்பநீங்கி, அயர்வகன்று - (மன) வருத்தநீங்கி, செயலடங்கி - (விசாரிக்குந்) தொழிலொழிந்து, ஐயந்தீர்ந்து - (அனுபவத்திற்) சந்தேகநீங்கி, கனகவரையேறி - மகம்மேருவி னுச்சியிற்சென்று, நிருவிகற்பமான - நிருவிகற்பமாகிய, கலங்காதசமாதியில் - நிச்சலமானசமாதியில், தினகரனைச்செறி - சூரியனைக்கொண்ட கணக்கினால், வருடமீரைஞ்ஞூற்றில் - ஆயிரம்வருடத்தில், திரியொடுநெய்மாண்டு - திரியுநெய்யுஞ்சுவறி, அவிந்த - (வியோகமாக்கினியி) னசித்த, தீபம்போன்று - விளக்குக்கொப்பாக, சிற்ககனத்துற்றான் - ஞானகாசத்திற்கலந்தான்—எ-று.

(இ-ரை.) சனகனென்கின்ற நாமத்தையுடைய அரசர்க்கரசன் இந்தப்பிரகார முபதேசிக்க தனக்குத்தானே யிடமாயிருக்கின்ற பரவஸ்துவில் விஸ்ராந்தியடைந்து களங்கமற்ற சுகப்பிரமரிஷியானவர் சநநவச்சந்தவிர்ந்து மரணதுன்பநீங்கி மனவருத்தநீங்கி விசாரிக்குந் தொழிலொழிந்து அனுபவத்திற் சந்தேகநீங்கி மகம்மேருவி னுச்சியிற்சென்று நிருவிகற்பமாகிய நிச்சலமான சமாதியில் சூரியனைக்கொண்ட கணக்கினால் ஆயிரம்வருடத்தில் திரியுநெய்யுஞ்சுவறி வியோமாக்கினியினசித்த விளக்குக்கொப்பாக ஞானகாசத்திற் கலந்தான்—என்பதாம்.

(இ-ீ.) சீவன்முத்தித்தன்மையில் விதேகமுத்தியை யடைந்ததாம். ()

## விசுவாமித்திரமுனி யனுபவ விலக்கணமுரைத்தல்.

சிந்தனையாங் களங்கமறச் சுத்தனாகித்
திரைகடலிற் செறிந்தொன்றுந் திவலைபோல
வந்துறுவா தனைபோய்தற்ப தத்தொன்றானன்
மாயாமோ கந்தீர்ந்து வருத்தந்தீர்ந்தா
னந்தநெறி யுனக்குமா மறிவதெல்லா
மறிந்தமனத் திற்குரிய வடைவேதென்னிற்
சந்ததமு மகிழ்ச்சிசெறி போகமெல்லாந்
தனதென்னுஞ் சுதந்தரத்தைத் தவிர்ந்துநிற்றல்.

(இ-ள்.) சிந்தனையாங்களங்கமற-சிந்தையாகியகுற்றநீங்க, சுத்தனாகி-பரிசுத்தனாய், திரைகடலில் - அலைகளையுடையசமுத்திரத்தில், செறிந்தொன்றும் - சேர்ந்தொன்றுகின்ற, திவலைபோல - துளிகளைப்போல, வந்துறுவாதனை - (தன்னிடத்) துண்டானஸ்புரணம், போய் - (தன்னிற்) கரைந்து, தற்பதத்தொன்றானன் - பிரமத்திலிரண்டறக்கலந்தான், மாயாமோகந்தீர்ந்து-(மாயாசம்பந்தமான)மோகம்விட்டு, வருத்தந்தீர்ந்தான்-விஸ்ராந்தியடைந்தான், அந்தநெறி - அம்மார்க்கம், உனக்குமாம் - நினக்குமாகும், அறிவதெல்லாம் - அறியத்தக்கசகலமும், அறிந்தமனத்திற்கு-அறிந்திருக்கின்றமனதுக்கு, உரியவடைவேதென்னில் - உரிமையானகிரமம்யாதென்றால், சந்ததமும் - சதாகாலமும், மகிழ்ச்சிசெறி போகமெல்லாம் - களிப்புமிகுந்த போகங்களனைத்தும், தனதென்னும் - எனதென்கின்ற, சுதந்தரத்தை - சுதந்தர (பாவ) த்தை, தவிர்ந்துநிற்றல் - விட்டிருக்கையாம்—எ-று.

(இ-ரை) சிந்தையாகிய குற்றநீங்க பரிசுத்தனாய் அலைகளையுடைய சமுத்திரத்தில்சேர்ந் தொன்றுகின்ற துளிகளைப்போல தன்னிடத்துண்டான ஸ்புரணம்தன்னிற்கரைந்து பிரமத்திலிரண்டறக்கலந்தான், மாயாசம்பந்தமான மோகம்விட்டு விஸ்ராந்தியடைந்தான், அம்மார்க்கம் நினக்குமாகும், அறியத்தக்க சகலமும் அறிந்திருக்கின்ற மனதுக்கு உரிமையான கிரமம் யாதென்றால் சதாகாலமும் களிப்புமிகுந்த போகங்களனைத்தும்எனதென்கின்ற சுதந்தரபாவத்தை விட்டிருக்கையாம்—என்பதாம்.

(இ-ம்.) அனுபவிக்கு யானெனதென்னு மகம்பாவ மற்றிருக்கவேண்டுமென்பதாம். (உ0)

## பந்தமுத்தியி னிலக்கணங்கூறல்.

போகமுறு பாவனையாற் பொருளல்லாத
பொருளிலெழு பந்தநிலை பொருந்தவன்பாஞ்
சோகமுறு பாவனைதான் சாந்தமாகிற்
றுயர்பந்த மிகத்தேய்ந்து துலைந்துபோகு
மிராகவனே வாதனையி னேர்மைவீடா
மிகப்பொருளின் வாதனையி னிறுகல்பந்தஞ்
சேகறவென் றவர்க்கேது வின்றிப்போகத்
திரள்வெறுப்பா மேலவரே சீவன்முத்தர்.

(இ-ள்.) போகமுறு - (விடய) போகத்திற்பொருந்திய, பாவனையால் - பாவனையினால், பொருளல்லாத பொருளில் - அநாத்ம வஸ்துவில், எழு பந்தம் - உண்டாகாநின்றபந்தமானது, நிலைபொருந்த - நிலைபெற, வன் பாம் - வலிமையாகும், சோகமுறு - துன்பமிகுந்த, பாவனைதான்-பாவனை யானது, சாந்தமாகில் - நீங்கினால், துயர்பந்தமிகத்தேய்ந்து - துன்பமய மானபந்தமானது மிகவுங்குறைந்து, துலைந்துபோகும் - நாசமடையும், இராகவனே - இராமா, வாதனையினேர்மைவீடாம் - வாசனாக்ஷயமேமோ க்ஷமாம், இகம் - இகத்திலுள்ள, பொருளின் - (விடய) வஸ்துக்களின், வா தனையின்-வாசனையினால், இறுகல்பந்தம் - கெட்டிப்படுவதேபந்தமாம், சே கற - (வாசனையின்)வலிமையற, வென்றவர்க்கு-செயித்தவர்களுக்கு, ஏது வின்றி - (தபசுவிரதமுதலிய) காரணமின்றி, போகத்திரள் - போகசமு கங்களில், வெறுப்பாம் - வெறுப்பாகின்ற, மேலவரே-மகான்களே, சீவன் முத்த (ரென்றுகௌசிகர்சொன்னார்)—எ-று.

(இ-கா.) விடயபோகத்திற் பொருந்திய பாவனையினால்அநா த்மவஸ்துவில் உண்டாகாநின்ற பந்தமானது நிலைபெற வலிமை யாகும், துன்பமிகுந்த பாவனையானது நீங்கினால் துன்பமயமான பந்தமானது மிகவுங்குறைந்து நாசமடையும், இராமா! வாசனா க்ஷயமே மோட்சமாம், இகத்திலுள்ள விடயவஸ்துக்களின்வாச னையினால் கெட்டிப்படுவதேபந்தமாம், வாசனையின் வலிமையற செயித்தவர்களுக்கு தபசு விரதமுதலிய காரணமின்றி போகச முகங்களில் வெறுப்பாகின்ற மகான்களே சீவன்முத்தரென்று கௌசிகர் சொன்னார்—என்பதாம்.

(இ-ம்.) வாசனையுதயலயமே பந்தம் வீடென்பதாம். (உக)

## அருளிறையறிவித்தல்.

இராமன்மனத் துணர்பொருளே பொருள்வே றில்லை
யெனவுயர்ந்தோர் வாக்கினு லியம்பக்கேட்டு
மாமனத்தி னிளைப்பாறி யையநீங்கு
மகத்தான விவனுக்கு மதித்துச் சொல்வா
னேமமுறு காலமூன் றறிந்தோனுகி
யிவ்வுலக குருவாகி யெல்லா நோக்கி
நாமமுறு வனைத்துக்குஞ் சான்றுய்நின்ற
நல்வசிட்ட னெனச்சபையி னவின்ற பின்னர்.

(இ-ள்.) உயர்ந்தோர்வாக்கினுல்-மகான்கள்வசனத்தினுல் இராமன்-ஸ்ரீராகவன், மனத்துணர்-மனதினுற் (தீர்ப்பா) யறிந்த, பொருளேபொருள்-வஸ்வேவஸ்துவாம், வேறில்லையென-வேறொரு (பொருளில்லை) யென்று, இயம்பக்கேட்டு-வசனிக்கக்கேட்டு, மாமனத்தினிளைப்பாறி-மகாமன திலவிஸ்ராந்தியடைந்து, ஐயநீங்கும் - சந்தேகந் தீராநின்ற, மகத்தானவிவனுக்கு - மகாத்மாவாயிருக்கின்ற விந்தவிராமனுக்கு, மதித்துச்சொல்வான் - வரையறுத்துச்சொல்லுபவன், ஏமமுறு-மயக்கமுள்ள, காலமூன் றறிந்தோனுகி - மூன்றுகாலங்களையுந் தெளிந்தறிந்தவராயும், இவ்வுலக குருவாகி - இப்பூலோகத்தின் (கண்ணுள்ளமானிடர்களுக்) காசாரியராகி யும், எல்லாநோக்கி - சர்வஞ்ஞராயும், நாமமுறுவனைத்தும்-நாமரூபமுள்ள சகலத்திற்கும், சான்றுய்நின்ற-சாக்ஷியாகியுமிருக்கின்ற,நல்வசிட்டனென - நல்லவசிட்டனேயென்று, சபையில் - (அரச) னவையில், நவின்றபின் னர் - (விசுவாமித்திரர் சொன்னபின்—எ-று.

(இ-ரை) மகான்கள் வசனத்தினுல் ஸ்ரீராகவன் மனதினுற் தீர்ப்பாயறிந்த வஸ்துவே வஸ்துவாம். வேறொரு பொருளில்லை யென்று வசனிக்கக்கேட்டு மகாமனதில் விஸ்ராந்தியடைந்து சந் தேகந் தீராநின்ற மகாத்மாவாயிருக்கின்ற விந்தவிராமனுக்கு வரையறுத்துச் சொல்லுபவன் மயக்கமுள்ள மூன்று காலங்களை யுந் தெளிந்தறிந்தவராயும், இப்பூலோகத்தின் கண்ணுள்ள மானி டர்களுக் காசாரியராகியும், சர்வஞ்ஞராயும், நாமரூபமுள்ள சகல த்திற்கும் சாக்ஷியாகியு மிருக்கின்றநல்ல வசிட்டனேயென்று அர சனவையில் விஸ்வாமித்திரர் சொன்னபின்—என்பதாம்.

(இ-ம்.) சீடனறிந்தவறிவின லவனமைதிபிறந்தனுபூதி யடையும் பொருட்டறிவிக்கத்தக்க வாசாரியரை யறிவித்ததாம். (உஉ)

## பக்குவர்க் குபதேசிக்க வேண்டுமெனல்

நல்வசிட்டன் முகநோக்கி யுணர்தியோமுன்
னுமிருவர் பகைநீங்க நல்லோரெல்லாந்
தொல்வினைபோய் முத்திபெறக் கமலவேதா
சொன்னதனி ஞானத்தின் றொகுதியெல்லாங்
கல்விமிகு மிராமனுக்குச் செப்பல்வேண்டுங்
காதறீர் மாணுக்கன் கருத்திற்சொல்லுஞ்
செல்வவுப தேசமே யததுவேஞானச்
செழுநூலின் பொருளுமிது சிறப்புமீதே.

(இ-ள்.) நல்வசிட்டன்முகநோக்கி (விசுவாமித்திரமுனி) நன்மையானவசிட்டருடைய வதனத்தைப்பார்த்துஉணர்தியோ-ஞாபகமிருக்கின்றதா, முன்னுமிருவர்பகைநீங்க-முன்னநம்மிருவருடைய விரோதந்தீரவும், நல்லோரெல்லாம் - நன்மார்க்கமுள்ள சகலரும், தொல்வினைபோய்-பழய (சஞ்சிதம்)விடுபட்டு, முத்திபெற - மோட்சமடையவும், கமலவேதா - தாமரையில்வசிக்கும் பிரமாவினுல், சொன்ன - ஆத்மசாக்ஷாத்காரம் விளங்கும்படி)யனுக்கிரகித்த, தனிஞானத்தின்-ஒப்பற்றஞானத்தின், தொகுதியெல்லாம் - கதைகளனைத்தையும், கல்விமிகுமிராமனுக்கு-அறிவுமிகுந்த விராகவனுக்கு,செப்பல்வேண்டும்-போதிக்கவேண்டும்,காதறீர்மாணுக்கன்-ஆசைநீங்கிய சீடனுடைய, கருத்தில் - மனதில், சொல்லுஞ்செல்வவுபதேசம் - அனுக்கிரகிக்கின்றபிரமவுபதேசம், எது - யாதொன்றே, அதுவே - அவ்வுபதேசமே, செழும் - செழுமையாகிய, ஞானம் - ஞானத்தையுணர்த்தும், நூலின் - சாத்திரத்தின், பொருளுமிது - அருத்தமுமிது, சிறப்புமீதே - சிறப்புமிதுவே (யென்றுசொன்னுர்)—எ-று.

(இ-ா.) விசுவாமித்திரமுனி நன்மையான வசிட்டருடைய வதனத்தைப்பார்த்து ஞாபகமிருக்கின்றதா? முன்னநம்மிருவருடைய விரோதந்தீரவும், நன்மார்க்கமுள்ள சகலரும் பழயசஞ்சிதம் விடுபட்டு மோட்சமடையவும், தாமரையில்வசிக்கும் பிரமாவினுல் ஆத்ம சாக்ஷாத்காரம் விளங்கும்படியனுக்கிரகித்த ஒப்பற்ற ஞானத்தின் கதைகளனைத்தையும் அறிவுமிகுந்த விராகவனுக்கு

போதிக்கவேண்டும். ஆசைநீங்கியசீடனுடைய மனதில் அனுக்கிரகிக்கின்ற பிரமவுபதேசம் யாதொன்றோ? அவ்வுபதேசமே செழுமையாகியஞானத்தையுணர்த்தும் சாத்திரத்தின் அருத்தமுமிது, சிறப்புமிதுவேயென்றுசொன்னார்—என்பதாம்.

(இ-ம்.) ஆசாரிய ருபதேசம்பெற் றனுபவமான மார்க்கத்தைச் சீடனுக்குபதேசிக்க வேண்டுமென்பதாம். (உரு)

## அபக்குவனுக் குபதேசிக்க லாகாதெனல்.

காதல்செறி பொல்லாமா ணக்கனுக்குக்
 கற்பித்த வுபதேசங் கருநாய்த் தோலுண்
மேதகுபா லெனவசுத்த மேவுமென்று
 மிருகாதி சேய்பலவும் விளம்பக் கேட்டு
தீதறுநா ரதன்வேத வியாதனாதித்
 திரண்முனிவர் நன்றிதெனச் சிறப்புசெய்தார்
காதிபுதல் வனைநோக்கிக் கமலத்தோனேர்
 கமலமுனி புதல்வனிவை கழறலுற்றான்.

(இ-ள்.) காதல்செறி - ஆசைமிகுந்த, பொல்லாமாணக்கனுக்கு-துஷ்டசீடனுக்கு, கற்பித்தவுபதேசம் - போதித்தவுபதேசமானது, கருநாய்த்தோலுள் - கரியசுணங்கன் சருமத்துள், மேதகுபாலென - (வைக்கின்ற) மேலானபாலைப்போல, அசுத்தமேவுமென்று - சுத்தமாகா தென்று, மிருகாதிசேய் - மேலானவிசுவாமித்திரர், பலவும்விளம்ப - நானாவிதங்களாலுஞ்சொல்ல, தீதறுநாரதன் - தீமைநீங்கியநாரதரும், வேதவியாதனாதி-வேதவியாசர் முதலான, திரண்முனிவர் - திரண்டமுனிவர்களும், கேட்டு-(இதைக்) கேட்டு, இது - இதுவே, நன்றென - நல்லதென்று, சிறப்புசெய்தார் - (அவ்வசனத்தையே) சிறப்பித்தார்கள், காதிபுதல்வனைநோக்கி - கௌசிகரைப்பார்த்து, கமலத்தோனேர் - பிரமாவுக்குச்சமானமான, கமலமுனிபுதல்வன் - பிரமபுத்திரரானவசிட்டமுனி, இவைகழறலுற்றான் - இவைகளைச் சொல்லத்தொடங்கினார்—எ-று.

(இ-ரை.) ஆசைமிகுந்த துஷ்டசீடனுக்குப் போதித்த வுபதேசமானது கரியசுணங்கன் சருமத்துள்வைக்கின்ற மேலானபாலைப்போல சுத்தமாகாதென்று மேலானவிசுவாமித்திரர் நானாவிதங்களாலுஞ்சொல்ல தீமைநீங்கிய நாரதரும் வேதவியாசர் முத

லான திரண்டமுனிவர்களும் இதைக்கேட்டு இதுவேநல்லதென்று அவ்வசனத்தையே சிறப்பித்தார்கள். கௌசிகரைப்பார்த்து பிரமாவுக்குச் சமானமான பிரமபுத்திரரான வசிட்டமுனி இவைகளைச் சொல்லத்தொடங்கினார்—என்பதாம்.

(இ-ம்.) பக்குவனுக் குபதேசிக்கவேண்டுமென்பதை வைப்புறுத்திச் சொன்னதாம். (உச)

## உபதேசிக்கத் தொடங்கல்.

கலைமுனியே நீர்மொழிந்த படியேசெய்வேன்
கற்றுணர்ந்த பெரியோர்சொற் கடப்பார்யாரே
நிலையில்பவ மயக்கமறப் பதுமவேதா
நிடதமலை மேலுரைத்த நிமலஞான
மலைவின்மனத் திருக்கின்ற துரைப்பேனென்ன
வஞ்ஞானத் தொகுதிகெடவகண்டஞானத்
தொலைவில்பர பதமெவர்க்குந் தோன்றுமாறு
சுத்தவிநயத்துடனே சொல்வதானன்.

(இ-ள்.) கலைமுனியே - கலை (ஞானங்களையுணர்ந்த), விசுவாமித்திரரே, நீர்மொழிந்தபடியேசெய்வேன் - நீர்சொன்னபடியேயுபதேசிப்பேன், கற்றுணர்ந்தபெரியோர் - அறிவையாராய்ந்தறிந்த மகான்கள், சொற்கடப்பார் யாரே - வசனத்தைக்கடக்கப்பட்டவரெவர், நிலையில்பவமயக்கமற-நிலையில்லாதசநநமயக்கந் தீரும்பொருட்டு, பதுமவேதா - தாமரையில்வசிக்கும்பிரமாவாலே, நிடதமலைமேலுரைத்த - நிடதமலைமேலிருந் தனுக்கிரகஞ்செய்த, நிமலஞானம்-நிருமலஞானக் (கதைகளானவை), அலைவின் மனத்திருக்கின்றது - சஞ்சலமில்லாத பரிசுத்தமனதின்கண் ணிருக்கின்றதை, உரைப்பேனென்ன-சொல்லுவேனென்று (சொல்லி), அஞ்ஞானத் தொகுதிகெட - அஞ்ஞானக்குழாங்கணசிக்க, அகண்டஞானம் - பூரணஞானமான, தொலைவில் - நீங்காத, பரபதம் - பரமபதமானது, எவர்க்குந் தோன்றுமாறு-யாவருக்குமுதயமாம்பொருட்டு, சுத்தவிநயத்துடனேசொல்வதானன்-பரிசுத்தமானதருமத்தோடுஞ் சொல்லத்தொடங்கினார்-எ-று.

(இ-கா.) கலைஞானங்களையுணர்ந்த விசுவாமித்திரரே நீர் சொன்னபடியே யுபதேசிப்பேன், அறிவையாராய்ந் தறிந்த மகான்கள்வசனத்தைக் கடக்கப்பட்டவரெவர் நிலையில்லாதசநநமயக்க

ந்தீரும்பொருட்டுத் தாமரையில்வசிக்கும் பிரமாவாலேநிடதமலை மேலிருந் தனுக்கிரகஞ்செய்த நிருமலஞானக் கதைகளானவை சஞ்சலமில்லாத பரிசுத்தமனதின்கண் ணிருக்கின்றதைச் சொல் லுவேனென்றுசொல்லி அஞ்ஞானக்குழாங்க ணசிக்கபூரணஞான மான நீங்காத பரமபதமானது யாவருக்குமுதயமாம்பொருட்டு பரிசுத்தமான தருமத்தோடுஞ் சொல்லத்தொடங்கினர்—எ-ம்.

நிடதமலை, மேருவின் சிகரத்தி லொன்றி னுமமெனக்கொள்க.

(இ-ம்.) பிரமருபதேசமான வகண்டசாக்ஷாத்காரானுபவத்தையிராம னிமித்தஞ் சகலருக்குந்தோன்றும்படி போதிப்பதாம். (உரு)

சுகர்கதை முற்றிற்று

ஆ திருவிருத்தம் - ௱சுக.

# முமுக்ஷுப்பிரகரணம்.

(அவதாரிகை.)

முற்கதையிற் சுகமுனியறிந்த வறிவைக்கொண்டே யவர் சுவானுபூதி சாக்ஷாத்கார மாதப்போருட் டரசனருளியபடியே இராமனறிந்த வறிவைக்கொண் டவர் சுவானுபூதி சாக்ஷாத்காரமாதும் போருட் டவர்க்குதயமான முத்தி விருப்பத்தை வைப்புறுத்த வசிட்டமுனி முமுக்ஷுப்பிரகரணங் கூறுகின்றார்.

## சாஸ்திரிய முயற்சியே முத்திசாதனமெனல்.

இராகவகே ளிப்பவத்தி லென்றுமெல்லா
மியல்புறுநன் முயற்சியினு லியார்க்குமெய்து
மாகலைநன் னூன்முயற்சி யொன்றுமொன்று
வருநூலி லாமுயற்சி மற்றிவற்றின்
சோகமின்னூல் வழிவீடா நூலிலாமை
துன்பமாஞ் சைசவத்திற் றொடருமிந்நூன்
மோகமினல் லோர்கூட்டங் குணங்களாலே
முயற்சியுறு பெரியோர்க்கு முத்திபேறும்.

(இ-ள்.) இராகவகேள் - இராமா (நீயிதைக்) கேட்பாய், இப்பவத்தில் - இச்சநநத்தில், என்றும் - எப்போதும், இயல்புறு-ஒழுக்கமுள்ள, நன்முயற்சியினல் - (சாஸ்திரயுத்தமான) நல்லவெத்தனத்தினுல், இயார்க்கும் - எவர்க்கும், எல்லாமெய்தும் - (புருடார்த்தமுள்ள) சகலமும்வரும், மாகலைநன்னூல் - ஆத்மஞான சாஸ்திரியமான, முயற்சியொன்றும் - எத்தனமொன்றுகும், வருநூலிலாமுயற்சி - வாராநின்ற சாஸ்திரியவெத்தனமானது, ஒன்றுகும், மற்றிவற்றின் - மறறிவ்விரண்டில், சோகமின்னூல்வழி -துன்பமின்றிய ஞானசாஸ்திரிய மார்க்கமானது, வீடாம் - மோக்ஷ (நிமித்த)மாம், நூலிலாமை - அசாஸ்திரிய (மார்க்கமானது,) துன்பமாம்-பந்த (நிமித்த) மாம், சைசவத்திற்றொடரும் - பாலப்பருவத்திற் (றுனே) தொடர்ந்துவருகிற, இந்நூல் - இந்தஞானசாஸ்திரங்களிலும், மோகமில் - மயக்கமில்லாத, நல்லோர்கூட்டம்-சத்துக்கள்சங்கத்திலும், குணங்களால்-(மைத்திரியாதிசற்) குணங்களினுலும், முயற்சியுறு - முயற்சிபெற்ற, பெரியோர்க்கு - சத்துக்களுக்கு, முத்திபேறும் - மோக்ஷவிலாபமுண்டாகும்.

(இ-ரை.) இராமா நீயிதைக்கேட்பாய் இச்சநநத்தில் எப்போதும் ஒடுக்கமுள்ள சாஸ்திரயுக்தமான நல்லெத்தனத்தினல் எவர்க்கும் புருடார்த்தமுள்ள சகலமும்வரும், ஆத்மாஞான சாஸ்திரியமான எத்தனமொன்றுகும், வராநின்ற சாஸ்திரியவெத்தனமானது ஒன்றுகும், மற்றிவ்விரண்டில் துன்பமின்றிய ஞானசாஸ்திரிய மார்க்கமானது மோக்ஷநிமித்தமாம், அசாஸ்திரிய மார்க்கமானது பந்தநிமித்தமாம், பாலப்பருவத்திற்றனே தொடர்ந்துவருகின்ற இந்த ஞானசாஸ்திரங்களினலும் மயக்கமில்லாத சத்துக்கள் சங்கத்தினலும் மைத்திரியாதி சற்குணங்களினலும் முயற்சிபெற்றசத்துக்களுக்கு மோக்ஷவிலாப முண்டாகும்—என்பதாம்.

(ப-ம்.) இச்சநநமே வீடடைதற்குக் கருவியாமென்பார், இப்பவத்தினன்முயற்சியின லியார்க்குமெய்துமென்ருர்.

(இ-ம்.) புருடார்த்தத்தை விரும்பியவன் சாஸ்திரியமுயற்சியையே செய்யவேண்டுமென்பதாம. (க)

## பூர்வவாசனையே பூக்கியமாயிருக்கின்றதெனல்.

முற்பிறப்பின் வாதனையின் வயத்தினின்றேன்
முயற்சியிலே னென்செய்கேன் முனிவவென்ன
வற்புதனே தன்வருத்த முயற்சியாலே
யடையலாம் பரமபத மயல்வேறின்று
சொற்பயில்வா தனைத்திரளின் பேதஞ்சொல்லிற்
சுபமசுப மெனவிரண்டாஞ் சொன்னவற்றி
லற்பமுறு பவந்தோறுந் தொடர்ந்துவந்த
வாதனையே ததுவொன்றே மருவிநிற்கும்.

(இ-ள்.) முற்பிறப்பின்வாதனையின்-முற்சநநவாசனையின், வயத்தினின்றேன் - வசத்திலிருந்தேன், முயற்சியிலேன் - (சன்மார்க்க) வெத்தனமில்லாதவனுனேன், என்செய்கேன் - (யா)னென்னசெய்வேன், முனிவவென்ன- (என) தாசிரியரேயென் (றிராகவன்) கூற, அற்புதனே-(குண) திசயமுள்ளவிராமா, தன்வருத்தம் - தனதுசுயப்பிரயாசமான, முயற்சியால் - எத்தனத்தினல், பரமபதம் - பிரமபதத்தை, அடையலாம் - பெறலாம், அயல்வேறின்று - (இதைத்தவிர) வேறென்றுமின்று, சொற்பயில்-

சொல்லப்பட்ட, வாதனைத்திரளின் - வாசனைசமூகத்தின், பேதஞ்சொல்லில - வேற்றுமையைக்கூறில், சுபமசுபமெ:னவிரண்டாம் - சுபவாசனையசுபவாசனையென்றிரண்டுவிதமாம், சொன்னவற்றில் - சொல்லியவவ்விரண்டில், அற்பமுறு - சொற்பமாகிய, பவந்தோறும் - சநநங்களிளெல்லாம், தொடர்ந்துவந்த - நட்புற்றுவந்த, வாதனையேது - வாசனையெதுவோ, அதுவொன்றே - அஃதொன்றுமே, மருவிநிற்கும் - பொருந்தியிருக்கும்—எ-று.

**(இ-ள்.) முற்சநநவாசனையின் வசத்திலிருந்தேன், சன்மார்க்க வெத்தனமில்லாதவனுனேன், யானென்னசெய்வேன், எனதாசிரியரேயென் றிராகவன்கூற, குணாதிசயமுள்ள விராமா! தனது சுயப்பிரயாசமான எத்தனத்தினால் பரமபதத்தைப்பெறலாம். இதைத்தவிர வேறொன்றுமின்று. சொல்லப்பட்ட வாசனைசமூகத்தின் வேற்றுமையைக் கூறில் சுபவாசனை யசுபவாசனை யென்றிரண்டு விதமாம். சொல்லிய வவ்விரண்டில் சொற்பமாகிய சநநங்களிளெல்லாம் நட்புற்றுவந்த வாசனையெதுவோ அஃதொன்றுமே பொருந்தியிருக்கும்—என்பதாம்.**

(இ-ம்.) மதிவிதியென்றிரண்டாம், அவற்றில் ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தமென மூன்று மிவைகளிற் சுயஞ் சைதன்னியத்திலுண்டான சங்கற்பமே பந்தவாகாமியமென்றும், அது வெகுற்முகமாய்த் தனதுசைதன்னியப் பிறிதிபலனமான விடயத்தை, யெதிரிட் டனுபவிக் கவுன்முகமா யபேட்சித்தவிடத்தில் அப்போதனுபவிக்கக்கூடாத போகமெல்லாங் கட்டுப்பட்டதே பந்தசஞ்சிதமென்றும், இதிற்கட்டுப்பட்ட விடயபோகங்களைச் சிற்பிறேரகத்தினுற் பின்னனுபவிக்கக்கொடுக்க வனுபவிப்பதேபந்தபிராரத்தமென்றும், அச்சங்கற்பஞ் சைதன்னிய வுன்முகமானதே விடுதியாகாமியமென்றும், அது அந்தர்முகத்திற் றனது சைதன்னியத்தையுடைய வுன்முகமா யபேட்சித்தவிடத்தி லப்போ தனுபவிக்கக்கூடாத நிரதிசயாநந்த சைதன்னியானுபவங் கட்டுப்பட்டதே விடுதிசஞ்சிதமென்றும், இதிற் கட்டுப்பட்ட பிரமாநந்தபோகத்தைச் சைதன்னியப் பிரேரகத்தினு லனுபவிக்கக்கொடுக்க வனுபவிப்பதே முடிவானவிடுதி பிராரத்தமென்றும் சொல்லப்படும். அப்பந்த வாகாமியத்தினுலுண்டான சஞ்சிதமும், அதனுல்வரும் பிராரத்தமும், சநநமரணதுக்கத்துக் கேதுவாய்த் துன்பப்படுத்துவதென்றும், விடுதியாகாமியத்தின் லுண்டான சஞ்சிதமும், அதனுல்வரும் பிராரத்தமும், சநநமரணரகிதமான நிரதிசயாநந்த சைதன்னியாகாரமாக்குதற் கேதுவாய்ச் சுகப்படுத்துவதென்றுஞ் சொல்லப்படும். தன்னுன்மதிக்கப்பட்ட விந்தவாகாமியத்தை மதியென்றும், சஞ்சிதத்தினுல் விதிக்கப்பட்ட பிராரத்தத்தை விதியென்றும், அச்சஞ்

சிதத்தையே பூர்வவாசனையென்றும் சொல்லப்படும், இதிற் பந்தவாகாமியத்தை, அசாஸ்திரியமுயற்சியென்றும், விடுதியாகாமியத்தை சாஸ்திரியமுயற்சியென்றும், பந்தசஞ்சிதத்தை அசுபவாசனையென்றும், விடுதிசஞ்சிதத்தை சுபவாசனையென்றும் பந்தபிராரத்தத்தை விடயானுபவசாக்ஷாத்காரமென்றும், விடுதிபிராரத்தத்தை ஸ்வரூபானுபவ சாக்ஷாத்காரமென்றுஞ் சொல்லப்படும். ஆகையால் முற்பிறப்பின் வாதனையென்பது விதியெனவும், தன்முயற்சியென்பது மதியெனவுங்கொண்டவ்விதிவருவதுங் கெடுவது மிம்மதியினுதலி னிதனு லாத்மவிசாரமான சுத்தவாசனையைக் கொண் டவ்விதியினுல்வரும் அசுத்தவாசனையைக்கெடுத்த பரோக்ஷ சாக்ஷாத்கார மாகவேண்டுமென்பதாம். (உ)

## சுபவாசனையை யடையவேண்டுமெனல்.

சுத்தவா தனைதொடரி லதனுன்மெல்லத்
   தூயபர பதம்பெறுவைச் சுத்தமல்லாப்
பெத்தவா தனைதொடரிற் றுன்பமாகும்
   பெரிதுவருந் தியுமிதனைப் போக்கவேண்டும்
வைத்தசுப மசுபமெனும் வழியிரண்டால்
   வாதனையா நதிபெருகும் வருத்தத்தாலே
மெத்தமுயன் றசுபவா தனையைத்தள்ளி
   மிக்கசுப வாதனையின் மேவிநிற்பாய்.

(இ-ள்.) சுத்தவாதனைதொடரில் - சுத்தவாசனைதொடர்ந்தால், அதனுல் - அதினுலே, மெல்ல - மிருதுவாக, தூய - பரிசுத்தமாகிய, பரபதம்பெறுவை - பரமபதத்தை யடைவாய், சுத்தமல்லா - பரிசுத்தமாகாத, பெத்தவாதனைதொடரில் - பந்தவாசனைதொடர்ந்தால், துன்பமாக்கும்-துக்கத்தை விளைக்கும், பெரிதுவருந்தியும் - மிகவும்வருத்தமுற்றுயினும், இதனைப்போக்கவேண்டும் - இவ்வாசனையைநீக்கவேண்டும், வைத்த - விதித்த, சுபமசுபமெனும் - நன்மைதீமையென்கின்ற, வழியிரண்டால் - இரண்டுமார்க்கத்தினுல், வாதனையாம் - வாசனையாகிய, நதிபெருகும்-வெள்ளமதிகரிக்கும், வருத்தத்தால் - (பிரமவித்தையிற்பயிலும்) ப்ரயாசத்தினுல், மெத்தமுயன்று - மிகவுமுயற்சித்து, அசுபவாதனையைத்தள்ளி-தீயவிடயவாசனையைநீக்கி, மிக்கசுபவாதனையில் - மிகுந்தநன்மையுள்ள ஸ்வரூபவாசனையில், மேவிநிற்பாய் - பொருந்தியிருப்பாய்—எ-று.

(இ-கா.) சுத்தவாசனை தொடர்ந்தால் அதினுலே மிருதுவாக பரிசுத்தமாகிய பரமபதத்தையடைவாய், பரிசுத்தமாகாத

பந்தவாசனைத்தொடர்ந்தால் துக்கத்தைவிளைக்கும், மிகவும் வருத்தமுற்றாயினும் இவ்வாசனையை நீக்கவேண்டும், விதித்த நன்மைதீமையென்கின்ற இரண்டுமார்க்கத்தினால் வாசனையாகிய வெள்ளமதிகரிக்கும், பிரமவித்தையிற்பயிலும் ப்ரயாசத்தினால் மிகவுமுயற்சித்து தீயவிடய வாசனையைநீக்கி மிகுந்த நன்மையுள்ள ஸ்வரூபவாசனையில் பொருந்தியிருப்பாய்—என்பதாம்.

(கு-ரை.) சநநாந்தரங்களிற் றொடர்ந்துவருகின்ற வாசனைகளின் பலாபலங்களையும், அதிற்றள்ளுவதையுங் கூட்டுவதையு மறிவித்ததாம். (ரு)

---

**சுபவாசனையிற் செல்லுதலி லுண்டான பலனுரைத்தல்.**

மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற
 வேண்டுகொளாற்றன்முயல்வால் விநோதந்தன்னாற்
பகர்மனமாஞ் சிறுமகவை நிறுத்தல்வேண்டும்
 பலபிறப்பிற் பரிசயங்க ளகலப்பண்ணி
யகல்சுபவா தனையுதித்தான் முயற்சிபேறு
 மையுறினுஞ் சுபமடைவா யதுதீதல்ல
திகழ்மனம்போய்த் தற்பதத்தைத் தெளியுமட்டுந்
 தேசிகனூற் சொல்வழியிற் செல்லுவாயே.

(இ-ள்.) மிகமுயன்று - மிக்கவுமுயற்சித்து, வருந்தாமல் - வருத்தப்படாமல், சமமாகின்ற - சமத்துவமாகின்ற, வேண்டுகொளால் - வேண்டுகையினால், தன்முயல்வால்-தனதுமுயற்சியினால், விநோதந்தன்னால்-(நயமான) விளையாட்டினால், பகர்மனமாம் - சொல்லப்பட்டமனமென்னும், சிறுமகவை - சிறுகுழந்தையை, நிறுத்தல்வேண்டும் - (அசுபவாசனையிற் செல்லாமற்றடுத்துசுபவாசனையி) னிறுத்தவேண்டும், பலபிறப்பில் - (முன்னெடுத்த) நானாவிதமான சநநங்களில், பரிசயங்கள் - (பழகிய) வசுத்தவாசனைகளை, அகலப்பண்ணி - நீங்கச்செய்து, அகல்சுபவாதனை யுதித்தால் - மகத்தான, சுத்தவாசனை யுதயமாயின், முயற்சிபேறும் - முயற்சிக்குப் பிரயோசனமாம், ஐயுறினும் - (சுபவாசனை யென்செய்யுமோவென்னுஞ்) சந்தேகம்வரினும், சுபமடைவாய் - சுபவாசனையையேயடைவாய், அதுதீதல்ல - அச்சுபவாசனையின் மிகுதிகொடிதல்ல, திகழ்மனம்போய்- விளங்குகின்றமனஞ்சென்று, தற்பதத்தை - பிரமஸ்வரூபத்தை, தெளியுமட்டும் - தெளிகின்றபரியந்தம், தேசிகன் - ஆசாரியரும், நூல் - வேதங்களும், சொல் - (பிரமோபதேசத்தையு மகாவாக்கியார்த்தத்தையும்) போ

திக்கின்ற, வழியில் - மார்க்கத்தில், செல்லுவாய் - (அனுபவமா) யனுஷ்டிப்பாய்—எ-று.

(இ-ள.) மிகவுமுயற்சித்து வருத்தப்படாமல் சமத்துவமாகின்ற வேண்டுகையினுல் தனது முயற்சியினுல் நயமானவிளையாட்டினுல் சொல்லப்பட்ட மனமென்னும் சிறுகுழந்தையை அசுபவாசனையிற் செல்லாமற்றடுத்து சுபவாசனையினிறுத்தவேண்டும், முன்னெடுத்த நாநாவிதமான சநநங்களில் பழகிய வசுத்தவாசனைகளை நீங்கச்செய்து மகத்தான சுத்தவாசனை யுதயமாயின் முயற்சிக்குப் பிரயோசனமாம், சுபவாசனையென்செய்யுமோ வென்னுஞ் சந்தேகம்வரினும் சுபவாசனையையேயடைவாய், அச்சுபவாசனையின் மிகுதிகொடிதல்ல, விளங்குகின்ற மனஞ்சென்று பிரமஸ்வரூபத்தைத் தெளிகின்ற பரியந்தம் ஆசாரியரும் வேதங்களும் பிரமோபதேசத்தையுமகாவாக்கியார்த்தத்தையும் போதிக்கின்ற மார்க்கத்தில் அனுபவமா யனுஷ்டிப்பாய்—என்பதாம்.

(இ-ம்.) மனது, செலுத்துமிடத்திற் செல்லுவதாகையா லதனையபரோக்ஷஞான மடைகின்றபரியந்தஞ் சுருதி, குரு, சுவானுபவமான மார்க்கத்திற் செலுத்தவேண்டுமென்பதாம். (௪)

---

## ஆத்மானுசந்தானக் கிரமமுரைத்தல்.

தூயதா யிகத்தினிதாய்ப் பெரியோர்மேவுஞ்
 சுபத்தினுன் மனமழுக்குந் துயருமற்ற
நேயமாம் பதமேவி யதுவுந்தள்ளி
 நிலைநிற்பாய் மீட்டணுகா நெறியதாக
மாயைநினை வொழித்துநிறை சாந்தியின்பம்
 வழுவாம லுதாரமா மதியாலெய்தி
யாயமொழிப் பொருண்முன்பின் கருதுநெஞ்சை
 யமர்சமஞ்செய் தான்மாவி லனுசந்திப்பாய்.

(இ-ள்.) தூயதாம் - பரிசுத்தமாயும், இகத்தினிதாய் - இப்பிறப்பிலினிமையாயும், பெரியோர்மேவும் - சத்துருக்கள்விரும்பப்பட்ட (தாயுமிருக்கின்ற), சுபத்தினுல்-சுபவாதனையினுல், மனம் - மனதை, அழுக்குந்

துயருமற்ற - களங்கமுந்துக்கமுமில்லாத, நேயமாம்பதமேவி-ஆத்மபதத்தை யடைவித்து, அதுவுந்தள்ளி - அச்சுத்தவாசனையையும்விடுத்து, நிலைநிற்பாய் - (சாக்ஷாத்கார) நிலையிலிருப்பாய், மீண்டணுகாநெறியதாக - (அவை) திரும்பிவாராத முறைமையாக, மாயைநினைவொழித்து - மாயாபாவனையைநீக்கி, நிறைசாந்தி - பூரணசாந்தத்தையும், இன்பம் - ஆநந்தத்தையும், வழுவாமல் - தவறாமல், உதாரமாம் - (விடயவாசனைத்) தியாகமுள்ள, மதியாலெய்தி - அறிவினாலடைந்து, ஆயமொழி - சிறந்த (தத்தோமசியென்னும்) வாக்கியத்தின், பொருள் - (அதுநீயானுயென்னு) மருத்தத்தை, முன்பின்கருதும் - கூடஸ்த பிரமமென்னு மிரண்டையும் விசாரிக்கும், நெஞ்சை - மனதை, ஆன்மாவில் - (ஆனுவென்னும்) பிரமத்தில், அமர்சமஞ்செய்து - அமருமைக்கியஞ்செய்து, அனுசந்திப்பாய் - (இராமாநீ) யனுசந்தானஞ்செய்வாய்—எ-று.

(இ-ள்.) பரிசுத்தமாயும், இப்பிறப்பிலினிமையாயும், சத்துக்கள் விரும்பப்பட்டதாயுமிருக்கின்ற சுபவாதனையினால் மனதைகளங்கமுந் துக்கமுமில்லாத ஆத்மபதத்தை யடைவித்து அச்சுத்தவாசனையையும் விடுத்து சாக்ஷாத்கார நிலையிலிருப்பாய், அவைதிரும்பிவாராதமுறைமையாகமாயாபாவனையைநீக்கி பூரண சாந்தத்தையும் ஆனந்தத்தையும் தவறாமல் விடய வாசனைத்தியாகமுள்ள அறிவினாலடைந்து சிறந்த தத்தோமசியென்னும் வாக்கியத்தின் அது நீயானுயென்னு மருத்தத்தை கூடஸ்த பிரமமென்னு மிரண்டையும் விசாரிக்கும் மனதைஆனுயென்னும் பிரமத்தில் அமருமைக்கியஞ் செய்து இராமாநீயனுசந்தானஞ்செய்வாய்—எ-ம்.

(இ-ம்.) சுத்தவாசனையாற் சித்தசுத்திவந்து அச்சித்தசுத்தியா லறிவுதயமாய், அவ்வறிவுதயத்தாற் கூடஸ்தபிரமவைக்கிய நிரதிசயாநந்தானுபவசாக்ஷாத்காரந் தானெனன் றனுஷ்டானஞ் செய்யவேண்டுமென்பதாம். சமமென்பதற்குதாரணம், **பகவற்கீதை**, ஞானிக்குநான்பிரிய னவனெனக்குப்பிரியன் ஞானியே நானெனன்பதெனதுமதம், அதுவுந்தள்ளி யென்பதற்குதாரணம், **சூதசம்மிதை**, வேதாந்த மகாவாக்கியத்தா லுண்டானவபரோக்ஷானுபவ ஞானமுள்ளவனுக்கு வுதிநிஷேதம் வேண்டுவதின்றென்று வேதார்த்தத்திினிச்சயம். (ரு)

---

## குருபரம்பரையை யறிவித்தல்.

தேங்கமலத் தயனுரைத்த மொழிகேளென்னச்
செப்பியகா ரணமேதென் றிராமன்கேட்ப

வோங்குமுனி யுரைசெய்வான் முடிவற்றெங்கு
முளதாகி யனைத்தினுக்கு முறையுளாகி
வீங்குபொருள் களில்விளக்க மாகிமேவு
மெய்ஞ்ஞான விண்ணின்று விண்டுவந்தா
னங்கவன்றன் மனக்கமலத் தயனுண்டாகி
யகில்மன விகற்பம்போ லளித்தானன்றே.

(இ-ள்.) தேன் - மதுவையுடைய, கமலத்து - தாமரைப்பூவில் (வீற்றிராநின்ற), அயன் - பிரமதேவன், உரைத்த - சொல்லிய, மொழிகேளென்ன - வாக்கியத்தைக் கேட்பாயென்று (வசிட்டர்) சொல்ல, செப்பியகாரணம் - (அவர்) சொல்லியகாரணம், ஏதென்று - என்னவென்று, இராமன்கேட்ப - இராகவன்கேட்க, ஓங்குமுனி - மேலாகியவசிட்டமுனியானவர், உரைசெய்வான் - அனுக்கிரகஞ்செய்வார், முடிவற்று - அந்தமற்றதாய், எங்குமுளதாகி-எவ்விடத்திலுநிறைந்திருப்பதாய், அனைத்தினுக்கும் - சகலத்திற்கும், உறையுளாகி - இருப்பிடமாகி, வீங்குபொருள்களில் - சகலவஸ்துக்களிலும், விளக்கமாகி - பிரகாசமாய், மேவும் - பொருந்தி (விளங்கிய), மெய்ஞ்ஞானவிண்ணின்று-உள்ளசிதாகாரத்திலிருந்து, விண்டுவந்தான் - விஷ்ணு வுதயமாயினர், ஆங்கவன்றன் - அவருடைய, மனக்கமலத்து - இதயதாமரையில், அயனுண்டாகி - பிரமனுதயமாய், அகிலம் - பூமிமுதலிய (வேறுபாடுகளை), மனவிகற்பம்போல் - மனக்கற்பனையைப்போல், அளித்தான் - சிருட்டித்தார்—எ-று.

(இ-ை.) மதுவையுடைய தாமரைப்பூவில் வீற்றிராநின்ற பிரமதேவன் சொல்லியவாக்கியத்தைக் கேட்பாயென்று வசிட்டர்சொல்ல அவர்சொல்லியகாரணம் என்னவென்று இராகவன்கேட்க, மேலாகிய வசிட்டமுனியானவர் அனுக்கிரகஞ்செய்வார், அந்தமற்றதாய் எவ்விடத்திலு நிறைந்திருப்பதாய் சகலத்திற்கும் இருப்பிடமாகி சகல வஸ்துக்களிலும் பிரகாசமாய் பொருந்திவிளங்கிய உள்ளசிதாகாயத்திலிருந்து விஷ்ணுவுதயமாயினர், அவருடைய இதய தாமரையில் பிரமனுதயமாய் பூமிமுதலிய வேறுபாடுகள் மனக்கற்பனையைப்போல் சிருஷ்டித்தார்—என்பதாம்.

(இதுவுமது.)

உலகளித்த வயன்றனே நானுவாக
வோங்கியபா ரதவருடத் துயிர்களெல்லா

மலகிறுய ருறக்கண்டு புதல்வர்நோவுக்
கழுங்குபிதா வெனவழுங்கி யவர்களுய்வான்
பலகருமந் தவந்தான நதிமற்றெல்லாம்
பவந்தீரா ஞானத்தாற் பவம்போமென்றே
கலகமிலா மனத்தளித்தா லென்னைத்தன்போற்
கமண்டலமுஞ் செபவடமுங் கையிற்காண.

(இ-ள்.) உலகளித்தவயன்றனே - சகத்தையுண்டாக்கின பிரமதேவனே, நாலுவாக - நாலுவிதமாக, ஓங்கிய - உயர்வாகிய, பாரதவருடத்து-பாரதவருடத்தி (லுண்டான), உயிர்களெல்லாம் - சீவர்களியாவும், அலகில் - அளவில்லாத, துயருறக்கண்டு - துன்பமுறுவதைப்பார்த்து, புதல்வர்நோவுக்கு - புத்திராதி துன்பத்துக்கு, அழுங்குபிதாவென - இரக்கப்படுகின்ற பிதாவைப்போல, அழுங்கி - இரக்கப்பட்டு, அவர்களுய்வான் - அவ்வுயிர்கள் மோக்ஷமடையும்பொருட்டுச் (சிந்தித்து), பலகருமம்-(செபமாதியான) நாநாவிதகிரியைகளும், தவம் - (தேகத்தைவருத்துந்) தபசுகளும், தானம - (சமஸ்த) தானங்களும், நதி - (கங்கைமுதலான) தீர்த்தங்களும், மற்றெல்லாம் - பிறவுமாகியவனைத்தினாலும், பவந்தீரா - சநந (துக்கந்) தீராது, ஞானத்தால்-(ஆத்ம) ஞானத்தினால், பவம்போமென்று-சநந (துக்கம்) விடுமென்று, கலகமிலாமனத்து - கலக்கமற்ற மனதினால், தன்போல் - தன்னைப்போல, கமண்டலமும் - கமண்டலத்தையும், செபவடமும் - செபமாலிகையையும், கையிற்காண - கரத்திற்காணும்படியாக, என்னை - நம்மை, அளித்தான் - உண்டாக்கினார்—எ-று.

(இ-ள்.) சகத்தையுண்டாக்கின பிரமதேவனே நாலுவிதமாக உயர்வாகிய பாரதவருடத்திலுண்டான சீவர்களியாவும் அளவில்லாத துன்பமுறுவதைப்பார்த்து புத்திராதி துன்பத்துக்கு இரக்கப்படுகின்ற பிதாவைப்போல இரக்கப்பட்டு அவ்வுயிர்கள் மோக்ஷமடையும்பொருட்டுச் சிந்தித்து செபமாதியான நாநாவித கிரியைகளும் தேகத்தை வருத்துந் தபசுகளும் சமஸ்ததானங்களும் கங்கைமுதலான தீர்த்தங்களும் பிறவுமாகிய வனைத்தினாலும் சநநதுக்கந்தீராது ஆத்மஞானத்தினால் சநநதுக்கம் விடுமென்று கலக்கமற்றமனதினால் தன்னைப்போலகமண்டலத்தையும்செபமாலிகையையும் கரத்திற்காணும்படியாக நம்மை உண்டாக்கினார்-எ-ம்.

## (இதுவுமது.)

வந்திறைஞ்சு மென்னைத்தான் மகிழ்ந்துமேவும்
வனசத்தின் வடபாலோர் மடன்மேல்வைத்தென்
சிந்தைதனை நாழிகையோ ரிரண்டுமாயை
சேர்கவெனச் சபித்தலுமே தியக்கமுற்றுப்
புந்தியுடன் மெய்யுணர்வை மறந்தேன்கல்லாப்
புல்லரைப்போற் புலம்புமெனைப் போதன்பார்த்து
வெந்துயரென் னெனமாயை விளைந்தவாறும்
வீடுறுமா றுங்கேட்டேன் விளங்கச்சொன்னான்

(இ-ள்.) வந்திறைஞ்சுமென்னை-பிறந்துநமஸ்கரித்தவடியேனை, தான் மகிழ்ந்துமேவும் - தான்மகிழ்ச்சியுடன்வசிக்கும், வனசத்தின் - தாமரையினது, வடபால் - உத்தரதிசையில், ஓர்மடன்மேல்வைத்து - ஒருதளத்தின்மேலிருத்தி, என்சிந்தைதனை - என்னுடையமனதை, நாழிகையோரிரண்டு-ஒருமுகூர்த்தம், மாயைசேர்கவென - மாயையடையக்கடவதென்று, சபித்தலும் - சாபமிடவும், தியக்கமுற்று - கலக்கமடைந்து, புந்தியுடன்- புத்தியோடும், மெய்யுணர்வைமறந்தேன்-உண்மைஞானத்தைமறந்தேன், கல்லாப்புல்லரைப்போல்-கல்வியில்லாதமூடர்களைப்போல, புலம்புமெனை - புலம்பாநின்றவென்னை, போதன்பார்த்து - பிரமன்பார்த்து, வெந்துயரென்னென - வெவ்வியதுக்க மென்னவென்றுகேட்க, மாயை-சம்சாரமானது, விளைந்தவாறும் - உண்டானமார்க்கமும், வீடுறுமாறும் - (அதுநீங்கி) மோக்ஷமடையுமார்க்கமும், கேட்டேன் - வினவினேன், விளங்கச்சொன்னான் - நன்றாய் விளங்கும்படி யனுக்கிரகஞ்செய்தார்—எ-று.

(இ-ரை) பிறந்து நமஸ்கரித்தவடியேனை தான்மகிழ்ச்சியுடன்வசிக்கும் தாமரையினது உத்தரதிசையில் ஒருதளத்தின்மேலிருத்தி என்னுடையமனதை ஒருமுகூர்த்தம் மாயையடையக்கடவதென்று சாபமிடவும் கலக்கமடைந்து புத்தியோடும் உண்மைஞானத்தைமறந்தேன், கல்வியில்லாத மூடர்களைப்போல புலம்பாநின்ற வென்னை பிரமன்பார்த்து வெவ்வியதுக்கமென்னவென்றுகேட்க, சம்சாரமானது உண்டான மார்க்கமும் அதுநீங்கி மோக்ஷமடையு மார்க்கமும்வினவினேன், நன்றாய்விளங்கும்படி யனுக்கிரகஞ்செய்தார்—என்பதாம். (அ)

## (இதுவுமது)

ஆன்மாவை யறிந்தலைவற் றிருந்தவென்னை
யயன்பார்த்து நாமேநின் னறிவைமாற்றி

யூன்மாயைப் பின்பொழித்தே முயிரெலாநின்
னுபதேசம் பெற்றுய்ய வுபாயஞ்செய்தோன்
மேன்மாயும் வினைநிறைந்த சம்புத்தீவின்
மேவியபா ரதவருடம் விரைவின்மேவித்
தான்மாளாக் கிரியினர்க்குக் கிரியைச்சாற்றி
சாதனமுள் ளோர்க்குணர்வைச் சாற்றுகென்றான்.

(இ-ள்.) ஆன்மாவை - (ஞா) னாத்மஸ்வரூபத்தை, அறிந்து - (தானு) யறிந்து, அலைவற்றிருந்தவென்னை - சலனமற்றிருந்தவென்னை, அயன் பார்த்து - பிரமதேவன்பார்த்து, நாமேநின்னறிவைமாற்றி - யாமேநின் னுணர்வை நீக்கி, ஊன்மாயை - ஈனமான மாயையைக் (கொடுத்து), பின்பொழித்தேம் - பின்பஃதையறிவினுனீக்கினேம், உயிரெலாம் - ஆத் மாக்களியாவும், நின்னுபதேசம் பெற்று - உமதனுக்கிரகம்பெற்று, உய்ய - மோக்ஷமடைய, உபாயஞ்செய்தோம் - தந்திரஞ்செய்தோம், மேன்மாயும்- (ஞானமுதித்த) பின்கெடுகின்ற, வினைநிறைந்த - கிரியைகணிறைந்த, சம்புத்தீவில் - நாவலந்தீவில், மேவியபாரதவருடம் - மேவாநின்ற பாரத வருடத்தில், விரைவின்மேவி-சீக்கிரத்திற்சென்று, தான்மாளா - நானெ ன்னுமகநீங்காத, கிரியினர்க்கு - கிரியாகாண்டிகளுக்கு, கிரியைச்சாற்றி - (கிரமமாக) கருமகாண்டத்தைப்போதித்து, சாதனமுள்ளோர்க்கு-(மேற்) சாதனசதுஷ்டயமுள்ளவர்களுக்கு, உணர்வைச்சாற்றுகென்றான்-(ஆத்ம) ஞானத்தை யுபதேசஞ்செய்யென் றருள்செய்தார்—எ-று.

(இ-ரை.) ஞானாத்மஸ்வரூபத்தைத் தானுயறிந்து சலனமற் றிருந்தவென்னை பிரமதேவன்பார்த்து யாமேநின் னுணர்வை நீக்கி ஈனமான மாயையைக்கொடுத்து பின்பஃதையறிவினுனீக்கினேம், ஆத்மாக்களியாவும் உமதனுக்கிரகம்பெற்று மோக்ஷமடையத் தந் திரஞ்செய்தோம். ஞானமுதித்தபின் கெடுகின்ற கிரியைகணி றைந்த நாவலந்தீவில் மேவாநின்ற பாரதவருடத்தில் சீக்கிரத்திற் சென்று நானென்னு மகநீங்காத கிரியாகாண்டிகளுக்குக்கிரமமாக கருமகாண்டத்தைப்போதித்து மேற்சாதனசதுஷ்டய முள்ளவர் களுக்கு ஆத்மஞானத்தை யுபதேசஞ்செய்யென் றருள்செய்தார்.

(இ-உ-க-ம்.) உலகத்திலுள்ள சீவர்க டமதாத்மஸ்வரூபத்தில் ரமி க்கச்செய்யும்பொருட் டாசிரியர் திருவடிசூட்டியனுப்பின குறிப்பை யறி வித்ததாம். (கூ)

## சற்குரு சற்சீடரிலக்கண மறிவித்தல்.

அவனுரைப்ப வந்துயிர்க ளுளநாளெல்லா
மாகுவனிங் கொருசெய லு மாசையில்லை
யிவணிருந்து சுழுத்தியுறு செய்கையாலே
யிடர்மனத்தைக் கடந்துசெய லியாவுஞ்செய்கேன்
கவருறுமென் செயலொன்று மில்லைவீர
கலைநிறைவும் பேதைமையுங் கருமத்தாலே
விவரமதா யாராய்ந்து மேன்மையான
மெய்க்குருவைக் கொண்டுணர்வோர் மேதைமிக்கோர்.

(இ-ள்.) அவனுரைப்ப - அப்பிரமாவனுக்கிரகஞ்செய்ய, வந்து-(அப்படியே)பாரதவருடத்தில்வந்து, உயிர்களுள - ஆத்மாக்களிருக்கின்ற, நாளெல்லாம் - காலங்களிலெல்லாம், ஆகுவன் - இருப்பேன், இங்கொருசெயலும் - இவ்விடத்தொரு கிரியைகளிலும், ஆசையில்லை - விருப்பமில்லை, இவணிருந்து - இவ்விடத்திலிருந்து, சுழுத்தியுறு - (கனவிற்) சுழுத்தியையடைந்த, செய்கையால் - ஒழுக்கத்தினுல், இடர் - துன்பமுள்ள, மனத்தைக்கடந்து - மனதைத்தாண்டி, செயலியாவுஞ்செய்கேன் - தொழில்களனைத்தையுஞ்செயவேன், கவருறும் - (அபிமானத்தைக்) கிரிகிக்கின்ற, என்செயல் - எனதுசெய்கை, ஒன்றுமில்லை - யாதொன்றுமில்லை, வீர - (பாசநாசஞ்செய்வதிலதி) சூரனுனவிராமா, கலைநிறைவும்-(ஆசாரியர்) ஞானபூர்த்தியையும், பேதமையையும் - அஞ்ஞானத்தையும், கருமத்தால் - (ஆசார) விவகாரங்களால், விவரமதாய் - பகுத்தறிவோடும், ஆராய்ந்து - விசாரித்து, மேன்மையான - உயர்வான, மெய்க்குருவைக்கொண்டு - சற்குருவைப்பெற்று, உணர்வோர் - (ஆத்மாவை) யறிபவர்கள், மேதைமிக்கோர் - அறிவில்மிகுந்த (சீடர்கள்)—எ-று.

(இ-ளா.) அப்பிரமா வனுக்கிரகஞ்செய்ய அப்படியே பாரதவருடத்தில்வந்து ஆத்மாக்களிருக்கின்ற காலங்களிலெல்லாம் இருப்பேன், இவ்விடத்தொரு கிரியைகளிலும் விருப்பமில்லை, இவ்விடத்திலிருந்து கனவிற் சுழுத்தியையடைந்த ஒழுக்கத்தினுல் துன்பமுள்ள மனதைத்தாண்டி தொழில்களனைத்தையுஞ் செய்வேன், அபிமானத்தைக் கிரிகிக்கின்ற எனதுசெய்கை யாதொன்றுமில்லை பாசநாசஞ்செய்வதிலதிசூரனுன விராமா ? ஆசாரியர் ஞானபூர்த்தியையும், அஞ்ஞானத்தையும், ஆசார விவகாரங்களால் பகுத்

தறிவோடும் விசாரித்துஉயர்வானசற்குருவைபெற்று ஆத்மாவை யறிபவர்கள் அறிவில்மிகுந்த சீடர்கள்—என்பதாம்.

(இ-ி.) பாரம்பரியமான மரபிலுள்ள வாசாரியரிடத்திற்பிரமமோபதேசம்பெற் ருத்மானுசந்தானஞ் செய்யவேண்டுமென்பதாம். (கo)

ஆசாரியர் அபக்குவனுக் குண்மையை யுபதேசியாரெனல்

ஓதுகின்ற பொருண்முழுது முன்பின்கூட்டி
யுணர்பவர்க்கல் லதுபசுவை யொப்போர்க்கெல்லாந்
தீதகன்ற குருவுண்மை செப்பாரன்றே
திகழ்சாந்தி விசாரமொடு செறிசந்தோடஞ்
சாதுசங்க மெனவீட்டின் வாயல்காக்குஞ்
சதுஷ்டயரு முறவாகிற் றடைவேறுண்டோ
மேதினிகா வலர்மனையிற் கடைகாப்பாளர்
விடுவதுபோல் வீட்டிலவர் விடுவரன்றே

(இ-ள்.) ஓதுகின்ற - (ஆசாரிய) ரனுக்கிரகஞ்செய்கின்ற, பொருண்முழுதும் - அருத்தங்களியாவையும், முன்பின்கூட்டி - துவக்குங் (கருத்தையு) முடிக்குங் (கருத்தையுஞ்) சேர்த்து, உணர்பவர்க்கல்லது-அறிபவர்க்கேயன்றி, பசுவை-(பார்த்தவிடயமயமாகும்) பசுத்தன்மையை, ஒப்போர்க்கெல்லாம் - ஒப்பான (சீவத்தன்மையையுடைய) சகலருக்கும், தீதகன்றகுரு - குற்றமற்றவாசிரியர், உண்மைசெப்பார்-தத்துவஞானத்தைச்சொல்லார், திகழ்சாந்தி - பிரகாசியாநின்றசாந்தியும், விசாரமொடு-விசாரணையும், செறி - மிகுந்த, சந்தோடம் - சந்தோஷமும், சாதுசங்கம் - சாதுசங்கமும், என - என்றுசொல்லப்பட்ட, வீட்டின் - மோக்ஷத்தின், வாயல்-வாயலை, காக்கும் - காக்கின்ற, சதுஷ்டயரும் - நான்குபேர்களும், உறவாகில் -இஷ்டமானால், தடைவேறுண்டோ - (மோக்ஷமடைதற்கு) விக்கினம்வேறுண்டோ, மேதினிகாவலர் - பூமியைக்காக்கின்ற வரசர்களின், மனையிற் கடை-வீட்டின்வாயலை, காப்பாளர்-காப்பவர்கள், விடுவதுபோல - (இராசதரிசனத்துக்கு) விடுவதுபோல, வீட்டில் - மோக்ஷத்தில், அவர்விடுவர்-அவர்கள்விடுவார்கள்—எ-று.

(இ-ளை.) ஆசாரிய ரனுக்கிரகஞ் செய்கின்ற அருத்தங்களியாவையும் துவக்குங்கருத்தையுமுடிக்குங்கருத்தையுஞ்சேர்த்து அறிபவர்க்கேயன்றி பார்த்தவிடயமயமாகும் பசுத்தன்மையை ஒப்பான சீவதன்மையையுடைய சகலருக்கும் குற்றமற்றவாசிரி

யர் தத்துவஞானத்தைச் சொல்வார். பிரகாசியாநின்ற சாந்தியும், விசாரணையும், மிகுந்தசந்தோஷமும், சாதுசங்கமும் என்று சொல்லப்பட்ட மோக்ஷத்தின் வாயிலைக்காக்கின்ற நான்குபேர்களும் இஷ்டமானால் மோக்ஷமடைதற்கு விக்கினம்வேறுண்டோ? பூமியைக்காக்கின்ற வரசர்களின் வீட்டின்வாயிலைக் காப்பவர்கள் இராசதரிசனத்துக்குவிடுவதுபோல மோக்ஷத்தில் அவர்கள் விடுவார்கள்—என்பதாம்.

(இ-ம்.) முமூட்சுகளுக்குச் சாந்திமுதலிய நான்கு குணங்களும் வேண்டுமென்பதாம். (கக)

**சாந்தியாதிகுணங்களி லொன்றையாவதடைய வேண்டுமெனல்.**

அன்னல்வர் தமிலொருவ ரன்பானாலு
மனைவருமொத் தன்பாவ ராதலாலே
பன்னாளு மிகமுயன்று யாதுநீத்தும்
பற்றியொரு வரையேனும் பழகவேண்டு
மன்னாத பிறப்பறுக்க நல்லோர்நன்னூன்
மாதவத்தா லறிவைமுதல் வளர்க்கவேண்டு
மின்னாத மாயையெனு நஞ்சம்போத
மென்கின்ற காருடமந் திரத்தான்மீளும்.

(இ-ள்.) அன்னல்வர்தமில்-அந்தநால்வர்களில், ஒருவரன்பானாலும்-ஒருவனன்பனானால், அனைவருமொத்தன்பாவர் - நால்வருமொத் தன்பராவார்கள், ஆதலால் - ஆகையினால், பன்னாளும்-சதாகாலமும், மிகமுயன்று -மிகவுமுயற்சித்து, யாதுநீத்தும் - (அதற்கிடரானவைகளை) லேதானாலுந் தள்ளி, ஒருவரையேனும் - ஒருவரையாவது, பற்றி - பிடித்துக்கொண்டு, பழகவேண்டும் - பழக்கஞ்செய்யவேண்டும், மன்னாத - நிலையில்லாத, பிறப்பறுக்க சநநத்தைக்கெடுக்க, நல்லோர் சத்துக்கள் (சங்கத்தினாலும்), நன்னூல் - ஆத்மஞானசாஸ்திர (விசாரணையினாலும்), மாதவத்தால் - மகாநிஷ்டையினாலும், அறிவை-பிரஞ்ஞையை, முதல் - முதன்மையாக, வளர்க்கவேண்டும் - விருத்திசெய்யவேண்டும், இன்னாத - துன்பமாகிய, மாயையெனும் - சம்சாரமென்கின்ற, நஞ்சம் - நஞ்சம்விடமானது, போதமென்கின்ற - ஞானமென்கிற, காருடமந்திரத்தால் - கழலுமந்திரத்தினால், மீளும் - திரும்பும்—எ-று.

(இ-ா) அந்த நால்வர்களில் ஒருவ னன்பனானால் நால்வருமொத் தன்பராவார்கள், ஆகையினால் சதாகாலமும் மிகவு

முயற்சித்து அதற்கிடரானவைகளி லேதானாலுந்தள்ளி ஒருவரையாவதுபிடித்துக்கொண்டு பழக்கஞ்செய்யவேண்டும், நிலையில்லாத சநநத்தைக்கெடுக்க சத்துக்கள்சங்கத்தினாலும், ஆத்ம ஞான சாஸ்திர விசாரணையினாலும், மகாநிஷ்டையினாலும்பிரஞ்ஞையை முதன்மையாக விருத்திசெய்யவேண்டும். துன்பமாகிய சம்சாரமென்கின்ற விடமானது ஞானமென்கிற சுழலுமந்திரத்தினால் திரும்பும்—என்பதாம்.

(இ-ம்.) சாந்தியாதி குணங்களைப்பெற்றுச் சுருதி குரு சுவானுபவங்களினால் வளருஞானத்தினால் மாயையைக் கெடுக்கவேண்டுமென்பதாம்.

விடயத்தைக் கெடுத்தவிடத்துண்டான நன்மையையும் அதைக் கெடுக்காவிடத்துள்ள விபரீதத்தையுங் கூறல்.

சரமழைக ணெய்தன்மலர் மழையையொக்குந்
 தழற்பள்ளி பனிநீரிற் சயனமொக்குஞ்
சிரமரிதற் சுகமுறுநித் திரையையொக்குந்
 தேகமரி வதுகலவைச் செறிபூசொக்கும்
நிரலதிக நாராச மருமம்பாய்த
 நெடுங்கோடைச் சிவிறியினன் னீரையொக்கும்
விரவரிய விடயமெனும் விடவிடேசி
 விவேகமிகுத் தவர்க்கல்லால் விலக்கொணுதே.

(இ-ள்.) சரமழைகள் - அம்புவருடங்கள், நெய்தன்மலர்மழையை - ஆம்பல் புட்பவருடத்தை, ஒக்கும் - ஒப்பாகும், தழற்பள்ளி - அக்கினிப்படுக்கை, பனிநீரிற்சயனமொக்கும் - பனிநீரிற்றெளித்த மெத்தையையொப்பாகும், சிரமரிதல் - சிரசையறுப்பது, சுகமுறு - சுகம்பொருந்திய, நித்திரையை - (சுழுத்தி) நித்திரையை, ஒக்கும் - ஒப்பாகும், தேகமரிவது - உடலையறுப்பது, கலவைச்செறிபூசு - சந்தனம்பூசுதலை, ஒக்கும் - ஒப்பாகும், நிழல் - ஒழுங்காகிய, அதிகநாராசம்-கணக்கற்றசலாகைகள், மருமம்பாய்தல் - மார்பிற்றைப்பது, நெடுங்கோடை - நீண்டவேனிற்காலத்தில், சிவிறியின் - துருத்தியினால் (வீசும்), நன்னீரையொக்கும் - குளிர்ந்தசலத்தையொப்பாகும், விரவரிய - சேரக்கூடாத, விடயமெனும் - விடயமென்கின்ற, விடவிடேசி - விடவிடேசியானது, விவேகமிகுத்தவர்க்கல்லால் - விவேகஞான மதிகரித்தவர்களுக்கேயன்றி, விலக்கொணுது - (மற்றவர்களுக்கு) விலக்கக்கூடாது—எ-று.

(இ-ள்) அம்புவருடங்கள் ஆம்பல்புட்பவருடத்தை ஒப்பாகும். அக்கினிப்படுக்கைபனிநீரிற்றெளித்த மெத்தையையொப்பாகும். சிரசையறுப்பது சுகம்பொருந்திய சுழுத்தி நித்திரையை ஒப்பாகும். உடலையறுப்பது சந்தனம்பூசுதலை ஒப்பாகும். ஒழுங்காகிய கணக்கற்றசலாகைகள் மார்பிற்றைப்பது நீண்டவேனிற் காலத்தில் துருத்தியினால்வீசும் குளிர்ந்த சலத்தையொப்பாகும். சேரக்கூடாத விடயமென்கின்ற விடவிடூசியானது விவேகஞான மதிகரித்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்கு விலக்கக்கூடாது.

(இ-ம்.) மனதைப் புலன்வழியிற்செலுத்தாம லாத்மவிசாரத்திற் செலுத்துவதனாற் சுகமுண்டா யம்புவருடமுதலிய வுபத்திரங்கள் புட்பவருடங்கண் முதலியவைபோலச் சுகமாய்ச்சகிக்கத்தக்கவைகளா மென்பதாம்.

## ஆத்மவிசார விலக்கணங்கூறல்.

ஊனமிலா ஞானநூல் விசாரத்தாலே
    யுயர்வீடு நண்ணுமென லுண்மையன்றோ
தானறியு மனுபூதி ஞானநன்னூற்
    சற்குருவிம் மூவகையுந் தம்மிலொத்தே
யானவகை யியற்றில்விடா தான்மாத்தோன்று
    மற்பவறி வினர்கற்ற வரியமெய்ந்நூ
லீனமுறு மடமைதரு மிதுபோன்மற்ற
    வெந்தநூல் களுமடமை யியற்றுதன்றே.

(இ-ள்.) ஊனமிலா - குறைவில்லாத, ஞானநூல் - (ஆத்ம) ஞானசாஸ்திரங்களின், விசாரத்தால் - (தெளிவான) விசாரணையினால், உயர்வீடு நண்ணுமெனல் - மேலான நிருவாண சுகமுண்டாகுமென்பது, உண்மையன்றோ - உள்ளதல்லவா, தானறியுமனுபூதி-தானறிகின்ற வனுபவமும், ஞானநன்னூல் - (ஆத்ம) ஞானசாஸ்திரங்களின் (முடிவானவாக்கியார்த்தங்களும்), சற்குரு - சற்குரு (வினுபதேசவாக்கியார்த்தங்களுமாகிய) இம் மூவகையும் - இந்தமூன்றுபிரிவும், தம்மிலொத்து - தம்மிடத்திற்பொருந்தி, ஆன - ஒன்றான, வகையியற்றில் - பிரகாரமனுஷ்டிக்கில், விடாதான்மாத்தோன்றும் - (ஒன்றையும்) விட்டுநீங்காத வாத்மஞானம்பிரகாசிக்கும், அற்பவறிவினர் - ஏகதேசவறிவையுடையவர்கள், கற்ற - அப்பியாசித்த, அரியமெய்ந்நூல் - அரியஞானசாஸ்திரமானது, ஈனமுறுமடமை

தரும் - இழிவுள்ள வஞ்ஞானத்தைக்கொடுக்கும், இதுபோல் - இந்த (ஞானநூலைப்) போல, மற்ற வெந்த நூல்களும் - (பத்திகாண்டங் கருமகாண்டமுதலிய) வெச்சாத்திரங்களும், மடமை யியற்றுது - அஞ்ஞானத்தைக் கொடாது—எ-று.

(இ-ள.) குறைவில்லாத ஆத்மஞான சாஸ்திரங்களின் தெளிவான விசாரணையினால் மேலான நிருவாணசுக முண்டாகுமென்பது உள்ளதல்லவா ? தானறிகின்ற வனுபவமும், ஆத்மஞான சாஸ்திரங்களின் முடிவானவாக்கியார்த்தங்களும், சற்குருவி னுபதேசவாக்கியார்த்தங்களுமாகிய இந்த மூன்றுபிரிவும் தம்மிடத்திற்பொருந்தி ஒன்முன பிரகார மனுஷ்டிக்கில் ஒன்றையும்விட்டுநீங்காத வாத்மஞானம் பிரகாசிக்கும். ஏகதேசவறிவையுடையவர்கள் அப்பியாசித்த அரியஞானசாத்திரமானது இழிவுள்ள வஞ்ஞானத்தைக் கொடுக்கும், இந்தஞானநூலைப்போல பத்திகாண்டங் கருமகாண்டமுதலிய வெச்சாத்திரங்களும் அஞ்ஞானத்தைக்கொடாது—என்பதாம்.

(இ-ப.) ஆத்மஞானம் பிரத்தியட்சமாவதற்குச் சுருதி குரு சுவானுபவமொத்து விசாரிக்கவேண்டு மஃதினறேற்றுன்பமுண்டாமென்பதாம்.

## அஞ்ஞான விழிவும் முத்திக்குச்சகாயவசகாயமு முரைத்தல்.

மடமையொடு வாழ்கின்ற வாழ்வினீசர்
  மனைதோறுமோட் டிரந்துழல்கை வரிசையாகு
மாடர்தனநட் புறவிபர தேசந்தீர்த்த
  மாச்சிரம மெய்வருத்த மனைத்தினு லுங்
தொடருதவி யில்லைமன வருத்தத்தாலே
  தூயபத முறுமுத்தித் துவாரபாலர்க்
கடவகுணங் கேட்டியுயர் சாந்திவந்தாற்
  காதலுந்தன் பழுங்கதிர்முன் கங்குல்போற்போம்.

(இ-ள்.) மடமையொடு வாழ்கின்ற வாழ்வின் - (இப்படிப்பட்ட) வஞ்ஞானத்தோடு வாழ்கின்ற வாழ்விலும், நீசர் மனைதொறும் - சண்டாளர்கள் வீடுகடோறும், ஓட்டிரந்துழல்கை - ஓட்டிற் பிச்சைவாங்கிச்சுழல்வது, வரிசையாகும் - சீரானவாழ்வாகும், அடர்தனம் - மிகுந்த திரவியங்களும், நட்பு - மித்திரர்களும், உறவு - பந்துக்களும், பரதேசம் - காசிமுதலான (புண்ணிய) தேசங்களும், தீர்த்தம்-(கங்கைமுதலான) தீர்த்தங்களும், ஆச்சிரமம் - (முனிகளின்) வாசஸ்தலங்களும், மெய்வருத்தம் - சரீரத்தைவருத்துந் (தபசுகளுமாகிய), அனைத்தினுலும் - எல்லாவற்றுலும், நாளும்-எப்

பொழுதும், தொடருதவியில்லை - (பரகதியைத்) தொடரத்தகுந்த சகாயங்களில்லை, மனவருத்தத்தால - மனோநிக்கிரகத்தினால், தூயபதமுறும் - பரிசுத்தமான பரமபத முண்டாகும், முத்தித்துவாரபாலர்-மோக்ஷவாயற் காக்கின்ற நான்குபேர்களுக்கு, கடவகுணங்கேட்டி - எப்போது நீங்காம லிருக்கின்ற குணங்களை (யிராமா) நீ கேட்பாய், உயர்சாந்தி - மேலான சாந்தம், வந்தால் - கிடைத்தால், காதலும் - ஆசையும், துன்பமும் - துக்கமும், கதிர்முன் - சூரியன்முன்னே, கங்குல்போற்போம் - இருளைப்போல நீங்கும்—எ-று.

(இ-ரை.) இப்படிப்பட்ட வஞ்ஞானத்தோடு வாழ்கின்றவாழ்விலும், சண்டாளர்கள் வீடுகடோறும் ஓட்டிற் பிச்சைவாங்கிச் சுழல்வது சீரானவாழ்வாகும். மிகுந்த திரவியங்களும், மித்திரர்களும், பந்துக்களும், காசிமுதலான புண்ணியதேசங்களும், கங்கை முதலான தீர்த்தங்களும், முனிகளின் வாசஸ்தலங்களும், சரீரத்தைவருத்துந் தபசுகளுமாகிய எல்லாவற்றாலும் எப்பொழுதும் பரகதியைத் தொடரத்தகுந்தசகாயங்களில்லை. மனோநிக்கிரகத்தினால் பரிசுத்தமான பரமபதமுண்டாகும். மோக்ஷவாயற்காக்கின்ற நான்குபேர்களுக்கு எப்போது நீங்காமலிருக்கின்ற குணங்களை இராமா! நீ கேட்பாய், மேலான சாந்தம்கிடைத்தால் ஆசையும், துக்கமும் சூரியன்முன்னே இருளைப்போலநீங்கும்—எ-ம்

(இ-ு.) அறியாமையையுந் தபமுதலான கிரியைகளையுநீக்கி சாந்தியைப்பெற்று மனதை யாத்மாவிற் கரையும்படி சிந்திக்கவேண்டு மென்பதாம். (கரு)

---

சாந்தியு மதையடைந்தவ னிலக்கணமுங்கூறல்.

நல்லவருந் தீயவரு மன்னைபோல
 நம்புதற்கா யமுதுண்ண நண்ணினாலு
மல்லன்மலர் மகட்புணர்ந்த போதுமொவ்வா
 மகிழ்ச்சிதருஞ் சாந்தியுளோர் மரணஞ்செல்வங்
கொல்லமரெய் தினுமசையார் புலனைந்தாலுங்
 குற்றமுநன் மையுநுகர்ந்து குளிரார்வாடார்
தொல்லறிஞர் மகம்புரிந்தோர் முனிவர்மொய்ம்பர்
 தூயவரியா ரினும்விளங்குந் தூய்மையோரே.

(இ-ள்.) நல்லவரும் - சிஷ்டர்களும், தீயவரும் - துஷ்டர்களும், அன்னைபோல - தாயைப்போல, நம்புதற்காய் - நம்புதற்கு (த்தகுந்த) தாகி, அமுதுண்ண - அமுதமானது (தான்) புசிக்கும்படி, நண்ணினாலும்-கிடைத்தாலும், மல்லன்மலர்கள்-வளப்பமுள்ள பங்கயமலரிலுறையு மிலட்சுமி

யானவள், புணர்ந் (தபோதும்) - வந்து பொருந்தியபோதிலும், ஒவ்வா - சமானமாகாத, மகிழ்ச்சிதரும்-ஆநந்தத்தைக்கொடுக்கின்ற, சாந்தியுளோர்- சாந்தியை யுடையவர்கள், மரணம் - நசித்தலும், செல்வம் - வாழ்தலும், கொல்லமர் - கொலைசெய்கின்ற யுத்தங்களும், எய்தினும் - வந்தாலும், அசையார் - சஞ்சலியார்கள், புலனைந்தாலும்-பஞ்சவிடயங்களிலும், குற்றமும் - அசுபத்தையும், நன்மையும் - சுபத்தையும், நுகர்ந்து - புசித்து, வாடார் - துக்கியார்கள், குளிரார் - சந்தோஷியார்கள், தொல்லறிஞர் - முதிர்ந்தவறிவுள்ளவர்கள் மகம்புரிந்தோர் - யாகதீக்ஷதர்கள், முனிவர் - (கலை) மறையோர், மெய்ம்பர் - பலத்தையுடைய (வரச) ர்கள், தூயவர் - பரிசுத்தமுள்ளவர்கள், யாரினும்-மற்றெவர்களிலும், தூய்மையோர் - (இச்சாந்தகுணமுள்ள) பரிசுத்தவான்கள், விளங்கும் - (மேன்மையாகப்) பிரகாசிப்பார்கள்—எ-று.

(இ-ள்.) சிஷ்டர்களும், துஷ்டர்களும் தாயைப்போல நம்புதற்குத் தகுந்ததாகி, அமுதமானது தான் புசிக்கும்படி கிடைத்தாலும் வளப்பமுள்ள பங்கயமலரிலுறையு மிலட்சுமியானவள்வந்து பொருந்தினபோதிலும் சமானமாகாத ஆநந்தத்தைக் கொடுக்கின்ற சாந்தியை யுடையவர்கள் நசித்தலும், வாழ்தலும், கொலைசெய்கின்ற யுத்தங்களும் வந்தாலும் சஞ்சலியார்கள். பஞ்சவிடயங்களினாலும் அசுபத்தையும், சுபத்தையும்புசித்து துக்கியார்கள். சந்தோஷியார்கள். முதிர்ந்தவறிவுள்ளவர்கள், யாகதீக்ஷதர்கள், கலைமறையோர், பலத்தையுடைய வரசர்கள், பரிசுத்தமுள்ளவர்கள், மற்றெவர்களிலும் இச்சாந்தகுணமுள்ள பரிசுத்தவான்கள் மேன்மையாகப் பிரகாசிப்பார்கள்—என்பதாம்.

(இ-ம்.) சகல செல்வங்களும் வலியவரு மகிழ்ச்சிக்கு மேலான மகிழ்ச்சியைக்கொடுக்கின்ற சாந்தியுள்ளவனென்றினாலுஞ் சுகதுக்கமடையாமலறிஞர் முதலான சகலருக்கு மேலாவனென்பதாம். (கசு)

## சாந்தியை யடைதலு மாத்மவிசாரமுமுரைத்தல்.

ஆரியர்பே ணுவதாகி யயலோர்க்கெல்லா
  மரிதான சாந்தியமு தருந்திமேலோர்
சீரியவீட் டினையுற்றார் நீயுமந்தச்
  செயல்புரிவாய் நன்னூலாற் றெளிந்தசுத்த
நேரியபுந் தியினாலே விசாரந்தன்னை
  நிறைத்திடுக வதுநிறைந்தா னிகரில்புந்தி
கூறியதாய் வீடுணரும் விசாரந்தானே
  கொடும்பவநோய்க் கருமருந்தாங் குறிப்புளோர்க்கே.

(இ-ள்.) ஆரியர்பேணுவதாகி - அறிவுடையவர்கள் விரும்புவதாகி, அயலோர்க்கெல்லாம் - ஏனையோ ரனைவர்க்கும், அரிதான - அரிதாயிருக்கின்ற, சாந்தியமுது - சாந்தாமுதத்தை, அருந்தி-புசித்து, மேலோர்-மகான்கள், சீரியவீட்டினையுற்றார் - சிறப்பாகிய மோக்ஷத்தை யடைந்தார்கள், நீயும் - (இராமா) நீயும், அந்தச்செயல்புரிவாய் - அவ்வொழுக்கத்தின்படி செயக்கடவாய், (இனி விசாரணை) நன்னூலால் - நல்ல (ஞான) சாத்திரத்தினால், தெளிந்த - தெளிவான, சுத்தம் - பரிசுத்தமுள்ள, நேரியபுந்தியினால் - நுட்பவறிவினால், விசாரந்தன்னை - (ஆத்ம) விசாரணையை, நிறைத்திடுக - பூரணமாகச்செய்க, அதுநிறைந்தால் - அவ் (வாத்மவிசாரணை) பூரணமானால், நிகரில் புந்தி - சமானமில்லாத வறிவானது, கூரியதாய் - அதிக நுட்பமாக, வீடுணரும் - பரமபதத்தை யறியும், விசாரந்தானே - (இவ்) விசாரணையே, குறிப்புளோர்க்கு - (காரிய காரணங்களைக்) குறித்தறியு மறிவுள்ளவர்களுக் (குண்டான,) கொடும்பவநோய்க்கு - கொடியசநநவியாதிக்கு, அருமருந்தாம் - அரிதான வௌடதமாம்—எ-று.

(இ-ரை.) அறிவுடையவர்கள் விரும்புவதாகி ஏனையோரனைவர்க்கும் அரிதாயிருக்கின்ற சாந்தாமுதத்தைப் புசித்து மகான்கள் சிறப்பாகிய மோக்ஷத்தையடைந்தார்கள். இராமாநீயும் அவ்வொழுக்கத்தின்படி செய்யக்கடவாய். (இனி விசாரணை) நல்லஞானசாத்திரத்தினால், தெளிவான பரிசுத்தமுள்ள நுட்பவறிவினால், ஆத்மவிசாரணையை பூரணமாகச் செய்க. அவ்வாத்மவிசாரணை பூரணமானால் சமானமில்லாத வறிவானது அதிகநுட்பமாக பரமபதத்தையறியும். இவ்விசாரணையே காரியகாரணங்களைக் குறித்தறியு மறிவுள்ளவர்களுக்குண்டான கொடிய சநநவியாதிக்கு அரிதான வௌடதமாம்—என்பதாம்.

(இ-ம்.) சாந்தியையடைந்தாத்மவிசாரஞ்செய்தாற் சநநங்கெடுமென்பதாம். (கஎ)

## விசாரணையின் பலமுஞ்

## சந்தோட விலக்கணமுங்கூறல்.

கருகியகங் குலின்மறையாக் கதிர்க்குமட்காக்
 காண்பரிய பொருளெல்லாங் காணுங்கண்ணாற்
றெருளுறநா னுருலகம் வந்தவாறென்
 செறிபிறவி யாரதெனுந் திகழ்விசார
மிருளுறுமா பத்தினுக்கு மருந்தாமப்பா
 லேற்றமுள சந்தோட மேதென்றேறதில்
வருபொருளி லின்பமறத் துய்த்துவாரா
 வனபொருளிற் றுன்பமிலா மகிழ்ச்சிதானே.

(இ-ள்.) கருகியகங்குலில் - கறுத்தவந்தகாரத்தில், மறையா - மறையாததாயும், கதிர்க்குமட்கா - (மிகுந்த) பிரகாசத்துக் (கொளி) மழுங்காததாயும், காண்பரிய - பார்ப்பதற்கரிய, பொருளெல்லாம் - வஸ்துக்களியாவையும், காணும் - பார்ப்பதாயுமிருக்கின்ற, கண்ணுள் - (விசார) திஷ்டியினால், தெருளுற - தெளிவுற, நானார் - யானெப்படிப்பட்டவன், உலகம் வந்தவாறென் - சகத்தான சம்சாரமுண்டான கிரமமென்ன, செறிபிறவி யாரது - மிகுந்த சம்சாரம் யாரையுடையது, என்னும் - என்கிற, திகழ் - (பரிகார யுத்தியோடும்) விளங்கிய, விசாரம்-(ஆபத்திலும்விசாரிக்கத்தக்க) விசாரணையானது, இருளுறும் - (அஞ்ஞா) னந்தகாரமான, ஆபத்தினுக்கு - ஆபத் (தென்னும் வியாதி) க்கு, மருந்தாம் - ஔடதமாம், (இனிச்சந் தோடம்) அப்பால் - அதன்பின்பு, ஏற்றமுள சந்தோடம் - மேலாகிய சந் தோஷமானது, ஏதென்றோதில் - யாதென்றுசொல்லில், வருபொருளில் - வரப்பட்ட (நன்மை தீமையான) வஸ்துக்களில், இன்பமறத்துய்த்து - விருப்பு (வெறுப்) பில்லாமற்புசித்து,வாராவனபொருளில்-வாராதவஸ்துக்களில், துன்பமிலா-துயரமில்லாத, மகிழ்ச்சிதான் - ஆநந்தந்தான்—எ-று.

(இ-ரை.) கறுத்தவந்தகாரத்தில் மறையாததாயும், மிகுந்த பிரகாசத்துக் கொளிமழுங்காததாயும், பார்ப்பதற்கரியவஸ்துக்களியாவையும் பார்ப்பதாயுமிருக்கின்ற விசாரதிஷ்டியினால் தெளிவுற; யானெப்படிப்பட்டவன்? சகத்தான சம்சாரமுண்டான கிரமமென்ன? மிகுந்த சம்சாரம் யாரையுடையது? என்கிற பரிகார யுத்தியோடும் விளங்கிய ஆபத்திலும் விசாரிக்கத்தக்க விசாரணையானது அஞ்ஞானந்தகாரமான ஆபத்தென்னும் வியாதிக்கு ஔடதமாம். (இனிச்சந்தோடம்) அதன்பின்பு மேலாகிய சந்தோஷமானது யாதென்று சொல்லில்வரப்பட்ட நன்மைதீமையான வஸ்துக்களில் விருப்புவெறிப்பில்லாமற்புசித்து வாராதவஸ்துக்களில் துயரமில்லாத ஆநந்தந்தான்—என்பதாம்.

(இ-ரீ.) விசார ஞானத்தினற் சித்தையுஞ் சடத்தையுஞ் சிற்சடமான மாயையும் விசாரித் தஞ்ஞானத்தைக் கெடுத்தாநந்தத்தை யடைய வேண்டுமென்பதாம். (கஅ)

---

## சந்தோடத்தின்பலமுஞ் சாதுசங்கமுங்கூறல்.

நிகரறுசந் தோடவமு தமையப்பெற்று
　னெடும்போக நஞ்சாமந் நிறைசந்தோட
மகலுறவா சையில்விழுநெஞ் சறிவைநோக்கி
　லழுக்குறுகண் ணுடியிலா நம்போற்றேன்று

மகிழ்குணமெய் தியபுருட மகிமையோனை
மாதவரு நராதிபரும் வணங்காநிற்பர்
சகமெனுமா யையைவெல்லத் தக்கோர்க்கெல்லாந்
தப்பாத சகாயமாஞ் சாதுசங்கம்.

(இ-ள்.) நிகரறு - சமானமில்லாத, சந்தோடாவமுது-சந்தோடாவமுதத்தை, அமையப்பெற்றால் - பொருந்தப்பெற்றால், நெடும்போகநஞ்சாம் - மிகுந்த விடயபோகம் விஷயமாகும், அந்நிறை சந்தோடம் - அப்பூரண மகிழ்ச்சி, அகலுற-நீங்க, ஆசையில் விழும் - விடய சுகத்தி லழுந்துகின்ற, நெஞ்சு-மனது, அறிவைநோக்கில் - (ஆத்ம) ஞானத்தைப்பார்க்கில், அழுக்குறு கண்ணடியில் - களங்கமுள்ள தருப்பணத்தில், ஆநநம்போல் - முகத்தைப்போல, தோன்று - தோற்றுது, மகிழ்குணமெய்திய - சந்தோட குணத்தை யடைந்த, புருடமகிமையோனை - புருடசிரேஷ்டனை, மாதவரும் - மகாதவசிகளும், நராதிபரும் - நரேந்திரரும், வணங்காநிற்பர்-வணங்குவார்கள், (இனிச்சாதுசங்கம்) சுகமெனுமாயையை - உலகமென்னுமாயையை, வெல்லத்தக்கோர்க்கெல்லாம்-செயிக்கத்தக்க சகலருக்கும், சாதுசங்கம் - சாதுக்கள்சங்கமானது, தப்பாதசகாயமாம்-தவிராதசகாயமாகும்.

(இ-கா.) சமானமில்லாத சந்தோடவமுதத்தை பொருந்தப்பெற்றால் மிகுந்த விடயபோகம் விஷமாகும். அப்பூரணமகிழ்ச்சி நீங்க, விடயசுகத்தி லழுந்துகின்ற மனது ஆத்மஞானத்தைப் பார்க்கில் களங்கமுள்ள தருப்பணத்தில் முகத்தைப்போல தோற்றுது. சந்தோடகுணத்தையடைந்த புருடசிரேஷ்டனை மகாதவசிகளும் நரேந்திரரும் வணங்குவார்கள். (இனிச்சாதுசங்கம்) உலகமென்னுமாயையை செயிக்கத்தக்க சகலருக்கும் சாதுக்கள் சங்கமானது தவிராத சகாயமாகும்.

(இ-ம்.) முமூட்சுக்கள் சகல போகங்களுங்கைக்கும்படியான சந்தோடத்தையும் சம்சாரத்தை வெல்லத்தக்க சாதுசங்கத்தையு மடையவேண்டுமென்பதாம். (கக)

## சாதுசங்கத்தின் பலன்கூறல்.

அறக்குறைவை நிறைவாங்குஞ் சம்பத்தாக்கு
மாபத்தைச் சுபமாக்கு மசுபந்தன்னைச்
சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங்கங்கைச்
சீதநீ ராடினர்க்குச் செந்தீவேள்வி
யிறக்கரிய தவந்தானந் தீர்த்தம்வேண்டா
மிடர்பந்த மறுத்தெவர்க்கு மினியோராகிப்

பிறப்பெனும்வே லேப்புணையா முணர்வுசான்ற
பெரியோரை யெவ்வகையும் பேணல்வேண்டும்.

(இ-ள்.) அறக்குறைவை - மிகவுமற்பமான (வறிவை), நிறைவாக்கும் - பூரணமாக்குவதாயும், ஆபத்தை - (விடயங்களால்வரு) மாபத்துக்களை, சம்பத்தாக்கும்-(அஃதின்றிய) சம்பத்தாக்குவதாயும், அசுபந்தன்னை-(ஒன்றிலுஞ்சுகியாத) அமங்கலத்தை, சுபமாக்கும் - (சர்வத்திலுஞ் சுகிக்கின்ற) மங்கலமாக்குவதாயு மிருக்கின்ற, சிறக்கு முயர்ந்தவர் கூட்டமென்னும் - சிறந்தமகான்கள் சங்கமென்கிற, கங்கை - சானுவியினது, சீதநீர் - குளிர்ந்த சலத்தில், ஆடினர்க்கு - ஸ்நாநஞ்செய்தவர்களுக்கு, செந்தீ வேள்வி - சிவந்த வக்கினி காரியமான யாகங்களும், இறக்கரியதவம்-கெடாத தவசுகளும், தானம் - மகாதானங்களும், தீர்த்தம் - புண்ணிய தீர்த்தங்களும், வேண்டா - வேண்டுவதில்லை, இடர்பந்தமறுத்து - துக்கமாகிய பந்தநாசஞ்செய்து, எவர்க்குமினியோராகி - யாவர்க்கு மினிமையுள்ளவராயும், பிறப்பெனும் வேலை - சநநமென்னுஞ் சமுத்திரத்தைக் (கடப்பதற்கு), புணையாம் - கப்பலாயு (மிருக்கின்ற), உணவுசான்ற - அறிவு நிறைந்த, பெரியோரை - மகான்களை, எவ்வகையும் - எவ்விதத்தினும், பேணல்வேண்டும் - விரும்பவேண்டும்—எ-று.

(இ-பொ.) மிகவுமற்பமானவறிவைபூரணமாக்குவதாயும், விடயங்களால் வருமாபத்துக்களை அஃதின்றிய சம்பத்தாக்குவதாயும், ஒன்றிலுஞ்சுகியாத அமங்கலத்தை சர்வத்திலுஞ்சுகிக்கின்ற மங்கலமாக்குவதாயுமிருக்கின்ற சிறந்த மகான்கள் சங்கமென்கின்ற சானுவியினது குளிர்ந்தசலத்தில் ஸ்நாநஞ்செய்தவர்களுக்கு சிவந்த வக்கினிகாரியமான யாகங்களும், கெடாததவசுகளும், மகாதானங்களும், புண்ணிய தீர்த்தங்களும் வேண்டுவதில்லை. துக்கமாகியபந்தநாசஞ்செய்துயாவர்க்கு மினிமையுள்ளவராயும், சநநமென்னுஞ் சமுத்திரத்தைக் கடப்பதற்குக் கப்பலாயுமிருக்கின்ற அறிவுநிறைந்த மகான்களை எவ்விதத்தினும் விரும்பவேண்டும்—என்பதாம்.

(இ-க.) ஞானாநந்தச் செல்வத்தைக் குறைவற நிறைவு செய்கின்ற சாதுசங்க மெவ்விதத்திலுஞ் சேரவேண்டு மென்பதாம். (உ0)

## சாந்தியாதியுள்ளோர்க்குரிய விந்நூலின் பயனுரைத்தல்.

நிறைபவந்தீ ருபாயநான்கா மிவர்களோடு
நிறைநட்பார் பவக்கடலை நீற்றூரன்னாய்

குறையுமன மோகந்தீ ரிச்சொற்கேட்பாய்
குணம்விரும்பா திச்சொல்லைக் குறிக்கொண்டோர்க்கு
மறையுணர்வு வலிதின்வருங் காமமாதி
மயக்கமுறுஞ் சரற்கால வாவிநீர்போற்
கறைதவிர்ந்து மனந்தெளியுங் கவசத்தோரைக்
கணைகள்போன் மிடிமுதலாங் கவலைதாக்கா.

(இ-ள்.) நிறைபவந்தீர் - நெருங்கிய சம்சாரத்தைத்தீர்க்கின்ற, உபாயம்-சாதனங்கள், நான்காம் - நால்வகையாம், இவர்களோடு-இந்நால்வர்களுடன், நிறை நட்பார் - மிகுந்த வன்புள்ளர்கள், பவக்கடலை - சநநசாகரத்தை; நீற்றூர்-கடந்தார்கள், அன்னாய் - அச் (சாந்தியாதி குணமுள்ள) விராமா, குறையும் - இளைக்கின்ற, மனமோகந்தீர் - மனோமயக்கந்தீர்க்கின்ற, இச்சொற் கேட்பாய் - இக்கதையைக் கேட்பாய், குணம்விரும்பாது - (இதன்) குணத்தை விரும்பாமல், இச்சொல்லை - இக்கதையை (மாத்திரம்), குறிக்கொண்டோர்க்கு - குறிப்பாகக் கொண்டவர்களுக்கு, மறை - வேதத்தின், (முடிவாகிய), உணர்வு - (ஆத்ம) ஞானமானது, வலிதின் வரும் - தானேவரும், காமமாதி - இராகத்துவேடமுதலான, மயக்கமறும் - மயக்கங்கடீரும், சரற்காலம் - சரறகாலத்தில், வாவிநீர்போல் - தடாகசலத்தைப்போல, கறைதவிர்ந்து - களங்கமற்று, மனந்தெளியும் - சித்தந்தெளியும், கவசத்தோரை - வச்சிரகவசந்தரித்தவர்களை, பாணங்கள்போல, மிடிமுதலாம் - தரித்திர முதலாகிய, கவலை - துன்பம், தாக்கா - தாக்காது—எ-று.

(இ-ரை.) நெருங்கிய சம்சாரத்தைத் தீர்க்கின்ற சாதனங்கள் நால்வகையாம். இந்நால்வர்களுடன் மிகுந்த வன்புள்ளவர்கள் சநநசாகரத்தைகடந்தார்கள் அச்சாந்தியாதிகுணமுள்ளவிராமா! இளைக்கின்ற மனோமயக்கந்தீர்க்கின்ற இக்கதையைக்கேட்பாய் ! இதன் குணத்தைவிரும்பாமல் இக்கதையைமாத்திரம் குறிப்பாகக்கொண்டவர்களுக்கு வேதத்தின் முடிவாகிய ஆத்மஞானமானது தானேவரும் இராகத்துவேட முதலான மயக்கங்கடீரும். சரற்காலத்தில் தடாகசலத்தைப்போல களங்கமற்று சித்தந்தெளியும் வச்சிரகவசந்தரித்தவர்களை பாணங்கள்போல தரித்திர முதலாகிய துன்பம் தாக்காது—என்பதாம்.

(இ-ஃ.) சாந்தியாதிகுணங்களை யனுசரித்தவர்களுக்குக் காமாதிதோடங்களைத்தீர்த்து ஆத்மஞானத்தை வலிதிற்கொடுக்கின்ற விக்கதைகளை யவசியஞ்சிரவணஞ்செய்யவேண்டுமென்பதாம். (உக)

## நிராசையுள்ள விசாரணையின் பலன்கூறல்.

தருபயஞ்செய் மாயைமன மீராதாகுஞ்
சமபாவந் தரங்கந்தீர் சாகரம்போன்
மறுவலுறும் விசாரத்தான் மிக்கோர்க்கெல்லாம்
வாரிதிபோ லாழமும்பொன் வரைபோன்மொய்ம்புந்
திருமதியின் குளிர்ச்சியும்வந் தெய்துநன்னூற்
செய்கையினல் லோர்புந்தி செவ்வையான
கருமவழி மகிழ்வெய்து மறுவிலாத
கற்புடையா டன்மனையிற் களிக்குமாபோல்

(இ-ள்.) தருபயஞ்செய - நடுக்கம்வரச்செய்கின்ற, மாயை - மாயையினுல், மனமீராதாகும் - (விசாரமுள்ள) மனம்வருந்தாதாம், தரங்கந்தீர் சாகரம்போல் - அலையில்லாத சமுத்திரம்போல, சமபாவம் - சமத்துவத்தை, மருவலுறும் - அடையும், விசாரத்தால் - விசாரணையினுல், மிக்கோர்க்கெல்லாம் - மிகுந்தவரனைவர்க்கும், வாரிதிபோல்-சமுத்திரத்தி (னுழம்) போல, ஆழமும்-கெம்பீரமும், பொன்வரைபோல் - மகாமேருவின் (வலிமையைப்) போல, மொய்ம்பும் - வலிமையும், திருமதியின் - சிறப்பாகிய பூரணசந்திரனைப்போல, குளிர்ச்சியும் - சீதளமும், வந்தெய்தும் - வரும், நன்னூல்-(ஆத்ம) ஞானசாத்திரத்தின், செய்கையில்-ஒழுங்கில், நல்லோர் - நற்குணமுள்ளவர்கள், புந்தி - அறிவானது, செவ்வையான - (தனக) கனுகூலமான (சமாதி முதலிய), கருமவழி - கன்மத்தில், மறுவிலாத கற்புடையான் - களங்கமற்ற கற்புள்ளவன், தன்மனையில்-தனதந்தப்புறத்தில், களிக்குமாபோல் - (தனது நாயகனையே தெய்வமாகக்) களிக்குமாறுபோல, மகிழ்வெய்தும் - இன்பமடைவன்—எ-று.

(இ-ா.) நடுக்கம் வரச்செய்கின்ற மாயையினுல் விசாரமுள்ள மனம் வருந்தாதாம். அலையில்லாத சமுத்திரம்போல சமத்துவத்தை அடையும் விசாரணையினுல் மிகுந்தவரனைவர்க்கும் சமுத்திரத்தினுழம்போல கெம்பீரமும் மகாமேருவின் வலிமையைப்போல வலிமையும், சிறப்பாகிய பூரணசந்திரனைப்போல சீதளமும்வரும். ஆத்மஞானசாத்திரத்தின் ஒழுங்கில் நற்குணமுள்ளவர்கள் அறிவானது தனக் கனுகூலமான சமாதி முதலிய கன்மத்தில் களங்கமற்ற கற்புள்ளவன் தனதந்தப்புறத்தில் தனது நாயகனையே தெய்வமாகக்களிக்குமாறுபோல இன்பமடைவன்—எ-ம்.

(இ-ம்.) ஆத்ம விசாரமுள்ள மனது மாயையினுற் கெடாமற் சமபாவம்பொருந்தி கெம்பீர முதலான குணங்களோடு சற்கிருத்தியத்தில் மகிழ்ச்சியையடையுமென்பதாம். (உஉ)

## சீவன்முத்தனுசாரச்சிறப்பு.

அற்புதங்க ளனைத்துமிலா விவனுக்கந்த
வருஞ்சீவன் முத்திபத மடைவின்முற்றுஞ்
சொற்புலனுக் கதீதனு யுலகர்போலத்
தோன்றிடுவோன் புந்தியிலோர் தொழில்பற்றுதோ
னற்பயன்போல் லாப்பயனுற் சுகஞ்சோர்வில்லோ
னண்ணியது புசித்தினிதி னன்றாய்நிற்போன்
பொற்புறுநல் லாசார விரோதமான
போகங்க டமிற்சிறிதும் பொருந்திடாதோன்.

(இ-ள்.) அற்புதங்க ளனைத்துமிலா - ஆச்சரியங்க ளியாவுமில்லாத, இவனுக்கு - (விராகமுடைய) விவனுக்கு, அந்தவருஞ்சீவன் முத்திபதம் - முன்சொன்ன வரிதான சீவன்முத்திஸ்தானம், அடைவின் முற்றும் - கிரமமாகமுதிரும், சொற்புலனுக்கதீதனாய் - வசனத்துக்கெட்டாதவனாய், உலகர்போலத்தோன்றிடுவோன் - உலகத்தாரைப்போலக்காணப்படுவான், புந்தியில் - அறிவில், ஓர்தொழில்பற்றுதோன் - ஓர் கருமங்களிலும்பிடிப்பற்றவன், நற்பயன் - நல்லபிரயோசனத்தினாலும், பொல்லாப்பயனால் - பொல்லாத பிரயோசனத்தினாலும், சுகஞ்சோர்வில்லோன் - சுகமுந்துக்கமுமில்லாதவன், நண்ணியது-கிடைத்ததை, இனிதில் - அன்பாக, புசித்து-அனுபவித்து, நன்றாய்நிற்போன் - சுகாசனத்திலிருப்பவன், பொற்புறுநல்லாசாரம்-அழகிய சத்துக்கவொழுக்கத்துக்கு, விரோதமான - வேறாகிய, போகங்கடமில் - போகங்களிடத்தில், சிறிதும் பொருந்திடாதோன் - எவ்வளவுஞ்சம்பந்தப்படாதவன்—எ-று.

(இ-னா.) ஆச்சரியங்க ளியாவுமில்லாத விராகமுடைய விவனுக்கு முன்சொன்ன வரிதான சீவன்முத்திஸ்தானம் கிரமமாக முதிரும் வசனத்துக் கெட்டாதவனாய் உலகத்தாரைப்போலக்காணப்படுவான். அறிவில் ஓர்கருமங்களிலும் பிடிப்பற்றவன். நல்ல பிரயோசனத்தினாலும், பொல்லாதபிரயோசனத்தினாலும்சுகமுந்துக்கமு மில்லாதவன். கிடைத்ததை அன்பாக அனுபவித்து சுகாசனத்திலிருப்பவன். அழகிய சத்துக்கவொழுக்கத்துக்கு வேறாகிய போகங்களிடத்தில் எவ்வளவுஞ்சம்பந்தப்படாதவன்—எ-ம்.

(இ-ம்.) விசாரத்தினாற் கிரமமாக சீவன்முத்தி பதத்தைப் பெற்றவனுமகான்களாசாரங்களுக்குப் பிறிதானபோகங்களை விரும்பக்கூடாதென்பதாம். (உரு)

சீவன்முக்தி விசாரணையினுயர்வு மஃதின்றிய விடத்திழிவுங் கூறல்.

ஒழிகணமு மொழியாமற் சுகமதாகி
யுடல்கடவா னுய்ச்சான்ரோ ருசாவினலே
பெருகியவிவ் வீட்டுநெறி விசாரஞ்செய்வோன்
பிறவிதீர் மெய்ஞ்ஞானம் பெற்ருேனுகி
வெருளுமறு பிறப்பினுரு தாயர்யோனி
விதனமுருன் சிறிதாகி மிளிர்போகத்தின்
மருளுமனப் பாவியராய் வெருள்வோர்தாயர்
வயிற்றின்மலப் புழுவென்றே வழங்கற்பாலோர்.

(இ-ள்.) ஒருகணமும் - ஒருக்ஷணமும், ஒழியாமல் - நீங்காமல், சுகம தாகி - இன்பத்தையுடையவனும், உடல்கடவானுய் - தேக (ஸ்மரணம் வரும்படி) யதிக்ரமியாமல், சான்ருே ருசாவினல் - சத்துக்களிடத்தில் வினவுதலினல், பெருகிய - வளர்ந்த, இவ்வீட்டுநெறி - இம்மோக்ஷமார்க் கத்தை, விசாரஞ்செய்வோன் - விசாரிப்பவன், பிறவிதீர் - சநநந்தீர்க்கின் ற, மெய்ஞ்ஞானம் பெற்ருேனுகி - ஆத்மஞானத்தை யடைந்தவனுய், வெ ருளும் - மயங்குகின்ற, மறுபிறப்பின் - மறுசநநத்தை, உரு - அடைந்து, தாயர்யோனி - மாதாவி னல்குலினல், விதனமுருன்-வேதனையைப் பொ ருந்தான், சிறிதாகி - அற்பமாய், மிளிர் - விளங்குகின்ற, போகத்தில் - வி டையானுபவத்தில், மருளுமனம் - மயங்குகின்ற மனதையுடைய, பாவிய ராய் - பாவிகளாய், வெருள்வோர்-(முன்சொன்னஉபாயங்களில்) மருட்சி யுடையவர்கள், தாயர் - மாதாவினுடைய, வயிற்றில் - கருப்பத்தி (லிருக் கின்ற), மலப்புழுவென்றே - மலத்திற்புழுத்த கிருமியென்றே, வழங்கற் பாலோர் - சொல்லுந்தன்மையையுடையவர்—எ-று.

**(இ-ா.)** ஒருக்ஷணமும் நீங்காமல் இன்பத்தையுடையவனு யும், தேகஸ்மரணம் வரும்படி யதிக்கிரமியாமல் சத்துக்களிடத் தில் வினவுதலினல் வளர்ந்த இம்மோக்ஷ மார்க்கத்தை விசாரிப்ப வன், சநநந்தீர்க்கின்ற ஆத்மஞானத்தை யடைந்தவனுய் மயங்குகி ன்ற மறுசநநத்தை அடைந்து மாதாவினல்குலினல் வேதனையைப் பொருந்தான், அற்பமாய்விளங்குகின்ற விடையானுபவத்தில் மய ங்குகின்ற மனதையுடையபாவிகளாய் முன்சொன்னவுபாயங்களில் மருட்சியுடையவர்கள், மாதாவினுடைய கருப்பத்தி லிருக்கின்ற மலத்திற்புழுத்தகிருமியென்றே சொல்லுந்தன்மையையுடையவர்

(இ-ம்.) சத்துக்கள்சகாயமா யாத்மவிசாரஞ்செய்வதே ஞானசுகம்இத ன்றிப் போகத்திற்செல்வதே சநநதுக்கமாதலா லிதைநீக்கி யதைப் பெற வேண்டுமென்பதாம். (உச)

## விசாரணையி னளவுகூறல்.

தருமவர்க டம்மிற்று மெய்தப்பட்ட
தருமமொடு பொருடேடுஞ் சரிதையோராய்த்
துகடீர்தம் மிடத்திலிளைப் பாறிமாறாத்
துரியமெனுஞ் சாந்திநிலை தோன்றுமட்டு
மிகுநூல்க ளுபசாந்தி யொழுக்கம்போத
மிக்கவர்கூட் டரவிவற்றால் விசாரம்வேண்டு
நிகரிலா விசாரத்தாற் றோன்றிநிற்கு
நிமலதுரி யத்தினிலை நிகழ்த்தற்பாற்றே.

(இ-ள்.) தருமவர்கடம் - (அறிவிற்) றகுந்த வச்சத்துக்கள்சங்கம், இல் - இல்லாதசமயத்தில், தருமமொடு - தருமத்துடன், தாமெய்தப்பட்ட - தாஞ் (சம்பாதித்) தடையப்பட்ட, பொருள் - திரவியங்களால், தேடும் - சேகரிக்கும், சரிதையோராய் - (ஆகாராதியைச்செய்யுந்) தொழிலையுடையோராய், துகடீர்தம்மிடத்தில் - குற்றமற்றவாத்மாவில், இளைப்பாறி - விஸ்ராந்தியடைந்து, மாறா - நீங்காத, துரியமெனும் - துரியமென்கின்ற, சாந்திநிலை - உபசாந்திநிச்சயம், தோன்றுமட்டும் - உதயமாகிறபரியந்தம், மிகுநூல்கள் - மிகுந்த (வாத்மஞான) சாத்திரங்களும், உபசாந்தி - உபசமனமும், ஒழுக்கம் - நன்னடையும், போதம் - (உயர்ந்த) வறிவும், மிக்கவர்கூட்டரவு - சாதுக்கள் சங்கமுமாகிய, இவற்றால் - இவைகளினால், விசாரம்வேண்டும் - ஆத்மவிசாரஞ் செய்யவேண்டும், நிகரிலா-சமானமில்லாத, விசாரத்தால் - விசாரணையினால், தோன்றிநிற்கும் - உண்டாயிருக்கின்ற, நிமலதுரியத்தினிலை - நிருமலமான துரியநிச்சயத்தை, நிகழ்த்தற்பாற்று- சொல்லுந்தன்மையையுடையது—எ-று.

(இ-ரை.) அறிவிற்றகுந்த வச்சத்துக்கள்சங்கம் இல்லாதசமயத்தில் தருமத்துடன் தாஞ்சம்பாதித் தடையப்பட்ட திரவியங்களால் சேகரிக்கும் ஆகாராதியைச்செய்யுந் தொழிலை யுடையோராய் குற்றமற்ற வாத்மாவில் விஸ்ராந்தியடைந்து நீங்காத துரியமென்கின்ற உபசாந்தி நிச்சயம் உதயமாகிறபரியந்தம் மிகுந்த வாத்மஞானசாத்திரங்களும், உபசமனமும், நன்னடையும், உயர்ந்தவறிவும், சாதுக்கள் சங்கமுமாகிய இவைகளினால் ஆத்மவிசாரஞ் செய்யவேண்டும். சமானமில்லாத விசாரணையினால் உண்டாயிருக்கின்ற நிருமலமான துரியநிச்சயத்தைச் சொல்லுந் தன்மையையுடையது—என்பதாம்.

(இ-ி) துரியஸ்தானமான விஸ்ராந்தி யுண்டாகிறபரியந்தம் விசாரணை வேண்டுமென்பதாம். (உரு)

## துரியநிலைபெற்றவ னனுபவமுரைத்தல்.

பாவனைதீர் துரியமதி னிளைப்புநீங்கிப்
பவமென்னுங் கடல்கடந்து பாரஞ்சேர்ந்தோன்
சீவனென நின்றாலுஞ் சீவத்தன்மை
தீர்ந்தாலு மில்லறத்திற் செறிவுற்றாலுங்
கேவலஞ்சந் நியாசியா யிருந்தபோதுங்
கிளர்சுருதி மயக்கத்தாற் கிடைப்பட்டாலு
மியாவதுஞ்செய் துந்தவிர்ந்தும் பயனொன்றில்லை
யிமகிரியு ருக்கடல்போ லியல்பினிற்பன்.

(இ-ள்.) பாவனைதீர் - பாவனைநீங்கிய, துரியமதின் - துரியத்தில், இளைப்புநீங்கி - விஸ்ராந்தியடைந்து, பவமென்னும் - சநநமென்கின்ற, கடல்கடந்து - சமுத்திரத்தைத்தாண்டி, பாரஞ்சேர்ந்தோன் - மோக்ஷதீரத்தையடைந்தவன், சீவனெனநின்றாலும் - சீவத்தன்மையோடிருந்தாலும், சீவத்தன்மைதீர்ந்தாலும் - சீவத்தன்மைதீர்ந்து (சிவமாயிருந்) தாலும், இல்லறத்தில் - குடும்பத்தில், செறிவுற்றாலும் - பொருந்தினாலும - கேவலம் - தனிமையான, சந்நியாசியாயிருந்தபோதும் - துறவியாயிருந்தபோதிலும், கிளர் - விளங்குகின்ற, சுருதிமயக்கத்தால் - சுருதி(ஸ்மிருதி) களின் பிரமையினால், கிடைப்பட்டாலும் - கட்டுப்பட்டாலும், யாவையும் - அனைத்தையும், செயதும் - செய்தாலும், தவிர்ந்தும்-தவிர்ந்தாலும், பயனொன்றில்லை - (அவற்றாலாகிய) பிரயோசனமொன்றில்லை, இமகிரியுருக்கடல்போல் - இமோர்ப்பர்வதமில்லாத சமுத்திரம்போல, இயல்பினிற்பன் - ஆத்மசுபாவத்திலிருப்பான்—எ-று.

(இ-ரை.) பாவனைநீங்கிய துரியத்தில் விஸ்ராந்தியடைந்து சநநமென்கின்ற சமுத்திரத்தைத்தாண்டி மோக்ஷதீரத்தை யடைந்தவன் சீவத்தன்மையோடிருந்தாலும், சீவத்தன்மைதீர்ந்து சிவமாயிருந்தாலும், குடும்பத்தில் பொருந்தினாலும், தனிமையான துறவியாயிருந்தபோதிலும், விளங்குகின்ற சுருதிஸ்மிருதிகளின் பிரமையினால் கட்டுப்பட்டாலும், அனைத்தையும் செய்தாலும், தவிர்ந்தாலும், அவற்றாலாகிய பிரயோசனமொன்றில்லை. இமோர்ப்பர்வதமில்லாத சமுத்திரம்போல ஆத்மசுபாவத்திலிருப்பான்.

(இ-ம்.) சநநசாகரத்தைக்கடந்து பாவனாதீதமான துரியத்தை யடைந்தவனுக்கு வன்னாச்சிரம வுசித்வாசாரங்களால்வருந் தருமாதருமங்களொன்றுமில்லையென்பதாம். (உசு)

தன்னையறியு முத்தியுந் திருஷ்டாந்தமும் வேண்டுமெனல்.

ஊகமுள தேற்சிறுவ ருரையுங்கொள்க
வொழிந்ததய னுரைசெயினுந் திரணமொப்ப
வேகவிடு வாய்ஞான மெளிதுதோன்ற
வியம்புமுவ மானமெலா மேகதேச
மாகநினை வாயுருவ மற்றஞான
மாகார மாமுவமைக் கண்டாதென்னு
மூகரனு பவமில்லா விகற்பத்தாலே
மொழிகுதர்க்க மறிவழிக்கு முயலவேண்டா.

(இ-ள்.) ஊகமுளதேல் - (சுருதிகுருசுவானுபவமென்னு) முத்தியிருக்குமாயின், சிறுவரையுங்கொள்க - குழந்தைகள் வசனத்தையுங் கொள்ளக்கடவாய், ஒழிந்தது - (அந்த) யூகமில்லாததை, அயனுரைசெயினும் - பிரமதேவன் சொன்னாலும், திரணமொப்ப - துரும்புக்கொப்பாக, ஏகவிடுவாய் - தள்ளுவாய், ஞானம் - (அகாரணமானபிரம) ஞானம், எளிதுதோன்ற - எளிதிலுதயமாம்பொருட்டு, இயம்பும் - சொல்லப்பட்ட, உவமானமெலாம் - (காரணமுள்ள) வுவமைகளியாவும், ஏகதேசமாக - ஏகதேசமென்று, நினைவாய் - கருதுவாய், உருவமற்ற - நிராகாரமான, ஞானம்-உண்மைஞானமானது, ஆகாரமாமுவமைக்கு - நாமரூபாகாரமாகிய திருஷ்டாந்தத்துக்கு, அண்டாதென்னும் - பொருந்தாதென்று சொல்லும், மூகர் - மூடர்கள், அனுபவமில்லா - பிரத்தியக்ஷ (ஞான) மில்லாத, விகற்பத்தால் - (தனது) பேத (ஞான)த்தினால், மொழிகுதர்க்கம் - சொல்லுகின்ற குதர்க்கயுத்தியானது, அறிவழிக்கும் - (ஞானவிசாரஞ்செய்யு) மறிவைக்கெடுக்கும், முயலவேண்டாம் - (இராமாவதில்) முயற்சிக்காதே—எ-று.

(இ-ரை.) சுருதி குரு சுவானுபவமென்னு முத்தியிருக்குமாயின் குழந்தைகள் வசனத்தையுங் கொள்ளக்கடவாய், அந்தயூகமில்லாததை பிரமதேவன்சொன்னாலும் துரும்புக்கொப்பாகத்தள்ளுவாய், அகாரணமான பிரமஞானம் எளிதிலுதயமாம்பொருட்டு சொல்லப்பட்ட காரணமுள்ள வுவமைகளியாவும் ஏகதேசமென்று கருதுவாய், நிராகாரமான உண்மைஞானமானது நாமரூபாகாரமாகிய திருஷ்டாந்தத்துக்கு பொருந்தா தென்றுசொல்லும் மூடர்கள் பிரத்தியக்ஷஞானமில்லாத தனது பேதஞானத்தினால் சொல்லுகின்ற குதர்க்கயுத்தியானதுஞானவிசாரஞ்செய்யு மறிவைக்கெடுக்கும், இராமா வதில் முயற்சிக்காதே—என்பதாம்.

(இ-ம்.) அனுபவயுத்தியினா லுவமிக்கப்படாதவஸ்துவை யுவமானங்களைக்கொண்டறியக்கூடாதென்னுங் குதர்க்கயுத்திகளைத் தள்ளவேண்டுமென்பதாம். (உஎ)

## ஞானமுண்டாவதற் கேதுவறிவித்தல்.

தந்திரியி லெழுமிசைபோற் சாந்திமுன்னுஞ்
சற்குணத்தின் ஞானமெழுந் தம்மிற்றுமா
மிந்தவிரண் டுங்குளமு மலரும்போல
வினிதுவளர்ந் திடுமொக்க விரண்டுங்கற்கில்
வந்தணுகுந் தனித்தனியே யிரண்டுங்கற்கில்
வருபயனென் றிலதாமிவ் வாய்மைகேள்வி
முந்துமரம் பொருளின்பங் கீர்த்திவாணண்
முழுதளிக்கு மனத்தெளிவான் முத்திநல்கும்

(இ-ள்.) தந்திரியிலெழும் - நரம்பிலுண்டாகும், இசைபோல்-நாதம்போல, சாந்திமுன்னும் - சாந்திமுதலாகிய, சற்குணத்தில் - சற்குணங்களில், ஞானமெழும் - (ஆத்ம) ஞானமுதயமாம், தம்மிற்றுமாம் - ஞானத்தினுற் (சற்குணங்களும்) அச்(சற்குணங்களான்) (ஞானமும்விளங்குவன) வாம், இந்தவிரண்டும் - இவ்விரண்டும், குளமு மலரும்போல - தடாகமும் தாமரைப்பூவும்போல, இனிதுவளர்ந்திடும் - நன்றுய்வளரும், இரண்டும்- (சற்குணமுஞானமுமாகிய) விவ்விரண்டையும், ஒக்க - சமமாக, கற்கில் - அற்பியாசஞ்செய்யில், வந்தணுகும் - பிரமப்ரயோசனம்) வரும், தனித்தனியே - வேறுவேறுக, இரண்டுங்கற்கில் - (இவ்) விரண்டையுமற்பியாசிக்கில், வருபயனென்றிலதாம் - வருகின்ற ப்ரயோசன மொன்றுமில்லாததாம், இவ்வாய்மைகேள்வி - இவ்வுண்மையான (கதையின்) கேள்வியானது, முந்துமறம் - முதலான (சகலத்தியாகமென்னுந்) தருமமும், பொருள் - (அழிவற்ற) பொருளும், இன்பம் - (நித்தி) யாநந்தமும், கீர்த்தி - (சத்துக்களாற்) புகழ்ச்சியும், வாணுள் - (சுக) சீவனமுமாகிய, முழுதளிக்கும் - யாவையுங் கொடுக்கும், (அதுவன்றி) மனத்தெளிவால் - மனத்தினதுதெளிவினுல், முத்தி - (நிரதிசயாநந்தமென்னு) மோக்ஷத்தையும், நல்கும் - கொடுக்கும்—எ-று.

(இ-ஸ.) நரம்பிலுண்டாகும் நாதம்போல சாந்திமுதலாகிய சற்குணங்களில் ஆத்மஞானமுதயமாம், ஞானத்திஞற் சற்குணங்களும் அச்சற்குணங்களான் ஞானமும் விளங்குவனவாம், இவ்விரண்டும் தடாகமும் தாமரைப்பூவும்போல நன்றுய்வளரும் சற்குணமு ஞானமுமாகிய விவ்விரடையும் சமமாக அற்பியாசஞ்செய்யில் பிரமப்ரயோசனம் வரும் வேறுவேறுக இவ்விரண்டையு மற்பியாசிக்கில் வருகின்ற ப்ரயோசன மொன்று மில்லாததாம். இவ்வுண்மையான கதையின்கேள்வியானது முதலான சகத் தியாகமென்னுந் தருமமும் அழிவற்றபொருளும் நித்தியாநந்தமும் சத்

துக்களாற்புகழ்ச்சியும் சுகசீவனமுமாகிய யாவையுங்கொடுக்கும் அதுவன்றி மனத்தினது தெளிவினுல் நிரதிசயானந்தமென்னு மோக்ஷத்தையும் கொடுக்கும்—என்பதாம்

(இ-ள்.) சற்குணத்தையு ஞானத்தையுமொன்றுக்கொன்று சம்பந்த மாகக் கற்கின்றதனு லுண்டாகுமிந்த வபரோக்ஷானுபவமுள்ள கதைகள் சீவன்முத்தியையும் விதேகமுத்தியையுங் கொடுக்குமென்பதாம். (உஅ)

முமூட்சுப்பிரகண முற்றிற்று

ஆ கதை ந-க்கு கவிதை-கஅசு.

# ஞானவிண்மகன் கதை.

(அவதாரிகை.)

ஞானவிண்மகன்கதை முற்பிரகரணத்திற் சாதன சதுஷ்டயத்தில் மூன் றுசாதனமுநிறைந்து நான்காஞ்சாதனமான முமூட்சுவிலதி தீவர ஞன விராமனுக் கத்துவிதஸ்வரூபத்தையும், அஃதடையுமுயற்சியை யும், அதற்குக்கருவியான சுத்தவாசனையையும், அதற்குச்சகாயமான சாந்தியாதிகுணங்களையுஞ்சொலலி அத்துரியஞானம் பிரசன்னமாம் பொருட்டு சிருஷ்டிக்குமுன் சத்தாமாத்திரமாகியும், சதோதயமாகி யும், சதாநந்தமாகியும் பிரகாசிக்கின்ற பிரமத்தின் லீலாசங்கற்பத் திற் ப்ரதிபலனமான சைதன்னியமே சகத்துற்பத்தியென்றும், அத ன் விளக்கமே சகஸ்திதியென்றும், அதனடக்கமே சகசாந்தமென் றும் இம்மூன்றிலு மொருதன்மையவாக விளங்குமதிஷ்டான சைத ன்னியமே நிருவாணசுகமென்றுஞ்சொல்லிய வின்ஞன்குபிரகரணத் தாற் சர்வமும் பிரமமயமென்பதை யுபதேசிக்கவேண்டி ஒன்பது கதைகளா னிறைந்த வுற்பத்திப் பிரகரணத்திற சைதன்னியத்தி லுண்டான சங்கற்பஞ் சைதன்னியமே யென்பதுதோன்ற முந்தின ஞானவிண்மகன் கதையை சைதன்னிய வுருவமாக நிரூபிக்கின்ருர்.

## ஆத்மஸ்வரூப ப்ரத்யக்ஷ நிருபணம்.

முத்தியை நயந்தோர்செய்கை மொழிந்தனஞ் சகங்கடொன்று
மத்திற மினிதுகேட்பா யனுபவப் பேற்றினுலே
யொத்துமுன் னிலைப்பேர்பெற்ற வுணர்வுநஞ் சீவனித்தைச்
சித்தொடு புமானகந்தை முன்னிலைச் சீவனென்ப.

(இ-ள்.) முத்தியைநயந்தோர் - மோக்ஷ (மடைய) விரும்பின முமூட்சுக்களின், செய்கை - ஆசாரத்தை, மொழிந்தனம் - (நீயனுசரிக்கும்படி கிரமமாகச்) சொன்னேம், சகங்கடோன்றும் - (இனி யுலகங்களுண்டாகின்ற, அத்திறம் - அக்காரணத்தை, இனிதுகேட்பாய் - நன்றாகச் சிரவணஞ்செய்யக்கடவாய், அனுபவப்பேற்றின் - சுவானுபூதியாகிய பெருமையினை, ஒத்து - பொருந்தினதாயும், முன்னிலை - ப்ரத்யக்ஷமென்று, பேர்- (மதஸ்தர்களிடப்பட்ட) நாமங்களை, பெற்ற - பெற்ற (தாயுமிருக்கின்ற), உணர்வு - (அபரோக்ஷ) ஞானமே, நஞ்சீவன் - நமதாத்மா, இத்தை - இச்சீவனை, சித்தொடு - பிரமஞானத்துடன், புமான் - கூடஸ்தனென்றும், அகந்தை - கருத்தத்துவ வீஸ்வரனென்றும், முன்னிலைச்சீவனென்ப-ப்ரத்யக்ஷ சிதாபாசனென்றுஞ் சொல்வர்—எ-று.

**(இ-தா.) மோக்ஷமடைய விரும்பின முமூட்சுக்களின் ஆசாரத்தை நீயனுசரிக்கும்படி கிரமமாகச்சொன்னேம், இனி யுலகங்களுண்டாகின்ற அக்காரணத்தை நன்றாகச் சிரவணஞ்செய்யக்கடவாய், சுவானுபூதியாகிய பெருமையினை பொருந்தினதாயும் ப்ரத்யக்ஷமென்று மதஸ்தர்களிடப்பட்ட நாமங்களைப் பெற்றதாயுமிருக்கின்ற அபரோக்ஷஞானமே நமதாத்மா இச்சீவனை பிரமஞானத்துடன் கூடஸ்தனென்றும், கருத்தத்துவ வீஸ்வரனென்றும், ப்ரத்யக்ஷ சிதாபாசனென்றுஞ் சொல்வர்—என்பதாம்.**

(ப-ம்.) மஸ்தர்களில் தார்க்கீகர், விடயசம்பந்த ஞானனுபவத்தை அனுபூதிபிரத்யக்ஷமெனவும், சாங்கியர் புத்தி சம்பந்த ஞானனுபவத்தை ப்ரதிபத்தி ப்ரத்யக்ஷமெனவும், மீமாம்சர்கள் ஆத்மானுபவ சம்பந்தஞானத்தைவேதனப்ரத்யக்ஷமெனவுங்கொண்டனர், அவைகளில்விடயத்தோடு ஞானங்கூடியனுபவிக்குஞ்சமயத்தில் அவ்விரண்டையுமழித் தெழாநின்ற சத்தும், சமாதியில் அறிவில் அறிபவன்கூடி யனுபவிக்குஞ்சமயத் தவ்விரண்டையு மழித்தெழாநின்ற சிதாநந்தமும், சகசத்தில் ஆநந்தத்தை ஆநந்திகூடி யனுபவிக்குஞ் சமயத்தி லவ்விரண்டையுங் கரைத்தெழாநின்ற நிரதிசயாநந்தமு மேகமாயிருக்கின்ற துரியாதீதஞானமே அபரோக்ஷஞானமென்பார், அனுபவப்பேற்றினலே யொத்து முன்னிலைப் பேர்பெற்ற வுணர்வுநஞ் சீவனென்றூர். வடநூற்பிரகாரம் அனுபவம் பிரதிபத்திவித்தை முன்னிலைப்பேர்பெற்ற மேதை நஞ்சீவனித்தைச் சித்தொடுபுமானகந்தை முன்னிலைத் திரிசயமென்ப வெனப்பாடமோதி முன்னிலை - ப்ரத்யக்ஷமென்றும், பேர்பெற்ற - (பேதவாதிகளா) னமிடப்பெற்ற, அனுபவம் - விடயப்ரத்யக்ஷமும், வித்தை - வேதன ப்ரத்தியக்ஷமும், பிரதிபத்தி - ஞாதாப்ரத்யக்ஷமு (மாகியவித்திரி) புடிப்ரத்யக்ஷமாக விளங்குகின்ற, மேதை - ஞானமே, நஞ்சீவன் - நமதாத்மா, இத்தை - இஞ்ஞானத்தையே, சித்தொடு-ஞானத்துடன், அகந்தை-அகம்பாவமுள்ள, புமான்-

ஞாதாவென்றும், முன்னிலைத்திரிசயமென்ப - ப்ரத்யக்ஷஞேயமென்றுஞ் சொல்வார்கள்—எ-று. தார்க்கிகர்களும் பூர்வமீமாம்சர்களும் திரிபுடியை விடயமாகவுடைய ஞானமேப்ரத்யக்ஷஞானமென்றுரைத்தனர், அவைபேதமாகலின் கூடாவாம். நமது சித்தாந்தம் ப்ரத்யக்ஷஞானமே சிவசத்தார்த்தமாகலின் அவையபேதமெனக்கொள்க.

(இ-ம்.) சுயஞ்சைதன்னிய ப்ரத்யக்ஷப்பிரகாசமே நான்குசைதன்னியமாகவுந் திரிபுடியாகவுந் தோற்றுகின்றதென்பதாம். (க)

## ஆத்மாவே சகமாக விளங்குகின்றதெனல்.

சீவனெவ் வறிவினாலே தெரிவுறு மதுபதார்த்தந்
தாவுறும் விவிதமான சங்கற்ப விகற்பமுற்று
மேவிய மயக்கந்தன்னால் விரிந்தநீ ரலையாமாபோற்
பூவல யங்களாகிப் பொலிந்தது புகன்றசீவன்.

(இ-ள்.) சீவன் - சீவனானவன், எவ்வறிவினால் - எந்தவறிவோடும், தெரிவுறும் - ப்ரகாசிக்கின்றானோ, அது - அந்தஞானமே, பதார்த்தம் - (வியோமாதியான) வஸ்துக்களாம், தாவுறும்-(தோன்றியழிதலிற்) றுவாநின்ற, விவிதமான - நாநாவிதமான, சங்கற்பவிகற்பம் - சங்கற்பவிகற்பங்களை, உற்றுமேவிய - பொருந்தியிருக்கின்ற, மயக்கந்தன்னால் - மயக்கத்தினால், விரிந்தநீர் - பரவியசலமே, அலையாமாபோல் - திரையானது போல, புகன்ற சீவன் - சொல்லிய சீவனானவன், பூவலயங்களாகி - பூமி (முதலான சகலவஸ்துக்க) ளாய், பொலிந்தது - ப்ரகாசித்தது—எ-று.

(இ-ரை.) சீவனானவன் எந்த வறிவோடும் ப்ரகாசிக்கின்றானோ அந்த ஞானமே வியோமாதியான வஸ்துக்களாம், தோன்றியழிதலிற்றுவாநின்ற நாநாவித்மான சங்கற்பவிகற்பங்களை பொருந்தியிருக்கின்ற மயக்கத்தினால் பரவியசலமே திரையானதுபோல சொல்லிய சீவனானவன் பூமிமுதலான சகல வஸ்துக்களாய் ப்ரகாசித்தது—என்பதாம்.

(இ-ம்.) ஆத்ம சங்கற்பமே சகம்போலத் தோற்றப்படுகின்றதாம்.(உ)

### ஆத்மாவேசகத்தாயினதற்குக் காரணம்யாதேனின்.

பன்னுகா ரணமொன்றில்லைப் படைக்குமுன் படைக்கவேண்டு
மென்னும்லீ லையினாற்றானே யியைந்த காரணமதாகி
முன்னுறு பொதுவாங்காட்சி மொய்ப்பொருட் டிரள்களாகித்
தன்னுளே சகமாய்க்காற்றுட் சலனம்போ லறிவுட்டங்கும்.

(இ-ள்.) படைக்குமுன் - சிருஷ்டிக்குமுன்னமே, பன்னும் - சொல்லப்பட்ட, காரணமொன்றில்லை - அகாரணமான, தானே - சத்தாமத்திரமே, படைக்கவேண்டுமென்னும் லீலையினால் - சிருஷ்டிக்கவேண்டுமென்கிற லீலாசத்தியினால், இயைந்தகாரணமதாகி - பொருந்தினகாரணமாய், முன்னுறு - ப்ரத்யட்சமான, பொதுவாங்காட்சி - சாமானியதிருஷ்டியே, மொய்ப்பொருட்டிரள்களாகி - நெருங்கிய பொருட்கூட்டங்களாகி (யிருக்கின்ற), சகமாய் - உலகமாய், தன்னுள்-தனதுவியாபகத்தி (லுண்டாய்), அறிவுள் - ஞானத்தில், காற்றுட்சலனம்போல் - வாயுவினிடத்திற் சலன (சத்தியைப்போல), தங்கும் - தங்கியிருக்கும்—எ-று.

(இ-னா.) சிருஷ்டிக்கு முன்னமே சொல்லப்பட்ட அகாரணமான சத்தாமாத்திரமே சிருஷ்டிக்கவேண்டு மென்கிற லீலாசத்தியினால் பொருந்தினகாரணமாய் ப்ரத்யக்ஷமான சாமானியதிருஷ்டியே நெருங்கிய பொருட்கூட்டங்களாகியிருக்கின்ற உலகமாய் தனது வியாபகத்திலுண்டாய் ஞானத்தில் வாயுவினிடத்திற் சலனசத்தியைப்போல் தங்கியிருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) பாமப்ரகாசமேசகத்தாதலின் அதற்கதுவேகாரணமானதாம்.

---

**பிரமங்காரணமாயிற் சகங்காரியமா மதனுற்றுவிதமும் அதன் வியாபகத்துட் சகம் விளங்குகின்றதேனின் விசிட்டாத்துவிதமுயாமேயேனின்.**

---

எல்லையிற் றிசைகள்காலம் புறம்பெனு மிவற்றிற்கேற்ற
பல்லுரு வாயெங்கெவ்வா றெழுந்ததப் படியங்காகுஞ்
செல்லுமிந் நெறியாலிந்தச் செகமெனும் பிரமகற்பம்
புல்லுகா ரணமிலாத பொருளெனப் புந்திசெய்க.

(இ-ள்.) எல்லையில் - அளவில்லாத, திசைகள் - திக்குகளும், காலம் - காலங்களும், புறம்பெனும்-ப்ரத்யேகமென்கிற, இவற்றிற்கு - இச்சர்வாத்மஞானத்துக்கு, ஏற்ற - இசைந்த, பல்லுருவாம் - நாநாவிதவடிவங்களாய், எங்கெவ்வாறெழுந்தது - எவ்விடத்தெப்படியுண்டாயிற்றோ, அப்படி-அவ்வண்ணம், அங்காகும் - அவ்விடத்தாகும், செல்லுமிந்நெறியால் - நடக்கின்றவிவ்விதத்தினால், இந்தச்செகமெனும் - இவ்வுலகமென்கின்ற, பிரமகற்பம் - பிரமகற்பிதமானது, புல்லுகாரணமிலாத - பொருந்திய (வேறு) காரணமில்லாத, பொருளென - வஸ்துவென்று, புந்திசெய்க - அறியக்கடவாய்—எ-று.

(இ-னா.) அளவில்லாத திக்குகளும், காலங்களும், ப்ரத்யேகமென்கின்ற இச்சர்வாத்மஞானத்துக்கு இசைந்த நாநாவித

வடிவங்களாய் எவ்விடத்தெப்படி யுண்டாயிற்ளுே அவ்வண்ணம் அவ்விடத்தாகும், நடக்கின்ற விவ்விதத்தினுல் இவ்வுலகமென்கின்ற பிரமகற்பிதமானது பொருந்திய வேறுகாரணமில்லாத வஸ்துவென்று அறியக்கடவாய்—என்பதாம்.

(இ-ம்.) எவ்வெவ்விடங்களிலெப்படி யெப்படி ஸ்புரிக்கின்றதோஅப்படியப்படிதானேவிளங்குகின்றபடியாற் சகங்காரியமாகாது, அதனுற் பிரமங்காரணமாகாது, இக்காரியகாரணமின்மையினுற் றுவிதமும், காரணத்துட்காரியம் வேறுபடாம லபேதமாயிருத்தலின் விசிட்டாத்துவிதமுமின்றித்தானே சகலமுமாய்விளங்குதலின் அத்துவிதமேயாமென்பதாம். (ச)

அப்படியாயிற் சகந்தோற்றப்படுகின்றதேயெனின்.

இதனைமுன் னிலையாஞ்சீவ னிமைப்பினிற் படைத்ததாகு
மதன்வடி வாகிநிற்கு மனுமான முதலவெல்லாம்
விதமுறு காட்சிமெய்ம்மை பந்தமஃ தின்மைவீடாந்
திதமறு மிதுபோமாறு செப்புதுந் தெரியக்கேட்பாய்.

(இ-ள்.) இதனை - இச்சகத்தை, முன்னிலையாஞ்சீவன் - ப்ரத்யட்சமாகியவாத்ம (சைதன்யமே), இமைப்பினில் - நொடியளவில், படைத்ததாகும் - சிருஷ்டித்ததாகும், அனுமானமுதலவெல்லாம்-அனுமான முதலிய (பிரமாணங்க) ளியாவும், அதன் வடிவாகி நிற்கும் - அப்ரத்யட்சத்தினம் சமாகவேவிளங்கும், விதமுறு - நாநாவிதமாகிய, காட்சிமெய்ம்மை - திரியஸ்தி னுண்மையே, பந்தம் - பந்தமாம், அஃதின்மைவீடாம் - அஃதில்லாமையே மோட்சமாம், திதமறுமிது-திரமில்லாதவித்திரி (ஸ்யமானது), போமாறு - நீங்கும்படி, செப்புதும் - சொல்லுவோம், தெரியக்கேட்பாய் - (நன்ருய்த்) தெரியக்கேள்—எ-று.

(இ-ரை) இச்சகத்தை ப்ரத்யக்ஷமாகிய வாத்மசைதன்யமே நொடியளவில் சிருஷ்டித்ததாகும். அனுமானமுதலிய பிரமானங்களியாவும் அப்ரத்யக்ஷத்தினம்சமாகவே விளங்கும், நாநாவிதமாமாகிய திரியஸ்தினுண்மையே பந்தமாம், அஃதில்லாமையே மோக்ஷமாம், திரமில்லாத வித்திரிஸ்யமானதுநீங்கும்படி சொல்லுவோம் நன்ருய்த்தெரியக்கேள்—என்பதாம்

(இ-ம்.) ப்ரத்யட்சசைதன்யத்தைத்தவிர வேறு வஸ்துதோற்றவில்லையென்பதாம். (ரு)

### அப்படிப்பட்ட பிரமமெப்பொழுது வெளிப்படுமெனின்.

மண்டிய சுழுத்திதன்னில் வருகனுப் போவதென்னக்
கண்டன வுலகமெல்லாங் கற்பனை முடிவிற்போக
வெண்டரு மலைவுதோற்றம் பெயரெலா மின்றியாழ்ந்து
தண்டலி லிருடேசின்றித் தனித்ததோ ருண்மைநிற்கும்.

(இ-ள்.) மண்டியசுழுத்திதன்னில் - மிகுந்த சுழுத்தியவத்தையில், வருகனுப்போவதென்ன - வாராநின்றசொற்பனங்கெடுவதுபோல, கண்டன வுலகமெல்லாம் - காணப்பட்டனவாகிய சகங்களியாவும், கற்பனை முடிவிற்போக - கற்பாந்தத்திற்கெட, எண்டருமலைவு - எண்ணத்தினுலுண்டான சஞ்சலமும், தோற்றம் - உருவமும், பெயர் - நாமமு (மாகிய), எல்லாமின்றி - இயாவுமில்லாமல், ஆழ்ந்து - கெம்பீரமாய், தண்டலிலிருள் - தடையற்ற (வஞ்ஞா) னந்தகாரமும், தேசு - (விருத்திஞான) ப்ரகாசமும், இன்றி - இல்லாமல், தனித்தது - தானேதானுயிருக்கின்றதாகிய, ஒருண்மை - ஒப்பற்றதத்துவஞானமானது, நிற்கும்-மிஞ்சியிருக்கும்.

(இ-ஶா.) மிகுந்த சுழுத்தியவத்தையில் வாராநின்ற சொற்பனங் கெடுவதுபோல காணப்பட்டனவாகிய சகங்களியாவும் கற்பாந்தத்திற்கெட எண்ணத்தினுலுண்டான சஞ்சலமும் உருவமும், நாமமுமாகிய இபாவுமில்லாமல் கெம்பீரமாய் தடையற்ற வஞ்ஞானுந்தகாரமும் விருத்திஞான ப்ரகாசமும் இல்லாமல் தானேதானு யிருக்கின்றதாகிய ஒப்பற்ற தத்துவஞானமானது மிஞ்சியிருக்கும்—என்பதாம்.

(இ-ரீ.) அத்யந்த ப்ரளயத்திற் சங்கற்ப ரூபமான சகல சகங்களு நீங்கி ஞானுஞ்ஞான ரகிதமான சுயஞ்சைதன்யமே விளங்குமென்பதாம்.(சு)

### இப்படிப்பட்ட சுயஞ்சைதன்யத்திற்குச் சத்தியாதி நாமம் வந்ததென்னெனின்.

சத்தியம் பிரமமான்மா பரமுதற் சாற்றவேண்டி
யித்திறப் பெயர்மேலோரா லிடப்பெற்ற விந்தவான்மா
சித்திர மாகத்தானே வேறுபோற் றிகழ்ந்துதீது
மெத்திமேல் வருசீவப்பேர் மேவிய போலவாகும்.

(இ-ள்.) சாற்றவேண்டி - வாக்கினுல் விபரிக்கும்பொருட்டு, சத்தியம் - சத்தியமும், பிரமம் - பிரமமும், ஆன்மா - ஆத்மாவும், பரம் - பரமும், முதல் - முதலாகிய, இத்திறப்பெயர் - இத்தன்மையவாகிய நாமங்

களை, மேலோராலிடப்பெற்ற-சத்துக்களாற்றரிக்கப்பட்ட, இந்தவான்மா-இவ்வாத்மாவானது, சித்திரமாக - அதிசயமாக, தானே வேறுபோற்றிகழ்ந்து - தான்ருனே மற்ருென்றுபோற் ப்ரகாசித்து, தீதுமெத்தி - குற்றம்பொருந்தி, மேல்வரு - இனிவருவதான, சீவப்பேர் - சீவநாமத்தை, மேவியபோலவாகும் - பொருந்தினதுபோலவாகும்—எ-று.

(இ-ளா.) வாக்கினுல் விபரிக்கும்பொருட்டு சத்தியமும், பிரமமும், ஆத்மாவும், பரமும் முதலாகிய இத்தன்மையவாகிய நாமங்களை சத்துக்களாற் றரிக்கப்பட்ட இவ்வாத்மாவானது அதிசயமாகத் தான்ருனே மற்ருென்றுபோற் ப்ரகாசித்து குற்றம்பொருந்தி இனி வருவதான சீவநாமத்தைப் பொருந்தினதுபோலவாகும்—என்பதாம்.

(இ-ம்.) ஆத்மாவானது மகான்களால் விவகரிக்கும்பொருட்டு பரியாயநாமங்களைப்பெற்றுத் தானே சீவனைப்போல விளங்குமென்பதாம். (எ)

அச்சைதன்யமே மனமாயதனுற் சகமேப்படி யர்யிற்றெனின்.

சீவனென் கின்றசொல்லும் பொருளுமாய்ச் செறிந்தவான்மா
பாவனை மனனத்தாலே பருத்தெழு மனமதாகு
மேவரும் பிரமந்தன்னில் வேலையி லலைபோல்வந்து
தாவுறு முள்ளந்தானே நினைந்தவா சகங்கற்பிக்கும்.

(இ-ள்.) சீவனென்கிறசொல்லும் - சீவனென்கிறசத்தமும், பொருளும் - (அத) னருத்தமுமாய், செறிந்தவான்மா - நிறைந்தவாத்மாவானது, பாவனைமனனத்தாலே - பாவித்தலுள்ள சங்கற்பத்தினுல், பருத்தெழுமனமதாகும் - தடித்தெழாநின்றமனமாம், மேவரும்பிரமந்தன்னில்-அகோசரமான பிரமத்தில், வேலையினலைபோல் - சமுத்திரத்தின் றிரையைப்போல, வந்து - உண்டாகி, தாவுறுமுள்ளம்-சஞ்சலிக்கின்றமனதுதானே, நினைந்தவா - (தனது) சங்கற்பப்படியே, சகங்கற்பிக்கும் - உலகத்தையுண்டாக்கும்—எ-று.

(இ-ளா.) சீவனென்கின்ற சத்தமும் அதனருத்தமுமாய் நிறைந்த வாத்மாவானது பாவித்தலுள்ள சங்கற்பத்தினுல் தடித்தெழாநின்றமனமாம், அகோசரமானபிரமத்தில் சமுத்திரத்தின் றிரையைப்போல உண்டாகி சஞ்சலிக்கின்ற மனது தானே தனது சங்கற்பப்படியே உலகத்தையுண்டாக்கும்—என்பதாம்.

(இ-ம்.) சீவசப்தார்த்தமான வாத்மஸ்மரணமே மனமா யதின்சங்கற்பமே சகமாயிற்றென்பதாம். (அ)

## அப்படியாயின் வேறுபடாமேயெனின்.

உன்னுறு மனத்தினுலே யுலகமா மிந்திரசாலந்
துன்னுறு பணிகளென்னுஞ் சொற்பொருட் பொன்னையன்றி
யன்னிய மில்லைப்பொன்னுற் பணியென வறையவேண்டா
பன்னிய வுலகாஞ்சொற்குப் பரமன்றிப் பொருள்வேறில்லை.

(இ-ள்.) உன்னுறுமனத்தினுலே - நினைக்கப்பட்டமனோ (சங்கற்பத்) தினுலே, உலகமாமிந்திரசாலம் - சகமென்னு மிந்திரசாலமானது, துன்றுஞ் - உண்டாயிருக்கும், பணிகளென்னுஞ்சொற்கு - ஆபரணமென்னுஞ் சத்தத்துக்கு, பொருள் - அருத்தமானது, பொன்னையன்றி - கனகத்தை யல்லாமல்,அன்னியமில்லை-வேறின்று, பொன்னுல் - கனகத்தினுல், பணியென - ஆபரணமென்று, அறையவேண்டா - சொல்லவேண்டாம், பன்னிய - சொல்லிய, உலகாஞ்சொற்கு-சகமென்னுஞ்சத்தத்துக்கு, பரமன்றி - பிரமமே யல்லாமல், பொருள்-அருத்தம், வேறில்லை-வேறின்று—எ-று.

(இ-ரை.) நினைக்கப்பட்ட மனோசங்கற்பத்தினுலே சகமென்னு மிந்திரசாலமானது உண்டாயிருக்கும, அபரணமென்னுஞ் சத்தத்துக்கு அருத்தமானது கனகத்தை யல்லாமல் வேறின்று. கனகத்தினுல் ஆபரணமென்று சொல்லவேண்டாம். சொல்லிய சகமென்னுஞ் சத்தத்துக்கு பிரமமே யல்லாமல் அருத்தம் வேறின்று.

(இ-ு.) சகம் பிரமப்ரகாசமேயன்றி வேறின்றென்பதாம். (க)

## அசத்தாகிய மனதினுற் சகத்தெப்படி யுண்டாயிற்றெனின்.

செல்லுறு நதியாற்றேன்றுந் திரைகள்போன் மனத்திலுண்டா
யில்லையு மாகியுண்டு போலெழு மிந்தஞால
மல்லல்செய் மோகம்பந்தந் தமமல மவித்தைமாயை
புல்லுசம் சாரமென்றே ஞானிகள் புகலப்பட்ட.

(இ-ள்.) செல்லுறுநதியாற்றேன்றும் - ஓடாநின்ற (கான) லாற்றிற் றேற்றும், திரைகள்போல் - அலைகளைப்போல, மனத்தில் - (அசத்தான) மனதில், உண்டாயில்லையுமாகி-உண்டாகாததா (யிருந்தும்) , உண்டுபோலெழும் - உள்ளதுபோலத்தோற்றுநின்ற, இந்தஞாலம் - இச்சகமானது, அல்லல்செய் - துன்பத்தைச்செய்யாநின்ற, மோகம் - மோகமென்றும், பந்தம் - பந்தமென்றும், தமம் - தமசென்றும், மலம் - மலமென்றும், அவித்தை - அவித்தையென்றும், மாயை - மாயையென்றும், புல்லுசம்சாரமெ

ன்று - சார்ந்திருக்கின்றசம்சாரமென்றும், ஞானிகள் - அறிஞர்களால், புகலப்பட்ட - சொல்லப்பட்டன—எ-று.

(இ-ா.) ஓடாநின்றகானலாற்றிற்றோற்றும் அலைகளைப்போல அசத்தானமனதில் உண்டாகாததாயிருந்தும், உள்ளதுபோலத் தோற்றாநின்ற இச்சகமானது துன்பத்தைச் செய்யாநின்றமோகமென்றும், பந்தமென்றும், தமமென்றும், மலமென்றும், அவித்தையென்றும், மாயையென்றும், சார்ந்திருக்கின்ற சம்சாரமென்றும் அறிஞர்களால் சொல்லப்பட்டன—என்பதாம்.

(இ-ம்.) இல்லாதகானற்சலத்திலலைதோன்றுவதுபோலவில்லாதமனதினல் சகந்தோற்றுகின்றதாம். (௧௦)

---

பந்தநுபழ மதனிவிர்த்தியும் ஞானேதயமும் யாதெனின்.

பந்தத்துருவங் கேட்டுணரிற் பரவீட்டுருவு மேல்வெளியா
மிந்தச்சகநீ நான்முதலா மிவைமெய்யென்றல் பந்தமதா
மந்தக்கருத்து நிற்பளவு மரிதாமுத்தி வித்தினிடைத்
தொந்தத்தருப்போற்காண்பவன்பாற் றோன்றாதுறையுங்காண்பவெலாம்

(இ-ள்.) பந்தத்துருவம் - (நாஞ்சொல்லாநின்ற) பந்தஸ்வரூபத்தை, கேட்டுணரில் - (நீ) கேட்டறிவாயானல், பரவீட்டுருவு - மேலாகியமோட்சஸ்வரூபம், மேல்வெளியாம் - இனி (நன்றாய்) வெளிப்படும், இந்தச்சகம் - இவ்வுலகத்தையும், நீநான்முதலாமிவை - நீநான்முதலாகிய (விப்பேதங்களையும்) மெய்யென்றெனல் - உளதென்பது, பந்தமதாம் - பந்த (ரூப) மாகும், அந்தக்கருத்துநிற்பளவும் - அச்சங்கற்பமான (திரியஸ்யமிருக்கின்ற) பரியந்தம், மூத்தி - மோட்சமானது, அரிதாம் - அரியதாம், வித்தினிடை - விதையினிடத்தில், தொந்தத்தருபோல் - அடங்கியிருக்கின்ற விருட்சத்தைப்போல, காண்பவன்பால் - திருஷ்டாவினிடத்தில், காண்பவெலாம் - திரிஸ்யங்களியாவும், தோன்றாதுறையும்-உண்டாகாம லடங்கியிருக்கும்.

(இ-ா.) நாஞ்சொல்லாநின்ற பந்தஸ்வரூபத்தை நீகேட்டறிவாயானல் மேலாகிய மோட்சஸ்வரூபம் இனி நன்றாய் வெளிப்படும் இவ்வுலகத்தையும் நீநான்முதலாகிய விப்பேதங்களையும் உளதென்பது பந்தரூபமாகும். அச்சங்கற்பமானதிரியஸ்யமிருக்கின்ற பரியந்தம் மோட்சமானது அரியதாம். விதையினிடத்தில் அடங்கியிருக்கின்ற விருட்சத்தைப்போல திருஷ்டாவினிடத்தில் திரிஸ்யங்களியாவும் உண்டாகாமலடங்கியிருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) விசாரிக்குமட்டுஞ் சகமாயிருந்துடனே கெடுகின்ற பந்தநாசத்திற்சுயஞ்சைதன்யம் ப்ரகாசிக்குமென்பதாம். சகபந்தமென்பதற்குதாரணம், சூதசம்மிதையில் சிவபூசாயோககண்டத்தில் அறிவின் ஸ்வரூபத்துக்கு விதிரேகமாக யாதொன்று தோன்றுகின்றதோ வதுவே சம்சாரமென்று, சொல்லப்படுகின்றது. (கக)

---

**திருஷ்டாவிற் றிரியஸ்ய மேப் டி யிருக்கின்ற தேனின்.**

பிறிவாம்பொருளின் மனத்திருந்த பேதப்படியே யுதரத்திற்
செறிவாஞ்சிருட்டிசமத்காரஞ்சிதைவற்றுண்டாய்ச்செறிவதுபோ
லறிவாஞ்சரீரி யெனும்பொருளி னகன்றவுதரத்தங்குரமாய்
நெறியார்சகத்தின்வடிவமெலா நீங்காவியல்பாய்நிறைந்திருக்கும்

(இ-ள்.) பிறிவாம்பொருளின் - பிரிவுள்ள (வடபீசமுதலிய காரண) வஸ்துவின், உதரத்தில் - கருப்பத்தில், மனத்திருந்த - அதற்குள்ளிருந்த, பேதப்படியே - (புத்திரபுட்பாதிகளான) பேதப்ரகாரமே, செறியாஞ்சிருட்டி - நெருங்காநின்ற சிருட்டியின், சமத்கார்ம் - ஆச்சரியசத்தியானது, சிதைவற்று - கெடாமல், உண்டாய்ச்செறிவதுபோல் - உணடாயிருப்பது போல, அறிவாஞ் சரீரியெனும்-ஞானாத்மாவென்னும், பொருளின் - வஸ்துவினுடைய, அகன்ற வுதரத்து-வியாபகமானகருப்பத்தில், அங்குரமாய் - முளையாகி, நெறியார்-முறையாகப்பொருந்திய, சகத்தின்வடிவமெலாம் - உலகத்தி (னும) ரூபமான சகலமும், நீங்கா-நீங்காமல், இயல்பாய் நிறைந்திருக்கும் - சுபாவமாகநிறைந்திருக்கும்—எ-று.

(இ-ா.) பிரிவுள்ள வடபீசமுதலிய காரண வஸ்துவின்கருப்பத்தில் அதற்குள்ளிருந்த பத்திர புட்பாதிகளான பேதப்ரகாரமே நெருங்காநின்ற சிருஷ்டியின் ஆச்சரிய சத்தியானது கெடாமல் உண்டாயிருப்பதுபோல ஞானாத்மா வென்னும் வஸ்துவினுடைய வியாபகமானகருப்பத்தில் முளையாகி முறையாகப்பொருந்திய உலகத்தினுமரூபமான சகலமும் நீங்காமல் சுபாவமாக நிறைந்திருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) வித்தில் விருக்ஷமிருப்பதுபோலத் திருஷ்டாவிற்றிரியஸ்ய சத்தியடங்கியிருக்குமென்பதாம். (கஉ)

---

## திருக்துவிலுண்டான சகலமுந் திருக்குவேயென்பதற்குத் திருஷ்டாந்த மியாதெனின்.

பருவங்களிலேவிதைமுளைக்கும் படிபோற்காணப்படுமவற்றிற்
கருதுங்கருத்துமுடலெடுக்குங் ககனத்துதித்தோன்கதையாலே

விருளுஞ்சகத்தினுற்பத்தி யெளிதாய்விளங்கு மிதுகேட்பாய் [ன்
பெருகுங்ககனம்பிறப்பிடமாய்ப் பிறந்தான்மறையோர்பெருங்குலத்தோ

(இ-ள்.) பருவதங்களில் - பக்குவமான (காலதேச) ங்களில், விதை-வித்தானது, முளைக்கும்படிபோல் - முளைக்கின்ற தன்மைப்போல, காணப்படுமவற்றை-திரிஸ்யத்தை, கருதுங்கருத்தும் - சங்கற்பிக்கின்றமனதும், உடலெடுக்கும் - (தேவதிரியக்குமுதலிய) வடிவமாம்,ககனத்துதித்தோன் கதையாலே - (ஞா)ஞகாயத் துதயமானவன் சரிதையினுல், இருளுஞ்சகத்தி னுற்பத்தி - அந்தகாரமயமான சகசிருஷ்டி, எளிதாய்விளங்கும் - வெகுவா (யுனக்கு) ப்ரகாசிக்கும், இது கேட்பாய் - இக்கதையை (நீ) கேட்கக்கடவாய், மறையோர் பெருங்குலத்தோன் - சிறந்த பிரமவமிசத்தையுடையவன், பெருகுங்ககனம் - வியாபகமான (ஞாஞ) காசமே, பிறப்பிடமாய்-தானுண்டாவதற்குக் காரணமாக, பிறந்தான்-ஞானவிண்மகனுண்டானுர்.

(இ-ரை.) பக்குவமான காலதேசங்களில் வித்தானது முளைக்கின்ற தன்மைப்போல திரிஸ்யத்தை சங்கற்பிக்கின்ற மனதும் தேவதிரியக்குமுதலிய வடிவமாம். ஞாஞகாயத்துதயமானவன் சரிதையினுல் இந்தகாரமயமான சகசிருஷ்டி வெகுவாயுனக்கு ப்ரகாசிக்கும் இக்கதையை நீ கேட்கக்கடவாய் சிறந்தபிரம வமிசத்தையுடையவன் வியாபகமான ஞாஞகாசமே தானுண்டாவதற்குக்காரணமாக ஞானவிண்மகனுண்டானுர்—என்பதாம்.

(இ-ம்.) ஆத்மவுல்லாசத்தில் அதன் சுபாவமாயுண்டான சகலமு மாத்மசாக்ஷாத்காரமாக வெளிப்படுதெற் கிஞ்ஞானவிண்மகன் கதையே திருஷ்டாந்தமென்பதாம். (கரு)

## ஞானபுருடன் சரிதையை வினுவுதல்.

ஒருவிற்றியானமுயிர்க்கிதம்வீறுடையோனெடுநாளுய்ந்திருப்ப
விழியுமுலகைவிழுங்குறுநா மிவனைவிழுங்கா திருந்தமையென்
னழிவுசெய்யுமெனதுவலி யமுழுந்துங்கல்லின் வாண்முனைபோற்
கழியமழுங்கிற்றெனவெண்ணிக் காலனவனூர்கடிதணைந்தான்.

(இ-ள்.) ஒழிவிற்றியானம் - பிரிவற்றசமாதியும், உயிர்க்கிதம்-சீவகாருண்ணியமும், வீறு - தருமமு (மர்கியவிவைகளை), உடையோன் - உள்ளவனுகிய (ஞானவிண்மகன்), நெடுநாளுய்ந்திருப்ப - அநேககாலஞ் சீவித்திருக்கு (மளவில்), இழியுமுலகை-ஈனமாகு (மிச்) சகத்தை, விழுங்குறுநாம் - புசிக்கின்றயாம், இவனைவிழுங்காதிருந்தமையென் - இவனைப் புசிக்காமலிருந்ததென்ன, அழிவுசெய்யுமெனதுவலி - (அனைத்தையு) நசிப்பிக்கு மெனது வல்லபம், கல்லில் - பாடாணத்தில், அழுந்து - அழு

ந்துகின்ற, வான்முனைபோல் - கத்திமுனையைப்போல, கழியமழுங்கிற்றென - மிகவுமழுங்கிப்போயிற்றென்று, எண்ணி - நினைத்து, காலன் - காலனானவன், அவனூர் கடிதணைந்தான் - அவனூரிற் சீக்கிரத்திற்சேர்ந்தான்—எ-று.

(இ-ரை.) பிரிவற்ற சமாதியும் சிவகாருண்யமும் தருமமுமாகிய விவைகளை உள்ளவனாகிய ஞானவிண்மகன் அநேககாலஞ் சீவித்திருக்குமளவில் ஈனமாகுமிச்சகத்தை புசிக்கின்றயாம் இவனைப் புசிக்காம லிருந்ததென்ன? அனைத்தையு நசிப்பிக்கு மெனது வல்லபம் பாடாணத்தில் அழுந்துகின்ற கத்திமுனையைப்போல மிகவு மழுங்கிப்போயிற்றென்று நினைத்துகாலனானவன் அவனூரிற் சீக்கிரத்திற் சேர்ந்தான்—என்பதாம்.

(இ-ம்.) காலன் வேறுபடாதவனை வேறுபடுத்தச்சென்றதாம். (கச)

## அப்புருட னகப்பட்டானோவெனின்.

வினையின்முயல்வார்த்தங்கருமம்விடுவதுண்டோவெனமறையோன்
மனையின்வாயிற் புகுமளவின் மண்டுமூழிக் கடுங்கனல்போற்
கனையுங்கடுந்தீ யெரித்திடவுங் கடிதுபுகுந்து கண்டவனைப்
பனைசெய்கரமா யிரத்தாலும் பற்றியிழுத்துப் பயனற்றான்.

(இ-ள்.) வினையின்முயல்வார் - (ஒரு) தொழிலில் முயற்சிப்பவர்கள், தன்கருமம் - தனதுதொழிலை, விடுவதுண்டோவென - விட்டுவிடுவார்களோவென்று, மறையோன் - பிராமணனுடைய, மனையின்வாயில்-வீட்டுவாயலில், புகுமளவில் - (காலனானவன்) புகுந்தமாத்திரத்தில், மண்டும்-மிகுகின்ற, ஊழிக்கடுங்கனல்போல் - கொடியவூழித்தீயைப்போல, கனையும் - சத்தியாநின்ற, கடுந்தீ - (அவரது மகிமையென்னுங்) கொடிய தீயானது, எரித்திடவும் - எரிக்கவும், கடிந்து - (அதைப்) பிளந்துகொண்டு, புகுந்து - பிரவேசித்து, கண்டவனை - பார்த்தவப்புருடனை, பனைசெய் - பனைக்கொப்பாகிய, கரமாயிரத்தாலும் - ஆயிரங்கைகளினாலும், பற்றியிழுத்து - பிடித்திழுத்து, பயனற்றான் - ப்ரயோசனம் பெறாதவனாயினன்.

(இ-ரை.) ஒருதொழிலில் முயற்சிப்பவர்கள் தனதுதொழிலை விட்டுவிடுவார்களோவென்று பிராமணனுடைய வீட்டுவாயலில்காலனானவன் புகுந்தமாத்திரத்தில் மிகுகின்ற கொடிய வூழித்தீயைப்போல சத்தியாநின்ற அவரது மகிமையென்னும் கொடிய தீயானது எரிக்கவும் அதைப்பிளந்துகொண்டு பிரவேசித்து பார்த்தவப்புருடனை பனைக்கொப்பாகிய ஆயிரங்கைகளினாலும் பிடித்திழுத்து ப்ரயோசனம்பெறாதவனாயினன்—என்பதாம்.

(இ-ம்) காலாதீதனாகையாற் காலனாற்பிடிக்கப்பட்ட வில்லையென்பதாம்.

## இயமனுத்தியுரைத்தல்.

**அவன்சங்கற்ப புருடனைப்போ லசைவற்றிருப்ப வடற்பரிதா
யிவனங்ககன்றுநமன்பாற்போயிவ்வாறுரைப்பயமனுரைப்பான்
புவனங்கருமத் தாலன்றிப் பொன்றுதுதவிப் பொருளவையே
தவறும்படிசெய் கருமங்கள் சகாயமாகச் செல்கென்றான்.**

(இ-ள்.) அவன் - அந்தஞானவிண்மகன், சங்கற்பபுருடனைப்போல் - சங்கற்பத்தையே (வடிவமாயுள்ள) புமானைப்போல, அசைவற்றிருப்ப - அசையாமலிருக்க, அடற்புரிதாய் - வெல்லக்கூடாமல், இவனங்ககன்று- இக்காலனவ்விடத்தி (னின்று) நீங்கி, நமன்பாற்போய் - யமனிடத்திற் சென்று, இவ்வாறுரைப்ப - இங்கே நடந்தப்ரகாரஞ்சொல்ல, யமனுரைப்பான் - (அதற்கு) யமன்சொல்லுவான், புவனம் - (கன்மத்தினுலுண்டாகிய) சகத்து, கருமத்தாலன்றி - கன்மத்தினு லல்லாமல், பொன்றுது - நசியாது, உதவிப்பொருள்-(நமக்குச்) சகாயமானவஸ்துக்கள், தவறும்படி செய் - மரிக்கும்படி (முன்) செய்த, கருமங்கள்-கன்மங்களேயாம், அவையே - அக்கன்மங்களையே, சகாயமாக - கொல்வதற்குச் சகாயமாகக்கொண்டு, செல்கென்றான் - போவென்றுசொன்னான்—எ-று.

**(இ-ரை.) அந்தஞானவிண்மகன்சங்கற்பத்தையே வடிவமாயுள்ள புமானைப்போல அசையாமலிருக்கவெல்லக்கூடாமல் இக்காலனவ்விடத்தினின்று நீங்கி யமனிடத்திற்சென்று இங்கே நடந்தபிரகாரஞ் சொல்ல அதற்கு யமன் சொல்லுவான். கன்மத்தினுலுண்டாகிய சகத்து கன்மத்தினு லல்லாமல் நசியாது, நமக்குச் சகாயமான வஸ்துக்கள் மரிக்கும்படி முன்செய்த கன்மங்களேயாம். அக்கன்மங்களையே கொல்வதற்குச் சகாயமாகக் கொண்டு போவென்று சொன்னான்—என்பதாம்.**

(ப-ம்) கன்மத்தினுலுண்டான தேகங் கன்மத்தினுற் கெடுமென்பார், புவனங் கருமத்தாலன்றிப் பொன்றுதென்றார். (இ-ம்.) தேகத்தைக்கெடுத்தற்கு முன்னுள்ள சஞ்சிதகன்மத்தானியமித்த மரணகன்மத்தைப்பரிசோதித்ததைக்கொண்டு செல்லவேண்டுமென்பதாம். (கசு)

## கருமமகப்பட்டதாவெனின்.

**காலனிதுகேட் டவன்செய்த கருமந்தேடி நதியோடை
ஞாலந்திசைக ளெலாமுழன்று நண்ணுதாக மீண்டெய்திச்
சீலநவனுக் குரைசெய்யச் சிந்தித்ததனு முரைசெய்வான்
மூலவிசும்பிற் பிறத்தலினன் முடிவிலவனும் விசும்பன்றே.**

(இ-ள்.) காலனிதுகேட்டு - காலனிவ்வசனத்தைக்கேட்டு, அவன்செய்த - அப்பிராமணன் (முன்) செய்த, கருமந்தேடி - கருமங்களைத்தேடி, நதி - தீர்த்தங்களிலும், ஓடை - தடாகங்களிலும், ஞாலம் - பூமண்டலத்திலும், திசைகளெலாம் - திக்குகளனைத்திலும், உழன்றும் - அலைந்தும், நண்ணுதாக - அகப்படாததாக, மீண்டெய்தி - திரும்பிவந்து, சீலநமனுக்குரைசெய்ய - அறிவுள்ள யமனுக்குச்சொல்ல, சிந்தித்து - (வெகுநேர) மாலோசித்து, அவனும் - அந்தயமனும், உரைசெய்வான்-சொல்லுவான், மூலவிசும்பில் - கேவலாகாயத்தில், பிறத்தலினல் - உதித்ததினல், முடிவிலவனும் - நசிப்பில்லாத வப்பிராமணனும், விசும்பன்றே - (ஞா)னகாயமல்லவோ—எ-று.

(இ-ா.) காலனிவ் வசனத்தைக்கேட்டு அப்பிராமணன் முன்செய்த கருமங்களைத்தேடி தீர்த்தங்களிலும்தடாகங்களிலும் பூமண்டலத்திலும் திக்குகளனைத்திலும் அலைந்தும் அகப்படாததாக திரும்பி வந்து அறிவுள்ள யமனுக்குச்சொல்லவெகுநேரமாலோசித்து அந்த யமனும் சொல்லுவான். கேவலாகாயத்தில் உதித்ததினல் நசிப்பில்லாத வப் பிராமணனும் ஞானகாயமல்லவோ—என்பதாம்.

(ப-ஃ.) திரிஸ்யபலனைக்குறித்து உதகத்திற் பேதபாவத்தாற் செய்யுங் கன்மங்களைப் பரிசோதித்தாரென்பார், இவன்செய்யுங் கருமந்தேடி நதியோடையுழன்றென்றும், முற்பவத்திற்செய்த கன்மங்கள் இப்பவத்திலனுபவித்தற்குப் புவனத்திற் பரிணமித்திருக்கின்றதோவெனப் பரிசோதித்தாரென்பார், ஞாலந்திசைகளெலா முழன்றென்றுங்கூறினர்.

(இ-ம்.) சஞ்சிதவினைகாரணமாகவுதியாமல் ஞானங் காரணமாகவுதித்தலாற் பூர்வகன்ம மகப்படவின்றென்பதாம். (கள)

## ஆனலவன் காரியப்படுத லின்றேவெனின்.

விண்ணிற்பிறந்தோன் காரணத்தை மேவாமையினற் கருமங்கள்
பண்ணிற்றிலன்கா ரணமிலதேற் பண்ணுங்கரும முளதாமோ
வெண்ணற்குரிய சகாயமுனக் கிலதாமென்று யமன்கூற
நண்ணற்கரிதென் றுயர்கால னடந்தான்மனையி னனிவியந்து.

(இ-ள்.) விண்ணிற்பிறந்தோன்-(ஞான) காயத்துதித்த பிராமணன், காரணத்தை - (சககாரிநிமித்த) காரணத்தை, மேவாமையினல் - பொருந்தாததனல், கருமங்கள் - கருமங்களை, பண்ணிற்றிலன் - செய்துஞ் செய்தானில்லை, காரணமிலதேல் - காரணமேயில்லையாயின், பண்ணும் - அவன்செய்கின்ற, கருமமுளதாமோ - கருமங்களுள்ளதாமோ, எண்ணற்கு - (நீ) நினைப்பதற்கு, உரிய - உரித்தான, சகாயம் - அவனது சஞ்சிதத்தால் விதிக்கப்பெற்ற (மரணகருமமென்னு) முதவியானது, உனக்கிலதாமெ

ன்று - உனக்கில்லையென்று, யமன்கூற - தருமராசன்சொல்ல, நண்ணற்கரிதென்று - அவனைக்கிட்டக்கூடாதென்று, உயர்காலன் - மேன்மையாகிய காலனானவன், மனையில் - தனதிடத்தில், கனிவியந்து - மிகவுமதிசயித்து, நடந்தான் - போயினான்—எ-று.

(இ-னா.) ஞானாகாயத் துதித்த பிராமணன் சககாரிநிமித்த காரணத்தை பொருந்தாததனால் கருமங்களை செய்துஞ் செய்தானில்லை. காரணமேயில்லையாயின் அவன் செய்கின்ற கருமங்களுள் ளதாமோ! நீ நினைப்பதற்கு உரித்தான அவனது சஞ்சிதத்தால் விதிக்கப்பெற்ற மரணகரும்மென்னு முதலியானது உனக்கில்லையென்று தருமராசன்சொல்ல அவனைக்கிட்டக்கூடாதென்றுமேன்மையாகிய காலனானவன் தனதிடத்தில் மிகவுமதிசயத்துப்போயினான்—என்பதாம்

(இ-ம்.) சிதாகாயத்தினிமித்த காரணமுஞ் சககாரி காரணமுமின்றியுபதானகாரணமாத்திரமா யுதித்தவனாதலாற காரியமும்காரணமும் காரணகாரியமும் மரணகன்மமுமின்றி நித்தியனாயிருப்பனென்பதாம். (கஅ)

## பிரமாவை யிருப்புருடனாகக் கூறிற்றேவெனின்.

என்னாவுரைத்தமுனிமுகம்பார்த் திராமனுரைப்பானீயிசைத்த
வன்னான்சயம்பு விஞ்ஞான மங்கமானே னொன்றாகத்
துன்னாநின்றேன்பிரமனெனத் துணிந்தேனெனலுந் தூயமுனி
முன்னாமுரைத்தயன்றனையேமொழிந்தகதையின்முறைகேளாய்

(இ-ள்.) என்னாவுரைத்த - (இப்படி) யென்றுசொல்லிய, முனிமுகம் பார்த்து - (வசிட்ட) முனியின் வதனத்தைப்பார்த்து, இராமனுரைப்பான் - இராகவர்சொல்வார், நீயிசைத்த - தேவரீரனுக்கிரகித்த, அன்னான்- அந்த ஞானவிண்மகனை, சயம்பு - தானேயுண்டானவனும், விஞ்ஞானம்- விஞ்ஞானமே, அங்கமானேன்-வடிவமானவனும், ஒன்றாகத்துன்னாநின்றேன் - ஒன்றாக நிறைந்திருக்கின்றவனாயு (மிருக்கின்ற) , பிரமனென - பிரமாவாக, துணிந்தேனெனலும் - நிச்சயித்தேனென்று சொல்லவும், தூயமுனி - பரிசுத்தமாகிய (வசிட்ட) முனி, முன்னாமுரைத்தது - முன்னாஞ்சொல்லியது, அயன்றனையே - பிரமாவையே, மொழிந்தகதையின் - சொல்லிய கதையின், முறைகேளாய் - முறைமையை (இராமா நீ) கேட்பாய்—எ-று.

(இ-னா.) இப்படியென்று சொல்லிய வசிட்டமுனியின் வதனத்தைப்பார்த்து இராகவர் சொல்லுவார். தேவரீ ரனுக்கிரகித்த அந்த ஞானவிண்மகனை தானேயுண்டானவனும் விஞ்ஞானமே வடிவமானவனும் ஒன்றாக நிறைந்திருக்கின்றவனாயு மிருக்கின்ற

பிரமாவாக நிச்சயித்தேனென்று சொல்லவும் பரிசுத்தமாகிய வசிட்டமுனி முன்னுஞ் சொல்லியது பிரமாவையே சொல்லிய கதையின் முறைமையை இராமா நீ கேட்பாய்—என்பதாம்.

(இ-ம்.) பிரமத்திலுண்டான பிரமனையே யோர்புருடனாக வுருவகப் படுத்தினதாம். (கக)

## காலன் பிரமனையழிக்கத் துணிந்தானோவெனின்.

செயல்செய்காலன் யமனுடனே செப்பும்வழக்குத்தாமுணர்ந்தே
மூயருமனுவி னந்தத்தி லுலகமெல்லா முண்டெழுந்த
வயர்வில்கால னயன்றனையு மடர்ப்பமுயன்ற வப்போதிற்
றுயரில்காலன் முகநோக்கித் துங்கயமனுங் கிவைசொன்னான்.

(இ-ள்.) செயல் - (நாசத்) தொழிலை, செய்காலன்-செய்யாநின்றகாலனவன், யமனுடனேசெப்பும்வழக்குத்தாம்-யமனுடனேசொல்லும் ஞாயங்களை, உணர்ந்தேம் - யாமறிந்தேம், உயருமனுவின் - மேலானமனுவினுடைய, அந்தத்தில் - முடிவில், உலகமெல்லாம் - சகங்களனைத்தையும், உண்டெழுந்த - புசித்தெழுந்த, அயர்வில்காலன் - சோம்பலில்லாத காலனவன், அயன்றனையும் - பிரமாவையும், அடர்ப்ப-செகுத்தற்கு, முயன்றவப்போதில் - எத்தனஞ்செய்தவச்சமயத்தில், துயரில் - துக்கமில்லாத, காலன்முகநோக்கி - காலனதுமுகத்தைப்பார்த்து, துங்கம் - உயர்வாகிய, யமனிவைசொன்னான் - இயமனிவைகளைச்சொன்னான்—எ-று.

(இ-ரை.) நாசத்தொழிலைச் செய்யாநின்ற காலனவன்யமனுடனே சொல்லும் ஞாயங்களை யாமறிந்தேம், மேலானமனுவினுடைய முடிவில் சகங்களனைத்தையும் புசித்தெழுந்த சோம்பலில்லாத காலனவன் பிரமாவையும்செகுத்தற்குஎத்தனஞ் செய்தவச்சமயத்தில் துக்கமில்லாத காலனது முகத்தைப்பார்த்து உயர்வாகிய இயம னிவைகளைச் சொன்னான்—என்பதாம்.

(இ-ம்.) பிரமனது ஸ்வரூபத்தை யுணராமற்கெடுக்க நினைத்ததென்பதாம். (உ0)

## ஆனலவர் ஸ்வரூபமியாதெனின்.

நிகரில்பரம வாகாய நிமலவடிவாய் நிற்கின்ற
விகலிலபனை யடர்த்தற்கென் றெண்ணுமெண்ண மெளிதாமோ

திகழும்வெளியே வடிவாகிச் செறிந்தபூத வடிவிலனும்
புகல்சங்கற்ப புருடனைப்போற் பொன்றுதயனும்பொலிந்திடுமால்

(இ-ள்.) நிகரில்-சமானமில்லாத, பரமவாகாயம்-பிரமாகாயமே, நிமல வடிவாய் - நிருமலாகாரமாய், நிற்கின்ற - இருக்கின்ற, இகலியனே-எதிரில்லாத பிரமாவை, அடர்த்தற்கென்று - அழித்தற்கென்று, எண்ணுமெண்ணமெளிதாமோ - நினைக்கின்ற நினைவெளிதின் முடியுமோ, திகழும் - ப்ரகாசிக்கின்ற, வெளியேவடிவாகி - ஆகாயமேபடிவமாய், செறிந்த - நெருங்கிய, பூதவடிவிலனும் - பூதவடிவமில்லாதவனாய், புகல் - (முன்) சொல்லிய, சங்கற்பபுருடனைப்போல் - சங்கற்பபுமானைப்போல, பொன்றுது - நசியாமல், அயனும் - ப்ரமதேவனும், பொலிந்திடும்-ப்ரகாசிப்பன்—எ-று.

(இ-ை.) சமானமில்லாத பிரமாகாயமேநிருமலாகாரமாயிருக்கின்ற எதிரில்லாத பிரமாவை அழித்தற்கென்று நினைக்கின்ற நினைவெளிதின் முடியுமோ? ப்ரகாசிக்கின்ற ஆகாயமேபடிவமாய் நெருங்கியபூதவடிவமில்லாதவனாய் முன்சொல்லிய சங்கற்ப புமானைப்போல நசியாமல் ப்ரமதேவனும் பிரகாசிப்பன்—என்பதாம்.

(இ-ஃ.) பஞ்சபூதவடிவமின்றிச் சிதாகாயமே வடிவமாகப்ரகாசிக்கின்றதாம். (உக)

## ஆயின் வேறு வடிவமின்றேவெனின்

ஞானவிண்ணாய்க் கேவலமாய் நடுவுமுடிவு முதலில்லா
தானசயம்பு வாம்பிரம மடுத்ததனது மனவசத்தான்
மானமுருவ முடையதுபோன் மன்னுபுமான்போல் வயங்கிடுமா
லீனுமலடி மகன்போல விதுமெய்ம்மையினுல் வலிவிலதாம்.

(இ-ள்.) ஞானவிண்ணாய் - சிதாகாயமாகியும், கேவலமாய் - தனிமையாகியும், முதல் - முதலும், நடுவும - மத்தியும், முடிவும் - அந்தமும், இல்லாதான்-இல்லாததான, சயம்புவாம் - சுயம்பாயிருக்கின்ற, பிரமம் - பிரமமானது, அடுத்த - அடுத்திருக்கின்ற, தனதுமனவசத்தால் - தனது சங்கறபவசத்தினுல், மானமுருவ முடையதுபோல் - பிரமாணமான சரீர முடையதுபோலவும், மன்னுபுமான்போல்-நிலையாகிய புருடனைப்போலவும், இது மெயம்மையினுல் - இஃதுண்மையினுல, வயங்கிடும் - ப்ரகாசிக்கும், ஈனு - ப்ரசவியாத, மலடிமகன்போல - வந்தியாபுத்திரனைப்போல, வடிவிலதாம் - ஆகாரமில்லையாம்—எ-று.

(இ-ை.) சிதாகாயமாகியும், தனிமையாகியும், முதலும், மத்தியும், அந்தமும் இல்லாததான சுயம்பாயிருக்கின்ற பிரமமானது அடுத்திருக்கின்ற தனது சங்கற்பவசத்தினுல் பிரமாண

மான சரீரமுடையதுபோலவும், நிலையாகிய புருடனைப்போலவும் இஃதுண்மையினால் ப்ரகாசிக்கும், ப்ரசவியாதவந்தியா புத்திரனைப்போல ஆகாரமில்லைபாம்—என்பதாம்.

(இ-ம்.) ஆதிமத்தியாந்தரகிதமான சுயஞ்சைதன்யமே தனதுல்லாச சத்தியினால் வடிவமுள்ளதுபோலத் தோற்றினாலு மதுபிரமமேயன்றி நாமரூப மன்றென்பதாம். (உஉ)

பிரமனுக்குச் சிருட்டியாதி தொழிலிருக்க பௌதிக சரீரமில்லாத காரண மியாதெனின்.

என்றுகாலன் றனக்கியம னிசைத்தானென்றோன் முகநோக்கி
நின்றவாதி வாகியமாய் நிகழ்ந்தவாதி பௌதிகமா
யொன்றுமுடல முயிர்க்கெல்லா முபயவிதமாம் பிரமனுக்குத்
துன்றுமாதி வாகியமாஞ் சூக்கவுடலொன் றுயதென

(இ-ள்.) என்று - இப்படியென்று, காலன்றனக்கு - மிருத்துவுக்கு, இயமனிசைத்தான் - நமன்சொன்னான், என்றோன் - என்றுகூறிய வசிட்டரது, முகநோக்கி - வதனத்தைப்பார்த்து, நின்ற - நின்றதான, ஆதிவாகியமாய் - ஆதிவாகிய சரீரமாயும், நிகழ்ந்த - ப்ரகாசித்த, ஆதிபௌதிகமாய் - ஆதிபௌதிகசரீரமாயும், ஒன்றுமுடலம் - பொருந்திய சரீரங்கள், உயிர்க்கெல்லாம் - ஆத்மாக்களனைத்திற்கும், உபயவிதமாம் - இரண்டுவிதமாயிருக்க, பிரமனுக்கு - பிரமாவுக்கு, துன்றும் - நெருங்கிய, ஆதிவாகியமாம் - ஆதிவாகிய சரீரமாகிய, சூக்கவுடலொன்றுயதென - சூட்சுமசரீரமொன்றானதென்னவென் (றிராமன்) கேட்க—எ-று.

(இ-ஞா.) இப்படியென்று மிருத்துவுக்கு நமன்சொன்னானென்று கூறிய வசிட்டரது வதனத்தைப்பார்த்து நின்றதான ஆதிவாகிய சரீரமாயும், பரகாசித்த ஆதிபெதிக சரீரமாயும், பொருந்திய சரீரங்கள் ஆத்மாக்களனைத்திற்கும் இரண்டு விதமாயிருக்க் பிரமாவுக்கு நெருங்கிய ஆதிவாகிய சரீரமாகிய சூட்சுமசரீர மொன்றான தென்னவென் றிராமன்கேட்க.

இதுவுமது.

பிரமவொளியாற் பிறந்தசகம் பிறக்குமுயிர்க்குக் காரணமாய்
விரவுமதனு லுயிர்க்கெல்லா மேவுமுடல மிரண்டாகும்
பரமபிரமத் தினையொழிய பயில்காரணம்வே றிலாமையினால்
வரவிலயனுக் கோருடலாய் மருவுமாதி வாகியமே.

(இ-ள்.) பிரமவொளியால் - பிரமப்ரகாசத்தினால், பிறந்தசகம்-உண்டாகியவுலகம், பிறக்குமுயிர்க்கு - உண்டாகுஞ்சீவர்களுக்கு, காரணமாய்-

காரணமாக, விரவுமதனல்-பொருந்துகின்றதனல், உயிர்க்கெல்லாம்-சீவர்களனைத்திற்கும், மேவுமுடலம் - பொருந்தியசரீரம், இரண்டாகும்-இரண்டேயாம், பரமபிரமத்தினையொழிய - மேலானபிரம (ஸ்வரூப)த்தைத் தவிர, பயில்காரணம் - சொல்லப்பட்டகாரணம், வேறிலாமையினல்-வேறில்லாததினல், வரவிலயனுக்கு - (வேருக) வுதியாத பிரமனுக்கு, ஆதிவாகியம் - ஆதிவாகியமானது, ஒருடலாய் - ஒருசரீரமாக, மருவும் - பொருந்தும்—எ-று.

(இ-ள.) பிரமப்ரகாசத்தினல் உண்டாகிய வுலகம் உண்டாகுஞ் சீவர்களுக்கு காரணமாக பொருந்துகின்றதனல் சீவர்களனைத்திற்கும் பொருந்திய சரீரம் இரண்டேயாம். மேலான பிரமஸ்வரூபத்தைத்தவிர சொல்லப்பட்டகாரணம் வேறில்லாததினல் வேருகவுதியாத பிரமனுக்கு ஆதிவாகியமானது ஒருசரீரமாகப் பொருந்தும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) உயிர்களுக்குப் பிரமமுபாதான காரணமாகையா லாதிவாகிய சரீரமும், சகத்துசககாரியகாரண மாகையா லாதிவெளதிக சரீரமுமாக விரண்டாம். பிரமாவுக்குப் பிரமமே காரணமாகையா லாதிவாகிய சரீரமொன்றேயா மென்பதாம். (உச)

## சகத்தைச் சிருஷ்டிக்கு மனேரூப மியாதெனின்.

சகக்காரணமா மயனுக்குத் தானேதோன்று மனவடிவாய்
மிகத்தாஞ்சகத்து விரிந்திடலால் விரிந்தவெல்லா மனவடிவென்
றுகப்பாலுரைத்த வசிட்டனைப்பார்த் துலகமாயை தனைவிரித்த
மகத்தாமனத்தின் வடிவுதனைவகுத்தோதென்ன.முனிசொல்வான்

(இ-ள்.) சகக்காரணமாம் - உலகத்துக்குக்காரணமாகிய, அயனுக்கு-பிரமனிடத்தில், தானேதோன்றும்-சுயமாகவுண்டாகின்ற, மனவடிவாய்-மனதின் ஸ்வரூபமாய், மிக - மிகவும், சகத்துவிரிந்திடலால்-உலக (முண்டாகிப்) பரந்தபடியால், விரிந்தவெல்லாம் - (அப்படி) பரவிய (சகங்க)ளியாவும், மனவடிவென்று - மனேரூபமேயென்று, உகப்பாலுரைத்த - (மிகுந்த) வன்போடுசொன்ன, வசிட்டனைப்பார்த்து - வசிட்ட முனியைப்பார்த்து, உலகமாயைதனை - சகமென்னு மாயையை, விரித்த - மலர்த்திய, மகத்தாமனத்தின் - மகாமனதினது, வடிவுதனை - உருவத்தை, வகுத்தோதென்ன - பகுத்துச்சொல்லுமென் (றிராமன்கேட்க) , முனிசொல்வான் - (வசிட்ட) முனிசொல்லுவார்—எ-று.

(இ-ள.) உலகத்துக்குக் காரணமாகிய பிரமனிடத்தில் சுயமாக வுண்டாகின்ற மனதின் ஸ்வரூபமாய் மிகவும் உலகமுண்டாகிப் பரந்தபடியால் அப்படி பரவிய சகங்களியாவும் மனேரூபமே

யென்று மிகுந்த வன்போடுசொன்ன வசிட்டமுனியைப்பார்த்து சகமென்னுமாயையை மலர்த்திய மகாமனதினது உருவத்தைப் பகுத்துச்சொல்லுமென் றிராமன்கேட்க வசிட்டமுனிசொல்லுவார்—என்பதாம்.

(இ-ம்.) சகமாகத் தோற்றுகின்ற பிரமசங்கற்பத்தை விசாரித்ததாம்.

இதுவுமது.

சடசூனியமா யெங்கணுஞ்சேர் தனிநெஞ்சுக்குப் பேரொழிய
வுடனுங்ககனந் தனைப்போல வுள்ளும்புறம்பு முருவிலதாம்
படர்தீர்மெய்பொய்யெனும்பொருளிற்பயிறோற்றரவே மனமாகுந்
தொடர்சங்கற்ப மெங்குளதாந் தோன்றுமனமு மங்குளதே.

(இ-ள்.) சடம் - அவித்தைமயமாயும், சூனியமாய்-உருவமில்லாததாயும், எங்கணுஞ்சேர்-எவ்விடங்களிலுஞ் சேர்ந்திருக்கின்ற, தனிநெஞ்சுக்கு-தனித்தமனதுக்கு, பேரொழிய-நாமமாத்திரமேயன்றி, உடனும்-(அனைத்) துடனுகின்ற, ககனந்தனைப்போல - ஆகாயத்தைப்போல, உள்ளும்புறம்பும் - அகத்திலும்புறத்திலும், உருவிலதாம் - வடிவமில்லாததாம், படர்தீர்மெய் - குற்றமற்றமெய்யும், பொய் - பொய்யும், எனும் - என்கின்ற, பொருளின்-வஸ்துவின், பயிறோற்றரவே - பொருந்தியதோற்றமே, மனமாகும் - மனதாகும், தொடர்சங்கற்பம்-தொடர்ந்தசங்கற்பமானது, எங்குளது - எங்கேயுள்ளதோ, தோன்றுமனமும்-உண்டாகின்றமனதும், அங்குளது - அங்கே யுண்டானதாம்—எ-று.

(இ-ரை.) அவித்தை மயமாயும், உருவமில்லாததாயும், எவ்விடங்களிலுஞ் சேர்ந்திருக்கின்ற தனித்த மனதிற்கு நாமமாத்திரமேயன்றி அனைத்துடனுகின்ற ஆகாயத்தைப்போல அகத்திலும் புறத்திலும் வடிவமில்லாததாம். குற்றமற்ற மெய்யும் பொய்யும் என்கின்ற வஸ்துவின் பொருந்திய தோற்றமே மனதாகும். தொடர்ந்த சங்கற்பமானது எங்கே யுள்ளதோ! உண்டாகின்ற மனதும் அங்கே யுண்டானதாம்—என்பதாம்.

இதுவுமது.

மனத்தின்வடிவு சங்கற்ப மற்றிவ்விரண்டு மொன்றுகு
மநர்த்தமோக மலம்பந்த மவித்தைமாயை தமமுதலா
மினத்தபெயர்சங் கற்பத்துக்கேற்றபெயரா மிதுநழுவிற்
கனத்தசகக்காட் சியும்போகுங் கதிர்விட்டெறிக்கும் பரவடிவம்.

(இ-ள்.) மனத்தின்வடிவு - மனதினது படிவம், சங்கற்பம் - சங்கற்பமேயாம், இவ்விரண்டு மொன்றாகும் - இவ்விரண்டு மொன்றேயாம், அநர்த்தம் - அநர்த்தமும், மோகம் - மோகமும், மலம் - மலமும், பந்தம் - பந்

தமும், அவித்தை - அவித்தையும், மாயை - மாயையும், தமம் - தமசும், முதலாம் - முதலான, இனத்தபெயர் - கூட்டமாகிய நாமங்கள், சங்கற்பத்துக்கேற்றபெயராம்-சங்கற்பத்துக்குத்தகுந்தநாமங்களாம்,இதுநழுவில் - இச்சங்கற்ப நசிக்கில், கனத்த - பருத்த, சகக்காட்சியும்போம் - திரிஸ்யதிருஷ்டியுநீங்கும், பரவடிவம்-பிரமஸ்வரூபமானது, கதிர்விட்டெறிக்கும்-ஒளிவிட்டு ப்ரகாசிக்கும்—எ-று.

(இ-ள.) மனதினது படிவம் சங்கற்பமேயாம் இவ்விரண்டுமொன்றேபாம். அநர்த்தமும், மோகமும், மலமும், பந்தமும், அவித்தையும், மாயையும், தமசும்முதலான கூட்டமாகிய நாமங்கள் சங்கற்பத்துக்குத் தகுந்த நாமங்களாம். இச்சங்கற்பநசிக்கில் பருத்த திரிஸ்யதிருஷ்டியு நீங்கும். பிரமஸ்வரூபமானது ஒளிவிட்டு ப்ரகாசிக்கும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) சங்கற்பரூபமாய்ச் சடசித்துக்களிற் சஞ்சரிக்கின்ற மனதுக்கு மோகமுதலியநாமமாத்திரமேயன்றி யுருவமின்றென்பதாம். (உஎ)

## ஆத்மா யெந்தவிடத்தேப்படி விளங்குகின்றதேனின்

நிற்பநடப்ப வெனுமனைத்தி னிழலாடாது வெறிதிருக்குந்
தற்பணந்தா னெப்படியோ தானேவிளங்கு மப்படியே
கற்பமுறுநீ நான்முதலாங் காட்சிவிகற்ப மெலாமடங்கி
யற்பமெனினுங் காட்சியறி லதுவேதனிக்கே வலநிலைமை.

(இ-ள்.) நிற்பநடப்பவெனும் - சராசரமென்கின்ற, அனைத்தின் - சமஸ்தத்தின், நிழல் - சாயையானது, ஆடாது - (புணர்ந்தும்) புணராமல், வெறிதிருக்கும் - கேவலமாயிருக்கும், தற்பணந்தானெப்படியோ-கண்ணடியானதெப்படியோ, அப்படியே - அந்தப்ரகாரமே, தானேவிளங்கும் - (சைதன்ய) மாத்திரம் ப்ரகாசிக்கும், கற்பமுறு-கற்பனை பொருந்திய, நீநான்முதலாம் - நீநானென்பமுதலாக, காட்சி - காணப்பட்டனவாகிய, விகற்பமெலாமடங்கி - வேற்றுமைகளனைத்துமடங்கி, அற்பமெனினும்-அற்பமாகிலும், காட்சி-திரியஸ்யமானது, அறில் - (சேடமின்றி) நசிக்கில், அதுவே - அந்நசிப்பே, தனிக்கேவலநிலைமை - ஒப்பற்ற கைவல்ய நிச்சயமாம்.

(இ-ள.) சராசரமென்கின்ற சமஸ்தத்தின் சாயையானது புணர்ந்தும் புணராமல் கேவலமாயிருக்கும் கண்ணடியானதெப்படியோ! அந்தப்ரகாரமே சைதன்யமாத்திரம் ப்ரகாசிக்கும். கற்பனைபொருந்திய நீநானென்பமுதலாக காணப்பட்டனவாகிய வேற்றுமைகளனைத்து மடங்கி அற்பமாகிலும் திரிஸ்யமானது சேடமின்றி நசிக்கில் அந்நசிப்பே ஒப்பற்ற கைவல்லியநிச்சயமாம்—எ-ம்.

(இ-ஃ.) சகமுதலான பேதபாவனை நீங்கியவிடத்திற் றானாய் விளங்குகின்ற வனுபவமே சுயம் ப்ரகாசமென்பதாம். (உஅ)

## மனோநாச முண்டாகுங்காலம் யாதெனின்.

வேறு.

காண்பரிய மனங்காட்சிப் பொருளையெல்லாங்
கனவுதரு கனவுபோற் காட்டாநிற்கும்
பூண்பதிலா மனஞ்சலன சத்தியாலே
பொலியுமசை யுந்தியங்கும் போகுமீளும்
வீண்பயிலுஞ் செருக்குமிகு மகங்கரிக்கும்
வேற்றுருவாம் பெருங்கற்ப மேவும்போதிற்
சேண்படவெல் லாப்பொருளுந் தீரமாய்ந்து
செறியுமுப சாந்தமே சேடமாகும்.

(இ-ள்.) கனவுதரு - சொற்பனங்கொடுக்கின்ற, கனவுபோல் - சொற்பனத்தைப்போல, காண்பரிய மனம் - பார்ப்பதற் (குருவ) மில்லாத மனது, காட்சிப்பொருளையெல்லாம் - (இல்லாத) திரியஸ்ய வஸ்துக்களனைத்தையும், காட்டாநிற்கும் - காட்டும், பூண்பதிலாமனம் - (ஒன்றிலுந்) தரியாத மனமானது, சலனசத்தியால் - சஞ்சலசத்தியினால், பொலியும் - ப்ரகாசிக்கும், அசையும் - சஞ்சலிக்கும், தியங்கும் - கலங்கும், போகும் - செல்லும், மீளும் - திரும்பும், வீண்பயிலுஞ்செருக்குமிகும் - வீணைகப்பொருந்தியகளிப்பின்மிகும், அகங்கரிக்கும் - அகங்காரத்தையடையும், வேற்றுருவாம் - வேறுவடிமாகிய, பெருங்கற்பம் - மகாப்ரளயம், மேவும்போதில் - பொருந்துங்காலத்தில், சேண்படவெல்லாப்பொருளும்-ஆகாயமுதலிய சகலவஸ்துக்களும், தீரமாய்ந்து - ஒருங்கேயழிந்து, செறியுமுபசாந்தமே - பூரணமானசாந்தமே, சேடமாகும் - மிச்சமாம்—எ-று.

(இ-ரை.) சொற்பனங் கொடுக்கின்ற சொற்பனத்தைப்போல பார்ப்பதற்குருவமில்லாதமனது இல்லாத திரிஸ்பவஸ்துக்களனைத்தையும் காட்டும். ஒன்றிலுந் தரியாத மனமானது சஞ்சலசத்தியினால் ப்ரகாசிக்கும், சஞ்சலிக்கும், கலங்கும், செல்லும், திரும்பும், வீணைகப்பொருந்திய களிப்பின் மிகும், அகங்காரத்தையடையும், வேறு வடிவமாகிய மகா ப்ரளயம்பொருந்துங் காலத்தில் ஆகாயமுதலிய சகல வஸ்துக்களும் ஒருங்கேயழிந்து பூரணமான சாந்தமே மிச்சமாம்—என்பதாம்.

(இ-ஃ.) மித்தையானமனது மித்தையான சகத்தைக் காட்டிக்கொண்டிருந்து அத்தியந்த ப்ரளயத்தி னசிக்குமென்பதாம். (உக)

## ஆத்மஸ்வரூப விலக்கணம் யாதெனின்.

வேறு.

அத்தமி யாதசோதி யருக்கனு யளவிலாதாய்
மெத்திய பிணியிலாதாய் மேவரும் பிறப்பிலாதா
யெத்தலங் களினுமென்று மியாவுமா யாவுஞ்செய்து
முத்தியு மாகியோங்கு முதற்பரம் பொருளொன்றுண்டு.

(இ-ள்.) அத்தமியாத - அத்தமானமாகாத, சோதி - (சுயஞ்) சோதியென்னும், அருக்கனுய் - சூரியனும், அளவிலாதாய்-எல்லையற்றதாயும், மெத்திய பிணியிலாதாய் - அற்பதுன்பமு மில்லாததாயும், மேவரும் - பொருந்துதற்கரிய, பிறப்பிலாதாய் - உற்பத்தி யில்லாததாயும், எத்தலங்களினும் - எவ்விடங்களினும், என்றும் - எக்காலத்திலும், யாவுமாய் - சகலமுமாய், யாவுஞ்செய்தும் - சகலத்தையுமுண்டாக்கியும், முத்தியுமாகி- சகலமும் விடுபட்டதாயும், ஓங்கும் - வியாபித்திருக்கின்ற, முதல்-முதன்மையான, பரம்பொரு ளொன்றுண்டு-பிரமஸ்வரூபமானதொன்றுள்ளது.

(இ-ளை.) அத்தமானமாகாத சுயஞ்சோதியென்னும் சூரியனுயும், எல்லையற்றதாயும், அற்பதுன்பமில்லாததாயும், பொருந்துதற்கரிய உற்பத்தியில்லாததாயும், எவ்விடங்களினும் எக்காலத்திலும், சகலமுமாய் சகலத்தையுமுண்டாக்கியும், சகலமும் விடுபட்டதாயும், வியாபித்திருக்கின்ற முதன்மையான பிரமஸ்வரூபமானதொன்றுள்ளது—என்பதாம்.

(இ-ர்.) உதயாத்தமனமின்றி சுயமாய் ப்ரகாசிக்கின்ற பிரமம் சர்வ வியாபகமான சத்தாமாத்திரமாயிருக்குமென்பதாம். (௫0)

## ஆத்மவிலாசம் யாதெனின்.

வேறு.

பகர்வரிதாய் முத்தராற் பயில்வதாகிப்
பரமுதலாம் புதிதான பலபேர்பெற்று
மிகவுணர்சாங் கியர்புருட னென்றுஞ்சுத்த
வேதாந்தம் விளங்கினோர் பிரமமென்றுந்
துகளறுவிஞ் ஞானிகள்விஞ் ஞானமென்றுஞ்
சூனியர்சூ னியமென்றுஞ் சொல்லப்பட்டுந்
திகழிரவி தேசுக்குந் தேசாய்நின்று
தேசளித்துத் திகழ்வித்துத் திகழாநிறகும்.

(இ-ள்.) பகர்வரிதாய் - வசனாதீதமாயும், முத்தராற் பயில்வதாகி - சத்துக்களால் வசனிப்பதாயும், பரமுதலாம்-பிரமமுதலிய, புதிதான-கற்

பிதமாகிய, பலபேர்பெற்று - பலநாமங்க (ளிடப்) பெற்று, மிகவுணர்சாங்கியர் - மிகவுமறிவுள்ளசாங்கியர்கள், புருடனென்றும் - ஆத்மாவென்றும், சுத்தவேதாந்தம் - பரிசுத்தவேதாந்த (ஞானம்), விளங்கினோர் - விளங்கினவர்கள், பிரமமென்றும்-பிரமஸ்வரூபமென்றும், துகளறுவிஞ்ஞானிகள் -குற்றமற்றவிஞ்ஞானிகள், விஞ்ஞானமென்றும்-விஞ்ஞானஸ்வரூபமென்றும், சூனியர் - சூனிய (வாதி)கள், சூனியமென்றும் - சூனியஸ்வரூபமென்றும், சொல்லப்பட்டும் - உரைக்கப்படுவது (மன்றி), திகழ் - விளங்காநின்ற, இரவிதேசுக்கும் - சூரியப்ரகாசத்துக்கும், தேசாய்நின்று - ப்ரகாசமாயிருந்து, தேசளித்து - (யாவற்றிற்கும்) ப்ரகாசத்தைக்கொடுத்து, திகழ்வித்து - ப்ரகாசிப்பித்து, திகழாநிற்கும் - (யாதொருவஸ்துவானதுதானும்) ப்ரகாசரூபமாய் விளங்கும்—எ-று.

(இ-ள.) வசனாதீதமாயும், சத்துக்களால் வசனிப்பதாயும், பிரமமுதலிய கற்பிதமாகிய பலநாமங்களிடப்பெற்று மிகவு மறிவுள்ள சாங்கியர்கள் ஆத்மாவென்றும், பரிசுத்த வேதாந்தஞானம் விளங்கினவர்கள் பிரமஸ்வரூபமென்றும், குற்றமற்ற விஞ்ஞானிகள் விஞ்ஞான ஸ்வரூபமென்றும், சூனியவாதிகள் சூனியஸ்வரூபமென்றும் உரைக்கப்படுவது மன்றி விளங்காநின்றசூரிய ப்ரகாசத்துக்கும் ப்ரகாசமாயிருந்து, யாவற்றிற்கும் ப்ரகாசத்தைக்கொடுத்து ப்ரகாசிப்பித்து, யாதொருவஸ்துவானது தானும் ப்ரகாசரூபமாய் விளங்கும்—என்பதாம்.

(இ-பி.) அகோசரமான பிரமம்அவரவர் நிச்சயித்தபடி விளங்குவதன்றியும் யாவையும் ப்ரகாசிக்கின்ற ஸ்வயம்ப்ரகாசமாய் விளங்குமென்பதாம் சூனியவாதியும் விஞ்ஞானவாதியும் பவுத்தமதபேதமெனக்கொள்க. (ருக)

## ஆத்மவிவகாரம் யாதெனின்.

உரைபகர்வோ னுசாவிடுவோன் கேட்போன் காண்போ
னுணர்பவன்சிந் திப்பவனு யுலகின்மெய்யிற்
றிரமுறமே வியுமேவாப் பொருளினின்றுந்
தினகரன்றே செனச்சிற்றின் றிகழ்ச்சியுண்டாம்
விரைமனம்வேர் கரணமல ரண்டங்காயாய்
விண்ணெழுமா யைக்கொடியை விதிர்க்குங்காற்றும்
புரைசெயுடற் செப்பனைத்துண் டணியாய்நிற்கும்
புணர்புரியட் டகவுடலைப் போய்மீள்விக்கும்.

(இ-ள்.) உரைபகர்வோன் - வசனிப்பவனும், உசாவிடுவோன்-ஆராய்பவனும், கேட்போன் - கேட்பவனும், காண்போன் - பார்ப்பவனு

யும், உண்பவன் - புசிப்பவனும், சிந்திப்பவனாய்-நினைப்பவனும், உலகில் - சகத்தில், மெய்யில்-தேகத்தில், திறமுறமேவியும் - திடமாகப்பொருந்தியும், மேவா - பொருந்தாததாயுமிருக்கின்ற, பொருளினின்றும் - வஸ்துவினின்றும், தினகரன்றேசென - சூரியப்ரகாசத்தைப்போல, சிற்றின் றிகழ்ச்சி யுண்டாம் - ஞானப்ரகாசமுண்டாகும், விண் - (அவ்) வாகாயத்தினின்றும், விரைமனம்வேர் - வாசனைபொருந்தியமனதே வேராகவும், கரணமலர் - இந்திரியங்களேபுட்பங்களாகவும், அண்டங்காயாய் - அண்டங்களே காயாகவும், எழும் - உதயமாகும், மாயைக்கொடியை - மாயையென்னும் வல்லியை, விதிர்க்குங்காற்றும் - அசைக்கும் நிலமாயும், புரைசெய் - குற்றஞ்செய்யாநின்ற, உடற்செப்பனைத்துள்-சரீரசம்புடங்களுக்குள், மணியாய் நிற்கும் - இரத்தினமாயு மிருக்கும், புணர்புரியட்டகவுடலை - பொருந்தாநின்ற புரியட்டகசரீரத்தை, போய்மீள்விக்கும்-(சித்தானது) போக்குவரவைச்செய்விக்கும்—எ-று.

(இ-ரை.) வசனிப்பவனும், ஆராய்பவனும், கேட்பவனும், பார்ப்பவனும், புசிப்பவனும், நினைப்பவனும். சகத்தில் தேகத்தில் திடமாகப்பொருந்தியும் பொருந்தாததாயுமிருக்கின்ற வஸ்துவினின்றும் சூரியப்ரகாசத்தைப்போல ஞானப்ரகாசமுண்டாகும். அவ்வாகாயத்தினின்றும்வாசனைபொருந்தியமனதேவேராகவும், இந்திரியங்களே புட்பங்களாகவும், அண்டங்களே காயாகவும் உதயமாகும் மாயையென்னும் வல்லியை அசைக்கும் நிலமாயும் குற்றஞ்செய்யாநின்ற சரீரசம்புடங்களுக்குள் இரத்தினமாயுயிருக்கும். பொருந்தாநின்ற புரியட்டக சரீரத்தை சித்தானது போக்குவரவைச் செய்விக்கும்—என்பதாம்.

(இ-ம்.) யாவுமாய் விளங்குகின்ற பிரமந்தனது சிற்சத்தியி லுண்டானமாயை முதலிய வனைத்தையு மாட்டிவிக்கு மென்பதாம். (௩௨)

## ஆத்மசுபாவம் யாதெனின்.

சுத்தவறி வாதலா லாகாய பாவனையாற் சூழ்விண்ணாகு
மத்திறனேயெப்பொருளும் பாவித்தபோதுள்ள ததுவாமந்தச்
சித்திடையே மூவுலகுந் திடர்கான லெனத் தோன்றிச்சிதையும்பல்கா
லித்தனையுஞ் செய்யவுந்தா னித்தனையுஞ் செய்யாம லிருக்குமன்றே.

(இ-ள்.) சுத்த வறிவாதலால் - பரிசுத்தஞானமாதலால், ஆகாயபாவனையால் - (அது) வியோமசிந்தனையால், சூழ்விண்ணாகும்-நிறைந்தவாகாயமாம், அத்திறனே-அப்பிரகாரமே, எப்பொருளும் - எவ்வஸ்துவையும், பாவித்தபோது - பாவனைசெய்தபோது, அது - அவ்வஸ்துக்களே, உள்ள

தாம் - உளதாயிருக்கும், அந்தச்சித்திடையே - அந்தஞானத்தில், மூவுலகும் - திரிபுவனமும், திடர்கானலென - கானற்சலம்போல, பல்கால் - எப்போதும், தோன்றி - உண்டாகி, சிதையும் - கெடும், இத்தனையும்-இவ்வளவையும், செய்யவும் - செய்தும், தானித்தனையுஞ்செய்யாமல் - தானிவ்வளவையுஞ் செய்யாமல், இருக்கும் - (இருந்தபடி) யிருக்கும்—எ-று.

(இ-ரை.) பரிசுத்தஞானமாதலால், அதுவியோமசிந்தனையால் நிறைந்த வாகாயமாம். அப்பிரகாரமே எவ்வஸ்துவையும் பாவனை செய்தபோது அவ்வஸ்துக்களே உளதாயிருக்கும். அந்த ஞானத்தில் திரிபுவனமும் கானற்சலம்போல எப்போதும் உண்டாகி கெடும். இவ்வளவையும் செய்தும் தானிவ்வளவையுஞ் செய்யாமல் இருந்தபடியிருக்கும்—என்பதாம.

(இ-ம்.) சித்தானது பாவித்தமயமாய் விளங்குவதன்றியுஞ் சிருஷ்டியாதிகளைச்செய்துஞ் செய்யவில்லை யென்பதாம். (ருரு)

## ஆத்மதரிசனத்தில் யாதடங்குமெனின்.

நிருவிகற்ப வான்மாவிற் சகத்தோற்ற மொடுக்கமிவைநேராயில்லை
மருவிகற்ப பேதமுறுப்பராபரமா மப்பொருளை வயங்கக்கண்டாற்
பெருமனக்கட் டறுமையம றுங்கரும மறுமென்றான் பெரியோன்வள்ள
லொருகடுகிற் பொன்மேரு புகிலன்றோ பிரமாண்டமொடுங்குமென்றான்

(இ-ள்.) நிருவிகற்பம் - நிருவிகற்பமான, ஆன்மாவில் - ஆத்மஸ்வரூபத்தில், சகத்தோற்றமொடுக்கம் - உலகத்திநுற்பத்திலயமான, இவை - இவைகள், நேராயில்லை - நேரே (யுண்டாக)வில்லை, மருவிகற்பபேதமுறு - மருவுகின்ற விகற்பபேதம்பொருந்தாத, பராபரமாம்-பராபரமாகிய, அப்பொருளை - அவ்வஸ்துவை, வயங்கக்கண்டால் - ப்ரகாசிக்கத்தரிசித்தால், பெருமனக்கட்டறும் - பெரியமனோபந்தமறும், ஐயமறும் - சந்தேகங்கெடும், கருமமறும் - (சகல) கருமங்களுங்கெடும், பெரியோன் - மகாமுனி, என்றான் - இப்படியென்றுசொன்னார், வள்ளல் - இராமரானவர், ஒருகடுகில் - ஓர்கடுகுக்குள்ளே, பொன்மேரு - மகாமேருவானது, புகிலன்றோ - நுழைந்தாலல்லவோ, பிரமாண்டம் - பிரமாண்டமானது, ஒடுங்குமென்றான் - (அணுவுக்கணுவான பிரமத்தி) லடங்குமென்றார்—எ-று.

(இ-ரை.) நிருவிகற்பமான ஆத்மஸ்வரூபத்தில் உலகத்திநுற்பத்திலயமான இவைகள் நேரேயுண்டாகவில்லை, மருவுகின்ற விகற்பபேதம் பொருந்தாத பராபரமாகிய அவ்வஸ்துவை ப்ரகாசிக்கத்தரிசித்தால் பெரிய மனோபந்தமறும். சந்தேகங்கெடும். சகல

கருமங்களுங்கெடும். மகாமுனி இப்படியென்று சொன்னார். இராமரானவர் ஓர்கடுகுக்குள்ளே மகாமேருவானது நுழைந்தாலல்லவோ பிரமாண்டமானது அணுவுக்கணுவான பிரமத்தி லடங்குமென்றார்—என்பதாம்.

(இ-ம்.) பிரமதரிசனத்திற்சங்கற்பமுதலியவண்டங்களடங்குமென்பதாம்.

அத்சூட்சுமமான பிரமத்திற் சகத்தெப்படி யடங்குமெனின்.

அருந்தவன்சொல்லுவானூலானல்லோராற்றிங்களாலன்றிநாளாற்
றெரிந்துவிடும்பன்னூலின் சித்தாந்த மிதுவிதனைச்சிந்தைசெய்யிற்
புரிந்தபுவியார்நிற்கப் போயொளிக்கு நிட்டையுடன்போதஞானம்
விரிந்துணர்வோர்க்குயர்சீவன்முத்திபெறலாமிதுவேவிதேகமுத்தி

(இ-ள்.) அருந்தவன்-அரியதவத்தையுடைய வசிட்டர், சொல்வான்-சொல்லுவார், நூலால்-(ஆத்மஞான) சாஸ்திரங்களினாலும், நல்லோரால்-சாதுக்கள் (சங்கத்தினாலும்) திங்களாலன்றி - மாதத்தினாலல்லாமல், நாளால் - தினங்களினால், தெரிந்துவிடும் - (இச்சங்கைக்குத்தரந்) தெரியும், பன்னூலின் - பலசாஸ்திரங்களினது, சித்தாந்தம - நிச்சயமும், இது-இதுவேயாம், இதனை - (இவ்வருத்தமுள்ள) விக்கதையை, சிந்தைசெய்யில் - விசாரிக்கில், நிட்டையுடன் - நிட்டையோடும், போதஞானம் - பூரணஞானத்தை, விரிந்துணர்வோர்க்கு - வியாபகமாயறிபவர்களுக்கு, புரிந்தபுவி-கற்பித்தசகமானது, ஆர்நிற்க - இருக்க, போயொளிக்கும்-ஒடுங்கும், உயர்-மேலான, சீவன்முத்திபெறலாம்-சீவன்முத்திபதத்தையடையலாம், இதுவே - இச்சீவன்முத்தியே, விதேகமுத்தி - விதேகமுத்தியாம்—எ-று.

(இ-ரை.) அரியதவத்தையுடைய வசிட்டர்சொல்லுவார் ஆத்மஞானசாஸ்திரங்களினாலும் சாதுக்கள் சங்கத்தினாலும், மாதத்தினாலல்லாமல் தினங்களினால் இச்சங்கைக் குத்தரந்தெரியும் பலசாஸ்திரங்களினது நிச்சயமும் இதுவேயாம். இவ்வருத்தமுள்ள விக்கதையை விசாரிக்கில் நிட்டையோடும் பூரணஞானத்தை வியாபகமா யறிபவர்களுக்கு கற்பித்த சகமானது இருக்க ஒடுங்கும். மேலான சீவன்முத்திபதத்தை யடையலாம். இச்சீவன்முத்தியே விதேகமுத்தியாம்—என்பதாம்.

(இ-ம்.) அணுவுக்கணுவான பிரமமகத்துக்குமகத்தென்கின்ற சுருதியுத்தி யனுபவத்தாற் பரோக்ஷஞான முண்டாயதனுற் சமாதியைக்கொண்ட பரோக்ஷஞான முதிக்கிற் சகமிருந்து மில்லாமற் சீவன்முத்தியுண்டாமென்பதாம். (௩௫)

## சீவன்முத்த ரிலக்கணம் யாதெனின்.

என்பதுசொல் லியமுனியை யுடலிறந்த வீடுமுடலிருந்தவீடு
நன்பழநூல்வழியியற்றநவில்கென்றவிராமனுக்குநல்லோன்சொல்வான்,வ
ன்பலசெய்கையிற்பயின்றுமுன்றோன்றும்விண்டோன்றுவகைமையுற்றோ
ரின்பமுறவருஞ்சீவன்முத்திபதம்பெற்றுயர்ந்தவியல்பினோரே.

(இ-ள்.) என்பது சொல்லிய முனியை - (சீவன்முத்தி) யென்பதை ப்போதித்த வசிட்டமுனியை, உடலிறந்த வீடும் - விதேக முத்தியையும், உடலிருந்த வீடும் - சீவன்முத்தியையும், நன்பழநூல்வழி - நல்ல பழமை யான சாஸ்திரமார்க்கத்தில், இயற்ற - (யான்) முயற்சிக்க, நவில்கென்ற - சொல்லுமென்றுகேட்ட, இராமனுக்கு - இராகவருக்கு, நல்லோன்சொல் வான் - நன்மையுள்ள வசிட்டர் சொல்லுவார், வன்பலசெய்கையில் - வலி மையான பலவிபகாரங்களில், பயின்றும் - கூடியும், விண் - (சிதா) காய மானது, முன்றோன்றும் - ப்ரத்யக்ஷமாய், தோன்று - (திரிஸ்யந்) தோற் றுததான, வகைமையுற்றோர் - வகையை யுடையவர்கள், இன்பமுறவரும் - சதாநந்தம்பொருந்தவருகின்ற, சீவன்முத்திபதம்-சீவன்முத்திபதத்தை, பெற்றுயர்ந்த-அடைந்துயர்ந்த, இயல்பினோர்-சுபாவமுடையவர்கள்-எ-று.

(இ-ா.) சீவன்முத்தியென்பதைப் போதித்த வசிட்டமுனியை விதேகமுத்தியையும் சீவன்முத்தியையும் நல்லபழமையான சாஸ்திரமார்க்கத்தில் யான் முயற்சிக்க சொல்லுமென்றுகேட்ட இராகவருக்கு நன்மையுள்ள வசிட்டர்சொல்லுவார். வலிமையானபலவிவகாரங்களில் கூடியும் சிதாகாயமானது ப்ரத்யக்ஷமாய் திரிஸ்யந்தோற்றுததான வகையையுடைவர்கள் சதாநந்தம் பொருந்த வருகின்ற சீவன் முத்திபதத்தை அடைந்துயர்ந்த சுபாவமுடையவர்கள்—என்பதாம்.

(ப-ம்.) காட்சியான சகமானது ஞானகாரமாய்த் தோற்றுகின்றதென்பார். முன்றோன்றும் விண்ணென்றார்.

(இ-ம்.) அபரோக்ஷானுபவமுள்ளதே சீவமுத்தித்தன்மை யென்பதாம்.()

இதுவுமது.

மிகவருகா மாதிகளாம் விகாரமடைந் தும்விண்போன்
மிகநொய்தானே
ரகமெனலின் றிச்செயல்கள் செய்தாலுந் தவிர்ந்தாலு
மழுத்தமற்றோர்
சகநெறிகள் செய்திடினு மன்னியர்போற் கண்டுகுளிர்
தன்மைசான்றோர்
திகழ்மனமு நினைவுமிருந் துஞ்சிறிது மில்லாதோர்
சீவன்முத்தர்.

(இ-ள்.) மிகவரும் - மிகவும் வாராநின்ற, காமாதிகள் - ராகத்துவே ஷாதிகளினால், ஆம் - உண்டாகின்ற, விகாரமடைந்தும் - விகாரஞ்சேர்ந்தும், விணபோல் - ஆகாயத்தைப்போல, மிகநொய்தானோர் - மிகவுஞ் சொச்சமானவர்கள், அகமெனலின்றி - அகம்பாவமென்ப தில்லாமல், செயல்கள்செய்தாலும் - தொழில்களைச்செய்தாலும், தவிர்ந்தாலும் - விட்டாலும், அழுத்த மற்றோர் - (அதி) லழுந்தாதவர்கள், சகநெறிகள் - உலகாசாரங்களை, செய்திடினும்-செய்தாலும், அன்னியர்போல் - பிறரைப்போல, கண்டு - (அதை) ப்பார்த்து, குளிர்தன்மைசான்றோர் - குளிர்ந்த தன்மையைச்சார்ந்தவர்கள், திகழ்மனமும் - ப்ரகாசிக்கின்ற மனமும், நினைவுமிருந்தும் - கருத்து மிருந்தும, சிறிதுமில்லாததோர்-அற்பமும் (பற்)றில்லாதவர்கள், சீவன்முத்தர் - சீவன்முத்தர்கள்—எ-று.

(இ-ரை.) மிகவும் வராநின்ற ராகத்துவேஷாதிகளினால்உண்டாகின்ற விகாரஞ்சேர்ந்தும் ஆகாயத்தைப்போல மிகவுஞ் சொச்சமானவர்கள், அகம்பாவமென்பதில்லாமல் தொழில்களைச் செய்தாலும், விட்டாலும், அதிலழுந்தாதவர்கள் உலகாசாரங்களைசெய்தாலும், பிறரைப்போல அதைப்பார்த்துகுளிர்ந்ததன்மையைச் சார்ந்தவர்கள் ப்ரகாசிக்கின்ற மனமும் கருத்துமிருந்தும் அற்பமும் பற்றில்லாதவர்கள் சீவன்முத்தர்கள்—என்பதாம்.

(ப-ரை.) விடயத்தில் விருப்பம் வந்தவிடத்தில் அதன்பிரியந்தன்பிரியமாகவும், வெறுப்பு வந்தவிடத்தில் தன்சுகத்தைவிட்டு நீங்காமலும்,சொச்சமாயிருப்பனென்பார். மிகவரு காமாதிகளால் விகாரமடைந்தும், விண்போன்மிக நொய்தானோ ரென்றும், இது நானென்னுஞ் சுட்டிறந்துயானே சகலமென்னு மனுபவத்தினால்விபகாரங்களைச்செய்துஞ், செய்யாமற்றனதுல்லாசமாய் விளங்குவனென்பார். அகமெனலின்றிச் செயல்கள் செய்தாலுந் தவிர்ந்தாலுமழுத்த மற்றோரென்றும், தனது சன்னிதிமாத்திரத்தி னடக்கின்ற செயல்களனைத்திற்குஞ் சாக்ஷியாய் ரமிப்பனென்பார். சகநெறிகள் செய்திடினு மந்நியர்போற்கண்டு குளிர்தன்மைசான்றோரென்றும் தனதுல்லாசமான சங்கற்பமுண்டாயடங்கியவிடத்திற்றனாய் விளங்கும் ப்ரஞ்ஞையாயிருப்பனென்பார், திகழ்மனமுநினைவுமிருந்துஞ்சிறிதுமில்லாதோர் சீவன்முத்தரென்றுங் கூறினர்.

(இ-ம்.) யாவுங்கூடியுங்கூடாமற் சித்தாயிருப்பவனேசீவன்முத்தனென்பதாம். (௫௫)

இதுவுமது.

துக்கசுகங் களிலமிழ்ந்தி மிதவாதபுந்திநிலை சுபாவமானோர்
புக்கசுழுத் தியினனவாய் நனவின்றி வாதனைதீர் போதமுற்றோர்
மிக்கசம மாயுகொல் வெருளாம லுலகினையும் வெருட்டாமேலோர்
சிக்கறநன் னினைவிருந்து நினைவிலா தவரவரே சீவன் முத்தர்.

(இ-ள்.) துக்கம் - துன்பங்களில், அமிழ்ந்தி - மூழ்கி, சுகங்களில் - இன்பங்களில், மிதவாத - மேற்கொள்ளாத, புந்திநிலை-அறிவினிச்சயமே, சுபாவமானோர் - இயல்பானவர்களும், புக்கசுழுத்தியில் - அடைந்த சுழுத்தியவத்தையில், நனவாய் - சாக்கிரமாகி, நனவு - சாக்கிரத்தில், இன்றி - அஃதில்லாதிருக்கின்ற, வாதனைதீர் - வாசனையிறந்த, போதம்-(சுழுத்தி) ஞானத்தை, உற்றோர் - பொருந்தினவர்களும், மிக்க சமமாய் - மேலான சமமாகி, உலகால் - சகத்தினல், வெருளாமல் - பயப்படாமல், உலகினையும் - சகத்தையும், வெருட்டா - பயமுறச்செய்யாத, மேலோர் - மகான்களும், சிக்கற - (சம்சார) பந்தமற, நன்னினைவிருந்தும் - நற்சிந்தனையிருந்தும், நினைவிலாதவர் - சிந்தனை யில்லாதவர்களுமாகிய, இவரே சீவன்முத்தா - இவர்களே சீவன்முத்தர்களாம்—எ-று.

(இ-ஸா.) துன்பங்களில்மூழ்கி இன்பங்களில் மேற்கொள்ளாத அறிவினிச்சயமே இயல்பானவர்களும், அடைந்த சுழுத்தியவத்தையில் சாக்கிரமாகி சாக்கிரதையில் அஃதில்லாதிருக்கின்ற வாசனையிறந்த சுழுத்திஞானத்தைபொருந்தினவர்களும், மேலான சமமாகிசகத்தினல் பயப்படாமல் சகத்தையும் பயமுறச்செய்யாத மகான்களும், சம்சாரபந்தமற நற்சிந்தனையிருந்தும் சிந்தனையில்லாதவர்களுமாகிய இவர்களே சீவன்முத்தர்களாம்—என்பதாம்.

(ப-ீ.) துன்பம் வரும்போது தனதாநந்தத்தி லழுந்துவாரென்பார் துக்கத்திலழுந்தவில்லையென்றும், சுகம் வரும்போது தனது சுகமாய் மேலிடுவாரென்பார், சுகத்தின் மிதக்கவில்லையென்றும், நனவிலனுபவமான சுபாவப்ரஞ்ஞைப்படியே சுழுத்தியிலிருக்கின்றாரென்பார், சுழுத்தினனவாயென்றும்,சுழுத்தியிற்சகலதொழிலும்விட்டுசுகபோதமாவிருப்பதுபோலச் சாக்கிரத்திலிருப்பனென்பார், நனவின்றி வாதனைதீர் போதமுற்றோரென்றும் விடயம்வரும்போது அது தன்னைக்கெடுக்குமென் றஞ்சாமல் அதனை வியாபிப்பனென்பார், உலகால் வெருளாமலென்றும், பிரமதேசசாய் ப்ரகாசிக்கின்ற மகிழ்ச்சியுள்ள முகத்தை யாவரும் விரும்பப்படுவரென்பார், உலகினையும் வெருட்டாரென்றும், சைதன்னியஸ்புரணத்தானவநவமாய் விளங்குவனென்பார், நினைவிருந்துநினைவிலாரென்றுங்கூறினர்.

(இ-ம்.) சீவன்முத்தர் சகசானுபவமாய் விபகரித்ததாம். (ரு அ)

## விதேகமுத்தியிலக்கணம் யாதெனின்.

நிலையான விச்சீவன் முத்தியைவிட் டுடலிறந்தா னிரைந்தவாயு
வலையாம னிற்பதுபோ லுடலில்லா முத்திபெறு மதனின்றன்மை
தொலையாது மறையாது தோன்றாது நணித்தல்ல தூரத்தல்ல
வுலையாது முடியாது நானல்லப் பிறனல்ல வொன்றுமல்ல.

(இ-ள்.) நிலையான - நிச்சயமாகிய, இச்சீவன் முத்தியை-இந்தச்சீவன் முத்தி (பதத்தை), விட்டு - நீங்கி, உடலிறந்தால் - சரீரநசித்தால், நிறைந்தவாயு-பூரணமான காற்றானது, அலையாம நிற்பதுபோல்-அசைவற் றாகாயமா) யிருப்பதுபோல, உடலில்லாமுத்திபெறும்-விதேகமுத்தியை யடைவன், அதனின்றன்மை-அதனியல்பானது, தொலையாது-நசியாது, மறையாது - மறைவுபடாது, தோன்றாது - தோற்றாது, நணித்தல்ல - சமீபமன்று, தூரத்தல்ல - சேய்மையன்று, உலையாது - நடுங்காதது, முடியாது-முடிவில்லாதது, நானல்ல - யானன்று, பிறனல்ல - பிறனன்று, ஒன்றுமல்ல- ஒன்றுமன்று—எ-று.

(இ-ரை.) நிச்சயமாகிய இந்தச் சீவன் முத்திபதத்தைநீங்கி சரீரநசித்தால் பூரணமான காற்றானது அசைவற் றாகாயமாயிருப்பதுபோல விதேகமுத்தியையடைவன். அதனியல்பானது நசியாது, மறைவுபடாது, தோற்றாது, சமீபமன்று, சேய்மையன்று, நடுங்காதது, முடிவில்லாதது, யானன்று, பிறனன்று, ஒன்றுமன்று—என்பதாம்.

அன்றென்று மொருமை அல்லவெனப்பன்மையாயிற்று.

(ப-ீ.) சகலத்திலும்வியாபகமாய்நிறைந்திருக்கின்றதென்பார்,தொலையாதென்றும் சர்வமுமாய் ப்ரகாசிக்கின்றதென்பார், மறையாதென்றும் பார்ப்பவனிற் பார்வையாயிருக்கின்றதென்பார், தோன்றாதென்றும் அறிதற்கெட்டாததென்பார், அணித்தல்லவென்றும் அறிவிலறிவாய் நிறைந்திருக்கின்றதென்பார், தூரத்தல்லவென்றும் நிச்சலமாயிருக்கின்றதென்பார், உலையாததென்றும்சதோதயமாய் விளங்குகின்றதென்பார். முடியாததென்றும் நானென்பதிற்றானாய்விளங்குகின்றதென்பார், நானல்லவென்றும் தானென்பதற்குநான்வேறல்லாததென்பார், பிறனல்லவென்றும் அதுவதுவாய் விளங்குகின்றதென்பார், ஒன்றுமல்லவென்றுங்கூறினார்.

### இதுவுமது.

இருளன்றியொளியன்றியளவன்றியலைவன்றியியல்பொன்றின்றிப்
பொருகின்ற பூதங்கள் பலபொருள்க ளன்றிநிறை பூரணமாகி
யுருவன்றி யருவன்றி யுளதன்றி யுண்டில்லை யன்றியொன்றாய்
வருகின்ற திரிபுடியி னடுத்தோன்று மறவாத மதித்துக்கொள்வாய்

(இ-ள்.) இருளன்றி - இருளுமல்லாமல், ஒளியன்றி - ப்ரகாசமுமல்லாமல், அலைவன்றி - அலைவுமல்லாமல், அளவன்றி - பிரமாணமுமில்லாமல், இயல்பொன்றின்றி - ஒருகுணமுமில்லாமல், பொருகின்றபூதங்கள்-ஒன்றுக்கொன்று பொருந்துகின்றபஞ்சபூதங்களும், பலபொருள்கள் - நாநாவிதமானவஸ்துக்களும், அன்றி - அல்லாமல், நிறைபூரணமாகி - நிறைந்திருக்கின்ற பூரண ஸ்வரூபமாயும், உருவன்றி - உருவமுமில்லாமல், அருவன்றி - அருவமுமில்லாமல், உளதன்றி - சத்துமல்லாமல், உண்டிலையன்றி - சத்தசத்துமல்லாமல், ஒன்றாய் - ஏகமாயும், வருகின்ற - வரா

நின்ற, திரிபுடியின் - ஞாதுரு ஞானஞாயங்களின், நடுத்தோன்றும் - மத்தியிற்றோன்று (வதை), மறவாது - மறவாமல், மதித்துக்கொள்வாய் - வரையறுத்தறிவாய்—எ-று.

(இ-ள்.) இருளுமல்லாமல், ப்ரகாசமுமல்லாமல், அலேவுமல்லாமல், பிரமாணமுமில்லாமல், ஒருகுணமு மில்லாமல், ஒன்றுக்கொன்று பொருந்துகின்ற பஞ்சபூதங்களும் நாநாவிதமானவஸ்துக்களும் அல்லாமல், நிறைந்திருக்கின்றபூரணஸ்வரூபமாயும், உருவமுமில்லாமல், அருவமுமில்லாமல், சத்துமல்லாமல், சத்தசத்துமல்லாமல், ஏகமாயும், வராநின்றஞாதுரு ஞானஞாயங்களின் மத்தியிற்றோன்றுவதை மறவாமல் வரையறுத்தறிவாய்—என்பதாம்.

(பு-ம்.) ஸ்வயம்ப்ரகாசமென்பார், இருளன்றியென்றும் தன்னேயறிதற்குவேறறிவில்லேயென்பார், ஒளியன்றியென்றும் போதல் வருதலில்லாததென்பார், அலேவின்றியென்றும் வியாபகத்து மட்டில்லேயென்பார், அளவின்றியென்றும் நிர்குணரகிதமென்பார், இயல்பொன்றின்றியென்றும் சாக்ஷாத்காரமானதன்னிடத்தில் வேறுபொருளில்லேயென்பார், பூதங்கள் பலபொருள்களன்றென்றும் நிறைவென்பார், பூரணமென்றும் விடயிகரிக்காததென்பார், உருவன்றியென்றும் திரிஸ்யமல்லாத வாநந்த வடிவமென்பார், அருவன்றியென்றும்சித்தைத்தவிரச் சத்தியில்லேயென்பார், உளதன்றியென்றும் சத்தசத்தென்று நிருவகிக்கக்கூடாத வகோசரமென்பார், உண்டில்லேயன்றியென்றும் திரிபுடி மூன்றினுள்ளும் ஏகமாய்விளங்குகின்றதென்பார், ஒன்ருய்வருகின்ற திரிபுடியினடுத்தோன்றும்மன்றும் நினேப்புமறப்பின்றி சுயமாய் விளங்குகின்றதென்பார், மறவாது மதித்துக்கொள்வாயென்றுங்கூறினர்.

(இ-உ-சு-ம்.) சர்வமும் பிரமமயமான பவரோக்ஷ ஞானத்ம சாக்ஷாத்காரமாய் விளங்கு மனுபவமே விதேகமுத்தியென்பதாம். (சo)

## வஸ்துவி னிலக்கணம் யாதெனின்.

அவ்வகையாம் பரவடிவை யறிவுநிறை வுறவிரிவாயருள்வாயென்ற
செவ்வியவள் ளலுக்குமுனி செப்புவான் பெருங்கற்பஞ் சேர்ந்தபோதி
லெவ்வகைமூ லங்களுக்கு மூலமாம் பிரமமே யிலங்காநிற்கும்
வவ்வுமனத் தொழின்மாற்றி தனேமாய்த்தாற் பெயரிறந்த வஸ்துவாகும்.

(இ-ள்.) அவ்வகையாம் - அத்தன்மையாகிய, பரவடிவை - (சிதாநந்தமான) பிரமஸ்வரூபத்தை, அறிவுநிறைவுற - ஞானம்பூரணமாம் (பொருட்டு), விரிவாயருள்வாய் - விபரமா யனுக்கிரகஞ்செய்வாய், என்ற-என்றுகேட்ட, செவ்வியவள்ளலுக்கு - அழகுள்ள விராமருக்கு, முனிசெப்பு

வான் - வசிட்டமுனிசொல்லுவார், பெருங்கற்பஞ்சேர்ந்தபோதில் - மகாகற்பம் வந்தபோது, எவ்வகைமூலங்களுக்கும் - எவ்வகைப்பட்ட காரணங்களுக்கும், மூலமாம் - காரணமான, பிரமமே - பிரமஸ்வரூபமே, இலங்காநிற்கும்-ப்ரகாசிக்கும், வவ்வும் - (விடயங்களைக்) கிரிகிக்கின்ற, மனத்தொழின்மாற்றி - மனோவிருத்தியைநீக்கி, தனைமாய்த்தால் - அகங்காராத்மாவைக்கெடுத்தால், பெயரிறந்தவஸ்துவாகும்-நாமமற்ற பிரமவஸ்துவாகும்.

(இ-ஙா.) அத்தன்மைபாகிய சிதானந்தமான பிரமஸ்வரூபத்தை ஞானம் பூரணமாம்பொருட்டு விபரமா யனுக்கிரகஞ்செய்வாய் என்றுகேட்ட அழகுள்ள விராமருக்கு வசிட்டமுனிசொல்லுவார். மகாகற்பம்வந்தபோது எவ்வகைப்பட்ட காரணங்களுக்கும் காரணமான பிரமஸ்வரூபமே ப்ரகாசிக்கும். விடங்களைக்கிரிகிக்கின்ற மனோவிருத்தியைநீக்கி அகங்காராத்மாவைக் கெடுத்தால் நாமமற்ற பிரமவஸ்துவாகும்—என்பதாம்.

(இ-ு) அத்தியந்திக ப்ரளயத்திற் சத்தாமாத்திரமாய் ப்ரகாசிக்கின்ற பிரமம் அகம்பாவமற்ற விடத்தி லகோசரமாய் விளங்குமென்பதாம். ()

இதுவுமது.

தெரித்தறியும் பொருளுணர்க்காச் சீவவறி வதுவாகச் செப்பலாகும்
விரித்தபுல னனுபவித்து மனுபவியா மனமதுவாய் விளம்பலாகும்
புரித்தவுணர்வொளிநெஞ்சமுலகிவற்றின றிவதுவாய்ப்புகலலாகும்
பரித்ததொழிற் செய்யினுங்கற் போலிருக்கு நிலையதுவாய்ப் பகரலாகும்.

(இ-ள்.) தெரித்தறியும் - எதிரிட்டறிகின்ற, பொருளுணர்க்கா - சகத்தைப்பாராத, சீவவறிவு - சீவசைதன்னியத்தை, அதுவாகச்செப்பலாகும்-அப்பிரமமாகச்சொல்லாம், விரித்த - பரவிய, புலனனுபவித்தும் - விடயங்களையனுபவித்தும், அனுபவியாமனம் - அனுபவியாதமனதை, அதுவாய்விளம்பலாகும் - அப்பிரமமாகச்சொல்லலாம், புரித்தவுணர்-உண்டான விடயஞானமும், ஒளி-(சூரியாதி)ப்ரகாசமும், நெஞ்சம் - மனமும், உலகு-திரிஸ்யமுமாகிய, இவற்றின் - இவைகளின், அறிவு - (சர்வசாக்ஷியாகிய) வறிவை, அதுவாய்ப்புகலலாகும் - அப்பிரமமாகச்சொல்லலாம், பருத்த தொழிற்செய்யினும் - மிகுந்த கருமங்களைச்செய்தாலும், கற்போலிருக்கு நிலை - மலைபோலிருக்கின்ற நிச்சயத்தை, அதுவாய்ப்பகரலாகும் - அப்பிரமமாகச்சொல்லலாம்—எ-று.

(இ-ஙா.) எதிரிட்டறிகின்ற சகத்தைப்பாராத சீவசைதன்னியத்தை அப்பிரமமாகச் சொல்லலாம். பரவிப விடயங்களையனுபவித்தும், அனுபவியாத மனதை அப்பிரமமாகச் சொல்லாம். உண்டான விடயஞானமும் சூரியாதிப்ரகாசமும் மனமும் திரிஸ்யமுமாகிய இவைகளின் சர்வசாக்ஷிபாகிய வறிவை அப்பிரமமாகச்

சொல்லலாம். மிகுந்த கருமங்களைச்செய்தாலும் மலைபோலிருக்கின்ற நிச்சயத்தை அப்பிரமமாகச் சொல்லலாம்—என்பதாம்.

(இ-ம்.) திரிஸ்யதிருஷ்டியின்றித் திருக்குதிருஷ்டியிற் சீவிக்கின்ற சீவனும், விடயானுபவமின்றி யாத்மானுபவமா யனுபவிக்குமனமும், திரிபுடிக்குச்சாக்ஷியான வறிவும், ஸ்வானுபவத்தினுற் கன்மங்களைச் செய்துஞ் செய்யாமலிருக்கின்ற நிச்சயமும், பரமார்த்த ஸ்வரூபமேயென்பதாம். ()

இதுவுமது.

முடிவுகன வஞ்ஞான மில்லாநீடுயிலதுவா மும்மையாகி, யடர்தருஞா துருஞான ஞேயமெழுந் தொடுங்குமிட மதுவேயாகுந், திடவிசும்பன் றுயிருந்தும் விசும்பான நிலையதுவாஞ் சித்தம்புந்தி, படர்மனம்போய்த் தாவரம்போற் பெருமுளறி வொப்பாமப் பரமரூபம்.

(இ-ள்.) முடிவு - அந்தமும், கனவு-சொற்பனமும், அஞ்ஞானம்சடமும், இல்லா - இல்லாத, நீடுயில்-நீண்ட (யோக) நித்திரையானது, அதுவாம் - அவ்வஸ்துவாகும், மும்மையாகி - மூன்றுகி, அடர்தரும் - நெருங்கிய, ஞாதுரு - ஞாதாவும், ஞானம் - அறிவும், ஞேயம் - விடயமென்னும், மும்மையாகி - திரிபுடியானது, எழுந்தொடுங்கும் - உண்டாகியடங்கும், இடம் - ஸ்தானமானது, அதுவேயாகும்-அவ்வஸ்துவேயாம், திடவிசும்பு - பூதாகாயம், அன்றுயிருந்தும் - அல்லாததாயிருந்தும், விசும்பானநிலை - (ஞானு) காயமான நிலைமையானது, அதுவாம்-அவ்வஸ்துவாகும், சித்தம்-சித்தமும், புந்தி-புத்தியும், படர்மனம்-விரிந்தமனமு (மாகிய விவைகள்), போய் - நீங்கி, தாவரம்போல - மரங்களைப்போல, பெரும் - பெற்ற, உளறிவு-உள்ளுணர்வானது, அப்பரமரூபம் - அப்பிரமஸ்வரூபத்தை, ஒப்பாம் - ஒக்கும்—எ-று.

(இ-ரை.) அந்தமும், சொற்பனமும், சடமும், இல்லாத நீண்ட யோகநித்திரையானது அவ்வஸ்துவாகும். மூன்றுகிநெருங்கிய ஞாதாவும், அறிவும், விடயமென்னும் திரிபுடியானது உண்டாகியடங்கும் ஸ்தானமானது அவ்வஸ்துவேயாம். பூதாகாயம் அல்லாததாயிருந்தும் ஞானுகாயமான நிலைமையானது அவ்வஸ்துவாகும். சித்தமும், புத்தியும், விரிந்தமனமுமாகிய விவைகள் நீங்கி மரங்களைப்போல பெற்ற உள்ளுணர்வானது அப்பிரம ஸ்வரூபத்தை ஒக்கும்—என்பதாம்.

(இ-ம்.) அறிதுயிலும், திரிபுடியினுதாரமும், ஞானுகாசமும், அந்தகரண ஞானமின்றி சுழுத்தி ஞானமுள்ள தாவரவறிவும் பிரமஞானத்துக்குவமானமாகச் சொன்னதாம். (சரு)

இதுவுமது.

அயனொடுமால் சங்கரனுஞ் சதாசிவனு மிந்திரனு மருக்கன் ருனும் வியனிலுப சாந்தராம் வேலையினி லுபாதியெலாம் விட்டுநீங்கிப், பயனில்சக மென்கின்ற பற்றகன்று சின்மயமாம் பரமரூபம், முயர்விகற்ப மிலாவடிவா யெங்குநிறை சிவமாகி யொன்ருய்நிற்கும்.

(இ-ள்.) அயனொடும் - பிரமாவோடும், மால்-விஷ்ணுவும், சங்கரனும் -உருத்திரனும், சதாசிவனும்-சதாசிவனும், இந்திரனும்-தேவேந்திரனும், அருக்கன்ருனும் - சூரியனு மா (கியவிவர்கள்) , உபசாந்தராம் - உபசாந்தர்களாகின்ற, வேலையினில் - காலத்தில், வியனில் - மேன்மையில்லாத, உபாதியெலாம்-உபாதிகளியாவையும், வீட்டு நீங்கி - விடுபட்டு, பயனில்-ப்ரயோசனமில்லாத, சகமென்கின்ற - உலகமென்கின்ற, பற்றகன்று-இச்சைவிட்டு, சின்மயமாய் - ஞானமயமாகிய, பரமரூபம் - பிரமஸ்வரூபமானது, உயர் - மேலான, விகற்பமிலா வடிவாய் - நிர்விகற்பஸ்வரூபமாய், எங்குநிறை - எங்கும் (பரிபூரணமாய்) நிறைந் (திருக்கின்ற) , சிவமாகி - - சிவஸ்வரூபமாய், ஒன்ருய் நிற்கும் - அத்துவிதமாயிருக்கும்—எ-று.

(இ-ரை.) பிரமாவோடும், விஷ்ணுவும், உருத்திரனும், சதாசிவனும், தேவேந்திரனும், சூரியனுமாகிய விவர்கள் உபசாந்தர்களாகின்றகாலத்தில் மேன்மையில்லாத உபாதிகளியாவையும் விடுபட்டு ப்ரயோசனமில்லாத உலகமென்கின்ற இச்சைவிட்டு ஞானமயமாகிய பிரமஸ்வரூபமானது மேலான நிர்விகற்ப ஸ்வரூபமாய் எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கின்ற சிவஸ்வரூபமாய் அத்துவிதமாயிருக்கும்—என்பதாம்.

(இ-ந்.) சீவேஸ்வரசகமென்னும் வாசனுக்ஷயமே நிருவிகற்பஞானமான சிவஸ்வரூப மென்பதாம். (சுச)

ஞானவிண்மகன் கதை முற்றிற்று.

ஆக கதை சு-க்கு கவிதை உகரு.

# லீலைகதை.

(அவதாரிகை.)

முற்கதையிற் சுயஞ்சைதன்னியனான பரமாத்மாவே ஜீவேஸ்வர சகமாகத் தோற்றப்பட்டாலும் அவையப்பிரமத்துக்குப்பின்னப்படாமையைக் காட்டி யச்சைதன்னிய வுல்லாசமாயுண்டான மனோமாயையின் பலவானதுற்கடனா கடனாசாமர்த்தியங்களை ப்ரகாசமாயறிவித் தம்மாயையை நிவிர்த்திப்பிக்கும் பொருட்டு லீலைகதையைச் சொல்லுகின்றார்.

## லீலைபதுமன் குணநிருபணம்.

இந்தப் பொருளைய மறுத்திளைப் பாறுமாறோர்
முந்தக் கதைகேள் குணமுற்றிவி வேகமுற்றோன்
விந்தைப் புயத்தோன் பதுமப்பெயர் வேந்தன்மண்மேற்
சிந்தைக் கினிதாங் குணலீலையச் செம்மறேவி.

(இ-ள்.) இந்தப்பொருள் - இவ்வருத்தத்தில், ஐயமறுத்திளைப்பாறுமாறு - சந்தேகந்தீர்ந்து விஸ்ராந்தி யடையும்பொருட்டு, ஓர்முந்தக் கதைகேள்-ஒருபழமையான கதையை (யிராமாநீ) கேட்பாய், மண்மேல் - பூமியின்கண், குணமுற்றி - (சத்துவ) குணமுதிர்ந்து - விவேகமுற்றோன் - விவேகம்பெற்றவன், விந்தைப்புயத்தோன் - விசயலட்சுமி (வசிக்கின்ற) புயத்தையுடையவன், பதுமப்பெயர்வேந்தன் - பதுமநாமத்தையுடைய வோரரச (னுளன்), அச்செம்மறேவி - அவ்வரசன் மனைவியானவள், சிந்தைக்கினிதாம் - (அவர்) மனதுக்கினிமையான, குணம் - குணத்தையுடைய, லீலை - லீலாநாமத்தையுடையவளாம்—எ-று.

(இ-ா.) இவ்வருத்தத்தில்சந்தேகந்தீர்ந்து விஸ்ராந்தியடையும்பொருட்டு ஒரு பழமையான கதையை யிராமா நீ கேட்பாய். பூமியின்கண் சத்துவகுணமுதிர்ந்து விவேகம் பெற்றவன், விசயலட்சுமி வசிக்கின்ற புயத்தையுடையவன், பதுமநாமத்தையுடைய வோரரசனுளன். அவ்வரசன் மனைவியானவள் அவர்மனதுக்கினிமையான குணத்தையுடைய லீலாநாமத்தை யுடையவளாம்-எ.

(இ-ம்.) வெளிப்படை. (க)

## லீலைசுகிக்கு முபாயம் விசாரித்தல்.

அன்னு னிழல்போன் மனம்போலய லற்றவன்னு
ணன்னுயகன் மூப்பிறப்பின்றி நற்காளையாகி
யெந்நாளுமொத்தின் புறவென்கொ லுபாயமென்னத்
தொன்னுன்மறையோர்க் குரைத்தாளவர் சொல்லலுற்ருர்.

(இ-ள்.) அன்னுனிழல் - அவ்வரசனதுசாயைப் (போலவும்), மனம் போல்-மனதைப்போலவும், அயலற்றவன்னுள் - பிரிவற்றவந்தலீலையான வள், நன்னுயகன்-நல்லகணவன், மூப்பிறப்பின்றி - சராமரணமில்லாமல், நற்காளையாகி - நல்லயௌவனமுள்ளவராய், எந்நாளுமொத்தின்புற-எப் போதுங்கூடிச்சுகிக்க,என்கொலுபாயமென்ன-என்னவுபாயமென்று,தொ ன்னுன்மறையோர்க்கு-பழமையான சதுர்வேதப்பிராமணர்களுக்கு, உரை த்தாள் - சொன்னுள், அவர்சொல்லலுற்ருர் - அவர்கள்சொல்லத்தொட ங்கினுர்கள்—எ-று.

(இ-ை.) அவ்வரனது சாயைப்போலவும், மனதைப்போல வும், பிரிவற்ற வந்த லீலையானவள் நல்லகணவன் சராமரணமில் லாமல் நல்ல யௌவனமுள்ளவராய் எப்போதுங் கூடிச்சுகிக்க என்னவுபாயமென்று பழமையான சதுர்வேதப் பிராமணர்களுக் குச்சொன்னுள்; அவர்கள்சொல்லத்தொடங்கினுர்கள்-என்பதாம்.

(ப-ம்) எப்போதும் அழிவற்றவறிவோடும் பிரிவற்ற வாநந்தத்தை யனுபவிக்குமுத்தியை விசாரித்ததென்பார், மூப்பிறப்பின்றி நற்காளையா கி யெந்நாளுமொத் தின்புறவென்கொலுபாய மென்னவென்ருர்.

(இ-ி.) சத்தைவிட்டு நீங்காத சுகத்தைவிரும்பினதாம். (உ)

## லீலை சிந்தித்தல்.

செபமுந் தவமுமுத லியாவையுஞ் சித்திநல்கும்
புவனங்களிற் பொன்ற தல் போக்கரிதி யார்க்குமென்ன
விவள்சிந்தை செய்வா ளிறைவற்குமுன் யாமிறந்தாற்
கவலொன்றறத் தற்பதவாழ்வுகை கூடலாகும்.

(இ-ள்.) செபமுந்தவமும் - செபங்களுந்தபசுகளும், முதலியாவையும் - முதலியவனைத்தும், சித்திநல்கும்-சித்தியைக்கொடுக்கும், புவனங்களில்- உலகங்களில், பொன்றுதல்-மரித்தலை, இயார்க்கும் - இயாவருக்கும்,போக் கரிது - நீக்கக்கூடாது, என்ன - என் (றந்தணர்கள்) சொல்ல, இவள் சிந் தைசெய்வாள் - இந்தலீலை சிந்திப்பாள், இறைவற்குமுன் - (நமது) நாயக (னிறத்தற்கு) முன்பு, யாமிறந்தால்-நாமரித்தால், கவலொன்றற - (நமக்)

கோர்வருத்தமுமின்றி, தற்பதவாழ்வு - நிர்வாணசுகமானது, கைகூடலாகும் - கிடைக்கும்—எ-று.

(இ-ள.) செபங்களுந் தபசுகளும் முதலியவனைத்தும் சித்தியைக்கொடுக்கும் உலகங்களில் மரித்தலே இயாவருக்கும் நீக்கக்கூடாது என் றந்தணர்கள்சொல்ல, இந்தலீலை சிந்திப்பாள். நமது நாயக னிறத்தற்கு முன்பு நாமரித்தால் நமக்கோர் வருத்தமுமின்றி நிர்வாண சுகமானது கிடைக்கும்—என்பதாம்.

(ப-ரை.) மூவர் முதலிய சித்தர்களுமுடிவினசிப்பாரென்பார், பொன்றுதலபோக்கரிதியார்க்குமென்றும் சத்திநசிக்கிற்சத்தனுமென்பார், இறைவற்குமுன் யாமிறந்தாற் றற்பதவாழ்வு கைகூடலாகுமென்றுங்கூறினர்.

இதுவுமது.

இறைவன் முதற்சாகி லச்சீவனை யிந்தவீட்டி
லுறையும் படிசெய் ததுவென்னையு வந்துகாண்க
நிறையின்ப மெய்தியிருப் பேனிது நேருமாறு
மறைதந்த வாணிபத மேத்துவன் வாழ்த்தியன்றே.

(இ-ள்.) இறைவன்முதற்சாகில்-(எனது)நாயகன்முன்னேயிறந்தால், அச்சீவனை - அச்சீவாத்மாவை, இந்தவீட்டிலுறையும்படிசெய்து-இம்மனையில் வசிக்கும்படிசெய்து, அது-அச்சீவன், என்னையுவந்துகாண்க-என்னைச் சந்தோஷித்துப்பார்க்க, நிறையின்பம்-பூரணாநந்தத்தை, எய்தியிருப்பேன் - அடைந்திருப்பேன், இது நேருமாறு - இந்நிலை வரும்பொருட்டு, மறைதந்தவாணிபதம் - வேதார்த்தங்களைப் போதித்த சரஸ்வதியினது பாதங்களை, வாழ்த்தி - துதித்து, எத்துவன் - தோத்திரஞ்செய்வேன்—எ-று.

(இ-ள.) எனது நாயகன் முன்னே யிறந்தால் அச்சீவாத்மாவை இம்மனையில் வசிக்கும்படி செய்து அச்சீவன் என்னைச் சந்தோஷித்துப் பார்க்கப் பூரணாநந்தத்தை யடைந்திருப்பேன். இந்நிலை வரும்பொருட்டு வேதார்த்தங்களைப் போதித்த சரஸ்வதியினது பாதங்களைத் துதித்துத் தோத்திரஞ் செய்வேன்—எ-ம்.

(இ-உ-க-ங.) சத்தைவிட்டு நீங்காத சித்தேயாநந்தமாதலா லஃதைப் பிரிதற்றிருக்கும் யுத்தியைக்கருதினதாம். (ச)

சரஸ்வதியை மூர்த்தியாகக் கொண்டுபாசித்தல்.

மன்னற் குறையாது நன்மந்திரங் கற்பம்வல்லோர்
சொன்னத்தி னின்று சுரர்பூசுரர் பூசைபண்ணி

யன்னத்தை நாஞன்கி னுக்கோர்பக லற்பமாயுண்
டின்னிட்டை யாலேமதி பத்துநடந்த வெல்லே.

(இ-ள்.) மன்னற்குறையாது - தன்னரசனுக்குச் சொல்லாமல், நன் மந்திரம் - நல்ல மந்திரங்களிலும், கற்பம் - நல்ல சாஸ்திரங்களிலும், வல்லோர் - வல்லமை (யுடைய பெரி) யோர்கள், சொன்னத்தினின்று-அனுக்கிரகஞ்செய்த மார்க்கத்தினின்று, சுரர் - தேவரையும், பூசுரர்-பிராமணரையும், பூசைபண்ணி - ஆராதித்து, அன்னத்தை - அசனத்தை, நாஞன்கினுக்கு - (திரிராத்திரிநீங்கிய) நான்காந்தினத்தில், ஓர் பகல்-ஓர்போது, அற்பமாயுண்டு - கொஞ்சமாகப்புசித்து, இன்னிட்டையால் - இனிதான நிஷ்டையினுல், மதிபத்து நடந்த-பத்துமாதஞ்சென்ற, எல்லே-காலத்தில்.

(இ-ரை.) தன்னரசனுக்குச் சொல்லாமல் நல்ல மந்திரங்களிலும் நல்லசாஸ்திரங்களிலும் வல்லமையுடைய பெரியோர்கள் அனுக்கிரகஞ் செய்த மார்க்கத்தினின்று தேவரையும், பிராமணரையும் ஆராதித்து அசனத்தைத் திரிராத்திரி நீங்கிய நான்காந்தினத்தில் ஓர்போது கொஞ்சமாகப் புசித்து இனிதான நிஷ்டையினுல் பத்துமாதஞ் சென்றகாலத்தில்—என்பதாம்.

(இ-ஃ.) வெளிப்படை. (ரு)

ப்ரசன்னமான வுபாசனுமூர்த்தியைத் துதிசெய்தல்.

வானூர்மதி போனிறவாணி மகிழ்ந்துதோன்றி
நீநாடிய தென்னெனநீள்பவ மாநெருப்புக்
காஞவமுதக் கதிரேயகத் துன்பமென்னும்
பாநாளகற்றுங் கதிரேயெனப் பாதமேத்தி.

(இ-ள்.) வானூர் மதிபோல் - ஆகாயத்திற்றோன்றிய பூர்ணசந்திரனைப்போல, நிறவாணி - நிறத்தையுடைய சரஸ்வதியானவள், மகிழ்ந்துதோன்றி - சந்தோஷித்து ப்ரத்யக்ஷமாய், நீ நாடிய தென்னென - (லீலையே) நீ விரும்பியகாரியமென்னவென்று கேட்க, நீள்பவமாம் - நீண்ட சநநமாகிய, நெருப்புக்கு - அக்கினிக்கு, ஆஞ-நீங்காத, அமுதக்கதிரே - சந்திரக்கிரணமே, அகத்துன்பமென்னும் - மனோதுக்கமென்கின்ற, பாநாளகற்றும் - இருட்டை நீக்குகின்ற, கதிரேயென - சூரியப்ரகாசமே யென்று, பாதமேத்தி - பதத்தைத்துதித்து—எ-று.

(இ-ரை.) ஆகாயத்திற்றோன்றிய பூர்ணசந்திரனைப்போலநிறத்தையுடைய சரஸ்வதியானவள் சந்தோஷித்து ப்ரத்யக்ஷமாய் லீலையே! நீ விரும்பியகாரிய மென்ன வென்றுகேட்க, நீண்ட சநநமாகிய அக்கினிக்கு நீங்காத சந்திரக்கிரணமே மனோதுக்கமென்

சென்ற இருட்டைநீக்குகின்ற சூரியப்ரகாசமே யென்று பதத்தைத்துதித்து—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (சு)

## தேவியனுக்கிரகித்தல்.

என்னுயகன்றுஞ் சிலச்சீவனிவ் வில்லினிற்க
முன்னுகவுன்னை நினைபோதிலேன் முன்புதோன்ற
வன்னுயவரங்க ளிரண்டுமளித்தி யென்ன
நன்னுமகளன் பொடுநல்கி நயந்துபோனுள்.

(இ-ள்.) என்னுயகன்றுஞ்சில் - என்கணவ னிறக்கில், அச்சீவன்-அந்தச்சீவன், இவ்வில்லினிற்க - இவ்வீட்டிலிருக்கவும், முன்னுக - ப்ரத்யக்ஷமாகும்படி, உன்னைநினைபோதில் - உன்னைநினைக்குஞ்சமயத்தில், என்முன்புதோன்ற - என்முன்னே ப்ரத்யக்ஷமாகவும், அன்னுய - அப்படியான, வரங்களிரண்டும் - இரண்டு வரங்களையும், அளித்தியென்ன - அனுக்கிரகிக்கவேண்டுமென்று (லீலைகேட்க), நன்னுமகள் - நல்லசரஸ்வதியானவள், அன்பொடுநல்கி - கிருபையுடனனுக்கிரகித்து, நயந்துபோனுள் - சுகமாயெழுந்தருளினுள்—எ-று.

(இ-கா.) என்கணவனிறக்கில் அந்தச்சீவன் இவ்வீட்டிலிருக்கவும், ப்ரத்யக்ஷமாகும்படி உன்னை நினைக்குஞ் சமயத்தில் என்முன்னே ப்ரத்யக்ஷமாகவும், அப்படியான இரண்டுவரங்களையும் அனுக்கிரகிக்க வேண்டுமென்று லீலைகேட்க, நல்லசரஸ்வதியானவள் கிருபையுடனனுக்கிரகித்து சுகமாயெழுந்தருளினுள்—எ-ம்

(பு-ரை.) சத்தன் பேதபாவத்தைப் பிரியினும் அபேத பாவத்தைப்பிரியக்கூடாததென்பார், என்னுயகன் றுஞ்சி லச்சீவனிவ்வில்லி னிற்கவென்ருர்.

(இ-ம்.) விரும்பினவண்ணமடையும் வரத்தைப்பெற்றதாம். (எ)

## காலசக்கரத்தினுலாயுணீங்குதல்.

பக்கத்தொடு திங்களுறும் பருவங்க டேர்க்காற்
றொக்கிச்செறி நாளதிற் கூம்புதொடர்ந்த வாண்டு
புக்குற்றதேோ ரச்சிமைப் போததினு பியாதி
மிக்குத்திரி காலவன்றேர் விரைந்தோட லோடும்.

(இ-ள்.) பக்கத்தொடு - பக்ஷத்துடன், திங்கள் - மாதமும், உறும்பருவங்கள் - பொருந்தினவிருதுக்களு (மாகிய), தேர்க்கால் - வண்டிலகளும், தொக்கிச்செறி - கூடநெருங்கிய, நாளதிற்கூம்பு - தினங்களாகிய மேற்

பரப்புகளும், தொடர்ந்தவாண்டு - சேர்ந்தவருடமாகிய, புக்குற்றதோரச்சு - புகுந்தவொப்பற்றவச்சும், இமைப்போது-கனப்போதாகிய, அதனுபி - அதனடுவும், ஆதி - முதலான (விவைகளையுடைய), மிக்குத்திரி - மிகவுஞ் சுழலுகின்ற, காலவன்றேர் - காலசக்கரமானது, விரைந்தோடலோடும் - வேகமாகச் செல்லவும்—எ-று.

(இ-ள.) பக்ஷத்துடன் மாதமும் பொருந்தின விருதுக்களுமாகிய வண்டில்களும், கூடிநெருங்கிய தினங்களாகிய மேற்பரப்புகளும், சேர்ந்தவருடமாகிய புகுந்தவொப்பற்ற வச்சும், கணப்போதாகிய அதனடுவும் முதலான விவைகளையுடைய் மிகவுஞ் சுழலுகின்ற காலசக்கரமானது வேகமாகச் செல்லவும்—என்பதாம்.

(இ-ம்) வெளிப்படை. (அ)

## சத்தன்பிரிந்த விசனத்தைத் தேவிமாற்றுதல்.

இன்பங் கரைபற் றிடலீலை யிருந்தவெல்லை
யன்பன் சிலநாளி லிறந்தன னன்னமன்னு
டுன்பஞ் சுடும்வெம்மை பொறுதுயிர் துஞ்சுமுன்னே
முன்பின்றி விண்ணின்று சொன்மாதிவண் மோகமாற்றி

(இ-ள்.) இன்பம் - ஆனந்தமானது, கரையற்றிட - எல்லையறும்படி, லீலையிருந்தவெல்லை - லீலையானவளிருந்தகாலத்தில், அன்பன்-(தனது) நாயகன், சிலநாளில் - சிறிதுதினத்தில், இறந்தனன்-மரணமடைந்தான், அன்னமன்னுள்-ஒதிமத்துக்கொப்பான, (லீலையான) வள், துன்பஞ்சுடும் - சோ (காக்கினி) யெரிக்கின்ற, வெம்மைபொறுது - வெப்பம்பொறுக்கமாட்டாமல், உயிர்துஞ்சுமுன்னே - சீவன் பிரிவதற்குமுன்னமே, முன்பின்றி - ப்ரத்யக்ஷப்படாமல், விண்ணின்று - ஆகாயத்தினின்றுக்கொண்டு, சொன்மாது - சரஸ்வதியானவள், இவண்மோகமாற்றி - இந்தலீலையின் மோகத்தைக்கெடுத்து—எ-று.

(இ-ள.) ஆனந்தமானது எல்லையறும்படி லீலையானவளிருந்த காலத்தில், தனது நாயகன் சிறிது தினத்தில் மரணமடைந்தான். ஒதிமத்துக்கொப்பான லீலையானவள் சோகாக்கினி யெரிக்கின்ற வெப்பம்பொறுக்கமாட்டாமல் சீவன் பிரிவதற்குமுன்னமே ப்ரத்யக்ஷப்படாமல் ஆகாயத்தினின்றுக்கொண்டு சரஸ்வதியானவள் இந்தலீலையின்மோகத்தைக்கெடுத்து—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (க)

### சத்தன் பிரிந்தவிடத்தும் பிரியாதிருக்க முத்தியுரைத்தல்.

மாய்வுற்ற வேந்தை மலரான்மறைவித்து வைப்பா
யேய்வுற்ற பூவுலரும்மெய் யழியாது சீவன்
பாய்வுற் றகலாது பொன்மண்டபம் பற்றிநிற்குந்
தோய்வுற் றிவன்றோள் விரைவிற்றுயர் தீர்தியென்றாள்.

(இ-ள்.) மாய்வுற்றவேந்தை - மரணமடைந்தவரசனை, மலரால் - புட்பங்களினால், மறைவித்துவைப்பாய் - மூடிவைப்பாய், ஏய்வுற்ற - பொருந்திய, பூவுலரும்-புட்பங்கள் வாடும், மெய்யழியாது-சரீரங்கெடாது, சீவன் பாய்வுற்றகலாது - சீவனீங்காமல், பொன்மண்டபம் - சொன்னமயமான வந்தப்புரத்தை, பற்றிநிற்கும் - அடைந்திருக்கும், இவன்றோள் - இவ்வரசனதுபுயத்தை, தோய்வுற்று - பொருந்தி, விரைவில் - சீக்கிரத்தில், துயர்தீர்தியென்றாள் - துக்கந்தீரக்கடவாயென் (றருளிச் சரஸ்வதி மறைந்த) னள்—எ-று.

(இ-ை.) மரணமடைந்த வரசனை புட்பங்களினால் மூடிவைப்பாய், பொருந்திய புட்பங்கள் வாடும் சரீரங்கெடாது, சீவ நீங்காமல் சொன்னமயமான வந்தப்புரத்தை அடைந்திருக்கும், இவ்வரசனு புயத்தைப்பொருந்தி சீக்கிரத்தில் துக்கந்தீரக்கடவா யென்றருளிச் சரஸ்வதி மறைந்தனள்—என்பதாம்.

(ப-ம்.) விசேடஞானநீங்கினுஞ்சாமான்யஞானநீங்காதென்பார், சீவன்பாய்வுற்றகலாதென்றும் அவ்விசேடஞானத்தோடுங் கூடிய சத்தைவிரைவிற்கூடிச்சுகிப்பாயென்பார், தோய்வுற்றிவன்றோள் விரைவிற்றுயர்தீர்தி யென்றுங்கூறினர்.

(இ-ம்.) பிரிந்தவிடத்தும் பிரியாதிருக்கு நிலையைப்பெற்றதாம். (௧௦)

### விசேடத்தோடுஞ் சேர்ந்திருக்க விரும்புதல்.

வாடாவ சரீரிதன் சொற்படி மன்னைவைத்தா
ளோடாத வாவியுடை யாளுளத் துன்னவாணி
நீடாது வந்தாளென தன்பனை நீங்கிவாழ்தல்
கூடாதவன் சேர்வுழி கூட்டுதிவல்லை யென்றாள்.

(இ-ள்.) வாடா - கெடாத, அசரீரிதன்-அமூர்த்தமான சரஸ்வதியின், சொற்படி - வசனப்படிக்கு, மன்னைவைத்தாள்-அரசனைப் (பூவினான்மறைத்து) வைத்தாள், ஓடாத வாவியுடையாள் - பிரியாத வுயிரையுடையலீலையானவள், உளத்துன்ன - உள்ளத்தின்கட்சிந்திக்க, நீடாதுவந்தாள் - சீக்கிரத்தில் வந்தவளாகிய, வாணி - சரஸ்வதியை (நோக்கி), என தன்பனை - எனதுநாயகனை, நீங்கிவாழ்தல்கூடாது-பிரிந்துவாழ்வதுகூடாது, அவன்

சேர்வுழி - அவர்சேர்ந்தவிடத்தில், வல்லைக்கூட்டுதி - சீக்கிரத்திற்சேர்ப்பாய், என்றாள் - என்றுலீலைசொன்னாள்—எ-று.

(இ-ரை.) கெடாத அமூர்த்தமான சரஸ்வதியின் வசனப்படிக்கு அரசனைப் பூவினுன்மறைத்து வைத்தாள், பிரியாதவுயிரையுடைய லீலையானவள் உள்ளத்தின்கட்சிந்திக்க சீக்கிரத்தில் வந்தவளாகிய சரஸ்வதியைநோக்கி எனது நாயகனை பிரிந்துவாழ்வது கூடாது, அவர் சேர்ந்தவிடத்தில் சீக்கிரத்திற் சேர்ப்பாயென்று லீலைசொன்னாள்—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (கக)

## விதூரதனுடையத் தேவிமத்தியகத ஞானத்தை யுபதேசித்தல்

மனவான மும்வானமுமாசறு ஞானவானு
மெனவான மூன்றின் முதல்வான மிரண்டுமின்றி
கனஞான வானெய்துதல் கண்டதை விட்டுபோத
நனவா யயலொன்றை யுற்றானடு ஞானவானும்

(இ-ள்.) மனவானமும் - மனாகாயமும், வானமும்-பூதாகாயமும், மாசறுஞானவானும் - களங்கமற்ற ஞானாகாயமும், எனவானமூன்றில் - என்கின்றமூன்றாகாயத்தில், முதல்வானமிரண்டுமின்றி - முந்தின விரண்டாகாயமுமில்லாமலிருக்கின்ற, கனஞானவான்-மகத்தானசிதாகாயமானது, கண்டதை - காணப்பட்ட (வொரு) வஸ்துவில், எய்துதல்விட்டு - அடைதலைவிட்டு, போதநனவாய் - மிகவுந்தெளிவாக, அயலொன்றையுற்றால் - பக்கத்தி (லிருக்கின்ற) வொரு வஸ்துவை யடைந்தால், (அப்போது) நடுஞானவானும் - மத்தியகதமான சிதாகாயமாம்—எ-று.

(இ-ரை.) மனாகாயமும், பூதாகாயமும், களங்கமற்றஞானாகாயமும் என்கின்ற மூன்றாகாயத்தில் முந்தின விரண்டாகாயமுமில்லாம லிருக்கின்ற மகத்தான சிதாகாயமானது காணப்பட்ட வொருவஸ்துவில் அடைதலைவிட்டு மிகவுந் தெளிவாகப்பக்கத்திலிருக்கின்ற வொரு வஸ்துவை யடைந்தால் அப்போது மத்தியகதமான சிதாகாயமாம்—என்பதாம்.

(இ-ம்.) சத்தனது பேதஞானமறிவித்தற் கபேதஞானத்தைப்போதித்ததாம். (கஉ)

## மத்தியகதஞானம் விளங்கு முத்தியுரைத்தல்.

சங்கற்ப சாலந்தவிர்ந்தா லுபசாந்த மாகித்
துங்கப்புவி யாவையுமா கியசோதி தோன்று

மிங்கற்பமுங் காண்பன வில்லைவெறும் பொய்யென்று
லங்கப்பொழு தவ்வறிவா லதுசேர்த லாகும்.

(இ-ள்.) சங்கற்பசாலம் - சங்கற்பசமுகங்கள், தவிர்ந்தால்-ஒழிந்தால், உபசாந்தமாகி - சாந்தமாகவும், துங்கம் - பரிசுத்தமாகவும், புவியாவையுமாகிய - சகங்களனைத்துமாகவும் (விளங்குவ) தாகிய, சோதிதோன்றும் - சிற்ப்ரகாசமுதயமாம், இங்கு இவ்விடத்தில், அற்பமும் - எவ்வளவும், காண்பனவில்லை - திரிஸ்யங்களில்லை, வெறும் பொய்யென்றால்-அத்தியந்தபாவமென்றறிந்தால், அப்பொழுது - அச்சமயத்தில், அவ்வறிவால்-அந்த ஞானத்தினுல், அது சேர்தலாகும்-அச்சிதாகாயத்தை யடையலாம்-எ-று.

(இ-ரை.) சங்கற்பசமுகங்கள் ஒழிந்தால் சாந்தமாகவும், பரிசுத்தமாகவும், சகங்களனைத்துமாகவும் விளங்குவதாகிய சிற்ப்ரகாச முதயமாம். இவ்விடத்தில் எவ்வளவும் திரிஸ்யங்களில்லை அத்தியந்த பாவமென் றறிந்தால் அச்சமயத்தில் அந்த ஞானத்தினுல் அச்சிதாகாயத்தை யடையலாம்—என்பதாம்.

(இ-ம்.) பேதபாவநீங்கிச் சர்வம் பிரம்மயமாய்விளங்கும், ஸ்வயம் ப்ரகாசமாயின் சங்கற்ப நிறைவேறு மென்பதாம். (கரு)

## நிஷ்டை கூடல்.

நம்மா லதுசேர் கெனநாமக ணல்கி யேக
விம்மாது விகற்ப மிறந்த சமாதி யெய்தித்
தம்மா லுறைகூட கல்புள்ளெனத் தாவு நெஞ்ச
மைம்மா லுறுகூட் டினைமாற் றின ளக்கணத்தில்.

(இ-ள்.) நம்மால் - நமது (கிருபை) யினுல், அதுசேர்கென - அச்சிதாகாயத்தை யடையக்கடவாயென்று, நாமகணல்கியேக - சரஸ்வதி யனுக்கிரகித்துச்செல்ல, இம்மாது - (பின்) பிந்த லீலையானவள், விகற்ப மிறந்த சமாதியெய்தி - நிர்விகற்பசமாதியையடைந்து, தம்மாலுறை - தங்களால்வசிக்கும், கூடகல்புள்ளென - கூட்டைவிட்டு நீங்கிய பறவைகளைப் போல, தாவுநெஞ்சம் - அவாவுகின்ற மனமானது, மைம்மாலுறு - களங்கமும் விருப்பமுமுள்ள, கூட்டினை - சரீரத்தை, அக்கணத்தில் - அந்த க்ஷணத்தில், மாற்றினள் - நீக்கினுள்—எ-று.

(இ-ரை.) நமது கிருபையினுல் அச்சிதாகாயத்தை யடையக் கடவா யென்று சரஸ்வதி யனுக்கிரகித்துச்செல்ல, பின்பிந்த லீலையானவள் நிர்விகற்ப சமாதியையடைந்து தங்களால்வசிக்கும் கூட்டைவிட்டு நீங்கிய பறவைகளைப்போல அவாவுகின்ற மனமா

னது களங்கமும் விருப்பமுமுள்ள சரீரத்தை அந்த க்ஷணத்தில் நீக்கினாள் — என்பதாம்.

(இ-ம்.) தேவி யனுக்கிரகத்தினா னிட்டைகூடி சாமான்யஞானத்தினின்றும் விசேடஞானம் வெளிப்பட்டதாம். (கச)

## சத்தன் பேதபாவனா ரூபத்தைத் தரிசித்தல்.

மங்காத ஞானவிசும் பூடொரு மாநகர்க்கே
வெங்கா தலனெட் டிரண்டாண் டுளவீரனாகில்
சிங்கா தனமேற் செறிவேந் தருஞ்சேனை நாலும்
பொங்கா தரமா தரும்போற்ற விருத்த லோடும்

(இ-ள்.) மங்காத - கெடாத, ஞானவிசும்பூடு - ஞானாகாயமத்தியில், ஒருமாநகர்க்கு - ஒருபெரிதான பட்டணத்துக்கு, வெங்காதலன் - விருப்பமுள்ளபுருடனானவன், எட்டிரண்டாண்டுள-பதினாறுவயதுள்ள, வீரனாகி-வீர(முள்ளவரச)னாய், சிங்காதனமேல் - அரியணையின்மேல், செறிவேந்தரும் - நெருங்கியவரசர்களும், சேனைநாலும் - நான்குபடைகளும், பொங்காதரமாதரும் - மிகுந்தவாசையையுடைய ஸ்திரீகளும், போற்ற - புகழும்படி, இருத்தலோடும் - வீற்றிருக்கவும்—எ-று.

(இ-ளா.) கெடாத ஞானாகாய மத்தியில் ஒருபெரிதானபட்டணத்துக்கு விருப்பமுள்ள புருடனானவன் பதினாறுவயதுள்ள வீரமுள்ள வரசனாய் அரியணையின்மேல் நெருங்கிய வரசர்களும் நான்குபடைகளும் மிகுந்த வாசையையுடைய ஸ்திரீகளும் புகழும்படி வீற்றிருக்கவும்—என்பதாம்.

(இ-ம்) வெளிப்படை. (கரு)

## தரிசித்துமீண்டு தேவியைச் சிந்தித்தல்-வேறு.

தன்னுயிர்கேழ் வனையந்த லீலைநோக்கிச்
சபைபுகுந்தான் மிகவியந்தாட் சபையைச் சூழ்ந்த
மன்னவரு முனிவரு மறைவல்லோரு
மங்கையரு நாற்படையு மற்றுளோரு
நன்னிலமுங் குன்றுகளு மூருநாடு
நதித்திரளும் பலபொருளு நண்ணிநோக்கி
மின்னனையாண் மீண்டுதன திடத்தின்மேவி
வெண்ணிறவா ணியைநினைத்தாள் விருப்பினோடும்.

(இ-ள்.) தன்னுயிர்கேழ்வனை-தனதுபிராணநாயகனை, அந்தலீலைநோக்கி-அந்தலீலையானவள்பார்த்து, சபைபுகுந்தாள்-(அவனிருக்குஞ்) சபை

யையடைந்தாள், மிகவியந்தாள் - மிகவுமதிசயித்தாள், சபையைச்சூழ்ந்த - சபையைச்சூழ்ந்திருக்கின்ற, மன்னவரும்-(மேற்குவாயலி) லரசர்களும், முனிவரரும் - (கீழ்வாயலில்) முனீஸ்வரர்களும், மறைவல்லோரும் - வேதங்களில் வல்லமையையுடைய பிராமணர்களும், மங்கையரும - (தென்வாயலில்) ஸ்திரீகளும், நாற்படையும் - (உத்தரவாயலில்) சதுரங்கசேனைகளும், மற்றுளோரும் - ஏனையோரும், நன்னிலமும் - நல்லபூமியும், குன்றுகளும் - மலைகளும், ஊரும் - நகரங்களும், நாடும் - நாடுகளும், நதித்திரளும் - நதிச்சமுகமும், பலபொருளும்-பலவஸ்துக்களு(மாகியவிவைகளை), நண்ணிநோக்கி - போய்ப்பார்த்து, மின்னனையாள்-மின்னற்கொடிக்கொப்பாகிய லீலையானவள், மீண்டு - திரும்பி, தனதிடத்தின்மேவி - தனதந்தப்புரத்திலுள்ள (சரீரத்திற்) புகுந்து, வெண்ணிறவாணியை - வெண்ணிறத்தையுடைய சரஸ்வதியை, விருப்பினோடும் - பிரியத்தோடும், நினைத்தாள் - சிந்தித்தாள் — எ-று.

(இ-ள.) தனது பிராணநாயகனை அந்த லீலையானவள்பார்த்து அவனிருக்குஞ் சபையை யடைந்தாள்; மிகவு மதிசயித்தாள்! சபையைச்சூழ்ந்திருக்கின்ற மேற்குவாயலி லரசர்களும், கீழ்வாயலில் முனீஸ்வரர்களும், வேதங்களில்வல்லமையுடைய பிராமணர்களும், தென்வாயலில் ஸ்திரீகளும், உத்தரவாயலில் சதுரங்க சேனைகளும், ஏனையோரும், நல்லபூமியும், மலைகளும், நகரங்களும், நாடுகளும், நதிச்சமுகமும், பலவஸ்துக்களுமாகிய விவைகளைப் போய்ப்பார்த்து மின்னற்கொடிக்கொப்பாகிய லீலையானவள் திரும்பி தனதந்தப்புரத்திலுள்ள சரீரத்திற்புகுந்து வெண்ணிறத்தையுடைய சரஸ்வதியைப்பிரியத்தோடும் சிந்தித்தாள் — எ-ம்.

(இ-ம்.) வெளிப்படை. (கசு)

---

சீவன்மரித்தவிடத்திருக்க மறுபிறப்புற்ற தியாதெனின்.

வந்துயரா தனத்திருந்த வாணிதன்னை
வணங்கியென தன்பனுக்கு மரித்தபின்பு
பந்த மூறு மயக்கமே வடிவாய்நிற்கப்
பழைபபடி பிறப்புற்ற படியீதென்ன
விந்தவுல குறுமயக்கம் போகச்சொல்வா
யெனலீலை கேட்டலுமே யிறைவிசொல்வா
ளுந்துசிருட் டியின்முன்பு மயக்கமட்டே
வுருவாமிச் சிருட்டிவே றுதித்ததாகும்.

(இ-ள்.) வந்து - ப்ரத்யக்ஷமாய், உயராதனத்திருந்த-மேலான (சிங்)காசனத்தெழுந்தருளிய, வாணிதன்னை-சரஸ்வதியை, வணங்கி-நமஸ்கரித்து, எனதன்பனுக்கு - எனதுநாயகனுக்கு, மரித்தபின்பு - இறந்தபின்

(னித்திரிஸ்யமான சர்க்கத்தைக்காட்டிலும்), பழையபடி - முன்போலவே, பந்தமுறுமயக்கமேவடிவாய் - பந்தமுள்ளபிரமாத்மகமாகியும், நிற்கும் - (அமூர்த்தமாகியு) மிருக்கின்ற, பிறப்பு - (வேறான) சர்க்கமானது, உற்றபடியீதென்ன - உண்டானபிரகாரமிப்படிப்பட்டதென்று, இந்தவுலகுறுமயக்கம் - இச்சர்க்கத்தினுடையசத்தியத்துவபிரமை, போக - நீங்கும்பொருட்டு, சொல்வாயென - அருள்வாயென்று, வீலகேட்டலும் - லீலகேட்வும், இறைவிசொல்வாள் - சரஸ்வதியுரைப்பாள், உந்துசிருட்டியின்முன்பு - முன்னுயர்வான (பிராமண) சிருட்டியின், மயக்கமட்டே - (அரசப்) பிராந்தியினளவே, உருவாம் - (பதுமனென்னும்) வடிவமான, இச்சிருட்டி - இந்தச்சிருட்டியானது, வேறுதித்ததாகும் - வேறாகத்தோற்றினதாகும்—எ-று.

(இ-ரை.) ப்ரத்யக்ஷமாய் மேலான சிங்காசனத்தெழுந்தருளிய சரஸ்வதியை நமஸ்கரித்து, எனதுநாயகனுக்கு இறந்தபின்னித்திரிஸ்யமான சர்க்கத்தைக்காட்டிலும் முன்போலவேபந்தமுள்ள பிரமாத்மகமாகியும், அமூர்த்தமாகியு மிருக்கின்றவேறான சர்க்கமானது உண்டான பிரகார மிப்படிப்பட்டதென்று இச்சர்க்கத்தினுடைய சத்தியத்துவ பிரமை நீங்கும்பொருட்டு அருள்வாயென்று லீலகேட்கவும் சரஸ்வதியுரைப்பாள். முன்னுயர்வான பிராமணசிருட்டியின் அரசப்பிராந்தியினளவே பதுமனென்னும் வடிவமான இந்தச்சிருட்டியானது வேறாகத்தோற்றினதாகும்—என்பதாம்.

(இ-ம்.) அபேதஞான மிருந்தவிடத்திருக்க பேதஞானமான முன்சிருட்டியின் மனோமயக்கமே யிச்சிருட்டியாகி, இச்சிருட்டியின் மனோமயக்கமே மேற்சிருட்டியானதை யறிவித்ததாம். (கஎ)

## முன்சிருட்டியை யறிவிக்கத் தொடங்கல்.

அப்படியே யுன்கணவற் கிரண்டாஞ்சென்ம
  மாயினதா லீதுரைப்ப வறிந்துகேட்பாய்
மைப்படி விலாவிமல ஞானவிண்ணின்
  மற்றொருபான் மாயாமண் டபமொன்றுண்டாஞ்
செப்பரிய விசும்பென்னு மயூரப்பீலித்
  திரையாலே மறைத்திருக்குஞ் செம்பொற்குன்றங்
கப்புறுபொற் றாணிலுறை யுலகபாலா
  காரிகையா ரெனும்பொறிகள் கலந்துநிற்கும்.

(இ-ள்.) அப்படியே - அவ்வண்ணமே, உன்கணவற்கு - உனதுநாயகனுக்கு, இரண்டாஞ்சென்மம்-இரண்டாவதானவிரேதசெநநம், ஆயினது-

உண்டாயிற்று, ஈதுரைப்பவறிந்து-இதனது (வரன்முறையைச்) சொல்லத் தெரிந்துகொண்டு, கேட்பாய்-(சங்கையுண்டானாற்) கேள், மைப்படிவிலா - களங்கமற்ற, விமலஞானவிண்ணில் - நின்மலமானசிதாகாயத்தில், ஒருபால் - ஓர்பக்கத்தில், மாயாமண்டபம் - மாயாமண்டபமானது, ஒன்றுண்டாம் - ஒன்றுண்டாயிருக்கின்றது, செப்பரிய - சொல்லுதற்கரிய, விசும்பென்னும்-ஆகாயமென்கின்ற, மயூரப்பீலித்திரையால்-மயிலிறகின்றிரையினால், மறைத்திருக்கும் - மூடியிருக்கும், செம்பொற்குன்றும் - மகமேருவாகிய, கப்புறு - கிளைகளையுடைய, பொற்றூணிலுறை - சொன்னஸ்தம்பத்தில்வசிக்கின்ற, உலகபாலர் - (இந்திரன்முதலிய) உலகபாலர்களுடைய, காரிகையாரெனும் - (இந்திராணிமுதலிய) ஸ்திரீகளென்னும், பொறிகள் - சித்திரப்பதுமைகள், கலந்துநிற்கும் - பதித்திருக்கும்—எ-று.

(இ-ரை.) அவ்வண்ணமே உனதுநாயகனுக்கு இரண்டாவதான விரோதசநநம் உண்டாயிற்று. இதனது வரன்முறையைச் சொல்லத் தெரிந்துகொண்டு சங்கையுண்டானாற்கேள், களங்கமற்ற நின்மலமான சிதாகாயத்தில் ஓர்பக்கத்தில் மாயாமண்டபமானது ஒன்றுண்டாயிருக்கின்றது, சொல்லுதற்கரிய ஆகாயமென்கின்ற மயிலிறகின்றிரையினால்மூடியிருக்கும், மகமேருவாகிய கிளைகளையுடைய சொன்ன ஸ்தம்பத்தில் வசிக்கின்ற இந்திரன்முதலிய வுலகபாலர்களுடைய இந்திராணிமுதலிய ஸ்திரீகளென்னும் சித்திரப்பதுமைகள் பதித்திருக்கும்—என்பதாம். (கஅ)

### இதுவுமது.

ஒருகோணந் தனிற்பூதப் பற்றுமாங்கே
  யுறைகின்ற மலைகளெனு மோடுமுண்டாம்
வருகாதற் புத்திரர்சூழ் விருத்தவால
  மறையவனுங் கொருவனுறை மனையதாகுங்
குருவான வாயுவின்மார்க் கத்துலாவு
  கோலவிமா னப்புழுவின் குழுவைமேவு
மருகான விண்ணிலுறை சித்தர்கூட்ட
  மானகொது கிரைகின்ற வரவநண்ணும்.

(இ-ள்.) ஒருகோணந்தனில் - ஒருபக்கத்தில், பூதப்புற்றும்-பிருதிவியென்னும் புற்றுகளும், ஆங்கேயுறைகின்ற - அவ்விடத்தில்வசிக்கின்ற, மலைகளெனும் - (சத்தகு) லாசலங்களென்கின்ற, ஓடுமுண்டாம் - ஓடுகளுமுண்டாயிருந்கின்றன, வருகாதல் - ஆசையுள்ள, புத்திரர்சூழ் - (மரீசிமுதலான) புதல்வர் சூழ்ந்திருக்கின்ற, விருத்தவாலமறையவனும் - வார்த்திகமும் பரிசுத்தமுமுள்ள பிரமாவாகிய, ஒருவனுறை - ஒரு புருடன் வசிக்கின்ற, மனையதாகும் - இடமாகும், குருவான-பெருமைபொருந்திய, வா

யுவின் மார்க்கத்து - மகாகாசமென்னும் (வேணுவில்), உலாவு - சஞ்சரிக்கின்ற, கோலம் - அழகிய, விமானப்புழுவின்-விமானத்தையுடைய தேவகீடங்களினது, குழுவைமேவும் - கூட்டங்களைப்பொருந்தும், அருகான - சமீபமாகிய, விண்ணிலுறை-ஆகாயத்தில் வசிக்கின்ற, சித்தர் கூட்டமான - சித்தர் குழாமாகிய, கொதுகு - மசகங்கள், இறைகின்ற - சப்திக்கின்ற, அரவநண்ணும் - (கும்மென்கின்ற) சப்தம்பொருந்தும்—எ-று.

(இ-ள்.) ஒருபக்கத்தில் பிருதிவியென்னும் புற்றுகளும் அவ்விடத்தில் வசிக்கின்ற சத்தகுலாசலங்க ளென்கின்ற ஓடுகளுமுண்டாயிருக்கின்றன ஆசையுள்ளமரீசிமுதலான புதல்வர் சூழ்ந்திருக்கின்றவார்த்திகமும் பரிசுத்தமுமுள்ள பிரமாவாகிய ஒரு புருடன் வசிக்கின்ற இடமாகும். பெருமை பொருந்திய மகாகாசமென்னும் வேணுவில் சஞ்சரிக்கின்ற அழகிய விமானத்தையுடைய தேவகீடங்களினது கூட்டங்களைப் பொருந்தும். சமீபமாகிய ஆகாயத்தில் வசிக்கின்ற சித்தர்குழாமாகிய மசகங்கள் சப்திக்கின்ற சப்தம் பொருந்தும்—என்பதாம். (௧௬)

இதுவுமது.

வானவர்தா னவரென்னுந் தீயமக்கண்
  மதர்த்தவிளை யாட்டோசை மாறுதாகு
மானதொரு மாமாயா மண்டபத்தி
  லாங்கொருபா லொருகோணத் தகத்தினுள்ளே
மானமிகு மலையென்னு மோட்டிலொன்றின்
  மலைகளினு லாறுகளால் வனங்கடன்னுன்
மேனலமார் நகரொன்றுண் டதனில்வாழ்வோன்
  வெங்கனலோன் வேதியரின் மிகவுமிக்கோன்.

(இ-ள்.) வானவர் - தேவர்களும், தானவர் - அசுரர்களும், என்னும்- என்கின்ற, தீயமக்கள்-துஷ்டப்பிள்ளைகளினது, மதர்த்தவிளையாட்டு-செருக்குற்ற விளையாட்டி (லுண்டாகிய), ஓசைமாறுதாகும் - சப்தமாறுமலிருக்கும், ஆனது - (இப்படி) யான, ஒருமாமாயாமண்டத்தில் - ஒப்பற்ற மகாமாயா மண்டபத்தில், ஆங்கொருபால் - அவ்விடத்தொருபக்கத்தில், ஒரு கோணத்து - ஒரு திக்காகிய, அகத்தினுள் - (ஒரு) கிரகமத்தியில், மானமிகு - பெருமைமிகுந்த, மலையென்னும்-வரையென்கின்ற, ஓட்டிலொன்றில் - ஒருபூமியில், மலைகளினுல்-பருப்பதங்களினுலும், ஆறுகளால் - நதிகளினுலும, வனங்கடன்னுல் - கானகங்களினுலும், மேனலமார் - மேலாகிய வளப்பநிறைந்த, நகரொன்றுண்டு - (கிரிக்கிராம)மென்னு மொருபட்டணமுண்டு, அதனில் வாழ்வோன் - அதனிடமாகவாழ்கின்றவன், வெங்

கனலோன் - அக்கினியோத்ரத்தையுடையவன், வேதியரின் - பிராமணர்களில், மிகவு மிக்கோன் - மிகவுமேன்மையானவன்—எ-று.

(இ-ள.) தேவர்களும், அசுரர்களும் என்கின்ற துஷ்டப்பிள்ளைகளினது செருக்குற்ற விளையாட்டிலுண்டாகிய சப்தமாருமலிருக்கும். இப்படியான ஒப்பற்ற மகாமாயா மண்டபத்தில் அவ்விடத்தொருபக்கத்தில் ஒருதிக்காகிய ஒரு கிரகமத்தியில் பெருமைமிகுந்த வரை யென்கின்ற ஒரு பூமியில் பருப்பதங்களினுலும், நதிகளினுலும், கானகங்களினுலும், மேலாகியவளப்பநிறைந்த கிரிக்கிராம மென்னு மொரு பட்டணமுண்டு. அதனிடமாக வாழ்கின்றவன் அக்கினியோத்ரத்தை யுடையவன், பிராமணர்களில் மிகவு மேன்மையானவன்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) முன்சிருட்டியை யறிவிக்கு நிமித்தம், செல்லுமார்க்கத்திலுண்டான வதிசயங்களைச் சொல்லியதாம். (உ0)

முன்சிருட்டியினுமங்களு மவர்குணங்களு முரைத்தல்.

வடிவுபொருள் வயதொடுக்கஞ் சேட்டைவிஞ்ஞை
வசிட்டனுக்கொப் போனந்த வசிட்டனென்றே
படியுமுணர் வினனல்லன் பெயராலிந்தப்
பனவனையும் வசிட்டனெனப் பகரலாகு
மடிபரவு மருந்ததியை யொப்பாளந்த
வருந்ததியி னுணர்வினளன் றமைந்தபேரா
னெடியவருந் ததியாகு மிவற்குத்தேவி
நிலத்திலிவள் விண்ணிலவ ணிகர்வேறில்லை.

(இ-ள்.) வடிவு - அழகிலும், பொருள் - செல்வத்திலும், வயது - வயதிலும், ஒடுக்கம் - அடக்கத்திலும், சேட்டை - செய்கையிலும், விஞ்ஞை-கல்வியிலும், வசிட்டனுக்கொப்போன் - வசிட்டனுக்குச் சமானமானவன், அந்த வசிட்டனென்று - அவ்வசிட்டனென்று (சொல்லும்படியான), படியுமுணர்வினனல்லன் - குணம்பொருந்திய வறிவை யுடையவனல்லன், பெயரால் - நாமத்தினுல், இந்தப்பனவனையும் - இம்பிராமணனையும், வசிட்டனென - வசிட்டனென்று, பகரலாகும் - சொல்லலாம், அடிபரவும் - (அவனது) பதத்தைப்பணிகின்ற, அருந்ததியை-அருந்ததிக்கு, ஒப்பாள் - சமானமாவாள், அந்தவருந்ததியின் - அவ்வருந்ததியினது, உணர்வினளன்று - அறிவையுடையவளல்ல, அமைந்தபெயரால் - பொருந்தியநாமத்தினுல், நெடிய வருந்ததியாகும் - உயர்ந்த வருந்ததியாவள், இவற்குத்தேவி - இவ்வசிட்டனுக்குநாயகி, நிலத்திலிவள் - பூலோகத்திலிவளும், விண்ணிலவள் - தெய்வலோகத்திலவளுமாம், நிகர்வேறில்லை - இவர்களுக்குச் சமானம்வேறில்லை—எ-று.

(இ-ள்.) அழகிலும், செல்வத்திலும், வயதிலும், அடக்கத்திலும், செய்கையிலும், கல்வியிலும் வசிட்டனுக்குச்சமானமானவன். அவ்வசிட்டனென்று சொல்லும்படியானகுணம்பொருந்திய வறிவையுடையவனல்லன். நாமத்தினுல் இப்பிராமணனையும் வசிட்டனென்றுசொல்லலாம். அவனது பதத்தைப்பணிகின்ற அருந்ததிக்கு சமானமானவள். அவ்வருந்ததியினது அறிவை யுடையவளல்ல; பொருந்திய நாமத்தினுல் உயர்ந்தவருந்ததியாவள். இவ்வசிட்டனுக்கு நாயகி பூலோகத்திலிவளும், தெய்வலோகத்தி லவளுமாம். இவர்களுக்குச் சமானம்வேறில்லை—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (உக)

## அவர் பிராந்தி நிருபணம்.

இந்தவருந் ததிகணவ னென்றுசொன்ன
 விவ்வசிட்ட னம்மலையி னிலங்குசாரன்
முந்தியொரு நாளிருப்ப வேட்டைக்காங்கோர்
 முடிநிருபன் சேனையொடு முன்வந்தெய்த
வந்தநிரு பனைநோக்கி வசிட்டன்றேர்வா
 னகோவகோ மன்னவர்வாழ் வரவுநன்றுஞ்
சுந்தரமாம் புவிக்கரசாய்ச் சேனைசூழத்
 துணைக்கவரிப் பரிமாறச் சுகிப்பமெந்நாள்.

(இ-ள்.) இந்தவருந்ததிகணவன் - இவ்வருந்ததிபுருடன், என்றுசொன்ன - என்றுசொல்லிய, இவ்வசிட்டன் - இவ்வசிட்டனுனவர், அம்மலையினிலங்குசாரல் - அவ்வரையில்விளங்குகின்ற தாழ்வரையில், முந்தியொருநாளிருப்ப - முன்னொருநாளிருக்க, வேட்டைக்கு - வேட்டைநிமித்தம், ஆங்கோர்-அவ்விடத்திலொரு, முடிநிருபன் - கிரீடத்தையுடையவரசன், சேனையொடு - படைகளுடன், முன்வந்தெய்த - முன்னேவர, அந்தநிருபனைநோக்கி - அவ்வரசனைப்பார்த்து, வசிட்டன்றேர்வான் - வசிட்டன் யோசிப்பான், அகோவகோ - ஆச்சரியமாச்சரியம், மன்னர்வாழ்வு - அரசர்கள்செல்வம், அறவுநன்றும் - மிகவுநன்மையாம், சுந்தரமாம்புவிக்கு - அழகானவுலகத்துக்கு, அரசாய் - இராசாவாய், சேனைசூழ - படைகள்சூழ்ந்து (வர), துணைக்கவரி - இரண்டுசாமரங்களை, பரிமாற - வீச, எந்நாள் - எக்காலத்தில், சுகிப்பம் - சுகத்தையடைவோம்—எ-று.

(இ-ள்.) இவ்வருந்ததி புருடன் என்று சொல்லிய இவ்வசிட்டனுனவர் அவ்வரையில் விளங்குகின்ற தாழ்வரையில் முன்னொருநாளிருக்க வேட்டை நிமித்தம் அவ்விடத்திலொருகிரீடத்தையுடைய வரசன் படைகளுடன் முன்னேவர அவ்வரசனைப்பார்த்து

வசிட்டன் யோசிப்பான். ஆச்சரிய மாச்சரியம் அரசர்கள் செல்வம் மிகவு நன்மையாம். அழகானவுலகத்துக்குஇராசாவாய் படைகள் சூழ்ந்துவர இரண்டுசாமரங்களைவீச, எக்காலத்தில் சுகத்தையடைவோம்—என்பதாம்.

(இ-ம்) வெளிப்படை. (உஉ)

இதுவுமது.

கொடிகுடையி னிழனெருங்க வாழ்ந்துமாதர்
  குங்குமக்கொங் கையின்மூழ்கிக் குளிப்போமெந்நாண்
முடிவருமிப் பயனென்று பெறுவமென்றே
  மொய்காத லன்றுமுதன் முளைத்தநெஞ்சன்
மடியறுதன் கருமத்தி னின்றான்மூப்பு
  வசனஞ்சேர் பனியின்வர மனைவிநிற்போ
லடிபரவி யெனைவேட்டும் வரமுமீந்தே
  னந்தணனு மிறப்புற்றா னாசையோடும்.

(இ-ள்.) கொடி - (வெற்றிக்) கொடிகள், நெருங்க - நெருங்கும்படி, குடைநிழல் - (வெண்கொற்றக்) குடைநிழலில், வாழ்ந்து-சுகித்து, மாதர்-மகளிருடைய, குங்குமக்கொங்கையில் - செஞ்சாந்தணிந்த தனங்களில், மூழ்கிக்குளிப்போமெந்நாள்-படிந்திருப்பதெந்தநாள், முடிவறுமிப்பயன்-முடிவில்லாத விப்பிரயோசனத்தை, என்றுபெறுவமென்று - எப்பொழுதடைவோமென்று, மொய்காதல - நிறைந்தவாசை, அன்றுமுதல் - (அரசனைக்கண்ட) வன்றுமுதலாக, முளைத்தநெஞ்சன் - உண்டாயிருக்கின்ற மனதையுடையவன், மடியறுதன்கருமத்திநின்றான் - கெடாத தனது கன்மத்திலிருந்தான், மூப்பு - வார்த்திகமானது, வனசஞ்சேர்பனியின்-தாமரையைச்சேர்ந்த பனியைப்போல, வர-(அவனுக்) குண்டாக, மனைவி-(அவர்) தேவியானவள், நிற்போல் - உன்னைப்போல, அடிபரவி - பாதத்தைவணங்கி, எனைவேட்டும்வரமும் - எனைவிரும்பிக்கேட்ட (சீவனவ்வீட்டினின்றுநீங்காத) வரத்தையும், ஈந்தேன் - கொடுத்தேன், அந்தணனும் - பிராமணனாகிய (வசிட்டனும்) ஆசையோடும் - (இராசபோக) விச்சையோடும், இறப்புற்றான் - மரணமடைந்தான்—எ-று.

(இ-னா.) வெற்றிக்கொடிகள் நெருங்கும்படி வெண்கொற்றக்குடைநிழலில் சுகித்து மகளிருடைய செஞ்சாந்தணிந்த தனங்களில் படிந்திருப்ப தெந்தநாள். முடிவில்லாத விப்பிரயோசனத்தை எப்பொழு தடைவோமென்று நிறைந்தவாசை அரசனைக்கண்ட வன்று முதலாக உண்டாயிருக்கின்ற மனதையுடையவன் கெடாததனது கன்மத்திலிருந்தான். வார்த்திகமானது தாமரையைச்சேர்ந்தபனியைப்போல அவனுக்குண்டாக அவர்தேவியானவள் உன்னைப்போலபாதத்தைவணங்கி எனைவிரும்பிக்கேட்ட சீவனவ்வீட்டினின்று நீங்காத வரத்தையும்கொடுத்தேன், பிராமண

ஞகிய வசிட்டனும் இராசபோக விச்சையோடும் மரணமடைந்தான்—என்பதாம்.

(இ-ம்.) சீவனதபேதஞான மவ்விடத்திருக்கவும், பேதஞானமான மனது செல்லுழித்தான் செல்லவும் வரம்பெற்றனளென்பதாம். (உரு)

---

## இச்சித்த வடிவமாதல்.

அவன்மனை யாகாசத்திற் சீவாகாச
மாய்நின்ற ஞகாச வடிவானேனே
கவருறுமுன் ஞளழுந்து சங்கற்பத்தாற்
காவலன்ற னேயாகிக் கலந்துநின்றன்
றவமறையோன் சவமாக மனைவிசோர்ந்து
தன்னிதயத் திரண்டாகிச் சரீரந்தன்னை
யுவமையுறு கணவனுடன் சவமாய்ப்போக்கி
யுயர்சூக்க வுடலொடவ னுடன்போயுற்றாள்.

(இ-ள்.) அவன் - அவ் (வசிட்ட) ஞனவன், மனையாகாசத்தில் - கிரகாகாயத்தில், சீவாகாசமாய் சீவாகாய (வடிவ) மாய், நின்றன் - இருந்தான், ஆகாசவடிவானேனே-(ஞா) ஞகாயவடிவமான வசிட்டனே, கவருறு-வளருகின்ற, முன்னுள் - முன்னுளில், அழுந்தும்-(இராசசெல்வத்தி) லழுந்திய, சங்கற்பத்தால் - (மனே) சங்கற்பத்தினல், காவலன்றனேயாகி - அரசனுய், கலந்துநின்றன் - பொருந்தியிருந்தான், தவமறையோன்-தவத்தையுடையபிராமணன், சவமாக - பிரேதமானதைக் (கண்ட) , மனைவி சோர்ந்து - நாயகியானவடுன்பமடைந்து, தன்னிதயத்து - தன்மனதில், இரண்டாகி - இரண்டுவிதமாகநினைத்து, சரீரந்தன்னை - (தனது) தூலசரீரத்தை, உவமையுறு - சமானமாகிய, கணவனுடன் - நாயகனுடன், சவமாய்ப்போக்கி - பிரேதமாகத்தள்ளி, உயர்சூக்கவுடலொடு - மேலான சூட்சுமசரீரத்தோடு, அவனுடன்போயுற்றாள் - அந்தநாயகனுடன்போய்ச் சேர்ந்தாள்—எ-று.

(இ-ரை.) அவ்வசிட்டஞனவன் கிரகாகாயத்தில் சீவாகாயவடிவமாயிருந்தான். ஞாஞகாயவடிவமானவசிட்டனே, வளருகின்ற முன்னுளில் இராச செல்வத்திலழுந்திய மனேசங்கற்பத்தினல் அரசனுய்ப்பொருந்தியிருந்தான். தவத்தையுடைய பிராமணன் பிரேதமானதைக்கண்ட நாயகியானவடுன்பமடைந்து தன்மனதில் இரண்டுவிதமாக நினைத்து தனது தூலசரீரத்தை சமானமாகிய நாயகனுடன் பிரேதமாகத் தள்ளி மேலான சூட்சும சரீரத்தோடு அந்த நாயகனுடன்போய்ச் சேர்ந்தாள்—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (உச)

இதுவுமது.

ஆயமறை யோன்மக்கண் மனையும்பூமி
யடவிகடா வரங்களெலா மங்கேயுண்டாய்
மேயவுயிர் போயவற்கு நாளெட்டாகும்
விண்வடிவாஞ் சீவனுமவ் வீட்டினிற்கும்
போயபவத் துனக்கன்ப னுனவந்தப்
பூசுரன்பூ பதியாகிப் புணர்ந்தானென்று
தூயவருந் ததிபெயர்கொள் பனவியாகித்
துணைவியா மந்தமடற் றோகைநீயே.

(இ-ள்.) ஆயமறையோன் - (இத்தன்மைய) வான பிராமணனுடைய, மக்கள் - புத்திரரும், மனையும் - வீடும், பூமி - பூமியும், அடவிகள் - வன ங்களும், தாவரங்கள் - மலைகளும், எல்லாம் - சகலமும், அங்கேயுண்டாய்- அவ்விடத்திலிருக்க, அவற்கு - அவருக்கு, மேயவுயிர்போய்-பொருந்திய சீவன்பிரிந்து, நாளெட்டாகும் - எட்டுநாளாகும், விண்வடிவாஞ்சீவனும்- சிதாகாய ரூபமானசீவனும், அவ்வீட்டினிற்கும் - அந்தவீட்டிலிருக்கும், போயபவத்து - முன்சநநத்தில், உனக்கன்பனுன - உனக்குநாயகனுகிய, அந்தப்பூசுரன் - அந்தப்பிராமணன், பூபதியாகி-அரசனுகி, புணர்ந்தான்- பொருந்தினுன், அன்று - அப்போது, தூய - பரிசுத்தமாகிய, அருந்ததி பெயர்கொள் - அருந்ததியென்னுநாமமுள்ள, பனவியாகி - பிராமணஸ் திரீயாகி, துணைவியாம் - (அவன்) மனைவியாகிய, அந்தமடற்றோகைநீயே - அந்தமடமயில் (போன்ற பெண்ணுனவள்) நீதான்—எ-று.

(இ-ை.) இத்தன்மையவான பிராமணனுடைய புத்திரரும், வீடும், பூமியும், வனங்களும், மலைகளும், சகலமும் அவ்விடத்திலி ருக்க அவருக்குப் பொருந்திய சீவன்பிரிந்து எட்டுநாளாகும். சி தாகாயரூபமான சீவனும் அந்த வீட்டிலிருக்கும். முன் சநநத்தில் உனக்கு நாயகனுகிய அந்தப்பிராமணன் அரசனுகிபொருந்தினுன் அப்போது பரிசுத்தமாகிய அருந்ததியென்னு நாமமுள்ள பிராம ணஸ்திரீயாகி அவன் மனைவியாகிய அந்தமடமயில்போன்ற பெண் ணுனவள் நீதான்—என்பதாம்.

(இ-ம்.) பிராமணனது சாமான்யஞான மவ்விடத்திருக்க, விசேட ஞானமே யரசசிருட்டியை யடைந்ததென்பதாம். (உரு)

மூன்று சிருஷ்டியிலுள்ள வடிவழம் பிராந்தியேனல்.

புதியனசக் கரவாகந் துணையதென்னப்
பூதலஞ்சே ருமையொடுபு ராரியென்ன

வதிகநலத் துணைவரா மிருவராயிங்
கரசுசெயு நீரவரே யாதலாலே
மதிநுதலாய் முதற்பிறப்பின் மயக்கஞ்சொன்னோ
மற்றிதுதான் மயக்கமாத் திரமதாகு
முதகமுறு மாகாய வுடலாஞ்சென்ம
மொளிபெறத்தோன் றியதென்று ளுலகிலன்னே.

(இ-ள்.) புதியன - புதுமையான, சக்கரவாகந்துணையதென்ன-சக்கரவாகப்புள் சேர்க்கைபோலவும், பூதலம் - பூமியின்கண், சேர் - (இடதுபாகத்திற்)சேரும், உமையொருபுராரியென்ன-பார்பதிபரமேஸ்வரரைப்போலவும், அதிக - மிகவும், நலத்துணைவராம் - நன்குள்ள ஸ்திரீபுமானாக, இருவராய் - இருவருமாய், இங்கரசுசெயும் - இவ்விடத்தி லரசாக்ஷிசெய்கின்ற, நீரவரே - நீங்களந்த வருந்ததிவசிட்டரே, ஆதலால் - ஆகையால், மதிநுதலாய் - மூன்றும்பிறைபோன்ற நெத்தியையுடையலீலாய், முதற்பிறப்பின் - முன்பிராமணசிருஷ்டியின், மயக்கம் - (இராசாவாகநினைத்த) பிராந்தியை, சொன்னோம் - கூறினோம், இதுதான்-இப்பத்மசிருஷ்டியும், மயக்கமாத்திரமதாகும் - பிராந்திபாத்திரமேயாம், உதகமுறுமாகாயம் - சலப்ரதிவிம்பாகாயம்போல, உடலாஞ்சென்மம்-வடிவமான விரோதசநநம், ஒளிபெறத்தோன்றியது - (உனக்கு) ப்ரகாசமாகத்தோற்றியது, என்றுளுலகிலன்னே - என்று லோகமாதாவாகிய சரஸ்வதிசொன்னாள்—எ-று.

(இ-ரை.) புதுமையானசக்கரவ்ாகப்புள் சேர்க்கைபோலவும், பூமியின்கண் இடதுபாகத்திற்சேரும் பார்பதிபரமேஸ்வரரைப் போலவும், மிகவும் நன்குள்ள ஸ்திரீபுமானாக இருவருமாய் இவ்விடத்தி லரசாக்ஷி செய்கின்ற நீங்க ளந்த வருந்ததிவசிட்டரே ஆகையால் மூன்றும் பிறை போன்ற நெத்தியையுடைய லீலாய்! முன் பிராமண சிருஷ்டியின் இராசாவாகநினைத்த பிராந்தியைக்கூறினோம் இப்பத்மசிருஷ்டியும் பிராந்திபாத்திரமேயாம். சலப்ரதிவிம்பாகாயம்போல வடிவமான விரோதசநநம் உனக்கு ப்ரகாசமாகத்தோற்றியது என்று லோகமாதாவாகிய சரஸ்வதி சொன்னாள்—என்பதாம்.

(இ-ம்.) முன் வசிட்டபிராந்தியே பதுமனாகவும், அப்பதுமப்பிராந்தியே விரோதனாகவு மானதேயன்றி, யெதார்த்தமா யிவர்களுக் கோர்வடிவமு மின்றென்பதாம். (உசு)

வசிட்டரதுசீவ னங்ஙனநிற்க
விங்ஙன்ம் மத்மனுறரேன்ப தேங்ஙனமேனின்.

இந்தவுரை கேட்டலுமே லீலைசொல்வா
ளிறைவிபொய்யே யியம்பினையீ தெங்ஙன்கூடு
மந்தணன்வீட் டுறைசீவ னதுவெங்கேயோ
வன்னியமா யிருந்துயா மடைந்ததெங்கே
முந்துறுமவ் வேற்றுலகத் திருப்பாரந்த
மொய்கிரிக டசதிசைகண் முற்றுஞ்சேர
வந்தினிதிங் கியாங்களுறை மனையினூடே
மருவுமடை வெப்படியோ மாசிலாளே.

(இ-ள்.) இந்தவுரைகேட்டலும் - இவ்வசனத்தைக்கேட்டவளவில், லீலைசொல்வாள் - லீலையுரைப்பாள், இறைவி - தேவீ, பொய்யேயியம்பினை - அசத்தியமேசொன்னாய், ஈதெங்ஙன்கூடும் - இஃதெப்படிபொருந்தும், அந்தணன்வீட்டுறை - பிராமணன்மனையில்வசிக்கின்ற, சீவனது வெங்கேயோ - சீவனெங்கே யிருக்கின்றது, அன்னியமாயிருந்தயாம் - (இவ்விடத்து) வேறாகவிருந்த நாங்கள், அடைந்ததெங்கே - சேர்ந்ததெங்கே, முந்துறும் - முன்பொருந்திய, அவ்வேற்றுலகத்திருப்பார் - அந்த வேறுலகத்திருக்கின்றவர்கள், அந்தமொய்கிரிகள் - அந்த நெருங்கியமலைகளும், தசதிசைகள் - பத்துதிக்குகளும், முற்றுஞ்சேரவந்து - முழுதுங் கூடிவந்து, இனிது - இனிமையாக, இங்கு - இவ்விடத்தில், யாங்களுறை- நாங்களிருக்கின்ற, மனையினூடு - வீட்டுக்குள், மருவுமடைவு - பொருந்தும்வழி, மாசிலாளே - குற்றமற்ற சரஸ்வதியே, எப்படி - எவ்வித (மென்றுகேட்டாள்)—எ-று.

(இ-ரை.) இவ்வசனத்தைக் கேட்டவளவில் லீலை யுரைப்பாள், தேவீ அசத்தியமே சொன்னாய். இஃதெப்படி பொருந்தும் பிராமணன் மனையில் வசிக்கின்ற சீவனெங்கே யிருக்கின்றது, இவ்விடத்து வேறாகவிருந்த நாங்கள் சேர்ந்த தெங்கே? முன்பொருந்திய அந்த வேறுலகத்திருக்கின்றவர்கள் அந்த நெருங்கிய மலைகளும், பத்துதிக்குகளும்! முழுதுங் கூடிவந்து இனிமையாக இவ்விடத்தில் நாங்க ளிருக்கின்ற வீட்டுக்குள் பொருந்தும் வழி குற்றமற்ற சரஸ்வதியே எவ்வித மென்றுகேட்டாள்—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (உ௭)

### இதுவுமது.

மத்தவயி ராவதமோர் கடுகினோர்பால்
  மறிபடுமோ வடமேரு வந்தோர்கஞ்ச
வித்தினிடை புகுந்திருந்தோர் வண்டின்குஞ்சால்
  மிகநெரியு மோகொதுகு வெகுண்டுமோதி
யுத்தமியற் றிடச்சிங்க மனேகமத்தோ
  டோரணுவி னிடைப்புகுமோ வுரைத்தநின்சொல்
வித்திறமே யொன்றுக்கு மிசையாதாகு
  மெனலீலை சொல்லுதலு மிறைவிசொல்வாள்.

(இ-ள்.) மத்த - மதர்த்த, அயிராவதம்-இந்திரன்யானையானது, ஓர் கடுகினோர்பால் - ஒருகடுகினுடைய வொருபக்கத்தில், மறிபடுமோ - கட்டுப்படுமோ, வடமேருவந்து - மகம்மேருவானதுவந்து, ஓர்கஞ்சவித்தினிடை - ஒரு தாமரைவிதைக்குள், புகுந்திருந்து - நுழைந்திருந்து, ஓர்வண்டின்குஞ்சால் - ஓரளியின்பார்ப்பினால், மிகநெரியுமோ - மிகவுநெரியுமா, கொதுகு - மசகமானது, வெகுண்டு - கோபித்து, மோதி - அடித்து, யுத்தமியற்றிட - போர்செய்ய, சிங்கமனேகமத்தோடு - சிங்கங்கள் பலவற்றுடன், ஓரணுவினிடைப்புகுமோ - (பயந்) தோரணுவுக்கு ணுழையுமோ, உரைத்த - சொல்லிய, நின்சொல் - உனதுவசனம், இத்திறமே-இவ்வண்ணமே, ஒன்றுக்குமிசையாதாகுமென - ஒன்றுக்கும் பொருந்தாதென்று, லீலைசொல்லுதலும் - லீலைகூறவும், இறைவிசொல்வாள்-தேவிகூறுவாள்.

(இ-ரை.) மதர்த்த இந்திரன் யானையானது ஒரு கடுகினுடைய வொருபக்கத்தில் கட்டுப்படுமோ? மகம்மேருவானதுவந்து ஒரு தாமரை விதைக்குள் நுழைந்திருந்து ஓரளியின்பார்ப்பினால் மிகவு நெரியுமா? மசகமானது கோபித்து அடித்துப் போர்செய்ய சிங்கங்கள் பலவற்றுடன் பயந்தோரணுவுக்குள் நுழையுமோ? சொல்லிய உனது வசனம் இவ்வண்ணமே ஒன்றுக்கும்பொருந்தாதென்று லீலைகூறவும் தேவிகூறுவாள்—என்பதாம்.

(இ-ம்) வெளிப்படை. (உ அ)

### சிருஷ்டிகளின் பிராந்திநீங்க தத்துவமுபதேசித்தல்

பொய்யாக வுரைத்திலம்யா மிதனினுண்மைப்
  புகலக்கே ளெனைப்போல்வார் புத்தேணீதி
மெய்யாகக் கொள்வதலாற் பேதியார்கள்
  வேதியன்றன் சீவனவ னூரில்வீட்டி

லெய்யாமை யுறைகின்ற திந்தநாடு
 மிவ்வரசும் விண்வடிவே யிவற்றையெல்லா
மையாரும் விழிமடவா யந்தவிண்ணே
 வடிவான வவன்றனே மகிழ்ந்துபார்க்கும்.

(இ-ள்.) யாம் - நாம், பொய்யாகவுரைத்திலம் - பொய் சொல்லவில்லை, இதனினுண்மை - இதனுண்மையை, புகலக்கேள் - சொல்லக்கேட்பாய், எனைப்போல்வார் - என்னையொத்தவர்கள், புத்தேணீதி - ஈஸ்வரநியதியை, மெய்யாக-சத்தியமாக, கொள்வதலால் - கொள்ளுவதேயன்றி, பேதியார்கள் - பேதிக்கார்கள், வேதியன்றன்-பிராமணனுடைய, சீவன்-சீவனனது, அவனூரில் வீட்டில் - அவனகரத்திலுள்ளமனையில், எய்யாமை - அதிரிஸ்யமாய், உறைகின்றது - வசிக்கின்றது, இந்தநாடும் - இந்நாடுகளும், இவ்வரசும் - இப்பத்ம வரசாங்கமும், விண்வடிவே - (ஞா) ஞாகாயரூபமேயாம், இவற்றையெல்லாம் - இவையனைத்தையும், மையாரும்-மைதீட்டிய, விழிமடவாய் - கண்களையுடைய லீலாய், அந்தவிண்ணேவடிவான - அச்சிதாகாயமே படிவமாகிய, அவன்றனே - அவ்வசிட்டனே, மகிழ்ந்து பார்க்கும் - சந்தோஷித்து (மனுகாயத்திற்) பார்ப்பான்—எ-று.

**(இ-கா.) நாம் பொய் சொல்லவில்லை, இதனுண்மையைசொல்லக்கேட்பாய் என்னை யொத்தவர்கள் ஈஸ்வர நியதியைசத்தியமாகக்கொள்ளுவதேயன்றி பேதிக்கார்கள் பிராமணனுடைய சீவனனது அவனகரத்திலுள்ள மனையில் அதிரிஸ்யமாய் வசிக்கின்றது, இந்நாடுகளும் இப்பத்மவரசாங்கமும் ஞாகாயரூபமேயாம். இவையனைத்தையும் மைதீட்டிய கண்களையுடைய லீலாய் ! அச்சிதாகாயமே படிவமாகிய அவ்வசிட்டனே சந்தோஷித்து மனுகாயத்திற் பார்ப்பான்—என்பதாம்.**

(இ-ம்.) சர்வமுந் தானய்விளங்குகின்ற சைதன்யமே தனதபேதஞானத்தினற் பேதஞானத்தைத் தானகப் பார்க்குமென்பதாம். (உக)

**இதுவுமது.**

**தொன்மையா மந்தநினை வுங்களுக்குத்**
 **தோன்றுது வேறுகித் தோன்றுங்கண்டாய்**
**பன்மையா நனுநினைவு கனவிற்றேன்றுப்**
 **பரிசெனவிம் மரணத்தின் பான்மைதோன்றுத்**
**தன்மயமாஞ் சத்தினுல் விளங்குமந்தத்**
 **தடஞான விசும்பிடையோர் தனிமூலைக்கே**
**வன்மையா மிப்பூமி தோன்றிநிற்கு**
 **மனநினைவிற் கண்ணடியில் வயங்குமாபோல்.**

(இ-ள்.) தொன்மையாம் - பழமையாகிய, அந்தநினைவு - அந்த (ஞான) ஸ்புரணம், உங்களுக்குத்தோன்றுது-(இப்பொழு) துங்களுக்குத்தோ

ற்றுமல், வேறுகித்தோன்றும் - திரிஸ்யமாகத்தோற்றும், பன்மையானனு நினைவு - நாநாவிதமான சாக்கிரஸ்புரணம், கனவிற்றேன்றுப் பரிசென-சொற்பனத்திற்றேற்றுத தன்மையைப்போல, அம்மரணத்தின் பான்மைதோன்று - அந்தவசிட்டஸ்மரணத்தின்றன்மைதோற்றும (லிப்பதும ஸ்மரணத்தின் றன்மைதோற்றும்), தன்மயமாஞ்சத்ததனுல் - தானுகிய சத்தினுல், விளங்கும் - ப்ரகாசிக்கின்ற, அந்தத்தடஞானவிசும்பிடை - முற்கூறியவியாபகமான ஞானுகாயத்தில, ஓர்தனிமூலைக்கு - ஒருதனித்த பக்கத்தில், மனநினைவில் - மனேசங்கற்பத்திலும், கண்ணடியில் - ஆடியிலும், வயங்குமாபோல்-(அடுத்தசாயை) ப்ரகாசிக்கின்றதுபோல, வன்மையாமிப்பூமி - கடினமாயிருக்கின்ற விவ்வுலகமானது, தோன்றிநிற்கும் - தோற்றும்—எ-று.

(இ-ள.) பழமையாகிய அந்த ஞானஸ்புரணம் இப்பொழுதுங்களுக்குத் தோற்றுமல் திரிஸ்யமாகத் தோற்றும், நாநாவிதமான சாக்கிரஸ்புரணம் சொற்பனத்திற் றேற்றுத தன்மையைப்போல அந்தவசிட்டஸ்மரணத்தின் றன்மைத்தோற்றும லிப்பதும ஸ்மரணத்தின் றன்மைதோற்றும், தானுகிய சத்தினுல் ப்ரகாசிக்கின்றமுற்கூறிய வியாபகமான ஞானுகாயத்தில் ஒரு தனித்தபக்கத்தில் மனேசங்கற்பத்திலும், ஆடியிலும், அடுத்தசாயை ப்ரகாசிக்கின்றதுபோல கடினமாயிருக்கின்ற விவ்வுலகமானது தோற்றும்—என்பதாம்.

(இ-ம்.) சத்தாமாத்திரமாக விளங்குஞ் சைதன்னியத்தி னேகதேசஸ்புரணமே யுலகமுதலிய யாவுமென்பதாம். (௩௦)

இதுவுமது.

தெளிபரம வணுவாஞ்சிற் சொரூபத்தொன்றுஞ்
செகமெலா மொளியுருவாய்ச் செறிந்திருக்கு
மொளிபெறவுள் ளேயுள்ளே யாதலான்முன்
னுரைசெய்த பூமியுஞ்சித் துள்ளேதோன்றும்
வெளிபெறவீ தறியென்றே வாணிகூற
வேதியனெட் டாம்பகலில் வீந்தானென்று
மெளிதிலெமக் கநேகவரு டங்கள்போன
தென்னென லீலைக்குமீண் டிறைவிசொல்வாள்.

(இ-ள்.) ஒளியுருவாய் - ப்ரதிபாசாத்மகமாய், ஒன்றும் - பொருந்திய, சகமெலாம் - உலகங்களனைத்தும், தெளிபரமவணுவாம் - தெளிந்த பரமாணுவாகிய, சிற்சொரூபத்து - ஞானஸ்வரூபத்தில், ஒளிபெற - ப்ரகாசமாக, உள்ளேயுள்ளே - உள்ளுக்குள்ளே, செறிந்திருக்கும் - நெருங்கியிருக்கும், ஆதலால் - ஆதலினுல், முன்னுரைசெய்த - முற்கூறிய, பூமியும் - (பிராமணனிருந்த) பூமி (முதலானவை) களும், சித்துள்ளே தோன்றும்-

ஞானத்துட்டோற்றும், வெளிபெற-ப்ரத்யக்ஷமாக, ஈதறியென்று-இதைத்தெரிவாயென்று, வாணிகூற - சரஸ்வதிசொல்ல, வேதியன்-(அப்) பிராமணன், எட்டாம்பகலில் - எட்டாந்தினத்தில், வீந்தானென்றாய் - மரித்தானென்றுசொன்னாய், எளிதிலெமக்கு - எளிதாகவெங்களுக்கு, அநேக வருடங்கள் போனது - அநேகவருடங்கள்சென்றது, என்னெனலீலைக்கு-என்னவென்றுகேட்ட லீலைக்கு, மீண்டு - திரும்பவும, இறைவி சொல்வாள் - தேவியுரைப்பாள்—எ-று.

(இ-ள்.) ப்ரதிபாசாத்மகமாய்பொருந்திய வுலகங்களனைத்தும் தெளிந்த பரமாணுவாகிய ஞானஸ்வரூபத்தில் ப்ரகாசமாக உள்ளுக்குள்ளே நெருங்கியிருக்கும், ஆதலினால் முற்கூறிய பிராமணனிருந்த பூமிமுதலானவைகளும் ஞானத்துட்டோற்றும். ப்ரத்யக்ஷமாக இதைத்தெரிவாயென்று சரஸ்வதி சொல்ல அப்பிராமணன் எட்டாந்தினத்தில் மரித்தானென்றுசொன்னாய், எளிதாக வெங்களுக்கு அநேக வருடங்கள் சென்றது என்னவென்றுகேட்ட லீலைக்கு திரும்பவும் தேவியுரைப்பாள்—என்பதாம்.

(இ-ம்.) சைதன்னிய வியாபகத்திற் ப்ரதிபாமாத்திரமாய்த்தோற்றுகின்ற சகலசகத்தும் அதன் சுப்ரகாசமே யென்பதாம். (௫௧)

எண்டின மனேகதினமான தெங்ஙனமெனின்-வேறு.

தேயநீடியில் லாமைபோற் காலமுஞ் சிறிதுநீளியதல்ல
மாயபேதமிற் சிற்சுடர்தோன்றிடு மாத்திர மொழிந்தில்லை
மேயபொய்மர ணத்தினாலொரு கணமெய்ம்மறந்திடச் சீவன்
போயதன்னபா வனைமறந்திப்பவம் பொருந்து பாவனையெய்தும்.

(இ-ள்.) தேயநீடியில்லாமைபோல் - (முன்சொல்லிய சித்துவிலாசமாய்விளங்கிய) தேசத்துக்கு விபுத்துவமில்லாததுபோல, காலமுஞ்சிறுது நீளியதல்ல - காலத்துக்குமற்பமும்விபுத்துவமில்லை, மாயபேதமில்-மாயாவிகற்பமில்லாத, சிற்சுடர் - ஞானப்ரகாசமானது, தோன்றிடுமாத்திர மொழிந்து - தோற்றுதன்மாத்திரமன்றி, இல்லை - (காலதேசத்தினளவுவே) றில்லை, மேயபொய்மரணத்தினால் - பொருந்திய மித்தியாமரணத்தினால், ஒருகணமெய்மறந்திட - ஒருக்ஷணம் ப்ரஞாபங்கம்வர, சீவன்போயது - சீவன்பிரிந்துபோனது, அன்னபாவனைமறந்தும்-முன்சரீரபாவனையைமறந்து, இப்பவம்பொருந்து - இச்சநநத்திற்பொருந்திய, பாவனையெய்து - பாவனையையடையும்—எ-று.

(இ-ள்.) முன்சொல்லிய சித்துவிலாசமாய்விளங்கிய தேசத்துக்கு விபுத்துவமில்லாததுபோல காலத்துக்கு மற்பமும்விபுத்துவமில்லை. மாயாவிகற்பமில்லாத ஞானப்ரகாசமானதுதோற்றுதன்மாத்திரமன்றி காலதேசத்தினளவு வேறில்லை, பொருந்திய

மித்தியாமரணத்தினால் ஒருக்ஷணம் ப்ரஞானபங்கம்வர சீவன்பிரிந்துபோனது, முன் சரீரபாவனையைமறந்து இச்சநநத்திற்பொருந்திய பாவனையையடையும்—என்பதாம்.

(ப-ம்.) ஞானத்துக்கு விபுத்துவமேயன்றிக் காலத்துக்கில்லையென்பார் சிற்சுடர்தோன்றிடுமாத்திர மொழிந்தில்லையென்றார். (௫௨)

இதுவுமது.

தாங்குகின்ற தீங்கிதுவிதனான் மிகதாங்கிடப் படுவோனும்
வீங்குகின்ற நம்மெய்யிது பிதாவிவன்வீவ தித்தனையாண்டிங்
கோங்குகின்ற நஞ்சுற்றமீதின்ப மாயுறைவிட மிதுவென்றே
தேங்குகின்றபொய்மரணமூற்சைத்திறந்தெளிந்தபின்சிந்திக்கும்.

(இ-ள்.) ஈங்கிது - இவ்விடத்திலிது, தாங்குகின்றது - (நம்மைத்)தாங்குகின்றது, இதனான்மிகத்தாங்கிடப்படுவோனும் - இதனான்மிகவுஞ்சுமக்கப்படுகின்றவனும், இது - ஈது, வீங்குகின்றநம்மெய் - பருக்கின்றநமது சரீரம், இவன்பிதா - இவ (னமது) தந்தை, வீவதித்தனையாண்டு - இறப்பதித்தனைவருடத்தில், ஈது - இது, இங்கோங்குகின்ற நஞ்சுற்றம் - இங்கு விருத்தியாகின்ற நமது பந்துக்கள், இது - இது, இன்பமா யுறைவிடமென்று - பிரியமாய் வசிக்கின்ற ஸ்தானமென்று, தேங்குகின்றபொய் - மிகுகின்ற மித்தையாகிய, மரணமூற்சைத்திறம் - மரணமூற்சையின்றன்மை, தெளிந்தபின் - தெளிந்தபின்பு, சிந்திக்கும் - (சீவன்) சிந்திப்பன்—எ-று.

(இ-ரை.) இவ்விடத்திலிது நம்மைத்தாங்குகின்றது, இதனான் மிகவுஞ் சுமக்கப்படுகின்றவனும், ஈது பருக்கின்ற நமது சரீரம், இவ னமது தந்தை, இறப்ப தித்தனைவருடத்தில், இதுஇங்கு விருத்தி யாகின்ற நமது பந்துக்கள், இது பிரியமாய்வசிக்கின்ற ஸ்தானமென்று மிகுகின்ற மித்தையாகிய மரணமூற்சையின்றன்மை தெளிந்தபின்பு சீவன் சிந்திப்பன்—என்பதாம்.

(ப-ம்.) முற்பவத்துள்ள வறிவுமயங்கிப் பிற்பவமெடுக்கினு மஃதுந் தெளிந்தவிடத்துத் தெரியுமென்பார் மரணமூற்சைத்திறந் தெளிந்தபின் சிந்திக்குமென்றார். (௫௫)

இதுவுமது.

ஆதலான்முதற் பவமறைந்திம் பவமறியலா யினதென்னப்
போதமாம்விழி நீதரவகோ வகோபுரணமாய்த்தெளிவுற்றேன்
காதறீர்வுறவ னையவருறைவிடங் காட்டென விவளோத
வேதநாயகி யுரைசெய்வா ளதற்கிந்தவினையுடல் விலங்காகும்.

(இ-ள்.) ஆதலால் - ஆகையினால், முதற்பவமறைந்து - முற்செநநமறைபட்டு, இப்பவம் - இப்பிறப்பு, அறியலாயினதென்ன - அறியப்பட்ட

தென்று (சரஸ்வதி) சொல்ல, போதமாம்விழி - ஞானமாகிய கண்ணே, நீதர - நீயனுக்கிரகஞ்செய்ய, அகோவகோ - ஆச்சரியமாச்சரியம், புரண மாய்த்தெளிவுற்றேன் - பூர்ணமாகத்தெளிந்தேன், காதநீர்வுற - (இதயக் கிரந்தியாகிய) விச்சை தீரும்படி, அனையவர் - இவ்வசிட்டாதிகள், உறை விடங்காட்டென - வசிக்குமிடத்தைக்காண்பியென்று, இவளோத - இந்த லீலைசொல்ல, வேதநாயகியுரைசெய்வாள் - தேவஸ்வரூபியாகிய சரஸ்வதி சொல்வாள், அதற்கு - அதைக்காண்பதற்கு, இந்த வினையுடல் விலங்காகும் - இவ்வினைவடிவமான தூலசரீரந்தடை யாகும்—எ-று.

(இ-ஷா.) ஆகையினால் முற்செநந மறைபட்டு இப்பிறப்பு அறியப்பட்டதென்று சரஸ்வதிசொல்ல, ஞானமாகிய கண்ணே நீயனுக்கிரகஞ்செய்ய ஆச்சரியமாச்சரியம்! பூர்ணமாகத்தெளிந்தேன். இதயக்கிரந்தியாகிய விச்சை தீரும்படி இவ்வசிட்டாதிகள்வசிக்குமிடத்தைக் காண்பியென்று இந்த லீலைசொல்ல தேவஸ்வரூபியாகிய சரஸ்வதி சொல்லுவாள், அதைக்காண்பதற்கு இவ்வினை வடிவமான தூலசரீரந் தடையாகும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) சீவனானவன் விஸ்வனாய் நனவினின்று நித்திரை மயக்கத்தாற் கனவிற்சென் றஃதிலோர் கடிகையி லநேகங்கடிகையின் சங்கதிகளைச் சத்தியமாகக் காண்பதுபோலச் சித்தானது பிராணனாய் முற்பவத்தினின்று மரணமயக்கத்தாற் பிறபவத்திற்சென் றஃதமறந் திஃதில் விழித்துச் சிந்தித்த சங்கற்பஞ் சத்தியாக வேண்டின வெகுதினமாகத் தோற்றினதேயன்றி வேறின்றென்பதாம். (நுச)

---

முற்பவத்தை யறியவேண்டுமென்றதற் குபதேசித்தல்.

இந்தயாக்கையைமறந்துவேறறிவ தற்றிலங்குசிற்சுடர்மெய்யா
மந்தநல்லறிவே வடிவாய்மல மறுத்தியே லதுகூடுந்
தந்தமக்கொரு வடிவிலாவுலகங் கடமணியம் பணியாகி
வந்தவாறெனவுங் கண்மோகத்தினுன் மதித்திடப் படுமன்றே.

(இ-ள்.) இந்தயாக்கையைமறந்து - இச்சரீரத்தைமறந்து, வேறறிவதற்று - விஸ்மரணமின்றி, இலங்கு - விளங்காநின்ற, சிற்சுடர் - ஞானப்ரகாசமாகியும், மெய் - சத்தாகியுமிருக்கின்ற, அந்தநல்லறிவே - அவ்வானந்தபோதமே, வடிவாய் - ஸ்வரூபமாய், மலமறுத்தியேல் - (மாயா) மலத்தை நீக்குவையாயின், அதுகூடும் - அவ்விடத்தைப்பார்க்கலாம், தந்தமக்கொருவடிவு - தங்களுக்கென்றோருருவம், இலா - (பிரமத்தையன்றிவே) றில்லாத, உலகங்கள் - சகங்களாக, தமனியம்பணியாகி - சுவணமாபரணமாய், வந்தவாறென - வந்தவகையைப்போல, உங்கண்மோகத்தினால் - உங்கண்மயக்கத்தினால், மதித்திடப்படும் - அறியப்படும்—எ-று.

(இ-ளா.) இச்சரீரத்தைமறந்து விஸ்மரணமின்றிவிளங்காநின்ற ஞானப்ரகாசமாகியும், சத்தாகியுமிருக்கின்ற அவ்வாநந்த போதமே ஸ்வரூபமாய் மாயாமலத்தைநீக்குவையாயின் அவ்விடத்தைப்பார்க்கலாம் தங்களுக்கென்றோருருவம் பிரமத்தையன்றி வேறில்லாத சகங்களாக சுவணமாபரணமாய் வந்தவகையைப் போல உங்கள் மயக்கத்தினால் அறியப்படும்—என்பதாம்.

(இ-ம்.) திரிஸ்யநீங்கித் திருக்குவடிவமாயிற் றெரிசிக்கலா மென்பதாம்.()

இதுவுமது.

தத்துவம்பயில் வாதனையன்றியே சகங்கடன் மயமாகா
மெத்துசெய்தொழில் விட்டிலையாதலான் மேவுதற்கரிதுன்னாற்
சுத்ததற்பத மெம்மனோர்நிற்பது தொடர்மன வடிவாக
வைத்தசூக்கமெய் தீர்க்கபாவனையினால் வளர்ந்து பேருடலாகும்.

(இ-ள்.) தத்துவம்பயில் - உண்மை (ஞானத்தைப்) பயிர்ச்சி செய்கின்ற, வாதனையன்றி - (சுத்த) வாசனையைத்தவிர, சகங்கடன்மயமாகா - உலகங்களாத்மஸ்வரூபமாகாது, மெத்துசெய்தொழிலில் விட்டிலை - மிருதுவாகச் செய்கின்ற (சக) விருத்தியை நீக்கினையில்லை, ஆதலால் - ஆகையால், உன்னான்மேவுதற்கரிது - உன்னாலடையப்படாது, சுத்ததற்பதம்- பரிசுத்தமான பிரமத்தில், எம்போன்றவர்களிருப்பது, தொடர்மனவடிவாக - (உன்போன்றவர்களுக்கு) த் தொடராநின்ற மனோரூபமாக, வைத்த சூக்கமெய் - வைத்திருக்கின்ற சூட்சுமசரீரம், தீர்க்கபாவனையினால் - மிகுந்த பாவனையினால், வளர்ந்துபேருடலாகும்-வளர்ந்துதூலசரீரமாகும்.

(இ-ளா.) உண்மைஞானத்தைப் பயிர்ச்சிசெய்கின்ற சுத்த வாசனையைத்தவிர உலகங்க ளாத்மஸ்வரூபமாகாது. மிருதுவாகச் செய்கின்ற சகவிருத்தியை நீக்கினையில்லை, ஆகையால் உன்னலடையப்படாது. பரிசுத்தமான பிரமத்தில் எம்போன்றவர்களிருப்பது உன்போன்றவர்களுக்குத் தொடரா நின்ற மனோரூபமாக வைத்திருக்கின்ற சூட்சுமசரீரம் மிகுந்த பாவனையினால் வளர்ந்து தூலசரீரமாகும்—என்பதாம்.

(இ-ம்.) சாதனமன்றிச் சாத்தியங்கூடாதென்பதாம். (௩௬)

இதுவுமது.

கட்டியாம்பனி வெம்மையாற் கரைந்துபோங்கணக் கென மெய்ஞ்ஞானஞ். சுட்டிநோக்கலும்வாதனைவிடுதலுந்தூலமாமுடல் விட்டுத், திட்டமாகிய சூக்கமெய்நிலை பெறுஞ்சீவன் முத்தியுமாகு, முட்டஞானமே நிறையுமுன்னிவ்வுட னிறுத்தி முற்பவங் காண்பாய்.

(இ-ள்.) பனியாம் - பனியினாலாகிய, கட்டி - கட்டியானது, வெம்மையால் - சூரியகிரணத்தினால், கரைந்துபோங்கணக்கென - கரைந்து (செலமாகின்ற) முறைமைபோல, மெய்ஞ்ஞானஞ்சுட்டி நோக்கலும் - (உனது)மெய்ஞ்ஞானத்தைக்குறித்துப் பார்ப்பதினாலும், வாதனைவிடுதலும் - வாசனையை விடுதலினாலும், தூலமாமுடல்விட்டு - ஆதிபௌதிக சரீரத்தைவிட்டு, திட்டமாகிய சூக்கமெய் - நிலவரமான வாதிவாகிக சரீரம், நிலைபெறும் - நிலையாக நிற்கும், சீவன்முத்தியுமாகும் - சீவன்முத்தியுமாம், முட்டஞானமேநிறையும் - பூர்ணஞானமே நிறையும், உன்னிவ்வுடனிறுத்தி - உனதிச்சரீரத்தை யந்தமட்டுநிறுத்தி, முற்பவங்காண்பாய் - (ஆதிவாகிகசரீரத்தால்) முந்தின சிருட்டியைப்பார்ப்பாய்—எ-று.

(இ-ரை.) பனியினாலாகிய கட்டியானது சூரியகிரணத்தினால் கரைந்து சலமாகின்ற முறைமைபோல உனது மெய்ஞ்ஞானத்தைக்குறித்துப் பார்ப்பதினாலும் வாசனையை விடுதலினாலும் ஆதிபௌதிகசரீரத்தைவிட்டு நிலவரமான வாதிவாகிகசரீரம் நிலையாக நிற்கும், சீவன்முத்தியுமாம், பூரணஞானமேநிறையும், உனதிச்சரீரத்தையந்தமட்டு நிறுத்தி ஆதிவாகிக சரீரத்தால் முந்தின சிருஷ்டியைப்பார்ப்பாய்—என்பதாம்.

(இ-ம்.) ஞானதிருஷ்டியினாலாதிபௌதிக சரீரங்கரைந்தாதிவாகிக சரீரமாகிச் சங்கற்பித்ததைப் பார்க்கவேண்டுமென்பதாம். மெய்ஞ்ஞானஞ்சுட்டி நோக்கலும் வாதனைவிடுதலு மென்பதற்குதாரணம் (சூதசம்மிதை) சொச்சமான சித்தவிருத்தியையடைந்து விருத்தி சாக்ஷியாயிருக்கின்றவ னவ்விருத்தியோடுங்கூடநிவிர்த்திக்கத்தக்கதாயிருக்கின்றவஞ்ஞானத்தைத்தனது தேயுசினாலே பக்ஷிக்கின்றான். (௩௭)

அஃதடையு மப்பியாசவிலக்கணம் யாதேனின்.

என்றவாணியை யத்திறனியற்றுமா றென்னெனவிவள்கேட்கத்
துன்றுசிந்தையும்வசனமுமுசாவுமத்தொல்பொருட்பொருட்டாகி
நின்றவின்பமு முதாரமுவிராகமு நிறைந்துநீள் சகமென்று
மொன்றுமில்லெனக் கலைவழியூகமா யுணர்வர்சாதக ராணோர்.

(இ-ள்.) என்றவாணியை - இப்படியென் றனுக்கிரகித்த சரஸ்வதியை, அத்திறன் - அந்தப்ரகாரம் (வர), இயற்றுமாறென்னென - முயற்சிக்குந்தன்மையென்னவென்று, இவள் கேட்க - இந்த லீலையானவள் கேட்க, வசனமும் - சிரவணமும், உசாவும் - மனனமும், துன்று சிந்தையும் - நிறைந்த நிதித்யாசனமும், அத்தொல் - அப்பழமையான, பொருட்பொருட்டாகி - வஸ்துவினிடமான நிஷ்டையாய், நின்ற வின்பமும் - நிலையா

ன வானந்தமும், உதாரமும் - சகலத்தியாகமும், விராகமும் - நிராசையு ம், நிறைந்து - பூரணமாய், நீள்சகம் - நீண்ட வுலகமென்பது, என்றும் - எப்பொழுதும், ஒன்றுமில்லென - ஒன்றுமில்லையென்று, கலைவழி - வேதநூல் மார்க்கத்தினுல், யூகமாய் - யுத்தியாய், சாதகரானேர் - அற்பியாசியானவர்கள், உணவர் - (அனுபவமா) யறிவார்கள்—எ-று.

(இ-ள.) இப்படியென்றனுக்கிரகித்த சரஸ்வதியை அந்தப் ரகாரம் வர முயற்சிக்குந்தன்மை யென்னவென்று இந்த லீலையானவள் கேட்க சிரவணமும் மனனமும் நிறைந்த நித்யாசனமும் அப்பழமையான வஸ்துவினிடமான நிஷ்டையாய்நிலையான வாநந்தமும் சகலத்தியாகமும் நிராசையும் பூரணமாய் நீண்ட வுலகமென்பது எப்பொழுதும் ஒன்றுமில்லையென்று வேதநூல் மார்க்கத்தினுல் யுத்தியாய் அற்பியாசியானவர்கள் அனுபவமா யறிவார்கள்—என்பதாம்.

(இ-பி) இந்திரியமுதலிய கரணங்களியாவையு மகமுகப்படுத்தி யதனுற்சுகசென்னியமானவிடத்திற்றிரிஸ்யமில்லையென்றனுஷ்டிப்பதே சாதகமென்பதாம்.

இதுவுமது.

அகமிதங்களிச் சிருட்டியின்முன் வரும்பாவ மாதலினென்று
மிகவுமில்லெனத் தெளிதருபோதமும் வேறுகாண் பனவற்று
நிகழுஞானத்தாற் காமமேமுதற் பகைநீங்கிட வந்தெய்துஞ்
சுகமுமென்றிவை சாதகமாகவே தொடர்வர் சாதகரானேர்.

(இ-ள்.) அகமிதங்கள் - (நானிது வென்னுஞ்சகங்) கள், இச்சிருட்டியின்முன் - இந்தச்சிருட்டியாதியில், வரும்பாவமாதலின் - உண்டாகாதபடியினுல், என்று மிகவுமில்லென - எப்பொழுது மில்லவே யில்லையென்று, தெளிதருபோதமும் - தெளிந்தஞானமும், வேறுகாண்பனவற்று - திரிஸ்யதிருஷ்டிநீங்கி, நிகழுஞானத்தால் - ப்ரகாசிக்கின்ற ஞானத்தினுல், காமமுதற்பகை - ராகத்துவேடாதிக ளென்னுஞ் சத்துருக்கள், நீங்கிட - பிரிந்திட, சுகமும்-இன்பமும், வந்தெய்துமென்று - வந்தடையுமென்று, இவைசாதகமாகவே - இவை யற்பியாசமாகவே, தொடர்வர் - தொடர்வர்கள், சாதகரானேர் - (பிர) மாற்பியாசிகள்—எ-று.

(இ-ள.) நானிதுவென்னுஞ் சகங்கள் இந்தச் சிருஷ்டியாதியில் உண்டாகாதபடியினுல் எப்பொழுதுமில்லவே யில்லையென்று தெளிந்த ஞானமும் திரிஸ்யதிருஷ்டி நீங்கி ப்ரகாசிக்கின்ற ஞானத்தினுல் ராகத்துவேடாதிகளென்னுஞ் சத்துருக்கள் பிரிந்திட இன்பமும் வந்தடையுமென்று இவை யற்பியாசமாகவே தொடர்வர்கள் பிரமாற்பியாசிகள்—என்பதாம்.

(இ-ம்.) சகலமு மத்தியந்தா பாவமென் றெதிரற்றறிந்த ஞானத்தி னுலானந்தத்தை யடைய வனுஷ்டிப்பதே சாதகமென்பதாம். (௫௧)

## சாதனமுதிர்ந்து சாத்தியமாதல்.

ஞேயமின்றிய ஞானமேஞானமு நினைத்துமேற் பெறும்பேறு
மாயவந்நிலைப் பரிசயமுத்தியென் றதிற்பரி சயம்பண்ணற்
றூயதோற்றரவென் றந்தவிரவிலே சொன்னவ ரிருவோருங்
காயவாதனை யறிவறச்சமாதியைக் கலந்தசைவற நின்றார்.

(இ-ள்.) ஞேயமின்றியதிரி-திரிஸ்ய (ஸ்மரண) மில்லாத, ஞானமே - அறிவே, ஞானமும் - சைதன்னியமும், மேற்பெறும் - மேலடைகின்ற, பேறுமாய் - (ஆத்ம) லாபமுமாய், நினைத்து - சிந்தித்து, அந்நிலை - அப்பிரமநிச்சயத்தை, பரிசயம் - அப்பியாசஞ்செய்வதே, முத்தியென்று - நிர்வாணசுகமென்று, அதிற்பரிசயம்பண்ணல் - அதிலப்பியாசிப்பதே, தூய-பரிசுத்தமான, தோற்றரவென்று - (ஞா)ஞேதயமென்று, அந்தவிரவில்-அவ்விராத்திரியில், சொன்னவரிருவோரும் - பேசினசரஸ்வதியும் லீலையும், காயவாதனையறிவற - சரீரவாதனையின்றி, சமாதியைக்கலந்து-(ஸ்வரூப) சமாதியிற்பொருந்தி, அசைவறநின்றார் - நிச்சலமாயிருந்தார்கள்—எ-று.

(இ-ஙா.) திரிஸ்யஸ்மரணமில்லாத அறிவே சைதன்னியமும், மேலடைகின்ற ஆத்மலாபமுமாய் சிந்தித்து அப்பிரமநிச்சயத்தை அப்பியாசஞ்செய்வதே நிர்வாணசுகமென்று அதிலப்பியாசிப்பதே பரிசுத்தமான ஞாஞேதயமென்று அவ்விராத்திரியில் பேசின சரஸ்வதியும் லீலையும் சரீரவாதனையின்றி ஸ்வரூபசமாதியிற் பொருந்தி நிச்சலமாயிருந்தார்கள்—என்பதாம்.

(இ-ம்.) முன்போதித்திருந்த பரோக்ஷஞானம் அபரோக்ஷமாம்பொருட்டுச்சாதகரிலக்கணம்போதிக்கும்போதே சாதனமுதிர்ந்து சாத்தியமாயாதி பௌதிகங்கரைந் தாதிவாகிகஸ்வரூப மாயபேதமானதென்பதாம்.

## தனது வியாபகத்திலுண்டாயிருக்கின்ற பிரபஞ்சிருஷ்டியை யாதிவாகிக சரீரத்தாற் காணச்செல்லுதல்.

அங்குலங்கள்பத்தளவென வறிவினுலாகியவடிவுற்ற
மங்கைதன்னெடுமுன்னுள ஞானத்தால்வபங்கியகலைமாதுந்
துங்கவிண்ணிடையெழுந்தன ளளவறு தூரநீங்கிடவேகிப்
பொங்குமூழியினெடுங்கடலனையவான் புகுந்திவையிவைகண்டார்.

(இ-ள்.) அங்குலங்கள் பத்தளவென - பத்தங்குலப் பிரமாணமென்னும்படி, அறிவினாலாகியவடிவுற்ற-ஞானாகாரமான, மங்கைதன்னொடும்-லீலையோடும்,முன்னுளஞானத்தால்-முன்புள்ளஞானசரீரத்தால்,வயங்கிய கலைமாதும் - ப்ரகாசித்த சரஸ்வதியும், துங்கம்-உயர்வாகிய, விண்ணிடை-ஆகாயத்தில், எழுந்தனர் - எழும்பினார்கள், அளவறுதூரம் - வெகுதூரம், நீங்கிடவேகி - நீங்கும்படிசென்று, பொங்கும் - பொங்காநின்ற, ஊழியினெடுங்கடல் - பிரளயமகாசமுத்திரத்துக்கு, அனைய - ஒப்பாகிய, வான்புகுந்து - ஆகாயத்திற்சென்று, இவையிவைகண்டார் - இவையிவைகளைப் பார்த்தார்கள்—எ-று.

(இ-ரை) பத்தங்குலப்பிரமாணமென்னும்படி ஞானாகாரமான லீலையோடும் முன்புள்ள ஞானசரீரத்தால் பிரகாசித்த சரஸ்வதியும் உயர்வாகிய ஆகாயத்தில் எழும்பினார்கள். வெகுதூரம் நீங்கும்படிசென்று பொங்காநின்ற பிரளய மகாசமுத்திரத்துக்கு ஒப்பாகிய ஆகாயத்திற்சென்று இவையிவைகளைப்பார்த்தார்கள்.

## (இதுவுமது)

மட்டிலாததாய்த் தெளிந்துகோமளமதாய் மந்தமாருதத்தின்ப
முட்டிலாததாம் விசும்பிடைமனத்தினு முடுகுசித்தர்கடென்றி
யட்டமெங்கணு மரக்கரும்பிசாசரு மளவின்றிநாய்காக
மொட்டகங்கரம்போன்முகயோகினியொழுங்குவிண்ணுழல்வுற்று

(இ-ள்.) மட்டிலாததாய் - அளவில்லாததாயும், தெளிந்துகோமளமதாய் - தெளிந்திருக்கின்றமிருதுவாயும், மந்தமாருதத்து - தென்றற்காற்றினது, இன்பமுட்டில்லாததாம் - சுகந்தடையில்லாததாயுமிருக்கின்ற, விசும்பிடை - (சிதா) காயத்தில், மனத்தினுமுடுகும் - மனோவேகத்திலும் வேகமாய் (ச்சஞ்சரிக்கின்ற), சித்தர்கடென்றி - சித்தர் (கணங்க) ணிறைந்து, அட்டமெங்கணும் - எட்டுத்திசைகளிலும், அரக்கரும் - இராட்சதர்களும், பிசாசரும்-பிசாசர்களும், அளவின்றி - கணக்கற் (றிருக்கின்ற) ; நாய் - ஞாளியைப்போலவும், காகம் - காக்கையைப்போலவும், ஒட்டகம் - ஒட்டையைப்போலவும், கரம்போல்-கழுதையைப்போலவுமிருக்கின்ற, முகம் - வதனங்களையுடைய, யோகினி - யோகினிகள், ஒழுங்கு - வரிசையாக, விண் - ஆகாயத்தில், உழல்உற்று - சுழன்று—எ-று.

(இ-ரை.) அளவில்லாததாயும், தெளிந்திருக்கின்ற மிருதுவாயும், தென்றற்காற்றினது சுகந்தடையில்லாததாயு மிருக்கின்ற சிதாகாயத்தில் மனோவேகத்திலும் வேகமாய்ச் சஞ்சரிக்கின்ற சித்தர்கணங்கணிறைந்து எட்டுதிசைகளிலும், இராட்சதர்களும், பிசாசர்களும், கணக்கற்றிருக்கின்ற ஞாளியைப்போலவும், காக்கையைப்போலவும், ஒட்டையைப்போலவும், கழுதையைப்போலவு

மிருக்கின்ற வதனங்களையுடைய யோகினிகள் வரிசையாக ஆகாய த்தில் சுழன்று—என்பதாம். (சஉ)

(இதுவுமது.)

களிகொணடகத்திடாகினித்திரள் கடுங்காற்றினுற்றிரிகின்ற
வெளிறுகங்கையுஞ்சுவரிலா மனையிடைமேவிவீணையின்பாட
றெளியுநாரதத்தும்புருகானமுஞ் சித்திரத்தினிற்கோட்டுந்
துளிகொள்கற்பத்தின்முகில்களுமாதர்தந்தொகுதியுமுளதாகி.

(இ-ள்.) களிகொணடகத்து-களிப்புள்ள நிருத்தத்தையுடைய, இடாகினித்திரள்களும் - இடாகினிக்கூட்டங்களும், கடுங்காற்றினுற்றிரிகின்ற - வேகமுள்ளவாயுவினுற் சஞ்சரிக்கின்ற, வெளிறுகங்கையும் - வெண்மையான கங்காநதியும், சுவரிலாமனையிடமேவி - சுவரில்லாதவீட்டிற்பொருந்தி, வீணையின்பாடல் - வீணுகானத்தில், தெளியும் - தெளிகின்ற, நாரதத்தும்புருகானமும் - நாரதர் தும்புருகானங்களும், கோட்டும் - எழுதப்பட்ட, சித்திரத்தின்-சித்திரத்தைப்போல,இல் - (சத்த) மில்லாமல், துளிகொள்-வருஷிக்கின்ற, கற்பத்தின்முகில்களும்-கற்பாந்தமேகங்களும், மாதர்தந்தொகுதியும் - மகளிர்கூட்டங்களும், உளதாகி - உண்டாகி—எ-று.

(இ-ை.) களிப்புள்ள நிருத்தத்தையுடைய இடாகினிக்கூட்டங்களும், வேகமுள்ள வாயுவினுற்சஞ்சரிக்கின்றவெண்மையான கங்காநதியும், சுவரில்லாத வீட்டிற்பொருந்தி வீணுகானத்தில் தெளிகின்ற நாரதர் தும்புருகானங்களும், எழுதப்பட்டசித்திரத்தைப்போல சத்தமில்லாமல் வருஷிக்கின்றகற்பாந்தமேகங்களும், மகளிர்கூட்டங்களும் உண்டாகி—என்பதாம். (சரு)

(இதுவுமது.)

எல்லையின்றியயோசனைதூரங்க ளியார்க்குமெய்தரிதாகிக்
கல்லையொத்தறவிறுகுறத்திரண்ட நீள்காரிருளுடைத்தாகி
யொல்லையோடுதேரிரவியுங்கனலுமேயொப்பதாமொளியுண்டாய்ச்
சொல்லுமித்திரளியாவையும்பற்பல விடந்தொறுந்தொடர்வுற்று.

(இ-ள்.) எல்லையின்றிய - அளவில்லாத, யோசனைதூரங்கள் - பதின் கடிகைதூரங்களில், இயார்க்குமெய்தரிதாகி - எவர்க்குமடையக்கூடாததாகியும், கல்லையொத்து - பாடாணத்துக்கொப்பாய், அற - மிகவும், இறுகுறத்திரண்ட கெட்டியாகத்திரண்டிருக்கின்ற, நீள்காரிருளுடைத்தாகி-மிகுந்தகருமையானவிருளையுடையதாயும், ஒல்லையோடு - சீக்கிரமாகச்செல்கின்ற, தேரிரவியும் - இரதத்தையுடைய சூரியனும், கனலும் - அக்கினியும், ஒப்பதாம் - சமானமாகிய, ஒளியுண்டாய்-ப்ரகாசத்தையுடையதாயும், சொல்லும் - சொல்லப்பட்ட, இத்திரள்யாவையும் - இக்கூட்டங்களியாவையு (முடைய) , பற்பலவிடந்தொறும் - பலபலவிடங்களிலும், தொடர்வுற்று- தொடர்ந்து—எ-று.

(இ-ள.) அளவில்லாத பதின்கடிகைதூரங்களில் எவர்க்குமடையக்கூடாததாகியும், பாடாணத்துக்கொப்பாய் மிகவும் கெட்டியாகத்திரண்டிருக்கின்ற மிகுந்த கருமையான விருளையுடையதாயும் சீக்கிரமாகச் செல்கின்ற இரதத்தையுடைய சூரியனும், அக்கினியும் சமானமாகிய ப்ரகாசத்தையுடையதாயும், சொல்லப்பட்ட இக்கூட்டங்க ளியாவையு முடைய பலபல விடங்களிலும் தொடர்ந்து—என்பதாம். (சச)

(இதுவுமது.)

கொதுகினீடிரளத்தியின்காயிடைக் குமுறுவதெனவெங்குஞ்
சதுமுகன்றருமுயிரெலாமணைவுறுந் தன்மைமூன்றுலகுண்டா
மதுலவானகங்கடந்தனர்மீட்டுமோ ரவனியின்வரவெண்ணிப்
பதுமவண்டத்தை நீக்கிவேறண்டத்திற் பருப்பதநகர்புக்கார்.

(இ-ள்.) கொதுகினீடிரள்-கொசுகின்பெருங்கூட்டங்கள், அத்தியின் காயிடை - அத்திக்கனியிடத்தில், குமுறுவதென - சப்திப்பதுபோல, எங்கும் - எவ்விடங்களிலும், சதுமுகன்றரும் - பிரமனுண்டாக்கிய, உயிரெலாம் - சீவர்களியாவும், அணைவுறுந்தன்மை - சேர்ந்திருக்குங்குணமுள்ள, மூன்றுலகுண்டாம் - திரிபுவனங்களையுடைய, அதுலவானகங்கடந்தனர் - சமானமில்லாதவாகாயத்தைத்தாண்டினார், மீட்டும் - திரும்பவும், ஓரவனியின்வரவெண்ணி - ஒரு பூமியைச்சேரச்சிந்தித்து, பதுமவண்டத்தை நீக்கி - பிரமாண்டத்தைக்கடந்து, வேறண்டத்தில் - வசிட்டனிருந்தலோகத்தில், பருப்பத நகர்புக்கார் - கிரிக்கிராமமென்னும் பட்டணத்தை யடைந்தார்கள்—எ-று.

(இ-ளா.) கொசுகின்பெருங்கூட்டங்கள் அத்திக்கனியினிடத்தில் சப்திப்பதுபோல எவ்விடங்களிலும் பிரமனுண்டாக்கிய சீவர்களியாவும் சேர்ந்திருக்குங் குணமுள்ள திரிபுவனங்களையுடைய சமானமில்லாத வாகாயத்தைத் தாண்டினார், திரும்பவும் ஒரு பூமியைச்சேரச் சிந்தித்து பிரமாண்டத்தைக்கடந்து வசிட்டனிருந்தலோகத்தில் கிரிக்கிராமமென்னும் பட்டணத்தை யடைந்தார்கள்—என்பதாம்.

(இ-ரு-ச-ம்.) ஆத்மவியாபகத்திலுண்டான ஸ்புரண விசித்திரங்களை யதுதானேபார்த் ததிசயித்ததாம். (சரு)

புத்திரரைக்காண்டல்—வேறு.

வினையர்சுற்றமுந் தனையருந்துக்க மாய்வெம்பு
மனையவேதியன் மனைபுகுந்தார்கண்ணி லனுகா

ரிணையபோதின்மெய் சங்கற்பமெய்திய லீலை
மணையுளோரெமைக் காண்கெனச்சங்கற்பம் வகுத்தாள்.

(இ-ள்.) வினையர் - ஏவற்காரரும், சுற்றமும் - உறவினரும், தனையரும் - புத்திரரும், துக்கமாய்வெம்பும் - துன்பமாகவாடுகின்ற, அனையவேதியன் - அப்பிராமணனது, மணைபுகுந்தார் - வீட்டினுழைந்தவர்கள், கண்ணிலணுகார்-(அவர்களுக்) கதிரிஸ்யமாயிருக்கும், இனையபோதில் - இப்படிப்பட்ட சமயத்தில், மெய்சங்கற்பம் - சத்தியசங்கற்பத்தை, எய்தியலீலை- அடைந்த லீலையானவள், மணையுளோர் - வீட்டின்கணுள்ளவர், எமைக் காண்கென - எங்களைப்பார்க்கக்கடவார்களென்று, சங்கற்பம் வகுத்தாள்- சங்கற்பஞ்செய்தாள்—எ-று.

(இ-ை.) ஏவற்காரரும், உறவினரும்,புத்திரரும், துன்பமாக வாடுகின்ற அப்பிராமணனது வீட்டி னுழைந்தவர்கள் அவர்களுக் கதிரிஸ்யமாயிருக்கும், இப்படிப்பட்ட சமயத்தில் சத்தியசங்கற்பத்தை அடைந்த லீலையானவள் வீட்டின்கணுள்ளவர் எங்களைப் பார்க்கக் கடவார்க ளென்று சங்கற்பஞ் செய்தாள்—என்பதாம்.

## துக்க நிவர்த்தி செய்தல்—வேறு.

பூமகளு மலைமகளும் போல்வாரை வனதெய்வம் போலுமென்றே, தாமவர்கண் டருச்சித்தார் தலைமகன்பார்த் தெமதன்னை தாதைமாய, யாமணுகுந் துயரொழிப்பீ ருயர்ந்தோரை யெதிர்ந்தோருக் கெய்தாதுண்டோ, மாமதியினீரென்னத்தலைதடவித்துயரொழித்தாள் வயங்குலீலை.

(இ-ள்.) பூமகளும் - இலட்சுமியையும், மலைமகளும்-பார்வதியையும், போல்வாரை - ஒத்தலீலாதேவிகளை, வனதெய்வம்போலுமென்று - வனதேவதையைப்போல (விருக்கின்ற) தென்று, தாமவர் - (பந்துபுத்திராகிய) தாங்கள், கண்டரிச்சித்தார் - தரிசித்துப்பூசித்தார்கள், தலைமகன்பார்த்து - (அதில்) முந்தின குமாரன்பார்த்து, எமதன்னைதாதைமாய - எங்கண் மாதாபிதாக்கண்மரிக்க, யாமணுகுந்துயர் - நாங்களடைந் (திருக்கின்ற) துக்கத்தை, ஒழிப்பீர் - நீக்குவீர், உயர்ந்தோரை - மேலானவர்களை, எதிர்ந்தோருக்கு - தரிசித்தவர்களுக்கு, எய்தாதுண்டோ-கிடையாத (பயனென்) றுண்டா, மாமதியினீரென்ன - பேரறிவை யுடையவர்களேயென்றுசொல்ல, வயங்குலீலை - ப்ரகாசிக்கின்ற லீலையானவள், தலைதடவி- சிரசைத்தொட்டு, துயரொழித்தாள் - அவர்க டுக்கத்தை நீக்கினள்-எ-று.

(இ-ை.) இலட்சுமியையும், பார்வதியையும் ஒத்த லீலாதேவிகளை வனதேவதையைப்போல விருக்கின்றதென்று பந்துபுத்தி

ரராகிய தாங்கள் தரிசித்துப் பூசித்தார்கள், அதில் மூந்தின குமாரன் பார்த்து எங்கண் மாதாபிதாக்கண்மரிக்க நாங்களடைந்திருக்கின்ற துக்கத்தைநீக்குவீர், மேலானவர்களே தரிசித்தவர்களுக்குக் கிடையாத பயனுென்றுண்டா? பேரறிவையுடையவர்களே யென்று சொல்ல ப்ரகாசிக்கின்ற லீலையானவள் சிரசைத்தொட்டு அவர்க டுக்கத்தை நீக்கினுள்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) வெளிப்படை. (சஎ)

## லீலையையு மூற்று வினுவுதல்.

இருவருமவ் வயின்மறைந்தா ருலகத்தின்சற்பாவ மிவ்வாறுகும், கருதியது முடித்தனமேற் கருத்தெதன்கொ லென்றுதலைக் கன்னிகேட்ப, மருவுசமாதியிற்கண்டமன்னவையோரெனைக்காணுவகையுமிந்தத், திருமனையோர் கண்டமையு மென்கொலெனச் செப்பென்று டெய்வமன்னுள்.

(இ-ள்.) இருவரும் - சரஸ்வதி லீலையென்னு மிருவரும், அவ்வயின் மறைந்தார் - அவ்விடத்தி லந்தரத்யானமானுர்கள், உலகத்தின் சற்பாவம் - சகத்சத்தை, இவ்வாறுகும் - இவ்வண்ணமாம், கருதியது - நினைத்ததை, முடித்தனம்-(பார்த்து) முடித்தோம், மேற்கருதெதன்கொலென்று-மே (லுன்னுடைய) கருத்தென்னவென்று, கலைக்கன்னிகேட்ப - சரஸ்வதிகேட்க, மருவுசமாதியில் - அடைந்திருக்கின்ற சமாதியினிடமாய், கண்டமன்னவையோர் - பார்த்தவரசசபையிலுள்ளவர்கள், எனைக்காணுவகையும் - என்னைக்காணுதவகையும், இந்தத்திருமனையோர் - இவ்வழகிய வீட்டிலுள்ளவர்கள், கண்டமையும்-பார்த்தவிதமும், என்கொலென - என்னவென்று, தெய்வமன்னுள் - தெய்வத்துக்கொப்பானலீலையானவள், செப்பென்றுள் - சொல்லென்றுகேட்டாள்—எ-று.

(இ-வை.) சரஸ்வதி லீலையென்னுமிருவரும் அவ்விடத்திலந்தரத்யானமானுர்கள், சகத்சத்தை இவ்வண்ணமாம் நினைத்ததைப்பார்த்து முடித்தோம், மேலுன்னுடைய கருத்தென்னவென்று சரஸ்வதிகேட்க அடைந்திருக்கின்ற சமாதியினிடமாய் பார்த்த வரசசபையிலுள்ளவர்கள் என்னைக்காணுதவகையும் இவ்வழகிய வீட்டிலுள்ளவர்கள் பார்த்தவிதமும் என்னவென்று தெய்வத்துக்கொப்பான லீலையானவள்சொல்லென்று கேட்டாள்—என்பதாம்.

## தேவி லீலையினையு நீங்கப் போதித்தல்.

சாதகத்தாலன்றியிரண் டொன்றாகாதகம்பாவந் தனைநீங்காமற்
போதமடைந்தனையதனாற்சத்தியமாஞ் சங்கற்பம்பொருந்திற்றில்லை
யாதலினா லவர்காணா ரகம்பாவ மற்றவறி வறிதலாலே
பேதமற நீவிதிக்க விவர்கண்டா ரெனவாணி பேசலோடும்.

(இ-ள்.) சாதகத்தாலன்றி - ஞானாப்பியாசத்தினாலல்லாமல், இரண்டொன்றாகாது - துவிதமத்துவிதமாகாது, அகம்பாவந்தனைநீங்காமல்-நானென்னும்பாவனையைப்பிரியாமல், போதமடைந்தனையதனால் - ஞானத்தை யடைந்தபடியால், சத்தியமாஞ்சங்கற்பம் - மெய்ச்சங்கற்பமானது, பொருந்திற்றில்லை - (உனக்) குண்டாகவில்லை, ஆதலினாலவர்காணார் - ஆதலா லச்சபையிலுள்ளவர்களுன்னைப்பாரார், அகம்பாவமற்றவறிவு - (இப்பொழுது) நானென்னும்பாவனையிறந்த ஸ்வரூபஞானத்தை, அறிதலால்-உணர்தலினால், பேதமறநீவிதிக்க - அபேதமாக நீ சங்கற்பிக்க, இவர் கண்டாரென - இப்புத்திரர் (முதலாயினோர்) பார்த்தார்களென்று, வாணி பேசலோடும் - சரஸ்வதிசொல்லியவுடன்—எ-று.

(இ-ணா.) ஞானாப்பியாசத்தினாலல்லாமல் துவிதமத்துவிதமாகாது. நானென்னும் பாவனையைப் பிரியாமல் ஞானத்தை யடைந்தபடியால் மெய்ச்சங்கற்பமானது உனக்குண்டாகவில்லை, ஆதலாலச்சபையி லுள்ளவர்க ளுன்னைப்பாரார் இப்பொழுது நானென்னும் பாவனையிறந்த ஸ்வரூபஞானத்தை உணர்தலினால் அபேதமாக நீ சங்கற்பிக்க இப்புத்திரர் முதலாயினோர் பார்த்தார்களென்று சரஸ்வதிசொல்லியவுடன்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) அகம்பாவத்தோடும் - அஃதின்மையோடும்பெற்ற ஞானத்தின் பலாபலனை யுரைத்ததாம். (சகூ)

## முற்பவங்களைக் காண்டல்.

பெருவெளியா யுன்னருளான் முழுதுணர்ந்தேன் முக்குணத்தின் பிறப்புமற்றே, னிருவடிவாய் பிரமத்திலகன்றெண்ணூற்றுடல்பலவா யெடுத்தேன்முன்ன, மொருதனிமா யாவிகற்பத் தோருலகாந் தாமரைமே லுறைவண்டாக, மருவியவிஞ் சையர்மகளாய் வாதனைதீ தான்மனித வடிவுமானேன்.

(இ-ள்.) உன்னருளால் - (சரஸ்வதியே) யுனது கிருபையினால், பெருவெளியாய் - வெட்டவெளியாக, முழுதுணர்ந்தேன் - (எனது பூர்வசென்மம்) யாவையுமறிந்தேன், முக்குணத்தின் - திரிகுணங்களி (னாலுண்

டான), பிறப்புமற்றேன் - பவமுநீங்கினேன், பிரமத்தில் - பிரமத்தினின்றும், இருவடியாய் - வேறுருவமாய், அகன்றெண்ணூற்றுடல்-நீக்கியெண்ணூறுசரீரம், பலவாயெடுத்தேன்-நாநாவிதங்களாயெடுத்தேன், முன்னம் -முன்னமே, ஒருதனி - ஒப்பற்ற, மாயாவிகற்பத்து - மாயாவிகற்பத்தினு (லுண்டாகிய), ஒருலகாம் - ஒப்பற்ற வுலகங்களாகிய, தாமரைமேல் - தாமரைபுட்பத்தில், உறைவண்டாக - வசிக்கின்ற வளியைப்போல, மருவிய - (சகல வுலகங்களிலுஞ்) சஞ்சரித்த, விஞ்சையர்மகளாய் - வித்தியாதரஸ்திரீயாகவும், வாதனைதீதால் - வாசனையின்றீமையால், மனிதவடிவுமானேன் - நரவடிவாகவுமானேன்—எ-று.

(இ-ளா.) சரஸ்வதியே யுனது கிருபையினால் வெட்டவெளியாக எனது பூர்வசென்மம் யாவையுமறிந்தேன், திரிகுணங்களினுலுண்டான பவமுநீங்கினேன். பிரமத்தினின்றும் வேறுருவமாய் நீங்கி யெண்ணூறு சரீரம்நாநாவிதங்களாயெடுத்தேன், முன்னமே ஒப்பற்ற மாயாவிகற்பத்தினுலுண்டாகிய ஒப்பற்ற வுலகங்களாகிய தாமரைபுட்பத்தில் வசிக்கின்ற வளியைப்போல சகலவுலகங்களிலுஞ் சஞ்சரித்த வித்தியாதரஸ்திரீயாகவும் வாசனையின்றீமையால் நரவடிவாகவுமானேன்—என்பதாம்.

இதுவுமது.

**வேறொரு மாயாவிகற்பத் தரமகளாய்த் தழையுடுக்கும் வேடப்பெண்ணாய்ச், சூறைவலைப் புள்ளரசாய்க் கொதுகுமுதற் பல பிறப்பிற் சுழன்றுசோர்ந்து, சீறுகடற்றிரையிலசை திரணம்போன் மாயையிலே தியங்கினேனை, யேறுவித்தாய்க் கரையென்ன விவள் சொன்னு ளிருவரும்விண் ணெழுந்துபோனார்.**

(இ-ள்.) வேறொரு - மற்றொரு, மாயாவிகற்பத்து - மாயாவிகற்பமான (லோகத்தில்) , அரமகளாய் - இந்திராணியாகவும், தழையுடுக்கும்-பத்திரவஸ்திரத்தைத்தரிக்கின்ற, வேடப்பெண்ணாய் - வேடஸ்திரீயாகவும், வலை - வலையை, சூறை - அறுத்த, புள் - பறவையாகவும், அரசாய் - (சவுராஷ்டிரதேசத்) தரசனாகவும், கொதுகு - கொசுகாகவும் (பிறந்து) , முதற்பலபிறப்பில் - (இவை) முதலாகிய பலசநநங்களில், சுழன்றுசோர்ந்து - உழன்றுவாடி, சீறுகடற்றிரையில்-சப்தியாநின்றசமுத்திரஅலையில், அசைதிரணம்போல் - அலைகின்ற துரும்பைப்போல, மாயையிலே தியங்கினேனை - மாயாவசத்தி (லூர்த்தகதியுமதோகதியுமாகக்) கலங்கினவென்னை, கரையேறுவித்தாயென்ன - (முத்தி) தீரத்திலேற்றுவித்தாயென்று, இவள்சொன்னாள்-இந்தலீலைதோத்திரஞ்செய்தாள், இருவரும்-(பின்)இரண்டுபேர்களும், விண்ணெழுந்துபோனார்-ஆகாயத்திலெழும்பினார்கள்—எ-று.

(இ-னா.) மற்றொரு மாயாவிகற்பமான லோகத்தில் இந்திராணியாகவும், பத்திரவஸ்திரத்தைத் தரிக்கின்ற வேடஸ்திரீயாகவும், வலையை அறுத்த பறவையாகவும், சவுராஷ்டரதேசத் தரசனாகவும், கொசுகாகவும் பிறந்து, இவை முதலாகிய பல சநநங்களில் உழன்று வாடி சப்திபாநின்ற சமுத்திரனலையில் அலைகின்ற துரும்பைப்போல மாயாவசத்திலூர்த்தகதியு மதோகதியுமாகக் கலங்கினவென்னை முத்திதீரத்தி லேற்றுவித்தாயென்று இந்த லீலை தோத்திரஞ் செய்தாள், பின்பிரண்டுபேர்களும் ஆகாயத்தி லெழும்பினார்கள்—என்பதாம்.

(இ-உ-க-ஃ.) பிரமத்தினின்று நீங்கினமுத லிதுபரியந்தம் வியாபித்திருந்த பூரணஞான முதயமானபடியால்அதற்கு மிளித்தவடிவங்க ளியாவுந்தனது வடிவமாகத் தெரிந்ததாம். (௬௧)

---

## பின்சிருஷ்டியைக்கண் டதிசயித்தல்.

யோகநெறி யால்விண் போய்ப் பதுமனிடஞ் சேர்ந்துசவ வுடல்கண்டப்பா, லேகியிவன் மறுபிறப்பாம் வேந்தனையெய்த லும வன்மே லெதிர்ந்து வந்தோ, வேகவினை யாகியொரு வேல்வேந்த னமர்துடங்கி மிகவுமோத, மாகமயி லனையார்கணோக்கினா ரிருப டையு மலைந்தவன்றே.

(இ-ள்.) யோகநெறியால் - யோகமார்க்கத்தினால், விண்போய்-ஆகாயத்திற்சென்று, பதுமனிடஞ்சேர்ந்து, பதுமவரசனிடத்திலடைந்து, சவவுடல்கண்டு - (அவனது) சவசரீரத்தைப்பார்த்து, அப்பாலேகி - (பின்) பப்புறஞ்சென்று, இவன் மறுபிறப்பாம்வேந்தனை - இப்பதுமனிரண்டாஞ் சநநமாகிய விரேதவரசனை, எய்தலும் - அடையவும, அவன்மேலெதிர்ந்து வந்தோ - அவ்வரசன்மே லெதிர்த்துவந்து, வேகவினையாகி - கடுமையானபோரையுடையவனாய், ஒருவேல்வேந்தன்-ஒப்பற்றவேலையுடைய(சிந்து) வரசன், அமர்துடங்கி - யுத்தத்தைத்துடங்கி, மிகவுமோத - மிகவுமடிக்க, மாகம் - ஆகாயத்தி (லிருந்து), மயிலனையார்கள் - மயிலையொத்த சரஸ்வதி லீலையானவர்கள், நோக்கினார் - பார்த்தார்கள், இருபடையும் - இரண்டுசேனையும், மலைந்த - யுத்தம்பண்ணின—எ-று.

(இ-னா.) யோகமார்க்கத்தினால் ஆகாயத்திற்சென்று பதுமவரசனிடத்தி லடைந்து அவனது சவசரீரத்தைப்பார்த்து பின்பப்புறஞ் சென்று இப்பதும னிரண்டாஞ் சநநமாகிய விரேதவரசனை அடையவும், அவ்வரசன்மே லெதிர்த்துவந்து கடுமையான போரையுடையவனாய் ஒப்பற்ற வேலையுடைய சிந்துவரசன் யுத்

தத்தைத்துடங்கி மிகவுமடிக்க ஆகாயத்திலிருந்து மயிலையொத்த சரஸ்வதி லீலையானவர்கள் பார்த்தார்கள். இரண்டுசேனையும் யுத்தம்பண்ணின—என்பதாம். (௫௨)

இதுவுமது.

மட்டிலா விருபடையு மறலிநடுக் குறவெம்போர் மலைக்குங் காலை, யெட்டிலோர் கூறுக வெதிர்ந்தவனு லிவன்சேனையிறத்த லோடும், பட்டுளோர் பிணக்குன்றுல் மறைந்தனனேசமர்க்கண்டு பயப்பட்டானே, தட்டிலா வெய்யவன்போ யிருணிறைந்த திருபடையுந் தணந்துபோன.

(இ-ள்.) மட்டிலாவிருபடையும்-அளவற்றவிருவர்சேனைகளும், மறலி நடுக்குற - நமனடுங்கும்படியாக, வெம்போர்-கொடியசண்டை, மலைக்குங் காலை-பொருதுங்காலத்தில், எட்டிலோர்கூறுக - எட்டிலொருபங்காகும் படி, எதிர்ந்தவனுல் - எதிரியினுல், இவன்சேனையிறத்தலோடும் - இவன் படைமரித்தமாத்திரத்தில், பட்டுளோர்-மரித்தவர்களது, பிணக்குன்றுல் -பிரேதமலையினுல், மறைந்தனனே-மறைந்தானே, சமர்க்கண்டு-போரைக் கண்டு, பயப்பட்டானே-பயந்தானே, தட்டிலா - குற்றமற்ற, வெய்யவன் போய்-சூரியன்போய், இருணிறைந்தது-அந்தகாரநிறைந்தது, இருபடை யும் - இரண்டுசேனையும், தணந்துபோன - பிரிந்துபோயின—எ-று.

(இ-கா.) அளவற்ற விருவர்சேனைகளும் நமனடுங்கும்படி யாக கொடியசண்டை பொருதுங்காலத்தில் எட்டிலொருபங்காகு ம்படி எதிரியினுல் இவன்படை மரித்தமாத்திரத்தில் மரித்தவர்க ளது பிரேதமலையினுல் மறைந்தானே! போரைக்கண்டு பயந்தா னே ! குற்றமற்ற சூரியன்போய் அந்தகாரநிறைந்தது. இரண்டு சேனையும் பிரிந்துபோயின—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (௫௩)

இதுவுமது.

பகைவேந்தன் படைவாங்கப் படாதசிறு படையோடும் பரிந்துமீண்டு, தகைவேந்த னரமியத்திற் றுயிலுதலு மிவர்களுமத் தலத்திலெய்த, நகையார்ந்த நிலவனைய விவரொளியாலிளைப்பாறி நயனக்கஞ்ச, முகைதோன்ற விழித்தெழுந்து புகழ்ந்திறைஞ்சி யரிசித்தான் முன்னின்றேரை.

(இ-ள்.) பகைவேந்தன் - சத்துருவாகியவரசனது, படைவாங்க - சேனைநீங்க,படாதசிறுபடையோடும்-மரியாதசிலசேனையுடன், பரிந்துமீண்டு-(மனமுறிந்து) திரும்பி, தகைவேந்தன் - தளர்வையுடையவிரேதவரசன், அரமியத்தில்-மேன்மாடியில், துயிலுதலும் - நித்திரைசெய்யவும், இவர்க

ளும் - இந்தச்சரஸ்வதியும் லீலையும், அத்தலத்திலெய்த - அவ்விடத்தில் வர, நகையார்ந்த - ப்ரகாசம்பொருந்திய, நிலவனைய - சந்திரனதமுதகிர ணத்தையொத்த, இவரொளியால் - இவர்கள்தேயுசினால், இளைப்பாறி - சிரமந்தீர்ந்து, நயனம் - கண்களென்னும், கஞ்சமுகைதோன்ற - தாமரை மொக்குமலர, விழித்தெழுந்து - விழித்தெழுந்து, புகழ்ந்திறைஞ்சி - தோ த்திரஞ்சொல்லிவணங்கி, முன்னின்றோரை-முன்னேயிருந்த சரஸ்வதிலீ லையை, அரிச்சித்தான் - பூசித்தான்—எ-று.

(இ-ரை.) சத்துருவாகிய வரசனது சேனைநீங்க மரியாத சில சேனையுடன் மனமுறிந்து திரும்பி தளர்வையுடையவிரேதவரசன் மேன்மாடியில்நித்திரைசெய்யவும், இந்தச்சரஸ்வதியும், லீலையும், அவ்விடத்தில்வர ப்ரகாசம்பொருந்திய சந்திரனதமுத கிரணத் தையொத்த இவர்கள் தேயுசினால் சிரமந்தீர்ந்து கண்களென்னும் தாமரைமொக்கு மலர விழித்தெழுந்துதோத்திரஞ்சொல்லி வண ங்கி முன்னேயிருந்த சரஸ்வதி லீலையைப்பூசித்தான்—என்பதாம்

### மாயாவிசித்திரத்தைக் காண்பிக்கப் பின்சிருஷ்டியின் வமிசாவலியை யறிவித்தல்.

இவனதுநற் குலப்பழமை லீலைக்கு விளம்பிவிப்ப வெண்ணி வாணி, யவனருகிற்றுயிலமைச்சன் விழிக்கவென வெண்ணுதலு மவனப்போதே, கவர்துயில்விட் டெழுந்திறைஞ்சகண்டகலைமகள வனைக் கருணைகூர்ந்து, புவனபதி குலத்தொன்மைப் புகலென்று ளமைச்சனிவை புகலலுற்றான்.

(இ-ள்.) இவனது - இவ்வரசனுடைய, நற்குலப்பழமை-நல்லவமிசபர ம்பரையை, லீலைக்குவிளம்பிவிப்பவெண்ணி-லீலைக்குச்சொல்லும்படிநினை த்து, வாணி - சரஸ்வதியானவள், அவனருகிற்றுயிலமைச்சன் - அவனது சமீபத்தினித்திரைசெய்யுமந்திரியானவன், விழிக்கவெனவெண்ணுதலும் -விழிக்கக்கடவதென்றுசங்கற்பிற்கவுற், அவனப்போதே-அம்மந்திரியான வனப்பொழுதே, கவர்தியில்விட்டு - தன்னைக்கவர்ந்திருக்குநித்திரையை விட்டு, எழுந்திறைஞ்ச - எழுந்திருந்துவணங்க, கண்டகலைமகள் - பார்த்த சரஸ்வதியானவள், அவனைக்கருணை கூர்ந்து - அவனிடத்திற்கிருபைமிகு ந்து, புவனபதிகுலத்தொன்மை - (இப்) பூமிக்கரசாகிய (விவன்) குலத்தி ன்பூர்வசரித்திரத்தை, புகலென்றாள் - சொல்லென்றுகேட்டாள், அமைச் சன் - (அதற்கு) மந்திரி, இவைபுகலலுற்றான்-இவைகளைச்சொல்லத்தொ டங்கினான்—எ-று.

(இ-ரை.) இவ்வரசனுடைய நல்ல வமிச பரம்பரையை லீலை க்குச் சொல்லும்படி நினைத்து சரஸ்வதியானவள் அவனது சமீப

த்தி னித்திரை செய்யு மந்திரியானவன் விழிக்கக்கடவதென்றுசங் கற்பிக்கவும், அம்மந்திரியானவ னப்பொழுதே தன்னைக்கவர்ந்திரு க்கு நித்திரையை விட்டு எழுந்திருந்துவணங்க, பார்த்த சரஸ்வதி யானவள் அவனிடத்திற் கிருபைமிகுந்து இப்பூமிக்கரசாகிய விவ ன் குலத்தின் பூர்வசரித்திரத்தை சொல்லென்று கேட்டாள், அத ற்கு மந்திரி இவைகளைச்சொல்லத்தொடங்கினான்—என்பதாம். ()

இதுவுமது.

மன்னவரெண் மனுகுலத்தின் மன்னவனாங் கும்பரதன் மன் னர்மன்ன, னன்னவன்பத் திரரதனை யளித்தான்மற் றவனகில ரத னைத்தந்தா, னின்னவன்பே ரிரதனைத்தா னீன்றானிங்கிவன்சிந்து ரதனைப்பெற்றான், சொன்னவன்சேய் சைலரதனவனுக்குக் காம ரதன் றோன்றலானான்.

(இ-ள்.) மன்னவர் - அரசரில், எண் - மதிக்கப்பட்ட, மனுகுலத்தில்- (வைவசுத) மனுவின் வமிசத்தில், மன்னவனாங்கும்பரதன்-அரசனாகியகும் பரதனானவன், மன்னர்மன்னன் - இராசாதிராசனாகிய, அன்னவன்பத்தி ரரதனையளித்தான் - அவன் பத்திரரதனைப்பெற்றான், அவன் - அவ்வர சன், அகிலரதனைத்தந்தான்-அகிலரதனைப்பெற்றான், இன்னவன்-இவ்வ ரசன், பேரிரதனைத்தானீன்றான் - பிரகத்ரதனைப்பெற்றான், இவன் சிந்து ரதனைப்பெற்றான் - இவ்வரசன் சிந்துரதனையீன்றான், சொன்னவன்சேய் - சொல்லிய வவ்வரசனது புத்திரன், சைலரதன் - சைலரதனும், அவனு க்கு-அவ்வரசனுக்கு, காமரதன் றோன்றலானான்-காமரதன்றோன்றினான்.

(இ-ரை.) அரசரில் மதிக்கப்பட்ட வைவசுத மனுவின் வமிச த்தில் அரசனாகிய கும்பரதனானவன் இராசாதிராசனாகிய அவன் பத்திரரதனைப் பெற்றான், அவ்வரசன் அகில ரதனைப்பெற்றான், இவ்வரசன் பிரகத்ரதனைப்பெற்றான், இவ்வரசன் சிந்துரதனையீ ன்றான், சொல்லிய வவ்வரசனது புத்திரன் சைலரதனும், அவ்வ ரசனுக்கு காமரதன் றோன்றினான்—என்பதாம். (ருசு)

இதுவுமது.

இனையவன்சேய் மகாரதன்மற் றிவன்சிறுவன் விண்டுரத னிவன்குமாரன், வினையமிகு மனோரதனிங் கிவனளித்த விரேத னிவ் வேந்தர்வேந்த, னனையிவர்க்குச் சுமுத்திரையா மையிரண்டு வயதிலிவர்க் கரசுநல்கி, நிலைவொடுங்கும் பிதாவனமே னீங்கின னிவன்செங்கோ னெறியினின்றான்.

(இ-ள்.) இனையவன்சேய் - இப்படிப்பட்டவனுடைய புத்திரன், மகா ரதன்-மகாரதனும், இவன் சிறுவன்-இவனுடையபுத்திரன், விண்டுரதன்-

விண்டுரதனும், இவன்குமாரன்-இவனுடையபுத்திரன், வினையமிகுமனோரதன் - போர்மிகுந்தமனோரதனும், இங்கிவனளித்த - இவ்விடத்திலிவன் பெற்ற, விரோதனிவ்வேந்தர்வேந்தன் - விரோதனைராசாதிராசனும், இவர்க்கு - இவருக்கு, அனை - தாயானவள், சுமுத்திரையாம் - சுமுத்திரை யென்னும் பெயரையுடையவளாம், ஐயிரண்டுவயதில் - பத்துவயதில், இவர்க்கரசுநல்கி-இவருக்கரசாக்ஷியைக்கொடுத்து, நினைவொடுங்கும்பிதா-மனதடங்கிய பிதாவானவர், வனமேனீங்கினன் - (துறந்துதவ) வனத்திற்சென்றார், இவன்செங்கோனெறியினின்றான் - இவனீதிமார்க்கத்தாற் (பூமி) பாலனம்பண்ணினான்—எ-று.

(இ-ள.) இப்படிப்பட்டவனுடையபுத்திரன் மகாரதனும், இவனுடைய புத்திரன் விண்டுரதனும், இவனுடைய புத்திரன் போர்மிகுந்த மனோரதனும், இவ்விடத்திலிவன்பெற்ற விரோதனை ராசாதிராசனும், இவருக்குத் தாயானவள் சுமுத்திரையென்னும் பெயரை யுடையவளாம், பத்துவயதில் இவருக்கரசாக்ஷியைக்கொடுத்து மனதடங்கிய பிதாவானவர் துறந்து தவவனத்திற்சென்றார், இவன் நீதிமார்க்கத்தாற் பூமிபாலனம்பண்ணினான்.

(இ-சூ-க-ம்.) வெளிப்படை. (௫ள)

விரோதமயக்கநீங்கி ஞானமுதயமாய்போநட்டு முற்பவ மறிவித்தல்.

என்பளவில் வேந்தனைநின் முதற்பிறவி ஞானத்தா லெளிது காண்கென், றன்பினொடு கையினா லவன்முடியை நாமகடொட் டருளலோடுந், தன்பகையா மனவிருள்போய் லீலையுடன் வாழ்பது மன் றானயக்கண்டா, னின்பமுற வியப்புற்றான் மாமாயை யிருந்தபடி யென்னேயென்றான்.

(இ-ள்.) என்பளவில் - என்று (மந்திரிசொன்ன) மாத்திரத்தில், வேந்தனை - இராசாவை, நின்முதற்பிறவி - உனது முற்சநநத்தை, ஞானத்தால் - ஞான (க்கண்ணி) னால், எளிது காண்கென்று - இலேசாய்த் தெரிந்துகொள்ளக்கடவாயென்று, அன்பினொடு - அன்பினுடன், கையினாலவன்முடியை - (தனதஸ்) தத்தினாலவ்வரசனதுசிரசை, நாமகடொட்டு - சரஸ்வதியானவள் பரிசித்து, அருளலோடும் - அனுக்கிரகித்தவுடன், தன்பகையாமனம் - தனது பகையாகிய மனதிலிருக்கின்ற, இருள்போய்-மாயாந்தகாரநீங்கி, லீலையுடன் - லீலையோடும், வாழ்பதுமன் - (கூடி) ச்சுகிக்கின்றபதுமவரசன், தானயக்கண்டான் - தனதுவடிவமாகப்பார்த்தான், இன்பமுற - ஆநந்தம்பொருந்த, வியப்புற்றான் - அதிசயித்தான், மாமாயை - மகாமாயையானது, இருந்தபடியென்னேயென்றான் - இருந்தவிதமென்னவென்று சொன்னான்—எ-று.

(இ-ரை.) என்று மந்திரி சொன்னமாத்திரத்தில் இராசாவை உனது முற்சநநத்தை ஞானக்கண்ணினுல் இலேசாய்த்தெரிந்துக் கொள்ளக் கடவாயென்று அன்பினுடன் தனதஸ்தத்தினுலவ்வர சனது சிரசை சரஸ்வதியானவள் பரிசித்து அனுக்கிரகித்தவுடன் தனது பகையாகிய மனதிலிருக்கின்ற மாயாந்தகாரநீங்கி லீலை யோடும் கூடிச் சுகிக்கின்ற பதுமவரசன் தனது வடிவமாகப் பார்த்தான், ஆநந்தம்பொருந்த அதிசயித்தான், மகாமாயையானது இருந்தவித மென்னவென்றுசொன்னுன்—என்பதாம்.

(இ-ாீ.) தேவியனுக்கிரகத்தினுன் ஞானமுதயமாய் மாயாவிசித்திரத்தைப்பார்த் ததிசயித்ததாம். (ருஅ)

ஒருநா ளேழுபதுவருடமான மயக்கந்தீர விசாரித்தல்.

தாயரிவ ராற்றெளிந்தே னெனநாடி யவர்சரணந் தலைமேற் சூடிப், போயபவத் துடனீங்கி நாளொன்று மிவ்வுடலிற் புக்கபின் னைச், சேயவெழு பதுவருடஞ் சென்றதாற் செய்ததெலாந் தெளி யாநின்றேன், மாயமிது வென்கொலென மன்னவன்கேட் டலுங்க ருணை வாணிசொல்வாள்.

(இ-ள்.) தாயரிவரால் - மாதாவாகியவிவர்களால், தெளிந்தேனென - (மாயையைத்) தெரிந்தேனென்று, நாடி - சிந்தித்து, அவர்சரணம் - அவர்கள்பாதத்தை, தலைமேற்சூடி-சிரசின்மேற்றரித்து, போயபவத்துடனீங்கி- போனசநநத்தின் சரீரநீங்கி, நாளொன்றும் - நாளொன்றுகவும், இவ்வுடலிற்புக்க பின்னை - இச்சரீரத்தில்வந்தபின்பு, சேயவெழுபதுவருடம் - அதிகமான வெழுபதுவயது, சென்றதால் - நடந்தபடியால், செய்ததெலாம் - நடந்தசகலமும், தெரியாநின்றேன் - தெரிந்தேன், மாயமிதுவென்கொலென-இதென்னமாயாவிசித்திரமென்று, மன்னவன்கேட்டலும் - அரசன்கேட்கவும், கருணை - கிருபையே (வடிவமாயுள்ள), வாணிசொல்வாள் - சரஸ்வதியனுக்கிரகஞ்செய்வாள்—எ-று.

(இ-ரை.) மாதாவாகிய விவர்களால் மாயையைத் தெரிந்தேனென்று சிந்தித்து அவர்கள்பாதத்தை சிரசின்மேற்றரித்து போனசநநத்தின் சரீரநீங்கி நாளொன்றுகவும் இச்சரீரத்தில் வந்தபின்பு அதிகமான வெழுபதுவயது நடந்தபடியால் நடந்தசகலமும் தெரிந்தேன், இதென்ன மாயாவிசித்திரமென்று அரசன்கேட்கவும் கிருபையே வடிவமாயுள்ள சரஸ்வதியனுக்கிரகஞ்செய்வாள்.

(இ-ம்.) வெளிப்படை. (ருக)

## மயக்கந்தீரப் போதித்தல்.

இறப்பென்னு மாமூர்ச்சை யெய்தியபின் னப்பொழுதவ் விடத்திற்றானே, பிறப்பென்னு மாமோகம் பெரிதுண்டாம் விண்போலப் பிறங்கித் தூய்தாஞ், சிறப்புள்ள வுன்மனதிற்செய்தொழிலா மயக்கமே தெரியாநின்ற, துறத்துன்னு மெழுபதுயாண் டுனக்ககன்ற தென்பதனை யுணர்ந்துநோக்காய்.

(இ-ள்.) இறப்பென்னும்-மரணமென்கிற, மாமூர்ச்சையெய்தியபின்-பெரியமயக்கம்வந்தபின்பு, அப்பொழுது - அக்காலத்தில், அவ்விடத்திற்றானே - அவ்விடத்திலேயே, பிறப்பென்னுமாமோகம் - சநநமென்கின்ற மகாமோகமானது, பெரிதுண்டாம் - மிகவுமுண்டாயிருக்கும், விண்போல - ஆகாயத்தைப்போல, பிறங்கித்தூய்தாம் - நிறைந்துபரிசுத்தமான, சிறப்புள்ள - சிறப்பையுடைய, உன்மனதில்-நின்மனதில், செய்தொழிலாம் -செய்கன்மமாகிய, மயக்கமே - பிராந்தியே, தெரியாநின்றது - காண்கின்றதான, உறத்துன்னும் - பொருந்தநெருங்கிய, எழுபதுயாண்டு - எழுபது வருடமானது, உனக்ககன்றதென்பதனை - உனக்குநீங்கினதென்பதை, உணர்ந்துநோக்காய் - (நீ) யறிந்துபார்ப்பாய்—எ-று.

(இ-ரை.) மரணமென்கின்ற பெரியமயக்கம் வந்தபின்பு அக்காலத்தில் அவ்விடத்திலேயே சநநமென்கின்ற மகாமோகமானது மிகவுமுண்டாயிருக்கும், ஆகாயத்தைப்போல நிறைந்து பரிசுத்தமான சிறப்பையுடைய நின்மனதில் செய்கன்மமாகிய பிராந்தியே காண்கின்றதான பொருந்த நெருங்கிய எழுபதுவருடமானது உனக்கு நீங்கினதென்பதை நீயறிந்துபார்ப்பாய்.—என்பதாம்.

(இ-ர்.) இறந்து பிறக்குமயக்கத்திலுண்டான மனோவிகற்பத்தாற்காலவளவு தோற்றினதேயன்றி யெதார்த்தமாயின்றென்பதாம். ஆறுயிரத்திற்பதினாறுவயதேயென வியாக்கியானமிருக்கினும் முப்பத்தீராயிரத்தி லெழுபதுவயதேயென மூலமிருத்தலி னஃதே யிந்நூலாசிரியர் கருத்தெனக்கொள்க. (சுo)

### இதுவுமது.

கடிகையிரண் டினினெடிய காலமுறுங் கனவொக்குங்கழிந்தவாணாட், படியுறுமா யாவிகற்ப நனவிலே வெகுவிதமாய்ப் பரந்துதோன்று, நெடியபிறப் பிறப்பென்று நினக்கில்லை மெய்ஞ்ஞான நினக்குருப, முடிவில்பதத் திருக்கின்றாய்சகமெல்லாங் கண்டிருந்து முழுதுங்காணாய்.

(இ-ள்.) கடிகையிரண்டினில் - ஒருமுகுர்த்தகாலத்தில், நெடியகால முறும் - அநேககாலம்வருகின்ற, கனவொக்கும் - சொப்பனத்தையொத்திருக்கும், கழிந்த - நீங்கிய, வாணாள் - ஆயுளானது, படியுறு-குணம்பொருந்திய, மாயாவிகற்பம் - மாயையின்விகற்பத்தினால், நனவில்-சாக்கிரத்தில், வெகுவிதமாய் - நாநாவிதமாக, பரந்துதோன்றும் - விரிந்துதோற்றும், நெடியமிகுந்தபிறப்பிறப்பு - சநநமரணங்கள், என்றுநினக்கில்லை-எப்போதுமுனக்கில்லை, மெய்ஞ்ஞானம் - உண்மைஞானமே, நினக்குரூபம் - உனக்குஸ்வரூபம், முடிவில்பதத்திருக்கின்றாய்-அந்தமில்லாத (பரம) பதத்திலிருக்கின்றாய், சகமெல்லாங்கண்டிருந்தும் - உலகங்களியாவையும்பார்த்தும், முழுதுங்காணாய் - ஒன்றையும்பாராய்—எ-று.

(இ-ரை.) ஒரு முகுர்த்த காலத்தில் அநேககாலம் வருகின்ற சொப்பனத்தை யொத்திருக்கும், நீங்கிய ஆயுளானது குணம் பொருந்திய மாயையின் விகற்பத்தினால் சாக்கிரத்தில் நாநாவிதமாக விரிந்து தோற்றும், மிகுந்த சநநமரணங்கள் எப்போதுமுனக்கில்லை, உண்மைஞானமே உனக்குஸ்வரூபம் அந்தமில்லாத பரமபதத்திலிருக்கின்றாய் உலகங்களியாவையும் பார்த்தும் ஒன்றையும் பாராய்—என்பதாம்.

(இ-ஃ.) ஆயுளானது மாயாவிசித்திரத்திற்றோற்றினதேயன்றி ஆத்மஸ்வரூபமான சித்திலின்றென்பதாம். (சுக)

இதுவுமது.

எல்லாமா மியல்பினா லுன்னாலுன் னிடத்திலிருந் திலங்கா நின்றாய்ச், சொல்லாமைந் தரைப்பிடித்த தொட்டிலிற்பேய்ச்சுடலையிற்போந் தொன்மைபோலப், பொல்லாத மூகர்குப்புவியுறுதி யாய்த்தோன்றும் பொன்காணாதோ, ரல்லாது பணியென்பர் தற்பரத்தைக் காணாதோ ரகிலமென்பார்.

(இ-ள்.) எல்லாமாம் - சமஸ்தமுமாயிருக்கின்ற, இயல்பினால - சுபாவத்தினால், உன்னால் - உனதறிவினால், உன்னிடத்திலிருந்து - உன (தாத்மஸ்வரூபத்தி) லிருந்து, இலங்காநின்றாய்-ப்ரகாசிக்கின்றாய், சொல்லாமைந்தரை - பேசத்தெரியாதகுழந்தைகளை, தொட்டிலில் - தொட்டிலி (லிருக்கும்பருவத்தில்), பிடித்தபேய்-பிடித்தபிசாசானது, சுடலையிற்போம் - மயானத்தினீங்குகின்ற, தொன்மைபோல-பழமையைப்போல, பொல்லாதமூகர்க்கு - தீமையையுடையமூடர்களுக்கு, புவியுறுதியாய்த்தோன்றும் - சகமானதுசத்தியமாகத்தோற்றும், பொன்காணாதோர் - சுவணமென்றறியாதவர்கள், அல்ல - (பொன்)னல்ல, அது - அப்பொன்னை, பணியென்பர் - ஆபரணமென்று சொல்லுவார்கள், தற்பரத்தைக்காணாதோர் - (அவைபோல) ஸ்வரூபதிருஷ்டியில்லாதவர்கள், அகிலமென்பார்-சகமென்பார்கள்—எ-று.

(இ-ரை.) சமஸ்தமுமாயிருக்கின்ற சுபாவத்தினால் உனதறிவினால் உனதாத்மஸ்வரூபத்திலிருந்து ப்ரகாசிக்கின்றாய்பேசத்தெரியாத குழந்தைகளை தொட்டிலிலிருக்கும் பருவத்தில் பிடித்தபிசாசானது மயானத்தினீக்குகின்ற பழமையைப்போல தீமையையுடைய மூடர்களுக்கு சகமானது சத்தியமாகத்தோற்றும், சுவர்ணமென்றறியாதவர்கள் பொன்னல்ல, அப்பொன்னை ஆபரணமென்று சொல்லுவார்கள். அவைபோலஸ்வரூபதிருஷ்டி யில்லாதவர்கள் சகமென்பார்கள்—என்பதாம்.

(இ-ம்) திருக்கைத்தரிசித்தவர்க டிரிஸ்யபேத மறிவார்களென்பதாம்.()

இதுவுமது.

தனைமுதலாய்க் காண்கின்ற சகமெல்லா நீள்கனவாஞ் சகத்திற்றோன்று, மினையபொருள் களுங்கனவிற் காண்கின்றபொருள்களா மென்றுதேர்வா, யனையபொருள் களுங்காணுவறிவுமாத் திரம்வடிவா யனைத்துமேவில், வினையில்செறி வாய்க்கனமாய்ச் சுத்தமா கிப்பிரம விண்ணேயுண்டாம்.

(இ-ள்.) தனைமுதலாய் - (யானெனதென்னு) மகங்காரமுதலாக, காண்கின்ற - பாராநின்ற, சகமெல்லாம் - உலகங்களியாவும், நீள்கனவாம்- நீண்டசொப்பனமாம், சகத்திற்றோன்றும் - உலகத்தினிடத்திற் றோன்றுகின்ற, இனையபொருள்களும் - இப்படிப்பட்ட வஸ்துக்களும், கனவிற்காண்கின்ற - சொப்பனத்திற்காணுநின்ற, பொருள்களாமென்று - வஸ்துக்களாமென்று, தேர்வாய் - உணர்வாய், அனையபொருள்களுங்காணு - அப்படிப்பட்டவஸ்துக்களுங்காணுத, அறிவுமாத்திரம்வடிவாய் - ஞானமேஸ்வரூபமாய், அனைத்துமேவி-எவற்றிலுங்கூடி, வினையில்செறிவாய்-தொழிலில்லாதநிறைவாய், கனமாய் - மகத்தாய், சுத்தமாகி - பரிசுத்தமாய், பரமவிண்ணேயுண்டாம் - பரமாகாயமேயிருக்கும்—எ-று.

(இ-ரை.) யானெனதென்னு மகங்கார முதலாகப் பாராநின்ற உலகங்களியாவும் நீண்டசொப்பனமாம், உலகத்தினிடத்திற் றோன்றுநின்ற இப்படிப்பட்ட வஸ்துக்களும் சொப்பனத்திற் காணுநின்ற வஸ்துக்களாமென்று உணர்வாய், அப்படிப்பட்ட வஸ்துக்களுங்காணுத ஞானமே ஸ்வரூபமாய் எவற்றிலுங்கூடி தொழிலில்லாத நிறைவாய், மகத்தாய், பரிசுத்தமாய், பரமாகாயமேயிருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) சகத்தென்னுந் தீர்க்கசொற்பனத்தில் வஸ்துக்களென்னும் பேதந்தோற்றுவதேயன்றிச் சுயஞ்சைதன்யத்திலின் றென்பதாம். (சுரு)

(இதுவுமது.)

முழுதுமாம் முழுதுடைத்தாய்ச் சத்திமுழு தும்முள்ள மூர்த்திதானே, பழுதிலா தெவ்விடத்தெப் படிதோன்று மவ்விடத்தப் படியேதோன்றும், வழுவிலா மெய்ஞ்ஞான நிலைலீலை பொருட்டானும் வழங்கப்பெற்றாய், நழுவிலா வுண்மையொடுந் தெளிந்தனையாம் போதுமென நவிலலோடும்.

(இ-ள்.) முழுதுமாய் - எல்லாமாகியும், முழுதுடைத்தாய் - எல்லா முடையதாகியும், சத்தியமுழுதும்முள்ள - சத்திகளெல்லா மிருக்கின்ற, மூர்த்திதானே-ஸ்வரூபமே, பழுதிலாது - பழுதுபடாமல், எவ்விடத்தெப்படிதோன்றும்-(காலகன்மபரிபாகத்தின) லெந்தவிடத்தி லெப்படிதோன்றுமோ, அவ்விடத்தப்படியேதோன்றும் - அங்கவ்வண்ணமேதோற்றும், வழுவிலாமெய்ஞ்ஞானநிலை-குற்றமற்றவுண்மைஞானநிலையை, லீலைபொருட்டு - லீலைநிமித்தம், நாம்வழங்கப்பெற்றாய் - நாமுபதேசிக்க நீயடைந்தாய், நழுவிலாவுண்மையோடும் - கெடாததத்துவத்துடன், தெளிந்தனை - தெளிந்தாய், யாம்போதுமென - நாங்களேகுதுமென்று, நவிலலோடும்-(சரஸ்வதி) சொல்லவும்—எ-று.

(இ-ரை.) எல்லாமாகியும், எல்லா முடையதாகியும், சத்திகளெல்லா மிருக்கின்ற ஸ்வரூபமே பழுதுபடாமல் காலகன்ம பரிபாகத்தின லெந்த விடத்தி லெப்படி தோன்றுமோ அங்கவ்வண்ணமே தோற்றும். குற்றமற்ற வுண்மைஞான நிலையை லீலை நிமித்தம் நாமுபதேசிக்க நீயடைந்தாய். கெடாத தத்துவத்துடன்தெளிந்தாய். நாங்களேகுது மென்று சரஸ்வதிசொல்லவும்.

(இ-ம்.) சைதன்யஸ்புரண மெக்காலத் தெப்படிதோற்றுவதோ வப்படி சகலமுந் தோற்றுவதேயன்றி நெடிதுகுறிதென்னு மாயுளின் பேதமின்றெனபதாம். (௬௪)

---

மூன்பவமடைதற்கு வினவுதலையு மதற்குத்தரத்தையுங்கூறல்.

இதுபுகலக் கேட்டரச னெனையடைந்தோர் களும்வேண்டிற் றெய்தாநிற்பர், புதுமணிநேருமைப்பணிந்து புகழ்ந்தேன்வேண்டியதெய்தல் புதுமைத்தாமோ, பதுமவுட னுடைவதென்றென்ன விப்போரிற் படுவைபட்டா, லதுபுகுவை யெனக்கலைமா தளித்தலுமேற் றலத்தொருவ னறைவதானுன்.

(இ-ள்.) இதுபுகல - இவ் (வனுபவத்தைப்) போதிக்க, கேட்டரசன் - சிரவணஞ்செய்தவிரேதன், எனையடைந்தோர்களும் - என்னை (யாசகமா) யடைந்தவர்களும், வேண்டிற்றெய்தாநிற்பர் - வேண்டியதைப் பெறுவார்கள், புதுமணிநேருமை - புதுமையான (சிந்தா) மணியையொத்தவுங்களை,

பணிந்து - வணங்கி, புகழ்ந்தேன் - தோத்திரஞ்செய்தவனுகியநான், வேண்டியதெய்தல் - (அடைய) வேண்டியதடைதல், புதுமைத்தாமோ - ஆச்சரியமாமா, பதுமவுடனு னடைவதென்றென்ன - (முற்) பதுமசரீரத்தை யானடைவதென்றென்றுகேட்க, இப்போரிற்படுவை - இந்த யுத்தத்தின் மரிப்பாய், பட்டால் - மரித்தால், அது புகுவையென - அச்சரீரத்தை யடைவாயென்று, கலைமாதளித்தலும் - சரஸ்வதியனுக்கிரகிக்கவும், மேற்றலத்தொருவன் - மேல்வீட்டி லொருவன் (வந்து), அறைவதானுன் - சொல்லத்தொடங்கினுன்—எ-று.

(இ-ன.) இவ்வனுபவத்தைப்போதிக்க சிரவணஞ்செய்தவிநேதன் என்னையாசகமா யடைந்தவர்களும் வேண்டியதைப்பெறுவார்கள், புதுமையான சிந்தாமணியையொத்த வுங்களைவணங்கி தோத்திரஞ்செய்தவனுகிய நான் அடையவேண்டிய தடைதல் ஆச்சரியமாமா? முற்பதும சரீரத்தை யானடைவதென்றென்று கேட்க இந்த யுத்தத்தில் மரிப்பாய், மரித்தால் அச்சரீரத்தை யடைவாயென்று சரஸ்வதி யனுக்கிரகிக்கவும் மேல்வீட்டி லொருவன் வந்து சொல்லத்தொடங்கினுன்—என்பதாம். (சுரு)

## முற்பவமடைதற்கேதுவான சரித்திரழுரைத்தல்.

அப்புமழை சொரிந்துவரு மடர்சேனைக் கடலெங்கு மடர்ந்துநிற்க, வெப்புடைய கனற்கொழுந்தா லந்நகரஞ் சாம்பராய் வேவாநின்ற, திப்புதுமை கண்டிலைகொ லிகல்வேந்தே யென்பளவி லிறைஞ்சார்சேனை, முப்புவனங் களுநடுங்க மோகரிக்கு மோசை செவி முடுகக்கேட்டான்.

(இ-ள்.) அப்புமழைசொரிந்துவரும் - அம்புவருடஞ் சொரிந்துவருகின்ற, அடர்சேனைக்கடல் - நிறைந்த சேனுசமுத்திரமானது, எங்கு மடர்ந்துநிற்க - எவ்விடத்து நிறைந்திருக்க, வெப்புடைய-வெம்மையாகிய, கனற்கொழுந்தால்-அக்கினிச்சுவாலையினுல், அந்நகரம்-அப்பட்டணம், சாம்பராய் வேகாநின்றது - சாம்பலாகவேகின்றது, இப்புதுமை - இவ்வதிசயத்தை, கண்டிலைகொல் - காணவில்லையோ, இகல்வேந்தே-பலம்பொருந்திய வரசனே, என்பளவில் - என்று சொல்லுஞ்சமயத்தில், இறைஞ்சார்சேனை - பகைவர் படையானது, முப்புவனங்களு நடுங்க - மூன்றுலகங்களு நடுங்கும்படி, மோகரிக்குமோசை - கெற்சிக்கின்ற சப்தத்தை, செவிமுடுகக்கேட்டான் - காது செவிடுபட (வரசன்)கேட்டான்—எ-று.

(இ-ன.) அம்புவருடஞ் சொரிந்து வருகின்ற நிறைந்தசேனுசமுத்திரமானது எவ்விடத்து நிறைந்திருக்க வெம்மையாகிய அக்கினிச் சுவாலையினுல் அப்பட்டணம் சாம்பலாகவேகின்றது,

இவ்வதிசயத்தை காணவில்லையோ! பலம்பொருந்திய வரசனே என்று சொல்லுஞ்சமயத்தில் பகைவர்படையானது மூன்றுலகங் களு நடுங்கும்படி கெற்சிக்கின்ற சப்தத்தைக் காதுசெவிடுபட வர சன் கேட்டான்—என்பதாம். (கூகூ)

இதுவுமது.

ஒட்டலர்சே னையின்முழக்கு முலைந்தலறு நகரொலியு முரு மேறென்ன, முட்டியெழ வடவனல்போன் முழங்கனலின் புகை யெங்கு மூடிக்கொள்ள, கெட்டனகண் களுஞ்செவியுங் கிளர்நகர மழிந்ததுவிக் கேடியாவுந், திட்டமுற லீலையும்வாணியும்வேந்து மந்திரியுந் தெரியக்கண்டார்.

(இ-ள்.) ஒட்டலர் - சத்துருக்களின், சேனையின்முழக்கும் - படையி னதுசப்தமும், உலைந்தலறும்-அலைவுற்றலராநின்ற, நகரொலியும் - பட்ட ணத்திலுள்ளவர்களின்சப்தமும், உருமேறென்ன - இடியைப்போல, முட் டியெழ-எதிர்த்தெழ, வடவனல்போல் - வடவாக்கினியைப்போல, முழங் கனலின் - சப்திக்கப்பட்ட வக்கினியினது, புகையெங்கு மூடிக்கொள்ள- தூமமானதெவ்விடத்துஞ் சூழ்ந்துகொள்ள, கண்களுஞ்செவியும் - நேத் திரமுஞ் சுரோத்திரமும், கெட்டன - அழிந்தன, கிளர்நகர மழிந்தது - ப்ரகாசிக்கின்றபட்டணமழிந்தது, இக்கேடியாவும் - இக்கேடனைத்தையும், திட்டமுற - ப்ரத்யக்ஷமாக, லீலையும் - லீலையும், வாணியும் - சரஸ்வதியும், வேந்தும் - அரசனும், மந்திரியும்-அமைச்சனும், தெரியக்கண்டார் - ப்ரத் யக்ஷமாகப்பார்த்தார்கள்—எ-று.

(இ-ரை.) சத்துருக்களின் படையினது சப்தமும், அலைவுற் றலராநின்ற பட்டணத்திலுள்ளவர்களின் சப்தமும், இடியைப் போல எதிர்த்தெழ வடவாக்கினியைப்போல சப்திக்கப்பட்ட வக் கினியினது தூமமான தெவ்விடத்துஞ் சூழ்ந்து கொள்ள நேத்தி ரமுஞ் சுரோத்திரமும் அழிந்தன. ப்ரகாசிக்கின்ற பட்டணமழிந் தது. இக்கேடனைத்தையும் ப்ரத்யக்ஷமாகலீலையும், சரஸ்வதியும், அரசனும், அமைச்சனும், ப்ரத்யக்ஷமாகப்பார்த்தார்கள்—எ-ம்.()

இதுவுமது - வேறு.

செருவிறல்வேந்தன்றேவி தெருமந்துநடுங்கிவந்தாள்
வருமிவள்பாங்கிமன்னு மாளிகைமகளிர்யாரும்
பெருகியநிதியுங்கொண்டார் பேணலாரென்னக்கேட்டா
னருகுறுதேவியுங்க ளடைக்கலமென்றுபோனான்.

(இ-ள்.) செருவிறல் - யுத்தத்தில்வீரமுள்ள, வேந்தன்றேவி - அரச னுடையமனைவியானவள், தெருமந்து - பிரமித்து, நடுங்கிவந்தாள் - நடுக்

கமுற்றுவந்தாள், வருமிவள்பாங்கி-இவளுடன்வராநின்றதோழியானவள், மன்னு - அரசனே, மாளிகைமகளிர்யாரும் - அரண்மனையி (லுள்ள) மாதர்களனைவரையும், பெருகியநிதியும் - மிகுந்ததனங்களையும், பேணலார் - சத்துருக்கள், கொண்டாரென்ன - கொள்ளையிட்டார்களென்று சொல்ல, கேட்டான் - (அதைக்) கேட்டவிரேதவரசன், அருகுறுதேவி - என்பக்கத்திலுள்ளதேவியானவள், உங்களடைக்கலமென்றுபோனான் - உங்களடைக்கலமென்றுசொல்லியுத்தத்துக்குப்போயினன்—எ-று.

(இ-ள்.) யுத்தத்தில் வீரமுள்ள அரசனுடைய மனைவியானவள் பிரமித்து நடுக்கமுற்றுவந்தாள், இவளுடன் வராநின்ற தோழியானவள் அரசனே! அரண்மனையிலுள்ள மாதர்களனைவரையும் மிகுந்த தனங்களையும் சத்துருக்கள் கொள்ளையிட்டார்களென்று சொல்ல, அதைக்கேட்ட விரேதவரசன் என்பக்கத்திலுள்ள தேவியானவள் உங்களடைக்கலமென்று சொல்லி யுத்தத்துக்குப்போயினன்—என்பதாம். (சுஅ)

லீலைவடிவமாகவே வந்த புதியலீலையின் காரணவினவுதல்.

எதிர்நிழல்போலவந்த லீலையையிந்தலீலை
யதிசயமெய்திநோக்கி யருங்கலைமாதைநோக்கி
புதிதுநானிங்குவந்த பொருளென்கொ லென்றலோடு
மதிநிறவாணியந்த மயக்கந்தீர்ந்துரைப்பதானாள்.

(இ-ள்.) எதிர்நிழல்போல - (கண்ணாடி) யிலெதிரிட்ட தனதுசாயையைப்போல, வந்தலீலையை - வந்த (விரேதன் மனைவியாகிய) லீலையை, இந்தலீலை - (பதுமன் மனைவியான) விந்த லீலையானவள், அதிசயமெய்தி நோக்கி - ஆச்சரியமடைந்துபார்த்து, அருங்கலைமாதைநோக்கி - அருமையானசரஸ்வதியைப்பார்த்து, புதிது - நூதனமாக, நானிங்குவந்தபொருளென்கொல் - நானே யிவ்விடத்தில் வந்திருக்கின்ற வுண்மையென்ன, என்றலோடும் - என்றுகேட்டவுடன், மதிநிறவாணி-சந்திரநிறத்தையுடைய சரஸ்வதியானவள், அந்தமயக்கந்தீர்த்து - அம்மயக்கத்தைநீக்கி, உரைப்பதானாள் - சொல்லத்தொடங்கினாள்—எ-று.

(இ-ள்) கண்ணாடியிலெதிரிட்ட தனது சாயையைப்போல வந்த விரேதன் மனைவியாகிய லீலையை பதுமன்மனைவியான விந்த லீலையானவள் ஆச்சரியமடைந்துபார்த்து அருமையான சரஸ்வதியைப்பார்த்து நூதனமாக நானே யிவ்விடத்தில் வந்திருக்கின்ற வுண்மை யென்ன வென்று கேட்டவுடன் சந்திரநிறத்தையுடைய சரஸ்வதி யானவள் அம்மயக்கத்தை நீக்கிசொல்லத்தொடங்கினாள்—என்பதாம். (சுகூ)

### தேகாந்தஸ்புரணமே யிப்புதிய லீலையாயிற்றேனல்.

நின்னைநீங்காதுவாழ நினைத்தனன்மரணகாலத்
தன்னதவ்விடத்தேபெற்றா னன்பினாலுனதுகாந்த
னின்னல்கூர்மரணந்தன்னி லெண்ணியதெய்துமியார்க்குந்
தன்னெதிருற்றதன்றித் தோன்றுமோதற்பணத்தில்.

(இ-ள்.) உனதுகாந்தன் - நினதுபுருடனாகியபதுமன், அன்பினால் - (உன்னிடத்தி லிருக்கின்ற) வாஞ்சையினால், நின்னை நீங்காதுவாழ - உன்னைப்பிரியாமற் சுகித்ததற்கு, மரணகாலத்து - மரணசமயத்தில், நினைத்தனன் - நினைத்தான், அன்னது - அந்நினைவின்படியே, அவ்விடத்தேபெற்றான் - அவ்விடத்தி லுன்னைப்பெற்றான், இன்னல்கூர் - துன்பமிகுந்த, மரணந்தன்னில் - மரணத்தில், இயார்க்கும் - யாவர்க்கும், எண்ணியதெய்தும்-சிந்தித்தடையும், தன்னெதிருற்றலன்றி - தன்முன்னிருந்ததன்றி, தற்பணத்தில் - கண்ணாடியில், தோன்றுமோ - (வேறு) தோற்றுமோ.

(இ-ா.) நினதுபுருடனாகிய பதுமன் உன்னிடத்திலிருக்கின்ற வாஞ்சையினால் உன்னைப்பிரியாமற் சுகித்ததற்கு மரணசமயத்தில்நினைத்தான். அந்நினைவின்படியே அவ்விடத்திலுன்னைப் பெற்றான், துன்பமிகுந்த மரணத்தில் யாவருக்கும் சிந்தித்த தடையும் தன் முன்னிருந்ததன்றி கண்ணாடியில் வேறுதோற்றுமோ—என்பதாம்.

(இ-சூ-க-ம்.) வெளிப்படை. (எ0)

### (இதுவுமது.)

நாசமுற்பத்திமூற்சை நனுக்கனுச்சுழுத்தியெல்லா
மேசுறவொன்றினுள்ளொன் றில்லையாலிலதுண்டென்ன
மாசுறுமயக்கமட்டே மட்டறவளராநின்ற
தாசறுமனுபவங்க ளிருவகையவற்றைக்கேட்பாய்.

(இ-ள்.) நாசம் - மரணமும், உற்பத்தி - சநநமும், மூற்சை-மனோமயக்கமும், நனு - சாக்கிரமும், கனு - சொப்பனமும், சுழுத்தி - சுழுத்தியுமாகிய, எல்லாம் - இவைகளனைத்தும், ஏசுற - குற்றம்பொருந்த, ஒன்றினுள் -ஒன்றினிடத்தில், ஒன்றில்லையால் - ஒன்றில்லாதபடியினால், இலது-இல்லையென்பது, உண்டென்ன-உள்ளதென்பது, மாசுறுமயக்கமட்டே-களங்கமுற்றபிரமையினளவே, மட்டறவளராநின்றது - அளவின்றிவிருத்தியாகின்றது, ஆசறுமனுபவங்கள்-குற்றமற்ற வனுபவங்களானவை, இருவகை - இரண்டுவிதமாம், அவற்றைக்கேட்பாய் - அவைகளைக்கேள்—எ-று.

(இ-ா.) மரணமும், சநநமும், மனோமயக்கமும், சாக்கிரமும், சொப்பனமும், சுழுத்தியுமாகியஇவைக ளனைத்தும் குற்றம்

பொருந்த ஒன்றினிடத்தில் ஒன்றில்லாத படியினால் இல்லையென்பது உள்ளதென்பது களங்கமுற்ற பிரமையினளவே அளவின்றி விருத்தியாகின்றது, குற்றமற்றவனுபவங்களானவை இரண்டுவிதமாம் அவைகளைக்கேள்—என்பதாம்.

(இ-ம்) மயக்கத்திலுண்டான சத்தாவத்தையு நிலையற்றன வென்பதாம்.()

இதுவுமது.

முன்னனுபவத்துக்கேற்ற முறைமையாய்ச்சிலவைதோன்றும்
பின்னுறு புதுமைத்தாகிப் பேதமாய்ச்சிலவைதோன்று
நின்னுடனின்னசார நின்குலநின்னொழுக்க
மென்னவேறன்றிநின்றா ளெதிர்நிழல்போலலீலை.

(இ-ள்.) முன்னனுபவத்துக்கேற்ற - முன்னனுபவத்துக்குத் தகுந்த, முறைமையாய் - முறையாக, சிலவைதோன்றும் - சிலவுண்டாயிருக்கும், பின்னுறு புதுமைத்தாகி - பின்புள்ள நூதனமாகி, பேதமாய்ச்சிலவைதோன்றும் - பேதமாகச்சிலவுண்டாயிருக்கும், (ஆகையால்) நின்னுடல் - உனதுவடிவம், நின்னசாரம் - உனதாசாரம், நின்குலம் - உனதுகுலம், நின்னொழுக்கம் - உனதுநடை, என்ன - என்னும்படி, லீலை - (இந்த) லீலையானவள், எதிர்நிழல்போல - முன்றோற்றிய வுனதுநிழலைப்போல, வேறன்றிநின்றாள் - பேதமில்லாமலிருந்தாள்—எ-று.

(இ-ரை.) முன்னனுபவத்துக்குத் தகுந்த முறையாகசிலவுண்டாயிருக்கும், பின்புள்ள நூதனமாகி பேதமாகச்சிலவுண்டாயிருக்கும், ஆகையால் உனதுவடிவம், உனதாசாரம், உனதுகுலம், உனது நடை என்னும்படி இந்தலீலையானவள் முன்றோற்றிய வுனது நிழலைப்போல பேதமில்லாம லிருந்தாள்—என்பதாம்

(இ-ம்.) பாவனைப்ரகார முன்னனுபவத்திற்கொத்தவண்ணம் புதிய லீலைதோற்றினளென்பதாம். (எஉ)

## புதியலீலை வினவுதல்.

புரவலனினைவா லுன்னைப் போலிவடோன்றிநின்றாள்
விரவுமிப்போரிற்பட்டு விரேதன்பதுமனென்னு
நரபதியாகுமென்ற நாமகள்வசனங்கேட்டு
பரவினபுதியலீலை பணிந்திதுபகர்வதானாள்.

(இ-ள்.) புரவலனினைவால்-இராசாவி னினைவினால், உன்னைப்போல் - நின்னைப்போலவே, இவடோன்றி நின்றாள் - இவளுமுண்டானாள், விரவுமிப்போரிற்பட்டு - கலந்தவிந்த யுத்தத்திலிறந்து, விரேதன் - விரேதனை

னவன், பதுமனென்னு நரபதி யாகுமென்ற - பதுமனென்கின்ற வரசனு வனென்றுசொல்லிய, நாமகள் வசனங்கேட்டு - சரஸ்வதியினது வாக்கியத்தைக்கேட்டு, பரவினபுதியலீலை-புகழ்ந்த நூதன லீலையானவள், பணிந்திது பகர்வதானுள் - வணங்கியிதைச்சொல்லத்தொடங்கினுள்—எ-று.

(இ-ளா.) இராசாவினினைவினுல் நின்னைப்போலவே இவளுமுண்டானுள், கலந்தவிந்த யுத்தத்திலிறந்து விடூரதனுனவன் பதுமனென்கின்ற வரசனுவனென்று சொல்லிய சரஸ்வதியினது வாக்கியத்தைக்கேட்டு புகழ்ந்த நூதனலீலையானவள் வணங்கி யிதைச்சொல்லத்தொடங்கினுள்—என்பதாம். (எஙு)

## புதியலீலை விரும்பினவரத்தைத் தேவி யனுக்கிரகித்தல்.

பண்டுநான்பூசைசெய்த பாமகள்போலுநீயே
விண்டவராலென்காந்தன் வீடினுலுறைவதெங்கே
கண்டுநானங்கேயிந்தக் காயத்தோடெய்திவாழத்
தண்டலில்வரநல்கென்னத் தந்தனமென்றலோடும்.

(இ-ள்.) பண்டுநான் பூசைசெய்த - முற்காலத்தி னுன்பூசித்த, பாமகள்போலுநீயே, சரஸ்வதியைப்போலிருக்கின்ற நீயே, விண்டவரால் - சத்துருவினுல், என்காந்தன்வீட்டினுல் - எனதுபுருடனிறந்தால், எங்கே-எவ்விடத்தில், உறைவது - வசிப்பதோ, கண்டு - (அதைப்) பார்த்து, நானங்கே - யானந்தவிடத்தில், இந்தக்காயத்தோடு-இச்சரீரத்துடன், எய்திவாழ -போய்வாழும்படி, தண்டலில்வரம் - தடையில்லாதவரத்தை, நல்கென்ன - அருளெனக்கேட்க, தந்தனமென்றலோடும் - ஈந்தனமெனவும்—எ-று.

(இ-ளா.) முற்காலத்தி னுன்பூசித்த சரஸ்வதியைப்போலிருக்கின்ற நீயே சத்துருவினுள் எனது புருடனிறந்தால் எவ்விடத்தில்வசிப்பதோ அதைப்பார்த்து யானந்தவிடத்தில் இச்சரீரத்துடன்போய் வாழும்படி தடையில்லாதவரத்தை அருளெனக்கேட்க ஈந்தனமெனவும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) வெளிப்படை. (எச)

## பழையலீலை வினுவுதல்.

புகன்றநாமகளைநோக்கிப் புராதனலீலைசொல்வா
னிகழ்ந்தவென்னுடலோடன்றி நின்றவேற்றுடலைமேவி
யுகந்தலோகாந்தரத்து முயர்கிரிநகரினூடு
மகன்றவாரென்கொலென்ன வாரணத்தன்னைசொல்வாள்.

(இ-ள்.) புகன்றநாமகளைநோக்கி - (இப்படி) சொன்னசரஸ்வதியைப்பார்த்து, புராதனலீலைசொல்வாள் - பழையலீலைசொல்லுவாள், நிகழ்ந்த - விளங்கிய, என்னுடலோடன்றி-என (தாதிபௌதிக) சரீரத்துடன் செல்லாமல், நின்ற - இருந்த, வேற்றுடலைமேவி - வேறான (வாதிவாகிக) சரீரத்தைப்பொருந்தி, உகந்தலோகாந்தரத்தும் - உயர்ந்தமறுலோகத்திலும், உயர்கிரிநகரினூடும்-மேலானகிரிக்கிராமத்திலும், அகன்றவாறென்கொலென்ன - (நா) னீங்கினவிதமென்னவென்றுகேட்க, ஆரணத்தன்னைசொல்வாள் - வேதமாதாசொல்லுவாள்—எ-று.

**(இ-ளா.) இப்படிச் சொன்ன சரஸ்வதியைப்பார்த்துபழைய லீலைசொல்லுவாள். விளங்கிய எனதாதிபௌதிக சரீரத்துடன் செல்லாமல் இருந்த வேறான வாதிவாகிக சரீரத்தைப்பொருந்தி உயர்ந்த மறுலோகத்திலும், மேலான கிரிக்கிராமத்திலும், நானீங்கினவிதமென்னவென்றுகேட்க, வேதமாதாசொல்லுவாள்—எ-ம்.**

(இ-ம்.) எனக்குச் செல்லக்கூடாதென்னுந் தூலசரீர மிவளுக்கெப்படிசெல்லுமென்பதாம். (எரு)

## தேவியுத்தரம் - வேறு.

**ஒருவருக்குநா மொன்றுநல்கல முணர்வின்வண்ணமேயுயிர்களெய்துமாற், கருதிமுந்திநீ கதிவிரும்பினுய் காதலித்தசிற் கண்ணளித்தனம், பெருகுகாதலா லிந்தவண்ணமிப் பேதைவேண்டவிப் பேறுநல்கின, மிருதயத்திலே நினைந்ததெய்திடுமெமதுபார்வையாலியார்க்குமென்றனள்.**

(இ-ள்.) ஒருவருக்கும் - ஒருவருக்கானாலும், நாமொன்றுநல்கலம்-யாமொன்றுங்கொடுப்பதில்லை, உணர்வின்வண்ணமே - நினைவின்படியே, உயிர்களெய்தும்-சீவர்களடையும் முந்திகருதி-முன்னமேநினைத்து, நீகதிவிரும்பினுய் - நீ ஞானத்தையாசித்தாய், காதலித்தசிற்கண்ணளித்தனம்-விரும்பினஞானதிருஷ்டியைக்கொடுத்தோம், பெருகுகாதலால் - மிகுந்தவாசையினால், இந்தவண்ணம்-இந்தப்படி, இப்பேதைவேண்ட - இப்பெண்விரும்ப, இப்பேறுநல்கினம்-இவ்வரத்தைக்கொடுத்தோம், இருதயத்தில்-மனதில், நினைந்தது - கருதினது, எமதுபார்வையால் - எம்முடையகிருபாநோக்கினால், இயார்க்குமெய்திடும் - யாவருக்குங்கிடைக்கும், என்றனள் - என்று சரஸ்வதிசொன்னாள்—எ-று.

**(இ-ளா.) ஒருவருக்கானாலும் யாமொன்றுங்கொடுப்பதில்லை, நினைவின்படியே சீவர்களடையும் முன்னமே நினைத்து நீ ஞானத்**

தையாசித்தாய், விரும்பின ஞானதிருஷ்டியைக்கொடுத்தோம், மிகுந்தவாசையினால் இந்தப்படி இப்பெண்விரும்ப இவ்வரத்தைக் கொடுத்தோம், மனதில் கருதினது எம்முடைய கிருபாநோக்கினால் யாவருக்குங் கிடைக்கும் என்று சரஸ்வதிசொன்னாள்-எ-ம்.

(இ-ம்.) ஆத்மாக்கள்பாவனைப்படி ஈஸ்வரன் கூட்டிவிக்கின்றதென்பதாம். (எசூ)

ஈஸ்வரானுக்கிரகம்பெற்ற மகான்மரிக்குங் காரணமியாதெனின்.

திறல்விரேதன் சினமிகுத்தனன் றேரிலேறினன் சேனையோடு
போய், மறலியூர்புகும் வழிநெருக்கமாய் மருவலாரெலா மடிய
மோதினா, னிறலுறுங்கொலென் றெண்ணியன்பரா லீலைவாணிதா
ளேத்தியன்னையே, விறன்மிகுந்துநின் கருணைமேவியும் வினையின்
மாளுமோ வேந்தனென்னவே

(இ-ள்.) திறல்விரேதன்-பலமுள்ளவிரேதவரசன், சினமிகுந்தனன் - கோபமிகுந்தவனாய், தேரிலேறினன்-இரதத்திலேறி, சேனையோடுபோய்-சேனா (சமுத்திரத்துடன்) யுத்தகளத்திற்சென்று, மறலியூர்புகும்வழி - இயமபுரிக்குச்செல்கின்ற மார்க்கமானது, நெருக்கமாம் - நெருங்கும்படி, மருவலாரெலாமடிய - சத்துருக்களனைவருங்கெட, மோதினான்-அடித்தான், இறலுறுங்கொலென்றெண்ணி - மருப்பானென்று சிந்தித்து, அன்பராலீலை - (நாயகனிடத்திற்) பிரியமாறுதலீலைகள், வாணிதாளேத்தி - சரஸ்வதியினதுபாதத்தைத்துதித்து, அன்னையே - (எமது) தாயே, விறன்மிகுந்தும் - வீரத்தன்மைமிகுந்திருந்தும், நின்கருணைமேவியும் - உனதுகிருபையிருந்தும், வேந்தன் - (எம) தரசன், வினையின்மாளுமோ - (இப்) போரின்மரிப்பாரோ, என்ன - என்றுகேட்க—எ-று.

(இ-னா.) பலமுள்ள விரேதவரசன் கோபமிகுந்தவனாய்இரதத்திலேறி சேனாசமுத்திரத்துடன் யுத்தகளத்திற்சென்று இயமபுரிக்குச் செல்கின்ற மார்க்கமானது நெருங்கும்படி. சத்துருக்களனைவருங்கெட அடித்தான். மரிப்பானென்று சிந்தித்து நாயகனிடத்தில் பிரியமாறுதலீலைகள் சரஸ்வதியினது பாதத்தைத்துதித்து எமது தாயே வீரத்தன்மை மிகுந்திருந்தும், உனது கிருபையிருந்தும், எமதரசன் இப்போரின் மரிப்பாரோ என்றுகேட்க.

## தேவியுத்தரம்.

கதிவிரும்பலாற் கலைவிரேதன் கப்பிலாப்பதங் கலப்பதாயி ஞ, னெதிரியானவிச் சிந்துவென்பவ னிகலிவெல்லவென்றெனை யிறைஞ்சலால், விதியில்யென்றவன் வேந்தனுமெனவிளம்புபோ திலே விடியரூேன்றலு, மதிரமோதிமே லடர்ந்தவெங்களத் தனி கமொன்றுமற் றழிந்துபோனதே.

(இ-ள்.) கலைவிரேத - கல்வியையுடையவிரேதனுனவன், கதிவிரும்ப லால் - பரகதியையிச்சத்தலால், கப்பிலாப்பதம் - இரண்டற்றபரமபதத் தை, கலப்பதாயினுன்-கலக்கும்படியாயினுன், எதிரியான விச்சிந்துவென் பவன்-எதிர்த்துவந்தவிச்சிந்து வரசனென்பவன், இகலில்வெல்லவென்று - (தனது) வல்லமையினு (லிவனை) ச்செயிக்கவேண்டுமென்று, எனையிறை ஞ்சலால் - என்னைப்பூசித்ததினுல், விதியில்வென்று - நியமித்தபடியேசெ யித்து, அவன்வேந்தனுமென-அவனரசனுனவனென்று, விடம்புபோதில் - சொல்லுஞ்சமயத்தில், விடியரூேன்றலும்-உதயகாலமாகவும், அதிரமோ தி - அதிரும்படியுத்தஞ்செய்து, மேலடர்ந்தவெங்களத்து - மேனெருங்கி ய வெம்மையாகிய யுத்தகளத்தில், அனிகமொன்றுமற்றழிந்துபோனது - (இரண்டிடத்திலுஞ்) சேனையொன்றுமில்லாமலிறந்தது—எ-று.

(இ-ள.) கல்வியையுடையவிரேதனுனவன் பரகதியையிச்சித் தலால் இரண்டற்றபரமபதத்தை கலக்கும்படியாயினுன் எதிர்த்து வந்த விச்சிந்துவரச னென்பவன் தனதுவல்லமையினு லிவனைச் செயிக்கவேண்டுமென்று என்னைப்பூசித்ததினுல் நியமித்தபடியே செயித்து அவனரசனுவனென்று சொல்லுஞ் சமயத்தில் உதயகா லமாகவும் அதிரும்படி யுத்தஞ்செய்துமேனெருங்கிய வெம்மையா கிய யுத்தகளத்தில் இரண்டிடத்திலுஞ் சேனையொன்றுமில்லாம லிறந்தது—என்பதாம்.

(இ-உ-க-ம்.) அவரவர்பாவனையேயிதற்குக்காரணமென்பதாம். (எஅ)

---

### முற்பவமடைதற் கேதுவான யுத்தமுரைத்தல்.

சிந்துநாமனுந் திறல்விரேதச் செல்வவேந்தனுஞ் சிலைகளேந் தினு, ரிந்துபானுவுந் திசைகள்வானமு மெய்யும்வாளியாலெங்கு மூடினுர், முந்துவெங்கணைத் திரளெரிந்துதீ முடுகியூழியின் முடி வையொத்தலு, முந்துபாகனுந் தேரும் வில்லுமற்றுயர் விரேத னொருவனுயினுன்.

(இ-ள்.) சிந்துநாமனும் - சிந்துவென்னும் பெயரையுடையவரசனும், திறல்விரேதன் - வீரமுள்ளவிரேதனாகிய, செல்வவேந்தனும் - சம்பத்துள்ளவரசனும், சிலைகளேந்தினன் - வில்லுகளையெடுத்தார், இந்துபானுவும் - சந்திரனுஞ்சூரியனும், திசைகள் - திக்குகளும், வானமும் - ஆகாயமும், எய்யும்வாளியால் - விடப்பட்ட வம்புகளினால், எங்குமூடினர் - எவ்விடத்துநிறைத்தார்கள், முந்துவெங்கணை - முன்னெதிர்க்கின்ற வெப்பமான பாணங்களின், திரளெரிந்து - கூட்டங்களெரிந்து, தீமூடுகி - அக்கினிசுவாலைவியாபித்து, ஊழியின்முடிவையொத்தலும் - யுகமுடிவைப்போலிருக்குமளவில், உந்துபாகனும் - தேரைநடத்தாநின்றசாரதியும், தேரும்-இரதமும், வில்லும் - தனுசும், அற்று - அறுபட்டு, உயர்விரேதன் - மேன்மையானவிரேதவரசன், ஒருவனாயினன் - தனியனானான்—எ-று.

(இ-கா.) சிந்துவென்னும் பெயரையுடையவரசனும் வீரமுள்ள விரேதனாகிய சம்பத்துள்ளவரசனும் வில்லுகளையெடுத்தார். சந்திரனும், சூரியனும், திக்குகளும், ஆகாயமும், விடப்பட்ட வம்புகளினால் எவ்விடத்து நிறைத்தார்கள். முன்னெதிர்க்கின்ற வெப்பமான பாணங்களின் கூட்டங்களெரிந்து அக்கினிச்சுவாலைவியாபித்து யுகமுடிவைப்போ லிருக்குமளவில் தேரை நடத்தாநின்ற சாரதியும், இரதமும், தனுசும், அறுபட்டு மேன்மையான விரேதவரசன் தனியனானான்—என்பதாம். (எக)

## புதியலீலை புருடன்செல்லுமிடத்திற் செல்லுதல்.

பிறைநெடுஞ்சரங் கவசம்வீழ்வுறப்
　பிரித்துமெய்யெலாம் பிளந்துசிந்தலும்
பொறையழிந்துவீழ்ந் தவனைநோக்கிவெண்
　புண்டரீகையைப் புதியலீலைபார்த்
திறைவனாவிபோ மெல்லையாயினா
　னிவனைநண்ணநா னேகநல்கெனா
வறைதலோடுமவ் வன்னைநல்கினா
　ளவளும்விண்ணினாய் தாகியேகினாள்.

(இ-ள்.) பிறைநெடுஞ்சரம் - அர்த்தசந்திரபாணத்தினால், கவசம்வீழ்வுற - (வச்சிர) கவசம் சிதறிவிழும்படி, பிரித்து - பிளந்து, மெய்யெலாம் - தேகத்தி (னவயவங்கள்) யாவும், பிளந்துசிந்தலும்-பிளக்கப்பட்டு (ச்சின்னபின்னமாய்ச்) சிதறுமளவில், பொறையழிந்து-வலிமைநீங்கி, வீழ்ந்தவனை - (பூமியிற்) சாய்ந்தவிரேதனை, நோக்கி - பார்த்து, வெண்புண்டரீகையை - வெண்டாமரையாளை, புதியலீலைபார்த்து, இறைவனாவிபோமெல்லையாயினான் - என்னாயகனுயிர் பிரியுஞ்சமயத்தையடைந்தான், இவனை

நண்ண-இவரைபொருந்த, நானேகநல்கெனு - யான்செல்லவருளென்று, அறைதலோடும் - சொன்னமாத்திரத்தில், அவ்வன்னைநல்கினள் - அத்தாயாகிய (சரஸ்வதி) யனுக்கிரகித்தாள், அவளும் - அந்தலீலையும், விண்ணில் - ஆகாயத்தில், நொய்தாகி - லேசாகி, ஏகினள் - போனாள்—எ-று.

(இ-ளா.) அர்த்தசந்திரபாணத்தினால் வச்சிரகவசம் சிதறி விழும்படிபிளந்து தேகத்தினவயவங்களியாவும் பிளக்கப்பட்டுச் சின்னபின்னமாய்ச் சிதறுமளவில் வலிமை நீங்கி பூமியிற்சாய்ந்து விடூரதனைப்பார்த்து வெண்டாமரையாளை நூதனலீலைபார்த்து என்னாயகனுயிர்பிரியுஞ்சமயத்தையடைந்தான், இவரைப்பொருந்த யான் செல்லவருளென்று சொன்னமாத்திரத்தில் அத்தாயாகிய சரஸ்வதி யனுக்கிரகித்தாள், அந்த லீலையும் ஆகாயத்தில் லேசாகிப்போனாள்—என்பதாம்.

(ப-ரை.) ஈஸ்வரானுக்கிரகத்தினாற் றூலசரீர மனுத்துவமான தென்பார், நொய்தாகியென்றார். (௮௦)

இதுவுமது.

கருமுகிற்றலங் கடந்துவாயுவின் கதிகடந்துவெங் கதிரினெல்லைவிட், டருகுதாரகர் பதமகன்றுமே லயனையாதியா மமரர்நாடொரீஇ, மருவுமிந்தவண் டம்பிளந்துபோய் வாரியாதியாய் வளைந்தயாவையு, முருவியெல்லையு முடிவுமற்றதா முண்மைஞானவிண் ணொல்லையெய்தினள்.

(இ-ள்.) கருமுகிற்றலங்கடந்து - மேகமண்டலத்தைக்கடந்து, வாயுவின்கதிகடந்து - வாயுமண்டலத்தைக்கடந்து, வெங்கதிரினெல்லைவிட்டு - வெம்மையான சூரியமண்டலத்தைக்கடந்து, அருகுதாரகர்பதமகன்று - சமீபமான நக்ஷத்திரமண்டலத்தைக்கடந்து, மேலயனையாதியாம் - மேற் சத்தியலோகமுதலிய, அமரர்நாடொரீஇ-தேவலோகங்களைக்கடந்து, மருவும் - பொருந்தாநின்ற, இந்த வண்டம் பிளந்துபோய் - இவ்வண்டத்தைக்கிழித்துக்கொண்டுபோய், வாரியாதியாய் வளைந்தயாவையும் - சலமுதலான வேழாபரணத்தையும், உருவி - ஊடுருவி, எல்லையும்-அளவும், முடிவும் - அந்தமும், அற்றதாம் - இல்லாததான, உண்மைஞானவிண் - தத்துவசிதாகாயத்தை, ஒல்லையெய்தினள் - சீக்கிரத்திலடைந்தாள்—எ-று.

(இ-ளா.) மேகமண்டலத்தைக் கடந்து வாயு மண்டலத்தைக்கடந்து வெம்மையான சூரியமண்டலத்தைக்கடந்து சமீபமான நக்ஷத்திரமண்டலத்தைக் கடந்து மேற் சத்திய லோகமுதலிய தேவலோகங்களைக்கடந்து பொருந்தாநின்ற இவ்வண்டத்தைக் கிழித்துக் கொண்டுபோய் சலமுதலான வேழாபரணத்தையும்

ஊடுருவி அளவும் அந்தமும் இல்லாததானதத்துவசிதாகாயத்தை சீக்கிரத்தி லடைந்தாள்—என்பதாம்.

ஆபாரணமேழாவன—புனல், அக்கினி, வாயுவு, ஆகாயம், அகங்கார தத்துவம், மகதத்துவம், பிரகிருதியெனக்கொள்க.

(இ-ரு-க-ம்.) வெளிப்படை. (அக)

இதுவுமது.

கற்பகோடிவெங் கருடனேடினுங் கடக்கொணுவத்திக்காடு காய்த்தபோ, லுற்பவங்களா மண்டகோடியோன் றென்றைநோக்குறு துளவவற்றினு, ளற்பமின்றியா வரணபேதமேயயல்வளைப்புறு மண்டமொன்றனுட், டற்பதங்கடந் தெய்தியம்புயச் சவங்கிடந்தமண் டபமடைந்தனள்.

(இ-ள்.) கற்பகோடி - அளவில்லாதகாலம், வெங்கருடனேடினும் - வேகமாகக்கலுழன் பறந்தாலும், கடக்கொணு-கடக்கக்கூடாததாயும், அத்திக்காடுகாய்த்தபோல் - அத்திவனங் காய்த்திருக்கின்றனபோல, உற்பவங்களா மண்டகோடி - உதித்தனவாகிய வளவற்ற பிரமாண்டங்கள், ஒன்றென்றை நோக்குறுதுள - ஒன்றையொன்று பார்க்கக்கூடாததாயுமிருக்கின்ற, அவற்றினுள் - அவ்வண்டங்களுக்குள், அற்பமின்றி - பெரிதாக, ஆவரணபேதம் - ஆவரணபேதமானது, அயல்வளைப்பறும்-அருகில் வளைந்துகொண்டிருக்கின்ற, அண்டமொன்றினுள் - ஓரண்டத்தினுள், தற்பதங்கடந்தெய்தி - ஞாணுகாயத்தைக்கடந்துபோய், அம்புயன் - பதுமவரசனது, சவங்கிடந்த - ப்ரேதமிருந்த, மண்டபமடைந்தனள் - அந்தப்புரத்தைச்சேர்ந்தாள்—எ-று.

(இ-ஸா.) அளவில்லாத காலம் வேகமாகக் கலுழன் பறந்தாலும், கடக்கக்கூடாதாயும், அத்திவனங்காய்த்திருக்கின்றனபோல உதித்தனவாகிய வளவற்ற பிரமாண்டங்கள் ஒன்றையொன்று பார்க்கக்கூடாததாயு மிருக்கின்ற அவ்வண்டங்களுக்குள் பெரிதாக ஆவரணபேதமானது அருகில் வளைந்துகொண்டிருக்கின்ற ஓரண்டத்தினுள் ஞாணுகாயத்தைக்கடந்துபோய் பதுமவரசனது ப்ரேதமிருந்த அந்தப்புரத்தைச் சேர்ந்தாள்—என்பதாம்.

(இ-ம்.) தேவியனுக்கிரகத்திஞற் புதிய லீலை பதுமனிடஞ்சேர்ந்ததாம். ()

---

## விடூரதன் முற்பவமடையச் செல்லுதல்.

---

தமரவண்டுசூழ் மலரின்மூடுமிச்சவசரீரமாந்தரணிபாலனே, யெமதுநாயகன் கருணைவாணியா லென்கொன்முன்னமிங் கெய்தினேமெனு, வமரவெண்ணிவெண் கவரிவீசியங் கன்பனோர்புறத்

**தவளிருந்தபின், விமலஞானியாம்விரல்விரேதன் மேவிசீவன்விண் மீதுபோயதே.**

(இ-ள்.) தமரவண்டுசூழ் - பெருங்கானஞ்செய்யுமளிகணிறைந்த, மலரின்மூடும் - புட்பங்களினுன் மறைக்கப்பட்ட, இச்சவசரீரமாம் - இப்ரேத தேகமாகிய, தரணிபாலனே - பூபாலனே, எமது நாயகன் - எம்முடைய கணவன், கருணைவானியால் - கிருபையுள்ள சரஸ்வதியினுல், என்சொல்- எப்படியோ, முன்னமுங்கெய்திஞேமென - முன்னமேயிவ்விடம் வந்தோமென்று, அமரவெண்ணி - நன்ருய்ச்சிந்தித்து, வெண்கவரிவீசி-வெண்சாமரம்வீசிக்கொண்டு, அங்கு-அவ்விடத்தில், அன்பனோர்புறத்து - (தனது) நாயகனுடையவொருபக்கத்தில், அவளிருந்தபின் - அப்புதியலீலையிருந்த பின்பு, விமலஞானியாம்-நின்மலஞானியான, விறல்விரேதன்-மகானுன விரேதவரசன், மேவுசீவன் - பொருந்தியசீவனுனது, விண்மீதுபோயது- ஆகாயத்திற்சென்றது—எ-று.

(இ-ம.) **பெருங்கானஞ்செய்யு மளிகணிறைந்த புட்பங்களினுன்மறைக்கப்பட்ட இப்ரேததேகமாகிய பூபாலனே எம்முடைய கணவன் கிருபையுள்ள சரஸ்வதியினுல் எப்படியோமுன்னமே யிவ்விடம் வந்தோமென்றுநன்ருய்ச் சிந்தித்து வெண்சாமரம் வீசிக்கொண்டு அவ்விடத்தில் தனது நாயகனுடைய வொருபக்கத்தில் அப்புதியலீலை யிருந்தபின்பு நின்மலஞானியான மகானுன விரேத வரசன் பொருந்திய சீவனுனது ஆகாயத்திற்சென்றது—எ-ம்.**

### முற்பவத்திற் புதுவிக்கு நிமித்த யபேதஞானத்தாற் பேதஞானத்தைத் தடுத்தல்.

**ஞானநோக்கிஞ ரவனைநோக்கிவிண்ணடந்துபின்வரு நங்கைமார்தமைத், தானறிந்திடா தகன்றசிவன்போய்ச் சவமிருந்தமண்டபமடைந்திடப், போனமாதரும் புதியலீலையைப் புரிந்துநோக்கிஞர் பொன்செய்மண்டபத், தானசிவனைத் தகைந்துமீளவுமம்புயாசனத் தவணிறுத்திஞள்.**

(இ-ள்.) ஞானநோக்கிஞர் - ஞானதிருஷ்டியை யுடைய லீலை சரஸ்வதியென்னுமிருவர், அவனைநோக்கி - அவ்விரேதசீவனைப்பார்த்து, விண்ணடந்து - ஆகாயத்திற்சென்று, பின்வரும் - பின்வருகின்ற, நங்கைமார்தமை-சிறந்தமாதர்களை, தானறிந்திடாது - தானறியாமல், அகன்ற சீவன்போம் - நீங்கினசீவனுனது (நகரத்திற்) சென்று, சவமிருந்தமண்டபம் - (பதும) ப்ரேதமிருந்தவந்தப்புரத்தை, அடைந்திட - அடைய, போனமாதரும் - (உடன்) சென்றவிவ்விரண்டுஸ்திரீகளும், புதியலீலையை - புதிதானலீலையை, புரிந்துநோக்கிஞர்-விரும்பிப்பார்த்தார்கள், பொன்செய்மண்

டபத்து - சுவணத்திணற்செய்தமண்டபத்தில், ஆனசீவனே, பொருந்திய சீவனே, தகைந்து - தடுத்து, மீளவும் - திரும்பவும், அம்புயாசனத்தவள் - பதுமாசனத்தையுடைய சரஸ்வதியானவள், நிறுத்தினள் - மேற்செல்லாமற் றடுத்தாள்—எ-று.

(இ-ள.) ஞானதிருஷ்டியை யுடைய லீலேசரஸ்வதியென்னு மிருவர் அவ்விரோதசீவனேப்பார்த்து ஆகாயத்திற்சென்றுபின்வருகின்ற சிறந்த மாதர்களே தானறியாமல் நீங்கினசீவனுனது நகரத்திற் சென்று பதுமப்ரேத மிருந்த வந்தப்புரத்தையடைய உடன் சென்ற விவ்விரண்டுஸ்திரீகளும் புதிதானலீலேயை விரும்பிப்பார்த்தார்கள், சுவணத்திணற் செய்த மண்டபத்தில் பொருந்திய சீவனேத் தடுத்துத்திரும்பவும் பதுமாசனத்தையுடைய சரஸ்வதியானவள் மேற்செல்லாமற்றடுத்தாள்.

(இ-உ-க-ஒ.) விரேதஸ்புரணமுன்னுள்ள பாவனஸ்தானமடைந்ததாம்.

## ஆதிபெளதிக சரீர மறைந்த தியாதெனின்.

பண்டைலீலேதன் மேனிகண்டிலாள் பாமடந்தையைப் பணிந்து கேட்டலு, மண்டுசிந்தைபோய் நிறைசமாதியான் மறிந்துவீழ்ந்தமெய்ம் மாண்டதாமெனக், கொண்டமைச்சர்வெங்கனல் கொளுத்திஞர் குரம்பையோடுநீ குவலேயத்துறி, லண்டர்வானினின்றுடலொடேகிஞ ளந்தலீலேயென்றதிசயிப்பரால்.

(இ-ள.) பண்டைலீலே-பழையலீலேயானவள், தன்மேனிகண்டிலாள்-தன (தாதிபெளதிக) சரீரத்தைக்காணுமல், பாமடந்தையை - சரஸ்வதியை, பணிந்துகேட்டலும் - வணங்கிக்கேட்கவும், மண்டுசிந்தைபோய்-(கற்பனே) மிகுந்த மனேநாசமாய், நிறை சமாதியால் - பூரணநிஷ்டையினுல், மறிந்துவீழ்ந்தமெய் - மறிந்து (கீழே) விழுந்த சரீரத்தை, மாண்டதாமெனக்கொண்டு - இறந்ததாமென் (றெண்ணிக்) கொண்டு, அமைச்சர் - மந்திரிகள், வெங்கனல் கொளுத்திஞர் - கொடியவக்கினியினுற்றகனம்பண்ணிஞர்கள், குரம்பையோடு - (இவ்வாதிவாகிக) சரீரத்துடன், நீகுவலேயத்துறில் - நீயிப்பூமியின்கண்ணிருந்தால், அண்டர்வானினின்று - தேவலோகத்திலிருந்து, அந்தலீலே - முன் (மரித்த) லீலேயானவள், உடலொ)டேகிஞளென்று - சரீரத்துடன்வந்தாளென்று, அதிசயிப்பர் - (யாவரும் வியப்பார்கள்—எ-று.

(இ-ள.) பழையலீலேயானவள் தனதாதிபெளதிக சரீரத்தைக்காணுமல் சரஸ்வதியை வணங்கிக்கேட்கவும் கற்பனேமிகுந்த மனேநாசமாய் பூரணநிஷ்டையினுல் மறிந்து கீழேவிழுந்த சரீரத்தை இறந்ததாமென் றெண்ணிக்கொண்டுமந்திரிகள் கொடிய வக்

கினியினூற் றகனம்பண்ணினூர்கள். இவ்வாதிவாகிக சரீரத்துடன் நீயிப்பூமியின்கண்ணிருந்தால் தேவலோகத்திலிருந்து முன்மரித்த லீலையானவள்சரீரத்துடன் வந்தாளென்றுயாவரும்வியப்பார்கள்.

இதுவுமது.

சூக்கமெய்யினேடிருந்துவாதனைத் தோற்றமற்றலாற்றூலகாயநீ, போக்கலாயதென் றிவளுக்கோதியப் புதியலீலையிப் போது காண்கெனு, வாக்கின்செல்வியுண் ணினைந்தவெல்லையின் மறைந்து நின்றவர் நிறைந்துதோன்றலும், பாக்கியங்கள்போற் கண்டலீலையப் பாவைமார்பதம் பணிந்திறைஞ்சினுள்.

(இ-ள்.) சூக்கமெய்யினேடிருந்து - ஆதிவாகிக சரீரத்துடனிருந்து, வாதனைத்தோற்றமாற்றலால் - வாசனையை நீக்கினபடியால, தூலகாயம் - ஆதிபௌதிக சரீரத்தை, நீ போக்கலாயதென்று - நீ தள்ளத்தக்கதென்று, இவளுக்கோதி - இந்தலீலைக்குச்சொல்லி, அப்புதியலீலை - அந்நூதனலீலையானவள், இப்போது காண்கெனு-இப்போது (நம்மைக்) காணக்கடவளென்று, வாக்கின் செல்வி - சரஸ்வதியானவள், உண்ணினைந்தவெல்லையில்-மனதிற் சங்கற்பித்தமாத்திரத்தில், மறைந்து நின்றவர் - தெரியாதிருந்தவர்கள், நிறைந்துதோன்றலும்-ப்ரத்யக்ஷமானவளவில், பாக்கியங்கள்போல் - (தான்பெற்ற) செல்வங்களைப்போல, கண்டலீலை - தெரிசித்த லீலையானவள், அப்பாவைமார்பதம்-அத்தேவிகளின்பாதங்களை, பணிந்திறைஞ்சினுள் - வணங்கித்தோத்திரஞ்செய்தாள்—எ-று.

(இ-ஸா.) ஆதிவாகிக சரீரத்துடனிருந்து வாசனையைநீக்கின படியால் ஆதிபௌதிக சரீரத்தை நீ தள்ளத்தக்கதென்றுஇந்தலீலைக்குச்சொல்லி அந்நூதனலீலையானவள் இப்போது நம்மைக்காணக்கடவளென்று சரஸ்வதியானவள் மனதிற் சங்கற்பித்தமாத்திரத்தில் தெரியாதிருந்தவர்கள் ப்ரத்யக்ஷமானவளவில் தான்பெற்ற செல்வங்களைப்போல தெரிசித்தலீலையானவள் அத்தேவிகளின்பாதங்களைவணங்கித்தோத்திரஞ்செய்தாள்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) பிரமாப்பியாச முதிர்ச்சியா லாதிவாகிக சரீரம் பெற்றவர்களுக் காதிபௌதிக சரீரமறையுமென்பதாம். (அ௬)

## முற்பவமடைந்து முத்தனுதல்.

போதவாணியும் பழையலீலையும் புதியலீலையும் புணர்ந்திருந்துழி, சாதிமென்மலர்வாசம்விட்டெனச் சலசமாதுயிர்த்தடைவிடு

த்தலும், வாதரூபமாய் நாசியூடுபோய் வறந்தமெய்யெலா நிறைந் துலாவிடச், சீதமாகிநெய்த் துளிபரந்து கண்டிறந்தெழுந்தனன்செ ற்றமன்னவன்.

(இ-ள்.) போதவாணியும் - ஞானஸ்வரூபியாகியசரஸ்வதியும், பழைய லீலையும்-புராதனலீலையும், புதியலீலையும் - நூதனலீலையும், புணர்ந்திருந் துழி - கூடியிருந்தவிடத்தில், சாதிமென்மலர் - (மிருதுவாகிய) சாதிபுட்ப மானது, வாசம்விட்டென - வாசனையைவிட்டதுபோல, சலசமாது - சரஸ் வதியானவள், உயிர்த்தடைவிடுத்தலும் - சீவன்றடையை விட்டுவிடவும், வாதரூபமாய்-பிராணரூபமாய், நாசியூடுபோய்-மூக்கினுட்சென்று, வறந்த மெய்யெலாம் - உலர்ந்தசரீரம்யாவும், நிறைந்துலாவிட-பரந்துவியாபிக்க, சீதமாகி - குளிர்ச்சியாகி, நெய்த்துளிபரந்து - இரத்தமுண்டாய், கண்டிற ந்து - கண்விழித்து, செற்றமன்னவன் - மரித்தவரசன், எழுந்தனன்-எழு ந்தான்—எ-று.

(இ-ள.) ஞானஸ்வரூபியாகிய சரஸ்வதியும்புராதனலீலையும் நூதனலீலையும் கூடியிருந்தவிடத்தில் மிருதுவாகிய சாதிபுட்பமா னது வாசனையை விட்டதுபோல சரஸ்வதியானவள் சீவன்றடை யை விட்டுவிடவும் பிராணரூபமாய் மூக்கினுட்சென்று உலர்ந்த சரீரம் யாவும்பரந்து வியாபிக்க குளிர்ச்சியாகி இரத்தமுண்டாய் கண் விழித்து மரித்த வரசன் எழுந்தான்—என்பதாம்.

(இ-ீ.) சத்தாமாத்திரமாய் விளங்குஞ் சைதன்யத்தி னபேத ஞான த்திலுண்டான பேதஞானமான்து நூதனம் புராதனமென்னு மிரண்டிற் புராதனவடிவமானதாம். (௭௭)

## விஞ விடை.

இங்குநின்றுளா ரெவர்கொலென்றுவா னிடிமுழக்கமொத்தி வனுரைத்தலு, மங்குநின்றுளாள் வணங்கியிப்பவத் தடுத்ததேவி நா னருகுதாழ்ந்தவிம், மங்கையாரென வென்னையொப்பநீ மன த்தி லெண்ணலா, மகிழவந்துளா, டுங்கவாணியிங்கிருந்துளாளெ னத் தொல்லைலீலையே தோன்றவோதினள்.

(இ-ள்.) இங்குநின்றுளார்-இவ்விடத்திலிருக்கின்றவர்கள், எவர்கொ லென்று - யாரென்று, வானிடிமுழக்கமொத்து - பேரிடியின் சப்தத்துக் கொப்பாக, இவனுரைத்தலும் - அப்பதுமவரசன்கேட்கவும், அங்கு நின்று ளாள் - அங்கிருந்த லீலையானவள், வணங்கி - (அரசனை) நமஸ்கரித்து, நான் - யான், இப்பவத்தடுத்ததேவி - இத்தேகத்துக்குத் தகுந்தமனைவி, அருகு தாழ்ந்த - (உன்) பக்கத்தில் வணங்கின, இம்மங்கை யாரென-இப்

பெண்ணுரென்றுகேட்க, என்னையொப்ப-என்வடிவத்தைப்போல, நீமனத்திலெண்ணலால்-நீர் மனதினினைத்ததினுல், மகிழவந்துளாள் - நீ சுகிக்கவந்தவள், இங்கிருந்துளாள் - இவ்விடத்திருப்பவள், துங்கம்-பரிசுத்தமாகிய, வாணியென - சரஸ்வதியென்று, தொல்லைலீலை - பழையலீலையானவள், தோன்றவோதினுள் - தெரியச்சொன்னுள்—எ-று.

(இ-ள.) இவ்விடத்திலிருக்கின்றவர்கள் யாரென்று பேரிடிசப்தத்துக் கொப்பாக இப் பதும வரசன் கேட்கவும் அங்கிருந்த லீலையானவள் அரசனை நமஸ்கரித்து யான் இத்தேகத்துக்குத்தகுந்த மனைவி, உன்பக்கத்தில் வணங்கின இப்பெண்ணுரென்று கேட்க என் வடிவத்தைப்போல நீர் மனதினினைத்ததினுல் நீ சுகிக்கவந்தவள், இவ்விடத்திருப்பவள் பரிசுத்தமாகிய சரஸ்வதியென்று பழைய லீலையானவள் தெரியச்சொன்னுள்—என்பதாம். (அஅ)

---

## தேவி யனுக்கிரகித் தெழுந்தருளுதல்.

**பகருமெல்லையிற் பதமிறைஞ்சுமிப் பதுமவேந்தனைப் பாமடந்தைதன், றிகழுமங்கையாற் சென்னிதீண்டிநீ தேவிமாரொடுஞ் சிறந்துவாழ்வுறப், புகழுஞ்செல்வமும் பெருகவையகம் பொலிகதீதெலாம் போகவெங்கணு, நிகழுமேன்மையோர் நிறைகநீடெனு நிமலவாணிதன் னிலையமேவினுள்.**

(இ-ள்.) பகருமெல்லையில் - (இப்படியென்று லீலை) சொன்னமாத்திரத்தில், பதமிறைஞ்சும் - பாதத்தில்வணங்கிய, இப்பதுமவேந்தனை-இப்பதுமவரசனை, பாமடந்தை - சரஸ்வதியானவள், தன்றிகழுமங்கையால் - தனது ப்ரகாசிக்கின்ற வழகிய வத்தத்தினுல், சென்னிதீண்டி - சிரசைத்தொட்டு, நீ தேவிமாரொடும் - நீ பாரியர்களோடும், சிறந்துவாழ்வுற - சிறந்துவாழவும், புகழும் - (நல்ல) கீர்த்தியும், செல்வமும் - (மேலான) சம்பத்தும், பெருக - வளரவும், வையகம்பொலிக - சகத்தி (லுள்ள சனங்கள்) விளங்கவும், தீதெலாம்போக - தீமைகளனைத்துநீங்கவும், எங்கணும்-எவ்விடத்தும், நிகழுமேன்மையோர் - ப்ரகாசிக்கின்றமகான்கள், நிறைய-நிறைந்திருக்கவும், நீடெனு - நீ சுகித்திருப்பாயென் றருள்செய்து, நிமலவாணி - நின்மலமான சரஸ்வதி, தன்னிலையமேவினுள் - தனதிடத்திற்கெழுந்தருளினுள்—எ-று.

(இ-ள.) இப்படி யென்று லீலை சொன்னமாத்திரத்தில் பாதத்தில் வணங்கிய இப்பதும வரசனை சரஸ்வதியானவள் தனது ப்ரகாசிக்கின்ற வழகிய வத்தத்தினுல் சிரசைத்தொட்டு நீபாரியர்களோடும் சிறந்துவாழவும் நல்லகீர்த்தியும் மேலான சம்பத்தும் வளரவும், சகத்திலுள்ள சனங்கள் விளங்கவும், தீமைகளனைத்து

நீங்கவும் எவ்விடத்தும ப்ரகாசிக்கின்ற மகான்கள் நிறைந்திருக்கவும் நீ சுகித்திருப்பாயென்றருள்செய்து நின்மலமான சரஸ்வதி தனதிடத்திற் கெழுந்தருளினாள்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) வெளிப்படை. (அகூ)

## விதேகமுத்தனுதல்.

வாழிவாணிநா மங்கைவாழிசொன் மாதுவாழ்தியென் றினிதுவாழ்த்தியே, யாழிமன்னனுந் தேவிமார்களு மையுதமெட்டியாண் டரசுசெய்தபின், னேழிரும்பவந் துடைத்துவாணிமுன் னியம்புசீவன்முத்தியிலிருந்தபின், னூழிபெயரினுஞ்சிறிதுபெயர்விலா வுடலிறந்தவீ டொன்றிமேவினர்.

(இ-ள்.) வாணிவாழி - சரஸ்வதிவாழ்க, நாமங்கைவாழி - நாமகள் வாழ்க, சொன்மாது வாழ்தியென்று-கலைமகள் வாழக்கடவதென்று, இனிதுவாழ்த்தி - இனிமையாகத்தோத்திரஞ்செய்து, ஆழிமன்னனும்-சக்கரவர்த்தியானபதுமவரசனும், தேவிமார்களும் - பாரியர்களும், ஐயுதமெட்டியாண்டு - எண்பதினாயிரம்வருடம், அரசுசெய்தபின் - பூபாலனஞ்செய்தபின்பு, ஏழிரும்பவந்துடைத்து - எழுவகையாகிய பெரியசநநங்களை (யிப்போதே) கெடுத்து, வாணி - சரஸ்வதியானவள், முன்னியம்பு - முன்னனுக்கிரகஞ்செய்த, சீவன் முத்தியிலிருந்து - சீவன் முத்தி பதத்துடன் (பூமியி) லிருந்து, பின்னூழி பெயரினும் - பின்பு மகா கற்ப மிறந்தாலும், சிறிது பெயர்விலா - அற்பமாகிலுங்கெடாத, உடலிறந்த - விதேகமுத்தியான, வீடொன்றிமேவினர் - மோக்ஷத்தை யடைந்தார்கள்—எ-று.

(இ-ரை.) சரஸ்வதிவாழ்க, நாமகள் வாழ்க, கலைமகள்வாழக்கடவதென்று இனிமையாகத்தோத்திரஞ்செய்து சக்கரவர்த்தியான பதுமவரசனும், பாரியர்களும், எண்பதினாயிரம்வருடம் பூபாலனஞ்செய்தபின்பு எழுவகையாகிய பெரியசநநங்களை யிப்போதே கெடுத்து சரஸ்வதியானவள் முன்னனுக்கிரகஞ்செய்த சீவன் முத்தி பதத்துடன் பூமியிலிருந்து பின்பு மகாகற்பமிறந்தாலும் அற்பமாகிலுங்கெடாத விதேகமுத்தியான மோக்ஷத்தை யடைந்தார்கள்—என்பதாம்.

(இ-ம்.) சுத்த வாசனையோடுஞ் சீவன் முத்தர்களாயிருந்து பின் வாசனைக்ஷயமான விதேகமுத்தியைப் பெற்றதாம். (கூo)

லீலை கதை முற்றிற்று.

ஆக கதை ரு-க்கு கவிதை ௯உ௯.

# கற்கடி கதை.

## அவதாரிகை.

முன்பு சைதன்னவுல்லாசமாய்த் தோற்றினப்ரபஞ்சஞ் சைதன்யதிருஷ்டியா னசிக்கும்பொருட் டச்சகத்தை மாயாவிசித்திர மென்பதைப்பூரணமாயறிவித்து அதற்கதிஷ்டானமானசைதன்யதிருஷ்டி ப்ரசன்னமாம்பொருட்டதன்விலாசத்தைக் கற்கடிகதையி னிரூபிக்கிறார்.

## பிரமமே நித்தியமெனல்.

காட்சியென்னுங்குற்றமறக் கதித்தலீலைகதையாலே
யாட்சியானசகமென்னு மதிபாரத்தையறவிடுவாய்
சூட்சியானவுலகமெனுந் தோற்றமுடைத்தாய்ப்பேதமற
மாட்சிஞானசுகவடிவாய் வயங்கும்பிரமமேயுளதே.

(இ-ள்.) காட்சியென்னும் - திரிஸ்யமென்கின்ற, குற்றமற - களங்கநீங்க, கதித்த - சொல்லிய, லீலைகதையால் - லீலையின்கதையினால், சூட்சியான - அற்பமாகிய, உலகமெனும் - சகமென்கின்ற, தோற்றமுடைத்தாய் - பிரிதிபையையுடையதாய், பேதமற - அபேதமாக, மாட்சி - மகத்தானசத்தும், ஞானம் - சித்தும், சுகம் - ஆநந்தமுமே, வடிவாய் - ஸ்வரூபமாய், வழங்கும் - ப்ரகாசிக்கின்ற, பிரமமேயுளது - பிரமஸ்வரூபமேயுள்ளதென் (றறிந்து) ஆட்சியான - கெடுதற்குரித்தாகிய, சகமென்னும் - உலகமென்கின்ற, அதிபாரத்தை - பெரும்பாரத்தை, அறவிடுவாய் - ஒருங்கே நீக்குவாய்—எ-று.

(இ-ை.) திரிஸ்ய மென்கின்ற களங்கநீங்கச் சொல்லியலீலையின் கதையினால் அற்பமாகிய சகமென்கின்ற பிரிதிபையையுடையதாய் அபேதமாக மகத்தான சத்தும் சித்தும் ஆநந்தமுமே ஸ்வரூபமாய் ப்ரகாசிக்கின்ற பிரமஸ்வரூபமேயுள்ளதென்றறிந்துகெடுதற்குரித்தாகிய உலகமென்கின்ற பெரும்பாரத்தை ஒருங்கேநீக்குவாய்—என்பதாம்.

(கு-ம்.) சகத்து ப்ரமாணிகமல்லவதுவாகவிளங்கு ஞானநந்தமே ப்ரமாணிகமென்பதாம். (க)

## பிரமமொன்றே நித்தியமெனிற் சீவன்யாதெனின்.

அதனுக்கிணையாய்ப்புகலரிதா யகன்றுநிறைந்தாழ்ந்தமலமதாய்ச்
சதமதறிந்தோர்களுமியல்பு சாற்றற்கரிதாய்ச்சாந்தமதாய்த்

*திதமுற்றசையாக்கடலென்னத் தீபமென்னத்திகழ்கின்ற*
*முதன்மைபிரமத்தொளிதானே முடிவில்பரமாகியசீவன்.*

(இ-ள்.) *அதனுக்கிணையாய் - அப்பிரமத்துக்கொப்பாகியும், புகலரிதாய் - வசனிப்பதற்கரிதாகியும், அகன்று - வியாபித்து, நிறைந்து - பரிபூரணமாய், ஆழ்ந்து - கெம்பீரமாயிருக்கின்ற, அமலமதாய் - நின்மலமாகியும், சதமதறிந்தோர்களும் - சத்தையுணர்ந்தவர்களும், இயல்புசாற்றற்கரிதாய்ச் - (அதின்) குணத்தைச்சொல்லக்கூடாததாகியும், சாந்தமதாய் - உபசாந்தமாகியும், திதமுற்று-ஸ்திரம்பொருந்தி, அசையாக்கடலென்ன - அலைவற்றசமுத்திரத்தைப்போலவும், தீபமென்ன - (காற்றில்லாத) தீபத்தைப்போலவும், திகழ்கின்ற - ப்ரகாசிக்கின்ற, முதன்மை - முதன்மையான, பிரமத்தொளிதானே - பிரமப்ரகாசமே, முடிவில் - முடிவில்லாத, பரமாகியசீவன் - மேலானசீவனும்—எ-று.*

(இ-ரை.) **அப்பிரமத்துக்கொப்பாகியும், வசனிப்பதற்கரிதாகியும், வியாபித்து பரிபூரணமாய் கெம்பீரமா யிருக்கின்றநின்மலமாகியும், சத்தை யுணர்ந்தவர்களும், அதின்குணத்தைச் சொல்லக்கூடாததாகியும், உபசாந்தமாகியும், ஸ்திரம்பொருந்தி அலைவற்ற சமுத்திரத்தைப் போலவும், காற்றில்லாத தீபத்தைப்போலவும், ப்ரகாசிக்கின்ற முதன்மையானபிரமப்ரகாசமே முடிவில்லாத மேலான சீவனும்—என்பதாம்.**

(இ-ம்.) *பிரமப்ரகாசமான வபேதஞானமே சீவனென்பதாம்.* (உ)

---

### பிரமப்ரகாசமே சீவனுயின் மனமேன்பதுயாதேனின்.

*தனையுண்டாக்குநீள்விறகாற் சற்றுநெருப்புதடிப்பதுபோ*
*லினையசீவன்கனவறிவா லியானென்றுணர்ந்துசங்கற்ப*
*நினைவினலேயகங்கரிக்கு நிறைந்தசீவன்காரணமாய்*
*வனையுஞ்சித்தமனம்பகுதி மாயையெனும்பேர்வகுத்துரைப்ப.*

(இ-ள்.) *தனையுண்டாக்கும் - அக்கினியையுண்டாக்குகின்ற, நீள்விறகால் - மிகுந்தவிந்தனத்தினுல், சற்றுநெருப்பு, அற்பமானவக்கினி, தடிப்பதுபோல் - மிகுவதுபோல, இனையசீவன்-இப்படிப்பட்டசீவன், கனவறிவால் - (வெகுற்முகத்தில்) விரிந்தவுணர்விலான், இயானென்றுணர்ந்து-நானென்று (பேதமாக) வறிந்து, சங்கற்பநினைவினுல் - சங்கற்பவுன்முகத்தினுல், அகங்கரிக்கும் - அகங்காரத்தையடையும், நிறைந்தசீவன் - பூரணமானசீவனுக்கு, காரணமாய்-இவ்வகம்பாவங்காரணமாக, வனையுஞ்சித்தம்-சிந்தனைசெய்கின்றசித்தமும், மனம் - மனமும், பகுதி - பிரகிருதியும், மாயை-மாயையும், எனும்பேர் - என்கின்றநாமங்களை, வகுத்துரைப்ப - (சத்துக்கள்) பகுத்துச்சொல்லுவார்கள்—எ-று.*

(இ-ளா.) அக்கினியை யுண்டாக்குகின்ற மிகுந்த விந்தனத்தினால் அற்பமானவக்கினி மிகுவதுபோல இப்படிப்பட்ட சீவன் வெகுற்முகத்தில் விரிந்தவுணர்விலான் நானென்றுபேதமாகவறிந்து சங்கற்பவுன்முகத்தினால் அகங்காரத்தையடையும் பூரணமான சீவனுக்கு இவ்வகம்பாவங் காரணமாக சிந்தனை செய்கின்ற சித்தமும், மனமும், பிரகிருதியும், மாயையும்என்கின்ற நாமங்களை சத்துக்கள் பகுத்துச்சொல்லுவார்கள்—என்பதாம்.

(இ-ம்.) பிரமப்ரகாசத்தைப் பேதமாயறியுஞ் சங்கற்பமே மனமென்பதாம். (ரு)

பிரமப்ரகாசபேதமே மனமாயிற் சகத்தென்ப தியாதெனின்.

இனத்தாற்படருமனம்பரம னேதுவாயிப்படிதோன்று
மனத்தால்விரிந்தசகமெல்லா மனனவடிவேமற்றில்லை
கனத்தாற்கரைதீர்பலவறிவாங் கல்லோலச்சிற்கடல்பொங்குந்
தினத்தானீண்டகனவொப்ப சித்தவசத்தாற்சகந்திரமாம்.

(இ-ள்.) இனத்தாற்படருமனம்-சங்கற்பவிகற்பங்களினால் விரிகின்ற மனமானது, பரமனேதுவாய் - பிரமங்காரணமாய், இப்படிதோன்றும் - இந்தப்ரகாரமுண்டாகும், மனத்தால் - மனதினால், விரிந்தசகமெல்லாம்- (தோன்றிப்) பரவியவுலகங்களியாவும், மனனவடிவே - மனோரூபமே, மற்றில்லை - வேறில்லை, கனத்தாற்கரைதீர் - மிகுதியினாலளவில்லாத, பலவறிவாம் - விருத்திஞானமாகிய, கல்லோலம் - பேரலையையுடைய, சிற்கடல்பொங்கும் - ஞானசாகரம்ப்ரகாசிக்கும், தினத்தால் - காலங்களினால், நீண்டகனவொப்ப - நெடியசொற்பனத்துக்கொப்பாக, சித்தவசத்தால் - மனதின்வயதினால், சகந்திரமாம் - உலகமானது நிச்சயமாம்—எ-று.

(இ-ளா.) சங்கற்ப விகற்பங்களினால் விரிகின்ற மனமானது பிரமங்காரணமாய் இந்த ப்ரகாரமுண்டாகும், மனதினால் தோன்றிப்பரவிய வுலகங்களியாவும் மனோரூபமே வேறில்லை, மிகுதியினாலளவில்லாத விருத்தி ஞானமாகிய பேரலையையுடைய ஞானசாகரம் ப்ரகாசிக்கும், காலங்களினால் நெடியசொப்பனத்துக் கொப்பாக மனதின் வயத்தினால் உலகமானது நிச்சயமாம்—என்பதாம்.

(இ-ம்.) பிரமசங்கற்பாகாரமே சகம்போலத் தோற்றுமென்பதாம். ()

இப்படியாயிற் பேதமாகாதோவெனின்.

தெரியாவறிவிற்கள்வனெனத் தெளியாமையினாலுலகுண்டா
மரியாப்பிரமத்தொடுசீவன் மறந்தும்பேதமிலாததுபோற்

பிரியாச்சீவசித்தங்கள் பேதமில்லையிதுபோலத்
தரியாச்சித்தஞ்சகங்களுக்குச் சற்றும்பேதமுளதாகா.

(இ-ள்.) தெரியாவறிவில் - (கட்டையென்) றறியாதவறிவினால், கள்வனென - கள்ளன் (றேற்றுவது) போல, தெளியாமையினால் - (சர்வம்பிரமமெனத) தெளிவுண்டாமையின், உலகுண்டாம் - சகமுண்டாகும், மரியாப்பிரமத்தொடு - நாசமற்றபிரமத்துக்கும், சீவன் - சீவனுக்கும், மறந்தும்பேதமிலாததுபோல்-மறந்தவிடத்தும்பேதமில்லாததுபோல, பிரியாச்சீவசித்தங்கள் - நீங்காதசீவனுக்குஞ்சித்தத்துக்கும், பேதமில்லை-பேதங்களில்லை, இதுபோல - இதைப்போல, தரியா - நிலையாத, சித்தஞ்சகங்களுக்கும் - மனதுக்குமுலகங்களுக்கும், சற்றும்பேதமுளதாகா-அற்பமும்பேதமுண்டாகாது—எ-று.

(இ-ரை.) கட்டையென் றறியாத வறிவினால் கள்ளன்றேற்றுவதுபோல சர்வம்பிரமமெனத் தெளிவுண்டாகாமையின் சகமுண்டாகும், நாசமற்ற பிரமத்துக்கும், சீவனுக்கும், மறந்த விடத்தும் பேதமில்லாததுபோல நீங்காத சீவனுக்குஞ் சித்தத்துக்கும் பேதங்களில்லை. இதைப்போல நிலையாத மனதுக்கு முலகங்களுக்கும் அற்பமும் பேதமுண்டாகாது—என்பதாம்.

(ஊ-ம்.) பிரமப்ரகாசமேசீவன்முதலியயாவுமாய் விளங்குதலின் அபேதமேயாமென்பதாம். (௫)

## இதற்குத் திருஷ்டாந்தம் யாதெனின்.

இதுகாரணமா மொருகதைபண் டிகலாரரக்கி யியம்பியது
முதுவாம்வினாவாலறிபொருள்கண்முழுதுந்தெளியத்தெளிவிப்ப
ததுநீகேட்பா யிமவானுக் கயலுத்தரபா லமர்கிற்பாள்
விதுவாமெயிற்றுக் கற்கடிப்பேர் பேழ்வாயரக்கி மின்கண்ணாள்.

(இ-ள்.) இதுகாரணமாம் - இதுவேதுவாகிய, ஒருகதை-ஓரிதியாசம், பண்டு - முன்னமே, இகலாரரக்கி - பலம்பொருந்தியவிராட்சதியானவள், இயம்பியது-சொல்லிய, முதுவாம்வினாவால் - முதிர்ந்தவினாவினால், அறிபொருள்கண்முழுதும்-அறியவேண்டிய வருத்தங்கள் யாவையும், தெளிய - தெளியும்படி, தெளிவிப்பது - தெளியச்செய்வதாம், அது நீ கேட்பாய்-அதை நீ கேட்கக்கடவாய், இமவானுக்கு - இமயகிரிக்கு, அயலுத்தரபால் - வடபக்கத்தில், அமர்கிற்பாள் - இருப்பவள், கற்கடிப்பேர் - கற்கடியென்னுநாமத்தையுடைய, அரக்கி - இராக்ஷதி, விதுவாமெயிறு - பிறைபோன்ற தந்தங்களும், பேழ்வாய் - பெரியவாயும், மின்கண்ணாள் - மின்போன்றவிழியுமுடையவள்—எ-று.

(இ-ரை.) இதுவேதுவாகிய ஓரிதியாசம், முன்னமே பலம் பொருந்திய விராட்சதியானவள் சொல்லிய முதிர்ந்தவினைவினால் அறியவேண்டிய வருத்தங்களியாவையும் தெளியும்படிதெளியச் செய்வதாம். அதை நீகேட்கக்கடவாய். இமயகிரிக்குவடபக்கத்தில் இருப்பவள். கற்கடியென்னு நாமத்தையுடைய இராக்ஷதி. பிறை போன்ற தந்தங்களும், பெரியவாயும், மின்போன்ற விழியுமுடையவள்—என்பதாம்.

இதுவுமது.

கருமேருவைப்பெண் வடிவாகக் கைகால் வகுத்ததெனத்தி ரிவா, ளுருமேறனைய சிறுநகையா ளோடாமீன்போ லுழல்கண் ணாள், பெருமேனியைத்தாங் கிருகுறங்கும் பேரீச்சென்னப் பெ ருதுடையாள், வருமேகத்தைப் பிளக்குநகம் வயிரேயத்தின் சுள கொப்பாள்.

(இ-ள்.) கருமேருவை - கறுத்தபருப்பதத்தையே, பெண்வடிவாக - மகளிருருவமாக, கைகால் வகுத்ததென - கரசரணங்களாகச் செய்ததென்னும்படி, திரிவாள் - சஞ்சரிப்பவள், உருமேறனைய - இடியையொத்த, சிறுநகையாள்-புன்சிரிப்பையுடையவள், ஓடாமீன்போல்-ஓடாமற்(சுழலு) மச்சத்தைப்போல, உழல்கண்ணாள் - சுழலப்பட்டகண்களை யுடையவள், பெருமேனியைத்தாங்கு - பெரிதான சரீரத்தைச்சுமக்கின்ற, இருகுறங்கும் - இரண்டுதுடையும், பேரீச்சென்னப்பெருதுடையாள் - பேரீச்சமர மென்னும்படி பருமனுடையவள், வருமேகத்தைப்பிளக்கும் - வராநின்ற முகிலைக்கிள்ளுகின்ற வயிரேயத்தின், சுளகொப்பாள் - வயிரேயமுறத் துக்கொப்பாகவுடையவள்—எ-று.

(இ-ரை.) கறுத்தபருப்பதத்தையே மகளிருருவமாக கரசரணங்களாகச் செய்ததென்னும்படி சஞ்சரிப்பவள். இடியையொத்த புன்சிரிப்பையுடையவள். ஓடாமற் சுழலு மச்சத்தைப்போல சுழலப்பட்ட கண்களையுடையவள். பெரிதான சரீரத்தைச் சுமக்கின்ற இருதுடையும் பேரீச்சமரமென்னும்படி பருமனுடையவள். வராநின்ற முகிலைக்கிள்ளுகின்ற வயிரேயமுறத்துக்கொப்பாக வுடையவள்—என்பதாம்.

(இ-உ-கு-ம்.) கற்கடியின் வினைவை யறிவிக்கும்பொருட் டவளுடைய வவயவங்களை வருணித்ததாம். (எ)

## கற்கடி சிந்தித்தல்.

பாழிப்புவிமேலுயிரையெலாம் பகலுமிரவுஞ்சொரிந்திடவு
மூழிக்கனல்போலவியாத வுதரக்கனலா லுள்ளழிந்து

காழிக்கிளர்நாவலன்றீவிற் காணப்படுமன்னுயிரெல்லா
மாழிக்கிடைவீழ்நதித்திரள்போ லருந்திற்சிறிதாருயிர்நிற்கும்.

(இ-ள்.) பாழிப்புவிமேல் - விசாலமானபூமியின்கண்ணுள்ள, உயிரையெலாம் - பிராணிகளனைத்தையும், பகலுமிரவுஞ்சொரிந்திடவும் - அகோராத்திரமாகப்பெய்யவும், ஊழிக்கனல்போல் - வடவாலனம்போல, அவியாத - தணியாத, உதரக்கனலால் - உதராக்கினியினால், உள்ளழிந்து - மனநொந்து, காழிக்கிளர் - கடினமாக ப்ரகாசிக்கின்ற, நாவலன்றீவில் - சம்புத்தீவில், காணப்படு மன்னுயிரெல்லாம் - பார்க்கப்படுகின்ற பிராணிக ளனைத்தையும், ஆழிக்கிடை - சமுத்திரத்தினிடத்தில், வீழ்நதித்திரள்போல் - விழுகின்ற வாறுகளைப்போல, அருந்தில் - புசிக்கில், சிறிதாருயிர்நிற்கும் - (அற்பாகாரமாக) சீவன்மெலிவுற்றிருக்கும்—எ-று.

(இ-நா.) விசாலமான பூமியின் கண்ணுள்ள பிராணிகளனைத்தையும் அகோராத்திரமாகப் பெய்யவும், வடவாலனம்போல தணியாத உதராக்கினியினால் மனநொந்து கடினமாகப்ரகாசிக்கின்ற சம்புத்தீவில் பார்க்கப்படுகின்ற பிராணிகளனைத்தையும் சமுத்திரத்தினிடத்தில் விழுகின்றவாறுகளைப்போல. புசிக்கில் அற்பாகாரமாக சீவன்மெலிவுற்றிருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) போகங்கைக்கு நிமித்த மதை மிகவு மனுபவிக்கத் தோற்றினதாம். (அ)

## மூர்த்தி தியானஞ்செய்தல்.

மழையாலவியுங்கானலென வயிற்றிலெரியுஞ்சிறிதவியும்
பிழையாதிதனைத்தவம்புரிந்து பிரமனருளாற்பெறுதுமென
முழையாரிமயகிரிமேவி மூழ்கியொருகாலுறநின்று
புழையார்விழியானடுவானிற் பொலியுங்கதிரையெதிர்நோக்கி.

(இ-ள்.) மழையால் - வருஷத்தினால், அவியுங்கானலென - தணியுங் கானலைப்போல, வயிற்றிலெரியுஞ் சிறிதவியும் - உதராக்கினியுங் கொஞ்சந்தணியும், பிழையாது - குற்றம்வராமல், இதனை - இவ்வுதராக்கினியை, தவம்புரிந்து - (தணிப்பதற்குத்) தவஞ்செய்து, பிரமனருளால் - பிரமதேவரனுக்கிரகத்தினால், பெறுதுமென - பெற்றுக்கொள்ளுவோமென்று, முழையாரிமயகிரிமேவி - குகைகணிறைந்தவிமயமலைக்குப்போய், மூழ்கி- ஸ்நானஞ்செய்து, ஒருகால் - ஒருபாதம், உறநின்று - (பூமியிற்) பொருந்தநின்று, புழையார்விழியால் - துவாரம்பொருந்திய கண்ணினால், நடுவானில் - ஆகாயமத்தியில், பொலியுங்கதிரை - ப்ரகாசிக்கின்ற சூரியனை எதிர்நோக்கி - (பகலில்) னேரேபார்த்து—எ-று.

(இ-ரை.) வருஷத்தினல் தணியுங் கானலேப்போல உதராக்கினியுங் கொஞ்சந்தணியும், குற்றம்வராமல் இவ்வுதராக்கினியை தணிப்பதற்குத் தவஞ்செய்து பிரமதேவரனுக்கிரகத்தினல் பெற்றுக்கொள்ளுவோமென்று குகைகணிறைந்தவிமயமலைக்குப்போய் ஸ்நானஞ்செய்து ஒருபாதம் பூமியிற்பொருந்தநின்று துவாரம் பொருந்திய கண்ணினல் ஆகாயமத்தியில் ப்ரகாசிக்கின்ற சூரியனை பகலினேரே பார்த்து—என்பதாம்.

ஒருகாலுற நின்றென்றதனன் - மற்ருெருகா லுயர வெடுத்ததெனவும்-கதிரை யெதிர்நோக்கி யென்றதனற் பகலிற் சூரியனையு மிரவிற் சந்திரனையும் பார்த்ததெனவுங்கொள்க.

(இ-ம்.) தவச்சின்னமுரைத்ததாம். (கூ)

## உபாசனமூர்த்தி ப்ரசன்னமாதல்.

வருந்திநின்றுவுயர்தவத்தில் வருடமோராயிரஞ்செலுத்த
திருந்துகமலத்தயன்வந்தான் றீயோரெனினுமருந்தவத்தாற்
பொருந்துருதபொருளுண்டோ புண்டரீகன்போதவுமுன்
னிருந்தபடியேயிருந்தரக்கி யிதயத்திறைஞ்சியிதுநினைந்தாள்.

(இ-ள்.) வருந்திநின்று - வருத்தமுற்றுநின்று, உயர்தவத்தில்-மேலானதவத்தினல், வருடமோராயிரஞ்செலுத்த - ஆயிரவருடம்நடத்த, திருந்து - திருத்தமாகிய, கமலத்தயன் - தாமரையில்வசிக்கின்ற பிரமன், வந்தான் - ப்ரத்தியக்ஷமானர், தீயோரெனினும் - தீமையை யுடையவராயினும், அருந்தவத்தால் - அரியதவத்தினல், பொருந்துருத பொருளுண்டோ-அடையக்கூடாத வஸ்துக்களுண்டோ, புண்டரீகன்போதவும்-தாமரையையுடையவன் வரவும், முன்னிருந்தபடியேயிருந்து - முன்னிருந்த வரசின்படியேயிருந்து, அரக்கி - இராக்ஷதியானவள், இதயத்திரைஞ்சி-மனதில்வணங்கி, இதுநினைந்தாள் - இதைச்சிந்தித்தாள்—எ-று.

(இ-ரை.) வருத்தமுற்றுநின்று மேலானதவத்தினல் ஆயிரவருடம் நடத்த திருத்தமாகிய தாமரையில் வசிக்கின்ற பிரமன் ப்ரத்தியக்ஷமானர். தீமையை யுடையவராயினும் அரிய தவத்தினல் அடையக்கூடாத வஸ்துக்களுண்டோ? தாமரையையுடையவன் வரவும் முன்னிருந்த வரசின்படியேயிருந்து இராக்ஷதியானவள் மனதில் வணங்கி இதைச்சிந்தித்தாள்—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (கூ0)

## கேட்கவேண்டு மபிப்ராயத்தைச் சிந்தித்தல்.

தாவுமுதரக் கனறணியச் சற்றுமிருபாற் சமைந்தவொரு
சீவவூசி வடிவானுற் செகத்தோ ருடலங்களிற்புகுந்து
மேவுமிரைகள் வேண்டியது விழுங்கலாமென் றுணர்வாளை
யாவதெண்ண முனக்கென்ன விசைத்தவயனுக் கிவளிசைப்பாள்.

(இ-ள்.) தாவு - தாவுகின்ற, உதரக்கனறணிய - பசிதணியும் பொருட்டு, சற்றுமிரும்பால் - அற்பமானகருந்தாதால், சமைந்த - உண்டான, ஒருசீவவூசிவடிவானுல் - ஒருயிருள்ளவூசிவடிவமானுல், சகத்தோர் - உலகத்திலுள்ளவர்களுடைய, உடலங்களிற்புகுந்து - சரீரங்களினுழைந்து, மேவும் - பொருந்திய, இரைகள்வேண்டியது - உணவுகள்வேண்டுமானவைகளை, விழுங்கலாமென்று - புசிக்கலாமென்று, உணர்வாளை-எண்ணுபவளை, ஆவதெண்ணம் - ஆகவேண்டியநினைவுகள், நினக்கென்ன - உனக்கென்னவென்று, இசைத்தவயனுக்கு-கேட்டபிரமனுக்கு, இவளிசைப்பாள் - இக்கற்கடிகூறுவாள்—எ-று.

(இ-ரை) தாவுகின்ற பசிதணியும்பொருட்டு அற்பமானகருந்தாதால் உண்டான ஒருயிருள்ளவூசிவடிவமானுல் உலகத்தி லுள்ளவர்களுடைய சரீரங்களினுழைந்து பொருந்திய உணவுகள் வேண்டுமானவைகளை புசிக்கலாமென்று எண்ணுபவளை ஆகவேண்டியநினைவுகள் உனக்கென்னவென்று கேட்டபிரமனுக்கு இக்கற்கடி கூறுவாள்—என்பதாம். (கக)

---

### விருப்பினவரங்கொடுத்ததை யடையும் கிரமமருளுதல்.

துதிப்பார்துணையேநான்சீவ சூசியாகவேண்டுமென, விதிப்பான்விகார பூருவமாம் விசேயாக மெய்க்கொண்டு, குதிப்பாய்துற்சேட்டையர்மூர்க்கர் கொடியோர்கொடியதலத்துறைவோர், கதிப்பால்விரும்பாவுணவுண்போர் கருத்திற்சுவாதத்துடன்கலந்து.

(இ-ள்.) துதிப்பார்துணையே - தோத்திரஞ்செய்கின்ற வடியார்களுக்குச்சகாயமான வாண்டவரே, நான்-அடியேன், சீவசூசியாகவேண்டுமென -உயிரூசியாகவேண்டுமென்று (கேட்க) , விதிப்பான்-நியமிப்பான், விகார பூருவமாம் - வீயென்னு மக்ஷரத்தை முதற்கண்ணுள்ளதான, விசேயாக மெய்க்கொண்டு - விசேயாகச் சரீரமெடுத்துக்கொண்டு, குதிப்பாய் - பாய்வாய், துற்சேட்டையர் - துற்கிருத்தியமுள்ளவர்களும், மூர்க்கர் - மூடர்களும், கொடியோர் - துஷ்டர்களும், கொடிய தலத்துறைவோர் - கொடிதானவிடத்திலிருப்பவர்களும், கதிப்பால்-மமதையினுல், விரும்பா-விரும்

பக்கூடாத, உணவுண்போர்-(துற்) புசிப்பைப்புசிப்பவர்களு(மாகியவிவர்களுடைய), கருத்தில் - மனதில், சுவாதத்துடன் கலந்து - பிராணவாயுவோடுங்கலந்து—எ-று.

(இ-னா.) தோத்திரஞ்செய்கின்ற வடியார்களுக்குச் சகாயமான வாண்டவரே! அடியேன் உயிருசியாகவேண்டுமென்றுகேட்க நியமிப்பான், வியென்னுமக்ஷரத்தை முதற்கண்ணுள்ளதான விடேசியாகச் சரீர மெடுத்துக்கொண்டு பாய்வாய் துற்கிருத்தியமுள்ளவர்களும், மூடர்களும், துஷ்டர்களும், கொடிதானவிடத்திலிருப்பவர்களும் மமதையினுல் விரும்பக்கூடாததுற்புசிப்பைப் புசிப்பவர்களுமாகிய விவர்களுடையமனதில் பிராணவாயுவோடுங் கலந்து—என்பதாம். (கஉ)

## இச்சையினு லற்பவடிவமாதல்.

நல்லாரிடத்தினீயெய்தி ஞமேவிதித்தமந்திரத்தாற்,கொல்லா
தொழிவாய்த்தீயோரைக் கொன்றுதின்பாயெனமலரோன்,சொல்
லாமுன்னமலைபோல்வாள் சூசியுருவாஞ்சீவனுமாய்ப், பொல்லாத
வரஞ்சினத்தடித்தோர் பொன்றும்படியுள்ளுறப்புகுந்தாள்.

(இ-ள்.) நல்லாரிடத்தினீயெய்தில்-அறிஞர்களிடத்தி னீசென்றால், நாமேவிதித்தமந்திரத்தால் - நாம் நியமித்த (வுனது சிகிச்சையென்னு) மந்திர(செப)த்தினுல், கொல்லாதொழிவாய் - கொலைசெய்யாதிருப்பாய், தீயோரைக்கொன்றுதின்பாயென- அறிவில்லாதவர்களைக்கொன்றுண்பாயென்று, மலரோன் சொல்லா - பிரமன் சொல்லி (மறையுமளவில்), முன்னமலைபோல்வாள் - முன்புவரைக்கொப்பானவள், சூசியுருவாஞ்சீவனுமாய் - சீவசூசியுருவமெடுத்து, பொல்லாதவர் - மூர்க்கரும், அஞ்சினத்தடித்தோர் - (மனதி) லச்சமிகுந்தவரும், பொன்றும்படி - நசிக்கும் வண்ணம், உள்ளுறப்புகுந்தாள் - அகத்திற் ப்ரவேசித்தாள்—எ-று.

(இ-னா.) அறிஞர்களிடத்தி னீசென்றால் நாம் நியமித்தவுனது சிகிச்சையென்னு மந்திரசெபத்தினுல் கொலைசெய்யாதிருப்பாய். அறிவில்லாதவர்களைக் கொன்றுண்பாயென்று பிரமன் சொல்லி மறையுமளவில் முன்பு வரைக்கொப்பானவள் சீவசூசியுருவமெடுத்து மூர்க்கரும் மனதிலச்சமிகுந்தவரும்நசிக்கும் வண்ணம் அகத்திற் ப்ரவேசித்தாள்—என்பதாம்.

(ப-ரி.) விடேசிகாவியாதியைப் போக்கடிக்கிற விந்தமந்திரத்தை யுன்னுடைய சிகிச்சார்த்த மென்னுலே சொல்லப்படுகின்றதென்பார், நாமே விதித்தமந்திரமென்றார். அவையாவன. ஓம்-ஹராம்-இரீம்-ஹ்ரூம்-ராம்-

விஷ்ணுசத்தியேநமோ-பகவதி விஷ்ணுசத்தி-ஏ-ஹே-ஈ-ஏனும்-ஹா-ஹா-ஹந-ஹந-பச-பச-மத-மத-உச்சாதியோ-உச்சாதையா - தூரே - குடு- குடு-சுவாஹா - குறுகுறு - சுவாஹா - விசேகே - இமோர்தம்-கெச்சா - சீவசீவ -சந்திரமண்டலம்-கதோசி - சுவாஹா என்பனவாம். இஃதை ஸ்நானமும் ஆசமனமுஞ்செய்து மாந்திரிகனானவன் வாமகரத்தில்விபூதியை வைத்து அதி லிந்த மந்திரத்தை யெழுதிக்கொண்டு செபித்து ரோகியினுடைய சரீர முழுதுந்தடவி இம்மந்திரமென்னுந்தண்டாயுதத்தினாற் கற்கடி யடிபட்டு இமோர்ப்பருப்பதத்துக் கோடிப்போனதாயும் ரோகியைச் சந்திராமிர்த மத்தியி லிருப்பவனாயும் வியாதிவிடுபட்டவனாயும் சராமரணமில்லாதவனாயும் பாவித்துத் ததேகமாய்ச் செபஞ்செய்து சிந்தித்து கிரமமாக வ்விசேிகாவியாதியைப் போக்கடிப்பனெனக்கொள்க. (கரு)

## உணவினிச்சை வெறுத்தல்.

வாயுவடிவாயுட்புகுந்து மண்ணில்விண்ணில்பல்லுயிர்க
ளாயுவெல்லாமிருவடிவா யநேககாலமருந்தியபின்
ஞேயுமனத்தாளாயவமே யுழன்றுவருந்தியூசியுமாய்த்
தேயும்படியேகெடுத்ததெமைச்சீசீயாசையெனத்திகைத்தாள்.

(இ-ள்.) வாயுவடிவாய் - வாதரூபமாகி, மண்ணில் - பூமியிலும்,விண்ணில்- ஆகாயத்திலு (முள்ள), பல்லுயிர்கள்-பலசீவர்களின், உட்புகுந்து -உள்ளேபிரவேசித்து, ஆயுவெல்லாம் - (அவர்கள்) வாணாளனைத்தையும், இருவடிவாய்-சீவசூசி வாதசூசியென்னுமிரண்டுவடிவமாய், அநேககாலம்-வெகுகாலம், அருந்தியபின்-புசித்தபின்பு, ஓயுமனத்தாளாய்-தளர்ந்தமனதையுடையவளாய், அவமே-வீணாகவே, உழன்று - சுழன்று, வருந்தி-நைந்து, ஊசியுமாய்த் தேயும்படி - சூசியுமாய்த் தேய்ந்துபோகும்படி, ஆசை - அவாவானது, எமை - நம்மை, கெடுத்தது - அழித்தது, சீசீயென - சைசையென்று, திகைத்தாள் - மயங்கினாள்—எ-று.

(இ-ரை.) வாதரூபமாகி பூமியிலும் ஆகாயத்திலுமுள்ள பல சீவர்களின் உள்ளே பிரவேசித்து அவர்கள் வாணாளனைத்தையும் சீவசூசி வாதசூசி யென்னு மிரண்டுவடிவமாய் வெகுகாலம் புசித்தபின்பு தளர்ந்த மனதை யுடையவளாய் வீணாகவேசுழன்று நைந்து சூசியுமாய்த் தேய்ந்துபோகும்படி அவாவானது நம்மை அழித்தது சைசையென்று மயங்கினாள்—என்பதாம்.

(இ-ம்.) மிகுந்தது கெடுமென்னும் வாக்கியப்படி, மிகவுமனுபவித்த புசிப்பிற் கைப்புண்டானதாம். (கச)

## நிஷ்காமதவஞ்செய்தல் - வேறு.

தீயமனத்தொடுயாமவமேபல சீவனருந்தினமா
லேயதுவிட்டனமென்றிமவானிடை யெய்தரிதானதவ
மேயினளொன்றுநினைப்பிலள்சஞ்சலம் விட்டுணவற்றொருமித்
தாயிரமாவ ருடங்கள்செலுத்தலு மற்றதுவல்வினையே.

(இ-ள்.) தீயமனத்தொடு-கொடியமனதுடன், யாம்-நாம், அவமேபல சீவனருந்தினம் - வீணாகவநேகவுயிர்களைப்புசித்தோம், ஏயதுவிட்டனமென்று - பொருந்திய வவ்வாசையை நீக்கினேமென்று, இமவானிடை - இமயபருப்பதத்தில், எய்தரிதான தவம் - பொருந்துதற் கரிதான தவத்தை, ஏயினள் - அடைந்து, ஒன்று நினைப்பிலள் - ஒரு சங்கற்பமுமில்லாமல், சஞ்சலம்விட்டு - சலனத்தைநீக்கி, உணவற்று - புசிப்பின்றி, ஒருமித்து - ஒன்றுபட்டு, ஆயிரமாவருடங்கள் - சகஸ்திரவருஷங்கள், செலுத்தலும் - நடத்தவும், வல்வினை - கொடிய (விரு) வினையும், அற்றது - நீங்கிற்று.

(இ-ரை.) கொடியமனதுடன் நாம் வீணாக வநேக வுயிர்களைப்புசித்தோம், பொருந்திய வவ்வாசையை நீக்கினேமென்று இமயபருப்பதத்தில் பொருந்துதற்கரிதானதவத்தை அடைந்து ஒரு சங்கற்பமு மில்லாமல் சலனத்தை நீக்கி புசிப்பின்றி ஒன்றுபட்டு சகஸ்திர வருஷங்கள் நடத்தவும் கொடிய விருவினையும் நீங்கிற்று.

(இ-ம்.) நிர்விகற்பசமாதியினாற் சகலவினைகளு நீங்கினவென்பதாம்.

## நிஷ்காமதபசினான் ஞானமுண்டாகுதல்.

பாவமகன்றுமனந்தெளியப் பரபாவனை தன்வயமே
மேவலுமிவ்வுலகத்தையிகழ்ந்து விருப்புவெறு பிலளாய்
மாவருடங்களோராயிரநின்றபின் மன்னுணர்வுற்றதெனக்
கேவலம்வந்திவளுக்கொருவாய்மை கிளத்தினன்மாமலரோன்.

(இ-ள்.) பாவமகன்று - தீமைநீங்கி, மனந்தெளிய - மனது தெளிவடைய, பரபாவனை - பிரமத்தியானம், தன்வயமேவலும் - தனதிடமாகப் பொருந்தவும், இவ்வுலகத்தை - இச்சகத்தை, இகழ்ந்து - நிந்தித்து, விருப்புவெறுப்பிலளாய் - ராகத்துவேடமில்லாதவளாய், மாவருடங்களோராயிரம் - சகஸ்திர வருடம், நின்றபின் - (தவசி) லிருந்தபின்பு, மன்னுணர்வுற்றதெனு-பூரணஞானமுதித்ததென்று, கேவலம்வந்து - தானேவந்து, இவளுக்கு - இக்கற்கடிக்கு, ஒருவாய்மை - ஒருண்மையை, மாமலரோன் - பிரமதேவன், கிளத்தினன் - சொன்னான்—எ-று.

(இ-ள.) தீமைநீங்கி மனதுதெளிவடைய பிரமத்தியானம் தனதிடமாகப்பொருந்தவும் இச்சகத்தை நிந்தித்து ராகத்துவேட மில்லாதவளாய் சகஸ்திரவருடம் தவசிலிருந்தபின்பு பூரணஞான முதித்த தென்று தானேவந்து இக்கற்கடிக்கு ஓருண்மையை பிரமதேவன் சொன்னான்—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (கசு)

---

## பிரமா வனுக்கிரகித்தல்.

சீவனின்முத்தியடைந்தனை சிந்தைதெளிந்தனை தொல்வடிவாய்ப்
பூவலயத்தறிவில்லவர் தீயவர் பூரியர்மெய்யிரையா
யாவிவளர்த்துறைகென்றப னேகலுமத்துவிதப்பரமே
பாவனையுற்றொருசெய்தொழி லற்றபதத்திலிருந்தனளால்.

(இ-ள்.) சீவனின்முத்தியடைந்தனை-சீவன்முத்தியையடைந்தாய், சிந்தைதெளிந்தனை - மனந்தெளிந்தாய், தொல்வடிவாய் - பழையவிராக்ஷதி வடிவமாய், பூவலயத்து-பூமியில், அறிவில்லவர்-ஞானமில்லாதவர்களும், தீயவர்-கொடியவர்களும், பூரியர் - கீழ்மக்களு (மாகிய விவர்களுடைய), மெய் - சரீரங்களை, இரையாய் - (உனக்) குணவாக, ஆவிவளர்த்து - சீவனஞ்செய்து, உறைகென்று - சுகமாயிருப்பாயென் (றனுக்கிரகஞ்செய்து), அயனேகலும் - பிரமன்மறையவும், அத்துவிதப்பரமே - அத்துவிதப்பிரமமே, பாவனையுற்று - (சர்வமென்னும்) பாவனையைப்பொருந்தி, ஒருசெய் தொழிலற்ற-நிஷ்கிரியையான,பதத்திலிருந்தனள்-தற்பதத்திலிருந்தாள்.

(இ-ா) சீவன்முத்தியை யடைந்தாய், மனந்தெளிந்தாய், பழையவிராக்ஷதிவடிவமாய் பூமியில் ஞானமில்லாதவர்களும், கொடியவர்களும் கீழ்மக்களுமாகிய விவர்களுடையசரீரங்களை உனக்குணவாக சீவனஞ்செய்து சுகமாயிருப்பாயென்றனுக்கிரகஞ்செய்து பிரமன்மறையவும், அத்துவிதப்பிரமமே சர்வமென்னும் பாவனையைப்பொருந்தி நிஷ்கிரியையான தற்பதத்திலிருந்தாள்—எ-ம்.

(இ-ம்.) பிராரத்தசேட நீங்கும்பொருட்டு விதியானபுசிப்பை யனுபவிக்கவறிவித்ததாம். (கஎ)

---

சீவன்முத்திதன்மையினின்று விதியான வுணவைச் சிந்தித்தல்.

விகற்பமிறந்தசமாதிநெடும்பகன் மேவினன்மீளவிடா
வுகப்பொடுநெஞ்சொடுகூடினடொல்பசி யுன்னினனானெனுமா
நிகத்துளமட்டுமுடற்குளதான வியற்கைவிடாததனாற்
சகத்திலரக்கர்குலத்தொழிலான தசைப்பலிகொள்வனென.

(இ-ள்.) விகற்பமிறந்தசமாதி-நிர்விகற்பசமாதியில், நெடும்பகன் மேவினள்-அநேககாலமிருந்தனள், மீள - (சமாதியினின்றுந்) திரும்ப, விடாவுகப்பொடு-நீங்காதவானந்தத்தோடும், நெஞ்சொடுகூடினள்-மனதுடன் சேர்ந்தாள், தொல்பசியுன்னினள் - பழையபசியைநினைத்தாள், நானெனுமாறு - நானென்னுந்தன்மை, இகத்துளமட்டும் - சகத்தின்கண்ணுள்ள பரியந்தம், உடற்குளதானவியற்கை - சரீரத்துக்குண்டாகிய சுபாவம், விடாததனால் - நீங்காதபடியினால், சகத்தில் - உலகத்தில், அரக்கர் குலத்தொழிலான-இராக்ஷதவமிசத்துக்குத் தொழிலாயிருக்கின்ற, தசைப்பலி-மாமிசாகாரம், கொள்வனென - புசிப்பனென்று—எ-று.

(இ-கா.) நிர்விகற்பசமாதியில் அநேககாலமிருந்தனள், சமாதியினின்றுந் திரும்ப, நீங்காதவானந்தத்தோடும் மனதுடன் சேர்ந்தாள். பழையபசியை நினைத்தாள். நானென்னுந்தன்மை சகத்தின்கண்ணுள்ள பரியந்தம் சரீரத்துக்குண்டாகிய சுபாவம் நீங்காதபடியினால் உலகத்தில் இராக்ஷதவமிசத்துக்குத் தொழிலாயிருக்கின்ற மாமிசாகாரம் புசிப்பனென்று—என்பதாம். (கஅ)

## உபதேசித்த புசிப்பெதிரிடல்.

அயனுரைசெய்ததுமப்படியாதலி லந்தவுரைப்படியே
கயவருடற்பலிகொள்ளுவனென்று களித்திமவானயல்போய்
வயமிகுவேடுவர்மண்டலமேவி வனத்திலுறைந்திடுநா
ணயமுறுமந்திரிதன்னொடுமங்கொரு நரபதிநண்ணினனால்.

(இ-ள்.) அயனுரைசெய்ததும் - பிரமனனுக்கிரகித்ததும், அப்படியாதலில் - அப்பிரகாரமாதலால், அந்தவுரைப்படியே - அவ்வசனப்படியே, கயவருடல் - மூடர்கள்சரீரத்தை, பலிகொள்ளுவனென்று - அமுதாகப்புசிப்பேனென்று, களித்து-மகிழ்ந்து, இமவானயல்போய் - இமயமலையின் சாரலிற்சென்று, வயமிகுவேடுவர் - வெற்றிமிகுந்தவேடர்களின், மண்டலமேவி - நாடடைந்து, வனத்திலுறைந்திடுநாள் - (அதிலுள்ள) கானகத்தில் வசிக்குங்காலத்தில், நயமுறுமந்திரிதன்னொடும், நீதியுள்ளவமைச்சனோடும், அங்கொருநரபதிநண்ணினன் - அவ்விடத்தோரரசன்வந்தனன்.

(இ-ள.) பிரமனனுக்கிரகித்ததும் அப்பிரகாரமாதலால், அவ்வசனப்படியே மூடர்கள் சரீரத்தை அமுதாகப்புசிப்பேனென்று மகிழ்ந்து இமயமலையின் சாரலிற்சென்று வெற்றிமிகுந்த வேடர்களின் நாட்டைடைந்து அதிலுள்ள கானகத்தில்வசிக்குங் காலத்தில் நீதியுள்ள வமைச்சனோடும் அவ்விடத்தோரரசன் வந்தனன்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) வெளிப்படை. (கக)

## கிடைத்தவுணவின் றன்மையை விசாரித்தல்.

முச்சுடர்வந்துறினுங்கருகத்தகு முற்றிரண்மூடிராவூ
டச்சமுறாரவர்சோதனைசெய்தலு மங்கவள்கண்டளவே
பச்சிரையாமிவர்மெய்யறிவில்லவர் பாமரராகியுளா
ரிச்சகமேலுயிர்வாழிலிகம்பர மெங்குமிடும்பையெனு.

(இ-ள்.) முச்சுடர்வந்துறினும் - சோமசூரியாக்கினிக (ளொன்றாக) வந்தடைந்தாலும், கருகத்தகு - (அவைகளொளி) மழுங்கத்தகுந்த, முற்றிருள் - மிகுந்தவிருட்டினால், மூடிராவூடு - மூடிக்கொண்டிருக்கின்ற விராத்திரியில், அச்சமுறாரவர்-பயப்படாத வரசமந்திரிகள், சோதனைசெய்தலும் - (பிசாசங்கண்முதற்றுஷ்டர்களைப்) பரிசோதித்துவரவும், அங்கவள்கண்டளவே - அவ்விடத்தந்தக் கற்கடிபார்த்தமாத்திரத்தில், பச்சிரையாம் - பசுமையான புசிப்பாவர், இவர் - இவர்கள், மெய்யறிவில்லவர் - உண்மைஞானமில்லாதவர்கள், பாமரராகியுளார்-மூடராயிருக்கின்றவர்கள், இச்சகமேல் - இவ்வுலகத்தின்கண், உயிர்வாழில்-சீவித்திருக்கின், இகம்பரம்-இகத்திலும்பரத்திலும், எங்கும் - (மற்) றெவ்விடத்தும், இடும்பையெனு-துன்பமாமென்று—எ-று.

(இ-ஸா.) சோம சூரியாக்கினிக ளொன்றாகவந் தடைந்தாலும், அவைக ளொளி மழுங்கத்தகுந்த மிகுந்த விருட்டினால் மூடிக்கொண் டிருக்கின்ற விராத்திரியில் பயப்படாதவரச மந்திரிகள் பிசாசங்கண்முதற் றுஷ்டர்களைப் பரிசோதித்து வரவும், அவ்விடத்தந்தக் கற்கடி பார்த்தமாத்திரத்தில் பசுமையான புசிப்பாவர். இவர்கள் உண்மை ஞானமில்லாதவர்கள், மூடராயிருக்கின்றவர்கள், இவ்வுலகத்தின்கண் சீவித்திருக்கின் இகத்திலும், பரத்திலும், மற்றெவ்விடத்தும் துன்பமாமென்று—என்பதாம். (உ0)

## துற்சனரோவென் றுலோசித்தல்.

மீளவுநின்றுணர்வாளயன்முன்னம் விதித்ததுமிப்படியே
கோளறவந்தபயன்கவராதவர் கொச்சைமனத்தினரே
நீளநினைந்துணர்புந்தியுநற்குண நீர்மையுமெய்தியுளார்
மாளவதஞ்செயநெஞ்செழுமோவிவர் வன்றுயர்மேவுவரோ.

(இ-ள்.) மீளவுநின்றுணர்வாள்-திரும்பவுநினைப்பாள், அயன்-பிரமன், முன்னம் விதித்தது மிப்படியே - முன்னியமித்தது மிவ்வண்ணமே, கோளறவந்த-தீங்கறக்கிடைத்த, பயன்கவராதவர் - பலனைக்கொள்ளாதவர்கள், கொச்சைமனத்தினர் - அற்பமனதுள்ளவர்க (ளென்று), நீளநினைந்து - மிகவுமாலோசித்து, உணர்புந்தியும் - தெளிந்தவறிவையும், நற்குண நீர்மையும் - நற்குண (முள்ள) சுவாபத்தையும், எய்தியுளார் - அடைந்திருக்கின்றவர்கள், மாளவதஞ்செய - கெடும்படிகொலைசெய்ய, நெஞ்செழுமோ - மனமெழுமோ, (அன்றியும்) இவர்வன்றுயரமேவுவரோ - இவர்கள் வலியதுன்பமடைவரோ—எ-று.

(இ-ரை.) திரும்பவுநினைப்பாள், பிரமன் முன்னியமித்தது மிவ்வண்ணமே, தீங்கறக்கிடைத்த பலனைக்கொள்ளாதவர்கள் அற்பமனதுள்ளவர்களென்று மிகவுமாலோசித்து தெளிந்தவறிவையும், நற்குணமுள்ள சுபாவத்தையும் அடைந்திருக்கின்றவர்கள் கெடும்படி கொலைசெய்ய மனமெழுமோ! அன்றியும் இவர்கள் வலியதுன்ப மடைவரோ—என்பதாம். (உக)

## சற்சன ரிலக்கண முணர்தல்-வேறு.

வஞ்சமினீள் புகழ்வாணள் வகுப்பரிய சுகமமர்ந்தோர் வணங்கலாவா, ரெஞ்சலிலா வாவியினு மினியவரா தலினவருக் கிடரே வந்தா, லஞ்சலென வுயிர்கொடுத்து வளித்திடவேண் டினராவரன் பானோர்க்குத், தஞ்சமுலக் காலனையுமுறவாக்குந் தன்மையினர் தக்கசான்றோர்.

(இ-ள்.) தக்கசான்றோர் - தெளிந்தவறிஞர்கள், வஞ்சமில் - மெய்யான, நீள்புகழ் - மிகுந்தகீர்த்தியையுடைய, வாணள் - (நீண்ட) வாயுளெல்லாம், வகுப்பரிய - பிரிக்கக்கூடாத, சுகமமர்ந்தோர் - சுகத்தைப் பொருந்தினவர்கள், வணங்கலாவார் - யாவரும்வணங்கத்தக்கவர்களாவர், எஞ்சலிலா - குறைவில்லாத, ஆவியினும் - (தனது) யிரைக்காட்டிலும், இனியவராதலில் - இனிமையுள்ளவர்களாதலால், அவருக்கிடர்வந்தால்-அக்குணவான்களுக்குத் துன்பம்வருமாயின், அஞ்சலென-பயப்படாதேயென்றுஉயிர்கொடுத்து-பிராணனையாவதுகொடுத்து, அளித்திடவேண்டினரா

வர் - இரட்சிக்கத்தக்கவராவர், அன்பானோர்க்கு - (தங்களிடத்தி)லன்பையுடையவர்களுக்கு, தஞ்சமுற - வணக்கமாக, காலனையுமுறவாக்கும் - யமனையுமுறவுபடுத்தும், தன்மையினர் - சுபாவமுள்ளவர்கள்—எ-று.

(இ-ள்.) தெளிந்தவறிஞர்கள் மெய்யான கீர்த்தியையுடைய நீண்டவாயுளெல்லாம் பிரிக்கக்கூடாத சுகத்தைப்பொருந்தினவர்கள், யாவரும் வணங்கத்தக்கவர்களாவர், குறைவில்லாத தனதுயிரைக்காட்டிலும் இனிமையுள்ளவர்களாதலால், அக்குணவான்களுக்குத் துன்பம்வருமாயின் பயப்படாதேயென்று பிராணனையாவது கொடுத்து இரட்சிக்கத்தக்கவராவர், தங்களிடத்தி லன்பையுடையவர்களுக்கு வணக்கமாக யமனையுமுறவுபடுத்தும் சுபாவமுள்ளவர்கள்—என்பதாம். (உஉ)

## சற்சனர்க் கன்புசெய்பவ ரிலக்கணமறிதல்.

அரக்கியெனு மியாமுதலா யுயர்ந்தோரை யாதரிக்கு மன்புகண்டா, லிரக்கமுறப் பொன்போல யாவரே விரும்பாதாரிகலோகத்திற், புரக்கவரு நிறைமதிபோற் புணர்ந்தோரை குளிர்விப்பர் புணராதோரை, பரக்கழியா விறந்தோராம் புணர்ந்தோரே முத்திமுதற் பயன்பெற்றோரே.

(இ-ள்.) அரக்கியெனும் - இராக்ஷதியென்கின்ற, இயாமுதலாய் - நாமுதலாக, உயர்ந்தோரை - சத்துக்களை, ஆதரிக்கு மன்புகண்டால் - பூசிக்கின்றபக்தியைப்பார்க்கின், இறக்கமுற - அன்பாக, பொன்போல - சுவணத்தைப்போல, யாவரேவிரும்பாதார் - யார்தா னன்புவையாதவர்கள், இகலோகத்தில் - இப்பூமியில், புரக்கவரு நிறைமதிபோல்-இரட்சிக்கவருகின்றபூர்ணசந்திரனைப்போல, புணர்ந்தோரை - அடுத்தவர்கள் (மனதை), குளிர்விப்பர் - சத்துக்கள் சுகிக்கச்செய்வார்கள், புணராதோரே - சாராதவர்களே, பரக்கழியா - மிகவு மிழிவுபட்டு, இரந்தோராம் - மரித்தவராம், புணர்ந்தோரே - சார்ந்தவர்களே, முத்திமுதற்பயன்பெற்றோர் - மோக்ஷமுதலிய ப்ரயோசனத்தைப்பெற்றவர்கள்—எ-று.

(இ-ள்) இராக்ஷதி யென்கின்ற நாமுதலாக சத்துக்களை பூசிக்கின்ற பக்தியைப்பார்க்கின் அன்பாக சுவணத்தைப்போலயார்தானன்புவையாதவர்கள் இப்பூமியில்இரக்ஷிக்கவருகின்ற பூர்ணசந்திரனைப்போல அடுத்தவர்கள்மனதைசத்துக்கள் சுகிக்கச்செய்வார்கள். சாராதவர்களே மிகவுமிழிவுபட்டு மரித்தவராம். சார்ந்தவர்களே மோக்ஷமுதலிய ப்ரயோசனத்தைப்பெற்றவர்கள்-எ-ம்.

(இ-சு-க-ம்.) நேரிட்டவர்கள் சற்சனரோ துற்சனரோ வெனப் பரிசோதிக்கு நிமித்த மாலோசித்ததாம். (உரு)

## பரிசோதிக்கு நிமித்த மதட்டிப் பேசுதல்.

ஆதலினாலிவர்தம்மை யறிஞரோவறிவிலரோ யார்கொலென்னச், சோதனையாம் வினவுரைகள் சொல்வோமென்றுருமேறுந் துணுக்கென்றஞ்ச, மீதுறநின் றுற்பரித்து வெவ்விடிக்குப்பின்னாலி வீழ்க்குங்கார்போ, லோதரிய கொடியவனவிசும்புக்குமதியிரவியொப்பீரென்னா.

(இ-ள்.) ஆதலினால் - ஆகையால், இவர்தம்மை - இவர்களை, அறிஞரோ - ஞானிகளோ, அறிவிலரோ-அஞ்ஞானிகளோ, ஆர்கொலென்ன-யாரோவென்று, சோதனையாம் - ஆராய்ந்தறிகின்ற, வினவுரைகள் - கேள்விகளை, சொல்வோமென்று - கேட்போமென்று (நினைத்து), உருமேறும் - இடிகளும், துணுக்கென்றஞ்ச - திடுக்கென்று பயப்படும்படியாக, மீதுற நின்றுர்ப்பரித்து-ஆகாயத்தினின்றாரவாரித்து, வெவ்விடிக்குப்பின்-கொடியவிடியிடித்தபின்பு, ஆலிவீழ்க்குங்கார்போல்-மழைபொழியு மேகத்தைப்போல, ஓதரிய - சொல்லுதற்கரிய, கொடியவனவிசும்புக்கு - கொடிதாகிய காடென்னு மாகாயத்துக்கு, மதியிரவியொப்பீரென்னா-சந்திரசூரியர்களுக்கொப்பாவீர்களென்று—எ-று.

(இ-ளா.) ஆகையால் இவர்களை ஞானிகளோ! அஞ்ஞானிகளோ! யாரோவென்று ஆராய்ந்தறிகின்றகேள்விகளைக் கேட்போமென்று நினைத்து இடிகளும் திடுக்கென்று பயப்படும்படியாக ஆகாயத்தினின் றாரவாரித்து கொடிய விடியிடித்தபின்பு மழைபொழியு மேகத்தைப்போல சொல்லுதற்கரிய கொடிதாகிய காடென்னு மாகாயத்துக்கு சந்திரசூரியர்களுக் கொப்பாவீர்களென்று.

## நீங்களாரென்று வினவுதல்.

மீட்டுரைப்பாண்மாயையெனும் வெவ்விருட்பாறைபின்கீழே மிளிர்ந்துமாயு, மீட்டமுறு புழுப்போல்வீ ரெனக்கிரையா யிக்கணத்தே யிறக்கவந்தீர், சேட்டமுளார் போலிருந்தீர்நீயவர்போன் றீரெவர்நீர் செப்புமென்னக்,கேட்டளவேகொலையரக்கி கேளென்னத் திரல்வேந்தன் கிளத்தலுற்றான்.

(இ-ள்.) மீட்டுரைப்பாள்-திரும்பவுஞ்சொல்லுவாள், மாயையெனும்-மாயையென்கின்ற, வெவ்விருட்பாறையின்கீழ் - வெவ்வியவிருண்ட கல்லின்கீழ், மிளிர்ந்துமாயும் - விளங்கியழிகின்ற, ஈட்டமுறுபுழுப்போல்வீர்

- கூட்டமாகிய கிருமிக்கொப்பானவர்களே, எனக்கிரையாய் - எனக்குணவாக, இக்கணத்து - இந்தக்ஷணத்தில், இறக்கவந்தீர் - மரிக்கவந்தீர்கள், சேட்டமுளார்போலிருந்தீர் - மேலானவர்களைப்போலுமிருக்கின்றீர், தீயவர்போன்றீர் - தீமையை யுடையவர்களைப்போலுமிருக்கின்றீர், நீரெவர்- நீங்களார், செப்புமென்ன - சொல்லுமென்று, கேட்டளவே - (கற்கடி) கேட்டமாத்திரத்தில், கொலையரக்கி - (சீவ) விமிசையையுடைய விராக்ஷதியே, கேளென்ன - கேட்பாயென்று, திரல்வேந்தன் - வலிமையுள்ள வரசன், கிளத்தலுற்றான் - சொல்லத்தொடங்கினான்—எ-று.

(இ-ரை.) திரும்பவுஞ்சொல்லுவாள், மாயையென்கின்றவெவ்விய விருண்ட கல்லின்கீழ் விளங்கி யழிகின்ற கூட்டமாகிய கிருமிக்கொப்பானவர்களே? எனக்குணவாக இந்தக்ஷணத்தில் மரிக்க வந்தீர்கள், மேலானவர்களைப்போலுமிருக்கின்றீர், தீமையையுடையவர்களைப்போலு மிருக்கின்றீர், நீங்களார்சொல்லுமென்று கற்கடி கேட்டமாத்திரத்தில் சீவவிமிசையையுடைய விராக்ஷதியே கேட்பாயென்று வலிமையுள்ள வரசன்சொல்லத்தொடங்கினான்.

## அரச னச்சமற்றுரைத்தல்.

எவ்வுழிநின்றனை நீயிங் கிசைத்தவெலா மிளவண்டி னிரைச்சல்போலச், செவ்விதுகேட் டனமென்ன வரக்கியுநன்றென்றெதிரே சிரித்தலோடும், வெவ்வியபல் லொளியாலே வெளியாகக்கண்டிறையும் வெருவலின்றி, மைவரைபோல் வாய்திறந்துவாளாநீ வருந்தலெனா மன்னன்சொல்வான்.

(இ-ள்.) எவ்வுழிநின்றனை - எவ்விடத்தி லிருக்கின்றாய், நீயிங்கிசைத்தவெலாம் - நீயிவ்விடத்திற்சொல்லிய சகலமும், இளவண்டினிரைச்சல்போல்-குஞ்சளியின் சத்தத்தைப்போல, செவ்விதுகேட்டனமென்ன-அழகாகக்கேட்டோமென் (றரசன்சொல்ல), அரக்கியுநன்றென்று-இராக்ஷதியுநன்றாயிருக்கின்றதென்று, எதிரேசிரித்தலோடும்-எதிரே நகைத்தமாத்திரத்தில், வெவ்விய பல்லொளியால்-கொடிய தந்தப்ரகாசத்தினால், வெளியாகக்கண்டு - (அவளது வடிவத்தை) ப்ரத்யக்ஷமாகப்பார்த்து, இறையும்- எவ்வளவும், வெருவலின்றி - பயப்படாமல், மைவரைபோல் - மைநாகம்போல, வாய்திறந்து-வாயைத்திறந்து, வாளாநீவருந்தலெனா - வீணாக நீ வருத்தப்படாதேயென்று, மன்னன் சொல்வான் - அரசன் சொல்லுவான்—எ-று.

(இ-ரை.) எவ்விடத்திலிருக்கின்றாய் நீ யிவ்விடத்திற்சொல்லிய சகலமும் குஞ்சளியின் சத்தத்தைப்போல அழகாகக்

கேட்டோமென் றரசன் சொல்ல, இராக்ஷதியு நன்றாகயிருக்கின்ற தென்று எதிரே நகைத்தமாத்திரத்தில் கொடிய தந்தப்ரகாசத்தினால் அவளது வடிவத்தை ப்ரத்யக்ஷமாகப் பார்த்து எவ்வளவும் பயப்படாமல் மைநாகம்போல வாயைத்திறந்து வீணாக நீ வருத்தப்படாதேயென்று அரசன் சொல்லுவான்—என்பதாம். (உ௬)

## அரசன் றமது வீரமுரைத்தல்.

எய்தாநின் றுளபயனுக்கியற்றாதா ரில்லையா மென்றபோது, நொய்தானகருமத்தி னெய்தானோர் விரைந்திடுவர் நொய்ம்மை தோன்ற, வைதான புந்தியினா லாறுதலா லறிவுடையோரனைத்துஞ்செய்வர், வெய்தாவுன் போல்வாரைக் கொதுகென்வீசிடுமெங் கள் வீரக்காற்று.

(இ-ள்.) எய்தாநின்றுளபயனுக்கு - அடைகின்றப்ரயோசனத்துக்கு, இயற்றாதார் - முயற்சியாதவர்கள், இல்லையாமென்றபோதும் - இல்லையென்றுசொல்லியபோதும், நொய்தானகருமத்தில்-அற்பகாரியத்தில், நொய்தானோர் - அற்பமானவர்கள், விரைந்திடுவர் - துரிதப்படுவார்கள், நொய்மைதோன்ற - சொச்சமானது விளங்க, ஐதானபுந்தியினால் - நுட்பவறிவினால், ஆறுதல் - விஸ்ராந்தி (யடைந்த), அறிவுடையோர் - ஞானவான்கள், அனைத்துஞ்செய்வர் - கனமான்காரியத்தைச்செய்வார்கள், வெய்தாவுன்போல்வாரை-கொடிதா (யிருக்கின்ற) வுன்னையொத்த (வநேகர்)களை, கொதுகென - மசகம்போல, எங்கள்வீரக்காற்று - எமதுவீரக்காற்றானது, வீசிவிடும் - தள்ளிவிடும்—எ-று.

(இ-ரை.) அடைகின்ற பிரயோசனத்துக்கு முயற்சியாதவர்கள் இல்லையென்றுசொல்லியபோதும் அற்பகாரியத்தில் அற்பமானவர்கள் துரிதப்படுவார்கள். சொச்சமானதுவிளங்க நுட்பவறிவினால் விஸ்ராந்தியடைந்த ஞானவான்கள் கனமானகாரியத்தைச் செய்வார்கள். கொடிதாயிருக்கின்ற வுன்னையொத்தவநேகர்களை மசகம்போல எமது வீரக்காற்றானது தள்ளிவிடும்—என்பதாம். ()

## அரசன் கற்கடிகருத்தை வினவுதல்.

ஆதலால் விரைவையொழி யுன்கருத்தை யுரைபெங்க ளருகுவந்தோர், காதலா விரந்தபொருள் கனவிலுநல்குவமென்று கழறலோடும். போதமுங்கல்வியும்வலியும் பொறையுமளவிலரென்றே புந்திசெய்தாண், மேதகமா மவருரையை மிகவியந்தா ளிழிவிலா மெய்மைகண்டாள்.

(இ-ள்.) ஆதலால் - ஆகையால், விரைவையொழி - (உனது துராரம்ப)வேகத்தைவிடு, உன்கருத்தையுரை-உனதெண்ணத்தைச்சொல், எங்களருகுவந்தோர்-எங்கள் சமீபத்தில்வந்தவர்கள், காதலாலிரந்தபொருள் - ஆசையினாலியாசித்த வருத்தங்களே, கனவிலு நல்குவமென்று - சொப்பனத்திலுங்கொடுப்போமென்று, கழறலோடும் - அரசன் சொன்னவுடன், போதமும் - ஞானமும், கல்வியும் - வித்தையும், வலியும் - வல்லமையும், பொறையும் - சாந்தமு (மாகியவிவைகளில்), அளவிலரென்று - மட்டில்லாதவர்களென்று, புந்திசெய்தாள் - அறிந்தாள், மேதகமாம் - மேன்மையாகிய, அவருரையை - அவ்வரசமந்திரிகள் வசனத்தை, மிகவியந்தாள் - மிகவுமதிசயித்தாள், இழிவிலாமெய்ம்மை கண்டாள் - குறைவற்ற வுண்மையைப்பார்த்தாள்—எ-று.

(இ-ரை.) ஆகையால் உனது துராரம்ப வேகத்தைவிடு. உனதெண்ணத்தைச்சொல். எங்கள்சமீபத்தில்வந்தவர்கள் ஆசையினாலியாசித்த வருத்தங்களே சொப்பனத்திலுங் கொடுப்போமென்று அரசன் சொன்னவுடன் ஞானமும், வித்தையும், வல்லமையும், சாந்தமுமாகிய விவைகளில் மட்டில்லாதவர்களென்று அறிந்தாள், மேன்மையாகிய அவ்வரச மந்திரிகள் வசனத்தை மிகவு மதிசயித்தாள், குறைவற்ற வுண்மையைப்பார்த்தாள்—என்பதாம். (உஅ)

## கற்கடியையநீங்க நீங்களாரென வினவுதல்.

வாக்குமுகங் கண்களான்மாறுபடா துயர்ந்தோர்தம் மறுவில்சித்த, மேக்குயரு மிவற்றாலே யுண்ணினைவு மறியலா மேலோர்தாமே, பாக்கியம்போல் வந்தெய்திற் சந்தேகந்தெளியாதார் பதகராகுந், தாக்குமுரை யாலிவரை யறிதுமெனு யாவர் நீர் சாற்றுமென்றாள்.

(இ-ள்.) வாக்கு - வசனத்தினாலும், முகம் - வதனத்தினாலும், கண்களால் - விழிகளினாலும், மாறுபடாது - வேறுபடாமல், உயர்ந்தோர்தம் - மேலானவர்களுடைய, மறுவில்சித்தம் - களங்கமற்றமனமானது, மேக்குயரும் - மிகவுமுயர்ந்திருக்கும், இவற்றால் - இக்குணங்களால், உண்ணினைவுமறியலாம் - அபிப்ராயத்தையுந்தெரியலாம், மேலோர்தாமே - மகான்களே, பாக்கியம்போல் - செல்வம்போல, வந்தெய்தில் - வரில், சந்தேகந்தெளியாதார் - ஐயந்தீராதவர்கள், பதகராகும் - கீழ்மக்களாவர், தாக்குமுரையால் - கடாவுமுரையினால், இவரையறிதுமெனு - இவர்களையறிவோமென் (றுன்னி), நீர்யாவர் - நீங்களாற், சாற்றுமென்றாள் - கூறுமெனக்கற்கடிகேட்டாள்—எ-று.

(இ-ள்.) வசனத்தினாலும், வதனத்தினாலும், விழிகளினாலும்வேறுபடாமல் மேலானவர்களுடைய களங்கமற்றமனமானது மிகவுமுயர்ந்திருக்கும் இக்குணங்களால் அபிப்ராயத்தையுந் தெரியலாம். மகான்களே செல்வம்போலவரில் ஐயந்தீராதவர்கள் கீழ்மக்களாவர். கடாவுமுறையினால் இவர்களை யறிவோமென்றுன்னி நீங்களார் கூறுமெனக் கற்கடிகேட்டாள்—என்பதாம். (உகூ)

## மந்திரி சொல்லுதல்.

வினையமுற வரக்கியிது விளம்பிடமந் திரிவிளம்பும் வேடர்க்கெல்லா, மினையவன்மன் னவனமைச்ச னானுகு மிருட்போதிலெங்குநாடி, யுனைநிகர்வா ரைச்சோதித் தொறுக்கவுயி ரொடுக்கவுயிர் நிறுத்தவந்தோம், நினைவிதுவந் ததற்கென்று லிவன்கூற மீண்டந்த நிருதிகூறும்

(இ-ள்.) வினையமுற - வினையம்பொருந்த, அரக்கி-கற்கடியானவள், இதுவிளம்பிட-இதைச்சொல்ல, மந்திரிவிளம்பும் - மந்திரிசொல்லுவான், வேடர்க்கெல்லாம் - வேடர்களுக்கெல்லாம், இனையவன - இத்தகைமையுள்ளவன், மன்னவன் - அரசன், அமைச்சனானுகும் - மந்திரிநானுகும், இருட்போதில் - இராக்காலத்தில், எங்குநாடி - எவ்விடத்தும் பார்த்து, உனைநிகர்வாரை - உனக்கொப்பான துஷ்டர்களை, சோதித்து - ஆராய்ந்து, ஒறுக்க - அலைக்கவும், உயிரொடுக்க - பிராணனை யடக்கவும், உயிர் நிறுத்த (சிஷ்டர்களுடைய) பிராணனை யிரட்சிக்கவும், வந்தோம் - வந்திருக்கின்றோம், வந்ததற்கு - இவ்விடம் வந்ததற்கு, நினைவிதென்று - சங்கற்பமிதுவென்று, இவன்கூற - இந்தமந்திரிசொல்ல, மீண்டந்நிருதி கூறும் - திரும்பவந்த விராக்ஷதிசொல்லுவாள்—எ-று.

(இ-ள்.) வினையம் பொருந்த கற்கடியானவள் இதைச்சொல்ல மந்திரி சொல்லுவான். வேடர்களுக்கெல்லாம் இத்தகைமையுள்ளவன். அரசன் மந்திரி நானுகும். இராக்காலத்தில் எவ்விடத்தும் பார்த்து உனக்கொப்பான துஷ்டர்களை ஆராய்ந்து அலைக்கவும், பிராணனை யடக்கவும், சிஷ்டர்களுடைய பிராணனை யிரட்சிக்கவும் வந்திருக்கின்றோம். இவ்விடம் வந்ததற்கு சங்கற்பமிதுவென்று இந்தமந்திரி சொல்ல திரும்பவந்த விராக்ஷதி சொல்லுவாள்—என்பதாம். (௩௦)

## கற்கடி மநுநீதிசொல்லுதல்.

தீயவனு மந்திரியா னல்வேந்துந் தீவேந்தாந் தீமையில்லாத், தூயவனு மந்திரியாற் றீவேந்தும் நல்வேந்தாந்தொடர்ச்சிபோல, வாயநெறி மன்னவரா லமைச்சருமப் படியாகு மாதலாலே, நேய விவேகத்தமைச்ச னுண்டாகி லெப்பயனு நிருபற்குண்டாம்.

(இ-ள்.) தீயவனுமந்திரியால்-துஷ்டமந்திரியினால், நல்வேந்துந்தீவேந்தாம் - நல்லவரசனுந்தீயவரசனும், தீமையில்லா - பொல்லாங்கில்லாத, தூயவனுமந்திரியால் - பரிசுத்தமானமந்திரியினால், தீவேந்தும் நல்வேந்தாம் - தீயவரசனும் நல்லவரசனுவன், தொடர்ச்சிபோல - (இத்) துடரைப்போல, மன்னவரால்-நீதியுள்ளவரசரால், அமைச்சருமப்படியாகும் - மந்திரிகளுமப்படியேயாவர், ஆதலால் - ஆதலினால், நேயவிவேகத்தமைச்சன் - நல்விவேகமுள்ள மந்திரி, உண்டாகில் - உண்டாயிருக்கின், எப்பயனும் - எந்தப்ரயோசனமும், நிருபற்குண்டாம் - அரசர்களுக்குண்டாகும்.

(இ-ை) துஷ்டமந்திரியினால் நல்லவரசனும் தீயவரசனும். பொல்லாங்கில்லாத பரிசுத்தமான மந்திரியினால் தீயவரசனும் நல்லவரசனுவன். இத்துடரைப்போல நீதியுள்ளவரசரால் மந்திரிகளுமப்படியேயாவர். ஆதலினால் நல்விவேகமுள்ளமந்திரி உண்டாயிருக்கின் எந்த ப்ரயோசனமும் அரசர்களுக்குண்டாகும்—எ-ம்.

## இராசமந்திரிகளென்றன் ஞானமிருக்க வேண்டுமேயெனல்.

மன்னவனெப் படியுலகின் மன்னுயிரு மப்படியா மகிமைதானு, நன்னடுவு நிலைமையுமெய்ஞ் ஞானநூ றெளிந்தவர்க்கேநண்ணு நிற்கு மன்னதுகற் றிலரென்னி லரசரமைச் சர்களென்போ ரபத்தராகு, மின்னகலை யிலதாகி லெனக்கிரையாயிளமைநல மிழந்தீரின்றே.

(இ-ள்.) மன்னவனெப்படி-அரசனெப்படியோ, உலகின்மன்னுயிருமப்படியாம் - சகத்திலுள்ளபிராணிகளுமப்படியேயாகும், மகிமைதானும்-(ப்ரபுத்துவ) பெருமையும், நன்னடுவுநிலைமையும் - நல்லசமதிருஷ்டியும், மெய்ஞ்ஞானநூல் - ஞானசாஸ்திரங்களை, தெளிந்தவர்க்கே - ஆராய்ந்தவர்களுக்கே, நண்ணுநிற்கும் - பொருந்தும், அன்னது - அந்தஞானநூலை, கற்றிலரென்னில்-கல்லாதவர்களென்றால், அரசரமைச்சர்களென்போர் - இராசமந்திரிகளென்பவர்கள், அபத்தராகும் - பொய்யராவார்கள், இன்

னகலை - இத்தன்மையானஞானநூலி (னப்பியாசம்), இலதாகில் - இன்றுயின், எனக்கிரையாய் - எனக்குணவாக, இளமைநலம் - எவ்வனத்தினன்மைகளை, இன்றேயிழந்தீர் - இப்போதே யிழந்தீர்கள்—எ-று.

(இ-ரை.) அரசனெப்படியோ சகத்திலுள்ள பிராணிகளுமப்படியேயாகும். ப்ரபுத்துவபெருமையும் நல்லசமதிருஷ்டியும் ஞானசாஸ்திரங்களை ஆராய்ந்தவர்களுக்கே பொருந்தும் அந்தஞானநூலை கல்லாதவர்களென்றால் இராசமந்திரிகளென்பவர்கள் பொய்யராவார்கள். இத்தன்மையான ஞானநூலினப்பியாசம் இன்றுயின் எனக்குணவாக எவ்வனத்தினன்மைகளை இப்போதே யிழந்தீர்கள்.

## விஞப்பஞ்சரத்தி லடைக்கத்தொடங்கல்.

சிங்கமெனு முங்களையான் செப்புகின்ற விஞக்கூட்டிற்சிறைசெய்கின்றே, னுங்கண்மதி யாற்றிறந்தா லுயிர்வாழ்வீரெனவகுத்தென் னுரைசெய்கென்னத், துங்கநர பதியுரைப்பத் தொல்லரக்கி நல்லமுதத் துளிகள்போல, வங்கவருக்குரைத்தவெலா மிராகவகே ளெனவசிட்ட னருள லுற்ருன்.

(இ-ள்.) சிங்கமெனுமுங்களை - கேசரியென்கின்றவுங்களை, யான் செப்புகின்ற விஞக்கூட்டில் - நான்சொல்லுகின்ற கேள்வியாகிய கூண்டில், சிறைசெய்கின்றேன் - காவல்செய்கிறேன், உங்கண்மதியால் - உங்களறிவென்னுந் (திறவுகோலி) ஞல், திறந்தால் - (அக்கூண்டின்வாயலை நீங்க) டிறந்தால், உயிர் வாழ்வீரென - பிராணனேடுஞ் சீவிப்பீர்களென் (றிராக்ஷதி) சொல்ல, என் - அதென்ன, வகுத்துரை செய்கென்ன - பிரித்துச்சொல்வாயென்று, துங்கநரபதியுரைப்ப - பரிசுத்தமுள்ளவரசன்சொல்ல, தொல்லரக்கி - பழமையானவிராக்ஷதி, நல்லமுதத்துளிகள்போல - நல்லவமுதவருஷங்களைப்போல, அவருக்குரைத்தவெலாம் - அவ்விராசமந்திரிகளுக்குக் கூறியவாக்கியங்களனைத்தையும், இராகவகேளென - இராமா நீகேட்பாயென்று, வசிட்டனருளலுற்ருன் - வசிட்டமுனியனுக்கிரகிக்கத்தொடங்கிஞர்—எ-று.

(இ-ரை.) கேசரி யென்கின்ற வுங்களை நான் சொல்லுகின்ற கேள்வியாகிய கூண்டில் காவல் செய்கிறேன், உங்களறிவென்னுந் திறவுகோலிஞல் அக்கூண்டின் வாயிலை நீங்கடிறந்தால் பிராணனேடுஞ் சீவிப்பீர்ளென் றிராக்ஷதி சொல்ல அதென்ன பிரித்துச்சொல்வாயென்று பரிசுத்தமுள்ளவரசன் சொல்ல பழமையான விராக்ஷதி நல்ல வமுத வருஷங்களைப்போல அவ்விராச மந்திரிகளுக்

குக் கூறிய வாக்கியங்க ளனைத்தையும் இராமா நீகேட்பாயென்று வசிட்டமுனி யனுக்கிரகிக்கத்தொடங்கினுர்—என்பதாம்.

(இ-ம-க-ம்.) வெளிப்படை. (ருரு)

## ஆத்மஸ்வரூபத்தை வினவுதல்.

அண்டநிரை பலகோடி பலவாயு மொன்றுமெவ் வணுவினுள்ளே, விண்டகடற்குமிழிகள்போல் விரிந்தொடுங்கும்விண்ணு யும் விண்ணன்றேது, தண்டறவுண் டாயிருந்து மிலாதவெது சரியாதேது, கண்டிடநில் லாதாயுநிற்பதெது சித்தாயுங் கல்லாமேது.

(இ-ள்.) விண்டகடல் - பரவியசமுத்திரத்தில், குமிழிகள்போல்-புற்புதத்தைப்போல, ஒன்றுமெவ்வணுவினுள்ளே - ஒன்றானவெந்தவணுவுக்குள், பலகோடி-அளவிறந்த, அண்டநிரை - அண்டபந்திகள், பலவாயும்-நாநாவாகியும், விரிந்தொடுங்கும் - உற்பத்திஸ்திதிலயமாம், விண்ணும் - ஆகாயமாகியும், விண்ணன்றேது - ஆகாயமல்லாதவெது, தண்டறவுண்டாயிருந்தும், வரையறவுள்ளதாயிருந்தும், இலாதவெது - இல்லாதவெது, சரித்தேயும் - சஞ்சரித்தும், சரியாதேது - சஞ்சரியாவெது, கண்டிட நில்லாதாயும் - காணநிற்காததாயும், நிற்பதெது - நிற்கின்றவெது, சித்தாயும்-சித்தாகியும், கல்லாமேது - கல்லானவெது—எ-று.

(இ-ன.) பரவிய சமுத்திரத்தில் புற்புதத்தைப் போல ஒன்றான வெந்த வணுவுக்குள் அளவிறந்த அண்டபந்திகள் நாநாவாகியும், உற்பத்திஸ்திதிலயமாம். ஆகாயமாகியும்ஆகாயமல்லாதவெது. வரையறவுள்ளதாயிருந்தும் இல்லாதவேது, சஞ்சரித்தும் சஞ்சரியாவெது, காணநிற்காததாயும் நிற்கின்றவெது, சித்தாகியும் கல்லானவெது—என்பதாம். (ருச)

இதுவுமது.

வானிடையோ வியமெழுது கின்றவெது வித்திடையின் மரங்கள்போல, வீனமிலா வெவ்வணுவி லுலகமெலா மிருக்கின்ற தியாதினின்று, மானகடற் றிரைநுரைபோ லொருபொருளும் பிரிவாகா தமைந்தநீரு, மீனமறு நெகிட்சியும்போ லேதோன்றி யிருமையுமெங் கொருமையாகும்,

(இ-ள்.) வானிடை - ஆகாயத்தில், ஓவியம்மழுதுகின்றவெது - சித்திரமெழுதுகின்றவெது, வித்திடையின் - விதையினிடத்தில், மரங்கள் போல - விருக்ஷங்களைப்போல, ஈனமிலா - குறைவில்லாத, எவ்வணுவில்-

எந்தவணுவில், உலகமெலாமிருக்கின்றது - சகங்களியாவு மிருக்கின்றது, இயாதினின்றும் - எதினிடத்திருந்தும், ஆன - விரிவான, கடல் - சமுத்திரத்தி (லுண்டான), திரைநுரைபோல் - அலைநுரைகளைப்போல, ஒரு பொருளும் - ஒருவஸ்துவும், பிரிவாகாது - வேறுபடாமல், அமைந்தநீரும்- நிறைந்தசலத்தையும், ஈனமறு நெகிழ்ச்சியும்போல் - குறைவற்ற நெகிழ்ச்சியையும்போல, தோன்றி - உண்டாய், இருமையும் - இரண்டும், எங்கொருமையாகும் - எங்கொன்ருயிருக்கும்—எ-று.

(இ-ஙா.) ஆகாயத்தில் சித்திரமெழுதுகின்றதெது விதையினிடத்தில் விருக்ஷங்களைப்போல குறைவில்லாத எந்தவணுவில்சகங்க ளியாவு மிருக்கின்றது? எதினிடத் திருந்தும் விரிவான சமுத்திரத்தி லுண்டான அலை நுரைகளைப்போல ஒருவஸ்துவும் வேறுபடாமல் நிறைந்த சலத்தையும் குறைவற்ற நெகிழ்ச்சியையும் போல உண்டாய் இரண்டும் எங்கொன்ருயிருக்கும்—என்பதாம்.

(இ-உ-க-ப்.) பிரமஸ்வரூபத்தைச் சகசத்தி னவநவமா யனுபவிக்கும் பொருட்டதைப் பதினைந்து சங்கையாகப்பகுத்து வினவினதாம். (௩௫)

அனுபவ ஞப்தி யுண்டாகும்படிக் கச்சமுரைத்தல்.

இந்தவினுவின்பயனை நும்முணர்வா லேதோன்ற வியம்புவீரேற், கந்தமுற வென்குழன்மே லெப்போது மிருக்கின்ற கமழ்போதாவீர், மந்தமுறு புந்தியினுல் வகுத்துரைக்க மாட்டாதுமயங்குவீரேல், வெந்தவயிற் றெரிகனற்கு விறகாவீ ரென்றரக்கி விளம்பலோடும்.

(இ-ள்.) இந்தவினுவின்பயனை - இக்கேள்வியின் ப்ரயோசனத்தை, நும்முணர்வால் - உங்களறிவினுல், தோன்றவியம்புவீரேல்-தெரியச்சொல்வீர்களாயின், கந்தமுற - வாசனைபொருந்த, என்குழன்மேல் - எனது கூந்தலின்மேல், எப்போது மிருக்கின்ற - எக்காலத்திலுமிருக்கின்ற, கமழ்போதாவீர் - மணக்கின்ற புஷ்பமாவீர்கள், மந்தமுறு - அற்பமாகிய, புந்தியினுல் - அறிவினுல், வகுத்துரைக்கமாட்டாது - பிரித்துச்சொல்லக்கூடாமல், மயங்குவீரேல் - கலங்குவீர்களாயின், வெந்தவயிற்றெரிகனற்கு-எரிந்த வுதராக்கினிக்கு, விறகாவீரென்று - இந்தனமாவீர்களென்று, அரக்கி - இராக்ஷதி, விளம்பலோடும் - சொல்லவும்—எ-று.

(இ-ஙா.) இக்கேள்வியின் ப்ரயோசனத்தை உங்க ளறிவினுல் தெரியச் சொல்வீர்களாயின் வாசனைபொருந்த எனது கூந்தலின்மேல் எக்காலத்திலு மிருக்கின்ற மணக்கின்ற புஷ்பமாவீர்கள்.

அற்பமாகிய அறிவினல் பிரித்துச்சொல்லக்கூடாமல் கலங்குவீர்களாயின் எரிந்த வுதராக்கினிக்கு இந்தனமாவீர்களென்று இராக்ஷதி சொல்லவும்—என்பதாம்.

(இ-ம்.) இந்தப் பதினைந்துபிரிவையு மொருமைப்படுத்த வேண்டுமென்பதாம். (௩௬)

மந்திரி முதற்சங்கைக்கும் பதின்மூன்றஞ் சங்கைக்கு முத்தரங்கூறல்.

மந்திரிமுன் னுரைசெய்வான் மாசிலாப் பரம்பொருளைவகுத்துச்சொன்னய், சிந்தைமுத லாம்பொறிகளாறுனு மெட்டரிதாந் திறத்தினலே, யந்தமில்சின் மாத்திரமாய் விண்ணினு நொய் தாம் பரம வணுவேயாகு, முந்துபிர மாண்டமெலாமவ்வணுவிலேதோன்றி முதிர்ந்துமாயும்.

(இ-ள்.) மந்திரி முன்னுரைசெய்வான் - அமைச்சன்முன்பு சொல்லுவான், மாசிலாப்பரம்பொருளை - களங்கமற்ற பிரமவஸ்துவை, வகுத்துச் சொன்னய் - பகுத்துக்கூறினய், (அஃதியாதெனின்) சிந்தைமுதலாம் - மனமுதலாகிய, பொறிகளாறுலும்-அறிந்திரியங்களினலும், எட்டரிதாந் திறத்தினல் - எட்டுதற்கரிய தன்மையினல், அந்தமில் - முடிவில்லாத, சின்மாத்திரமாய் - ஞானமாத்திரமாகியும், விண்ணினுநொய்தாம் - ஆகாயத்திலுநுட்பமாகியும், பரமவணுவேயாகும் - பரமாணுவுக் கொப்பாகியுமிருக்கும், அவ்வணுவில் - அந்தவணுவுக்குள், முந்துபிரமாண்டமெலாம்-முந்தின பிரமாண்டங்களனைத்தும், தோன்றி - உண்டாகி, முதிர்ந்து - வளர்ந்து, மாயும் - நசிக்கும்—எ-று.

(இ-ள.) அமைச்சன்முன்புசொல்லுவான், களங்கமற்றபிரமவஸ்துவை பகுத்துக்கூறினய். அஃதியாதெனில் மனமுதலாகிய ஆறிந்திரியங்களினலும் எட்டுதற்கரிய தன்மையினல்முடிவில்லாத ஞானமாத்திரமாகியும், ஆகாயத்திலுநுட்பமாகியும், பரமாணுவுக்கொப்பாகியுமிருக்கும், அந்தவணுவுக்குள்முந்தின பிரமாண்டங்களனைத்தும் உண்டாகி வளர்ந்து நசிக்கும்—என்பதாம்.

(இ-ம்.) அணுவுக்கணுவா யேகமாயிருக்கின்ற பிரமமே யண்டகோடிகளாகத் தோற்றுமென்பதாம். (௩௭)

ஆறுசங்கைக் குத்தரங்கூறல்.

தடமான வதன்புறமில் லாமையினல் விண்ணகுந் தனிபோதத்தா, மிடமான விண்ணன்று மின்னதெனத் தெரிவரியவியல்பினலே, திடமாக விலதாகுஞ் சற்பாவத் தாலுளதாய்ச்செப்பலா

கும், புடமாக விளங்குதலாற் சித்தாகு மறிவதிலாப் பொருட்டாற் கல்லாம்.

(இ-ள்.) (உ) தடமானவதன் - விலாசமுள்ள வப்பிரமத்துக்கு, புற மில்லாமையினுல் - புறம்பில்லாதபடியால், விண்ணுகும் - ஆகாயமாம், (௩) தனிபோதத்தால் - கேவல ஞானமாக விருத்தலின், இடமான விண்ணன்ரும் - விரிந்த பூதாகாயமன்ரும், (௫) இன்னதெனத்தெரிவரிய - இப்படி யென்று (சுட்டி) யறிதற்கரிய, இயல்பினுல் - தன்மையினுல், திடமாக விலதாகும் - ஸ்திரமாகவில்லாததாம், (௯) சற்பாவத்தால் - சத்தாயிருத்த லால், உளதாய்ச்செப்பலாகும் - உள்ளதாகச் சொல்லப்படும், (௧0) புட மாக விளங்குதலால் - சொச்சமாக ப்ரகாசித்தலினுல், சித்தாகும் - ஞான மாகும், (௧௧) அறிவதிலாப்பொருட்டால் - அறியுந்தன்மையில்லாத நிமி த்தத்தினுல், கல்லாம் - (சடமாகிய) கல்லைப் (போலு) மாம்—எ-று.

(இ-ா.) விலாசமுள்ள வப்பிரமத்துக்கு புறம்பில்லாதபடி யால் ஆகாயமாம். கேவலஞானமாக விருத்தலின் விரிந்த பூதாகாய மன்ரும் இப்படியென்று சுட்டியறிதற்கரிய தன்மையினுல் ஸ்திர மாகவில்லாததாம். சத்தாயிருத்தலால் உள்ளதாகச் சொல்லப்ப டும். சொச்சமாக ப்ரகாசித்தலினுல் ஞானமாகும். அறியுந்தன்மை யில்லாத நிமித்தத்தினுல் சடமாகிய கல்லைப்போலுமாம்—எ-ம்.

(இ-ˆ.) இவ்வாறுத்தரத்தினுனும் பிரமஸ்வரூபமெல்லா மாயுமல்லவு மாயுமிருக்கின்ற தன்மையை விளக்கினதாம். (௩௮)

## பின்னைந்து சங்கைக் குத்தரங்கூறல்.

தானுகு மிகநொய்தா மாகாயத்திற்
  சகத்திரளாஞ் சித்திரத்தைத் தானேகோட்டு
மானுத வுலகமெலாந் தனதுசோதி
  யாதலினு லதற்குவே றயலொன்றில்லை
நீநானுஞ் சகபேத வடிவந்தானு
  நிற்கின்ற வதன்வடிவாய் நீங்காதென்றும்
நாநாவாம் பொருட்புணர்வா னடந்ததாகு
  நடக்கவிட மிலாமையினு னடவாதாகும்.

(இ-ள்.) (௧உ) மிகநொய்தாம் - மிகவுஞ்சொச்சமாகியும், தானுகும் - தானுகியு (மிருக்கின்ற), ஆகாயத்தில் - (சிதா) காயத்தில், சகத்திரளாம்- உலகபந்திகளாகிய, சித்திரத்தைத் தானேகோட்டும் - சித்திரத்தைத்தா

னேயெழுதும், (கச) ஆனுத - நீங்காத, உலகமெலாம் - சகங்களனைத்தும், தனதுசோதியாதலினுல் - தனது ப்ரகாசமானபடியினுல், அதற்கு - அவ் வஸ்துவுக்கு, வேறயலொன்றில்லை - அன்னியமொன்றில்லை, (கரு) நீநா ணும் - நீநானென்கின்ற, சகபேதவடிவந்தானும் - உலகவேற்றுமையுருவங் களும், நிற்கின்ற - இருக்கின்ற, அதன்வடிவாய் - அச்சத்தினுருவமாய், என்றும் - எப்போதும், நீங்காது - பிரியாதாம், (சு) நாநாவாம்பொருட் புணவால் - நாநாவாகிய வஸ்துக்களின் சம்பந்தத்தினுல், நடந்ததாகும் - சஞ்சரித்ததாம், (எ) நடக்கவிடமிலாமையினுல் - சஞ்சரிக்க வேறுஸ்தான மின்மையின், நடவாதாகும் - சஞ்சரியாததாம்—எ-று.

(இ-ள்.) மிகவுஞ் சொச்சமாகியும், தானுகியுமிருக்கின்றசி தாகாயத்தில் உலகபந்திகளாகிய சித்திரத்தைத்தானேஎழுதும் நீ ங்காத சகங்களனைத்தும் தனதுப்ரகாசமானபடியினுல் அவ்வஸ்து வுக்கு அன்னியமொன்றில்லை. நீநானென்கின்ற உலகவேற்றுமையு ருவங்களும் இருக்கின்ற அச்சத்தினுருவமாய் எப்போதும் பிரியா தாம், நாநாவாகிய வஸ்துக்களின் சம்பந்தத்தினுல் சஞ்சரித்த தாம் சஞ்சரிக்க வேறுஸ்தானமின்மையின் சஞ்சரியாததாம்.

(இ-பு.) இவ்வைந்துத்தரவினுனும் பிரமஞ்சகத்தைத் தானுக வுண் டாக்கித் தானுகவிளக்கித் தானதுவென்னு மிருமையின்றித் தன்மயமாய் விளங்குகின்ற வத்துவிதத்தை விளக்கினதாம். (௩௧)

பின்பிரண்டு சங்கைக் குத்தரங்கூற மேலாசனுத்தரம்.

அடைவதற்கொன் றிலாமையினு லில்லையாகு
மநவரதஞ் சத்தையிலுண் டாகுமென்று
புடைபெயர்நன் மதியமைச்சன் புகலக்கேட்டு
போதவியந் ததற்பின்பு பூபனேயுன்
னுடையவுணர் வுரையென்ன வவனுஞ்சொல்வா
னுலகத்தி லுறுதியிலா வுறுதிதானே
தடையறுசிற் பரம்பொருளி னுறுதியாகுந்
தற்பரத்தி னியல்பின்னஞ் சாற்றக்கேளாய்.

(இ-ள்.) (அ) அடைவதற்கு - (தான்) பொருந்துவதற்கு, ஒன்றிலா மையினுல் - வேறோரிடமில்லாதபடியால், இல்லையாகும்-நிற்கவில்லையாம், (௧) அநவரதம் - சதாகாலமும், சத்தையில் - (சகலபொருள்களிடத்துஞ்) சத்தாமாத்திரமா யிருக்கின்றதினுல், உண்டாகுமென்று - நிற்கின்றதெ ன்று, புடைபெயர் - அரசனதருகிலுறையும், நன்மதியமைச்சன் - நல்லறி

வுள்ள மந்திரி, புகல - சொல்ல, கேட்டு - (கற்கடியானவள் கேட்டு, போதவியந்து - மிகவு மதிசயித்து, அதன்பின்பு - அதற்குப்பின், பூபனே - இராசாவே, உன்னுடையவுணர்வு - உனதறிவை, உரையென்ன - சொல்லென்றுகேட்க, அவனுஞ்சொல்வான் - அவ்வரசனுங்கூறுவான், உலகு - சகமானது, இல் - இன் (றென்கின்ற), உறுதிதானே - உறுதியே, தடையறுசிற்பரம்பொருள் - அகண்டாகாரவஸ்து (வுண்டென்னும்), உறுதியாகும்-உறுதியாம், தற்பரத்தினியல்பு-பிரமத்தின்றன்மையை, இன்னஞ்சாற்றக்கேளாய் - மேலுஞ் சொல்லக்கேட்பாய்—எ-று.

(இ-ள்.) தான்பொருந்துவதற்கு வேறோரிட மில்லாதபடியால் நிற்கவில்லையாம். சதாகாலமும் சகலபொருள்களிடத்துஞ் சத்தாமாத்திரமா யிருக்கின்றதினால் நிற்கின்றதென்று அரசனதருகிலுறையும் நல்லறிவுள்ள மந்திரிசொல்ல, கற்கடியானவள்கேட்டு மிகவுமதிசயித்து அதற்குப்பின் இராசாவே உனதறிவை சொல்லென்றுகேட்க, அவ்வரசனுங் கூறுவான். சகமானது இன்றென்கின்ற உறுதியே அகண்டாகாரவஸ்துவுண்டென்னும் உறுதியாம். பிரமத்தின்றன்மையை மேலுஞ்சொல்லக்கேட்பாய்—எ-ம்.

(இ-ள்.) இவ்விரண்டுசெங்கையி னுத்தரத்தாற் பிரமஞ் சத்தாயு மசத்தாயு மிருக்கின்ற பூரணஸ்வரூபத்தை விளக்கிப் பதினைந்து சங்கைக்கு மொருமையாகப் பதினன்குத்தரத்திற்சொல்ல, அஃதன்றி யரசனோருத்தரத்திற் பிரமநிச்சயத்தை விளக்கினதென்பதாம். (௪௦)

## பின்பாறுத்தரங்கூறல்.

கருத்ததனாற் சங்கற்ப விகற்பமெல்லாங்
 கைவிடுதல் கைக்கொள்ளப் படுவதாகுந்
திருத்தமுறுந் தன்விரிவுங் குவிவுதானுஞ்
 சிருட்டியுங்கற் பமுமாகுந் திரள்வேதாந்தத்
தருத்தமுறு வாக்கியத்தி னிட்டையாகு
 மவ்வேத வாக்கியத்துக் கயலுமாகு
முருத்திகழு முள்ளதில திரண்டினுக்கு
 முள்ளாகு மவையிரண்டி னுருவமாகும்.

(இ-ள்.) கருத்ததனால் - மனதினால், சங்கற்ப விகற்பமெல்லாம் - சங்கற்ப விகற்பங்களனைத்தையும், கைவிடுதல் - கைவிடுவதே, கைக்கொள்ளப்படுவதாகும் - (பிரமத்தைக்) கைவசப்படுத்துவதாம், திருத்தமுறும் - திருத்தமாகிய, தன்விரிவுங்குவிவுதானும் - தனது சங்கற்பமுதித்தொடுங்குதலே, சிருட்டியுங் கற்பமுமாகும் - சகமுற்பத்திலயமாம், திரள்வேதா

ந்தத்து - ஒன்ருகிய வேதாந்தங்களினது, அருத்தமுறு - சர்வார்த்தங்கள் பொருந்திய, வாக்கியத்தினிட்டையாகும்-மகாவாக்கியத்தினிடமாம், அவ் வேதவாக்கியத்துக்கு - அச்சுருதிவாக்கியத்துக் (கந்தரங்கமான வனுபூதி யாகையால்) , அயலுமாகும் - புறம்புமாம், உருத்திகழும் - வடிவமாகவிள ங்குகின்ற, உள்ளதிலதிரண்டினுக்கும் - சத்தசத்திரண்டுக்கும், உள்ளா கும் - மத்தியுமாம், அவையிரண்டினுருவுமாகும் - அந்தவிரண்டினது ஸ்வ ரூபமுமாம்—எ-று.

(இ-ள.) மனதினல் சங்கற்ப விகற்பங்க ளனைத்தையுங்கை விடுவதே பிரமத்தைக் கைவசப்படுத்துவதாம். திருத்தமாகிய தனது சங்கற்பமுதித்தொடுங்குதலே சகமுற்பத்திலயமாம். ஒன் ருகிய வேதாந்தங்களினது சர்வார்த்தங்கள் பொருந்திய மகாவா க்கியத்தினிடமாம். அச்சுருதிவாக்கியத்துக் கந்தரங்கமான வனுபூ தியாகையால் புறம்புமாம். வடிவமாக விளங்குகின்ற சத்தசத்திர ண்டுக்கும் மத்தியுமாம். அந்த விரண்டினது ஸ்வரூபமாம்—எ-ம்.

## பின்பிரண் டுத்தரங்கூறல்.

சராசரமா முலகனைத்து மனரூபத்தாற்
 ருன்செய்யும் விளையாட்டாஞ் சகமாய்நின் றும்
புராதனமா மொருமையினிற் பிரியாதாகும்
 பூரணசின் மாத்திரமாம் பொருளேசொன்ளுய்
நிராசையுளத் தவரறியும் பரமீதென்று
 நிருபனுரைத் திடநிருதி நெஞ்சுட்கொண்டு
விராவமுத மழைசொரியக் குளிர்ந்தவாபோன்
 மிகக்குளிர்ந்தாள் சாந்தமுற விளம்பலுற்ருள்.

(இ-ள்.) சராசரமாம் - தாவரசங்கமான, உலகனைத்தும்-சகங்களெல் லாம், மனரூபத்தால் - மனேசங்கற்பத்தினல், தான்செய்யும் - தானியற் றும், விளையாட்டாம் - லீலையாம், சகமாய்நின்றும் - உலகமாயிருந்தும், புராதனமாம் - பழமையான, ஒருமையினில் - ஏகத்துவத்தில், பிரியாதா கும் - பிரிவற்றதாயிருக்கின்ற, பூரணசின்மாத்திரமாம் பொருளேசொன் ளுய் - பரிபூரணஞானமாத்திரமாய் விளங்குகின்ற பிரம வஸ்துவையே யுரைத்தாய், நிராசையுளத்தவர் - விராகமனதையுடையவர்கள், அறியும் பரமீதென்று - உணர்கின்ற பிரமஸ்வரூபமே யிதுவென்று, நிருபனுரைத் திட - அரசன்சொல்ல, நிருதி - அரக்கியானவள், நெஞ்சுட்கொண்டு - மனதிற்கிரகித்து, விராவமுதமழைசொரிய - கலந்த வமுதமழையைவரு ஷிக்க, குளிர்ந்தவர்போல - (சகலமும்) குளிர்ச்சியடைந்த தன்மையைப் போல, மிகக்குளிர்ந்தாள் - மிகவுமகிழ்ந்தாள், சாந்தமுற - உபசாந்தம டைய, விளம்பலுற்ருள் - சொல்லத்தொடங்கினள்—எ-று.

(இ-ரை.) தாவரசங்கமான சகங்களெல்லாம் மனோசங்கற்பத்தினால் தானியற்றும் லீலையாம். உலகமாயிருந்தும் பழமையான ஏகத்துவத்தில் பிரிவற்றதாயிருக்கின்ற பரிபூரணஞானமாத்திரமாய் விளங்குகின்ற பிரமவஸ்துவையே யுரைத்தாய். விராகமனதையுடையவர்கள் உணர்கின்ற பிரமஸ்வரூபமே யிதுவென்று அரசன் சொல்ல, அரக்கியானவள் மனதிற்கிரகித்து கலந்த வமுதமழையை வருஷிக்க, சகலமும் குளிர்ச்சியடைந்த தன்மையைப் போல மிகவுமகிழ்ந்தாள். உபசாந்தமடைய சொல்லத்தொடங்கினாள்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) இவ்வட் டுத்தரத்தா லாத்மலீலாவுல்லாச விலாசங்களைவிளக்கி-அக்கற்கடி பதினைந்து சங்கைக்கு இவ்வொன்பதுத்தரத்தாலொருமைப்படுத்திச் சொல்லியதாம். (௬௨)

---

சத்துக்கடரிசனத்தைப்புகழ்ந்து கைம்மாறு வினவுதல்.

அற்புதமா யமுதமா யறிவேயாகி
யத்தமன முதயமிலா வருக்கன்போலாய்ப்
பொற்புமிகும் புந்தியுள வும்மைப்போல்வார்
பொன்னடியை முடியாகப் புனைந்தாரன்றே
தற்பரமா முலகாளும் வேந்தராவோர்
தமையுணர்ந்தோ ரைச்சேர்ந்தாற் றளர்வுண்டாமோ
நற்பயன்போல் வருமுமக்கிங் கரிதின்றேனு
நான்செய்யுங் கைம்மாறு நவிலுமென்றாள்.

(இ-ள்.) அற்புதமாய் - அதிசயமாகியும், அமுதமாய் - கெடாததாகியும், அறிவேயாகி - சின்மாத்திரமேயாகியும், உதயம் - உதயமும், அத்தமனம் - அஸ்தமனமும், இலா - இல்லாத, அருக்கன்போலாய் - ஞானசூரியனுக்கொப்பாகியு (மிருக்கின்ற) , பொற்புமிகும் - அழகுமிகுந்த, புந்தியுளவும்மைப்போல்வார் - அறிவையுடைய வுங்களுக்கொப்பான சத்துக்களுடைய, பொன்னடியை - அழகியபாதங்களை, முடியாக - கிரீடமாக, புனைந்தாரன்றே - (சலருந்) தரித்தார்களல்லவா, தற்பரமாமுலகாளும் - முத்தியுலகத்தையாளாநின்ற, வேந்தராவோர் - அரசர்களாகிய, தமையுணர்ந்தோரை - ஆத்மஞானிகளை, சேர்ந்தால் - கூடினால், தளர்வுண்டாமோ - சோர்வுண்டாகுமோ, நற்பயன்போல் - ஆத்மலாபத்தைப்போல, வருமுமக்கு - வராநின்றவுங்களுக்கு, இங்கரிதின்றேனும் - இவ்விடத்திலெல்லாங் கிடைத்திருந்தாலும், நான்செய்யுங் கைம்மாறு - யானியற்றுமுபகாரத்தை, நவிலுமென்றாள் - (இன்னதென்று) சொல்லுமென்று கேட்டாள்—எ-று.

(இ-ரை.) அதிசயமாகியும், கெடாததாகியும், சின்மாத்திரமேயாகியும், உதயமும், அஸ்தமனமும், இல்லாத ஞானசூரியனுக்கொப்பாகியுமிருக்கின்ற அழகுமிகுந்த அறிவையுடையவுங்களுக்கொப்பான சத்துக்களுடைய அழகியபாதங்களை கிரீடமாக சகலருந்தரித்தார்களல்லவா? முத்தியுலகத்தை யாளாநின்ற அரசர்களாகிய ஆத்மஞானிகளைக்கூடினால் சோர்வுண்டாகுமோ? ஆத்மலாபத்தைப்போல வராநின்றவுங்களுக்கு இவ்விடத்திலெல்லாங்கிடைத்திருந்தாலும் யானிபற்று முபகாரத்தை இன்னதென்று சொல்லுமென்று கேட்டாள்—என்பதாம். (௫௩)

## சீவகாருண்யமே கைம்மாறெனக்கூறல்.

சிலையரக்கர் குலமென்னு மெட்டிக்காட்டிற்
 செறிகனித்தே மாவனையாய் சகத்திலொன்றுங்
கொலைபுரியா தொழியென்று வேந்தன்கூறக்
 கொலையொழிந்தே னென்றரக்கி கூறலோடுந்
தொலைவருமூ னுணவாநீ செய்யுமாறென்
 சொலலெனமன் னவன்கேட்பத் தொல்லைநாளி
லலைவில்சமா தியிலிருந்து பசியைவென்றே
 னவ்வகையே யின்றுமிருந் தாற்றலுற்றேன்.

(இ-ள்.) சிலையரக்கர் குலமென்னும் - தனுசையுடைய விராக்ஷதவமிசமென்கிற, எட்டிக்காட்டில் - எட்டிவனத்தில், செறி - நெருங்கிய, தேமாங்கனி - தீமாங்கனிக்கு, அனையாய் - ஒப்பானவளே, சகத்திலொன்றும் - உலகத்தின்கண்ணே (ருயிரையும்), கொலைபுரியாது - கொல்லாமல் ஒழியென்று - இருப்பாயென்று, வேந்தன்கூற-அரசன்சொல்ல, கொலை - (அப்படியே) கொலைசெய்வதை, ஒழிந்தேனென்று - விட்டேனென்று, அரக்கி - இராக்ஷதி, கூறலோடும் - சொல்லவும், தொலைவரும் - அளவற்ற, ஊனுணவாநீ - மாமிசாகாரமுள்ளவளாகிய நீ, செய்யுமாறென்-(பசிக்குச்) செய்யுந் தன்மையென்ன, சொல்லென - கூறென்று, மன்னவன் கேட்ப - அரசன்கேட்க, தொல்லைநாளில் - முன்னாளில், அலைவில்சமாதியிலிருந்து - நிர்விகற்பசமாதியிலிருந்து, பசியைவென்றேன் - எனதுதராக்கினியைக்கெடுத்தேன், அவ்வகையே - அவ்வண்ணமே, இன்றும் - இப்பொழுதும், இருந்தாற்றலுற்றேன் - (சமாதியிலிருந்து) தணிப்பேன்-எ-று.

(இ-ரை.) தனுசையுடைய விராக்ஷத வமிசமென்கிற எட்டிவனத்தில் நெருங்கிய தீமாங்கனிக்கு ஒப்பானவளே, உலகத்தின்கண்ணேருயிரையும் கொல்லாமல் இருப்பாயென்று அரசன் சொல்ல அப்படியே கொலைசெய்வதை விட்டேனென்று இராக்ஷதி

சொல்லவும், அளவற்ற மாமிசாகார முள்ளவளாகிய நீபசிக்குச் செய்யுந்தன்மை யென்ன கூறென்று அரசன்கேட்க, முன்னாளில் நிர்விகற்பசமாதியிலிருந்து எனதுதராக்கினியைக் கெடுத்தேன். அவ்வண்ணமே இப்பொழுதும் சமாதியிலிருந்து தணிப்பேன்.

## அமுததாரணையே புசிப்பாமெனல்.

தெள்ளமுத தாரணையால் வேண்டுங்காலந்
தேகமுட னிருந்தப்பாற் றேகந்தீர்வே
னுள்ளநிறை யுணர்வுடையே னொன்றுங்கொல்லே
னுண்மையென வுரைத்தேக வுன்னுவாளைக்
கொள்ளரிய நட்பெளிதிற் கொண்டேம்நீயெங்
குலமகளா யெம்பதிக்குக் கூடவேகி
கள்ளருட லிரைதருது முடல்போமட்டுங்
கருதுமுதல் வாதனைகள் கழலாக்கண்டாய்.

(இ-ள்.) தெள் - தெளிவாகிய, அமுத தாரணையால்-அமுத தாரணையினால, வேண்டுங்காலம்-வேண்டியகாலமட்டும், தேகமுடனிருந்து-சீவன் முத்தியிலிருந்து, அப்பால் - அதற்குப்பின், தேகந்தீர்வேன்-விதேகமுத்தியடைவேன், உள்ளம் - அகத்தில், நிறையுணர்வுடையேன் - பூரணஞானத்தையுடையநான், ஒன்றுங்கொல்லேன் - ஒருயிரையும்வதையேன், உண்மையெனவுரைத்து - இது சத்தியமென்றுசொல்லி, ஏகவுன்னுவாளை - போகநினைப்பவளை, கொள்ளரியநட்பு - பெறுதற்கரிய விஷ்டத்தை, எளிதிற்கொண்டேம் - எளிதாகப்பெற்றேம், நீ யெங்குலமகளாய் - நீயெங்கள் குலப்பெண்ணாக, எம்பதிக்கு - எமதரண்மனைக்கு, கூடவேகில் - கூடவந்தால், கள்ளருடலிரைதருதும் - கொலைசெய்யுங் கள்வருடைய சரீரத்தை (யுணவாக) க் கொடுப்போம், உடல்போமட்டும்-(இத்) தேக நீங்குமளவும், கருதுமுதல் வாதனைகள் - நினைப்பு முதலாகிய வாதனைகள், கழலாக்கண்டாய் - நீங்காது—எ-று.

(இ-ரை.) தெளிவாகிய அமுத தாரணையினால் வேண்டியகாலமட்டும் சீவன் முத்தியிலிருந்து அதற்குப்பின் விதேகமுத்தியடைவேன் அகத்தில் பூரணஞானத்தை யுடைய நான் ஒருயிரையும் வதையேன். இது சத்தியமென்றுசொல்லி போகநினைப்பவளை பெறுதற்கரிய விஷ்டத்தை எளிதாகப்பெற்றேம். நீ யெங்கள் குலப்பெண்ணாக எமதரண்மனைக்குக் கூடவந்தால் கொலைசெய்யுங் கள்வருடைய சரீரத்தை யுணவாகக் கொடுப்போம். இத்தேக நீங்குமளவும் நினைப்பு முதலாகிய வாதனைகள் நீங்காது.

## மகான்களுக் கன்புசெய்தல்.

ஆதலினாற் பதகருட லிரையைக் கைக்கொண்
டரும்பசிபோய்ச் சமாதிதனை யடையிவ்வாறு
காதலுடன் பலகாலுஞ் செய்தியென்று
காவலன்கூறவுமறக்கி களிகூர்ந்தேகப்
போதகமன் னார்தமது நகரமேவிப்
பொன்மனைபுக் காரிரவி பொலியவந்தான்
பாதகர்மூ வாயிரரை யாறுநாளிற்
பார்த்திபனீந் தானரக்கி பற்றிக்கொண்டாள்.

(இ-ள்.) ஆதலினால் - ஆகையினால், பதகருடலிரையைக் கைக்கொண்டு - பாவிகளின் சரீரமென்னும் புசிப்பைக்கைக்கொண்டு, அரும்பசிபோய் - அரியயுதராக்கினிநீங்கி, சமாதிதனையடைய - நிஷ்டையிலிருப்பாய், இவ்வாறு - இவ்வண்ணம், காதலுடன் - அன்போடு, பலகாலுஞ்செய்தியென்று - எப்போது மியற்றுவாயென்று, காவலன்கூறவும் - அரசன் சொல்லவும், அரக்கி - இராக்ஷதி, களிகூர்ந்தேக - மகிழ்ந்துசெல்ல, போதகமன்னர் - சிங்கக்குட்டியையொத்த விராசமந்திரிகள், தமதுநகரமேவி- தமதுபட்டணம்போய், பொன்மனைபுக்கார் - சுவணமயமாகிய வரண்மனையையடைந்தார்கள், இரவிபொலியவந்தான் - சூரியனுதயமானான், பாதகர்மூவாயிரரை - மூவாயிரம்பாவிகளை, ஆறுநாளில்-ஆறுதினத்தில், பார்த்திபனீந்தான், அரசன்கொடுத்தான், அரக்கி - இராக்ஷதி, பற்றிக்கொண்டாள் - பெற்றுக்கொண்டாள்—எ-று.

(இ-ரை.) ஆகையினால் பாவிகளின் சரீரமென்னும்புசிப்பைக் கைக்கொண்டு அரிய யுதராக்கினிநீங்கி நிஷ்டையிலிருப்பாய். இவ்வண்ணம் அன்போடு எப்போது மியற்றுவாயென்று அரசன் சொல்லவும், இராக்ஷதி மகிழ்ந்துசொல்ல, சிங்கக்குட்டியையொத்த விராசமந்திரிகள் தமது பட்டணம்போய் சுவணமயமாகிய வரண்மனையை யடைந்தார்கள். சூரியனுதயமானான். மூவாயிரம் பாவிகளை ஆறுதினத்தில் அரசன்கொடுத்தான். இராக்ஷதி பெற்றுக்கொண்டாள்—என்பதாம். (௪௬)

## அன்பிற் பிரிவற்றிருத்தல்.

பூமகள்போ லங்கிருந்த வடிவைக்கங்குற்
போதிலொழித் தரக்கர்குலப் பூவையாகிப்
பாமரராம் பாதகரைத் தோண்மேற்கொண்டு
பார்த்திபனோ டமைச்சனுக்கும் பண்புகூறி

யேமமுறு மிமகிரியிற் சமாதிமேவ
வேகினு ளின்றளவு மிந்தவாறே
கோமகனு மரக்கியுநட் பானுரென்று
குரிசிலுக்கு வசிட்டமுனி கூறினுனல்.

(இ-ள்.) பூமகள்போல் - இலட்சுமியைப்போல, அங்கிருந்த வடிவை- அவ்வரண்மனையிலிருந்தபடிவத்தை, கங்குற்போதில்-இராத்திரியில், ஒழித்து-நீக்கி, அரக்கர்குலப்பூவையாகிய-இராக்ஷதியாகி, பாமரராம்பாதகரை- மூடரான கொலைக்காரரை, தோண்மேற்கொண்டு - புயத்தின்மேல்வைத்துக்கொண்டு, பார்த்திபனேடு - அரசனுடன், அமைச்சனுக்கும் - மந்திரிக்கும், பண்புகூறி - உபசாரங்களைச்சொல்லி, ஏமமுறு - கனகமயமான, இமகிரியில் - இமோர்ப்பருப்பதத்தில், சமாதிமேவ - நிஷ்டையிலிருக்க, ஏகினுள் - போயினுள், இன்றளவும் - இன்றையவரைக்கும், இந்தவாறே- இவ்வண்ணமே, கோமகனும் - அரசனும், அரக்கியும் - கற்கடியும், நட்பானுரென்று - சினேகமானுர்களென்று, குரிசிலுக்கு - இராமனுக்கு, வசிட்டமுனி - வசிட்டமுனியானவர், கூறினுன் - சொன்னுர்—எ-று.

(இ-தா.) இலட்சுமியைப்போல அவ்வரண்மனையிலிருந்தபடிவத்தை இராத்திரியில் நீக்கி இராக்ஷதியாகி மூடரான கொலைக்காரரை புயத்தின்மேல் வைத்துக்கொண்டு அரசனுடன் மந்திரிக்கும் உபசாரங்களைச் சொல்லி கனகமயமான இமோர்ப்பருப்பதத்தில் நிஷ்டையிலிருக்கப்போயினுள். இன்றையவரைக்கும் இவ்வண்ணமே அரசனும் கற்கடியும் சினேகமானுர்களென்று, இராமனுக்கு வசிட்டமுனியானவர் சொன்னுர்—என்பதாம்.

(இ-ரு-க்-ம்.) ஆப்தர்கள் பிராரத்த கன்மசேடத்துக்குள்ள வுபாதியைநீக்கி யன்பிற்கலந்திருந்தனராம். (௭௭)

கற்கடி கதை முற்றிற்று.

ஆக கதை ௬-க்கு கவிதை ௩௭௦.

# அயிந்தவர் கதை.

அவதாரிகை.

முன் பிரமப்ரகாசமே சீவன்முதலான சகலமுமென்பதைச்சொல்லி அது திடமாகும்பொருட் டத னுல்லாசமான மனதே சகமென்பதை யறிவிக்க வேண்டி அயிந்தவர் கதையைச்சொல்லுகிறார்.

### மனமே சகத்தென்பதற்குத் திருஷ்டாந்தமுரைத்தல்.

உரைசெயூசிகதையாலே யுண்மையாகிப்பரமான
கரையில்பிரமமேயுளதாங் காணப்படுவதொன்றில்லை
வரையில்சிருட்டிகளின்முதலாய்மனமேவிளங்குமிதுபொருட்டோர்
புரையில்கதைகேளெனவசிட்டன்புயன்மேனியற்குப்புகல்கின்றான்.

(இ-ள்.) உரைசெயூசிகதையால் - சொல்லியகற்கடி கதையினால், உண்மையாகிப்பரமான - தத்துவமாயுயர்ந்த, கரையில் பிரமமே - வசனாதீதமான பிரமஸ்வரூபமே, உளதாம் - உள்ளதாம், காணப்படுவதொன்றில்லை - திரிஸ்யவஸ்துவென்பதொன்றில்லை, வரையில் சிருஷ்டிகளில் - அளவற்ற சிருஷ்டிகளிலும், முதலாய் - காரணமாக, மனமேவிளங்கும் - மனதேப்ரகாசிக்கும், இதுபொருட்டு - இது (தெரிய)நிமித்தம், புரையில் - குற்றமற்ற, ஓர்கதைகேளென - ஒருகதையைக்கேளென்று, வசிட்டன் - வசிட்டமுனி, புயன்மேனியற்கு - இராமனுக்கு, புகல்கின்றான் - சொல்லுகின்றார்—எ-று.

(இ-கை.) சொல்லிய கற்கடிகதையினால் தத்துவமாயுயர்ந்த வசனாதீதமான பிரமஸ்வரூபமே உள்ளதாம். திரிஸ்ய வஸ்துவென்பதொன்றில்லை. அளவற்ற சிருஷ்டிகளிலும் காரணமாக மனதே ப்ரகாசிக்கும். இது தெரியநிமித்தம் குற்றமற்ற ஒரு கதையைக் கேளென்று வசிட்டமுனி இராமனுக்குச் சொல்லுகின்றார்.

### மனஞ்சகத்தென்றவதனாலதற்குக்காரணமான சிற்சத்தி வெளிப்படல்.

மேவுகதையாற்சிற்சத்தி விரிவேயுலகென்றறுதிவரும்
வாவுமனமாஞ்சிறுமகவு மடமையாலேவெறும்பொய்யே
தாவுசகப்பேய்வரக்காணுந் தனைப்போதிக்கிலறிந்திடர்போம்
பாவும்விகாரம்பலசேரிற் பவமாமவற்றைவிடல்வீடாம.

(இ-ள்.) மேவுகதையால் - பொருந்தியவிக்கதையினால், சிற்சத்திவிரிவே - ஞானசத்தியினுடையவிசாலமே, உலகென்றறுதிவரும் - சகமென்று (சொல்லப்பட்ட) நிச்சயமுண்டாம், வாவுமனமாஞ் சிறுமகவும் -

அவாவியெழாநின்ற மனமென்னுஞ்சிறுகுழந்தையும், மடமையால் - அறியாமையினால், வெறும்பொய் - முழுதுமித்தையாக, தாவுசகப்பேய்வரக் காணும் - உலகப்பிசாசம்வரப்பார்க்கும், தனைப்போதிக்கில் - அதனுருவத்தைத்தெரிவிக்கில், அறிந்து - (பிரமஸ்வரூபமா) யறிந்து, இடர்போம் - துன்பநீங்கும், பரவும்விகாரம்பல - தாவாநின்ற ராகத்துவேடாதிகளென்னு நாநாவிகாரங்களை, சேரில் - (மன) மடையின், பவமாம் - சநநமாம், அவற்றைவிடல் வீடாம் - அவ்விகாரங்களை நீக்கிவிடுதலே மோக்ஷமாம்.

(இ-ஸா.) பொருந்திய விக்கதையினால் ஞானசத்தியினுடைய விசாலமே சகமென்று சொல்லப்பட்ட நிச்சயமுண்டாம். அவாவியெழாநின்ற மனமென்னுஞ் சிறுகுழந்தையும் அறியாமையினால் முழுதுமித்தையாக உலகப்பிசாசம் வரப்பார்க்கும். அதனுருவத்தைத் தெரிவிக்கில் பிரமஸ்வரூபமாயறிந்து துன்பம் நீங்கும். தாவாநின்ற ராகத்துவேடாதிகளென்னு நாநாவிகாரங்களை மனமடையின் சநநமாம். அவ்விகாரங்களை நீக்கிவிடுதலே மோக்ஷமாம்-எ-ம்.

(இ-உ-க-ம்) சிற்சத்தியின் விருத்தியான மனோப்ராந்தியே திரிஸ்யமும் அதனிவிர்த்தியே திருக்குவுமாமென்பதாம். (உ)

## நூதன சிருஷ்டியைப்பார்த் ததிசயித்தல்.

ஒருகால்விரிஞ்சன்சிருட்டியெலா மொடுக்கியிரவிலுறங்கியபின்
வருகாலையின்மீண்டுல்களிப்பான் வானோக்குதலுமனத்தாலே
பெருகாநின்றவிண்ணிடையே பேதமானபலசிருட்டி
யருகாநின்றபடிகண்டா னார்செய்தனரென்றதிசயித்தான்.

(இ-ள்.) ஒருகால் - ஒருகாலத்தில், விரிஞ்சன் - பிரமதேவன், சிருட்டியெலாமொடுக்கி-சிருஷ்டிகளனைத்தையுமடக்கி, இரவிலுறங்கியபின் - இராத்திரியி னித்திரைசெய்தபின்பு, வருகாலையில் - வருகின்ற (வுதய) காலத்தில், மீண்டுலகளிப்பான் - திரும்பசகத்தைச்சிருஷ்டிப்பதற்கு, வானோக்குதலும் - ஆகாயத்தைப்பார்க்கவும், மனத்தால் - மனதினால், பெருகாநின்ற விண்ணிடை - விரியுமாகாயத்தில், பேதமானபலசிருட்டி- நாநாவித சிருஷ்டிகள், அருகாநின்றபடி கண்டான் - சமீபமானதைப் பார்த்தான், ஆர்செய்தனரென்று - யார்சிருஷ்டித்தா ரென்று, அதிசயித்தான் - வியப்புற்றான்—எ-று.

(இ-ஸா.) ஒருகாலத்தில் பிரமதேவன் சிருட்டிகளனைத்தையுமடக்கி இராத்திரியி னித்திரை செய்தபின்பு வருகின்றவுதயகாலத்தில் திரும்ப சகத்தைச் சிருஷ்டிப்பதற்கு ஆகாயத்தைப்பார்க்க

வும், மனதினால் விரியுமாகாயத்தில் நாநாவிதசிருஷ்டிகள் சமீபமானதைப் பார்த்தான். யார்சிருஷ்டித்தாரென்று வியப்புற்றான். ()

## சிருஷ்டியுண்டான காரணமுரைத்தல்.

அதிலோரிரவிவருகென்று யாரேயளித்தாரெனக்கேட்பக்
கதிரோன்வணங்கியுரைசெய்வான் கரைதீருலகின்காரணமாம்
விதியாநீயீதறிந்திலையேல் விளம்பக்கேட்பாய்வெண்கயிலைப்
பதியாகியநாவலந்தீவிற் பரப்பாமிடத்தோர்பக்கத்தில்.

(இ-ள்.) அதிலோர்ரிரவி - அதிலொரு சூரியனை, வருகென்று - வாவென் (றழைத்து), யாரளித்தார் - எவ (ருன்னையு மிந்தச் சகத்தையுஞ்) சிருஷ்டித்தவர், எனக்கேட்ப - என்றுகேட்க, கதிரோன்வணங்கி - சூரியனமஸ்கரித்து, உரைசெய்வான் - சொல்லுவான், கரைதீர் - முடிவில்லாத, உலகின் காரணமாம் - சகத்துக்குக்காரணமாகிய, விதியாநீ - பிரமாவாகிய நீர், ஈதறிந்திலையேல் - இதையறிய வில்லையாயின், விளம்பக்கேட்பாய் - சொல்லக்கேட்பாய், வெண்கயிலைப்பதியாகிய - வெள்ளியங்கிரியிடமாகிய, நாவலந்தீவில் - சம்புத்தீவில், பரப்பாமிடத்து - விரிந்தவிடத்தில், ஓர்பக்கத்தில் - ஓர்பாலில்—எ-று.

(இ-கை.) அதிலொரு சூரியனை வாவென்றழைத்து எவருன்னையு மிந்தச்சகத்தையுஞ் சிருஷ்டித்தவர் என்று கேட்க, சூரியன் நமஸ்கரித்துச்சொல்லுவான். முடிவில்லாத சகத்துக்குக் காரணமாகிய பிரமாவாகிய நீ இதை யறியவில்லையாயின் சொல்லக் கேட்பாய். வெள்ளியங்கிரி யிடமாகிய சம்புத்தீவில் விரிந்தவிடத்தில் ஓர்பாலில்—என்பதாம். (ச)

## தவத்துக்கேகல்.

சிறக்குஞ் சுவணசடமென்னுந் தேசமொன்றுன் மைந்தர்களா, லிறக்குஞ் சிருட்டி படைத்ததி னெடுங்காசிபன்றன்குலத்திடையே, பிறக்குமறையோ னிந்துவெனும் பெரியோன்மக்கட் பேறின்றிப், பறக்குங்கருத்தாற் றேவியொடும் பரமன்கயிலைப் பதிமேவி.

(இ-ள்.) சிறக்கும் - சிறப்புள்ள, சுவணசடமென்னும் - கனகசடமென்கின்ற, தேசமொன்று - ஒருநாடு, உன் மைந்தர்களால் - உனது புத்திரர்களால், லிறக்குஞ்சிருட்டி படைத்தது - சிறந்தசிருட்டியை பெற்றது, அதில் - அத்தேயத்தில், நெடுங்காசிபன் றன்குலத்திடை - பாரம்பரியமான காசிபனுடையவமிசத்தில், பிறக்குமறையோன் - உண்டானபிராமணன், இந்துவெனும்பெரியோன் - இந்துவென்னும் (பெயரினாற்) சிறந்த

வன், மக்கட்பேறின்றி - புத்திரசம்பத்தில்லாமல், பறக்குங்கருத்தால் - பரபரப்பானமனதினால், தேவியோடும் - நாயகியுடன், பரமன் - பரமேஸ்வரனுடைய, கயிலைப்பதிமேவி - கயிலாயமலைக்குப்போய்—எ-று.

(இ-ள்.) சிறப்புள்ள கனகசட மென்கின்ற ஒரு நாடு உனது புத்திரர்களால் சிறந்த சிருஷ்டியைப்பெற்றது. அத்தேயத்தில் பாரம்பரியமான காசிபனுடையவமிசத்தில் உண்டானபிராமணன் இந்துவென்னும் பெயரினாற் சிறந்தவன், புத்திரசம்பத்தில்லாமல் பரபரப்பான மனதினால் நாயகியுடன் பரமேஸ்வரனுடைய கயிலாயமலைக்குப்போய்—என்பதாம். (௫)

## தவத்தான் மகப்பேறுண்டாதல்.

தவமேற்கொண்டு பாதவம்போற் சலமேயருந்தி வருந்திடு நாட், சிவனுண்மகிழ்ந்து வேண்டியதென் செப்புமென்னச்சிரம்பணிந்து, கவலைதீரவீரைவர் கலைதேர்புதல்வர் வேண்டுமென, வவனங்களிப்ப விவர்களிப்போ டகன்றார்புதல்வ ரவதரித்தார்.

(இ-ள்.) தவமேற்கொண்டு - தவசைக்கொண்டு, பாதவம்போல் - விருட்சத்தைப்போல, சலமேயருந்தி - நீரையேபானஞ்செய்து, வருந்திடுநாள் - வருந்துகின்றகாலத்தில், சிவனுண்மகிழ்ந்து - பரமசிவன்மனமகிழ்ந்து (வந்து), வேண்டியதென் - (உமக்கு) வேண்டியதென்ன, செப்புமென்ன-சொல்லுமென்றுகேட்க, சிரம்பணிந்து-சிரசினால்வணங்கி,கவலைதீர-எங்களுடன்பந்தீரும்படி, ஈரைவர் - பதின்மர், கலைதேர்-கல்வியிற்றெளிந்த, புதல்வர்வேண்டுமென - புத்திரர்கள்வேண்டுமென்றுகேட்க, அவனங்களிப்ப - அவரவ்விடத்தி (லப்படியே) யருளிச்செய்ய, இவர் - இந்தஸ்திரீபுருடாள்,களிப்போடகன்றார் - மகிழ்ந்து வந்தார்கள், புதல்வ ரவதரித்தார் - புத்திரருதித்தார்—எ-று.

(இ-ள்.) தவசைக்கொண்டு விருட்சத்தைப்போல நீரையே பானஞ்செய்து வருந்துகின்றகாலத்தில், பரமசிவன் மனமகிழ்ந்து வந்து உமக்குவேண்டியதென்ன சொல்லுமென்றுகேட்க, சிரசினால் வணங்கி எங்களுடன்பந்தீரும்படி பதின்மர்கல்வியிற் றெளிந்தபுத்திரர்கள்வேண்டுமென்றுகேட்க, அவரவ்விடத்திலப்படியே யருளிச்செய்ய, இந்த ஸ்திரீபுருடாள் மகிழ்ந்து வந்தார்கள், புத்திரருதித்தார்—என்பதாம். (௬)

## உயர்வாராய்தல்.

மைந்தரொருபதுளராகி மறைநூனிறைந்துவளர்ந்ததற்பின்
றந்தைதாயரிறந்தேகத் தனயர்கைலைத்தலமெய்திச்
சிந்தைசெய்வார்நல்குரவு தீரவுயர்வன்னியராவோம்
மந்தநிலைசற்றுதலினு லதிகநிலைமன்னவராவோம்.

(இ-ள்.) மைந்தரொருபதுளராகி - பத்து புத்திரர்களுதயமாய், மறைநூனிறைந்து - வேதசாஸ்திராற்பியாசநிரம்பி, வளர்ந்ததற்பின் - வளர்ந்ததன்பின்பு, தந்தைதாயரிறந்தேக-மாதாபிதாக்கண்மறிக்க, தனயர் - புத்திரர்கள், கைலைத்தலமெய்தி - கைலாசமலையினிற்சென்று, சிந்தைசெய்வார் - விசாரிப்பார்கள், நல்குரவுதீர - (நமது) தரித்திரநீங்கும்படி, உயர்வன்னியராவோம் - மேலானசாமந்தர்களாவோம், அந்தநிலை சற்றுதலினுல் - அச்செல்வங்கொஞ்சமானபடியால், அதிக நிலை மன்னவராவோம் - பெருமையை யுடையவரசராவோம்—எ-று.

(இ-கா.) பத்துபுத்திரர்களுதயமாய் வேதசாஸ்திராற்பியாசநிரம்பி வளர்ந்ததன பின்பு, மாதாபிதாக்கண் மறிக்க புத்திரர்கள் கைலாச மலையினிற்சென்று விசாரிப்பார்கள். நமது தரித்திரநீங்கும்படி மேலானசாமந்தர்களாவோம். அச்செல்வங் கொஞ்சமான படியினுல் பெருமையை யுடையவரசராவோம்—என்பதாம். (எ)

## உயர்வைப் பரோக்ஷமாகத் தெளிதல்.

அதுவுஞ்சிறிதாம்புவியனைத்துக் கரசராவோமதுசற்று
நிதிதுன்னியவிந்திரராவோ நிகழ்த்துமதுவுநெடிதல்ல
பதுமஞ்செறியுமயனுதல் பழுதில்பதவியெனத்துணிந்தா
ருதிதமனத்துப்பதின்மருமொத் துயரும்பதுமாதனத்திருந்து.

(இ-ள்.) அதுவுஞ்சிறிதாம் - அதுவுமற்பமாம், புவியனைத்துக்கு - பூமிக்கெல்லாம், அரசராவோம் - சக்கரவர்த்தியாவோம், அதுசற்றும் - அதுவுமற்பமாம், நிதிதுன்னிய - (நவ) நிதிகணிறைந்த, இந்திரராவோம் - தேவேந்திரராவோம், நிகழ்த்துமிதுவும் - சொல்லியவிச்செல்வமும், நெடிதல்ல - பெரிதல்ல, பதுமஞ்செறியும் - தாமரைமலரிலெழுந்தருளிய, அயனுதல் - பிரமாவாகுதல், பழுதில் பதவியென - குற்றமற்றசெல்வமென்று, துணிந்தார் - நிச்சயித்தார்கள், உதிதமனத்து - தோன்றின மனதில், பதின்மருமொத்து - பத்துபேர்களுமொருமித்து, உயரும் - மேலாகிய, பதுமாதனத்திலிருந்து - பத்மாசனத்திலிருந்து—எ-று.

(இ-ள.) அதுவுமற்பமாம். பூமிக்கெல்லாம் சக்கரவர்த்தியாவோம் அதுவுமற்பமாம். நவநிதிகணிறைந்த தேவேந்திரராவோம். சொல்லிய விச்செல்வமும் பெரிதல்ல. தாமரைமலரி லெழுந்தருளியபிரமாவாகுதல். குற்றமற்றசெல்வமென்று நிச்சயித்தார்கள். தோன்றின் மனதில் பத்துபேர்களு மொருமித்து மேலாகிய பத்மாசனத்திலிருந்து—என்பதாம். (அ)

## உயர்வபரோக்ஷமாதல்.

பிரமனேமேசிருட்டியெலாம் பிறப்பதெம்பாலென்றுள்ளே
திரமதானமனத்தாலே சிந்தித்துடலிற்சிந்தையற
மரமதென்னவிருத்தலுமே வருநாட்பலபோய்மனோபாவ
முரமதாகியயனூ ரொருபதுலகமுளதான.

(இ-ள்.) நாமேபிரமன் - யாமேபிரமதேவன், சிருட்டியெலாம் - சிருட்டிகளியாவும், பிறப்பதெம்பாலென்று - உண்டாகுதனமதிடத்தென்று, உள்ளேதிரமதானமனத்தால் - அகத்திற் சலனமற்ற மனதினூல், சிந்தித்து - தியானித்து, உடலிற்சிந்தையற - தேகஸ்மரணமின்றி, மரமதென்ன - விருக்ஷத்தைப்போல, இருத்தலும் - இருக்கவும், வருநாட்பலபோய் - வருகின்றகாலங்க ளனேகமாச்சென்று, மனோபாவமுரமதாகி - மனோபாவனேமுதிர்ந்து, அயனூர் - (அப்பதின்மரும்) பிரமாவானூர்கள், ஒருபதுலகமுளதான - பத்துலகங்களுண்டாயின—எ-று.

(இ-னா.) யாமே பிரமதேவன். சிருட்டிக ளியாவும் உண்டாகுத னமதிடத்தென்று அகத்திற் சலனமற்ற மனதினூல் தியானித்து தேகஸ்மரணமின்றி விருக்ஷத்தைப்போலயிருக்கவும் வருகின்ற காலங்க ளனேகமாகச்சென்று மனோபாவனே முதிர்ந்து அப்பதின்மரும் பிரமாவானூர்கள், பத்துலகங்களுண்டாயின—எ-ம். (கூ)

## மனதேசகத்தென்பது திருஷ்டாந்தமாதல்.

மனவானகத்திலிவர்பத்து வகையிற்சிருட்டிதந்தனரா
லினமாமவற்றிலோரிரவி யானுமென்னுவேகினனூற்
கனமாமனத்தின்விரிவாலே காணுஞ்சகங்களுளவாமென்
றனவாகனத்தோன்மனத்தாலே யளித்தானிராமற்கருள்செய்தான்.

(இ-ள்.) மனவானகத்தில் - மனுகாயத்தில், இவர்பத்துவகையில் - இவர்கள் பத்துவிதமாக, சிருட்டிதந்தனர் - சிருட்டியைச் செய்தார்கள்,

இனமாமவற்றில் - கூட்டமாகிய வப்பத்துசிருஷ்டிகளில், யானும்-நானும், ஓரிரவி யென்னு - ஒரு சூரியனென்றுசொல்லி, எகினன் - போயினன், கனமாமனத்தின் - கனமாகிய மனதினது, விரிவால் - விசாலத்தினால், காணுஞ்சகங்கள் - பார்க்கப்பட்ட வுலகங்கள், உளவாமென்று - உள்ளனவாமென்று, அனவாகனத்தோன் - அன்னவாகனத்தையுடைய பிரமதேவன், மனத்தாலளித்தான் - மனதினற் சிருஷ்டித்தானென்று, இராமமற்கருள்செய்தான் - இராகவருக்கு வசிட்டரனுக்கிரகித்தார்—எ-று.

(இ-ள.) மனகாயத்தில் இவர்கள் பத்துவிதமாக சிருட்டியைச் செய்தார்கள். கூட்டமாகிய வப்பத்துசிருஷ்டிகளில் நானும் ஒரு சூரியனென்று சொல்லிப்போயினன். கனமாகிய மனதினது விசாலத்தினால் பார்க்கப்பட்ட வுலகங்கள் உள்ளனவாமென்று அன்னவாகத்தையுடைய பிரமதேவன் மனதினால் சிருஷ்டித்தானென்று, இராகவருக்கு வசிட்டரனுக்கிரகித்தார்—என்பதாம்.

(இ-அ-க-ம்.) மனோபாவமே சகத்தென்பதை யறிவித்ததாம். (௧0)

அயிந்தவர்கதை முற்றிற்று.

ஆக கதை-எ-க்கு-கவிதை - ௩௱அ௰.

# வஞ்சவிந்திரன் கதை.

### அவதாரிகை.

முன்சிற்சத்தி யுல்லாசமா யுண்டான மனோபாவமே சகமென்பதைத் திருஷ்டாந்தமாக வறிவித்து அக்காரணமான மனதைத் தவிர காரியமான தேகம் வேறின்றென்பதை பாகியேந்திரியவிபகாரத்தி லறிவிக்கு நிமித்தம் விடயா நந்தானுபவமுள்ள வஞ்சவிந்திரன்கதையை நிரூபிக்கின்றார்.

## மனோவிலாச நிரூபணம்.

மொருவில்சகத்தை யளிப்போனும் புருடன்றானும் புகன் மனமே, கருதுமனத்தின் செயல்செயலாங் காயச்செயல்கள் செயலன்றாம், பருதியுரைசெய் புதுமறையோர் பதுமாதனராய்ப் பார்படைத்தார், பெருமாமனத்தி னுபர்சத்து பிறராலறிதற் கெளிதாமோ.

(இ-ள்.) பொருவில் - ஒப்பில்லாத, சகத்தையளிப்போனும் - உலகங்களைச் சிருஷ்டிப்பவனும், புருடன்றானும் - ஆத்மாவும், புகன்மனமே-சொல்லப்பட்டமனதேயாம், கருதுமனத்தின் - நினைக்கின்றமனதினது, செயல்செயலாம் - தொழிலேதொழிலாகும், காயச்செயல்கள் - தேகத்தின்றொழில்கள், செயலன்றாம்-தொழில்களல்லவாம், பருதியுரைசெய் - சூரியன்சொன்ன, புதுமறையோர் - நூதனமாகிய பிராமணர்கள், பதுமாதனராய் - பதுமாசனத்தையுடைய பிரமதேவர்களாய், பார்படைத்தார் - பூமியைச் சிருஷ்டித்தார்கள், பெருமாமனத்தின் - மகா மனதினுடைய, உயர்சத்தி - மேலானசத்தியை, பிறராலறிதற்கு - வேறொருவரா லறிவதற்கு, எளிதாமோ - இலேசாகுமோ—எ-று.

(இ-ரை.) ஒப்பில்லாத உலகங்களைச் சிருஷ்டிப்பவனும், ஆத்மாவும் சொல்லப்பட்டமனதேயாம். நினைக்கின்றமனதினது தொழிலே தொழிலாகும். தேகத்தின்றொழில்கள் தொழில்களல்லவாம். சூரியன் சொன்ன நூதனமாகிய பிராமணர்கள் பதுமாசனத்தையுடைய பிரமதேவர்களாய் பூமியைச் சிருஷ்டித்தார்கள். மகாமனதினுடைய மேலானசத்தியை வேறொருவராலறிவதற்கு இலேசாகுமோ—என்பதாம். (க)

---

### பிரமாநந்தானுபவித்து விடயாநந்தரனுபவ மின்றேனல்.

உள்ளமுடலைப்பாவிக்க வுடலாயதனு லுள்ளயரும்
வெள்ளஞானத்தவருள்ளே மேவாநின்றபாவனையாற்
பொள்ளவுடலினலந்தீது புந்திசெய்யார்புராதனநாட்
கள்ளவினைசெய்யகலிகையுங் கரவிந்திரனுமிதற்கொப்பாம்

(இ-ள்.) உள்ளம் - மனது, உடலைப்பாவிக்க - சரீரத்தைப்பாவனைசெய்ய, உடலாய் - சரீரமாய், அதனுல்-அச்சரீரத்தினுல், உள்ளயரும் - மனம் வருந்தும், வெள்ளஞானத்தவர் - பூரணஞானிகள், மேவாநின்ற - (அகத்திற்) பொருந்துகின்ற, பாவனையால் - பிரமபாவனையினுல், பொள்ளவுடலில் - நவத்துவாரமுள்ள சரீரத்தில, நலந்தீது புந்திசெய்யார் - நன்மை தீமைகளை யறியார்கள், புராதனநாள் - முன்னுளில், கள்ளவினைசெய் - சோரத்தொழில்செய்த, அகலியும் - அகலிகையென்பவளும், கரவிந்திரனும் - சோரவிந்திரனும், இதற்கொப்பாம் - இவ்வருத்தத்துக் கொப்பாவார்கள்—எ-று.

(இ-ரை.) மனது சரீரத்தைப் பாவனைசெய்ய சரீரமாய் அச்சரீரத்தினுல் மனம் வருந்தும், பூரணஞானிகள் அகத்திற்பொருந்துகின்ற பிரமபாவனையினுல் நவத்துவாரமுள்ள சரீரத்தில் நன்மைதீமைகளை யறிவார்கள். முன்னுளில் சோரத் தொழில்செய்த

அகலிகை யென்பவளும் சோரவிந்திரனும் இவ்வருத்தத்துக் கொப்பாவார்கள்—என்பதாம். (உ)

(இ-உ-க-ம்.) மனதைத்தவிர சரீரத்துக்கோர் சுகதுக்கமில்லையென்பதாம்.

## திருஷ்டாந்த மறிவித்தல்.

என்னவிவர்களாரென்று விராமன்கேட்பமுனிசொல்வான்
முன்னர்மகதநாடுடையோன் மொழிவிந்திரத்துயம்மனென்றோர்
மன்னனவனுக்குயிர்போல மகிழுந்தேவியகலிகையாஞ்
சொன்னநகரிலொருவனுளன் றூர்த்தனவன்பேரிந்திரனும்.

(இ-ள்.) என்ன- (இப்படி) யென்று வசிட்டர்சொல்ல, இவர்களாரென்ன - இவர்களாரென்று, இராமன்கேட்ப - இராகவன்கேட்க, முனிசொல்வான் - வசிட்டமுனிசொல்லுவார், முன்னர் - முன்னாளில், மகதநாடுடையோன் - மகததேசத்தை யுடையவன், மொழி-சொல்லப்பட்ட, இந்திரத்து யம்மனென்று - இந்திரத்து யம்மனென்றும் பெயரையுடைய, ஓர்மன்னன் - ஓரரசனும், அவனுக்குயிர்போல - அவனுக்குப்பிராணனைப்போல, மகிழுந்தேவி - (கூடிக்) களிக்குமனைவி, அகலிகையாம்-அகலிகையென்னும் பெயரையுடையவளாம், சொன்னநகரில் - முன்சொல்லிய பட்டணத்தில், ஒருவனுளன் - ஒருவனுண்டு, தூர்த்தன் - விடன், அவன் பேரிந்திரனும் - அவனுமமிந்திரனாகும்—எ-று.

(இ-ரை.) இப்படியென்று வசிட்டர் சொல்ல இவர்களாரென்று இராகவன்கேட்க, வசிட்டமுனி சொல்லுவார். முன்னாளில் மகததேசத்தை யுடையவன். சொல்லப்பட்ட இந்திரத்துயம்மனென்றும் பெயரையுடைய ஓரரசனும். அவனுக்குப்பிராணனைப் போல கூடிக்களிக்குமனைவி அகலிகையென்னும் பெயரை யுடையவளாம். முன்சொல்லியபட்டணத்தில் ஒருவனுண்டு விடன், அவனுமமிந்திரனாகும்—என்பதாம். (ங)

## இருதலைக்காமமுமொத் தேகமாதல்.

அன்னாளந்தவகலிகையு மவ்விந்திரனுஞ்செறிகதைகேட்
டின்னாளிந்தவகலிகையு மிவ்விந்திரனையினிதணைந்தா
டென்னாட்பிரிந்தோர்கூட்டமெனத் தூர்த்தசூடாமணியுடனே
சின்னாண்மகிழ்ந்தொன்றுமளவிற்செங்கோலரசன்செவிப்படுத்தார்.

(இ-ள்.) அன்னாள்-அக்காலத்தில், அந்தவகலிகையும் - அவ்வகலிகையும், அவ்விந்திரனும் - அப்புரந்தரனும், செறிகதைகேட்டு - புணர்ந்தகதையைக்கேட்டு, இன்னாள் - இந்த நாளில், இந்த வகலிகையும் - இவ் (வரசி

யென்னு) மகலிகையும், இவ்விந்திரனை - இத்(தூர்த்த) விந்திரனை, இனித ணைந்தாள் - இனிமையாகக்கூடினாள், தொன்னாள் - நெடுங்காலம், பிரிந் தோர்கூட்டமென - நீங்கினவர் கூடுங் கூட்டத்தைப்போல, தூர்த்த சூடாமணியுடன் - விடசிரேஷ்டனுடன், சின்னாண்மகிழ்ந்து - சிலநாட்க ளித்து, ஒன்றுமளவில் - ஏகமாயிருக்குங்காலத்தில், செங்கோலரசன் - நீ தியையுடைய வரசனது, செவிப்படுத்தார் - அறிவித்தாகள்—எ-று.

(இ-ரை.) அக்காலத்தில் அவ்வகலிகையும், அப்புரந்தரனும், புணர்ந்தகதையைக்கேட்டு இந்தநாளில் இவ்வரசியென்னு மகலி கையும் இத் தூர்த்தவிந்திரனை இனிமையாகக் கூடினாள். நெடுங்கா லம் நீங்கினவர்கூடுங் கூட்டத்தைப்போல விடசிரேஷ்டனுடன் சில நாட்களித்து ஏகமாயிருக்குங் காலத்தில் நீதியையுடைய வரசனது அறிவித்தார்கள்—என்பதாம். (ச)

---

சிற்றின்பத்தைப் பிரியாதிருத்தலின் முன்பந்தோன்றமை.

கேட்டவேந்தன்மிகமுனிந்து கிளருநீரிலமிழ்வித்துங்
கோட்டுமதமாவெதிரிட்டுங் கொடுந்தீக்கொழுந்திற்குளிர்ப்பித்தும்
வாட்டுங்கசையான்மோதிவித்தும் வருத்தஞ்செய்யவருந்தாம
னாட்டமெதிர்பார்த்துளமொன்றிநகைசெய்திருந்தார்நலிவுணரார்.

(இ-ள்.) கேட்டவேந்தன் - கேள்விப்பட்டவரசன், மிகமுனிந்து - மிகவுங்கோபித்து, கிளருநீரிலமிழ்வித்தும் - மிகுந்தசலத்திலமிழ்த்தியும், கோடு - தந்தங்களையுடைய, மதமாவெதிரிட்டும் - மதயானையை நேரே விட்டிடறவித்தும், கொடுந்தீக்கொழுந்திற்குளிர்ப்பித்தும் - கொடியவக் கினிச்சுவாலையின் முழுகச்செய்வித்தும், வாட்டும் - வருத்தாநின்ற, கசை யான்மோதிவித்தும் - குதிரைச்சம்மட்டிகளாலடிக்கச்செய்தும், வருத்த ஞ்செய்ய - (இப்படிபல) வருத்தங்களைச்செய்ய, வருந்தாமல் - வருத்தப்ப டாமல், நாட்டமெதிர்பார்த்து - (இருவர்) கண்ணுமொன்றுக்கொன்றெ திர்பார்த்து, உளமொன்றி - மனமொன்றாய், நலிவுணரார் - வருத்தமறி யாதவர்களாய், நகைசெய்திருந்தார் - நகைத்துக்கொண்டிருந்தார்கள்.

(இ-ரை.) கேள்விப்பட்ட வரசன் மிகவுங்கோபித்து மிகுந்த சலத்திலமிழ்த்தியும் தந்தங்களையுடைய மதயானையை நேரேவிட் டிடறவித்தும், கொடியவக்கினிச்சுவாலையின்முழுகச்செய்வித்தும், வருத்தாநின்ற குதிரைச்சம்மட்டிகளாலடிக்கச்செய்தும், இப்படி பல வருத்தங்களைச்செய்ய வருத்தப்படாமல் இருவர்கண்ணு மொன்றுக்கொன் றெதிர்பார்த்து மனமொன்றாய் வருத்தமறியா தவர்களாய்நகைத்துக்கொண்டிருந்தார்கள்—என்பதாம். (ரு)

## விடயானுபவ முரைத்தல்.

அரசனோக்கி மிகவியப்புற் றறவும்வருத்த வருந்தாவா,
றுரைசெய்திடுமி னென்றலுமே யுள்ளங்களிப்பா ருரைசெய்வார்,
வரைசெய்புயத்தா யெங்கண்முக மதியினமுதம் விழியருந்தக்,
கரைசெய்வரிய களிப்பான்மெய் காணேம்வருத்தங்காண்போ
மோ.

(இ-ள்.) அரசனோக்கி - இராசன்பார்த்து, மிகவியப்புற்று - மிகவு மதிசயித்து, அரவும்வருத்த - மிகவுந்துன்பப்படுத்த, வருந்தாவாறு - துன்பப்படாதவிதத்தை, உரை செய்திடுமி னென்றலும் - சொல்லுங்களென்று கேட்கவும், உள்ளங்களிப்பார் - மனமகிழ்ச்சியையுடைய விருவரும், உரை செய்வார் - சொல்லுவார்கள், வரைசெய் புயத்தாய் - மலைபோன்ற தோள்களை யுடையோனே, எங்கண் முகமதியினமுதம் - எங்கள் வதனமாகிய சந்திராமுதத்தை, விழியருந்த - கண்கள்புசிக்க, கரைசெய்வரிய - தடைசெய்யக்கூடாத, களிப்பால் - மகிழ்ச்சியினால், மெய்காணேம் - உடலையே காணதயாம், வருத்தங் காண்போமோ - வருத்தங்களைப் பார்ப்போமோ—எ-று.

(இ-ளா.) இராசன்பார்த்து மிகவு மதிசயித்து மிகவுந்துன்பப்படுத்த துன்பப்படாதவிதத்தைசொல்லுங்களென்றுகேட்கவும், மனமகிழ்ச்சியையுடைய விருவரும் சொல்லுவார்கள். மலைபோன்ற தோள்களை யுடையோனே, எங்கள் வதனமாகிய சந்திராமுதத்தை கண்கள்புசிக்க தடைசெய்யக்கூடாதமகிழ்ச்சியினால் உடலையே காணதயாம் வருத்தங்களைப் பார்ப்போமோ—என்பதாம்.

## மனவுறுதியின் பெருமையை யறிவித்தல்.

அரிந்தபொழுது முடற்றுன்பமறியேமொன் றிலன்பாகிப், புரிந்துபற்றுமனத்தினுடல் பொன்றவரினுந் துயர்தோன்றுத், தெரிந்தபொருளின் மனமழுந்துந் தேகத்தொழில்வே றெவர்காண்பார், விரிந்தமுனிவர் சாபமும்பல் வினையுமதனை மீட்பரிதாம்.

(இ-ள்.) அரிந்தபொழுதும் - அறுத்தகாலத்திலும், உடற்றுன்பமறியேம் - சரீரவருத்தமறிந்திலம், ஒன்றிலன்பாகிப்புரிந்து - ஒன்றிற்பிரியமாய், பற்றுமனத்தின் - பிடிக்கின்றமனத்தினுக்கு, உடல்பொன்றவரினும் - சரீர நசிக்கவந்தாலும், துயர்தோன்றுது - துன்பந்தோன்றுது, தெரிந்த பொருளில் - தெரிந்தவஸ்துவில், மனமழுந்தின் - மனமுழுகினால், தேகத்தொழில் - சரீரத்தினது செயலை, வேறெவர்காண்பார் - வே

றேயாவர் பார்ப்பார்கள், விரிந்தமுனிவர் சாபமும் - வியாபித்த முனிவர்கள் சாபமும், பல்வினையும் - பலகன்மங்களும், அதனை மீட்பரிதாம் - அதைத் திருப்பக்கூடாது—எ-று.

(இ-ள்.) அறுத்தகாலத்திலும் சரீரவருத்த மறிந்திலம். ஒன்றிற்பிரியமாய் பிடிக்கின்ற மனதினுக்கு சரீர நசிக்க வந்தாலும் துன்பந்தோன்றாது. தெரிந்த வஸ்துவில் மனமுழுகினால் சரீரத்தினது செயலை வேறேயாவர் பார்ப்பார்கள். வியாபித்தமுனிவர்கள் சாபமும் பலகன்மங்களும் அதைத் திருப்பக்கூடாது—என்பதாம்.

## மனதின்விசால மறிவித்தல்.

மாண்டுவாளா போனவுடன் மட்டொன்றில்லை யவையெல்லாந், தாண்டுமனத்தா லுண்டாகுஞ் சலத்தாலன்றிக்காடுண்டோ, தூண்டுமனமே முதல்வடிவாய்த் தூலவுடலம்போனாலும், வேண்டுமுடல்கள் விரைந்தெடுக்கும் விரியுங்கனவிற்செயல்போல.

(இ-ள்.) மாண்டு - இறந்து, வாளாபோனவுடல் - வீணாகக்கழிந்த சரீரம், மட்டொன்றில்லை - ஓரளவில்லை, அவையெல்லாம் - அச்சரீரங்களியாவும், தாண்டுமனத்தா லுண்டாகும் - தாவாநின்ற மனதினாற்றோற்றும், சலத்தாலன்றிக்காடுண்டோ - நீரையன்றி வனமுண்டோ, தூண்டு மனமே (சகலத்தையு) நடத்தாநின்ற மனதே, முதல்வடிவாம் - முதன்மையான சரீரமாம், தூலவுடலம்போனாலும் (இத்) தூலசரீர நீங்கினாலும், வேண்டுமுடல்கள் - இச்சிக்கின்ற சரீரங்களை, விரியுங்கனவிற்செயல்போல - விரிகின்ற சொற்பனத்திற்றோன்றுந் தொழிலைப்போல, விரைந்தெடுக்கும் - வேகமாயெடுக்கும்—எ-று.

(இ-ள்.) இறந்து வீணாகக் கழிந்த சரீரம் ஓரளவில்லை. அச்சரீரங்களியாவும் தாவாநின்ற மனதினாற்றோன்றும். நீரையன்றி வனமுண்டோ? சகலத்தையு நடத்தாநின்ற மனதேமுதன்மையான சரீரமாம். இத்தூலசரீர நீங்கினாலும் இச்சிக்கின்ற சரீரங்களை விரிகின்ற சொற்பனத்திற்றோன்றுந் தொழிலைப்போல வேகமாயெடுக்கும்—என்பதாம். (அ)

இதுவுமது.

இந்தமனமேயொடுங்கிலுட லேதுமறியாதெனக்கேட்ட
வந்தநிருபன்பரதனெனு மருகின்முனியைமுகநோக்கிச்
சிந்தைமயலுற்றிருந்துமிவர் சிற்பாவனைசெப்பினரென்று
புந்திமகிழ்ந்துபுறநாட்டிற் போமென்றவரைப்போக்கினனால்.

(இ-ள்.) இந்தமனமே யொடுங்கில் - இம்மனமாத்திர மடங்கினால், உடலேதுமறியாதென - சரீரமொன்றையு மறியமாட்டாதென்று (தூர்த்தாள்சொல்ல), கேட்டவந்தநிருபன் - கேட்டவவ்வரசன், பரதனெனும்- பரதனென்கின்ற, அருகின்முனியை - பக்கத்திலிருக்கின்ற முனிவரனை, முகநோக்கி - வதனத்தைப்பார்த்து, சிந்தைமயலுற்றிருந்தும் - சித்தத்திற்காமமயக்க மடைந்திருந்தும், இவர்சிற்பாவனை - இவர்கள்ஞானபாவனையை, செப்பினரென்று - சொன்னார்களென்று, புந்திமகிழ்ந்து - மனமகிழ்ந்து, புறநாட்டிற்போமென்று - பரதேயத்திற்போங்களென்று, அவரைப்போக்கினன் - அவர்களைத் துரத்திவிட்டான்—எ-று.

(இ-கை.) இம்மனமாத்திரமடங்கினால் சரீரமொன்றையுமறியமாட்டாதென்று தூர்த்தாள் சொல்ல, கேட்ட வவ்வரசன் பரதனென்கின்ற பக்கத்திலிருக்கின்றமுனிவரனை வதனத்தைப்பார்த்து சித்தத்திற்காமமயக்கமடைந்திருந்தும் இவர்கள் ஞானபாவனையைச் சொன்னார்களென்று மனமகிழ்ந்து பரதேயத்திற்போங்களென்று அவர்களைத் துரத்திவிட்டான்—என்பதாம்.

(இ-எ-க-ம்.) பிரமாநந்தானுபவமுள்ள மனது விபகாரங்களிலு மவ்வனுபவமாயிருப்பதேயன்றிப் பேதிக்கமாட்டாதென்பதாம். (௧)

வஞ்சவிந்திரன்கதை முற்றிற்று.

ஆக கதை அ-க்கு கவிதை - ௩௱௮௧.

# மனத்தின் கதை.

அவதாரிகை.

முன்னகத்திற் சுகதுக்கவிருத்திரூபமானமனமே புறம்பிலிருப்பதெனக் காட்டி அம்மன மகமுகப்படிற்சித்தாகவும், வெகுற்முகப்படிற் சத்தாகவுமிருப்பதை யறிவிக்கும்பொருட் டதனுருவத்தை நிரூபிக்கிறார்.

உயிர்களின் மூலசூக்ஷுமதேகத்தின் குணங்களை யறிவித்தல்.

வேறு.

இந்தக்கதையைவிளையாட்டென்னவிசைத்தேமெவர்க்கு
மந்தத்தமதாமுடலொன்றயலாமுடலொன்றவற்றிற்
சிந்தைச்சரீரம்விரைவிற்செயல்களெல்லாஞ்செய்து
தொந்தித்தலையுமற்றதூலவுடலொன்றறியா.

(இ-ள்.) இந்தக்கதையை - (பிரமாநந்தத்தைக் குறிப்பாலுணர்த்து) மிவ்வஞ்சவிந்திரன் கதையை, விளையாட்டென்ன - (விடயாநந்தமனுபவிக்கும்)லீலையாக, இசைத்தேம் - சொன்னோம், எவர்க்கும் - இயாவருக்கும், அந்தத்தமதாமுடலொன்று - அம்மனதிற்குரிய சூட்சும சரீரமொன்றும், அயலாமுடலொன்று வேறான தூல சரீரமொன்றும், அவற்றில் - அவ்விரண்டில், சிந்தைச்சரீரம் - மனோசரீரமானது, விரைவில் - சீக்கிரத்தில், செயல்களெல்லாஞ்செய்து - தொழில்களனைத்தையுஞ்செய்து, தொந்தித்தலையும் - (அதிற்)றொந்தமாய்ச்சஞ்சலிக்கும், மற்றதூலவுடல் - மற்றதூல சரீரமானது, ஒன்றறியா - ஒன்றையுமறியமாட்டாது—எ-று.

(இ-ா.) பிரமாநந்தத்தைக் குறிப்பா லுணர்த்து மிவ்வஞ்சவிந்திரன்கதையை விடையானந்தமனுபவிக்கும் லீலையாகச்சொன்னோம். இயாவருக்கும் அம்மனதிற்குரிய சூட்சும சரீரமொன்றும். வேறான தூலசரீரமொன்றும். அவ்விரண்டில் மனோசரீரமானது சீக்கிரத்தில் தொழில்களனைத்தையுஞ்செய்து அதிற்றொந்தமாய்ச் சஞ்சலிக்கும் மற்றதூலசரீரமானதுஒன்றையு மறியமாட்டாது. ()

## அவற்றின் மனோசரீரத்தின் குணங்களை விசாரித்தல்.

என்றான்வசிட்டனவனையிந்தச்சடமாமனத்துக்
கொன்றுவடிவமிலதாமுள்ளபடிவைவிரித்து
நன்றாயுரைப்பாயென்றுஞானகுருசில்கேட்ப
பொன்றாவிதிசொற்படியேபோதமுனிவன்புகல்வான்.

(இ-ள்.) என்றான் வசிட்டனவனை - இப்படியென்று சொன்ன வசிட்டமுனியை, சடமாம் - சடமாகவும், ஒன்று பொருந்தி (யிருக்கின்ற) வடிவமிலதாம் - ஸ்வரூபமில்லாததாகவு மிருக்கின்ற, இந்த மனத்துக்குள்ளபடிவை விரித்து - இந்தமனத்துக்குரிய வுருவத்தைவிரித்து, நன்றாயுரைப்பாயென்று நன்றாகச்சொல்லுமென்று, ஞானகுருசில்கேட்ப - அறிவுள்ள விராமன்கேட்க, பொன்றாவிதிசொற்படியே - அழியாத பிரமன் வாக்கியப்படியே, போதமுனிவன் புகல்வான் - ஞானஸ்வரூபியான வசிட்டமுனிசொல்லுவார்—எ-று.

(இ-ா.) இப்படியென்று சொன்ன வசிட்டமுனியைச்சடமாகவும் பொருந்திய ஸ்வரூபமில்லாததாகவு மிருக்கின்ற இந்தமனத்துக்குரிய வுருவத்தை விரித்து நன்றாகச்சொல்லுமென்று அறிவுள்ள விராமன்கேட்க, அழியாத பிரமன் வாக்கியப்படியே ஞானஸ்வரூபியான வசிட்டமுனி சொல்லுவார்—என்பதாம். (௨)

## அம்மனதினுருவத்தைப் பகுத்துக்கூறுதல்.

அகிலசத்தியுடைத்தாயநந்தமானபரமம்
புகல்சங்கற்பத்தோடேபொருந்தும்வடிவேமனமா
மிகலுஞ்சத்தோடசத்தாயிரண்டினுள்ளுந்தோன்றிப்
பகருந்தொழில்களோடேபயில்பாவனையுமஃதே.

(இ-ள்.) அகிலசத்தியுடைத்தாய் - சகல சத்திகளுமுடையதாய், அநந்தமானபரமம் - முடிவற்றிருக்கின்ற வாத்மாவானது, புகல் சங்கற்பத்தோடு - சொல்லப்பட்ட சங்கற்பத்துடன், பொருந்தும் - கூடுகின்ற, வடிவேமனமாம் - உருவமேமனமாகும், இகலும் - வலியுள்ள, சத்தோடசத்தாம் - சத்துமசத்துமாகிய, இரண்டினுள்ளுந்தோன்றி - இரண்டின் மத்தியிலு முண்டாகி, பகருந்தொழில்களோடும் - சொல்லப்பட்ட செயல்களோடும், பயில்பாவனையுமஃது - பழகும்பாவனையு மந்தமனதினுருவமே.

(இ-மை.) சகலசத்திகளுமுடையதாய்முடிவற்றிருக்கின்றவாத்மாவானது சொல்லப்பட்ட சங்கற்பத்துடன் கூடுகின்றஉருவமே மனமாகும். வலியுள்ள சத்துமசத்துமாகிய இரண்டின் மத்தியிலுமுண்டாகிசொல்லப்பட்ட செயல்களோடும் பழகும்பாவனையுமந்த மனதினுருவமே—என்பதாம்.

(இ-௩-க-ம்.) பிரமஸ்புரணமேமனமாம். அஃது சடாசடங்களிற்றோற்றியதையேபாவித் ததன்மயமாயிருக்கின்றதாம். (௩)

### அம்மனதைச் சித்திற்சேர்க்க திருஷ்டாந்தமுரைத்தல்.

எங்கேயெனினுந்தோன்றுமிந்தமனதைமுத்திச்
சங்கேதத்தாலூகந்தன்னிற்கூட்டினன்றும்
பங்கேருகனோதியதோர்பழையகதைநீகேட்பாய்
வெங்கேதமமுமச்சமுமாய்வெறும்பொய்யாமோர்வனமே.

(இ-ள்.) எங்கேயெனினும் - எவ்விடத் (துண்டா) யினு (முண்டாகட்டும்), தோன்றுமெனினும் - (எந்தவுருவமாகத்) தோற்றினுலுந் (தோறட்டும்) , இந்தமனதை-இப்படிப்பட்டமனதை, முத்திச்சங்கேதம் - மோக்ஷமடையுங் குறிப்பில், ஊகம் - உபாயங்களிலும், தன்னில் - ஆத்மாவிலும், கூட்டினன்றும்-சேர்க்கினன்மையாம், பங்கேருகனோதியது - பிரமதேவன்சொன்னதாகிய, ஒர்பழைய கதை நீகேட்பாய் - ஒரு புராதனமானகதையை நீகேள், வெங்கேதமும் - கொடியதுன்பமும், அச்சமுமாய் - பயங்கரமுமாயிருக்கின்ற, வெறும்பொய்யாம் - முழுதுமித்னதயாகிய, ஓர் வனம் - ஓர் காடுள்ளதாம்—எ-று.

(இ-ஙா.) எவ்விடத்துண்டாயினு முண்டாகட்டும். எந்தவுருவமாகத் தோற்றினுலுந் தோற்றட்டும். இப்படிப்பட்டமனதை மோக்ஷமடையுங்குறிப்பில் உபாயங்களிலும் ஆத்மாவிலும் சேர்க்கி னன்மையாம். பிரமதேவன்சொன்னதாகிய ஓர் புராதனமான கதையைநீகேள். கொடியதுன்பமும்பயங்கரமுமாயிருக்கின்றமுழுதுமித்தையாகிய ஓர் காடுள்ளதாம்—என்பதாம். (ச)

(இதுவுமது.)

அதினோர்கோடிநீளமநந்தகோடிகாத
மிதிலோர்புருடன்கண்கையெண்ணிலாததுடையோன்
சிதறுநின்றநினைவோன்சேணுயகன்றவடிவோன்
பதறுநின்றகணையம்பலவுங்கரத்தாற்பற்றி.

(இ-ள்.) அதின் - அவ்வனத்தினது, ஓர் கோடிநீளம் - ஒருகடைப்புறத்தினளவு, அநந்தகோடிகாதம் - அளவற்ற காவதமாம், இதில் - இவ்வனத்தில், ஓர்புருடன் - ஒருபுமான், கண்கை - நேத்திரவத்தங்கள், எண்ணிலாத துடையோன் - அளவில்லாததையுடையவன், சிதறுநின்ற நினைவோன் - (பலவாகச்) சிதறுகின்ற கருத்துடையவன், சேணுயகன்ற வடிவோன் - ஆகாயம்போன்ற விரிந்தவுருவமுள்ளவன், பதறுநின்ற கருணையம்பலவும் - விரைவிற்செல்கின்ற வளைதடிகளநேகங்களையும், கரத்தாற்பற்றி - கைகளிற்றரித்துக்கொண்டு—எ-று.

(இ-ஙா.) அவ்வனத்தினது ஒருகடைப்புறத்தினளவுஅளவற்றகாவதமாம் இவ்வனத்தில் ஒரு பூமான் நேத்திரவத்தங்கள் அளவில்லாததையுடையவன். பலவாகச்சிதறுகின்ற கருத்துடையவன் ஆகாயம்போன்ற விரிந்தவுருவமுள்ளவன். விரைவிற் செல்கின்ற வளைதடிக ளநேகங்களையும் கைகளிற்றரித்துக்கொண்டு—எ-ம். ( )

இதுவுமது.

தனைத்தான்சிதறமோசித்தகர்ந்தேயுலறியலறி
யனைத்தாந்திசையுமோடியவசமாகியடிபட்
டெனைத்தாமுறுப்புந்தூளாயிருளாய்நடுக்கமிகுந்த
வினைத்தாழ்வுறுபாழ்ங்கிணற்றில் வீழ்ந்துநெடுநாண்மெலியும்.

(இ-ள்.) தனைத்தான் சிதறமோதி - தன்னைத்தானே சிதறும்படியடித்து, தகர்ந்து - ஒடித்து, உலறியலறி - வெருண்டுகதறிக்கொண்டு, அனைத்தாந்திசையுமோடி - எல்லாத்திக்குகளிலுமோடி, அவசமாகி-வசந்தப்பி, அடிபட்டு - (சகலத்திலுந்) தாக்கி, எனைத்தா முறுப்புந்தூளாய் - சகலவவையவங்களுந்துகளாய், இருளாய் நடுக்கமிகுந்த - அந்தகாரமாகி பயமதிகரித்திருக்கின்ற, வினைத்தாழ்வுறு பாழ்ங்கிணற்றில் - தீவினையாகிய வாழமுள்ள பாழுங்கிணற்றில், வீழ்ந்து நெடுநாண்மெலியும் - விழுந்து வெகுகாலம் மெலிவான்—எ-று.

(இ-ள.) தன்னைத்தானே சிதறும்படி யடித்து ஒடித்துவெகுண்டுகதறிக்கொண்டு எல்லாத்திக்குகளிலுமோடி வசந்தப்பி சகலத்திலுந்தாக்கி சகல வவையவங்களுந் துகளாய் அந்தகாரமாகி பயமதிகரித்திருக்கின்ற தீவினையாகிய வாழுமுள்ள பாழுங்கிணற்றில் விழுந்து வெகுகாலம் மெலிவான்—என்பதாம். (௬)

மீட்டுமெழுந்துவந்து மெய்யின்மோதிக்கதறி
யோட்டந்தனிலேசுழலுமுயர் முண்ணிறைந்தகருவேற்
காட்டின்முறியவிழுந்து கனலிற்புழுப்போற்பதைக்கும்
வாட்டந்தவிர்ந்துகதலி வனத்தின்மகிழ்வுற்றிருக்கும்.

(இ-ள்.) மீட்டு மெழுந்துவந்து - திரும்பவு மெழுந்திருந்துவந்து, மெய்யின்மோதி - சரீரத்திலடித்து, கதறி - கதறிக்கொண்டு, ஒட்டந்தனிலே சுழலும் - ஒட்டத்திற்சுழலுவான், உயர்முண்ணிறைந்த - நீண்டமுட்கணிறைந்த, கருவேற்காட்டில் - கருவேலங்காட்டில், முறியவிழுந்து - முறியும்படிவிழுந்து, கனலிற்புழுப்போல் - அக்கினியில் (விழுந்த) விட்டிலைப்போல, பதைக்கும் - பதைபதைப்பான், வாட்டந்தவிர்ந்து - (இப்படி) வாடுதலைநீங்கி, கதலிவனத்தில் - அரம்பாடவியில், மகிழ்வுற்றிருக்கும் - களிப்புற்றிருப்பான்—எ-று.

(இ-ள.) திரும்பவுமெழுந்திருந்துவந்து சரீரத்திலடித்துகதறிக்கொண்டு ஒட்டத்திற்சுழலுவான், நீண்ட முட்கணிறைந்த கருவேலங்காட்டில் முறியும்படி விழுந்து, அக்கினியில்விழுந்த விட்டிலைப்போல பதைபதைப்பான். இப்படி வாடுதலைநீங்கி அரம்பாடவியில் களிப்புற்றிருப்பான்—என்பதாம். (௭)

இதுவுமது.

கதலிவனத்தைவிட்டு கருவேல்வனத்திற்சுழலும்
பதறிக்கிணற்றில்வீழும் பலகாலுழலக்கண்டு
விதறுவகையாம்பற்றி வீணேவருந்துநீயா
ரெதுசெய்கின்றாய்நினைவென் னென்னவனீதிசைத்தான்.

(இ-ள்.)கதலிவனத்தைவிட்டு - வாழைவனத்தை நீங்கி, கருவேல்வனத்திற்சுழலும் - கருவேலங்காட்டிற் சுழலுவன், பதறிக் கிணற்றில் வீழும் - விரைந்து கூபத்தில்விழுவன, பலகாலுழலக்கண்டு - (இப்படி) யநேகந்தரஞ் சுழலுதலைப்பார்த்து, விதறுவகை - நடுங்காவண்ணம், யாம் பற்றி - நாம் பிடித்துக்கொண்டு, வீணேவருந்தும் - விருதாவாக வருந்துகின்ற, நீயார் - நீரெவர் எதுசெய்கின்றாய் - என்னசெய்கின்றாய், நினைவென்னென்ன - உனது கருத்தியாதென்றுகேட்க, அவனீதிசைத்தான்- அவனிதைக் கூறினான்—எ-று.

(இ-ள.) வாழைவனத்தை நீங்கி கருவேலங்காட்டிற் சுழலுவன். விரைந்து கூபத்தில் விழுவன். இப்படி யநேகந்தரஞ்

சுழலுதலைப்பார்த்து நடுங்காவண்ணம் நாம்பிடித்துக்கொண்டுவிரு தாவாக வருந்துகின்ற நீரெவர். என்னசெய்கின்றாய். உனது கருத்தியாதென்று அவனிதைக்கூறினான்—என்பதாம். (அ)

இதுவுமது.

யானென்றொருவனில்லையிங்கோர்செயலுங்காணே
னீநின்றுரைக்கநினைந்துநின்னாற்றளராநின்றே
னூனொன்றியவெம்பகைநீயுன்னாலின்பதுன்ப
நானென்றறிந்தேனென்றுநல்குந்தன்னைநோக்கி.

(இ-ள்.) யானென் றொருவனில்லை - நானென் றொருவனுமில்லை, இங்கோர்செயலுங்காணேன் - இவ்விடத்தொருதொழிலையுங்கண்டிலன், நீநின்றுரைக்க-நீயிருந் (திப்பேதங்களைச்) சொல்ல, நினைந்து-கருதி, நின்னாற்றளராநின்றேன் உன்னால்வாடுகின்றேன், ஊனொன்றியவெம்பகைநீ - ஈனம்பொருந்திய வெமதுசத்துரு நீ, உன்னாலின்பதுன்பம் - நின்னாற்சுகதுக்கங்களை, நானென்றறிந்தேனென்று - யானெனத்தெரிந்தேனென்று, நல்குந்தன்னைநோக்கி - அடிபட்ட தனது தேகத்தைப்பார்த்து—எ-று.

(இ-ரை.) நானென் றொருவனுமில்லை. இவ்விடத்தொருதொழிலையுங்கண்டிலன். நீயிருந்திப்பேதங்களைச்சொல்ல கருதி, உன்னால் வாடுகின்றேன். ஈனம்பொருந்திய வெமது சத்துரு நீ நின்னாற் சுகதுக்கங்களை யானெனத் தெரிந்தேனென்று அடிபட்ட தனது தேகத்தைப்பார்த்து—என்பதாம். (கூ)

இதுவுமது

இடிக்குமுகிலின்மழைபோலிரங்கிக்கதறியழுதா
னொடிக்குளழுகைவிட்டுநுணுக்கந்தன்னைநோக்கி
வெடிக்கநகைத்தானெடிதாமீளவெமதுமுன்னே
தடிக்குமங்கமனைத்துந்தானேயடவேதவிர்ந்தான்.

(இ-ள்.) இடிக்கு முகிலின்மழைபோல் - சப்திக்கின்ற மேகத்தினது வருடம்போல, இரங்கி - இரக்கமுற்று, கதறியழுதான் - (ஓவென்று) கூப்பிட்டழுதான், நொடிக்கு ளழுகை விட்டு - ஒருகணத்தி லவ்வழுகையை விட்டு, நுணுக்கந் தன்னைநோக்கி - நுண்மையான தனது ஸ்வரூபத்தைப் பார்த்து, நெடிதா - வெகுநேரமாக, வெடிக்க நகைத்தான் - (வயிறு) பிளக்கும்படி சிரித்தான், மீள - திரும்பவும், எமதுமுன்னே - உமக்குமுன்பு - தடிக்குமங்க மனைத்தும்-பருத்திருக்கின்ற (தனது) வடிவங்களை யெல்லாம், தானேயடவேதவிர்ந்தான் - தானே கிரமமாக நீங்கினான்—எ-று.

(இ-ரை ) சப்திக்கின்ற மேகத்தினது வருடம்போல இரக்கமுற்று ஓவென்று கூப்பிட்டழுதான். ஒருகணத்தி லவ்வழுகை

யைவிட்டு நண்மையான தனதுஸ்வரூபத்தைப்பார்த்துவெகுநேரமாக வயிறுபிளக்கும்படி சிரித்தான். திரும்பவும் எமக்கு முன்புபருத்திருக்கின்ற தனதுவடிவங்களை யெல்லாம் தானேகிரமமாக நீங்கினான்—என்பதாம். (௧0)

இதுவுமது.

விதியின்வசத்தாலிவனேரிடமேமேவலுற்று
னெதிர்வந்தொருவனயலேயிவன்போலடியுண்டேக
முதல்வந்தவனைப்போனமொய்ம்பாயுணர்த்தவந்தப்
பதிகன்றானும்போனன்பழையவடிவமொழிய.

(இ-ள்.) விதியின் வசத்தால் - நியதியின்வயத்தினால், இவனேரிடமேவலுற்றான் - இவனேரிடத்திலடைந்தான், எதிர்வந்து - (எனக்)கெதிராகவந்து, ஒருவன் - ஒருபுருடன், அயல் - சமீபத்தில், இவன்போ லடியுண்டேக - முன்சொன்னவனைப்போ லடித்துக் கொண்டுபோக, முதல்வந்தவனைப்போல் - முன்வந்தவனைப்போல, நாமொய்ம்பாயுணர்த்த - நாமுறுதியாகப் போதிக்க, அந்தப்பதிகன் றானும் - அவ்வழிச் செல்வோனும், பழைய வடிவமொழிய - முன்வடிவ நீங்க, போனான் - சென்றான்

(இ-ள.) நியதியின்வயத்தினால் இவனேரிடத்தி லடைந்தான். எனக்கெதிராக வந்து ஒரு புருடன் சமீபத்தில் முன்சொன்னவனைப்போலடித்துக்கொண்டுபோக, முன்வந்தவனைப்போல நாமுறுதியாகப் போதிக்க அவ்வழிச் செல்வோனும் முன்வடிவ நீங்கச் சென்றான்—என்பதாம். (௧௧)

இதுவுமது

பிறிதுமொருவன்வந்தப்பெரியகிணற்றில்வீழ்ந்தான்
சிறிதல்லாதகாலந்திரும்பியேறக்காணேம்
வெறிதுன்றியவவ்வனத்தில்வேறுமொருவன்வரலு
மறிதுமென்னத்தகைந்தேயானதெல்லாமுரைத்தேன்.

(இ-ள்.) பிறிது மொருவன்வந்து - வேறுமொருவன் வந்து, அப்பெரியகிணற்றில்வீழ்ந்தான் - அப்பெரிதான (பாழ்ங்) கிணற்றிலவிழுந்தான், சிறிதல்லாதகாலம் - வெகுநாள், திரும்பியேறக்காணேம் - திரும்பயேறிவரப்பார்த்திலம், வெறிதுன்றிய வவ்வனத்தில் - கலக்கமிருந்த வக்காட்டில், வேறுமொருவன்வரலு - மற்றொருவன் வரவும், அறிதுமென்னத் தகைந்து - அறிவோமென்றுதடுத்து, ஆனதெல்லாமுரைத்தேன் - கூடியமட்டும் கூறினேன்—எ-று.

(இ-ள.) வேறுமொருவன் வந்து அப்பெரிதான பாழ்ங்கிணற்றில் விழுந்தான். வெகுநாள் திரும்பி யேறிவரப் பார்த்திலம்.

கலக்கமிருந்த வக்காட்டில்மற்றொருவன்வரவும் அறிவோமென்று தடுத்து கூடியமட்டுங் கூறினேன்—என்பதாம். (௧௨)

இதுவுமது.

ஓதிற்றொன்றுங்கேளாதுரப்பியிகழ்ந்துமேன்மேன்
மோதிக்கொண்டுபோனான்மூர்க்கரவனைப்போல்வார்
வாதிப்புறுவார்நிறைந்துவயிரமுள்ளாற்செறிந்து
பீதிக்கிடமாயிருள்சூழ்பெருங்காடின்றுமுளதால்.

(இ-ள்.) ஓதிற்றொன்றுங்கேளாது-சொன்னதிலொன்றுங்கேளாமல், உரப்பியிகழ்ந்து - அதட்டி நிந்தித்து, மேன்மேன்மோதிக்கொண்டுபோனான் - மேலுமேலு மடித்துக்கொண்டுபோயினான், மூர்க்கர் - மூர்க்கரும், அவனைப்போல்வார் - அவனை யொத்தவர்களுமாகிய, வாதிப்புறுவார் - துன்பப்படுகின்றவர்கள், நிறைந்து - மிகுந்து, வயிரமுள்ளாற்செறிந்து - கூர்ந்தமுட்களானெருங்கி, பீதிக்கிடமாய் - பயத்துக்கிடமாயிருக்கின்ற, இருள்சூழ் பெருங்காடு - அந்தகாரஞ்சூழ்ந்த மகாரணியமானது, இன்று முளது - இப்பொழுது மிருக்கின்றது—எ-று.

(இ-ா.) சொன்னதிலொன்றுங் கேளாமல் அதட்டி நிந்தித்து மேலுமேலு மடித்துக்கொண்டு போயினான் மூர்க்கரும் அவனை யொத்தவர்களுமாகிய துன்பப்படுகின்றவர்கள் மிகுந்துகூர்ந்தமுட்களானெருங்கி பயத்துக்கிடமாயிருக்கின்ற அந்தகாரஞ்சூழ்ந்த மகாரணியமானது இப்பொழுது மிருக்கின்றது—என்பதாம்.

இதுவுமது.

அறவேகொடிதாய்வெந்தவடவியெனினுமறிஞர்
நறவேகமழ்ந்துகுளிர்ந்தநந்தவனம்போன்மகிழ்வர்
மறவேலரசேயென்றவசிட்டமுனியைநோக்கித்
துறவேபுரிவாயிவற்றைத்தோன்றச்சொல்வாயென்றான்.

(இ-ள்.) அறவேகொடிதாய் - மிகவுங்கொடியதாகி, வெந்தவடவியெனினும் - தத்தமானகாடானாலும், அறிஞர் - ஞானிகள், நறவேகமழ்ந்து குளிர்ந்த - வாசனைவீசிக்குளிர்ந்திருக்கின்ற, நந்தவனம்போன் மகிழ்வர் - புஷ்பவனத்தைப்போல சந்தோஷிப்பார்கள், மறவேலரசே-வலிமையுள்ள வேலையுடையவிராமா, என்ற - என்றுசொல்லிய, வசிட்டமுனியைநோக்கி -வசிட்டரிஷியைப்பார்த்து, துறவே புரிவாய்-சகலத்தியாகத்தையே யனுக்கிரகஞ்செய்பவரே, இவற்றை - இக்கதையை, தோன்றச்சொல்வாயென்றான் - விளங்க வருள்வாயென் றிராமன்கேட்டார்—எ-று.

(இ-ா.) மிகவுங் கொடியதாகி தத்தமான காடானாலும்ஞானிகள் வாசனைவீசிக் குளிர்ந்திருக்கின்ற புஷ்பவனத்தைப்போல

சந்தோஷிப்பார்கள், வலிமையுள்ள வேலையுடைய,விராமா என்று சொல்லிய வசிட்டரிஷியைப்பார்த்து சகலத்தியாகத்தையே யனுக்கிரகஞ்செய்பவரே இக் கதையை விளங்கவருள்வாயென் றிராமன்கேட்டார்—என்பதாம்.

(இ-கக-க-ம்.) பாவித்த வடிவமாகிய மனது ப்ரவிர்த்தி நிவிர்த்திகளிற்சடமாயுஞ்சித்தாயுமிருப்பதையறிவித்தற்கு, அதுசெல்லும் விடயப்ரபஞ்சத்தைவனமாகவும் அதிற்சஞ்சரிக்குமனதைப் புருடனாகவு முருவகப்படுத்தி, யதின்கிரியையைப் பதினெண்விதமாகப் பகுத்துக்கூறினதாம்.

---

## உருவகத்தை வெளிப்படுத்தல்.

கேட்டகுரிசிலறியக்கிளர்மாமுனிவனுரைப்பா
னட்டவடியுமுடியுநடுவுமின்றிப்பொய்யாங்
கூட்டமாகியாழ்ந்துகொடிதாய்விகற்பநெடிதா
மீட்டவுலகத்தியல்பேயாமுன்சொன்னவனமே.

(இ-ள்.) கேட்டகுரிசிலறிய - (இப்படி) கேட்டவரசனறியும்படி, கிளர் மாமுனிவனுரைப்பான் - மகாமுனியானவசிட்டர்சொல்லுவார், (க) நாட்ட - ஸ்தாபிப்பதற்கு, அடியுமுடியுநடுவுமின்றி-ஆதிமத்தியந்தமில்லாமல், பொய்யாங்கூட்டமாகி-மித்தியாசங்கமாகியும், ஆழ்ந்து - கெம்பீரமாகியும், கொடிதாய்-கொடியதாகியும், விகற்பநெடிதாம் - விகற்பமிகுதியாகியுமிருக்கின்ற, ஈட்டவுலகத்தியல்பே-கூட்டமுள்ள சம்சார சுபாவமே, யாமுன் சொன்னவனம் - நாமுன்சொல்லிய காடாம்—எ-று.

(இ-ரை.) இப்படிகேட்டவரசனறியும்படி மகாமுனியானவசிட்டர் சொல்லுவார். ஸ்தாபிப்பதற்கு ஆதிமத்தியந்தமில்லாமல் மித்தியாசங்கமாகியும், கெம்பீரமாகியும், கொடியதாகியும், விகற்பமிகுதியாகியு மிருக்கின்ற கூட்டமுள்ள சம்சாரசுபாவமே நாமுன் சொல்லிய காடாம்—என்பதாம். (கரு)

இதுவுமது

புகையார்வனத்திற்புருடன்புலம்பிச்சுழலுமனமே
தகையாநின்றநாமுந்தனிவிவேகந்தானே
பகையாமிதனுலுள்ளம்பரத்தையறிந்தாறினதான்
மிகையார்மனங்களிகழ்ந்துவேட்கைவசத்தோடினவால்.

(இ-ள்.) (உ)புகையார்-(கோபாக்கினியின்) தூமநிறைந்த,வனத்தில்-(உலகமென்னுங்) காட்டில், புருடன் - புருடனென்றவன், புலம்பிச்சுழலுமனமே - துன்புற்றுச்சுழலாநின்ற மனமேயாம், (அ) தகையாநின்ற நாமும்-தடுக்கின்றயாமும், தனிவிவேகந்தானே-ஒப்பற்றவிவேகமேயாம், (கரு)

பகையாமிதனல் - பகையாகியவிவ்விவேகத்தினுல், உள்ளம் - மனமானது, பரத்தை யறிந்து - பிரமத்தையுணர்ந்து, ஆறினது - விஸ்ராந்தியை யடைந்ததாம் (கஅ) மிகையார்மனங்கள் - குற்றம்பொருந்தியமனங்கள், இகழ்ந்து - (விவேகத்தை) நிந்தித்து, வேட்கைவசத்து - விடய வாசனுவயத்தில், ஓடின - சென்றன—எ-று.

(இ-ளா.) கோபாக்கினியின் றாமணிறைந்த உலகமென்னுங் காட்டில் புருடனென்றவன் துன்புற்றுச் சுழலாநின்ற மனமேயாம். தடுக்கின்ற யாமும் ஒப்பற்ற விவேகமேயாம். பகையாகிய விவ்விவேகத்தினுல் மனமானது பிரமத்தை யுணர்ந்துவிஸ்ராந்தியை யடைந்ததாம், குற்றம்பொருந்திய மனங்கள் விவேகத்தைநிந்தித்து விடய வாசனுவயத்தில் சென்றன—என்பதாம். (கசு)

இதுவுமது.

விதறியோடுமனங்கண்மேவுநரகங்கிணறு
கதலிவனம்விண்ணுலகங்கரிவேல்வனமண்ணுலகாஞ்
சிதறிவிழுந்தகிணற்றிற்றிரும்பியேறுதொழிந்தோன்
பதறிநரகம்புகுந்துபாவந்தொலையாததுவாம்.

(இ-ள்.) (ரு) விதறியோடுமனங்கள் - அடித்துக்கொண்டுசெல்லாநின்ற மனங்களானவை, மேவுங்கிணறு - வீழுங்கிணறென்றது, நரகம் - நரகமாம், (எ) கதலிவனம் - அரம்பாடவியென்றது, விண்ணுலகாம் - (போகநிறைந்த) சுவர்க்கலோகமாம், (சு) கரிவேல்வனம் - (முட்கணிறைந்த) கரிவேற்காடென்றது, மண்ணுலகாம் - (மோகமுள்ளஸ்திரீபுருடர்கணிறைந்த) பூலோகமாம், (கஎ) சிதறிவிழுந்த கிணற்றில் - சிதறிவீழ்ந்த கிணற்றினின்றும், திரும்பியேறுதொழிந்தோன் - திரும்ப வேறுமற் கிடந்தவ னென்றது, பதறிநரகம்புகுந்து - விரைவினரகத்திற் ப்ரவேசித்து, பாவந்தொலையாததுவாம் - பாவகன்ம நீங்காத மனமாம்—எ-று.

(இ-ளா.) அடித்துக்கொண்டு செல்லாநின்ற மனங்களானவை வீழுங் கிணறென்றது நரகமாம் அரம்பாடவியென்றதுபோகநிறைந்த சுவர்க்கலோகமாம். முட்கணிறைந்த கரிவேற்காடென்றது மோகமுள்ள ஸ்திரீபுருடர்க ணிறைந்த பூலோகமாம். சிதறிவீழ்ந்த கிணற்றினின்றும் திரும்ப வேறுமற் கிடந்தவனென்றது விரைவி னரகத்திற் ப்ரவேசித்து பாவகன்மநீங்காதமனமாம். ()

இதுவுமது.

முனையார்முள்ளென்றதுதான்மோகமனிதர்மடவார்
நினையாவின்பதுன்பநின்ஞலடைந்தேனீயே

வினையாமென்றதுணர்வால்வீயுமனநொந்துரைத்த
தனையாரழுதவென்றதாசையறுக்குமலக்கண்.

(இ-ள்.) (௯) முனையார்முள்ளென்றதுதான் - கூர்மைபொருந்திய முள்ளென்றது, மோகமனிதர்மடவார் - காமாந்தகாரத்தையுடைய ஸ்திரீபுருடர்கள், (௧0) நினையாவின்பதுன்பம் - நினைக்கின்ற சுகதுக்கங்களை, நின்னாலடைந்தேன் - உன்னாற்பெற்றேன், (௧௧) நீயேவினையாமென்றது- நீயேயெனக்குச்சத்துருவாமென்றது, உணர்வால் - அறிவினால், வீயுமன நொந்துரைத்தது - நசிக்கின்ற மனது துன்புற்றுச்சொன்னது, (௧௨) அனையாரழுதவென்றது - அவர்களழுதார்களென்றுசொல்லியது, ஆசை யறுக்குமலக்கண் - இச்சையைக்கெடுக்கின்றவருத்தமாம்—எ-று.

(இ-ரை.) கூர்மை பொருந்திய முள்ளென்றது காமாந்தகார த்தையுடைய ஸ்திரீபுருடர்கள் நினைக்கின்ற சுகதுக்கங்களை உன் னாற்பெற்றேன், நீயே யெனக்குச் சத்துருவாமென்றது. அறிவி னால் நசிக்கின்ற மனது துன்புற்றுச் சொன்னது, அவர்களழுதா ர்களென்று சொல்லியது. இச்சையைக் கெடுக்கின்ற வருத்தமாம்.

இதுவுமது.

போதம்பாதியாகிப்புரணமாகாமனந்தான்
காதல்விடினொந்தயர்தல்கதறியழுததுவாஞ்
சீதமாகமகிழ்ந்துசிரித்துநின்றதென்ற
தேதமில்லாஞானத்தேகமானமகிழ்ச்சி.

(இ-ள்.) (௧௩) கதறியழுதது - கூப்பிட்டழுதவென்றது, போதம்பா தியாகி - ஞானமரைவரிசையுண்டாகி, புரணமாகாமனந்தான் - (ஞான) நிறையாதமனமானது, காதல்விடில் - ஆசையைவிடும்போது, நொந்தயர் தல் - துன்பப்பட்டுவருந்துதல், அதுவாம் - அவ்வருத்தமேயாம், (௧௪) சீதமாகமகிழ்ந்து - குளிர்ச்சியாகச்சந்தோஷித்து, சிரித்துநின்ற தென் றது - நகைத்திருந்த தென்றது, ஏதமில்லாஞானத்து - குற்றமற்றஞான த்தில், ஏகமானமகிழ்ச்சி - ஒன்றான வாநந்தமாம்—எ-று.

(இ-ரை.) கூப்பிட்டழுதவென்றது ஞானமரைவரிசையுண் டாகி ஞானநிறையாத மனமானது ஆசையை விடும்போது துன்ப ப்பட்டு வருந்துதல் அவ்வருத்தமே யாம். குளிர்ச்சியாகச்சந்தோ ஷித்து நகைத்திருந்தவென்றது குற்றமற்றஞானத்தில் ஒன்றான வாநந்தமாம்—என்பதாம். (௧௯)

இதுவுமது.

முடிவின்ஞானத்தாலேமோகம்விட்டமனந்தான்
வடிவைமாய்க்கும்பொழுதுமகிழுமதுவேமகிழ்வாம்

நெடியமொய்ம்பினலேநிறுத்திக்கேட்டேமென்ற
தொடிவின்ஞானவலியாலுள்ளமொருப்பட்டதுவே.

(இ-ள்.) (கசு) முடிவின் ஞானத்தால் - அந்தமில்லாத ஞானத்தினல், மோகம்விட்டமனந்தான் - ஆசையைவிடுத்த மனமானது, வடிவைமாய்க்கும்பொழுது - தனதுருவத்தை நாசம்செய்யும்பொழுது, மகிழுமதுவேமகிழ்வாம் - சந்தோஷிப்பதே சந்தோஷமாம், (கூ) நெடியமொய்ம்பினல் - மிகுந்தவலியினல், நிறுத்திக்கேட்டேமென்றது - தடுத்துக்கேட்டோமென்று சொல்லியது, ஒடிவின்ஞானவலியால் - அழிவற்றஞானேபதேசபலத்தினல், உள்ளமொருப்பட்டது - மனமொருமைப்பட்டது.

(இ-ஞா.) அந்தமில்லாதஞானத்தினல் ஆசையைவிடுத்தமனமானது தனதுருவத்தை நாசஞ் செய்யும்பொழுது சந்தோஷிப்பதே சந்தோஷமாம். மிகுந்த வலியினல் தடுத்துக்கேட்டோமென்று சொல்லியது அழிவற்ற ஞானேபதேசபலத்தினல் மனமொருமைப்பட்டது—என்பதாம். (உ௦)

இதுவுமது.

அங்கத்தறைந்துகொண்டதடர்கற்பனைகளாலே
பங்கப்படுவன்றுயராம்பரந்தோடினதென்றதுதான்
மங்கத்தகுவாதனையான்மருண்டுசுழல்வதாகுஞ்
சங்கற்பமுவாதனையுந்தனைத்தான்வலைபோற்றளிக்கும்

(இ-ள்.) (ரு) அங்கத்தறைந்துகொண்டது - சரீரத்திலடித்துக்கொண்டதென்றது, அடர்கற்பனைகளால் - மிகுந்த கற்பனைகளின், பங்கப்படுவன்றுயராம் - கெடுதிப்படுகின்ற வலியதுன்பங்களாம், (ச) பரந்தோடின தென்றதுதான் - நெடுந்தூரமோடினதென்றது, மங்கத்தகுவாதனையால் - கெடத் தகுந்தவாசனையா (லடிபட்டு), மருண்டுசுழல்வதாகும் - மயங்கித்திரிவதாம், சங்கற்பமும் - சங்கற்பங்களும், வாதனையும் - வாசனைகளும், தனைத்தான் - தன்னைத்தானே, வலைபோல் - வலையைப்போல, தளைக்கும் - சிறைப்படுத்தும்—எ-று.

(இ-ஞா.) சரீரத்திலடித்துக்கொண்டதென்றது மிகுந்தகற்பனைகளின் கெடுதிப்படுகின்ற வலியதுன்பங்களாம். நெடுந்தூரமோடின தென்றது கெடத்தகுந்த வாசனையா லடிபட்டுமயங்கித்திரிவதாம். சங்கற்பங்களும், வாசனைகளும், தன்னைத்தானே வலையைப்போல சிறைப்படுத்தும்—என்பதாம்.

(இ-எ-க-ப்.) முன்ளுெகுத்துச்சொன்ன பதினெண் பகுப்பையுமுறைப்படி யிலக்கம் வைத்து வகுத்துரைத்ததாம். (உக)

## ஆதால் மனதைக்கெடுக்கவெனல்.

கோசகாரப்புழுப்போற்கொடுங்கற்பனைவாதனையாற்
பாசமடைவரியாரும்பகர்ந்தமனத்தின்கதையை
மாசிலாதமனத்தான்மதித்துமனத்தைமாய்ப்பாய்
தேசமுடையாயென்றுதெளிந்தவசிட்டனுரைத்தான்.

(இ-ள்.) கோசகாரப்புழுப்போல் - கோசகாரக்கிரிமியைப்போல, கொடுங்கற்பனை வாதனையால் - (தனது) கொடிய சங்கற்ப வாசனைகளால், இயாரும்பாசமடைவர் - யாவரும் பாசத்தையடைவார்கள், பகர்ந்த - சொல்லிய, மனத்தின்கதையை - இம்மனத்தின்சரித்திரத்தை, மாசிலாதமனத்தால் - களங்கமற்ற மனதினுல், மதித்து - வரையறுத்தறிந்து, மனத்தை - (களங்க) மனதை, மாய்ப்பாய் - கெடுப்பாய், தேசமுடையாயென்று - தெளிவையுடைய விராமாவென்று, தெளிந்த வசிட்டன் - தெளிவுள்ள வசிட்டமுனி, உரைத்தான் - சொன்னுர்—எ-று.

(இ-ரை.) கோசகாரக் கிரிமியைப்போல தனது கொடியசங்கற்ப வாசனைகளால் யாவரும் பாசத்தை படைவார்கள். சொல்லிய இம்மனத்தின் சரித்திரத்தை களங்கமற்றமனதினுல் வரையறுத்தறிந்து களங்க மனதைக் கெடுப்பாய், தெளிவையுடையவிராமாவென்று தெளிவுள்ள வசிட்டமுனிசொன்னுர்—என்பதாம்.

(இ-ம்.) மனதை யகமுகத்திற்செலுத்தி வெகுற்முகத்திற் செல்லாமற்றடுக்கின் ஞானமயமாமென்பதாம். (௨௨)

மனத்தின்கதை முற்றிற்று.

ஆக கதை ௬-க்கு கவிதை - ௬௱௩௪.

# பாலன் கதை.

**அவதாரிகை.**

*முன்மனமானது சிற்பாவனையாற் சித்துஞ் செட்பாவனையாற் சடமுமானதையறிவித்து அதன் சங்கற்பரூபமான சகத்தை யாத்மவிசாரமில்லாதவர்கள் எதார்த்தமாகப் பார்ப்பதைப் பாலன்கதையி னிதரிசனமாகச் சொல்லுகிறார்.*

## அறிஞர்கள் மனது பிரமமே யெனல்.

முழுதுசத்தியுமாய்ப் புராணமாயென்று முடிவறுபிரமமாவதுதான், பழுதின்ஞானிகடம் மனமலாதில்லைப் பரமமாமிதிலிலாதில்லை, யெழுதருஞ்சத்தி யாவுமாயிலங்கு மிவைகளோர் காலமொன்றுளதாம், வழுவிலாப்பிரம முடையசிற்சத்தி மறிதருமுடல்களிற்றோன்றும்.

(இ-ள்.) பழுதின் ஞானிகடம் - குற்றமற்ற ஞானிகளுடைய, மனம்-மனமானது, முழுது சத்தியுமாய் - சகலசத்திகளையுடையதாயும், புரணமாய் - பரிபூரணமாயு மிருக்கின்ற, என்று முடிவறு - எப்பொழுதும் நாசமில்லாத, பிரமமாவதுதான் - பிரமஸ்வரூபமாவதுதான், அலாதில்லை - அதையன்றி வேறின்று, பரமமாமிதில் - பிரமஸ்வரூபமாகிய விதனிடத்தில், இலாதில்லை - இல்லாதவைக ளொன்றுமிலலை, எழுதருஞ்சத்தி - எழுதற்கரிய சிற்சத்தியானது, யாவுமாயிலங்கும் - சகலமுமாய் ப்ரகாசிக்கும், இவைகள் - இச்சத்திகளில், ஓர்காலம்-ஒருகாலத்தில், ஒன்றுளதாம்-ஒருசத்தியுண்டாம், வழுவிலாப் பிரமமுடைய - குறைவில்லாத பிரமத்தினுடைய, சிற்சத்தி - ஞானசத்தியானது, மறிதரும் - அழிகின்ற, உடல்களிற் றோன்றும் - சரீரங்களிற்றோற்றும—எ-று.

(இ-ா.) குற்றமற்ற ஞானிகளுடைய மனமானது சகலசத்திகளை யுடையதாயும் பரிபூரணமாயுமிருக்கின்ற எப்பொழுதும் நாசமில்லாத பிரமஸ்வரூப மாவதுதான், அதையன்றிவேறின்று. பிரமஸ்வரூபமாகிய விதனிடத்தில் இல்லாதவைகளொன்றுமில்லை. எழுதற்கரிய சிற்சத்தியானது சகலமுமாய் ப்ரகாசிக்கும். இச்சத்திகளில் ஒருகாலத்தில் ஒருசத்தியுண்டாம். குறைவில்லாத பிரமத்தினுடைய ஞானசத்தியானது அழிகின்ற சரீரங்களிற் றோற்றும்—என்பதாம். (க)

இதுவுமது.

காற்றிலேயசைவுங் கல்லிலேதிடமுங் கனலிலேசூடும்வான்ற னிலே, தோற்றலாமையுநன் னீரிலேநெகிழ்வுந் தொலேவுறு மாய் விலேமாய்வு. மூற்றமாம்விதையின் மரங்களும்போல வுள்ளுறை பிரமசத்திகடா, மாற்றல்சால்கால தேசசித்திரத்தா லவனியிற்சா லிபோற்றோன்றும்.

(இ-ள்.) காற்றிலே யசைவும் - வாயுவிற்சலனசத்தியும், கல்லிலேதிடமும் - பாடாணத்திற் கடினசத்தியும், கனலிலேசூடும்-அக்கினியிலுஷ்ண சத்தியும், வான்றனிலே தோற்றலாமையும் - ஆகாயத்திற்சூனியசத்தியும், நன்னீரிலே நெகிழ்வும - நல்லசலத்திற்றிர்வசத்தியும், தொலேவுறு-தொலேயாநின்ற, மாய்விலே மாய்வும் - நாசத்திலே நாசசத்தியும், ஊற்றமாம்-வலியுள்ள, விதையின்மரங்களும்போல - வித்தி (லடங்கிய) விருக்ஷங்களேப்போல, உள்ளுறை பிரசமசத்திகடாம் - (பிரமத்தி) னு ளடங்கியிருக்கின்ற பிரமசத்திகளானவை, ஆற்றல்சால் - பலமிகுந்த, காலதேச சித்திரத்தால் - காலதேச விசித்திரத்தினுல், அவனியில் - பூமியில், சாலிபோற்றோன்றும் - பயிர்களேப்போலத்தோற்றும்—எ-று.

(இ-ரை.) வாயுவிற்சலனசத்தியும், பாடாணத்திற் கடினசத்தியும், அக்கினியி லுஷ்ண சத்தியும், ஆகாயத்திற் சூனியசத்தியும், நல்லசலத்திற்றிர்வசத்தியும், தொலேயாநின்றநாசத்திலேநாச சத்தியும், வலியுள்ள வித்தி லடங்கிய விருக்ஷங்களேப்போல பிரமத்தினு ளடங்கியிருக்கின்ற பிரமசத்திகளானவை பலமிகுந்த கால தேச விசிரத்தினுல் பூமியில் பயிர்களேப்போலத்தோற்றும்.

(இ-உ-க-ற்.) பிரமத்துக் கபின்னமான சிற்சத்தியுல்லாசமே விசித்திரமான சகமாகத் தோற்றுகின்றதாம். (உ)

---

அசத்தைச் சத்தாகக்காணுதல்.

பரமமேயெங்கு மென்றுமுண்டாகும் பயின்மனனத்தினுன் மனமாந், தரமறுபந்த முத்திபேருலகாஞ் சத்திகளனைத்துமாய்நிற்குந், திரமறுதனேயாக் கன்னேசொற்கதைபோற் செப்பியவிவை யெலாந் திரமாங், கரமலர்முகிலே யென்றலுமந்தக்கதையினேயிரா கவன்வினவ.

(இ-ள்.) பரமமே-பிரமஸ்வரூபமே, எங்கும்-எவ்விடத்திலும், என்றும்-எப்போதும், உண்டாகும்-உண்டாயிருக்கும், (அப்பிரமமே) பயில்-சொல்

லப்பட்ட, மனனத்தினுன்மனமாம் - மனனத்தினுன் மனமாகவும், தரமறு - (இழிவிற்) சமானமில்லாத, பந்தம் - பந்தமுள்ள (சீவாத்மாவாகவும்), முத்தி - வீடுள்ள (பரமாத்மாவாகவும்), பேருலகாம் - பெரியவுலகமாகவும், சத்திகளனைத்துமாய்நிற்கும் - சத்திகளெல்லாமாகவுமிருக்கும், திரமறுதனையர்க்கு - ஸ்திரமில்லாதகுழந்தைகளுக்கு, அன்னைசொற்கதைபோல் - தாய்சொல்லப்பட்ட காதையைப்போல, செப்பியவிவையெலாம் - சொல்லிய விக்கற்பனைகளனைத்தும், திரமாம் - நிலையாகும், கரமலர்முகிலே - கைகளென்னுந் தாமரைமலர்களையுடைய மேகமே, என்றலும் - என்று வசிட்டர்சொல்லவும், அந்தக்கதையினை - அச்சரித்திரத்தை, இராகவன் வினவ - இராமர் கேட்க—எ-று.

(இ-ரை.) பிரமஸ்வரூபமே எவ்விடத்திலும் எப்போதும் உண்டாயிருக்கும். அப்பிரமமேசொல்லப்பட்ட மனனத்தினுன்மனமாகவும், இழிவிற்சமானமில்லாத பந்தமுள்ள சீவாத்மாவாகவும், வீடுள்ளபரமாத்மாவாகவும், பெரியவுலகமாகவும், சத்திகளெல்லாமாகவு மிருக்கும். ஸ்திரமில்லாத குழந்தைகளுக்கு தாய்சொல்லப்பட்ட காதையைப்போல சொல்லியவிக்கற்பனைக ளனைத்தும் நிலையாகும். கைகளென்னுந் தாமரை மலர்களை யுடைய மேகமே என்று வசிட்டர் சொல்லவும் அச்சரித்திரத்தை இராமர்கேட்க.

(இ-ம்.) சத்தினுபாசமாகத்தோற்றுகின்ற மித்தையாரூபமான சகம், அறிவின்மையாற் சத்தாகப் பார்க்கப்படுகின்றதாம். (ரு)

## அசத்தைச் சத்தாக வுரைத்தல்.

**சித்தவஞ்சனையின் மூலமாங்கதையைச் செல்வனுக்கருந்தவனுரைப்பான், மெய்த்தகைவிலாதோர் சிறுவனியன்னை விரும்பியோர்கதைவிளம்பென்னச், சத்தியம்போல வெறும்பொய்யேயுரைப்பா டரணிபன் குமரரோர்மூவர், சுத்தவீரமு நற்குணங்களுஞ்சிறந்தோர் சூனியநகரிலே யுறைவோர்.**

(இ-ள்.) சித்தவஞ்சனையின் - மனவஞ்சனைக்கு, மூலமாங்கதையை - காரணமானகதையை, செல்வனுக்கு - இராமனுக்கு, அருந்தவனுரைப்பான் - அரியதவமுள்ள வசிட்டர் சொல்லுவார், மெய்த்தகைவிலாதோர் சிறுவன் - மெய்யறிவில்லாத வொருபாலனுனவன், விரும்பி - விருப்பமுற்று, அன்னைநீ - தாயேநீ, ஓர்கதைவிளம்பென்ன - ஒருகதையையெனக்குச்சொல்வாயென்றுகேட்க, சத்தியம்போல - உள்ளதுபோல, வெறும்பொய்யே யுரைப்பாள் - முழுதுமித்தையான (வோர்கதையைச்) சொல்லுவாள், தரணிபன் குமரரோர்மூவர் - இராசகுமாரர் மூன்றுபேர்கள், சுத்தவீரமும்-பரிசுத்தமாகிய வீரத்திலும், நற்குணங்களும் - நல்லகுணங்

களிலும், சிறந்தோர் - மிகுந்தவர்கள், சூனியநகரிலேயுறைவோர்-இல்லாதபட்டணத்திலிருப்பவர்கள்—எ-று.

(இ-ரை.) மனவஞ்சனைக்குக் காரணமானகதையை இராமனுக்கு அரியதவமுள்ள வசிட்டர்சொல்லுவார். மெய்யறிவில்லாதவொரு பாலனவன் விருப்பமுற்று தாயே நீ ஒருகதையை யெனக்குச்சொல்வாயென்றுகேட்க உள்ளதுபோல முழுதுமித்தையான வோர்கதையைச்சொல்லுவாள். இராசகுமாரர் மூன்றுபேர்கள் பரிசுத்தமாகிய வீரத்திலும் நல்ல குணங்களிலும் மிகுந்தவர்கள் இல்லாதபட்டணத்தி லிருப்பவர்கள்—என்பதாம். (௪)

இதுவுமது.

மூவரிலிருவர்பிறந்திலரொருவன் மூலமாங்கருவினு மில்லை, யாவதுங்கருதித்திரிபவர்விண்ணி லளவறுபழமரச்சோலை, மேவலுமதனிற் செழுங்கனிதுய்த்துவெம்பசி தணிந்துமேற்சென்றார், காவருகாக மூன்றுநன்னதிகள் கரைபொரு திரையொடுங்கண்டார்.

(இ-ள்.) மூவரில் - (இம்) மூன்றுபெயர்களில், இருவர்பிறந்திலர் - இரண்டுபேர்கள் பிறந்ததேயில்லை, ஒருவன் - ஒருத்தன், மூலமாங்கருவினுமில்லை - காரணமாகிய கருப்பத்திலுமில்லை, யாவதுங்கருதித்திரிபவர்- சகலலாபமுமெண்ணிச் சஞ்சரிப்பவர்களாய், விண்ணில் - ஆகாயத்தில், அளவறுபழமரச்சோலை - மட்டற்ற கனிகளையுடையவனத்தில், மேவலும்- பொருந்தவும், அதனிற்செழுங்கனிதுய்த்து - அதிற்செழுமையான பழவகைகளைப்புசித்து, வெம்பசிதணிந்து - வெப்பமான பசிநீங்கி, மேற்சென்றார் - மேற்போயினார்கள், காவருகாக-அக்கானகத்தின்பக்கத்தில், மூன்றுநன்னதிகள் - மூன்று நதிகளை, கரைபொரு - கரையின்மோதாநின்ற, திரையொடுங்கண்டார் - அலைகளுடன்பார்த்தார்கள்—எ-று.

(இ-ரை.) இம்மூன்றுபேர்களில் இரண்டுபேர்கள் பிறந்ததேயில்லை. ஒருத்தன் காரணமாகிய கருப்பத்திலுமில்லை. சகலலாபமுமெண்ணிச்சஞ்சரிப்பவர்களால் ஆகாயத்தில் மட்டற்றகனிகளையுடைய வனத்தில் பொருந்தவும், அதிற் செழுமையான பழவகைகளைப்புசித்து வெப்பமானபசிநீங்கி மேற்போயினார்கள். அக்கானகத்தின் பக்கத்தில் மூன்றாறுகளைக் கரையின்மோதாநின்ற அலைகளுடன் பார்த்தார்கள்—என்பதாம். (௫)

இதுவுமது.

ஓடுநன்னதியி லிரண்டுநீரில்லை யொன்றுவெண் மணலதாமிதனி, லாடிநீர் துளைந்துபருகினரந்தி யாகிமேல்வருநகரடைந்தார்,

வீடுமூன்றெதிர்ந்தா ரதிலிரண்டில்லை மேன்மரஞ்சுவரிலாதொன்று,
கூடியவவற்றிற்சுவரிலாவீட்டிற் குடிபுகுந்திருந்தனர்குமரர்.

(இ-ள்.) ஓடுநன்னதியில் - வேகமாகச்செல்கின்ற நல்ல மூன்றாற்றினுள், இரண்டுநீரில்லை - இரண்டிற்சலமில்லை, ஒன்று வெண்மணலதாம் - ஒன்றுலர்ந்த வெண்மணலையுடையதாம், இதனில் - இந்தநதியில், ஆடிநீர்துளைந்து - ஸ்நானஞ்செய்து, பருகினார்-(சலத்தை)பானம்பண்ணினார்கள், அந்தியாகி - சாய்ங்காலமாய், மேல்வரு நகரடைந்தார் - இனியுண்டாகும் பட்டணத்தைச்சேர்ந்து, வீடுமூன்றெதிர்ந்தார் -(அதில்) மூன்றுவீடுகண்டார்கள், அதிலிரண்டில்லை - அம்மூன்றி லிரண்டில்லவேயில்லை, மேன்மரஞ்சுவரிலாதொன்று - மேலேமரங்களுஞ் சுத்திச்சுவருமில்லாத வீடொன்று, கூடியவவற்றில்-சேர்ந்தவம்மனைகளில், சுவரிலாவீட்டில்-சுவரில்லாமனையில், குமரர் - (இராச)குமாரர்கள், குடிபுகுந்திருந்தனர் - குடியாகப்புகுந்திருந்தார்கள்—எ-று.

(இ-ரை.) வேகமாகச் செல்கின்ற நல்லமூன்றாற்றினுள் இரண்டிற்சலமில்லை. ஒன்றுலர்ந்த வெண்மணலையுடையதாம். இந்நதியில் ஸ்நாநஞ்செய்து சலத்தைபானம்பண்ணினார்கள். சாய்ங்காலமாய் இனியுண்டாகும் பட்டணத்தைச் சேர்ந்து அதில் மூன்று வீடுகண்டார்கள். அம்மூன்றி லிரண்டில்லவேயில்லை. மேலே மரங்களுஞ் சுத்திச் சுவருமில்லாத வீடொன்றுசேர்ந்த வம்மனைகளில் சுவரில்லாமனையில் இராசகுமாரர்கள் குடியாகப்புகுந்திருந்தார்கள் —என்பதாம். (௬)

இதுவுமது.

ஒருவருங்காணு நகரிலே வெளிவீட் டுறைபவர்கனகபாத்திர
மூன், றருகுறக்கண்டா ரதிலிரண்டோடா மறவிலுந்தூளியாமொ
ன்று, சொருபமில்கடத்திற் றுரோணமூன்றதனிற் றுரோணமூ
ன்றகன்றுமிக்கிருந்த, பருவரிசியைத்தாஞ் சமைத்துவாயில்லாப்
பனவரெண்ணிலர்க்குமுன்படைத்தார்.

(இ-ள்.) ஒருவருங்காணுநகரில் - ஒருவரும்பாராத பட்டணத்தில், வெளிவீட்டுறைபவர் - ஆகாயமனையிலிருப்பவர்கள்,கனகபாத்திரமூன்று-மூன்றுதமனியபாத்திரங்கள், அருகுறக்கண்டார்-தனதுபக்கத்திலிருக்கப் பார்த்தார்கள், அதிலிரண்டோடாம்-அதிலிரண்டோடாகும், அறவிலுந்தூளியாமொன்று - மிகவுந்தூளாயிருப்பதொன்று, சொருபமில்கடத்தில் -உருவமில்லாத (விப்)பாத்திரத்தில், துரோணமூன்றதனில்-ஆறுமரக்காலில், துரோணமூன்றகன்று - தூணிபதக்கைத்தள்ளி, மிக்கிருந்த-மிகுந்திருந்த, பருவரிசியை-பருத்ததண்டுலத்தை, தாஞ்சமைத்து-தாங்கள்பாக

ஞ்செய்து, வாயில்லாப்பனவர் - வாயில்லாதபிராமணுள், எண்ணிலர்க்கு- அளவற்றவர்களுக்கு, முன்படைத்தார் - முன்புபறிமாறிஞர்கள்—எ-று.

(இ-ளா.) ஒருவரும்பாராத பட்டணத்தில் ஆகாயமனையிலிருப்பவர்கள் மூன்றுதமனிய பாத்திரங்கள் தனது பக்கத்திலிருக்கப் பார்த்தார்கள். அதிலிரண்டோடாகும்; மிகவுந்தூளாயிருப்பதொன்று, உருவமில்லாத விப்பாத்திரத்தில் ஆறுமரக்காலில் தூணிபதக்கைத்தள்ளி மிகுந்திருந்த பருத்த தண்டுலத்தை தாங்கள்பாகஞ்செய்து வாயில்லாத பிராமணுள் அளவற்றவர்களுக்கு முன்புபரிமாறிஞர்கள்—என்பதாம். (எ)

இதுவுமது.

அவரெலாநிரம்ப வுண்டபின் மிகுந்த தருந்தினர்வேட்டைகளாடி, யிவர்கண்மூ வருமங் கிருந்தனரென்ன விளமையானம்பினன்சிறுவன், புவனமுமிவ்வா றறிவிலோர்காண்பர்புகல் மனவிரிவு சங்கற்பம், விவரமாமிதனு லுலகமாமிதனை விடுநிருவிகற்பமாயிடுநீ.

(இ-ள்.) அவரெலாம்-அப்பிராமணர்களனைவரும், நிரம்பவுண்டபின்- பூரணமாகப்புசித்தபின்பு, மிகுந்த தருந்தினர் - சேடத்த (ப்ரசாதமாகப்) புசித்து, வேட்டைகளாடி-வேட்டைகள்செய்துக்கொண்டு, இவர்கண்மூவரும் - இம்மூவர்களும், அங்கிருந்தனரென்ன - அத்தலத்தில் வசித்தார்க(ளென்) றன்னைசொல்ல, இளமையால் - பாலப்பருவத்திஞல், சிறுவன் - குழந்தை, நம்பினன் - (எதார்த்தமாக) நம்பிஞன், புவனமும்-சகத்தையும், இவ்வாறு - இவ்வண்ணம், அறிவிலோர் காண்பர்-அஞ்ஞானிகள் பாப்பார்கள், புகன்மனவிரிவு - சொல்லப்பட்ட மனதின்விலாசமே, சங்கற்பம்-சங்கற்பமாம், விவரமாமிதனுலுலகமாம் - பகுத்துச்சொல்லுகின்ற விச்சங்கற்பத்தாற்சகமாம், இதனைவிடு-இச்சங்கற்பத்தை நீக்கு, நீ நிருவிகற்பமாயிடு- நீ நிருவிகற்பனுகக்கடவாய்—எ-று.

(இ-ளா.) அப்பிராமணர்களனைவரும் பூரணமாகப்புசித்த பின்பு சேடத்தைப்ரசாதமாகப்புசித்து வேட்டைகள்செய்துக்கொண்டு இம்மூவர்களும் அத்தலத்தில் வசித்தார்களென்றன்னைச்சொல்ல பாலப்பருவத்திஞல் குழந்தை எதார்த்தமாகநம்பிஞன். சகத்தையும் இவ்வண்ணம் அஞ்ஞானிகள் பார்ப்பார்கள். சொல்லப்பட்ட மனதின்விலாசமே சங்கற்பமாம். பகுத்துச்சொல்லுகின்ற விச்சங்கற்பத்தாற் சகமாம். இச்சங்கற்பத்தைநீக்கு நீ நிருவிகற்பனுகக்கடவாய்—என்பதாம்.

(ப-ம்.) அத்துவிதான்மஸ்வரூபத்தைதரணிபனென்றும்,அதன்ப்ரதிபலனமானசீவேஸ்வரசகங்களைகுமரரோமூவரென்றும்மித்தையாப்ரகிர்தி

யில் வசிப்பவர்களை சூனிய நகரிலே யுரைவோரென்றும், ஜீவேஸ்வரரிரண்டுமுதித்திலரென்பதை மூவரிலிருவர் பிறந்திலரென்றும், உலகங்கருவிலுமில்லையென்பதை ஒருவன்மூலமாங்கருவினு மில்லையென்றும், சிதாகாசத்தி லென்பதை விண்ணிலென்றும், மனோராச்சியத்தி லுண்டான வளவற்ற விடயசுகானுபவத்தை அளவறு பழமரச்சோலைமேவலு மதனிற் செழுங்கனி துய்த்தென்றும், மூன்றவத்தைகளை மூன்று நன்னதிகளென்றும், நனவுகனவுகளிற்சாரமில்லையென்பதை ஒருநன்னதியி லிரண்டுநீரில்லையென்றும், சூனியமான சுழுத்தியை ஒன்றுவெண்மணலதாமென்றும், இவ்வவத்தையி லழுந்திச்சுகிப்பதை இதனிலாடி நீர் துளைந்தென்றும், இனிவருஞ்சங்கற்ப வசமாவதைமேல்வரு நகரடைந்தாரென்றும், ஜீவேஸ்வர பிரமசாக்ஷியை யறிந்தார்களென்பதை வீடுமூன்றெதிர்ந்தாரென்றும் அதிற்ஜீவேஸ்வரரில்லையென்பதை அதிலிரண்டில்லையென்றும், நிராதாரமான பிரமத்தை சுவரிலாவொன்றென்றும், அப்பிர மாதாரத்தி லிருப்பவர்களை வீட்டிற் குடிபுகுந் திருந்தனரென்றும், அகோசரமானசிதாகாசத்திலுறைபவனைஒருவருங்காணுவெளிவீட்டுறைபவரென்றும், சச்சிதாநந்த தெரிசனத்தை கனகபாத்திர மூன்றருகுறக் கண்டாரென்றும், அதிற்சத்துச் சித்தின் றடிப்பை அதி லிரண்டோடா மென்றும், ஆநந்தத்தினுட்பத்தை அறவினுந்தூளியாமொன்றென்றும், உருவமற்றவாநந்தமயத்தை ஸ்வரூபமில் கடத்திலென்றும், காமாதிகளை துரோணமூன்றென்றும், இவையாறும் நசித்தவிடத்திற் சேடித்திருந்த சத்துவமனதை அகன்றுமிக்கிருந்தபருவரிசியையென்றும், அம்மனதையனுபவத்திற்கரைத்தலைசமைத்தென்றும், அதை மகாமவுனத்தி னுல்லாசத்திற் சேர்த்தலை வாயிலாப்பனவரெண்ணிலர்க்கு முன்படைத்தா ரென்றும், அவ்வருட் ப்ரசாதம்பெற்றதைமிகுந்ததருந்தினரென்றும், சகநிஷ்டையிலெதிரறச்சஞ்சரித்திருக்கின்றூர்களென்பதைவேட்டைகளாடி யிவர்கண்மூவருமங்கிருந்தனரென்றுங்கூறினர்.

(இ-நு-க-ம்.) பிரமத்தி லாரோபிதமாகத் தோற்றின கற்பனைகளை நீக்கி அப்பிரமவடிவமான எதார்த்தமாய்ச் சஞ்சரிக்கவேண்டு மென்பதாம்.

பாலன்கதை முற்றிற்று.

ஆக கதை-ம-க்கு கவிதை - சாயகூ.

---

# சித்தன் கதை.

## அவதாரிகை.

முன்புதிருக்குதிருஷ்டியில்லாதவர்களுக்குத் திரிஸ்யமுண்டுபோலத்தோற்றுமென்பதை யறிவித்து அத்திரிஸ்யஞ் சுகதுக்கானுபவமா யிருத்தலாற்கேவலமித்தையன்றிச் சிற்சத்திவிலாசமா யிருக்குமென்பதையு மம்மனமே காலவளவா யிருத்தலையு மறிவிக்கு நிமித்தம் சித்தன் கதையை நிரூபிக்கிறார்

## பிரமத்துக்குப் பந்தமின்றெனல்.

தங்கள்சங்கற்பத் தாலறிவில்லோர் சாலமோகிப்பர் நல்லறிஞர், பொங்குநல்விசார மதியினன்மயங்கார் புந்தியாற்பொய்ம்மையை யொழித்துத், துங்கமெய்புணர்வாய் பந்தமற்றிருந்துந் தொடர்புறுபந்தமுண்டென்று, பங்கமுற்றயரேலமலமாயழியாப் பரம்பொருள் பந்தமுற்றிடுமோ

(இ-ள்.) அறிவில்லோர்-அஞ்ஞானிகள், தங்கள்சங்கற்பத்தால்-தமது சங்கற்பத்தினல், சாலமோகிப்பர் - மிகவுமயங்குவார்கள், நல்லறிஞர்-சுகஞானிகள், பொங்குநல்விசாரமதியினன் மயங்கார்-ப்ரகாசிக்கின்றவாத்ம விசாரஞானத்தினன் மயங்கார்கள், புந்தியால் - அறிவினல், பொய்ம்மையையொழித்து - மித்தையைநீக்கி, துங்கமெய்-பரிசுத்தமானவுண்மையை உணர்வாய் - அறிந்துகொள்ளக்கடவாய், பந்தமற்றிருந்தும் - பந்தமில்லாதிருந்தும், தொடர்புறு பந்தமுண்டென்று - தொடர்கின்றபந்தமுண்டாயிருக்கின்றதென்று,பங்கமுற்றயரேல்-வேறுபட்டுத்தளராதே,அமலமாய்-நின்மலமாயும், அழியாப்பரம்பொருள் - நாசமில்லாததாயுமிருக்கின்றபிரமவஸ்து, பந்தமுற்றிடுமோ - கட்டுப்படுமோ—எ-று.

(இ-ரை.) அஞ்ஞானிகள் தமது சங்கற்பத்தினல் மிகவுமயங்குவார்கள். சுகஞானிகள் ப்ரகாசிக்கின்ற வாத்ம விசாரஞானத்தினன் மயங்கார்கள். அறிவினல் மித்தையைநீக்கி பரிசுத்தமான வுண்மையை அறிந்துகொள்ளக்கடவாய். பந்தமில்லாதிருந்தும் தொடர்கின்ற பந்தமுண்டாயிருக்கின்றதென்று வேறுபட்டுத்தளராதே. நின்மலமாயும் நாசமில்லாததாயுமிருக்கின்ற பிரமவஸ்து கட்டுப்படுமோ—என்பதாம்.

(இ-ம்.) சைதன்ய மொரு தன்மையதாக ப்ரகாசிக்க வதற்குப் பந்தமெப்படி யுண்டாமென்பதாம்.

## மனதுக்கே பந்தமுத்தியுண்டெனல்.

அந்தமற்றொன்றாய் விகற்பமற்றறிவா யழிவிலாப்பரம்பொருளிருக்க, பந்தமுற்றவரார் முத்திபெற்றவரார் பாவனை விகற்பமேயனைத்துஞ், சிந்தனைவிரிவு பந்தமாமதனைத் தீர்ந்திடன்முத்தியாமனத்தின், றொந்தலீலையினாற் றாரமாமணித்துந் தூரமுமண்ணிதாய்த்தோன்றும்.

(இ-ள்.) அந்தமற்று-(தேசகாலவஸ்துக்களான்)முடிவிறந்து, ஒன்றாய்-ஏகமாயும், விகற்பமற்று-(சுசாதீகவிசாதீகசுகத) பேதமிறந்து, அறிவாய்-சின்மாத்திரமாயு (மிருக்கின்ற), அழிவிலாப் பரம்பொருளிருக்க - கெடாதபிரமவஸ்துவிருக்க, பந்தமுற்றவரார் - பந்தத்தையடைந்தவரியார், முத்திபெற்றவரார்-வீடடைந்தவரியார், அனைத்தும்-சகலமும், பாவனைவிகற்பமே-பாவனுவிகற்பவிசாலமேயாம், சிந்தனைவிரிவுபந்தமாம்-நினைப்பின் விசாலமேபந்தமாகும், அதனைத்தீர்ந்திடன் முத்தியாம் - அதைவிடுவதே மோக்ஷமாகும், மனத்தின்றொந்தலீலையினால் - மனதினதுதொந்தமான விளையாட்டினால், அணித்துந்தூரமாம்-சமீபமுஞ்சேய்மையாம், தூரமும் - வெகுதூரமும், அண்ணிதாய்த்தோன்றும்-சமீபமாய்த்தோற்றும்—எ-று.

(இ-ஸ்.) தேசகாலவஸ்துக்களான் முடிவிறந்து ஏகமாயும் சுசாதீக விசாதீக சுகதபேதமிறந்து சின்மாத்திரமாயுமிருக்கின்ற கெடாத பிரமவஸ்துவிருக்க பந்தத்தை யடைந்தவரியார்? வீடடைந்தவரியார்? சகலமும் பாவனுவிகற்பவிசாலமேயாம். நினைப்பின் விசாலமே பந்தமாகும். அதை விடுவதே மோக்ஷமாகும். மனதினது தொந்தமானவிளையாட்டினால் சமீபமுஞ்சேய்மையாம். வெகுதூரமும் சமீபமாய்த்தோற்றும்—என்பதாம்.

(இ-ஃ.) மதிக்கின்ற மனதுக்கே சுக்துக்கமுண்டா மென்பதாம். (௨)

## மனமே தேசகாலமாயிருத்தலைத் திருஷ்டாந்தமாக வறிவித்தல்.

கருத்தின்வல்லமையாற் கற்பமோர்கணமாங் கணமொருகற்பமா மிவற்றைத் திருத்தமாயுணர்த்து மொருகதையதனாற்செகமெனு மிந்திரசாலங், குருத்துவமான மனத்தினுளிருக்குங் கொள்கைதோற்றிடுமென வுரைப்பா, னொருத்தனிங்கரிச்சந் திரகுலத்துள்ளா னுத்தரபாண்டவ நாட்டோன்.

(இ-ள்.) கருத்தின்வல்லமையால் - மனதின்வலியினால், கற்பமோர்கணமாம்-கற்பகாலமொருக்ஷணப்போதாம், கணமொருகற்பமாம்-க்ஷணங்கற்பகாலமாம், இவற்றை-இவைகளை, திருத்தமாயுணர்த்தும்-தெளிவாயறிவிக்கின்ற, ஒருகதை-ஒர்காதையாம், அதனால்-அக்கதையால்,செகமெனும்-

உலகமென்கின்ற, இந்திரசாலம் - இந்திரசாலமானது, குருத்துவமான - பெருமைபொருந்திய, மனத்தினுளிருக்கும் கொள்கை - மனத்திலிருக்கின்றதன்மையானது, தோற்றிடுமென - வெளியாகத்தோற்றுமென்று, உரைப்பான் - வசிட்டர்சொல்லுவார், இங்கொருத்தன்-இப்பூமியிலொரு புருடன், அரிச்சந்திரகுலத்துள்ளான்-அரிச்சந்திரவமிசத்திற் பிறந்தவன், உத்தரபாண்டவநாட்டோன்-உத்தரபாண்டவமென்னுந் தேயத்தையுடையவன்—எ-று.

(இ-ள்.) மனத்தின் வலியினல் கற்பகால மொருக்ஷணப்போதாம். க்ஷணங்கற்பகாலமாம். இவைகளைத் தெளிவாயறிவிக்கின்ற ஓர்காதையாம். அக்கதையால் உலகமென்கின்றஇந்திரஜாலமானது பெருமை பொருந்திய மனத்திலிருக்கின்ற தன்மையானது வெளியாகத் தோற்றுமென்று வசிட்டர் சொல்லுவார். இப்பூமியிலொருபுருடன் அரிச்சந்திரவமிசத்திற் பிறந்தவன். உத்தரபாண்டவமென்னுந் தேயத்தையுடையவன்—என்பதாம்.

(இ-ம்.) ஒன்றிற் பிரியம்வைத்ததிற் சுகிக்கும்போது கற்பங்கணமாகவுமனதையடைய முயற்சிக்கும்போது கணங்கற்பமாகவு மிருப்பது மனதேயன்றிவேறின்றென்பதாம். (௫)

## சித்தன் மயக்குதல்.

செந்திருவாணி புகழ்மகன்விந்தை செறிபுயன் லவணனும் பெயரோன், மந்திர நிறைந்த வமைச்சர்தற்சூழ மணிகொள்சிங் காதனத்திருப்ப, விந்திரஜால வல்லவனொருவ னெய்தின னிறைஞ் சிநின்றேத்திச், சந்திரனனைய பீலியின்சுழற்றூற்றராபதி காண்கெனச்சுழற்ற.

(இ-ள்.) செந்திரு - இலக்குமியும், வாணி - சரஸ்வதியும், புகழ்மகன்-துதிக்கின்றவிராசகுமாரன், விந்தை - விசையலட்சுமி, செறிபுயன் - வசிக்கின்ற புயங்களையுடையவன், லவணனும்பெயரோன் - லவணனென்னுநாமத்தையுடையவன், மந்திரநிறைந்த வமைச்சர் - ஆலோசனைகண் மிகுந்த மந்திரிகள், தற்சூழ - தன்னைச்சூழும்படி, மணிகொள் - நவரத்தினங்களினுல் செய்த, சிங்காதனத்திருப்ப - சிங்காதனத்தில் வீற்றிருக்க, இந்திரசாலம்-இந்திரசாலவித்தையில், வல்லவனொருவன் - வல்லமையுள்ளவொருபுருடன், எய்தினன்-வந்து, இறைஞ்சிநின்றேத்தி - வணங்கிப்புகழ்ந்து, சந்திரனனைய - மதிக்கொப்பான, பீலியின்சுழற்றூல் - (கண்கணிறைந்த) மயிற்றோகையின்சுழலினுல், தராபதிகாண்கெனச் சுழற்ற - அரசனே (யிவ்வித்தையைப்) பாருமென்றுசுழற்ற—எ-று.

(இ-ள.) இலக்குமியும், சரஸ்வதியும் துதிக்கின்ற விராஜகுமாரன், விசயலட்சுமி வசிக்கின்ற புயங்களை யுடையவன். லவணனென்னு நாமத்தை யுடையவன். ஆலோசனைகண்மிகுந்த மந்திரிகள் தன்னைச்சூழும்படி நவரத்தினங்களினுற் செய்த சிங்காதனத்தில் வீற்றிருக்க இந்திரஜாலவித்தையில் வல்லமையுள்ள வொருபுருடன் வந்து வணங்கிப்புகழ்ந்துமதிக்கொப்பான கண்கணிறைந்த மயிற்றோகையின் சுழலினால்அரசனே யிவ்வித்தையைப் பாருமென்று சுழற்ற—என்பதாம். (௪)

## குதிரைதோற்றல்.

சுத்தமாம்பரத்தாற் பலவித சிருட்டி தோற்றிடுமாயைதோற்றுதல்போற், சித்தனுற்காட்டிச் சுழற்றுறுபீலித் திகிரியைமன்னவன் பார்த்தா, னத்தலந்தனிலே சயிந்தவதேசத்ததிபதி விடுத்தவோர்தூதன், றத்துறுபுரவி யொன்றுகொண்டெய்தி சதமகன் பரிக்குநே ரென்று.

(இ-ள்.) சுத்தமாம்பரத்தால் - பரிசுத்தமாகிய பிரமத்தினுல், பலவித சிருட்டி - நாநாவிதமானசிருட்டிகளை, தோற்றிடுமாயை - தோற்றிவிக்கு மாயையானது, தோற்றுதல்போல் - தோற்றுகின்றதுபோல, சித்தனுற் காட்டி - சித்தனென்பவன் (வித்தைமுதலானவற்றைக் காண்பித்து), சுழற்றுறு - சுழற்றுகின்ற, பீலித்திகிரியை - மயிலிறகின்வட்டத்தை, மன்னவன்பார்த்தான் - அரசன் பார்த்தான், அத்தலந்தனில்-அவ்விடத்தில், சயிந்தவதேசத்ததிபதிவிடுத்த-சயிந்தவதேசத்தரசனனுப்பிய, ஓர்தூதன்-ஒருதூதனுனவன், தத்துறு-தாவாநின்ற, புரவியொன்று-ஒருகுதிரையை, கொண்டெய்தி - கொண்டுவந்து, சதமகன்பரிக்கு - தேவேந்திரன் குதிரைக்கு, நேரென்று - சமானமென்று—எ-று.

(இ-ா.) பரிசுத்தமாகிய பிரமத்தினுல் நாநாவிதமானசிருட்டிகளைத் தோற்றிவிக்கு மாயையானது தோற்றுகின்றதுபோல சித்தனென்பவன்வித்தைமுதலானவற்றைக்காண்பித்து சுழற்றுகின்ற மயிலிறகின் வட்டத்தை அரசன் பார்த்தான். அவ்விடத்தில் சயிந்தவதேசத் தரசனனுப்பிய ஒருதூதனுனவன் தாவாநின்ற ஒரு குதிரையைக் கொண்டுவந்து தேவேந்திரன் குதிரைக்குச் சமானமென்று—என்பதாம். (௫)

## அறிவுமயங்கல்.

மன்னவவுனக்கென் றெங்கள்கோன்விடுத்த வயப்பரியென்றலுஞ்சித்த, னின்னதுபோல்வ தில்லைநீயிதனி லேறுவா யென்றன

னினையோன்; சொன்னவைகேட்டு சித்திரம்போலத் துரகமே நாட்டமாய்வேந்தன், கன்னலீரிரண்டங் கிருந்தன னறிஞர் கவலை தீர் சமாதியுற்றென்ன.

(இ-ள்.) மன்னவ - அரசனே, உனக்கென்று - உமக்கென்று, எங்கள் கோன்விடுத்த - எங்களரசனனுப்பிய, வயப்பரியென்றலும் - வெற்றிக்குதிரை யென்றுசொல்லவும், சித்தன் - சாம்பிரியனானவன், இன்னதுபோல்வதில்லை - இக்குதிரையையொத்ததுகிடையாது, நீயிதனிலேறுவாயென்றனன்-நீரிதனிலேறுமென்றுசொல்லினன், இனையோன்-இத்தன்மையுள்ள சித்தன், சொன்னவைகேட்டு-கூறியவவைகளைக்கேட்டு, சித்திரம்போல - ஓவியம்போல, துரகமே - குதிரையே, நாட்டமாய் - நோக்காக, வேந்தன் - அரசன், கன்னலீரிரண்டு - முகூர்த்தநேரம், அறிஞர்கவலைதீர்சமாதியுற்றென்ன - ஞானிகடுன்பமற்ற சமாதியிலிருந்ததுபோல, அங்கிருந்தனன் - அங்கிருந்தான்—எ-று.

(இ-ள்) அரசனே உமக்கென்று எங்களரசனனுப்பியவெற்றிக்குதிரையென்று சொல்லவும் சாம்பிரியனானவன் இக்குதிரையை யொத்தது கிடையாது, நீரிதனிலேறுமென்றுசொல்லினன். இத்தன்மையுள்ள சித்தன் கூறியவவைகளைக்கேட்டு ஓவியம் போல குதிரையேநோக்காக அரசன் முகூர்த்தநேரம் ஞானிகடுன்பமற்ற சமாதியி லிருந்ததுபோல அங்கிருந்தான்—என்பதாம். ()

## அறிவுதெளிதல்.

வேந்தவை யிருந்தோ ரையமும்வியப்பு மிகுந்தன ரரும்பிய கமலப், பூத்திரளோடை போற்குவிந்திருந்தார் போதமோ டுபாதி யோடலைந்து, மூர்த்தமோரிரண்டு சென்றபின்றவிசின் முன்னுற வீழ்வுறுநின்ற, பார்த்திபன்றன்னை யயலுளோர்தாங்கப் பரந்து ழன் மனந்தெளிந் துணர்ந்தான்.

(இ-ள்.) வேந்தவையிருந்தோர்-இராசசபையிலிருந்தவர்கள், ஐயமும் - சந்தேகமும், வியப்பும்-அதிசயமும், மிகுந்தனர் - மிகுந்தார்கள், ஓடை-தடாகத்தில், அரும்பிய - குவிந்த, கமலப்பூத்திரள்போல் - தாமரைமலர் கூட்டத்தைப்போல, குவிந்திருந்தார்-(முகஞ்) சுருங்கியிருந்தார்கள், போதமோடு - அறிவுடனும், உபாதியோடு - உபாதியுடனும், அலைந்து-உழன்று, மூர்த்தமோரிரண்டுசென்றபின்-நான்குகடிகைநீங்கினபின்பு, தவிசின் -சிங்காதனத்தினது, முன்னுறவீழ் வுறுநின்ற - முன்பாக விழுகின்ற பார்த்திபன்றன்னை - இராசாவை, அயலுளோர்தாங்க - அருகிலிருப்பவர்கடாங்கிக்கொள்ள, பரந்துழன்மனம் - விரிந்துழல்கின்றமனது, தெளிந்துணர்ந்தான் - தெளிந்தறிந்தான்—எ-று.

(இ-ள.) இராசசபையிலிருந்தவர்கள் சந்தேகமும், அதிசயமும் மிகுந்தார்கள். தடாகத்தில்குவிந்த தாமரைமலர்கூட்டத்தை போல முகஞ்சுருங்கி யிருந்தார்கள். அறிவுடனும் உபாதியுடனும் உழன்று நான்குகடிகை நீங்கினபின்பு சிங்காதனத்தினது முன்பாக கவிழுகின்ற இராசாவை அருகிலிருப்பவர்க டாங்கிக் கொள்ள விரிந்துழல்கின்ற மனது தெளிந்தறிந்தான்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) லவணனறிவு தெளியும்பொருட் டவனுக்கு மனோமாயையின் வல்லமையைத் தெரிவித்ததாம். (எ)

## மனோராச்சியஞ்செய்த சரிதையையுரைத்தல்.

அனையவன்றன்னை யமலநெஞ்சினை நீ யயர்வுறவந்ததென்னென்ன, வினையமந்திரியர் வினவலும்வேந்தன் விழித்திதுகேளுமென்றுரைப்பான், றுனையுறப்பீலி சுழற்றி யிச்சித்தன் சொல்லிட மயங்கியிப்பரிமே, னினைவுறவேறி வேட்டையின்பொருட்டா னீணெறிகடிதுறச்சென்றேன்.

(இ-ள்.) அனையவன்றன்னை - அப்படிப்பட்ட வரசனை, அமலநெஞ்சினைநீ - நின்மலமான மனதையுடையநீர், அயர்வுறவந்ததென்னென்ன - தலரும்படிவந்ததென்னவென்று, வினையமந்திரியர் வினவலும் - வணக்கமுள்ள வமைச்சர்கள்கேட்கவும், வேந்தன்விழித்து - அரசன் விழித்துக் கொண்டு, இதுகேளுமென்றுரைப்பான் - இதைக்கேளுங்களென்று சொல்லுவான், துனையுறப்பீலிசுழற்றி-சமீபமாகமயிற்றோகையைச்சுழற்றி, இச்சித்தன்சொல்லிட - இச்சாம்பரிகன் சொல்ல, மயங்கி - (அறிவு) மயங்கி, இப்பரிமேல் - இக்குதிரையின்மேல், நினைவுறவேறி - நினைப்புடனேறி, வேட்டையின்பொருட்டு - வேட்டையாடுநிமித்தம், நீணெறி-வெகுதூரம், கடிதுறச்சென்றேன் - சீக்கிரத்திற்போயினன்—எ-று.

(இ-ா.) அப்படிப்பட்ட வரசனை நின்மலமானமனதையுடைய நீர் தளரும்படி வந்ததென்னவென்று வணக்கமுள்ளவமைச்சர் கேட்கவும் அரசன் விழித்துக்கொண்டு இதைக்கேளுங்களென்று சொல்லுவான்! சமீபமாக மயிற்றோகையைச்சுழற்றி இச் சாம்பரிகன் சொல்ல அறிவு மயங்கி இக்குதிரையின்மேல் நினைப்புடனேறி வேட்டையாடு நிமித்தம் வெகுதூரம் சீக்கிரத்திற்போயினன்—என்பதாம். (அ)

இதுவுமது.

அறிவுறுமனத்தா லயர்வுறுபோகத் தறிவிலார் மருண்டுபோவதுபோற், செறிநெடுந்தூரம் பரியினற்சென்று தீயினலியாவையும் வெந்து, பொறியெழும்பாலை வனத்திலேபுகுந்து புரவியுமியானு மெய்வருந்தி, யெறிசுடர்மேற்பா லெய்துறுமளவு மிடருறமயங்கி நெஞ்சிளைத்தேன்.

(இ-ள்.) அறிவுறுமனத்தால்-விவேகமில்லாத மனதினல், அயர்வுறுபோகத்து-வருத்தத்தையுடையசெல்வத்தில், அறிவிலார்-அஞ்ஞானிகள், மருண்டுபோவதுபோல் - மயங்கிச்செல்வதுபோல, செறிநெடுந்தூரம்-மிகவும்வெகுதூரம், பரியினற்சென்று - குதிரையினற்போய், தீயினல்-அக்கினியினல், இயாவையும்வெந்து - சகலமும்வெந்து, பொறியெழும் - பொறிகள் சிதறுகின்ற, பாலைவனத்திலேபுகுந்து - பாலைவனத்தினுழைந்து, புரவியுமியானும் - குதிரையும் நானும், மெய்வருந்தி - சரீரநொந்து, எறிசுடர் - வீசாநின்றப்ரகாசத்தையுடைய சூரியன், மேற்பால் - மேற்றிக்கில், எய்துறுமளவும்-அடையும்பரியந்தம், இடருறமயங்கி - துன்பத்துடன்மயக்கமுற்று, நெஞ்சிளைத்தேன் - மனந்தளர்ந்தேன்—எ-று.

(இ-ரை.) விவேக மில்லாத மனதினல் வருத்தத்தையுடைய செல்வத்தில் அஞ்ஞானிகள் மயங்கிச் செல்வதுபோல மிகவும் வெகுதூரம் குதிரையினற்போய் அக்கினியினற் சகலமும்வெந்து பொறிகள் சிதறுகின்ற பாலைவனத்தி னுழைந்துகுதிரையும் நானும் சரீரநொந்து வீசாநின்ற ப்ரகாசத்தையுடைய சூரியன் மேற்றிக்கி லடையும்பரியந்தம் துன்பத்துடன் மயக்கமுற்று மனந்தளர்ந்தேன்—என்பதாம். (கூ)

இதுவுமது.

குடும்பபாரத்தை விவேகிகள்கடக்குங் கொள்கைபோற்பாலையைக்கடந்து, நெடும்பணைநாவற்கடம்பெலுமிச்ச நிறைந்துபுட்குரலினனிரம்பி, யிடும்பைதீர்சோலையெய்தலுமாங்கோரிளங்கொடிபிணித்ததென்கழுத்திற், கடும்பரியெனைவிட்டகன்றதுகங்கைகலந்தவர் பாவமேயென்ன.

(இ-ள்.) குடும்பபாரத்தை-சம்சாரசுமையை, விவேகிகள் - ஞானிகள், கடக்குங்கொள்கைபோல்-துறந்து செல்கின்றதன்மையைப்போல, பாலையைக்கடந்து - பாலைவனத்தைத்தாண்டி, நெடும்பணை நாவல்-நீண்டகிளைகளையுடைய சம்புவிருக்ஷமும், கடம்பு - கடம்பவிருக்ஷமும், எலுமிச்சம் - எலுமிச்சவிருக்ஷமும், நிறைந்து - (எங்கு) நெருங்கியும், புட்குரலினனிரம்பி-பக்ஷிசத்தங்களினன்மிகுந்து மிருக்கின்ற, இடும்பைதீர்சோலை-துன்ப

மில்லாதவனத்தில், எய்தவும்-போகவும், ஆங்கு - அவ்விடத்தில், ஓரிளங்கொடி-ஒரழகியவல்லியானது, என்கழுத்தில்-எனதுகண்டத்தில், பிணித்தது-சுற்றிக்கொண்டது, கங்கைகலந்தவர்-கங்காநதியின் மூழ்கினவர்களுடைய, பாவமென்ன - பாவத்தைப்போல, கடும்பரி - வேகமுள்ளகுதிரையானது, என்னைவிட்டகன்றது - என்னைவிட்டு நீங்கிற்று—எ-று.

(இ-ள.) சம்சாரசுமையை ஞானிகள் துறந்து செல்கின்றதன்மையைப்போல பாலைவனத்தைத்தாண்டி நீண்டகிளைகளையுடைய சம்புவிருக்ஷமும், கடம்பவிருக்ஷமும், எலுமிச்ச விருக்ஷமும், எங்குநெருங்கியும், பக்ஷியின் சத்தங்களினுன் மிகுந்து மிருக்கின்ற துன்பமில்லாத வனத்திற்போகவும் அவ்விடத்தில் ஓரழகிய வல்லியானது எனதுகண்டத்தில் சுற்றிக்கொண்டது. கங்காநதியின் மூழ்கினவர்களுடைய பாவத்தைப்போல வேகமுள்ள குதிரையானது என்னைவிட்டுநீங்கிற்று—என்பதாம். (௧௦)

இதுவுமது.

கழுத்துறுகொடியா லூசல்போற்றூங்கிகாவுறைதென்றலாற்குளிர்ந்து, முழுத்திறமோகத் தழுந்திநெஞ் சயர்ந்தேன்முழுக்குநற்பூசனைநியமம், விழுத்தகுநல்லூணின்றியேநிசியாம் வீண்பொழுதணையவப்பொழுதிற், பழுத்தவல் லிருளுந் துன்பமுங்குளிரும் பல்லறையோசையுந் துணையாய்.

(இ-ள்.) கழுத்துறு - கண்டத்திற்சுற்றிய, கொடியால் - வல்லியினுல், ஊசல்போல் - ஊசலைப்போல, தூங்கி - தொங்கிக்கொண்டு, காவுறை - கானகத்திற்பொருந்திய, தென்றலால் - தென்றற்காற்றினுல், குளிர்ந்து-குளிர்வுற்று, முழுத்திறம் - மிகுந்த திடத்தையுடைய, மோகத்தழுந்தி - மயக்கத்தின்முழுகி, நெஞ்சயர்ந்தேன் - மனந்தளர்ந்தேன், முழுக்கு-ஸ்நானமும், பூசனை - பூசையும், நியமம் - தியானமும், விழுத்தகுநல்லூண - சிறந்தநல்லபுசிப்புகளும், இன்றி - இல்லாமல், நிசியாம்வீண்பொழுதணைய-இரவென்கின்றவீண்காலம்வர, அப்பொழுதில் - அவ்விரவில், பழுத்தவல்லிருளும் - முதிர்ந்த வலியவிருட்டும், துன்பமும் - துக்கமும், குளிரும் - குளிர்ச்சியும், பல்லறையோசையும் - பன்னடிக்கத்தினேசையும், துணையாய் - சகாயமாயிருக்க—எ-று.

(இ-ள.) கண்டத்திற் சுற்றிய வல்லியினுல் ஊசலைப்போல தொங்கிக்கொண்டு கானகத்திற் பொருந்திய தென்றற்காற்றினுல் குளிர்வுற்று மிகுந்த திடத்தையுடைய மயக்கத்தின் முழுகி மனந்தளர்ந்தேன் ! ஸ்நானமும். பூசையும், தியானமும், சிறந்த நல்ல புசிப்புகளுமில்லாமல் இரவென்கின்ற வீண்காலம் வர அவ்விர

வில் முதிர்ந்த வலிய விருட்டும், தூக்கமும், குளிர்ச்சியும், பன்னடுக்கத்தினோசையும் சகாயமாயிருக்க—என்பதாம்· (௧௧)

இதுவும்அது·

மனத்திரு ளகற்று மறிவுபோலந்த வல்லிருளிரவிவந்தகற்ற, புனைத்துறுகொடியை யறுத்தவணிறங்கி பொழில்புகுந்தொருவரைக் காணேன், கனத்ததோர்பகலி லெட்டிலொன்றான கடிகையுங்ககன்றதற்பின்ன, ரினத்தலாளொருத்தி தன்னைமுன் னெதிர்ந்தே னிரவினைமதி யெதிர்ந்தன்ன.

(இ-ள்.) மனத்திருளகற்றும்-மனோவிருளைநீக்குகின்ற, அரிவுபோல்-ஞானத்தைப்போல, அந்தவல்லிருள் - அவ்வலியவிருட்டை, இரவிவந்தகற்ற - சூரியதனுதயமாகிநீக்க, புனைத்துறுகொடியை-கண்டத்திற்சுற்றிய வல்லியை, அறுத்தவணிறங்கி - தறித்தவ்விடத்திலிறங்கி, பொழில் புகுந்து - சோலையுணுழைந்து, ஒருவரைக்காணேன் - (அவ்விடத்) தொருவரையும்பார்த்திலன், கனத்ததோர்பகலில் - கனமானவொருமத்தியானத்தில், எட்டிலொன்றானகடிகை - மூன்றேமுக்காநாழிகை, அகன்றதற்புன்னர் - கழிந்தபின்பு, இனத்தலாள் - (நமது) குலமல்லாத, ஒருத்திதன்னை - ஒரு நீசப்பெண்ணை, இரவினை மதியெதிர்ந்தன்ன - இருளைச்சந்திரனெதிர்ந்ததுபோல, முன்னெதிர்ந்தேன் - (அவள்) முன்னெதிர்ப்பட்டேன்—எ-று.

(இ-ணா.) மனோவிருளை நீக்குகின்ற ஞானத்தைப்போல அவ்வலிய விருட்டை சூரிய னுதயமாகி நீக்க கண்டத்திற் சுற்றிய வல்லியைத்தறித் தவ்விடத்திலிறங்கி சோலையுணுழைந்து அவ்விடத்தொருவரையும் பார்த்திலன். கனமான வொரு மத்தியானத்தில் மூன்றேமுக்காநாழிகை கழிந்தபின்பு நமது குல மல்லாதஒரு நீசப்பெண்ணை இருளைச் சந்திர னெதிர்ந்ததுபோல அவள் முன்னெதிர்ப்பட்டேன்—என்பதாம்.

புனைந்துறுவென்பது புனைந்துறுவென விகாரமாயிற்று. (௧௨)

இதுவுமது.

கருகியநிறமுங் கருநிறத்துகிலுங் கைத்தலத்தன்னமுமாகி யருகுவந்துறலும் பசிப்பிணியாற்றா தவளைநானன்னமே யென்னக், கருதியென் றிரந்தேன் பசியினா லெவர்க்குந் தாழ்வுவந்துறுமெனல் கண்டேன், வருதவஞ் செயாதோர்விரும்பியபொருட்போன் மற்றவளளித்தில ளன்னம்.

(இ-ள்.) கருகிய நிறமும் - கறுதத நிறமும், கருநிறத்துகிலும் - கருநிறமுள்ளவஸ்திரமும், கைத்தலத்து - அஸ்தத்தில், அன்னமுமாகி - அமுதுள்ளவளாய், அருகுவந்துறலும் - (என்) பக்கத்தில் வரவும், பசிப்பிணியாற்றாது - பசிநோய்தாங்காமல், அவளை - அப்பெண்ணை, நான் - யான்,

அன்னமே - அன்னநடையாளே, அன்னந்தருதியென்று-அமுதைத்தருவாயென்று, இரந்தேன் - யாசித்தேன், பசியினால் - உதராக்கினியினால், எவர்க்கும் - யாவருக்கும், தாழ்வுவந்துறுமெனல் - இழிவுவருமென்பதை, கண்டேன் - தெரிந்தேன், வருதவஞ்செயாதோர் - (சிந்தித்து) வரத்தக்க தவமியற்றாதவர்கள், விரும்பியபொருட்போல்-இச்சித்தவஸ்துபோல, மற்றவள் - அப்பெண்ணானவள், அன்னம் - அமுதை, அளித்திலள் - கொடுத்திலள்—எ-று.

(இ-ள.) கறுத்த நிறமும், கருநிறமுள்ள வஸ்திரமும், அஸ்தத்தில் அமுதுள்ளவளாய் என்பக்கத்தில் வரவும், பசிநோய் தாங்காமல் அப்பெண்ணை யான் அன்னநடையாளே! அமுதைத் தருவாயென்று யாசித்தேன், உதராக்கினியினால் யாவருக்கும் இழிவு வருமென்பதைத் தெரிந்தேன். சிந்தித்ததுவரத்தக்க தவமியற்றாதவர்கள் இச்சித்த வஸ்துபோல அப்பெண்ணானவள் அமுதைக் கொடுத்திலள்—என்பதாம். (௧௩)

இதுவுமது.

சோலைதோறுழலு மவள்பிறகேகி சோருமென் பசித்துயர் சொல்ல, நீலைநின்றுரைப்பா ணீசர்கன்னிகையா னினக்கென தன்னமா மென்னின், மாலையிட்டெங்கட் சேரியிற்பிதாமுன் வந்தெனைப் புணர்தியேலிந்த, வேளையிலளிப் பே னென்றலுமியைந்தேன் விருப்பொடு மளித்தனளன்னம்.

(இ-ள்.) சோலைதோறுழலும் - தோப்புகடோறும் சுத்தாநின்ற, அவள்பிறகேகி - அவள்பின்னேதொடர்ந்து, சோரும் - வாடுகின்ற, என்பசித்துயர்சொல்ல - என்பசியின் வருத்தத்தைச்சொல்ல, நீலைநின் றுரைப்பாள் - கரியவள்சொல்லுவாள், யான் - நான், நீசர்கன்னிகை - நீசப்பெண், நினக்கு-உமக்கு, எனதன்னமாமென்னில், எனதமுதமாகுமென்றால், எங்கள்சேரியில் - எங்களூரில், பிதாமுன்வந்து - (என்) றந்தையின்முன் வந்து, மாலையிட்டு - கலியாணஞ்செய்து, எனைப்புணர்தியேல் - என்னுடன் சேர்வையாயின், இந்தவேளையிலளிப்பேன் - இச்சமயத்திற்கொடுப்பேன், என்றலும் - என்றுசொல்லவும், இயைந்தேன் - (அதற்குச்) சம்மதித்தேன், விருப்பொடு - ஆசையோடும், அன்னம் - அமுதை, அளித்தனள் - கொடுத்தாள்—எ-று.

(இ-ள.) தோப்புகடோறுஞ் சுத்தாநின்ற அவள்பின்னே தொடர்ந்து வாடுகின்ற என்பசியின் வருத்தத்தைச்சொல்ல, கரியவள் சொல்லுவாள். நான் நீசப்பெண் உமக்கு எனதமுதமாகுமென்றால் எங்களூரில் என்றந்தையின்முன்வந்து கலியாணஞ்செய்து என்னுடன் சேர்வையாயின் இச்சமயத்திற் கொடுப்பேன் என்று சொல்லவும், அதற்குச் சம்மதித்தேன். ஆசையோடும் அமுதைக்கொடுத்தாள்—என்பதாம். (௧௪)

### இதுவுமது

நல்கியபாதி யன்னமுமருந்தி நாவலின்கனிச்சுவைபருகி, யொல்கியதுயர்போ யிருத்தலும்புறத்தி லுலாவுநல்லுயிரென வென்னைப், புல்கியகரத்தாற் பற்றினள்பிதாமுன் போயினள் யாதனுசரீர, மல்கியபயஞ்செய் நரகிலேகொடுபோய் மறுக்கமே செய்யுமாறென்ன.

(இ-ள்.) நல்கியபாதியன்னமும் - கொடுத்தபாதியமுதையும், அருந்தி-புசித்து, நாவலின்கனிச்சுவைபருகி - நாவற்பழவிரசமுங்குடித்து, ஒல்கியதுயர்போய் - தளர்ந்தபசித்துன்பநீங்கி, இருத்தலும் - இருக்கவும், புறத்திலுலாவும் - புறத்திற்சஞ்சரிக்கின்ற, நல்லுயிரென - நற்பிராணியென்ன, என்னைப்புல்கிய - என்னைப்பொருந்திய, கரத்தாற்பற்றினள் - கைகளினுற்பிடித்து, யாதனுசரீரம் - சூட்சுமசரீரத்தை, மல்கியபயஞ்செய்-மிகவும் பயத்தைச்செய்கின்ற, நரகிலேகொடுபோய் - நரகத்திற்கொண்டுபோய், மறுக்கமேசெய்யுமாறென்ன - வருத்துவதுபோல, பிதாமுன்போயினள் - (மனம் வருந்தத்தன்) றந்தைமுன் கொண்டுபோயினுள்—எ-று.

(இ-ளை.) கொடுத்த பாதியமுதையும்புசித்து, நாவற்பழவிரசமுங்குடித்து, தளர்ந்த பசித்துன்பநீங்கியிருக்கவும் புறத்திற்சஞ்சரிக்கின்ற நற்பிராணியென்ன, என்னைப்பொருந்திய கைகளினுற்பிடித்து சூட்சுமசரீரத்தை மிகவும்பயத்தைச்செய்கின்ற நரகத்திற்கொண்டுபோய் வருத்துவதுபோல மனம்வருந்தத் தன்றந்தைமுன் கொண்டுபோயினுள்—என்பதாம். (௧௫)

### இதுவுமது.

நண்புறுமிவனென் னுயகனுக நல்கெனத்தாதையும் பொருந்திப், பண்புறவிருவர் தமையும்வேதாள பந்தனவனத்தினின்றகன்று, கண்புகத்தோன்றுங் காலதூதரைப்போற் கருநிறத்தவன்கொடுபோகி, யுண்புலால்வீசுஞ் சேரியிலடைந்தா னெருப்படுமணஞ்செய்வா னுன்னி.

(இ-ள்.) நண்புறுமிவன் - (எனக்) கிஷ்டமுள்ளவிப்புருடனை, என்னுயகனுக - என்கொழுனனுக, நல்கென - கொடுப்பாயென் (றப்பெண்) கேட்க, தாதையும்பொருந்தி-பிதாவுஞ்சம்மதித்து, பண்புறவிருவர்தமையும்-குணப்பட விரண்டுபேர்களையும், வேதாளபந்தனம் - பசாசபந்தனமுள்ள, வனத்தினின்றகன்று-கானகத்தினின்றுநீங்கி, கண்புகத்தோன்றும்-விழிக்குத்தோற்றுகின்ற, காலதூதரைப்போல் - எமபடர்களைப்போல, கருநிறத்தவன் கொடுபோகி - கரிய நீசனுனவனழைத்துக்கொண்டுபோய், உண்புலால்வீசும் - புசிக்கின்றமாமிசவாசனைகள் பரிமளிக்கின்ற, சேரியிலடை

ந்தான் - தனதூரிலடைந்து, ஒருப்படுமெணம் - ஒருமையான கலியாணம், செய்வானுன்னி - செய்யநினைத்து—எ-று.

(இ-ள.) எனக்கிஷ்டமுள்ள விப்புருடனை என்கொழுனனுக் கொடுப்பாயென் றப்பெண்கேட்க, பிதாவுஞ்சம்மதித்துக்குணப்படவிரண்டுபேர்களையும் பசாசபந்தனமுள்ள கானகத்தினின்று நீங்கி விழிக்குத்தோற்றுகின்ற எமபடாளைப்போல கரியநீசனுனவனழைத்துக்கொண்டுபோய் புசிக்கின்றமாமிசவாசனைகள் பரிமளிக்கின்ற தனதூரிலடைந்து ஒருமையான கலியாணம்செய்ய நினைத்து—என்பதாம். (௧௬)

இதுவுமது.

வானரம்புரவி குக்குடங்காகம் வராகமென் பனவரிந்தெடுப்ப, வூனரம்புணங்க பறவைவீழ்ந்தலைப்ப வுலவிய சிறுவர் கைத்தசையி, லீனவீயிரைப்ப வுதிரமுமென்பு மெல்லையிற் சேரியிலெய்தி, கானரம்பைகளே நாட்டியகுடிலிற் கடிமணந்தொடங்கினர் களிப்பால்.

(இ-ள்.) வானரம் - குரங்கும், புரவி - குதிரையும், குக்குடம்-கோழியும், காகம் - காக்கையும், வராகம் - பன்றியும், என்பன - என்றுசொல்லப்பட்ட மாமிசவகைகளை, அரிந்தெடுப்ப - அரிந்தெடுக்கவும், ஊனரம்புணங்க - மாமிசங்கணரம்பில் (தோரணங்களாக) காயவும், பறவைவீழ்ந்தலைப்ப - பக்ஷிகளுராய்ந்தலைக்கவும், உலவியசிறுவர் - நடக்கின்ற குழந்தைகளுடைய, கைத்தசையில் - கரத்திலிருக்கும் மாமிசங்களில், ஈனவீயிரைப்ப - இழிவுள்ள வீக்கள் சத்திக்கவும், உதிரமும் - இரத்தமும், என்பும் - அஸ்தியும், எல்லையில் - அவற்றிருக்கின்ற, சேரியிலெய்தி - பறச்சேரியில் வந்து, அரம்பைகள் - வாழைகளையே, கால் - காலாக, நாட்டியகுடிலில் - நட்டிருக்கின்றபந்தலில், களிப்பால் - சந்தோஷத்தினுல், கடிமணந்தொடங்கினர் - புதுமையான கல்யாணஞ்செய்யத் தொடங்கினுர்கள்—எ-று.

(இ-ள.) குரங்கும், குதிரையும், கோழியும், காக்கையும், பன்றியும் என்றுசொல்லப்பட்ட மாமிசவகைகளை அரிந்தெடுக்கவும், மாமிசங்கணரம்பில் தோரணங்களாகக்காயவும், பக்ஷிகளுராய்ந்தலைக்கவும், நடக்கின்றகுழந்தைகளுடைய கரத்திலிருக்கும் மாமிசங்களில் இழிவுள்ள வீக்கள் சத்திக்கவும், இரத்தமும், அஸ்தியும், அவற்றிருக்கின்ற பறச்சேரியில்வந்து வாழைகளையே காலாகநட்டிருக்கின்ற பந்தலில் சந்தோஷத்தினுல் புதுமையான கல்யாணஞ்செய்யத்தொடங்கினுர்கள்—என்பதாம். (௧௭)

இதுவுமது.

மலினவூன்றுன்னுஞ் சிறுகணுனேக்கி மருகனல்லவனென மகிழ்ந்தாள், கலியினுங்கறுத்த கூன்கிழமாமி கடையர்மற்றியாவருங்கூடி, யொலிபடுபறைகண் முழக்கினர்மதுவூன்களுஞ் சமைத்தனரவளை, நலிதருபாவம் யாதனுசரீர நல்குமாறெனவவ னளித்தான்.

(இ-ள்.) மலினவூன்றுன்னும் - இழிவுள்ள மாமிசநெருங்கிய, சிறுகணுனேக்கி - சிறியவிழிகளாற்பார்த்து, மருகனல்லவனென - மருமகனல்லவனென்று, கலியினுங்கறுத்த கூன்கிழமாமி - யமனிலுங்கறுத்த கூனையுடைய கிழமாமியானவள், மகிழ்ந்தாள் - களித்தாள், கடையர்மற்றியாவருங்கூடி - சண்டாளரனைவருஞ்சேர்ந்து, ஒலிபடுபறைகண்முழக்கினர் - சத்திக்கின்ற வாத்தியங்களடித்தார்கள், மதுவூன்களுஞ்சமைத்தனர் - கள்ளையும் மாமிசங்களையும் பாகஞ்செய்தார்கள், அவளை - அப்பெண்ணை, நலிதருபாவம் - அழிவுசெய்கின்ற பாவமானது, யாதனுசரீர நல்குமாறென-(நரகத்தில் வருந்துகின்ற) யாதனுசரீரத்தைக்கொடுப்பதுபோல, அவனளித்தான் - அந்த நீசன் கன்னிகாதானஞ்செய்தான்—எ-று.

(இ-கா.) இழிவுள்ள மாமிசநெருங்கிய சிறியவிழிகளாற் பார்த்து மருமகனல்லவனென்று யமனிலுங்கறுத்த கூனையுடைய கிழமாமியானவள் களித்தாள். சண்டாளரனைவருஞ் சேர்ந்து சத்திக்கின்றவாத்தியங்களடித்தார்கள். கள்ளையும் மாமிசங்களையும் பாகஞ்செய்தார்கள். அப்பெண்ணை அழிவுசெய்கின்ற பாவமானது நரகத்தில்வருந்துகின்ற யாதனுசரீரத்தைக் கொடுப்பதுபோல அந்தநீசன் கன்னிகாதானஞ்செய்தான்—என்பதாம். (௪அ)

இதுவுமது.

கடியபாதகங்களுருவுகொண்டனைய கடையர்கல்யாணநாளேழின், முடிதலுமவளோ டெண்மதிகழித்தேன் முகிண்முலைபூத்தவள் வாணுள், கொடியதோர்விபத்து தருந்துபர்போலோர் குழந்தையையளிக்கவக்குழந்தை, வடிவறவெந்தகட்டைபோனிறத்து வளர்ந்ததுமூர்க்கர்தம் மனம்போல்.

(இ-ள்.) கடியபாதகங்கள்-கொடியபாவங்களானவை, உருவுகொண்டனைய - வடிவுகொண்டதுபோல, கடையர்கல்யாணம் - சண்டாளர்களுடையவிவாகமானது, நாளேழில் - ஏழுதினத்தில், முடிதலும் - நிறைவேறவும், அவளோடெண்மதிகழித்தேன் - அந்த நீசப்பெண்ணுடனிருந்தெட்டுமாதங் கழித்தேன், முகிண்முலைபூத்தவள் - முகைபோன்றதனங்களு

டன்புஷ்பவதியானவள், வாணுள்-(என்னுடன்புணர்ந்து) சுகிக்குங்காலத்தில், கொடியதோர்விபத்து - கொடுமையான வோராபத்து, தருந்துயர்போல் - கொடுக்கின்றதுன்பத்தைப்போல, ஓர்குழந்தையை யளிக்க-ஒரு குழந்தையைப்பெற, அக்குழந்தை-அக்குழவியும், வடிவற வெந்த கட்டைபோல் - (தன்) னுருவுகெடவெந்த விறகைப்போலிருக்கின்ற, நிறத்து - கரிநிறத்தோடும், மூர்க்கர் தம்மனம்போல - மூடர்களுடைய மனதைப்போல, வளர்ந்தது - வளர்ந்தது.

(இ-ா.) கொடிய பாவங்களானவை வடிவுகொண்டதுபோல சண்டாளர்களுடைய விவாக மானது ஏழுதினத்தில் நிறைவேறவும் அந்த நீசப்பெண்ணுடனிருந் தெட்டுமாதங்கழித்தேன்.முகைபோன்ற தனங்களுடன் புஷ்பவதியானவள் என்னுடன் புணர்ந்து சுகிக்குங்காலத்தில் கொடுமையான வோராபத்து கொடுக்கின்ற துன்பத்தைப்போல ஒரு குழந்தையைப்பெற அக்குழவியும் தன்னுருவுகெடவெந்தவிறகைப்போலிருக்கின்ற கரிநிறத்தோடும்மூடர்களுடைய மனதைப்போலவளர்ந்தது—என்பதாம். (கக)

இதுவுமது

பின்னர்மூவாண்டிற் பேதைமையளிக்கும் பிறப்பெனவொரு மகப் பெற்று, ளன்னவண்மீட்டு மாசையிற்றேன்று மனர்த்தமேயென்னவோர் குழவி, தன்னையுமளித்தா ளிவரொடு நெடுநாடங்கினன்குடும்ப பாரத்தி, லின்னலாலவர்தா பத்தினுல்வருந்து மிடும்பையாற் சரைத்ததென் யாக்கை.

(இ-ள்.) பின்னர்மூவாண்டில் - பின்பு மூன்றுவருஷத்தில், பேதைமையளிக்கும்பிறப்பென-அறியாமையைக்கொடுக்கின்றசநநத்தைப்போல ஒருமகப்பெற்றுள்-ஒருபுத்திரனையீன்றுள், அன்னவண்மீட்டும்-அவடிரும்பவும், ஆசையிற்றேன்றுமனர்த்தமேயென்ன - துராசையிலுண்டாகிய வனர்த்தத்தைப்போல, ஓர் குழவி தன்னையும்-ஒருகுழந்தையையும், அளித்தாள் - பெற்றுன், இவரோடும் - இம்மனைவிபுத்திரர்களோடுமே, நெடுநாடங்கினன் - அநேககாலங்கூடியிருந்தேன், குடும்பபாரத்தின் - சம்சாரத்தினது, இன்னலால் - துன்பங்களாலும், அவர்தாபத்தினுல் - அவர்கள்படும் வருத்தத்தினுலும், வருந்து மிடும்பையால்-நான் வருத்தப்படுகின்ற துன்பத்தினுலும், என்யாக்கை - எனதுசரீரம், சரைத்தது - மூப்படைந்தது—எ-று.

(இ-ா.) பின்பு மூன்றுவருஷத்தில் அறியாமையைக்கொடுக்கின்ற சநநத்தைப்போல ஒருபுத்திரனையீன்றுள். அவடிரும்பவும் துராசையிலுண்டாகிய வனர்த்தத்தைப்போல ஒருகுழந்தையையும் பெற்றுள், இம்மனைவி புத்திரர்களோடும் அநேககாலங் கூடியிருந்தேன். சம்சாரத்தினது துன்பங்களாலும், அவர்கள்படும் வரு

த்தத்தினுலும், நான் வருத்தப்படுகின்ற துன்பத்தினுலும் எனது சரீரம் மூப்படைந்தது—என்பதாம். (௨0)

இதுவுமது.

**வெம்புறுமூப்பான் மெலியுநாளந்தவிந்தவெற்பருகுறுசாரர், பைம்புயன்மறுத்து மண்ணினீர்சுண்டி பசியினுலுயிரெலாம் பதைப்ப, கொம்பொடு கொடியும் புல்லும்வெந்தெங்கும் கோடையாற் பொடிபர வரலு, மெம்புதுக்கிளைஞ ரிறந்தவரநேக ரெங்கணுமேகின ரநேகர்.**

(இ-ள்.) வெம்புறு - வருந்துகின்ற, மூப்பான்மெலியுநாள் - வயோதிகத்தினு லிளைக்கின்ற காலத்தில், அந்தவிந்தவெற்பருகுருசரால் - அவ்விந்தமலையின் பக்கத்திலிருக்கின்ற வடிவாரத்தில், பைம்புயன்மறுத்து - பசியமேகம் வருஷியாமல், மண்ணினீர்சுண்டி - பூமியிற் சலமில்லாமற்காய்ந்து, பசியினுலுயிரெலாம் பதைப்ப - உதராக்கினியினு லுயிர்களைத் துந்துடிக்க, கொம்பொடும் - கிளைகளையுடைய (விருக்ஷங்க) ளுடன், கொடியும் - (படர்கின்ற) கொடிகளும், புல்லும் - புல்லுகளும், வெந்து - எரிந்து, எங்கும் - எவ்விடத்தும், கோடையால் - வெய்யலினுல், பொடிபட வரலும் - புழுதியாகும்படி வரவும், எம்புதுக்கிளைஞர் - எமது புதிய வுறவினர்கள், அநேகரிறந்தனர் - வெகுபெயர் மரித்தார்கள், அநேகர் - பலர், எங்கணுமேகினர் - பலதேயங்களிலுஞ் (சிதறிப்) போனுர்கள்—எ-று.

**(இ-ஙா.) வருந்துகின்ற வயோதிகத்தினுலிளைக்கின்றகாலத்தில் அவ்விந்தமலையின் பக்கத்தி லிருக்கின்ற வடிவாரத்தில் பசியமேகம் வருஷியாமல் பூமியிற்சலமில்லாமற்காய்ந்து உதராக்கினியினு லுயிர்களைத்துந்துடிக்க, கிளைகளையுடைய விருக்ஷங்களுடன் படர்கின்ற கொடிகளும், புல்லுகளும் எரிந்துஎவ்விடத்தும் வெய்யலினுல் புழுதியாகும்படிபரவும்எமது புதியவுறவினர்கள்வெகுபெயர்மரித்தார்கள், பலர்பலதேயங்களிலுஞ் சிதறிப்போனுர்கள்.**

இதுவுமது.

**தனையரிலிருவர் தோள்களிலிருப்ப தலையின்மீ தொருவனைத் தாங்கி, மனைவியோடேகி மெய்யெரிகொளுத்த மாய்வுறுதந்தநாடகன்றேர், பனையடிநிழலின் மைந்தரையிறக்கி பதைப்பொருசிறிதொழிந்திருந்தேன், வினைநரகேறி பழவினையோடே மேவியவின்பம தென்ன.**

(இ-ள்.) தனையரிலிருவர் - புத்திரர்களி லிரண்டுபேர், தோள்களில் - புசங்களிலும், ஒருவனை - மற்றொருவனை, தலையின்மீது - சிரசின்மேலும்,

இருப்ப - இருக்கும்படி, தாங்கி - சுமந்துக்கொண்டு, மனைவியோடேகி - (எனது) பாரியாளுடன்போய், மெய்யெரிகொளுத்த - சரீரத்தையுஷ்ண கிரணமெரிக்க, மாய்வுறுது - இறவாமல், அந்தநாடகன்று - அத்தேயத்தைக்கடந்து, ஓர்பனையடிநிழலில்-ஒருபனைமரத்தடியினீழலில்,மைந்தரை யிறக்கி - புத்திரர்களையிழித்து, வினைநரகேறி - தீவினை (வடிவமான) நகரத்தினின்றுங் (கரை)யேறி, பழவினையோடு - பழைய (நல்) வினையுடன், மேவியவின்பமதென்ன - பொருந்திய சுகத்தைப்போல, ஒருசிறிது - சற்றுநேரம், பதைப்பொழிந்திருந்தேன் - சிரமந்தீர்ந்திருந்தேன்—எ-று.

(இ-ஙா.) புத்திரர்களி லிரண்டுபேர் புசங்களிலும், மற்றொருவனை சிரசின்மேலுமிருக்கும்படி சுமந்துகொண்டு எனதுபாரியாளுடன்போய் சரீரத்தை யுஷ்ணகிரணமெரிக்க இறவாமல் அத்தேயத்தைக்கடந்து ஒரு பனைமரத்தடியி னீழலில் புத்திரர்களை யிழித்து தீவினை வடிவமான நகரத்தி னின்றுங் கரையேறி பழைய நல்வினையுடன் பொருந்திய சுகத்தைப்போலசற்றுநேரம் சிரமந்தீர்ந்திருந்தேன்—என்பதாம். (உஉ)

இதுவுமது.

வளைதருசூழப்பால் வழிவருந்துயரான் மைந்தர்க ளிருவரையணைக்க, களைகொலோதுயிலோ சாய்ந்தனண்மனைவி கண்டுளங் கரைந்துநானிருந்தே, னிளையவன்றுயிலா தென்மடியேறியிருந்து நீர்சொரிதரவழுது, விளைபசியாற்றே னுதிரமூனும் வேண்டு மிப்போதுதா வென்ன.

(இ-ள்.) வளைதருசூழப்பால் - சூழ்கின்ற சரையினாலும், வழிவருந்துயரால் - வழிநடந்துவந்த துன்பத்தினாலும், மைந்தர்களிருவரையணைக்க - இரண்டுபிள்ளைகளையுங் கட்டிக்கொள்ள, களைகொலோ-களைதானோ, துயிலோ - நித்திரைதானோ (வென்னும்படி), மனைவி சாய்ந்தனள் - (எனது) தலைவி யிறந்தாள், கண்டுளங்கரைந்து - (அதைப்) பார்த்து மனமுருகி, நானிருந்தேன் - யானிருந்தேன், இளையவன்றுயிலாது - இளையபிள்ளை யுறங்காமல், என் மடியேறியிருந்து - என்மடியிலேறி யிருந்துக்கொண்டு, நீர் சொரிதர வழுது - (இரண்டு கண்களிலுஞ்) சலம் பெருகவழுது, விளைபசியாற்றேன் - (மிகவு) முண்டாகின்ற பசிக்குச்சகிக்கேன், உதிரமும் - இரத்தமும், ஊனும் - மாமிசமும், வேண்டும் - (யான்) புசிக்கவேணடும், இப்போதுதாவென்ன - இப்போது கொடென்று கேட்க—எ-று.

(இ-ஙா.) சூழ்கின்ற சரையினாலும், வழி நடந்துவந்ததுன்பத்தினாலும், இரண்டுபிள்ளைகளையுங்கட்டிக்கொள்ள களைதானோ! நித்திரைதானோ! வென்னும்படி எனதுதலைவியிறந்தாள். அதைப்

பார்த்து மனமுருகி யானிருந்தேன். இளையபிள்ளை யுறங்காமல் என்மடியிலேறியிருந்துக்கொண்டு இரண்டுகண்களிலுஞ் சலம்பெருக வழுதுமிகவு முண்டாகின்ற பசிக்குச்சகிக்கேன். இரத்தமும் மாமிசமும், யான் புசிக்க வேண்டும். இப்போது கொடென்று கேட்க—என்பதாம். (உ௩)

இதுவுமது

இட்டமாமிளவ லென்னெதிர்பதைப்ப வென்செயலேதுமற் றுயிர்போய், கட்டைபோலிருந்தேன் விடாதவனழுதகண்ணினீர் கண்டறக் கரைந்து, மட்டிவன் வாரா னென்றுயிர்விடுவான் வனக் கனல் வளர்த்ததில்வீழக், கிட்டிநின்றுகைத்தேனிந்தவாசனத்தின் கீழ்வுறவீழ்வுற மளவில்.

(இ-ள்.) இட்டமாமிளவல் - பிரியமுள்ள விளையகுழந்தையானவன், என்னெதிர்பதைப்ப-என் (கண்) முன்னேதுடிக்க, என்செயலேதுமற்று - நான்செய்வதொன்றுமின்றி, உயிர்போய் - பிராணன்பிரிந் (திருக்கின்ற) கட்டைபோலிருந்தேன் - சவத்தைப்போ லிருந்தேன், விடாதவ னழுத கண்ணினீர்கண்டு - அவனேயாம லழுதகண்ணீரைப்பார்த்து, அறக்கரைந்து - மிகவுங்கரைந்து, மட்டிவன் வாரானென்று - மிதத்திலிவன்பிழையானென் (றெண்ணி), உயிர்விடுவான் - (யானும்) பிராணனை விடும்பொருட்டு, வனக்கனல்வளர்த்து - காட்டாக்கினியை வளர்த்து, அதில்வீழக் கிட்டிநின்று - அவ்வக்கினியில் வீழும்படி சமீபித்திருந்து, உகைத்தேன்- எழும்பினேன், இந்தவாசனத்தின் - இச்சிங்காதனத்தி (லிருந்து), கீழ்வுற வீழ்வுறுமளவில் - கீழேவிழுகின்ற சமயத்தில்—எ-று.

(இ-ரை.) பிரியமுள்ள விளைய குழந்தையானவன் என் கண் முன்னே துடிக்க நான் செய்வ தொன்றுமின்றி பிராணன் பிரிந்திருக்கின்ற சவத்தைப்போ லிருந்தேன். அவனேயாமலழுதகண்ணீரைப் பார்த்து மிகவுங் கரைந்து மிதத்தி லிவன்பிழையானென் றெண்ணி யானும் பிராணனை விடும்பொருட்டு காட்டாக்கினியை வளர்த்து அவ்வக்கினியில் விழும்படி சமீபித்திருந்து எழும்பினேன். இச்சிங்காதனத்திலிருந்து கீழேவிழுகின்ற சமயத்தில்.

(இ-கஎ-க-ீ) மனோராச்சியத்திலுண்டான கற்பனைகளை வியப்புற்றுசாரியர் முதலியோர்க் கறிவித்ததாம். (உச)

## சீவவவத்தைகளை யறிந்தேனெனல்.

தாங்கினீர்பலருஞ் சயசயவென்னத் தாக்குறுபல்லியமுழக்க, வீங் குணர்வுற்றே னீசனன்றாகி லவணனுமன்னவனுனேன், றீங்குறுசி த்தன் செயலின்மோகித்தேன் சீவனுக்கவத்தைகளநேகம், பாங்கு றவுளவென் றறிந்தனனென்று பகர்வுழியொளித்தனன்சித்தன்.

(இ-ள்.) தாங்கினீர்பலரும் - (என்னைத்) தாங்கினவர்களாகிய நீங்களனைவரும், சயசயவென்ன - சயசயவென்றுசொல்ல, தாக்குறு பல்லிய முழக்க-அடிக்கப்பட்டசகலவாத்தியங்களுஞ்சத்திப்பிக்க, ஈங்குணர்வுற்றேன்-இவ்விட மறிந்தேன், நீசனன்றாகி - சண்டாளனல்லாதவனுய், லவணனுமன்னவனுனேன் - லவணனென்னுமரசனுனேன், தீங்குறுசித்தன்செயலின்மோகித்தேன் - குற்றம்பொருந்திய சித்தனது வித்தையினுன் மயங்கினேன், சீவனுக்கு - சீவாத்மாவுக்கு, அவத்தைகள் - அவத்தைகளானவை, அநேகம் பாங்குறவுளவென்று - பலவுரிமையாகவுண்டாயிருக்கின்றனவென்று, அறிந்தனனென்று - தெரிந்தேனென்று, பகருழி - சொல்லுஞ்சமயத்தில், சித்தன் - சாம்பரிகன், ஒளித்தனன் - மறைந்தனன்.

(இ-ா.) என்னைத்தாங்கினவர்களாகிய நீங்க ளனைவருஞ்சயசயவென்றுசொல்ல, அடிக்கப்பட்ட சகலவாத்தியங்களுஞ்சத்திப்பிக்க, இவ்விட மறிந்தேன். சண்டாள னல்லாதவனுய் லவணனென்னுமரசனுனேன். குற்றம்பொருந்திய சித்தனது வித்தையினுன் மயங்கினேன். சீவாத்மாவுக்கு அவத்தைகளானவைபலவுரிமையாகவுண்டாயிருக்கின்றனவென்று தெரிந்தேனென்று சொல்லுஞ்சமயத்தில் சாம்பரிகன் மறைந்தனன் (உரு)

## சித்தனீங்குதல்.

இருந்தமந்திரிகள் சித்தனென்றிவனு ரென்றலுமிமைப்பினுண்மறைந்தான், பொருந்தியவுலகமனமெனவேறே புலப்படக்காட்டுவான்விடுத்த, திருந்தியதெய்வ மாயையீ தாகுஞ்செப்புமிச் செயலினுற்றீரப், பெருந்தகைபரத்தின் விகாரமேமனமாம் பேருலகென்றனரென்றுன்.

(இ-ள்.) இருந்தமந்திரிகள் - (சபையி) லிருந்தவமைச்சர்கள், சித்தனென்றிவனுரென்றலும் - சித்தனென்ற விவனுரென்று விசாரிக்கவும், இமைப்பினுண்மறைந்தான் - (கண்) ணிமைக்குமுன்னெளித்தான், பொருந்தியவுலகம் - அடைந்த சகமானது, மனமென - மனமேயென்று, வே

றே புலப்படக்காட்டுவான் - பிரிவாகத் தெரியக் காட்டும்பொருட்டு, விடுத்த - அனுப்பிய, திருந்திய - திருத்தமான, தெய்வமாயையீதாகும் - தேவமாயையான திதுவாகும், செப்புமிச்செயலினால் - சொல்லப்பட்டவிச்செயகைகளினால், தீரப்பெருந்தகை - தீரமுள்ள வரசனே, பரத்தின் - பிரமத்தின், விகாரமே - தற்ப்ரகாசமே, மனமாம் - மனமாகிய, பேருலகு -பெரியசகமாம், என்றனர்-என்று (சத்துக்கள்) சொன்னார்கள், என்றான்- என்று வசிட்டமுனி சொன்னார்—எ-று.

(இ-ரை.) சபையிலிருந்த வமைச்சர்கள் சித்தனென்றவிவனாரென்று விசாரிக்கவும், கண்ணிமைக்கு முன்னொளித்தான். அடைந்தசகமானது மனமேயென்று பிரிவாகத்தெரியக் காட்டும்பொருட்டு அனுப்பிய திருத்தமான தேவமாயையானதிதுவாகும். சொல்லப்பட்ட விச்செய்கைகளினால் தீரமுள்ளவரசனே பிரமத்தின் தற்ப்ரகாசமே மனமாகிய பெரியசகமாம் என்று சத்துக்கள்சொன்னார்கள் என்று வசிட்டமுனி சொன்னார்—என்பதாம். (உசு)

சித்தன்கதை முற்றிற்று.

ஆக கதை-௰௩-க்கு கவிதை - சாசுரு.

# உற்பத்திப் பிரகரணம்.

அவதாரிகை.

முன்பு சிற்ப்ரதிபலனமான மனதுக்கேயற்பனேர மநேககாலமானசம்சாரம் வந்ததன்றிச் சித்துக்கின்றென்றறிவித்துஇம்மனதைச்சித்திற்கரைத்துச்சின்மயமாய் ப்ரகாசிப்பிக்குநிமித்தம்ஞானவிண்மகன்முதலியவெண்கதையின் சாரமுள்ள உற்பத்திப்பிரகரணத்தைச் சொல்லுகிறார்.

## மனோவல்லமை யாதெனின்.

ஆயமனத்தின்செயல்செயலா மதனாலொழிந்ததொழிந்துளதா
மேயமனத்தினலைவொழித்தோர் மிகவுநல்லதியானத்தோர்
தூயமனமாயிடில்வெற்பாற் சுழலாக்கடல்போற்பிறப்பிறப்பா
மாயைமயக்கங்கெடுமென்னா வசிட்டன்மீண்டுமுரைசெய்வான்.

(இ-ள்.) ஆயமனத்தின் செயல்செயலாம்-(இப்படி) யானமனத்தினது தொழிலே தொழிலாம், அதனால்-அம்மனதினால், ஒழிந்தொழிந்துளதாம்-விடுபட்டதே விடுபட்டதாம், மேயமனத்தினலைவு-உண்டானமனோசாஞ்சல்யத்தை, ஒழித்தோர்-விடுத்தவர்கள், மிகவுநல்லதியானத்தோர்-

மிகவு முத்தமான நிஷ்டையுள்ளவர்கள், தூயமனமாடியில்-பரிசுத்த மகா மனங் கெட்டால், வெற்பால் - (மந்தர) கிரியினல், சுழலாக்கடல்போல் - அலேவுபடாத(க்ஷிர)சமுத்திரம்போல (வறிவுநிச்சலமாய்), பிறப்பிறப்பாம்-சநநமரணமென்கின்ற, மாயைமயக்கங்கெடுமென்னு - சம்சாரமயக்க நாச மாமென்றுசொல்லி, வசிட்டன் - வசிட்டமுனி, மீண்டு முரைசெய்வான்-திரும்பவுஞ்சொல்லுவார்—எ-று.

(இ-ளா.) இப்படியான மனத்தினது தொழிலே தொழிலாம், அம்மனதினுல் விடுபட்டதே விடுபட்டதாம், உண்டான மனோசாஞ்சல்யத்தை விடுத்தவர்கள், மிகவுமுத்தமமானநிஷ்டையுள்ளவர்கள், பரிசுத்த மகாமனங்கெட்டால் மந்தரகிரியினுல் அலேவுபடாத க்ஷிரசமுத்திரம்போல வறிவுநிச்சலமாய் சநநமரணமென்கின்ற சம்சாரமயக்க நாசமாமென்றுசொல்லி வசிட்டமுனி திரும்பவுஞ் சொல்லுவார்—என்பதாம். (க)

இதுவுமது.

தலேயாநிற்கும்பலபோகச் சங்கற்பஞ்சேர்மனவிருத்தி
முலேயால்வளருமாமாயை மோகமென்னுநச்சுமரம்
விலேயாநின்றமனநோய்க்கு மேலோர்விதித்தபரிகார
மிலேயாதெளிதாயதனுலே யியற்றலாகுமிதுகேட்பாய்.

(இ-ள்.) தலேயாநிற்கும் - பந்தித்திருக்கும், பலபோகச்சங்கற்பஞ்சேர் -நாநாவிதபோகங்களினது சங்கற்பமடைந்திருக்கின்ற, மனவிருத்தி-மன விருத்தியென்னும், முலேயால் - அங்குரத்தினுல், மாமாயை மோகமென்னும் - மகாமாயாமயக்கமென்கின்ற, நச்சுமரம் - விடவிருக்ஷமானது, வளரும் - விருத்தியடையும், விலேயாநின்ற மனநோய்க்கு-வளராநின்ற மனோவியாதிக்கு, மேலோர் விதித்த - சத்துக்க ணியமித்த, பரிகாரம் - அவுஷதமானது, இலேயாதெளிதாய் - வருத்தமில்லாமற் சுளுவாக, அதனுல் - அம்மனதினுல், இயற்றலாகும் - செய்யப்படும், இதுகேட்பாய் - (இதைக் கேட்பாயாக)—எ-று.

(இ-ளா.) பந்தித்திருக்கும் நாநாவித போகங்களினதுசங்கற்பமடைந்திருக்கின்ற மனவிருத்தியென்னும் அங்குரத்தினுல் மகாமாயாமயக்கமென்கிற விடவிருக்ஷமானது விருத்தியடையும், வளராநின்ற மனோவியாதிக்கு சத்துக்க ணியமித்த அவுஷதமானது வருத்த மில்லாமற் சுளுவாக அம்மனதினுல் செய்யப்படும். இதைக்கேட்பாயாக—என்பதாம்.

(இ-உ-க-ம்.) மனோ சங்கற்பமேமாயை முதலியவைகளாகத் தோற்று மென்பதாம். (உ)

## அம்மனோநாச வுபாயமியாதெனின்.

மிகமானுறுபல்பொருள்களையுமேவாதொழித்தோர்மனம்வென்றோர்
சுகமாயெளிதாய்த்தனக்குரித்தாந் துயர்தீர்நிராசையறிவரியோர்
சகமாமனிதபுழுவொப்பார் சான்றோருரைத்தநூற்பழகி
யகமாநினைவுதீர்மனத்தா லயருமனதைத்திருப்பிடலாம்.

(இ-ள்.) மிகமானுறு-மிகவு மிச்சிக்கப்பட்ட, பல்பொருள்களையும்-சகல வஸ்துக்களையும், மேவாதொழித்தோர் - விரும்பாமனீக்கினவர்கள், மனம் வென்றோர் - மனதைச்செயித்தவர்கள், சுகமாய் - சுகமாகவும், எளிதாய் - லெகுவாகவும், தனக்குரித்தாம் - தனக்குரியதாகவுமிருக்கின்ற, துயர்தீர- துக்கமற்ற, நிராசையறிவரியோர்-வயிராக்கியஞானம்பெறுதவர்கள், சகமா மனித புழுவொப்பார்-உலகத்தின்கணுள்ள மானிட கிருமிக்கிணை யாவார்கள், சான்றோர் - அறிஞர்க (ளுபதேசத்தாலும்), உரைத்த - (ஈஸ்வரன்) கூறிய, நூல்-சுருதி (முடிவாகிய மகாவாக்கியார்த்தத்தாலும்), பழகி-(ஆத்மா) னுசந்தானஞ்செய்து, அகமா நினைவு தீர்மனத்தால் - நானென்னுஞ் சங்கற்பமிறந்தமனதினால், அயருமனதை - (வெகுற்முகமாய்)வருந்துமனதை, திருப்பிடலாம் - (அந்தற்முகத்திற்சுகிக்கத்) திருப்பலாம்—எ-று.

(இ-ரை.) மிகவு மிச்சிக்கப்பட்ட சகல வஸ்துக்களையும் விரும்பாம னீக்கினவர்கள் மனதைச் செயித்தவர்கள்சுகமாகவும், லெகுவாகவும், தனக்குரியதாகவு மிருக்கின்ற துக்கமற்றவயிராக்கிய ஞானம்பெறுதவர்கள் உலகத்தின்கணுள்ள மானிடகிருமிக் கிணை யாவார்கள், அறிஞர்களுபதேசத்தாலும் ஈஸ்வரன் கூறிய சுருதி முடிவாகிய மகா வாக்கியார்த்தத்தாலும் ஆத்மானு சந்தானஞ்செய்து நானென்னுஞ் சங்கற்ப மிறந்தமனதினால் வெகுற்முகமாய் வருந்து மனதை அந்தற்முகத்திற்சுகிக்கத்திரும்பலாம்—எ-ம்.

(இ-ம்.) சுருதி யுத்தி யனுபவமுள்ள மனதினா லவையின்றிய மனதைக்கெடுக்கவேண்டுமென்பதாம். (௫)

## அம்மனதிறக்கிற் பலனியாதெனின்.

இரும்பாலிரும்புதிருந்துவபோ லியற்றுமனத்தான்மனந்திருந்துந்
திரும்பாநிராசைவடிவாகிச் செறியுந்தன்னாலியற்றுவதாய்
விரும்பாநின்றோர்க்கெளிதான வெய்யமனத்தினுபசாந்தி
பெரும்பாரந்தீர்நற்கதியாம் பிறிதோர்கதியுநன்றாகா.

(இ-ள்.) இரும்பால் - அரத்தினுல், இரும்புதிருந்துவபோல் - அயந் திருத்தப்படுவெதுபோல, இயற்றும் - (சன்மார்க்கத்தின்) முயற்சிக்கின்ற, மனத்தால் - (சுத்த) மனதினுல், மனந்திருந்தும் - (அசுத்த) மனந்திருத் தப்படும், திரும்பா - மீளாத, நிராசைவடிவாகி - இச்சாத்தியாகமே யுருவா கியும், செறியுந்தன்னுல் - பொருந்தியதனது (முயற்சியி) னுல், இயற்றுவ தாய் - சாதிக்கத்தக்கதாகியும், விரும்பாநின்ருேர்க்கு - (மோட்ச) விச்சை யுடையவர்களுக்கு, எளிதான - லேசாகியு மிருக்கின்ற, வெய்யமனத்தி னுபசாந்தி - வெவ்வியமனத்தினுெழிவே, பெரும்பாரந்தீர் - பெரும்பார நீங்கிய, நற்கதியாம் - பரகதியாம், பிறிது - வேறே, ஓர் கதியு நன்ருகா- ஒருகதியு நன்மையாகாது—எ-று.

(இ-ம.) அரத்தினுல் அயந்திருத்தப்படுவதுபோல சன்மார்க்கத்தின் முயற்சிக்கின்ற சுத்தமனதினுல் அசுத்தமனந்திருத்தப் படும். மீளாத இச்சாத்தியாகமேயுருவாகியும், பொருந்தியதனது முயற்சியினுல் சாதிக்கத்தக்கதாகியும், மோட்சவிச்சை யுடையவர் களுக்கு லேசாகியு மிருக்கின்ற வெவ்வியமனத்திெனுழிவே பெரு ம்பாரநீங்கிய பரகதியாம் வேறே ஒரு கதியுநன்மையாகாது-எ-ம்.

(இ-ம்.) மனோநாசமானவிடமே பரசுகமென்பதாம். (௪)

## அப்பரமசுக மெப்படியுண்டாமெனின்.

வாவுமனத்தையசங்கற்ப வாளாலறுக்கினிறைந்தெங்கு
மியாவுமதுவாம்பொருடோன்று மிந்தவழிநின்றறிவாலே
மேவுமனதைவிழுங்கியதின் மேலாய்மாயாவிகற்பமிலா [ய்.
வோவுமதியாலறிவையடைந் துளத்தைவிழுங்கும்பொருளுணர்வா

(இ-ள்.) வாவுமனத்தை - (ஒன்றைவிட்டொன்றில்) வாவிக்கொண் டிருக்கின்றமனதை, அசங்கற்பவாளால் - சங்கற்பரகிதமென்னுங் கத்தியி னுல், அறுக்கில் - கெடுத்தால், எங்கும் - எவ்விடத்தும், நிறைந்து - பரிபூ ரணமாய், யாவுமதுவாம் பொருடோன்றும் - சகலமுந் தன்மயமாய் விள ங்குகின்றவஸ்துப்ரசன்னமாம், இந்தவழிநின்று - இம்மார்க்கத்திலிருந்து, அறிவால் - ஞானத்தினுல், மேவும் - விரும்பத்தக்க, மனதைவிழுங்கி - மனதைப்பொசித்து, அதின்மேலாய் - அதற்கு மேலானதாய், மாயாவிக ற்பமிலா - சம்சார விகற்பமில்லாத, ஓவுமதியால் - சகலத்தியாகமானவறி வினுல், அறிவையடைந்து - (ஆத்ம) ஞானத்தையடைந்து, உளத்தை - மனதை, விழுங்கும்பொருளுணர்வாய் - ஐக்கியஞ்செய்கின்ற ஸ்வரூபஞா னத்தை யறிந்துகொள்வாய்—எ-று.

(இ-ம.) ஒன்றைவிட்டொன்றில் வாவிக்கொண் டிருக்கின்ற மனதை சங்கற்பரகிதமென்னுங் கத்தியினுல் கெடுத்தால் எவ்விட

த்தும் பரிபூரணமாய் சகலமுந் தன்மயமாய் விளங்குகின்ற வஸ்து ப்ரசன்னமாம். இம்மார்க்கத்திலிருந்து ஞானத்தினால் விரும்பத் தக்க மனதைப்பொசித்து அதற்கு மேலானதாய் சம்சாரவிகற்ப மில்லாத சகலத்தியாகமான வறிவினால் ஆத்மஞானத்தை யடைந்து மனதை ஐக்கஞ்செய்கின்ற ஸ்வரூபஞானத்தை யறிந்துகொள்வாய்—என்பதாம்.

(இ-ம்.) மனோசங்கற்பமிறந்தவிடத் தப்பரமசுக முண்டாமென்பதாம்.

எம்முயற்சியினா லம்மனதைக் கெடுக்கலாமெனின்.

வருந்திமுயன் றுமனந்தன்னை மாற்றியில்லையுண்டென்று
திருந்தபதத்திலிருந்திடுவா யிடர்தீர்செல்வமிடரின்றிப்
பொருந்தவேண்டுமனம்வென்றாற் புவனமூன்றுந்துரும்பாகுந்
திருந்தவினிதென்றனவெல்லாந் தீதாய்த்தோன்றின்மனமாளும்.

(இ-ள்.) வருந்திமுயன்று - (சிரவணாதியில்) வருத்தப்பட்டப்பியாசித்து, மனந்தன்னைமாற்றி - மனதைக்கெடுத்து, இல்லையுண்டென்றுது - சத்தசத்தென்றுரைக்கக்கூடாமல், இருந்த - சுயமாயிருந்த, பதத்திலிருந்திடுவாய் - பிரமபதத்திலிருப்பாய், இடர்தீர்செல்வம்-துன்பமற்றமோக்ஷசம்பத்தை, இடரின்றி - துன்பமின்றி, பொருந்தவேண்டும் - (தைரியத்தினா) லடையவேண்டும், மனம்வென்றால் - இப்படி மனோநாசமானால், புவனமூன்றுந்துரும்பாகும் - மூன்றுலகமுந்திரணமாம், திருந்த - திருத்தமாக, இனிதென்றனவெல்லாம் - இனிமையென்றுசொல்லப்பட்ட விடயங்களியாவும், தீதாய்த்தோன்றில் - தீமையாகத்தோற்றினால், மனமாளும் - மனதுநாசமாம்—எ-று.

(இ-ளா.) சிரவணாதியில் வருத்தப்பட் டப்பியாசித்து மனதைக்கெடுத்து சத்தசத்தென் றுரைக்கக்கூடாமல் சுயமாயிருந்த பிரமபதத்திலிருப்பாய் துன்பமற்ற மோக்ஷசம்பத்தை துன்பமின்றி தைரியத்தினா லடையவேண்டும். இப்படி மனோநாசமானால் மூன்றுலகமுந் திரணமாம். திருத்தமாக இனிமையென்று சொல்லப்பட்ட விடயங்களியாவும் தீமையாகத்தோற்றினால் மனதுநாசமாம்—என்பதாம்.

(இ-ம்.) விடயதோட திருஷ்டியினா லம்மனதைக் கெடுக்கவேண்டுமென்பதாம். (சு)

அவ்விடயதிருஷ்டி யாதினாற்கெடுமெனின்.

சித்தவிண்ணிற்றிகழறிவாந் தியானத்தாலேயறிவென்னு
மொத்தபடையாலையமற வுளத்தையறுப்பாயறுத்ததற்பின்

**மெத்துதுயர்போமவனிவனுன் மேவுமனைத்துமதுவிதுவாய்**
**வைத்தவிவையேமனமிதனை மறப்பாம்வாளாலறுத்திடுவாய்.**

(இ-ள்.) சித்தவிண்ணில் - இருதயாகாயத்தில், திகழ் - ப்ரகாசிக்கப் பட்ட, அறிவாந்தியானத்தால் - ஞானநிஷ்டையா (லுண்டாகும்), அறிவென்னும் - பரஞானமென்கின்ற, ஒத்தபடையால் - உரித்தாகிய சக்கராயுதத்தினுல், ஐயமற - சந்தேகங்கெட, உளத்தையறுப்பாய்-மனதைக்கெடுப்பாய், அறுத்ததற்பின் - கெடுத்தபின்பு, மெத்துதுயர்போம் - மிகுந்த துன்பநீங்கும், அவனுன் - அவனுனென்றும், இவனுன்-இவனுனென்றும், மேவுமனைத்தும் - பொருந்தப்பட்டசகலமும், அது-அது (வெனதாகவும்), இதுவாய்-இது (வென) தாகவும், வைத்த - வைத்திருக்கின்ற, இவையே-இவைகளே, மனம் - மனமாகும், இதனை - இம்மனதை, மறப்பாம் - அபாவனமென்னும், வாளால் - கத்தியினுல், அறுத்திடுவாய்-கெடுப்பாய்-எ-று.

**(இ-ா.) இருதயாகாயத்தில் ப்ரகாசிக்கப்பட்ட ஞான நிஷ்டையாலுண்டாகும் பரஞானமென்கின்ற உரித்தாகிய சக்ராயுதத்தினுல் சந்தேகங்கெட மனதைக்கெடுப்பாய், கெடுத்தபின்பு மிகுந்த துன்பநீங்கும் அவனுனென்றும் இவனுனென்றும் பொருந்தப்பட்டசகலமும் அதுவெனதாகவும் இதுவெனதாகவும் வைத்திருக்கின்ற இவைகளே மனமாகும். இம்மனதை அபாவனமென்னும் கத்தியினுல் கெடுப்பாய்—என்பதாம்.**

(இ-ம்.) ஞானதிருஷ்டியினு லவ்விடயங் கெடுமென்பதாம். (எ)

## மனமிறந்ததற் கடையாளமியாதெனின்.

**பெருகத்திரண்டமுகிலெல்லாம் பெருங்காற்றுலேயொருவுதல்போல்**
**வருமற்பனைநாசத்தாலே மனம்போயிறக்குமனமிறந்தாற்**
**பொருகற்பாந்தமாருதமும் பொங்குகடலும்புவியனைத்து**
**முருகச்சுடுபன்னிருகதிரு மொருகால்வரினுமிடருண் டோ.**

(இ-ள்.) பெருகத்திரண்ட - மிகவுங்கூட்டமான, முகிலெல்லாம்-மேகங்களனைத்தும், பெருங்காற்றுல்-சண்டமாருதத்தால், ஒருவுதல்போல் - நீங்குவதைப்போல, வருகற்பனைநாசத்தால் - வராநின்ற கற்பனுக்ஷயத்தினுல், மனம்போயிறக்கும் - மனமானது (சித்திற்) சென்று நசிக்கும், மனமிறந்தால் - மனதுநசித்தால், பொருகற்பாந்தமாருதமும் - மோதாநின்ற ஊழிகாற்றும், பொங்குகடலும் - பிரளயசமுத்திரமும், புவியனைத்தும் - பூமிமுழுதும், உருகச்சுடும் - உருகும்படியெரிக்கின்ற, பன்னிருகதிரும் - பன்னிரண்டு சூரியர்களும், ஒருகால்வரினும் - ஏககாலத்தில்வந்தாலும், இடருண்டோ - துன்பமுண்டோ—எ-று.

(இ-ரை.) மிகவுங் கூட்டமான மேகங்களனைத்தும் சண்டமாருதத்தால் நீங்குவதைப்போலவராநின்ற கற்பனுக்ஷயத்தினால்மனமானது சித்திற்சென்றுநசிக்கும் மனது நசித்தால் மோதாநின்ற வூழிகாற்றும் பிரளயசமுத்திரமும் பூமிமுழுதும் உருகும்படியெரிக்கின்ற பன்னிரண்டு சூரியர்களும்ஏககாலத்தில் வந்தாலுந்துன்பமுண்டோ—என்பதாம்.

(இ-ம்.) அநந்தவிடர்களுண்டாயினு மவ்விடரில்லாதிருப்பதே, மனமிறந்த குறியென்பதாம். (௮)

---

## பராமசுகத்திற்கு விக்கினமியாதெனின்.

தன்னைக்கொண்டேதனையறுக்கிற் றானய்சகலபூமிக்கு
முன்னைத்தலைமைபோலின்ப முதிரநிறைந்துவகற்பனைக்கே
துன்னித்திகழ்தற்பதம்பற்றி சுகத்தைபடைவாய்பலவாக
உன்னிப்படர்கற்பனைசெல்வமுடையமனமேயுயிர்ப்பகையாம்.

(இ-ள்.) தன்னைக்கொண்டே - மனதைக்கொண்டே, தனையறுக்கில்- மனதைக்கெடுக்கில், தானாய் - தானாகி, சகலபூமிக்கும் - உலகங்களனைத்திற்கும், முன்னைத்தலைமைபோல் - முதன்மையான சார்வபூமனைப்போல, இன்பம் - ஆநந்தமானது, முதிரநிறைந்து - பூரணமாகப்பெருகி, அகற்பனைக்கே - கற்பனையற்ற மோக்ஷசாம்ப்ராச்சியத்துக்கே, துன்னி-நெருங்கி, திகழ் - ப்ரகாசிக்கின்ற, தற்பதம்பற்றி-பிரமபதத்தைச்சேர்ந்து, சுகத்தையடைவாய் - நிரதிசயாநந்தத்தைப்பெறுவாய், பலவாக - நாநாவிதமாக, உன்னி - நினைத்து, படர்கற்பனை - மிகுந்தமித்தையென்னும், செல்வமுடைய - சம்பத்துள்ள, மனமே - மனதே, உயிர்ப்பகையாம் - ஆத்மாவுக்கு விரோதமாம்—எ-று.

(இ-ரை.) மனதைக்கொண்டே மனதைக்கெடுக்கில் தானாகி உலகங்களனைத்திற்கும் முதன்மையான சார்வபூமனைப்போல ஆநந்தமானது பூரணமாகப்பெருகி கற்பனையற்ற மோக்ஷசாம்பிராச்சியத்துக்கே நெருங்கி ப்ரகாசிக்கின்ற பிரமபதத்தைச்சேர்ந்து நிரதிசயாநந்தத்தைப்பெறுவாய். நாநாவிதமாக நினைத்து மிகுந்தமித்தையென்னும் சம்பத்துள்ளமனதே ஆத்மாவுக்குவிரோதமாம்.

(இ-ம்.) சங்கற்பவிகற்பாத்மகமான மனதே யாத்மசுகத்திற்கு விக்கினமென்பதாம். (௯)

## அச்சங்கற்ப மியாதினுற் கெடுமெனின்.

உள்ளப்பகைவன் பலவிதமா யுறுகாட்சிகளால் வெல்லாமற்
றெள்ளத்தகுசந் தோடமெனுஞ் செல்வமுடைய நிராசையினுற்
கள்ளத்தனிநெஞ் சினைவெல்வாய் கற்றோர்க்கன்பாய் நிற்மலமாய்
குள்ளக்குளிர்ந்தாங் காரத்தாற் கூறுகாது சமபாவம்.

(இ-ள்.) உள்ளப்பகைவன்-மனமென்னுஞ்சத்துருவானவன், பலவிதமாய் - நாநாவிதமாக, உறுகாட்சிகளால் - பொருந்திய விடயானுபவங்களால், வெல்லாமல் - (உன்னைக்) கெடுக்காமல், தெள்ளத்தகு - தெளிவாதற்குரிய, சந்தோடமெனும் - சந்தோடமென்கின்ற, செல்வமுடைய-வாழ்வையுடைய, நிராசையினுல் - விராகத்தினுல், கள்ளத்தனிநெஞ்சினை - குற்றமுள்ளதனிமையானமனதை, வெல்வாய் - கெடுப்பாய், கற்றோர்க்கன்பாய் - அறிஞர்களுக்குப்பிரியமாகியும், நிற்மலமாய் - நின்மலமாகியும், குள்ளக்குளிர்ந்து - மிகவுங்குளிர்ச்சியாகியு (மிருக்கின்ற), சமபாவம் - பூரணபாவமானது, ஆங்காரத்தால் - அகம்பாவத்தினுல், கூறுகாது - பின்னப்படாது—எ-று.

(இ-ை.) மனமென்னுஞ் சத்துருவானவன் நாநாவிதமாக பொருந்திய விடயானுபவங்களால் உன்னைக்கெடுக்காமல் தெளிவாதற்குரிய சந்தோட மென்கின்ற வாழ்வையுடைய விராகத்தினுல் குற்றமுள்ள தனிமையான மனதைக் கெடுப்பாய். அறிஞர்களுக்குப்பிரியமாகியும், நின்மலமாகியும், மிகவுங் குளிர்ச்சியாகியு மிருக்கின்ற பூரணபாவமானது அகம்பாவத்தினுல் பின்னப்படாது.

(இ-ம்.) நிராசையாலவ்விகற்பங்களைக் கெடுக்கவேண்டுமென்பதாம். ()

## நிராசையான சமதிருஷ்டி யேதைக் கொடுக்குமெனின்.

தாழ்வுமுயர்வுமில்லாத சமபாவனையாற்பிறப்பில்லா
வாழ்வுநல்கும்பரமபத மாறுப்பதமாமலைவாலே
வீழ்வுறுதமனமரிதாம் வெம்மைக்கனலைவிடாததுபோ
லாழ்வுசெய்யுமலைவுமன மகலாவறிவினலைவுமனம்.

(இ-ள்.) தாழ்வுமுயர்வுமில்லாத-குறைவுநிறைவுமில்லாத, சமபாவனையால் - பூரணபாவத்தினுல், பிறப்பில்லா சநநமில்லாத, வாழ்வுநல்கும்-பரமாநந்தத்தைக்கொடுக்கின்ற, பரமபதம்-பிரமபதமானது, மாறுப்பதமாம்-அழிவற்றபதமாகும், அலைவால் - சஞ்சலத்தினுல், வீழ்வுறுதமனமரிதாம்-கெடாதமனமரியதாம், வெம்மை-உஷ்ணமானது, கனலைவிடாததுபோல்-

அக்கினியைநீங்காததுபோல, ஆழ்வுசெய்யுமலைவு-தாழ்வைச்செய்கின்றசஞ்சலமானது, மனஞ்கலா - மனதைவிட்டுநீங்காது, அறிவினலைவு - ஞானத்தினுடையசலனசத்தியே, மனம் - மனமாம்—எ-று.

(இ-ள்.) குறைவுநிறைவுமில்லாதபூரணபாவத்தினுல்சநநமில்லாத பரமானந்தத்தைக்கொடுக்கின்ற பிரமபதமானது அழிவற்ற பதமாகும். சஞ்சலத்தினுல்கெடாத மனமரியதாம். உஷ்ணமானது அக்கினியை நீங்காததுபோல தாழ்வைச்செய்கின்ற சஞ்சலமானது மனதைவிட்டுநீங்காது ஞானத்தினுடையசலனசத்தியே மனமாம்—என்பதாம்.

(இ-ம்.) பரமபதத்தைக் கொடுப்பதற்கு நிராசையேகாரணமாம். (௧௧)

---

### சஞ்சலமான மனதைக் கெடுக்கு முபாய மியாதெனின்.

அலையுமந்தமன முலகா மலைவுபோகின் மனங்கெடுமிந்
நிலையேதவமு நூற்கருத்தும் நிமலவீடுந்துணிபொருளுந்
துலைவிலலைவேமனமாயை தொடர்வாதனையுமதன்பெயரா
மலையுமனமு மதுவதனை மாறுவிசாரத்தான்மாய்ப்பாய்.

(இ-ள்.) அலையும் - சலிக்கின்ற, அந்தமனம் - அம்மனமே, உலகாம் - சகமாகும், அலைவுபோகில் - சலனமற்றால், மனங்கெடும் - மனதுநசிக்கும், இந்நிலையே - இந்நிச்சயமே, தவமும் - (நிட்காம) தபசும், நூற்கருத்தும - (ஆத்மஞான) சாத்திரத்தி னந்தரங்கமும், நிமலவீடும் - நிருமலமானமோக்ஷமும், துணிபொருளும் - தெளிந்தவஸ்துவுமாம், மனம் - மனத்தினது, துலைவிலலைவே-நீங்காதசலனமே, மாயை-மாயையெனறும், தொடர்வாதனையும் - தொடராநின்ற (அசுத்த) வாசனையென்றும், அதன்பெயராம்-அச்சலனசத்தியி னுமங்களாம், அலையும் - சலிக்கின்ற, மனமுமது - மனதுமச்சஞ்சலசத்தியேயாம், அதனை-அம்மனேசலனசத்தியை,மாறுவிசாரத்தால்-நீங்காத (வாத்மஞான) விசாரணையால், மாய்ப்பாய் - கெடுப்பாய்—எ-று.

(இ-ள்.) சலிக்கின்ற அம்மனமே சகமாகும். சலனமற்றால் மனது நசிக்கும். இந்நிச்சயமே நிட்காமதவசும், ஆத்மஞான சாத்திரத்தி னந்தரங்கமும், நிருமலமான மோக்ஷமும், தெளிந்தவஸ்துவுமாம். மனத்தினது நீங்காதசலனமே மாயை யென்றும், தொடராநின்றவசுத்தவாசனையென்றும், அச்சலன சத்தியினுமங்களாம். சலிக்கின்ற மனது மச்சஞ்சல சத்தியேயாம். அம்மனேசலன் சத்தியை நீங்காத வாத்மஞான விசாரணையால் கெடுப்பாய்—எ-ம்.

(இ-ம்.) ஆத்மவிசாரத்தான் மனேசஞ்சலத்தைக் கெடுக்கவேண்டுமென்பதாம். (௧௨)

## மனோவுருவ மியாதெனின்.

மெத்துகின்றவாதனையை விட்டான்மேலாநலமுளதாஞ்
சத்தினசத்தினிடைநின்று சைதன்னியத்திற்சாட்டியத்தி
லொத்துநடுநின்றலைவதுவே யுள்ளமாகுமிவ்வுள்ளஞ்
சித்தின்முயல்வாற்சித்தாகுஞ் செடத்தின்முயல்வாற்செடமாகும்.

(இ-ள்.) மெத்துகின்ற - அற்பமாகிநின்ற, வாதனையை விட்டால் - இஷ்டவஸ்துதியாகத்தினால், மேலாநலமுளதாம்-பரமவின்பமுண்டாகும், சத்தின் - உள்ளதாகிய பிரமத்துக்கும், அசத்தின் - இல்லாததாகிய சகத்துக்கும், இடைநின்று - நடுவிலிருந்து, சைதன்னியத்தில் - சித்திலும், சாட்டியத்தில் - செடத்திலும், ஒத்து - பொருந்தி, நடுநின்றலைவதுவே - மத்தியிற்சலித்துக்கொண்டிருப்பதே, உள்ளமாகும் - மனமாகும், இவ்வுள்ளம் - இம்மனமானது, சித்தின்முயல்வால் - அறிவின் முயற்சியால், சித்தாகும் - ஞானஸ்வரூபமாம், செடத்தின் முயல்வால் - அறியாமையின் முயற்சியினால், செடமாகும் - செகத்தாகும்—எ-று.

(இ-ள.) அற்பமாகின்ற இஷ்டவஸ்துதியாகத்தினால் பரமவின்ப முண்டாகும், உள்ளதாகிய பிரமத்துக்கும், இல்லாததாகிய சகத்துக்கும், நடுவிலிருந்து சித்திலும் செடத்திலும் பொருந்தி மத்தியிற் சலித்துக்கொண்டிருப்பதே மனமாகும். இம்மனமானது அறிவின்முயற்சியால் ஞானஸ்வரூபமாம். அறியாமையின் முயற்சியினால் செகத்தாகும்—என்பதாம்.

(இ-ம்.) மனது செட்சித்து வடிவமாமென்பதாம். (கரு)

---

## அம்மனதை யாதினாலடக்கலாமெனின்.

ஊக்கமுளதாய்மனமொன்றி லுறைக்கிலதுவாமாதலினாற்
றாக்குமனதைமனத்தாலே தள்ளியேறித்தளர்வின்றி
யாக்கமழிவில்பதம்விரைவி லடைவாய்மனதைமனத்தாலே
நீக்கவலதாந்தகைமைத்தா நிருபநிறுத்துநெறிபோல.

(இ-ள்.) ஊக்கமுளதாய்-முயற்சியுள்ளதாய், மனம் - மனமாது, ஒன்றிலுறைக்கில், ஒன்றிலழுந்தில், அதுவாம் - அப்பொருளேயாம், ஆதலினால்-ஆதலால், தாக்குமனதை - (விடயசதிர) பாய்கின்றமனதை, மனத்தால் - (ஆத்மஞான) மனதினால், தள்ளி-நீக்கி, ஏறி-மேற்சென்று, தளர்வின்றி - சோர்வில்லாமல், ஆக்கமழிவில்பதம் - செல்வமென்னுமழிவற்ற பரமபதத்தை, விரைவிலடைவாய் - சீக்கிரத்திற்பெறுவாய், மனத்தை - (சலனமுள்ள) மனதை, மனத்தால் - (நிச்சலமான) மனதினால், நிருபன்-

சார்வபூமனானவன், நிறுத்தும் - (அரசர்களைத்தமதாக்கினையி) னிறுத்து கின்ற, நெறிபோல - நீதியைப்போல, நீக்கவலதாம் - நீக்கித்தன்னிலையி னிறுத்தற்கு வல்லமையான தகைமைத்தாம்-தன்மையுடையதாம்—எ-று.

(இ-ரை.) முயற்சியுள்ளதாய்மனமானது ஒன்றிலழுந்தில் அப் பொருளேயாம். ஆதலால் விடயத்திற்பாய்கின்ற மனதை ஆத்ம ஞானமனதினால் நீக்கி மேற்சென்று சோர்வில்லாமல் செல்வமெ ன்னு மழிவற்ற பரமபதத்தை சீக்கிரத்திற் பெறுவாய் சலனமுள் ளமனதை நிச்சலமானமனதினால் சார்வபூமனுவன் அரசர்களைத் தமதாக்கினையி னிறுத்துகின்ற நீதியைப்போல நீக்கித் தன்னிலை யினிறுத்தற்கு வல்லமையான தன்மையுடையதாம்—என்பதாம்.

(இ-கு.) சித்துருவமான மனதினாற் சடவுருவமானமனதைக் கெடு க்கவேண்டுமென்பதாம். (௧௪)

## மனதினாலாத்மாவுக்குச் சகாயமுண்டோவெனின்.

பிறவிக்கடலிற்காதலெனும் பெருவாய்முதலைபிடித்தீர்க்க
விறவுச்சுழிபாற்சுழலுமவர்க் கிதயநாவாயெட்டாவா
மறமுற்றுளத்தையுளத்காலே மாய்த்துப்பிறப்பில்வருந்தாம
லுறவுற்றுனைநீயுய்விப்பா யுயிர்க்குப்பிறரா லுய்வுண்டோ.

(இ-ள்.) பிறவிக்கடலில் - சநநமெனுஞ்சமுத்திரத்தில், காதலெனும் ஆசையென்கின்ற, பெருவாய்முதலை - பேழ்வாயையுடைய கராவானது, பிடித்தீர்க்க-பிடித்திழுக்க, இறவுச்சுழியில்-மரணமென்னுஞ்சுழலில், சுழ லுமவர்க்கு - (அகப்பட்டுச்) சுழல்கின்றோமென்(றறி) பவர்களுக்கு, இதய நாவாய் - மனமென்னுங்கப்பலானது, எட்டா - எட்டும், மறமுற்று - வீர முற்று, உளத்தை (மலின) மனதை, உளத்தால் - (நிற்மல) மனதினால், மாய்த்து - கெடுத்து, பிறப்பில் - சநநத்தில், வருந்தாமல் - நையாமல், உறவுற்று - (பரிசுத்த மனதை) யுறவுசெய்து, உனை-ஆத்மாவை, நீ - இரா மாநீ, உய்விப்பாய்-ஆநந்தவாழ்வி லடைவிப்பாய், உயிர்க்கு - ஆத்மாவுக்கு, பிறரால் - வேறொருவரால், உய்வுண்டோ - வாழ்வுண்டாமே—எ-று.

(இ-ரை.) சநநமெனுஞ் சமுத்திரத்தில் ஆசையென்கின்ற பேழ்வாயை யுடைய கராவானது பிடித்திழுக்க மரணமென் னுஞ்சுழலில் அகப்பட்டுச் சுழல்கின்றோமென் றறிபவர்களுக்கு மனமென்னுங் கப்பலானது எட்டும், வீரமுற்று மலினமனதை நிற்மலமனதினால் கெடுத்து சநநத்தில் நையாமல் பரிசுத்தமன

தை யுறவுசெய்து ஆத்மாவை இராமா! ஆநந்தவாழ்வி லடைவிப்பாய் ஆத்மாவுக்கு வேறொருவரால் வாழ்வுண்டாமோ.

(இ-ம்.) சித்துருவமான மனதைத்தவிர, ஆத்மாவுக்கு வேறுசகாயமின்றென்பதாம் ஆம் அசைநிலை. (௧௫)

---

மாயாமயமான மனதைக்கெடுக்கு மார்க்கமியாதெனின்.

எந்தவெந்தவாதனைக ளிதயத்தெழுந்தவவையெல்லா
மந்தவந்தவிடத்தழிக்கி லதுவேமாயைக்கழிவாகு
முந்துபோகபேதமென மொழிந்தவிருவாதனைவிட்டு
வந்தபாவாபாவங்கண் மாற்றிவிகற்பமறமகிழ்வாய்.

(இ-ள்.) எந்தவெந்தவாதனைகள் - எவ்வெவ்வாசனைகள், இதயத்தெழுந்த - மனதின்கணுதித்தனவோ, அவையெல்லாம் - அவ்வாதனைகளியாவையும், அந்தவந்தவிடத்து - அந்தந்தவிடத்தில், அழிக்கில் - கெடுக்கில், அதுவே - அந்நாசமே, மாயைக்கழிவாகும் - மாயாநாசமாம், முந்து - முதன்மையான, போகமென் - போகமென்றும், பேதமென - பேதமென்றும், மொழிந்த - சொல்லிய, இருவாதனைவிட்டு - (இவ்) விரண்டுவாதனைகளையுநீக்கி, வந்த - வந்திருக்கின்ற, பாவாபாவங்கள் - பாவாபாவமென்னு மிரண்டையும், மாற்றி - நீக்கி, விகற்பமற - நிருவிகற்பமாய், மகிழ்வாய் - நீ சுகிப்பாய்—எ-று.

(இ-னா.) எவ்வெவ்வாசனைகள் மனதின்க ணுதித்தனவோ அவ்வாதனைகளியாவையும் அந்தந்தவிடத்தில் கெடுக்கில் அந்நாசமே மாயாநாசமாம். முதன்மையான போகமென்றும் பேதமென்றும் சொல்லிய இவ்விரண்டுவாதனைகளையு நீக்கி வந்திருக்கின்ற பாவாபாவமென்னு மிரண்டையும் நீக்கி நிருவிகற்பமாய் நீ சுகிப்பாய்—என்பதாம்.

(இ-ம்.) சங்கற்ப முதித்தவிடத்தொடுக்குவதே யதைக்கெடுக்கு மார்க்கமென்பதாம். (௧௬)

---

விடயமயமான மாயாசங்கற்ப மியாதினை னீங்குமெனின்-வேறு.

அறிபவத்தாசை யறிலதுதானே யவித்தையு மனமுமாண்டதுவாம், பொறிபயிலாசை துன்பமாநிராசை புகலரு முத்தியாமின்பம், பிறிவறுதனது முயற்சியாலுண்டாம் பேதைய ருண்டெனுமவித்தை, செறிதருபொய்யாய் நாமமாத்திரமாய்ச் சித்தெனத் தோர்ந்திடிவிலதாம்.

(இ-ள்.) அறிபவத்து - திரிஸ்யத்திலுள்ள, ஆசையறில் - இச்சைநீங்கினல், அதுதானே - அவ்விச்சாத்தியாகமே, அவித்தையும் - அஞ்ஞான

மும், மனமும் - மனதும், மாண்டதுவாம் - நசித்ததாம், பொறிபயில் - விடயத்திற் பழகுகின்ற, ஆசை - இச்சையே, துன்பமாம் - துன்பமாகும், நிராசை - விராகமே, புகலரும் - சொல்லுதற்கரிய, முத்தியாமின்பம் - நிருவாணசுகமாம், பிறிவறு - வரிவற்ற, தனதுமுயற்சியால் - தனதெத்தனத்தால், உண்டாம் - (அது) ண்டாகும், பேதையர் - அறிவில்லாதவர்கள், உண்டெனும் - உண்டென்பதாயும், செறிதருபொய்யாய் - நிறைந்த மித்தையாயும், நாமமாத்திரமாய் - பெயர்மாத்திரமாயு (மிருக்கின்ற), அவித்தை - அறியாமையானது, சித்தெனத் தேர்ந்திடில் - சகலமுஞ்) சைதன்யமென்றுணரில், இலதாம் - மித்தையாம்—எ-று.

(இ-ள.) திரிஸ்யத்திலுள்ள இச்சைநீங்கினுல் அவ்விச்சாத்தியாகமே அஞ்ஞானமும் மனதும் நசித்ததாம். விடயத்திற்பழகுகின்ற இச்சையே துன்பமாகும். விராகமே சொல்லுதற்கரிய நிருவாணசுகமாம். பிரிவற்ற தனதெத்தனத்தால் அதுண்டாகும் அறிவில்லாதவர்கள் உண்டென்பதாயும், நிறைந்த மித்தையாயும், பெயர்மாத்திரமாயு மிருக்கின்ற அறியாமையானது சகலமுஞ்சைதன்யமென்றுணரில் மித்தையாம்—என்பதாம்.

(இ-ம்.) நிராசைவடிவமான ஞானதிருஷ்டியா லச்சங்கற்ப நீங்குமென்பதாம். (௧௭)

## அஞ்ஞானதிருஷ்டி நீங்கு முபாயமியாதெனின்.

என்றலுமிராமன் வித்தையின்செல்வத் தெழுந்தற நெருங்குமிவ்விருடா, னொன்றுமின்றியெவ்வகைநீங்கு முரைத்தருளின்னநீயென்ன, வன்றவனுரைப்பான் வன்றுயர்முட்சேர் வன்பவக்குழியின் மன்னுயிரை, யொன்றவீழ்த்ததனே டொக்கவீழ்மாயை யுண்டெனி லுண்மைநோக்கில்லை.

(இ-ள்.) என்றலும் - (இப்படி) யென்று வசிட்டர்சொல்லவும், இராமன் - இராமரானவர், அவித்தையின் - அறியாமையினது, செல்வத்தெழுந்து - செல்வத்திலுண்டாகி, அறநெருங்கும் - மிகவு நெருங்கியிருக்கின்ற, இவ்விருடான் - இவ்வறியாமையானது, இங்கு - இவ்விடத்தில், ஒன்றுமின்றி - அற்பமுமில்லாமல், எவ்வகைநீங்கும் - எப்படிபோய்விடும், இன்னம் - மேலும், நீயுரைத்தருளென்ன - நீரனுக்கிரகிக்க வேண்டுமென்றுகேட்க, வன்றவன் - வலிமையான தவத்தையுடையவசிட்டர், உரைப்பான் - சொல்லுவார், வன்றுயர் - வலியதுன்பமென்னும், முட்சேர் - முட்கணிறைந்த, வன்பவம் - கொடியதாகிய சநநமென்கின்ற, குழியில் - மலைச்சார்பில், மன்னுயிரை - நிலைபெற்றவாத்மாவை, ஒன்ற - பொருந்த, வீழ்த்தி - தள்ளி, அதனேடு - அவ்வாத்மாவுடன், ஒக்கவீழ்மாயை - கூடத்தானும்விழுகின்ற மாயையானது, உண்டெனில் - உள்ளதென்றுபார்க்கின், உண்மைநோக்கில்லை - தத்துவதிருஷ்டியில்லையாம்—எ-று.

(இ-ளா.) இப்படியென்று வசிட்டர்சொல்லவும், இராமரான வர் அறியாமையினது செல்வத்திலுண்டாகி மிகவு நெருங்கியிருக்கின்ற இவ்வறியாமையானது இவ்விடத்தில் அற்பமுமில்லாமல் எப்படி போய்விடும். மேலும் நீரனுக்கிரகிக்க வேண்டுமென்று கேட்க, வலிமையான தவத்தையுடைய வசிட்டர் சொல்லுவார். வலியதுன்பமென்னும் முட்கணிறைந்த கொடியதாகிய சநநமென்கின்ற மலைச்சாரிபில் நிலைபெற்ற வாத்மாவை பொருந்தத்தள்ளி அவ்வாத்மாவுடன்கூடத் தானும்விழுகின்ற மாயையானது உள்ளதென்றுபார்க்கின் தத்துவதிருஷ்டியில்லையாம்—என்பதாம். (கஅ)

இதுவுமது.

பிறப்பெனு மாயைக் கரையதாயெங்கும் பிறிவறு பெரும் பொருடோன்றி, லிறப்புறுமாயைக் கிச்சையேவடிவா மிதனுடை நாசமேவீடு, சிறப்பில்சங்கற்பஞ் சிதைந்திடிலிதுதான் றேய்ந்திடுஞ் சித்தெனுங்கதிரோன், புற படிலிதய விசும்பில்வாதனையாம் பொங்கிருள் போமெனப்புகல்வாம்.

(இ-ள்.) பிறப்பெனும் - சநநமென்கின்ற, மாயைக்கரையதாய் - அவித்தையின்முடிவாய், எங்கும் - எவ்விடத்தும், பிறிவறு - நிறைந்திருக்கின்ற, பெரும்பொருள் - பரவஸ்துவானது, தோன்றில் - உதயமாயின், இறப்புறு மாயைக்கு - நசிக்கின்றமாயைக்கு, இச்சையே - ஆசையே, வடிவாம் - ஸ்வரூபமாம், இதனுடைநாசமே - இம்மாயாநாசமே, வீடு-மோக்ஷமாம், சிறப்பில் - சிறப்பில்லாத, சங்கற்பம் - சங்கற்பமானது, சிதைந்திடில் - நசிக்கில், இதுதான் - இவ்வவித்தையானது, தேய்ந்திடும் - நாசமாம், சித்தெனும் - ஞானமென்கின்ற, கதிரோன் - சூரியன், புறப்படில் உதயமானல், இதயவிசும்பில் - இதயாகாயத்தில், வாதனையாம் - வாசனையாகிய, பொங்கிருள் - மிகுந்த வஞ்ஞானந்தகாரமானது, போமென-நீங்குமென்று, புகல்வாம் - சொல்லுவாம்—எ-று.

(இ-ரை.) சநநமென்கின்ற அவித்தையின் முடிவாய் எவ்விடத்தும் நிறைந்திருக்கின்ற பரவஸ்துவானது உதயமாயின் நசிக்கின்ற மாயைக்கு ஆசையே ஸ்வரூபமாம். இம்மாயாநாசமே மோக்ஷமாம். சிறப்பில்லாத சங்கற்பமானது நசிக்கில் இவ்வவித்தையானது நாசமாம். ஞானமென்கின்ற சூரியன் உதயமானல் இதயாகாயத்தில் வாசனையாகிய மிகுந்த வஞ்ஞானந்தகாரமானது நீங்குமென்று சொல்லுவாம்—என்பதாம்.

(இ-உ-க-ப்.) ஞானப்ரகாசவுதயத்தி லஞ்ஞானந்தகார நீங்குமென்பதாம்.　　　(கக)

## திரிஸ்யத்தைக்கெடுக்குந் திருஷ்டியாதெனின்.

கண்டனவனைத்து மாயையேயென்றாய் கண்ணெனுந் தத்துவத்தாலே, தண்டறவதுதான் கரைந்துபோமென்றாய் தத்துவமாவதேதென்ன, வெண்டவனுரைப்பான் காண்பவற்றிடைசென்றெய்திடா தெங்கணுஞ்சமமா, யுண்டெனலாகி நாமமற்றுயர்ந்தவுணர்வுதற்பரமமாமுணர்வே

(இ-ள்.) கண்டனவனைத்தும் - காணப்பட்ட வஸ்துக்களியாவும், மாயையேயென்றாய் - மாயையென்றேசொல்லினை, கண்ணெனும் - ஞானமென்கின்ற, தத்துவத்தால் - ஆத்ம (பாவனை) யினால், தண்டற - விக்கினமின்றி, அதுதான் - அந்தமாயையானது, கரைந்துபோமென்றாய் - கெடுமென்றுசொன்னாய், தத்துவமாவது - ஆத்மாவென்பது, ஏதென்ன - எதுவென் (பிரமன்) கேட்க, எண்டவன் - எண்ணத்தக்க தவசையுடைய வசிட்டர், உரைப்பான் - சொல்லுவார், காண்பவற்றிடை - திரிஸ்யத்தினிடத்தில், சென்றெய்திடாது - போயடையாததாகியும், எங்கணும் - எவ்விடத்திலும், சமமாய் - பரிபூரணமாகியும், உண்டெனலாகி - உள்ளதென்று சொல்லப்பட்டதாகியும், நாமமற்று - பெயரில்லாததாகியு மிருக்கின்ற, உயர்ந்தவுணர்வு - மேலானஞானமே, தற்பரமாமுணர்வே - பிரமஞானமேயாம்—எ-று.

(இ-ரை.) காணப்பட்ட வஸ்துக்களியாவும் மாயையென்றே சொல்லினை. ஞானமென்கின்ற ஆத்மபாவனையினால் விக்கினமின்றி அந்த மாயையானது கெடுமென்றுசொன்னாய். ஆத்மாவென்பது எதுவென் பிரமன்கேட்க, எண்ணத்தக்க தவசையுடைய வசிட்டர்சொல்லுவார். திரிஸ்யத்தினிடத்தில் போயடையாததாகியும், எவ்விடத்திலும் பரிபூரணமாகியும், உள்ளதென்றி சொல்லப்பட்டதாகியும்,பெயரில்லாததாகியு மிருக்கின்ற மேலானஞானமே பிரமஞானமேயாம்—என்பதாம்.

(இ-ந்.) சமதிருஷ்டியான ஞானமே திரிஸ்யத்தைக்கெடுப்பதாம். ()

## ஞானமெப்படிப்பட்டதெனின்.

இவையெனுமனைத்துஞ் சிற்கனமாகி யிறப்பிலாப் பிரமமேயென்று, நவையுறுமனமாங் கற்பனையில்லை நாசமும்பிறவியு மென்னு, மவையெலாம்புவன மூன்றினுமில்லை யறுவகைவிகாரமுமில்லைச். கவையறுசமமாங் குறிபெறுமறிவு மாத்திரங்காண நின்றுளதால்.

(இ-ள்.) இவையெனுமனைத்தும்-இவையென்றுசுட்டப்பட்டசகலமும், சிற்கனமாகி-ஞானாகாரமாகியும், இறப்பிலா - நித்தியமாகியுமிருக்கின்றது,

பிரமமே - பிரமமேயாம், என்றும் - எப்பொழுதும், நவையுறுமனமாம் - குற்றமுள்ளமனமாகிய, கற்பனையில்லை - கற்பனையின்றும், நாசமும் - மரணமும், பிறவியுமென்னும் - சநநமுமென்று சொல்லப்பட்ட, அவையெலாம் - அவைகளனைத்தும், புவனமூன்றினுமில்லை-மூன்றுலோகங்களிலுமில்லை, அறுவகை விகாரமுமில்லை - சட்பாவவிகாரங்களுமில்லை, கவையறுசமமாம் - இரண்டில்லாதபூரணமாகிய, குறிபெறு - அடையாளம்பெற்றிருக்கின்ற, அறிவுமாத்திரம் - சின்மாத்திரமே, காணநின்றுளது - ப்ரத்யக்ஷமாயிருக்கும்—எ-று.

(இ-ள்.) இவையென்று சுட்டப்பட்ட சகலமும் ஞானாகாரமாகியும்நித்தியமாகியுமிருக்கின்றது பிரமமேயாம் எப்பொழுதும் குற்றமுள்ள மனமாகிய கற்பனையின்றும். மரணமும் சநநமுமென்றுசொல்லப்பட்ட அவைகளனைத்தும் மூன்றுலோகங்களிலுமில்லை. சட்பாவவிகாரங்களுமில்லை. இவ்விரண்டில்லாத பூரணமாகிய அடையாளம் பெற்றிருக்கின்ற சின்மாத்திரமே ப்ரத்யக்ஷமாயிருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) சுசாதிக விசாதிக சுகதபேத ரகிதமான பரிபூரணமே ஞானமென்பதாம். (உக)

ஆயின் ஞானத்திற்கு வேறாக வொன்று மின்றேவெனின்.

கேவலமாகிக் கேவலவொளியாய்க் கேடறுசுத்தமாயவிரிவா
யோவலிலறிவு மாத்திரமாகி யுறுதுய ரொன்றுமற்றாறி
மேவருமிரதமனைத்தினுக்கொத்து விகாரமற்றுளபொருளிடத்தே
தாவருந்தனதுநினைவையேவிரும்பித்தன்வயத்தெழுந்ததோரறிவு.

(இ-ள்.) கேவலமாகி - தனிமையாகியும், கேவலவொளியாய் - தனிப்ரகாசமாகியும், கேடறு - அழிவற்றதாகியும், சுத்தமாய் - பரிசுத்தமாகியும், விரிவாய் - வியாபகமாகியும், ஓவலில் - பிரிவில்லாத, அறிவுமாத்திரமாகி - ஞானமாத்திரமாகியும், உறுதுயரொன்றுமற்று - பொருந்துகின்ற துன்பஞ் சற்றுமில்லாததாகியும், ஆறி - உபசாந்தமாகியும், மேவருமிரதமனைத்தினுக்கு - பொருந்துதற்கரிய வினிமையான வஸ்துக்களனைத்துக்கும், ஒத்து - கலந்து, விகாரமற்றுள - விகாரமற்றதாகியு மிருக்கின்ற, பொருளிடத்து - ஞானாத்மாவில், தாவரும் - தாவுதற்கரிய, தனது நினைவையே விரும்பி - தனது சங்கற்பத்தையே யிச்சித்து, தன் வயத்து - தனதுவசத்தில், ஓரறிவெழுந்தது - ஓரறிவுண்டாயிற்று—எ-று.

(இ-ள.) தனிமையாகியும், தனிப்ரகாசமாகியும், அழிவற்றதாகியும், பரிசுத்தமாகியும், வியாபகமாகியும், பிரிவில்லாத ஞான

மாத்திரமாகியும் பொருந்துகின்ற துன்பஞ் சற்றுமில்லாததாகியும் உபசாந்தமாகியும், பொருந்துதற்கரிய வினிமையான வஸ்துக்களனைத்துக்கும் கலந்து விகாரமற்றதாகியுமிருக்கின்ற ஞானாத்மாவில் தாவுதற்கரிய தனது சங்கற்பத்தையே யிச்சித்துதனதுவசத்தில் ஓரறிவுண்டாயிற்று—என்பதாம்.

(இ-ஃ.) சின்மாத்திரமான பிரமத்தினின்றுந் தனது ஸ்மரணமானவோர்போத முதித்ததுண்டென்பதாம். (உஉ)

## ஆயினப்போதம் வெளிப்படவில்லையோவெனின்.

செப்பியவறிவுமுடிவில்சங்கற்பஞ் செய்ததிற்சென்றிடுமிதுதா
னிப்பிரமத்தின்மனமதாமிதனுக் கெண்ணில்சத்திகளுளவாகுங்
கப்பிலாதெங்குநிரந்தரஞ்செய்யுங் கடுமையாமிம்மனந்தனிலே
யப்பிலேதோன்றுந்திரைகள்போற்பேதமாகியவல்லபந்தோன்றும்.

(இ-ள்.) செப்பியவறிவு - சொல்லிய ஞானமானது, முடிவில் சங்கற்பஞ்செய்து - அளவற்ற சங்கற்பத்தைசசெய்து, அதிற்சென்றிடும்-அதிற்செல்லும், அதுதான் - அவ்வறிவானது, இப்பிரமத்தின்மனமதாம் - இந்தப்பிரமத்தின் மனமேயாம், இதனுக்கு - இப்பிரமத்துக்கு, எண்ணில் சத்திகளுளவாகும் - அளவற்ற சத்திகளுண்டாயிருக்கும், கப்பிலாது - இரண்டில்லாமல், எங்கு நிரந்தரஞ்செய்யும் - எவ்விடத்திலுஞ் சமமாகச்செய்கின்ற, கடுமையாமிம்மனந்தனில் - வேகமான விம்மனத்தில் அப்பிலே தோன்றுந் திரைகள்போல் - சலத்திலுண்டான வலைகளைப்போல, பேதமாகிய வல்லபந்தோன்றும்-நாநாவிதமாகிய வல்லபசத்தியுண்டாகும்-எ-று.

(இ-ரை.) சொல்லியஞானமானது அளவற்ற சங்கற்பத்தைச் செய்து அதிற்செல்லும் அவ்வறிவானது இந்தப்பிரமத்தின் மனமேயாம். இப்பிரமத்துக்கு அளவற்ற சத்திகளுண்டாயிருக்கும், இரண்டில்லாமல் எவ்விடத்திலுஞ் சமமாகச்செய்கின்றவேகமான விம்மனத்தில் சலத்திலுண்டான வலைகளைப்போல நாநாவிதமாகிய வல்லபசத்தியுண்டாகும்—என்பதாம்.

(இ-ஃ.) போதமானது மனோரூபமாய்ச் சகல சத்திகளோடுங்கூடிச் சகலத்தையும் பேதம்போலத் தோற்றிவித்ததாம். (உ௩)

## ஆயினப்போதம் பந்தமாகாதோவெனின்.

உள்ளுறுசங்கற் பத்தினாற்றோன்றுமுள்ள மற்றதனினாலொ
டுங்குந், தள்ளுறுகாற்றா லெழுந்ததீக்கொழுந்து சமிப்பதுங் காற்

றினாற்போல, நள்ளுறுபிரமமன்றுநானென்று நாடுதன்மனத்துறு பந்த, மெள்ளுறுமிடமும் பிரிவிலாப்பொருளே யாமெனுமமுத்த மேவீடாம்.

(இ-ள்.) உள்ளுறு சங்கற்பத்தினாற்றோன்றும் - உள்ளேபொருந்தப் பட்ட சங்கற்பத்தினா லுண்டாகிய, உள்ளம் - (பேதசத்தியான) மனோரூப மானது, அதனினால் - அச்சங்கற்பத்தினால், தள்ளுறுகாற்றால் - மோதா நின்ற வாயுவினால், எழுந்ததீக்கொழுந்து - உண்டாகிய வக்கினிச்சுவாலை யானது, காற்றினாற் சமி..பதுபோல - வாயுவினாலணைவதுபோல, ஒடுங் கும் - நசிக்கும், நான் - யான், நள்ளுறுபிரமம் - மத்தியமாயிருக்கின்ற பிரமஸ்வரூபம், அன்று - அல்லவென்று, நாடுதல் - பார்ப்பதே, மனத்து றுபந்தம் - மனத்திலுள்ள பந்தமாம், எள்ளுறுமிடமும் - எள்ளளவாகி லும், பிரிவிலாப்பொருளே - பிரிவில்லாத பிரமஸ்வரூபமே, யாமெனுமமு த்தமே வீடாம் - நாமென்கின்ற திடபாவனையே முத்தியாம்—எ-று.

(இ-ா.) உள்ளேபொருந்தப்பட்ட சங்கற்பத்தினாலுண்டா கிய பேதசத்தியான மனோரூபமானது அச்சங்கற்பத்தினால் மோ தாநின்ற வாயுவினால் உண்டாகிய வக்கினிச்சுவாலையானது வாயு வினாலணைவதுபோல நசிக்கும். யான்மத்தியமாயிருக்கின்ற பிரமஸ் வரூபம் அல்லவென்று பார்ப்பதே மனத்திலுள்ள பந்தமாம். எள் ளளவாகிலும் பிரிவில்லாத பிரமஸ்வரூபமே நாமென்கின்ற திட பாவனையே முத்தியாம்—என்பதாம்.

(இ-ம்.) போதமான துதித்தவிடத்தொடுங்கிச் சகலமுந் தன்மயமா ய்ச் சிந்திக்கிற் பந்தமாகாதென்பதாம். (உச)

## ஆயின்மாயாகாரிய மின்றே ...வளின்.

மடமையுந்துயரு மவையவநிறைந்த வடிவமுமுடையநானெ ன்றே, படர்தருமவற்றிற் கேற்றபன்னடையாற் பாசமும்பந்தமு முளதாஞ், சடமுறுமிவற்றி லேதுமொன் றல்லேன் றசைநரம் பென்புநீரல்லே, னுடலின்மேலான பரமநானென்னு முறுதியோர் மாயைசெற் றுணர்ந்தோர்.

(இ-ள்.) நான் - யான், மடமையும் - அஞ்ஞானமும், துயரும் - துன் பமும், அவையவநிறைந்த - உறுப்புகணிறைந்த, வடிவமும் - உருவங்களு மாகிய (விவைகளை), உடையனென்று - உள்ளவனென்று, படர்தரும் - பரவியிருக்கின்ற, அவற்றிற்கேற்ற - அவைகளுக்கிசைந்த, பன்னடை யால் - நானாவிதமாகிய நடைகளினால், பாசமும் - ஆசையும், பந்தமும்-கட் டுப்படுதலும், உளதாம் - உண்டாகும், சடமுறுமிவற்றில் - சடமாகியவி

வைகளில், எதுமொன்றல்லேன் - யாதொன்றுநானல்லேன், தசை-ஊன்களும், நரம்பு - நரம்புகளும், என்பு - அஸ்திகளும், நீர்-புண்ணீரும், அல்லேன் - நானல்லேன், உடலின்மேலான - தேகத்தினதீதமாகிய, பரமநானென்னும் - பிரமஸ்வரூபமே யானென்கின்ற, உறுதியோர் - நிச்சயமுடையவர்கள், மாயைசெற்று - மாயையறுத்து, உணர்ந்தோர் - (தன்னை) யறிந்தவர்கள்—எ-று.

**(இ-ள.) யான் அஞ்ஞானமும், துன்பமும், உருப்புகணிறைந்த உருவங்களுமாகிய விவைகளை உள்ளவனென்று பாவியிருக்கின்ற அவைகளுக்கிசைந்த நாநாவிதமாகிய நடைகளினால்ஆசையும் கட்டுப்படுதலும் உண்டாகும். சடமாகியவிவைகளில் யாதொன்று நானல்லேன். ஊன்களும், நரம்புகளும், அஸ்திகளும், புண்ணீரும் நானல்லேன், தேகத்தினதீதமாகிய பிரமஸ்வரூபமேயானென்கின்ற நிச்சயமுடையவர்கள் மாயைபறுத்து தன்னையறிந்தவர்கள்.**

(இ-பு.) தானே பிரமமென்னு மனுபவத்தினாற் பாஞ்சபூதபௌதிகமனைத்தும் வேறின்றென்பதாம். (௨௫)

## அவ்வனுபவ மியாதினு லுண்டாமெனின்.

*தானலாதான வுடன்முதற்பொருளிற் றானெனும்பாவனையாய, வூனமாமாயை யுணர்விலோர்விதிக்க வுள்ளதாமுணர்வுளோர்க்கிலதா, மானதநினைத்த தைம்பொறியியற்று மன்னவர்க்கமைச்சர்போல்விரைவி, லானநன்மதியான் முயற்சியாற்போகத் தாசைவாதனையைவேரறுப்பாய்.*

(இ-ள்.) தானலாதான - தானல்லாததாகிய, உடன்முதற்பொருளில் -சரீரமுதலிய வஸ்துக்களில், தானெனும் - நானென்கின்ற, பாவனையாய-பாவனையாகிய, ஊனமாமாயை - ஈனமாகிய மாயையை, உணர்விலோர்-அறிவில்லாதவர்கள், விதிக்க - உண்டென்று நியமிக்க, உள்ளதாம்-உண்மையாம், உணர்வுளோர்க்கு - அறிவையுடையவர்களுக்கு, இலதாம்-(அம்மாயை) யில்லாததாம், மானதநினைத்தது - மனதெண்ணினதை, மன்னவர்க்கமைச்சர்போல் - அரசர்களுக்கு மந்திரியைப்போல, விரைவில்-சீக்கிரத்தில், ஐம்பொறி - பஞ்சேந்திரியங்கள், இயற்றும் - செய்யும், ஆன - ஆகின்ற, நன்மதியால் - நல்லறிவினாலும், முயற்சியால் - நன்முயற்சியினாலும், போகத்தாசை - போகத்தினவாவென்னும், வாதனையை - வாசனையை, வேரறுப்பாய் - வேருடன்கெடுப்பாய்—எ-று.

**(இ-ள.) தானல்லாததாகிய சரீரமுதலிய வஸ்துக்களில் நானென்கின்ற பாவனையாகிய ஈனமாகிய மாயையை அறிவில்**

லாதவர்கள் உண்டென்றுநியமிக்க உண்மையாம். அறிவையுடைய வர்களுக்கு அம்மாயை யில்லாததாம். மனதெண்ணினதை அரசர் களுக்கு மந்திரியைப்போல சீக்கிரத்தில் பஞ்சேந்திரியங்கள் செய் யும் ஆகின்ற நல்லறிவினுலும் நன்முயற்சியினுலும் போகத்தி னவாவென்னும் வாசனையை வேருடன் கெடுப்பாய்—என்பதாம்.

(இ-ம்.) விடயபோக விச்சாத்தியாகத்தாற் பிரமானுபவ முண்டா மென்பதாம். (உகூ)

## போகவிச்சை யாதினுனீங்குமெனின்.

என்னுடைமைந்த ரென்னுடைநிதிநா னிவனவனிதுவதுவெ ன்னு, மின்னுடைநிலைமை யிந்த்ரசாலத்தால் வீங்கியவாதனையோ ங்கு, நன்னுடைநிலையஞ் ஞானமாநிலைபோய் நாசமாயையிற்கருத் தொழிவாய், நின்னுடைவடிவி லவற்றைநீயென்றே நினைவிலார் போல்வருந்துவதென்.

(இ-ள்.) என்னுடைமைந்தர் - என்னுடைய புத்திரரென்றும், என் னுடைநிதி - என்னுடைய திரவியமென்றும், நான் - யானென்றும், இவன் - இவனென்றும், அவன் - அவனென்றும், இது - இதுவென்றும், அதுவென்னும் - அதுவென்றுஞ் சொல்லப்பட்ட, வீங்கியவாதனை - மிகு ந்த வாசனையானது, மின் - மின்னலைப்போல, உடை - அழிகின்ற, நிலை மை - நிலைமையுள்ள, இந்த்ரசாலத்து - இந்த்ரசாலத்தைப்போல, ஓங் கும் - வளரும், நன்னுடைநிலை - நன்மையுள்ள ஞாதாவாகி, அஞ்ஞான மாநிலைபோய் - அஞ்ஞானமான குணத்தைப்போக்கி, நாசமாயையில் - அழிவுள்ள திரிஸ்யத்தி (லிருக்கும்), கருத்தொழிவாய் - நினைப்பைவிடு வாய், நின்னுடை - உன்னுடைய, வடிவில் - ஸ்வரூபமில்லாத, அவற் றை - (புத்திராதியான) வம்மாயாசம்மந்தங்களை, நீயென்று - நீயென் (றெண்ணி), நினைவிலார்போல்-அஞ்ஞானிகளைப்போல, வருந்துவதென்- வருத்தப்படுவதென்ன—எ-று.

(இ-ஙா.) என்னுடைய புத்திரரென்றும், என்னுடைய திர வியமென்றும், யானென்றும், இவனென்றும், அவனென்றும், இதுவென்றும், அதுவென்றுஞ் சொல்லப்பட்ட மிகுந்தவாசனை யானது மின்னலைப்போல அழிகின்ற நிலைமையுள்ள இந்த்ரசாலத் தைப்போல வளரும். நன்மையுள்ள ஞாதாவாகி அஞ்ஞானமான குணத்தைப்போக்கி அழிவுள்ள திரிஸ்யத்திலிருக்கும் நினைப்பை விடுவாய், உன்னுடைய ஸ்வரூபமில்லாத புத்திராதியான வம்மா யாசம்பந்தங்களை நீயென்றெண்ணி அஞ்ஞானிகளைப்போல வருத் தப்படுவதென்ன—என்பதாம்.

(இ-ம்.) ஈடணாத்ரயங்களை யானெனதென்பது நீங்கி னிராசையுண்டாமென்பதாம். (உஎ)

## ஆயினித்தேக நாமல்லவோவெனின்.

மூகமாய்ச்சடமாய்ச் சுகாசுகங்களிலே மூழ்கியோர் பயனற வருந்தும், தேகமார்நீயாரகோவகோவீதோர் சித்திரமிருந்தவாகாணு, யேகமாய்மெய்யா யிலங்கியபிரம மெங்குமாயிருக்க வுந்தோன்றாச், சோகமாய்ப்பொய்யாய் விளங்குறுமாயைதோன்றுறாதிருக்கவுந்தோன்றும்.

(இ-ள்.) மூகமாய் - மூடமாகியும், சடமாய் - சடமாகியுமிருக்கின்ற, தேகமார் - தேகமென்பதார், சுகாசுகங்களில் - (அதனிமித்தஞ்) சுகதுக்கங்களில், மூழ்கி - அமிழ்ந்தி, ஓர்பயனற - ஓர் பிரயோசனமுமில்லாமல், வருந்தும் - துன்பப்படுகின்ற, நீயார் - நீயென்பதார், அகோவகோ - ஆச்சரியமாச்சரியம், ஈதோர் சித்திரம் - இந்த வொரு விசித்திரமானது, இருந்த வாகாணாய் - இருந்த ப்ரகாரம்பாராய், ஏகமாய் - ஒன்றாகியும், மெய்யாய் - சத்தியமாகியும், இலங்கிய - ப்ரகாசித்த, பிரமம் - பிரமஸ்வரூபமானது, எங்குமாயிருக்கவும் - எவ்விடத்திலு நிறைந்திருக்கவும், தோன்றா - தோற்றாமல், சோகமாய் - துன்பமாகியும், பொய்யாய் - மித்தையாகியும், விளங்குறு - விளங்குகின்ற, மாயை - மாயையானது, தோன்றுறாதிருக்கவும் - உண்டாகாமலிருக்கவும், தோன்றும் - தோற்றும்—எ-று.

(இ-ரை) மூடமாகியும், சடமாகியுமிருக்கின்ற தேகமென்பதார்? அதனிமித்தஞ் சுகதுக்கங்களில் அமிழ்ந்தி ஓர் பிரயோசனமுமில்லாமல் துன்பப்படுகின்ற நீயென்பதார்? ஆச்சரியமாச்சரியம்! இந்த வொரு விசித்திரமானது இருந்த ப்ரகாரம் பாராய். ஒன்றாகியும் சத்தியமாகியும் ப்ரகாசித்த பிரமஸ்வரூபமானது எவ்விடத்திலு நிறைந்திருக்கவும் தோற்றாமல்துன்பமாகியும் மித்தையாகியும் விளங்குகின்ற மாயையானது உண்டாகாமலிருக்கவும் தோற்றும்—என்பதாம்.

(இ-ம்.) ஆத்மஸ்வரூபமேயாமன்றி யித்தேகமன்றென்பதாம். (உஅ)

## ஆயினிருக்கவேண்டிய கிரம மியாதெனின்.

படிகநன்மணிகள் பற்றிபாய்நிறங்கள் பற்றறப்பற்றுறும்படிபோன், முடிவறுதொழிலிற் பின்விருப்பின்றி முடித்தியென்றருந்தவ வசிட்ட, னெடிதுரைத்தலுமே பரத்துவகேளாய் நிறைகுண

த்திராகவன்கேட்டு, மடியறுவிதய பங்கயமலர்ந்து வசிட்டனைநோக்கி யீதுரைத்தான்.

(இ-ள்.) படிகநன்மணிகள் - நல்லபடிகங்கள், பற்றிபாய்நிறங்கள் - பற்றிபாய்ந்திருக்கின்ற (பஞ்ச) வன்னங்களை, பற்றற - பற்றாமல், பற்றுறும்படிபோல் - பற்றியிருக்குந்தன்மையைப்போல, முடிவறு - அளவில்லாத, தொழிலில் - செய்கைகளிலிருந்தும், பின்விருப்பின்றி-பின் (பதில்) விழைவின்றி, முடித்தியென்று-(அத்தொழிலை) நடத்தென்று, அருந்தவ வசிட்டன் - அரியதவமுள்ளவசிட்டர், நெடிதுரைத்தலும் - மிகவுஞ்சொல்லவும், பரத்துவ - பரத்துவாசரே, கேளாய் - கேட்பாய், நிறைகுணத்து-நிறைந்த (சாந்த) குணத்தையுடைய, இராகவன்கேட்டு - இராமன்கேட்டு, மடியறு - குற்றமற்ற, இதயபங்கயமலர்ந்து - இதயதாமரை விகசிதமாய், வசிட்டனைநோக்கி - வசிட்டரிஷியைப்பார்த்து, ஈதுரைத்தான் - இதைச் சொன்னார்—எ-று.

(இ-கா.) நல்ல படிகங்கள்பற்றி பாய்ந்திருக்கின்ற பஞ்சவன்னங்களைப் பற்றாமல் பற்றியிருக்குந் தன்மையைப்போல அளவில்லாத செய்கைகளிலிருந்தும் பின்பதில் விழைவின்றி அத்தொழிலை நடத்தென்று அரிய தவமுள்ள வசிட்டர் மிகவுஞ்சொல்லவும் பரத்துவாசரே கேட்பாய், நிறைந்த சாந்தகுணத்தையுடைய இராமன் கேட்டு குற்றமற்ற இதயதாமரை விகசிதமாய் வசிட்டரிஷியைப்பார்த்து இதைச்சொன்னார்—என்பதாம்.

(இ-ம்.) ப்ரத்தியேகாத்மஸ்வரூபமா யொன்றிலும் பற்றற்று சொச்சமாயிருக்கவேண்டுமென்பதாம்.　(உ௧)

இல்லாதமாயை வருத்துவதும், அதனாலவனன் றுன்புற்றது மியர்தேன்கின்ற சங்கைகளிரண்டினுக்கு முத்தரங்கூறல்.

அற்புதமீதொன் றிருந்தவாறென்னே யம்புயஞானநூலாலே, வெற்பினம்பிணிப்புண்டறநெறிவதுபோல் வெறும்பொய்யாமாயையாலுலகம், பற்பலதுயரம் பயில்வதாந்திரணம் பருவயிரத்தின்வன்புறல்போ, லுற்பவமிலங்கு மதனினாலேற்கு முறுதியையன்றுமீட்டுரைப்பான்.

௳

(இ-ள்.) அற்புதமீதொன்று - ஈதோரதிசயம், இருந்தவாறென்னே-இருந்தப்ரகாரமென்ன, அம்புயஞானநூலால்-தாமரைத்தண்டி நூலினால், வெற்பினம் - மலைக்கூட்டங்கள், பிணிப்புண்டு - கட்டுப்பட்டு, அறநெறிவதுபோல் - மிகவுநெரிபடுவதுபோல, வெறும்பொய்யாம் - முழுதுமித்தையாகிய, மாயையால் - மாயையினால், உலகம் - பிரபஞ்சமானது, பற்பலதுயரம் - நானாவிதமாகிய துன்பத்தை, பயில்வதாம்-அனுபவிப்பதாம்,

திரணம் - துரும்பானது, பரு-பருத்த, வயிரத்தின் - வயிரத்திலும், வன்புறல்போல் - வலிமையை யடைவதுபோல, உற்பவம் - (சக) சிருஷ்டியானது, இலங்கும் - (மித்தையாய்) விளங்கும், அதனினால் - அம்மாயையினால், உறுதியை - திடத்தை, ஏற்கும் - பொருந்தும், என்று - என்றுசொல்லி, மீட்டுரைப்பான் - திரும்பவுமிராமர் சொல்லுவார்—எ-று.

(இ-ள்.) ஈதோரதிசயம் இருந்தப்ரகாரமென்ன தாமரைத் தண்டி நூலினால் மலைக்கூட்டங்கள்கட்டுப்பட்டு மிகவுநெரிபடுவது போல முழுது மித்தையாகிய மாயையினால் பிரபஞ்சமானது நாநாவிதமாகிய துன்பத்தைஅனுபவிப்பதாம். துரும்பானதுபருத்த வயிரத்திலும் வலிமையை யடைவது போல சகசிருஷ்டியானது மித்தையாய் விளங்கும். அம்மாயையினால் திடத்தைப்பொருந்தும் என்று சொல்லிதிரும்பவுமிராமர் சொல்லுவார்—என்பதாம். ()

இதுவுமது.

ஈதுமோரைய மெனன்மனத்துளதா லியம்பியலவணனுமன்னன், மாதுயரடைந்த தென்னெனக்கேட்ப வசிட்டமாமுனியதற்குரைப்பான், தீதகன்மனத்தா லியற்றலாலந்தச் செயல்பயனுடல்புசித்திலதா, லோதுறுமந்த மன்னனோர்நாளி லுபவனத்தொருவனுயிருந்தது.

(இ-ள்.) ஈதும் - இதுவும், ஒரையம் - (இன்ன) மொருசந்தேகமும், என்மனத்துளது - என்மனத்திலுண்டாயிருக்கின்றது, இயம்பிய லவணனுமன்னன் - முன்சொன்ன லவணவரசன், மாதுயரடைந்தது - பெரிய துன்பமடைந்தது, என்னெனக்கேட்ப - என்னகாரணமென் றிராமன் கேட்க, அதற்கு-அக்கேள்விக்கு, வசிட்டமாமுனி - வசிட்டமாமுனியானவர், உரைப்பான் - சொல்லுவார், தீதகன்மனத்தால் - குற்றமற்ற மனதினால், இயற்றலால் - செய்ததினால், அந்தச்செயல்பயன் - அத்தொழிலின் ப்ரயோசனத்தை, உடல்புசித்திலது - தேகமனுபவிக்கவில்லை, ஓதுறும் - சொல்லப்பட்ட, அந்த மன்னன் - அவ்வரசன், ஓர்நாளில் - ஒருதினத்தில், உபவனத்து - சிங்காரவனத்தில், ஒருவனுயிருந்து - தனியனுயிருந்துக்கொண்டு—எ-று.

(இ-ள.) இதுவும் இன்னமொரு சந்தேகமும் என்மனத்திலுண்டாயிருக்கின்றது. முன்சொன்ன லவணவரசன் பெரியதுன்பமடைந்தது என்னகாரணமென் றிராமன்கேட்க, அக்கேள்விக்கு வசிட்டமாமுனியானவர் சொல்லுவார். குற்றமற்ற மனதினால் செய்ததினால் அத்தொழிலின் ப்ரயோசனத்தை தேகமனுபவிக்கவில்லை. சொல்லப்பட்ட அவ்வரசன் ஒருதினத்தில் சிங்காரவனத்தில் தனியனுயிருந்துகொண்டு—என்பதாம்.

இதுவுமது.

இருதயத்துணர்வான் பிதாமகன்குருவா மிராசசூயஞ் செய்வோமென்னு, கருதியமனத்தான் மகத்தினுக்குரிய கலப்பைகளனைத்துமுண்டாக்கிச், சுருதிநூல்வழியே சாலையிற்புகுந்து துறவரை வரித்தருச்சித்து, வருதிரென்றிமையோர் களைமறைமொழியால் வரவழைத்தாரழல்கிளப்பி.

(இ-ள்.) இருதயத்துணர்வான் - மனதிற்சிந்திப்பான், பிதாமகன் - நமதுபாட்டனாகிய வரிச்சந்திரன் (தேகத்தோடுஞ்செய்த), குருவாமிராசசூயம் - பெருமையான விராசசூயயாகத்தை, செய்வோமென்னு - (நாமனதினுற்) செய்வோமென்று, கருதியமனத்தால் - நினைத்தமனதினுல், மகத்தினுக்குரிய - யாகத்துக்குரித்தாகிய, கலப்பைகள் - உழுகின்ற கலப்பைகளையும், அனைத்தும் - சகல திரவியங்களையும், உண்டாக்கி - சங்கற்பித்து, சுருதிநூல்வழி - வேதசாஸ்திரமார்க்கமாக, சாலையிற்புகுந்து - யாகசாலையிற்போய், துறவரை வரித்து - முனிகளை நியமித்து, அரிச்சித்து - பூசிதது, வருதிரென்று - வாருங்களென்று, இமையோர்களை - தேவர்க்களை, மறைமொழியால் - வேதமந்திரங்களினுல், வரவழைத்து - வரச்செய்து, ஆரழல்கிளப்பி - மிகவுமக்கினியைவளர்த்தி—எ-று.

(இ-ரை.) மனதிற்சிந்திப்பான் நமதுபாட்டனாகிய வரிச்சந்திரன் தேகத்தோடுஞ்செய்த பெருமையான விராசசூயயாகத்தை நாமனதினுற் செய்வோமென்று நினைத்தமனதினுல் யாகத்துக்குரித்தாகிய உழுகின்ற கலப்பைகளையும் சகல திரவியங்களையும் சங்கற்பித்து வேதசாஸ்திர மார்க்கமாக யாகசாலையிற்போய் முனிகளைநியமித்து பூசித்துவாருங்களென்று தேவர்க்களை வேதமந்திரங்களினுல் வரச்செய்து மிகவுமக்கினியைவளர்த்தி—என்பதாம்.

இதுவுமது.

கடவுளர்முனிவர் மறையவர்பூசை கடைப்பிடித் தாரொருவருடங், தொடர்புறநடத்தித் தன்பொருண்முழுதுந் தொலைவுறததானமாய் வழங்கி, திடமுறுமனத்தான் முடித்தபின்பகலுஞ் சென்றதுவிழித்தன னிதனு, லிடவியமனமே துன்பவின்பங்களெய் துறப்புசிப்பதென் றுணர்வாய்.

(இ-ள்.) கடவுளர் - தேவர்களுக்கும், முனிவர்-தபசிகளுக்கும், மறையவர் - அந்தணர்களுக்கும், பூசை - ஆராதனைகளை, கடைப்பிடித்து - உறுதியாக, ஆர் - நிறைந்த, ஒருவருடம் - ஓர்வருஷம், தொடர்புறநடத்தி - தொடர்ச்சியாகநடப்பித்து, தன் பொருண்முழுதும் - தனது திரவியங்களையெல்லாம், தொலைவுற - தொலைய, தானமாய் வழங்கி - நீதி

யாகக்கொடுத்து, திடமுறுமனத்தால் - திரமுள்ள மனதினால், முடித்த பின் - யாகத்தை நிறைவேற்றின பின்பு, பகலுஞ்சென்றது - பகற்பொழுது நீங்கிற்று, விழித்தனன் - (அரச) னகமுகம்விட்டு விழித்தான், இதனால்-இக்காரணத்தினால், இடவியமனமே - (ஒன்றி) லொதுங்கியமனதே, துன்பவின்பங்கள் - சுகதுக்கங்கள், எய்துறப்புசிப்பதென்றுணர்வாய் - அடையும்படி யனுபவிப்பதென்றறிவாய்—எ-று.

(இ-ளை.) மகவர்களுக்கும், தபசிகளுக்கும், அந்தணர்களுக்கும், ஆராதனைகளை உறுதியாக நிறைந்த ஓர்வருஷம் தொடர்ச்சியாக நடப்பித்து தனது திரவியங்களையெல்லாம் தொலைய நீதியாகக்கொடுத்து திரமுள்ள மனதினால் யாகத்தை நிறைவேற்றின பின்பு பகற்பொழுது நீங்கிற்று. அரசனகமுகம்விட்டுவிழித்தான். இக்காரணத்தினால் ஒன்றி லொதுங்கிய மனதே சுகதுக்கங்கள் அடையும்படி யனுபவிப்பதென் றறிவாய்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) சுகதுக்க மனதுக்கேயன்றித் தேகத்துக்கின்றென்பதை யறிவித்ததாம். (௩௩)

## சித்தன் றுன்பங்கொடுத்த தென்னெனின்.

சித்தனதியல்பு செப்பிடக்கேண்மோ திருந்தியலவணன்முன்னெய்தி, வித்தையான்மயக்கஞ் செய்துளசித்தன் மீண்டுபோயொளித்தனனங்கே, யித்தனைசெயலுங் கண்டுடனிருந்த வெம்மையீதென்னெனவினவ, வத்திறல்வேந்து மியாவருங்கேட்ப வகத்துணர்ந்துரைத்தன மனைத்தும்.

(இ-ள்.) சித்தனதியல்பு - சாம்பரிகனுடையகுணத்தை, செப்பிடக்கேண்மோ - (யான்)சொல்லக்கேட்பாய், திருந்திய - தெளிந்த, லவணன்முன்னெய்தி - லவணவரசனதுசபையின்முன்னடைந்து, வித்தையால் - (இந்த்ரசால) வித்தையினால், மயக்கஞ்செய்துள - மயக்கத்தைச்செய்திருக்கின்ற, சித்தன் - சாம்பரிகனானவன், மீண்டுபோய் - திரும்பிச்சென்று, ஒளித்தனன் - மறைந்தான், ஆங்கு - அவ்விடத்தில், இத்தனைசெயலுங்கண்டு - இவ்வளவுநடையையும்பார்த்து, உடனிருந்தவெம்மை - கூடவிருந்தநம்மை, ஈதென்னெனவினவ - இதென்னகாரணமென்றுகேட்க, அத்திறல்வேந்தும் - அவ்வல்லமையுடையவரசனும், இனியாவருங்கேட்ப - மந்திரிமுதலிய சகலருங்கேட்க, அகத்துணர்ந்து-உள்ளத்திற் (றிரிகாலத்தையுந்) தெரிந்துகொண்டு, அனைத்துமுரைத்தனம் - யாவையுஞ்சொன்னோம்—எ-று.

(இ-ளை.) சாம்பரிகனுடைய குணத்தை யான்சொல்லக்கேட்பாய். தெளிந்த லவணவரசனது சபையின் முன்னடைந்து இந்

த்ரசாலவித்தையினால் மயக்கத்தைச் செய்திருக்கின்ற சாம்பரிகனானவன் திரும்பிச்சென்று மறைந்தான். அவ்விடத்தில் இவ்வளவு நடையையும்பார்த்து கூட்டவிருந்த நம்மை இதென்னகாரணமென்றுகேட்க, அவ்வல்லமையுடைய வரசனும் மந்திரிமுதலிய சகலருங்கேட்க உள்ளத்திற் றிரிகாலத்தையுந் தெரிந்துகொண்டு யாவையுஞ் சொன்னோம்—என்பதாம். (௩௪)

இதுவுமது.

ஈங்கிதுபுகல விராகவகேட்டி யிராசசூயத்திலேலவணன், பாங்குறுமனத்தாற் றொகுத்தவாயாரும் பன்னிருவருடம் வன்றுயரிற், றீங்குறுவருத்த முறுதலான்மகவான் சேணினின்றொருவனை யேவ, வாங்கவன்சித்த னாகியேலவணற் கருந்துயரளித்து மீண்டகன்றான்.

(இ-ள்.) ஈங்கிதுபுகல - இவ்விடத்தித்துன்பம் (வந்தகாரணத்தைச்) சொல்ல, இராகவகேட்டி - இராமாகேள், இராசசூயத்தில் - இராசசூயயாகத் (தைச்செய்த), யாரும் - யாவரும், பன்னிருவருடம் - பன்னிரண்டுவருஷம், வன்றுயரில் - வலியதுன்பத்தில், தீங்குறு வருத்தமுறுதலால் - தீயவருத்த மடைதலால், லவணன் - லவணனும், பாங்குறுமனத்தால் - (தனக்) குரித்தானமனதினால், தொகுத்தவா - (இராசசூயங்) கூட்டிச்செய்தபடிக்கு, மகவான் - இந்திரன், சேணினின்று - (துன்பங்கொடுக்குநிமித்தம்) விண்ணுலகத்தி னின்று, ஒருவனையேவ - ஒருத்தனையனுப்ப, அவன் - அத்தேவதூதன், சித்தனாகி - சித்தனாய் (வந்து), லவணற்கு - (யாகஞ்செய்த) லவணவரசனுக்கு, அருந்துயரளித்து - அரியதுன்பத்தைக்கொடுத்து, மீண்டகன்றான் - திரும்பிப்போயினான்—எ-று.

(இ-ள.) இவ்விடத்தித் துன்பம்வந்த காரணத்தைச்சொல்ல இராமாகேள்? இராசசூயயாகத்தைச்செய்த யாவரும்பன்னிரண்டு வருஷம் வலியதுன்பத்தில் தீய வருத்தமடைதலால் லவணனும் தனக்குரித்தான மனதினால் இராசசூயங்கூட்டிச் செய்தபடிக்கு இந்திரன் துன்பங்கொடுக்கு நிமித்தம் விண்ணுலகத்தினின்று ஒருத்தனையனுப்ப அத்தேவதூதன் சித்தனாய்வந்து யாகஞ்செய்த லவணவரசனுக்கு அரிய துன்பத்தைக்கொடுத்து திரும்பிப்போயினான்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) லவணன் றுன்பமடையு நிமித்தம் வந்த காரணமுரைத்ததாம். இராசசூயஞ் செய்தவர்க்குத் துன்பம் வருமென்பதற்கு ப்ரமாணமரிச்சந்திரன் றருமபுத்திரர் முதலியோரெனக்கொள்க. (௩௫)

## முதற்சங்கைக் குத்தரந்தோன்ற ஞானஞ்ஞான பூமிகளைத் தொகுத்துக் கூறல்.

மற்றுமொன்றுரைக்க வள்ளலேகேட்பாய் மடமையாம் பூமி யேழ்பதமா, முற்றுளஞான பூமியேழ்பதமா மொழிந்தவிப் பதங் கடம்மிற்றம், பற்றுளவாகு மொன்றொன்றொடொன்றளாவிப் பயில் வன பதங்களன் மட்டிலவா, மற்றமில்சொரூப நிலைபெறல்வீடா மதி னழுவுறுதனானெனலே.

(இ-ள்.) மற்றுமொன்றுரைக்க - இன்னமொன்று சொல்ல, வள்ள லேகேட்பாய் - ஸ்ரீராமா நீ கேட்பாய், மடமையாம்பூமி - அஞ்ஞானபூமி, ஏழ்பதமாம் - ஏழுமார்க்கமாய, முற்றுளஞானபூமி - முடிவாகிய ஞானபூ மியானது, ஏழ்பதமாம் - ஏழுமார்க்கமாம், மொழிந்த - சொல்லிய, இப்ப தங்கள் - (இவ்விரண்டு)மார்க்கங்களும், தம்மிற்றும்பற்றுளவாகும் - (அவ ற்றி) லொன்றுக்கொன்று சம்பந்தமாம், ஒன்றொடொன் றளாவி - ஒன் றோடொன்று வியாபித்து, பயில்வன பதங்கள் - பொருந்துவனவாகிய மார்க்கங்களானவை, மட்டிலவாம் - அளவில்லனவாம், அற்றமில் - ப்ரத் யக்ஷமாகிய, சொரூபநிலைபெறல் - ஸ்வரூபநிச்சயத்தைப்பெறுவதே, வீடா ம் - மோக்ஷமாம், அதினழுவுறுதல் - அச்சொரூபத்தைவிட்டுநழுவுதல், நானெனல் - (தேகாதியை) நானென்கின்ற (பந்தமாம்)—எ-று.

(இ-ரை.) இன்னமொன்றுசொல்ல ஸ்ரீராமாநீகேட்பாய்? அஞ் ஞானபூமி ஏழுமார்க்கமாம். முடிவாகிய ஞானபூமியானது ஏழுமார் க்கமாம். சொல்லிய இவ்விரண்டு மார்க்கங்களும் அவற்றிலொன் றுக்கொன்று சம்பந்தமாம். ஒன்றோடொன்றுவியாபித்து பொரு ந்துவனவாகிய மார்க்கங்களானவை அளவில்லனவாம். ப்ரத்யக்ஷ மாகிய ஸ்வரூப நிச்சயத்தைப்பெறுவதே மோக்ஷமாம். அச்சொ ரூபத்தைவிட்டு நழுவுதல் தேகாதியை நானென்கின்ற பந்தமாம்.

(இ-கு.) ஆத்மவிபகாரம் ஞானபூமியென்றும் அநாத்ம விபகார மஞ் ஞானபூமியென்று மறிவிக்கப்பட்டதாம். (௩௬)

## ஆத்மாவாயிருத்தலையு மநாத்மாவாதலையு மறிவித்தல்.

அடக்கமாயுரைத்தே மஃதறிந்தவர்க்கு மறியலாதவர்க்கு நற் குறிக, டொடக்கமில்சன்மாத் திரமதாமறிவின் சொரூபநின்றசை விலாதவரே, விடற்கருங்காம முப்பகைகடந்தோர் மெய்யறிவிலார் கடப்பரியோர், நடக்குறுகாட்சி விதத்தில்வீழறிவே நோக்கருஞ் சொருபத்தி னழுவல்.

(இ-ள்.) அடக்கமாயுரைத்தேம் - (இப்பூமிகளைச்சுருக்கமாகச்சொல்லி னம், அஃதறிந்தவர்க்கும் - அவ்வஸ்துவை யுணர்ந்தவர்களுக்கும், அறிவி லாதவர்க்கும் - உணராதவர்களுக்கும், நற்குறிகள் - நல்ல வடையாளங்க ளாவன, தொடக்கமில் - அநாதியான, சன்மாத்திரமதாம் - சத்தாமாத்தி ரமாயுள்ள, அறிவின்சொரூபநின்று-ஞானஸ்வரூபத்திலிருந்து, அசைவி லாதவரே-சலனமற்றவர்களே, விடற்கரும் - விடுதற்கரிய, காமமுப்பகை- காமவெகுளி மயக்கமென்னு மூக்குற்றங்களையும், கடந்தோர் - செயித்த வர்களாம், மெய்யறிவிலார் - உண்மை ஞானமில்லாதவர்கள், கடப்பரி யோர் - (காமமுதலியவைகளைச்) செயிக்காதவர்களாம், நடக்குறு - சலன முள்ள, காட்சிவிதத்தால் - தேகேந்திரியங்களில், வீழறிவே-செல்கின்ற ஞானமே, நோக்கரும்-பார்த்தற்கரிய, சொருபத்தினழுவல் - ஸ்வரூபத்தி னின்று நீங்குதலாம்—எ-று.

(இ-ரை.) இப்பூமிகளைச் சுருக்கமாகச் சொல்லினம். அவ்வஸ் துவை யுணர்ந்தவர்களுக்கும்உணராதவர்களுக்கும் நல்லவடையா ளங்களாவன, அநாதியான சத்தாமாத்திரமாயுள்ள ஞானஸ்வரூப த்தி லிருந்து சலனமற்றவர்களே விடுதற்கரிய காமவெகுளிமயக்க மென்னு மூக்குற்றங்களையும் செயித்தவர்களாம் உண்மை ஞான மில்லாதவர்கள் காமமுதலியவைகளைச் செயிக்காதவர்களாம். சல னமுள்ள தேகேந்திரியங்களில்செல்கின்றஞானமே பார்த்தற்கரிய ஸ்வரூபத்தினின்று நீங்குதலாம்—என்பதாம்.

இதுவுமது.

சொருபம்விட்டகலன் மோகமாம்வேறு சொல்லிடமுன்பு பின்பில்லை, றொருபொருணினைவை யொழித்துமேலப்பாலொரு பொருணினைவுறிலந்த, விருபொருணடுவு ணினைவறவிருக்கு மிகு சொருபத்தியல்பிதுதான், மருவுகற்பனைமாண்டசைவில்கற்போ லாய் வருனனுச்சுழுத்திதீர்வடிவாம்.

(இ-ள்.) சொருபம்விட்டகலல்-ஆத்மஸ்வரூபத்தைவிட்டு நீங்கு (மறி வே), மோகமாம் - மோகமென்று சொல்லப்படும், வேறுசொல்லிட-வேறே (மோகமுண்டென்று) சொல்ல, முன்புபின்பில்லை - முன்னும்பின்னுமில் லையாம், ஒருபொருள் - ஒருவிடயவஸ்துவின், நினைவையொழித்து - நினை வைவிட்டு, மேலப்பாலொருபொருணினைவுறில் - மேலொருபுறத்தி (லிரு க்கின்ற) விடயவஸ்துவை நினைக்குமிடத்தில், அந்தவிருபொருணடுவும் - அவ்விரண்டுவஸ்துவின் மத்தியிலும், நினைவறவிருக்குமிது - சங்கற்ப ரகி தமா யிருக்கின்றவிந்த ஞானமே, சொருபத்தியல்பு - ஸ்வரூபத்தின் றன் மையாம், இதுதான் - இந்தஞானம், மருவுகற்பனைமாண்டு - பொருந்திய கற்பனாரகிதமாய், அசைவில்கற்போலாய் - சலனமில்லாதபாடாணத்துக் கொப்பாகி, வருநனு - வருகின்றநனவிலுள்ள (விருத்திஞானமும்), சுழு த்தி - சுழுத்தியவத்தையிலுள்ள (வஞ்ஞானமும், தீர்வடிவாம் - தீர்ந்தஸ் வரூபமாம்—எ-று.

(இ-ரை.) ஆத்மஸ்வரூபத்தைவிட்டு நீங்குமறிவே மோகமென்றுசொல்லப்படும். வேறேபோகமுண்டென்றுசொல்லமுன்னும் பின்னுமில்லையாம், ஒரு விடயவஸ்துவின்நினைவைவிட்டு, மேலொருபுறத்திலிருக்கின்ற விடயவஸ்துவை நினைக்குமிடத்தில் அவ்விரண்டுவஸ்துவின் மத்தியிலும் சங்கற்பரகிதமாயிருக்கின்ற விந்த ஞானமேஸ்வரூபத்தின் றன்மையாம். இந்தஞானம்பொருந்திய கற்பனாரகிதமாய் சலனமில்லாத பாடாணத்துக்கொப்பாகிவருகின்ற நனவிலுள்ள விருத்திஞானமும் சுழுத்திமவத்தையிலுள்ள வஞ்ஞானமும் தீர்ந்தஸ்வரூபமாம்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) ஆத்மாநாத்மா விலக்கணமறிவித்ததாம். (௩௮)

### பிரமநிச்சயங்கூறி யஞ்ஞானபூமியினுமங்களைப் பதத்துரைத்தல்.

நானெனும்பிரிவும்பேதமுமற்று நல்லறிவாயசையாத [பா
மானதநிலையேசொருபமாமுன்சொன் மடமையாம்புவிபதங்கேட்
யீனமாம்விந்துநனவுமேனனவு மியன்றமாநனவுமந்நனவி
லானதோர்கனவுங்கனவுமிக்கனவி லடர்நனவுஞ்சுழுத்தியுமே.

(இ-ள்.) நானெனும்பிரிவும் - (தேக) நானென்கின்றபிரிவும், பேதமுமற்று - (சீவேஸ்வர) பேதஞானமுநசித்து, நல்லறிவாய்-சுகபோதமாய் அசையாத - சலியாத, மானதநிலையே - மனோநிச்சயமே, சொருபமாம் - (ஆத்மஞான) ஸ்வரூபமாகும், முன்சொல்-முன்னுரைத்த, மடமையாம் - அஞ்ஞானமாகிய, புவிபதங்கேட்பாய் - பூமிகளைக்கேட்பாய், ஈனமாம் - இழிவாகிய, விந்துநனவும் - விந்துசாக்கிரமும், மேனனவும் - மேற்சாக்கிரமும், இயன்றமாநனவும் - பொருந்தியமகாசாக்கிரமும், அந்நனவிலான தோர்கனவும் - அதிற்சாக்கிரசொற்பனமும், கனவும்-சொற்பனமும், இக்கனவிலடர்நனவும் - இச்சொற்பனசாக்கிரமும், சுழுத்தியும் - சுழுத்தியுமென்றுசொல்லப்படும்.

(இ-ரை.) தேகநானென்கின்ற பிரிவும் சீவேஸ்வர பேதஞானமுநசித்து சுகபோதமாய் சலியாத மனோநிச்சயமே ஆத்மஞான ஸ்வரூபமாகும். முன்னுரைத்த அஞ்ஞானமாகிய பூமிகளைக்கேட்பாய், இழிவாகிய விந்துசாக்கிரமும் மேற்சாக்கிரமும் பொருந்திய மகாசாக்கிரமும் அதிற்சாக்கிர சொற்பனமும் இச்சொற்பன சாக்கிரமும் சுழுத்தியுமென்று சொல்லப்படும்.

(இ-ம்.) வெளிப்படை. (௩௯)

### அதன்முதற்பூமியி னிலக்கணமறிவித்தல்.

இத்திறமேழு மேகமாய்நெருக்குற் றிவைபல பெயர்களை யெய்துஞ், சித்திலேநின்றோ ரறிவுபேரின்றிச் செறிமல மின்றிமேல்

வந்து, வத்தியாநிற்குஞ் சித்தசீவாதி வருபெயர் செயல்களுக் கிடமாய், வித்துரூபமதாய் நின்றிடுமதனால் விதைநன வாமுதற் பதமே.

(இ-ள்.) இத்திறமேழும் - இத்தன்மையையுடைய வஞ்ஞானபூமிக ளேழும், ஏகமாய்நெருக்குற்று - ஒன்றோடொன்றுகலந்து, இவைபலபெ யர்களையெய்தும் - இப்பூமிகளநேகநாமங்களையடையும், சித்திலேநின்று - ஆத்மஞானத்திலிருந்து, ஓரறிவு - ஒருஞானமானது, பெயரின்றி - நாம மில்லாததாகியும், செறிமலமின்றி - நெருங்கிய களங்கமில்லாததாகியும், மேல்வந்து - இனியுண்டாகிவந்து, வத்தியாநிற்கும் - விருத்தியடையாநி ன்ற, சித்தசீவாதி - மனது சீவன்முதலாக, வருபெயர்செயல்களுக்கு - வருகின்றநாமக்கிரிகைகளுக்கு, இடமாய் - ஆதாரமாகியும், வித்துரூபம தாய் - பீசரூபமாகியும், நின்றிடுமெதனால்-நிற்கின்றவதனால், முதற்பதம் - முதற்பூமியானது, விதைநனவாம் - விந்துசாக்கிரமாம்—எ-று.

(இ-ரை.) இத்தன்மையையுடைய வஞ்ஞான பூமிகளேழும் ஒன்றோடொன்று கலந்து இப்பூமிக ளநேகநாமங்களை யடையும். ஆத்மஞானத்திலிருந்து ஒரு ஞானமானது நாமமில்லாததாகியும், நெருங்கிய களங்கமில்லாததாகியும, இனியுண்டாகிவந்து விருத்தி யடையாநின்ற மனது சீவன்முதலாக வருகின்ற நாமக்கிரிகைகளு க்கு ஆதாரமாகியும், பீசரூபமாகியும் நிற்கின்றவதனால் முதற்பூமி யானது விந்துசாக்கிரமாம்—என்பதாம்.

(இ-ஃ.) பிரமத்தினுமரூப ரகிதமாயுண்டான வறிவே சகல சிருஷ்டி க்கு மாதாரமாகையா லது விந்து நனவென நாமமிடப்பட்டதாம். (சo)

## இரண்டாம்பூமி மூன்றும்பூமியி னிலக்கணங்கூறல்.

இதுவறிவுக்கு முதலவத்தையதா மிதத்துறப் பிறந்தபின் னிவனு, னிதுவென தெனப்பண் டிலாமையாநொய்தா யெழுந் துளவறுதியேநனவா, மிதுதனையொழிய விவனவனென யிதுவது வென்னதென்றெண்ணு, மிது முதற்பிறப்பிற் றொடர்ச்சியாய்ப் பருக்கு மிந்தநிச்சயம் பெருநனவாம்.

(இ-ள்.) இது - இவ்விந்துசாக்கிரமானது, அறிவுக்கு - பிரமஞானத் துக்கு, முதலவத்தையதாம் - முதன்மையானவவத்தையாம், இதத்துறப் பிறந்தபின் - உரிமையாகச் (சீவ) னுண்டானபின்பு, இவனுன் - இவனு னென்றும், இதுவெனதென - இதென்னுடையதென்றும்,பண்டிலாமை- முன்னில்லாததான, நொய்தாய் - (இப்பொழு) தற்பமாக, எழுந்துள - உண்டாயிருக்கின்ற, அறுதியே - நிச்சயமே, நனவாம் - சாக்கிரமாம், இது தனையொழிய - இதையன்றி, இவனவனுன் - இவனுனென்றுமவனுனெ

ன்றும், இதுவதுவென்னதென்று - இதுவென்னதென்று மதுவென்ன தென்றும், எண்ணும் - சிந்திக்கப்பட்ட, இதுமுதல் - இதுமுதலாகிய, பிறப்பில் - சநநாந்தரங்களில், தொடர்ச்சியாய் - தொந்தமாக, பருக்கும் - பெருக்கின்ற, இந்நிச்சயம் - இந்நிச்சயமானது, பெருநனுவாம் - மகாசாக்கிரமாம்—எ-று.

(இ-ள.) இவ்விந்து சாக்கிரமானது, பிரம ஞானத்துக்கு முதன்மையான வவத்தையாம். உரிமையாகச் சீவனுண்டான பின்பு இவனுனென்றும், இதென்னுடையதென்றும், முன்னில்லாததான இப்பொழுதற்பமாக உண்டாயிருக்கின்ற நிச்சயமேசாக்கிரமாம். இதையன்றி இவனுனென்று மவனுனென்றும், இதுவென்னதென்று மதுவென்னதென்றும், சிந்திக்கப்பட்ட இதுமுதலாகிய சநநாந்தரங்களில்தொந்தமாகபெருக்கின்ற இந்நிச்சயமானது மகாசாக்கிரமாம்—என்பதாம்.

(இ-ம்.) பொதுவாயுண்டான வறிவுக்கு முன்னில்லாதபேதஞ் சூட்சுமமாயுண்டானவிடமே சாக்கிரமென்றும், அவ்வாசனை வளர்ந்தவிடமே மகாசாக்கிரமென்றுங் கூறப்பட்டதாம். (சுக)

## நான்காம்பூமியி னிலக்கணங்கூறல்

அறிந்துளதெனினு மறியலாதெனினு மழுந்துறத்தானது வாகிச், செறிந்துளநனவிற் சித்தராச்சியமே செய்வதுநனுக்கனு வாகு, மெறிந்தகானலினீர் சுத்திகைவெள்ளி யிருமதியிவைமுதற பலவாய்ப், பிறிந்தபேதங்க ணனவிலேபழகும் பெற்றியாற்கனவு பல்விதமாம்.

(இ-ள்.) அறிந்துளதெனினும் - (முன்வாதனையினு) லறிந்ததானுலும், அறியலாதெனினும் - அறியாததானுலும், அழுந்துற - (தோற்றின தி) லழுந்த, தானதுவாகி - தானந்தமயமாகி, செறிந்துளநனவில் - நெருங்கியசாக்கிரத்தில், சித்தராச்சியமேசெய்வது மனோராச்சியஞ்செய்வது, நனுக்கனுவாகும் - சாக்கிரசொற்பனமாகும், எறிந்த - (அலைகள்) வீசாநின்ற, கானலினீர் - கானலிற்சலமும், சுத்திகைவெள்ளி - கிளிஞ்சிலில்ரசிதமும், இருமதி - இரண்டுசந்திரனுமாகிய, இவைமுதல் - இவைகள்முதலாக, பலவாய் - நாநாவிதங்களாக, பிரிந்தபேதங்கள் - நீங்கினவேற்றுமைகளை, நனவிலேபழகும் - சாக்கிரத்திலனுபவிக்கின்ற, பெற்றியால் - தன்மையால், கனவுபல்விதமாம் - சொற்பனம் நாநாவகைப்படும்—எ-று.

(இ-ள.) முன்வாதனையினு லறிந்ததானுலும், அறியாததானுலும் தோற்றினதிலழுந்த தானந்தமயமாகி நெருங்கியசாக்கிரத்தில் மனோராச்சியஞ்செய்வது சாக்கிரசொற்பனமாகும். அலைகள்

வீசாநின்ற கானலிற்சலமும் கிளிஞ்சிலில் ரசிதமும், இரண்டுசந்திரனுமாகிய இவைகள்முதலாக நாநாவிதங்களாகநீங்கின வேற்றுமைகளை சாக்கிரத்தி லனுபவிக்கின்றதன்மையால் சொற்பனம் நாநாவகைப்படும்--என்பதாம்.

(இ-ம்.) சாக்கிரத்தின் முன்பார்த்ததையும் பாராததையுங் கற்பித்து பயனின்றி வீணுக மனோராச்சியஞ்செய்வதே சாக்கிரசொற்பனமென்பதாம். (சஉ)

## ஐந்தாம்பூமி யாறும்பூமிகளி னிலக்கணங்கூறல்.

அற்பகாலத்தி லநேகமாஞ்செயல்கண் டறிந்தனமெனுங்கனவழிந்து, முற்படுசெயலை நினைவதுகனவா முந்துகண்டதனைநாளகன்று, பிற்படக்காணும் பொருள்களை மறந்து பெரும்பொழுதுணர்வுறநோக்குஞ், சொற்பனநனவு போனனவுக்கேதோன்றுமிச்செயல்கனுநனவே.

(இ-ள்.) அற்பகாலத்தில்-க்ஷணகாலத்தில், அநேகமாஞ்செயல்-அளவில்லாத தொழில்களை, கண்டறிந்தனமெனும் - பார்த்துணர்ந்தோமென்னும், கனவழிந்து - சொற்பனநீங்கி, முற்படுசெயலை - முன்னடந்தசங்கதிகளை, நினைவது கனவாம் - சிந்திப்பது சொற்பனமாம், முந்துகண்டதனை - முன்பார்த்தபொருளை, நாளகன்று - (அநேக) நாள் கழித்து, பிற்படக்காணும் - பின்புபார்க்கின்ற, பொருள்களை மறந்து - (அவ் வஸ்துக்களை மறந்தவனாய், பெரும்பொழுது - வெகுநேரம், உணர்வுறநோக்கும்- அறிவுவரப்பார்க்கின்ற, சொற்பனம் - சொற்பனமானது, நனவுபோல் - சாக்கிரத்தைப்போல, நனவுக்கே - சாக்கிரத்திற்கே, தோன்றும் - தோற்றுகின்ற, இச்செயல் - இத்தொழிலே, கனுநனவு - சொற்பன சாக்கிரமாம்—எ-று.

(இ-ம.) க்ஷணகாலத்தில் அளவில்லாத தொழில்களைப்பார்த்துணர்ந்தோமென்னும் சொற்பனநீங்கி, முன்னடந்தசங்கதிகளை சிந்திப்பது சொற்பனமாம். முன்பார்த்த பொருளை அநேகநாள் கழித்து பின்பு பார்க்கின்ற அவ்வஸ்துக்களை மறந்தவனாய் வெகுநேரம் அறிவுவரப்பார்க்கின்ற சொற்பனமானது சாக்கிரத்தைப போல சாக்கிரத்திற்கே தோற்றுகின்ற இத்தொழிலே சொற்பன சாக்கிரமாம்—என்பதாம்.

(இ-ம்.) நனவிற்கற்பித்த வடிவைக்காண்பது சொற்பனமென்றும், மறந்ததைநினைப்பதே சொற்பன சாக்கிரமென்றுஞ் சொன்னதாம். (சங)

## ஏழாப்பூமியி னிலக்கணங்கூறல்.

அறுவகையவத்தை யகற்றியசீவ னடைந்துளவவத்தையினி யற்கை, யுறுசடமாகிமேல்வருந்துயர்கூர் வுணர்வுளதாமிதுசுழுத்தி. துறுபுவனங்க ளிதனிடையிருளிற் றொலைவுறுமிப்பதமேழும், பெறுவனபேத மொன்றுநூறுகும் பேதைமையவத்தை யிவ்வேழும்.

(இ-ள்.) அறுவகையவத்தை - (இவ்) வாறுவிதமாகிய வவத்தைகளை, அகற்றியசீவன் - நீக்கியசீவனானவன், அடைந்துள - பெற்றிருக்கின்ற, அவத்தையினியற்கை - அவத்தைகளின்றன்மையானது, உறுசடமாகி - பொருந்துகின்றசடத்துவமாகி, மேல்வருந்துயர்கூர் - மேலுண்டாகின்ற துக்கமிருந்த, உணர்வுளதாமிது - அறிவுள்ளதான விதுவே, சுழுத்தி-சுழுத்தியாம், துறுபுவனங்கள் - நெருங்கிய வுலகங்கள், இதனிடையிருளில் - இவ்வவத்தைகளி லுண்டான மாயாந்தகாரத்தில், தொலைவுறும் - (உண்டாகி) நசிக்கும், இப்பதமேழும் - இவ்வஞ்ஞான பூமிகளேழும், பெறுவனபேதம் - அடையப்படுவன வாகிய பேதங்கள், ஒன்றுநூறுகும் - ஒன்றளவில்லனவாகும், இவ்வேழும் - இந்தவேழும், பேதைமையவத்தை - அஞ்ஞானபூமிகளாம்—எ-று.

(இ-ள்.) இவ்வாறுவிதமாகிய வவத்தைகளைநீக்கிய சீவனானவன் பெற்றிருக்கின்ற அவத்தைகளின்றன்மையானது பொருந்துகின்ற சடத்துவமாகி மேலுண்டாகின்ற துக்கமிருந்த அறிவுள்ளதான விதுவே சுழுத்தியாம். நெருங்கிய வுலகங்கள் இவ்வவத்தைகளிலுண்டானமாயாந்தகாரத்தில் உண்டாகிநசிக்கும். இவ்வஞ்ஞானபூமிகளேழும் அடையப்படுவன வாகிய பேதங்கள் ஒன்றளவில்லனவாகும். இந்தவேழும் அஞ்ஞானபூமிகளாம்—என்பதாம்.

(இ-ரி.) ஆத்மப்ரதிவிம்பமாயெதிரிட்ட விடயத்தைச்சுகமென்றதிலழுந்திப்போவதே சுழுத்தியென்பதாம். (சச)

---

**மாயாவிசித்திரத்தையறிவிக்கநிமித்த மஞ்ஞானபூமியைச்சொல்லியதை நீக்கிச் சித்தையடையும்பொருட்டு ஞானபூமியைப் பகுத்துக்கூறல்.**

**வேறு.**

ஞானபூமியைமுடிவிற்பேதமாக நவிலுவர்வாதியறவற்றினமக்குநல்ல, தானதிவையிவையறிதன் ஞானமாகு மறிந்தவிவற்றந்தமே யழிவில்வீடா, மானமுருசுபம்விரும்பல் விசாரமெய்தன் மனஞ்சிறுகலுண்மையிலே மன்னிநிற்ற, லீனமறுசங்கற்பமறல்பதார்த்த மெண்ணமறுத்திடறுரியமிவையேழாகும்.

(இ-ள்.) ஞானபூமியை - ஞானபூமிகளை, முடிவில - அளவில்லாத பேதமாக - பேதங்களாக, வாதியர் - வாதஞ் செய்பவர்கள், நவிலுவர் - சொல்லுவார்கள், அவற்றில் - அவைகளில், இவை - இப்படி சொல்லப்படு பவை, நமக்கு நல்லதாம் - நமக்கிஷ்டமுள்ளதாம், இவையறிதல் - இந்த ஞானபூமியின் ஸ்வரூபத்தையுணர்தல், ஞானமாகும் - (ஆத்)ம ஞானமாம், அறிந்தவிவற்று - அறிந்தவிவைகளின், அந்தமே - முடிவே, அழிவில் வீடாம் - அழிவற்ற நிருவாணமாம், மானமுறு - பிரமாணமுள்ள, சுபம் விரும்பல் - சுபேச்சை யென்றும், எய்தல் - அடைதலாகிய, விசாரம் - விசாரணையென்றும், மனஞ்சிறுகல் - தனுமானசியென்றும், உண்மையிலே மன்னிநிற்றல் - சத்துவாபத்தியென்றும், ஈனமறுஞ்சங்கற்பமறல் - இழிவற்ற வம்சத்தியென்றும், பதார்த்தமெண்ணமறுத்திடல் - பதார்த்த பாவனையென்றும், துரியம் - துரியமென்றும், இவையேழாகும் - இந்த ஞான பூமிக ளேழுவகைப்படும்—எ-று.

(இ-ரை.) ஞானபூமிகளை அளவில்லாத பேதங்களாக வாதஞ் செய்பவர்கள் சொல்லுவார்கள். அவைகளில் இப்படிச்சொல்லப் படுபவை நமக்கிஷ்டமுள்ளதாம். இந்த ஞானபூமியின் ஸ்வரூபத் தையுணர்தல் ஆத்மஞானமாம். அறிந்த விவைகளின்முடிவே அழி வற்ற நிருவாணமாம். பிரமாணமுள்ள சுபேச்சையென்றும்அடை தலாகியவிசாரணையென்றும், தனுமானசியென்றும், சத்துவாபத் தியென்றும், இழிவற்ற வம்சத்தியென்றும், பதார்த்த பாவனை யென்றும், துரியமென்றும், இந்தஞானபூமிக ளேழுவகைப்படும்.

(இ-ம்.) வெளிப்படை. (௪௫)

## முதற்பூமி யிரண்டாம்பூமிகளி னிலக்கணங்கூறல்.

இவையறிந்தோர் மோகமெனு மளத்தில்வீழா ரிவற்றியலா முத்திவரி லிடர்மீண்டில்லை, நவையுறுமோகத்தொடுநாமடைவதெ ன்னே நல்லோரானன் னூலானன் றுஞானச், சுவைபெறு துநிராசை யினு லென்றுநாடல் சுபம்விரும்பலாகுமிந்தச்சுபேச்சைமுற்றி, கவையறுநல் லோரியற்கை யாசாரங்கள் கைவருடல் விசாரமாக் கருதல்வேண்டும்.

(இ-ள்.) இவையறிந்தோர் - இந்த ஞான்பூமிகளை யுணர்ந்தவர்கள், மோகமெனும் - மயக்கமென்கின்ற, அளத்தில்வீழார் - சேற்றிலழுந்தார் கள், இவற்றியலாமுத்திவரில் - இவைகளின்குணமாகிய மோக்ஷம் வருமா னல், இடர்மீண்டில்லை-துன்பமானதினியில்லை, நவையுறுமோகத்தோடு - குற்றம்பொருந்திய மோகத்துடன், நாமடைவதென்னே - யாம் பெறவே ண்டியதென்ன, நல்லோரால் - பிரமவித்துக்களாலும், நன்னூலால் - ஆத்

மஞான சாஸ்திரங்களினுலும், நன்ருஞானச்சுவை - அனுபவஞான விர சத்தை, பெறுதும் - அடைவோமென்று, நிராசையினுல் - வயிராக்கியத் தினுல், என்று நாடல் - எப்போது நாடுகின்ற விருப்பமே, சுபம் விரும்ப லாகும் - சுபேச்சையாம், இந்தச் சுபேச்சைமுற்றி - இச்சுப விருப்பமுதிர்ந்து, கவையறு இரண்டில்லாத, நல்லோரியற்கை - சத்துக்களினது குணங்களும், ஆசாரங்கள் - (ஆத்) மானு சந்தானங்களும், கைவருதல் - கைவசமாகுதலே, விசாரமாய் - விசாரணையாக, கருதல்வேண்டும் - நினைக்கவேண்டும்—எ-று.

(இ-ளா.) இந்த ஞானபூமிகளை யுணர்ந்தவர்கள் மயக்கமென்கின்ற சேற்றிலழுந்தார்கள். இவைகளின் குணமாகியமோக்ஷம் வருமாதல் துன்பமானதினியில்லை. குற்றம்பொருந்திய மோகத்துடன் யாம் பெறவேண்டியதென்ன. பிரமவித்துக்களாலும், ஆத்மஞான சாஸ்திரங்களினுலும், அனுபவஞான விரசத்தை அடைவோமென்று வயிராக்கியத்தினுல் எப்போது நாடுகின்ற விருப்பமே சுபேச்சையாம் இச்சுபவிருப்ப முதிர்ந்து இரண்டில்லாத சத்துக்களினது குணங்களும், ஆத்மானுசந்தானங்களும், கைவசமாகுதலே விசாரணையாக நினைக்கவேண்டும்—என்பதாம்.

(இ-ம்.) எப்போதும் பந்தத்தைக்கெடுத்து முத்தியையடையவிரும்புவதே சுபேச்சையென்றும் அஃதடையு நிமித்த மாத்மாநாத்ம விசாரமே விசாரணையென்னுஞ் சொல்லப்பட்டதாம். (௬௬)

மூன்றாம்பூமி நான்காம்பூமி ஐந்தாம்பூமிகளி னிலக்கணங்கூறல்.

இனையசுபம்விரும்பலொடு விசாரமென்ற விரண்டுநிறைதலும்விடயத்திச்சைமாற்றி, நினைவுகுவிவதுசித்தஞ் சிறுகலாகு நிகழ்த்தியவிம்மூன்ருலு நெஞ்சந்தன்னில், வினைதருமவ்விரத்தியினுலுண்மைப்போத மன்னுதலேயுண்மைாநிலை மருவலாகு, மினையனவிந்நான்காலு முண்மைப்போதத் தழுந்தியபற்சங்கமற லசங்கமாகும்.

(இ-ள்.) இனைய சுபம் விரும்பலொடு - இப்படிப்பட்ட சுபேச்சையோடு, விசாரமென்ற - விசாரணையென்றுசொல்லிய, இரண்டு நிறைதலும் - இரண்டுபூமிகளின் சாதனநிறையவும், விடயத்திச்சைமாற்றி-விடயவாசைகளைத்தள்ளி, நினைவுகுவிவது - மனதொருமிப்பது, சித்தஞ்சிறுகலாகும் - தனுமானசியாம், நிகழ்த்திய - சொல்லிய, இம்மூன்ருலும்-இந்த மூன்றுபூமியின் சாதனத்தினுலும், நெஞ்சந்தன்னில் - மனதினிடத்தில், வினைதரும் - உண்டாகப்பட்ட, அவ்விரத்தியினுல் - அந் நிராசையினுல், உண்மைப்போதம் - தத்துவஞானம், மன்னுதல் - பொருந்துதலே, உண்

மையிலே மருவலாகும் - சத்துவாபத்தியாம், அனையன - அத்தன்மையாவன, இந்நான்காலும் - இந்நான்குபூமியி னப்பியாசத்தினாலும், உண்மைப்போதத்தழுந்தி - மெய்ஞ்ஞான நந்தானுபவத்திலழுந்தி, அயற்சங்கமறல் - வேறாகிய விடயசங்கமில்லாததே, அசங்கமாகும் - அசம் சத்தியாகும்—எ-று.

(இ-ள்.) இப்படிப்பட்ட சுபேச்சையோடுவிசாரணையென்று சொல்லிய இரண்டு பூமிகளின் சாதன நிறையவும், விடயவாசைகளைத்தள்ளி மனதொருமிப்பது தனுமானசியாம். சொல்லியஇந்த மூன்றுபூமியின் சாதனத்தினாலும் மனதினிடத்தில் உண்டாகப்பட்ட அப்பிராசையினால்தத்துவஞானம்பொருந்துதலே சத்துவாபத்தியாம். அத்தன்மையாவன இந்நான்குபூமியி னப்பியாசத்தினாலும் மெய்ஞ்ஞானாநந்தானுபவத்திலழுந்தி வேறாகிய விடயசங்கமில்லாததே அசம்சத்தியாகும்—என்பதாம்.

(இ-ம்.) மனமாத்மவிசாரத்திற் கரைவதே தனுமானசியென்றும் தத்துவஞானமாதலே சத்துவாபத்தியென்றும் - அஃதொன்றிலும் பற்றற்றிருப்பதே யசம்சத்தியென்றுஞ் சொல்லப்பட்டதாம். (௭)

## ஆறும்பூமி ஏழாம்பூமிகளி னிலக்கணமறிவித்தல்.

*அறைந்தபதமைந்தாலுந் தானும்போதத் தழுந்தியவின்பத்தமைவாற்புறனுமுள்ளு, முறைந்தபதார்த்தங்கண்மறைந் தயலோர்வன்பா லுணர்வதுவேபதார்த்தநினைவொழிதலாகு, நிறைந்தவிவையாறாலும் பேதம்போக்கி நிலைபெறுதற்சுபாவத்தேநிற்றறானே, மறைந்தபொருள்வெளியாக்குந் துரியமாகு மாசறுசீவனின்முத்தர்வழியீதாகும்.*

(இ-ள்.) அறைந்த பதமைந்தாலும் - சொல்லப்பட்ட வ்வைந்து பூமியின்முதிற்சியினாலும், தானும் போதத்தழுந்திய - தானாகிய வாத்மஞானத்திலழுந்திய, இன்பத்தமைவால் - ஆநந்தத்தமைதியால், புறனுமுள்ளுமுறைந்த - புறம்பிலு முள்ளிலுமிருக்கின்ற, பதார்த்தங்கண்மறைந்து - விடயங்கள் விடுபட்டு, அயலோர்வன்பால் - பக்கத்திலிருப்பவர்கள் வலிமையினால், உணர்வதுவே - அறியவருவதே, பதார்த்த நினைவொழிதலாகும் - பதார்த்தபாவனையாம், நிறைந்த - நிறைவாகிய, இவையாறாலும் - இவ்வாறு பூமியினனுபவத்தினாலும், பேதம்போக்கி - திரிஸ்ய வேறுபாட்டைநீக்கி, நிலைபெறுதற்சுபாவத்து - திரமுள்ள தனது சுபாவ ஸ்வரூபத்தில், நிற்றறானே - நிற்பதே, மறைந்தபொருள் - மறைபட்டிருக்கின்ற (தனதாத்மஞான)ஸ்வரூபத்தை, வெளியாக்குந்துரியமாகும் - ப்ரத்யக்ஷப்படுத்துந் துரியமாகும், மாசறுசீவன்முத்தர் - களங்கமற்ற சீவன்முத்தர்களது, வழியீதாகும் - மார்க்கமித்துரியமேயாம்—எ-று.

(இ-ஙா.) சொல்லப்பட்ட விவ்வைந்துபூமியின் முதிற்சியினு லும், தானாகியவாத்மஞானத்திலழுந்திய ஆநந்தத்தமைதியால் புறம்பிலுமுள்ளிலுமிருக்கின்ற விடயங்கள் விடுபட்டு பக்கத்திலிருப்பவர்கள் வலிமையினால் அறியவருவதே பதார்த்த பாவனையாம். மறைவாகிய இவ்வாறு பூமியினனுபவத்தினாலும் திரிஸ்ய வேறுபாட்டை நீக்கி திரமுள்ள தனது சுபாவஸ்வரூபத்தில் நிற்பதே மறைபட்டிருக்கின்ற தனதாத்ம ஞானஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷப் படுத்துந்துரியமாகும். களங்கமற்ற சீவன்முத்தர்களது மார்க்கமித்துரியமேயாம்—என்பதாம்.

(இ-ம்.) திரிஸ்ய திருஷ்டிநீங்கி திருக்குவாயிருப்பதே பதார்த்தபாவனையென்றும் சுசாதிக விசாதிக சுகதபேத ரகிதமான சைதன்யமே துரியமென்றுஞ் சொல்லப்பட்டதாம். (சஅ)

## இவ்வேழாம்பூமியி னிலக்கணங்கூறல்.

சொன்னதன்மேலுடலிறந்த முத்தர்மேவுந் துரியாதீதப்பத
மாந்துரியச்செல்வந், தன்னுணர்வாற்றனையறிந்த பெருமைசான்ற
தலைவனாலெய்தலுறுந் தன்மையாகு, மன்னியவிப்பதமடைந்த
சீவன்முத்தர் மகிழ்ச்சிமறுக்கத்தழுந்தா மரபினாலே, யன்னியர்
சொல்வழிதுயில்விட் டெழுந்தார்போல வடுத்தனசெய்குவர்செய்
யாராகிவாழ்வார்.

(இ-ள்.) துரியச்செல்வம் - துரியவாழ்வானது, சொன்னதன்மேல் - சொல்லிய சீவன்முத்தி தன்மைக்குமேலான, உடலிறந்தமுத்தர்-விதேகமுத்தர்கள், மேவும் - பொருந்தாநின்ற, துரியாதீதப்பதமாம் - துரியாதீதமாகிய பதமாம், தன்னுணர்வால் - ஆத்மஞானத்தினால், தனையறிந்த - தனது ஸ்வரூபத்தையுணர்ந்த, பெருமைசான்ற - மகான்மியத்தையுடைய, தலைவனால் - புருடனால், எய்தலுறும் - அடைகின்ற, தன்மையாகும்-தன்மையையுடையதாம், மன்னிய - நிலைபெற்ற, இப்பதமடைந்த - இத்துரியபதத்தைப்பெற்ற, சீவன்முத்தர் - சீவன்முத்தர்கள், மகிழ்ச்சிமறுக்கத்து - சுகதுக்கங்களில், அழுந்தார் - முழுகார்கள், மரபினால் - (இம்) முறைமையினால், அன்னியர் - பக்கத்திலுள்ள சீடன்முதலானவர்களால், சொல்வழி - (தேசம்ரக்ஷணையையு நித்தியகன்மங்களையுஞ் செய்யும்படி) சொல்லுகின்ற மார்க்கத்தின்படியே, துயில்விட்டு - நித்திரையைவிட்டு, எழுந்தார்போல - எழுந்தவர்களைப்போல, அடுத்தன - (நிகழ்காலத்துக்) கடுத்தகுணங்களை, செய்குவர் செய்யாராகி - செய்துஞ் செய்யாதவர்களாய், வாழ்வார் - (நிருவாணசுகமாய்) வாழ்வார்கள்—எ-று.

(இ-ஙா.) துரியவாழ்வானது சொல்லிய சீவன்முத்திதன்மைக்கு மேலான விதேகமுத்தர்கள் பொருந்தாநின்ற துரியாதீதமா

கிய பதமாம். ஆத்மஞானத்தினால் தனது ஸ்வரூபத்தையுணர்ந்த மகான்மியத்தையுடைய புருடனால் அடைகின்ற தன்மையை யுடையதாம். நிலைபெற்ற இத்துரிய பதத்தை பெற்றசீவன்முத்தர்கள் சுகதுக்கங்களில் முழுகார்கள் இம்முறைமையினால் பக்கத்திலுள்ள சீடன் முதலானவர்களால் தேகசம்ரக்ஷணையையு நித்திய கன்மங்களையுஞ் செய்யும்படி சொல்லுகின்ற மார்க்கத்தின்படியே நித்திரையை விட்டு எழுந்தவர்களைப்போல நிகழ்காலத்துக்கடுத்த குணங்களைசெய்துஞ்செய்யாதவர்களாய் நிருவாண சுகமாய் வாழ்வார்கள்—என்பதாம்.

(இ-ம்.) இப்பூமியானதுரியமேதுரியாதீதமாயும் விளங்குமென்பதாம்.

## ஞானபூமியின் பெருமையை யறிவித்தல்.

இஞ்ஞானபதமேழு மிகவும்புந்தி யெய்தினர்க்கல்லதுதோன்றுவிவற்றையெய்தி, லஞ்ஞானமிலேச்சனே யெனினுந்தேகியதேகியெனினும்முத்தனையமில்லை, மெய்ஞ்ஞானமென்பதுதான் மனத்தின்கட்டு விடுதலிதுபெறிலிதுவேவீடுபேறும், பொய்ஞ்ஞான கானலினீர் முதலாமோகம் பொய்யெனப்போமடமையும்பொய் யென்னிற்போகும்.

(இ-ள்.) இஞ்ஞான பதமேழும் - இந்த ஞானபூமிகளேழும், மிகவும் புந்தியெய்தினர்க்கல்லது - பரிபூரணஞான மடைந்தவர்களுக்கேயன்றி, தோன்று - (மற்றவர்களுக்குத்) தோற்றாது, இவற்றையெய்தில் - இந்த ஞானபூமிகளையடைந்தால், அஞ்ஞானம் - அஞ்ஞானத்தையுடைய, (மிருகங்களானாலும்), மிலேச்சனேயெனினும் - ஆசாரமில்லாதவனானாலும், தேகி - சரீரத்தோடுகூடினவனானாலும், அதேகியெனினும்-மரணமடைந்தவனானாலும், முத்தன் - முத்த (னென்பதற்கு), ஐயமில்லை - சந்தேகமின்று, மெய்ஞ்ஞானமென்பது - தத்துவஞானமென்பது, தம்மனத்தின் கட்டு விடுதல் - தன் மனோபந்தம் விடுதலாம், இதுபெறில் - இப்பந்த நிவர்த்தியைப்பெற்றால், இதுவே-இதுதானே, வீடுபேறும்-மோக்ஷலாபமாம், பொய்ஞ்ஞானம் - அஞ்ஞானமானது, கானலினீர்முதலாமோகம் - கானற்சல முதலாகிய மயக்கங்களை, பொய்யெனிற்போம் - பொய்யென்று பார்க்கவதின் ப்ராந்திபோம், மடமையும் - அறிவின்மையும், பொய்யென்னில்-மித்தையென்றுபார்க்கில், போம் - அவைநாசமாம்—எ-று.

(இ-ரை.) இந்தஞானபூமிகளேழும் பரிபூரணஞானமடைந்தவர்களுக்கேயன்றி மற்றவர்களுக்குத்தோற்றாது. இஞ்ஞான பூமிகளையடைந்தால் அஞ்ஞானத்தையுடைய மிருகங்களானாலும், ஆசாரமில்லாதவனானாலும், சரீரத்தோடுகூடினவனானாலும், மரணமடைந்தவனானாலும், முத்தனென்பதற்கு சந்தேகமின்று. தத்துவஞான

மென்பது தன்மனோபந்தம் விடுதலாம். இப்பந்தநிவர்த்தியைப்பெற்றால் இதுதானே மோக்ஷலாபமாம். அஞ்ஞானமான துகானற்சல முதலாகியமயக்கங்களை பொய்யென்றுபார்க்க வதின்ப்ராந்திபோம் அறிவின்மையும் மித்தையென்றுபார்க்கில் அவைநாசமாம்—எ-ம்.

## ஞானபூமியையடைந்தவர்கள் பெருமையும், அடையாதவர்கள் சிறுமையு மறிவித்தல்.

தனையறியுநிட்டையுளோர்க்கெய்தலாகுந் தத்துவபூமிகளறிந்ததலைமைமேலோர், நினையவுந்தாழவுமுரியார் பொறிகளென்னு நெடும்பகைவென்றோரழியாநிலையினின்றோர், துனைதருபல்லுயிரிறைஞ்ச மேலாய்வாழுஞ் சுரேந்திரருநரேந்திரருந்துரும்பாய்த் தோன்று, மனையபெரும்பதம்பெற்றோ ரவரேயாகு மல்லாதோர் பவக்கடலி லமிழ்ந்தாநிற்போர்

(இ-ள்.) தனையறியும் - தனதாத்மஞான ஸ்வரூபத்தையுணராநின்ற, நிட்டையிளோர்க்கு-சமாதியையுடையவர்களுக்கு, எய்தலாகும்-அடையத் தகுந்த, தத்துவபூமிகள் - உண்மையான ஞானபூமிகளை, அறிந்ததலைமை மேலோர்-உணர்ந்தமுதன்மையானசத்துக்கள், நினையவும்-(சகலருந்)தியானிக்கவும், தாழவும்-வணங்கவும், உரியார் - உரியராம், பொறிகளென்னும் இந்திரியங்களென்கின்ற, நெடும்பகை - வெகுகாலமுள்ள சத்துருக்களை, வென்றோர் - செயித்தவர்கள், அழியாநிலையினின்றோர்-அழிவற்றநிலையிலிருந்தவர்கள், துனைதருபல்லுயிரிறைஞ்ச-மிகுந்தபலசீவர்களும்வணங்க, மேலாய்வாழும் - மேன்மையாகவாழுகின்ற, சுரேந்திரரும்-தேவேந்திரர்களும், நரேந்திரரும் - சக்ரவர்த்திகளும், துரும்பாய்த்தோன்றும் - திரணமாகத்தோற்றுகின்ற, அனையபெரும்பதம்-அத்தன்மையானபரமபதத்தை, பெற்றோர் - அடைந்தவர்கள், அவரேயாகும் - அப்பூமிகளையடைந்தவரேயாம், அல்லாதோர் - ஞானபூமியையடையாதவர்கள், பவக்கடலில் - சநநசமுத்திரத்தி, அமிழ்ந்தாநிற்போர் - மூழ்கிக்கிடப்பவர்களாவர்—எ-று.

(இ-ரை) தனதாத்மஞானஸ்வரூபத்தை யுணராநின்றசமாதியையுடையவர்களுக்கு அடையத்தகுந்த உண்மையானஞானபூமிகளை உணர்ந்த முதன்மையான சத்துக்கள் சகலருந்தியானிக்கவும் வணங்கவும் உரியராம். இந்திரியங்களென்கின்ற வெகுகாலமுள்ள சத்துருக்களை செயித்தவர்கள் அழிவற்றநிலையிலிருந்தவர்கள் மிகுந்த பலசீவர்களும்வணங்க மேன்மையாகவாழுகின்ற தேவேந்திரர்களும் சக்கரவர்த்திகளும் திரணமாகத்தோற்றுகின்ற அத்தன்மையான பரமபதத்தை அடைந்தவர்கள் அப்பூமிகளை யடைந்த

வரேயாம். ஞானபூமியை யடையாதவர்கள் சநநசமுத்திரத்தில் மூழ்கிக்கிடப்பவர்களாவர்—என்பதாம்.

(இ-ம்.) வெளிப்படை. (௫௧)

## அத்துவிதத்தை யடையுமார்க்க மிந்த ஞானபூமியைத்தவிர வேறின்றெனல்.

உளமொடுங்குமுபாயமே யோகமாகு முணர்வுறுபூமிகளிந்த வுபாயமாகும், வளமிகுமிப் பூமிகளா லன்றியிந்த மாதேவபெரிய பதமருவலாகா, வளவறநீநான்றான்வே றென்றுமின்றிய பேதமா யநாமயமா யமூலமாகிக், கிளர்சுகமாய்ச் சாந்தமா யறிவாயொன் ருய்க் கேடின்றிப்பெயரின்றிக் கீழ்மேலின்றி.

(இ-ள்.) உளமொடுங்கும் - மனதடங்குகின்ற, உபாயமே - தந்திரமே, யோகமாகும் - ஞானமாம், உணர்வுறுபூமிகள்-ஞானபூமிகள், அந்தவுபாயமாகும் - அம்மனமடங்குமுபாயமாம், வளமிகும் - மாட்சிமைமிகுந்த, இப்பூமிகளாலன்றி - இந்த ஞானபூமிகளையல்லாமல், இந்த மாதேவபெரியபதம் - இப்பொழுது சொல்லியமகத்தாகிய பிரமபதத்தை, மருவலாகா - அடையக்கூடாது, அளவற-மட்டின்றி, நீ-நீயென்றும், நான் - நானென்றும், தான் - தானென்றும், வேறு - அன்னியமென்றுஞ் சொல்லப்பட்ட, ஒன்றுமின்றி - ஒன்றுமாகாமல், அபேதமாய் - அபேதமாகியும், அநாமயமாய் - தோடமில்லாததாகியும், அமூலமாகி - காரணமில்லாததாகியும், கிளர்சுகமாய் - ப்ரகாசிக்கு நிரதிசயாநந்தமாகியும், சாந்தமாய் - உபசாந்தமாகியும், அறிவாயொன்ருய் - ஞானமாகியு மேகமாகியும், கேடின்றி - நாசமில்லாததாகியும், பெயரின்றி - நாமமில்லாததாகியும், கீழ்மேலின்றி - உயர்வுதாழ்வில்லாததாகியும்—எ-று.

(இ-கா.) மனதடங்குகின்ற தந்திரமே ஞானமாம் ஞானபூமிகள் அம்மனமடங்குமுபாயமாம். மாட்சிமைமிகுந்த இந்தஞானபூமிகளையல்லாமல் இப்பொழுது சொல்லிய மகத்தாகிய பிரமபதத்தை அடையக்கூடாது மட்டின்றி நீயென்றும், நானென்றும், தானென்றும், அன்னியமென்றுஞ்சொல்லப்பட்ட ஒன்றுமாகாமல் அபேதமாகியும், தோட மில்லாததாகியும், காரண மில்லாததாகியும், ப்ரகாசிக்கு நிரதிசயானந்தமாகியும், உபசாந்தமாகியும், ஞானமாகியு மேகமாகியும், நாசமில்லாததாகியும், நாமமில்லாததாகியும் உயர்வு தாழ்வில்லாததாகியும்—என்பதாம். (௫௨)

## ஞானபூமியினுலுண்டானவஸ்துவினிலக்கணங்கூறல்.

பாவனையுமபாவனையு முதலுமீறும் பற்றுமுளதும்மிலதும் பலவுந்தேசு, மேவறிவுமடமையுமென் றிவைகளின்றி விண்ணிலே யிருப்பதாய் விசாலமாகி, யாவதுமாயன்றாகி மனத்தால்வாக்கா லெட்டரிதாயின்பத்திலின்பமாகி, யோவரியநிறைவினிறை வாகி யாசை யொழிவிடமாய்த்தன்னூற்றா னுணருமொன்று.

(இ-ள்.) பாவனையும்-பாவமும், அபாவனையும் - அபாவமும், முதலும்- ஆதியும் ஈறும் - அந்தமும், பற்றும் - பற்றுதலும், உளதும் - உள்ளதும், இலதும் - இல்லாததும், பலவும் - அநேகமும், தேசும் - ப்ரகாசமும், மேவறிவும் - பொருந்திய ஞானமும், மடமையும் - அறிவின்மையும், என்றிவைகளின்றி - என்று சொல்லப்பட்ட விவைகளில்லாததாகியும், விண்ணிலே யிருப்பதாய் - சிதாகாயத்திலிருக்கின்றதாகியும், விசாலமாகி - வியாபகமாகியும், யாவதுமாய் - சகலமுமாகியும், அன்றாகி - அல்லாததாகியும், மனத்தால் - மனதினாலும், வாக்கால் - வாக்கினாலும், எட்டரிதாய் - தாவக்கூடாததாகியும், இன்பத்திலின்பமாகி - ஆநந்தங்களுக்காநந்தமாகியும், ஓவரிய - நீங்குதற்கரிய, நிறைவினிறைவாகி - பூரணத்துக்குப்பூரணமாகியும், ஆசையொழிவிடமாய் - அவாவிறந்தவிடமாகியும், தன்னூற்றானுணரும் - தானேதானாயறிவதாகியும்விளங்குகின்ற (வஸ்து), ஒன்று - ஒன்றேயாம்—எ-று.

(இ-ரை.) பாவமும், அபாவமும், ஆதியும், அந்தமும், பற்றுதலும், உள்ளதும், இல்லாததும், அநேகமும், ப்ரகாசமும், பொருந்திய ஞானமும், அறிவின்மையும என்றுசொல்லப்பட்ட விவைகளில்லாததாகியும், சிதாகாயத்தி லிருக்கின்றதாகியும், வியாபகமாகியும், சகலமுமாகியும், அல்லாததாகியும், மனதினாலும், வாக்கினாலும் தாவக்கூடாததாகியும், ஆநந்தங்களுக்காநந்தமாகியும், நீங்குதற்கரிய பூரணத்துக்குப் பூரணமாகியும், அவாவிறந்த விடமாகியும், தானே தானாயறிவதாகியும், விளங்குகின்ற வஸ்து ஒன்றேயாம்—என்பதாம்.

(இ-உ-க-ி.) மனதடங்கினவிடத்துண்டான ஸ்வாநுபூதி விலாசத்தையறிவித்ததாம். (௫௩)

---

ஞானபூமியினுலுண்டான பிரயநிச்சயத்தைச்சொல்லி அஞ்ஞான பூமியினுலுண்டான மாயாவிசித்திரம் ப்ரத்யக்ஷமானதறிவித்தல் - வேறு

எழுவகையாம்பூமியினூற் பெறும்பிரமமிதுமாயை யேற்றங் கேண்மோ, விழுமமுறுமவணன்றூன்மெய்ம்மறந்துமுன்கண்டவிந்

**தச்சாரற், பழுவமனக்கண்ணுடி பயில்கின்றவுடலொடும்போய்ப் பார்க்கிற்கண்ணிற் றழுவுறுங்கொலெனுமவைச் சருடனெண்ணித் தானேயுடன் சமைந்துபோனான்.**

(இ-ள்.) எழுவகையாம்பூமியினால் - சத்தவிதமாகிய (ஞான) பூமியினால், பெறும்பிரமமிது - அடையப்பட்ட பிரமஸ்வரூப மித்தன்மையது, மாயை யேற்றங்கேண்மோ - இனிமாயையின் பெருமையை யிராமா நீகேட்பாய், விழுமமுறு - சிறப்புப்பொருந்திய, லவணன்றான்-லவணவரசனானவன், மெய்ம்மறந்து - சரீரத்தைமறந்து, மனக்கண்ணுடி - மனமென்னுங் கண்ணுடியில், முன்கண்ட-முன்னமேபார்த்த, விந்தச்சாரற்பழுவம்-விந்தமலையினதுபக்கத்திலுள்ளகாடுகளை, பயில்கின்ற-சொல்லுகின்ற,உடலொடும்போய்- (இச்) சரீரத்துடன்போய், பார்க்கில் - பார்க்குமிடத்தில், கண்ணிற்றழுவுறுங்கொலெனும்-கண்ணிற்காணப்படுமாவென்பதை, அமைச்சருடனெண்ணி-மந்திரிகளுடனாலோசித்து, தானேயுடன்-படைகளோடும், சமைந்துபோனான் - அமைந்துசென்றான்—எ-று.

**(இ-ா.) சத்தவிதமாகிய ஞானபூமியினால் அடையப்பட்ட பிரமஸ்வரூபமித்தன்மையது. இனி மாயையின்பெருமையை யிராமா நீகேட்பாய், சிறப்புபொருந்திய லவணவரசனானவன் சரீரத்தைமறந்து மனமென்னுங்கண்ணுடியில் முன்னமே பார்த்த விந்தமலையினது பக்கத்திலுள்ள காடுகளை சொல்லுகின்ற இச்சரீரத்துடன்போய் பார்க்குமிடத்தில் கண்ணிற் காணப்படுமாவென்பதை மந்திரிகளுடனாலோசித்து படைகளோடும் அமைந்து சென்றான்.**

## இதுவுமது.

**தென்றிசைசென்றனன்மீட்டுந் திக்குவிசயஞ் செய்யச்செல்வான்போல, முன்றிகழும்விந்தகிரி முற்பட்டான் வடக்கொழிந்த மூன்றுதிக்கிற், றுன்றிவளர் வனமெல்லாஞ் சுற்றினு னனிநொந்தான் சூழலொன்றி, லன்றுகருதியகருத்து வடிவெடுத்ததெனப் பழைய வடவிகண்டான்.**

(இ-ள்.) தென்றிசைசென்றனன் - தெற்குதிசையினடந்தான், மீட்டும் - திரும்பவும், திக்குவிசயஞ்செய்ய - திக்குகளைவெல்ல செல்வான்போல - நடப்பவனைப்போல, முன்றிகழும் - எதிரிற்ப்ரகாசிக்கின்றவிந்தகிரிமுற்பட்டான்-விந்தமலைக்குமுன்வந்தான், வடக்கொழிந்த-வடதிசையல்லாத, மூன்றுதிக்கில்-மூன்றுதிசைகளில், துன்றிவளர்வனமெல்லாம்-நெருங்கிவளராநின்ற காடனைத்தும், சுற்றினன்-சுற்றிப்பார்த்தான், நனிநொந்தான் - மிகவும்வருந்தினன், சூலலொன்றில் - குறிப்பானவோரிடத்தில், அன்று கருதியகருத்து-அப்பொழுதுநினைத்தநினைப்பு, வடிவெடுத்

தநென - உருவெடுத்தது போலிருக்கின்ற, பழையவடவிகண்டான்-முன்னனுபவித்தவனத்தைப்பார்த்தான்—எ-று.

(இ-ள.) தெற்குத்திசையினடந்தான் திரும்பவும் திக்குகளை வெல்ல நடப்பவனைப்போல எதிரிற்ப்ரகாசிக்கின்ற விந்தமலைக்கு முன்வந்தான். வடதிசையல்லாத மூன்றுதிசைகளில் நெருங்கிவளராநின்ற காடனைத்தும் சுற்றிப்பார்த்தான். மிகவும் வருந்தினான். குறிப்பான ஓரிடத்தில் அப்பொழுது நினைத்த நினைப்பு உருவெடுத்தது போ விருக்கின்ற முன்னனுபவித்த வனத்தைப்பார்த்தான்.

இதுவுமது.

காலனகர்நிகராமக் கடியவனத்துலாவுதலுங் கடையர்செய்கை, போலவன்முன்சஞ்சரித்ததலங்களுமச் சேரிகளும் பொருந்தக் கண்டான், சாதவியந் தானந்தக் கடையர்கடைச் சியர்குடில்கடப்பாவண்ண, ஞாலநரபதிநோக்கி வியப்பினான் மனமயக்க நண்ணிநின்றான்.

(இ-ள்.) காலனகர்நிகராம்-இயமபுரத்தையொத்த, அக்கடியவனத்துலாவுதலும் - அந்தக்கொடிதானகாட்டிற்சஞ்சரிக்குமளவில், கடையர்செய்கைபோல்-நீசர்கடொழிலைப்போல, அவன்முன்சஞ்சரித்த-அந்தலவணன்முன் சஞ்சாரஞ்செய்த, தலங்களும் - பூமிகளையும், அச்சேரிகளும்-அவ்வூர்களையும், பொருந்தக்கண்டான்-நன்றாய்ப்பார்த்தான், சாலவியந்தான்-மிகமதிசயித்தான், அந்தக்கடையர் - முன்கண்ட நீசர்களையும், கடைச்சியர் - நீசஸ்திரீகளையும், குடில்கள் - குடிசைகளையும், தப்பாவண்ணம் - தவிராதபடிக்கு, ஞாலநரபதிநோக்கி - பூமிக்கரசனான லவணன்பார்த்து, வியப்பினால் - அதிசயத்தினால், வனமயக்க நண்ணிநின்றான் - மனமயக்கமடைந்திருந்தான்—எ-று.

(இ-ள.) இயமபுரத்தையொத்த அந்தக்கொடிதான காட்டிற்சஞ்சரிக்குமளவில் நீசர்கடொழிலைப்போல அந்த லவணன்முன் சஞ்சாரஞ்செய்த பூமிகளையும் அவ்வூர்களையும் நன்றாய்ப்பார்த்தான். மிகவு மதிசயித்தான். முன்கண்ட நீசர்களையும் நீசஸ்திரீகளையும் குடிசைகளையும் தவிராதபடிக்கு பூமிக்கரசனான லவணன் பார்த்து அதிசயத்தினால் மனமயக்கமடைந் திருந்தான்—எ-ம். ()

இதுவுமது.

கருத்தயருந்துயர்கரைப்பக் கண்கரைந்துமெய்கரைந்து கதறுநின்ற, விருத்தயர்தங்கூட்டத்தின் மிகமெலிவால் வாய்விட்டு விம்மிவிம்மி, யொருத்திமுதனுளிறந்த தன்கிளைஞர்பெய ரெல்லா

முறையாகின்று, பெருத்தநெடுங்குரலாலே யிவ்வாறுபுலம்பினாள் பேதமாக.

(இ-ள்.) கருத்தயரும் - மனந்தளர்கின்ற, துயர்கரைப்ப - துன்பங் கரைக்க, கண்கரைந்து - கண்கரையும்படி (நீர்பெருகி), மெய்கரைந்து - சரீரமிளகி, கதறுகின்ற - கதறி (யழு) கின்ற, விருத்தயர்தங் கூட்டத்தில் - மூப்புள்ள நீசமாதர்கள் குழாத்தில், மிகமெலிவால் - மிகுந்த விசனத்தினால், வாய்விட்டு - வாயைத்திறந்து, விம்மிவிம்மி - தேம்பிதேம்பி, ஒருத்தி - ஒருஸ்திரீ, முதனாளிறந்த தன்கிளைஞர் பெயரெல்லா முறையாநின்று - முதனாண்மரித்ததன் மக்களுமங்க ளியாவையுஞ்சொல்லி, பருத்த நெடுங்குரலால் - மிகுந்த சத்தத்தினால், இவ்வாறு - இப்படி, பேதமாக - நாநாவிதமாக, புலம்பினாள் - அழுதாள்—எ-று.

(இ-ரை.) மனந்தளர்கின்ற துன்பங்கரைக்க கண்கரையும்படி நீர்பெருகி சரீரமிளகி கதறியழுகின்ற மூப்புள்ள நீசமாதர்கள் குழாத்தில் மிகுந்தவிசனத்தினால் வாயைத்திறந்து தேம்பிதேம்பி ஒருஸ்திரீ முதனாண்மரித்த தன்மக்களுமங்க ளியாவையுஞ்சொல்லி மிகுந்தசத்தத்தினால் இப்படி நாநாவிதமாக அழுதாள்—எ-ம்.()

இதுவுமது.

மாறானவிதியாலென் மடிவிட்டுமடிந்துபோ மைந்தர்காளோ
வேறாகியெத்தூர மேகினீர்யார்முகத்தே விழிக்கின்றீரோ
கூறானசெங்குன்றின் மணிமாலைத்தோளாலே குளிரப்புல்லி
யாறாதவென்னெருப்பை யாற்றுவாயோ மகளேயந்தோவந்தோ.

(இ-ள்.) என்மடிவிட்டு - எனது மடியிலிருந்துநீங்கி, மடிந்துபோம் - இறந்துபோகாநின்ற, மைந்தர்காள் - குழந்தைகளே, மாறானவிதியால் - தீவினையினால், வேறாகி - (என்னை) ப்பிரிந்து, எத்தூரமேகினீர் - எவ்வளவுதூரம் போனீர்களோ, யார்முகத்தே விழிக்கின்றீரோ - யார்முகத்தைப் பார்த்து பரதவிக்கின்றீர்களோ, கூறானசெங்குன்றின்மணிமாலை, சரமாகச்சிவந்த குன்றுமணிமாலையைத் (தரித்திருக்கின்ற), தோளால் - புயங்களினால், குளிரப்புல்லி - குளிர்ச்சியாகத்தழுவி, ஆறாத - தணியாத, என்னெருப்பை - எனது (விச) னாக்கினியை, மகளே - பெண்ணே, ஆற்றுவாயோ - தணிப்பாயோ, அந்தோவந்தோ - ஐயோவையோ—எ-று.

(இ-ரை.) எனதுமடியிலிருந்துநீங்கி இறந்துபோகாநின்றகுழந்தைகளே தீவினையினால் என்னைப்பிரிந்து எவ்வளவுதூரம் போனீர்களோ! யார்முகத்தைப் பார்த்து பரதவிக்கின்றீர்களோ! சரமாகச்சிவந்த குன்றுமணிமாலையைத் தரித்திருக்கின்ற புயங்களினால் குளிர்ச்சியாகத்தழுவி தணியாத எனதுவிசனாக்கினியை பெண்ணே தணிப்பாயோ ஐயோவையோ—என்பதாம். (ருஅ)

## இதுவுமது.

முன்னஞ்செய்தவத்தினற் றேடாதமாநிதிபோன் முன்வந்தெய்தி, பொன்னனார்நின்குலத்தோ ரவர்மயல்விட் டென்மகளைப் புணர்ந்துவாழ்ந்த, மன்னனுமருமகனே மறந்தனையோ மதிமுகத்தை வந்துகாட்டாய், பின்னைநாயகவுனக்கென் பேதைசெயுஞ்சிறு பிழையாற் பேதித்தாயோ.

(இ-ள்.) முன்னஞ் செய்தவத்தினல் - (யாங்கள்) பூர்வத்திற்செய்த தவசினல், தேடாத மாநிதிபோல் - தேடாமற்கிடைத்த திரவியத்தைப் போல, முன்வந்தெய்தி - (எங்கள்) முன்வந்தடைந்து, பொன்னனார் - இலக்குமிபோன்றவராகிய, நின்குலத்தோரவர் - உனதந்தப்புரத்து ஸ்திரீகளினது, மயல்விட்டு - மோகத்தைவிடுத்து, என்மகளைப் புணர்ந்துவாழ்ந்த - எனதுபெண்ணைக் கூடிச்சுகித்த, மன்னனுமருமகனே - அரசனுகிய மருமகனே, மறந்தனையோ - (எங்களை) மறந்துவிட்டாயோ, மதிமுகத்தை - சந்திரனையொத்த (வுனது) வதனத்தை, வந்துகாட்டாய் - (இவ்விடத்தில்) வந்துகாட்டுவையா, பின்னைநாயக - இலக்குமிபோன்ற (வெனது) பெண்ணுக்கு நாயகனே, உனக்கென்பேதைசெயும் - உமக்கெனது பெண்செய்கின்ற, சிறுபிழையால் - அற்பகுற்றங்களினல், பேதித்தாயோ- (மனம்) வேறுபட்டாயோ—எ-று.

(இ-ா.) யாங்கள் பூர்வத்திற்செய்த தவசினல் தேடாமற்கிடைத்த திரவியத்தைபோல எங்கள்முன்வந்தடைந்து இலக்குமிபோன்றவராகிய உனதந்தப்புரத்து ஸ்திரீகளினது மோகத்தை விடுத்து எனது பெண்ணைக்கூடிச்சுகித்த அரசனுகிய மருமகனே! எங்களை மறந்துவிட்டாயோ? சந்திரனையொத்தவுனதுவதனத்தை இவ்விடத்தில்வந்து காட்டுவையா? இலக்குமிபோன்ற வெனது பெண்ணுக்கு நாயகனே! உமக்கெனது பெண்செய்கின்ற அற்ப குற்றங்களினல் மனம் வேறுபட்டாயோ—என்பதாம். (ருகூ)

## இதுவுமது.

வன்பிறவிப்பேராற்றில் வல்வினையாகுந் திரைகள் வந்துகூடித், தன்பிறவியரசியற்கைத் தவிர்ந்தெமதுதையலுக்குத் தலைவனுகிப், புன்பிறப்புலையரைப்போற் பூதலத்துப்புரந்தரனும் புன்மைபூண்டான், மின்பிறவிநிற்கரிது மிகக்கொடிதுமிகக்கொடிது விதியேயென்ருள்.

(இ-ள்.) வன்பிறவிப்பேராற்றில் - வலிய சநநமென்னு மகாநதியில், வல்வினையாகுந்திரைகள் - கொடியவினைகளாகிய வலைகளானவை, வந்துகூடி - வந்துபொருந்தி, தன்பிறவி யரசியற்கைத்தவிர்ந்து - தனக்குண்டான பூபாலனத்தைவிட்டு, எமது தையலுக்குத்தலைவனுகி - எனது மக

ளுக்கு நாயகனுகி, புன்பிறவி - அற்பமான சநநத்தையுடைய, புலையரைப் போல் - சண்டாளரைப்போல, பூதலத்துப்புரந்தரனும் - நரேந்திரனும், புன்மைபூண்டான் - சண்டாளத்தன்மையை யடைந்தான், மின்பிறவி நிற்கரிது - மின்போன்ற சநநநிலையில்லாதது, விதி - ஊழானது, மிகக் கொடிது மிகக்கொடிது - மிகவுங்கொடியது மிகவுங்கொடியது, என்ருள் - என் (றழு) தாள்—எ-று.

(இ-ள.) வலிய சநநமென்னு மகாநதியில் கொடிய வினைகளாகிய வலைகளானவை வந்துபொருந்தி தனக்குண்டான பூபாலனத்தைவிட்டு எனதுமகளுக்கு நாயகனுகி அற்பமானசநநத்தையுடைய சண்டாளரைப்போல நரேந்திரனும் சண்டாளத்தன்மையையடைந்தான். மின்போன்ற சநநநிலையில்லாதது ஊழானது மிகவுங்கொடியது மிகவுங்கொடியது என்றழுதாள். (௬௦)

இதுவுமது.

என்றழுது வவள்புலம்பி யிசைத்தவெலா நனிகேட்ட லவணனுங்கே, நின்றுளதன்சேடியரா லவடுயரந்தனையாற்றி நேயத் தோடுங், கன்றியநின்னிடரேது நீயார்நின்மகளார்நின் காதலோரா, ரொன்றுமொழிவம்மொழியென் றிவன்வினவபுலைக்கிழத்தி யுரைப்பதானுள்.

(இ-ள்.) என்றழுது - (இப்படி) யென்றழுது, அவள்புலம்பி - அவள் ப்ரலாபித்து, இசைத்தவெலாம் - சொல்லிய சகலத்தையும், நனிகேட்ட லவணன் - மிகவுங்கேட்ட லவணராசன், ஆங்குநின்றுள - அவ்விடத்திற் கூடவிருக்கின்ற, தன்சேடியரால் - தனது பாங்கிகளால், அவடுயரந்தனை யாற்றி - அவளது துன்பத்தைத்தணித்து, நேயத்தோடும் - அன்புடன், கன்றிய நின்னிடரேது - வருந்தின வுனதுதுன்பமென்ன, நீயார் - நீயெவள், நின்மகளார் - உனது புத்திரியெவள், நின்காதலோரார் - உனது புத்திரர்களார், ஒன்றுமொழிவற - ஒன்றையும்விடாமல், மொழியென்று - சொல்லுவாயென்று, இவன்வினவ - இவ்வரசன்கேட்க, புலைக்கிழத்தி - புலைக்கிழவியானவள், உரைப்பதானுள் - கூறுவாள்—எ-று.

(இ-ள.) இப்படியென்றழுது அவள் ப்ரலாபித்துசொல்லிய சகலத்தையும்மிகவுங்கேட்ட லவணராசன் அவ்விடத்திற்கூடவிருக்கின்ற தனதுபாங்கிகளால்அவளது துன்பத்தைத்தணித்து அன்புடன் வருந்தின உனது துன்பமென்ன? நீயெவள்? உனது புத்திரி யெவள்? உனது புத்திரர்களார்? ஒன்றையும்விடாமல் சொல்லுவாயென்றுஇவ்வரசன் கேட்கபுலைக்கிழவியானவள் கூறுவாள்.

இதுவுமது.

ஈதுபுலைச்சேரியிதி லொருபுலையனென்கணவ னிவனுக்கிங் கோர், மாதுபிறந்தனளவளை யிந்திரன்போ லொருமன்னன்வந்து

சேர்ந்தான், போதுநெடும்புணர்வித்த விதியாலேயவண்மூன்று
புதல்வர்பெற்ருள், ஏதுறுநல்வினைபோலத் தீவினைவந்தென்கிளைஞ
ரிறந்துபோனர்.

(இ-ள்.) ஈது புலைச்சேரி - இது பறச்சேரி, இதிலொருபுலையன் - இதிலொருசண்டாளன், என்கணவன் - எனதுபுருடன், இவனுக்கு - இச்சண்டாளனுக்கு, இங்கோர் மாதுபிறந்தனள் - இவ்விடத்தொரு பெண்பிறந்தாள், அவளை - அப்பெண்ணை, இந்திரன்போல் - தேவேந்திரன்போலு(மிருக்கின்ற), ஒருமன்னன் - ஓரரசன், வந்துசேர்ந்தான் - வந்துபுணர்ந்தான், நெடும்போது - வெகுகாலம், புணர்வித்தவிதியால் - கூட்டியவூழினல், அவண் மூன்றுபுதல்வர் பெற்ருள் - அப்பெண் மூன்று பிள்ளைகளையீன்ருள், ஏதுறு நல்வினைபோல - காரணமாகிய நல்ல வூழைப்போல, தீவினைவந்து - கொடிய வூழ்வந்து, என்கிளைஞர் - எனதுமக்கள், இறந்துபோனர் - மரணமடைந்தார்கள்—எ-று.

(இ-னா.) இதுபறச்சேரி. இதிலொரு சண்டாளன்எனதுபுருடன். இச்சண்டாளனுக்கு இவ்விடத்தொரு பெண்பிறந்தாள். அப்பெண்ணைதேவேந்திரன்போலு மிருக்கின்ற ஓரரசன்வந்து புணர்ந்தான். வெகுகாலம் கூட்டியவூழினல் அப்பெண் மூன்றுபிள்ளைகளையீன்ருள். காரணமாகிய நல்லவூழைப்போல கொடிவூழ்வந்து எனதுமக்கள் மரணமடைந்தார்கள்—என்பதாம். (சுஉ)

இதுவுமது

நெடுங்காலம்வாழ்ந்ததற்பி னீலமுகிற்றுளிவறண்டு நன்னீர்
சுண்டிக், கடுங்காலனிகர்கலியாற் றிசைதிசைபோய்க்கடையரெ
லாங் கழிந்துபோனர், நடுங்காநின்றனதுயருந் தனிமையுமேதுணை
யானே நாங்களென்ன. வடுங்காலவேல்வேந்த னமைச்சரைப்பார்த்
ததிசயித்தா னவசனுகி.

(இ-ள்.) நெடுங்காலம் - அநேககாலம், வாழ்ந்ததற்பின் - (என்மகள் முதலானவர்கள்) வாழ்ந்திருந்தபின், நீலமுகில்-கரியமேகத்தினல், துளிவறண்டு - மழையில்லாமல், நன்னீர்சுண்டி - நல்லசலம்வற்றி, கடுங்காலனிகர்கலியால் - கொடிய யமனையொத்த கருப்பினல், திசைதிசைபோய்-திக்குதிக்காகச்சென்று, கடையரெலாம்-சண்டாளர்களனைவரும், கழிந்துபோனர் - இறந்தார்கள், நடுங்காநின்றனதுயரும் - நடுங்குகின்ற துன்பத்தையும், தனிமையும் - தனித்திருப்பதையும், நாங்கள் - யாங்கள், துணையானேமென்ன - சகாயமாகப் பெற்றேமென்றுசொல்ல, அடுங்காலவேல் - கொல்லாநின்ற யமனையொத்த வேலாயுதத்தையுடைய, வேந்தன் - அரசன், அமைச்சரைப்பார்த்து - (தனது) மந்திரிகளைப்பார்த்து, அவசனுகி - பரவசனய், அதிசயித்தான் - வியப்புற்ருன்—எ-று.

(இ-னா.) அநேககாலம் என்மகள் முதலானவர்கள் வாழ்ந்திருந்த பின்பு கரியமேகத்தினல் மழையில்லாமல் நல்லசலம்வற்றி

கொடிய யமனையொத்த கருப்பினால் திக்குதிக்காகச்சென்று சண் டாளர்களனைவரும் இறந்தார்கள். நடுங்குகின்ற துன்பத்தையும் தனித்திருப்பதையும் யாங்கள் சகாயமாகப் பெற்றேமென்றுசொ ல்ல கொல்லாநின்ற யமனையொத்த வேலாயுதத்தையுடைய அர சன் தனது மந்திரிகளைப்பார்த்து பரவசனாய் வியப்புற்றான்-எ-ம்.

(இ-யி-க-ம்.) சாக்கிரசொற்பனத்திலுள்ள மயக்கங்களைச் சாக்கிரத் திற் தெளிவாகப்பார்த் ததிசயித்ததாம். (௬௩)

மாயை வருத்துமேன்பதையு
மதனுற் பிரமத்தையடைந்ததையு மறிவித்தல்.

வேண்டுவன கொடுத்திவளை வெந்துயர்தீர்த் தந்நகரின் மீண் டுமேவி, நீண்டவுல கத்தியல்பு மாயையின்வல் லபமுமவனெடிது கண்டான், காண்டகைய பரம்பொருளு நாமுரைப்ப வறிந்தமைந் தான் கருணைவள்ளா, லீண்டியவிம்மாமாயை கடப்பரியவன்மோக மியற்றுங்கண்டாய்.

(இ-ள்.) வேண்டுவனகொடுத்து-வேண்டியவைகளைக்கொடுத்து, இவ ளைவெந்துயர்தீர்த்து - இந்நீசஸ்திரீயினுடைய கொடியதுன்பத்தைநீக்கி, அந்நகரின்மீண்டு - அவ்வூரினின்றுந்திரும்பி, மேவி-(தன்னகரில்) வந்து, நீண்டவுலகத்தியல்பும் - நெடியசகத்தின்றன்மைகளையும், மாயையின்வல் லபமும் - மாயையினுடைய வல்லமையையும், அவன் - அந்தலவணவர சன், நெடிதுகண்டான்-நன்றாகப்பார்த்து, காண்டகையபரம்பொருளும் - (சத்துக்க) டரிசிப்பதற்குரிய பிரமவஸ்துவையும், நாமுரைப்ப - யாம்போ திக்க, அறிந்தமைந்தான் - தெரிந்தமைதிபெற்றான், கருணைவள்ளால் - அருட்கொடையையுடைய ஸ்ரீராமா, ஈண்டிய-நெருங்கிய, இம்மாமாயை - இம்மகாமாயையானது, கடப்பரிய - தாண்டுதற்கரிய, வன்மோகம்-வலிய மோகத்தை, இயற்றுங்கண்டாய் - கொடுக்கும்—எ-று.

(இ-ஸா.) வேண்டியவைகளைக்கொடுத்து இந் நீசஸ்திரீயினு டைய கொடிய துன்பத்தைநீக்கி அவ்வூரினின்றுந் திரும்பிதன்ன கரில்வந்து நெடியசகத்தின் றன்மைகளையும் மாயையினுடைய வல் லமையையும் அந்த லவணவரசன் நன்றாகப்பார்த்து சத்துக்க டரி சிப்பதற்குறிய பிரமவஸ்துவையும் யாம்போதிக்க தெரிந் தமைதி பெற்றான். அருட்கொடையையுடைய ஸ்ரீராமா நெருங்கிய இம்ம காமாயையானது தாண்டுதற்கரிய வலியமோகத்தைக்கொடுக்கும்.

(இ-ம்.) வெளிப்படை. (௬௪)

### சாக்கிரசொற்பனஞ் சத்தியமான தென்னவெனின்.

இலதுளதாமுளதிலதா மிம்மாயை வல்லபத்தாலென்னலோ
டுங், கலனமுறுசொற்பனத்திற் கண்டதெலாஞ்சாக்கிரத்திற் கண்
டதென்னே, குலமுனிவ வெனக்கேட்ட வள்ளலுக்கு முனியுரை
ப்பான் கொடியமாயை, யலகறுமோகம்புரியுங் காதிகதையாலிது
மே லறியலாகும்.

(இ-ள்.) இம்மாயைவல்லபத்தால் - இம்மாயைவல்லமையினால், இலதுளதாம் - அசத்துசத்தாகும், உளதிலதாம்-சத்தசத்தாகும், என்னலோடும் - என்றுவசிட்டமுனிசொல்லவும், கலனமுறுசொற்பனத்தில் - கலக்கமுள்ள மனோராச்சியத்தில், கண்டதெலாம் - பார்த்தவனைத்தும், சாக்கிரத்திற்கண்டதென்னே - ப்ரத்யக்ஷத்திற் பார்த்ததென்ன, குலமுனிவ வெனக்கேட்ட - (நமது) குலத்துக்காசிரியரே யென்றுகேட்ட, வள்ளலுக்கு - ஸ்ரீராமருக்கு, முனியுரைப்பான் - வசிட்டமுனிசொல்லுவார், கொடியமாயை - கொடிதான மாயையானது, அலகறுமோகம்புரியும் - அளவற்றமயக்கத்தைச்செய்கின்ற, காதிகதையால்-காதிகதையினாலே, இதுமேலறியலாகும் - இம்மாயாவிசித்திரத்தை யினியறியலாம்—எ-று.

(இ-கா.) இம்மாயைவல்லமையினால் அசத்துசத்தாகும், சத்தசத்தாகும் என்றுவசிட்டமுனிசொல்லவும், கலக்கமுள்ள மனோராச்சியத்தில் பார்த்தவனைத்தும் ப்ரத்யக்ஷத்திற் பார்த்ததென்ன நமதுகுலத்துக் காசிரியரேயென்று கேட்ட ஸ்ரீராமருக்கு வசிட்ட முனி சொல்லுவார். கொடிதான மாயையானது அளவற்ற மயக்கத்தைச்செய்கின்ற காதிகதையினாலே இம்மாயா விசித்திரத்தை யினியறியலாம்—என்பதாம்.

(இ-ர்.) இவை மேற்கதையினன்றாய்த் தெரியுமென்பதாம். (சு௫)

### சர்க்கிரசொற்பன மெய்யாகத்தோற்றினதற்கனுபவஞ் சூக்குமமா யுரைத்தல்.

காகதாலீயம்போல் வாதனையின்வசத்திலுளங் கலந்துநிற்கு
மேகமுறத்தம்மிற்றா மென்றுணர்வினிலைநின்றோ ரியம்பாநிற்ப
ராகலினான்முன்னாளிற் சித்தனாற்புலைச்சேரி யாகக்கண்ட
மோகமதேபின்னாளுங்கண்டதுவேறன்றுநாமொழிந்தவேந்தன்.

(இ-ள்.) காகம் - காக்கையேற, தாலீயம்போல் - பனம்பழம் (வீழ்ந்தது) போல, வாதனையின்வசத்தில்-வாசனாவயத்தில், உளம்-மனமானது, தம்மிற்றாம்-தமக்குள்ளே தாம், ஏகமுறக்கலந்து நிற்குமென்று - ஒன்றாகக்

கலந்திருக்குமென்று, உணர்வினிலை நின்றோர் - அறிவினிச்சயத்தினின்ற வர்களாகிய சத்துக்கள், இயம்பாநிற்பர் - சொல்லிக்கொண் டிருப்பார்கள், ஆகலினால் - ஆகையினால், முன்னாளிற்சித்தனால் - முன்றினத்தி (லிந்த்ர சாலவித்தையுள்ள) சாம்பரிகனால், புலைச்சேரி யாகக்கண்ட - கடையரூரா கக் காணப்பெற்ற, மோகமதே - மயக்கத்தையே, நாமொழிந்தவேந்தன் - யாஞ்சொல்லியிருக்கின்ற லவணவரசன், பின்னாளுங்கண்டது- பின்றினத திலுங் கண்டதேயன்றி, வேறன்று - வேறலல—எ-று.

(இ-ள.) காக்கையேற பனம்பழம் வீழ்ந்ததுபோல வாசனு வயத்தில் மனமானது தமக்குள்ளே தாம் ஒன்றாகக்கலந்திருக்குமெ ன்று அறிவினிச்சயத்தி னின்றவர்களாகிய சத்துக்கள் சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆகையினால் முன்றினத்தி லிந்த்ரசாலவித் தையுள்ள சாம்பரிகனால்கடைய ரூராகக்காணப்பெற்ற மயக்கத் தையே யாஞ்சொல்லியிருக்கின்ற லவணவரசன் பின்றினத்திலுங் கண்டதேயன்றி வேறல்ல—என்பதாம். (சுசு)

இதுவுமது.

மன்னவன்கண் டுளகனவின் மதிமயக்கந் தன்னையே மலையின் சார, லன்னவரு நன்னினைவா லறிவுற்றார் லவணனுமறிவின்றோ ற்றந், துன்னிவரு கடையர்மனங் களிற்றோற்ற கடையரெனத் தோன்றும்போதே, யின்னநர பதிமனத்திற் றோன்றியதான் மா மாயை யேதுசெய்யா.

(இ-ள்.) மன்னவன்கண்டுள - அரசன்பார்த்திருக்கின்ற, கனவில் - சாக்கிரசொற்பனத்தி (லுண்டான), மதிமயக்கந்தன்னையே - அறிவின் மயக்கத்தையே, மலையின்சாரல் - வரையின்பக்கத்தி (லிருக்கின்ற), அன் னவரும் - அச்சண்டாளரும், நன்னினைவால் - நல்லவறிவினால், அறிவுற் றார் - அறிந்தார்கள், லவணனும் - லவணவரசனென்னும், அறிவின்றோற் றம் - அறிவினுதயமானது, துன்னிவரும் - நெருங்கிவருகின்ற, கடையர் மனங்களிற்றோற்ற-சண்டாளர்களின் மனங்களிற்றோன்ற, கடையரென- சண்டாளரென்று, தோன்றும்போதம் - தோற்றுகின்றவறிவானது, இன் னநரபதிமனத்தில் - இவ்வரசனுடைய மனதில், தோன்றியதால் - உண் டானபடியால், மாமாயையேதுசெய்யா - மகாமாயையானதென்ன செய்ய மாட்டாது—எ-று.

(இ-ள.) அரசன் பார்த்திருக்கின்ற சாக்கிர சொற்பனத்தி லுண்டான அறிவின்மயக்கத்தையே வரையின்பக்கத்திலிருக்கின்ற அச்சண்டாளரும்நல்லவறிவினால்அறிந்தார்கள். லவணவரசனென் னும் அறிவினுதயமானது நெருங்கிவருகின்ற சண்டாளர்களின் மனங்களிற்றோன்ற சண்டாளரென்று தோற்றுகின்றவறிவானது

இவ்வரசனுடைய மனதில் உண்டானபடியால் மகாமாயையான தென்னசெய்யமாட்டாது—என்பதாம்.

(இ-உ-க-ம்.) ஒருவன் சொற்பனமற்றொருவனுக்குச் சாக்கிரமாகவும், ஒருவன்சாக்கிர மற்றொருவனுக்குச் சொற்பன மாகவுமாவதுபோல, அரசன் மனோராச்சியமுன்னுள்ள சண்டாளருக் கிதார்த்தமாகவுஞ் சண்டாளர் சாக்கிரமரசனுக்குச் சாக்கரசொற்பனமாகவுந் தோற்றிவித்தது மாயா விசித்திரமேயன்றி வேறின்றென்பதாம். (சுஎ)

## ஆத்மஸ்வரூப நிரூபணம்.

தோன்றியவைவிளக்கத்தா லுண்மையா மைம்பொறிக்குந் தொடர்பாய்நிற்கு, மான்றபதார்த் தங்களெலா மறிவினலொழிந் துண்மை யாகமாட்டா, வென்றறிவானறிபொருளா மிரண்டினிடையறிவானுக் கியைந்தரூப, மூன்றிபறி பொருளறிவா னறிவிலிவையுற்றிடுவ துயர்ந்தவீடு.

(இ-ள்.) தோன்றியவை - தோற்றப்பட்ட மாயாவஸ்துக்களானவை, விளக்கத்தால் - (ஞான) ப்ரகாசத்தினல், உண்மையாம்-உள்ளனவாகும், ஐம்பொறிக்கும் - பஞ்சேந்திரியங்களுக்கும், தொடர்பாய்நிற்கும் - சம்பந்தமாயிருக்கின்ற, ஆன்றபதார்த்தங்களெல்லாம் - மிகுந்தவஸ்துக்களியாவும், அறிவினலொழிந்து - ஞானத்தினலல்லாமல், உண்மையாகமாட்டா - உள்ளவைகளாகமாட்டாவாம், என்றறிவான் - உண்டாகி வருஞாதாவும், அறிபொருளாய் - ஞேயமுமாகிய, இரண்டினிடை-இரண்டினுடையமத்தியில், அறிவானுக்கு - ஞானத்மாவுக்கு, இயைந்தரூபம் - இசைந்தவடிவம், ஊன்றியறிபொருள் - சார்ந்தறியப்பட்ட விடயவஸ்துக்களும், அறிவான்-(இவைகளை) யறியப்பட்டஞாதாவும், அறிவு - ஞானமும், இல் - இல்லாததாகியும், இவையுற்றிடுவது - இவைகளைப் பொருந்துவதாகியு மிருக்கின்றதே, உயர்ந்தவீடு - மேலானமோக்ஷமாம்—எ-று.

(இ-ரை.) தோற்றப்பட்ட மாயாவஸ்துக்களானவை ஞான ப்ரகாசத்தினல் உள்ளனவாகும் பஞ்சேந்திரியங்களுக்கும் சம்பந்தமாயிருக்கின்ற மிகுந்த வஸ்துக்களியாவும் ஞானத்தினலல்லாமல் உள்ளவைக ளாகமாட்டாவாம். உண்டாகிவருஞாதாவும் ஞேயமுமாகிய இரண்டினுடைய மத்தியில் ஞானத்மாவுக்கு இசைந்த வடிவம் சார்ந்தரியப்பட்ட விடயவஸ்துக்களும் இவைகளை யறியப்பட்ட ஞாதாவும் ஞானமும் இல்லாததாகியும் இவைகளைப் பொருந்துவதாகியு மிருக்கின்றதே மேலான மோக்ஷமாம்—என்பதாம்.

(இ-ம்.) திரிபுடிக்கு விலக்ஷணமாகியுஞ் சலக்ஷணமாகியு மிருக்கின்ற வஸ்து மத்தியகதஸ்வரூபமாய் விளங்குமென்பதாம். (சுஅ)

## ஆத்மானுசந்தான நிரூபணம்.

ஓரிடம்விட் டோரிடத்தே யுள்ளமுறிலவற்றினடு வுண்மை யாகிப், பேரிலதாயுணர்விலதாய்ச் சடமிலதாயதுநீயாய்ப் பிரியே லென்றுங், கூரியபுந்தியினாலே யூகித்துக்குடும்பியெனுங்குறிப்பை மாற்றித், தூரியதாம்படிமனத்தின் றுவக்கறுத்துவிருந்தபடி துணி ந்துநிற்பாய்.

(இ-ள்.) ஓரிடம்விட்டு - ஒருவிடயத்தினின்று, ஓரிடத்து - மற்றொ ன்றில், உள்ளமுறில் - மனம்பொருந்தினால், அவற்றினடு - அவ்விரண்டி ன்மத்தியில், உண்மையாகி - சத்தாமாத்திரமாகியும், பேரிலதாய் - நாம மில்லாததாகியும், உணர்விலதாய் - அறிவில்லாததாகியும், சடமிலதாய் - விடயமில்லாததாகியுமிருக்கின்ற, அது - அதுவென்னும் பிரமமும், நீ - நீயென்னுங்கூடஸ்தரும், ஆய் - ஐக்கியமான சிதாநந்தஸ்வரூபமாய், என் றும் - எக்காலமும், பிரியேல் - பிரிவுற்றிருப்பாய், கூறியபுந்தியினால் - மிகுந்த நுட்பமாகியவறிவினால், யூகித்து - யுத்தியாய்விசாரித்து, குடும்பி யெனும் - (நான்) சம்சாரியென்கின்ற, குறிப்பைமாற்றி - கருத்தைக்கெடு த்து, தூரியதாம்படி - வேரோடேகெடும்படி, மனத்தினறுவக்கறுத்து - மனதின் றொந்தங்களைக்கெடுத்து, இருந்தபடி - (சுபாவமா) யிருந்தபடி யே, துணிந்துநிற்பாய் - தெளிந்திருப்பாய்—எ-று.

(இ-ள்.) ஒரு விடயத்தினின்று மற்றொன்றில் மனம்பொ ருந்தினால் அவ்விரண்டின் மத்தியில் சத்தாமாத்திரமாகியும், நாம மில்லாததாகியும், அறிவில்லாததாகியும், விடயமில்லாததாகியுமிரு க்கின்ற அதுவென்னும்பிரமமும் நீயென்னுங்கூடஸ்தரும் ஐக்கிய மான சிதானந்த ஸ்வரூபமாய் எக்காலமும்பிரிவற்றிருப்பாய், மிகு ந்தநுட்மாகியவறிவினால் யுத்தியாய்விசாரித்து நான்சம்சாரியென் கின்ற கருத்தைக் கெடுத்து வேரோடேகெடும்படி மனதின் றொ ந்தங்களைக்கெடுத்து சுபாவமாயிருந்தபடியே தெளிந்திருப்பாய்.

(இ-ம்.) மனதை யாத்மாவிற் கரைக்கவேண்டுமென்பதாம். (சுக)

## ஆத்மாநுபவ நிரூபணம்.

பிறப்பிறப்பாம் பூட்டைதனைப் பிணித்துழற்றும் வாதனை யாம் பெரியபாச, மறப்பெரியமுயற்சியினா லறுத்திடுவாய்பரமமா

மறிவின்முன்னே, புறப்படும்பொய் யாமுள்ளம் புவனவிகற்பங்க ளெனும் பொய்யைக் காட்டுஞ், சிறப்புளவிண் ணிலதாயுமிலதான நீலநிறஞ் செறிவதேபோல்.

(இ-ள்.) பிறப்பிறப்பாம் - சநநமரணமாகிய, பூட்டைதனை - ஏற்றத் திற் (கடங்) களை, பிணித்துழற்றும் - கட்டிச்சுழற்றுகின்ற, வாதனையாம்- வாசனையென்னும், பெரியபாசம் - பெருங்கயற்றை, அறப்பெரிய முயற்சி யினல் - மிகவும் பெரிதான வெத்தனத்தினல், அறுத்திடுவாய் - அறுக் கக்கடவாய், பரமமாமறிவில் - மேலானவாத்மஞானத்தில், முன்னேபுறப் பட்டு - முன்னுண்டாகி யிருக்கும், பொய்யாமுள்ளம் - மித்தையாகிய மனது, புவனவிகற்பங்களெனும் - உலகவேற்றுமைகளென்கின்ற, பொய் யை - அசத்தியத்தை, சிறப்புள - சிறப்பையுடைய, விண்ணிலதாயும் - ஆகாயமானது (வடிவ) மில்லாததாயிருந்தும், இலதான - இல்லாததாகிய, நீலநிறம் - நீலநிறத்தை, செறிவதேபோல் - பொருந்துவதுபோல, காட் டும் - காண்பிக்கும்—எ-று.

(இ-ை.) சநநமரணமாகிய ஏற்றத்திற்கடங்களைகட்டிச்சுழற் றுகின்ற வாசனையென்னும் பெருங்கயற்றை மிகவும் பெரிதான வெத்தனத்திலை் அறுக்கக்கடவாய். மேலான வாத்மஞானத்தில் முன்னுண்டாகியிருக்கும் மித்தையாகிய மனது உலகவேற்றுமைக ளென்கின்ற அசத்தியத்தை சிறப்பையுடைய ஆகாயமானது வடி வமில்லாததா யிருந்தும் இல்லாததாகிப நீலநிறத்தை பொருந்து வதுபோலக் காண்பிக்கும்—என்பதாம்.

(இ-ம்.) ஆத்ம ப்ரகாசத்தை யதின் சங்கற்பமானமனது சகம்போலத் தோற்றிவிக்குமென்பதாம். (எ0)

## ஆத்மப்ரகாச நிரூபணம்.

சோகமுறுசங்கற்ப நாசத்தான்மனமாளிற் றொன்றுதொட்ட
மோகமெனுமூடுபனி விட்டகலுஞ்சரற்கால முதிரவந்தான்
மாகவிளங்குவதென்ன நல்லறிவுமாத்திரமாய் மாயாதாகி
யேகமாய்வடிவின்றிப் பிறப்பிறப்பிலாபிரம மிலங்குநொய்தாய்.

(இ-ள்.) சோகமுறு - துன்பம்பொருந்திய, சங்கற்பநாசத்தால் - சங் கற்பநாசத்தினல், மனமாளில் - மனதிறந்தால், தொன்றுதொட்ட - பழ மையாகத்தொடர்ந்துவந்த, மோகமெனும் - மோகமென்கின்ற, மூடுபனி- மூடுபனியானது, விட்டகலும் - விட்டுநீங்கும், சரற்காலமுதிரவந்தால் - சரற்கால முதிரும்படிவந்தால, மாகம் விளங்குவதென்ன - ஆகாயம் ப்ரகாசிப்பதுபோல, நல்லறிவுமாத்திரமாய் - ஆநந்தபோத மாத்திரமாகி யும், மாயாதாகி - அழிவற்றதாகியும், ஏகமாய் - ஒன்றானதாகியும்,

வடிவின்றி - உருவமில்லாததாகியும், பிறப்பிறப்பிலா - சநநமரணமில்லாதாகியு (மிருக்கின்ற), பிரமம் - பிரமமானது, நொய்தாய் - சொச்சமாய், இலங்கும் - ப்ரகாசிக்கும்—எ-று.

(இ-ள.) துன்பம் பொருந்திய சங்கற்பநாசத்தினுல் மனதிறந்தால் பழமையாகத் தொடர்ந்துவந்த மோகமென்கின்ற மூடுபனியானது விட்டுநீங்கும் சரற்கால முதிரும்படி வந்தால் ஆகாயம் ப்ரகாசிப்பதுபோல ஆநந்தபோத மாத்திரமாகியும், அழிவற்றதாகியும், ஒன்றுனதாகியும், உருவமில்லாததாகியும், சநநமரணமில்லாததாகியு மிருக்கின்ற பிரமமானது சொச்சமாய் ப்ரகாசிக்கும்—என்பதாம்.

(இ-ம்.) பிரமசங்கற்பமா யுதித்தமனதைப் பிரமத்திற்கரைத்துத் தானுமப்பிரம ப்ரகாசனாய் விளங்கவேண்டுமென்பதாம். (எக)

உற்பத்திப்பிரகரணம் முற்றிற்று.

ஆக கதை ௰உ - க்கு கவிதை - ருாயசூ.

---

## திதிப்பிரகரணத்தில்,

# சுக்கிரன் கதை.

### அவதாரிகை.

முற்பிரகரணத்திற் சைதன்யத்திலுண்டான மனோவுல்லாசமே சகமென்பதற் கஞ்ஞானபூமியையு மதைநிவிர்த்திப்பதற்கு ஞானபூமியாதியையு மறிவித்து அச்சகஞ்சைதன்யமயமாக விளங்குமென்பதை யைந்து கதைகணிறைந்த திதிப்பிரகரணத்திலறிவிக்குநிமித்தம் அவைகளின் முதலிலுள்ள சுக்கிரன் கதையிற் சைதன்யத்திலுண்டான மனதிற் சகம் விளங்குவதை நிரூபிக்கிருர்.

---

### சகஸ்திதியி னிலக்கணமறிவித்தல்.

எழுதுவோனுமெழுதிடமு மெதிர்காண்பொருளுமிலதாகி
வழுவிலாதவுண்ணிடையே வந்துதோன்றுமோவியந்தான்
பழுதின்மேவுந்தனைத்தானே பராகிற்கும்பலபொறியு
நழுவுதுயிலினுலன்றி நனவான்மேவுங்கனவொக்கும்.

(இ-ள்.) எழுதுவோனும் - எழுதுகின்றவனும், எழுதிடமும் - எழுதுகின்றவிடமும், எதிர்காண்பொருளும் - எதிராகக்காண்கின்ற திரவியங்

களும், இலதாகி - இல்லாமல், வழுவிலாதவிண்ணிடை - குற்றமற்றிருக்கின்றசிதாகாயத்தில், ஒவியந்தான் - (சகமென்னுஞ்) சித்திரமானது, வந்துதோன்றும் - உண்டாகித்தோற்றும், பழுதின்மேவும் - உண்மையாகத்தோற்றிய, தனைத்தானே பாராநிற்கும் - தன்னைத்தானே பார்த்துக்கொண்டிருக்கும், (ஆதலின்) பலபொறியும் - நாநாவித விந்திரியங்களும், நழுவுதுயிலின்றி - நீங்குகின்ற நித்திரையிலில்லாமல், நனவான்மேவும்-(சகம்) சாக்கிரத்திற்றோற்றும், கனவொக்கும் - சொற்பனத்தையொத்திருக்கும்—எ-று.

**(இ-ள்.) எழுதுகின்றவனும், எழுதுகின்றவிடமும், எதிராகக்காண்கின்றதிரவியங்களும் இல்லாமல் குற்றமற்றிருக்கின்றசிதாகாயத்தில் சகமென்னுஞ் சித்திரமானது உண்டாகித்தோற்றும். உண்மையாகத்தோற்றிய தன்னைத்தானே பார்த்துக்கொண்டிருக்கும் ஆதலின் நாநாவித விந்திரியங்களும் நீங்குகின்ற நித்திரையிலில்லாமல் சகம் சாக்கிரத்திற் றோற்றும். சொற்பனத்தை யொத்திருக்கும்—என்பதாம்.**

(இ-ம்.) ஓர்காரணமின்றி ஆத்மாவிற்றோற்றுகின்ற சகத்தானது ஆத்மப்ரகாசமாய் நிகழ்தலி னச்சகந்தீர்க்க சொற்பனமென்பதாம். (க)

## ஆயிற் சகமின்றேவெனின்.

**கரியாய்ச்சமமாய்நொய்தாகிக் கலந்தவிகற்பந்தீரறிவிற்**
**பரியாநின்றவுலகமெலாம் பற்றிபாய்தல்கண்ணடியிற்**
**றெரியாநின்றபொருள்போலாஞ் செறிகாரணகாரியமின்றிப்**
**புரியாநின்றவுலகெல்லாம் பொலிந்துபிரமத்திடையிருக்கும்.**

(இ-ள்.) கரியாய் - சாட்சியாகியும், சமமாய் - பரிபூரணமாகியும், நொய்தாகி - சொச்சமாகியும், கலந்த-வியாபித்திருக்கின்ற, விகற்பந்தீரறிவில்-பேதமற்ற வாத்மஞானத்தினல், பரியாநின்ற - தாங்காநின்ற, உலகமெல்லாம் - சகங்களனைத்தும், பற்றிபாய்தல் - ப்ரதிபலித்தல், கண்ணடியில்-கண்ணுடியில், தெரியாநின்ற - தெரிகின்ற, பொருள்போலாம் - நிழலைப்போலாகும், செறிகாரணகாரியமின்றி-நெருங்கிய காரணகாரிய (சம்பந்த)மில்லாமல், புரியாநின்ற - சொல்லாநின்ற, உல்கெல்லாம் - சகங்களனைத்தும், பிரமத்திடை - பிரமத்தினிடத்தில், பொலிந்திருக்கும் - ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்—எ-று.

**(இ-ள்.) சாட்சியாகியும், பரிபூரணமாகியும், சொச்சமாகியும் வியாபித்திருக்கின்ற பேதமற்ற வாத்மஞானத்தினல் தங்காநின்ற சகங்களனைத்தும் ப்ரதிபலித்தல் கண்ணுடியில் தெரிகின்ற நிழலைப்போலாகும். நெருங்கிய காரணகாரிய சம்பந்தமில்லாமல்**

சொல்லாநின்ற சகங்களனைத்தும் பிரமத்தினிடத்தில் ப்ரகாசித்து க்கொண்டிருக்கும்—என்பதாம்.

(இ-ம்.) பிரமத்தி லதன் ப்ரதிவிம்பமான சகத்தானதோ ரேதுவுமின்றி விளங்குமென்பதாம். (உ)

## ஆயிற்சகம் வேருபேயெனின்.

சொன்னவுலகங்களுக்குருவந் தோன்றுநின்றமாத்திரமாம்
பின்னமின்றியாவையுமாய்ப் பேராவறிவாய்ப்பெருவிண்ணாய்
மன்னுபிரமமொன்றென்றே வருந்திமுயன்றுபாவிப்பா
யன்னநிலையேகைவந்தா லலைவற்றுள்ளமறிவுருவாம்.

(இ-ள்.) சொன்னவுலகங்களுக்குருவம் - முன்சொல்லிய சகங்களுக்கு வடிவமானது, தோன்றுநின்றமாத்திரமாம் - தோன்றுநின்ற ப்ரதிபலின மாத்திரமேயாம், பின்னமின்றி - பின்னமில்லாததாகியும், யாவையுமாய் - சர்வாத்மகமாகியும், பேராவறிவாய் - நீங்காதபூரண ஞானமாகியும், பெருவிண்ணாய் - வியாபகமான சிதாகாசமாகியும், மன்னுபிரமம் - நிலைபெற்றிருக்கின்ற பிரமஸ்வரூபம், ஒன்றென்று-ஏகமேயென்று, வருந்திமுயன்று-வருத்தத்துடன் முயற்சிசெய்து, பாவிப்பாய்-ஸ்ரீராமா நீசிந்திப்பாய், அன்னநிலை - அத்தன்மையுள்ள நிச்சயமானது, கைவந்தால் - கைவசமாயின், உள்ளம் - மனமானது, இலைவற்று - சலனமற்று, அறிவுருவாம் - (நிச்சலமான) வாத்மஞானஸ்வரூபமாம்—எ-று.

(இ-ஸை.) முன்சொல்லிய சகங்களுக்கு வடிவமானதுதோன்றுநின்ற ப்ரதிபலினமாத்திரமேயாம். பின்னமில்லாததாகியும், சர்வாத்மகமாகியும், நீங்காத பூரணஞானமாகியும், வியாபகமான சிதாகாசமாகியும் நிலைபெற்றிருக்கின்ற பிரமஸ்வரூபம் ஏகமேயென்று வருத்தத்துடன் முயற்சி செய்து ஸ்ரீராமா! நீசிந்திப்பாய். அத்தன்மையுள்ள நிச்சயமானது கைவசமாயின்மனமானது சலனமற்று நிச்சலமான வாத்மஞானஸ்வரூபமாம்—என்பதாம்.

(இ-ப்.) சகமானது வேருயிருப்பதுபோலத்தோற்றுவதேயன்றி வேறென்றென்ப்தாம். (ங)

## ஆயிற்சகந்தனியே தோற்றுகின்றதேயெனின்.

கீற்றுபலசே ரொருகற்போற் கிளருஞ்சகங்கள் செறிபிரமந்,
தோற்றப்படுமா லிரண்டென்னத் தொடர்காரணம்வேறிலாமை
யினு, லாற்றச்சகமென் றென்றிலதா மறிவேயுளதாமனைத்துல

கும், தேற்றப்பிரமத் திருக்கும்இவை தெளியவெள்ளிகதைகேட்பாய்.

(இ-ள்.) கீற்றுப்பலசேர்-சித்திரங்களநேகஞ் சேர்ந்திருக்கின்ற, ஒரு கற்போல்-ஒருகல்லைப்போல, கிளருஞ்சகங்கள்-ப்ரகாசிக்கின்றவுலகங்களானவை, செறிபிரமம் - நெருங்கியிருக்கின்ற (ஒரு) பிரமமானது, தோற்றப்படும் - தோற்றிக்கொண்டிருக்கும், இரண்டென்ன - இரண்டென்பதற்கு, தொடர்காரணம் வேறிலாமையினால் - தொடராநின்ற (சககாரி) காரணம் வேறில்லாதபடியினால், ஆற்றச்சகமென்று-மிகுந்தசகங்களென்று, ஒன்றிலதாம் - (சொல்லுதற்) கொன்றில்லையாம், அறிவேயுளதாம் - ஆத்மஞானமேயுள்ளதாம், அனைத்துலகும்-சகலசகங்களும், தேற்றப்பிரமத்திருக்கும் - நிச்சயமான பிரமனிடத்திற் ப்ரதிபாமாத்திரமாயிருக்கும், இவைதெளிய-இவைதெளியும்பொருட்டு, வெள்ளிகதை - சுக்கிராசாரியாருடையகதையை, கேட்பாய் - ஸ்ரீராமா நீகேட்கக்கடவாய்—எ-று.

(இ-ரை.) சித்திரங்க ளநேகஞ் சேர்ந்திருக்கின்ற ஒரு கல்லைப்போல ப்ரகாசிக்கின்ற வுலகங்களானவை நெருங்கியிருக்கின்ற ஒருபிரமமானது தோற்றிக்கொண்டிருக்கும். இரண்டென்பதற்கு தொடராநின்ற சககாரியகாரணம் வேறில்லாதபடியினால் மிகுந்த சகங்களென்று சொல்லுதற் கொன்றில்லையாம். ஆத்மஞானமேயுள்ளதாம். சகலசகங்களும் நிச்சயமான பிரமத்தினிடத்திற் ப்ரதிபாமாத்திரமா யிருக்கும். இவைதெளியும்பொருட்டு சுக்கிராசாரியாருடைய கதையை ஸ்ரீராமா! நீகேட்கக்கடவாய்—என்பதாம்.

(இ-பு.) கல்லைவிளக்கும் ப்ரதமை யக்கல்லாயிருந்து முரூபதிருஷ்டியால் வேறாகத் தோற்றுவதுபோலச் சித்தைவிளக்குஞ்சகஞ் சித்தாயிருந்தும் திரிஸ்ய திருஷ்டியாய் வேறாகத்தோற்றுமென்பதாம். (சு)

---

## இதற்குத் திருஷ்டாந்தப் பார்க்கவானுபவத்தை நிரூபித்தல்.

முன்னமொருநாட் பிருகுமுனி முதுமந்தரமால் வரைச்சாரன், மன்னுதவஞ்செய் யுழியவன்றன் மைந்தன்மதியான் மதியலையோன், றன்னதாதை கழற்பிரியான் றனிமெஞ்ஞான மஞ்ஞான, மென்னுமிருபார் வையினடுவே யியங்காநின்ற பெரும்பதத்தோன்.

(இ-ள்.) முன்னமொருநாள் - முன்பொருகாலத்தில், பிருகுமுனி - பிருகுமுனியானவர், முதுமால்-பழமையுமுயர்வுமுள்ள, மந்தரவரைச்சாரல் - மந்திரகிரியினதுபக்கத்தில், மன்னுதவஞ்செய்யுழி-நிலைபெற்றதவத்

தைச்செய்யுமிடத்தில், அவன்றன்மைந்தன் - அவருடையபுத்திரன், மதிமான் - அறிவையுடையவன், மதியனையோன்-சந்திரனையொத்தவன், தன்ணதாதை - தன்பிதாவினுடைய, கழற்பிரியான் - பாதத்தில்நின்று நீங்காதவன், தனிமெய்ஞ்ஞான மஞ்ஞானமென்னும் - ஒப்பற்ற ஞானஞ்ஞானமென்கின்ற, இருபார்வையினடுவே-யிரண்டுபார்வையின்மத்தியில், இயங்காநின்ற பெரும்பதத்தோன் - விளங்காதிருக்கு மகாபதத்தையுடையவனு யிருக்கின்றான்—எ-று.

(இ-ளா.) முன்பொருகாலத்தில் பிருகுமுனியானவர் பழமையு முயர்வுமுள்ள மந்திரகிரியினது பக்கத்தில் நிலைபெற்றதவத்தைச் செய்யுமிடத்தில் அவருடைய புத்திரன் அறிவையுடையவன். சந்திரனை யொத்தவன். தன்பிதாவினுடையபாதத்தில்நின்று நீங்காதவன். ஒப்பற்ற ஞானஞ்ஞானமென்கின்ற பிரண்டுபார்வையின் மத்தியில் விளங்காதிருக்கும் மகாபதத்தையுடையவனுயிருக்கின்றான்—என்பதாம். (ரு)

## சிதாகாயத்திலுதித்த சங்கற்பமோ ஸ்திரவடிவமாதல்.

செறியந்தரத்தேநிற்கின்ற திரிசங்குவைப்போற்சுக்கிரனும்
மறிவோடறியாமையினடுவே யமருநாளிலவன்றாதை
பிறிவில்சமாதியுறநிற்ப பிரியாவெள்ளிதனியிருந்து
வெறியவிசும்பைநோக்குதலும் விண்மாதொருத்திவரக்கண்டான்.

(இ-ள்.) செறி - நெருங்கிய, அந்தரத்தேநிற்கின்ற - ஆகாயமத்தியிலிருக்கின்ற, திரிசங்குவைப்போல்-திரிசங்குராசனைப்போல, சுக்கிரனும்-சுக்கிராசாரியாரும், அறிவோடறியாமையினடுவே-அறிவறியாமையின்மத்தியில், அமருநாளில் - அமர்ந்திருக்கின்றகாலத்தில், அவன்றாதை - அவருடையபிதாவாகியபிருகுமுனியானவர், பிறிவில்சமாதியுறநிற்ப-நிருவிகற்பசமாதியிற் பொருந்தும்படியிருக்க, பிரியாவெள்ளிதனியிருந்து - (பிதாவை) விட்டு நீங்காத சுக்கிரனானவர் தனித்திருந்து, வெறியவிசும்பை-சுத்தமாகிய வாகாயத்தை, நோக்குதலும்-பார்க்கவும், விண்மாதொருத்தி-ஒரு தேவஸ்திரீயானவள், வரக்கண்டான் - வரப்பார்த்தனன்—எ-று.

(இ-ளா.) நெருங்கிய ஆகாயமத்தியிலிருக்கின்ற திரிசங்குராசனைப்போல சுக்கிராசாரியாரும் அறிவறியாமையின் மத்தியில் அமர்ந்திருக்கின்ற காலத்தில் அவருடைய பிதாவாகிய பிருகுமுனியானவர் நிருவிகற்ப சமாதியிற் பொருந்தும்படியிருக்க பிதாவை விட்டு நீங்காத சுக்கிரனானவர் தனித்திருந்து சுத்தமாகிய வாகாயத்தைப் பார்க்கவும் ஒரு தேவஸ்திரீயானவள் வரப்பார்த்தனன்.

## அச்சங்கற்பவடிவமாய் மனோராச்சியஞ்செய்தல்.

மந்தாநிலத்தா லசைகின்ற மந்தாரஞ்சூழ் மலர்குழலா, டந்தாவளத்தின் பிடிபோலத் தனியேவரா லுமெதிர்நோக்கிச், சிந்தாவசனா யவள்வடிவைத் தியானித்திருகண் முகிழ்த்திருந்து, முந்தாநின்ற வேட்கையினன் முடிவின்மனோராச் சியமுயன்றான்.

(இ-ள்.) மந்தாநிலத்தா லசைகின்ற - தென்றற்காற்றாலலைகின்ற, மந்தாரமலர்சூழ் - மந்தாரபுட்பங்கணிறைந்த, குழலாள்-அளகத்தையுடையவள், தந்தாவளத்தின் பிடிபோல - பெண்யானையைப்போல, தனியேவரலும் - தனித்துவரவும், எதிர்நோக்கி-எதிரேபார்த்து, சிந்தாவசனாய் - சிந்தாக்கிராந்தனாய், அவள்வடிவைத்தியானித்து - அந்தப்பெண்ணினுருவத்தைச் சிந்தித்து, இருகண்முகிழ்த்திருந்து - இருவிழிகளையு மூடிக்கொண்டிருந்து, முந்தாநின்றவேட்கையினால் - முந்துமாசையினால், முடிவின்மனோராச்சியம் - அளவிறந்த மனோராச்சியத்தில், முயன்றான் - முயற்சித்தான்—எ-று.

(இ-ரை.) தென்றற்காற்று லலைகின்ற மந்தாரபுட்பங்கணிறைந்த அளகத்தையுடையவள். பெண்யானையைப்போல தனித்துவரவும், எதிரேபார்த்து சிந்தாக்கிராந்தனாய் அந்தப்பெண்ணினுருவத்தைச்சிந்தித்து இருவிழிகளையு மூடிக்கொண்டிருந்து முந்துமாசையினால் அளவிறந்த மனோராச்சியத்தில் முயற்சித்தான்.

## விண்ணுலகமாகக் காண்டல்.

பொன்னாட்டணங்கே யிவளந்தப் பொன்னாட்டியானும்போய்ப்புகுந்தே, யின்னாட்டமரரிவர்போற்ற வெழில்கூர்சிங்கா தனத்திலிவன், மின்னாற்செறியு முகிலென்ன வேந்தாமிவனைச் சூழ்ந்துமதன், றன்னாற்களிக்கு மரம்பையர்தஞ் சமுகமிவையென் றுளத்துணர்ந்து.

(இ-ள்.) இவள் - இந்தப்பெண், பொன்னாட்டணங்கே - தெய்வலோகத்து ஸ்திரீயே (யென்றுநிச்சயித்து), அந்தப்பொன்னாடு - அந்தத்தெய்வலோகத்தில், இயானும்போய்ப்புகுந்து - நானும்போயடைந்து, இன்னாட்டமரர் - இந்தவுலகத்துக்குத்தேவர்களாகிய, இவர்போற்ற-இவர்கடுதிக்க, எழில்கூர் - அழகுமிகுந்த, சிங்காதனத்தில்-சிங்காதனத்தின்மேல், மின்னாற்செறியும் - மின்னல்கணிறைந்த, முகிலென்ன - மேகத்தைப்போல, இவன்வேந்தாம் - இவன்றேவேந்திரனும், இனைச்சூழ்ந்து - இவ்வரசனைச்

சூழ்ந்து, மதன்றன்னுற்களிக்கும் - காமத்தினுற்களிக்கின்ற, அரம்பையர் தஞ்சமுகமிவையென்று-தெய்வமாதர்களின்கூட்ட மிவையென்று, உளத்துணர்ந்து - மனதிலறிந்து—எ-று.

(இ-ள.) இந்தப்பெண் தெய்வலோகத்து ஸ்திரீயேயென்று நிச்சயித்து அந்தத்தெய்வலோகத்தில் நானும்போயடைந்து இந்தவுலகத்துக்குத் தேவர்களாகிய இவர்கடுதிக்க அழகு மிகுந்த சிங்காதனத்தின்மேல் மின்னல்சணிறைந்த மேகத்தைப்போல இவன்றேவேந்திரனும். இவ்வரசனைச் சூழ்ந்து காமத்தினுற் களிக்கின்ற தெய்வமாதர்களின் கூட்டமிவையென்றுமனதிலறிந்து—எ-ம். ()

## விண்ணுலகத்திற் சங்கற்பமாதைக் காண்டல்.

இமையோரிறையை யிவன்வணங்க விவனையவனு மிறைஞ்சியபின், னமையாவின்ப விண்ணாட்டி லகலாதுலவு மவ்வளவிற், சுமைவார்கொங்கை யரம்பையருள் சொன்னவவண்முன்றோன்றுதலுங், கமையாவன்பாற் கண்களிப்பக் கண்டானவளுங் கண்ணுற்றாள்.

(இ-ள்.) இமையோரிறையை - தேவேந்திரனை, இவன்வணங்க - இந்தச்சுக்கிரன்வணங்க, இவனையவனும் - இந்தச்சுக்கிரனை யத்தேவேந்திரனும், இறைஞ்சியபின் - வணங்கியபின்பு, அமையாவின்பம் - கிடைத்தற்கரிய சுகத்தையுடைய, விண்ணாட்டில்-தெய்வலோகத்தில், அகலாதுலவும்-நீங்காமற்சஞ்சரிக்கின்ற, அவ்வளவில்-அத்தருணத்தில், சுமைவார்கொங்கை-பருத்துங்கச்சணிந்துமிருக்கின்ற தனங்களையுடைய, அரம்பையருள்-தெய்வப்பெண்களுள், சொன்னவவள் - முன்சொல்லிய வந்தப்பெண், முன்றோன்றுதலும்-முன்னேதோற்றினமாத்திரத்தில்,கமையாவன்பால்-சகித்தற்கரிய விச்சையினுல், கண்களிப்ப - (இரண்டு) கண்களிக்கும்படி, கண்டான் - சுக்கிரன்பார்த்தான், அவளுங்கண்ணுற்றாள் - அத்தெய்வப்பெண்ணு மப்படியேபார்த்தாள்—எ-று.

(இ-ள.) தேவேந்திரனை இந்தச் சுக்கிரன்வணங்க இந்தச்சுக்கிரனை யத்தேவேந்திரனும் வணங்கிய பின்பு கிடைத்தற்கரிய சுகத்தையுடைய தெய்வலோகத்தில் நீங்காமற் சஞ்சரிக்கின்ற அத்தருணத்தில் பருத்துங்கச்சணிந்து மிருக்கின்ற தனங்களையுடைய தெய்வப்பெண்களுள் முன்சொல்லிய வந்தப்பெண்முன்னே தோற்றினமாத்திரத்தில் சகித்தற்கரிய விச்சையினுல் இரண்டுகண்களுங் களிக்கும்படி சுக்கிரன் பார்த்தான். அத்தெய்வப்பெண்ணு மப்படியேபார்த்தாள்—என்பதாம். (௬)

## சுத்தசங்கற்பஞ்செய்தல்.

இருவர்விழியுநினைவுகளு மேகமாகவுறப்பற்றி
யுருகுமளவிற்சங்கற்பத் தொன்றும்பிழையாவுயர்வெள்ளி
கருகுமிருண்மூடுகவென்று கற்பித்திடலுங்கற்பாந்தப்
பருவம்போலுமிருள்சூழப் பலருமகன்றார்பலதிசையும்.

(இ-ள்.) இருவர்விழியும் - (அவ்) விருவருடைய கண்களும், நினைவுகளும் - மனங்களும், ஏகமாகவுறப்பற்றி - ஒன்றாகக்கலந்து, உருகுமளவில்- உருகுகின்றசமயத்தில், சங்கற்பத்து - சங்கற்பித்தகாரியங்களில், ஒன்றும் பிழையா-ஒன்றுந்தப்பாத, உயர்வெள்ளி - பெருமையையுடையசுக்கிரன், கருகுமிருண மூடுகவென்று - கரியவந்தகாரமூடிக்கொள்ளக்கடவதென்று, கற்பித்திடலும் - சங்கற்பிக்கவும், கற்பாந்தப்பருவம்போலும் - கற்பாந்த காலத்தைப்போலும், இருள்சூழ-அந்தகாரமூடிக்கொள்ள, பலரும் - (அவ் விடத்திலுள்ள) சகலரும், பலதிசையும்-பலதிக்குகளிலும், அகன்றார்-நீங் கினார்கள்—எ-று.

(இ-ள.) அவ்விருவருடைய கண்களும் மனங்களும் ஒன்றாக க்கலந்து உருகுகின்ற சமயத்தில் சங்கற்பித்த காரியங்களில் ஒன் றுந்தப்பாத பெருமையையுடைய சுக்கிரன் கரிய வந்தகாரமூடிக் கொள்ளக்கடவதென்று சங்கற்பிக்கவும் கற்பாந்தகாலத்தைப்போ லும் அந்தகாரமூடிக்கொள்ள அவ்விடத்திலுள்ள சகலரும் பலதி க்குகளிலும் நீங்கினார்கள்—என்பதாம். (கO)

## விடயாநந்தமனுபவித்தெய்தல்.

அன்னாளிவனைவந்தணைய வழகார்தருநீழலிலொருபாற்
றுன்னுமுயங்கியோருயிராய்த் துன்பமில்லாவின்பத்தி
னன்னாளாகச்சதுரியுக நாலுநாலுநடந்ததற்பின்
முன்னும்புரிந்ததருமமெலா முடியுமுடியுமெனுங்கருத்தால்.

(இ-ள்.) அன்னாளிவனை - அத்தெய்வப்பெண்ணிந்தச் சுக்கிராசாரிய ரை, வந்தணைய - வந்துபொருந்த, அழகார்தருநீழலில்-அழகுபொருந்திய கற்பகவிருக்ஷத்தினிழலில், ஒருபால் - ஒருபக்கத்தில், துன்னுமுயங்கி - நெருங்கிச்சேர்ந்து, ஒருயிராய் - (இருவரு) மோருயிராக, துன்பமில்லா வின்பத்தில் - இடையூறில்லாத (விடய) சுகத்தில், நன்னாளாக - நல்லகா லமாக, சதுரியுகநாலுநாலும் - எட்டுசதுர்யுகமும், நடந்ததற்பின் - கழிந்த பின்பு, முன்னும்புரிந்த - முன்னமேயாஞ்செய்த, தருமமெலாம் - தருமங் களனைத்தும், முடியுமுடியும் - முடிந்துபோமுடிந்துபோம், எனுங்கருத் தால் - என்கின்ற சிந்தனையினால்—எ-று.

(இ-ள.) அத்தெய்வப்பெண் ணிந்தச் சுக்கிராசாரியரைவந் துபொருந்த அழகுபொருந்திய கற்பகவிருக்ஷத்தினிழலில் ஒருபக்கத்தில் நெருங்கிச் சேர்ந்து இருவரு மோருயிராக இடையூறில்லாத விடய சுகத்தில் நல்லகாலமாக எட்டுசதுர்யுகமும் கழிந்தபின்பு முன்னமே யாஞ்செய்த தருமங்களனைத்தும் முடிந்துபோமுடிந்துபோம் என்கின்ற சிந்தனையினல்—என்பதாம்.

## தன்னைமறந்து பிராமணனுதல்.

விழுந்தான்புவன மண்டலத்தின் மெய்ம்மைமறந்தா னிவன்சீவன், கொழுந்தார்மதியுன் கலைசேர்ந்து குளிர்ந்தபனியாய்நெல்லாகிச், செழுந்தாணெல்லைத் தேசார்ண தேசமறையோன் சமைத்தருந்த, வெழுந்தாதுவுமாய்ச் சுக்கிரன்வந் திவன்பாரியைபான் மகவானுன்.

(இ-ள்.) புவனமண்டலத்தில் - (தேவலோகத்தினின்று) பூலோகத்தில், விழுந்தான் - வந்துசேர்ந்தான், மெய்ம்மைமறந்தான் - தனதுவடிவத்தை மறந்தான், இவன்சீவன் - இந்தச்சுக்கிரனுடையசீவனனது, கொழுந்தார் - மிருதுவாகிய, மதியின்கலைசேர்ந்து பூரணசந்திரகலையைச்சேர்ந்து, குளிர்ந்தபனியாய் - குளிர்ச்சியையுடையபனியாகி, நெல்லாகி - (அந்தப் பனியினுல்) நெல்லாகி, செழுந்தாணெல்லை - (அந்தச்) செழுத்ததாளையுடையநெல்லை, தேசார்ணதேசம்-தேசார்ணதேசத்திலுள்ள, மறையோன் - பிராமணன், சமைத்தருந்த - சமையற்செய்துபுசிக்க, எழுந்தாதுவுமாய் - உண்டாகின்ற விந்திரியரூபமாய், சுக்கிரன்வந்து - சுக்கிராசாரியர்வந்து, இவன்பாரியைபால் - இப்பிராமணன் மனைவியினிடத்தில், மகவானுன் - புத்திரனுகப்பிறந்தான்—எ-று.

(இ-ா.) தேவலோகத்தினின்று பூலோகத்தில்வந்து சேர்ந்தான். தனதுவடிவத்தை மறந்தான். இந்தச் சுக்கிரனுடைய சீவனனது மிருதுவாகிய பூரணசந்திரகலையைச்சேர்ந்துகுளிர்ச்சியையுடைய பனியாகி அந்தப்பனியினுல் நெல்லாகி அந்தச் செழுத்ததாளையுடைய நெல்லை தேசார்ணதேசத்திலுள்ள பிராமணன் சமையற்செய்துபுசிக்க உண்டாகின்ற விந்திரியரூபமாய் சுக்கிராசாரியர்வந்து இப்பிராமணன் மனைவியினிடத்தில் புத்திரனுகப்பிறந்தான்—என்பதாம். (சஉ)

## புத்திரன் வடிவமாதல்.

அன்னுண்முனிவர் தொடர்ச்சியினு லரியதவமோர் மனுக்காலம், பொன்னூர்வரைசூழ் வனத்திடையே புரிந்தானவனங் கொரு

பெடைமான், றன்னாலொருசேப் நரர்வடிவாய்ச்சாதனனனவன
ன்பாற், பின்னுநின்ற பேதைமையாற் பேராவுண்மை நிலைபெயர்
ந்தான்.

(இ-ள்.) அன்னாள் - அக்காலத்தில், முனிவர்தொடர்ச்சியினால்-தபசி
களின்றொடர்பினால், அரியதவம் - அரிதாகியதவத்தை, ஓர்மனுக்காலம் -
ஒருமனுவுள்ளபரியந்தம், பொன்னார்வரை - கனகமயமானமகாமேருவை,
சூழ்வனத்திடை - சூழ்ந்திராநின்றவாரணியத்தில், புரிந்தான்-செய்தான்,
அவனங்கு - அச்சுக்கிரனவ்விடத்தில், ஒருபெடைமான்றன்னால்-ஒருபெ
ண்மானினால், ஒருசேய்-ஒருபுத்திரனை, நரர்வடிவாய் - மனிதவடிவாக, சா
தனனன் - பெற்றான், அவனன்பால்-அப்புத்திரவாஞ்சையினால், பின்னு
நின்றபேதைமையால் - பந்தப்படுத்துகின்றவறியாமையினால், பேராவுண்
மைநிலை - கெடாதவுண்மைநிலையினின்று, பெயர்ந்தான் - நீங்கினான்.

(இ-கா.) அக்காலத்தில் தபசிகளின்றொடர்பினால் அரிதாகிய
தவத்தை ஒருமனுவுள்ளபரியந்தம் கனகமயமான மகாமேருவை
சூழ்ந்திராநின்ற வாரணியத்தில் செய்தான். அச்சுக்கிர னவ்விடத்
தில் ஒரு பெண்மானினால் ஒரு புத்திரனை மனிதவடிவாகப்பெற்
றான். அப்புத்திரவாஞ்சையினால் பந்தப்படுத்துகின்ற வறியாமை
யினால் கெடாத வுண்மைநிலையினின்று நீங்கினான்—என்பதாம். ()

## முனிவடிவமாதல்

மற்றுமளவில் பிறவிகளின் மருள்வாதனையாற் பிறந்திறந்து,
முற்றுமுயர்கங் கையின்றடத்தோர் முனிவன்மகவாய் முனியா
னான், பற்றுமுயிர்போய் முதற்காயம் பவனனாலும் வெயிலாலும்,
பெற்றுவளர்த்த பிருகுவின்பாற் பெரிதுமுணங்கி யென்பாகி.

(இ-ள்.) மற்றுமளவில்-பின்னுமளவில்லாத, பிறவிகளில்-சநநங்களில்
மருள்வாதனையால்-மயக்கம்பொருந்திய வாசனையினால், பிறந்திறந்து-சனி
த்துமரித்து, முற்றுமுயர் - மிகவுமேலாகிய, கங்கையின்றடத்து - கங்காத்
தீரத்தில, ஓர்முனிவன்மகவாய் - ஒருமுனிபுத்திரனாய், முனியானான்-தவ
த்தோனாயினன், பற்றுமுயிர் போய் - (முன்) பற்றிய வுயிரானது நீங்கி,
முதற்காயம் - (சுக்கிராசாரியருடைய) முந்தினசரீரமானது, பவனனாலும்
-காற்றினாலும், வெயிலாலும் - சூரியகிரணத்தினாலும், பெற்றுவளர்த்த -
ஈன்றுவளர்த்த, பிருகுவின்பால்-பிதாவாகிய பிருகுமுனியின் பக்கத்தில்,
பெரிதுமுணங்கி - மிகவுமுலர்ந்து, என்பாகி - அஸ்தியாகி—எ-று.

(இ-ள.) பின்னுமளவில்லாத சநநங்களில் மயக்கம்பொருந் திய வாசனையினால் சனித்துமரித்து மிகவுமேலாகிய கங்காதீரத் தில் ஒரு முனிபுத்திரனாய் தவத்தோனாயினன். முன் பற்றிய வுயி ரானது நீங்கி சுக்கிராசாரியருடைய முந்தின சரீரமானது காற்றி னாலும் சூரியகிரணத்தினாலும் ஈன்றுவளர்த்த பிதாவாகிய பிருகு முனியின் பக்கத்தில் மிகவுமுலர்ந்து அஸ்தியாகி—என்பதாம்.

(இ-ஸக-க-ம்.) ஆத்மசங்கற்பமே விடயமாவதிற்சுகித்த சங்கற்ப நீங் கிப் பூமியாயதி லளவற்றவடிவமெடுத்து முடிவான வாசுதேவ வடிவமான தென்பதாம். (கச)

## பிருகுமுனி புத்திரனைக்காணுமை.

பிருகுமுனிவன்பெருமையினாற் பிணங்குமிருகம்புள்ளினங்க
ளருகுமணுகலறமண்மே லங்கமுழுதுங்கெடாதிருப்பத்
திருகுமனந்தீர்சமாதியிலே தெய்வவருடமாயிரம்போ
யிருகண்மலரத்தவமுனிவ னிட்டமகவையெதிர்நோக்கி.

(இ-ள்.) பிருகுமுனிவன் - பிதாவாகிய பிருகுரிஷியினுடைய, பெரு மையினால் - (தவ) மகிமையினால், பிணங்குமிருகம் - பிணங்காநின்ற வில ங்குகளும், புள்ளினங்கள் - பறவைக்கூட்டங்களும், அருகுமணுகலற-பக் கத்திலு நெருங்காமல், மண்மேல் - பூமியின்மேல், அங்கமுழுதும்-சரீரமு முழுமையும், கெடாதிருப்ப - (அக்காலத்தி) லழியாதிருக்க, திருகுமனந் தீர்சமாதியில்- நிருவிகற்பசமாதியில்,தெய்வவருடமாயிரம்போய்-தேவதா வருடமநேகமானபின்பு, இருகண்மலர - இரண்டுகண்ணும் விழிக்க, தவ முனிவன்-தவமுள்ள பிருகுமுனிவர், இட்ட மகவை யெதிர்நோக்கி-இஷ் டமுள்ள புத்திரனை யெதிரேபார்த்து—எ-று.

(இ-ரை.) பிதாவாகிய பிருகுரிஷியினுடைய தவமகிமையி னால் பிணங்காநின்ற விலங்குகளும் பறவைக்கூட்டங்களும் பக்கத் திலு நெருங்காமல் பூமியின்மேல் சரீரமுழுமையும் அக்காலத்தி லழியாதிருக்க நிருவிகற்ப சமாதியில் தேவதாவருடமநேகமானபி ன்பு இரண்டுகண்ணும் விழிக்க தவமுள்ள பிருகுமுனிவர் இஷ்ட முள்ள புத்திரனை யெதிரே பார்த்து—என்பதாம். (கரு)

## புத்திர வடிவத்தைப் பார்த்தல்,

அறத்தின்வடிவாயஞ்சலிசெய் தருகேயிருக்கு மகற்காணுன்,
வறக்குமுடலின்கங்காளம் வறுமைவடிவா யெழுந்ததென, நிறக்

குநிர்ப்பாக் கியவடிவால் நிற்பதென்ன வெதிர்கிடப்பத், துறக்கு மனத்தான் பிருகுவெனுந் துய்யதவத்தோன் றனிநோக்கி.

(இ-ள்.) அறத்தின் வடிவாய் - தருமஸ்வரூபமாய், அஞ்சலி செய்து - தொழுதுக்கொண்டு அருகேயிருக்கும்-பக்கத்திலிருக்கின்ற, மகற்காணுன்- புத்திரனைக்காணுதவராய், வறக்குமுடல்-உலர்ந்தசரீரமானது, கங்காளம்- முழுவெண்புகளாகவும், வறுமைவடிவாய் - தரித்திர வுருவமாய், எழுந்த ... - உண்டானதுபோலவும், நிறக்கும் - தோற்றுகின்ற, நிர்ப்பாக்கிய வடிவாய் - நிர்ப்பாக்கியமே வடிவாகி, நிற்பதென்ன - இருப்பதுபோலவும், எதிர்கிடப்ப - முன்னேயிருக்க, துறக்குமனத்தான்-துறந்தமனதையுடையவனுகிய, பிருகுவெனும் பிருகுவென்கின்ற, துய்யதவத்தோன் - பரிசுத்தமான தவத்தையுடையவன், தனிநோக்கி - தனியேபார்த்து—எ-று.

(இ-ள.) தருமஸ்வரூபமாய் தொழுதுக்கொண்டு பக்கத்திலிருக்கின்ற புத்திரனைக்காணுதவராய் உலர்ந்த சரீரமானது முழுவெண்புகளாகவும், தரித்திரவுருவமாய் உண்டானது போலவும் தோற்றுகின்ற நிர்ப்பாக்கியமே வடிவாகி இருப்பதுபோலவும் முன்னேயிருக்க துறந்த மனதை யுடையவனுகிய பிருகுவென்கின்ற பரிசுத்தமான தவத்தை யுடையவன் தனியேபார்த்து. (கசு)

## புத்திரன் மரித்தானென்றுன்னல்.

மென்றோல்போர்த்த வெலும்புமனை வெளிகடோறுந்தித்திரிப்புள், சென்றோடுவது முதரகுகை செறியுமண்டூ கத்திரள்க, ளொன்றோடொன்று பாய்வதுங்கண் டுற்றவாறென் னெனவறிவா, னின்றோர் கிலன் றுஞ் சினனென்றே நேயமைந்தன் றனைநினைந்தான்

(இ-ள்.) மென்றோல் போர்த்த-உலர்ந்துமெலிந்த சருமத்தினுன்மூடப்பெற்ற, எலும்புமனை - என்புவீட்டில், வெளிகடோறும் - நவத்துவாரங்களிலெல்லாம், தித்திரிப்புள்-சிச்சிலிக்குருவி, சென்றோடுவதும்-நடந்தோடுவதையும், உதரகுகையில் - வயிருகிய குகையில், செறியுமண்டுகத்திரள்கள் - நெருங்கிய தவளைக்கூட்டங்கள், ஒன்றோடொன்று - ஒன்றுடனென்று, பாய்வதுங்கண்டு-பாய்ந்து (விளையாடு) வதையும்பார்த்து, உற்றவாறென்னென-வந்தகாரணமென்னவென்று, அறிவால் -(தன) தறிவினுல், நின்றோர்கிலன் - நின்றுராய்ந்து பாராதவராய், நேயமைந்தன்றனை-அன்புள்ள புத்திரனை, துஞ்சினனென்று - இறந்தானென்று, நினைந்தான் - நினைத்தார்—எ-று.

(இ-ா.) உலர்ந்து மெலிந்த சருமத்தினுன் மூடப்பெற்ற என்பு வீட்டில் நவத்துவாரங்களி னெல்லாம் சிச்சிலிக்குருவிநடந் தோடுவதையும், வயிறுகியகுகையில் நெருங்கிய தவளைக்கூட்டங் கள் ஒன்றுட னென்று பாய்ந்து விளையாடுவதையும் பார்த்து வந் தகாரண மென்னவென்று தனதறிவினுல் நின்றுராய்ந்து பாராத வராய் அன்புள்ள புத்திரனை இறந்தானென்று நினைத்தார்-எ-ம்.

## காரணந்தெரியாமற் காலனைச்சபிக்க நினைத்தல்.

அடைத்தகாலத்தன்றியென தரியமகவையகாலத்திற் [ன்
றுடைத்தகாலன்றனைக்கணத்திற் றுடைப்பனென்னுவிடைப்பாக
விடைத்தவாபோற்பிருகுமுனி வெகுண்டுசாபமிடநினைப்பக்
கிடைத்தகாலனடுநடுங்கிக் கிளரைம்பூதவடிவெடுத்து.

(இ-ள்.) அடைத்தகாலத்தன்றி - நியமித்தகாலத்தையல்லாமல், என தரிமகவை - எனக்கரிதாகிய புத்திரனை, அகாலத்தில் - காலமல்லாத கா லத்தில், துடைத்தகாலன்றனை-கொன்றயமனை, கணத்தில் - (ஒரு) க்ஷண த்தில், துடைப்பனென்னு - கெடுப்பேனென்று, விடைப்பாகன்-இடபத் தை நடாத்துகின்ற வுருத்திரன், விடைத்தவாபோல-பெருங்கோபங்கொ ண்டதுபோல, பிருகுமுனி - பிருகுரிஷியானவர், வெகுண்டு - கோபித்து, சாபமிடநினைப்ப - சபிக்கும்படிநினைக்க, கிடைத்தகாலன்-(இவரதுகோப) முணர்ந்த யமனுனவன், நடுநடுங்கி - நடுநடுக்கமாய், கிளரைம்பூதவடிவெ டுத்து - விளங்காநின்றபஞ்சபூதவடிவமெடுத்து—எ-று.

(இ-ா.) நியமித்த காலத்தை யல்லாமல் எனக்கரிதாகியபுத் திரனை காலமல்லாதகாலத்தில் கொன்ற யமனை ஒருக்ஷணத்திற்கெ டுப்பேனென்று இடபத்தை நடாத்துகின்ற வுருத்திரன்பெருங் கோபங்கொண்டதுபோல பிருகுரிஷியானவர் கோபித்துசபிக்கு ம்படிநினைக்க, இவரது கோபமுணர்ந்த யமனுனவன் நடுநடுக்க மாய் விளங்காநின்ற பஞ்சபூதவடிவமெடுத்து—என்பதாம். (கஅ)

## காரணந்தெரிவிக்கக் காலனெழுந்தருளுதல்.

வதனமாறுங்கரமாறும் வாளுங்கயறுங்குண்டலமும்
பதனகவசத்துடன்மேவிப் பரந்தசேனைபுடைசூழ
விதனமுனியைவந்தணுகி வேண்டிக்கொள்வான்மெற்றென்ன
நிதனமூலமெனுங்கால னிமலமுனிவற்கிவையுரைத்தான்.

(இ-ள்.) வதனமாறும் - ஆறுமுகங்களும், கரமாறும் - ஆறுகைகளும், வாளும்-கத்தியும், கயறும் - பாசமும், குண்டலமும் - குழையும், பதன கவசத்துடன்மேவி-பாதுகாக்கும் வச்சிரகவசமுமாகிய விவைகளைப்பொருந்தி, பரந்தசேனை புடைசூழ - மிகுந்த சேனைகள் பக்கத்திற்சூழும்படி, விதன முனியை - விசனத்தையுடையபிருகுமுனியினிடத்தில், வந்தணுகி-வந்து சேர்ந்து, வேண்டிக்கொள்வான் - வேண்டிக்கொள்ளும்பொருட்டு, மெற்றென்ன-மிருதுவாக, நிதனம் - சகலத்தையுமழிப்பதற்கு, மூலமெனுங்காலன்-காரணமென்று சொல்லப்பட்டயமனானவன், நிமலமுனிவற்கு - நின்மலனாகிய பிருகுமுனிக்கு, இவை யுரைத்தான் - இவைகளைச்சொன்னான்.

(இ-ரை.) ஆறுமுகங்களும், ஆறுகைகளும், கத்தியும், பாசமும், குழையும், பாதுகாக்கும் வச்சிரகவசமுமாகிய விவைகளைப் பொருந்தி மிகுந்த சேனைகள் பக்கத்திற் சூழும்படி விசனத்தையுடைய பிருகுமுனியினிடத்தில் வந்துசேர்ந்து வேண்டிக்கொள்ளும்பொருட்டு மிருதுவாக சகலத்தையு மழிப்பதற்கு காரணமென்று சொல்லப்பட்ட யமனானவன் நின்மலனாகிய பிருகுமுனிக்கு இவைகளைச்சொன்னான்—என்பதாம்.

(இ-ரு-க-ீ.) பிருகுமுனியினது மனதைத்தெளிவிக்கக் காலனுபதேசிக்கத்தொடங்கினனென்பதாம். (கக)

---

**கால னியதிபெல்லமையையுந் தனது வல்லமையையு மறிவித்தல்.**

---

ஈன்றநியதிபாலிக்கு மியாங்கணின்னையீறில்லா
வான்றதவத்தாற்றுதித்திடுது மல்லாதில்லையாதலினாற்
சான்றதவத்தைவெங்கோபத் தழலாற்சுடுதற்றகவன்றாற்
றோன்றுமூழிக்கனலுமெமைச் சுடாதுநின்சொற்சுடவற்றே.

(இ-ள்.) ஈன்றநியதி-உண்டாக்கப்பட்ட (வீஸ்வர) னியதியை, பாலிக்கும் - பரிபாலனஞ்செய்கின்ற, இயாங்கள்-நாங்கள், நின்னை-உன்னை, ஈறில்லாவான்றதவத்தால் - அளவற்றமாட்சிமைப்பட்டதபசினால், துதித்திடுதுமல்லாது-துதிப்பமேயன்றி, இல்லை-வேறொன்றினாலின்று, ஆதலினால்-ஆகையினால், சான்றதவத்தை-பூரணமானதபசை, வெங்கோபத்தழலால்-வெவ்வியகோபாக்கினியினால், சுடுதற்றகவன்று-எரிப்பதுதகுதியல்ல,தோன்றும்-உண்டாகின்ற, ஊழிக்கனலும்-பிரளயாக்கினியும், எமைச்சுடாது - எங்களைச்சுடாது, நின்சொற்சுடவற்றே - உமதுசொல்லாசுடத்தக்கது.

(இ-ரை.) உண்டாக்கப்பட்ட வீஸ்வரனியதியை பரிபாலனஞ்செய்கின்ற நாங்கள் உன்னை அளவற்றமாட்சிமைப்பட்டதபசினால் துதிப்பமேயன்றி வேறொன்றினாலின்று. ஆகையினால், பூரணமானதபசை வெவ்வியகோபாக்கினியினால் எரிப்பது தகுதி

யல்ல, உண்டாகின்ற பிரளயாக்கினியும் எங்களைச் சுடாது. உமது சொல்லா சுடத்தக்கது—என்பதாம். (உ0)

இதுவுமது.

குடும்பவலையிற்பிணிப்புண்ட கோடாகோடியுருத்திரரு
நெடும்பங்கயக்கண்மாதவரு நிலையாமென்னுற்றொலைவுற்று
ரிடும்பையுலகிலெனைக்கடந்தா ரில்லையாருமெனக்கிரையாம்
படும்பல்லுயிருமியாம்படுத்தல் பகுதிபாயபழநியதி.

(இ-ள்.) குடும்பவலையில் - சம்சாரமாகிய வலையில், பிணிப்புண்ட-கட்டுப்பட்ட, கோடாகோடியுருத்திரரும்-அளவில்லாத வுருத்திரர்களும், நெடும்பங்கயக்கண் - நெடியதாமரைக்கண்ணையுடைய, மாதவரும் - மகாவிஷ்ணுக்களும், நிலையாமென்னுல் - நிலையாகிய வென்னுல், தொலைவுற்றார் - நாசமடைந்தார்கள், இடும்பையுலகில் - துன்பமாகிய சகங்களில், எனைக்கடந்தாரில்லை - என்னைச்செயித்தவர்களில்லை, யாரும் - சகலரும், எனக்கிரையாம் - எனக்குப்புசிப்பாவர், படும்பல்லுயிரும் - உண்டாகின்ற சகலவுயிர்களையும், யாம்படுத்தல் - நாமழிப்பது, பகுதியாய்பழநியதி-பரமேஸ்வரனுற் பகுக்கப்பட்ட வநாதிநியமம்—எ-று.

(இ-ளை.) சம்சாரமாகிய வலையில் கட்டுப்பட்ட அளவில்லாத வுருத்திரர்களும், நெடிய தாமரைக்கண்ணையுடைய மகாவிஷ்ணுக்களும், நிலையாகிய வென்னுல் நாசமடைந்தார்கள். துன்பமாகிய சகங்களில் என்னைச் செயித்தவர்களில்லை. சகலரும் எனக்குப் புசிப்பாவர். உண்டாகின்ற சகலவுயிர்களையும் நாமழிப்பது பரமேஸ்வரனுற் பகுக்கப்பட்ட வநாதிநியமம்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) அகமடங்குநிமித்தம், நியதியின்படி நடக்குந் தனது வல்லமையைக் காலன் கூறினனென்பதாம். (உக)

## ஞானநிச்சய முரைத்தல்.

எமதுவிதியன்றிந்நியதி யென்றுமுள்ளபடியாகு
மமலவிழியிற்செய்வோனு மருந்துவோனுமிலவாகும்
விமலமல்லாவிழிக்கிவர்கண் மிகவுமுளவாம்விதிவயத்தாற்
றமதுநினைவாற்பல்லுயிருந் சனிக்குங்கற்பமுடிவிற்போம்.

(இ-ள்.) எமதுவிதியன்று - என்னுடைய நியதியல்ல, இந்நியதி-இந்தநியதியானது, என்றுமுள்ளபடியாகும் - எப்பொழுது முள்ள ப்ரகாரமாம், அமலவிழியில் - நின்மலமான ஞானதிருஷ்டியில், செய்வோனும் - கருத்தாவும், அருந்துவோனும்-போக்த்தாவும், இலவாகும்-இல்லனவாம்,

விமலமல்லா விழிக்கு - அஞ்ஞானதிருஷ்டிக்கு, இவர்கண்மிகவுமுளவாம்-இக்கருத்தாவும் போக்த்தாவுமிகவுமுண்டாயிருப்பர், விதிவயத்தால்-கன்மவசனத்திஞல், பல்லுயிரும் - சகலபிராணிகளும், தமதுநினைவால்-தங்கள் சங்கற்பத்திஞல், சனிக்கும் - பிறக்கும், கற்பமுடிவிற்போம் - கற்பாந்தத்தினசிக்கும்—எ-று.

(இ-ஶா.) என்னுடையநியதியல்ல, இந்தநியதியானது எப்பொழுதுமுள்ள ப்ரகாரமாம். நின்மலமான ஞானதிருஷ்டியில் கருத்தாவும் போக்த்தாவும் இல்லனவாம். அஞ்ஞானதிருஷ்டிக்கு இக்கருத்தாவும் போக்த்தாவு மிகவுமுண்டாயிருப்பர். கன்மவசத்திஞல் சகலபிராணிகளும் தங்கள் சங்கற்பத்திஞல் பிறக்கும் கற்பாந்தத்தி னசிக்கும்—என்பதாம். (உஉ)

---

முனியின் விசாரமின்மையை வெளிப்படுத்துநிமித்தங் காலன் கிருபையுடன் கோபித்தல்.

---

கற்பதானமறைதருசிற் கண்ணதெங்கேசிரத்தையதாய்
நிற்பதெங்கேயுயர்வெங்கே நெடியோர்விளங்குமிந்நெறிக்கே
யற்பரானகுருடரென வயர்வதென்னத்தம்வினையா
லுற்பவிக்குஞ்செயல்பாரா துருத்துச்சபிக்கவுரியாயோ.

(இ-ள்.) கற்பதான-அத்தியயனஞ்செய்வதாகிய, மறைதரு-வேதங்களாற் கொடுக்கப்பெற்ற, சிற்கண்ணதெங்கே-ஞானதிருஷ்டியெங்கே, சிரத்தையதாய் - உறுதியாக, நிற்பதெங்கே - இருப்பதெங்கே, உயர்வெங்கே - (உமது) மகிமையெங்கே, நெடியோர்விளங்கும்-பெரியோர்கள் ப்ரகாசிக்கின்ற, இந்நெறிக்கு-இந்தமார்க்கத்துக்கு, அற்பரான-அற்பவறிவையுடையவராகிய, குருடரென - அந்தகரைப்போல, அயர்வதென்ன - நீர்தளர்ச்சியடைவதென்ன, தம்வினையால் - (உனது புத்திரன்) றனது சங்கற்பத்திஞல், உற்பவிக்கும்-உண்டான, செயல்பாரான் - செய்கையுணராமல், உருத்து - கோபித்து, சபிக்கவுரியாயோ - நீ சபித்தற்குரியவஞே—எ-று.

(இ-ஶா.) அத்தியயனஞ் செய்வதாகிய வேதங்களாற்கொடுக்கப்பெற்ற ஞானதிருஷ்டியெங்கே? உறுதியாக இருப்பதெங்கே? உமது மகிமையெங்கே ? பெரியோர்கள் ப்ரகாசிக்கின்ற இந்தமார்க்கத்துக்கு அற்பவறிவை யுடையவராகிய அந்தகரைப்போல் நீர் தளர்ச்சியடைவதென்ன ? உனது புத்திரன் றனது சங்கற்பத்திஞல் உண்டான செய்கையுணராமல் கோபித்து நீ சபித்தற்குரியவஞே—என்பதாம். (உங)

## காலனுபதேசித்தல்.

மனமேபுருடன்மற்றில்லை மனத்தின்செயலேசெயலாகுங்
கனசீவனத்தாற்சீவனுமாங் கவர்நிச்சயத்தாற்புந்தியுமாஞ்
சினவுமபிமானத்தாலே தீயவகங்காரமுமாகுந்
தனதுவிகற்பசாலத்தாற் றனேசகமாந்தனிமனமே.

(இ-ள்.) மனமேபுருடன்-மனமேவாத்மாவாம், மற்றில்லை-வேறின்று, மனத்தின்செயலே - மனத்தினதுதொழிலே, செயலாகும்-தொழிலாகும், கனசீவனத்தால் - மிகவுஞ்சீவிக்கின்றதினுல், சீவனுமாம் - சீவனுமாகும், கவர்நிச்சயத்தால்-கிரிகிக்கின்றநிச்சயத்தினுல், புந்தியுமாம்-புத்தியுமாகும், சினவுமபிமானத்தால்-சினக்குறிப்புடன் (யானெனதென்னு) மபிமானத்தினுல், தீயவகங்காரமுமாகும் - கொடியவகங்காரமுமாம், தனதுவிகற்பசாலத்தால் - தனது வேற்றுமைமிகுதியினுல், தனிமனமே - தனித்தமனதே, சகமாம் - உலகமாகும்—எ-று.

(இ-ரை.) மனமே வாத்மாவாம் வேறின்று. மனத்தினது தொழிலே தொழிலாகும். மிகவுஞ்சீவிக்கின்றதினுல் சீவனுமாகும். கிரிகிக்கின்ற நிச்சயத்தினுல் புத்தியுமாகும். சினக்குறிப்புடன் யானெனதென்னு மபிமானத்தினுல் கொடியவகங்காரமுமாம். தனது வேற்றுமை மிகுதியினுல் தனித்தமனதேஉலகமாகும்—எ-ம்.

(இ-ம்.) பிரமசங்கற்பமான மனதே சகலமுமாய் விளங்குமென்பதாம்.

### சுக்கிரன் மனேசங்கற்பத்தாலெடுத்த வடிவங்களை யறிவித்தல்.

ஆதலாலுன்புதல்வனுநீ யலைவில்சமாதியமர்போதிற்
காதலாலேசுக்கிரனுங் காயந்தன்னையிவணிருத்தி
மீதில்விச்சுவாசியெனும் விண்ணுட்டணங்கைமேவியபின்
னேதுபுவியிற்றேசார்ண வொருவேதியன்பாலுற்பவித்து.

(இ-ள்.) ஆதலால்.- அதினுல், உன்புதல்வனும் - உமதுபுத்திரனும், நீயலைவில் - நீநிருவிகற்பமாகிய, சமாதியமர்போதில் - சமாதியைப்பொருந்தினகாலத்தில், காதலால் - ஆசையினுல், சுக்கிரனும் - சுக்கிரனென்னும், காயந்தன்னை - தனதுசரீரத்தை, இவணிருத்தி - இவ்விடத்தில்வைத்து, மீதில் - ஆகாயத்தில், விச்சுவாசியெனும் - விச்சுவாசியென்னும் பெயரையுடைய, விண்ணுட்டணங்கைமேவியபின் - தேவலோகஸ்திரீயை (மனதினு) லடைந்தபின்பு, ஓதும்புவியில் - சொல்லும்பூமியில், தேசார்ணம்-தேசார்ணதேசத்திலுள்ள, ஒருவேதியன்பாலுற்பவித்து-ஓரந்தணனிடத்திற்புத்திரனுகப்பிறந்து—எ-று.

(இ-ரை.) அதினால் உமது புத்திரனும் நீ நிருவிகற்பமாகிய சமாதியைப் பொருந்தின காலத்தில் ஆசையினால் சுக்கிரனென்னும் தனது சரீரத்தை இவ்விடத்தில்வைத்து ஆகாயத்தில் விச்சுவாசியென்னும் பெயரையுடைய தேவலோகஸ்திரீயைமனதிலடைந்தபின்பு சொல்லும்பூமியில் தேசார்ணதேசத்திலுள்ள ஓரந்தணனிடத்திற் புத்திரனாகப்பிறந்து—என்பதாம். (உரு)

இதுவுமது - வேறு.

கோசலதேசந்தன்னிற் கொற்றவனாகத்தோன்றி
வீசலர்வனத்தினூடே வேடனாயுதித்துகங்கை
மாசலமருவுபாரின் மராளமாய்ப்பௌண்டரத்திற்
பேசருநிருபனானன் பெருங்கதிர்குலத்துவந்து.

(இ-ள்.) கோசலதேசந்தன்னில் - கோசலநாட்டில், கொற்றவனாகத்தோன்றி - அரசனாகப்பிறந்து, வீசலர் வனத்தினூடு-விசாலமானகாட்டினுள்ளே, வேடனாயுதித்து-வேடனாகப்பிறந்து, கங்கைமாசலமருவு-கங்காசலம்பொருந்திய, பாரில் - கரையில், மராளமாய் - அன்னமாய்ப்பிறந்து, பௌண்டரத்தில் - பௌண்டரதேசத்தில், பெருங்கதிர்குலத்தில்வந்து - உயர்ந்த சூரிய வம்சத்திற்பிறந்து, பேசரு நிருபனானன் - சொல்லற்கரிய வரசனாயினன்—எ-று.

(இ-ரை.) கோசலநாட்டில் அரசனாகப்பிறந்து விசாலமான காட்டினுள்ளே வேடனாகப்பிறந்து கங்காசலம்பொருந்திய கரையில் அன்னமாய்ப்பிறந்து பௌண்டரதேசத்தில் உயர்ந்த சூரிய வமிசத்திற்பிறந்து சொல்லற்கரிய வரசனாயினன்—என்பதாம்.

இதுவுமது.

சாலுவநாட்டிற்பானு மந்திரத்தலைவனானன்
மேலுயர்கற்பகாலம் விஞ்சையர்வேந்தனானன்
வாலுணர்வுளதாயங்கோர் மாதவன்மதலையானன்
சேலுகள்சவ்வீரத்திற் சேர்ந்தசாமந்தனானன்.

(இ-ள்.) சாலுவநாட்டில் - சாலுவதேசத்தில், பானுமந்திரத்தலைவனானன்-சூரியவம்சத்துக்குவாசாரியனானன், மேலுயர்கற்பகாலம்-பின்பு மிகுந்தகற்பகாலவளவும், விஞ்சையர்-வித்தியாதரருக்கு, வேந்தனானன் - அரசனானன், வாலுணர்வுளதாய் - பரிசுத்தவறிவுள்ளவனாய், அங்கு - அவ்விடத்தில், ஓர்மாதவன் - ஒரு தபோமுனிவனுடைய, மதலையானன்-புத்திரனானன், சேல் - சேற்கெண்டைகள், உகள் - (கமுகிற்றுவிதடாகத்திற்) குதிக்கின்ற, சவ்வீரத்தில் - சவ்வீரநாட்டில், சேர்ந்த-பொருந்திய, சாமந்தனானன் - சாமந்தனாகப்பிறந்தான்—எ-று.

(இ-ள.) சாலுவதேசத்தில் சூரியவம்சத்துக்கு வாசாரியனு னன். பின்பு மிகுந்த கற்பகாலவளவும் வித்தியாதாருக்கு அரசனு னன். பரிசுத்தவறிவுள்ளவனுய் அவ்விடத்தில் ஒருதபோமுனிவ னுடைய புத்திரனுனன். சேற்கெண்டைகள்கமுகிற்ருவி தடாகத் திற் குதிக்கின்ற சவ்வீரநாட்டில் பொருந்திய சாமந்தனுகப்பிறந் தான்—என்பதாம். (உஎ)

இதுவுமது.

திரிகத்ததேசந்தன்னிற் றேசிகச்சைவனுனன்
முருகர்சூழ்வேடரூரின் மூங்கிலாரணியமானு
னரிணத்தோர்பிறப்பாய்சீர்ண சாங்கலத்தமரலுற்ருன்
விரிவில்சூழ்பனையின்காட்டில் வெஞ்சினப்பாந்தளானுன்.

(இ-ள்.) திரிகத்ததேசந்தன்னில் - திரிகத்தமென்னுந்தேசத்தினிடத்தில், தேசிகச்சைவனுனன் - சைவசமயத்துக்காசாரியனுனன், முருகர் சூழ் - வாசனைசூழ்ந்த, வேடரூரில் - வேடுவர்பட்டணத்தில், மூங்கிலாரணியமானுன் - மூங்கிற்காடானுன், சீர்ணசாங்கலத்து - சீரணமான சிறு காட்டில், அரிணத்தோர்பிறப்பாய் - ஒரு மான்பிறப்பாய், அமரலுற்ருன்- அமர்ந்திருந்தான், விரிவிற்சூழ் - விரிவாகச்சூழ்ந்திருக்கின்ற, பனையின் காட்டில் - தாலவனத்தில், வெஞ்சினம் - வெவ்விய கோபத்தையுடைய, பாந்தளானுன் - (மலைப்) பாம்பாகப் பிறந்தான்—எ-று.

(இ-ள.) திரிகத்தமென்னுந் தேசத்தினிடத்தில் சைவசம யத்துக் காசாரியனுனன். வாசனைசூழ்ந்த வேடுவர் பட்டணத்தில் மூங்கிற்காடானுன். சீரணமான சிறுகாட்டில் ஒருமான்பிறப்பாய் அமர்ந்திருந்தான். விரிவாகச் சூழ்ந்திருக்கின்ற தாலவனத்தில் வெவ்வியகோபத்தையுடைய மலைப்பாம்பாகப்பிறந்தான்-எ-ம். ()

இ து வு ம து.

இவ்வண்ணமநந்தயோனி யிழிவுயர்வாகவெய்தி
மைவண்ணமனத்தினுலே வாதனைவயத்தினின்று
மெய்வண்ணக்கங்கைமாட்டோர் மெய்முனிக்குமாரனுகி
பொய்வண்ணப்பொறிகளென்னும் புன்பகையறுத்துவென்று.

(இ-ள்.) இவ்வண்ணம் - இந்தப்பிரகாரம், அநந்தயோனி - (கான்கோ ழிமுதலாகிய) வளவில்லாத யோனிகளில், இழிவு - தாழ்வாகவும், உயர் வாக - மேலாகவு (மிருக்கின்ற சநநங்களை) , எய்தி - அடைந்து, மைவண் ணமனத்தினுல் - களங்கமுள்ள மனதினுல், வாதனைவயத்தினின்று - வா சனுவயத்தினின்று, மெய்வண்ணக்கங்கைமாட்டு - மெய்ம்மையான கங்கா

நதியின்பக்கத்தில், ஓர் மெய்ம்முனிக்குமாரனாகி - ஒப்பற்றவுண்மையான ரிஷிபுத்திரனாய், பொய்வண்ணம் - அசத்தியவடிவமான, பொறிகளென்னும் - இயந்திரியங்களென்கின்ற, புன்பகை - ஈனமாகிய சத்துருக்களை, அறுத்துவென்று - கெடுத்து வெற்றியடைந்து—எ-று.

(இ-ள.) இந்தப்பிரகாரம் கான்கோழி முதலாகிய வளவில்லாத யோனிகளில் தாழ்வாகவும், மேலாகவு மிருக்கின்ற சநநங்களை அடைந்து களங்கமுள்ள மனதினால் வாசனைவயத்தினின்று மெய்ம்மையான கங்காநதியின் பக்கத்தில் ஒப்பற்றவுண்மையான ரிஷிபுத்திரனாய் அசத்திய வடிவமான இந்திரியங்களென்கின்ற ஈனமாகிய சத்துருக்களைக்கெடுத்துவெற்றியடைந்து—எ-ம். (உகூ)

இதுவுமது.

வரிசடைபலவுங்கட்டி வாசுதேவப்பேர்மேவி
புரிதவத்தெண்ணூறாண்டு பொருந்தினனினதுமைந்தன்
றிரிதருகனவையொத்த சித்தத்தின்மயக்கந்தன்னைப்
பரிவுறக்காண்டியென்னிற் சிற்கணாற்பார்த்தியென்றான்.

(இ-ள்.) வரிசடைபலவுங்கட்டி - நீண்டசடைகண் முதலியவனைத்தையுந்தரித்து, வாசுதேவப்பேர்மேவி - வாசுதேவனென்னு நாமத்தைப் பொருந்தி, புரிதவம் - செய்யாநின்றதபசை, எண்ணூறாண்டு - எண்ணூறு வருடம், பொருந்தினன் - அமைந்திருந்தான், நினதுமைந்தன் - உனது புத்திரனாகியசுக்கிரன், திரிதரு - சுழலாநின்ற, கனவையொத்த - சொற்பனத்துக்கொப்பான, சித்தத்தின் - மனதிலுண்டான, மயக்கந்தன்னை - மயக்கத்தை, பரிவுற - அன்பாக, காண்டியென்னில் - பார்க்கவேண்டுவை யாயின், சிற்கணாற்பார்த்தியென்றான் - ஞானதிருஷ்டியினாற் பார்ப்பாயென்று காலன்சொன்னார்—எ-று.

(இ-ள.) நீண்டசடைகண் முதலியவனைத்தையுந்தரித்துவாசுதேவனென்னு நாமத்தைப் பொருந்தி செய்யாநின்ற தபசை எண்ணூறு வருடம் அமைந்திருந்தான். உனது புத்திரனாகிய சுக்கிரன் சுழலாநின்ற சொற்பனத்துக் கொப்பான மனதிலுண்டான மயக்கத்தை அன்பாகப் பார்க்கவேண்டுவையாயின் ஞானதிருஷ்டியினாற் பார்ப்பாயென்று காலன்சொன்னார்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) சுக்கிர னிறந்தெடுத்த வடிவங்களின் காரணத்தை ஞானதிருஷ்டியாற் பார்க்கும்படி காலன் போதித்ததாம். (ங௦)

---

வியாபகதிருஷ்டியாற்பார்த்து மயக்கந்தெளிந்துரைத்தல்.

காலனீதுரைப்பக்கேட்ட கலைமுனிஞானக்கண்ணாற்
பாலகன்செய்கையெல்லாம் பார்த்தனன்கணத்தினெல்லை

மேலதாமொளியாற்றோற்ற மாத்திரம்விளங்கிநல்ல
சீலமார்புந்தியென்னுந் தெளிந்தகண்ணடியிற்பாய்ந்த.

(இ-ள்.) காலனீதுரைப்ப - யமனுனவ னிதைச்சொல்ல, கேட்டகலை முனி - கேள்வியுற்ற கல்வியுள்ள பிருகுமுனியானவர், ஞானக்கண்ணல் - (தனது) ஞானதிருஷ்டியினுல், மேலதாமொளியால் - மேன்மையானஞானப்ரகாசத்தினுல், தோற்றமாத்திரம்-ப்ரதிபாமாத்திரமாக, விளங்கி-ப்ரகாசித்து, நல்ல சீலமார் - நல்லொழுக்கமுள்ள, புந்தியென்னும்-அறிவென்கின்ற, தெளிந்தகண்ணடியிற்பாய்ந்த - தெளிவுற்ற கண்ணடியிற் ப்ரதிபலித்ததாகிய, பாலகன் செய்கையெல்லாம் - (தனது) புத்திரனுடைய விருத்தாந்தங்க ளியாவையும், கணத்தினெல்லை - நொடியளவில், பார்த்தனன் - பார்த்தான்—எ-று.

(இ-ா.) யமனுனவனிதைச்சொல்ல கேள்வியுற்ற கல்வியுள்ள பிருகுமுனியானவர் தனது ஞானதிருஷ்டியினுல் மேன்மையான ஞானப்ரகாசத்தினுல் ப்ரதிபாமாத்திரமாக ப்ரகாசித்து நல்லொழுக்கமுள்ள அறிவென்கின்ற தெளிவுற்ற கண்ணடியாற் ப்ரதிபலித்ததாகிய தனது புத்திரனுடைய விருத்தாந்தங்க ளியாவையும் நொடியளவில் பார்த்தான்—என்பதாம். (ருக)

இதுவுமது.

வானதிக்கரையினின்று மந்தரச்சாரலிற்றன்
மேனியில்வந்துசார்ந்த மெய்ம்முனிவியந்துசால
வூனமில்காலன்றன்னை யொன்றலாவேண்டுகோளா
லானதோர்காதலில்லா வருமுனிபகர்வதானுன்.

(இ-ள்.) வானதிக்கரையினின்றும்-கங்காதீரத்தி லிருந்தும், மந்தரச்சாரலில் - மந்திரகிரிபக்கத்தில், தன்மேனியில் - தனதுசரீரத்தில், வந்து சார்ந்த-வந்து பொருந்திய, மெய்ம்முனி-உண்மையுள்ள பிருகுரிஷி, சால வியந்து-மிகவு மதிசயித்து, ஊனமில் காலன்றன்னை-குற்றமற்ற காலனை, ஒன்றலா வேண்டுகோளால் - பலவிதமாகியவேண்டுதலினுல், ஆனதோர் காதலில்லா - ஆகிய வோராசையு மில்லாத, அருமுனி-அரிதாகிய முனியானவர், பகர்வதானுன் - சொல்லத்தொடங்கினுர்—எ-று.

(இ-ா.) கங்காதீரத்தி லிருந்தும் மந்தரகிரிபக்கத்தில்தனது சரீரத்தில் வந்துபொருந்திய உண்மையுள்ள பிருகுரிஷிமிகவுமதிசயித்து குற்றமற்றகாலனை பலவிதமாகிய வேண்டுதலினுல் ஆகிய வோராசையுமில்லாத அரிதாகிய முனியானவர் சொல்லத்தொடங்கினுர்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) மனுேசங்கற்பவடிவத்தை யெதார்த்ததிருஷ்டியாற்பார்த்த தென்பதாம். (ருஉ)

## காலனைத் துதித்தல்.

முழுதுணர்தருமநீதி முதல்வனீகாலமூன்றும்
பழுதறத்தெரிதிநீயே பாலராய்ப்பரமஞான
மெழுதலிலிளைஞராகு மெம்மனோரென்றலோடுங்
கெழுதகையுலகைநக்குங் கேடறுநிலைமைக்காலன்.

(இ-ள்.) முழுதுணர்தரும்-சர்வஞ்ஞனாகியகாலனே, நீ-நீர், நீதிமுதல்வன் - நியதிக்கு முதன்மையானவன், நீயே-நீரொருவரே, காலமூன்றும்-திரிகாலங்களையும், பழுதறத்தெரிதி-தெளிவுடனறிவாய், எம்மனோர்-எம்போன்றவர்கள், பாலராய் - குழந்தைகளாய், பரமஞானம்-பிரமஞானமானது, எழுதலில் - ஓங்காத, இளைஞராகும்-இளையோர்களாவர், என்றலோடும் - என்று முனிசொன்னவளவில், கெழுதகை - உரிமையாகிய, உலகைநக்கும் - சகங்களைப்புசிக்கின்ற, கேடறு - நாசமில்லாத, நிலைமைக்காலன்-நிலைமையுள்ளயமனனவர்—எ-று.

(இ-ரை.) சர்வஞ்ஞனாகிய காலனே! நீர் நியதிக்கு முதன்மையானவன் நீரொருவரே. திரிகாலங்களையும் தெளிவுடனறிவாய். எம்போன்றவர்கள் குழந்தைகளாய் பிரமஞானமானது ஓங்காத இளையோர்களாவர் என்றுமுனிசொன்னவளவில் உரிமையாகிய சகங்களைப்புசிக்கின்ற நாசமில்லாத நிலைமையுள்ளயமனனவர்.

(இ-ர்.) காலனெதார்த்தவடிவத்தை முனிவனுணர்ந்தனனென்பதாம். (ந௩)

## காலன் சுக்கிரனிருக்குமிடத்திற்சென்று முனிவருக்கறிவித்தல்.

மாதவன்கையைப்பற்றி மந்தரக்கந்தரத்தின்
மீதகன்றமரராற்றை மேவினனிவரிலாங்கே
பேதமாம்வாசுதேவப் பெயரொடுமிருந்தசேயைக்
காதலான்முனிவன்கண்டான் காலனுமிதனைச்செய்தான்.

(இ-ள்.) மாதவன்கையைப்பற்றி-மகாதவமுள்ள பிருகுமுனிகரத்தைப்பிடித்துக்கொண்டு, மந்தரக்கந்தரத்தின் - மந்தரமலையின் குகையினின்றும், மீதகன்று - வெளியில்வந்து, அமரராற்றை மேவினன் - தேவநதியைப்பொருந்தி, இவரில் - இவர்களில், ஆங்கு-அவ்விடத்தில், பேதமாம் - வேறான, வாசுதேவப்பெயரொடும் - வாசுதேவ நாமத்துடன், இருந்த சேயை - இருந்த புத்திரனை, காதலான்முனிவன் கண்டான் - ஆசையினன் பிருகுரிஷிபார்த்தான், காலனுமிதனைச்செய்தான் - யமனு மிச்சங்கற்பத்தைச் செய்தார்—எ-று.

(இ-ளா.) மகாதவமுள்ள பிருகுமுனிகரத்தைப்பிடித்துக் கொண்டு மந்தர மலையின் குகையி னின்றும் வெளியில்வந்து தேவ நதியைப்பொருந்தி இவர்களில் அவ்விடத்தில் வேறானவாசுதேவ நாமத்துடன் இருந்தபுத்திரனை ஆசையினன் பிருகுரிஷிபார்த்தான். யமனு மிச்சங்கற்பத்தைச்செய்தார்—என்பதாம். (௩௪)

## காலனுன்வர் தங்களைக்காணச் சங்கற்பித்தல்.

இங்குற்றசமாதிநீங்கி யிவனெமைக்காண்கவென்று
சங்கற்பஞ்செய்தலோடுஞ் சமாதிவிட்டிவரைநோக்கி
வெங்குற்றமில்லாமைந்தன் பணிதலும்விரும்பியாருந்
துங்கத்தோரொருகன்மீது மூவருஞ்சூழ்ந்திருந்தார்.

(இ-ள்.) இங்குற்றசமாதிநீங்கி-இவ்விடத்திற் பொருந்திய சமாதியை விட்டு, இவன் - இந்தவாசுதேவன், எமைக்காண்கவென்று - எங்களைப்பார்க்கக்கடவனென்று, சங்கற்பஞ்செய்தலோடும் - (காலன்) சங்கற்பித்தமாத்திரத்தில், வெங்குற்றமில்லாமைந்தன் - கொடியகுற்றமில்லாத புத்திரனுனவாசுதேவன், சமாதிவிட்டிவரைநோக்கி - சமாதியைவிட்டிவர்களைப் பார்த்து, பணிதலும் - வணங்கவும், ஆருந்துங்கத்தோர் - மிகுந்தவுயர்வையுடையவர்களாகிய, மூவரும்-மூன்றுபேர்களும், விரும்பி-(ஒருவருக்கொருவர்) விருப்பமுற்று, ஒருகன்மீது - ஒருகல்லின்மேல், சூழ்ந்திருந்தார் - கூடியிருந்தார்கள்—எ-று.

(இ-ளா.) இவ்விடத்திற் பொருந்திய சமாதியைவிட்டு இந்த வாசுதேவன் எங்களைப் பார்க்கக்கடவனென்று காலன்சங்கற்பித்த மாத்திரத்தில் கொடிய குற்றமில்லாத புத்திரனுனவாசுதேவன் சமாதியைவிட் டிவர்களைப்பார்த்து வணங்கவும்மிகுந்த வுயர்வையுடையவர்களாகிய மூன்றுபேர்களும் ஒருவருக்கொருவர் விருப்பமுற்று ஒருகல்லின்மேல் கூடியிருந்தார்கள்—என்பதாம். (௩௫)

## வாசுதேவன் றுதித்தல்.

வாசுதேவப்பேர்மைந்தன் மற்றிவர்தம்மைநோக்கி
தேசுடையுமதுநல்ல தெரிசனப்பேற்றினலே
மாசறுதவத்தானூலான் மகங்களாற்றாத்தாற்போகா
வேசறுமோகந்தீர்ந்தே னிதிலமுதின்பஞ்செய்யா.

(இ-ள்.) வாசுதேவப்பேர் - வாசுதேவனென்னு நாமத்தையுடைய, மைந்தன் - புத்திரனுனவன், மற்றிவர் தம்மைநோக்கி - மற் (றிவ்) விருவர்களையும் பார்த்து, தேசுடையுமது-ப்ரகாசம்பொருந்திய வுங்களுடைய

நல்ல தரிசனப்பேற்றினல்-நற்றரிசனபலத்தினல், மாசறுதவத்தால்-களங்கமற்றதவத்தினலும், நூலால் - சாஸ்திரத்தினலும், மகங்களால் - யாகங்களினலும், தனத்தால் - திரவியங்களினலும், போகா - நீங்காத, ஏசுறு - குற்றம்பொருந்திய, மோகந்தீர்ந்தேன் - மயக்கநீங்கினேன், இதில்-இதைப்பார்க்கிலும், அமுதின்பஞ்செய்யா - அமுதவருடமின்பத்தைக் கொடுக்காது—எ-று.

(இ-ள.) வாசுதேவனென்னு நாமத்தையுடைய புத்திரனனவன் மற்றிவ்விருவர்களையும்பார்த்து ப்ரகாசம்பொருந்திய வுங்களுடைய நற்றரிசனபலத்தினல் களங்கமற்ற தவத்தினலும், சாஸ்திரத்தினலும், யாகங்களினலும், திரவியங்களினலும், நீங்காத குற்றம்பொருந்திய மயக்க நீங்கினேன், இதைப்பார்க்கிலும் அமுதவருட மின்பத்தைக் கொடுக்காது—என்பதாம். (ஙசு)

---

புத்திரனுக்கு ஞானம் வெளிப்படுத்துநிமித்தம் முனிவர் ஞானதிருஷ்டி வைத்தல்.

---

என்றுரைசெய்தோன்றன்னை யியன்முனியினிதுநோக்கி
நன்றுயர்ஞானஞ்சேர்க நவைதருமடமைதீர்க
வுன்றனக்கென்றலோடு மூனக்கண்ணிரண்டுமூடிப்
பொன்றலின்ஞானக்கண்ணுற் புராதனமெல்லாங்கண்டான்.

(இ-ள்.) என்று - (இப்படி) யென்று, உரைசெய்தோன்றன்னை-சொல்லிய வாசுதேவனை, இயன்முனி-இயல்பாகியபிருகுமுனி, இனிதுநோக்கி - இனிமையாகப்பார்த்து, உன்றனக்கு - உனக்கு, நன்றுயர் - இன்பம்பெருகும், ஞானஞ்சேர்க-ஞானமடையக்கடவது, நவைதருமடமைதீர்க - குற்றமுள்ள வஞ்ஞானந் தீரக்கடவது, என்றலோடும் - என்றனுக்கிரகிக்கவும், ஊனக்கண்ணிரண்டுமூடி-ஊனக்கண்ணிரண்டையு மூடிக்கொண்டு, பொன்றலின் ஞானக்கண்ணல் - நாசமற்றஞானதிருஷ்டியினல், புராதனமெல்லாங் கண்டான் - முன் நடந்தவைகளையெல்லாம் பார்த்தான்—எ-று.

(இ-ள.) இப்படியென்று சொல்லிய வாசுதேவனை இயல்பாகிய பிருகுமுனி இனிமையாகப்பார்த்து உனக்கு இன்பம்பெருகும். ஞானமடைக்கடவது. குற்றமுள்ள வஞ்ஞானந்தீரக்கடவது. என்றனுக்கிரகிக்கவும் ஊனக்கண்ணிரண்டையு மூடிக்கொண்டுநாசமற்ற ஞானதிருஷ்டியினல் முன் நடந்தவைகளையெல்லாம் பார்த்தான்—என்பதாம். (ஙஎ)

## சுக்கிரனுக்கு ஞான முதித்தல்.

*நீத்தனன்பிறவியெல்லா நிமிடத்தின்ஞானக்கண்ணாற்*
*பார்த்தபின்வியந்துசொல்வான் பகுதியாமிகுதிமோகங்*
*கோத்தஞாலங்களாகிக் கோரவெண்மனத்தினூடே*
*யாத்தமாய்வளராநின்ற தகோவகோவீதொன்றென்னே.*

(இ-ள்.) நிமிடத்தில் - ஒருநிமிஷத்தில், பிறவியெல்லாநீத்தனன் - சநநங்களனைத்தையுநீக்கினன், ஞானக்கண்ணால் - ஞானதிருஷ்டியினால், பார்த்தபின் - பார்த்தபின்பு, வியந்துசொல்வான்-அதிசயித்துரைப்பான், பகுதியாம் - பிரகிருதியான, மிகுதிமோகம் - மிகுந்தமோகமானது, கோத்தஞாலங்களாகி - மூடிய சகங்களாகி, கோரவெண்மனத்தினூடு - கோரமாகிய வெண்மனதினிடத்தில், ஆத்தமாய் வளராநின்றது - இஷ்டமாக வளருகின்றது, ஈதொன்று - இதுவொன்று, என்னவகோவகோ - என்னவதிசயமென்ன வதிசயம்—எ-று.

(இ-ரை.) ஒருநிமிஷத்தில் சநநங்களனைத்தையு நீக்கினன். ஞானதிருஷ்டியினால் பார்த்தபின்பு அதிசயித்துரைப்பான். பிரகிருதியான மிகுந்த மோகமானது மூடிய சகங்களாகி கோரமாகிய வெண்மனதினிடத்தில் இஷ்டமாகவளருகின்றது. இதுவொன்று என்னவதிசய மென்னவதிசயம்—என்பதாம். (நஅ)

## ஆத்மாவிலுண்டான மனோசங்கற்பத்தாலெடுத்த வடிவங்களை ஞானதிருஷ்டியாய் காண்டல்.

*கற்பனவனைத்துங்கற்றேன் காண்பனவனைத்துங்கண்டே*
*னுற்பவத்தநேககால முழன்றவெந்துயருந்தீர்ந்தே*
*னற்பயனறிவைப்பெற்றே னாமினியையவேகி*
*யெறபடர்மந்தரத்தி லிருக்கின்றவுடலைக்காண்பேம்.*

(இ-ள்.) கற்பனவனைத்தும்-அறியவேண்டுவனவெல்லாம், கற்றேன்-அறிந்தேன், காண்பனவனைத்துங்கண்டேன் - காணவேண்டுவன வெல்லாங்கண்டேன், உற்பவத்து - சநநத்தில், அநேககாலமுழன்ற - வெகுகாலஞ்சுழன்ற, வெந்துயருந்தீர்ந்தேன் - வெவ்விய துன்பமும் நீங்கினேன், நற்பயனறிவைப்பெற்றேன் - நற்ப்ரயோசனமாகிய வாத்மஞானத்தை யடைந்தேன், ஐய - ஐயனே, நாமினியேகி - நாமினிமேற்போய், மந்தரத்திலிருக்கின்ற - மந்தரமலையிலிருக்கின்ற, எற்படர் - என்புநெருங்கிய, உடலைக்காண்பேம் - சரீரத்தைப்பார்ப்போம்—எ-று.

(இ-ரை.) அறியவேண்டுவனவெல்லாம் அறிந்தேன். காணவேண்டுவனவெல்லாங் கண்டேன். சநநத்தில் வெகுகாலஞ்சுழன்ற

வெவ்வியதுன்பமும் நீங்கினேன். நற்ப்ரயோசனமாகியவாத்மஞானத்தையடைந்தேன் ஐயனே ! நாமினிமேற்போய்மந்தரமலையிலிருக்கின்ற என்பு நெருங்கிய சரீரத்தைப்பார்ப்போம்—எ-ம்.

இதுவுமது.

கருமமேயேதுவாகுங் காயகங்காளந்தன்னை
யிருகணுனோக்கியின்ப மெய்துவானினைந்தேனியாது
மொருசெயல்வேட்கையில்லை யொழிப்புறுசெய லுமில்லை
வருதிராலென்னவன்னுர் மந்தரங்கணத்திற்சேர்ந்தார்.

(இ-ள்.) கருமமேயேதுவாகும் - கருமமேகாரணமாகின்ற, காயகங்காளந்தன்னை - சரீரமாகிய வென்புவடிவத்தை, இருகணுனோக்கி - இரண்டு கண்களினுலும்பார்த்து, இன்பமெய்துவான் - சுகத்தை யடையும்பொருட்டு, நினைந்தேன் - சிந்தித்தவெனக்கு, யாது மொருசெயல் வேட்கையில்லை - யாதொருதொழிலிலும் விருப்புமின்று, ஒழிப்புறுசெயலுமில்லை- வெறுப்புமின்று, வருதிராலென்ன - வாருங்களென்று (வாசுதேவன்)சொல்ல, அன்னுர் - அம்மூவரும், மந்தரங்கணத்திற்சேர்ந்தார் - மந்தரகிரியில் க்ஷணத்தில் வந்து சேர்ந்தார்கள்—எ-று.

(இ-ரை.) கருமமே காரணமாகின்ற சரீரமாகிய வென்புவடிவத்தை இரண்டு கண்களினுலும் பார்த்து சுகத்தை யடையும் பொருட்டு சிந்தித்த வெனக்கு யாதொரு தொழிலிலும் விருப்பமின்று வெறுப்புமின்று, வாருங்களென்று வாசுதேவன் சொல்ல அம்மூவரும் மந்தரகிரியில் க்ஷணத்தில் வந்துசேர்ந்தார்கள் எ-ம்.

(இ-எ-க-ம்.) சுக்கிரன் தனது சங்கற்பத்தை நசிப்பித்து ஞானவடிவமாய் முன்னுள்ள சுக்கிரவடிவமெடுக்கப் பற்றின்றிச் சங்கற்பித்தனனென்பதாம். (சo)

## சரீரத்தின் சடத்தன்மையைப்பார்த் ததிசயித்தோதல்.

முந்துறுசகத்தினெல்லை தெளிதருமூவர்தாமும்
வந்துழிமுன்னைசென்ம மருவியவுடலைமைந்த
னந்தமின்மகிழ்வானோக்கி யருந்தவப்பிதாவைநோக்கி
யிந்தவன்கங்காளங்கொ லீன்றுநீவளர்த்ததென்றான்.

(இ-ள்.) முந்துறு - முதன்மையாகிய, சகத்தினெல்லை - சகத்தினுடையபிரமாணத்தை, தெளிதருமூவர்தாமும் - தெளிந்தமூவர்களும், வந்துழி - வந்தவிடத்தில், முன்னைசென்மம் - முன்பார்க்கவ சநநத்தில், மருவியவுடலை - பொருந்தியசரீரத்தை, மைந்தன் - புத்திரனுகிய வாசுதே

வன், அந்தமின் மகிழ்வால் - அளவில்லாத சந்தோடத்தினல், நோக்கி - பார்த்து, அருந்தவப்பிதாவைநோக்கி - அரியதவமுள்ள தந்தையைப்பார்த்து, இந்தவன்கங்காளங்கொல் - இந்த வலிமையான முழுவென்பையா, நீயீன்று - நீபெற்று, வளர்த்ததென்ருன் - வளர்த்ததென்றுகேட்டான்.

(இ-ை.) முதன்மையாகிய சகத்தினுடைய பிரமாணத்தை தெளிந்த மூவர்களும் வந்தவிடத்தில் முன்பார்க்கவசநநத்தில் பொருந்திய சரீரத்தை புத்திரனுகிய வாசுதேவன் அளவில்லாத சந்தோடத்தினல் பார்த்து அரிய தவமுள்ள தந்தையைப்பார்த்து இந்த வலிமையான முழுவென்பையா நீபெற்றுவளர்த்ததென்று கேட்டான்—என்பதாம். (சக)

அமன்ஸ்கபாவத்தைச் சடத்தின்மேல்வைத்துத்துதித்தல்.

பின்னருமுரைப்பானையை பெறலருஞ்சுகங்களாலே
முன்னநீவளர்த்தகாய மொய்துயரனைத்துமாறி
யின்னல்கூர்காதலையை மிதாகிதமெல்லாமின்றி
மன்னியசுகமதாகி மனமிறந்திருந்ததன்றே.

(இ-ள்.) பின்னருமுரைப்பான்-பின்பும் வாசுதேவன் சொல்லுவான், ஐய - (எனது) பிதாவே, பெறலருஞ்சுகங்களால் - பெருதற்கரியசுகங்களினுல், முன்ன நீவளர்த்தகாயம் - முன்பு நீவளர்த்த சரீரமானது, மொய்துயரனைத்துமாறி - நெருங்கின துன்ப மியாவு நீங்கி, இன்னல்கூர்-துன்பமிகுந்து, காதல் - ஆசையும், ஐயம் - சந்தேகமும், இதம் - இதமும், அகிதம் - அகிதமுமாகிய, எல்லாமின்றி - அனைத்துமில்லாமல், மன்னிய சுகமதாகி-நிலைபெற்ற வாநந்தமாய், மனமிறந்திருந்தது-மன நசித்திருந்தது.

(இ-ை) பின்பும் வாசுதேவன் சொல்லுவான் எனதுபிதாவே பெருதற்கரிய சுகங்களினுல் முன்பு நீர்வளர்த்த சரீரமானது நெருங்கின துன்பமியாவு நீங்கிதுன்பமிகுந்து ஆசையும், சந்தேகமும், இதமும், அகிதமுமாகிய அனைத்துமில்லாமல் நிலைபெற்ற வாநந்தமாய் மன நசித்திருந்தது—என்பதாம். (சஉ)

சுகாதீதத்தைச் சடத்தின்மேல்வைத் துரைத்தல்.

மனமிலாநிலையினன்றி மன்னுயிர்க்கின்பமுண்டோ
கனமுறுசுகசம்போகக் கடலிலேதிளைக்கலாகு
பனகபேரறிவுசாந்தமறிவுளோர்தாபநீங்கி
தனதுயர்நிலையாமிந்தத் தனியுடல்வாழ்ந்ததன்றே.

(இ-ள்.) மனமிலா நிலையினன்றி - மனமிறந்த நிலையை யல்லாமல், மன்னுயிர்க்கின்பமுண்டோ-மிகுந்தசீவர்களுக்குச் சுகமுண்டாமோ, கன முறுசுகசம்போகக்கடலில்-பேரானந்தானுபவமாகியசமுத்திரத்தில், திளைக்கலாகும்-முழுகப்பட்ட, அனகபேரறிவு - களங்கமற்றவியாபஞானத்துக்கும், சாந்தம்-உபசாந்தத்துக்கும், அறிவுளோர்-ஞானவான்கள், தாபநீங்கி-துன்ப நீங்கியிருக்கின்ற, தன துயர்நிலை - தனது மேலான வாத்ம நிச்சயத்துக்கும், ஆம் - ஒப்பாக, இந்தத்தனியுடல் - இத்தனிமையான சரீரமானது, வாழ்ந்தது - சுகத்தை யடைந்திருந்தது—எ-று.

(இ-ஙா.) மனமிறந்த நிலையை யல்லாமல் மிகுந்த சீவர்களுக்குச்சுகமுண்டாமோ பேரானந்தானுபவமாகிய சமுத்திரத்தில் முழுகப்பட்ட களங்கமற்ற வியாபஞானத்துக்கும், உபசாந்தத்துக்கும், ஞானவான்கள் துன்பநீங்கியிருக்கின்றதனது மேலான வாத்ம நிச்சயத்துக்கும், ஒப்பாக இத்தனிமையானசரீரமானது சுகத்தை யடைந்திருந்தது—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) சங்கற்பநாசத்திலுண்டான பிரமசுகத்தை யறிவித்ததாம். (சங)

---

## காலன் அசுராசாரியராகக்கடவதென்றனுக்கிரகித்தல்.

அருந்தவப்பயனாலிந்த வற்புதங்கண்டேனென்ன
விருந்தவக்காலனோக்கி யிவ்வுரையிகந்துமாற்றி
பொருந்தியவுடலின்மன்னர் புரிபுகுமதுபோற்புக்கு
திருந்தியவசுரர்க்கெல்லாந் தேசிகச்செய்கைசெய்வாய்.

(இ-ள்.) அருந்தவப்பயனால்-அரிய தபோபலத்தினால், இந்தவற்புதம்-இந்தவாச்சரியத்தை, கண்டேனென்ன - பார்த்தேனென்று வாசுதேவன் சொல்ல, இருந்த - (சமீபத்தி) லிருந்த, அக்காலனோக்கி-அந்தக்காலனானவர்பார்த்து, இவ்வுரை - இந்த வார்த்தையை, இகந்து மாற்றி - தடுத்து, பொருந்திய வுடலில் - அடுத்திருக்கின்ற விச்சரீரத்தில், மன்னர்புரி புகுமதுபோல் - அரசர்க (டனது) பட்டணத்திற் பிரவேசிப்பதுபோல, புக்கு-புகுந்து, அசுரர்க்கெல்லாம் - அவுணாக ளனைவர்க்கும், திருந்திய - திருத்தத்தை யுடைய, தேசிகச்செய்கை செய்வாய் - ஆசிரியக்கிரிகையைச்செய்வாய்—எ-று.

(இ-ஙா.) அரிய தபோபலத்தினால் இந்த வாச்சரியத்தைப் பார்த்தேனென்று வாசுதேவன் சொல்ல சமீபத்தி லிருந்த அந்தக் காலனானவர் பார்த்து இந்த வார்த்தையைத் தடுத்துஅடுத்திருக்கின்ற விச்சரீரத்தில் அரசர்கடனது பட்டணத்திற் பிரவேசிப்பது போலப்புகுந்து அவுணர்க ளனைவர்க்கும் திருத்தத்தையுடைய ஆசிரியக்கிரிகையைச் செய்வாய்—என்பதாம். (சச)

## சுக்கிரனது வடிவத்திற்புகுதல்.

என்றுசுக்கிரனையேவி யிவரிருவரையும்வாழ்த்தி
நின்றுழிமறைந்தான்கால னீத்தவர்மறுகிநின்றார்
பின்றையவாசுதேவப் பேருறுகருத்தைநீக்கி
வன்றகைவெள்ளிமுன்ன மருவியவுடலிற்புக்கான்.

(இ-ள்.) என்று - (இப்படி) யென்று, சுக்கிரனையேவி - சுக்கிராசாரியருக்காக்கியாபனஞ்செய்து, இவரிருவரையும்-இந்தப் பிருகுமுனியையுஞ் சுக்கிராசாரியரையும், வாழ்த்தி - ஆசீர்வாதஞ்செய்து, காலன் - காலனானவர், நின்றுழி-நின்றவிடத்தில், மறைந்தான்-மறைந்துபோனார், நீத்தவர்-(காலனைவிட்டுப்)பிரிந்தவர்கள், மறுகிநின்றார்-விசனமடைந்திருந்தார்கள், பின்றை - பின்பு, அவ்வாசுதேவப்பேருறு-அந்தவாசுதேவனென்னுநாமத்தையுடைய, கருத்தைநீக்கி-நினைவைத்தள்ளி, வன்றகைவெள்ளி - வலிய பெருமையையுடைய சுக்கிராசாரியரானவர், முன்னமருவிய-முன்பொருந்தியிருந்த, உடலிற்புக்கான் - சரீரத்திற்புகுந்தார்—எ-று.

(இ-சா.) இப்படி யென்றுசுக்கிராசாரியருக் காக்கியாபனஞ் செய்து இந்தப் பிருகுமுனியையுஞ் சுக்கிராசாரியரையும் ஆசீர்வாதஞ்செய்து காலனானவர் நின்றவிடத்தில் மறைந்துபோனார். காலனைவிட்டுப் பிரிந்தவர்கள் விசனமடைந்திருந்தார்கள். பின்பு அந்த வாசுதேவனென்னு நாமத்தை யுடைய நினைவைத்தள்ளி வலியபெருமையையுடையசுக்கிராசாரியரானவர். முன்பொருந்தியிருந்தசரீரத்திற் புகுந்தார்—என்பதாம். (சரு)

## சுக்கிராசாரியராக வெழுதல்.

வினையதுவயத்தினாலே வெள்ளிசேருடலந்தன்னைத்
தனைநிகர்பிருகுவேத மந்திரசலத்தாலாட்ட
நனைதலுநாடியெல்லா நயம்பெறப்பிராணன்றாங்கி
யனையவனெழுந்துதாதை யடிபணிந்தருகுநின்றான்.

(இ-ள்.) வினையது வயத்தினால் - விதியின் வசத்தினால், வெள்ளிசேருடலந்தன்னை - சுக்கிரனடைந்தசரீரத்தை, தனைநிகர்-தனக்குத்தானே சமானமாகிய, பிருகு-பிருகுமுனிவர், வேதமந்திர சலத்தாலாட்ட-கமண்டலத்திலுள்ள வேதமந்திர தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்விக்க, நனைதலும்-நனையவும், நாடியெல்லாம் - நரம்புகளனைத்தும், நயம்பெற - நயத்தையடைய, பிராணன்றாங்கி - பிராணனைத்தரித்து, அனையவனெழுந்து-அச்சுக்கிராசாரிய ரெழுந்து, தாதையடிபணிந்து - பிதாவின் பாதத்தை வணங்கி, அருகு நின்றான் - பக்கத்தினின்றான்—எ-று.

(இ-ரை.) விதியின் வசத்தினுல் சுக்கிரனடைந்த சரீரத்தை தனக்குத்தானேசமானமாகியபிருகுமுனிவர் கமண்டலத்திலுள்ள வேதமந்திர தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்விக்கநனையவும் நரம்புகளனைத்தும் நயத்தை யடைய பிராணனைத்தரித்து அச்சுக்கிராசாரிய ரெழுந்து பிதாவின்பாதத்தை வணங்கி பக்கத்தினின்ருன் ()

## சீவன்முத்தனுகச்சஞ்சரித்தல்.

பிருகுவுமைந்தன்ருனும் பிறங்குமந்தரத்திற்கானிற்
றிருகியசித்தமென்னுந் தீப்பகைநீரமாற்றி
வருதிரையிலாதநீர்போன் மாசறுநிலையில்வாழ்ந்தார்
கருணைமாமுகிலேயென்று கற்றுணர்வசிட்டன்சொன்னுன்.

(இ-ள்.) பிருகுவும்-பிதாவாகிய பிருகுமுனியும், மைந்தன்ருனும்-புத்திரனுகிய பர்க்கவமுனியும், பிறங்குமந்தரத்தின்கானில் - உயர்ந்த மந்தரமலையிலுள்ளவனத்தில், திருகிய சித்தமென்னும் - குற்றமாகியமனமென்கின்ற, தீப்பகை - தீமையானசத்துருவை, நீரமாற்றி-தீர்ப்பாகக்கெடுத்து, வருதிரையிலாதநீர்போல் - வருகின்ற வலையற்றசமுத்திரத்தைப்போல, மாசறுநிலையில்வாழ்ந்தார் - குற்றமற்ற சீவன்முத்தனிலையில் வாழ்ந்தார்கள், கருணைமாமுகிலேயென்று - கிருபைவடிவமான மகாமேகம்போன்றவரேயென்று, கற்றுணர்-கல்விஞானத்தையுடைய, வசிட்டன்சொன்னுன்-வசிட்டமுனியானவர்சொன்னர்—எ-று.

(இ-ரை.) பிதாவாகிய பிருகுமுனியும். புத்திரனுகிய பர்க்கவமுனியும், உயர்ந்த மந்தரமலையி லுள்ளவனத்தில்குற்றமாகிய மனமென்கின்ற தீமையான சத்துருவை தீர்ப்பாகக்கெடுத்துவருகின்ற வலையற்றசமுத்திரத்தைப்போல குற்றமற்ற சீவன்முத்தனிலையில் வாழ்ந்தார்கள். கிருபைவடிவமான மகாமேகம்போன்றவரே யென்று கல்விஞானத்தையுடைய வசிட்டமுனியானவர் சொன்னர்.

(இ-சு-க-ம்.) சுக்கிரன் அசுத்த சங்கற்பத்தை நீக்கிச் சுத்த சங்கற்பத்திலாசிரியத்தன்மையைச் செய்தன னென்பதாம். (சஎ)

சுக்கிரன்கதை முற்றிற்று.

ஆக கதை கரு-க்கு கவிதை ருசுரு.

# தாமவியாளகடர் கதை.

### அவதாரிகை.

முன்பு சகமாத்ம சங்கற்பமாய் விளங்கு மென்பதை யறிவித்து அச்சகம் ஆத்மானுசந்தான விவேகமின்றி யநாத்மானுசந்தானமாக விளங்கின் விருத்தியடையுமென்பதை யறிவிக்குநிமித்தந் தாமாதிகதையைச் சொல்லுகிறூர்.

---

### சத்துக்க ளனுபவவிலக்கணமறிவித்தல்.

மீண்டுரைசெய்வான்முற்றும் விசாரத்தோர்தொழிநீர்நெஞ்சோர்
நீண்டதோர்மனனம்விட்டோர் நிகழ்சுகவறிவையுள்ளோர்
பூண்டுளகாட்சிதன்னிற் போவபோய்க்கொள்வகொண்டோர்
காண்டகுதன்னைக்கண்டோர் காணுதோர்தனேக்காணுதோர்.

(இ-ள்.) மீண்டுரைசெய்வான் - வசிட்டமுனிபின்னுஞ்சொல்லுவார், முற்றும்விசாரத்தோர் - முழுதும்விசாரணையையுடைவர்களும், தொழிநீர் மலினவிருத்திநீங்கின, நெஞ்சோர் - மனமுடையவர்களும், நீண்டதோர் மனனம்விட்டோர் - மிகுந்த வொப்பற்ற சங்கற்பத்தை விடுத்தவர்களும், நிகழ் - ப்ரகாசிக்கின்ற, சுகவறிவையுள்ளோர் - ஆநந்தபோதத்தை யுடையவர்களும், பூண்டுள - (சங்கற்பத்தி) ஞற் றரித்திருக்கின்ற, காட்சிதன்னில் - திரிஸ்யவஸ்துவில், போவபோய் - போகவேண்டிய (வனுர்தசடதுக்கத்தைப்) போக்கி, கொள்ளகொண்டோர் - கொள்ளவேண்டிய (சச்சிதாநந்தஸ்வரூபத்தைக்) கொண்டவர்களும், காண்டகுதன்னைக்கண்டோர் - திருஷ்டாவான வாத்மஸ்வரூபத்தைக்கண்டவர்களும், காணுதோர்தனேக் காணுதோர் - அதிருஷ்டாவான வநாத்மஸ்வரூபத்தை காணுதவர்களும்.

(இ-ரை.) வசிட்டமுனி பின்னுஞ் சொல்லுவார். முழுதும் விசாரணையையுடையவர்களும் மலினவிருத்திநீங்கின மனமுடைவர்களும் மிகுந்தவொப்பற்றசங்கற்பத்தை விடுத்தவர்களும்ப்ரகாசிக்கின்றஆநந்தபோதத்தையுடையவர்களும் சங்கற்பத்திஞற் றரித்திருக்கின்ற திரிஸ்யவஸ்துவில் போகவேண்டியவனுர்தசடதுக்கத்தைப்போக்கி கொள்ளவேண்டிய சச்சிதாநந்தஸ்வரூபத்தைக் கொண்டவர்களும், திருஷ்டாவான வாத்மஸ்வரூபத்தைக்கண்டவர்களும், அதிருஷ்டாவானவநாத்மஸ்வரூபத்தை காணுதவர்களும்.

இதுவுமது.

சீவனுயிருந்துகாணுஞ் சிற்பரதத்துவத்தே
மேவியநனவையுற்ஞேர் வெம்பவமோகமார்க்கத்
தோவலில்சுழுத்தியுற்ஞே ரோர்முதிர்நிராசையாலே
பாவனைநலனிற்றீங்கிற் பயிலும்வாதனையைமாய்த்தோர்.

(இ-ள்.) சீவனுயிருந்துகாணும்-சீவிக்கின்றவனுகவிருந்துபாராநின்ற, சிற்பர தத்துவத்து - ஞானமாகிய பரதத்துவத்தில், மேவிய-பொருந்திய, நனவையுற்ஞேர் - சாக்கிரத்தையடைந்தவர்களும், வெம்பவ மோகமார்க்கத்து - கொடியசநநமயக்கமென்னும்வழியில், ஓவலில் சுழுத்தியுற்ஞேர் - நீங்காத நித்திரையையடைந்தவர்களும், ஓர் முதிர்நிராசையால்-ஒப்பற்ற முதிர்ந்தபக்குவமான நிராசையினுல், பாவனைநலனில் - பாவிக்கப்பட்ட நன்மையிலும், தீங்கில் - தீமையிலும், பயிலும் வாதனையைமாய்த்தோர்-பழகினவாசனையைக் கெடுத்தவர்களும்—எ-று.

(இ-ரை.) சீவிக்கின்றவனுகவிருந்து பாராநின்ற ஞானமாகிய பரதத்துவத்தில் பொருந்திய சாக்கிரதை யடைந்தவர்களும் கொடியசநநமயக்கமென்னும் வழியில் நீங்காதநித்திரையையடைந்தவர்களும் ஒப்பற்ற முதிர்ந்த பக்குவமானநிராசையினுல் பாவிக்கப்பட்ட நன்மையிலும்தீமையிலும் பழகினவாசனையைக் கெடுத்தவர்களும்—என்பதாம். (உ)

இதுவுமது.

வாதனைவலையைச்செற்று மனப்பந்தமாற்றிவிட்டாற்
காதல்செய்தேற்றின்வித்தின் கலங்குநீர்தெளிவதென்ன
மேதகுவிஞ்ஞானத்தான் மெய்ம்மையாஞ்சுபாவந்தானே
யேதமற்ருெளிருமுன்ன மியம்பியவியல்பினேர்க்கே.

(இ-ள்.) வாதனைவலையைச்செற்று-வாசனையென்னும் வலையைக்கெடுத்து, மனப்பந்தம் - மனத்தினதுகட்டை, மாற்றிவிட்டால்-அறுத்துவிட்டால், காதல்செய் - ஆசைசெய்கின்ற, தேற்றின்வித்தின் - தேற்ருங்கொட்டையினுல், கலங்குநீர் - கலங்கியசலமானது, தெளிவதென்ன - தெளிவதுபோல, மேதகுவிஞ்ஞானத்தால் - மேன்மையாகத்தெளிந்த மெய்ஞ்ஞானத்தினுல், மெய்ம்மையாஞ்சுபாவந்தானே - உண்மையாகிய தற்சுபாவமே, முன்னமியம்பிய - முன்சொல்லிய, இயல்பினேர்க்கு - குணங்களையுடையவர்களுக்கு, ஏதமற்ருெளிரும்-துன்பமற்று (நிரதிசயாநந்தமாகப்) ப்ரகாசிக்கும்—எ-று.

(இ-ரை.) வாசனையென்னும் வலையைக்கெடுத்து மனத்தினது கட்டை அறுத்துவிட்டால் ஆசைசெய்கின்ற தேற்ருங்கொட்டையினுல் கலங்கியசலமானது தெளிவதுபோல மேன்மையாகத்

தெளிந்த மெய்ஞ்ஞானத்தினால் உண்மையாகிய தற்சுபாவமேமுன் சொல்லிய குணங்களை யுடைவர்களுக்குதுன்பமற்று நிரதிசயானந் தமாக ப்ரகாசிக்கும்—என்பதாம்.

(இ-ங-க-ம்.) மனோநாசமும் வாசனக்ஷயமும் வந்த வில்வனுபவத்தி னாற் றத்துவஞானம் விளங்குமென்பதாம். (௩)

## வாசனக்ஷய வுபாய மியாதெனின்.

சங்கஞ்செய் மயல்போய்த்தொந்தந் தவிர்ந்தொன்றைச்சார் வதின்றிச், சிங்கிசெய் கூட்டினின்றுஞ்சேணுறச் செல்லும்புட் போற், றுங்கமோகத்தினின்றுந் தூய்மனம் வெளியிற்போந்து, பங்கமாமையந்தீரப் பற்றெனுமனைத்துந்தீரும்.

(இ-ள்.) சங்கஞ்செய்மயல்போய் - விடயத்திற் சேருகின்ற விச்சை நீங்கி, தொந்தந்தவிர்ந்து - சுகதுக்கமான விரண்டுநீங்கி, ஒன்றைச்சார்வதின்றி - ஒன்றையும்பற்றாமல், சிங்கிசெய் - சிக்கஞ்செய்யும், கூட்டினின்றும், கூண்டிலிருந்தும், சேணுறச்செல்லும்புட்போல் - ஆகாயத்திற்செல்லுகின்ற பறவையைப்போல, துங்கமோகத்தினின்றும் - மகாமோகத்திலிருந்தும், தூய்மனம் - பரிசுத்தமாகிய மனமானது, வெளியிற்போந்து- வெளிப்பட்டு, பங்கமாம் - வேறுபாடாகிய, ஐயந்தீர - சந்தேகநீங்க, பற்றெனு மனைத்துந்தீரும் - ஆசையென்கின்ற யாவுநீங்கும்—எ-று.

(இ-ஸை.) விடயத்திற்சேருகின்ற விச்சை நீங்கி சுகதுக்கமானவிரண்டுநீங்கி ஒன்றையும்பற்றாமல் சிக்கஞ்செய்யும் கூண்டிலிருந்தும் ஆகாயத்திற்செல்லுகின்றபறவையைப்போலமகாமோகத்திலிருந்தும் பரிசுத்தமாகிய மனமானது வெளிப்பட்டு வேறுபாடாகிய சந்தேகநீங்க ஆசையென்கின்ற யாவுநீங்கும்—என்பதாம்.

(இ-ம்.) மனம் விடய சம்பந்த நீங்கித் தன்மயமாய்த் தனித்திருத்தலே வாசனக்ஷய மென்பதாம். (ச)

### அச்சகலத்தியாகமனதுக் கெப்படி யுண்டாதுமெனின்.

ஆனந்தவம்மனம்பூர்ணத்தை யடைந்துபூரணவெண்டிங்கள்
போன்றுறவிளங்குமிந்த நிலையிலேபொலிவுற்றோர்கண்
மூன்றுமூர்த்திகளாந்தேவ முதல்வர்க்குங்கருணைசெய்வ
ரூன்றியவிசாரத்தாலே யுயர்பொருளெய்தவேண்டும்.

(இ-ள்.) ஆன்றவம்மனம் - மாட்சிமையான வம்மனமானது, பூர்ணத்தையடைந்து - பரிபூரணத்தைப்பெற்று, பூரணவெண்டிங்கள் - களங்கமற்ற பூர்ணசந்திரனை, போன்றுற - ஒப்பாக, விளங்கும் - ப்ரகாசிக்கும், இந்தநிலையிலேபொலிவுற்றோர்கள்-இந்நிலையிற்ப்ரகாசித்தவர்கள், மூன்றுமூர்த்திகளாம் - மும்மூர்த்திகளாகிய, தேவமுதல்வர்க்கும்-தெய்வத்தன்மையின் முதன்மையானவர்களுக்கும், கருணைசெய்வர் - கிருபைசெய்வார்கள், ஊன்றிய - உறுதியாகிய, விசாரத்தால் - விசாரணையினால், உயர்பொருள் - மேன்மையாகிய பரமவஸ்துவை, எய்தவேண்டும் - அடையவேண்டும்—எ-று.

(இ-ரை.) மாட்சிமையான வம்மனமானது பரிபூரணத்தைப் பெற்று களங்கமற்ற பூர்ணசந்திரனை ஒப்பாக ப்ரகாசிக்கும் இந்நிலையிற் ப்ரகாசித்தவர்கள் மும்மூர்த்திகளாகிய தெய்வத்தன்மையின் முதன்மையானவர்களுக்கும் கிருபை செய்வார்கள். உறுதியாகிய விசாரணையினால் மேன்மையாகிய பரமவஸ்துவை அடையவேண்டும்—என்பதாம்.

(இ-ஃ.) விசாரணையால் விடயபற்று நீக்கம் வருமென்பதாம். (ளு)

---

## அவ்விசார மியாதெனின்.

உலகெதுநாமாரென்ன வுற்றுநின் றுணருமட்டுங்
கலகமார்பிறவிமோகங் கங்குல்போன்மூடிநிற்கு
மலகுறுமுலகுந்தாமு மழிவில்சிற்சோதியென்றே
சலனமில்கண்ணுற்கண்டோர் தத்துவநிலைமைகண்டோர்.

(இ-ள்.) உலகெது - இந்தச்சகமெப்படிப்பட்டது, நாமாரென்ன-நானெப்படிப்பட்டவனென்று, உற்றுநின்றுணருமட்டும் - உறுதியாய் விசாரித்தறிகின்றபரியம், கலகமார் பிறவிமோகம் - கலகநிறைந்த சநநமயக்கமானது, கங்குல்போல் - அந்தகாரத்தைப்போல, மூடிநிற்கும்-மூடிக்கொண்டிருக்கும், அலகுறுமுலகும் - கணக்கிலாதவுலகங்களும், தாமும் - ஆத்மாவும், அழிவில் - அழிவில்லாத, சிற்சோதியென்று - ஞானப்ரகாசமென்று, சலனமில்கண்ணுற்கண்டோர் - சலனமற்ற (ஞானக்) கண்ணினாற் பார்த்தவர்கள், தத்துவநிலைமை கண்டோர் - தத்துவநிச்சயத்தைத் தரிசித்தவர்கள்—எ-று.

(இ-ரை.) இந்தச் சக மெப்படிப்பட்டது நானெப்படிபபட்டவனென்று உறுதியாய் விசாரித்தறிகின்றபரியந்தம் கலகநிறைந்த சநந மயக்கமானது அந்தகாரத்தைப்போல மூடிக்கொண்டிருக்கும் கணக்கில்லாத வுலகங்களும் ஆத்மாவும்அழிவில்லாத ஞானப்ரகாச மென்று சலனமற்ற ஞானக்கண்ணினாற் பார்த்தவர்கள் தத்துவ நிச்சயத்தைத் தரிசித்தவர்கள்—என்பதாம். (சு)

## இ து வு ம து.

அகிலசத்தியுமாயொன்று யநந்தமாயறிவுதானே
சகலபாவனைக்குமுள்ளா மெனக்கண்டோர்தம்மைக்கண்டோர்
பகர்வுறுநானுமில்லை பிறிதிலைபரமேயுண்டென்
றிகமுறவுள்ளதில்ல திடையுறக்கண்டோர்கண்டோர்.

(இ-ள்.) அகிலசத்தியுமாய் - சகலசத்திகளாகியும், ஒன்றாய் - ஏகமாகியும், அநந்தமாய் - அளவில்லாததாகியு மிருக்கின்ற, அறிவுதானே - ஆத்மஞானமே, சகல பாவனைக்கும் - சமஸ்தபாவனைகளுக்கும், உள்ளாமென - ஆந்தரியமாமென்று, கண்டோர் - பார்த்தவர்கள், தம்மைக்கண்டோர் - ஆத்மஸ்வரூபத்தைத்தெரிசித்தவர்கள், பகர்வுறு - சொல்லப்பட்ட, நானுமில்லை - நானென்கின்ற ஞாதாவுமில்லை, பிறிதிலை - அதற்கு வேறாகிய சகமென்னு ஞேயமுமில்லை, பரமேயுண்டென்று - பிரமமேயுண்டாயிருக்கின்றதென்று, இகமுற - இவ்விடத்திற்பொருந்த, உள்ளது - சத்துக்கும், இல்லது - அசத்துக்கும், இடையுற - மத்தியிற்பொருந்த, கண்டோர்-பார்த்தவர்களே, கண்டோர் - ஆத்மாவைத்தரிசித்தவர்கள் —எ-று.

(இ-ரை.) சகலசத்திகளாகியும் ஏகமாகியும் அளவில்லாததாகியுமிருக்கின்ற ஆத்மஞானமே சஸ்மத பாவகைளுக்கும் ஆந்தரியமாமென்று பார்த்தவர்கள் ஆத்மஸ்வரூபத்தைத்தெரிசித்தவர்கள் சொல்லப்பட்ட நானென்கின்ற ஞாதாவுமில்லை, அதற்கு வேறாகிய சகமென்னு ஞேபமுமில்லை, பிரமமே யுண்டாயிருக்கின்றதென்று இவ்விடத்திற் பொருந்த சத்துக்கும் அசத்துக்கும் மத்தியிற் பொருந்தப் பார்த்தவர்களே ஆத்மாவைத் தரிசித்தவர்கள்.

(இ-ம்.) சித்தையுஞ்செடத்தையும் விசாரித்துச் சேடத்தை நீக்கிச்சித்தாயிருப்பதே ஆத்மவிசாரமென்பதாம். (எ)

---

## விடயசுக மனுபவிக்கலாமோவெனின்.

முயல்வறத்தாமேதோன்று மொய்திசைப்பொருள்கடம்மின்
மயலறச்செல்லுங்கண்போன் மாசறுநீரார்புந்தி
செயல்களிற்செல்லுமன்றே தெளிந்துபல்போகந்துய்த்தாற்
றுயர்செயாதறிந்துசேர்ந்தாற் சோரருந்தோழராவார்.

(இ-ள்.) முயல்வற - முயற்சியில்லாமல், தாமேதோன்றும் - தானே தோற்றுகின்ற, மொய்திசைப்பொருள்கடம்மில் - நெருங்கிய திக்குகளிலுள்ள விடயவஸ்துக்களில், மயலற - இச்சையில்லாமல், செல்லுங்கண்

போல் - செல்கின்றதிருஷ்டியைப்போல, மாசறு நீரார் - களங்கமற்ற பிரமவித்துக்களுடைய, புந்தி - புத்தியானது, செயல்களிற்செல்லும் - (நிகழ்காலத்திலுள்ள) தொழில்களிற்செல்லுமென்று, தெளிந்து - தெளிவுற்று, பல்போகந்துய்த்தால் - பலபோகங்களைப்புசித்தால், துயர்செயாது - அஃது துன்பஞ்செய்யாது, அறிந்துசேர்ந்தால் - தெரிந்துசேரின், சோரருந்தோழராவார் - திருடரு நட்பாவர்—எ-று.

(இ-ள.) முயற்சியில்லாமல் தானே தோற்றுகின்ற நெருங்கிய திக்குகளிலுள்ள விடய வஸ்துக்களில் இச்சையில்லாமல் செல்கின்ற திருஷ்டியைப்போல களங்கமற்ற பிரமவித்துக்களுடைய புத்தியானது நிகழ்காலத்திலுள்ள தொழில்களிற்செல்லுமென்று தெளிவுற்று பலபோகங்களைப்புசித்தால்அஃது துன்பஞ்செய்யாது தெரிந்து சேரின் திருடரு நட்பாவர்—என்பதாம்.

(இ-ம்.) பிரமாநந்தவிலாசமே விடயாநந்தமென்றுணர்ந் தனுபவிக்கிலதுவே சகாயமென்பதாம். (அ)

## அங்ஙனம் பாராவிடி லென்ன வருமெனின்.

நெறியிடைவந்தோர்கூட்ட நெறிசெல்வோர்காணுநேர்போற்
செறிதருபோகமெல்லாஞ் சேதனர்காண்பரன்றே
யறிவினான்மனதைவென்றோ ரற்பமேபெரிதாய்க்காண்பர்
பிறகதுதுயராமென்றே பெரியனபோகம்வேண்டார்.

(இ-ள்.) நெறியிடைவந்தோர்கூட்டம் - மார்க்கமத்தியில்வந்த (கலியாணக்) கூட்டங்களை, நெறிசெல்வோர் - வழியினடப்பவர்கள், காணுநேர்போல் - காண்கின்ற தன்மையைப்போல, செறிதருபோகமெல்லாம் - மிகுந்தபோகவஸ்துக்க ளனைத்தையும், சேதனர் காண்பர் - அறிவுள்ளோர்பார்ப்பார்கள், அறிவினால் - (ஆத்ம) ஞானத்தினால், மனதை வென்றோர் - மனதைச்செயித்தவர்கள், அற்பம் பெரிதாய்க்காண்பர் - அற்ப(போகத்தை) ப் பெரிதாகப்பார்ப்பார்கள், பிறகது துயராமென்று - பின்பது துன்பமாமென்று (நினைத்து), பெரியனபோகம் வேண்டார் - மிகுந்த (விடய) போகத்தை விரும்பார்கள்—எ-று.

(இ-ள.) மார்க்கமத்தியில் வந்தகலியாணக்கூட்டங்களைவழியினடப்பவர்கள் காண்கின்ற தன்மையைப்போல மிகுந்தபோகவஸ்துக்க ளனைத்தையும் அறிவுள்ளோர் பார்ப்பார்கள். ஆத்மஞானத்தினால் மனதைச் செயித்தவர்கள் அற்ப போகத்தைப் பெரிதாகப் பார்ப்பார்கள். பின்பது துன்பமாமென்று நினைத்து மிகுந்த விடயபோகத்தை விரும்பார்கள்—என்பதாம்.

(இ-ம்.) ஆத்மதிருஷ்டியினின் றநாத்மாவைப் பற்றறப் பாராவிடிற் றுன்பம் வருமென்பதாம். (கூ)

## துன்பநீங்குநெறி யாதெனின்.

நலங்கியசிறைதீர்மன்ன னகர்மட்டுமகிழ்வுகூரு
மலங்கல்வேல்வெற்றிவேந்த னவனியுஞ்சிறிதென்றெண்ணுங்
கலங்குறுமனதைவெல்வோர் கைகையாற்கால்கள்காலா
விலங்குபற்பல்லாலங்க மியாவுமிப்படிமுன்சேர்க்க.

(இ-ள்.) நலங்கிய - வருத்தமுற்ற, சிறைதீர்மன்னன் - சிறைச்சாலையினின்று நீங்கினவரசன், நகரமட்டும் - (தனது) பட்டணவளவிலும், மகிழ்வுகூரும் - மகிழ்ச்சியடைவன், அலங்கல-(வெற்றி) மாலையையும், வேல்-வேலாயுதத்தையுந் (தரித்த,) வெற்றிவேந்தன் - செயம்பொருந்திய வரசனவன், அவனியும் - பூமி (முழுமை)யும், சிறிதென்றெண்ணும் - அற்பமென்றுநினைப்பன், கலங்குறு - கலக்கம்பொருந்திய, மனதைவெல்வோர்-மனதைச்செயிப்பவர்கள், கைகையால் - கரத்தைக்கரத்தினுலும், கால்கள் காலால் - கால்களைக் கால்களினுலும், இலங்குபற்பல்லால்-விளங்கிய பல்லைப்பல்லினுலும், அங்கமியாவும் - சரீரமுழுமையும், இப்படி முன்சேர்க்க - இப்படியே முன்சேர்க்கக்கடவது—எ-று.

(இ-ை) வருத்தமுற்ற சிறைச்சாலையினின்று நீங்கின வரசன் தனது பட்டணவளவிலும் மகிழ்ச்சியடைவன். வெற்றிமாலையையும் வேலாயுதத்தையுந்தரித்த செயம்பொருந்திய வரசனுனவன் பூமிமுழுமையும் அற்பமென்று நினைப்பன். கலக்கம்பொருந்திய மனதைச் செப்பவர்கள் கரத்தைக் கரத்தினுலும், கால்களைக் கால்களினுலும் விளங்கிய பல்லைப்பல்லினுலும் சரீரமுழுமையும் இப்படியே முன்சேர்க்கக்கடவது—என்பதாம். (கய)

இதுவுமது.

பகைமனம்வெற்றியல்லாற் பவக்கடல்வங்கமில்லை
வகைபடுமுலகிற்செல்வர் வரிசையோர்மறுவிலாதோர்
மிகையுயர்புருடகீர்த்தி மிக்கவரென்போருள்ளக்
குகையிடைத்தொழில்கணஞ்சார் கொடுமனப்பாம்பைக்கொன்ருர்

(இ-ள்.) பகை - சத்துருவாகிய, மனவெற்றியல்லால் - மனோசயமேயன்றி, பவக்கடல்-சநநசமுத்திரத்தைக் (கடந்துபோதற்கு), வங்கமில்லை-கப்பலின்று, உள்ளக்குகையிடை - இருதயப்புத்தினிடத்தில், தொழில்கணஞ்சார் - தொழில்களானவிடநிறைந்த, கொடுமனப்பாம்பை - பொல்

லாங்காகிய மனச்சற்பத்தை, கொன்றோரென்போர் - செயித்தோரென்ப வர்கள், வகைபடுமுலகிற்செல்வர் - வகையுள்ள (மோக்ஷ) வுலகத்திற்போ வார்கள், வரிசையோர் - நல்லொழுங்குள்ளவர்கள், மறுவிலாதோர் - குற் றமற்றவர்கள், மிகையுயர்புருடர் - மிகவு மேன்மையான புமான்கள், கீர்த் திமிக்கவர் - புகழ்மிகுந்தவர்கள்—எ-று.

**(இ-ரை.) சத்துருவாகிய மனோசயமேயன்றி சநநசமுத்திர த்தைக் கடந்துபோதற்கு கப்பலின்று. இருதயப்புத்தினிடத்தில் தொழில்களான விடநிறைந்த பொல்லாங்காகிய மனச்சற்பத்தை செயித்தோ ரென்பவர்கள் வகையுள்ளமோக்ஷவுலகத்திற் போவா ர்கள். நல்லொழுங்குள்ளவர்கள். குற்றமற்றவர்கள் மிகவு மேன் மையான புமான்கள். புகழ்மிகுந்தவர்கள்—என்பதாம்.**

(இ-உ-க-ம்.) மனோநிக்கிரகமே துன்பத்தை நீக்குதற் குபாயமென் பதாம். (கக)

## அம்மனோநாச மியாதினுல் வருமெனின்.

**மனமெனும்வினையைவென்றோர் மலரடிமுடிமேற்கொள்வா**
**மினநரகங்களென்னு மிராச்சியத்திருந்துவாழ்ந்த**
**முனமுறுபாவமென்னு மும்மதக்களிற்றினுலுங்**
**கனமயற்படைகளாலுங் கரணமாம்பகையைவெல்வாய்.**

(இ-ள்.) மனமெனும் வினையைவென்றோர் - மனமென்கின்ற பகை யைச்செயித்தவர்களது, மலரடிமுடிமேற்கொள்வாம் - தாமரைமலர்போ ன்ற பாதங்களைச் சிரசின்மேற் சூட்டுவாம், இனநரகங்களென்னும் - கூட் டமாகிய நகரங்களென்கின்ற, இராச்சியத்திருந்து - உலகத்திலிருந்து, வாழ்ந்த - சுகித்த, முனமுறுபாவமென்னும் - முன்னுள்ள பாவமென்கி ன்ற, மும்மதக்களிற்றினுலும் - (காமவெகுளிமயக்கமென்னு) மூன்று மத ங்களை யுடைய யானையினுனும், கனமயற்படைகளாலும் - பேராசையெ ன்னு மாயுதங்களினுனுங் (கெம்பீரமுடைய), கரணமாம்பகையை - இந் திரியமென்னுஞ் சத்துருக்களை, வெல்வாய் - செயஞ்செய்வாய்—எ-று.

**(இ-ரை.) மனமென்கின்ற பகையைச் செயித்தவர்களதுதாம ரைமலர்போன்ற பாதங்களைச் சிரசின்மேற் சூட்டுவாம். கூட்டமா கிய நகரங்களென்கின்ற உலகத்திலிருந்துசுகித்தமுன்னுள்ள பாவ மென்கின்ற காமவெகுளி மயக்கமென்னுமூன்று மதங்களையுடைய யானையினுனும் பேராசையென்னு மாயுதங்களினுனுங் கெம்பீரமு டைய இந்திரியமென்னுஞ் சத்துருக்களை செயஞ்செய்வாய்-எ-ம்.**

(இ-ம்.) இந்திரியநிக்கிரகத்தான் மனோநாசம் வருமென்பதாம். (கஉ)

அவ்விந்திரிய நிக்கிரக மியாதினுல் வருமெனின்.

துனிமனச்செருக்குமாய்த்து தொடர்பொறிப்பகையைவெல்லிற்
பனிபடுபதுமக்கான்போற் படர்ந்தவாதனைகண்மாளுந்
தனியறிவொன்றேயென்று சாதித்திம்மனம்வென்மட்டுங்
கனியிருள்செறியும்பேய்போற் கருத்தில்வாதனைவந்தெய்தா.

(இ-ள்.) துனிமனச்செருக்குமாய்த்து - துன்பமுள்ள மனவகங்காரத்தைக்கெடுத்து, தொடர்பொறிப்பகையை வெல்லில் - தொடராநின்ற விந்திரியங்களென்னுஞ் சத்துருக்களைவென்ருல், பனிப்படுபதுமக்கான்போல் - பனிதோய்ந்த தாமரைக்காட்டைப்போல, படர்ந்தவாதனைகண்மாளும் - விஸ்தாரமானவாசனைக ளுசமடையும், தனியறிவொன்றேயென்று - ஒப்பற்றஞானமேகமேயென்று, சாதித்து - சாதனைசெய்து, இம்மனம்வென்மட்டும் - இந்தமனதைச்செயிக்கின்றவளவும், கனியிருள்செறியும்பேய்போல் - பழுத்த விருட்டினிடத்தி னெருங்கியிருக்கின்ற பசாசைப்போல, கருத்தில்-மனதின்கண், வாதனைவந்தெய்தா - வாதனையானது வரமாட்டாது—எ-று.

(இ-ஸா.) துன்பமுள்ள மனவகங்காரத்தைக் கெடுத்துதொடராநின்ற விந்திரியங்க ளென்னுஞ் சத்துருக்களை வென்ருல் பனிதோய்ந்த தாமரைக்காட்டைப்போல விஸ்தாரமானவாசனைக ளுசமடையும் ஒப்பற்ற ஞானமேகமேயென்று சாதனைசெய்து இந்தமனதைச் செயிக்கின்றவளவும் பழுத்தவிருட்டினிடத்தி னெருங்கியிருக்கின்ற பசாசைப்போல மனதின்கண் வாதனையானது வரமாட்டாது—என்பதாம்.

இத்திருஷ்டாந்தம் விதிரேகமெனக்கொள்க. (இ-ம்.) விவேகத்தாற் பெறும் வாசனுத்தியாகத்தா லவ்விந்திரியத்தியாகம் வருமென்பதாம். ()

விவேகிகளுக்கு வாசனுத்தியாகப் வந்தமனதின் சகாயமியாதேனின்.

மந்திரியெனலாமுண்மை மருவுறும்விசாரத்தாலே
யிந்திரியங்களென்னு மிடர்பகையறுத்தலாலே
தந்திரியெனலாமிட்டஞ் சமைத்தலாலேவலாளா
நொந்திரிகிலாதவுள்ள நோக்கியவிவேகத்தோர்க்கே.

(இ-ள்.) நொந்திரிகிலாத - துன்பத்துடன் சுழலாத, உள்ளம் - மனமானது, நோக்கிய - (சகலத்தையுந் தனது ஸ்வரூபமாக)ப் பார்த்த, விவேகத்தோர்க்கு - ஞானிகளுக்கு, உண்மை மருவுறும் - தத்துவத்தை யடைகின்ற, விசாரத்தால் - விசாரணையினுல், மந்திரியெனலாம் - அமைச்சனென்று சொல்லப்படும், இந்திரியங்களென்னும் - இந்திரியங்களென்கின்ற,

இடற்பகையறுத்தலால் - துன்பமென்னுஞ் சத்துருவைக் கெடுத்ததினால், தந்திரி யெனலாம் - உபாயமுள்ள சாமந்தனென்று சொல்லப்படும், இட்டஞ் சமைத்தலால் - (தனக்) கிஷ்டமுள்ளவைகளைச் செய்கின்றதினால், ஏவலாளாம் - பரிசாரகனைச் சொல்லப்படும்—எ-று.

(இ-ள.) துன்பத்துடன் சுழலாத மனமானது சகலத்தையுந் தனது ஸ்வரூபமாகப்பார்த்த ஞானிகளுக்கு தத்துவத்தையடைகின்ற விசாரணையினால் அமைச்சனென்று சொல்லப்படும். இந்திரியங்களென்கின்ற துன்பமென்னுஞ் சத்துருவைக் கெடுத்ததினால் உபாயமுள்ள சாமந்தனென்றுசொல்லப்படும். தனக்கிஷ்டமுள்ளவைகளைச் செய்கின்றதினால் பரிசாரகனைச் சொல்லப்படும்—என்பதாம்.

(இ-ம்.) மனமானது ஆத்ம வரசனுக்கெதிரற்ற பிரமாநந்த முண்டாக்குநிமித்தம் விசாரஞ்செய்தலின் மந்திரியும் அகமுகப்பட்டிந்திரியங்களைக்கெடுத்தலிற்றந்திரியும் சின்னபின்னமான விடய ரசங்களைக் கிரிகித்த பின்னமான பிரமரசமாக்கி யூட்டிவித்தலின் ஏவலாளுமாகு மென்பதாம்.

இதுவுமது.

ஆலிக்குமின்பத்தாலே யன்புறுமனைவியாகும்
பாலிக்குமியல்பினாலே பாவனதந்தையாகுஞ்
சீலிக்குமுறுதியாலே தேடருநட்புமாகுந்
தூலிக்கும்வினைகளில்லாத் தூய்மனவிவேகத்தோர்க்கே.

(இ-ள்.) விவேகத்தோர்க்கு - விவேகிகளுக்கு, தூலிக்கும் வினைகளில்லா - பருத்ததொழில்களில்லாத, தூய்மனம் - பரிசுத்தமனமானது, ஆலிக்குமின்பத்தால் - களிக்கின்ற சுகத்தைக் கொடுப்பதினால், அன்புறுமனைவியாகும் - ஆசையுள்ள பாரியாளாகும், பாலிக்குமியல்பினால் - இரக்ஷிக்குந்தன்மையினால், பாவனதந்தையாகும் - பரிசுத்தமுள்ள பிதாவாகும், சீலிக்குமுறுதியால் - குணமுள்ளவிருப்பினால், தேடரு நட்புமாகும் - நாடற்கரிய நேயனுமாகும்—எ-று.

(இ-ள.) விவேகிகளுக்கு பருத்ததொழில்களில்லாத பரிசுத்தமனமானது களிக்கின்ற சுகத்தைக்கொடுப்பதினால் ஆசையுள்ள பாரியாளாகும். இரக்ஷிக்குந் தன்மையினால் பரிசுத்தமுள்ள பிதாவாகும். குணமுள்ள விருப்பினால் நாடற்கரிய நேயனுமாகும்.

(இ-ம்.) மனமானது ஆத்மாவை நீங்காதிருந்து நிருவாணசுகத்தைத் தருதலின் மனைவியும் விடயத்திற் செல்லுவதைத்தடுத்து பிரமத்திற் செலுத்துதலின் பிதாவும் உண்மையிற் றிரப்படுத்தலிற் சினேகிதனுமாகு மென்பதாம். (கரு)

இதுவுமது.

நல்லன நூல்களாலே நல்லனநெறியைநோக்கி
நல்லனதியானஞ்செய்து நல்லனுபவத்தைநண்ணி
நல்லனசித்திநல்கு நல்லதாய்த்தன்னைமாய்க்கு
நல்லதோர்தாதையாகி நல்லவர்க்குள்ளந்தானே.

(இ-ள்.) நல்லவர்க்கு-சத்துக்களுக்கு, உள்ளந்தான்-மனமானது, நல்லன நூல்களால் - நல்ல (வாத்மஞான) சாஸ்திரங்களினுல், நல்லனநெறியைநோக்கி - நன்மையான மார்க்கத்தைப்பார்த்து, நல்லனதியானஞ்செய்து - நன்மையான வாத்மத்தியானஞ்செய்து, நல்லனுபவத்தைநண்ணி - நன்மையான வனுபவத்தையடைந்து, நல்லதாய் - நன்மையாக, தன்னை மாய்க்கும்-தனதுருவத்தைக்கெடுக்கும், நல்லதோர்தாதையாகி-நல்லவொப்பற்ற பிதாவாகி, நல்லன சித்திநல்கும் - நல்ல (ஞான) சித்தியைத்தரும்.

(இ-ரை.) சத்துக்களுக்கு மனமானது நல்லவாத்மஞானசாஸ்திரங்களினுல் நன்மையான மார்கத்தைப்பார்த்து நன்மையான வாத்மத்தியானஞ்செய்து நன்மையான வனுபவத்தை யடைந்து நன்மையாக தன துருவத்தைக்கெடுக்கும். நல்லவொப்பற்றபிதாவாகி நல்ல ஞானசித்தியைத்தரும்—என்பதாம்.

(இ-ம்.) மனமானது புத்திரனுக் கிராசபோகத்தைக் கொடுத்திறக்கின்ற பிதாவைப்போல, ஆத்மாவுக் காநந்தநாட்டரசாங்கத்தைக் கொடுத்திறத்தலிற் பிதாவுமாமென்பதாம். (கசு)

இதுவுமது.

துணிவுறுதிடமாய்ச்சாலத் துகளறநோக்கியாதும்
பிணியறக்கண்டுஞானப் பேருணர்வுணர்த்தப்பட்டாற்
பணிவுறுமிதயந்தன்னிற் பழுதிறன்குணத்தினுலே
மணியெனவிளங்காநிற்கு மாசறுமுள்ளந்தானே.

(இ-ள்.) துணிவுறுதிடமாய் - தெளிவுள்ள ஸ்திரமாக, சாலத்துகளறநோக்கி - மிகவுங்குற்றமின்றிப்பார்த்து, யாதும் - எவ்வளவேனும், பிணியறக்கண்டு - தடையில்லாமற் பார்த்து, ஞானப்பேருணர்வு - பூரணஞானத்தை, உணர்த்தப்பட்டால்-போதிக்கப்பட்டால், பணிவுறுமிதயந்தன்னில் - சொல்லப்பட்ட விதயாம்பரத்தில், பழுதிறன்குணத்தினுல் - குற்றமற்ற தனது சுபாவத்தினுல், மாசறுமுள்ளந்தான்-களங்கமற்ற மனது, மணியென விளங்காநிற்கும் - இரத்தினம்போல ப்ரகாசிக்கும்—எ-று.

(இ-ரை.) தெளிவுள்ள ஸ்திரமாக மிகவும் குற்றமின்றிப்பார்த்து எவ்வளவேனும் தடையில்லாமற்பார்த்து பூரணஞானத்தை

போதிக்கப்பட்டால் சொல்லப்பட்ட விதயாம்பரத்தில் குற்றமற்ற தனது சுபாவத்தினுல் களங்கமற்ற மனது இரத்தினம்போல ப்ரகாசிக்கும்—என்பதாம்.

(இ-ம்.) மனமானதுஆத்மாவுக் கதன் ஞானமாகவிளங்குமென்பதாம்.

---

ஆயின் மனோகளங்க நீங்து முபாய மியாதெனின்.

---

மனமணிபேதச்சேற்றின் மறைந்தொருவருக்குந்தோன்ருக்
கனமுறுவிவேகநீராற் கழுவினுற்சித்திகாட்டும்
வினவுறுவிவேகவன்பான் மெய்ம்மையைமதியாற்கண்டு
சினமுறுபொறியைவென்று தீர்வரும்பிறவிதீர்வாய்.

(இ-ள்.) மனமணி - மனமென்னுமிரத்தினமானது, பேதச்சேற்றில்- வேறுபாடென்னு (மலின)வாசனையாகியகும்பியில், மறைந்து-மறைபட்டு, ஒருவருக்குந்தோன்ரு-ஒருவருக்குந் தோற்ருது, கனமுறு விவேகநீரால் - கனமானஞானசலத்தினுல், கழுவினுல்-சுத்திபண்ணினுல், சித்திகாட்டும்- (தனது ப்ரகாசமாகிய) மோக்ஷத்தைக்காட்டும், வினவுறுவிவேகவன்பால்- சொல்கின்ற விவேகவலிமையால், மெய்ம்மையை - எதார்தஞானத்தை, மதியாற்கண்டு- அறிவினுற்றரிசித்து, சினமுறு பொறியைவென்று - அகங்கரமுள்ள விந்திரியத்தைச் செயித்து, தீர்வரும்பிறவி தீர்வாய் - நீங்குதற்கரியசநநத்தை நீங்குவாய்—எ-று.

(இ-ா.) மனமென்னு மிரத்தினமானது வேறுபாடென்னு மலின வாசனையாகிய கும்பியில் மறைபட்டு ஒருவருக்குந்தோற்ருது கனமான ஞானசலத்தினுல் சுத்திபண்ணினுல்.தனது ப்ரகாசமாகிய மோக்ஷத்தைக்காட்டும். சொல்கின்ற விவேகவலிமையால் எதார்த்தஞானத்தை அறிவினுற் றரிசித்து அகங்காரமுள்ள விந்திரியத்தைச் செயித்து நீங்குதற்கரிய சநநத்தைநீங்குவாய்—எ-ம்.

(இ-ப்.) மனது விவேகஞானத்தான் மறைப்பு நீங்கிற் சுயமாய் விளங்குமென்பதாம். (கஅ)

அம்மனதோடுங்கூடிப் பந்தமாகாவேர் வெனின்.

---

இத்திறத்திவனுனென்றே யிறுகியவறுதிவீணு
மத்திறம்புந்தியாலே யழுத்தமாயகற்றிமற்ற
மெய்த்திறம்பற்றியோ மதினின்றுவிழைந்தசெய்வாய்
பொய்த்திறமனத்திேேனாடே புசித்தவைபந்தமாகா.

(இ-ள்.) இத்திறத்திவனுனென்று - இக்காரணத்தினு லிவனென்றும் நானென்றும், இறுகியவறுதி - திடமுள்ளநிச்சயம், வீணும் - விருதாவாம், அத்திறம் - அத்தன்மையை, புந்தியாலழுத்தமாயகற்றி-அறிவினுற்றிடமாகத்தள்ளி, மற்ற - (அதற்கு) வேருகிய, மெய்த்திறம்பற்றி - உள்ளகாரணத்தைப்பிடித்து, நீயாமதினின்று - உனதாத்மாவாகிய கற்பகத்திலிருந்து, விழைந்தசெய்வாய் - இச்சித்தபடி நடப்பாய், பொய்த்திறமனத்திேைடு - அமனஸ்க்கபாவத்தோடும், புசித்தவைபந்தமாகா - புசித்தவந்த வஸ்துக்கள் பந்தமாகா—எ-று.

**(இ-ா.) இக்காரணத்தினு லிவனென்றும், நானென்றும், திடமுள்ள நிச்சயம் விருதாவாம். அத்தன்மையை அறிவினுற்றிடமாகத்தள்ளி அதற்கு வேருகிய உள்ளகாரணத்தைப்பிடித்து உனதாத்மாவாகிய தற்பதத்திலிருந்து இச்சித்தபடி நடப்பாய். அமனஸ்க்க பாவத்தோடும் புசித்துவந்த வஸ்துக்கள் பந்தமாகா.**

(இ-ஃ.) மனமானது ஆத்மா ப்ரகாசமாதலா லஃதாத்மாநந்தமேயன்றி வேருகா தென்பதாம்.

## இவ்வனுபவம்வரும்பொருட்டு திருஷ்டாந்தங்கூறல்.

### வேறு.

**தாமனேடுவியாளகடாசுரர் சாருநீதியைநீயணுகாதொழி
வீமபாசதிடாசுரர்நீதியை மேவிவேதனைதீர்கெனவோதலு
நாமமேபகர்தானவராரென ஞானவீரன்வினவிடமாமுனி
யாமதோதிடவாதரமாகிய தேதுநீயதின்மேவெனவோதுவான்.**

(இ-ள்.) தாமனேடு - தாமனுடன், வியாளகடாசுரர் - வியாளன்கடனென்று சொல்லப்பட்டவசுரர்கள், சாருநீதியை - சார்ந்திருக்கின்றஞாயத்தை, நீ யணுகாதொழி - (இராமா) நீயடையாமல் விட்டுவிடு, வீமபாசதிடாசுரர் - வீமன்பாசன்றிடனென்னு மசுரர்களுடைய, நீதியைமேவி - ஞாயத்தைப்பொருந்தி, வேதனைதீர்கெனவோதலும் - துன்பந்தீரக்கடவாயென்று சொல்லவும், நாமமேபகர் - (இப்) பெயர்களாற் சொல்லப்பட்ட, தானவராரென - அசுராகள் யாவரென்று, ஞானவீரன் வினவிட-ஞானவீரனுகிய விராமன்கேட்க, மாமுனி - மகாரிஷியானவர், யாமதோதிட - நாமதைச்சொல்ல, ஆதரமாகியதேது - ஆசையாயிருக்கின்ற தெதுவோ, நீயதின்மேவென - நீ யதிற் பொருந்துவாயயன்று, ஓதுவான் - சொல்லுவான்—எ-று.

**(இ-ா.) தாமனுடன் வியாளன்கடனென்று சொல்லப்பட்ட வசுரர்கள் சார்ந்திருக்கின்ற ஞாயத்தை இராமா நீ யடையாமல் விட்டுவிடு. வீமன், பாசன், றிடனென்னு மசுரர்களுடைய ஞாயத்**

தைப்பொருந்தி துன்பந்தீரக் கடவாயென்று சொல்லவும், இப்பெயர்களாற் சொல்லப்பட்ட அசுரர்கள் யாவரென்று ஞானவீரனாகிய விராமன்கேட்க, மகாரிஷியானவர் நாமதைச்சொல்ல ஆசையாயிருக்கின்ற தெதுவோ நீ யதிற்பொருந்துவாயென்று சொல்லுவான்—என்பதாம். (உ0)

---

## சுராசுரரின் யுத்தச் சிறப்புரைத்தல்.

சஞ்சரித்துயர் பாதலமேவிய சம்பரப்பெயரா னொருதானவன், வஞ்சமுற்றிய மாயையில்வாழ்பவன் வன்படைக்கடலா லமரேசனை, யெஞ்சலித்திட வானவர்தாமுமே யிவன்சுழுத்தியி லாகியபோதினும், விஞ்சயம்பர மேவியபோதினும் வெம்பியெற்றினர் தானவர்மாளவே

(இ-ள்.) சஞ்சரித்து - சஞ்சாரஞ்செய்து, உயர்பாதலமேவிய - உயர்வாகிய பாதாளத்திற் பொருந்தியிருக்கின்ற, சம்பரப்பெயரான் - சம்பரனென்னு நாமத்தையுடையவனாகிய, ஒருதானவன் - ஓரசுரன், வஞ்சமுற்றிய - வஞ்சனைமுதிர்ந்த, மாயையில் வாழ்பவன் - மாயையிலே வாழப்பட்டவன், வன்படைக்கடலால் - வலியசேனாசமுத்திரத்தினால், அமரேசனை- தேவேந்திரனை, எஞ்சலித்திட - குறைவுசெய்ய, வானவர்தாமும்-தேவர்களும், இவன் சுழுத்தியிலாகியபோதினும் - இவனித்திரை யடைந்தபோதினும், விஞ்சயம்பரமேவியபோதினும் - மிகவுந் திசைகளி லடைந்தபோதினும், வெம்பி - (மிகவுங்) கோபித்து, தானவர் மாளவெற்றினர் - அசுரர்கள் கெடும்படி யடித்தார்கள்—எ-று.

(இ-ரை.) சஞ்சாரஞ்செய்து உயர்வாகிய பாதாளத்திற் பொருந்தியிருக்கின்ற சம்பரனென்னு நாமத்தை யுடையவனாகிய ஓரசுரன் வஞ்சனைமுதிர்ந்த மாயையிலே வாழப்பட்டவன். வலியசேனாசமுத்திரத்தினால் தேவேந்திரனை குறைவுசெய்ய தேவர்களும் இவனித்திரை யடைந்தபோதினும், மிகவுந் திசைகளி லடைந்தபோதினும், மிகவுங்கோபித்து அசுரர்கள் கெடும்படி யடித்தார்கள்—என்பதாம். (உக)

இதுவுமது.

ஆயவன்பை யறிந்துயர்சம்பர னுருவன்றுரு மன்றிறன் முண்டிக, னேயவிங்கிவர் தப்படைமுன்செல வேவினன் பெரிதங்கெவரும்பட, மோ[illegible] ண்டர டர்நன ரென்றனும் வேகவிஞ்சிய சம்பரன்வந்திட, மாயைவிஞ்சை நிறைந்தவனென்றெதிர் மாகர்நின்றிட வஞ்சியொதுங்கினர்.

(இ-ள்.) ஆயவன்மை - இப்படியான தேவர்க்கள் வல்லமையை, உயர் சம்பரன் - சிறந்த சம்பராசுரன், அறிந்து - தெரிந்து, ஆகுவன்றரு மன்றிற முண்டிகன் - ஆகுவனுந் துருமனும் பலத்தையுடைய முண்டிகனும், ஏயவிங்கிவர்தம் - பொருந்திய விவர்களுடைய, படைமுன்செல - சேனைகள் முன்னேபோக, ஏவினன் - அனுப்பினன், பெரிது - மிகவும், அங்கெவரும்பட - அவ்விடத்திலுள்ள யாவருமடிய, மேயவண்ட ரடார்தனரென்றலும் - பொருந்தியதேவர்கள் (சமயம்பார்த்து) ப் போர்செய்தார்களென்று சொல்லவும், வேகமிஞ்சிய - கோபமிகுந்த, சம்பரன்வந்திட - சம்பராசுரன் (தெய்வலோகம்) வர, மாயைவிஞ்சை - மாயாவித்தையில், நிறைந்தவனென்று - மிகுந்தவனென்று, எதிர் - அவன் முன்பு, மாகர் நின்றிடவஞ்சி - தேவர்கள்நிற்கப்பயந்து, ஒதுங்கினர் - ஒளித்தனர்—எ-று.

(இ-ை.) இப்படியான தேவர்க்கள் வல்லமையைச் சிறந்த சம்பராசுரன்தெரிந்து ஆகுவனுந் துருமனும், பலத்தையுடைய முண்டிகனும், பொருந்திய விவர்களுடைய சேனைகள் முன்னே போக அனுப்பினன். மிகவும் அவ்விடத்திலுள்ள யாவருமடிய பொருந்திய தேவர்கள்சமயம்பார்த்துப் போர்செய்தார்களென்று சொல்லவும், கோபமிகுந்த சம்பராசுரன் தெய்வலோகம்வர மாயா வித்தையில் மிகுந்தவனென்று அவன்முன்பு தேவர்கள் நிற்கப் பயந்து ஒளித்தனர்—என்பதாம். (உஉ)

இதுவுமது.

**மேருகந்தர மும்பரடைந்தனர் வீதியெங்கு மரம்பையர் நின்றழ, யாருமின்றிய விந்திரன்றன்பதி யீசன்வென்ற புரங்களெனும்படி, நேருமங்கி சொரிந்துதிரும்பின னீடகன்றுள வந்தணர்பின்றையு, மூருள்வந்தன ரென்றுபெரும்படை யோய்விலன்பெரி துந்தினன்விஞ்சையால்.**

(இ-ள்.) மேருகந்தரம் - மகாமேருவினுடைய குகையில், உம்பரடைந்தனர் - தேவர்களடைந்தார்கள், வீதியெங்கும் - வீதிகடோறும், அரம்பையர் நின்றழ - தெய்வப்பெண்கள் நின்றழும்படியாக, யாருமின்றிய - சூனியமாயிருக்கின்ற, இந்திரன்றன்பதி - தெய்வலோகத்தை, ஈசன்வென்ற - பரமேஸ்வரன்செயித்த, புரங்களெனும்படி - திரிபுரங்களென்று சொல்லும்படி, நேரும் - எரிக்கின்ற, அங்கிசொரிந்து திரும்பினன் - அக்கினியை வருஷித்துச் சம்பராசுரன் திரும்பினன், நீடகன்றுள-வெகுதூர நீங்கியிருந்த, அந்தணர் - தேவர்கள், பின்றையும் - மறுபடியும், ஊருள் வந்தனரென்று - வானகரில் வந்தனர்களென்று, பெரும்படை - மிகுந்த சேனைகளை, ஓய்விலன் - ஒழிவின்றி, விஞ்சையாற் பெரிதுந்தினன் - (மாயா) வித்தையான் மிகவுஞ் சம்பராசுர னனுப்பிக்கொண்டிருந்தான்—எ-று.

(இ-ள.) மகா மேருவினுடைய குகையில் தேவர்க ளடைந்தார்கள். வீதிகடோறும் தெய்வப்பெண்கள் நின்றழும்படியாக சூனியமாயிருக்கின்ற தெய்வலோகத்தை பரமேஸ்வரன் செயித்த திரிபுரங்களென்று சொல்லும்படி எரிக்கின்ற அக்கினியை வருஷித்துச் சம்பராசுரன் றிரும்பினன். வெகுதூர நீங்கியிருந்த தேவர்கள் மறுபடியும் வானகரில் வந்தனர்களென்று மிகுந்த சேனைகளை ஒழிவின்றி மாயாவித்தை யான்மிகவுஞ் சம்பராசுர னனுப்பிக்கொண்டிருந்தான்—என்பதாம். (உரு)

---

## தாமாதி யசுரரையுண்டாக்கின தறிவித்தல்.

ஆகுவதாகியதானவர்பற்றற வாதிதேவர்கண்மோதினர்மற்றது
தாபமாயசுரேசன்விதித்துள தாமனோடுவியாளகடப்பெயர்
மூவர்மாயையினால்வரலுற்றவர் மூரிமேருவுலாவுவதொப்பவர்
பாவனாவசவாதனையற்றவர் பாசமாமபிமானநினைப்பிலர்.

(இ-ள்.) ஆவதாகிய - இப்படியாவதாகிய, தானவர்பற்றற-அசுரர்கள் பற்றறும்படியாக, ஆதிதேவர்கண் மோதினர் - ஆதியான தேவர்களடித்தார்கள், மற்றதுதாபமாய் - திரும்பவதுவே மிகுந்த கோபமாய், அசுரேசன்விதித்துள - சம்பராசுரன் சிருஷ்டித்துள்ள, தாமனோடு வியாளகடப்பெயர் - தாமன்வியாளன் கடனென்றுசொல்லப்பட்ட நாமங்களையுடைய, மூவர் - இம்மூவர்கள், மாயையினால் வரலுற்றவர் - மாயையினால் வந்தவர்கள் மூரிமேரு - பலம்பொருந்திய மேருமலையானது, உலாவுவதொப்பவர் - சஞ்சரிப்பதற்குச் சமானமானவர்கள், பாவனாவச வாதனையற்றவர் - பாவிக்கப்பட்ட வாசனாவசமாகாதவர்கள், பாசமா மபிமான நினைப்பிலர் - இச் சர்வபிமான நினைவில்லாதவர்கள்—எ-று.

(இ-ள.) இப்படி யாவதாகிய அசுரர்கள் பற்றறும்படியாக ஆதியான தேவர்களடித்தார்கள். திரும்பவதுவே மிகுந்த கோபமாய் சம்பராசுரன் சிருஷ்டித்துள்ள தாமன், வியாளன், கடனென்று சொல்லப்பட்ட நாமங்களையுடைய இம்மூவர்கள்மாயையினால் வந்தவர்கள் பலம்பொருந்திய மேருமலையானது சஞ்சரிப்பதற்குச் சமானமானவர்கள். பாவிக்கப்பட்ட வாசனாவசமாகாதவர்கள். இச் சர்வபிமான நினைவில்லாதவர்கள்—என்பதாம். (உச)

### இதுவுமது.

சாதல்வாழ்தல் களிப்புறல்சோர்வுறற் றுமவாகைகொள் வெற்றிகடோல்விகள், போதன்மீட லெனத்தையுநாடலர் போர்செய்வோரை முருக்குவர்சேவல, மாதலாலிவர் பத்தலர்சேனையை யாசுகங்கொ டழிப்பழிப்புறூர், பாதலாசுரன் வெற்பினர்வேலையர் பாருளாரிவர் பிற்செலவேவினன்.

(இ-ள்.) சாதல்-இறத்தலும், வாழ்தல்-சீவித்தலும், களிப்புறல்-இன்பமடைதலும், சோர்வுறல்-வாட்டமடைதலும், தாமவாகைகொள்-வெற்றிமாலையைத்தரித்த, வெற்றிகள்-சயங்களும், தோள்விகள்-அவசயங்களும், போதல்- (சண்டைக்குப்) போகுதலும்,மீடல்- (அவர்களுக்கஞ்சித்) திரும்புதலுமாகிய, அனைத்தையும்-யாவையும், நாடலர்-அறியாதவர்கள், போர்செய்வோரை-யுத்தஞ்செய்பவர்களை, கேவலம்-முழுமையும், முருக்குவராதலால்-அழிப்பவர்களாதலினால், இவர்-இம்மூவர்களும், பற்றலர்சேனையை-சத்துருக்களுடைய சேனைகளை, ஆசுகங்கொடழிப்பர் - பாணப்ரயோகங்களாற் கெடுப்பார்கள், அழிப்புறுர் - (இவர்க) ளசமடையார்க (ளென்று லோசித்து,) பாதலாசுரன் - பாதாளத்தில் (வசிக்கின்ற) சம்பராசுரனானவன், வெற்பினர் - மலையிலுள்ள வசுரர்களையும், வேலையர் - சமுத்திரத்திலுள்ள வசுராகளையும், பாருளார் - பூமியிலுள்ள வசுரர்களையும், இவர் பிற்செல வேவினன் - இவர்களுக்குப் பலமாக வனுப்பினன்—எ-று.

(இ-ரை.) இறத்தலும், சீவித்தலும், இன்பமடைதலும், வாட்டமடைதலும், வெற்றிமாலையைததரித்த சயங்களும் அவசயங்களும், சண்டைக்குப் போகுதலும், அவர்களுக்கஞ்சித் திரும்புதலுமாகிய யாவையும் அறியாதவர்கள் யுத்தஞ்செய்பவர்களை முழுமையும் அழிப்பவர்களாதலினால் இம்மூவர்களும் சத்துருக்களுடைய சேனைகளை பாணப்ரயோகங்களாற் கெடுப்பார்கள். இவர்களசமடையார்களென் றுலோசித்து பாதாளத்தில் வசிக்கின்ற சம்பராசுரனனவன் மலையிலுள்ள வசுரர்களையும், சமுத்திரத்திலுள்ள வசுரர்களையும், பூமியிலுள்ள வசுரர்களையும் இவர்களுக்குப் பலமாக வனுப்பினன்—என்பதாம். (உரு)

## தொந்தயுத்த முரைத்தல்.

தானவாதிபன்விட்ட நெடும்படைதாள்களோடு கிரித்திரள் வந்தெனை, மீனவேலைபரப்பில் விரிந்தென மேவினர்கள் சிருட்டி முடிந்தென, வானநாடருமப்படிவந்தனர் வாயுவோடுநெருப்புமலைந்தென, வானசேனைகண் முட்டியுடன்றன வாதலான்மறுகற்பம் விளைந்ததே.

(இ-ள்.) தானவாதிபன் - சம்பராசுரன், விட்டநெடும்படை - அனுப்பிய மிகுந்த சேனைகளானவை, தாள்களோடு கிரித்தரள்வந்தென-கால்களுடன் மலைக்கூட்டங்கள் வந்ததுபோலவும், மீனவேலை - மச்சங்களையுடைய சமுத்திரமானது, பரப்பில்விரிந்தென - பூமியில்விரிந்தது போலவும், சிருட்டிமுடிந்தென - கற்பமுடிந்ததுபோலவும், மேவினர்கள்-வந்துபொருந்தினர்கள், வானநாடரும் - விண்ணுலகத்தாரும், அப்படி

வந்தனர் - அவ்வசுரர்களைப் போலவே வந்தார்கள், வாயுவோடு - வாயுவுடன், நெருப்புமலைந்தென - அக்கினிபொருதல்போல, ஆனசேனைகள் - (இவ்வித) மான விரண்டுசேனைகளும், முட்டியுடன்றன - (ஒன்றுக்கொன்) றெதிர்த்து யுத்தஞ்செய்தன, ஆதலால் - ஆகையால், மறுகம்பம் விளைந்தது - மறுகற்ப முண்டாயிற்று—எ-று.

(இ-ள.) சம்பராசுரன் அனுப்பிய மிகுந்த சேனைகளானவை கால்களுடன் மலைக்கூட்டங்கள் வந்ததுபோலவும், மகஷங்களையுடைய சமுத்திரமானது பூமியில் விரிந்தது போலவும், கற்பமுடிந்தது போலவும் வந்து பொருந்தினார்கள், விண்ணுலகத்தாரும் அவ்வசுரர்களைப்போலவே வந்தார்கள். வாயுவுடன் அக்கினி பொருதுதல்போல இவ்விதமான விரண்டு சேனைகளும் ஒன்றுக்கொன்றெதிர்த்து யுத்தஞ் செய்தன. ஆகையால் மறுகற்ப முண்டாயிற்று—என்பதாம்.

மறுகற்பம் விளைந்த தென்றதனால் இக்கற்ப முடிவுக்கும் மறுகற்ப முதலுக்கு மிடையிலுண்டான வழிவை யொத்தெனக் கொள்க. (௨௬)

இதுவுமது.

ஆயுதங்களெரிந்து நெருங்கிட வாகமெங்கும் விழுந்தன வெற்பன, மாயுமங்க முமிழ்குருதிக்கடன் மாதிரங்கட தும்பியலைந்தன, காயும்வஞ்ச ரடர்ந்துமுடுக்கினர் காதுமும்பர் தளர்ந்தோடவுற்றனர், சாயுமண்டர்கள் பின்றொடர் வுற்றனர் தாமனும்பிறருந்திசை முற்றுமே.

(இ-ள்.) ஆயுதங்கள் - ஆயுதங்களானவை, எரிந்து நெருங்கிட - அக்கினியைக்கக்கிக்கொண்டு சமீபத்தில்வர, ஆகம் - சரீரங்களானவை, எங்கும் - எவ்விடத்தும், வெற்பெனவிழுந்தது - மலைகளைப்போல (மடிந்து) விழுந்தன, மாயுமங்கம் - மாய்கின்ற சரீரங்கள், உமிழ்குருதிக்கடல்-சொரியாநின்ற விரத்த சமுத்திரத்தில், மாதிரங்கள் - மலைகள், ததும்பியலைந்தன - தத்தளித்தலைந்தன, காயும்வஞ்சர் - கோபிக்கின்ற வஞ்சராகியவசுரர்கள், அடர்ந்துமுடுக்கினர் - நெருங்கித் துரத்தினார்கள், காதுமும்பர் கொல்லப்படுகின்றதேவர்கள், தளர்ந்தோடவுற்றனர் - தளர்ந்தோடினார்கள், சாயுமண்டர்கள்பின் - ஓடாநின்ற தேவர்கள்பின், தாமனும்பிறரும் - தாமனுமற்றுமுள்ளவசுரர்களும், திசைமுற்றும் - திக்குகண் முழுதும், தொடர்வுற்றனர் - தேடினார்கள்—எ-று.

(இ-ள.) ஆயுதங்களானவை அக்கினியைக் கக்கிக்கொண்டு சமீபத்தில்வர சரீரங்களானவை எவ்விடத்தும் மலைகளைப்போல மடிந்து விழுந்தன. மாய்கின்ற சரீரங்கள் சொரியாநின்ற விரத்த சமுத்திரத்தில் மலைகள் தத்தளித்தலைந்தன. கோபிக்கின்ற வஞ்சராகிய வசுரர்கள் நெருங்கி துரத்தினார்கள். கொல்லப்படுகின்ற

தேவர்கள் தளர்ந்தோடினூர்கள். ஓடாநின்றதேவர்கள்பின்தாமனு மற்றுமுள்ள வசுரர்களும் திக்குகண்முழுதும் தேடினூர்கள். எ-ம்.

### தேவர்கள் பிரமனிடத்திற் சென்று முறையிடுதல்.

உம்பரோடி மறைந்தமைகண்டில ருந்துமூவரு நின்றுதிரும் பினர், சம்பராசுரன் முன்புறவந்தனர் சங்கவானவ ரென்செய லென்றுகோ, டம்புயாசனன்முன்புநடந்தன ரன்பிேனூடுபணிந்து புகன்றனர், வெம்புதீநிகர் சம்பரன்வஞ்சமும் வெங்கண்மூவர் தொடர்ந்து தொடர்ந்ததும்.

(இ-ள்.) உம்பரோடிமறைந்தமை - தேவர்களோடிமறைந்ததை, கண்டிலர் - காணுதவர்களாய், உந்துமூவரும் - உயர்வானமூவர்களும், நின்று திரும்பினர் - (தெய்வலோகத்தி) னின்றுதிரும்பி, சம்பராசுரன் - சம்பராசுரனுக்கு, முன்புறவந்தனர் - முன்பாகவந்தார்கள், சங்கவானவர் - கூட்டமாகிய தேவர்கள், என்செயலென்றுகோடி - என்னசெய்வதென்றெண்ணிக்கொண்டு, அம்புயாசனன் முன்பு -பதுமாசனனுனபிரமன்முன், நடந்தனர் - போய், அன்பினேடுபணிந்து - அன்புடன் வணங்கி, வெம்புதீநிகர் - சுடுகின்ற வக்கினிக் கொப்பான, சம்பரன்வஞ்சமும் - சம்பராசுரனது கொடுமையையும், வெங்கண்மூவர் - கொடிய கண்களையுடைய தாமவியாளகடர், தொடர்ந்துதொடர்ந்ததும் - தொடர்ந்து துரத்தினதையும், புகன்றனர் - சொன்னூர்கள்—எ-று.

(இ-ரை) தேவர்களோடி மறைந்ததைக் காணுதவர்களாய் உயர்வான மூவர்களும் தெய்வலோகத்தினின்று திரும்பி சம்பராசுரனுக்குமுன்பாக வந்தார்கள். கூட்டமாகியதேவர்கள் என்னசெய்வதெனறெண்ணிக்கொண்டு பதுமாசனனுனபிரமன் முன்போய் அன்புடன்வணங்கி சுடுகின்ற வக்கினிக்கொப்பான சம்பராசுரனது கொடுமையையும் கொடிய கண்களையுடைய தாமவியாளகடர் தொடர்ந்து துரத்தினதையும் சொன்னூர்கள்—என்பதாம். ()

### பிரமதேவன் றனவரைச் செயிக்கு முபாய முரைத்தல்.

வேறு.

கேட்டநான்முகனஞ்சலென் றிவ்வுரைகிளத்தா
னீட்டமாகியவருடமோ ராயிரமிறந்தால்
வாட்டுசம்பரன்போரிலே யசுரரைமகவான்
வீட்டுமவ்வளவுஞ் செயத்தக்கதுவிதிப்பாம்.

(இ-ள்.) கேட்டநான்முகன் - (இவைகளைக்) கேட்டபிரமா(சிந்தித்து) அஞ்சலென்று - பயப்படவேண்டாமென்று, இவ்வுரைகிளத்தான் - இந்த வாக்கியத்தைச் சொன்னார், ஈட்டமாகிய - கூட்டமாயிருக்கின்ற, வருடமோராயிரமிறந்தால் - ஆயிரம்வருடஞ்சென்றால், வாட்டுசம்பரன்போரில் - மெலியச்செய்கின்ற சம்பராசுரன் யுத்தத்தில், அசுரரை-அசுரர்களை, மகவான் வீட்டும் - தேவேந்திரன் கொல்லுவான், அவ்வளவும் - அந்தமட்டும், செய்யத்தக்கதுவிதிப்பாம் - (நீங்கள்) செய்யத்தக்கதைச் சொல்லுவோம்—எ-று.

(இ-ரை.) இவைகளைக் கேட்ட பிரமா சிந்தித்து பயப்படவேண்டாமென்று இந்த வாக்கியத்தைச் சொன்னார். கூட்டமாயிருக்கின்ற ஆயிரம்வருடஞ் சென்றால் மெலிபச் செய்கின்ற சம்பராசுரன் யுத்தத்தில் அசுரர்களை தேவேந்திரன் கொல்லுவான். அந்தமட்டும் நீங்கள் செய்யத்தக்கதைச் சொல்லுவோம்-என்பதாம். ()

---

## வாசனையேறு முபாயத்தை யறிவித்தல்.

என்றதாமனும்வியாளனுங் கடனுமென்பவரைச்
சென்றழைத்தமர் செய்வதுதிரும்புவதாகத்
தொன்றுதொட்டுநீர் தொந்திக்கின்வாதனைதொடர்ந்து
நின்றகண்ணடிநிழலென மனததிலேநிற்கும்.

(இ-ள்.) என்ற - (இப்படி) யென்றுசொல்லிய, தாமனும்வியாளனுங் கடனுமென்பவரை - தாமன்வியாளன்கடனென்று சொல்லப்பட்டவர்களை, சென்றழைத்து - போய்கூப்பிட்டு, அமர்செய்வது - யுத்தஞ்செய்வதாகவும், திரும்புவதாக - மீள்வதாகவும், தொன்றுதொட்டு - துவக்கினமுதல், நீர்தொந்திக்கில் - நீங்கள் தொந்தமாக நடந்தால், வாதனைதொடர்ந்து - அகங்கார வாசனைதொடர்ந்து, நின்றகண்ணடி நிழலென - இருந்தகண்ணாடியின் சாயைப்போல, மனத்திலேநிற்கும் - (அவர்கள்) மனதிலுண்டாயிருக்கும்—எ-று.

(இ-ரை.) இப்படியென்று சொல்லிய தாமன், வியாளன் கடனென்று சொல்லப்பட்டவர்களை போய்க்கூப்பிட்டு யுத்தஞ்செய்வதாகவும் மீள்வதாகவும் துவக்கினமுதல் நீங்கள் தொந்தமாகநடந்தால் அகங்காரவாசனை தொடர்ந்து இருந்த கண்ணாடியின்சாயைப் போல அவர்கள் மனதிலுண்டாயிருக்கும்—என்பதாம். (௩0)

---

## உயிருக் கிச்சையே கூற்றெனல்.

நிலைபெறும்படிநானெனும் வாதனைநின்றால்
வலைபுகுந்தபுள்ளாமென மூவருமடிவர்
கொலைசெயற்கெளிதாசையே யுயிர்க்கெலாங்கூற்றாய்
தொலைவிறுன்பமாநிராசையே துன்பமிலின்பம்.

(இ-ள்.) நிலைபெறும்படி - நிலையை யடையும்படியாக, நானென்னும் வாதனைநின்றால் - நானென்கின்றவாதனை யிருந்தால், வலைபுகுந்தபுள்ளாமென - வலைக்கு ளகப்பட்ட பக்ஷியைப்போல, மூவருமடிவர் - மூன்றுபேர்களு மாள்வார்கள், கொலைசெயற்கெளிது - கொல்லுதற்கெளிதாகும், ஆசையே - இச்சையே, உயிர்க்கெல்லாங்கூற்றாய் - ஆத்மாக்களனைவர்க்குங் காலனாய், தொலைவிறுன்பமாம் - நீங்காததுக்கமாகும், நிராசையே - விராகமே, துன்பமிலின்பம் - துக்கமில்லாத வாநந்தமாம்—எ-று.

(இ-ஸ.) நிலையை யடையும்படியாக நானென்கின்ற வாதனை யிருந்தால் வலைக்கு ளகப்பட்ட பக்ஷியைப்போல மூன்றுபேர்களு மாள்வார்கள். கொல்லுதற் கெளிதாகும் இச்சையே ஆத்மாக்களனைவர்க்குங்காலனாய் நீங்காத துக்கமாகும். விராகமே துக்கமில்லாத வாநந்தமாம்—என்பதாம். (௩க)

## இச்சையானது யாவருக்கும் பந்தமாமெனல்

வாதனைப்பாசத்தாலே மன்னுயிரெல்லாங்கட்டுண்
டேதமாமந்தப்பாச மிறுகுமேலிடரைச்செய்யும்
வேதனையிலதாந்தீர நழுவுமேல்வேட்கையாலே
தீதிலோரனேகங்கற்றோர் தீரரென்னினுங்கட்டுண்பார்.

(இ-ள்.) வாதனைப்பாசத்தால் - வாதனையென்னுங்கயிற்றினால், மன்னுயிரெல்லாங்கட்டுண்டு - மிகுந்த பிராணன்க ளியாவுங் கட்டுப்பட்டு, ஏதமாம் - துன்பமடையும், அந்தப்பாசமிறுகுமேல் - அக்கயறான தழுந்துமானால், இடரைச்செய்யும் - துயரைக்கொடுக்கும், தீரநழுவுமேல் - பற்றறவிடுமானால், வேதனையிலதாம் - துன்பமில்லையாம், வேட்கையால்-ஆசையினால், தீதிலோர் - குற்றமற்றவர்களாயினும், அநேகங்கற்றோர் - சர்வஞ்ஞனர்களாயினும், தீரரென்னினும் - தீரர்களாயினும், கட்டுண்பார் - பந்தப்படுவார்கள்—எ-று.

(இ-ஸ.) வாதனை யென்னுங் கயிற்றினால் மிகுந்த பிராணன்க ளியாவுங் கட்டுப்பட்டு துன்பமடையும். அக்கயறான தழுந்துமானால் துயரைக்கொடுக்கும். பற்றறவிடுமானால் துன்பமில்லையாம்

ஆசையினால் குற்றமற்றவர்களாயினும் சர்வஞ்ஞனர்களாயினும் தீரர்களாயினும் பந்தப்படுவார்கள்—என்பதாம். (௩௨)

## வானவர் யுத்தத்துக் காரம்பித்தல்.

விலங்குறுசிங்கம்போல வேட்கையாலுயர்ந்தோர்தாழ்வர்
கலங்கன்மினென்றுவேதா கண்டுழிமறைந்தபின்னர்
புலன்கொளவனைத்துங்கேட்ட புங்கவர்பொன்னாட்டெய்தி
நிலங்கிழிந்தண்டம்பீற நெடியதுந்துமியோடார்த்தார்.

(இ-ள்.) விலங்குறு சிங்கம்போல - தளைபூண்ட கேசரியைப்போல, வேட்கையால் - ஆசையினால, உயர்ந்தோர் தாழ்வர் - மேன்மையி லுள்ள வாகள் தாழ்வை யடைவார்கள், கலங்கன்மினென்று - நீங்கள் கலங்காதிருங்களென்று, வேதா - பிரமாவானவர், கண்டுழி மறைந்தபின்னர் - பார்த்தவிடத்தின் மறைந்துபோனபின்பு, புலன்கொள - ஐம்புலனு நிறையும் படியாக, அனைத்துங்கேட்டபுங்கவர் - சகலத்தையுங்கேட்டதேவர்கள், பொன்னாட்டெய்தி - தெய்வலோகமடைந்து, நிலங்கிழிந்து-பூமிபிளந்து, அண்டம்பீற-அண்டங்கிழியும்படி, நெடியதுந்துமியோடார்த்தார்-பெரிய பேரிகையுடன் சத்தித்தார்கள்—எ-று.

(இ-ரை.) தளைபூண்ட கேசரியைப்போல ஆசையினால் மேன்மையிலுளளவர்கள் தாழ்வையடைவார்கள். நீங்கள்கலங்காதிருங்களென்றுபிரமாவானவர் பார்த்தவிடத்தின் மறைந்துபோனபின்பு ஐம்புலனு நிறையும்படியாக சகலத்தையுங் கேட்ட தேவர்கள் தெய்வலோகமடைந்து பூமிபிளந்து அண்டங்கிழியும்படி பெரிய பேரிகையுடன் சத்தித்தார்கள்—என்பதாம். (௩௩)

## அசுரருக்கு வாசனையேற்றல்.

ஆர்த்தனகேட்டவந்த வசுரர்பாதலத்தினின்றும்
வேர்த்தனர்பொங்கிவந்து வெம்படையமரர்மீது
தூர்த்தனர்காலம்போக்குஞ் சுரர்பொருதுடைந்துபோகிப்
பேர்த்தும்வந்தமர்செய்தோடிப்பின்னும்வந்ததனைச்செய்தார்.

(இ-ள்.) ஆர்த்தனகேட்ட - சத்தியைக்கேட்ட, அந்தவசுரர்-அவ்வவுணர்கள், பாதலத்தினின்றும் - பாதாளத்திலிருந்தும், வேர்த்தனர்பொங்கிவந்து - மிகுந்தவேகத்துடன் கோபித்துவந்து, வெம்படை - கொடிதாகிய வாயுதங்களை, அமரர்மீது தூர்த்தனர் - தேவர்களின்மேற்பொழிந்தார்கள், காலம்போக்கும் சுரர் - காலத்தைக்கழிக்கின்ற தேவர்கள், பொருதுடைந்துபோகி - யுத்தமுடைந்தோடிப்போய், பேர்த்தும் வந்து - மீள

வும் வந்து, அமர்செய்து - யுத்தஞ்செய்து, ஒடி - ஒடிப்போய், பின்னும் வந்து - திரும்பவும் வந்து, அதனைச்செய்தார் - அந்த யுத்தத்தைச் செய்தார்கள்—எ-று.

(இ-ள.) சத்தியைக்கேட்ட அவ்வவுணர்கள் பாதாளத்திலிருந்தும் மிகுந்தவேகத்துடன் கோபித்துவந்து கொடிதாகிய வாயுதங்களை தேவர்களின்மேற் பொழிந்தார்கள். காலத்தைக்கழிக்கின்ற தேவர்கள் யுத்தமுடைந்தோடிப்போய் மீளவும்வந்து யுத்தஞ்செய்து ஓடிப்போய் திரும்பவும்வந்து அந்த யுத்தத்தைச் செய்தார்கள்—என்பதாம். (ருச)

---

## மனது வாசனையிற் கட்டுப்படல்.

இவ்வகைபலவுபாய மிறந்தநீள்காலஞ்செய்ய
நைவருதிடமதான நானெனும்பழக்கத்தாலே
மெய்வரநானென்றுன்னும் வேட்கையைவிருப்பமுற்று
ரவ்வகையாலேயுள்ள மகப்பட்டுநின்றதன்றே.

(இ-ள்.) இவ்வகை - இந்தப்ரகாரம், பலவுபாயம் - நாநாவிதவுபாயங்களால், இறந்தநீள் காலஞ்செய்ய - கழிந்த வெகுகாலமாக யுத்தஞ்செய்ய, நைவருதிடமதான - கெடாநின்ற திரமாகிய, நானெனும் பழக்கத்தால்- நானென்கின்ற பழக்கத்தினல், மெய்வர நானென்றுன்னும் - உண்மையாக நானென்று நினைக்கின்ற, வேட்கையை-ஆசையை, விருப்பமுற்றார்- இச்சித்தார்கள், அவ்வகையாலே யுள்ளம் - அவ்விதத்தினுன் மனமானது, அகப்பட்டு நின்றது - பந்தப்பட்டிருந்தது—எ-று.

(இ-ள.) இந்தப்ரகாரம் நாநாவித வுபாயங்களால் கழிந்த வெகுகாலமாக யுத்தஞ்செய்ய கெடாநின்ற திரமாகிய நானென்கின்ற பழக்கத்தினுல் உண்மையாக நானென்று நினைக்கின்ற ஆசையை இச்சித்தார்கள். அவ்விதத்தினுன் மனமானது பந்தப்படிருந்தது—என்பதாம். (ருரு)

---

## தேகாபிமான முண்டாதல்.

பயம்வந்துபிடித்துக்கொள்ள படர்தருமோகங்கட்ட
வயர்வுறுமாயாபாசத் தழுந்தியென்செய்துமென்று
துயருறவிளைத்துக்காயந் துஞ்சுறுதிருக்குமாறு
மயலுறுதனத்தாலின்பம் வருவதுமெவ்வாறென்றார்.

(இ-ள்.) பயம்வந்துபிடித்துக்கொள்ள - அச்சம்வந்து பற்றிக்கொள்ளவும், படர்தருமோகங்கட்ட - மிகுந்த மயக்கந்தளைந்துகொள்ளவும், அயர்

வுறு மாயாபாசத்தழுந்தி - வருந்துகின்ற மாயாபாசத்தின் மூழ்கி, என் செய்துமென்னு - என்னசெய்வோமென்று, துயருறவிளைத்து - துன்பம் வரமெலிந்து, காயந்துஞ்சுரு திருக்குமாறு - தேகம் நாசமாகாமலிருக்கும் வண்ணமும், மயலுறு தனத்தால் - மயக்கம்பொருந்திய திரவியங்களி னுல், இன்பம்வருவதும் - சுகம்வருவதும், எவ்வாறென்ருர் - எவ்வண்ண மென் ருலோசித்தார்கள் —எ-று.

(இ-ளா.) அச்சம்வந்து பற்றிக்கொள்ளவும், மிகுந்த மயக்கந் தளேந்து கொள்ளவும், வருந்துகின்ற மாயாபாசத்தின்மூழ்கி என் னசெய்வோமென்று துன்பம்வர மெலிந்து தேகம்நாசமாகாமலிரு க்கும் வண்ணமும் மயக்கம்பொருந்திய திரவியங்களினுல் சுகம் வருவதும் எவ்வண்ணமென் ருலோசித்தார்கள்—என்பதாம். ()

## மனுமயக்கமாதல்.

சந்ததமிவ்வாறெண்ணத் தளேப்புண்டமனத்தராகி
யந்தமிறீரமின்றி யமரென்ருலறவுமஞ்சிப்
புந்திநொந்திறப்போமென்று புகலிடமெமக்கேதென்றுஞ்
சிந்தனையாலேகெட்ட சித்தத்தாற்றியங்கிச்சோர்ந்தார்.

(இ-ள்.) சந்ததமிவ்வாறெண்ண - எப்போதுமிந்தப்ரகார நினேக்க, தளேப்புண்ட மனத்தராகி - பந்தப்பட்டமனதையுடையவராய், அந்தமிறீரமின்றி - முடிவற்றதிடமில்லாமல், அமரென்ருலரவுமஞ்சி - போரென் ருன் மிகவும்பயந்து, புந்திநொந்து-மனநொந்து, இறப்போமென்று-நசிப் போமென்றும், புகலிடம் - ஆதரவானவிடம், எமக்கேதென்றும் - நமக்கெ துவென்றும், சிந்தனையால் - நினேவினுலாகிய, கெட்டசித்தத்தால் - தீய மனதினுல், தியங்கிச்சோர்ந்தார் - கலக்குற்றுவாடினுர்கள் —எ-று.

(இ-ளா.) எப்போது மிந்தப்ரகார நினேக்க பந்தப்பட்ட மன தையுடையவராய் முடிவற்றதிடமில்லாமல் போரென்ருன் மிகவும் பயந்து மனநொந்து நசிப்போமென்றும், ஆதரவானவிடம் நமக் கெதுவென்றும், நினேவினுலாகிய தீயமனதினுல் கலக்குற்று வாடி னுர்கள் —என்பதாம். (கூஎ)

## தானவரிறத்தல்.

வலியெலாமிழந்துமுன்னே வந்தொருபெயர்நின்ருலு
நலிவுறமாட்டாராகி நடுங்கினர்விறகுமாண்டாற்
பலிதருமவியையங்கி பருகிடவல்லதுண்டோ
வொலிதரவுரைத்தெனஞ்சி யோடினுர்பொன்றிப்போனுர்.

(இ-ள்.) வலியெலாமிழந்து - (தங்கள்) வல்லமைகளையெல்லாம்போக்கி, முன்னேவந்தொருபெயர் நின்றாலும் - (தங்கள்) முன்னொருவன் வந்துநின்றாலும், நலிவுறமாட்டாராகி - அழிவுசெய்யமாட்டாதவர்களாய், நடுங்கினர் - நடுக்கமடைந்தார்கள், விறகுமாண்டால் - சமித்தில்லாமற் போனால், பலிதருமவியை - ஆகுதிகொடுக்கின்ற தேவருணவை, அங்கி - அக்கினியானது, பருகிடவல்லதுண்டோ - புசிக்கும்படி வல்லமையுண்டாமோ, ஒலிதரவுரைத்தென் - சத்தமாகச் சொல்லியென்ன, அஞ்சியோடினார் - பயந்தோடி, பொன்றிப்போனார் - இறந்தனர்—எ-று.

(இ-ரை.) தங்கள் வல்லமைகளையெல்லாம்போக்கி தங்கள் முன்னொருவன்வந்து நின்றாலும், அழிவுசெய்யமாட்டாதவர்களாய் நடுக்கமடைந்தார்கள். சமித்தில்லாமற்போனால் ஆகுதிகொடுக்கின்ற தேவருணவை அக்கினியானது புசிக்கும்படி வல்லமையுண்டாமோ? சத்தமாகச் சொல்லியென்ன பயந்தோடி இறந்தனர்—என்பதாம். (ருஅ)

## அவிவேகத்தன்மை யுரைத்தல்.

தாமனும்வியாளன்றானுங் கடனுமுன்சரித்தமார்க்கந்
தோமறுமுணர்வுண்டாகச் சொல்லினம்விநோதத்தாலே
மாமனமவிவேகத்தை வரம்பறப்பழகிவிட்டாற்
பாமரப்பிறவித்துன்பம் பற்றறாதிந்தவண்ணம்.

(இ-ள்.) தாமனும் - தாமனென்பவனும், வியாளன்றானும் - வியாளனென்பவனும், கடனும் - கடனென்பவனும், முன்சரித்தமார்க்கம் - முன்னடந்தவழியை, தோமறுமுணர்வுண்டாக - குற்றமற்ற ஞானமுண்டாகும்படி, சொல்லினம் - உமக்குச்சொன்னோம், விநோதத்தால் - விளையாட்டினால், மாமனம் - மகாமனமானது, அவிவேகத்தை - அஞ்ஞானத்தில், வரம்பறப் பழகிவிட்டால் - தடையில்லாமற்பழகினால், பாமரப் பிறவித்துன்பம் - அறிவின்மையாகிய பவத்துன்பமானது, இந்தவண்ணம் - இப்படி, பற்றறாது - நீங்காது—எ-று.

(இ-ரை.) தாமனென்பவனும், வியாளனென்பவனும், கடனென்பவனும், முன்னடந்தவழியை குற்றமற்ற ஞானமுண்டாகும்படி உமக்குச்சொன்னோம். விளையாட்டினால் மகா மனமானது அஞ்ஞானத்தில் தடையில்லாமற் பழகினால் அறிவின்மையாகிய பவத்துன்பமானது இப்படி நீங்காது—என்பதாம்.

(இ-௨௦-க-ச்.) பிரமநிஷ்டையுள்ள சம்பராசுரனாலுண்டாக்கின தாமாதிமூவருந் தீரமுள்ளவராயிருந்தும் யானெனதென்னும் வாசனையாற் றேகாபிமான மடைதலி லறிவிழந்தார்களென்பதாம். (ருகூ)

## தாமாதிகள் பிரமத்திலுதித்த தெங்ஙனமெனின்.

இனையவர்நியாயநீயிங் கெய்தலையென்றலோடும்
மனையவர்பரத்தினின்று முதித்தவாறறியவேண்டு
முனைவுகூறென்றிராமன் மொழிதலுமுனிவன்சொல்வான்
றுனையுறுதாமன்முன்னோர் தோற்றமாத்திரமெய்யானோர்.

(இ-ள்.) இனையவர் நியாயம் - இந்தத் தாமாதி வசுரர்களுடைய நீதிகளை, நீயிங்கெய்தலை - ஸ்ரீராமா நீயிவ்விடத்திற் பொருந்தாதே, எனறலோடும் - என்று வசிட்டமுனிசொல்லவும், அனையவர் பரத்தினின்றும் - அவர்கள் பிரமத்திலிருந்தும், உதித்தவாறு - உண்டானதன்மையை, அறியவேண்டும் - தெரியவேண்டும், முனைவகூறென்று - முதன்மையான முனியே சொல்லுமென்று, இராமன் மொழிதலும் - இராமன் கேட்கவும், முனிசொல்வான் - வசிட்டமுனி சொல்லுவார், துனையுறு - அச்சமுள்ள, தாமன் முன்னோர் - தாமன் முதலானவர்கள், தோற்றமாத்திரம் - பரத்தினது (ப்ரதி) பா மாத்திரமே, மெய்யானோர் - சரீரமானவர்கள்—எ-று.

(இ-ா.) இந்தத் தாமாதி வசுரர்களுடைய நீதிகளை ஸ்ரீராமா நீயிவ்விடத்திற் பொருந்தாதேயென்று வசிட்டமுனி சொல்லவும், அவர்கள் பிரமத்திலிருந்தும் உண்டான தன்மையைத் தெரியவேண்டும். முதன்மையான முனியே சொல்லுமென்று இராமன் கேட்கவும், வசிட்டமுனி சொல்லுவார். அச்சமுள்ள தாமன்முதலானவர்கள் பரத்தினது ப்ரதிபாமாத்திரமே சரீரமானவர்கள்-எ-ம்.

(இ-ம்.) பிரமப்ரதிபாமாத்திரமாய் தாமாதிகடோற்றின ரென்பதாம்.

## ஆயின்யாமெப்படி விளங்குவமெனின்.

எதிருறுதோற்றமெய்யா யிவர்கள்போலிங்குயாமும்
விதியதாய்ப்புறத்திலொன்று மேவலம்வீரனேநின்
மதியினானெனலும்பொய்யே மதியினீயெனலும்பொய்யே
யதிர்குரற்றுமன்முன்னு மவர்களுண்டெனலும்பொய்யே.

(இ-ள்.) எதிருறு - எதிரேகாணப்பட்ட, தோற்றமெய்யாம் - ப்ரதிபையே சரீரமாயிருக்கின்ற, இவர்கள்போல் - இத் தாமாதிகளைப்போல, இங்கியாமும் - இவ்விடத்திலுள்ள நாமும், விதியதாய் - உண்மையாக, புறத்திலொன்றும் - (சிதாகாசத்திற்குப்) புறம்பாக வொன்றிலும், மேவலம் - பொருந்திலம், வீரனே - (சுத்த) வீரனே, நின்மதியில் - உனதறிவில், நானெனலும் பொய்யே - நானென்பது மசத்தியமே, நீயெனலும் பொய்யே - நீயென்பது மசத்தியமே, அதிர்குரற்றுமன்முன்னும்-தொனி

க்கின்ற கண்டத்தையுடைய தாமன்முதலிய, அவர்களுண்டெனலும் பொய்யே - அவர்களுண்டென்பது மசத்தியமே—எ-று.

(இ-ள.) எதிரே காணப்பட்ட ப்ரதிபையே சரீரமாயிருக்கின்ற இத்தாமாதிகளைப்போல இவ்விடத்திலுள்ள நாமும் உண்மையாக சிதாகாசத்திற்குப் புறம்பாகவொன்றிலும் பொருந்திலம். சுத்தவீரனே உனதறிவில் நானென்பது மசத்தியமே. நீயென்பது மசத்தியமே. தொனிக்கின்ற கண்டத்தையுடைய தாமன்முதலிய அவர்களுண்டென்பது மசத்தியமே.

(இ-ம்.) யாமு மப்பிரம ப்ரகாசமாய் விளங்குவமேயன்றி வேறன்றென்பதாம். (சக)

## சம்பரனுற்றுமாதிகளுண்டாயின கிரமமியாதெனின்.

பரத்தினதொளியேமெய்யாய் பாரித்தோர்சீவசத்தி
திரத்துறுசம்பரன்றன் றியானத்தாலசைந்துமூன்று
யுரத்தவுல்லாசமேவிற் றுரைத்தவித்திறத்தினாலே
வரத்துறுமவருநாமும் வாய்மையேயெங்குமில்லை.

(இ-ள்.) பரத்தினதொளியே - பிரமத்தினதுவிளக்கமே, மெய்யாய் பாரித்து - உருவமாய் வியாபித்திருக்கின்ற, ஓர் சீவசத்தி - ஒராத்ம சத்தியானது, திரத்துறுசம்பரன்றன் - திரமுள்ள சம்பராசுரனுடைய, தியானத்தாலசைந்து - நினைவினாற் சலனமடைந்து, மூன்றாய் - தாமாதி மூன்றுவடிவங்களாய், உரத்த வுல்லாசமேவிற்று - திரமான வுல்லாசத்தை யடைந்தது, உரைத்தவித்திரத்தினால் - சொல்லியவிக்குணத்தினால், வரத்துறுமவரும் - வராநின்றவவர்களும், நாமும் - யாமும், வாய்மையே யெங்குமில்லை - உண்மையாகவே யெவ்விடத்துமில்லை—எ-று.

(இ-ள.) பிரமத்தினது விளக்கமே உருவமாய் வியாபித்திருக்கின்ற ஒ ராத்மசத்தியானது திரமுள்ள சம்பராசுரனுடைய நினைவினாற் சலனமடைந்து தாமாதி மூன்றுவடிவங்களாய் திரமானவுல்லாசத்தையடைந்தது. சொல்லிய விக்குணத்தினால் வராநின்றவவர்களும்யாமும் முண்மையாகவே யெவ்விடத்துமில்லை—எ-ம்.

(இ-ம்.) சம்பர னதாத்மவுல்லாசமே யப்படிதோற்றினதென்பதாம்.()

## ஆயிற் சகமநித்தியந் தானே யெனின்.

அறிவதாயறிவேமெய்யா யமலமாயனைத்தாயாறிப்
பிறிவுறுவரவுபோக்கில் பிரமமேயுளதாமந்தச்

செறிபொருட்சத்திதோற்ற மாத்திரஞ்சகமாய்நிற்கும் [வாய்.
பொறிகள்பல்காட்சிபொய்யே பொருண்மெய்யேயென்றுவாழ்

(இ-ள்.) அறிவதாய் - (யாவையுஞ் சாட்சியா) யறிவதாகியும், அறிவே மெய்யாய் - போதாகாரமாகியும், அமலமாய் - நின்மலமாகியும், அனைத்தாம் - சமஸ்தமாகியும், ஆறி - உபசாந்தமாகியும், பிறிவுறு - வேற்றுமையான, வரவுபோக்கு - உதயாஸ்தமனமும், இல் - இல்லாததாயுமிருக்கின்ற, பிரமமேயுளதாம் - பிரமஸ்வரூபமே யுள்ளதாகும், அந்தச்செறிபொருள் - அப்பூரணவஸ்துவினுடைய, சத்தி - (சிற்) சத்தியினது, தோற்றமாத்திரஞ்சகமாநிற்கும் - உண்டாதலே யுலகாயிருக்கும், பொறிகள் - இந்திரியங்களா லறியப்பட்ட, பல்காட்சிபொய்யே - நாநாவிதமாகிய திரிஸ்யங்க ளசத்தியமே, பொருண்மெய்யேயென்று - பிரமவஸ்துவேசத்தியமென்று, வாழ்வாய் - சுகித்திருப்பாய்—எ-று.

(இ-ரை.) யாவையுஞ் சாட்சியா யறிவதாகியும், போதாகாரமாகியும், நின்மலமாகியும், சமஸ்தமாகியும், உபசாந்தமாகியும், வேற்றுமையான உதயாஸ்தமனமும் இல்லாததாகியுமிருக்கின்ற பிரமஸ்வரூபமேயுள்ளதாகும். அப்பூரணவஸ்துவினுடையசிற்சத்தியினது உண்டாதலே யுலகாயிருக்கும். இந்திரியங்களா லறியப்பட்ட நாநாவிதமாகிய திரிஸ்யங்க ளசத்தியமே பிரமவஸ்துவே சத்தியமென்று சுகித்திருப்பாய்—என்பதாம்.

(இ-பி.) சகலமும் பிரமப்ரகாசமாய் விளங்குதலிற் சகமித்தையே யென்பதாம். (சரு)

தாமவியாளகடர்கதை முற்றிற்று.

**ஆக கதை கசு-க்கு கவிதை சு௦சு.**

# வீமபாசதிடர் கதை.

**அவதாரிகை.**

*முன் சம்பராசுரன் பிரமத்தியானத்துதித்தும் விவேகமிருந்து மிந்த யுத்தத்தைத் தங்களனுபவ வுல்லாசமாய்ப்பாராமல் வேறுபட்டு யானெனதென்னும் பழக்கமேறத் தன்னை யிழந்ததைக்கூறி, எப்படிப்பட்ட விடறு வந்தவிடத்தும் வேறுபட்டு தேகத்தி லகம்பாவம் வாராமற் றனதுல்லாசமாய்ப் பார்க்குநிமித்தம் பீமாதியர்கதையை நிரூபிக்கிறார்.*

## விடயவிருப்பத்திற் பயனின்றெனல்.

இதுநமக்கிதுநமக்கென் றிரங்குறுபொல்லாவாழ்வா
லுதவியோர்சாம்பரேனு முறப்பெறுதுதாரமிக்குச்

சுதமுறுமுலகமெல்லாந் துரும்புபோற்காண்போர்தம்பால்
விதனங்களனைத்தும்வாரா மிருகங்களுலர்புற்றீண்டா.

(இ-ள்.) இதுநமக்கு - இப் (புத்திராதிக) ணமக்கென்றும், இதுநமக்கென்று - இப்பூமி (முதலானவைக) ணமக்கென்றும், இரங்குறுபொல்லா வாழ்வால் - வாடுகின்ற நிற்பாக்கியத்தினுல், உதவி - சகாயமானது, ஒர் சாம்பரேனு முறப்பெருது - ஒரு சாம்பலளவாவது கிடைக்காது, உதார மிக்கு - உதாரமிகுந்திருக்கின்ற (புருடர்கள்), சுதமுறு முலகமெல்லாம் - நாசமடைகின்ற சகங்களனைத்தும், துரும்புபோல் - திரணம்போல, காண்போர்தம்பால் - காண்பவர்களிடத்தில், மிருகங்கள் - மான்கள், உலர்புற்றீண்டா - வைக்கோலைத் தொடாததுபோல, விதனங்களனைத்தும்வாரா- துன்பங்களியாவும் தொடராவாம்—எ-று.

(இ-ா.) இப்புத்திராதிக ணமக்கென்றும், இப்பூமிமுதலானவைக ணமக்கென்றும், வாடுகின்ற நிற்பாக்கியத்தினுல் சகாயமானது ஒரு சாம்பலளவாவது கிடைக்காது. உதாரமிகுந்திருக்கின்ற புருடர்கள் நாசமடைகின்ற சகங்களனைத்தும் திரணம்போலகாண்பவர்களிடத்தில் மான்கள் வைக்கோலைத் தொடாததுபோல துன்பங்களியாவும் தொடராவாம்—என்பதாம்.

(இ-ம்.) பயனின்றிய சகத்தை யற்பமாகப்பார்க்கிற் சுகமுண்டாமென்பதாம். (க)

---

## உலகத்தையணுவாகப்பார்க்குந் திருஷ்டியாதெனின்.

உளத்துறசமத்காரஞ்சே ருண்மையையுணர்வோர்தம்மை
யளக்கரும்பிரமாண்டம்போ லட்டதிக்காளர்காப்பர்
கிளப்பருங்குணத்திலன்பாய் கேள்வியில்விருப்பாயுண்மை
விளக்குறுவருத்தமிக்கோர் நரர்நின்றோர்மிருகந்தானே.

(இ-ள்.) உளத்துற - உள்ளத்திற்பொருந்த, சமத்காரஞ்சேர் - சமத்காரசத்திசேர்ந்த, உண்மையை - பிரமத்தை, உணர்வோர்தம்மை - அறிபவர்களை, அளக்கரும் - அளவிடுதற்கரிய, பிரமாண்டம்போல் - பிரமாண்டத்தைப்போல, அட்டதிக்காளர்காப்பர் - எண்டிசைப்பாலர் காப்பார்கள், கிளப்பருங்குணத்தில் - சொல்லற்கரியகுணங்களில், அன்பாய்-அன்பாகியும், கேள்வியில்விருப்பாய் - விசாரணையில் விருப்பமாகியும், உண்மை விளக்குறு - தத்துவத்தை விளக்காநின்ற வஸ்துவில், வருத்தமிக்கோர் - பிரயாச மிகுந்தவர்களாகியு மிருக்கின்றவர்களே, நரர் - புருடர்களாவர், நின்றோர் - மற்றவர்கள், மிருகந்தான் - விலங்குகளாவர்—எ-று.

(இ-ள.) உள்ளத்திற்பொருந்த சமத்கார சத்திசேர்ந்த பிரமத்தை அறிபவர்களே அளவிடுதற்கரிய பிரமாண்டத்தைப்போல எண்டிசைப்பாலர் காப்பார்கள். சொல்லற்கரிய குணங்களில் அன்பாகியும், விசாரணையில் விருப்பமாகியும், தத்துவத்தை விளக்கா நின்ற வஸ்துவில் பிரயாச மிகுந்தவர்களாகியு மிருக்கின்றவர்களே புருடர்களாவர். மற்றவர்கள் விலங்குகளாவர்—என்பதாம்.

(இ-ம்.) தத்துவத்தையறிகின்ற முயற்சியாற் சகமற்பமாகத் தோற்று மென்பதாம. (உ)

## உண்மையையுணருமுணர்ச்சியாதிஞலுண்டாகுமெனின்.

செயலருந்தயருற்ருலுஞ் செயத்தகாச்செயல்களாகா
வியல்பலாவழியாலுண்ண விராகுவையமுதங்கொன்ற
தயலெலாம்வசமாயாபத் தனைத்தும்போயென்றுநன்ரு
முயலுநற்குணங்களாலே மொய்புகழெய்திஞேர்க்கே.

(இ-ள்.) செயலருந் துயருற்ருலும் - செய்தற்கரிய துன்பமடைந்தாலும், செயத்தகா - செய்யக்கூடாத, செயல்களாகா - தொழில்களைச் செய்யக்கூடாது, இயல்பலாவழியால்-ஒழுங்கல்லாத மார்க்கத்திஞல், உண்ண-புசிக்க, இராகுவை - இராகுவென்பவனை, அமுதங்கொன்றது - அமுதமானது கொலைசெய்தது, முயலு நற்குணங்களால் - முயற்சிக்கின்ற சற்குணங்களிஞல், மொய்புகழ் - மிகுந்தகீர்த்தியை, எய்திஞேர்க்கு - அடைந்த சத்துக்களுக்கு, அயலெலாம் - வசமல்லாதவனைத்தும், வசமாய் - வசமாகி, ஆபத்தனைத்தும்போய் - ஆபத்துக்களென்றுசொல்லப்பட்ட சகலமு நீங்கி, என்று நன்ரும்-எப்பொழுது (மளவற்ற) சம்பத்துண்டாம்—எ-று.

(இ-ள.) செய்தற்கரியதுன்பமடைந்தாலும் செய்யக்கூடாத தொழில்களைச் செய்யக்கூடாது. ஒழுங்கல்லாத மார்க்கத்திஞல் புசிக்க இராகுவென்பவனை அமுதமானது கொலைசெய்தது. முயற்சிக்கின்ற சற்குணங்களிஞல் மிகுந்த கீர்த்தியை அடைந்த சத்துக்களுக்கு வசமல்லாதவனைத்தும் வசமாகி ஆபத்துக்களென்று சொல்லப்பட்ட சகலமுநீங்கி எப்பொழுது மளவற்ற சம்சத்துண்டாம்—என்பதாம்.

(இ-ம்.) மயித்திரியாதி குணங்க ளுண்டாவதாற் றுன்பம்வரினும் விசாரமுயற்சி யுண்டாகுமென்பதாம். (௩)

## அவ்விசார மெதைக் கொடுக்குமெனின்.

ஒழிவறுமுயற்சிதன்ன லூகத்தா லுயர்ந்தநூலா
லிழிவறவியற்றுவோர்கட் கெப்பயனெளிதினெய்தா
வழிபடுநன்னூலாளர் வருபயன்கருதாச்செய்யி
லழிவறமுற்றுமுற்றி யளவறுபயனைநல்கும்

(இ-ள்.) ஒழிவறுமுயற்சிதன்னல் - நீங்காதமுயற்சியினலும், ஊகத்தால் - யுத்தியினலும், உயர்ந்தநூலால் - மேலான ஞான சாஸ்திரங்களினலும், இழிவற வியற்றுவோர்கட்கு - குற்றமற நடப்பவர்களுக்கு, எப்பயனெளிதினெய்தா - எந்தப்ரயோசன மெளிதிற்கிடையாது, வழிபடு-வழிபாடாகிய, நன்னூலாளர் - ஆத்ம ஞானசாஸ்திரத்தை யனுபவிப்பவர்கள், வருபயன் - வரப்பட்ட ப்ரயோசனத்தை, கருதா - (விரைவிலடையச்) சிந்தியாமல், செய்யில் - (கிரமமாக) வனுசந்தித்தால், அழிவற முற்று முற்றி - கெடாமன முழுதுமுதிர்ந்து, அளவறுபயனைநல்கும் - முடிவற்ற ஆத்மலாபத்தைக்கொடுக்கும்—எ-று.

(இ-ளை.) நீங்காதமுயற்சியினலும், யுத்தியினலும், மேலான ஞானசாஸ்திரங்களினலும், குற்றமற நடப்பவர்களுக்கு எந்த பிரயோசன மெளிதிற்கிடையாது. வழிபாடாகிய ஆத்மஞான சாஸ்திரத்தை யனுபவிப்பவர்கள் வரப்பட்ட ப்ரயோசனத்தை விரைவிலடையச் சிந்தியாமல் கிரமமாக வனுசந்தித்தால் கெடாமன முழுதுமுதிர்ந்து முடிவற்ற ஆத்மலாபத்தைக் கொடுக்கும்-எ-ம்.

(இ-ந்.) சுருதி யுத்தியனுபவத்துடன் விசாரிக்கும் விசாரணை யாத்மலாபத்தைக் கொடுக்குமென்பதாம். (ச)

## ஆத்மாவின் ஸ்வரூபமியாதெனின்.

வருத்தமற்றச்சஞ்சோக மதமின்றிநன் னூற்பின்போ
யொருத்தராலேவலின்றி யுலாவுகநசிக்கவேண்டா
வருத்தங்களநர்த்தமாகு மளவில்போகங்கணுேயாம்
பெருத்தவாபத்தாஞ்செல்வம் பேரின்பநிராசைதானே.

(இ-ள்.) வருத்தமற்று - துன்பமில்லாமல், அச்சம்-பயமும், சோகம் - சோம்பலும், மதமின்றி - செருக்குமில்லாமல், நன்னூற்பின்போய் - ஆத்மஞான சாஸ்திரார்த்தங்களின் பின்சென்று, ஒருத்தரா லேவலின்றி - ஒருவராலேவுதலில்லாமல், உலாவுக - சஞ்சரிக்கக்கடவாய், நசிக்கவேண்டா - கெடும்படிவிரும்பாதே, அருத்தங்களநர்த்தமாகும் - திரவியங்கள்பயனில்லனவாம், அளவில்போகங்கணுேயாம் - மிகுந்தபோகங்கடுன்பமாம், செல்

வம் - செல்வமானது, பெருத்தவாபத்தாம்-பெரிய வாபத்தையுடையதாம், நிராசைதானே பேரின்பம் - நிராசையே பேரானந்தமாம்—எ-று.

(இ-ள.) துன்பமில்லாமல் பயமும், சோம்பலும், செருக்கு மில்லாமல் ஆத்மஞான சாஸ்திரார்த்தங்களின் பின்சென்று ஒருவ ராலேவுதலில்லாமல் சஞ்சரிக்கக்கடவாய் கெடும்படிவிரும்பாதே. திரவியங்கள் பயனிலலனவாம். மிகுந்த போகங்கடுன்பமாம். செல்வமானது பெரிய வாபத்தையுடையதாம். நிராசையே பேரானந்தமாம்—என்பதாம்

(இ-ி.) நிரதிசயமாகிய பேரானந்தமே யாத்ம ஸ்வரூபமாம். (ரு)

## அப்பேரானந்தத்தா லியாதுவருமெனின்.

இடும்பைகூர்சங்கமின்றி யியற்கையாசாரமெய்தி
குடும்பமாந்துயர்சிற்றின்பங் குறித்திடாப்பெருமையோர்க்கு
நெடும்புகழ்வாணாள்செல்வ நிறைகுணமனைத்துமுண்டாய்
படும்பலன்வசந்தகாலக் கொடிகள்போற்பலிக்குமன்றே

(இ-ள்.) இடும்பைகூர் - துன்பமிகுந்த, சங்கமின்றி - கூட்டமில்லாமல், இயற்கையாசாரமெய்தி - இயல்பானவொழுக்கமடைந்து, குடும்பமாந்துயர் - சம்சாரமான துன்பத்தையுடைய, சிற்றின்பம் - விடயசுகங்களை, குறித்திடாப் பெருமையோர்க்கு - கருதாத பெருமையையுடைய சத்துக்களுக்கு, நெடும்புகழ் - மிகுந்தகீர்த்தியும், வாணாள் - (நீண்ட) வாயுளும், செல்வம் - (மிகுந்த) செல்வமும், நிறைகுணம் - மிகுந்த சற்குணங்களுமாகிய, அனைத்துமுண்டாய் - சகலமுமுண்டாகி, படும்பலன் - கிடைக்காநின்ற ப்ரம ப்ரயோசனமானது, வசந்தகாலக்கொடிகள்போல் - வசந்தகால (ப்பூங்) கொடிகளைப்போல, பலிக்கும்-கிடைக்கும்—எ-று.

(இ-ள.) துன்பமிகுந்த கூட்டமில்லாமல் இயல்பானவொழுக்கமடைந்து சம்சாரமான துன்பத்தையுடைய விடயசுகங்களை கருதாத பெருமையையுடைய சத்துக்களுக்கு மிகுந்த கீர்த்தியும், நீண்டவாயுளும், மிகுந்தசெல்வமும், மிகுந்த சற்குணங்களுமாகிய சகலமுமுண்டாகி கிடைக்காநின்ற பிரம ப்ரயோசனமானது வசந்தகாலப் பூங்கொடிகளைப்போல கிடைக்கும்—என்பதாம்.

(இ-ி.) பவத்துன்பநீங்கி பரகதி யுண்டாமென்பதாம். (சு)

## பவத்துன்ப நீங்கு முபாயமியாதெனின்.

தவங்களாற்றெய்வநீராற் சாத்திரங்களினூற்போகாப்
பவங்களையுயர்ந்தோர்பாதம் பணிந்துபற்றறுக்கவேண்டு

மவங்களாங்காரங்கோப மறவுந்தேய்தியற்கையான
சுவங்களினடந்துநன்னூற் றுறைநின்றோருயர்ந்தமேலோர்.

(இ-ள்.) தவங்களால் - தபசுகளினலும், தெய்வநீரால் - புண்ணிய தீர்த்தங்களினலும், சாத்திரங்களினல் - நூல்களினலும், போகாப்பவங்களை - நீங்காத சநநங்களை, உயர்ந்தோர்பாதம்-மகான்களது திருவடியை, பணிந்து பற்றறுக்கவேண்டும் - வணங்கிப் பாசங்களைக் கெடுக்கவேண்டும், அவங்கள் - பயனின்மையான, அகங்காரம் - நானென்னுமோகமும், கோபம் - சினமும், அறவுந்தேய்ந்து - மிகவுங்குறைந்து, இயற்கையான- இயல்பாகிய, சுவங்களினடந்து - சன்மார்க்கங்களிற்சென்று, நன்னூற் றுறைநின்றோர் - ஆத்மஞான சாஸ்திரமார்க்கத்திநின்றவர்கள், உயர்ந்த மேலோர் - மேன்மையான சத்துக்கள்—எ-று.

(இ-ா.) தபசுகளினலும், புண்ணியதீர்த்தங்களினலும், நூல்களினலும், நீங்காத சநநங்களை மகான்களது திருவடியை வணங்கிப் பாசங்களைக் கெடுக்கவேண்டும். பயனின்மையான நானென்னு மோகமும் சினமும் மிகவுங்குறைந்து இயல்பாகிய சன்மார்க்கங்களிற்சென்று ஆத்மஞான சாஸ்திர மார்க்கத்திநின்றவர்கள் மேன்மையான சத்துக்கள்—என்பதாம்.

(இ-ம்.)மகான்களைப்பணிவதே பவத்துன்பநீங்கு முபாயமென்பதாம்.

---

## மகான்களாரெனின்.

நானெனும்பொருள்காணுதோர் ஞானவாகாயங்காணுர்
நானெனும்பொருளைக்கண்டோர் ஞானவாகாயமாவார்
நானெனுமகங்காரக்கார் ஞானவிண்மதியைமூடி
நானெணுப்பரமவாம்ப னன்மலர்விரியாதன்றே.

(இ-ள்.) நானெனும் பொருள்காணுதோர் - நானென்பதற் கருத்தமாகிய (பிரமத்தைக்) காணுதவர்கள், ஞானவாகாயங்காணுர் - சிதாகாயத்தைப் பாரார்கள், நானெனும் பொருளைக்கண்டோர் - நானென்பதினருத்தமாகிய (பிரமத்தைக்) கண்டவர்கள், ஞானவாகாயமாவார் - சிதாகாயமாவார்கள், நானெனும் - நானென்கின்ற,அகங்காரக்கார் - அகங்காரமேகமானது, ஞானவிண்மதியைமூடில் - ஞானகாயத் திங்களைமறைக்கில், நானெணுப்பரமவாம்பல் - யானென்று சொல்லப்படாத (பிரமமென்னு) மல்லியான, நன்மலர்விரியாது - நல்ல புட்பமானது மலராது—எ-று.

(இ-ா.) நானென்பதற் கருத்தமாகிய பிரமத்தைக்காணுதவர்கள் சிதாகாயத்தைப் பாரார்கள். நானென்பதினருத்தமாகிய

பிரமத்தைக் கண்டவர்கள் சிதாகாயமாவார்கள். நானென்கின்ற அகங்காரமேகமானது ஞானுகாயத்திங்களை மறைக்கில் யானென்று சொல்லப்படாத பிரமமென்னு மல்லியான நல்ல புட்பமானது மலராது—என்பதாம்.

(இ-ம்.) நானென்பதைநீக்கித் தானுகவிளங்குபவர்களே மகான்க ளென்பதாம். (அ)

## நானென்ப தியாதினுற் கெடுமெனின்.

மடிவறுபிறவியென்னு மரத்திரளெனக்கீதென்னு
நெடியபல்பணைகணீட்டி நிரையமாங்காய்கள்காய்க்கு
முடிவறுதுயராங்கார முளையாகவிளையாநிற்கு
மிடியிலாஞானத்தீயால் வேரொடும்வெந்துபோமே.

(இ-ள்.) முடிவறுதுயராங்காரம் - அளவற்ற துன்பமுள்ள வகங்கார மானது, முளையாகவிளையாநிற்கும் - அங்குரமாக முளைத்துவளராநின்ற, மடிவறுபிறவியென்னும் - நீங்காத சநநமென்னும், மரத்திரள் - தருக்கூட்டங்களானவை, எனக்கீதென்னும் - யானெனதென்கின்ற, நெடியபல் பணைகணீட்டி - நீண்டகிளைகளாகவிரித்து, நிரையமாங்காய்கள்காய்க்கும் - நரகமென்னுங் காய்களைக்காய்க்கும், (அத்தருக்களானவை) மிடியிலாஞா னத்தீயால் - குறைவற்ற ஞானுக்கினியினுல், வேரொடும் வெந்துபோம் - மூலத்துட னெரிந்துபோகும்—எ-று.

(இ-ரை.) அளவற்ற துன்பமுள்ள வகங்காரமானது அங்குர மாக முளைத்து வளராநின்ற நீங்காத சநநமென்னும் தருக்கூட் டங்களானவை யானெனதென்கின்ற நீண்ட கிளைகளாக விரித்து நரகமென்னுங் காய்களைக் காய்க்கும். அத்தருக்களானவை குறை வற்ற ஞானுக்கினியினுல் மூலத்துட னெரிந்துபோகும்-என்பதாம்.

(இ-ம்.) ஞானத்தினு லகம்பாவம் கெடுமென்பதாம். (க)

## அகங்காரத்தின் ஸ்வரூபமும், அதை ஞானத்தாற் கெடுக்குமுபாயமும், அஃது நீங்கினவிடத் துண்டாகும்பயனு மியாதெனின்.

என்றலுமிவ்வாங்கார மெவ்வுருவுடைத்தெவ்வாறு
வென்றிடலாகுந்தேக மேவியுமேவாதாயு
நின்றொருகாலம்வென்று னேருறும்பயனேதென்னு
நன்றுணர்வள்ளல்கேட்ப ஞானமார்வசிட்டன்சொல்வான்.

(இ-ள்.) என்றலும் - (இப்படி) யென்று வசிட்டர்சொல்லவும், இவ் வாங்காரம் - இந்த வகங்காரமானது, எவ்வுருவுடைத்து - என்னவடிவமு

டையது, எவ்வாறு வென்றிடலாகும் - எப்படி செயஞ்செய்யலாம், தேக மேவியும் - தேக (வாசனையைப்) பொருந்தினவ னுனுலும், மேவாதாயு நின்று - பொருந்தாதவனுனுலுமிருந்து, ஒருகாலம்வென்ருல் - ஒருபொழுது செயஞ்செய்தால், நேருறு பயனேதென்னு - வருகின்ற ப்ரயோசன மென்னவென்று, நன்றுணர்வள்ளல்கேட்ப - நன்மையுணராநின்ற விராமர்கேட்க, ஞானமார் வசிட்டன்சொல்வான் - பூரணஞானியான வசிட்ட முனி சொல்லுவார்—எ-று.

(இ-ஹா.) இப்படியென்று வசிட்டர் சொல்லவும், இந்தவகங்காரமானது என்ன வடிவமுடையது. எப்படி செயஞ்செய்யலாம். தேகவாசனையைப் பொருந்தினவனுனுலும்பொருந்தாதவனுனுலுமிருந்து ஒருபொழுது செயஞ்செய்தால் வருகின்ற ப்ரயோசனமென்னவென்று நன்மையை யுணராநின்ற விராமர்கேட்க, பூரணஞானியான வசிட்டமுனி சொல்லுவார்—என்பதாம். (கo)

### அவ்வகங்கார மூன்றின் முந்தினவகங்கார விலக்கணங்கூறல்.

மூவகையுலகிலிந்த வகங்கரமும்மையென்று
மேவருமிரண்டுநன்ரு மிகவுமொன்றீனமாகும்
யாவதுபரமுநாமே யீறிலமெமையலாதோர்
பாவனையிலதென்ருேரும் போதமேபரமாங்காரம்

(இ-ள்.) மூவகையுலகில் - மூன்றுவிதமாகிய வுலகங்களில், இந்தவகங்கரமும்மை - இவ்வகங்காரமானது மூன்று (விதமாம்), (அவற்றுள்) என்றும் - எப்பொழுதும், மேவரு மிரண்டுநன்ரும் - பொருந்தற்கரிய விரண்டகங்கார நன்மையையுடையதாம், மிகவுமொன்றீனமாகும் - மிகவுமோரகங்கார மிழிவையுடையதாம், யாவதும் - சகல சகங்களும், பரமும் - பரமாத்மாவும், நாமே - நாமேயாம், ஈறிலம் - (நா) முடிவிலம், எமையலாது - நம்மையன்றி, ஓர் பாவனையிலதென்று - ஒருபாவனையு மில்லையென்று, ஒரும்போதமே - ஆராய்ந் தறிகின்ற ஞானமே, பரமாங்காரம் - மேன்மையாகிய வகங்காரமாம்—எ-று.

(இ-ஹா.) மூன்றுவிதமாகிய வுலகங்களில் இவ்வகங்காரமானது மூன்றுவிதமாம். அவற்றுள் எப்பொழுதும் பொருந்தற்கரிய விரண்டகங்கார நன்மையை யுடையதாம். மிகவு மோரகங்கார மிழிவை யுடையதாம் சகல சகங்களும் பரமாத்மாவும்நாமேயாம். நாமுடிவிலம் நம்மையன்றி ஒரு பாவனையுமில்லையென்று ஆராய்ந் தறிகின்ற ஞானமே மேன்மையாகிய வகங்காரமாம்—என்பதாம்.

## இரண்டாமகங்கார விலக்கணங்கூறல்.

சென்னெல்வாலினுஞ்சற்றுகிச் செகங்களுக்கயலாயென்று
மன்னுதுமெனக்கொள்போத மற்றையாங்காரமாகு
மிந்நிலையிரண்டுஞ்சீவன் முத்தர்பாலிருந்தீடேற்றித்
துன்னருமுத்திநல்குஞ் சுழல்வுறு பந்தநல்கா.

(இ-ள்.) சென்னெல்வாலினுஞ்சற்றுகி-நெல்வானுனியிலுஞ் சூட்சுமமாகியும், செகங்களுக்கயலாய் - (சகல) வுலகங்களுக்குப் புறம்பாகியும்,என்றுமன்னுதுமென - (நா) மெப்பொழுது நிலையாயிருக்கின்றோமென்று, கொள்போதம் - கொள்ளப்பட்டஞானமே, மற்றையாங்காரமாகும்-இரண்டாவதாகிய வகங்காரமாகும், இந்நிலையிரண்டும் - இந்த நிச்சயத்தையுடைய விரண்டகங்காரமும், சீவன்முத்தர்பாலிருந்து - சீவர்முத்தர்களிடத்திலிருந்து, ஈடேற்றி - கரையேற்றி, துன்னருமுத்திநல்கும்- அடையதற்கரிய மோக்ஷத்தைக்கொடுக்கும், சுழல்வுறுபந்தநல்கா - சுழலுகின்ற பந்தத்தை கொடுக்கமாட்டாது—எ-று.

(இ-ஙா.) நெல்வானுனியிலுஞ் சூட்சுமமாகியும் சகலவுலகங்களுக்குப் புறம்பாகியும், நாமெப்பொழுது நிலையாயிருக்கின்றோமென்று கொள்ளப்பட்ட ஞானமே இரண்டாவதாகிய வகங்காரமாகும். இந்த நிச்சயத்தையுடைய விரண்டகங்காரமும் சீவர்முத்தர்களிடத்திலிருந்து கறையேற்றி அடைதற்கரிய மோக்ஷத்தைக் கொடுக்கும். சுழலுகின்ற பந்தத்தைக் கொடுக்கமாட்டாது-எ-ம்.

(இ-ஃ.) இவ்விரண் டகங்காரமு மோக்ஷமடைவதற்குச் சகாயமாமென்பதாம். (கஉ)

## மூன்றாமகங்கார விலக்கணமறிவித்தல்.

கரசரணுதிமட்டா நானிவனென்று காணுந்
திறமதுதானேமூன்று மகங்கரஞ்செகத்தோர்க்கெல்லா
முரியதாமிகவும்பொல்லா துறபவமென்னுநச்சு
மரமெழுமூலமாகும் வருந்தியுமொருக்கவேண்டும்.

(இ-ள்.) இவனுன் - இப்படிப்பட்டயான், கரசரணுதிமட்டாம்-பாணிபரதாதிகளாகிய சரீரமாத்திரமாம், என்றுகாணும் - என்றறிகின்ற, திரமதுதானே - உறுதியே, மூன்றுமகங்கரம் - மூன்றுவதகங்காரமாம், செகத்தோர்க்கெல்லாம் - உலகத்திலுள்ள வனைவர்க்கும், உரியதாம் - உரித்தாகும், மிகவும்பொல்லாது - மிகவுங்கொடியது, உடற்பவமென்னும் - சநநமென்கின்ற, நச்சுமரமேழுமூலமாகும் - விடவிருக்ஷம் வளர்தலுக்குக் காரணமாம், வருந்தியும்-வருத்தமுற்றுவது, ஒருக்கவேண்டும் - (இதனைக்) கெடுக்கவேண்டும்—எ-று.

(இ-ள.) இப்படிப்பட்ட யான் பாணிபரதாதிகளாகிய சரீர மாத்திரமாம். என்றறிகின்ற உறுதியே மூன்றுவதகங்காரமாம். உலகத்திலுள்ள வனைவர்க்கும் உரித்தாகும் மிகவுங் கொடியது. சநநமென்கின்ற விடவிருக்ஷம் வளர்தலுக்குக் காரணமாம். வருத்தமுற்றுவது இதனைக் கெடுக்கவேண்டும்—என்பதாம். (௩௩)

## இவ்வகங்காரத்தைக் கெடுக்குமுபாய மறிவித்தல்.

கொடிதிதுகொடிதுசாலக் கொடிதிதன்கொடுமையாலே
முடிவறுமுயிர்களெல்லா மோகமுற்றறிவுகெட்டார்
கடிதிலவ்விரண்டினாலுங் கடிந்திதெவ்வளவுவிட்டாய்
படிவுறவ்வளவேயெய்தும் பரமமாந்தற்பதார்த்தம்.

(இ-ள்.) இதுகொடிதுகொடிது - கொடியதுகொடியது, சாலக்கொடிதிது - மிகவுங்கொடியது, இதன்கொடுமையால் - இவ்வகங்காரத்தின் கொடுமையினால், முடிவறுமுயிர்களெல்லாம் - அளவற்றவாத்மாக்களனைத்தும், மோகமுற்று - மயக்கத்தையடைந்து, அறிவுகெட்டார் - அறிவிழந்தார்கள், கடிதில் - சீக்கிரத்தில், அவ்விரண்டினாலும் - (முன்சொன்ன) வவ்விரண்டகங்காரங்களாலும், கடிந்து - (இந்தமூன்றுவதான வகங்காரத்தைக்) கெடுத்து, இதெவ்வளவுவிட்டாய்-இதை யெவ்வளவு நீக்கினையோ, படிவுறவ்வளவே - பொருந்த வவ்வளவே, பரமமாந்தற்பதார்த்தம் - மேலான பிரமவஸ்துவானது, எய்தும் - வரும்—எ-று.

(இ-ள.) கொடியது கொடியது மிகவுங்கொடியது. இவ்வகங்காரத்தின் கொடுமையினால் அளவற்ற வாத்மாக்களனைத்தும் மயக்கத்தை யடைந்து அறிவிழந்தார்கள். சீக்கிரத்தில் முன்சொன்ன வவ்விரண்டகங்காரங்களாலும் இந்த மூன்றுவதான வகங்காரத்தைக்கெடுத்து இதை யெவ்வளவு நீக்கினையோ பொருந்த வவ்வளவே மேலான பிரமவஸ்து வானதுவரும்—என்பதாம். ()

(இ-உ-க-ம்.) இவ்வகங்காரஞ் சநந மரணத்தைக் கொடுக்குமென்றறிந்திதை யவ்விரண்டகங்கார ஞானத்தாற் கெடுப்பதே யுத்தியென்பதாம். (௧௪)

## அகங்காரங்கணீங்கினவிடத்துதிக்கும் பயனுரைத்தல்.

ஏற்றமாமகங்காரங்க ளிரண்டினாற்பரமமெய்தி
யூற்றமாமவற்றைநீங்கி யோரகங்காரமுமின்றி
யாற்றலாணிற்றியென்னி லறவுயர்பதமதாகுந்
தோற்றுடனானென்னுமை சுருதிகள்சொல்லுமுத்தி.

(இ-ள்.) ஏற்றமாம் - மேலாகிய, அகங்காரங்களிரண்டினால் - இரண்டகங்காரங்களினால், பரமமெய்தி - பிரமத்தையடைந்து, ஊற்றமாம் - மேலாகிய, அவற்றைநீங்கி - அவ்விரண்டகங்காரங்களையுந்தள்ளி, ஓரகங்காரமுமின்றி - மூன்றாவதான வோரகங்காரமுமில்லாமல், ஆற்றலானிற்றியென்னில் - உறுதியாக நிற்பாயாகில், அது - அந்நிலையே, அறவுயர் பதமதாகும் - முதிர்ந்த பிரமபதமாம், தோற்றுடல் - தோற்றுகின்ற சரீரத்தை, நானெனாமை - நானென்று சொல்லாமையே, சுருதிகள்சொல்லுமுத்தி - வேதங்கள் முறையிடுகின்ற நிருவாணமாம்—எ-று.

(இ-ரை.) மேலாகிய இரண்டகங்காரங்களினால் பிரமத்தையடைந்து மேலாகிய அவ்விரண்டகங்காரங்களையுந்தள்ளி மூன்றாவதான வோரகங்காரமுமில்லாமல் உறுதியாக நிற்பாயாகில் அந்நிலையே முதிர்ந்த பிரமபதமாம். தோற்றுகின்ற சரீரத்தை நானென்று சொல்லாமையே வேதங்கள் முறையிடுகின்ற நிருவாணமாம்—என்பதாம்.

(இ-ீ.) தேகத்தை நானென்பதொன்றும் பிரமத்தை நானென்பதிரண்டும் ஆகிய மூன்றுங்கரைந்தாற் றான்மாத்திரமான மோக்ஷலாபமுண்டா மென்பதாம். (சரு)

இவ்வனுபவ மறிவிக்க திருஷ்டாந்த மறிவிக்கத் தொடங்கினார்.

இதனியல்புரைக்கக்கேண்முன் னிசைத்துள தாமன்முன்னோ
ரதமுறமடிந்தபின்ன ரனையசம்பரன்வேகித்து
மதமுறுமிமையோர்சேனை வதஞ்செய்வா னுபாயந்தன்னை
விதமுறவினையவாறு நினைந்தனன் விஞ்சைவல்லான்.

(இ-ள்.) இதனியல்பு - இவ்வகங்காரங்களின் குணத்தை, உரைக்கக்கேள் - சொல்லக்கேட்பாய், முன்னிசைத்துள-முன்சொல்லியிருக்கின்ற, தாமன்முன்னோர் - தாமன் முதலிய வசுரர்கள், அதமுறமடிந்தபின்னர்-அதமாக நசித்தபின்பு, விஞ்சைவல்லான் - மாயாவித்தையில் வல்லமையுள்ளவனான, அனையசம்பரன்வேகித்து - அச்சம்பராசுரனானவன் கோபித்து, மதமுறு மிமையோர்சேனை - செறுவித்திருக்கின்ற தேவர்கள் சேனையை, வதஞ்செய்வான் - கொல்லும்பொருட்டு, உபாயந்தன்னை-தந்திரத்தை, விதமுற - நாநாவிதமாக, இனையவாறு - இந்தப்ரகாரம், நினைந்தனன் - சிந்தித்தான்—எ-று.

(இ-ரை.) இவ்வகங்காரங்களின் குணத்தை சொல்லக்கேட்பாய். முன்சொல்லியிருக்கின்ற தாமன் முதலிய வசுரர்கள் அதமாக நசித்தபின்பு மாயாவித்தையில் வல்லமையுள்ளவனான அச்சம்பராசுரனானவன் கோபித்து செறுவித்திருக்கின்ற தேவர்கள்

சேனையை கொல்லும்பொருட்டு தந்திரத்தை நாநாவிதமாக இந்த ப்ரகாரம் சிந்தித்தான்—என்பதாம். (௧௬)

## விவேகிகளைச் சிருஷ்டிக்க நினைத்தல்.

தானவரெனமுன்னுஞ்செய் தாமனைமுதலாமூவர்
ஞானமில்லாமையாலே நானெனதென்றுபொய்யாய்
வானவர்போரின்மாண்டார் மற்றினிஞானநன்னூற்
போனவர்விவேகத்தோராய் புணர்ந்தமாயத்தாற்செய்வேன்.

(இ-ள்.) தானவரென - அசுரர்களென்று சொல்லும்படி, முன்னுஞ்செய் - முன்பியாஞ்சிருஷ்டித்த, தாமனைமுதலாமூவர் - தாமன்முதலிய மூவர்களும், ஞானமில்லாமையால் - ஆத்மஞான மின்மையால், நானெனதென்று - யானெனதென்று, பொய்யாய் - அசத்தியத்தை யுடையவர்களாய், வானவர்போரின் மாண்டார் - தேவர்கள் யுத்தத்திலிறந்தார்கள், மற்றினி - ஆகையாலினிமேல், ஞானநன்னூற்போனவர் - ஆத்மஞான சாஸ்திரத்திற் றெளிந்தவர்களாகவும், விவேகத்தோராய் - ஞானத்தை யுடையவர்களாகவும், புணர்ந்தமாயத்தால் - பொருந்திய (வெனது)மாயையினால், செய்வேன் - சிருஷ்டிப்பேன்—எ-று.

(இ-ரை.) அசுரர்களென்று சொல்லும்படி முன்பியாஞ் சிருஷ்டித்த தாமன் முதலிய மூவர்களும் ஆத்மஞானமின்மையால் யானெனதென்று அசத்தியத்தை யுடையவர்களாய் தேவர்கள் யுத்தத்தி லிறந்தார்கள். ஆகையா லினிமேல் ஆத்மஞான சாஸ்திரத்திற் றெளிந்தவர்களாகவும், ஞானத்தையுடையவர்களாகவும், பொருந்திய வெனதுமாயையினால் சிருஷ்டிப்பேன்—என்பதாம்.

## விவேகிகளுதித்தல்.

மெய்யுணர்வுறுதலாலே வெறும்பொய்யாமகங்காரத்தி
னையுறார்விண்ணோர்சேனை நலிவுறவெல்வரென்று
மையுறாமனத்தினெண்ணி மாயையாலவரைச்செய்தான்
மொய்யுறுவேலைதந்த மொக்குள்போன்மூவர்வந்தார்.

(இ-ள்.) மெய்யுணர்வு - சத்தியஞானம், உறுதலால் - பொருந்துகின்றதினால், வெறும்பொய்யா மகங்காரத்தில் - முழுதுமித்தையாகிய வகம்பாவத்தினால், னையுறார் - கெடமாட்டார்கள், விண்ணோர்சேனை - தேவர்களுடைய சேனையை, நலிவுறவெல்வரென்று - கெடும்படி செயிப்பார்களென்று, மையுறாமனத்தினெண்ணி - களங்கமற்றமனதிற்சிந்தித்து, மாயையா லவரைச்செய்தான் - மாயையினாலவர்களையுண்டாக்கினான், மொய்

யுறு வேலைதந்த - (பூமியைச்) சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்திலுண்டாகப் பெற்ற, மொக்குள்போல் - குமிளியைப்போல, மூவர்வந்தார் - மூன்றுபேருண்டானார்கள்—எ-று.

(இ-ரை.) சத்தியஞானம்பொருந்துகின்றதினால் முழுதுமித்தையாகிய வகம்பாவத்தினால் கெடமாட்டார்கள். தேவர்களுடைய சேனையை கெடும்படி செயிப்பார்களென்று களங்கமற்ற மனதிற் சிந்தித்து மாயையினாலவர்களை யுண்டாக்கினான். பூமியைச் சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தி லுண்டாகப்பெற்ற குமிளியைப்போல மூன்றுபேருண்டானார்கள்—என்பதாம் (கஅ)

## அந்த விவேகிக ளியல்பைக் கூறல்.

அனைத்தையுமறிந்தோர்தம்மை யறிவெனவறிவாற்கண்டோர்
வினைத்தொடரிலாதோரொன்றின் விருப்பமும் வெறுப்புமில்லோ
நினைத்துளநிகழ்காலத்தி லெய்தியநிலையினிற்போர் [ர்
தினைத்துணையெனினுமைய மிலாதவர்தெளிவுசான்றோர்.

(இ-ள்.) அனைத்தையு மறிந்தோர் - சகலத்தையுமறிந்தவர்களும், தம்மையறிவென - தங்களை ஞானவடிவமென்று, அறிவாற்கண்டோர் - ஞானத்தினாற்கண்டவர்களும், வினைத்தொடரிலாதோர் - (சஞ்சித) வினைத்தொடர்பில்லாதவர்களும், ஒன்றின் விருப்பமும் வெறுப்புமில்லோர்- ஒரு வஸ்துவில் ராகத்துவேஷமில்லாதவர்களும், நினைத்துள நிகழ்காலத்தில் - நினைக்கப்பட்ட வர்த்தமானகாலத்தில், எய்தியநிலையினிற்போர் - அடைந்த ஸ்திதியி லிருப்பவர்களும், தினைத்துணையெனினும் - தினையளவாயினும், ஐயமில்லாதவர் - சந்தேகமில்லாதவர்களும், தெளிவுசான்றோர் - தெளிவுள்ளவர்களும்—எ-று.

(இ-ரை.) சகலத்தையு மறிந்தவர்களும், தங்களை ஞானவடிவமென்று ஞானத்தினாற் கண்டவர்களும், சஞ்சித வினைத்தொடர்பில்லாதவர்களும், ஒரு வஸ்துவில் ராகத்து வேஷமில்லாதவர்களும், நினைக்கப்பட்ட வர்த்தமானகாலத்தில் அடைந்த ஸ்திதியிலிருப்பவர்களும், தினையளவாயினும் சந்தேகமில்லாதவர்களும் தெளிவுள்ளவர்களும்—என்பதாம். (கக)

## தேவர்களிடத் தசுரர்சென்று யுத்தஞ்செய்தல்.

பேரினால்வீமன்பாசன் றிடனெனப்பிரிக்கப்பட்டோர்
சீரினாலுலகையெல்லாந் திரணமாய்த்தேருஞ்சுத்தர்
போரிலேபோமினென்று சம்பரன்புகலப்போகி
நேரிலாவமரரோடு நெடுஞ்சமர்புரியலுற்றார்.

(இ-ள்.) பேரினல் - நாமத்தினல், வீமன் - வீமனென்றும், பாசன்- பாசனென்றும், திடனென - திடனென்றும், பிரிக்கப்பட்டோர் - பிரிவாகச் சொல்லப்பட்டவர்களும், சீரினுலகையெல்லாம் - (தங்கள்) செல்வத்தினற் சகங்களனைத்தையும், திரணமாய்த்தேருஞ் சுத்தர் - துரும்பாயறிகின்ற பரிசுத்தர்களுமாகிய (இவர்களை), போரிலே போமினென்று - (தேவ) யுத்தத்திற் போங்களென்று, சம்பரன் புகலப்போகி - சம்பராசுரன் சொல்லப்போய், நேரிலா வமரரோடும் - ஒப்பற்ற தேவர்களுடன், நெடுஞ்சமர் புரியலுற்ருர் - பெரிதாகிய யுத்தத்தைச் செய்யத்தொடங்கிஞர்கள்—எ-று.

(இ-ரை.) நாமத்தினல் வீமனென்றும், பாசனென்றும், திடனென்றும், பிரிவாகச் சொல்லப்பட்டவர்களும் தங்கள் செல்வத்தினற் சகங்களனைத்தையும் துரும்பாயறிகின்ற பரிசுத்தர்களுமாகிய இவர்களை தேவயுத்தத்திற் போங்களென்று சம்பராசுரன் சொல்லப்போய், ஒப்பற்ற தேவர்களுடன் பெரிதாகிய யுத்தத்தைச்செய்யத் தொடங்கிஞர்கள்—என்பதாம். (உ0)

## அநாத்மதிருஷ்டிவரினும் அதை நீக்கிநிற்றல்.

எண்ணிலாவருடம்வெம்போ ரியற்றினரிவர்கணெஞ்சிற்
றுண்ணெனவெனதியானுந் தோற்றரவுதித்தபோது
நுண்ணறிவாலேயாமா ரென்றுறநோக்கலோடும்
புண்ணியமிலாதோர்வாழ்வு போலதுபொய்யாய்ப்போகும்.

(இ-ள்.) எண்ணிலாவருடம் - அளவில்லாத வருஷம், வெம்போரியற்றினர் - கொடிதாகிய யுத்தத்தைச்செய்தார்கள், இவர்கணெஞ்சில் - இவர்களுடையமனதில், துண்ணென - துணுக்கென்று, எனதியானும் - யானெனதென்னும், தோற்றறவுதித்தபோது - தோற்றமுண்டானபொழுது, நுண்ணறிவால் - சூட்சும (விசார) ஞானத்தினல், யாமாரென்று-நாமெப்படிப்பட்டவனென்று, உறநோக்கலோடும் - நன்ருகப்பார்க்கவும், புண்ணியமிலாதோர் - தருமமில்லாதவர்களது, வாழ்வுபோல - செல்வம்போல, அது பொய்யாய்ப்போகும் - அந்த யானெனதென்னுந் தோற்றமான தசத்தியமாய்ப்போம்—எ-று.

(இ-ரை) அளவில்லாத வருஷம் கொடிதாகிய யுத்தத்தைச் செய்தார்கள். இவர்களுடைய மனதில் துணுக்கென்று யானெனதென்னும் தோற்றமுண்டானபொழுது சூட்சும விசாரஞானத்தினல் நாமெப்படிப்பட்டவனென்று நன்ருகப்பார்க்கவும் தருமமில்லாதவர்களது செல்வம்போல அந்த யானெனதென்னுந் தோற்றமான தசத்தியமாய்ப்போம்—என்பதாம். (உக)

## அவர்க ளனுபவதிருஷ்டியைக் கூறல்.

பன்மையாம்விசாரத்தாலே படாகங்காரமற்றோர்
சன்மமேமரணமேயென் றஞ்சுறுசலிப்பிலாதோர்
நின்மலரெளிதின்வந்த பொருள்கொள்வோர்நிகழ்ந்தவெல்லாந்
தொன்மையாநவமாங்கண்ணாற் றுகளறச்சமமாய்க்காண்போர்.

(இ-ள்.) பன்மையாம் - பலவிதமாகிய, விசாரத்தால் (ஆத்ம) விசாரணையினால், படாகங்காரமற்றோர் - விரிந்தவகங்கார மிறந்தவர்கள், சென்மமே மரணமேயென்று - பிறப்பிறப்புகள் வருமேயென்று, அஞ்சுறு சலிப்பிலாதோர் - பயப்படுஞ் சலனமில்லாதவர்கள், நின்மலர் - களங்கமற்றவர்கள், எளிதின் வந்தபொருள்கொள்வோர் - எளிதாய்க் கிடைத்தபொருளைக் கிரிகிப்பவர்கள், நிகழ்ந்தவெல்லாம் - (இப்பொழுது) நடந்தவனைத்தும், தொன்மையாம் - பழமையாகிய, நவமாங்கண்ணால் - புதுமையாகிய (ஞான) திருஷ்டியினால், துகளறச் சமமாய்க்காண்போர் - குற்றமறச் சமமாகப்பார்ப்பவர்கள்—எ-று.

(இ-ரை.) பலவிதமாகிய ஆத்மவிசாரணையினால் விரிந்த வகங்காரமிறந்தவர்கள் பிறப்பிறப்புகள் வருமேயென்று பயப்படுஞ் சலனமில்லாதவர்கள், களங்கமற்றவர்கள் எளிதாய்க் கிடைத்த பொருளைக் கிரகிப்பவர்கள். இப்பொழுது நடந்தவனைத்தும் பழமையாகிய புதுமையாகிய ஞானதிருஷ்டியினால் குற்றமறச் சமமாகப்பார்ப்பவர்கள்—என்பதாம். (உஉ)

---

## தேவர்களபயமடைதல்.

ஆதலால்வீரரான வவர்களாலமரர்சேனை
காதலாற்புசித்துமாய்க்குங் காமுகர்செல்வம்போலப்
போதலேபுரிந்துதிக்கிற் போயொளித்துலகமுண்ட
மாதவாசரணமென்றே மாயனைச்சேர்ந்ததன்றே.

(இ-ள்.) ஆதலால் - ஆகையினால், வீரரான - சூரர்களாயிருக்கின்ற, அவர்களால் - அந்த பீமாதிகளால், அமரர்சேனை - தேவர்சேனையானது, காதலால் - ஆசையினால், புசித்துமாய்க்கும் - புசித்துதுலைக்கின்ற, காமுகர் செல்வம்போல - காமிகளது செல்வத்தைப்போல, போதலேபுரிந்து - ஓடிப்போதலையே விரும்பி, திக்கிற்போயொளித்து - திசைகளிற்போய் மறைந்து, உலகமுண்டமாதவா - பூமியைப்புசித்த திருமாலே, சரணமென்று - அபயமென்று, மாயனைச்சேர்ந்தது - விஷ்ணுவிடத்திற்போயடைந்தது—எ-று.

(இ-ரை.) ஆகையினால் சூரர்களாயிருக்கின்ற அந்த பீமாதிகளால் தேவர் சேனையானது ஆசையினால் புசித்து துலைக்கின்ற

காமிகளது செல்வத்தைப்போல ஓடிப்போதலேயேவிரும்பி திசைகளிற்போய் மறைந்து பூமியைப்புசித்த திருமாலே அபயமென்று விஷ்ணுவிடத்திற்போ யடைந்தது—என்பதாம். (உரு)

---

## அவர்களாத்மசித்தியடைதல்.

**அடைக்கலம்புகுந்தவானோர்க் கஞ்சலென்றபயநல்கி**
**விடைத்துவந்தமரின்மோதும் விண்டுவோடரும்போர்செய்து**
**படைக்கலநேமியேவ பாய்கனறீய்க்கத்தீய்ந்து**
**துடைத்துழாய்மார்பன்வாழுந் தூயவைகுந்தம்புக்கார்.**

(இ-ள்.) அடைக்கலம்புகுந்த - சரணுகெதியென்றடைந்த, வானோர்க்கு - தேவர்களுக்கு, அஞ்சலென்று - பயப்படா (திருங்க) ளென்று, அபயநல்கி - அபயங்கொடுத்து, விடைத்துவந்து - கோபித்துவந்து, அமரின்மோதும் - யுத்தகளத்திலடிக்கின்ற, விண்டுவோடு - விஷ்ணுவோடும், அரும்போர்செய்து - அரிதாகிய யுத்தத்தைச்செய்து, படைக்கல நேமியேவ - சக்கராயுதத்தையனுப்ப, பாய்கனறீய்க்கத்தீய்ந்து - (அதினின்றும்) பாயப்பட்ட வக்கினிச்சுவாலையெரிக்கவெரிந்து, தொடைத்துழாய் மார்பன் - துளபமாலையையணிந்த மார்பையுடையவிஷ்ணு, வாழும் - வாழுகின்ற, தூய வைகுந்தம்புக்கார் - மேலானவைகுந்தத்தை யடைந்தார்கள்.

**(இ-ஊ.) சரணுகெதியென்றடைந்த தேவர்களுக்கு பயப்படாதிருங்களென்று அபயங்கொடுத்து கோபித்துவந்து யுத்தகளத்திலடிக்கின்ற விஷ்ணுவோடும் அரிதாகிய யுத்தத்தைச்செய்து சக்கராயுதத்தையனுப்ப அதினின்றும் பாயப்பட்ட அக்கினிச்சுவாலையெரிக்க வெரிந்து துளபமாலையையணிந்த மார்பையுடைய விஷ்ணுவாழுகின்ற மேலான வைகுந்தத்தை யடைந்தார்கள்-எ-ம்.**

(இ-சூ-க-ம்.) சம்பராசுரனது பிரமத்தியானத்திலுதித்த வீமாதிகனென்னும் விவேகிகள் யுத்தத்திலுந் திரஸ்யத்தி லகம்பாவமின்றித் திருக்குவாகவேயிருந்து முடிவில் வியாபக சாக்ஷாத்காரமென்னு ஞானப்ரகாசத்திற் கலந்தனரென் றறிவித்ததாம். (உச)

---

## மனோசஞ்சல நீக்கத்தையறிவித்தல்.

மற்றினியிந்தவாற்றல் வாதனையாலேபந்தம்
பற்றுறுமதனைநீங்கிற் பந்தம்போம்விவேகத்தாலே

யுற்றறியுண்மையாலே யுபாதிவாதனைபோம்போனு
லற்றமில்சித்தநெய்தீர் தீபம்போலாகுமன்றே.

(இ-ள்.) மற்றினியிந்தவாற்ருல் - மேலிந்தப்ரகாரத்திஞல், வாதனையால் - வாசனையினுல், பந்தம்பற்றுறும் - பாசமானது பிடித்துக்கொள்ளும், அதனைநீங்கில் - அவ்வாதனையை நீங்கினுல், பந்தம்போம் - பாசமானது நீங்கும், விவேகத்தால் - விவேகஞானத்தால், உற்றறி - இராமா நீ நன்ருயறிவாய், உண்மையால் - (அப்படியறிகின்ற) தத்துவத்திஞல், உபாதிவாதனைபோம் - உபாதியாகிய வாசனுக்ஷயம்வரும், போனுல் - வாசனுக்ஷயம்வந்தால், அற்றமில் சித்தம் - அச்சமற்ற மனமானது, நெய்தீர் தீபம்போல் - நெய்யில்லாத தீபத்தைப்போல, ஆகும் - (உபசாந்த) மாகும்—எ-று.

(இ-ரை.) மேலிந்தப்ரகாரத்திஞல் வாசனையினுல் பாசமானது பிடித்துக்கொள்ளும் அவ்வாதனையை நீங்கினுல் பாசமானது நீங்கும். விவேகஞானத்தால் இராமா நீ நன்ருயறிவாய். அப்படி யறிகின்ற தத்துவத்திஞல் உபாதியாகிப வாசனுக்ஷயம்வரும். வாசனுக்ஷயம்வந்தால் அச்சமற்றமனமானது நெய்யில்லாத தீபத்தைப்போல உபசாந்தமாகும்—என்பதாம்.

(இ-ம்.) வாசனையுதித்தலே பந்தமும், அதினிவிர்த்தியே முத்தியுமாதலி னவ்வகங்கார வாசனையைநீக்கில் ஞானசுகமாய் மனேசஞ்சலநீங்குமென்பதாம். (உரு)

வீமபாசதிடர்கதை முற்றிற்று.

ஆக கதை கரு-க்கு கவிதை சுஙக.

# தாசூரன் கதை.

அவதாரிகை.

முன்பகங்காரத் தியாக மாத்மார்த்தத்தின் பொருட்டா மென்பதை யறிவித்து, அவ்வாத்ம சங்கற்பத்தால் விளங்கிய சகஸ்திதியை விபரமாயறிவிக்கு நிமித்தந் தாசூரன்கதையை நிரூபிக்கின்ருர்.

மாயையைக்கெடுக்கு முபாயமியாதெனின்.

ஒழியாத துயர்மாயை யெனுமாபத்தை யொழிக்கமன நாசமோ ருபாயமாகு, மிழியாத மெய்ஞ்ஞானப் பொருளையெல்லா மியம்பக்கேட் டயராம லிதயங்கொள்வாய், பழியான போகத்தினிச்சைதானே பந்தமா மதுவிடலே பரமமாகும், வழியான

பன்னூலாற் பயன்கொலென்ன வருந்தாமலிவ்வழியே வருதல் வேண்டும்.

(இ-ள்.) ஒழியாததுயர் - நீங்காததுன்பத்தைக் (கொடுக்கின்ற), மாயையெனும் - மாயையென்கின்ற, ஆபத்தையொழிக்க - ஆபத்தைக்கெடுக்க, மனநாசம் - மனோநாசமே, ஒருபாயமாகும் - ஒப்பற்ற தந்திரமாம், இழியாத - குறைவில்லாத, மெய்ஞ்ஞானப்பொருளையெல்லாம் - தத்துவ ஞானார்த்தங்களனைத்தையும், இயம்பக்கேட்டு - (நாஞ்)சொல்ல (விராமாநீ) கேட்டு, அயராமல் - மறதியில்லாமல், இதயங்கொள்வாய் - உளத்திற்றரித்துக்கொள்வாய், பழியானபோகத்தின் - குற்றமாகிய போகத்தினது, இச்சைதானேபந்தமாம் - ஆசையேபந்தமாகும், அதுவிடலே பரமமாகும்- அவ்விச்சையை விடுவதே பிரமஸ்வரூபமான (மோக்ஷ) மாம், வழியான பன்னூலால் - (இதர) மார்க்கமான பலசாத்திரங்களாலும், பயன்கொலென்ன - ப்ரயோசனமென்ன, வருந்தாமல் - வருத்தப்படாமல், இவ்வழியே வருதல்வேண்டும் - (இச்சாத்தியாகமுள்ள) விந்தமார்க்கத்திலே வரவேண்டும்—எ-று.

(இ-ஙா.) நீங்காத துன்பத்தைக் கொடுக்கின்ற மாயையென்கின்ற ஆபத்தைக்கெடுக்க மனோநாசமே ஒப்பற்ற தந்திரமாம். குறைவில்லாத தத்துவ ஞானார்த்தங்களனைத்தையும் நாசஞ்சொல்ல விராமா நீ கேட்டு மறதியில்லாமல் உளத்திற் றரித்துக்கொள்வாய். குற்றமாகிய போகத்தினது ஆசையே பந்தமாகும். அவ்விச்சையை விடுவதே பிரமஸ்வரூபமான மோக்ஷமாம். இதரமார்க்கமான பலசாத்திரங்களாலும் ப்ரயோசனமென்ன வருத்தப்படாமல் இச்சாத்தியாகமுள்ள விந்தமார்க்கத்திலே வரவேண்டு மென்பதாம்.

(இ-ம்.) விடய வாசனையுள்ள மனதைக்கெடுத்தலே மாயாநாச வுபாய மென்பதாம். (க)

---

## அம்மனதிறக்கு முபாயமியாதெனின்.

இன்பமிதாமின்பமிதா மென்றவெல்லா மெரியெனநெஞ் செனநினைக வேற்றத்தாழ்வாய், துன்புறுபோ கம்பலகாற் றோர்ந்து நெஞ்சிற் றேயாமலெளிதருந்திற் சுகமேயாகும், வன்புபயின் மனத் தோற்ற நாசமாகும் மனத்தினதுநாசமே மகத்தாந் தோற்றம், நன்பரமஞானிகணெஞ் சிறந்துபோகு நடைவிலங்கா மறிவிலர்க்கு நவைகூர்நெஞ்சம்.

(இ-ள்) இன்பமிதாமின்பமிதா வென்றவெல்லாம் - ஈதின்பமா மீதின்பமாமென்று சொல்லப்பட்ட வினைத்தையும், எரியென - அக்கினியைப்

போலவும், நஞ்செென - விடத்தைப்போலவும், நினைக - (ஸ்ரீராமா நீ) நினைக்கக்கடவாய், ஏற்றத்தாழ்வாய் - உயர்வுதாழ்வா (யிருக்கின்ற), துன்புறு போகம் - துன்பமுள்ள போகங்களை, பலகாற்றேர்ந்து - பலகாலும் விசாரித்து, நெஞ்சிற்றேயாமல் - மனதிற்கலவாமல், எளிதருந்தில் - இலேசாக புசித்தால், சுகமேயாகும் - இன்பமாகவேயிருக்கும், வன்புபயில்-வன்மையாகச்சொல்லப்பட்ட, மனத்தோற்றம் - மனதுண்டாகுதலே, நாசமாகும் - (ஆத்ம) நாசமாம், மனத்தினதுநாசமே - மனோநாசமே, மகத்தாந்தோற்றம் - மகத்தான (வாத்ம) வுதயமாம், நன்பரஞானிகணெஞ் சிறந்துபோகும் - நல்லபிரமஞானிகளது மனது நாசத்தையடையும், அறிவிலர்க்கு - அஞ்ஞானிகளுக்கு, நவைகூர்நெஞ்சம் - குற்றமிகுந்த மனமானது, நடைவிலங்காம் - கால்விலங்காகும்—எ-று.

(இ-ளை.) ஈதின்பமா மீதின்பமாமென்று சொல்லப்பட்டவனைத்தையும் அக்கினியைப்போலவும், விடத்தைப்போலவும், ஸ்ரீராமா நீநினைக்கக்கடவாய். உயர்வுதாழ்வாயிருக்கின்றதுன்பமுள்ள போகங்களை பலகாலும்விசாரித்து மனதிற்கலவாமல் இலேசாகப் புசித்தால் இன்பமாகவேயிருக்கும் வன்மையாகச் சொல்லப்பட்ட மனதுண்டாகுதலே ஆத்ம நாசமாம். மனோநாசமே மகத்தான வாத்மவுதயமாம். நல்ல பிரமஞானிகளது மனது நாசத்தையடையும். அஞ்ஞானிகளுக்கு குற்றமிகுந்த மனமானது கால்விலங்காகும்—என்பதாம்.

(இ-ீ.) விடயசுகந்துன்பமென்றறிவதே மனமிறக்கு முபாயமென்பதாம். (உ)

## ஞானிகள்மனது மாத்மாவிற் சகத்துமிருக்குந் தன்மையெப்படியெனின்.

ஆனந்தநிராநந்த மிரண்டுமில்லை யசைவுமசை வின்மையுமா மவையுமில்லை, யீனந்தீர்சத்தசத்தன் றிவற்றுக்கெல்லா மிடையல்ல ஞானிமன மென்றலோடுந், தானந்தமிலாவறிவா யுலகின்மேலாந் தத்துவத்திலுலகிருக்குந் தன்மைதன்னை, ஞானந்தான் வளர்பொருட்டாயுரைப்பாயென்று நாதனியம்பிடவசிட்ட னவில்வதானன்.

(இ-ள்.) ஆனந்தம் - ஆனந்தமும், நிராநந்தம் - ஆநந்தமில்லாததும், இரண்டுமில்லை - (இவ்) விரண்டுமில்லாதது, அசையும்-அசைதலும், அசைவின்மையுமாம் - அசைவில்லாததுமான, அவையுமில்லை - அவ்விரண்டுமில்லாதது, ஈனந்தீர் - குறைவில்லாத, சத்து - சத்தும், அசத்தன்று - அசத்துமல்லாதது, இவற்றுக்கெல்லா மிடையல்ல - இவைகளனைத்திற்கு நடுவுமல்ல, ஞானிமனமென்றலோடும் - ஞானிகள்மனமென்று சொன்ன

மாத்திரத்தில், தானந்தமிலாவறிவாய் - முடிவில்லாதவாத்மஞானமாகியும், உலகின்மேலாம் - சகத்துக்கு மேலாகியுமிருக்கின்ற, தத்துவத்தில் - தத்துவஸ்வரூபத்தில், உலகிருக்குந்தன்மைதன்னை - சகமிருக்கின்ற தன்மையை, ஞானந்தான்வளர் பொருட்டான்-அறிவானது வளரும்படியாக, உரைப்பாயென்று - சொல்லுவாயென்று, நாதனியம்பிட - ஸ்ரீராமன் கேழ்க்க, வசிட்ட னவில்வதானுன் - வசிட்டமுனி சொல்லத்தொடங்கினர்.

(இ-ள.) ஆநந்தமும், ஆநந்தமில்லாததும், இவ்விரண்டுமில்லாததும், அசைதலும் அசைவில்லாததுமான அவ்விரண்டுமில்லாதது. குறைவில்லாதசத்தும் அசத்துமில்லாதது. இவைகளினைத்திற்கு நடுவுமல்ல ஞானிகள் மனமென்று சொன்னமாத்திரத்தில் முடிவில்லாத வாத்மஞானமாகியும், சகத்துக்கு மேலாகியுமிருக்கின்ற தத்துவஸ்வரூபத்தில் சகமிருக்கின்ற தன்மையை அறிவானது வளரும்படியாக சொல்லுவாயென்று ஸ்ரீராமன் கேழ்க்க, வசிட்டமுனி சொல்லத்தொடங்கினர்—என்பதாம்.

(ப-ம்.) வேறுபட்டாநந்தீயாததென்பார். ஆநந்தமல்லவென்றும், நிரதிசயாநந்த மானதென்பார். நிராநந்தமல்லவென்றும், ஸ்திரமாயிருக்கின்றதென்பார். அசைவல்லவென்றும், சித்துல்லாசமாய் விளங்குகின்றதென்பார். அசையாமையல்லவென்றும், உள்ளிலும் புறம்பிலும்பூரணமாய் விளங்குமென்பார். சத்தசத்துக்கிடையல்ல ஞானி மனமென்றுங்கூறினர்.

(இ-ம்.) ஞானிகள் மனது ஒன்றிலும் பற்றற்றுத் தன்மயமாய் விளங்குமென்பதாம். (ரு)

## தத்துவவிலக்கண மறிவித்தல்.

வேறிலாதெவ்விடத்து மேவினின்று மேவாமனுண்மையினுல்
வேறும்விண்போற், கூறிலாசிற்பாவ மெங்குநின்றுங் கூறுபடுமவ
ற்றொன்றுங் கூடிப்பற்ருப், பேறிலாச்சங்கற்ப மனைத்துமின்றிப்
பேறின்றியழிவின்றிப் பேதமின்றி, யூறிலாவாகாயங் கோடிகூரு
வுரித்தவற்றி லொருகூற்றை யொப்பநொய்தாம்.

(இ-ள்.) வேறிலாவது - வேருகாமல், எவ்விடத்து மேவிநின்றும் - எந்தவிடங்களிலும் பொருந்தியிருந்தும், மேவாமல்-பொருந்தாமல், நுண்மையினுல் - சூட்சுமத்தினுல், வேறும் விண்போல் - வேறுபடுகின்றவாகாயத்தைப்போல, கூறிலாச்சிற்பாவம் - வேறுபடாத ஞானஸ்வரூபமானது, எங்குநின்றும் - எவ்விடத்திலும் பூரணமாகவிருந்தும், அவற்றொன்றும் - அவ்வஸ்துக்களிலொன்றிலும், கூடிப்பற்ரு - பொருந்தமாட்டாது, பேறிலாச்சங்கற்பமனைத்துமின்றி - பயனின்றிய சங்கற்பங்க ளியாவுமில்லாத

தாகியும், பேரின்றி - நாமமில்லாததாகியும், அழிவின்றி - நாசமில்லாத தாகியும், பேதமின்றி - வேற்றுமையில்லாததாகியு மிருக்கின்ற (வாத்ம ஞானமானது), ஊறிலாவாகாயம் - இடையூறில்லாத வம்பரத்தை, கோடி கூறுவரித்து - நூறிலக்கம் பங்குசெய்து, அவற்றிலொருகூற்றை - அவைகளி லொருபங்குக்கு, ஒப்ப நொய்தாம் - சமானமாகச் சூட்சுமமாம்-எ-று.

(இ-ள்.) வேறுகாமல் எந்தவிடங்களிலும் பொருந்தியிருந் தும் பொருந்தாமல் சூட்சுமத்தினல் வேறுபடுகின்ற வாகாயத் தைப்போல வேறுபடாத ஞானஸ்வரூபமானது எவ்விடத்திலும் பூரணமாகவிருந்தும் அவ்வஸ்துக்களிலொன்றிலும் பொருந்தமாட் டாது பயனின்றிய சங்கற்பங்களியாவு மில்லாததாகியும், நாமமில் லாததாகியும், நாசமில்லாததாகியும், வேற்றுமை யில்லாததாகியு மிருக்கின்ற வாத்மஞானமானது இடையூறில்லாக வம்பரத்தை நூறிலக்கம்பங்குசெய்து அவைகளிலொருபங்குக்கு சமானமாகச் சூட்சுமமாய்—என்பதாம். (ச)

## சத்தேசகத்தாகத் தோற்றுதல்.

நன்றிதரு முண்மைமுதற் பெயர்கள்பெற்று ஞானிகள்பா னிமலஞானமாகி, யொன்றுமல வுருவான குடும்பரூப மொன்று கித்தனைத்தெரிவித் துணர்வேமெய்யாய்த், தன்றனைச்சின் மாத்தி ரத்துக் கயலற்றிந்தச் சத்தாமாத்திரமயமாஞ் சகங்களெல்லாந், துன்றுதிரை முதலாகப் பிறந்தவெல்லாஞ் சூழகடலில் வேறுகாத் தொடர்ச்சிபோலாம்.

(இ-ள்.) நன்றிதரும் - நன்மையைக்கொடுக்கின்ற, உண்மைமுதல்- ஆத்மாமுதலாகிய, பெயர்கள்பெற்றும் - நாமங்களிடப்பெற்றும்,ஞானிகள் பால் - ஞானவான்களிடத்தில், நிமலஞானமாகி - நிருமலமாகிய ஞான மாகி, ஒன்று மலவுருவான - பொருந்துமஞ்ஞான ஸ்வரூபமாகிய, குடும்ப ரூபம் - சம்சாரரூபத்தோடும், ஒன்றுகி-ஏகமாயிருந்து, தனைத்தெரிவித்து- தனதாத்ம ஸ்வரூபத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்ற, உணர்வே மெய்யாய் - ஞானமே சத்தியமாய், தன்றனை - தனக்குத்தானேயொப்பா யிருக்கின்ற, சின்மாத்திரத்துக்கயலற்று - ஞானமாத்திரத்துக்கு வேறில் லாமல், இந்தச்சத்தாமாத்திர மயமாம் - இச்சத்தாமாத்திரமே யாகாரமா யிருக்கின்ற, சகங்களெல்லாம் - உலகங்களனைத்தும், துன்றுதிரை முத லாக - நெருங்கிய வலைகண்முதலாக, பிறந்தவெல்லாம் - உண்டாகியசகல மும், சூழ்கடலில் - சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தில், வேறுகாத் தொட ர்ச்சிபோலாம் - வேறுபடாமற் றொடர்ந்து நின்றதுபோலவாம்—எ-று.

(இ-ணா.) நன்மையைக் கொடுக்கின்ற ஆத்மாமுதலாகிய நாமங்களிடப்பெற்றும், ஞானவான்களிடத்தில் நிருமலமாகிய ஞானமாகி பொருந்து மஞ்ஞான ஸ்வரூபமாகிய சம்சாரரூபத்தோடும் ஏகமாயிருந்து தனதாத்ம ஸ்வரூபத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்ற ஞானமே சத்தியமாய் தனக்குத்தானே யொப்பாயிருக்கின்ற ஞானமாத்திரத்துக்கு வேறில்லாமல் இச்சத்தாமாத்திரமே யாகாரமாயிருக்கின்ற உலகங்களனைத்தும் நெருங்கியவலேகண்முதலாக உண்டாகிய சகலமும்சூழ்ந்திருக்கின்ற சமுத்திரத்தில் வேறுபடாமற் றொடர்ந்து நின்றதுபோலவாம்—என்பதாம். (ரு)

---

சித்தேவரேவர்க் கெப்படியோ 'வப்படியே யிருக்குமெனல்.

துனைதருபல் பிறப்பாகிக் கொடிதாய்ப்பொல்லாச் சுபாவமாந் தனையறியாச் சுமடர்க்கென்றுந், தனையறிந்தோர்க் கொளியுருவா யெல்லாமொன்றாய்த் தானுகுமனுபவிக்குந் தன்மையாலே, நினைவொடுசெய் வோன்செய்கை செயலிம்மூன்று நிகழ்விக்கும் பாவித்த நினைவுக்கெல்லா, மனையசுவை யாய்நிற்கும் பிறவிப்போக மருந்துவோர்க்கப்போக மாகிநிற்கும்.

(இ-ள்.) தனையறியாச்சுமடர்க்கு - ஆத்மாவையறியாத மூடர்களுக்கு, துனைதருபல்பிறப்பாகி - துன்பத்தைக்கொடுக்கின்ற நாநாவிதமாகிய சநநமாகியும், கொடிதாய் - கொடிதாகியும், பொல்லாச்சுபாவமாம் - ஈனத்தன்மையாகியு மிருக்கும், என்றுந்தனை யறிந்தோர்க்கு - எப்பொழுதுந் தனது ஸ்வரூபத்தைத் தெரிந்தவர்களுக்கு, ஒளியுருவாய் - ஞானப்ரகாசமாகியும், எல்லாமொன்றாய் - சகலமுமேகமாகியும், தானுகவனுபவிக்குந் தன்மையால் - தானுகவேயனுபவியாநின்ற சுபாவத்தினால், நினைவொடு - கருத்துடன், செய்வோன் - கருத்தாவும், செய்கை - கருவியும், செயலிம்மூன்றும்- தொழிலுமாகிய விம்மூன்றையும், நிகழ்விக்கும் - ப்ரகாசிக்கும், பாவித்த நினைவுக்கெல்லாம் - பாவனைசெய்த நினைவுகளனைத்திற்கும், அனையசுவை யாய்நிற்கும் - அந்தரசமாகவேயிருக்கும், பிறவிப்போக மருந்துவோர்க்கு - பவச்செல்வத்தை யனுபவிப்பவர்களுக்கு, அப்போகமாகிநிற்கும் - அந்தப் போகமாகவே யிருக்கும்—எ-று.

(இ-ணா.) ஆத்மாவையறியாத மூடர்களுக்கு துன்பத்தைக் கொடுக்கின்ற நாநாவிதமாகிய சநநமாகியும், கொடிதாகியும், ஈனத் தன்மையாகியுமிருக்கும் எப்பொழுதுந் தனது ஸ்வரூபத்தைத் தெரிந்தவர்களுக்கு ஞானப்ரகாசமாகியும், சகலமுமேகமாகியும், தானுகவே யனுபவியாநின்ற சுபாவத்தினுல் கருத்துடன் கருத்தாவும், கருவியும், தொழிலுமாகிய விம்மூன்றையும் ப்ரகாசிக்கும். பாவனைசெய்த நினைவுகளனைத்திற்கும் அந்தரசமாகவேயிருக்கும்.

பவச்செல்வத்தை யனுபவிப்பவர்களுக்கு அந்தப் போகமாகவே யிருக்கும்—என்பதாம். (சா)

## சகலமுஞ் சிற்ப்ரகாசமாகவே விளங்குதல்.

அத்தமன முதயமில்லை யெழுதனிற்ற லயல்போதல் வருத லெனு மனைத்துமில்லை, யித்தலத்தி லில்லையிலா திருக்கவில்லை யித் திறமாஞ்சித்துமல மில்லாமெய்யாய்ச், சுத்தமுறுதானேதன் னிட த்தினிற்குஞ் சொன்னநெறியேசகமாய்ச் சொல்பேராலே, மெத்த வெகுரூபமாந் தற்சுபாவம் விரிந்தெங்குஞ் சிற்பெயரால் விளங்கி நிற்கும்.

(இ-ள்.) அத்தமனமுதயமில்லை - உதயாத்தமான மில்லாததாகியும், எழுதனிற்றல்-எழுகின்றதும் நிற்கின்றதும், அயல்போதல்வருதலெனும் - பக்கத்திற் போதலும் வருதலுமென்கின்ற, அனைத்துமில்லை - சகலமுமில் லாததாகியும், இத்தலத்தில் - இவ்விடத்தில், இல்லையிலாதிருக்கவில்லை - இல்லாததாகியு மிருப்பதாகியுமிருக்கின்ற, இத்திறமாஞ்சித்து - இக்குணங் களையுடைய ஞானமானது, மலமில்லாமெய்யாய் - களங்கமில்லாத வடிவ மாய், சுத்தமுறுதானே - பரிசுத்தமாகிய வாத்மாவே, தன்னிடத்தினிற் கும் - ஞானத்மாவினிடத்திலிருக்கும், சொன்னநெறியே - இப்பொழுது சொல்லிய மார்க்கமே, சகமாயசொல்பேரால் - உலகமென்று சொல்லப் பட்ட நாமத்தினால், மெத்தவெகுரூபமாம் - மிகவுநாநாவித வடிவமாகும், தற்சுபாவம்விரிந்து - தனதுசத்திவியாபித்து, எங்குஞ் சிற்பெயரால் விள ங்கி நிற்கும் - எவ்விடத்தும் ஞானமென்னு நாமத்தா லொளிரும்—எ-று.

(இ-கா.) உதயாத்தமான மில்லாததாகியும், எழுகின்றதும், நிற்கின்றதும், பக்கத்திற்போதலும், வருதலுமென்கின்ற சகலமு மில்லாததாகியும், இவ்விடத்தில் இல்லாததாகியு மிருப்பதாகியு மிருக்கின்ற இக்குணங்களையுடைய ஞானமானது களங்கமில்லாத வடிவமாய் பரிசுத்தமாகிய வாத்மாவே ஞானத்மாவி னிடத்திலிரு க்கும். இப்பொழுது சொல்லியமார்க்கமே உலகமென்று சொல்லப் பட்ட நாமத்தினால் மிகவு நாநாவிதவடிவமாகும். தனது சத்தி வியாபித்துஎவ்விடத்தும் ஞானமென்னுநாமத்தாலொளிரும்-எ-ம்.

(இ-சு-க-ம்.) தத்துவ விலாசத்தைக் கிரமமா யறிவித்ததாம். (எ)

## சித்திற்சகத்திருப்பதை யறிவிக்கத்தொடங்கல்.

இன்னசுபாவந்தானே யொளியாநிற்கு மிருளாகுமொன்றாகு மீறில்கூறாந், தன்னுடைய தொழிலாலே தானேபூர்ண தத்துவம்

விட்டிவனவனு னென்னுந்தன்மை, யுன்னியபாவனையாலே மெள்ளச்சீவ னுருவாகிக்குடும்பியெனு மூகத்தாலே, பன்னியநா நாத்துவத்தி லழுந்திப்பாவா பாவம்பற்றுதல்விடலாம் பதத்தினிற்கும்.

(இ-ள்.) இன்னசுபாவந்தான் - இத்தன்மையானது, ஒளியாய் - ப்ரகாசமாகியும், நிற்குமிருளாகும் - நிற்கின்ற வந்தகாரமாகியும், ஒன்றாகும் - ஏகமாகியும், ஈறில்கூறாம் - அநேகமாகியு மிருக்கின்ற, தன்னுடைய தொழிலால் - தனதுசெய்கையினுல், தானேபூர்ணதத்துவம்விட்டு - தானே பூரணஞான தத்வஸ்வரூபத்தைவிட்டு, இவன் - இவனென்றும், அவன் - அவனென்றும், நான் - நானென்றுஞ் சொல்லுகின்ற, தன்மை - குணத்தை, உன்னியபாவனையால் - சிந்தித்தபாவனையினுல், மெள்ளச்சீவவுருவாகி - மெல்லச்சீவரூபியாய், குடும்பியெனுமூகத்தால் - சம்சாரியென்கின்ற நினைவினுல், பன்னிய நாநாத்துவத்திலழுந்தி - சொல்லிய நாநாவிதமாகிய சங்கற்பவிகற்பங்களிலழுந்தி, பாவம் - பாவமும், அபாவம் - அபாவமும், பற்றுதல் - பற்றுதலும், விடலாம் - விடுவதுமா யிருக்கின்ற, பதத்தினிற்கும் - (பேதரூபமாகிய) பதத்திலிருக்கும்—எ-று.

(இ-ை.) இத்தன்மையானது ப்ரகாசமாகியும், நிற்கின்றவந்தகாரமாகியும், ஏகமாகியும், அநேகமாகியுமிருக்கின்ற தனது செய்கையினுல்தானே பூரணஞான தத்துவ ஸ்ரூபத்தைவிட்டு இவனென்றும், அவனென்றும், நானென்றுஞ் சொல்லுகின்ற குணத்தை சிந்தித்த பாவனையினுல் மெல்லச் சீவரூபியாய் சம்சாரியென்கின்ற நினைவினுல் சொல்லிய நாநாவிதமாகிய சங்கற்ப விகற்பங்களி லழுந்தி பாவமும், அபாவமும், பற்றுதலும், விடுவதுமா யிருக்கின்ற பேதரூபமாகிய பதத்திலிருக்கும்—என்பதாம்.

(ப-ம்.) சுயம்ப்ரகாசமென்பார். ஒளியாமென்றும், விருத்திஞானமிறந்து தன்மையாக விளங்குமென்பார். இருளாமென்றும், தானேதானுயிருக்குமென்பார். ஒன்றென்றும், நவநவமாய் ப்ரகாசிக்கு மென்பார். ஈறில் கூறென்றுங் கூறினுர்.

(இ-ய்.) சுயஞ் சித்திருந்தபடியிருக்க வதன் சங்கற்பமே சீவனுகிப் பேதபாவத்தி லழுந்தினதென்பதாம். (அ)

## சீவனேமனமா யதுசகத்தாக விரிதல்.

அப்பதத்தி னின்று புரி யட்டகத்தை யளவிலசை வாலமைக்கு மமைத்திடாதா, மிப்பரிசி னின்றலேவே வடிவமான வெழுபிறவி வகைமாலே யியற்றுமெங்கு, மொப்பரிய தற்பிரம சுபாவத்தாலே யுரைத்ததெலா மெழுமீண்டு மொடுங்கிப்போகு, மெய்ப்

படிவமில்லாத விண்ணிற்கானல் விரிவதுபோன் மனநினைவில் விரிந்துதோன்றும்.

(இ-ள்.) அப்பதத்தினின்று - அந்தப்பேதமான விடத்திலிருந்து, புரியட்டகத்தை - புரியட்டக (வுடலை), அளவிலசைவால் - அளவற்ற விகற்பங்களினால், அமைக்கும் - செய்யும், அமைத்திடாதாம் - செய்யாதாம், இப்பரிசினின்று - இக்குணத்திலிருந்து, அலைவேவடிவமான - சலிப்பதேஸ்வரூபமாகிய, எழுபிறவிவகைமாலை - (சராசரமான) வெழுபவவரிசையை, எங்கும் - எவ்விடத்தும், இயற்றும் - செய்யும், ஒப்பரிய - சமானமற்ற, தற்பிரமசுபாவத்தால் - தானாகிய பிரமசத்தியினால், உரைத்ததெலாமெழும் - சொல்லியயாவு முற்பத்தியாம், மீண்டு மொடுங்கிப்போகும் - மீளவு நாசத்தை யடையும், மெய்ப்படிவமில்லாத விண்ணல் - நிசவடிவமில்லாத (பூ)தாகாயத்தில், கானல் விரிவதுபோல் - கானற்சலம் பரிவுவதைப்போல, மனநினைவால் - மனோசங்கற்பத்தினால், விரிந்துதோன்றும் - (உலகம்) பரவித்தோற்றும்—எ-று.

(இ-ரை.) அந்தப் பேதமான விடத்திலிருந்து புரியட்டக வுடலை அளவற்ற விகற்பங்களினால்செய்யும் செய்யாதாம். இக்குணத்திலிருந்து சலிப்பதே ஸ்வரூபமாகிய சராசரமான வெழுபவவரிசையை எவ்விடத்தும் செய்யும் சமானமற்ற தானாகிய பிரமசத்தியினால் சொல்லிய யாவுமுற்பத்தியாம். மீளவு நாசத்தை யடையும். நிசவடிவமில்லாத பூதாகாயத்தில் கானற்சலம் பரவுவதைப்போலமனோசங்கற்பத்தினால்உலகம்பரவித்தோற்றும்-எம்.

(இ-ம்.) ஆத்மா தனது சங்கற்பமாகிய மனதினா லாதிவாகிக மாதிபௌதிக சரீரங்களை யுண்டாக்கிக் கெடுக்குமென்பதாம். (க)

## ஆத்மாவே யநாத்மாவாகத் தோற்றிவிளங்குதல்.

படர்மதத்தாற் றனைப்பிறர்போற் றோன்றுமாபோற் பகுத்தலிலா வந்தச்சிற் பாவந்தானே, யடர்பொய்போற் றோன்றியதாற் சத்தமாதி யைம்புலனு மேதொன்று லறியாய்நின்றாய், தொடர்கின்றவதுவிந்த வான்மாவாகுந் தோற்றமெலாந்தானாகித் துன்னிநின்ற, விடமுடைய பரப்பிரம மிதுவேயீதுக் கிப்பிரமப் பெயரியல்பா மிதில்லையே றில்லை.

(இ-ள்.) படர்மதத்தால் - மிகுந்தமதத்தினால், தனைப்பிறர்போல் - தன்னை யயலாரைப்போல், தோற்றுமாபோல் - தோற்றுகின்றதுபோல, பகுத்தலிலா - பிரிவில்லாத, அந்தச்சிற்பாவந்தான் - அந்த ஞானஸ்வரூபமே, அடர்பொய்போல் - நெருங்குகின்ற வசத்தைப்போல, தோன்றி

யது - தோற்றிற்று, சத்தாமாதி யைம்புலனும் - சத்தமுதலிய பஞ்சவிடயங்களையும், எதொன்ருயறியாநின்ருய் - யாதொன்றினலறிகின்ருயோ, தொடர்கின்றவது - தொடராநின்ற வதுவே, இந்தவான்மாவாகும் - (ஸ்ரீராமா) முன்சொல்லியவிந்த ஞானத்மஸ்வரூபமாம், தோற்றமேலாம்- தோற்றப்பட்ட சகலமும், தானகித்துன்னிநின்ற - தானகவேநிறைந்திருக்கின்ற, இடமுடைய பரப்பிரமமிது - வியாபகமானபரப்பிரமஸ்வரூபமான திப்படி சொல்லப்பட்டதேயாகும், ஈதற்கு - இதற்கு, இப்பிரமப்பெயர் - இந்தப்பிரமமென்னு நாமமானது, இயல்பாம்-சுபாவமாம், இதில் வேறில்லை - இதற்கு வேருனதொன்றுமில்லை—எ-று.

(இ-ள) மிகுந்த மதத்தினல் தன்னை யயலாரைப்போல தோற்றுகின்றதுபோல பிரிவில்லாத அந்த ஞானஸ்வரூபமே நெருங்குகின்ற வசத்தைப்போல தோற்றிற்று. சத்தமுதலிய பஞ்ச பஞ்சவிடயங்களையும் யாதொன்றின லறிகின்ருயோ தொடராநின்றதுவே ஸ்ரீராமா! முன்சொல்லிய விந்த ஞானத்மஸ்வரூபமாம். தோற்றப்பட்ட சகலமும் தானகவே நிறைந்திருக்கின்ற வியாபகமான பரப்பிரமஸ்வரூபமான திப்படி சொலலப்பட்டதேயாகும். இதற்கு இந்தப் பிரமமென்னு நாமமானது சுபாவமாம. இதற்கு வேருன தொன்றுமில்லை—என்பதாம்.

(இ-ம்.) ஆத்மா, தனது சங்கற்பத்தின லதிஷ்டானமா யுண்டாகிய தன்னைமறந்து, ஆரோபிதமான சகத்தாகத் தோற்றப்பட்டாலும், தானகவே விளங்கிக்கொண் டிருக்குமென்பதாம். (௪௦)

## திரிஸ்ய விலக்கண மறிவித்தல்.

பொருகடலிற்றிரைமுதலாய் பிறந்தவெல்லாம் புனலாகிவிளங்காமற் புழுதியாமோ, வொருபொருளாம்பிரமமாத் திரமே யல்லா லுபயமெனுங்கற்பனைப்பே ரொன்றுமில்லை, யெரியிடத்திற்சூடுமாத் திரமேயல்லா லிரண்டுண்டோ வவ்வகைபோ லென்றுமொன்ருஞ், சரிதைகிரியாயோகப் பதத்தின்முற்றிச் சாதனங்கணிறைந்தவர்க்கே சாற்றல்வேண்டும்.

(இ-ள்.) பொருகடலில் - மோதாநின்ற சமுத்திரத்தில், திரைமுதலாய்ப் பிறந்தவெல்லாம் - அலைமுதலாகவுண்டான சகலமும், புனலாகிவிளங்காமல் - சலமாகிவிளங்காமல், புழுதியாமோ - புழுதியாமா, (அதுபோல) ஒருபொருளாம் - ஒப்பற்ற வஸ்துவாகிய, பிரமமாத்திரமேயல்லாமல் - பிரமஸ்வரூபமாத்திரமேயல்லாமல், உபயமெனும் - இரண்டென்கின்ற, கற்பனைப்பேர் - ஆகாசாதிகற்பனு நாமங்கள், ஒன்றுமில்லை - ஒன்ருகிலுமில்லை, எரியிடத்தில் - அக்கினியினிடத்தில், சூடுமாத்திரமேயல்லா

மல் - உஷ்ணமாத்திரமேயன்றி, இரண்டுண்டோ - இரண்டுண்டாயிருக்குமோ, அவ்வகைபோல் - அத்தன்மையைப்போல, என்றுமொன்றும் - எப்போதும் பிரமசுபாவமான சகம் (பிரமத்தி) லபின்னமேயாம், சரிதகிரியாயோகம் - சரிதை கிரிகை யோகமென்கின்ற, பதத்தின்முற்றி - மார்க்கங்களின் முதிர்ந்து, சாதனங்கணிறைந்தவர்க்கு - நான்குசாதனங்களுநிறைந்தவர்களுக்கு, சாற்றவேண்டும் - சொல்லவேண்டும்.

(இ-ரை.) மோதாநின்றசமுத்திரத்தில் அலைமுதலாகவுண்டானசகலமும் சலமாகிவிளங்காமல் புழுதியாமா? அதுபோல ஒப்பற்றவஸ்துவாகியப்ரமஸ்வரூபமாத்திரமேயல்லாமல் இரண்டென்கின்ற ஆகாசாதி கற்பனநாமங்கள் ஒன்றுகிலுமில்லை. அக்கினியினிடத்தில் உஷ்ணமாத்திரமேயன்றிஇரண்டுண்டாயிருக்குமோ? அத்தன்மையைப்போல எப்போதும் பிரமசுபாவமான சகம் பிரமத்திலபின்னமேயாம். சரிதை கிரிகையோகமென்கின்ற மார்க்கங்களின் முதிர்ந்து நான்குசாதனங்களு நிறைந்தவர்களுக்கு சொல்லவேண்டும்—என்பதாம்.

(இ-ஃ.) பிரமத்திலுண்டானசகம் அப்பிரமப்ரகாசமாய்விளங்குமென்பதாம். (கக)

---

## பிரமவுபதேச விலக்கணங்கூறல்.

இயற்கைகுணஞ்சோதித்து முன்னேபின்னே யாவையுமாம்
பிரமநீ யென்னல்வேண்டும், வியப்புறவாசையி லுழல்வார்க் கிவ்வா
றோதின் மீளாதநிரகில் வீழ்த்ததாகுந், தியக்குறுபோகத்தாசை
தீர்ந்துபுந்தி தெளிந்தவுனைப்போல்வார்க்கே திகழத்தோன்று, மய
க்கமறவுணர்த்தவல்ல குருவைக்கிட்டா வருந்தியுந்தன்பிறப்பறு
க்கு மகனுமாங்கே.

(இ-ள்.) முன்னே-முன்னமே, இயற்கைகுணஞ்சோதித்து - (சீடன) தியல்பான பக்குவங்களைப்பரிசோதித்து, பின்னே - பின்பு,யாவையுமாம்- சர்வமுமாய் விளங்கிய, பிரமநீயென்னல்வேண்டும் - பிரமஸ்வரூபமே நீயென்றுபதேசிக்கவேண்டும், வியப்புற - அதிசயிக்கும்படி, ஆசையிலுழல்வார்க்கு - விருப்பத்திற் சுழலுபவர்களுக்கு, இவ்வாறோதில் - இந்தப்ரகாரஞ்சொன்னுல், மீளாத நிரகில் - திரும்பாத நரகாக்கினியில், வீழ்த்ததாகும் - தள்ளிவிட்டதாம், தியக்குறு - கலக்கம்பொருந்திய, போகத்தாசைதீர்ந்து - செல்வத்தினது பிரியத்தைவிட்டு, புந்திதெளிந்த - அறிவு தெளிந்திருக்கின்ற, உனைப்போல்வார்க்கே - உனக்குச் சமானமானவர்களுக்கே, திகழத்தோன்றும் - ப்ரகாசமாய்த்தோற்றும், மயக்கமற - மயக்கமில்லாமல், உணர்த்தவல்லகுருவை - அறிவிக்க வல்லமையுடைய வாசாரியரை, கிட்டா - கிட்டி, வருந்தியுந்தன் பிறப்பறுக்கும்-வருத்தமுற்றுவது தனதுபவத்தை நீக்கிக்கொள்ளும், மகனுமாங்கே - சீடனும்முன்சொன்ன ப்ரகாரமே யிருக்கவேண்டும்—எ-று

(இ-ரை.) முன்னமே சீடனதியல்பானபக்குவங்களைப் பரிசோதித்து பின்பு சர்வமுமாய் விளங்கிய பிரமஸ்வரூபமே நீயென்றுபதேசிக்கவேண்டும். அதிசயிக்கும்படி விருப்பத்திற்சுழலுபவர்களுக்கு இந்தப்ரகாரஞ் சொன்னல் திரும்பாத நரகாக்கினியில் தள்ளிவிட்டதாம். கலக்கம்பொருந்திய செல்வத்தினது பிரியத்தைவிட்டு அறிவுதெளிந்திருக்கின்ற உனக்குச்சமானமானவர்களுக்கே ப்ரகாசமாய்த்தோற்றும். மயக்கமில்லாவல் அறிவிக்க வல்லமையுடைய வாசாரியரைக்கிட்டி வருத்தமுற்றுவது தனதுபவத்தை நீக்கிக்கொள்ளும் சீடனும் முன்சொன்ன ப்ரகாரமே யிருக்கவேண்டும்—என்பதாம்.

(இ-ம்.) சர்வம் பிரமமய மென்கின்ற வுண்மையைச் சாதன சதுஷ்டயமுள்ள ஞானதிகாரிக்கே யுபதேசிக்குவேண்டுமென்பதாம். (கஉ)

## சிற்சுபாவமே சகத்தெனல்.

விளக்குமிரவியுமலரு முண்டாயுண்டாம் வீசொளியும்பகற்பொழுதும் விரையும்போலத், துளக்கமில் சித்துண்டாகிலுண்டாஞாலந் தோற்றரவுமாத்திரமே சொரூபமாகும், கிளர்த்தபரமார்த்தத்தா லில்லையென்னக் கேட்டலுமேபாற்கடல்போற் கெம்பீரத்தா, லளக்கரிதாய்ச்சீதளமா யமலமாகி யற்புதமாநின்மொழியென் றண்ணல்சொல்வான்.

(இ-ள்.) விளக்கும் - தீபமும், இரவியும் - சூரியனும், மலரும் - புஷ்பமும், உண்டாய் - உண்டாயிருக்கும்போதே, வீசொளியும் - வீசப்பட்டப்ரகாசமும், பகற்பொழுதும் - பகற்காலமும், விரையும் - வாசனையும், உண்டாம்போல - உண்டானதுபோல, துளக்கமில் - அச்சமில்லாத, சித்துண்டாகில் - சித்துண்டானல், ஞாலமுண்டாம் - சகமுண்டாயிருக்கும், தோற்றரவுமாத்திரமே - ப்ரதிபாமாத்திரமே, சொரூபமாகும் - (அதற்கு) வடிவமாயிருக்கும், கிளத்தபரமார்த்தத்தால் - சொல்லியவிதார்த்தத்தால், இல்லையென்ன - இல்லையென்று (வசிட்டமுனிசொல்ல), கேட்டலும் - ஸ்ரீராமன்கேட்கவும், பாற்கடல்போல் - க்ஷிரசமுத்திரத்தைப்போல, கெம்பீரத்தால் - ஆழ்ந்த கருத்தினல், அளக்கரிதாய் - அளக்கக்கூடாததாயும், சீதளமாய் - குளிர்ச்சியாயும், அமலமாகி - நிருமலமாயுமிருக்கின்ற, நின்மொழி - தேவரீர் வாக்கியம், அற்புதமாமென் றண்ணல்சொல்வான் - அதிசயமாகுமென்று ஸ்ரீராமன் சொல்லுவார்—எ-று.

(இ-ரை.) தீபமும், சூரியனும், புஷ்பமும், உண்டாயிருக்கும் போதே வீசப்பட்டப்ரகாசமும், பகற்காலமும், வாசனையும், உண்டானதுபோல அச்சமில்லாத சித்துண்டானல்சகமுண்டாயிருக்கும். ப்ரதிபாமாத்திரமே அதற்குவடிவமாயிருக்கும். சொல்லிய

விதார்த்தத்தால் இல்லையென்று வசிட்டமுனிசொல்ல, ஸ்ரீராமன் கேட்கவும் க்ஷீரசமுத்திரத்தைப்போல ஆழ்ந்த கருத்தினால் அளக்கக்கூடாததாகியும், குளிர்ச்சியாயும், நிருமலமாயுமிருக்கின்ற தேவரீர் வாக்கியம் அதிசயமாகுமென்று ஸ்ரீராமன் சொல்லுவார்

(இ-ம்.) சகமானது, சிற்சங்கற்பத்தாற்றோற்றியச்சிற் ப்ரகாசமாகவே விளங்குமென்பதாம். (௧௫)

---

சர்வமுமாய் விளங்குகின்ற வாத்மாவுக்குச் சங்கற்பம் வந்தகாரண மியாதெனின்.

இம்மொழிகளாலிமைப்போ திருளாமீள விமைப்போதுவெளியாகு மிவ்வாறாகி, மைம்முகிலாலற்பமாய் வெய்யிற்சீதம்வந்து வந்துபோகின்ற மழைநாளொத்தேன், மெய்ம்முனியேயநந்தமாய்ப் பலவாயொன்றாய் வீயாதாயளக்கரிதாய் விளக்கமெய்தி, செம்முறையாமாத்தும தத்து வத்துக்கிந்தச்செய்தொழில்கள்வந்தவா செப்புகென்றான்.

(இ-ள்.) இம்மொழிகளால் - இந்த வசனங்களினால், இமைப்போதிருளாம் - இமைநேரத்தின் மறைப்பாகியும், மீள - திரும்ப, இமைப்போது- இமை நேரத்தில், வெளியாகும் - வெளியாகியுமிருக்கின்ற, இவ்வாறாகி - இந்தப்ரகாரமாய், மைம்முகிலால் - கறுத்தமேகத்தினால், அற்பமாய் - அற்பமாக, வெய்யில் - வெய்யிலும், சீதம்-குளிர்ச்சியும், வந்துவந்துபோகின்ற- (அடிக்கடி) வருவதும் போவதுமாயிருக்கின்ற, மழைநாளொத்தேன்-கார்காலத்துக்கொப்பானேன், மெய்ம்முனியே - உண்மையான வசிட்டமுனியே, அநந்தமாய் - முடிவில்லாததாகியும், பலவாய் - அநேகமாகியும், ஒன்றாய் - ஏகமாயும், வீயாதாய் - கெடாத (சத்தியை)யுடையதாகியும், அளக்கரிதாய் - அளக்கக்கூடாததாகியும், விளக்கமெய்தி - ப்ரகாசத்தையடைந்து, செம்முறையாம் - பெருமையுள்ள குணத்தையுடையதாகியு மிருக்கின்ற, ஆத்தும தத்துவத்துக்கு - ஆத்மஞானத்துக்கு, இந்தச்செய்தொழில்கள் - இக்கிரிகைகளானவை, வந்தவா - உண்டானப்ரகாரம், செப்புகென்றான் - சொல்லுமென் றிராமன்கேட்டார்—எ-று.

(இ-டை.) இந்த வசனங்களினால் இமைநேரத்தின் மறைப்பாகியும், திரும்பஇமைநேரத்தில்வெளியாகியுமிருக்கின்ற இந்தப்ரகாரமாய் கறுத்த மேகத்தினால் அற்பமாக வெய்யிலும்குளிர்ச்சியும் அடிக்கடி வருவதும் போவதுமாயிருக்கின்ற கார்காலத்துக் கொப்பானேன். உண்மையான வசிட்டமுனியே முடிவில்லாததாகியும், அநேகமாகியும், ஏகமாகியும், கெடாதசத்தியையுடையதாகியும்,

அளக்கக்கூடாததாகியும், ப்ரகாசத்தையடைந்து பெருமையுள்ள குணத்தையுடையதாகியு மிருக்கின்ற ஆத்மஞானத்துக்கு இக்கிரிகைகளானவை உண்டானப்ரகாரம் சொல்லுமென் றிராமன்கேட்டார்—என்பதாம். (கச)

அக்காரண மனுபவத்திற் றேற்றுமெனல்.

மெய்யானப்பொருளுடைய வாக்கியத்தின் மெய்ப்பொருளாய்முன்னொடுபின் விரோதமின்றிக், கையாருநெல்லியெனக்காட்டவல்ல கட்டுரையேயாமிங்கு கழறிற்றெல்லா; மெய்யானஞானவிழி வெளியாய்ப்போதம் விரியவுதித்தாலென் சொலென்னும்வித்து, கையாரவலிதெழிதென் றுள்ளவாறு கலக்கமறநிலைநின்று காண்டியன்றே.

(இ-ள்.) மெய்யானபொருளுடைய - இதார்த்தமாகிய வருத்தத்தையுடைய, வாக்கியத்தின் - மஹாவாக்கியத்தினது, மெய்ப்பொருளாய் - தத்துவார்த்தமாய், முன்னொடுபின் விரோதமின்றி - முன்னுக்குப்பின் விரோதமில்லாமல், கையாருநெல்லியென - கரதலாமலகத்தைப்போல, காட்டவல்ல - (ப்ரத்தியக்ஷமாகக்) காட்ட வல்லமையுடைய, யாமிங்குகழறிற்றெல்லாம் - நாமிவ்விடத்திற் சொல்லியவனைத்தும், கட்டுரையே - உறுதிவசனமேயாம், மெய்யான ஞானவிழி - உண்மையான ஞானதிருஷ்டியானது, வெளியாய் - ப்ரசன்னமாய், போதம்விரியவுதித்தால் - அறிவு வியாபகமாக வுதயமானால், என்சொல்லெனும்வித்து-எனதுவாக்கியமென்கின்ற ஞானத்தை, கையார - கையிற் பொருந்தும்படியாக, வலிது - வலிதென்றும், எளிது - எளிதென்றும், உள்ளவாறு - உள்ளப்ரகாரமாய், கலக்கமற - கலக்கமின்றி, நிலைநின்றுகாண்டி - நிலையாகவிருந்து பார்ப்பாய்.

(இ-ரை) இதார்த்தமாகிய வருத்தத்தையுடைய மஹாவாக்கியத்தினது தத்துவார்த்தமாய், முன்னுக்குப் பின்விரோதமில்லாமல் கரதலாமலகத்தைப் போல ப்ரத்தியக்ஷமாகக்காட்ட வல்லமையுடைய நாமிவ்விடத்திற் சொல்லியவனைத்தும் உறுதிவசனமேயாம். உண்மையான ஞானதிருஷ்டியானது ப்ரசன்னமாய் அறிவு வியாபகமாக வுதயமானால் எனதுவாக்கியமென்கின்ற ஞானத்தை கையிற்பொருந்தும்படியாக வலிதென்றும் எளிதென்றும் உள்ள ப்ரகாரமாய் கலக்கமின்றி நிலையாகவிருந்து பார்ப்பாய்—எ-ம்.

(இ-உ-க-ம்.) சங்கற்பமுதித்தகாரணம் அச்சங்கற்பமொடுங்கினவிடத்தொளிருமென்பதாம். (கரு)

## மாயாநாசநிரூபணம்.

தன்னுருவமாய்வதற்கே முயல்வதாகித் தமமொழித்தவவிச்சையினாற் சகலமான, வின்னலுறுகுற்றமிலா விச்சையெய்து மெய்கணைகள்கணையாலேநஞ்சைநஞ்சாற், றுன்னுபகைபகையாலே தீதுதீதாற் றுடைப்பதுபோலவித்தைதனைத் துடைத்தல்வேண்டு, முன்னியுறப்பார்த்தலுமே யிதன்சுபாவ மொழிந்துபோய்த்தன் மாய்வா லுதவுமின்பம்.

(இ-ள்.) தன்னுருவம் - தனதுருவமானது, மாய்வதற்கே - கெடுவதற்கே, முயல்வதாகி - எத்தனஞ்செய்வதாய், தமமொழித்த - அந்தகாரத்தை நீக்கிய, அவிச்சையினால் - (உத்தமமாகிய) வவித்தையினால், சகலமானவின்னலுறு - சகலதுன்பமும் பொருந்திய, குற்றமிலாவிச்சையெய்தும் - குற்றமற்ற ஞானம்வரும், எய்கணைகள் கணையால் - எய்யாநின்றவம்புகளை யம்புகளாலும், நஞ்சை நஞ்சால் - விடத்தை விடாவிடதங்களினாலும், துன்னுபகைபகையால் - நெருங்கிய சத்துருவைச் சத்துருவினாலும், தீதுதீதால் - தீய (வழுக்கைத்) தீய (வழுக்கி) னாலும், துடைப்பதுபோல் - கெடுப்பதுபோல, அவித்தைதனை - அஞ்ஞானத்தை, துடைத்தல் வேண்டு - கெடுக்கவேண்டும், உன்னியுறப்பார்த்தலும் - கருதி விசாரித்துப் பார்த்தவளவில், இதன் சுபாவமொழிந்துபோய் - இவ்வவித்தையினது சுபாவநீங்கி, தன்மாய்வால் - தனதவித்தாநாசத்தினால்,இன்பமுதவும் - பிரமாநந்தத்தைக் கொடுக்கும்—எ-று.

(இ-ரை.) தனதுருவமானது கெடுவதற்கே எத்தனஞ்செய்வதாய் அந்தகாரத்தை நீக்கிய உத்தமமாகியவவித்தையினால் சகலதுன்பமும்பொருந்திய குற்றமற்ற ஞானம்வரும். எய்யாநின்றவம்புகளை யம்புகளாலும், விடத்தை விடாவிடதங்களினாலும், நெருங்கிய சத்துருவைச் சத்துருவினாலும், தீயவழுக்கைத் தீயவழுக்கினாலும், கெடுப்பதுபோல அஞ்ஞானத்தைக்கெடுக்கவேண்டும். கருதிவிசாரித்துப் பார்த்தவளவில் இவ்வவித்தையினது சுபாவநீங்கி தனதவித்தாநாசத்தினால் பிரமாநந்தத்தைக் கொடுக்கும்—எ-ம்.

(இ-ம்.) அசுத்தமாயையைச் சுத்தமாயையாற் கெடுக்கவேண்டுமென்பதாய். (கசு)

---

### மாயையான தேதார்த்தயாகவேயின்றேனல்.

நனிமெய்யாய்மாயையில தென்றிவ்வாறு நாடுவாய்ஞானியாய் ஞானம்பெற்றார், றுனிசெயுமீதுளமாயை யறுதியன்றே துகளிலாநற்போதந் தோன்றுமட்டும், பனிமாயையில்லையென லென்சொல்லாலே பழுதில்லாவறுதியுறப் பற்றிநிற்பாய், புனிதமுறுபி

ரமமே யெல்லாமென்று புந்தியிற்க ண்டோர்முத்தி பொருந்தி ளுரே.

(இ-ள்.) நனிமெய்யாய் - மிகவுமுண்மையாய், மாயையிலதென்று-மாயையில்லையென்று, இவ்வாறுநாடுவாய் - இந்தப்ரகாரஞ் சிந்திப்பாய், ஞானியாய் - ஞானத்தை யுடையவனுய், ஞானம்பெற்றால் - (சீவேஸ்வர வைக்கியமான ஸ்வரூப) ஞானத்தைப்பெற்றால், துனிசெயும் - துன்பத்தைச்செய்கின்ற, ஈதுளமாயையறுதி - இந்தவவித்தையின் சுபாவத்தை யறிவாய், துகளிலாநற்போதம் - குற்றமற்ற சுகஞானமானது, தான்றுமட்டும் - உதயமாகுமளவும், பனிமாயையில்லையெனல் - நடுக்கஞ்செய்யு மாயையான தில்லையென்பதை, என்சொல்லால் - எனதுவாக்கியத்திஞல், பழுதிலாவறுதியுற - தவறில்லாத நிச்சயமாக, பற்றிநிற்பாய் - பிடித்திருப்பாய், எல்லாம் - சகலமும், புனிதமுறு - பரிசுத்தமுள்ள, பிரமமேயென்று - பிரமஸ்வரூபமேயென்று, புந்தியிற்கண்டோர் - அறிவிஞற்றரிசித்தவர்கள், முத்திபொருந்திஞேர் - மோக்ஷமடைந்தவர்கள்—எ-று.

(இ-ரை.) மிகவுமுண்மையாய் மாயையில்லையென்று இந்தப்ரகாரஞ்சிந்திப்பாய். ஞானத்தையுடையவனுய் சீவேஸ்வரவைக்கியமான ஸ்வரூப ஞானத்தைப்பெற்றால் துன்பத்தைச்செய்கின்ற இந்த வவித்தையின் சுபாவத்தை யறிவாய். குற்றமற்ற சுகஞானமானது உதயமாகுமளவும் நடுக்கஞ்செய்யு மாயையான தில்லையென்பதை எனது வாக்கியத்திஞல் தவறில்லாத நிச்சயமாக பிடித்திருப்பாய் சகலமும் பரிசுத்தமுள்ள பிரமஸ்வரூபமேயென்று அறிவிஞற் றரிசித்தவர்கள் மோக்ஷமடைந்தவர்கள்—என்பதாம்.(கஎ)

### மாயையைக்கெடுக்கு முபாயத்தை யறிவித்தல்.

பேதமுறுபுந்தியே மாயையாகு பெரிதுவருந்தியுமிதனைப் போக்கல்வேண்டும், போதமுறுபேற்றிஞலன்றிமாயைப்பொருந் தியின்கரைதோன்றுப் பொருந்தத்தோன்றி, லேதமறுமப்பதமே யிறவாவீடா மிம்மாயைபிறப்பிடமே தென்னவேண்டாஞ், சேத முறக்கொல்வழியே தென்றுதேர்வாய் சிதைவுற்று லிதனியல்பு தெரியுமன்றே.

(இ-ள்.) பேதமுறுபுந்தியே - பேதமுள்ளஞானமே, மாயையாகும் - மாயையாம், பெரிதுவருந்தியும் - மிகவும் வருத்தமுற்றுவது, இதனைப்போக்கல்வேண்டும் - இம்மாயைக் கெடுக்கவேண்டும், போதமுறுபேற்றிஞலன்றி - ஞானமுள்ள வாத்மலாபத்தாலல்லாமல், மாயை-மாயையென்னும்,

பொருந்தியின்கரைதோன்ற - அலைகளடிக்கின்ற வாற்றின்கரை தோற்றுவாம், பொருந்தத்தோன்றில்-நன்றாகத்தோற்றினல், ஏதமறுமப்பதமே-குற்றமற்றவப்பதமே, இறவாவீடாம் - நசியாதநிருவாணமாம், இம்மாயை-இந்த மாயையானது, பிறப்பிடமே தென்னவேண்டாம் - உண்டாகிய தெந்தவிடமென்று விசாரிக்கவேண்டாம், கேதமுறக்கொல்வழி யேதென்று-கெடும்படி கெடுக்கின்றமார்க்கமெதுவென்று, தேர்வாய்- (ஸ்ரீராமா) விசாரித்தறிவாய், சிதைவுற்றால் - கெடுமானல், இதனியல்பு தெரியும் - இம்மாயை யுண்டான குணந்தெரியும்—எ-று.

(இ-கா.) பேதமுள்ள ஞானமே மாயையாம். மிகவும்வருத்த முற்றாவது இம்மாயையைக் கெடுக்கவேண்டும். ஞானமுள்ள வாத்மலாபத்தா லல்லாமல் மாயையென்னும் அலைகளடிக்கின்ற வாற்றின்கரை தோற்றுவாம். நன்றாகத் தோற்றினல் குற்றமற்ற வப்பதமே நசியாத நிருவாணமாம் இந்த மாயையானது உண்டாகிய தெந்தவிடமென்று விசாரிக்க வேண்டாம் கெடும்படி கெடுக்கின்ற மார்க்கமெதுவென்று ஸ்ரீராமாவிசாரித்தறிவாய். கெடுமானல் இம் மாயை யுண்டான குணந்தெரியும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) மாயையிலிருப்பவ னம்மாயையைக்கெடுக்காவிடி னம் மாயாதீதம் வெளிப்படாதென்பதாம். (கஅ)

---

பிரமத்தி லபின்னமான வாத்மசத்யுண்டான தறிவித்தல்.

யாதினிற்றோன்றியதென்று மியாதீதென்று மிறந்தநெறியாதென்று மிறந்தாற்றோன்று, மாதலினல்வன்றுயரின் சாலையான வவித்தையெனுநோய்க்குமருந்தருந்தச்செய்தாற், றீதுபயில்பிறப்பென்னுங்கடலின்மூழ்காம் செறிகாற்றுதன்னுருவாஞ் சேணிறன்றூற், சாதமுறத்திரிவதுபோற் றன்பாற்றோன்றுஞ் சத்தியினலாத்துமதத்துவநின்றொல்கும்.

(இ-ள்.) யாதினிற்றோன்றியதென்றும் - (இந்தமாயையான) தெதிலுண்டானதென்றும், ஈதுயாதென்றும் - இதெப்படிப்பட்டதென்றும், இறந்த நெறியாதென்றும் - ஈதிறந்தமார்க்கமெதுவென்றும், இறந்தாற்றோன்றும் - நசித்தாற்றோற்றும், ஆதலினல் - ஆகையால், வன்றுயரின்சாலையான - வலியதுன்பத்தினிருப்பிடமான, அவித்தையெனுநோய்க்கு- அஞ்ஞானமென்னும் வியாதிக்கு, மருந்தருந்தச்செய்தால் - ஞானவிடத்தைப் புசிக்கக்கொடுத்தால், தீதுபயில்பிறப்பென்னும் - தீமையுள்ள சநநமென்கின்ற, கடலின்மூழ்காய் - சமுத்திரத்தில் (ஸ்ரீராமா) நீயழுந்தமாட்டாய், செறிகாற்று - நெருங்கியவாயுவானது, தன்னுருவாஞ்சேணிறன் - தனக் (காதார) ரூபமானவிண்ணில், சாதமுறத்திரிவதுபோல் - உண்டாகிச் சஞ்

சரிப்பதுபோல, தன்பாற்றேன்றுஞ்சத்தியினல் - பிரமத்திலுதித்தசிற்சத்தியால், ஆத்துமசத்துவகின்ெறல்கும் - ஆத்மசத்தைவிளங்கும்—எ-று.

(இ-ஊ.) இந்தமாயையான தெதிலுண்டானதென்றும், இதெப்படிப்பட்டதென்றும், ஈதிறந்தமார்க்கமெதுவென்றும், நசித்தாற்றேற்றும். ஆகையால் வலியதுன்பத்தி னிருப்பிடமான அஞ்ஞானமென்னும்வியாதிக்கு ஞானவிடத்தைப் புசிக்கக்கொடுத்தால் தீமையுள்ள சநநமென்கின்ற சமுத்திரத்தில் ஸ்ரீராமா நீ யழுந்தமாட்டாய். நெருங்கியவாயுவான து தனக்காதாரரூபமானவிண்ணில் உண்டாகிச்சஞ்சரிப்பதுபோல பிரமத்திலுதித்த சிற்சத்தியால் ஆத்மசத்தைவிளங்கும்—என்பதாம். (ககூ)

---

### ஆத்மசத்தியிற் பின்னமான காலதேச கிரியாசத்தியுண்டாதல்.

நொய்யநெடுஞ்சிற்கடறன் னிடத்தேயற்ப நுடக்கத்தாற்கணம்விளங்கு நுண்மைநோக்கா, லையமறத்தறபதமொன் றகண்டமென்றே யழுந்துவாயக்கடலி லசைந்துசற்றே, மெய்யறிவாஞ் சிற்சத்திக் கணக்காலத்தின் முழுதுறுசத் தியினுலுமுழங்கத்தோன்றித், துய்யவிடங்காலமொடு தொழில்கண்மூன்றுந் தூயனசத்திகடம்மைத் துணையாய்ச்சேர்க்கும்.

(இ-ள்.) நொய்யநெடும் - சொச்சமாய்வியாபித்திருக்கின்ற, சிற்கடறன்னிடத்து - ஞானசாக்கிரத்தில், அற்பநுடக்கத்தால் - அற்பவசையினல், கணம்விளங்கும் - (சீவேஸ்வரசகமென்னுங்) குழாங்கள் ப்ரகாசிக்கும், நுண்மைநோக்கால் - சூட்சும (ஞான) திருஷ்டியினல், ஐயமறத்தற்பதமொன்று - சந்தேகமின்றி பிரமஸ்வரூபமொன்றையுமே, அகண்டமென்று - அகண்டாகாரமென் (றெண்ணி), அக்கடலிலழுந்துவாய் - அந்த ஞானசமுத்திரத்தின் முழுகுவாய், சற்றசைந்து - சற்றேயசைவுற்று, மெய்யறிவாஞ்சிற்சத்தி - வியாபகஞானமாகிய ஞானசத்தியானது, கணக்காலத்தில் - க்ஷணநேரத்தில், முழுதுறுசத்தியினுலும் - சர்வசத்தியினுலும், முழங்கத்தோன்றி - ஒலிக்கவுண்டாகி, துய்ய-அறிவின்றிரிபாகிய, இடம்-இடமும், காலம் - காலமும், தொழில்கள் - தொழில்களுமாகிய, மூன்று தூயனசத்திகடம்மை - மூன்றுபரிசுத்தமுள்ள சத்திகளை, துணையாய்ச்சேர்க்கும் - சகாயமாகச் சேர்ந்துக்கொள்ளும்—எ-று.

(இ-ஊ.) சொச்சமாய் வியாபித்திருக்கின்ற ஞானசாக்கிரத்தில் அற்பவசையினல் சீவேஸ்வரசகமென்னுங் குழாங்கள் ப்ரகாசிக்கும். சூட்சுமஞானதிருஷ்டியினல் சந்தேகமின்றி பிரமஸ்வரூபமொன்றையுமே அகண்டாகாரமென்றெண்ணி அந்தஞானசமுத்தி

ரத்தின் முழுகுவாய். சற்றேயசைவுற்று வியாபகஞானமாகிய ஞானசத்தியானது க்ஷணநேரத்தில் சர்வசத்தியினாலும் ஒலிக்கவுண்டாகி அறிவின் றிரிபாகியஇடமும், காலமும். தொழில்களுமாகிய மூன்றுபரிசுத்தமுள்ள சத்திகளை சகாயமாகச் சேர்ந்துக்கொள்ளும்—என்பதாம். (உo)

இதுவுமது

தனதுசுபாவத்தையறிந் தநந்தமானதற்பதத்திலிருந்துஞ்சிற் சத்திதானே, யெனதுருவிவ்வளவென்றே யளவுற்றுப்போலெண்ணுறுமிப்படியுருவை யிதுபாவிக்கி, லனுகதமாயப்பொழுதே பெயர்களெல்லை யாதியாம்பார்வைகள்வந் தடையாநிற்கும், கனவிகற்பந்தருவடிவாய்ச் சித்துரூபங் கவரிடங்காலந் தொழிற்குக் கலந்தபற்றும்.

(இ-ள்.) தனது சுபாவத்தையறிந்து - தனது ஸ்வரூபத்தையறிந்து, அநந்தமான - முடிவில்லாத, தற்பதத்திலிருந்தும் - பிரமபதத்திலிருந்தும், சிற்சத்திதான் - ஞானசத்தியானது, எனதுருவிவ்வளவென்று - எனதுவடிவ மிவ்வளவு (ப்ரமாண) முள்ளதென்று, அறிவுற்றுப்போல்-அறிந்ததுபோல, எண்ணுறும் - பாவிக்கும், இப்படி - இந்தப்ரகாரம், உருவையிதுபாவிக்கில் - இந்தச் சிற்சத்தி தனது ஸ்வரூபத்தைப்பாவனைசெய்யில், அனுகதமாய் - தொடர்பாக, அப்பொழுது - அக்காலத்தில், பெயர்கள் - நாமங்களின், எல்லையாதியாம் - அளவுமுதலிய, பார்வைகள் நோக்கானவை, வந்தடையாநிற்கும் - வந்தடையும், கனவிகற்பம்-மிகுந்தவிகற்பங்களை, தருவடிவாய் - கொடுக்குமாகாரமாய், சித்துரூபம் - சித்ஸ்வரூபமானது, கவரிடம் - கிரிகிக்குமிடத்துக்கும், காலந்தொழிற்கும் - காலத்துக்குஞ்செயலுக்கும், கலந்தபற்றும் - சேர்ந்தபந்தமாம்—எ-று.

(இ-கா.) தனது ஸ்வரூபத்தையறிந்து முடிவில்லாத பிரமபதத்திலிருந்தும் ஞானசத்தியானதுஎனதுவடிவ மிவ்வளவுப்ரமாணமுள்ளதென்று அறிந்ததுபோலப் பாவிக்கும். இந்தப்ரகாரம் இந்தச்சிற்சத்தி தனது ஸ்வரூபத்தைப் பாவனைசெய்யில் தொடர்பாக அக்காலத்தில் நாமங்களின் அளவு முதலியநோக்கானவை வந்தடையும். மிகுந்தவிகற்பங்களைக் கொடுக்குமாகாரமாய் சித்ஸ்வரூபமானது கிரிகிக்குமிடத்துக்கும் காலத்துக்குஞ் செயலுக்கும் சேர்ந்தபந்தமாம்—எனபதாம். (உக)

---

## ஆத்மாவி லகங்காரமுதலிய பேதமுண்டான தறிவித்தல்.

ஈங்குரைசெய்சித்தினுடை யுருவந்தன்னை யாவருஞ்சேத்திரக்கியனென் றியம்பாநிற்ப, ராங்கதுவும் வாதனையைச் செய்யாநின்

றேயகங்காரபாவனையையடையாநிற்கும், வாங்கருமாங்காரமுநிச்சயிப்பதாகி மலினமுறுபுந்தியா மலஞ்சேர்புந்தி, வீங்கியகற்பனை வடிவாய் மனனநெஞ்சாம் விகற்பமிகு மனம்பொறியா மெல்ல வந்தே.

(இ-ள்.) ஈங்குரைசெய்-இவ்விடத்திற் சொல்லாநின்ற, சித்தினுடையுருவந்தன்னை - ஞானத்தினது ஸ்வரூபத்தை, யாவரும் - சகலரும், சேத்திரக்கியனென்றியம்பாநிற்பர் - சீவனென்று சொல்லுவார்கள், அதுவும்-அச்சீவனும், வாதனையைச்செய்யாநின்று - வாதனையைச்செய்துகொண்டு, அகங்காரபாவனையை - அகம்பாவனையை, அடையாநிற்கும் - அடைந்திருக்கும், வாங்கருமாங்காரமும் - வணக்கக்கூடாத வகங்காரமும், நிச்சயிப்பதாகி - நிச்சயிக்குந் (தொழிலை) யுடையதாய், மனலினமுறுபுந்தியாம் - களங்கமுள்ளபுத்தியாம், மலஞ்சேர்புந்தி - களங்கநிறைந்த புத்தியானது, வீங்கியகற்பனை வடிவாய் - மிகுந்தகற்பனுகாரமாய், மனனநெஞ்சாம்-மனனமுள்ளமனதாம், விகற்பமிகுமனம்-விகற்பமிகுந்தமனது, மெல்லவந்து-மெதுவாகவந்து, பொறியாம் - இந்திரியங்களாம்—எ-று.

(இ-ரை.) இவ்விடத்திற் சொல்லாநின்ற ஞானத்தினது ஸ்வரூபத்தை சகலரும் சீவனென்று சொல்லுவார்கள். அச்சீவனும் வாதனையைச் செய்துகொண்டு அகம்பாவனையை அடைந்திருக்கும். வணக்கக்கூடாத வகங்காரமும் நிச்சயிக்குந் தொழிலையுடையதாய் களங்கமுள்ள புத்தியாம், களங்கநிறைந்த புத்தியானது மிகுந்த கற்பனுகாரமாய் மனனமுள்ள மனதாம் விகற்பமிகுந்த மனதுமெதுவாகவந்து இந்திரியங்களாம்—என்பதாம். (உஉ)

---

## ஆத்மசத்தி பந்தமடைவ தறிவித்தல்.

கரசரணமயவுடலைம் பொறிகளென்பர் கவல்வுறவிப்படியன்றோகலந்துசீவன், விரவியசங்கற்பமெனும் பாசத்தாலேவீக்குண்டு துன்பவலை வீசப்பட்டுத், தரமறவீனதையடையவே யடையாநிற்குஞ்சத்திமயமாமனமித்தன்மையாகிப், பொரவகங்காரதைமேவிக் கோசகாரப் புழுப்போற்றன் னிச்சையினுற் பூணும்பந்தம்

(இ-ள்.) ஐம்பொறிகள் - பஞ்சவிந்திரியங்களே, கரசரணமயவுடலென்பர் - பாணிபாதாகாரமான சரீரமென்று சொல்லுவார்கள், கவல்வுறவிப்படியன்றோ - வருந்தவிப்படியல்லவா, கலந்துசீவன் - கலந்திருக்கின்ற சீவனுனவன், விரவியசங்கற்பமெனும் - கலந்தசங்கற்பமென்கின்ற,பாசத்தால் வீக்குண்டு - கயற்றினுற்கட்டுப்பட்டு, துன்பவலைவீசப்பட்டு - துக்க

மென்னும் வலையினுலெறியப்பட்டு, தரமரவீனதை - தரமின்றியிழிவை அடைவேயடையாகிற்கும் - கிரமமாகவடையும், சத்திமயமாமனம் - சத்திமயமாகிய மனமானது, இத்தன்மையாகி - இவ்வண்ணமாய், பொரவகங்காரதைமேவி - பொருதற் ககம்பாவத்தைப்பொருந்தி, கோசகாரப்புழுப்போல் - கோசகாரக்கிருமியைப்போல், தன்னிச்சையினுல் - தனதாசையினுல், பந்தம்பூணும் - பந்தத்தைத்தரிக்கும்—எ-று.

(இ-ள.) பஞ்சவிந்திரியங்களே பாணிபாதாகாரமான சரீரமென்று சொல்லுவார்கள். வருந்தவிப்படியல்லவா? கலந்திருக்கின்ற சீவனுனவன் கலந்த சங்கற்பமென்கின்ற கயற்றிறுற்கட்டுப்பட்டு துக்கமென்னும் வலையினு லெறியப்பட்டு தரமின்றியிழிவை கிரமமாகவடையும். சத்திமயமாகிய மனமானது இவ்வண்ணமாய் பொருதற் ககம்பாவத்தைப்பொருந்தி கோசகாரக் கிருமியைப் போல தனதாசையினுல் பந்தத்தைத்தரிக்கும்—என்பதாம். (உரு)

இதுவுமது

தானேசங்கற்பித்துத்தன் மாத்திரத்தாற் றனிவலையாமுட்டொழில்க டன்னைக்கட்டக், கானேறுசிங்கம்விலங் குற்றதென்னக் கவலையினுன்மிகவுமனங் கரைந்துசோரு, மானுதமனம்புந்திஞானஞ்செய்கை யகங்காரவாதனையுடலம் பகுதிமாயை, யூனமலங் கருமம் பந்தஞ்சித்த மோதவித்தையிச்சையென வுரைப்பரன்றே.

(இ-ள்.) தானேசங்கற்பித்து - தானேயுண்டாக்கி யிருக்கின்ற, தன் மாத்திரத்தால்-(பஞ்ச) தன்மாத்திரையினுல், தனிவலையாம்- தனித்தவலையாகிய, உட்டொழில்கள் - உள்விருத்திகளானவை, தன்னைக்கட்ட - தன்னைப்பந்தனஞ்செய்ய, கானேறுசிங்கம் - காட்டிலிருக்குமாண்சிங்கமானது, விலங்குற்றதென்ன - காலிற் றளைபூண்டதுபோல, கவலையினுல் - துன்பத்தினுல், மிகவு மனங்கரைந்துசோரும் - மிகவு மனங்கரைந்துவாடும், ஆனுத - நீங்காத, மனம் - மனமென்றும், புத்தி-புத்தியென்றும், ஞானம்-ஞானமென்றும், செய்கை - தொழிலென்றும், அகங்காரம் - அகங்காரமென்றும், வாதனையுடலம் - வாதனு சரீரமென்றும், பகுதி - பிருகிருதியென்றும், மாயை - மாயையென்றும், ஊனமலம் - இழிவாகியமலமென்றும், கருமம் - கன்மமென்றும், பந்தம் - பந்தமென்றும், சித்தம்-சித்தமென்றும், ஓதவித்தை-சொல்லப்பட்டவித்தையென்றும், இச்சையென- ஆசையென்றும், உரைப்பர் - (பெரியோர்கள்) சொல்லுவார்கள்—எ-று.

(இ-ள.) தானே யுண்டாக்கியிருக்கின்ற பஞ்சதன்மாத்திரையினுல் தனித்தவலையாகிய உள்விருத்திகளானவை தன்னைப்பந்தனஞ்செய்யகாட்டிலிருக்கு மாண்சிங்கமானது காலிற்றளைபூண்டது

போல துன்பத்தினுல் மிகவு மனங்கரைந்து வாடும். நீங்காத மன மென்றும், புத்தியென்றும், ஞானமென்றும், தொழிலென்றும், அகங்காரமென்றும், வாதனுசரீரமென்றும், பிரகிருதியென்றும், மாயையென்றும், இழிவாகிய மலமென்றும், கன்மமென்றும், பந்தமென்றும், சித்தமென்றும், சொல்லப்பட்ட வவித்தையென்றும், ஆசையென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்—என்பதாம்.

(இ-சூ-க-ம்.) ஆத்மா தனது சங்கற்பசத்தியினுற் பாஞ்சபூதபௌதிக மா யதனுற்ருன் மறைப்பட்டதுபோலத் தோற்றுமென்பதாம். (உச)

## மனத்தினதுதுன்ப மறிவித்தல்.

அப்பரிசோரோரிடத்தி லோரொன்ருக வாசாபாசத்தினு லமைத்துச்சொன்ன, வொப்பரியசகவிரிவாமிவற்றையெல்லாமுட் கொள்ளும்பலமிதனி லொன்றுமில்லை, கப்புடைய நெடுவடத்தை வடத்தின்வித்து கரந்திருப்பதொக்குமிடர் கவலைத்தீயின், வெப்ப மிக்ககோபப்பாம் பெடுத்துநங்க வேட்கையெனுங் கடற்றிரையான் மேவியுமுள்ளம்.

(இ-ள்.) அப்பரிசு - அந்தப்ரகாரம், ஓரோரிடத்தில் - ஒவ்வோரிடத்தில், ஒரொன்ருக-ஒவ்வொன்ருக, ஆசாபாசத்தினுல் - ஆசாபாசங்களினுல், அமைத்துச்சொன்ன - உண்டாக்கிச்சொல்லிய, ஒப்பரிய-சமானமில்லாத சகவிரிவாம் - உலகத்தினது மிகுதியான, இவற்றையெல்லாம்-இவைகளி யாவையும், உட்கொள்ளும்-அகத்திற்றரித்திருக்கின்ற (மனதுக்கு), பலம்-ப்ரயோசனமானது, இதனிலொன்றுமில்லை - இதனிடத்தி லொன்று மின்று, கப்புடைய - கிளைகளையுடைய, நெடுவடத்தை - நீண்டவாலவிருக்ஷத்தை, வடத்தின்வித்து - ஆலம்விதையானது, கரந்திருப்பதொக்கும்-ஒளித்துவைத்திருக்கின்றதுக்குச் சமானமாம், இடர்க்கவலைத்தீயின்வெப்ப - துன்பாக்கினியினுல் வெதுப்ப, மிகக்கோபப்பாம்பு - மிகுந்த சினமென்னு மலைப்பாம்பினுல், எடுத்துநங்க - எடுத்துவிழுங்க, வேட்கையெனுங் கடற்றிரையால் - ஆசையென்கின்ற சமுத்திரத்தலைகளால், உள்ளமெலியும் - மனந்தளர்வடையும்—எ-று.

(இ-ஶா.) அந்தப்ரகாரம் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொன்ருக ஆசாபாசங்களினுல் உண்டாக்கிச் சொல்லிய சமானமில்லாத உலகத்தினது மிகுதியான இவைகளியாவும் அகத்திற்றரித்திருக்கின்ற மனதுக்கு ப்ரயோசனமானது இதனிடத்திலொன்றுமின்று. கிளையுடைய நீண்டவாலவிருக்ஷத்தை ஆலம்விதையானது ஒளித்துவைத்திருக்கின்றதுக்குச் சமானமாம், துன்பாக்கினியினுல் வெதுப்ப

மிகுந்த சினமென்னு மலைப்பாம்பினால் எடுத்துவிழுங்க ஆசையெ கின்ற சமுத்திரத்தலைகளால் மனந்தளர்வடையும்—என்பதாம்.

(இ-ம்) தனது சங்கற்பரூபமான விடயங்களி லகம்பாவஞ் செய்வத னன் மனம்வருந்துமென்பதாம். (உரு)

## மனதை யிரட்சிக்கவேண்டுமெனல்.

பெருகியவித்துயர்களா லவசமாய்தன் பிதாமகனைமறந்துமி கப் பீடையுற்று, கருகியவிம்மனந்தன்னை யளற்றிலானைக் கரையே ற்றவுடுவதுபோற்கரையிலேற்றாய், வெருவுசராமரணமெனும்விட த்தால்வெந்து மிகு நலந்தீங்கெனும்பகையான் மெலியுநெஞ்சுக், கருள்புரியார்நரர்மனித வடிவமான வரக்கரையருள்வடிவ மான வள்ளால்.

(இ-ள்.) பெருகியவித்துயர்களால் - மிகுந்த வித்துன்பங்களினால், அவசமாய் (தனது) வசந்தப்பி, தன்பிதாமகனைமறந்து - தன்பிரமஸ்வ ரூபத்தைமறந்து, மிகப்பீடையுற்று - மிகுந்த துன்பத்தை யடைந்து, கரு கிய விம்மனந்தன்னை - தீதலுற்றவிந்தமனதை, அளற்றிலானை - சேற்றி லழுந்தியயானையை, கரையேற்றிவிடுவதுபோல் - கரையிலெடுத்து விடு வதைப்போல, கரையிலேற்றாய் - (மாயையினின்றுங்) கரையேற்றுவாய், வெருவுசராமரணமெனும்-பயங்கரமுள்ள மூப்புமரணமென்கின்ற, விடத் தால்வெந்து - விடாக்கினியினாற் றகிக்கப்பட்டு, மிகுநலந்தீங்கெனும் - மிகுந்த நன்மைதீமைகளென்னும், பகையால் - சத்துருவினால், மெலியு நெஞ்சுக்கு - தளருகின்ற மனதுக்கு, அருள்புரியாநரர் - கிருபைசெய்யாத மனிதர்கள், அருள்வடிவமான - கிருபையே வடிவமாயிருக்கின்ற, வள் ளால் - ஸ்ரீராமா, மனிதவடிவமான - நரவடிவமாயிருக்கின்ற, அரக்கர் - இராக்ஷதர்கள்—எ-று.

(இ-ரை.) மிகுந்த வித்துன்பங்களினால் தனது வசந்தப்பிதன் பிரமஸ்வரூபத்தைமறந்துமிகுந்த துன்பத்தையடைந்து தீதலுற்ற விந்தமனதை, சேற்றிலழுந்திய யானையைக் கரையிலெடுத்து விடு வதைப்போலமாயையினின்றுங்கரையேற்றுவாய். பயங்கரமுள்ள மூப்புமரணமென்கின்ற விடாக்கினியினாற் றகிக்கப்பட்டு மிகுந்த நன்மைதீமைகளென்னும் சத்துருவினால் தளருகின்ற மனதுக்கு கிருபைசெய்யாதமனிதர்கள்கிருபையேவடிவமாயிருக்கின்ற ஸ்ரீரா மா ! நரவடிவமாயிருக்கின்ற இராக்ஷதர்கள்—என்பதாம்.

(இ-ம்.) மனதை விடயத்தினின்று திருப்பிப் பிரமத்திற்சேர்க்கவே ண்டு மென்பதாம். (உசு)

### மனம் வெளிமுகப்படுத லிலுண்டான சிருஷ்டிக்கிரம மறிவித்தல்.

இவ்வகைடேசிற்பாவ சீவபேத மியல்வடிவாம் பிரமத்தினி டையேநின்று, வவ்வியபாவனையாலே வந்தகோடி வாராநின்றன கோடி வருவகோடி, தெய்வவரையருவிநீர்த் துளிபோல்வந்தோர் சிலர்பிறவி யொன்றிரண்டு மூன்றுசேர்ந்தோர், நைவருசென்மங் கள்சிலர்நூற்றின்மிக்கோர் நாடரியபவஞ்சிலர்கணண்ணிநின்றோர்.

(இ-ள்.) இவ்வகையே - இந்தப்ரகாரமே, சிற்பாவசீவன் - சித்துவிலா சமாயிருக்கின்ற சீவனானவன், பேதமியல்வடிவாம் - வேற்றுமையான வா காரமாய், பிரமத்தினிடையேநின்று - பிரமத்தினிடத்திலிருந்து, தெய்வ வரை - மேருமலையினின்று, அருவிநீர்த்துளிபோல் - (வருகின்ற) வருவி நீர்த்துளிகள்போல, வவ்வியபாவனையால் - (தாங்) கொண்டபாவனையால் வந்தகோடி - வந்திருக்கின்றவைகளளவில்லனவாம், வாராநின்றகோடி - வருகின்றவைகளளவில்லனவாம், வருவகோடி - (இனி) வரப்பட்டவைக ளளவில்லனவாம், வந்தோர்சிலர் - வந்தவர்களிற்சிலர், பிறவி - சநநத்தை, ஒன்று - ஒன்றை, இரண்டு - இரண்டை, மூன்று-மூன்றை, சேர்ந்தோர்- அடைந்தார்கள், நைவருசென்மங்கள் - துன்பத்தைக்கொடுக்கின்ற சநந ங்கள், சிலர்நூற்றின்மிக்கோர் - சிலர்நூற்றிலு மதிகப்பட்டார்கள், நாட ரியபவம் - அளவிடுதற்கரிய பிறவிகளை, சிலர்கணண்ணிநின்றோர் - சில ரடைந்திருந்தார்கள் —எ-று.

(இ-கா.) இந்தப்ரகாரமே சித்து விலாசமாயிருக்கின்றசீவனா னவன் வேற்றுமையான வாகாரமாய் பிரமத்தினிடத்திலிருந்து மேருமலையினின்று வருகின்ற வருவிநீர்த்துளிகள்போல தாங்கொ ண்ட பாவனையால்வந்திருக்கின்றவைகளளவில்லனவாம். வருகின்ற வைகளளவில்லனவாம். இனிவரப்பட்டவைக ளளவில்லனவாம். வந்தவர்களிற்சிலர் சநநத்தை ஒன்றை இரண்டை மூன்றைஅடைந் தார்கள். துன்பத்தைக்கொடுக்கின்ற சநநங்கள் சிலர் நூற்றிலு மதி கப்பட்டார்கள் அளவிடுதற்கரியபிறவிகளை சிலரடைந்திருந்தார்கள்.

இதுவுமது.

சிலர்சிலர்கள்கின்னரர்கந் திருவராஞேர் சிலர்விச்சாதரருர கர் திரளாய்நின்றோர், சிலராருக்கரிமகிரணன் வருணனுனோர்சிலர் பிரமன்றிருநெடுமால் சிவனாய்நின்றோர், சிலர்மறையோர்சிலரரச ராகிநின்றோர் சிலர்வணிகர் வேளாண்மைச் செயலினின்றோர், சிலர்விலங்கு பறவைகளூர் வனவாய்வந்தோர் சிலரிலைகாய்பழமூலந் திரணமானோர்.

(இ-ள்.) சிலர்கள் கின்னரர் - சிலர் கின்னரராகவும், சிலர் கந்திருவ ராஞேர் - சிலர் கந்திருவராகவுமானுர்கள், சிலர்விச்சாதரர் - சிலர் வித்தியாதரர்களாகவும், உரகர் திரளாய் நின்ருேர் - சிலருரகர்கள் கூட்டமாகவுநின்ருர்கள், சிலரருக்கர் - சிலர் சூரியராகவும், இமகிரணன் - (சிலர்) பனிக்கிரணத்தையுடைய சந்திரராகவும், வருணனுனோர் - (சிலர்) வருணனுகவுமானுர்கள், சிலர் பிரமன் - சிலர் பிரமாவாகவும், திருநெடுமால் - (சிலர்) விஷ்ணுவாகவும், சிவனுய் - (சிலர்) சிவனுகவும், நின்ருேர் - நின்ருர்கள், சிலர்மறையோர் - சிலர் பிராமணர்களாகவும், சிலரரசராகி நின்ருேர் - சிலர்களரசராகவு நின்ருர்கள், சிலர்வணிகர் - சிலர் வைசியராகவும், வேளாண்மைச்செயலினின்ருேர் - (சில) ருபகாரத்தொழிலையுடைய சூத்திரராகவு நின்ருர்கள், சிலர்விலங்கு-சிலர் மிருகங்களாகவும், பறவை-(சிலர்) பட்சிகளாகவும், ஊர்வனவாய்ந்தோர் - (சில) ரூர்வனவாகவும்வந்தார்கள், சிலரிலை - சிலர்பத்திரமாகவும், காய் - (சிலர்) காயாகவும்,பழம்-(சிலர்) கனியாகவும், மூலம்-(சிலர்) வேராகவும், திரணமானேர் - (சிலர்) துரும்பாகவு மானுர்கள்—எ-று.

(இ-ரை.) சிலர் கின்னரராகவும், சிலர் கந்திருவராகவுமானுர்கள். சிலர் வித்தியாதரர்களாகவும், சிலருரகர்கள்கூட்டமாகவு நின்ருர்கள். சிலர் சூரியராகவும், சிலர் பனிக்கிரணத்தையுடைய சந்திரராகவும், சிலர் வருணனுகவு மானுர்கள். சிலர் பிரமாவாகவும், சிலர்விஷ்ணுவாகவும், சிலர் சிவனுகவும் நின்ருர்கள். சிலர் பிராமணர்களாகவும், சிலர்களரசராகவு நின்ருர்கள். சிலர் வைசியராகவும், சிலருபகாரத்தொழிலையுடைய சூத்திரராகவுநின்ருர்கள். சிலர் மிருகங்களாகவும், சிலர் பட்சிகளாகவும், சிலரூர்வனவாகவும் வந்தார்கள். சிலர் பத்திரமாகவும், சிலர் காயாகவும், சிலர் கனியாகவும், சிலர் வேருகவும், சிலர் துரும்பாகவுமானுர்கள்-எ-ம்.

இதுவுமது.

சிலர்மயேந்திரசைலஞ் சையமேரு தென்மலையமந்தரமாய்ச் சிறந்துநின்ருேர், சிலர்கடம்பஞ்செம்பிரந் தாலஞ்சாலஞ் சிறந்ததமாலங்களாய்ச் செறிந்துநின்ருேர், சிலருவரிதயிர் நெய்பாற் கருப்பஞ்சாறு தேனெடுநீர்பெருங்கடலாய்ச் சேர்ந்துநின்ருேர், சிலர் திசைகள் சிலர் நதிகளாகிநின்ருேர் சிலர்மேலோர் சிலர்கீழோர் சீவராஞேர்.

(இ-ள்.) சீவராஞேர் - சீவரானவர்கள், சிலர் - சிலர்கள், மயேந்திர சைலம் - மயேந்திரபருப்பதமாகவும்,சையம்-சையபருப்பதமாகவும், மேரு மகாமேருவாகவும், தென்மலையம்-பொதியமலையாகவும், மந்தரமாய்-மந்தரமலையாகவும், சிறந்துநின்ருேர்-சிறப்பாக நின்ருர்கள்,சிலர்-சிலர்கள்,கடம்

பம்-கடம்பவிருக்ஷமாகவும், செம்பீரம்-எலிமிச்சமரமாகவும், தாலம் - பனையவிருக்ஷமாகவும், சாலம் - ஆச்சாமரமாகவும், சிறந்ததமாலங்களாய் - சிறப்புள்ளபச்சிலைமரமாகவும், செறிந்துநின்றோர்-நெருங்கிநின்றார்கள், சிலர் - சிலர்கள், உவரி-உவராகவும், தயிர்-தயிராகவும், நெய்-நெய்யாகவும், பால்-பாலாகவும், கருப்பஞ்சாறு-கருப்பஞ்சாறாகவும், தேனொடு-தேனாகவும், நீர்-சுத்தசலமாகவுமிருக்கின்ற, பெருங்கடலாய் - மகோததியாக, சேர்ந்துநின்றோர்-அடைந்திருந்தார்கள், சிலர்திசைகள்-சிலர் திக்குகளாகவும், சிலர் நதிகளாகிநின்றோர் - சிலராறுகளாகவு மிருந்தார்கள், சிலர் மேலோர்-சிலருயர்ந்தவர்களாகவும், சிலர் கீழோர் - சிலா தாழ்ந்தவர்களாகவு மிருந்தார்கள்—எ-று.

(இ-ள்.) சிவரானவர்கள் (சிலர்கள்) மயேந்திரபருப்பதமாகவும், சையபருப்பதமாகவும், மகாமேருவாகவும், பொதியமலையாகவும், மந்தரமலையாகவும், சிறப்பாகநின்றார்கள். (சிலர்கள்) கடம்பவிருக்ஷமாகவும், எலுமிச்சமரமாகவும், பனையவிருக்ஷமாகவும், ஆச்சாமரமாகவும்சிறப்புள்ளபச்சிலைமரமாகவும், நெருங்கிநின்றார்கள், (சிலர்கள்) உவராகவும், தயிராகவும், நெய்யாகவும், பாலாகவும், கருப்பஞ்சாறாகவும், தேனாகவும்; சுத்தசலமாகவுமிருக்கின்ற மகோததியாக அடைந்திருந்தார்கள். (சிலர்) திக்குகளாகவும், சிலராறுகளாகவு மிருந்தார்கள். சிலருயர்ந்தவர்களாகவும், சிலர்தாழ்ந்தவர்களாகவு மிருந்தார்கள்—என்பதாம். (உக)

இதுவுமது.

**கையினாலறையுண்ணும் பந்துபோலக்காலனாலறையுண்டுகணக்கிலாத, மெய்யிலேபுகுந்தலுத்து விவேகம்பெற்றும் விரகிலார் சிலர்பிறப்பின் மீண்டும்வீழ்ந்தார், மையினான்மூன்றுலகாம் பணிதி செய்து வருநிற்கும்போமாகி வளர்ந்துவாளாப், பொய்யினான்மிக விரியும் வேலையூடே பொருதிரைபோற்பரபதத்தே புரிந்தமாவை.**

(இ-ள்.) கையினாலறையுண்ணும்-கையினாலடிக்கப்பட்ட, பந்துபோல்-பந்தைப்போல், காலனாலறையுண்டு - காலனாலடிக்கப்பட்டு,கணக்கில்லாத மெய்யில் - அளவற்ற சரீரத்தில், புகுந்து - ப்ரவேசித்து, அலுத்து - சலித்து, விவேகம்பெற்றும் - விவேகமடைந்தும், விரகிலார்சிலர் - அறிவில்லாதசிலபேர்கள், பிறப்பின்மீண்டும்வீழ்ந்தார் - சநநத்திற்றிரும்பவும்விழுந்தார்கள், மையினால் - அஞ்ஞானத்தினால், மூன்றுலகாம்பணிதிசெய்து - திரிலோகமான சிருட்டியைச்செய்து, வருநிற்கும்போமாகி-உற்பத்திஸ்திதிலயமாகும்படி, வளர்ந்து - விரிந்து, வேலையூடு-சமுத்திரத்தில், பொருந்திரைபோல் - மோதுகின்ற வலைகளைப்போல், பரபதத்து - பிரமபதத்

தில், புரிந்தமாயை-சொல்லியமாயையானது, வாளாப்பொய்யினல் - வீணு கமித்தையினுல், மிகவிரியும் - மிகவும் விஸ்தாரமாம்—எ-று.

(இ-ரை.) கையினுலடிக்கப்பட்ட பந்தைப்போல் காலனுலடிக் கப்பட்டு அளவற்ற சரீரத்தில் ப்ரவேசித்து சலித்துவிவேகமடை ந்தும், அறிவில்லாத சிலபேர்கள் சநநத்திற்றிரும்பவும் விழுந்தார் கள். அஞ்ஞானத்தினுல் திரிலோகமான சிருஷ்டியைச்செய்து உற் பத்தி ஸ்திதிலயமாகும்படி விரிந்து சமுத்திரத்தில் மோதுகின்ற வலைகளைப்போல் பிரமபதத்தில் சொல்லிய மாயையானது வீணுக மித்தையினுல் மிகவும் விஸ்தாரமாம்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) சைதன்யத்தில் பின்னமாகவுண்டாகியசிற்சத்தியேபின் னமான ப்ரகிருதி முதற்சீவேஸ்வர சகங்களாகத்தோற்றினதை யறிவித்த தாம். (௯0)

---

### ஆத்மசங்கற்பமான மனது பிரமாவான தெங்ஙனமெனின்.

தெரிந்துணர்ந்தோ னிவ்வாறு செப்பலோடுஞ் சீவன்ருன் மனப்பதத்தைச் சேர்ந்துநின்றும், விரிஞ்சனெனும்பெயர்பெற்ற தெவ்வாறென்று வித்தரத்தாலுள்ளபடி விளம்புகென்னு, வரிந்த மன்கேட்டலும்வசிட்ட னுரைப்பான்வள்ளா லந்தநெறி கேட்ட லுமே யகிலஞானம், புரிந்தநெறியறிதியிதன் றன்மையெல்லாம் புந்தியுறக்கேட்டுணர்வு பொருந்துவாயே.

(இ-ள்.) தெரிந்துணர்ந்தோன் - (சகலமுந்) தெளிந்தறிந்த வசிட்ட முனியானவர், இவ்வாறுசெப்பலோடும் - இவ்வண்ணஞ் சொன்னமாத்திர த்தில், சீவன்ருன் - சீவனுனவன், மனப்பதத்தைச்சேர்ந்துநின்றும் - மன தினிடத்திற் சேர்ந்திருந்தும், விரிஞ்சனெனும்பெயர்பெற்றது - பிரமா வென்னு நாமமடைந்தது, எவ்வாறென்று-எவ்வண்ணமென்று, வித்தரத் தால் - விரிவாக, உள்ளபடி விளம்புகென்னு - உண்மையாகச் சொல்லு மென்று, அரிந்தமன்கேட்டலும் - ஸ்ரீராமன் கேட்கவும், வசிட்டனுரைப் பான் - வசிட்டமுனிசொல்லுவார், வள்ளால் - ஸ்ரீராமா, அந்தநெறிகேட் டலும் - அந்தமார்க்கத்தை நீகேட்டவளவில், அகிலஞாலம் - சகலசகங்க ளும், புரிந்தநெறியறிதி-உண்டான மார்க்கத்தையறிவாய், இதன்றன்மை யெல்லாம் - இதன் குணங்களனைத்தையும், புந்தியுறக்கேட்டு - அறிவிற் பொருந்தக்கேட்டு, உணர்வுபொருந்துவாய் - அறிவையடைவாய்—எ-று.

(இ-ரை.) சகலமுந்தெளிந்தறிந்த வசிட்டமுனியானவர் இவ் வண்ணஞ் சொன்னமாத்திரத்தில் சீவனுனவன் மனதினிடத்திற் சேர்ந்திருந்தும் பிரமாவென்னு நாமமடைந்தது எவ்வண்ணமெ

ன்று விரிவாக உண்மையாகச் சொல்லுமென்று ஸ்ரீராமன் கேட்கவும், வசிட்டமுனி சொல்லுவார். ஸ்ரீராமா! அந்த மார்க்கத்தை நீகேட்டவளவில் சகலசகங்களும் உண்டானமார்க்கத்தையறிவாய் இதன் குணங்களனைத்தையும் அறிவிற்பொருந்தக்கேட்டு அறிவையடைவாய்—என்பதாம். (ஙக)

## ஆத்மாவில் மனமுண்டான தறிவித்தல்-வேறு.

திசைகாலமாதிகளாற் றன்னுடைய சத்தியினுற் றிரியாச்சீவன், பசையான லீலையினுற் றிசைகாலமாதிகளாற் பயின்றமேனி, யிசையாநின்றுளபோதே ஜீவனுக்குப்பரியாய மென்னப்பட்ட, வசையானவாதனையின் வசத்தாலேயுலைமனம்வந்துதோன்றும்.

(இ-ள்) திசை - திக்குகள், காலம் - காலங்கள், ஆதிகளால் - முதலானவைகளால், திரியாச்சீவன் - கெடாத வாத்மாவானது, தன்னுடைய சத்தியினுல் - தனது (சிற்) சத்தியினுல், பசையானலீலையின்-இச்சாவிளையாட்டாகவும், திசைகாலமாதிகளால் - திக்குகாலங்கண்முதலியவிவைகளோடு, பயின்றமேனி - கூடியசரீரத்தை, இசையாநின்றுளபோதே - இசைந்திருக்கின்றபொழுதே, ஜீவனுக்கு - ஜீவாத்மாவுக்கு, பரியாயமென்னப்பட்ட-பரியாயநாமமென்று சொல்லப்பட்ட, வசையானவாதனையின்-குற்றமுள்ள வாசனையின், வசத்தால் - வசத்தினுல், உலையுமனம் வந்து தோன்றும் - சஞ்சலமுள்ள மனமுண்டாகித்தோற்றும்—எ-று.

(இ-ை.) திக்குகள் காலங்கள் முதலானவைகளால் கெடாத வாத்மாவானது தனது சிற்சத்தியினுல் இச்சாவிளையாட்டாகவும், திக்குகாலங்கண் முதலியவிவைகளோடு கூடிய சரீரத்தை இசைந்திருக்கின்றபொழுதே ஜீவாத்மாவுக்கு பரியாய நாமமென்றுசொல்லப்பட்ட குற்றமுள்ள வாசனையின் வசத்தினுல் சஞ்சலமுள்ள மனமுண்டாகித்தோற்றும்—என்பதாம். (ஙஉ)

## மனஞ்சத் ததன்மாத்திரையாகத் தடித்தல்.

செயல்செயலின்மைகளிரண்டுஞ் சேர்ந்தெழுந்தமனச்சத்திசெயலைமேவி, யியல்பின்முத னெய்தாகிச் சத்தவிதையிரதத்திலெழுவதான, வுயர்தருவிண்பாவனையைப் பாவிக்குங் கணத்திலேயுடனேயந்த, வியனலைவின்றன்னெறியா லந்தமனங்கனதையினைமேவுமன்றே.

(இ-ள்.) செயல் - தொழில்களும், செயலின்மைகள் - தொழிலில்லாமைகளுமாகிய, இரண்டுஞ்சேர்ந்தெழுந்த - இவ்விரண்டு மொருமித்

தெழுந்த, மனச்சத்திசெயலைமேவி - மனோசத்தியானது தொழிலையடைந்து, இயல்பின் - சுபாவமாக, முதனொய்தாகி - ஆதியிற் சூட்சுமமாய், சத்தவிதையிரதத்தில் - சத்ததன்மாத்திரைக்கு (விடயமானபாவனையினால்), எழுவதான - உண்டாகிய, உயர்தருவிண்பாவனையை - மேலானவாகாயபாவனையை, பாவிக்குங்கணத்தில் - பாவிக்கின்ற க்ஷணத்தில், உடனே - அப்பொழுதே, அந்தவியன லைவின்றன்னெறியால் - அச்சலனமார்க்கத்தினால், அந்தமனம் - அந்தமனமானது, கனதையின்மேவும் - (ஆகாச) மென்னுங் கனத்தைப்பொருந்தும்—எ-று.

(இ-ள.) தொழில்களும் தொழிலில்லாமைகளுமாகிய இவ்விரண்டுமொருமித்தெழுந்த மனோசத்தியானது தொழிலையடைந்து சுபாவமாக ஆதியிற் சூட்சுமமாய் சத்ததன்மாத்திரைச்கு விடயமானபாவனையினால் உண்டாகிய மேலானவாகாயபாவனையைபாவிக்கின்றக்ஷணத்தில் அப்பொழுதே அச்சலனமார்க்கத்தினால் அந்தமனமானது ஆகாசமென்னுங் கனத்தைப்பொருந்தும்-என்பதாம்.

---

## மனமானது பரிசதன்மாத்திரையாகவு முருபதன்மாத்திரையாகவுந் தடித்தல்.

பரிசவிதையிரதத்தி லெழுவதாங்காற்றசைவைப் பாவித்துன் னும், விரிதருவிண்காற்றிரண்டின் மெய்ந்நெருக்கிலேநின்றும் வெந்தீத்தோன்றி, யிருதிறச்சத்தப்பரிசந் திடமாகப்பழக்கமுறு மியல்பினாலே, யுருவதன்மாத்திரைமேவு மிம்மூன்றினுடன்மேவு முள்ளந்தானே.

(இ-ள.) உள்ளந்தான் - மனமானது, பரிசைவிதையிரதத்தில் - பரிசதன்மாத்திரையென்னும் பாவனையினால், எழுவதாங்காற்றசைவை-உண்டாகாநின்ற வாயுவினது சலனத்தை, பாவித்து - பாவனைசெய்து, துன்னும் - (காற்றாக) நிறையும், விரிதருவிண் - விரிந்திருக்கின்ற வாகாசமும், காற்று - வாயுவுமாகிய, இரண்டினமெய்ந்நெருக்கினின்றும் - இந்தவிரண்டின்வடிவு நெருக்கத்திலிருந்தும், வெந்தீத்தோன்றி - வெப்பம்பொருந்திய வக்கினியாகவுண்டாகி, இருதிறச்சத்தப்பரிசம் - இரண்டாகிய சத்தமும்பரிசமும், திடமாகப்பழக்கமுறும் - திடமாகப் பழக்கஞ்செய்கின்ற, இயல்பினால் - குணத்தினால, உருவதன்மாத்திரமேவும் - உருவதன்மாத்திரையாகி, இம்மூன்றினுடன்மேவும் - இம்மூன்றுதன்மாத்திரைகளோடும் பொருந்தும்—எ-று.

(இ-ள.) மனமானது பரிசதன்மாத்திரையென்னும் பாவனையினால் உண்டாகாநின்ற வாயுவினது சலனத்தை பாவனைசெய்து காற்றாக நிறையும். விரிந்திருக்கின்ற வாகாசமும் வாயுவுமாகிய

இந்த விரண்டின்வடிவு நெருக்கத்திலிருந்தும் வெப்பம்பொருந்திய வக்கினியாகவுண்டாகி இரண்டாகிய சத்தமும் பரிசமும் திடமாகப் பழக்கஞ்செய்கின்ற குணத்தினால் உருவதன்மாத்திரையாகி இம்மூன்றுதன்மாத்திரைகளோடும் பொருந்தும்—என்பதாம் ()

## மனமானது ரசதன்மாத்திரையாகவுங் கந்ததன்மாத்திரையாகவுங் கடித்தல்

கணத்திலிரதத் தியல்பைப் பாவிக்கநீரறிவுக் கருத்திலுண்டாங், குணத்தினையத்திறங்களொடுங் கூடுமனங்கணத்திலே குறித்துநாடி, மணத்தினைப் பாவித்தலுந்தன் மாத்திரத்தாற்பாரறிவு வருமிவ்வாறே, தணத்தபூதத்தன்மாத் திரம்வளைத்துவளைத்துருவாய்ச் சகமாய்த்தோன்றும்.

(இ-ள்.) கணத்தில் - ஒருக்ஷணத்தில், இரதத்தியல்பைப்பாவிக்க - இரசதன்மாத்திரை பாவனைசெய்ய, நீரறிவு - அப்புவென்னும் ஞானம், அக்கருத்திலுண்டாம்-அம்மனதிலுண்டாகும், குணத்தினை - (இந்நான்கு) குணங்களையும், அத்திறங்களோடும்-அக்குணங்களோடும், கூடுமனம்-கூடுகின்ற மனமானது, கணத்தில் - ஒருக்ஷணத்தில், குறித்துநாடி - கருதித்தேடி, மணத்தினைப்பாவித்தாலும் - கந்தத்தைபாவிக்கவும், தன்மாத்திரத்தால் - (பாவிக்கின்றகந்த) தன்மாத்திரையினால், பாரறிவுவரும் - பிருதிவென்னு ஞானமுண்டாம், இவ்வாறே - இவ்வண்ணமே, தணத்தபூதம்-பிரிவாகிய (பஞ்ச) பூதங்களும், தன்மாத்திரம் - (பஞ்ச) தன்மாத்திரைகளும், வளைத்துவளைத்து - (தன்னைச்) சுற்றிச்சுற்றி, உருவாய் - (பருத்த) வாகாரமாய், சகமாய்த்தோன்றும் - பிரபஞ்சமாகத்தோற்றும்—எ-று.

(இ-ரை.) ஒரு க்ஷணத்தில் இரசதன்மாத்திரை பாவனைசெய்ய அப்புவென்னும் ஞானம் அம்மனதிலுண்டாகும், இந்நான்கு குணங்களையும் அக்குணங்களோடும் கூடுகின்றமனமானது, ஒரு க்ஷணத்தில் கருதித்தேடி கந்தத்தைப் பாவிக்கவும் பாவிக்கின்ற கந்ததன்மாத்திரையினால் பிருதிவென்னுஞானமுண்டாம். இவ்வண்ணமே பிரிவாகிய பஞ்சபூதங்களும் பஞ்சதன்மாத்திரைகளும் தன்னைச் சுற்றிச்சுற்றி பருத்தவாகாரமாய் பிரபஞ்சமாகத்தோற்றும்—என்பதாம். (ௗ௫)

## மனமானது புரியட்டகமாக விளங்கல்.

திகழ்ந்தவனற்பொறியென்னத் திகழ்வடிவைவிண்ணிலே தெரியக்காணு, மகங்கரமாந்தொழின்மேவிப் புந்தியுடன்விதையோடு மணுகியந்தப், புகன்றதெலாஞ்சேர்ந்துபுரி யட்டகமா யுயிர்களுளப் பூவில்வண்டா, மிகுந்தகடுங்கூட்டரவாற் பாவிக்குமிகவிளங்கு மேனிதன்னை.

(இ-ள்.) திகழ்ந்தவனற்பொறியென்ன - ப்ரகாசித்திருக்கின்ற வக்கினிப் பொறியைப்போல, திகழ்வடிவை - விளங்காநின்றசரீரத்தை, விண்ணிலே தெரியக்காணும் - ஆகாயத்திற்றெரியப்பாவிக்கும், அகங்காரமாந்தொழின்மேவி - அகம்பாவனையான கிரியைப்பொருந்தி, புந்தியுடன்- புத்தியுடனுங், விதையோடும் - (பஞ்ச) தன்மாத்திரைகளோடும், அணுகி- பொருந்தி, அந்தப்புகன்றதெலாஞ்சேர்ந்து - அப்படிசொல்லப்பட்ட சகலமுங்கூடி, புரியட்டகமாய் - புரியட்டக சரீரமாய், உயிர்களுளப்பூவில் - ஆத்மாக்களிதயகமலங்களில், வண்டாம் - மதுகரமாகும், மிகுந்தகடுங்கூட்டரவால் - மிகுந்த வாசனைகளினால், மிகவிளங்கு மேனிதன்னை - மிகவுந் திகழாநின்ற சரீரத்தை, பாவிக்கும் - பாவனைசெய்யும்—எ-று.

(இ-ரை.) ப்ரகாசித்திருக்கின்ற வக்கினிப் பொறியைப்போல விளங்காநின்ற சரீரத்தை ஆகாயத்திற் றெரியப்பாவிக்கும். அகம்பாவனையான கிரியைப்பொருந்தி புத்தியுடனும் பஞ்சதன்மாத்திரைகளோடும் பொருந்தி அப்படிச் சொல்லப்பட்ட சகலமுங்கூடி புரியட்டக சரீரமாய் ஆத்மாக்களிதயகமலங்களில் மதுகரமாகும் மிகுந்த வாசனைகளினால் மிகவுந்திகழாநின்ற சரீரத்தை பாவனை செய்யும்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) மனமானது பஞ்சதன்மாத்திரை யகங்காரம்புத்தியென்பவைகளோடுங்கூடிப் புரியட்டக சரீரமாக விளங்குமென்பதாம். (ரு சு)

---

## மனமானது சமஷ்டி பௌதிக சரீரமாயினதறிவித்தல்.

பாவனைமுற்றிடத்தூல மேனியாய்வில்வத்தின் பழம்போற் சித்த, மேவுகருவிற்பாய்ந்த பொன்னிறம்போன் மிகவிளங்கி விமலவிண்ணிற், றுவமுண்டாய்நிற்குமந்தவொளிதன்னுடைய சுபாவந்தன்னாற், கேவலமேற்றலைகீழ்காற் பக்கங்கைநடுவயிருய்க் கிளர்ந்தோனுகும்.

(இ-ள்.) சித்தம் - சித்தமானது, பாவனைமுற்றிட - பாவனைமுதிர, வில்வத்தின்பழம்போல் - வில்வக்கனியைப்போல, தூலமேனியாய் - தூல

சரீரமாய், மேவுகருவிற்பாய்ந்த பொன்னிறம்போல் - மேவுகின்ற கருவிற்பாய்ந்த தங்கநிறத்தைப்போல, மிகவிளங்கி - மிகவும் ப்ரகாசித்து, விமல விண்ணில் - நிமலாகாயத்தில், தாவரமுண்டாகிற்கும் - வடிவுண்டாயிருக்கின்ற, அந்தவொளி - அந்தப்ரகாசமானது, தன்னுடைய சுபாவந்தன்னல் - தனது சத்தியினுல், கேவலம் - தனிமையாக, மேற்றலை - மேலே சிரசும், கீழ்கால் - கீழேபாதமும், பக்கங்கை - பக்கங்களிற் கரங்களும், நடுவயிருய் - மத்தியில்வயிறுமாக, கிளர்ந்தோனுகும் - ப்ரகாசித்தோனுகும்.

(இ-ரை.) சித்தமானது பாவனைமுதிரவில்வக்கனியைப்போல தூலசரீரமாய் மேவுகின்ற கருவிற்பாய்ந்த தங்கநிறத்தைப்போல மிகவும்ப்ரகாசித்து நிமலாகாயத்தில் வடிவுண்டாயிருக்கின்ற அந்த ப்ரகாசமானது தனது சத்தியினுல் தனிமையாக மேலே சிரசும், கீழேபாதமும், பக்கங்களிற் கரங்களும், மத்தியில் வயிறுமாக ப்ரகாசித்தோனுகும்—என்பதாம். (௩௭)

## மனமானது பிரமனுயினதறிவித்தல்.

முந்தியகாலத்தினுல் வெளியாகிநின்மலமாமூர்த்தியாகிப், புந்தியொடு சத்துவமொய்ம் புச்சாகம்விஞ்ஞானம் பொறியுமேவு, மந்தவவனேயகில பிதாமகனுய்முழுதுணர்ந்த வயனுமன்னுன், சுந்தரமாயுத்தமமாய்த் திகழ்கின்றதன்வடிவைத் தோன்றநோக்கி.

(இ-ள்.) முந்தியகாலத்தினுல் - முதன்மையான கால (சத்தி) யினுல், வெளியாகி - வெளிப்படையாய், நின்மலமாமூர்த்தியாகி - நின்மலமான வடிவை யுடையதாய், புந்தியொடு - புந்தியுடன், சத்துவம் - சாமர்த்தியமும், மொய்ம்பு - வலிமையும், உச்சாகம்-உயர்ச்சியும், விஞ்ஞானம் - மெய்ஞ்ஞானமும், பொறியும் - செல்வமும், மேவும்-பொருந்திய, அந்தவவன்-அவ்வவயவங்களை யுடையவனே, அகிலபிதாமகனுய் - விஸ்வத்தையுடையவனுய், முழுதுணர்ந்தவயனும்-யாவையுந்தெளிந்தபிரமாவாம், அன்னுன்-அப்பிரமாவே, சுந்தரமாய் - அழகாகியும், உத்தமமாய் - உத்தமமாகியும், திகழ்கின்ற தன்வடிவை - விளங்காநின்ற தனது ஸ்வரூபத்தை, தோன்ற நோக்கி - நன்ருகப்பார்த்து—எ-று.

(இ-ரை.) முதன்மையானகாலசத்தியினுல் வெளிப்படையாய் நின்மலமானவடிவையுடையதாய் புத்தியுடன் சாமர்த்தியமும் வலிமையும், உயர்ச்சியும், மெய்ஞ்ஞானமும், செல்வமும்பொருந்திய அவ்வவயவங்களையுடையவனே விஸ்வத்தையுடையவனுய் யாவை

யுந் தெளிந்த பிரமாவாம். அப்பிரமாவே அழகாகியும் உத்தமமாகியும் விளங்காநின்ற தனதுஸ்வரூபத்தை நன்ருகப்பார்த்து-எ-ம்.

(இ-உ-க-ம்,) மனமானது விராட்புருடரூபமாகத் தடித்துத் தனக்காதாரமாயிருக்கின்ற சிதாகாயத்தைப் பார்த்ததென்பதாம். (௩௮)

## பிரமசந்நிதியிலுண்டாகிய விசேடத்தை யறிவித்தல்.

குன்ருதவறுகுணத்தோன்மூன்றுகாலமும் வெளியாய்க்குறிக்கும்வேதா, வொன்ருகிச்சின்மயமே யுருவமாய்க் கரைகாணுவுயர்வானத்தின், முன்ருனுண்டாகியதென்னென நினைந்தானழுக்கிலாமுழுஞானக்கண், ணன்ருவப்போதுதித்தோன் பலகோடிசிருட்டிமுத னடத்தக்கண்டான்.

(இ-ள்.) குன்ருதவறுகுணத்தோன் - கெடாத சட்குணங்களையுடைய பகவானுகியும், மூனறுகாலமும் - திரிகாலங்களையும், வெளியாய்க்குறிக்கும் வேதா - வெளியாகப்பார்க்கின்றவனுகியுமிருக்கின்ற பிரமாவானவர், ஒன்ருகி - ஏகமாகியும், சின்மயமேயுருவமாய்-ஞானுகாரமே வடிவமாகியும், கரைகாணு - எல்லையற்றதுமாகியு மிருக்கின்ற, உயர்வானதின் - பரமாகாயத்தில், மூன்ருனுண்டாகியது - முன்னுண்டானது, என்னென நினைந்தான் - என்னவென்று சிந்தித்தான், அழுக்கிலாமுழுஞானக்கண் - களங்கமற்ற பூரணஞான திருஷ்டியையுடையவனுய், நன்ருவப்போதுதித்தோன்-நன்மையாகவப்போதுதயமானபிரமன், பலகோடிசிருட்டி-அநேககோடி சிருஷ்டிகளை, முதனடத்தக்கண்டான் - முன்புசெய்யப் பார்த்தான்—எ-று.

(இ-ரை.) கெடாத சட்குணங்களையுடைய பகவானுகியும், திரிகாலங்களையும் வெளியாகப் பார்க்கின்றவனுகியுமிருக்கின்ற பிரமாவானவர் ஏகமாகியும், ஞானுகாரமே வடிவமாகியும, எல்லையற்றதுமாகியுமிருக்கின்ற பரமாகாயத்தில் முன்னுண்டானது என்னவென்று சிந்தித்தான். களங்கமற்ற பூரணஞானதிருஷ்டியையுடையவனுய்நன்மையாக வப்போதுதயமான பிரமன் அநேககோடி சிருஷ்டிகளை முன்புசெய்யப்பார்த்தான்—என்பதாம். (௩௯)

## புருடார்த்த சாதனங்கூறல்

சாதிகுலந்தருமமெலா முணர்ந்தவற்றைலீலையினுற் ருன்கற்பித்தா, ஞேதரிய லீலையினுற் சங்கற்பத்தாற்பிறக்கு முயிரை

யெல்லா, மேதமுறுகந்தற்ப நகரம்போலறம்பொருள்வீடின்பமெ
ய்த, மேதகையபலகோடி சாத்திரங்களவர்க்காக விதித்தான்
வேதா.

(இ-ள்.) சாதி - வருணங்களும், குலம் - குலங்களும், தருமம் - தருமங்களுமாகிய, எலாமுணர்ந்து-யாவையுமறிந்து, அவற்றை-அவைகளை, லீலையினுற்றுன்கற்பித்தான் - விளையாட்டினுலுண்டாக்கினுன், ஓதரியலீலையினுல்-சொல்லுதற்கரிய விளையாட்டினுல், ஏதமுறுகந்தற்பநகரம்போல்-அழிகின்றகந்தர்வநகரத்தைப்போல, சங்கற்பத்தால்-சங்கற்பத்தினுல், பிறக்குமுயிரையெல்லாம் - உண்டாகப்பட்டவாத்மாக்களனைத்தையும், அறம்பொருள்வீடின்பமெய்த - தருமார்த்த காமமோக்ஷத்தி லடைவிக்க, மேதகைய - மேலான, பலகோடிசாத்திரங்கள் - அளவில்லாத (வேத) சாத்திரங்களை, அவர்க்காக - அவ்வாத்மாக்களுக்காக, வேதாவிதித்தான் - பிரமாவானவ ருண்டாக்கினுர்—எ-று.

(இ-கா.) வருணங்களும், குலங்களும், தருமங்களுமாகியயாவையு மறிந்து அவைகளை விளையாட்டினுலுண்டாக்கினுன். சொல்லுதற்கரிய விளையாட்டினுல் அழிகின்றகந்தர்வ நகரத்தைப்போல சங்கற்பத்தினுல் உண்டாகப்பட்ட வாத்மாக்களனைத்தையும் தருமார்த்தகாமமோக்ஷத்திலடைவிக்கமேலானஅளவில்லாதவேதசாத்திரங்களை அவ்வாத்மாக்களுக்காக பிரமாவானவ ருண்டாக்கினுர்.

(இ-ம்.) சங்கற்பவடிவமாயுள்ள சீவகோடிகள் தங்கள் சங்கற்பங்களை நீக்கி யாத்மஸ்வரூபமடையும்பொருட்டு வேதாகமங்களை விதித்ததென்பதாம். (சo)

## சங்கற்பமே சநநமாமெனல்.

விரிஞ்சனுருவாமனத்தா லிச்சிருட்டியிற் சிருட்டிமேவிநின்றும்
புரிந்தலருமலரெல்லாம் வசந்தகாலத்தினுற் பூப்பதொக்கும்
பிரிந்தசுரர்நரர்முதலோர் தத்தஞ்சங்கற்பத்தாற் பிறவியுற்றுர்
தெரிந்தனையசங்கற்ப மறிற்பிறவார் நெய்மாண்டதீபம்போல.

(இ-ள்.) விரிஞ்சனுருவாமனத்தால் - அயனுருவமானமனதினுல், இச்சிருட்டியினின்றும் - இப்பஞ்சபூத சிருஷ்டியிலிருந்தும், சிருட்டிமேவி - பௌதிகசிருஷ்டி யுண்டாகிற்றல், புரிந்தலருமலரெல்லால்-கட்டவிழ்ந்து மலராநின்ற புட்பங்களனைத்தும், வசந்தகாலத்தினுல் - வசந்தகாலத்தில், பூப்பதொக்கும் - மலர்கின்றதை யொத்திருக்கும், பிரிந்தசுரர் - வேறுபாடாகிய தேவர்கள், நரர்முதலோர் - மானிடர்முதலாகிய யாவரும், தத்தஞ்சங்கற்பத்தால் - தங்கடங்கள் சங்கற்பத்தினுல், பிறவியுற்றுர் - சநநத்

தையடைந்தார்கள் தெரிந்து (இப்படி) யுணர்ந்து, அனையசங்கற்பமறில்- அச்சங்கற்பநசிக்கில், நெய்மாண்டதீபம்போல - நெய்யில்லாத விளக்கைப் போல, பிறவார் - சநநமடையார்கள்—எ-று.

(இ-ள்.) அயனுருவமான மனதினால் இப்பஞ்சபூத சிருஷ்டியிலிருந்தும் ... ளாதிகசிருஷ்டியுண்டாநிற்றல். கட்டவிழ்ந்துமலரா நின்ற புட்பங்களனைத்தும் வசந்தகாலத்தில் மலர்கின்றதை யொத்திருக்கும். வேறுபாடாகியதேவர்கள் மானிடர் முதலாகிய யாவரும் தங்கடங்கள் சங்கற்பத்தினால் சநநத்தையடைந்தார்கள். இப்படி யுணர்ந்து அச்சங்கற்ப நசிக்கில் நெய்யில்லாத விளக்கைப் போல சநநமடையார்கள்—என்பதாம்.

(இ-ம்.) சங்கற்பநாசமே சநநமரண நாசமென்பதாம். (சக)

## சகமுமித்தையென் றுரைத்தல்.

வானநிகராமனைத்துங் கற்பனைமாத்திரம்வாளா வளராநிற்கு
மானசகநனவுதனிற் கனவுபோலிராகவனே யறிதியன்றே [றும்
வீனமுறப்பிறப்பில்லை யிறப்பில்லையெவ்விடத்து மொன்றுமென்
ஞானபரமார்த்தத்தா லிவையெல்லாம்பொய்யாக நண்ணுமன்றே.

(இ-ள்.) வானநிகராமனைத்தும் - ஆகாயத்தையொத்த சகலமும், கற்பனைமாத்திரம் - சங்கற்பமாத்திரத்தில், வாளாவளராநிற்கும்-விருதாவாக வளரும், ஆனசகம் - (இப்படி) யுண்டாகிய வுலகமானது, நனவுதனிற்கனவுபோல் - சாக்கிரத்தி (லுண்டாகுஞ்) சொற்பனத்தைப்போல, இராகவனே யறிதி - ஸ்ரீராமா நீ யறிந்துகொள்வாய், எவ்விடத்தும் - எந்தவிடங்களிலேயும், என்றும் - எப்பொழுதும், ஈனமுறப்பிறப்பில்லை - ஈனமாகச் செனித்ததுமில்லை, இறப்பில்லை - மரித்ததுமில்லை, ஒன்றும்ஞான பரமார்த்தத்தால் - ஏகமான பரமார்த்தஞானத்தினால், இவையெல்லாம் பொய்யாக நண்ணும் - இவையாவுமித்தையாகச்சாரும்—எ-று.

(இ-ரை.) ஆகாயத்தையொத்த சகலமும் சங்கற்பமாத்திரத்தில் விருதாவாகவளரும். இப்படியுண்டாகிய வுலகமானது சாக்கிரத்திலுண்டாகுஞ் சொற்பனத்தைப்போல ஸ்ரீராமா! நீயறிந்து கொள்வாய். எந்தவிடங்களிலேயும் எப்பொழுதும் ஈனமாகச்செனித்ததுமில்லை. மரித்ததுமில்லை. ஏகமானபரமார்த்த ஞானத்தினால் இவையாவு மித்தையாகச் சாரும்—என்பதாம்.

(இ-ம்.) பிரமசங்கற்பத்தி லுண்டாயிருக்கின்ற சகலமும் அப்பிரமதிருஷ்டியி லில்லையென்பதாம். (சஉ)

## சம்சார மித்தையெனல்.

வெங்காதற்பெரும்பாம்புநெளிபுற்றாங்குடும்பபரம்வெறும்பொய்யென்றே, யிங்காசையறநீக்கி யெல்லையிலாப்பரமபதத் திருந்து வாழ்வாய், சிங்காரக்கந்தற்ப நகரிருந்தென்சிதைவுற்றென் றீதோ நன்றே, பங்கானமனைமக்கள் வாழ்ந்தாலென்கெட்டாலென் பாச மாயை.

(இ-ள்.) வெங்காதற்பெரும்பாம்பு - ஆசையென்னு மகாசற்பமானது, நெளிபுற்றாம்-நெளிகின்றபுற்றாகிய, குடும்பபரம்-சம்சாரபாரமானது, வெறும்பொய்யென்று - முழுது மசத்தியமென்று, ஆசையறநீக்கி - (சம்சார) பாசத்தை முழுதுங்கெடுத்து, எல்லையிலாப் பரமபதத்து - அளவற்ற பிரம பதத்தில், இருந்து வாழ்வாய் - ஸ்ரீராமா நீ நிலைபெற்று வாழக்கடவாய், சிங்காரக்கந்தற்பநகர் - அழகாகத்தோற்றாநின்ற கந்தருவ நகரமானது, இருந்தென்-இருந்தென்ன,சிதைவுற்றென் - நாசமடைந்தென்ன, றீதோ நன்றே - அதனுனன்மையோதீமையோ, பங்கான - வேறுபாடாகிய, பாச மாயை - பாசமாயையான, மனைமக்கள்-மனைவிபுத்திரர்கள், வாழ்ந்தாலென் - வாழ்ந்ததினு லென்ன, கெட்டாலென்-கெட்டதினுலென்ன—எ-று.

(இ-ரை·) ஆசையென்னு மகாசற்பமானது நெளிகின்றபுற்றாகிய சம்சாரபாரமானது முழுது மசத்தியமென்று சம்சார பாசத்தை முழுதுங்கெடுத்து அளவற்ற பிரமபதத்தில் ஸ்ரீராமா! நீ நிலைபெற்று வாழக்கடவாய். அழகாகத் தோற்றாநின்ற கந்தருவ நகரமானது இருந்தென்ன, நாசமடைந்தென்ன, அதனு னன்மையோ தீமையோ வேறுபாடாகியபாசமாயையான மனைவிபுத்திரர்கள் வாழ்ந்ததினுலென்ன கெட்டதினுலென்ன—என்பதாம். (சங)

---

## தனது சங்கற்பமே துன்பமாமெனல்.

தாரதனமிகுமென்னிற்றளையாகுமப்பாசந் தளைத்துக்கொண்டால்,ஆரதனையறுத்தகலும் விரகுடையாரறிவில்லாராசைவிஞ்சிக், கூரிதையாமப்போகத் துழன்றுழக்குங்கொடுந்துயரைக் குறித்த போதே, தீரதையாமறிஞர்க்கு விரத்தியுளதாய்ச் சித்தந் தெளியுமன்றே.

(இ-ள்.) தாரதனம் - மனைவியிடத்தும் பொருளினிடத்தும்,மிகுமென்னில் - (பாச) மிகுமாகில், தளையாகும் - விலங்காகும், அப்பாசந் தளைத்துக்கொண்டால் - அவ்வாசையை கட்டிக்கொண்டால், ஆரதனையறுத்த

கலும் - ஆரதைக்கெடுத்து நீக்குகின்ற, விரகுடையார் - உபாயமுடையவர்கள், அறிவில்லார் - அஞ்ஞானிகள், ஆசைவிஞ்சி - இச்சைமிகுந்து, கூறிதையா மப்போகத்து - மிகுதியான வந்தப்போகத்தில், உழன்றுழக்கும் - சுழன்று கலக்குகின்ற, கொடுந்துயரை - கொடிய துன்பத்தை, குறித்தபோது - நினைத்தபோது, தீரதையாமறிஞர்க்கு - தீரமுள்ள ஞானிகளுக்கு, விரத்தியுளதாய் - நிராசையுள்ளதாய், சித்தந்தெளியும் - மனமானது தெளிவை யடையும்—எ-று.

**(இ-ரை.) மனைவியிடத்தும் பொருளினிடத்தும் பாசமிகுமாகில் விலங்காகும். அவ்வாசையைக்கட்டிக்கொண்டால் ஆரதைக் கெடுத்து நீக்குகின்ற உபாயமுடையவர்கள் அஞ்ஞானிகள் இச்சைமிகுந்து மிகுதியான வந்தப்போகத்தில் சுழன்று கலக்குகின்ற கொடியதுன்பத்தைநினைத்தபோது தீரமுள்ளஞானிகளுக்கு நிராசையுள்ளதாய் மனமானது தெளிவையடையும்—என்பதாம்.**

(இ-உ-கூ-ம்.) மித்தையாகிய சம்சாரத்தைச் சத்தாகப்பார்த்து வருந்துமூடர்களைப்பார்த்தாவது தான் றெளியவேண்டுமென்பதாம். (சுசு)

தத்துவத்திற் சகத்திருக்கின்ற தன்மையைக்கூறி யத்தத்துவமுணர்ந்த டோன்க ளிலக்கணங்கூறல்.

**ஆனதிறத்தாற்குடும்ப பாரவியாபாரத்திலணுகும் போது, போனபொருட்கிரங்காமற் பொருந்துபொருண் மாத்திரமே புசித்துவாழ்வாய், நீனமுறவருபொருளைச் சிந்தியார் வந்த பொருட்டீதென்றெண்ணார், ஞானபரராஞேர்க்குச் சுபாவமாங்குணமிதுவே நளினக்கண்ணுய்.**

(இ-ள்.) ஆனதிறத்தால் - (இப்படி) யான நன்மையினுல், குடும்பபாரம் - சம்சாரபாரமாகிய, வியாபாரத்தி லணுகும்போதில் - தொழிலினெருங்குங்காலத்தில், போனபொருட்டு-நீங்கினபொருளுக்கு, இரங்காமல் - துன்பப்படாமல், பொருந்துபொருண்மாத்திரம் - வந்தடைந்த பொருளை மாத்திரம், புசித்துவாழ்வாய் - அனுபவித்து (சீவன்முத்தனுக) வாழக்கடவாய், நீனமுற - (இப்போ) தில்லாமையாக, வருபொருளைச்சிந்தியார் - (இனி) வருகின்றபொருள்களை நினையார்கள், வந்தபொருட்டீதென்றெண்ணார் - வந்தபொருளைக் குற்றமாகநினையார், ஞானபரராஞேர்க்கு - பூரணஞானத்தை யுடையவர்களுக்கு, நளினக்கண்ணுய் - தாமரைக்கண்ணனே, இதுவே சுபாவமாங்குணம் - இதுவே யியல்பானகுணம்—எ-று.

**(இ-ரை.) இப்படியான நன்மையினுல் சம்சார பாரமாகிய தொழிலினெருங்குங் காலத்தில் நீக்கினபொருளுக்கு துன்பப்**

படாமல் வந்தடைந்த பொருளைமாத்திரம் அனுபவித்துசீவன்முத்தனாகவாழக்கடவாய். இப்போதில்லாமையாக இனிவருகின்றபொருள்களை நினையார்கள். வந்தபொருளைக் குற்றமாகநினையார். பூரணஞானத்தை யுடையவர்களுக்குதாமரைக்கண்ணனே இதுவேயியல்பானகுணம்—என்பதாம். (சரு)

---

சத்துக்களிலக்கணங்கூறி யனுபவமுண்டாதுஞ் சாதனங்கூறல்.

கண்டனவெல் லாம்பொய்யென் றுள்ளத்தி லனைத்தினும்வெங் காதனீற்ற, பண்டிதரா முழுதுணர்ந்த பெரியோரை யீராதுபாசமாயை, யுண்டிலையென் பவற்றிடையின் சுத்தமாம் பதம்புந்தியூன்றப்பற்றி, விண்டவுடற் குட்புறம்பா முலகைநீ பற்றுதலும்விடலும்வேண்டா.

(இ-ள்.) கண்டனவெல்லாம் - காணப்பட்டவனைத்தும், பொய்யென்று - மித்தையேயென்று, உள்ளத்தில் - மனதில், அனைத்தினும்-சகலவிடயங்களிலும், வெங்காதனீற்ற-வெம்மையான வாசையைநீக்கின, பண்டிதராம் - பண்டிதரான, முழுதுணர்ந்த-சர்வமுந்தெரிந்த, பெரியோரை-சத்துக்களை, பாசமாயை - பாசைமாயையானது, ஈராது - வாதிக்கமாட்டாது, உண்டிலையென்பவற்றிடையின் - சத்தசத்தென்று சொல்லப்பட்டவவ்விரண்டின் மத்தியில், சுத்தமாம்பதம் - பரிசுத்தமான பரமபதத்தில், புந்தியூன்றப்பற்றி - அறிவைத்திடமாகவழுத்தி, விண்டவுடற்கு-வேறானசரீரத்துக்கு, உட்புறம்பாமுலகை - உள்ளும்புறம்புமான சகத்தை, நீ - ஸ்ரீராமாநீ, பற்றுதலும் - பிடித்தலும், விடலும் வேண்டா - விடுத்தலும்வேண்டாம்—எ-று.

(இ-ரை.) காணப்பட்ட வனைத்தும் மித்தையே யென்றுமனதில் சகல விடயங்களிலும் வெம்மையான வாசையை நீக்கின பண்டிதரான சர்வமுந்தெரிந்த சத்துக்களை பாசமாயையானது வாதிக்கமாட்டாது. சத்தசத்தென்று சொல்லப்பட்ட வவ்விரண்டின்மத்தியில் பரிசுத்தமான பரமபதத்தில் அறிவைத்திடமாகவழுத்திவேறான சரீரத்துக்கு உள்ளும்புறம்புமானசகத்தை ஸ்ரீராமா ! நீ பிடித்தலும் விடுத்தலும் வேண்டாம். (சசு)

---

இராகத்துவேட நீக்கத்தின் பலன்கூறல்.

எக்கருமத் திலுமிச்சை யநிச்சையற நின்றுணர்வை யெய்தினோர்க்கே, யக்கருமங்களிலறிவு பற்றாதாமரையிலைசே ரம்புபோலத், தொக்கபொறிவிடயநலஞ் சுவையறநின்மனமாரத்தோன்றில்

வீரா, தக்கவுணர்ந்தோனுய்ப் பவக்கடல்கள்கடந்தன்றே சநநந்தீர்ந்தாய்.

(இ-ள்.) எக்கருமத்திலும் - எந்ததொழில்களிலும், இச்சை யநிச்சை யறநின்று-இராகத்துவேஷமில்லாமலிருந்து, உணர்வையெய்தினேர்க்கு-ஆத்மஞானத்தை யடைந்தவர்களுக்கு, அக்கருமங்களில் - அத்தொழில்களில், தாமரையிலேசேரம்புபோல - தாமரையிலையிற்சேர்ந்திருக்கின்ற சலத்தைப்போல, அறிவுபற்ரு-அறிவானது பற்றமாட்டாது, தொக்கபொறி விடயம் - தேகவிந்திரிய விடயங்களின், நலஞ்சுவையற - நன்மையான விரசத்தைவிடும்படி, வீரா - இராமா, நின்மனம் - உனது மனம், ஆரத்தோன்றில் - பொருந்தவுண்டானல், தக்கவுணர்வுணர்ந்தோனுய் - அறியத்தக்கவாத்மஞானத்தையறிந்தவனுய், பவக்கடல்கள்கடந்து - சம்சாரசாகரங்களைக்கடந்து, அன்றே சநநந்தீர்ந்தாய் - அப்போதே பவத்தை நீங்கினுய்—எ-று.

(இ-ா.) எந்தத்தொழில்களிலும் இராகத்துவேஷ மில்லாமலிருந்து ஆத்மஞானத்தை யடைந்தவர்களுக்கு அத்தொழில்களில் தாமரையிலையிற் சேர்ந்திருக்கின்ற சலத்தைப்போல அறிவானது பற்றமாட்டாது. தேகவிந்திரிய விடயங்களின் நன்மையான விரசத்தைவிடும்படி இராமா! உனதுமனம்பொருந்தவுண்டானல்அறியத்தக்க வாத்மஞானத்தையறிந்தவனுய் சம்சாரசாகரங்களைக்கடந்து அப்போதே பவத்தை நீங்கினுய்—என்பதாம். (சஎ)

வாசனையுள்ள மனதைக் கெடுக்கவேண்டுமெனல்.

உச்சமுறுபதம்வேண்டி லனைத்துவாதனையிலுநின் றுள்ளந் தன்னை, நிச்சயமாமுணர்வாலே நீக்குவாய்மலரின்மண நீங்குமா போற், றுச்சமுறுவாதனையாந் தரங்கநீர்பவக்கடலிற் றுளைவார்க் கெல்லா, மச்சமறநல்லறிவு மரக்கலமாய்க்கரையேற்று மயலொன் றுண்டோ.

(இ-ள்.) உச்சமுறுபதம்வேண்டில் - மேலான பரமபதத்தைவிரும்பினுல், அனைத்துவாதனையினின்ற - சகலவாசனைகளிலுமிருந்த, உள்ளந்தன்னை - மனதை, நிச்சயமாமுணர்வால் - மெய்யாகிய வாத்மஞானத்தினுல், மலரின் மணம் - புட்பத்தினின்றும் வாசனை, நீங்குமாபோல் - நீங்குவதுபோல, நீக்குவாய் - போக்குவாய், துச்சமுறுவாதனையாம் - ஈனமுள்ள வாசனையாகிய, தரங்கநீர் - அலைகளையுடைய சல (நிறைந்த), பவக்கடலில் - சநநசாகரத்தில், துளைவார்க்கெல்லாம்-அமிழுபவர்க்கெல்லாம், அச்சமற - பயமின்றி, நல்லறிவு மரக்கலமாய்க் கரையேற்றும் - சுகபோ

தங் கப்பலாகிக்கரையேற்றுமே (யன்றி), அயலொன்றுண்டோ - வேறொன்றுண்டாமோ—எ-று.

(இ-ள.) மேலான பரமபதத்தை விரும்பினால் சகலவாசனைகளிலுமிருந்த மனதை மெய்யாகிய வாத்ம ஞானத்தினால்புட்பத்தினின்றும் வாசனை நீங்குவதுபோலப் போக்குவாய். ஈனமுள்ள வாசனையாகிய அலைகளையுடைய சலநிறைந்தசநநசாகரத்தில் அமிழுபவர்க்கெல்லாம் பயமின்றி சுகபோதங் கப்பலாகிக்கரையேற்றுமேயன்றி வேறொன்றுண்டாமோ—என்பதாம். (சஎ)

## சகநிஷ்டை யறிவித்தல்.

பராபரங்கண்டோரனைத்தும் பின்செல்வருகியல்பு பற்றார் நீங்கார், சுராலயநந்தனவனத்தும்பற்றார்கள்சூனியத்துந்துயரமெய்தார், விராவுநியதியுந்தள்ளார்வெய்யவன்போலனுசரிப்பர் மேன்மைசான்றோ, ரிராகவனேயிவ்வாறு நடத்தி யெனவசிட்டமுனி யியம்பலோடும்.

(இ-ள்.) பராபரங்கண்டோர் - ஆத்மஞான ப்ரத்யக்ஷமானவர்கள், அனைத்தும் - சகலத்தையும், பின்செல்வர் - அனுசரிப்பார்கள், உலகியல்பு பற்றார் நீங்கார் - சகத்தின்குணங்களைப் பொருந்தார்க ணீங்கார்கள், சுராலயம் - சுவர்க்கத்திலுள்ள, நந்தனவனத்தும் - புட்பவனத்தையும், பற்றார்கள் - இச்சிக்கார்கள், சூனியத்தும் - சூனியமான விடத்திலும், துயரமெய்தார் - துன்பமடையார்கள். மெய்யவன்போல்-சூரியனைப்போல, விராவுநியதியுந்தள்ளார் - சொல்லாநின்றநியதியையுந் தள்ளமாட்டார்கள், மேன்மைசான்றோர் - மேன்மையான சத்துக்கள், அனுசரிப்பர் - (சகலத்தையு) மனுசரிப்பர்கள், இராகவனே - ஸ்ரீராமா, இவ்வாறு - இந்தப்ரகாரம்,நடத்தியென - நடப்பாயென்று, வசிட்டமுனி யியம்பலோடும் - வசிட்டமுனி சொன்னவளவில்—எ-று.

(இ-ள.) ஆத்மஞான ப்ரத்யக்ஷமானவர்கள் சகலத்தையும் அனுசரிப்பார்கள். சகத்தின் குணங்களைப் பொருந்தார்கணீங்கார்கள். சுவர்க்கத்திலுள்ள புட்பவனத்தையும் இச்சிக்கார்கள். சூனியமானவிடத்திலும் துன்பமடையார்கள். சூரியனைப்போல சொல்லாநின்ற நியதியையுந் தள்ளமாட்டார்கள். மேன்மையான சத்துக்கள் சகலத்தையு மனுசரிப்பார்கள். ஸ்ரீராமா! இந்தப்ரகாரம் நடப்பாயென்று வசிட்டமுனி சொன்னவளவில்—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) திருக்குதிருஷ்டியினாற் றிரிஸ்ய திருஷ்டியைக் கெடுக்கிற் சிற்சுபாவமாய் விளங்குவ ரென்பதாம். (சக)

## அனுபவத்தில் மகிழ்தல்.

பரத்துவகேளிவ்வாறு பரமமுனிபரமபதம் பகரக்கேட்டுத், திரத்துவமாநிறைந்தான்போற் சீராமனமலமாய்த் தீர்ந்துசித்தந், தரத்துவமையில்லாதமெய்ஞ்ஞானநல்லமுதாற்றதும்பித்தண்ணென், றுரத்துவளர்சந்திரன்போ னிறைவுற்றான் வசிட்டனுமீண்டுரைப்பதானான்

(இ-ள்.) பரத்துவகேள் - ப்ரத்துவாசரே கேளென்று (வான்மீகர்) சொல்லுவார், இவ்வாறு - இந்தப்ரகாரம், பரமமுனி - மேலானவசிட்டமுனியானவர், பரமபதம் பகரக்கேட்டு - பிரமபதத்தைச் சொல்லக்கேட்டு, திரத்துவமா நிறைந்தான்போல் - திரமாகப் பூரணமானவனைப்போல, சீராம னமலமாய் - ஸ்ரீராமர் களங்கமற்றவராய், சித்தந்தீர்ந்து - மனது நீங்கி, தரத்துவமையில்லாத - வலிமையிற்சமானமில்லாத, மெய்ஞ்ஞான நல்லமுதாற்றதும்பி - தத்துவஞானமென்னு நல்ல வமிர்தத்தினானிறைந்து, தண்ணென்று - குளிர்ச்சியாய், உரத்துவளர் சந்திரன்போல் - திரமுற்று வளராநின்ற பூரணசந்திரனைப்போல, நிறைவுற்றான்-பூரணத்தையடைந்தான், வசிட்டனு மீண்டுரைப்பதானான் - வசிட்டமுனி திரும்பவுஞ் சொல்லத்தொடங்கினார்—எ-று.

(இ-ரை.) ப்ரத்துவாசரே கேளென்று வான்மீகர்சொல்லுவார், இந்தப்ரகாரம் மேலான வசிட்டமுனியானவர் பிரமபதத்தைச்சொல்லக்கேட்டு திரமாகப்பூரணமானவனைப்போல ஸ்ரீராமர் களங்கமற்றவராய் மனதுநீங்கிவலிமையிற்சமானமில்லாததத்துவஞானமென்னுநல்லவமிர்தத்தினானிறைந்து குளிர்ச்சியாய் திரமுற்றுவளராநின்ற பூரணசந்திரனைப்போல பூரணத்தையடைந்தான். வசிட்டமுனி திரும்பவுஞ்சொல்லத்தொடங்கினார்—என்பதாம். ()

## சகஞ் சங்கற்பவடிவமாமென்பதை வைப்புறுத்துநிமித்தஞ் சிருஷ்டிகளிலோவ்வோன்றுக்கு நியமமின்றேனல்.

ஒருகாலமரன்படைப்ப னொருகாலமயன்படைப்ப னுலகமெல்லா, மொருகாலமரிபடைப்ப னொருகாலமுனிவர்படைப்புள்ளதாகு, மொருகாலம்புயந்துதிப்ப னொருகால்வாரியினுதிப்பனுயர்ந்தவேதா, வொருகாலண்டத்துதிப்ப னொருகால்விண்ணகத்திலேயுதிப்பனன்றே.

(இ-ள்.) உலகமெல்லாம் - சகங்களனைத்தையும், ஒருகாலமரன்படைப்பன் - ஒருகாலத்திற்சிவன் சிருஷ்டிப்பார், ஒருகால மயன்படைப்பன்-ஒரு

காலத்திற்பிரமன் சிருஷ்டிப்பார், ஒருகாலமரிபடைப்பன்-ஒருகாலத்தில் விஷ்ணுசிருஷ்டிப்பார், ஒருகாலமுனிவர் படைப்புள்ளதாகும் - ஒருகாலத்தின் முனிவர்சிருஷ்டிப்பார்கள், உயர்ந்தவேதா - மேலான பிரமாவானவர், ஒருகாலம்புயத்துதிப்பன் - ஒருகாலத்திற் றாமரையிற்பிறப்பார், ஒருகால்வாரியினுதிப்பன் - ஒருகாலத்திற்சலத்திற்பிறப்பார், ஒருகாலண்டத்துதிப்பன் - ஒருகாலத்திலண்டத்திற்பிறப்பார், ஒருகால் விண்ணகத்திலேயுதிப்பன் - ஒருகாலத்தி லாகாயத்திற்பிறப்பார்—எ-று

(இ-ரை.) சகங்களனைத்தையும் ஒருகாலத்திற் சிவன்சிருஷ்டிப்பார், ஒருகாலத்திற்பிரமன்சிருஷ்டிப்பார், ஒருகாலத்தில்விஷ்ணு சிருஷ்டிப்பார், ஒருகாலத்தில் முனிவர் சிருஷ்டிப்பார்கள், மேலானபிரமாவானவர் ஒருகாலத்திற் றாமரையில்பிறப்பார், ஒருகாலத்திற் சலத்திற்பிறப்பார், ஒருகாலத்தி லண்டத்திற்பிறப்பார், ஒருகாலத்தி லாகாயத்திற் பிறப்பார்—என்பதாம். (௫௧)

இதுவுமது.

வன்மரங்களேநெருங்கு மொருபடைப்பி லொருபடைப்பின் மனிதர்துன்னும், பன்மலைகளேநெருங்கு மொருபடைப்பிலொருபடைப்பிற் படர்மண்ணுகுங், கன்மயமாமொருபடைப்பி லொருபடைப்பிற்றசைமயமாய்க்காணலாகும், பொன்மயமாமொருபடைப்பி லிப்படியேபலவிதமாம் பூமிதானே.

(இ-ள்.) ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், வன்மரங்களேநெருங்கும் - வலிமையான தருக்களே நிறைந்திருக்கும், ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், மனிதர்துன்னும் - மானிடரேநிறைந்திருப்பர், ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், பன்மலைகளே நெருங்கும் - பலவரைகளே நிறைந்திருக்கும், ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், படர்மண்ணுகும் - மிகுந்த மண்ணுகவே (நிறைந்) திருக்கும், ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், கன்மயமாம்-கல்லுமயமாய்(நிறைந்) திருக்கும், ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், தசைமயமாய்க்காணலாகும் - மாமிசமாய்ப்பார்க்கப்படும், ஒருபடைப்பில் - ஒருசிருஷ்டியில், பொன்மயமாம் - தங்கமயமாயிருக்கும், பூமிதான்-பூமியானது, இப்படியே பலவிதமாம் - இவ்வண்ண நாநாவிதமாயிருக்கும்.

(இ-ரை.) ஒருசிருஷ்டியில் வலிமையான தருக்களேநிறைந்திருக்கும். ஒருசிருஷ்டியில் மானிடரேநிறைந்திருப்பர். ஒருசிருஷ்டியில் பலவரைகளே நிறைந்திருக்கும். ஒரு சிருஷ்டியில் மிகுந்த மண்ணுகவே நிறைந்திருக்கும். ஒரு சிருஷ்டியில் கல்லுமயமாய் நிறைந்திருக்கும். ஒருசிருஷ்டியில் மாமிசமாய்ப்பார்க்கப்படும், ஒருசிருஷ்டியில் தங்கமயமாயிருக்கும். பூமியானது இவ்வண்ண நாநாவிதமாயிருக்கும்—என்பதாம். (௫உ)

இதுவுமது.

வான்முதலாமண்முதலா நீர்முதலாந்தீமுதலா மற்றைவாயு; தான்முதலாமிப்படியே சிருட்டிதொறுமோரொன்று தலைமையாகும், யான்முதலோரயன்சிருஷ்டி சிலேடையாயுனக்குரைத்தே னிந்தவாற்றான், மேன்முதலாநியமமிதற் கொன்றுகவிலதுபல விதமாய்த்தோன்றும்.

(இ-ள்.) வான்முதலாம் - ஆகாயமுதலாகும், மண்முதலாம்-பிரிதிவு முதலாகும், நீர்முதலாம் - அப்புமுதலாகும், தீமுதலாம் - அக்கினிமுத லாகும், வாயுதான்முதலாம் - காற்றுமுதலாகும், இப்படியே - இவ்வண் ணமே, சிருட்டிதொறும் - சிருட்டிகடோறும், ஓரொன்று தலைமையாகும்- ஒவ்வொன்று முதன்மையாகும், யான்முதல் - நான்முதற்கண், ஓரயன் சிருட்டி - ஒருபிரம சிருஷ்டியை, சிலேடையாய் - சுருக்கமாக, உனக்கு ரைத்தேன் - உனக்குசசொன்னேன், இந்தவாற்றால் - இத்தன்மையால், மேன்முதலா நியமம் - முன்புதிக்கு நியமமானது, இதற்கொன்றுகவிலது- இச்சிருஷ்டிக்கொருவிதமாகவில்லை, பலவிதமாய்த்தோன்றும் - நானாவித மாகத்தோற்றும்—எ-று.

(இ-ரை.) ஆகாயமுதலாகும், பிரிதிவுமுதலாகும், அப்புமுத லாகும், அக்கினிமுதலாகும், காற்றுமுதலாகும், இவ்வண்ணமே சிருஷ்டிகடோறும் ஒவ்வொன்று முதன்மையாகும். நான்முதற் கண் ஒரு பிரமசிருஷ்டியை சுருக்கமாக உனக்குச்சொன்னேன். இத்தன்மையால் முன்புதிக்கு நியமமானது இச்சிருஷ்டிக்கொரு விதமாகவில்லை நானாவிதமாகத்தோற்றும்—என்பதாம். (௫௩)

இதுவுமது.

கிருதமுதலுகநாலு மீண்டுமீண்டுற்பவிக்குங் கிளர்த்துஞாலத் தொருபொருளும் வளைத்துவளைத் தந்தமடங்குற்பவமாயுழலாதில்லை, யிருள்பெருகுமாமாயை வன்னனைக்குமுன்னிலையா மியாமிங் கோத, வருமறைதேர்தாசூரன் கதைகேட்டி யிராமவென வறைவதானன்.

(இ-ள்.) கிருதமுதலுகநாலும் - கிருதமுதலிய நான்குயுகங்களும், மீண்டு மீண்டுற்பவிக்கும் - திரும்பித்திரும்பிப் பிறந்துவரும், கிளர்த்து ஞாலத்து - சொல்லப்பட்ட சகத்தின்கண், ஒருபொருளும் - ஒரு வஸ்து வாவது, வளைத்து வளைத்து - வளைந்து வளைந்து, அநந்தமடங்கு-அநேகந் தரம், உற்பவமா யுழலாதில்லை - பிறந்து சுழலாததில்லை, இருள்பெருகு மாமாயை - அந்தகாரமிகுந்த மஹாமாயையினது, வன்னனைக்கு-வர்ணிப் புக்கு, முன்னிலையாம் - முன்னிலையான, அருமறைதேர் - அரியவேதங் களை யாராய்ந்தறிந்த, தாசூரன் கதை-தாசூரமுனிவன் கதையை, யாமிங் கோத - நாமிவ்விடத்திற்சொல்ல, இராம கேட்டியென - ஸ்ரீராமா நீகேட்

கக்கடவாயென்று, அறைவதானன் - வசிட்ட.முனி சொல்லத்தொடங்கினர்—எ-று.

**(இ-ா.) கிருதமுதலியநான்குயுகங்களும்|திரும்பித்திரும்பிப் பிறந்துவரும், சொல்லப்பட்ட சகத்தின்கண் ஒரு வஸ்துவாவது வளைந்துவளைந்து அநேகந்தரம்பிறந்த சுழலாததில்லை. அந்தகாரமிகுந்த மகாமாயையினது வர்ணிப்புக்கு முன்னிலையான அரியவேதங்களை யாராய்ந்தறிந்த தாசூரமுனிவன் கதையை நாமிவ்விடத்திற்சொல்ல, ஸ்ரீராமா ! நீ கேட்கக்கடவாயென்று வசிட்டமுனி சொல்லத்தொடங்கினர்—என்பதாம்.**

(இ-சு-க-ம்.) சிருஷ்டிக்குஞ் சிருஷ்டிப்பவருக்குஞ் சிருஷ்டிக்கப்பட்டவைகளுக்கும் பிரமசத்தியினியமப்படியேயன்றி யோர்வரன்முறையான நியமமின்றென்பதாம். (ருச)

---

**இவ்வனுபவத்துக்குத் திருஷ்டாந்தங் கூறவேண்டி**

**மலையின் சிறப்பு கூறல்-வேறு.**

***இந்தப்புவனத்தூடே யெழிலார்மலரின்பொழில்வாய்***
***மந்தக்குளிர்கால்கமழு மகததேசந்தன்னிற்***
***கந்தக்கதலிகடம்பு கன்னிகாரஞ்செறிந்து***
***சிந்தைக்கினிதாகியதோர் சிறப்பாமலையினிடத்தே.***

(இ-ள்.) இந்தப்புவனத்தூடு - இந்தப்பூமிக்குள், எழிலார்மலரின் பொழில்வாய் - அழகுநிறைந்த புட்பவனத்தில், மந்தக்குளிர்கால்கமழும்-குளிர்ந்த தென்றற்காற்று பரிமளிக்கின்ற, மகததேசந்தன்னில்-மகததேசத்தில், கந்தக்கதலி-(கருப்பூர) வாசனைபொருந்திய வாழைகளும், கடம்பு-கடம்புவிருக்ஷங்களும், கன்னிகாரம் - கோங்குவிருக்ஷங்களும், செறிந்து - நெருங்கி (யிருக்கின்ற), சிந்தைக்கினிதாகியவோர் - கருத்துக்கினிமையானவொரு, சிறப்பாமலையினிடத்து - சிறந்தவரையினிடத்தில்—எ-று.

**(இ-ா.) இந்தப்பூமிக்குள் அழகு நிறைந்த புட்பவனத்தில் குளிர்ந்ததென்றற்காற்று பரிமளிக்கின்றமகததேசத்தில் கருப்பூர வாசனைபொருந்தியவாழைகளும், கடம்பவிருக்ஷங்களும், கோங்கு விருக்ஷங்களும் நெருங்கியிருக்கின்ற கருத்துக்கினிமையானவொரு சிறந்தவரையினிடத்தில்—என்பதாம். (ருரு)**

## தாசூரமுனிவன் பெருமையைக்கூறல்.

பரலோகஞ்சேர்தவமே பண்ணியயன்போலுயர்ந்த
சரலோமாவின்மைந்தன் றாசூரப்பெயர்முனிவன்
சுரலோகத்தின்குருவின் றோன்றற்கசனையொப்பா
னரலோகத்தின்மேலா னவைதீர்தவத்தாற்பெரியோன்.

(இ-ள்) பரலோகஞ்சேர் - மோக்ஷவுலகத்தையடைவதற்கான, தவம் பண்ணி - தவத்தைச்செய்து, அயன்போலுயர்ந்த - பிரமாவைப்போலுயர்வாகிய, சரலோமாவின்மைந்தன் - சரலோமாவென்னும் பெயரையுடைய முனிவனது புதல்வனாகிய, தாசூரப்பெயர்முனிவன் - தாசூரனென்னு நாமத்தையுடைய முனிவன், சுரலோகத்தின் - தேவலோகத்திலுள்ள, குருவின்றோன்றல - பிரகஸ்பதிபகவானுடைய குழந்தையாகிய, கசனையொப்பான் - கசனுக்குச் சமானமானவன், நரலோகத்தின்மேலாம்-மானிடலோகத்தின்மேலானவன், நவதீர்தவத்தாற்பெரியன் - குற்றமற்ற தவத்தினாற் பெரியவன்—எ-று.

(இ-ரை.) மோக்ஷவுலகத்தையடைவதற்கான தவத்தைச்செய்து பிரமாவைப்போலுயர்வாகிய சரலோமா வென்னும்பெயரையுடைய முனிவனது புதல்வனாகிய தாசூரனென்னு நாமத்தையுடைய முனிவன்தேவலோகத்திலுள்ள பிரகஸ்பதி பகவானுடைய குழந்தையாகிய கசனுக்குச் சமானமானவன். மானிடலோகத்தின் மேலானவன். குற்றமற்ற தவத்தினாற்பெரியவன்—என்பதா. ()

---

## பிதாபூரணமாதல்.

தனையனொருவனோடுஞ் சரலோமாவாமுனிவ
னனையகிரியின்வனத்தி லநேகயுகஞ்சென்றதற்பின்
புனையுங்கூடுகழிந்து புட்போவதுபோற்போகி
வினைசெய்யுடலைவிட்டு விண்ணோர்வடிவையெடுத்தான்.

(இ-ள்.) தனையனொருவனோடும் - ஒருபுத்திரனுடன், சரலோமாவாமுனிவன் - சரலோமாவென்னு முனியானவன், அனையகிரியின் வனத்தில் - அந்த மலையின்கண்ணுள்ள கானகத்தில், அநேகயுகஞ்சென்றதற்பின் - பலயுகங்கழிந்தபின்பு, புனையுங்கூடுகழிந்து-செய்தகூண்டைவிட்டு, புட்போவதுபோல் - பறவைசெல்வதுபோல, வினைசெய்யுடலை விட்டுப்போகி - வினையியற்றுஞ் சரீரநீங்கிப்போய், விண்ணோர்வடிவை யெடுத்தான் - தேவரூபங்கொண்டான்—எ-று.

(இ-ரை.) ஒருபுத்திரனுடன் சரலோமாவென்னு முனியானவன் அந்தமலையின்கண்ணுள்ள கானகத்தில் பலயுகங்கழிந்த

பின்பு செய்த கூண்டைவிட்டு பறவை செல்வதுபோல வினையிய ற்றுஞ் சரீர நீங்கிப்போய் தேவரூபங்கொண்டான்—என்பதாம்.

## தாசூரன் விசனமடைதல்.

தனியேயந்தவனத்தே தாசூரப்பேர்முனிவ
னினியதாதையிறவுக் கிரங்கியுதகத்தியற்றும்
புனிதமானபிரம பூசைமுழுதும்புரியான்
கனியுநெஞ்சனன்றில் கதறுமாபோற்கதறி.

(இ-ள்.) தனியேயந்தவனத்து - தனியனாகவக்கானகத்தில், தாசூரப்பேர்முனிவன்-தாசூரனென்னு நாமத்தையுடைய முனிவனானவன், இனிய காதையிறவுக்கிரங்கி - இனிமையான பிதாவின் மரணத்துக்கழுது, உதகத்தியற்றும் - நீராற்செய்கின்ற, புனிதமானபிரம - பரிசுத்தமாகிய பிராமணாள், பூசைமுழுதும்புரியான் - பூசைமுழுவதும் செய்யாமல், கனியுநெஞ்சன் - இரங்கியமனதுடையவனாய், அன்றில் - (புருடனைப்பிரிந்த) வன்றிற்பக்ஷியானது, கதறுமாபோற்கதறி - கதறுகின்றதுபோலக் கதறிக்கொண்டு—எ-று.

(இ-ஸா.) தனியனாகவக்கானகத்தில் தாசூரனென்னு நாமத்தையுடைய முனிவனானவன் இனிமையான பிதாவின் மரணத்துக்கழுது நீராற்செய்கின்ற பரிசுத்தமாகிய பிராமணாள்பூசைமுழுவதுஞ்செய்யாமல் இரங்கிய மனதுடையவனாய் புருடனைப்பிரிந்த வன்றிற் பக்ஷியானது கதறுகின்றது போலக் கதறிக்கொண்டு ()

## வனதேவதை தெளிவித்தல்.

தந்தையன்னைபிரிவாற் சாலவெம்பித்தளர்ந்த
மைந்தன்றன்னையருளால் வனதேவதைகண்டருளி
முந்துறுமனின்று முனிமாமகவாமுனிவா
சிந்தைதெளிந்தோய்தெளியாச் சிறியோரெனநொந்தயரேல்.

(இ-ள்.) தந்தையன்னைபிரிவால் - மாதாபிதாக்களின்பிரிவினால்,சாலவெம்பித்தளர்ந்த-மிகவும் வெப்பத்தோடுந் தளர்வுற்ற, மைந்தன்றன்னை-புத்திரனாகிய தாசூரனை, அருளால் - கிருபையினால், வனதேவதைகண்டருளிய - வனதேவதைபார்த்து கிருபைசெய்து, முந்துறுமனின்று - ப்ரத்தியக்ஷமாகாமனின்று, முனிமாமகவா - மகாமுனியின் குமாரனே, முனிவர் - முனியானவரே, சிந்தைதெளிந்தோய் - மனந்தெளிந்தவரே, தெளியாச் சிறியோரென - தெளிவில்லாத மூடர்களைப்போல, நொந்தயரேல் - துன்பமுற்றுத் தளர்ச்சியடையாதே—எ-று.

(இ-ரை.) மாதாபிதாக்களின்பிரிவினால் மிகவும்வெப்பத்தோடுந்தளர்வுற்ற புத்திரனாகியதாசூரனைகிருபையினால் வனதேவதை பார்த்து கிருபைசெய்து ப்ரத்யக்ஷமாகாம னின்றுமகாமுனியின் குமாரனே! முனியானவரே! மனந்தெளிந்தவரே ! தெளிவில்லாத மூடர்களைப்போல துன்பமுற்றுத் தளர்ச்சியடையாதே—எ-ம். ()

## இதுவுமது.

அனித்தமானகுடும்பத் தபத்தமுணர்கின்றிலையென்
சனித்தபொழுதேமரித்தல் சற்றுந்தப்பாகண்டாய்
பனித்தவிழியோடயர்வாய் பகலோனுதயஞ்செய்தா
லினித்தன்னிலையத்தமனத் தெய்தானென்பாருளரோ.

(இ-ள்.) அனித்தமான குடும்பத்து - அநித்தியமாகியசம்சாரத்தினுடைய, அபத்தமுணர்கின்றிலையென் - பொய்யை நீயறியாததென்னகாரணம், சனித்தபொழுதே - பிறந்தபொழுதே, மரித்தல் சற்றுந்தப்பாகண்டாய் - மரணமெவ்வளவுந் தப்பமாட்டாது, பனித்தவிழியோடயர்வாய் - கண்ணீர்சொரிய வழுகின்றவனே, பகலோனுதயஞ்செய்தால் - சூரியனுதயமானால், இனித்தன்னிலையத்தமனத்து - மேற்றனது நிலையான வஸ்தமானத்தை, எய்தானென்பாருளரோ - அடையமாட்டானென்று சொல்வாரு முண்டோ—எ-று.

(இ-ஶ.) அநித்தியமாகிய சம்சாரத்தினுடைய பொய்யை நீயறியாத தென்னகாரணம்? பிறந்தபொழுதேமரணமெவ்வளவுந் தப்பமாட்டது. கண்ணீர் சொரிய வழுகின்றவனேசூரியனுதயமானால் மேற் றனது நிலையான வஸ்தமானத்தை அடைய மாட்டானென்று சொல்வாரு முண்டோ—என்பதாம்.

(இ-சூ-க-ம்.) மாதாபிதாக்கள் பிரிவுக்காற்றாமல் விசனப்பட்டு தெளிவுற்றதென்பதாம். (சூ0)

## சாதன சதுஷ்டய முதித்தல்.

வாளாவயரேலென்று மறைந்துதெய்வமுரைப்பக்
கேளாவுணர்ந்துதளருங் கேதமொழிந்துநிலையாய்
நீளாரணத்தின்படியே நீரின்கடன்கண்முடித்து
மீளாநெறிசேர்தவத்தின் மிகவும்விருப்பமானான்.

(இ-ள்.) வாளாவயரேலென்று - வீணாகத்துன்பமடையாதேயென்று, மறைந்து தெய்வமுரைப்ப - மறைந்திருந்து வனதேவதை சொல்ல, கேளாவுணர்ந்து - கேட்டறிந்து, தளருங்கேதமொழித்து - சோருகின்ற

துன்பத்தைக்கெடுத்து, நிலையாய் - ஸ்திரமாய், நீளாரணத்தின்படியே- நீண்டவேதவசனத்தின்படியே, நீரின்கடன்கண்முடித்து - உதகபூருவ மாய்ச் செய்யவேண்டிய கிரியைகளைச்செய்து, மீளாநெறிசேர்-திரும்பாத மோக்ஷத்திற்சேர்க்கின்ற, தவத்தின்மிகவும்விருப்பமானன்-(தாசூரமுனி) தவசின் மிகவும் விருப்பமடைந்தார்—எ-று.

(இ-ரை.) வீணுகத்துன்பமடையாதே யென்றுமறைந்திருந்து வனதேவதைசொல்ல, கேட்டறிந்து சோருகின்ற துன்பத்தைக் கெடுத்துஸ்திரமாய் நீண்ட வேதவசனத்தின்படியேஉதகபூருவமா ய்ச் செய்யவேண்டிய கிரியைகளைச்செய்துதிரும்பாத மோட்சத் திற்சேர்க்கின்ற தாசூரமுனி தவசின் மிகவும் விருப்பமடைந்தார்.

---

## ஏகாந்தஸ்தானம் விசாரித்தல்.

தக்கபிரமகருமந் தன்னுற்றவமேசெய்வான்
றொக்கசங்கற்பத்தாற் சுத்தாசாரமிகுந்தான்
மிக்கஞானமில்லான் விசுத்தமானபுவியிற்
புக்கவிடங்களெல்லா புனிதமன்றன்றென்னு.

(இ-ள்.) தக்கபிரமகருமந்தன்னுல் - (தனக்) குரிய வேதசம்பந்தமான கருமத்தினுல், தவஞ்செய்வான் - (தாசூரனுனவன்) தவத்தைச்செய்யும் பொருட்டு, தொக்கசங்கற்பத்தால் - மிகுந்த கங்சற்பத்தினுல், சுத்தாசார மிகுந்தான் - பரிசுத்தமான வாசாரத்தின்மிகுந்தான், மிக்கஞானமில் லான் - பூரணஞானமில்லாதவன், விசுத்தமானபுவியில் - பரிசுத்தமுள்ள பூமியில், புக்கவிடங்களெல்லாம் புனிதமன்றன்றென்னு - போனவிடங் களியாவுஞ் சீலமல்லவல்லவென்று—எ-று.

(இ-ரை.) தனக்குரிய வேதசம்பந்தமான கருமத்தினுல் தாசூ ரனுனவன் தவத்தைச்செய்யும்பொருட்டு மிகுந்த சங்கற்பத்தி னுல் பரிசுத்தமான வாசாரத்தின் மிகுந்தான். பூரணஞானமில்லா தவன் பரிசுத்தமுள்ள பூமியில் போனவிடங்களியாவுஞ் சீலமல்ல வல்லவென்று—என்பதாம். (சுஉ)

---

## தேவர்களைக்குறித்து யாகஞ்செய்தல்.

வையஞ்சுத்தமல்ல மரத்தினுனியேபுனித
மையபூட்போலாங்கே யமர்தற்கானதவமே

செய்யகிற்போமென்னுச் சிந்தையாரநினைந்து
வெய்யகனலைமூட்டி விண்ணோர்குழுவைநினைந்து.

(இ-ள்.) வையஞ்சுத்தமல்ல - பூமிபரிசுத்தமல்ல, மரத்தினுனியே புனிதம் - விருட்சத்தினது முனையேசுத்தமென்று, ஐயபுட்போல் - அழகிய பட்சியைப்போல, ஆங்கமர்தற்கானதவம் - அவ்விடத்திற் பொருந்துதற்காகிய தவத்தை, செய்யகிற்போமென்னு - செய்யத்தொடங்குவோமென்று, சிந்தையார நினைந்து - மனதிற்பொருந்தச்சிந்தித்து, வெய்யகனலைமூட்டி - வெவ்விய வக்கினியைவளர்த்து, விண்ணோர்குழுவைநினைந்து - தேவகணங்களைக்கருதி—எ-று.

(இ-௱.) பூமி பரிசுத்தமல்ல விருட்சத்தினது முனையேசுத்தமென்று அழகிய பட்சியைப்போல அவ்விடத்திற் பொருந்துதற்காகிய தவத்தைச்செய்யத் தொடங்குவோமென்று மனதிற் பொருந்தச் சிந்தித்து வெவ்விய வக்கினியை வளர்த்துதேவகணங்களைக்கருதி—என்பதாம். (௬௩)

## அக்கினிதேவன் வெளிப்படுதல்.

உடலையரிந்துவாங்கி யோமஞ்செய்யலோடுங்
கடவுளவர்க்கென்முகத்தாற் கலைவேதியன்மெய்த்தசைகண்
மிடறும்புயமுமுதல் வேவதென்னேயென்னுச்
சுடருங்கனலோனினைந்து சுருதிமுனிமுன்றோன்றி.

(இ-ள்.) உடலையரிந்துவாங்கி - தேகத்தை யரிந்தெடுத்து, ஓமஞ்செய்யலோடும் - யாகஞ்செய்த மாத்திரத்தில், கடவுளவர்க்கு - தேவர்களுக்கு, என்முகத்தால் - எனதிடமாக, கலைவேதியன் மெய்த்தசைகள் - கலைஞானத்தையுடைய பிராமணன் சரீரத்திலுள்ள மாமிசங்களால், மிடறும்- கண்டமும், புயமுமுதல் - தோள்களுமுதலானவைகள், வேவதென்னேயென்னு - வேகவேண்டியதென்னவென்று, சுடரின்கனலோனினைந்து- ப்ரகாசமுள்ள வக்கினிதேவனினைத்து, சுருதிமுனி முன்றோன்றி-மறையவர்முன்புதயமாய்—எ-று.

(இ-௱.) தேகத்தை யரிந்தெடுத்து யாகஞ்செய்தமாத்திரத்தில்தேவர்களுக்கு எனதிடமாக கலைஞானத்தையுடையபிராமணன் சரீரத்திலுள்ள மாமிசங்களால் கண்டமும் தோள்களுமுதலானவைகள் வேகவேண்டியதென்னவென்று ப்ரகாசமுள்ள வக்கினி தேவ னினைத்து மறையவர்முன்புதயமாய்—என்பதாம். (௬௪)

## அக்கினிதேவன் வரங்கொடுத்தல்.

கருதிறறென்னவென்னக் கைகண்முகிழ்த்துத்துதித்துப்
பரிசுத்தமதாமிடமிப் பாரிற்காணேனதனாற்
றருவிற்றலையிற்றளிர்மேற் றலந்தந்தருள்வாயென்ன
வரமுற்றுதவிகனலோன் வாரித்திரைபோன்மறைந்தான்.

(இ-ள்.) கருதிற்றென்னவென்ன - நீரெண்ணியகாரியமென்னவென்று கேட்க, கைகண்முகிழ்த்து - கரங்களைக்கூப்பிக்கொண்டு, துதித்து-தோத்திரஞ்செய்து, பரிசுத்தமதாமிடம் - பரிசுத்தமானவிடத்தை, இப்பாரிற்காணேனதனால் - இப்பூமியிற் கண்டிலனாதலால், தருவின்றலைமேல-விருட்சத்தினதுநுனியி (லிருக்கின்ற), தளிர்மேல் - துளிரின்மேல், தலந்தந்தருள்வாயென்ன - இடங்கொடுத் தனுக்கிரகஞ் செய்வாயென்று தாசூரமுனிகேட்க, வரமுற்றுதவி-வரத்தைமுழுதுங்கொடுத்து, கனலோன்-அக்கினிதேவன், வாரித்திரைபோல் - சமுத்திரத்தி னலையைப்போல, மறைந்தான் - மறைந்தனர்—எ-று.

(இ-ரை.) நீரெண்ணியகாரிய மென்னவென்றுகேட்க, கரங்களைக் கூப்பிக்கொண்டு தோத்திரஞ்செய்து பரிசுத்தமான விடத்தை இப்பூமியிற்கண்டிலனாதலால் விருட்சத்தினது நுனியிலிருக்கின்ற துளிரின்மேல் இடங்கொடுத் தனுக்கிரகஞ்செய்வாயென்று தாசூரமுனிகேட்க வரத்தை முழுதுங்கொடுத்து அக்கினிதேவன் சமுத்திரத்தி னலையைப்போல மறைந்தனர்—என்பதாம். (கூரு)

---

## பரிசுத்தமுள்ள ஸ்தானத் திருத்தல்.

கானத்திடையோர்கடப்பங் காரின்பதத்தைக்கடந்து
வானத்துயர்ந்ததன்மேல் வருபல்லவமென்றவிசின்
றானத்தையமின்றித் தாசூரன்றானிருந்து
மேனற்றவமேசெய்வான் மிகவும்விரும்புமனத்தான்.

(இ-ள்.) கானத்திடை-காட்டினிடத்துள்ள, ஓர் கடப்பம்-ஒருகடம்பவிருக்ஷமானது, காரின்பதத்தைக்கடந்து - மேகமண்டலத்தைததாண்டி, வானத்துயர்ந்தது - ஆகாசத்தை யளாவியிருக்கின்றது, அதன்மேல்-அந்தவிருக்ஷத்தின்மேல், வருபல்லவமென்றவிசின் - வளருகின்ற தளிரென்கிற வாசனத்தினது, தானத்து - இடத்தில், ஐயமின்றி - சந்தேகமின்றி, தாசூரன்றானிருந்து - தாசூரமுனிவரிருந்து, மேனற்றவஞ்செய்வான் மிகவும் விரும்பும் - மேனிட்காமதவஞ்செய்ய மிகவும்விரும்புகின்ற, மனத்தான் - மனதுடையவன்—எ-று.

(இ-ள.) காட்டினிடத்துள்ள ஒரு கடம்பவிருக்ஷமானது மேகமண்டலத்தைத்தாண்டி ஆகாசத்தை யளாவியிருக்கின்றது. அந்த விருட்சத்தின்மேல் வளருகின்ற தளிரென்கிற வாசனத்தினது இடத்தில் சந்தேகமின்றி தாசூரமுனிவரிருந்து மேனிட்காமதவஞ்செய்ய மிகவும் விரும்புகின்ற மனதுடையவன்-எ-ம்.

## யாகமானசிகமாகச்செய்தல் வேறு.

ஒருகணந்திசைகளனைத்தையுநோக்கி யுரைத்தபத்மாதனத்திருந்தான், பெருகியதிசைகண் முழுதினுந்திரும்பி பிரமபாவனையறிவரிதாய்க், கருமமாத்திரத்தி னிற்பதாய்ப் பலமாங்கற்கசம் விரும்புறுமனத்தால், வருடமாறிரண்டு மகங்களை நடத்தி வானவர்க்கவியுணவளித்தான்.

(இ-ள்.) ஒருகணம் - ஒருக்ஷணநேரத்தில், திசைகளனைத்தையுநோக்கி - திக்குகளையெல்லாம்பார்த்து, உரைத்த பத்மாதனத்திருந்து-சொல்லப்பட்ட பத்மாசனத்திலிருந்து, பெருகிய திசைகண்முழுதினும்- விரிந்த திக்குகளனைத்திலு நின்று, திரும்பி - நீங்கி, பிரமபாவனையறிவரிதாய் - பிரமஞானத்தை யறிதற்கரிதானவனாய், கருமமாத்திரத்தினிற்பதாய் - கருமமட்டிலிருப்பதாய், பலமாங்கற்கசம் - ப்ரயோசனமாகிய காற்பண்ணியத்தை, விரும்புறுமனத்தால்-விரும்பாத மனதினால், ஆறிரண்டுவருடம்-பன்னிரண்டுவருடம், மகங்களை நடத்தி - யாகங்களைச்செய்து, வானவர்க்கு - தேவர்களுக்கு, அவியுணவளித்தான் - அவிர்ப்பாகங்கொடுத்தான்.

(இ-ரை.) ஒருக்ஷணநேரத்தில் திக்குகளையெல்லாம்பார்த்துச் சொல்லப்பட்ட பத்மாசனத்திலிருந்து விரிந்த திக்குகளனைத்திலு நின்று நீங்கி பிரமஞானத்தை யறிதற்கரிதானவனாய் கருமமட்டிலிருப்பதாய் ப்ரயோசனமாகிய காற்பண்ணியத்தை விரும்பாத மனதினால் பன்னிரண்டுவருடம் யாகங்களைச்செய்து தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுத்தான்—என்பதாம். (சுஎ)

## ஞானமுதித்தல்.

கோத்திரள்புரவிமனிதராலியற்றுங் கோதறுவேள்விகண்முற்று
சாத்திரவிதியாலியற்றிநீள்காலந் தவறறநடந்தமையாலே [ஞ
மாத்திரமானமனமிகத்தெளிந்து வரம்பிலதாதலுமாங்கே
நேத்திரமானஞானம்வந்தெய்தி நிறைந்தனவலிதினன்னெஞ்சம்.

(இ-ள்.) கோத்திரள் - கோமேதகங்களாலும், புரவி - அசுவமேதகங்களாலும், மனிதர் - நரமேதங்களாலும், இயற்றும் - செய்யாநின்ற, கோதறுவேள்விசண்முற்றும் - குற்றமற்ற யாகங்களையெல்லாம், சாத்திரவிதியாலியற்றி - வேதவிதிப்படிசெய்து, நீள்காலம் - வெகுகாலம், தவறறநடந்தமையால் - விக்கினமின்றிநடந்ததினுல், மாத்திரமானமனம் - மிகவும் ஸ்திரமாகிய மனமானது, மிகத்தெளிந்து - மிகவுந்தெளிவுற்று, வரம்பிலதாதலும் - பூரண்மானதினுலும், ஆங்கே - அவ்விடத்தே, நேத்திரமான ஞானம் - கண்ணுகிய ஞானமானது, நன்னெஞ்சம் - நல்லமனதில், வலிதின் வந்தெய்தி - தானேவந்தடைந்து, நிறைந்தன-பூரணமாயிற்று-எ-று.

**(இ-ா.) கோமேதகங்களாலும், அசுவமேதகங்களாலும், நரமேதகங்களாலும் செய்யாநின்ற குற்றமற்றயாகங்களை யெல்லாம் வேதவிதிப்படிசெய்து வெகுகாலம் விக்கினமின்றி நடந்ததினுல் மிகவும் ஸ்திரமாகிய மனமானது மிகவுந் தெளிவுற்று பூரணமான தினுலும் அவ்விடத்தே கண்ணுகிய ஞானமானது நல்லமனதில் தானேவந்தடைந்து பூரணமாயிற்று—என்பதாம்.**

(இ-அ-க-ம்.) நிட்காமமாகச்செய்த கிரியாபலத்தினுற் பூரணஞானமுதித்த தென்பதாம். (கூஅ)

## வனதேவதை தெரிசித்தல்.

பிறவியாபரணங் கழிந்துவாதனைகள் **பேரறமாண்டுளபெரியோ, னிறவியதளிர்மேலிருத்தலுமொருநா ணிமலமாம்விழிகளுக்கெதிரே,** யுறவிரிமலரின்மேகலையுடுத்த **வு__ர்வனதேவதைதோன்ற, வறிவனுநோக்கியார்கொனீயென்ன வழகியவணங்குரைசெய்வாள்.**

(இ-ள்.) பிறவியாபரணங்கழிந்து - சநநமறைவானது நீங்கி, வாதனைகள்பேர் - வாசனைகளினுமமும், அறமாண்டுளபெரியோன் - மிகவுங்கெடுத்துள்ள மகானுகியதாசூரமுனி, இறவிய தளிர்மேல் - தேன்கூடுகளுள்ள (கிளைகளின்) றுளிரின்மேல், இருத்தலும் - இருந்தகாலத்தில், ஒருநாள்-ஒருதினத்தில், நிமலமாம் விழிகளுக்கெதிரேயுற - நிருமலமாகிய கண்களுக்கு முன்னேவர, விரிமலரின் மேகலையுடுத்த - விரிந்த புஷ்ப வஸ்திரங்களைத்தரித்த, உயர்வன தேவதைதோன்ற - உயர்ந்தவன தேவதையானவள்தோற்ற, அறிவனுநோக்கி - ஞானவானுன முனிவனும்பார்த்து, ஆர்கொனீயென்ன - நீயாரென்றுகேட்க, அழகியவணங்குரைசெய்வாள் - அழகுள்ள தெய்வப்பெண் சொல்லுவாள்—எ-று.

(இ-ள.) சநநமறைவானது நீங்கி வாசனைகளினுமழும் மிகவுங் கெடுத்துள்ள மகானுகிய தாரூரமுனிதேன்கூடுகளுள்ள கிளைகளின் றுளிரின்மேல் இருந்தகாலத்தில் ஒருதினத்தில் நிருமலமாகிய கண்களுக்கு முன்னேவர விரிந்த புஷ்ப வஸ்திரங்களைத்தரித்த உயர்ந்த வனதேவதையானவள்தோற்ற ஞானவானுன முனிவனும்பார்த்துநீ யாரென்று கேட்க அழகுள்ளதெய்வப்பெண் சொல்லுவாள்—என்பதாம். (சுசு)

## வனதேவதை யுரைத்தல்.

பெரியவர்தம்பாற்பெறலருநேயம் பெற்றவர்விரும்பிய வெல்லா, மரியனவெனினு மிமைப்பினிலெளிதி லணுகுமென்றய்யமற்றறிந்தேன், றெரியருண்முனிவநீயுறைவனத்திற் செறிவனதேவதையிங்ஙன், விரியலர்கொடியாம் விநோதவீட்டிடையே விருப்பொடுமிருப்பவளுனே.

(இ-ள்.) பெரியவர்தம்பால் - மகான்களிடத்தில், பெறலருநேயம் பெற்றவர் - பெறுதற்கரிய வன்படைந்தவர்கள், விரும்பியவெல்லாம்-ஆசித்தவனைத்தும், அரியனவெனினும் - அருமையானுலும், இமைப்பினில் - க்ஷணத்தில், எளிதிலணுகுமென்று - இலகுவாய்க்கிடைக்குமென்று, ஐயமற்றறிந்தேன் - சந்தேகமற்றுணர்ந்தேன், தெரிவருண்முனிவ - ஞானுனுக்கிரகஞ்செய்கின்ற முனியே, நீயுறைவனத்தில் - நீரெழுந்தருளியிருக்கின்ற (வில்) வாரணியத்தில், செறிவனதேவதை - நெருங்கியிருக்கின்ற வனதேவதையாம், இங்ஙன் - இவ்விடத்தில், விரியலர்கொடியாம் - மலர்ந்த புட்பக்கொடியாகிய, விநோத வீட்டிடை - விநோதமுள்ள வீட்டினிடத்தில், நான் விருப்பொடு மிருப்பவள் - யான் பிரியத்துட னிருக்கின்றவள்—எ-று.

(இ-ள.) மகான்களிடத்தில் பெறுதற்கரிய வன்படைந்தவர்கள் ஆசித்தவனைத்தும் அருமையானுலும் க்ஷணத்தில் இலகுவாய்க்கிடைக்குமென்று சந்தேகமற்றுணர்ந்தேன். ஞானுனுக்கிரகஞ்செய்கின்ற முனியே நீரெழுந்தருளி யிருக்கின்ற வில்வாரணியத்தில் நெருங்கியிருக்கின்ற வனதேவதையாம். இவ்விடத்தில்மலர்ந்தபுட்பக்கொடியாகிய விநோதமுள்ள வீட்டினிடத்தில் யான் பிரியத்துடனிருக்கின்றவள்—என்பதாம். (எ௦)

## வனதேவதை தனது சிறுமையையுரைத்தல்.

மேடமாதத்திற்பிறை பதின்மூன்று கலையுறமேவியநாளி, ஞடருமதன னுயர்திருநாளினந்தனவனத்திலேவந்து, கூடியவனதே

வதைக்கணந்தன்னைக்குறுகினேன்பாங்கியர்முழுதுந், தேடருமைந்தருடன் மகிழ்ந்திருந்தார் சிறுவனில்லாதயான்றளர்ந்தேன்.

(இ-ள்.) மேடமாதத்தில் - சித்தரைமாதத்தில், பிறை - சந்திரனுனவன், பதின்மூன்றுகலையுற மேவியநாளில் - பதின்மூன்று கலையைப்பொருந்திய திரையோதசியில், நாடருமதனன் - பார்த்தற்கரிய மன்மதனுடைய, உயர்திருநாளில் - மகோச்சவகாலத்தில், நந்தனவனத்தில் - புஷ்பவனத்தில், வந்துகூடிய - வந்துசேர்ந்த, வனதேவதைக்கணந்தன்னை - வனதேவதைகளினது கூட்டத்தை, குறுகினேன் - நெருங்கினேன், பாங்கியர்முழுதும் - தோழிகளனைவரும், தேடரும் - தேடுதற்கரிய, மைந்தருடன் - புத்திரர்களுடன், மகிழ்ந்திருந்தார் - களித்திருந்தார்கள், சிறுவனில்லாத யான் - குழந்தையில்லாத நான், தளர்ந்தேன்-தளர்வானேன்.

(இ-ரை.) சித்திரைமாதத்தில் சந்திரனுனவன் பதின்மூன்று கலையைப்பொருந்திய திரையோதசியில் பார்த்தற்கரியமன்மதனுடைய மகோச்சவகாலத்தில் புஷ்பவனத்தில்வந்துசேர்ந்த வனதேவதைகளினது கூட்டத்தை நெருங்கினேன். தோழிகளனைவரும் தேடுதற்கரிய புத்திரர்களுடன் களித்திருந்தார்கள். குழந்தையில்லாத நான் தளர்வானேன்—என்பதாம். (எக)

## வனதேவதை புத்திரனை வேண்டல்.

காதலித்தவர்க்குக்கருதியதளிக்குங்கற்பகமனையநீயிருப்ப
நாதனேநாதரில்லவர்போலநான்மகற்கிரங்குதனலனே
நீதரல்வேண்டும்புதல்வனையன்றிநின்னருளென்பொருட்டிலதேற்
றீதறுமதலையிலதென்னுந்துன்பஞ்செந்தழன்மூழ்கியேதீர்ப்பேன்

(இ-ள்.) காதலித்தவர்க்கு - இச்சித்தவர்களுக்கு, கருதிய தளிக்கும் - எண்ணியதைக்கொடுக்கின்ற, கற்பகமனையநீயிருப்ப - கற்பகவிருட்சத்தையொத்த நீயிருக்க, நாதனே - இரட்சகனே, நாதரில்லவர்போல - இரட்சகரில்லாதவர்களைப்போல, நான்மகற்கிரங்குதனலனே - யான் புத்திரனுக்கு விசனப்படுவது நன்மையோ, புதல்வனை-புத்திரனை, நீ தரல்வேண்டும் - நீர்கொடுக்கவேண்டும், அன்றி - (அப்படி) யல்லாமல், நின்னருள்-உமதுகிருபை, என்பொருட்டிலதேல் - என்னிடத்தில்லாமற்போனால், தீதறுமதலையிலதெனுந்துன்பம் - குற்றமற்ற புத்திரனில்லை யென்னுந் துக்கத்தை, செந்தழல் - சிவந்தவக்கினியில், மூழ்கியெதிர்ப்பேன் - ப்ரவேசித்து நீக்குவேன்—எ-று.

(இ-ரை.) இச்சித்தவர்களுக்கு எண்ணியதைக் கொடுக்கின்ற கற்பகவிருட்சத்தையொத்த நீயிருக்க இரட்சகனே ? இரட்சகரில்லாதவர்களைப்போல யான் புத்திரனுக்கு விசனப்படுவதுநன்மையோ புத்திரனை நீர்கொடுக்கவேண்டும். அப்படியல்லாமல் உமது கிருபை என்னிடத்தில்லாமற் போனால் குற்றமற்ற புத்திரனில்லையென்னுந்துக்கத்தை சிவந்தவக்கினியில் ப்ரவேசித்து நீக்குவேன்.

## வனதேவதைக்குப் புத்திரனை யளித்தல்.

என்னலுமுனிவ னகைத்தொருமலரை யீந்தொருமதியிலே யெளிதா, யன்னமேமகவைப் பெறுதியானீமுன் னருங்கனன்மூழ்குவேனென்னு, வின்னலால்வலித்து மகவுவேண்டுதலா லினிதுநீயீன்றிடுமகவும், பின்னுருவருத்தநெறியினுன்ஞானம் பெறுமெனப் பேசினன்பெரியோன்.

(இ-ள்.) என்னலும் - என்று வனதேவதை சொல்லவும், முனிவனகைத்து - தாசூரமுனி சிரித்து, ஒருமலரையீந்து - ஒருபூவைக்கொடுத்து, ஒருமதியில் - ஒருமாதத்தில், எளிதாய் - இலேசாக, அன்னமே-அன்னம் போன்றவளே, மகவைப்பெறுதி-புத்திரனைப்பெறுவாய், நீமுன்-நீமுன்பு, அருங்கனன் மூழ்குவேனென்னு - அறிய வக்கினியிற் ப்ரவேசிப்பேனென்றுசொல்லிய, இன்னலால்வலித்து - துன்பத்தினுல் வலிமையாக, மகவு வேண்டுதலால்-புத்திரனை வேண்டியபடியால், இனிது நீ யீன்றிடுமகவும்-இனிமையாக நீபெற்றிடும்புத்திரனும், பின்னுறு - பின்வரப்பட்ட, வருத்தநெறியினுல் - வருத்தமான மார்க்கத்தினுல், ஞானம்பெறுமென - ஞானத்தையடைவானென்று, பெரியோன் - மகானுகிய தாசூரமுனி, பேசினன் - சொன்னுன்—எ-று.

(இ-ரை.) என்று வனதேவதை சொல்லவும் தாசூரமுனிசிரித்து ஒரு பூவைக்கொடுத்துஒருமாதத்தில் இலேசாக அன்னம்போன்றவளே ! புத்திரனைப்பெறுவாய், நீ முன்பு அரியவக்கினியிற் ப்ரவேசிப்பேனென்று சொல்லிய துன்பத்தினுல் வலிமையாக புத்திரனை வேண்டியபடியால் இனிமையாக நீ பெற்றிடும் புத்திரனும் பின் வரப்பட்ட வருத்தமான மார்க்கத்தினுல் ஞானத்தை யடைவானென்று மகானுகிய தாசூரமுனிசொன்னுன்—என்பதாம். ()

## புத்திரனை வளர்த்தல்.

கேட்டவண்மகவுகிடைத்ததேயென்று கிளர்முகமதிநிலாக்குலாவ, மீட்டுமம்முனியைநோக்கிநின்னேவல் விரும்பியீண்டுறைகுவனென்ன, வாட்டமின்முனிவனியைந்திலன்விடுப்பவந்தனளணங்குதன்னிடத்திற், சேட்டமாமகவையளித்தனள்கலையாற் செறிதருமதியெனவளர்த்தாள்.

(இ-ள்.) கேட்டவள் - கேட்டவந்த வனதேவதையானவள், மகவுகிடைத்ததேயென்று - புத்திரன் லெபித்ததென்று, கிளர்முகமதி - ப்ரகாசிக்கின்ற முகமென்னுஞ்சந்திரன், நிலாக்குலாவ - ஒளிவிளங்க, மீட்டுமம்முனியை - திரும்பவு மந்தமுனியை, நோக்கி - பார்த்து, நின்னேவல் விரும்பி - உமது பணியை யிச்சித்து, ஈண்டுறைகுவனென்ன - இவ்விடத்தில் வசிப்பேனென்றுசொல்ல, வாட்டமுனிவன்-வாட்டமில்லாத தாருகமுனியானவர், இயைந்திலன்விடுப்ப - சம்மதிக்காமலனுப்ப, அணங்குதன்னிடத்தில் - தெய்வப்பெண்டனதிடத்தில், வந்தனள் - வந்தாள், சேட்டமாமகவை - உயர்வுள்ளபுத்திரனை, அளித்தனள் - பெற்றாள், கலையாற்செறிதருமதியென - கிரணங்களினு னிறையப்பெற்ற சந்திரனைப்போல, வளர்த்தாள் - வளர்த்தனள்—எ-று.

(இ-ரை.) கேட்டவந்த வனதேவதையானவள் புத்திரன்லெபித்தனென்று ப்ரகாசிக்கின்றமுகமென்னுஞ்சந்திரன் ஒளிவிளங்க திரும்பவு மந்தமுனியைப்பார்த்து உமது பணியையிச்சித்து இவ்விடத்தில் வசிப்பேனென்று சொல்லவாட்டமில்லாத தாருகமுனியானவர் சம்மதிக்காம லனுப்ப தெய்வப்பெண்டனதிடத்தில் வந்தாள். உயர்வுள்ள புத்திரனைப்பெற்றாள் கிரணங்களினு னிறையப்பெற்ற சந்திரனைப்போல வளர்த்தனள்—என்பதாம். (எச)

## புத்திரனோடு முனியைத் தரிசித்தல்

இருதுவேயாண்டே யெனுங்குறிகளினுலிறந்தனவா றிரண்டாண்டு, திருமுனிபாதமகவொடுமடைந்து சென்னிதாழ்ந்தெதிருறநின்று, பெருமைகண்டருள்வாய் நீதரயானே பெற்றவிப்பெருங்குணக்குமர, னருமறைநூல்களனைத்தையுநாளை யளித்திடவறிவினுலறிந்தான்.

(இ-ள்.) இருது - இருதுவும், ஆண்டெனும் - வருடமுமென்கின்ற, குறிகளினுல் - குறிப்புகளினுல், ஆறிரண்டாண்டு - பன்னிரண்டுவருடம், இறந்தன - கழிந்தன, (பின்பு) திருமுனிபாதம் - அழகியமுனிவருடைய பாதத்தை, மகவொடுமடைந்து-புத்திரனுடன்சேர்ந்து, சென்னிதாழ்ந்து-

சிரசினால் வணங்கி, எதிருறநின்று - முன்னமே நின்று, பெருமைகண்டருள்வாய் - உயர்வையுணர்ந்தனுக்கிரகஞ்செய்கின்ற சுவாமியே, நீதர - நீ ரனுக்கிரகஞ்செய்ய, யான்பெற்ற - நானீன்ற, இப்பெருங்குணக்குமரன் - இப்பெரிதான குணத்தையுடைய புத்திரன், அருமறை நூல்களனைத்தையும் - அரியவேதசாஸ்திரங்களியாவையும், நானேயளித்திட - யானேயறிவிக்க, அறிவினாலறிந்தான் - தனதறிவினாற் றெரிந்துகொண்டான் - எ-று.

(இ-ள்.) இருதுவும்வருடமுமென்கின்றகுறிப்புகளினால்பன்னிரண்டுவருடம்கழிந்தன. பின்பு அழகியமுனிவருடையபாதத்தை புத்திரனுடன்சேர்ந்து சிரசினால் வணங்கிமுன்னமே நின்று உயர்வையுணர்ந் தனுக்கிரகஞ் செய்கின்ற சுவாமியே! நீ ரனுக்கிரகஞ் செய்ய நானீன்ற இப்பெரிதான குணத்தையுடைய புத்திரன் அரிய வேதசாஸ்திரங்க ளியாவையும்யானே யறிவிக்க தனதறிவினாற் றெரிந்து கொண்டான் — என்பதாம். (எரு)

## புத்திரன் குருபணியி னிற்றல்.

கலையெலாநிறைந்தும் பிறப்பிலாஞானங் கண்டிலன்கடற்பவத்துயரா, லலைவுறுநின்றான் றனையுணர்ஞான மளித்தியென் றணங்குரைசெய்ய, நிலைகொண்மாணுக்கனமக்கிவனுக்கி நீயகல்கெனவவளகன்று, டலைமைசேர்முனிவன் றாளிணைவிடாது சற்குணமதலையுநின்றான்.

(இ-ள்.) கலையெலாநிறைந்தும் - கலைக்கியானங்களியாவும் பூரணமாயறிந்தும், பிறப்பிலாஞானங்கண்டிலன் சனியாத வாத்மஞானத்தைத்தரிசித்திலன், கடற்பவத்துயரால் - சமுத்திரத்தையொத்த சநநதுன்பத்தினால், அலைவுறு நின்றான் - சலனமடைகின்றான், தனையுணர்ஞானம் - தன்னையறிகின்ற ஞானத்தை, அளித்தியென்று - அனுக்கிரகஞ்செய்வாயென்று, அணங்குரைசெய்ய - வனதேவதைசொல்ல, இவன் - இவனை, நமக்கு - எமக்கு, நிலைகொள் மாணுக்கனுக்கி - நிலைத்த சீடனுக்கி, நீயகல்கென - நீ நீங்குவாயென்று முனிசொல்ல, அவளகன்றாள் - அந்தவனதேவதையானவள் (புத்திரனைவிட்டு) நீங்கினாள், தலைமைசேர்முனிவன் - பெருமைபொருந்திய முனிவருடைய, தாளிணைவிடாது - உபயபாதங்களை விடாமல், சற்குணமதலையுநின்றான் - சற்குணச்சீடனு மிருந்தான் — எ-று.

(இ-ள்.) கலைக்கியானங்க ளியாவும் பூரணமா யறிந்தும்சனியாத வாத்மஞானத்தைத் தரிசித்திலன். சமுத்திரத்தையொத்த சநந துன்பத்தினால் சலனமடைகின்றான். தன்னையறிகின்றஞானத்தை அனுக்கிரகஞ் செய்வாயென்று வனதேவதை சொல்ல இவனை

எமக்கு நிலைத்த சீடனுக்கி நீ நீங்குவாயென்று முனிசொல்ல, அந்த வனதேவதையானவள் புத்திரனைவிட்டு நீங்கினாள். பெருமைபொருந்திய முனிவருடைய வுபயபாதங்களை விடாமல் சற்குணச்சீடனுமிருந்தான்—என்பதாம்.

(இ-அ-க-ம்.) தமது கிருபையினால் வனதேவதைக்குப் புத்திரனைத் தந்து சீடனுக்கிக்கொண்ட தென்பதாம். (எசு)

## ஞானத்தை யுபதேசித்ததெனல்.

வருந்திமெய்ஞ்ஞானம் பெறத்தகுமகவைமாதவனருளினன் மெல்லத், திருந்தியகதைகளளவைகளிதிகா சத்திலேசெப்பியதிறங்கள், பெருந்துணைமறையின்முடிவிலே துணிந்துபேசியபழம்பொருண்மற்றும், பொருந்தியநெறிக ளநேகமாய்விரித்து பூரணபோதமேபுகன்றான்.

(இ-ள்.) வருந்தி - வருத்தப்பட்டு, மெய்ஞ்ஞானம் - தத்துவஞானத்தை, பெறத்தகுமகவை - பெறுதற்குரிய சீடனை, மாதவனருளினல் - தாசூரமுனிவனது கிருபையினால், மெல்ல - மெதுவாக, திருந்தியகதைகள்- திருத்தமான கதைகளும், அளவைகள்-ப்ரமாணங்களும், இதிகாசத்தில் - இதிகாசங்களில், செப்பியதிறங்கள் - சொல்லிய காரணங்களும், பெருந்துணை - மிகவுஞ்சகாயமான, மறையின் முடிவில் - வேதாந்தத்தில், துணிந்துபேசிய - தெளிந்துசொல்லிய, பழம்பொருள் - மகாவாக்கியார்த்தங்களும், மற்றும்பொருந்திய நெறிகள் - இன்னுஞ்சேர்ந்திருக்கின்ற மார்க்கங்களு (மாகிய விவைகளை), அநேகமாய்விரித்து - பலவாகவிரித்து, பூரணபோதமே புகன்றான் - பூரணஞானத்தையே சொன்னார்—எ-று.

(இ-ை.) வருத்தப்பட்டு தத்துவஞானத்தைப் பெறுதற்குரிய சீடனைதாசூரமுனிவனது கிருபையினால்மெதுவாகதிருத்தமான கதைகளும், ப்ரமாணங்களும், இதிகாசங்களில் சொல்லியகாரணங்களும், மிகவுஞ்சகாயமானவேதாந்தத்தில் தெளிந்துசொல்லியமகாவாக்கியார்த்தங்களும் இன்னுஞ்சேர்ந்திருக்கின்ற மார்க்கங்களுமாகிய விவைகளை பலவாகவிரித்து பூரணஞானத்தையே சொன்னார்.

### அந்த ஞானேபதேசத்தைப் போதித்தல்.

வானதிழ்கவது நெறியாக வானிலேமறைந்துபோ யொருநா, ளானவேழ்முனிவர்பதவிநின்றணுகியனையதாசூரன் வாழ்கடம்பின், றானமேமேவி யிருட்பொழுதிருந்து தாபதன்றனையனுக்கு

றைத்த, ஞானநற்பொருள்கள்கேட்டனமதனை நாமுனக்குள்ளவா றுரைப்பாம்.

(இ-ள்.) வானதிமூழ்க - கங்காஸ்நானஞ்செய்ய, அது நெறியாக - அந்தமார்க்கமாக, வானிலே மறைந்துபோய் - ஆகாயத்தில் திரிஸ்யமாகச் சென்று, ஒருநாள் - ஒருதினம், ஆனவேழ் முனிவர் - ஆகிய சத்தரிஷிகளுடைய, பதவியின்றணுகி - இடத்தினின்றுநெருங்கி, அனைய தாசூரன் வாழ்கடம்பின் - அக்குணங்களையுடைய தாசூரன் வாழ்கின்ற கடம்பவிருக்ஷத்தின், தானமேவி - இடத்திற்சேர்ந்து, இருட்பொழுதிருந்து - இராக்காலத்திலிருந்து, தாபதன்றனையனுக்குரைத்த - முனிவர் சீடனுக் கனுக்கிரகித்த, ஞான நற்பொருள்கள் கேட்டனம் - ஞானார்த்தங்களைக்கேட்டோம், அதனை - அந்த வருத்தத்தை, நாமுனக்குள்ளவாறுரைப்பாம் - யாமுனக்குள்ள ப்ரகாரஞ்சொல்லுவோம்—எ-று.

**(இ-ரை.) கங்காஸ்நானஞ்செய்ய அந்தமார்க்கமாக ஆகாயத்தில் திரிஸ்யமாகச்சென்று ஒருதினம் ஆகிய சத்தரிஷிகளுடைய இடத்தினின்றுநெருங்கி அக்குணங்களையுடையதாசூரன்வாழுகின்ற கடம்பவிருக்ஷத்தின்இடத்திற்சேர்ந்துஇராக்காலத்திலிருந்து முனிவர்சீடனுக்கனுக்கிரகித்த ஞானார்த்தங்களைக்கேட்டோம். அந்த வருத்தத்தை யாமுனக்குள்ள ப்ரகாரஞ் சொல்லுவோம்—எ-ம்.**

(இ-உ-க-ம்.) தாசூரமுனி சீடனுக்குப் போதித்தநெறியை இராமருக்குப் போதிக்கத்தொடங்கின ரென்பதாம். (எஅ)

**பிரமசங்கற்பத்தை யரசனுக வுருவகப்படுத்தல்.**

*பிறப்பிலாப்பிரமமிதுவெனவறுதி பிறப்பதோர்கதையிதுகேளாய், சிறப்பதோராசன்வீரமும்புகழுஞ் சிறந்தவன்றெளிஞனும் பெயரோ, னிறப்புறுமுலகபாலராயுள்ளா ரவனுடையேவலைமுடிமே, னிறப்புறுமணிபோற் ருங்குவரெவர்க்குநிலைபெறநிறுத்தொணுநெடியோன்.*

(இ-ள்.) பிறப்பிலாப்பிரமம் - சநநமில்லாத பிரமஸ்வரூபமானது, இதுவெனவறுதிபிறப்பது-ஈதென்று நிச்சயமுண்டாவதாகிய, இதுவோர்கதை- இந்த வொருகதையை, கேளாய் - நீகேட்பாய், சிறப்பதோரரசன்- சிறந்தவனாகிய வொருமஹாராஜன், வீரமும்புகழும் - வீரத்திலுங் கீர்த்தியிலும், சிறந்தவன் - சிரேஷ்டமானவன், தெளிஞனும்பெயரோன்-தெளிஞனென்னு நாமத்தையுடையவன், இறப்புறுமுலகபாலராயுள்ளார் - நாசமடைகின்ற சகரக்ஷகராயுள்ளவர்கள், அவனுடையேவலை - அந்தத்தெளிஞருடைய பணியை, முடிமேல்-சிரசின்மேல், நிறப்புறுமணிபோல் ப்ரகாசிக்கின்ற விரத்தினத்தைப்போல, தாங்குவர் - தரிப்பார்கள், எவர்க்கும் -

யாவர்க்கும், நிலைபெற நிறுத்தொணுநெடியோன் • திரமாக நிறுத்தற்கரிய வியாபகன்—எ-று.

(இ-ள.) சநநமில்லாத பிரமஸ்வரூபமானது ஈதென்று நிச்சயமுண்டாவதாகிய இந்தவொறுகதையை நீகேட்டாய். சிறந்தவனுகிய வொரு மகாராஜன் வீரத்திலுங் கீர்த்தியிலும் சிரேஷ்டமானவன். தெளிஞனென்னு நாமத்தையுடையவன். நாசமடைகின்றசகரக்ஷகராயுள்ளவர்கள் அந்தத்தெளிஞருடைய பணியை சிரசின்மேல் ப்ரகாசிக்கின்ற விரத்தினத்தைப்போலத்தரிப்பார்கள். யாவர்க்கும் திரமாக நிறுத்தற்கரியவியாபகன்—என்பதாம். (எகூ)

---

## அரசனது வலியைக்கூறல்.

சாகசமொன்றும்விரும்புவோன்பலவாய்ச் சாலவும்வியப்புறு தொழிலோன், சோகமுமகிழ்வுந்தருவதாய்முயலுந் தொழில்களின்றொகுதியையெண்ணின், மாகடலலைகளெண்ணினுந்தொலையா வாட்படைவாயுவன்னிகளி, லேகமுமிவனையடர்வுறுதாகு மிருகையால்விண்ணையென்செயலாம்.

(இ-ள்.) சாகசமொன்றும் விரும்புவோன் - மெய்மாத்திரம் விரும்புகின்றவன், பலவாய் - நாநாவிதமாகி, சாலவும் வியப்புறுதொழிலோன் - மிகவுமதிசயத்தைவிளைக்குஞ் செயலையுடையவன், சோகமுமகிழ்வுந்தருவதாய் - துன்பவின்பமுங் கொடுக்கப்பட்டதாய், முயலும் - முயற்சிசெய்கின்ற, தொழில்களின்றொகுதியை - தொழில்களின் கூட்டத்தை, எண்ணின் - அளவுசெய்யில், மாகடலலைகள் - பெரிய சமுத்திரத்தினலைகளை, எண்ணினுந்தொலையா - எண்ணிலுமெண்ணக்கூடாது, வாட்படை-விளக்கமுள்ள வாயுதங்களும், வாயு - காற்றுகளும், வன்னிகளில் - அக்கினிகளு (மாகியவிவைகளில்), ஏகமுமிவனை யடர்வுறுதாகும் - ஒன்றுமித்தெளிஞனைநெருங்கக்கூடாததாம், இருகையால்விண்ணையென்செயலாம்- இருகரங்களா லாகாயத்தை யென்செய்யலாம்—எ-று.

(இ-ள.) மெய்மாத்திரம் விரும்புகின்றவன். நாநாவிதமாகி மிகவு மதிசயத்தை விளைக்குஞ் செயலையுடையவன். துன்பவின்பமுங்கொடுக்கப்பட்டதாய் முயற்சிசெய்கின்றதொழில்களின் கூட்டத்தை அளவுசெய்யில் பெரியசமுத்திரத்தி னலைகளை எண்ணிலுமெண்ணக்கூடாது. விளக்கமுள்ள வாயுதங்களும், காற்றுகளும், அக்கினிகளுமாகிய விவைகளில் ஒன்றுமித்தெளிஞனை நெருங்கக்கூடாததாம். இருகரங்களா லாகாயத்தை யென்செய்யலாம்-எ-ம்.

## அரசன் முயற்சியின் பெருமையை யறிவித்தல்.

வரம்பறவிரிந்துலீலையாற்புரியமட்டறுமுயர்சிகளனைத்துந்
திரம்பெறுதேவர்மூவராலெனினுஞ்சிறிதுபிற்செல்லவுமரிதாம்
பரம்பியவிவனுக்குடன்முதலெல்லாம்பரிப்பவர்மூவருண்டனைய
ருரம்பயிலுலகையடர்ந்துநிற்பவர்களுத்தமன்மத்திமனதமன்.

(இ-ள்.) வரம்பறவிரிந்து - அளவின்றிப்பரவி, லீலையாற்புரியும்-விளையாட்டினாற்செய்கின்ற, மட்டறுமுயற்சிகளனைத்தும் - அளவற்ற யெத்தனங்களியாவும், திரம்பெறுதேவர் - நிலைபெற்றிருக்கின்ற தேவர்களாகிய, மூவராலெனினும் - மும்மூர்த்திகளாலேயும், சிறிதுபிற்செல்லவுமரிதாம்- எவ்வளவும் பின்றொடர்வதற்குக்கூடாதாம், பரம்பியவிவனுக்குடலமாய் - மகத்தாயிருக்கின்ற விவனுக்குத் தேகங்களாய், எல்லாம்பரிப்பவர்- யாவையுஞ் சுமக்கத்தக்கவர்கள், மூவருண்டு - மூன்றுபேர்களுண்டு, அனையர் - அவர்கள், உரம்பயிலுலகை - வலிமையுள்ள சகத்தை, அடர்ந்துநிற்பவர்கள் - அதிக்கிரமித்திருக்கின்றவர்கள், உத்தமன் மத்திமனதமன் - உத்தமன் மத்திமனதமனென்றுஞ்சொல்லப்பட்ட பெயரையுடையவர்களாம்.

(இ-ரை.) அளவின்றிப்பரவி விளையாட்டினாற் செய்கின்ற அளவற்ற யெத்தனங்களியாவும் நிலைபெற்றிருக்கின்ற தேவர்களாகிய மும்மூர்த்திகளாலேயும் எவ்வளவும் பின்றொடர்வதற்குக் கூடாதாம். மகத்தாயிருக்கின்ற விவனுக்குத் தேகங்களாய் யாவையுஞ் சுமக்கத்தக்கவர்கள் மூன்றுபேர்களுண்டு. அவர்கள் வலிமையுள்ள சகத்தை அதிக்கிரமித்திருக்கின்றவர்கள். உத்தமன் மத்திமனதமனென்றுஞ் சொல்லப்பட்ட பெயரையுடையவர்களாம்-எ-ம்.

## அரசன் சநநபூமியையும் அவனாலமைக்கப்பட்ட நகரச்சிறப்பையுங் கூறல்.

முடிவிலாவிசும்பிற் றோன்றியாங்குறைவோன் மூவகையுடலுடைமுதல்வ, னெடியவவ்விசும்பி லவன்றருநகர நீண்டவீதிகள் பதினலா, மொடிவறுபகுதி மூன்றினலெழிலா ருபவனம் வனங்கள்செய்குன்றங், கொடிநிகர்முத்த மாலையேழ்வாவி குளிர்கொதிப்புளவிருதீபம்.

(இ-ள்.) முடிவிலாவிசும்பில் - ஞானகாயத்தில், தோன்றியாங்குறைவோன்-உதித்தவவ்விடத்தில் வசிப்பவன், மூவகையுடலுடைமுதல்வன் -

மூன்றுவிதமாகிய சரீரத்தையுடையதலைவன், நெடியவவ்விசும்பில்-நீண்டவந்த ஞானகாயத்தில், அவன்றருநகரம் - அவனுண்டாக்கிய பட்டணத்துக்கு, நீண்டவீதிகள் பதினாலாம் - நீளமானதெருவுகள் பதினான்காம், ஒடிவறுபகுதி மூன்றினால் - கெடாத மூன்றுவகைகளோடும், எழிலாருபவனம் - அழகுள்ள சிங்காரவனங்கள், வனங்கள் - (ஊர்சூழ்ந்த) சோலைகள், செய்குன்றம் - லீலாபருப்பதங்கள், கொடிநிகர் முத்தமாலை - கொடியையொத்த முத்துமாலைகள், ஏழ்வாவி - ஏழுதடாகங்கள், குளிர்கொதிப்புள - குளிர்ச்சியுஞ் சூடுமுள்ள, இருதீபம் - இரண்டு விளக்காம்—எ-று.

(இ-ணா.) ஞானகாயத்தில் உதித்த வவ்விடத்தில் வசிப்பவன் மூன்றுவிதமாகிய சரீரத்தையுடைய தலைவன். நீண்டவந்தஞானகாயத்தில் அவனுண்டாக்கியபட்டணத்துக்கு நீளமானதெருவுகள் பதினான்காம். கெடாத மூன்றுவகைகளோடும் அழகுள்ளசிங்காரவனங்கள், ஊர்சூழ்ந்தசோலைகள், லீலாபருப்பதங்கள், கொடியையொத்த முத்துமாலைகள், ஏழுதடாகங்கள், குளிர்ச்சியுஞ் சூடுமுள்ள இரண்டு விளக்காம்—என்பதாம். (அஉ)

---

அரசனது லீலாக்கிரகங்களின் சிறப்புகூறல்.

**என்பனநிறைந்த விந்நகரத்தி லிவன்றரு பாவறையினங்கண், முன்புகீழ்மேனடுவெனும்பதங்கண் முழுதினுமுழல்வுறவிதித்த, வன்புறுதூண்கண் மூன்றுளவெலுப்பு மரங்களாற்செறிந்தனபுண்ணீர், மென்படர்தோலா னெய்த்தினிதான விரிமயிர்க்கற்றையான்மேய்ந்த.**

(இ-ள்.) என்பனநிறைந்த - என்று சொன்னவைக ணிறைந்திருக்கின்ற, இந்நகரத்தில் - இந்தப்பட்டணத்தில், இவன்றருபாவறையினங்கள்- இவனுண்டாக்கப்பட்ட கூடாரங்கள், முன்புறுகீழ்மேனடுவெனும் - முன்புள்ள கீழ்மேனடுவென்கின்ற, பதங்கண்முழுதினும் - சொற்கமத்தியபாதாளமென்னு மிடங்களெல்லாம், உழல்வுறவிதித்த - சுழலும்படி யுண்டாக்கின, (அவற்றிற்கு) வன்புறுதூண்கண் மூன்றுள - வலிமைபொருந்திய தூண்கண் மூன்றிருக்கின்றன, எலும்பு மரங்களால் - அஸ்திர மரங்களினால், செறிந்தன - நெருங்கியிருக்கின்றன, புண்ணீர் - உதிரத்தினாலும், மென்படர் தோலால் - மிருதுவாகப் படர்ந்திருக்கின்ற சருமத்தினாலும், நெய்த்து - முடைந்து, இனிதான - இனிமையாகிய, விரிமயிர்க்கற்றையான் மேய்ந்த-விரிந்த மயிர்க்கற்றையினாற் பரப்பப்பட்டன-எ-று.

(இ-ணா.) என்று சொன்னவைக ணிறைந்திருக்கின்ற இந்தப் பட்டணத்தில் இவனுண்டாக்கப்பட்ட கூடாரங்கள் முன்புள்ள

கீழ்மேனடுவென்கின்ற சொற்கமத்திய பாதாளமென்னுமிடங்க ளெல்லாம்சுழலும்படியுண்டாக்கின. அவற்றிற்கு வலிமைபொருந் திய தூண்கண் மூன்றிருக்கின்றன. அஸ்தி மரங்களினல் நெருங்கி யிருக்கின்றன. உதிரத்தினலும் மிருதுவாகப் படர்ந்திருக்கின்ற சருமத்தினலும் முடைந்து இனிமையாகிய விரிந்த மயிர்க்கற்றை யினற் பரப்பப்பட்டன—என்பதாம். (அங)

## அம்மனையின் காவலராகிய பேய்களைக்கூறல்.

மந்தமாருதஞ்சூழ் சாலகமொன்பான் மருவினவைம்பொறி யென்னுஞ், சுந்தரவிளக்கால்விளங்குவவிரண்டு தோளெனுந்தோ ற்றமுமுடைய, வந்தமில்பரமபாவனைக்கஞ்சு மகங்காரப்பேய்கள் காத்தளிப்பச், சந்ததமிலாதமாயை யாலந்தத் தரணிபன்சமைத்த பாவறைகள்.

(இ-ள்.) சந்ததமிலாத மாயையால் - எப்பொழுது மில்லாதமாயையி னல், அந்தத்தரணிபன் - அந்தத்தெளிஞனவரசன், சமைத்தபாவறை கள் - உண்டாக்கின பாவறைகளானவை, மந்தமாருதஞ்சூழ் - தென்றற் காற்று சூழாநின்ற, சாலகமொன்பான் - பலகணிவாயிலொன்பதாம், மரு வினவைம்பொறி யென்னும் - பொருந்திய பஞ்சேந்திரியங்களென்னும், சுந்தரவிளக்கால் - அழகிய தீபங்களினல், விளங்குவ - ப்ரகாசிக்கின்றன, இரண்டு தோளெனும் - இரண்டுபுயங்களென்னும், தோற்றமுமுடைய - தோற்றங்களையு முடையன, அந்தமில் பரமபாவனைக்கஞ்சும் - முடிவில் லாத பிரமபாவனைக்குப் பயப்படுகின்ற, அகங்கரப்பேய்கள் - அகங்கார மென்னும் பேய்களானவை, காத்தளிப்ப - காத்திரட்சிக்கப்பட்டன-எ-று.

(இ-ரை.) எப்பொழுதுமில்லாதமாயையினல் அந்தத்தெளிஞ னவரசன் உண்டாக்கின பாவறைகளானவை தென்றற்காற்று சூழாநின்ற பலகணிவாயிலொன்பதாம். பொருந்திய பஞ்சேந்திரி யங்களென்னும் அழகியதீபங்களினல் ப்ரகாசிக்கின்றன. இரண்டு புயங்களென்னும் தோற்றங்களையு முடையன. முடிவில்லாதபிரம பாவனைக்குப் பயப்படுகின்ற அகங்காரமென்னும் பேய்களானவை காத்திரட்சிக்கப்பட்டன—என்பதாம். (அச)

## அக்காவலரோடு மம்மனையில் விளையாடல்.

அசைதருமினியபாவறைத்திரளி லகங்கரப்பேய்களோடுலாவிக் குசைதருவினோதவிவிதமாவியற்றிக்கூடுறைபுள்ளெனவுறைந்து

விசையினலவற்றைவிட்டகன்றயலே மேல்வருபாவறைவிதித்து
நசையுறமேவிப்பூதவாவேச நண்ணினர்போலவனடிக்கும்.

(இ-ள்.) அசைதரும் - சஞ்சரியாநின்ற, இனியபாவறைத்திரளில் - இனிதாகிய பாவறைக்கூட்டத்தில், அகங்கரப்பேய்களோடுலாவி - அகம்பாவமென்னும் பசாசுடன்விளையாடி, குசைதருவினோதம் - சந்தோஷத்தைத் தருகின்ற விளையாட்டுகளை, விவிதமாவியற்றி - நாநாவிதமாகநடத்தி, கூடுறை புள்ளென - கூண்டில் வாசஞ்செய்யும் பறவையைப்போல, உறைந்து - இருந்து, விசையினு லவற்றை - வேகத்தினலந்தப்பாவறையை, விட்டகன்று - விட்டுநீங்கி, அயல் - பக்கத்தில், மேல்வரு பாவறை விதித்து - மேல்வருகின்ற பாவறையையுண்டாக்கி, நசையுறமேவி-ஆசையுடன்போய், பூதாவேச நண்ணினர்போல் - பேயாவேசத்தை யடைந்தவர்களைப்போல, அவனடிக்கும்-அவ்வரசனுனவனடனஞ்செய்வான்—எ-று.

(இ-ரை.) சஞ்சரியாநின்ற இனிதாகிய பாவறைக்கூட்டத்தில் அகம்பாவமென்னும் பசாசுடன்விளையாடி சந்தோஷத்தைத்தருகின்ற விளையாட்டுகளை நாநாவிதமாக நடத்தி கூண்டில் வாசஞ்செய்யும் பறவையைப்போல இருந்து வேகத்தினு லந்தப்பாவறையை யுண்டாக்கி ஆசையுடன்போய் பேயாவேசத்தை யடைந்தவர்களைப்போல அவ்வரசனுனவ னடனஞ்செய்வான்—என்பதாம். (அரு)

---

## புதுவீட்டிற் குடிபுகுந்துலாவுதல்.

இவற்றைவிட்டவற்றை யெய்துவமென்றே யெண்ணுறவப்
படியெய்து, மவற்றினின்றிறப்போ மென்றெனுநினைவா லப்படி
யிறந்துபோஞ்சித்தங், கவற்றியாலலையப்பிறந்திறந்துழலுங் ககன
மேயிவற்றினுக்கிடமாங், தவற்றினையெய்தி மீளவுந்தோன்றுங் தவ
ழ்திரைநீரிலேவரல்போல்.

(இ-ள்.) இவற்றைவிட்டு - இப்பாறையைவிட்டு, அவற்றையெய்துவமென்று - அதை யடைவோமென்று, எண்ணுற - நினைக்க, அப்படியெய்தும் - அவ்வண்ணமடையும், அவற்றினின்று - அதிலிருந்து, இறப்போமென்றெனும் - மரணமடைவோமென் றெண்ணுகின்ற, நினைவால்-எண்ணத்தினுல், அப்படியிறந்துபோம் - அப்படியே மரணத்தை யடையும், சித்தம் - மனமானது, கவற்றியாலலைய - வருத்தத்தினுற்சுழல, பிறந்திறந்துழலும் - சனித்து மரித்துச்சுழலும், ககனமேயிவற்றினுக்கிடமாம் - ஞானுகாசமே யிவைகளுக்கு ஸ்தானமாம், தவற்றினையெய்தி-மரணத்தை

யடைந்து, தவழ்திரை நீரிலே வரல்போல் - தவழ்கின்ற வலைசலத்தி லுண்டாவதுபோல, மீளவுந் தோன்றும் - திரும்பவு முண்டாகும்—எ-று.

(இ-ரை.) இப்பாவறையைவிட்டு அதை யடைவோமென்று நினைக்க அவ்வண்ணமடையும் அதிலிருந்து மரணமடைவோமென் றெண்ணுகின்ற எண்ணத்தினால் அப்படியே மரணத்தையடையும் மனமானது வருத்தத்தினாற்சுழல சனித்து மரித்துச்சுழலும் ஞானாகாசமே யிவைகளுக்கு ஸ்தானமாம், மரணத்தையடைந்து தவழ்கின்ற வலைசலத்திலுண்டாவதுபோல திரும்பவுமுண்டாகும். ()

---

### இவ்விளையாட்டினாற் சுகதுக்கமடைதல்.

---

மேனிமூன்றுடையோன் சிறந்தகந்தற்ப விதித்தவூரனையதற் புரத்திற், ருனினிதிருந்துதொலைவறமேன்மேற்றழைப்புறுகாரிய வசனா, யீனமாமொருகானன்மையாமொருகா லென்செய்வோமெ ன்றிடுமொருகான், மானமாமொருகான்மயக்குறுந்தெளியும் வருந் துறுமகிழ்வுறும்பல்கால்.

(இ-ள்.) மேனிமூன்றுடையோன் - மூன்றுசரீரங்களையுடையவன், சிறந்தகந்தற்பவூரனைய - சிறப்புபொருந்திய கந்தர்வநகரத்தையொத்த, விதித்த தற்புரத்தில் - உண்டாக்கின தனது நகரத்தில், தானினிருந்து- தானினிமையாகவிருந்து, தொலைவற - நீங்காமல், மேன்மேற்றழைப்புறு- மேலுமேலுந் தழைக்கின்ற, காரியவசனாய் - தொழில் வயப்பட்டவனாய், ஒருகாலீனமாம் - ஒருதரங்குறைவாவன், ஒருகானன்மையாம் - ஒருதர நன்மையாவன், ஒருகால் - ஒருதரம், என்செய்வோமென்றிடும் - என்ன செய்வோ மென்பான், ஒருகால் - ஒருதரம், மானமாம்-அபிமானியாவன், பல்கால் - அநேகந்தரம், மயக்குறும் - மயங்குவன், தெளியும்- தெளிவான், வருந்துறும் - துன்பப்படுவான், மகிழ்வுறும்-சந்தோஷிப்பன்—எ-று.

(இ-ரை.) மூன்று சரீரங்களையுடையவன் சிறப்புப்பொருந்திய கந்தர்வநகரத்தையொத்த உண்டாக்கின தனது நகரத்தில் தானினிமையாகவிருந்து நீங்காமல் மேலுமேலுந் தழைக்கின்ற தொழில்வயப்பட்டவனாய் ஒருதரங் குறைவாவன். ஒருதர நன்மையாவன். ஒருதரம்என்னசெய்வோமென்பான். ஒருதரம் அபிமானியாவன், அநேகந்தரம் மயங்குவன் தெளிவான் துன்பப்படுவான், சந்தோஷிப்பன்—என்பதாம.

(இ-அ-க-ய்) வீடுகெட்டுவது மதைக்கெடுப்பது மதிலொன்றை விட்டொன்றிற் பாய்வதுமாகிய விவற்றாற் சுகதுக்கமுதலிய வருத்தமடைந்தன ரென்பதாம். (அஎ)

## தெளிஞனென்பவனநுவத்தை யறிவிக்க வேண்டுமெனல்.

**தளர்ந்தனனென்னுந் தடித்தனனென்னுந் தாழ்ந்தனனுயர்ந் தனனென்னும், வளர்ந்தனனென்னுங் குறைந்தனனென்னு மாரு தமோதுறு கடல்போ, லுளந்தனலந்த மன்னவன்சுழல்வ துரைப் பதெ னென்றறுமைந்தன், கிளத்ததாதையைநீ தெளிஞனென் றுரைத்த கீர்த்தியோனெனக்கேட்டான்.**

(இ-ள்.) *தளர்ந்தனனென்னும் - யான்றளர்ச்சியானேனென்பவன், தடித்தனனென்னும் - பருத்தேனென்பன், தாழ்ந்தனன் - தாழ்ந்தேனென்பவன், உயர்ந்தனனென்னும் - உயர்ந்தனனென்பன், வளர்ந்தனனென்னும் - வளர்ந்தனனென்பன், குறைந்தனனென்னும் - குறைந்தேனென்பன், மாருதமோதுறுகடல்போல் - பெருங்காற்றடிக்கின்ற சமுத்திரத்தைப்போல, உளந்தனல் - மனதினல், அந்தமன்னவன் - அவ்வரசன், சுழல்வது - சுழல்கின்றதை, உரைப்பதெனென்றலும் - சொல்லுவதெவ்வாறென்று முனிசொன்னமாத்திரத்தில், மைந்தன் - புத்திரனனவன், கிளத்ததாதையை - சொல்லியபிதாவை, நீதெளிஞனென்றுரைத்த - நீர் தெளிஞனென்றுசொல்லிய, கீர்த்தியோனெனக்கேட்டான்-கீர்த்தியையுடையவனென்று கேட்டான்—எ-று.*

(இ-ண.) **யான் றளர்ச்சியானேனென்பன். பருத்தேனென்பன். தாழ்ந்தேனென்பன். உயர்ந்தனனென்பன். வளர்ந்தனனென்பன். குறைந்தேனென்பன். பெருங்காற்றடிக்கின்ற சமுத்திரத்தைப்போல மனதினல் அவ்வரசன் சுழல்கின்றதை சொல்லுவதெவ்வாறென்று முனிசொன்ன மாத்திரத்தில் புத்திரனனவன் சொல்லிய பிதாவை நீர் தெளிஞனென்று சொல்லிய கீர்த்தியையுடையவனென்று கேட்டான்—என்பதாம்.** (அஅ)

---

## மர்யாவிலாசத்தை யோர்கதையாகச் சொல்லியதெனல்.

**வண்மையாலந்த மன்னனையுரைத்தால் வரும்பிறப் பிறப்பெனும்பொய்யி, லுண்மைநன்குணர்தி யென்றுதாசூர னுத்தமமைந் தனுக்குரைப்பா, னெண்மயமாகிப் பொய்யெனத்தோன்றி யிடமுறவிரிமுயற்சியதாய்க், கண்மயலான பிறவியினிலையைக் கட்டுரையாகமுன் னுரைத்தோம்.**

(இ-ள்.) *வண்மையால் - உண்மையினல், அந்தமன்னனையுரைத்தால்- அவ்வரசனைச்சொன்னல், வரும்பிறப்பிறப்பெனும் - வருகின்ற சநநமரணமென்னும், பொய்யின் - அசத்தியத்தின், உண்மைநன்குணர்தியென்று- உண்மையை நன்ருய்த்தெரிந்துகொள்வாயென்று, தாசூரன் - தாசூரமுனிவன், உத்தமமைந்தனுக்குரைப்பான் - நன்மையாகிய சீடனுக்குச்சொ*

ல்லுவார், எண்மயமாகி - சங்கற்பமயமாய், பொய்யெனத்தோன்றி - அசத்தியமாயுண்டாய், இடமுறவிரிமுயற்சியதாய் - விஸ்தாரமாகவிரிந்த முயற்சியையுடையதாய், கண்மயலான - அறிவின்மயக்கமான, பிறவியினிலையை - சநநத்தின்றன்மையை, கட்டுறையாக - உறுதிமொழியாக, முன்னுரைத்தோம் - முன்சொன்னோம்—எ-று.

(இ-கா.) உண்மையினால் அவ்வரசனைச்சொன்னால் வருகின்ற சநநமரணமென்னும் அசத்தியத்தின் உண்மையை நன்றாய்த் தெரிந்து கொள்வாயென்று தாசூரமுனிவன் நன்மையாகிய சீடனுக்குச் சொல்லுவார். சங்கற்பமயமாய் அசத்தியமாயுண்டாய் விஸ்தாரமாக விரிந்த முயற்சியையுடையதாய் அறிவின்மயக்கமான சநநத்தின் றன்மையை உறுதிமொழியாக முன்சொன்னோம்-என்பதாம்.

## பிரமசங்கற்பமே யரசனெனல்.

தற்பரவிசும்பி லுதித்தசங்கற்பஞ் சாற்றியதெளிஞனுமன்னன்
பற்பலகாலுந்தோன்றியுமறையும் பரம்பியவுலகதன்வடிவா
மற்பசங்கற்பமுளதெனி லுலகுண் டதுவிலதெனி லுலகிலதா
முற்படுமூவர்முதலியதேவர் மொய்த்தமெய்யவயவமதற்கே.

(இ-ள்.) தற்பரவிசும்பில் - பரமாகாயத்தில், உதித்தசங்கற்பம் - உதயமாகிய சங்கற்பமே, சாற்றியதெளிஞனுமன்னன் - முன்சொன்ன தெளிஞனென்னுமரசன், பற்பலகாலும் - பலபலகாலமும், தோன்றியும் - தானேயுண்டாகியும், மறையும் - தானேமறையும், பரம்பியவுலகு-விரிவாகிய சகமானது, அதன்வடிவாம் - அதன் ஸ்வரூபமாம், அற்பசங்கற்பம்-அற்பமாகிய சங்கற்பமானது, உளதெனிலுலகுண்டு - உண்டானாற்சகமுண்டு, அதுவிலதெனில் - அதில்லையானால், உலகிலதாம் - சகமில்லையாம், முற்படுமூவர்முதலியதேவர் - முதன்மையாகிய மும்மூர்த்திகண் முதலான தேவர்களும், அதற்கு - அச்சங்கற்பத்துக்கு, மொய்த்தமெய்யவயவம் - நெருங்கிய சரீரவுறுப்புகளாவர்—எ-று.

(இ-கா.) பரமாகாயத்தில் உதயமாகிய சங்கற்பமே முன் சொன்ன தெளிஞனென்னுமரசன் பலபலகாலமும் தானேயுண்டாகியும் தானேமறையும். விரிவாகிய சகமானது அதன்ஸ்வரூபமாம். அற்பமாகிய சங்கற்பமானது உண்டானாற் சகமுண்டு. அதில்லையானால் சகமில்லையாம் முதன்மையாகிய மும்மூர்த்திகண் முதலானதேவர்களும், அச்சங்கற்பத்துக்கு நெருங்கிய சரீரவுறுப்புகளாவர்—என்பதாம். (கூ0)

## சங்கற்பத்தினுலுண்டான மூவுலகச் சிறப்புரைத்தல்.

**மேயதன்புத்திப்பாச்சன்மாத்திரத்தால் விரிஞ்சனும்பாவனைமேவி யாயசங்கற்பவடிவிலாவிண்ணி லமைந்ததுமுப்புவிநகர நாயகரீரேழாகிடுமீரேழ் ஞாலமேனகமுறுதெருக்க யேஞாலங்கள்செறிபொழிற்றிரள்கள் சொல்லியவனமுபவனமே.**

(இ-ள்.) மேயதன் - பொருந்திய வாத்மாவினது, புத்திப்பாச்சன்மாத்திரத்தால் - ப்ரதிபாமாத்திரத்தினுல், விரிஞ்சனும்பாவனைமேவியாய - பிரமாவென்னும் பாவனையைப் பொருந்தினதாகிய, சங்கற்பம் - சங்கற்பமானது, வடிவிலாவிண்ணில் - ஞானுகாயத்தில், அமைத்ததிமுப்புவிநகரம் - உண்டாக்கினது மூன்றுலகமென்னும் பட்டணமாம், நாயகர்-உலகபாலரென்பது, ஈரேழாகிடும் - பதினுன்குமனுக்கள் பெயராம், மேனகருறுதெருக்கள் - மேலாகிய பட்டணத்திலுள்ள பதினுன்குவீதிகளென்றது, ஈரேழ்ஞாலம் - பதினுன்குலகம், தூயஞாலங்கள் - பரிசுத்தமான பூமிகள், செறிபொழிற்றிரள்கள் - நெருங்கியபூந்தோட்டங்களும், சொல்லியவனம் - சொல்லப்பட்ட வூர்சூழ்ந்த சோலைகளும், உபவனம் - நந்தனவனங்களுமாம்—எ-று.

**(இ-ஶ.) பொருந்திய வாத்மாவினது ப்ரதிபாமாத்திரத்தினுல் பிரமாவென்னும் பாவனையையே பொருந்தினதாகிய சங்கற்பமானதுஞானுகாயத்தில் உண்டாக்கினது மூன்றுலகமென்னும் பட்டணமாம், உலகபாலரென்பது பதினுன்குமனுக்கள்பெயராம். மேலாகிய பட்டணத்திலுள்ள பதினுன்கு வீதிகளென்றது பதினுன்குலகம். பரிசுத்தமான பூமிகள்நெருங்கியபூந்தோட்டங்களும் சொல்லப்பட்ட வூர்சூழ்ந்த சோலைகளும் நந்தனவனங்களுமாம்—எ-ம்.**

இதுவுமது.

**மேருமந்தரமே முதலவந்நகரின் மேவியவிநோதவெற்பினமாஞ், சூரியன்றிங்கள் காற்றினுலசையாச் சுடர்களாநித்திலமாலை நீருயர்நதியின் றிரள்களாம்வாவி நிகழ்த்தியவேழெனுமவைதான், பேரியல்வடவை கமலமாய்ப்பூத்த பெருங்கடலேழுமே பெரியோய்.**

(இ-ள்.) மேருமந்தரமேமுதல் - மகம்மேருமந்தர முதலியகிரிகள், பெரியோய் - பெருமையை யுடையவனே, அந்நகரின்மேவிய - அந்நகரத்திற்பொருந்திய, விநோதவெற்பினமாம் - லீலாபருப்பதக்கூட்டங்களாம், சூரியன்றிங்கள் - சூரியசந்திரர்கள், காற்றினுலசையா - வாயுவினுற் சலியாத, சுடர்களாம் - தீபங்களென்பதாம், நீருயர்நதியின்றிரள்கள் - சல

நிறைந்த நதிக்கூட்டங்களையே, நித்திலமாலையாம் - முத்துமாலையென்பதாம், பேரியல்வடவை - பெரிதாகிய குணத்தையுடைய வடவாமுகாக்கினியை, கமலமாய்ப்பூத்த - தாமரையாக மலர்ந்திருக்கின்ற, பெருங்கடலேழும் - பெரியவேழுகடலையுமே, நிகழ்த்தியவாவி - சொல்லிய தடாகங்கள், ஏழெனுமவைதாம் - ஏழெனப்பட்டவைகளென்பதாம்—எ-று.

(இ-ள்.) மகம்மேரு மந்தரமுதலியகிரிகள் பெருமையையுடையவனே அந்நகரத்திற் பொருந்திய லீலாப்பருப்பதக்கூட்டங்களாம். சூரியசந்திரர்கள் வாயுவினாற்சலியாத தீபங்களென்பதாம் சலநிறைந்த நதிக்கூட்டங்களையே முத்துமாலையென்பதாம். பெரிதாகிய குணத்தையுடைய வடவாமுகாக்கினியை தாமரையாகமலர்ந்திருக்கின்ற பெரிய வேழுகடலையுமேசொல்லிய தடாகங்கள் ஏழெனப்பட்டவைகளென்பதாம். (௬௨)

## உடலைப் பாவறையெனல்.

இனையமாநகராஞ் சகத்திடைமுன்ன மியம்புசங்கற்பமன்னவனால், வினையினால்வந்த வுடல்கள்பாவறையா மேற்பதத்தி மையவரென்றும், வனைய கீழ்பதத்தி னரகரேயென்று மனிதரே நடுப்பதத்தென்றுந், துனைதருவிரத வெந்திரவிசையாற் சுழல்வனதசைச்சுவரகங்கள்.

(இ-ள்.) இனையமாநகராம் - இப்படிப்பட்ட மகாநகரமாகிய, சகத்திடை - சகத்தினிடத்தில், முன்னமியம்புசங்கற்பமன்னவனால் - முன்சொல்லிய சங்கற்பவரசனால், வினையினால்வந்த - வினைகளினால்வந்த, உடல்கள் - சரீரங்கள், பாவறையாம் - பாவறைகளென்பதாம், இமையவர்-தேவர்க்களையே, மேற்பதமென்று - மேலோகபதமென்றும், நரகரே - நரகர்களையே, வனைய கீழ்பதத்தினென்றும் - அலங்காரமாகிய பாதாளலோகத்திலென்றும், மனிதரே - மனிதர்களையே, நடுப்பதத்தென்றும் - மத்தியலோகத்திலென்றும், துனைதருவாதவெந்திரவிசையால் - அச்சந்தரும் உயிரென்னுஞ் சூத்திரவேகத்தினால், தசைச்சுவரகங்கள் - மாமிசசசுவரான கிரகங்கள், சுழல்வன - சுழன்றிருப்பன—எ-று.

(இ-ள்.) இப்படிப்பட்ட மகாநகரமாகிய சகத்தினிடத்தில் முன்சொல்லியசங்கற்பவரசனால் வினைகளினால்வந்த சரீரங்கள்பாவறைகளென்பதாம் தேவர்க்களையே மேலோகபதமென்றும், நரகர்களையே அலங்காரமாகியபாதாளலோகத்திலென்றும், மனிதர்களையே மத்தியலோகத்திலென்றும், அச்சந்தரும் உயிரென்னுஞ் சூத்திரவேகத்தினால் மாமிசச்சுவரான கிரகங்கள்சுழன்றிருப்பன.

## தேகோகமென்பவனை யகங்கரப்பேயெனல்

பல்வகைதானேயியங்குறுமுடலாம் பாவறைதோறு மவ்வேந்த, னல்வழியுணர்வை நோக்குறநடுங்கு நலமிலாவகங்கரமென்னும், வல்லவிப்பேய்கள் பொய்களாயிருந்தும் வந்துமெய்போலெழுமவற்றோ, டொல்வதாம்விநோதம் புரிதருங்கணத்தி லுண்டுமாவில்லையுமாகும்.

(இ-ள்.) பல்வகைதானே - பலவிதமாகவே, இயங்குறுமுடலாம் - உலாவிய சரீரமாகிய, பாவறைதோறும் - கிரகங்கடோறும், அவ்வேந்தன்- அவ்வரசன், நல்வழியுணர்வை - நன்மார்க்கமுள்ள வாத்மஞானத்தை, நோக்குறநடுங்கும் - பார்க்கநடுங்குகின்ற, நலமிலாவகங்கரமென்னும் - நன்மையில்லாத வகங்காரமென்கின்ற, வல்லவிப்பேய்கள் - வன்மையான விந்தப்பசாசங்கள், பொய்களாயிருந்தும் - மித்தைகளாயிருந்தும், வந்து மெய்போலெழும் - வந்துண்மையைப்போலத்தோன்றும், அவற்றோடு - அதனோடு, ஒல்வதாம் - துவளாநின்ற, விநோதம்புரிதரும் - விளையாட்டைச்செய்யும், கணத்தில் - க்ஷணத்தில், உண்டுமாம் - உள்ளதாகியும், இல்லையுமாகும் - இல்லாததாகியுமிருக்கும்—எ-று.

(இ-ா.) பலவிதமாகவே உலாவிய சரீரமாகிய கிரகங்கடோறும் அவ்வரசன் நன்மார்க்கமுள்ள வாத்மஞானத்தைப்பார்க்க நடுங்குகின்ற நன்மையில்லாத வகங்கார மென்கின்ற வன்மையான விந்தப் பசாசங்கள் மித்தைகளாயிருந்தும் வந்துண்மையைப்போலத் தோன்றும். அதனோடு துவளாநின்றவிளையாட்டைச்செய்யும் க்ஷணத்தில் உள்ளதாகியும் இல்லாததாகியுமிருக்கும்—என்பதாம்.

---

### சநநமரணத்திற் சுழன்று வருந்துவதைச் சுகதுக்க மடைதலெனல்.

காயமென்றுரைத்தபாவறைதோறுங் கடலிடை யலைகள்போற்றோன்றி, மாயுமேலியற்று மனைகளின்விடாமல் வருமிவனியற்றியவெல்லா, மேயதோர்கணத்தில் வீண்களாய்நசிக்கும் வீணிலேதிரிதருமிவன்று, ஞயதன்சங்கற்பத்தினுலிருக்கு மவ்வளவருந்துயருழக்கும்.

(இ-ள்.) காயமென்றுரைத்த - சரீரமென்று சொல்லிய, பாவறைதோறும் - கிரகங்கடோறும், கடலிடையலைகள்போல் - சமுத்திரத்தின் றிரைகளைப்போல, தோன்றிமாயும் - உண்டாயழியும், மேலியற்றுமனைகளின் - மேற்செய்யப்பட்ட கிரகங்களிலும், விடாமல்வரும் இடைவிடாமல் வருகின்ற, இவன் - இந்தச் சங்கற்பராசனனவன், இயற்றியவெல்

லாம் - சங்கற்பித்த சகலமும், மேயதோர்கணத்தில் - பொருந்தியவொரு க்ஷணத்தில், வீண்களாய்நசிக்கும் - வீணுகநாசத்தையடையும், வீணிலே திரிதரும் - வீணுகச்சஞ்சரிக்கப்பட்ட, இவன்ருன்-இந்தச்சங்கற்பவரசன், ஆயதன்சங்கற்பத்திஞல - உண்டாகிய தன்சங்கற்பத்திஞல், இருக்கும் - உண்டாயிருக்கும், அவ்வளவு - அந்தமட்டும், அருந்துயருழக்கும் - அரிய துன்பத்திலுழைக்கும்—எ-று.

(இ-ள.) சரீரமென்று சொல்லிய கிரகங்கடோறும் சமுத்திரத்தின் றிரைகளைப்போல உண்டாயழியும். மேற்செய்யப்பட்ட கிரகங்களிலும் இடைவிடாமல் வருகின்ற இந்தச் சங்கற்பராசனுனவன் சங்கற்பித்த சகலமும் பொருந்திய வொருக்ஷணத்தில் வீணுகநாசத்தையடையும். வீணுகச் சஞ்சரிக்கப்பட்ட இந்தச்சங்கற்பவரசன் உண்டாகிய தன்சங்கற்பத்திஞல் உண்டாயிருக்கும். அந்தமட்டும் அரியதுன்பத்திலுழைக்கும்.

## மூன்று சரீரத்தை முக்குணமாகக்கூறல்.

இறையுமோர்சுகமற் றிரங்குவோன்ருனுண் டென்பதோர் பாவனையாலே, நிறைசகமியற்றுந் தானிலதென்றே நினைத்திடிலக் கணத்திறந்து, குறைவறுகதிர்முன் னிருளெனப்போகுங் குறித்த சிற்றின்பமுற்றமிழு, முறைவுறுமிவனுக் குடல்கண்மூன்றுளவா முத்தமமத்திமமதமம்.

(இ-ள்.) இறையுமோர்சுகமற்று - சற்றுமொரு சுகமில்லாமல், இரங்குவோன் - விசனப்படுபவன், தானுண்டென்பது-தானுண்டென்பதாகிய, ஓர்பாவனையால் - ஒருபாவனையிஞல, நிறைந்தசகமியற்றும் - மிகுந்த வுலகத்தை யுண்டாக்கும், தானிலதென்றே நினைத்திடில் - தானில்லையென்று கருதிஞல், அக்கணத்திறந்து-அந்தக்ஷணத்திற் (சக) மிறந்து, குறைவறு கதிர்முன் - குறைவில்லாத சூரியன்முன்பு, இருளென - அந்தகாரத்தைப்போல, போகும் - நீங்கும், குறித்தசிற்றின்பமுற்றமிழும் - கருதியவிடயவின்பத்தை யடைந்தழுந்திய, உறைவுறுமிவனுக்கு - வாசஞ்செய்கின்ற விச்சங்கற்பபுருடனுக்கு, உடல்கள் - சரீரங்கள், உத்தமமத்திமமதமம் - உத்தம மத்திம மதமமென்று, மூன்றுளவாம் - மூன்றுள்ளனவாகும்-எ-று.

(இ-ள.) சற்றுமொரு சுகமில்லாமல் விசனப்படுபவன். தானுண்டென்பதாகிய ஒருபாவனையிஞல் மிகுந்த வுலகத்தை யுண்டாக்கும். தானில்லையென்று கருதிஞல் அந்தக்ஷணத்திற் சகமிறந்து குறைவில்லாத சூரியன்முன்பு அந்தகாரத்தைப்போல நீங்கும். கருதிய விடயவின்பத்தை யடைந்தழுந்திய வாசஞ்செய்கின்ற விச்சங்கற்ப புருடனுக்கு சரீரங்கள் உத்தம மத்திம மதமமென்று மூன்றுள்ளனவாகும்—என்பதாம்.

(இ-அ-க-ம்.) பிரமமயமாய் விளங்கிய வறிவானது பிரமமென்றறிய வந்த வவசரத்திற் சங்கற்பமாய்த் தனக்காதாரமானபிரமத்தை மறந்ததின் ப்ரதிவிம்பமாயிருக்கின்ற ஜீவேஸ்வர சகங்களா யதனை யானெனதென் றபிமானித் தவ்வகம்பாவத்தோடு விடயவுன்முகனுய்ச் சநநமரணமென் னுந் துக்கசாகரத்தி லழுந்தினதென்பதாம். (கசு)

சங்கற்பவிலக்கணங்களைக் கூறியவற்றை நிவர்த்திக்கும்போநட் டதற்குப் பலமாயிருக்கின்ற முக்குணங்களை நிவர்த்திக்கவேண்டி யவற்றின் குணங்களைக்கூறல்.

முக்குணந்தானே மூன்றுடலாகி மூலமாமூன்றுலகிற்கு
மக்குணந்தன்னிற்றமங்கொள்சங்கற்ப மாவதுபகுதியின்செயலாற்
றுக்கமாய்வருந்திப் பாதலப்புழுவாந் தூயசத்துவங்கொள்சங்கற்ப
மிக்கநற்றரும ஞானவீடுளதாய் வேந்தர்வேந்தெனமிகவிளங்கும்.

(இ-ள்.) முக்குணந்தானே - மூன்றுகுணங்களே, மூன்றுடலாகி - மூன்று சரீரமாய், மூன்றுளகிற்குமூலமாம் - மூவுலகங்களுக்குக்காரண மாம், அக்குணந்தன்னில் - அந்தக்குணங்களில், தமங்கொள்சங்கற்பமா வது - தாமதகுணத்தையுடைய சங்கற்பமென்பது, பகுதியின்செயலால் - ப்ரகிருதியின்செயலினல், துக்கமாய்வருந்தி - துன்பத்துடன் வருந்த முற்று, பாதலப்புழுவாம் - பாதாளக்கிருமிகளாம், தூயசத்துவங்கொள் - பரிசுத்தமாகிய சாத்துவிதகுணத்தையுடைய, சங்கற்பம் - சங்கற்பமென் பது, மிக்கநற்றருமம் - மிகுந்த நல்ல தருமங்களையும், ஞானம் - (மிகுந்த) ஞானங்களையுமுடைய, வீடுளதாய் - மோக்ஷத்தையுடையதாய், வேந்தர் வேந்தென - சக்ரவர்த்தியைப்போல, மிகவிளங்கும் - மிகவும் ப்ரகாசிக் கும்—எ-று.

(இ-ரை.) மூன்றுகுணங்களேமூன்றுசரீரமாய் மூவுலகங்களு க்குக்காரணமாம். அந்தகுணங்களில் தாமதகுணத்தையுடைய சங் கற்பமென்பது ப்ரகிருதியின் செயலினல் துன்பத்துடன் வருந்த முற்று பாதாளக்கிருமிகளாம். பரிசுத்தமாகிய சாத்துவிதகுணத் தையுடைய சங்கற்பமென்பது மிகுந்தநல்லதருமங்களையும்மிகுந்த ஞானங்களையுமுடைய மோக்ஷத்தையுடையதாய் சக்ரவர்த்தியைப் போல மிகவும் ப்ரகாசிக்கும்—என்பதாம் (கஎ)

முக்குணங்கண்முதலிய யாவையுநீக்கி முத்தியையடையு முயற்சியை யறிவித்தல்.

இராசதகுணசங் கற்பமிவ்வுலகி லியல்புறு குடும்பியாயியங் கும், விராவியவிந்த மூன்றையும் விட்டு மெய்ம்மையாய்த்தானில

தென்னி, னிராகுலமாக வனையசங்கற்ப நிமலமாம் பரமபதமடை யுந், துராசையாம்பார்வை யனைத்தையுநீக்கித் துகண்மன மனத்தி னுனிறுத்தி.

(இ-ள்.) இராசதகுணசங்கற்பம் - இராசதகுணத்தையுடைய சங்கற்ப மென்பது, இவ்வுலகில் - இச்சகத்தில், இயல்புறுகுடும்பியாய்-இயல்பாகிய சம்சாரத்தையுடையதாய், இயங்கும் - விளங்கும், விராவியவிந்த மூன்றை யும்விட்டு - சேர்ந்திருக்கின்ற விம்மூன்றையு நீங்கி, மெய்ம்மையாய்-உண் மையாக, தானிலதென்னில் - சங்கற்பமில்லையாயின், நிராகுலமாக - வரு த்தமில்லாதவனாக, அனையசங்கற்பம் - அச்சங்கற்பமானது, நிமலமாம்பர பதமடையும் - நின்மலமாகிய பரமபதத்தையடையும், துராசையாம்பார் வை - துராசையாகிய திருஷ்டிகள், அனைத்தையுநீக்கி - யாவையும்விடு த்து, துகண்மனம் - குற்றமுள்ளமனதை, மனத்தினுனிறுத்தி - (சுத்த மான) மனதினுனிலைப்படுத்தி—எ-று.

(இ-பொ.) இராசத குணத்தையுடைய சங்கற்பமென்பதுஇச் சகத்தில் இயல்பாகிய சம்சாரத்தையுடையதாய் விளங்கும். சேர்ந் திருக்கின்ற விம்மூன்றையுநீங்கி உண்மையாக சங்கற்பமில்லையா யின் வருத்தமில்லாதவனாக அச்சங்கற்பமானது நின்மலமாகிய பர மபதத்தையடையும் துராசையாகிய திருஷ்டிகள் யாவையும் விடு த்து குற்றமுள்ளமனதை சுத்தமானமனதினு னிலைப்படுத்தி. ()

## சங்கற்பநாசமே முத்தியாமெனல்.

உள்ளினும்புறத்து மெழுந்தசங்ப மொருக்கிட வொருப்பட நினைவா, யெள்ளருந்தவங்கள் கற்பகோடிகணீ யியற்றினும் பாத லம்பூமி, தள்ளருதுறக்க மேவினு முனக்குச்சாற்று சங்கற்பமாய் வல்லாற், றெளியபரம பதத்தினைமேவ தியக்கமி லுப்பாயம் வே றில்லை.

(இ-ள்.) உள்ளினும் புறத்திலும் - அகத்திலும் புறத்திலும், எழுந்த சங்கற்பம் - உதயமான சங்கற்பத்தை, ஒருப்படவொருக்கிடநினைவாய் - ஒருமிக்கக்கெடுக்கச்சிந்திப்பாய், எள்ளருந்தவங்கள் - நிந்திக்கப்படாததப சுகள், கற்பகோடிகணீயியற்றினும் - கற்பகோடிகால நீசெய்தாலும், பாத லம் - பாதாளத்தையும், பூமி - பூமியையும், தள்ளறுந்துறக்கமேவினும் - நீக்கற்கரிய சுவர்க்கத்தைப் பொருந்தினும், உனக்குச்சாற்று - உனக்குச் சொல்லிய, சங்கற்பமாய்வல்லால் - சங்கற்பநாசத்தையன்றி, தெள்ளியபர மபதத்தினைமேவ - தெளிவான பரமபதத்தையடைய, தியக்கமில் - கல க்கமின்றிய, உபாயம்வேறில்லை - யுத்தியானது வேறில்லையாம்—எ-று.

(இ-ளா.) அகத்திலும் புறத்திலும் உதயமான சங்கற்பத்தை ஒருமிக்கக் கெடுக்கச்சிந்திப்பாய். நிந்திக்கப்படாத தபசுகள் கற்ப கோடிகால நீசெய்தாலும் பாதாளத்தையும் பூமியையும் நீக்கற் கரிய சுவர்க்கத்தைப் பொருந்தினாலும் உனக்குச் சொல்லிய சங கற்ப நாசத்தையன்றி தெளிவான பரமபதத்தையடைய கலக்க மின்றிய யுத்தியானது வேறில்லையாம்—என்பதாம். (கூகூ)

## பிரமானுபவத்திற் சங்கற்ப நீங்கின வகிசயமுரைத்தல்.

**துயர்களும்விகாரங் களுமிலாப்பிரம சுகஞ்செய்சங் கற்பநா சத்தை, முயலுதிநனிசங் கற்பமாங்கயிற்றின் முடிவறு பாவனை யெல்லா, மியல்புறுகோவை யாலெழுமந்தக் கயிற்றினையெளிதினி லறுத்தால், மயல்கொள்பாவனைக ளெங்ஙனேதுளாய் மடியுமோ வறிகிலமைந்தா.**

(இ-ள்.) துயர்களும் - துன்பங்களும், விகாரங்களுமிலா-வேற்றுமை களுமில்லாத, பிரமசுகஞ்செய் - பிரமாநந்தத்தைச் செய்கின்ற, சங்கற்பநா சத்தை முயலுதி - சங்கற்பத்தைக்கெடுக்க முயற்சிப்பாய், நனிசங்கற்ப மாங்கயிற்றில் - மிகவுஞ் சங்கற்பமானபாசத்தில், முடிவறு பாவனையெல் லாம் - அளவற்ற பாவனைகளனைத்தும், இயல்புறு கோவையாலெழும் - இயல்புள்ள சரமாயுண்டாகும், அந்தக்கயிற்றினை - அப்பாசத்தை, எளிதி னிலறுத்தால் - இலகுவாயறுத்துவிட்டால், மயல்கொள்பாவனைகள்-மயக் கத்தையுடைய பாவனைகள், எங்ஙனே தூளாய்மடியுமோ - எப்படி துக ளாய் நசிக்குமோ, மைந்தாவறிகிலம் - புத்திரனே தெரிகிலேம்—எ-று.

(இ-ளா.) துன்பங்களும் வேற்றுமைகளுமில்லாத பிரமா நந் தத்தைச் செய்கின்ற சங்கற்பத்தைக்கெடுக்க முயற்சிப்பாய். மிக வுஞ் சங்கற்பமான பாசத்தில் அளவற்ற பாவனைகளனைத்தும் இய ல்புள்ள சரமாயுண்டாகும். அப்பாசத்தை இலகுவா யறுத்துவிட் டால் மயக்கத்தையுடைய பாவனைகள் எப்படி துகளாய் நசிக்கு மோ புத்திரனே தெரிகிலேம்—என்பதாம். (௱)

## திருக்குதிருஷ்டியாற்றிரிஸ்யஸ்வரூபங்களாயிருக்கின்ற சங்கற்பத்தைக்கெடுத்துச் சுகத்திலிருப்பாயெனல்.

**துனிசெய்சங்கற்ப மின்றிமுன்வந்து தோன்றியதொழில்வழி நிற்பாய், பனிசெய்சங்கற்ப மாண்டிடிலறிவு பார்வைக ளனைத்தி னும்பற்றாத், தனியுயர்பிரம பதமடைந்தகில விகற்பமாங் தனை**

பெலாந்தள்ளி, யினியனாயேகத் துவத்திலேசுழுத்தி யிதயமுற் றின்பமேபெறுவாய்.

(இ-ள்.) துனிசெய்சங்கற்பமின்றி - துன்பஞ்செய்கின்ற சங்கற்பமில்லாமல், முன்வந்துதோன்றிய - எதிரேவந்துதோற்றிய, தொழில்வழிநிற்பாய் - தொழிலின் மார்க்கத்திலிருப்பாய், பனிசெய்சங்கற்பம் - நடுக்கஞ்செய்கின்ற சங்கற்பமானது, மாண்டிடில் - இறக்குமாகில், அறிவு - ஞானமானது, பார்வைகளனைத்தினும்பற்றா - திரிஸ்யங்களனைத்திலும் பற்றமாட்டாது, தனியுயர்பிரமபதமடைந்து - ஒப்பற்றுயர்ந்திருக்கின்ற பிரமபதத்தைச்சேர்ந்து, அகிலவிகற்பமாந் தனையெலாம் - சகவேறுபாடான விகற்பங்களியாவையும், தள்ளி - நீக்கி, இனியனாய் - இனிமை யுடையவனாய், சுழுத்தி யிதயமுற்று - சுழுத்தி மனத்தையடைந்து, ஏகத்துவத்தில் - அத்துவிதத்தில், இன்பமேபெறுவாய் - பரமசுகத்தையே யடைவாய்—எ-று.

(இ-கா.) துன்பஞ்செய்கின்ற சங்கற்பமில்லாமல் எதிரே வந்துதோற்றிய தொழிலின் மார்க்கத்திலிருப்பாய். நடுக்கஞ்செய்கின்ற சங்கற்பமானது இறக்குமாகில் ஞானமானது திரிஸ்யங்களனைத்திலும் பற்றமாட்டாது. ஒப்பற் றுயர்ந்திருக்கின்ற பிரமபதத்தைச்சேர்ந்து சகவேறுபாடான விகற்பங்களியாவையும்நீக்கி இனிமையுடையவனாய் சுழுத்திமனத்தையடைந்து அத்துவிதத்தில் பரமசுகத்தையே யடைவாய்—என்பதாம்.

(இ-ம்.) சங்கற்ப முதித்தவிடத்தொடுக்கித் தன்மயமாக நிற்கவேண்டுமென்பதாம். (ஙக)

சங்கற்பத்தைக்கெடுக்குநிமித்தம் அதினுற்பத்திநாசமியாதெனின்.

என்னலுமுயர்சங் கற்பமேதென்ன வெழுந்ததும் வளர்ந்தது மாய்ந்து, சன்னமாகியது மெங்ஙனமென்று தவஞ்செய்தாசூரனை மைந்தன், பன்னியேகேட்ப வதற்கவனுரைப்பான் பரமமாயுண்டெனல் வடிவாய், மின்னியசமமா மறிவுகாண்பவற்றின் மேவுற வெழுதல் சங்கற்பம்.

(இ-ள்.) என்னலும் - என்றுசொல்லவும், உயர்சங்கற்பமேதென்ன - உயர்ந்த சங்கற்பமாவதேதென்றும், எழுந்ததும் - உண்டானதும், வளர்ந்ததும் - விருத்தியானதும், மாய்ந்து சன்னமாகியதும் - வீய்ந்து தேய்ந்ததும், எங்ஙனமென்று - எப்படியென்றும், தவஞ்செய் தாசூரனை - தவத்தைச்செய்கின்ற தாசூரமுனியை, மைந்தன் - சீடனானவன், பன்னியே கேட்ப - விபரமாய்க்கேட்க, அதற்கவனுரைப்பான் - அதற்கவர் சொல்லுவார், பரமமாய் - மேலானதாகியும், உண்டெனல்வடிவாய் - சத்தா சாமானிய ஸ்வரூபமாகியும், மின்னிய சமமாமறிவு - விளங்கிய சமமான வாத்ம

ஞானமானது, காண்பவற்றில் - திரிஸ்யத்தில், மேவுறவெழுதல் சங்கற்பம் - பொருந்தவுண்டாதலே சங்கற்பமாம்—எ-று.

(இ-ள்.) என்று சொல்லவும் உயர்ந்த சங்கற்ப மாவதேதென்றும் உண்டானதும், விருத்தியானதும், வீய்ந்து தேய்ந்ததும் எப்படியென்று தவத்தைச்செய்கின்ற தாசூரமுனியை சீடனானவன் விபரமாய்க்கேட்க அதற்கவர் சொல்லுவார். மேலானதாகியும் சத்தாசாமானிய ஸ்வரூபமாகியும் விளங்கிய சமமான வாத்மஞானமானது திரிஸ்யத்தில்பொருந்தவுண்டாதலே சங்கற்பமாம். ()

## சங்கற்ப வுதயங்கூறல்.

அற்பமாயெழுந்து தானுளதாகி யடைவிலே பையப்பையப் பருத்துத், தற்பரமனமாந் தெளிவறமூடிச் சடத்துவந் திடத்திலுண்டாக, யுற்பவமுகில்போல் வளர்வுறுமைந்தா வுணர்வுகாண்பவற்றினையுன்னி, நிற்பதாந்தனக்கு வேறுபோற்கண்டு நிகழ்ந்து சங்கற்பமாய்நிகழும்.

(இ-ள்.) அற்பமாயெழுந்து - சிறிதாகவுண்டாய், தானுளதாகி - தானொரு முதலாயிருக்கும், அடைவிலே பையப்பையப்பருத்து - கிரமமாக மெல்லமெல்லவளர்ந்து, தற்பரமனமாந்தெளிவு - பரமாத்மாவாகியதெளிவை, அறமூடி - மிகவுமறைத்து, சடத்துவம் - சடபாவமானது, திடத்திலுண்டாக - திரமாயுண்டாகும்படி, உற்பவமுகில்போல் - உதித்த மேகத்தைப்போல, வளர்வுறுமைந்தா - வளருங்குழந்தாய், உணர்வு - அறிவானது, காண்பவற்றினை - திரிஸ்யத்தை, உன்னிநிற்பாந்தனக்கு - பாவித்திருக்கின்ற தனக்கு, வேறுபோற்கண்டு - வேற்றுமைபோலப் பார்த்து, நிகழ்ந்து - நடந்து, சங்கற்பமாய் நிகழும் - சங்கற்பமாய்விளங்கும்—எ-று.

(இ-ள்.) சிறிதாகவுண்டாய் தானொரு முதலாகியிருக்கும் கிரமமாக மெல்லமெல்ல வளர்ந்து பரமாத்மாவாகிய தெளிவை மிகவுமறைத்து சடபாவமானது திரமாயுண்டாகும்படி உதித்த மேகத்தைப்போல வளருங்குழந்தாய் அறிவானது திரிஸ்யத்தைப் பாவித்திருக்கின்ற தனக்கு வேற்றுமைபோலப் பார்த்துநடந்து சங்கற்பமாய் விளங்கும்—என்பதாம். (௱௩)

## பாவனாதீதமாக வேண்டுமெனல்.

அறிவெனும்விதைசங் கற்பமாமுளையா மனையசங்கற்பமாந் தன்னைப், பிறிவுறத்தானே செய்துதான்பிறக்கும் பெரிதுறவளர்ந்திடுந்தானே, செறிதுயரொழிய வின்பமொன்றில்லை யாதலாற்

செப்புசங்கற்ப, நெறியுறநினையே னிற்புறுநிலையி னிமிடமும் பாவனைநினையேல்.

(இ-ள்.) அறிவெனும் விதை - ஞானமென்னும்வித்தானது, சங்கற்ப மாமுளையாம் - சங்கற்பமென்னு மங்குரமாம், அனையசங்கற்பம் - அச்சங் கற்பமானது, தன்னைப்பிறிவுற - தன்னைவேற்றுமையாக, தானேசெய்து - தானேயுண்டாக்கி, தான்பிறக்கும் - தானுண்டாகும், தானே பெரிதுற வளர்ந்திடும் - தானே பெரிதாகவளரும், செறிதுயரொழியு - மிகுந்த துன்பமேயன்றி, இன்பமொன்றில்லை - இன்பமாவதொன்றுமில்லை, ஆத லால் - ஆகையால், செப்புசங்கற்பம் - சொல்லிய சங்கற்பத்தின், நெறி யுறநினையேல் - மார்க்கத்திற் செல்லக்கருதாதே, நிற்புறுநிலையில் - நிற் கின்ற சகத்தினிலையில், நிமிடமும்பாவனை நினையேல் - கணமும் பாவனை செய்யாதே—எ-று.

(இ-ரை.) ஞானமென்னும் வித்தானது சங்கற்பமென்னு மங் குரமாம். அந்தச் சங்கற்பமானது தன்னைவேற்றுமையாக தானே யுண்டாக்கி தானுண்டாகும். தானே பெரிதாகவளரும். மிகுந்த துன்பமேயன்றி இன்பமாவதொன்றுமில்லை. ஆகையால்சொல்லிய சங்கற்பத்தின் மார்க்கத்திற் செல்லக்கருதாதே, நிற்கின்ற சகத்தி னிலையில் கணமும் பாவனைசெய்யாதே—என்பதாம். (ளச)

---

## சங்கற்பம் வருத்தமின்றிக் கெடுமெனல்.

இவ்வளவான பாவனையாலே யின்பமாமினைய சங்கற்பந், தவ் வுறப்பெரிய முயற்சிகள்வேண்டா தாக்குபாவனையெலா மொழி த்த. லவ்வகையாலே யிறந்துபோந்தன்னெஞ் சலர்வுறுபூவினைக் கசக்கிற், கைவருவருத்த மொன்றுளதாகுங் கழறியவிதற்கது வேண்டா.

(இ-ள்.) இவ்வளவான பாவனையால் - இவ்வளவாகிய பாவனையினால், இன்பமாம் - (பரம) சுகமாம், இனையசங்கற்பம் - இப்படிப்பட்டசங்கற்பமா னது, தவ்வுறப்பெரிய முயற்சிகள்வேண்டா - தவறுடைய மிகுந்தவெத்த னங்கள் வேண்டுவதில்லை, தாக்கு பாவனையெலாமொழித்தல் - தாக்கா நின்ற பாவனைகளியாவையுங் கெடுத்தலாகிய, அவ்வகையால் - அந்த ப்ர காரத்தினால், தன்னெஞ்சிறந்துபோம் - தன்மனதுநசிக்கும், அலர்வுறு பூவினைக்கசக்கில் - விகசிதமானபுட்பத்தைக் கசக்கவேண்டுமானால், கை வரு வருத்தமொன்றுளதாகும் - கரத்திற்கோர் வருத்தமுண்டாயிருக்கும், கழறியவிதற்கு - சொல்லியவிந்தச் சங்கற்பநாசத்துக்கு, அதுவேண்டா - அவ்வளவுவருத்தம் வேண்டுவதில்லை—எ-று.

(இ-ஸா.) இவ்வளவாகிய பாவனையினால் பரமசுகமாம். இப்படிப்பட்ட சங்கற்பமானது தவறடைய மிகுந்த வெத்தனங்கள் வேண்டுவதில்லை. தாக்காநின்ற பாவனைகளியாவையுங் கெடுத்தலாகிய அந்த ப்ரகாரத்தினால் தன்மனதுநசிக்கும், விகசிதமான புட்பத்தைக் கசக்கவேண்டுமானால் கரத்திற்கோர் வருத்தமுண்டாயிருக்கும், சொல்லிய விந்தச் சங்கற்பநாசத்துக்கு அவ்வளவு வருத்தம்வேண்டுவதில்லை—என்பதாம். (௱ரு)

## சங்கற்பவடிவமானமனதைக்கெடுத்தர்த்மஞானமாக விளங்குவாயெனல்.

எழுந்தசங்கற்ப பாவனைவிட்டா லிறந்துபோ மிதனையிங் கிதனா, லழுந்துறமாய்த்து மனதினான்மனத்தை யறுத்துநின்னறி வினீநிற்பா, யுழுந்துருள்பொழுதின் முடியுமீதரிதோ வுலகமும் வானமுமொக்கு, முழுந்தியபொய்யாப் போம்விகற்பத்தான் முளைத்தவையன்றி முன்னிலதால்.

(இ-ள்.) எழுந்தசங்கற்பம் - உண்டாகிய சங்கற்பமானது, பாவனை விட்டால் - பாவனையை விட்டுவிட்டால், இறந்துபோம் - நாசமடையும், இதனை - இந்த (வெகுற்முக) சங்கற்பத்தை, இங்கு - இவ்விடத்தில், இதனால் - (வந்தற்முக) சங்கறபத்தினால், அழுந்துறமாய்த்து - திடமாகக்கெடுத்து, மனதினால் (பரிசுத்த) மனதினால், மனத்தையறுத்து - (அசுத்த) மனதைக்கெடுத்து, நின்னறிவில் - உனதாத்மஞானத்தில், நீ நிற்பாய் - நீ நிலையாயிருப்பாய், உழுந்துருள் பொழுதின்முடியும் - (கடத்தின் பின் வைத்த) வுளுந்து பிறழுநேரத்திற்கூடும், ஈதரிதோ - இதரியதோ, முழுந்திய பொய்யாய்ப்போம் - முழுது மசத்தியமாம், விகற்பத்தால் - (அஞ்ஞான) விகற்பத்தினால், முளைத்தவையன்றிமுன்னிலதால் - உதித்தவையன்றி முன்பில்லாததினால், உலகமும் - சகமும், வானமும் - ஆகாயமும், ஒக்கும் - ஒத்திருக்கும்—எ-று.

(இ-ஸா.) உண்டாகிய சங்கற்பமானது பாவனையை விட்டுவிட்டால் நாசமடையும். இந்த வெகுற்முக சங்கற்பத்தை இவ்விடத்தில் இந்த வந்தற்முக சங்கற்பத்தினால் திடமாகக்கெடுத்து பரிசுத்தமனதினால் அசுத்த மனதைக்கெடுத்து உன தாத்மஞானத்தில் நீ நிலையாயிருப்பாய். கடத்தின்பின்வைத்த வுளுந்து பிறழுநேரத்திற்கூடும். இதரியதோ முழுது மசத்தியமாம். அஞ்ஞான விகற்பத்தினால் உதித்தவையன்றி முன்பில்லாததினால் சகமும் ஆகாயமும் ஒத்திருக்கும்—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) சங்கற்பத்தி னுற்பத்திநாசத்தையும், அஃது பிரம ப்ரகாசமாய் விளங்கின வனுபவத்தையு மறிவித்ததாம். (௱சு)

## அத்துவிதானுபவங்கூறல்.

தண்டுலத்தோலுஞ் செம்பினிற்களிம்புஞ் சகசமாய்த் தொழில்விசேடத்தால், விண்டுபோமதுபோற் புருடனுமலத்தைமேவியே போக்குதலியல்பாங், கொண்டசந்தேக மொழித்துநீமுயல்வாய் குருவின்வல்லப விளக்கத்தாற், கண்டனமெனல்வீ ணானுநீ தானுங் கண்டனம் பரம்பொருட்பொலிவே.

(இ-ள்.) தண்டுலத்தோலும் - அரிசிக்குமியும், செம்பினிற்களிம்பும் - தாம்பிரத்துக்குக் களிம்பும், சகசமாய் - சுபாவமா (யிருந்தும்), தொழில் விசேடத்தால் - கரும விசேடங்களினால், விண்டுபோம் - நீங்கிப்போம், அதுபோல் - அதைப்போல, புருடனும் - ஆத்மாவும், மலத்தைமேவி - அஞ்ஞானத்தையடைந்து, போக்குதலியல்பாம் - (விசாரத்தா) னீக்கிக் கொள்ளுத லியல்பாம், கொண்டசந்தேக மொழித்து - கொண்டசந்தேகத்தைவிட்டு, குருவின் வல்லபவிளக்கத்தால் - ஆசாரியன் வல்லபமான விளக்கத்தால், நீ முயல்வாய்-நீ முயற்சிசெய்வாய், கண்டனமெனல்வீண்- கண்டோமென்று சொல்லப்பட்ட சகலமும்வீணும், நானுநீதானும் - குருவுஞ்சீடனும், பரம்பொருட்பொலிவே - பரமப்ரகாசமாகவே, கண்டனம்- தரிசித்தோம்—எ-று.

(இ-ரை.) அரிசிக்குமியும் தாம்பிரத்துக்குக் களிம்பும் சுபாவமாயிருந்தும் கருமவிசேடங்களினால் நீங்கிப்போம், அதைப்போல ஆத்மாவும் அஞ்ஞானத்தையடைந்து விசாரத்தா னீக்கிக்கொள்ளுதலியல்பாம், கொண்டசந்தேகத்தைவிட்டு ஆசாரியன் வல்லபமான விளக்கத்தால் நீமுயற்சிசெய்வாய். கண்டோமென்று சொல்லப்பட்ட சகலமும்வீணும், குருவுஞ்சீடனும் பரம ப்ரகாசமாகவே தரிசித்தோம்—என்பதாம். (௱எ)

---

## உவமானத்தை முடித்தல்.

எனவவருரைத்த யாவையுங்கேட்டவ் விரவிலங்கவரை நானெய்த, மனமகிழ்ந்தரிச்சித் தென்னுடைத்தளிர்மேல் வதிந்தன னிருவரு மெய்ம்மைக், கனகதைகளினாற் காதலுற்றவர்போற் கங்குலைக் கணமெனக்கழித்தவ், வனகனைநீங்கி கங்கையுற்றனனா னவன்கதைப்போலு மிச்சகமே.

(இ-ள்.) எனவவருரைத்த - இப்படியென்றந்தத் தாசூரமுனி சொல்லிய, யாவையுங்கேட்டு - சகலவருத்தங்களையுங்கேட்டு, அவ்விரவில்-அந்த விராத்திரியில், அங்கு-அவ்விடத்தில், அவரைநானெய்த - அம்முனியை யானடைய, மனமகிழ்ந் தரிச்சித்து - மனமகிழச்சியாய்ப் பூசித்து, என்

னொடு - என்னுடன், அத்தளிர்மேல் வதிந்தனன் - அத்துளிரின்மேலிருந்தான், இருவரும் - நாங்களிருவரும், மெய்ம்மைக்கனகதைகளினல்-உண்மையான வநேககதைகளினல், காதலுற்றவர்போல் - விட புருடர்களைப்போல, கங்குலைக்கணமெனக்கழித்து - இரவை க்ஷணநேரமாகத்தள்ளி, அவ்வனகனைநீங்கி - அத்தாசூரனைப்பிரிந்து, நான்கங்கையுற்றனன்-யான் கங்காநதியை யடைந்தேன், இச்சகம் - இவ்வுலகமானது, அவன் கதை போலும் - அவன்சொன்ன கதையையொக்கும்—எ-று.

(இ-ள.) இப்படியென் றந்தத் தாசூரமுனி சொல்லியசகல வருத்தங்களையுங்கேட்டு அந்த விராத்திரியில் அவ்விடத்தில் அம்முனியை யானடைய மனமகிழ்ச்சியாய்ப்பூசித்துஎன்னுடன் அத்துளிரின்மே லிருந்தான். நாங்களிருவரும் உண்மையான வநேக கதைகளினல் விடபுருடர்களைப்போல் இரவை க்ஷணநேரமாகத்தள்ளி அத்தாசூரனைப் பிரிந்து யான்கங்காநதியை யடைந்தேன். இவ்வுலகமானது அவன் சொன்னகதையையொக்கும்—என்பதாம்

(இ-உ-க-ம்.) இக்கதை திருஷ்டாந்தமாக ஆத்மதிருஷ்டியிற் சங்கற்ப முதலிய சகமித்தையென் றறியவேண்டு மென்பதாம். (௱அ)

தாசூரன்கதை முற்றிற்று.

ஆக கதை கசூ-க்கு கவிதை எ௩கூ.

---

# கசன் கதை.

அவதாரிகை.

முன்கதையிற் சித்துவிலாசமான சங்கற்பமே சீவேஸ்வர சகங்களாக விளங்குவதை நிரூபித்து இவைகள் சித்தே யாமென்பதை யனுபவமா யறிவிக்குநிமித்தங் கசன்கதையை நிரூபிக்கிறார்.

## கணமு நிலையின்றிய வாயுளின் விடயவிச்சைக் கெடுக்கவேண்டு மெனல்-வேறு.

முடிவறுகாலந்தன்னின் மொழிதருமாண்டுநூறு
நொடியளவெனினும்பற்று திதனையேநெடிதாய்நோக்கி
பொடிவறுபாரவேட்கை யுறுவதென்பொருள்களுன்னிப்
படர்வதாமுள்ளத்தாசை பற்றறவொருக்கிநிற்பாய்.

(இ-ள்.) முடிவறுகாலந்தன்னில் - அளவில்லாதகாலத்தில், மொழிதருமாண்டுநூறும் - சொல்லப்பட்டநூறுவருடமும், நொடியளவெனினும்

பற்றுது - நொடிநேரமென்றாலும் போதாது, இதனை நெடிதாய்நோக்கி - இதை நெடுங்காலமாகப்பார்த்து, ஒடிவறுபாரவேட்கை - கெடாத மிகுந்த வாசையை, உறுவதென் - பொருந்துவதென்ன, பொருள்களுன்னி-விடயங்களைச் சிந்தித்து, படர்வதாய் - விரிவதாகிய, உள்ளத்தாசை - மனதினிச்சை, பற்றறவொருக்கிநிற்பாய்-பற்றிலலாமற் கெடுத்திருப்பாய்-எ-று.

(இ-ஸா.) அளவில்லாதகாலத்திற்சொல்லப்பட்ட நூறுவருடமும் நொடிநேரமென்றாலும்போதாது. இதைநெடுங்காலமாகப்பார்த்து கெடாத மிகுந்த வாசையைப்பொருந்துவதென்ன; விடயங்களைச்சிந்தித்து விரிவதாகிய மனதினிச்சைபற்றில்லாமற் கெடுத்திருப்பாய்—என்பதாம். (க)

---

## விடயவிச்சை கூடாததேனெனின்.

மாலறவெங்ஙனின்று யங்ஙனேவாழ்வாய்பாரிற்
கோலநன்மணிகள்வேண்டா திருக்கவுங்குறிகிப்பாயுந்
தூலநன்னிழல்போலுண்டா மாத்திரந்தோற்றமான
ஞாலமும்பரமந்தன்னி னலம்பெறத்தோன்றுமன்றே.

(இ-ள்.) மாலற வெங்ஙனின்றாய் - ஆசையிறந் தெத்தன்மையனாய் நின்றாயோ, அங்ஙனேவாழ்வாய் - அத்தன்மையனாகவே நீவாழக்கடவை, பாரில் - பூமியின்கண், கோலநன்மணிகள் - அழகியநல்லமணிகள், வேண்டாதிருக்கவும் - விரும்பாதிருந்தும், குறிகிப்பாயும்-நெருங்கிப்பாய்கின்ற, தூலநன்னிழல்போல் - மிகுந்த நல்லொளியைப்போல, உண்டமாத்திரம் - சத்தாமாத்திரமாக, தோற்றமான ஞாலமும் - உண்டானவுலகமும், பரமந்தன்னில் - பிரமத்தினிடத்தில், நலம்பெறத்தோன்றும் - நன்றாகத் தோற்றும்—எ-று.

(இ-ஸா.) ஆசையிறந் தெத்தன்மையனாய் நின்றாயோ? அத்தன்மையனாகவே நீ வாழக்கடவை பூமியின்கண் அழகியநல்ல மணிகள் விரும்பாதிருந்தும் நெருங்கிப்பாய்கின்ற மிகுந்த நல்லொளியைப்போல சத்தாமாத்திரமாக உண்டானஉலகமும், பிரமத்தினிடத்தில் நன்றாகத்தோற்றும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) பிரம ப்ரதிபலனமான சகத்தை வேறாகக்கண் டிச்சிக்கக் கூடாததாம். (உ)

---

### சகத்திற் றுன்பமின்றிச் சஞ்சரிக்கு நெறியாதெனின்.

ஆதலாற்பரமந்தன்பா லகத்தனேகத்தனேயென்
றேதுபாவனைகளுண்டா முற்றபற்றிலாமையாலே

சாதமிலகத்தனுகுஞ் சன்னதிமாத்திரத்தால்
மேதகுகத்தனுமிவ் விரண்டலால்வேறுமேவா.

(இ-ள்.) ஆதலால் - ஆதலினல், பரமந்தன்பான் - பிரமத்தினிடத்தில், அகத்தன் - அகர்த்தாவென்றும், கத்தனேயென்றும் - கர்த்தாவென்றும், ஓதுபாவனைகளுண்டாம் - சொல்லப்பட்ட பாவனைகளுண்டாகும், உற்றபற்றிலாமையால் - பொருந்திய வாசையில்லாததினல், சாதமிலகத்தனுகும் - உண்டாகாத வகர்த்தாவாம், சன்னதிமாத்திரத்தால் - சன்னதான மாத்திரத்தினல், மேதகுகத்தனும் - மேன்மையான கர்த்தாவாம், இவ்விரண்டலால் - இந்த விரண்டையல்லாமல், வேறுமேவா - (ஆத்மாவில்) வேறொன்று மடையாவாம்—எ-று.

(இ-கா.) ஆதலினல்பிரமத்தினிடத்தில் அகர்த்தாவென்றும், கர்த்தாவென்றும் சொல்லப்பட்ட பாவனைகளுண்டாகும், பொருந்திய வாசையில்லாததினல் உண்டாகாத வகர்த்தாவாம். சன்னதானமாத்திரத்தினல் மேன்மையானகர்த்தாவாம். இந்தவிரண்டையல்லாமல் ஆத்மாவில் வேறொன்று மடையாவாம்—என்பதாம்.

இதுவுமது.

அகத்தனிற்கத்தன்றன்னி லமைந்ததேதனினிற்பாய்
முகத்தமாமிரண்டுமன்றி முளைத்தெழுமனதைநுங்கி
மிகத்தனிதிரமாய்நிற்றி யகத்தனும்விளம்புநேரிற்
சுகத்தனய்நிற்றியேனு நன்றிதுதுயரொன்றில்லை.

(இ-ள்.) அகத்தனில் - அகத்தாவிலும், கத்தன்றன்னில் - கர்த்தாவிலும், அமைந்ததேது - (உனக்) கிசைந்ததெதுவோ, அதனினிற்பாய் - அதனிடமாயிருப்பாய், முகத்தமாமிரண்டுமன்றி - ப்ரசன்னமான வந்தவிரண்டுமெல்லாமல், முளைத்தெழுமனதைநுங்கி - தோன்றிவளராநின்ற மனதைவிழுங்கி, மிகத்தனிதிரமாய்நிற்றி - மிகவுமொய்ப்பின்றித்திடமாயிருப்பாய், அகத்தனும் - அகர்த்தாவாகவும், விளம்பும் - சொல்லப்பட்ட, நேரிற்சுகத்தனய் - ஒப்பில்லாத நல்லகர்த்தாவாகவும், நிற்றியேனும் - நின்றாலும், இது நன்று - இதுவே நன்மையாம், துயரொன்றில்லை - துன்பமானது சற்றுமில்லை—எ-று.

(இ-கா.) அகர்த்தாவிலும் கர்த்தாவிலும் உனக்கிசைந்த தெதுவோ அதனிடமாயிருப்பாய். ப்ரசன்னமான வந்தவிரண்டு மல்லாமல்தோன்றிவளராநின்றமனதைவிழுங்கிமிகவுமொய்ப்பின்றித்திடமாயிருப்பாய். அகர்த்தாவாகவும் சொல்லப்பட்ட ஒப்பில்லாத நல்லகர்த்தாவாகவும் நின்றாலும் இதுவே நன்மையாம். துன்பமானது சற்றுமில்லை—என்பதாம்.

(இ-உக-ம்') கர்த்தத்துவ வகர்த்தத்துவமென்னு மிரண்டிலொன்றாடிருக்கிறறுன்பமின்றென்பதாம். (ச)

## தேகோகநீக்கிற் பயனியாதெனின்.

முன்னியவகத்தனாகி யான்சகமுறைசெய்கின்றே
னன்னியநினைவிலாமை யாலதில்விகாரமில்லை
யென்னது நீநான்செய்தேன் செய்திலேனென்னும்பார்வை
யுன்னியப்பொழுதேதுன்ப முடலைநானென்பாருண்டோ.

(இ-ள்.) முன்னியவகத்தனாகி - நினைக்கப்பட்டவகர்த்தாவாய், யான் சகமுறெசெய்கின்றேன் - நான் சகத்தினொழுங்கின்படி நடக்கின்றேன், அன்னிய நினைவிலாமையால் - வேறான கருத்தில்லாமையால், அதில் விகாரமில்லை - அவ்வகர்த்தனில் வேறுபாடில்லை, என்னது நீநான்-என்ன தென்றும் நீயென்றும் நானென்றும், செய்தேன் செய்திலேனென்னும் - செய்தேனென்றுஞ் செய்யவில்லையென்றும், பார்வையுன்னியபொழுதே துன்பம் - மதித்தபோதே துக்கமாம், உடலை நானென்பாருண்டோ-சரீரத்தை நானென்பவருமுண்டோ—எ-று.

(இ-ரை.) நினைக்கப்பட்டவகர்த்தாவாய் நான்சகத்தி னொழுங்கின்படி நடக்கின்றேன். வேறான கருத்தில்லாமையால் அவ்வகர்த்தனில் வேறுபாடில்லை. என்னதென்றும், நீயென்றும், நானென்றும், செய்தேனென்றுஞ் செய்யவில்லையென்றும் மதித்தபோதே துக்கமாம். சரீரத்தை நானென்பவருமுண்டோ—என்பதாம். (௫)

---

## தேகோகந் துன்பமாமெனல்.

மொய்யுடனானென்னின் மூவேழுநரகுமஃதே
வெய்யவன்றுயராமேனு மெய்யையானென்னவேண்டா
வையமில்கேள்விநல்லோர் நினைவரோவனைத்தாமூனுங்
கையுறத்தின்பரேனு நாய்ப்பிணங்கவரார்நீசர்.

(இ-ள்.) மொய்யுடனானேயென்னில் - உறுப்புகணெருங்கிய சரீரத்தை நானேயென்றுசொல்லில், மூவெழுநரகுமஃது - இருபத்தொரு நரகமுமதுவேயாம், வெய்யவன்றுயரமேனும் - வெவ்விய வலியதுன்பமானாலும், மெய்யை யானென்னவேண்டாம் - உடலை நானென்று சொல்லவேண்டாம், ஐயமில் - சந்தேகமில்லாத, கேள்விநல்லோர் - கேள்வியையுடைய சத்துக்கள், நீசர் - சண்டாளர்கள், அனைத்தாமூனும் - சகலமாமிசங்களையும், கையுறத்தின்பரேனும் - கைவசமாகப்புசிப்பவராயினும், நாய்ப்பிணம் - நாயினதுமாமிசத்தை, கவரார் - புசியார்கள், (அதுபோல்) நினைவரோ - (தேக நானென்று) கருதுவார்களோ—எ-று.

(இ-ளா.) உறுப்புகணெருங்கிய சரீரத்தை நானேயென்று சொல்லில் இருபத்தொருநரகமுமதுவேயாம். வெவ்வியவலியதுன்பமானாலும் உடலை நானென்று சொல்லவேண்டாம். சந்தேகமில்லாத கேள்வியையுடைய சத்துக்கள் சண்டாளர்கள் சகல மாமிசங்களையும் கைவசமாகப் புசிப்பவராயினும் நாயினது மாமிசத்தைப்புசியார்கள். அதுபோலத் தேகநானென்று கருதுவார்களோ. ()

## தேகோகத்தை நீக்கவேண்டுமெனல்.

நாமுடனென்னுமாசான் ஞானக்கண்குருடாய்ப்போகுந்
தோமுறுமதனைத்தூரத் தூர்ப்பரேற்சோதிஞான
மாமுகிலிலாநிலாப்போல் வயங்கிடுமினையகண்ணா
லேமுறுபிறவிவேலை யிருங்கரையெளிதுதோன்றும்.

(இ-ள்.) உடல் - சரீரமானது, நாமென்னுமாசால் - யாமென்னுங் களங்கத்தினால், ஞானக்கண்குருடாய்ப்போகும் - ஞானதிருஷ்டிதெரியாததாகும், தோமுறுமதனை - குற்றமிகுந்த வக்களங்கத்தை, தூரத்தூர்ப்பரேல் - தூரத் தள்ளுவார்களாயின், சோதிஞானம் - ப்ரகாசஞானமானது, மாமுகிலிலா நிலாப்போல் - கறுத்தமேகமில்லாவிடத்து விளங்கு நிலவைப்போல, வயங்கிடும் - ப்ரகாசிக்கும், இனையகண்ணால் - இப்படிப்பட்ட திருஷ்டியினால், ஏமுறுபிறவிவேலை - மிகுந்த சநநசமுத்திரத்தின், இருங்கரை யெளிதுதோன்றும் - அழகுள்ளமுத்திதீர மெளிதாயுண்டாம்-எ-று.

(இ-ளா.) சரீரமானது யாமென்னுங் களங்கத்தினால் ஞானதிருஷ்டி தெரியாததாகும். குற்றமிகுந்த வக்களங்கத்தை தூரத்தள்ளுவார்களாயின் ப்ரகாசஞானமானது கறுத்தமேக மில்லாவிடத்துக்குவிளங்கு நிலவைப்போல ப்ரகாசிக்கும். இப்படிப்பட்ட திருஷ்டியினால் மிகுந்த சநந சமுத்திரத்தின் அழகுள்ள முத்திதீரமெளிதாயுண்டாம்—என்பதாம்.

(இ-ரு-க-ம்) பஞ்சபூத விகாரமான பௌதிகத்தை யானென்பதே பவத்துன்பமாமென் றறிந்ததை நீக்கிற் சுயஞ்சித் துதயமாமென்பதாம்.

### தேகோகத்தை நீக்குதற் குபாயமியாதெனின்.

அனைத்தினுங்கத்தனல்லே னவனிவனல்லேனென்ன
நினைத்துளத்துறுதியாகி நிற்றியாலஃதின்றென்னி
லனைத்தினுங்கத்தனானே யளவறுமதுநானென்ன
நினைத்தசைவொன்றுமின்றி நிச்சயமாகிநிற்பாய்.

(இ-ள்.) அனைத்தினும் - சகலத்திலும், கத்தனல்லேன்-நான்கர்த்தாவல்ல, அவன் - அவனென்பதும், இவன் - இவனென்பதும், அல்லேனென்ன - யானல்லனென்று, நினைத்து - சிந்தித்து, உளத்துறுதியாகி - மனதிற்றிடமுண்டாய், நிற்றி - (அகர்த்தாவா) யிரு, அஃதின்றெனில் - அப்படி யில்லையாயின், அனைத்தினுங்கத்தனுனே - சகலத்துக்குங்கர்த்தா நானே, அளவறும் - அளவில்லாத, அதுநானென்ன - அப்பொருள்களு நானென்று, நினைத்து - சிந்தித்து, அசைவொன்றுமின்றி - சலனமொன்றுமில்லாமல், நிச்சயமாகிநிற்பாய் - உறுதியாய்க் கர்த்தாவாயிருப்பாய்.

(இ-ன.) சகலத்திலும் நான்கர்த்தாவல்ல. அவனென்பதும், இவனென்பதும், யானல்லனென்று சிந்தித்து மனதிற் றிடமுண்டாய் அகர்த்தாவாயிரு. அப்படி யில்லையாயின் சகலத்துக்குங் கர்த்தா நானே, அளவில்லாத வப்பொருள்களு நானென்றுசிந்தித்து சலனமொன்றுமில்லாமல் உறுதியாய்க் கர்த்தாவா யிருப்பாய். ()

---

## இதற்கு மூன்று நிச்சயங்கூறல்.

அன்றெனி லொன்றுமல்ல வொன்றுநாமாகுமென்றே
நின்றவிப்பதத்தினன்று நின்பதந்தனினீநிற்பா
யொன்றெனும்பதத்தைக்கண்ட வுத்தமர்தன்பானிற்பர்
துன்றுவாதனையேபந்தந் தொல்லைவீட தனைத்தீர்தல்.

(இ-ள்.) அன்றெனில் - (அப்படி) யல்லாவிடின், ஒன்றுமல்ல - (இவ்விரண்டி) லொன்று (நா) னல்ல, நாமொன்றாகும் - யாம் (வாக்கு மனுதீதமாகிய) வொன்றேயாம், நின்றவிப்பதத்தின் - இருந்த விப்பதங்களுள், நன்று நின்பதந்தனில் - உத்தமமாகிய வுனதுபதத்தில், நீநிற்பாய்-நீயிருப்பாய், ஒன்றெனும்பதத்தை - ஏகமென்கின்ற (பரம) பதத்தை, கண்ட வுத்தமர் தன்பானிற்பர் - தரிசித்தசத்துக்க டன்னிடத்தி லிருப்பார்கள், துன்றுவாதனையேபந்தம் - நெருங்கிய வாசனையேபந்தமாம், அதனைத்தீர்தல் - அவ்வாசனுக்ஷயமே, தொல்லைவீடு - பழமையான மோக்ஷமாம்.

(இ-ன.) அப்படியல்லாவிடின் இவ்விரண்டி லொன்று நானல்ல. யாம் வாக்குமனுதீதமாகிய வொன்றேயாம். இருந்த விப்பதங்களுள் உத்தமமாகிய வுனது பதத்தில் நீயிருப்பாய். ஏகமென்கின்ற பரமபதத்தைத்தரிசித்த சத்துக்கடன்னிடத்தி லிருப்பார்கள். நெருங்கிய வாசனையே பந்தமாம் அவ்வாசனுக்ஷயமே பழமையான மோக்ஷமாம்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) ப்ரகிருதிமுத லிச்சரீரபரியந்தமுள்ள சகலவிடயமும் யானல்லவென்பதற்கு விலக்ஷணமே தானென்றும், அவையாவுந் தன்மயமாய் விளங்குஞ் சலக்ஷணமே தானென்றும், இவ்விரண்டுமின்றித் தன்மயமாய் விளங்குதலென்றுஞ் சொல்லப்பட்ட விம்மூன்றனுபவமுந் தேகவாசனையை நீக்குதற்கு யுத்தியாமென்பதாம். (கூ)

## வாசனாத்தியாக மியாதெனின்.

புலன்களிற்பழக்கிச்சித்தம் பூண்டவாதனைகண்முன்னே
யலம்பெறமாற்றிவீட்டிற் கடுத்தவாதனையுந்தீர்வாய்
நலந்திகழருள்சந்தோட நட்புதாசினமிந்நாலு
மலர்ந்தவிர்குணங்களாக மனத்தழுந்தாதுசெய்வாய்.

(இ-ள்.) புலன்களிற்பழகி - சத்தமுதலிய விடயங்களிற்பழகி, சித்தம்-மனமானது, பூண்டவாதனைகள் - தரித்தவாதனைகளை, முன்னலம்பெற மாற்றி - முன்பலம் வரும்படிகெடுத்து, வீட்டிற்கடுத்தவாதனையும் - மோக்ஷத்துக்கடுத்த (சுத்த) வாதனையையும், தீர்வாய் - (பின்) விட்டுவிடுவாய், நலந்திகழருள் - நன்மைப்ரகாசிக்கின்றவருளும், சந்தோடம் - சந்தோஷமும், நட்பு - நட்புப், உதாசினம் - உதாசினமுமாகிய, இந்நாலும் - இந்நான்கும், மலந்தவிர்குணங்களாக - மாசற்றிருக்கின்ற குணங்களாக, மனத்தழுந்தாது செய்வாய் - அதன் (றொழிலை) மனதிற்பற்றாமல் செய்வாய்.

(இ-ஙா.) சத்தமுதலிய விடயங்களிற்பழகி மனமானது தரித்தவாதனைகளை முன்பலம் வரும்படி கெடுத்து மோக்ஷத்துக்கடுத்த சுத்தவாதனையையும் பின்விட்டுவிடுவாய் நன்மைப்ரகாசிக்கின்றவருளும், சந்தோஷமும், நட்பும், உதாசினமுமாகியஇந்நான்கும் மாசற்றிருக்கின்ற குணங்களாக அதன்றொழிலை மனதிற்பற்றாமற் செய்வாய்—என்பதாம்.

(இ-ம்.) பிரமசுபாவமாய் பிரகாசிப்பதே பெத்தமுத்தியின் வாசனாத்தியாக மென்பதாம். (க0)

## பிரமசுபாவமாய் விளங்குவ தெங்ஙன மெனின்.

உள்ளுறுதொழில்கண்முற்று மொருக்கியோருணர்வைப்பற்றி
மெள்ளவாங்கதுவுமந்தக் கரணங்களுடனேவிட்டு
தள்ளுவவெல்லாமெத்தாற் றள்ளியதுவுந்தள்ளித்
தெள்ளுணர்வுள்ளஞ்செய்கை தேசிருளனைத்துந்தீர்ந்து.

(இ-ள்.) உள்ளுறுதொழில்கள் - உள்ளத்தின்கண்ணுள்ள செயல்களை, முற்றுமொருக்கி - முழுதுங்கெடுத்து, ஒருணர்வைப்பற்றி - ஒப்பற்ற

சின்மாத்திரவாசனையைப்பிடித்துக்கொண்டு, மெள்ளவாங்கதுவும்-மெல்ல வவ்விடத்திலந்தச் சித்துவாசனையையும், அந்தக்கரணங்களுடன்விட்டு - அந்தக்கரணங்களோடுங்கெடுத்து, தள்ளுவவெல்லாம் - தள்ளப்பட்டயாவும், எத்தாற்றள்ளினும்-எந்தமுயற்சியினு னீக்கினையோ, அதுவுந்தள்ளி- அம்முயற்சியையுந்தள்ளி, தெள்ளுணர்வு - தெளிவானவறிவும், உள்ளம் - மனதும், செய்கை - தொழிலும், தேசு - (ஞான) ப்ரகாசமும், இருள் - (அஞ்ஞா) னுந்தகாரமுமாகிய, அனைத்துந்தீர்ந்து - சகலமுநீங்கி—எ-று.

**(இ-ரை.) உள்ளத்தின்கண்ணுள்ள செயல்களை முழுதுங்கெடுத்து ஒப்பற்ற சின்மாத்திரவாசனையைப் பிடித்துக்கொண்டு மெல்ல வவ்விடத்திலந்தச் சித்துவாசனையையும் அந்தக்கரணங்களோடுங்கெடுத்துத்தள்ளப்பட்டயாவும்எந்தமுயற்சியினு னீக்கினையோ வம்முயற்சியையுந்தள்ளி தெளிவான வறிவும், மனதும், தொழிலும், ஞானப்ரகாசமும், அஞ்ஞானுந்தகாரமுமாகிய சகலமுநீங்கி.**

இதுவுமது.

வாதனைவடிவமான விவைகளுமற்றிவற்றைப்
பேதமாய்ப்பழகுவோனும் பிராணனிலியக்கந்தானு
மியாதுமூலத்தோடீர்ந்து விண்ணகமென்னநின்று
லியாதுதீர்சாந்தனுயென் னுயினையதுநீமெய்யால்.

(இ-ள்.) வாதனைவடிவமான - வாசனுரூபமாகிய, இவைகளும் - (இப்பொழுது சொல்லப்பட்ட) விவைகளும், மற்றிவற்றை - இவைகளை, பேதமாய் - வேற்றுமையாக, பழகுவோனும் - பழகுகின்ற சிதாபாசனும், பிராணனிலியக்கந்தானும் - பிராணவாயுவின் சலனமும், இயாதும் - எதுவும், மூலத்தோடீர்ந்து - காரணத்துடன்கெடுத்து, விண்ணகமென்னநின்றல் - ஆகாயத்தைப்போல நிற்பாயாயின், இயாதுதீர்சாந்தனுய் - சகலமுந்தீர்ந்தவுடசாந்தனுய், என்னுயினை - எதுவாயினை, மெய் - உண்மையாக, அது நீ- அதுவேநீயாம்—எ-று.

**(இ-ரை.) வாசனுரூபமாகிய இப்பொழுது சொல்லப்பட்ட விவைகளும் இவைகளை வேற்றுமையாக பழகுகின்ற சிதாபாசனும் பிராணவாயுவின் சலனமும் எதுவும் காரணத்துடன் கெடுத்து ஆகாயத்தைப்போல நிற்பாயாயின் சகலமுந்தீர்ந்தவுபசாந்தனுய் எதுவாயினை உண்மையாக அதுவே நீயாம்—என்பதாம்.**

(இ-உ-க-ம்.) விருத்திஞானத்திலுள்ள வசுத்தவாசனையுஞ் சமாதிஞானத்திலுள்ள சுத்தவாசனையுமிறக்கிற் கூடஸ்தபிரம வயிக்கியமான வத்துவிதம் விளங்கு மென்பதாம். (௧௨)

**அங்ஙனம் விளங்கிய சீவன்முத்த ரிலக்கண மியாதெனின்.**

உளத்தினிலனைத்துமாற்றி யுலகிலோர்பற்றதின்றி
துளக்கிலாநிலையினின்றோர் துகளறுமுத்தராவா
ரளக்கருமீசராவா ரவர்களேசமாதிதானுங்
கொளத்தகுகருமந்தானுங் கூடினும்விடினுமுத்தர்.

(இ-ள்.) உளத்தினிலனைத்துமாற்றி - மனதிலுள்ளசகலவாசனைகளையும்கெடுத்து, உலகிலோர்பற்றதின்றி - சகத்தின்கணொருபற்றில்லாமல், துளக்கிலா - அசைவற்ற, நிலையினின்றோர் - நிலையினின்றவர்கள், துகளறுமுத்தராவார் - குற்றமற்ற சீவன்முத்தர்களாவார்கள், அவர்களே - அச்சீவன்முத்தர்களே, அளக்கருமீசராவார்-எண்ணுதற்பரிய (வுயர்வுள்ள) வீசராவார்கள், சமாதிதானும் - சமாதியையும், கொளத்தகு - கொள்ளுதற்குரிய, கருமந்தானும் - கன்மத்தையும், கூடினும் விடினுமுத்தர் - சேர்ந்தாலும் விட்டாலும் சீவன் முத்தர்களாம்—எ-று.

(இ-ரை.) மனதிலுள்ள சகல வாசனைகளையுங் கெடுத்து சகத்தின்கணொரு பற்றில்லாமல் அசைவற்ற நிலையினின்றவர்கள்குற்றமற்ற சீவன்முத்தர்களாவார்கள். அச்சீவன் முத்தர்களே எண்ணுதற்கரிய வுயர்வுள்ள வீசராவார்கள். சமாதியையும் கொள்ளுதற்குரிய கன்மத்தையும் சேர்ந்தாலும் விட்டாலும் சீவன்முத்தர்களாம்—என்பதாம்.

(இ-பு.) ஸ்வரூபதிருஷ்டியாற்சகலத்திலும்பற்றற்றதிற்கூடியுங்கூடாததாயு மிருக்கின்றதே சீவன்முத்தர்களுடைய விலக்கணமென்பதாம். ()

---

**ஆயின் வேதத்திற் சிரத்தை வேண்டாவோ வெனின்.**

இருதயத்தாசையொன்று மிலாமைபாலெண்ணப்பட்ட
கருமங்கள்செய்துந்தீர்ந்துங் கையுறுபயனொன்றில்லை
யொருவழிப்படநீள்கால முளமொருப்படுதலாலே
பெருகுவாதனைதீர்நெஞ்சிற் பேசுநூலனைத்தும்வேண்டா.

(இ-ள்.) இருதயத்து - மனதின்கண், ஆசையொன்றும்-அவாவொன்றும், இலாமையால் - இல்லாமையால், எண்ணப்பட்ட கருமங்கள் - குறிக்கப்பட்ட தொழில்களை, செய்தும் - செய்தாலும், தீர்ந்தும் - விட்டாலும், கையுறுபயனொன்றில்லை - கைவசமான ப்ரயோசனமொன்றுமில்லை, ஒருவழிப்பட - ஒருமார்க்கமாய், நீள்காலம் - அநேககாலமாய், உளமொருப்படுதலால் - மனதொருமைப்படுகையால், பெருகுவாதனைதீர்நெஞ்சில் - வளருகின்ற வாசனைநீங்கியமனதில், நூலனைத்தும்வேண்டா - சொல்லப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் வேண்டாவாம்—எ-று.

(இ-ரை.)மனதின்கண் அவாவொன்று மில்லாமையால் குறிக்கப்பட்ட தொழில்களைச்செய்தாலும் விட்டாலும் கைவசமான ப்ரயோசன மொன்றுமில்லை. ஒருமார்க்கமாய் அநேககாலமாய் மனதொருமைப்படுகையால் வளருகின்ற வாசனைநீங்கியமனதில் சொல்லப்பட்ட சாஸ்திரங்களெல்லாம் வேண்டாவாம் என்பதாம்.

(இ-ம்.) மனமானதனுபூதி வடிவாதலி னதனுற்செய்யும் விதிவிலக்கின் ப்ரயோசனுப்ரயோசனம் விதிக்குஞ் சாஸ்திரவாசனை வேண்டாவாம்.

## முத்தியடைபவ ருறுதியாதெனின்.

மறுகுவாதனைகடீர்ந்த மவுனத்தையொழியவேறொரு
ருறுகதிநல்லதில்லை யுணர்வனவுணர்ந்ததாகு
முறுதிசைபத்துஞ்சுற்றி மீண்டவாந்தொல்லைஞாலத்
தறுதியாயுண்மைகண்டோர் சிலர்நின்றோரவற்றின்மாய்வோர்.

(இ-ள்.) மறுகுவாதனைகடீர்ந்த - சுழலும் வாசனைகணீங்கிய, மௌனத்தையொழிய - மோனநிலையல்லாமல், வேறோருறுகதி-பொருந்துதற்குரிய வேறொரு கதியாவது, நல்லதில்லை - நன்மையானதில்லையாம்,உணர்வன வுணர்ந்ததாகும் - அரியத்தக்கதை யறிந்ததாகியும், உறுதிசைபத்தும் - பொருந்திய பத்துதிக்கும், சுற்றிமீண்டதாம் - சுழன்று திரும்பினதாகியும், தொல்லைஞாலத்து - பழமையாகிய சதத்தின், அறுதியாய் - நிச்சயமாயிருக்கின்ற, உண்மைகண்டோர்சிலர் - தத்துவத்தைத்தெரிசித்தவர்கள் சிலர்கள், நின்றோர் - மற்றவர்கள், அவற்றின் மாய்வோர் - அவ்வுலகமயக்கத்திற்கெடுக்கின்றவர்கள்—எ-று.

(இ-ரை.) சுழலும் வாசனைகணீங்கிய மோனநிலையை யல்லாமல் பொருந்துதற்குரிய வேறொருகதியாவது நன்மையானதில்லையாம். அறியத்தக்கதை யறிந்ததாகியும், பொருந்திய பத்துதிக்கும் சுழன்று திரும்பினதாகியும், பழமையாகிய சகத்தின் நிச்சயமாயிருக்கின்ற தத்துவத்தைத் தெரிசித்தவர்கள் சிலர்கள். மற்றவர்கள் அவ்வுலகமயக்கத்திற் கெடுகின்றவர்கள்—என்பதாம். (௧௫)

## மோகத்தி னீக்கமுரைத்தல்.

தேகத்தைநோக்கியன்றோ செகமெலாந்திரிவதல்லான்
மேகத்தைநோக்கியன்றோ வெங்கணும்பஞ்சபூத
நாகத்தைமண்ணைகீழை நாடினுமாறுகாணே
மோகத்தைவிடுதுமென்றே திடமுற்றார்முழுதும்பற்றார்.

(இ-ள்.) தேகத்தை நோக்கியன்றோ - சரீரத்தைப் பார்த்தல்லவா, செகமெலாம் - சகத்திலுள்ளயாவரும், திரிவதல்லால் - சஞ்சரிப்பதே யன்றி, ஏகத்தை நோக்கியன்று - ஒன்றான வாத்மாவைப் பார்த்தல்ல, எங்கணும் பஞ்சபூதம் - எவ்விடத்தும் பஞ்சபூதமே (யல்லாமல்), நாகத்தை - தேவலோகத்திலும், மண்ணை - பூலோகத்திலும், கீழை - பாதாளலோகத்திலும், நாடினும் - தேடியும், ஆறுகாணோம் - ஆறாவது (பூதங்) கண்டதில்லை, மோகத்தை விடுதுமென்று - மோகத்தைவிடுவோமென்று, திடமுற்றோர் - திரமடைந்தவர்கள், முழுதும்பற்றார் - யாவையும் பற்ற மாட்டார்கள்—எ-று.

(இ-ரை) சரீரத்தைப் பார்த்தல்லவா சகத்திலுள்ள யாவரும் சஞ்சரிப்பதேயன்றி ஒன்றான வாத்மாவைப்பார்த்தல்ல. எவ்விடத்தும் பஞ்சபூதமேயல்லாமல் தேவலோகத்திலும், பூலோகத்திலும், பாதாளலோகத்திலும் தேடியும் ஆறாவது பூதங்கண்டதில்லை. மோகத்தை விடுவோமென்று திரமடைந்தவர்கள் யாவையும் பற்றமாட்டார்கள்—என்பதாம். (கசு)

பவங்கடக்குஞ் சுளுவையும் பளுவையுங்கூறல்.

ஊகமின்மூகர்க்கெல்லா மூழிவெங்கடலாஞ்சென்ம
மோகமிலூகத்தோர்க்கு முன்னுறுகோவின்றாளாஞ்
சோகமின்ஞானிநெஞ்சிற் றொடர்ந்தசிற்றின்பம்பற்றாப்
போகமில்சிற்றார்புன்பெண் பொலிநகர்விடலைக்கென்னும்.

(இ-ள்.) ஊகமில் - அனுபவயுத்தியில்லாத, மூகர்க்கெல்லாம் - மூடர்களனைவர்க்கும், சென்மம் - செநநமானது, ஊழிவெங்கடலாம் - பிரளய காலத்தில் வெப்பமான சமுத்திரமாம், மோகமிலூகத்தோர்க்கு - மயக்கமில்லாத (வனுபவ) யுத்தியை யுடையவர்களுக்கு, முன்னுறு கோவின்றாளாம் - முன்னிருக்கின்ற பசுவின் குளம்படியாம், சோகமில் - துக்கமில்லாத, ஞானிநெஞ்சில் - ஞானவானுடையமனதில், தொடர்ந்த சிற்றின்பம்பற்றா - தொடர்புற்ற விடயசுகம்பற்றாது, போகமில் - போகமில்லாத, சிற்றார்புன்பெண் - குறிஞ்சிநிலத்திலிருக்கு மிழிவானபெண்கள், பொலிநகர் - ப்ரகாசிக்கின்ற பட்டணத்திலுள்ள, விடலைக்கென்னும் - புருடர்களுக்கென்ன ப்ரயோசனமாம்—எ-று.

(இ-ரை.) அனுபவ யுத்தியில்லாத மூடர்களனைவர்க்கும் செநநமானது பிரளயகாலத்தில் வெப்பமான சமுத்திரமாம். மயக்கமில்லாத வனுபவ யுத்தியையுடையவர்களுக்கு முன்னிருக்கின்ற பசுவின் குளம்படியாம். துக்கமில்லாத ஞானவானுடைய மனதில் தொடர்புற்ற விடயசுகம்பற்றாது. போகமில்லாத குறிஞ்சிநிலத்தி

விருக்கு மிழிவானபெண்கள் ப்ரகாசிக்கின்ற பட்டணத்திலுள்ள புருடர்களுக்கென்ன ப்ரயோசனமாம்—என்பதாம். (கஎ)

---

## சர்வம் பிரமமயமாய் விளங்குதலாய் சகலமு மின்றெனல்.

பிரமமாஞ்சுத்தவேலை நுரைகளாம்பிறங்கலெல்லாம்
பரமவாதித்தன்முன்னர் கானலாம்பரவைஞாலத்
திரமதாமிதனைமுன்னே செப்பினன்வியாழன்றந்த
வரமகன்கசனும்பேரோன் மற்றதுவள்ளல்கேட்பாய்.

(இ-ள்.) பிரமமாஞ்சுத்தவேலை - பிரமமாகிய பரிசுத்தசமுத்திரத்தில், பிறங்கலெல்லாம் - மலைகளியாவும், நுரைகளாம் - பேனங்களாகும், பரமவாதித்தன் முன்னர் - பிரமசூரியன்முன்பு, பரவைஞாலம் - சமுத்திரஞ்சூழ்ந்த பூமியானது, கானலாம் - பேய்த்தேராம், திரமதாமிதனை - திரமுள்ள இவ்வருத்தத்தை, வியாழன்றந்த - பிரகஸ்பதிபெற்ற, வரமகன் கசனும்பேரோன் - வரபுத்திரனான கசனென்னு நாமத்தையுடையவன், முனனேசெப்பினன்-முன்னேசொல்லினன், வள்ளல்கேட்பாய் - (அதை) ஸ்ரீராமா நீ கேட்பாய்—எ-று.

(இ-கை.) பிரமமாகியபரிசுத்தசமுத்திரத்தில் மலைகளியாவும் பேனங்களாகும். பிரமசூரியன்முன்பு சமுத்திரஞ்சூழ்ந்த பூமியானது பேய்த்தேராம் திரமுள்ள இவ்வருத்தத்தை பிரகஸ்பதி பெற்ற வரபுத்திரனான கசனென்னு நாமத்தையுடையவன் முன்னேசொல்லினன். அதை ஸ்ரீராமா நீ கேட்பாய்.

(இ-சு-க-ம்.) சீவன்முத்தர்க ளப்பியாசத்தையு மாரூடத்தையு மறிவித்ததாம். (கஅ)

---

## சமாதி யனுபவ முரைத்தல்.

கசனுயர்சமாதிநீங்கி யொருபகற்களிக்குநெஞ்சன்
வசமறத்தழுதழுத்த வசனத்தன்யாதுசெய்கேன்
றிசையுறவெங்குசெல்கேன் றீர்ப்பதென்கொள்வதென்று
மிசையுயர்கற்பநீர்போன் மேதினியெங்குநானே.

(இ-ள்.) கசன் - கசமுனியானவர், உயர்சமாதிநீங்கி - மேலாகிய சமாதியினின்றும் பிரிந்து, ஒருபகல் - ஒருபொழுது, களிக்குநெஞ்சன் - களிக்கின்ற மனதையுடையவன், வசமற - பரவசனாக, தழுதழுத்த வசனத்தன் - தழுதழுத்த வசனத்தையுடையவன், யாதுசெய்கேன் - எதைச் செய்வேன், திசையுற - திக்குகளிற்பொருந்த, எங்குசெல்கேன் - எங்கே போவேன், தீர்ப்பதென் - விடப்படுவதெது, கொள்வதென்று - கிரகிப்பதெது, மிசையுயர் - மேலாகவளர்கின்ற, கற்பநீர்போல் - பிரளய சமுத்

திரத்தைப்போல, மேதினி யெங்குநானே - உலகமெவ்விடத்து (நிறைந்திருக்கின்ற) தெனது ஸ்வரூபமே—எ-று.

(இ-ரை.) கசமுனியானவர் மேலாகிய சமாதியினின்றும் பிரிந்து ஒருபொழுது களிக்கின்ற மனதையுடையவன் பரவசனாக தழுதழுத்த வசனத்தையுடையவன். எதைச்செய்வேன், திக்குகளிற்பொருந்த எங்கேபோவேன். விடப்படுவதெது? கிரகிப்பதெது? மேலாக வளர்கின்ற பிரளய சமுத்திரத்தைப்போல உலகமெவ்விடத்து நிறைந்திருக்கின்றதெனது ஸ்வரூபமே—என்பதாம்.

இதுவுமது'

மேனியிற்புறத்தினுள்ளின் மேலொடுகீழிற்றிக்கில்
வானில்வையகத்திலெங்கு நானன்றிமற்றொன்றில்லை
யானிலாவிடமுமில்லை யெனதிடத்திலாதுமில்லை
தானிகழ்பொருள்வேறில்லை சச்சிதாநந்தமென்றான்.

(இ-ள்.) மேனியின் - சரீரத்தினது, புறத்தில் - புறம்பிலும், உள்ளில் - உள்ளிலும், மேலொடுகீழிற்றிக்கில் - பத்துதிக்குகளிலும், வானில் - ஆகாயத்திலும், வையகத்தில் - பூமியிலும், எங்கும் - எவ்விடத்திலும், நானன்றி - எனது ஸ்வரூபமல்லாமல், மற்றொன்றில்லை - வேறொன்றுமில்லை, யானிலாவிடமுமில்லை-எனது ஸ்வரூபமில்லாத விடங்களுமில்லை, எனதிடத்திலாதுமில்லை - எனது ஸ்வரூபத்தி லில்லாதவைகளுமில்லை, தானிகழ் பொருள்வேறில்லை - தானேவிளங்குகின்ற வஸ்துக்கள் வேறேயில்லை, சச்சிதாநந்தமென்றான் - சச்சிதாநந்த (ஸ்வரூபமே ப்ரகாசிக்கின்ற) தென்று (கசமுனி) சொன்னார்—எ-று.

(இ-ரை.) சரீரத்தினது புறம்பிலும், உள்ளிலும், பத்துதிக்குகளிலும், ஆகாயத்திலும், பூமியிலும், எவ்விடத்திலும் எனது ஸ்வரூபமல்லாமல் வேறொன்றுமில்லை. எனது ஸ்வரூபமிலாத விடங்களுமில்லை. எனது ஸ்வரூபத்தி லில்லாதவைகளுமில்லை தானேவிளங்குகின்ற வஸ்துக்கள் வேறேயில்லை. சச்சிதாநந்த ஸ்வரூபமே ப்ரகாசிக்கின்றதென்று கசமுனிசொன்னார்—என்பதாம்.

(இ-உ-க-ீ.) சமாதியிலிருந்து சாக்ஷாத்காரமானமனதிறைற் பார்க்குமிடத்திற் சர்வம் பிரமமயமாய் விளங்குகின்றதென்பதாம். (உ0)

கசன்கதை முற்றிற்று.

ஆ கதை கஎ-க்கு கவிதை எருகூ.

# திதிப் பிரகரணம்.

## அவதாரிகை.

முன்கதையிற் சர்வம் பிரமமயமாய் விளங்குமென்பதை யறிவித்து; அவ்வனுபவம் வரும்பொருட் டவ்வைந்து கதைகளின் சாரங்களைச் சுருக்கி யுபதேச ப்ரசாரந் திதிப்பிரகரணஞ் சொல்லுகின்றார்.

### அனுபவிக ளிலக்கண மியாதெனின்-வேறு.

பெறற்கொணாதசத் துவகுணப்பிறப்பினர்புவிமே
னிறத்துவாழ்வது வான்றிகழ்நிறைமதிநிகராம்
வறக்குந்துன்பத்தில் வாடலரிரவுதான்வரினுஞ்
சிறக்கும்பொற்சம லத்தலர்குவியுமோசிறிதும்.

(இ-ள்.) பெறற்கொணாத - பெறுதற்கரிய, சத்துவகுணப்பினர்-சாத்துவிதகுணமான பிறப்பையுடையவர்கள், புவிமேல - பூமியினிடத்து, நிறத்துவாழ்வது - (பிரம) ப்ரகாசமாக வாழ்கின்றது, வான்றிகழ் - ஆகாயத்திற் ப்ரகாசிக்கின்ற, நிறைமதிநிகராம் - பூர்ணச்சந்திரனை யொப்பாகும், வறக்குந்துன்பத்தில் - வருத்துகின்ற துயரத்தில், வாடலர் - அவர்கள் வாடார்கள், இரவுதான்வரினும் - இராத்திரிவந்தாலும், சிறக்கும்பொற்கமலத்தலர் - சிறப்பான சுவர்ண தாமரைமலர், சிறிதுங்குவியுமோ - சற்றுங்குவியுமோ—எ-று.

(இ-ரை.) பெறுதற்கரிய சாத்துவித குணமான பிறப்பையுடையவர்கள் பூமியினிடத்து பிரமப்ரகாசமாக வாழ்கின்றது, ஆகாயத்திற் ப்ரகாசிக்கின்ற பூரணச்சந்திரனை யொப்பாகும். வருத்துகின்ற துயரத்தில் அவர்கள்வாடார்கள். இராத்திரிவந்தாலும் சிறப்பான சுவர்ன தாமரைமலர் சற்றுங்குவியுமோ-எ-ம். ()

பகுதமன்றியே மற்றுளதொழில்களிற் பற்றார்
தகுதியாகிய மேலவர்நெறியிலே சரிப்பர்
மிகுதியாணிறைந் தசைவறுமுளத்தினன் மிகுவர்
தொகுதியானநட் பருண்முதற்குணங்களாற் சுடர்வார்.

(இ-ள்.) பகுதமன்றி - ப்ரகிருதமாகிய (தொழில்களை) யல்லாமல், மற்றுளதொழில்களிற்பற்றார் - வேறானசெய்கைகளிற் பற்றார்கள், தகுதியாகிய - அறிவாகிய, மேலவர்நெறியில் - சத்துக்களுடைய மார்க்கத்தில், சரிப்பர் - நடப்பார்கள், மிகுதியாய் நிறைந்து - பூரணமாக நிறைந்து, அசைவறு முளத்தினன் மிகுவர் - சலனமற்ற மனதினன் மேன்மையாவார்கள், தொகுதியான - கூட்டமாகிய, நட்பருண்முதல் - மயித்திரி

கருணைமுதலாகிய, குணங்களாற் சுடர்வார் - (சற்) குணங்களினுற் ப்ரகாசிப்பார்கள்—எ-று.

(இ-ரை.) ப்ரகிருதமாகிய தொழில்களையல்லாமல் வேருன செய்கைகளிற் பற்ருர்கள். அறிவாகிய சத்துக்களுடைய மார்க்கத்தில் நடப்பார்கள். பூரணமாகநிறைந்து சலனமற்ற மனதினுன் மேன்மையாவார்கள். கூட்டமாகிய மயித்திரி கருணைமுதலாகிய சற்குணங்களினுற் ப்ரகாசிப்பார்கள்—என்பதாம். (உ)

இயற்கையாகிய குணத்தினரிழிவுயர் விரண்டு
நயக்கலாதவர் சமமுளோர்நன்னெறி நடப்போர்
வியக்குமாறுதன் கரைகடாவேலையை யொப்போர்
மயக்கிலாதவ ரிரவிபோனியதியை வழாதோர்.

(இ-ள்.) இயற்கையாகிய - இயல்பாகிய, குணத்தினர் - குணத்தையுடையவர்கள், இழிவுயர்விரண்டும் - தாழ்வு வுயர்வென்னுமிரண்டையும், நயக்கலாதவர் - இச்சியாதவர்கள், சமமுளோர் - சமத்துவமுடையவர்கள், நன்னெறி நடப்போர் - சன்மார்க்கத்திற் செல்பவர்கள், வியக்குமாறு - அதிசயிக்கும்படி, தன்கரைகடா - தனதெல்லையைத் தாண்டாத, வேலையை யொப்போர் - சமுத்திரத்தையொத்தவர்கள், மயக்கிலாதவர்-மோகமில்லாதவர்கள், இரவிபோல் - சூரியனைப்போல, நியதியை வழாதோர் - நியதியை வழுவாதவர்கள்—எ-று.

(இ-ரை.) இயல்பாகிய குணத்தையுடையவர்கள் தாழ்வுவுயர்வென்னுமிரண்டையும் இச்சியாதவர்கள், சமத்துவ முடையவர்கள் சன்மார்க்கத்திற்செல்பவர்கள், அதிசயிக்கும்படி தனதெல்லையைத்தாண்டாத சமுத்திரத்தை யொத்தவர்கள் மோகமில்லாதவர்கள், சூரியனைப்போலநியதியைவழுவாதவர்கள்—என்பதாம்.

(இ-ங-க-ப்.) ஸ்வானுபவமாய்ச் சஞ்சரிக்கும் விளக்கத்தைக் கூறினதென்பதாம். (ங)

## அனுபவமுதிர்ப்பதற் கப்பியாசங்கூறல்.

கொள்ளற்பாலது துயரிலாதவர்நிலை குறுகத்
தள்ளற்பாலது தீயவர்நெறியெனுஞ் சழக்கே
யெள்ளற்பாலது வுலகமேதியாமெவ னென்றே
தெள்ளற்பாலது குரவராலறிவினுற் றேர.

(இ-ள்.) கொள்ளற்பாலது - கொள்ளத்தக்கது, துயரிலாதவர்நிலை - துன்பமற்றவர் குணத்தை, குறுக - சுருங்கும்படியாக, தள்ளற்பாலது -

தள்ளத்தக்கது, தீயவர் - கொடியவர்களுடைய, நெறியெனுஞ்சழக்கு - மார்க்கமென்னுங்குற்றத்தை, உலகமேது - உலகமெப்படிப்பட்டதென்று (விசாரித்து), எள்ளற்பாலறு - நிந்திக்கத்தக்கது, யாமெவனென்று - யாமெப்படிப்பட்டவனென்று, குரவரால் - ஆசாரியராலும், அறிவினுல் - (தன) தறிவினாலும், தீரத்தெள்ளற்பாலது - தீரவிசாரித்துத் தெளியத்தக்கது—எ-று.

(இ-ரை.) கொள்ளத்தக்கது, துன்பமற்றவர் குணத்தை சுருங்கும்படியாக தள்ளத்தக்கது, கொடியவர்களுடைய மார்க்கமென்னுங்குற்றத்தை உலக மெப்படிப்பட்டதென்று விசாரித்து நிந்திக்கத்தக்கது, யாமெப்படிப்பட்டவனென்று ஆசாரியராலும் தனதறிவினாலும் தீரவிசாரித்துத் தெளியத்தக்கது—என்பதாம். (௪)

வருந்துகிற்பது தனையறிநெறியிலே மனத்தாற்
றிருந்துகிற்பது கருமத்திலழுந்திலாச் செய்கை
பொருந்துகிற்பது தீயவரல்லவர் புணர்ச்சி
யருந்துகிற்பது நானென்பதாக்கு கிற்பதுவே.

(இ-ள்.) வருந்துகிற்பது - வருத்தப்படுவது, தனையறிநெறியில் - ஆத்மாவை யறிகின்றமார்க்கத்தில் - மனத்தாற் றிருந்துகிற்பது - மனதினாற் றிருத்தஞ்செய்வது, கருமத்தில் - விவகாரத்தில், அழுந்திலாச்செய்கை - அழுந்தமற்றதொழிலை, பொருந்துகிற்பது - அடையத்தக்கது, தீயவரல்லவர் புணர்ச்சி - தீமையற்ற (நல்லோர்களிடத்தில்) கலத்தல், அருந்துகிற்பது - புசிக்கத்தக்கது, நானென்ப தாக்குகிற்பது - நானென்பதுண்டாக்கின்ற வகத்தை—எ-று.

(இ-ரை.) வருத்தப்படுவது ஆத்மாவையறிகின்ற மார்க்கத்தில் மனதினாற் றிருத்தஞ்செய்வது, விவகாரத்தில் அழுந்தமற்ற தொழிலை அடையத்தக்கது, தீமையற்ற நல்லோர்களிடத்திற் கலத்தல் புசிக்கத்தக்கது, நானென்பதுண்டாக்கின்ற வகத்தை-எ-ம்.

தீர்க்கத்தக்கது நரம்பெலும்பெனுமுடற் றியக்கம்
பார்க்கத்தக்கது முழுதுயிர்க்குள்ளுறை பரம
மீர்க்கத்தக்கதே ரிரவியினிடத்தினும் பாரி
னீக்கத்தக்கிலாப் புழுவினுஞ்சித்தொன்றே நிற்கும்.

(இ-ள்.) தீர்க்கத்தக்கது - நீக்கத்தக்கது, நரம்பெலும்பெனும் - நரம்பென்கின்ற, உடற்றியக்கம் - சரீரமயக்கம், பார்க்கத்தக்கது - காணத்தக்கது, முழுதுயிர்க்குள்ளுறைபரமம் - சகல வாத்மகோடிக ளுண்ணிறைந்திருக்கின்ற பிரமம், ஈர்க்கத்தக்கதேர் - (பச்சைப்புரவியினுல்) இழுக்கத்தக்க விரதத்தையுடைய, இரவியினிடத்தினும் - சூரியனிடத்திலும், பாரினீக்

கத்தக்கிலா - பூமியிற்றள்ளத்தகாத, புழுவினும் - கிருமியினிடத்திலும், சித்தொன்றே நிற்கும் - ஞானமொன்றே (நிலையா) யிருக்கும்—எ-று.

(இ-ளா.) நீக்கத்தக்கது, நரம்பென்கின்ற சரீரமயக்கம், காணத்தக்கது, சகலவாத்மகோடிகளுண்ணிறைந்திருக்கின்ற பிரமம். பச்சப்புரவியினு லிழுக்கத்தக்க விரதத்தையுடைய சூரியனிடத்திலும் பூமியிற்றள்ளத்தகாத கிருமியினிடத்திலும் ஞானமொன்றே நிலையாயிருக்கும்—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) பிரமானு சந்தானங்களின் சாரங்களைச் சுருக்கமாகக் கூறினதாம். (சு)

## அநுசந்தானத்திற்குரிய குணத்தை யறிவித்தல்.

தாமதத்துடனிராசதஞ் சாத்திகமென்னு
நாமமுக்குணப் பிறவியுமுயற்சியா னண்ணுஞ்
சேமமுத்தியைச் செய்திடுஞ்சாத்திகச் செய்கை
யிராமவுத்தம ராகவவென்றுமீட் டுரைப்பான்.

(இ-ள்.) தாமதத்துடன் - தாமதகுணத்தோடும், இராசதம் - இராசத குணமென்றும், சாத்திகமென்னும் - சாத்துவித குணமென்றுஞ் சொல்லப்பட்ட, நாமம் - பெயரையுடைய, முக்குணம் - மூன்று குணங்களாகிய, பிறவியும் - சநநமும், முயற்சியானண்ணும் - எத்தனத்தாலடையும், சேம முத்தியை - பரமசுகமான மோக்ஷத்தை, சாத்திகச்செய்கை - சாத்திகத் தொழிலானது, செய்திடும் - செய்விக்கும், இராமவுத்தமராகவவென்று - உத்தமமான ஸ்ரீராமாவென்று (சொல்லி), மீட்டுரைப்பான் - திரும்பவும் வசிட்டர் சொல்லுவார்—எ-று.

(இ-ளா.) தாமதகுணத்தோடும் இராசதகுணமென்றும், சாத்துவிதகுணமென்றுஞ் சொல்லப்பட்ட பெயரையுடைய மூன்று குணங்களாகிய சநநமும் எத்தனத்தாலடையும், பரமசுகமான மோக்ஷத்தை சாத்திகத்தொழிலானது செய்விக்கும். உத்தமமான ஸ்ரீராமாவென்று சொல்லி திரும்பவும் வசிட்டர் சொல்லுவார்-எ-ம்.

(இ-ம்.) பவமாய் விளங்குங் குணங்களை நீக்கிச் சிவமாயிருக்குங் குணத்தை யறிவித்ததாம். (எ)

திதிப்பிரகரணம் முற்றிற்று

ஆ கதை கஅ-க்கு கவிதை எசுஙா.

## உபசாந்தப்பிரகரணத்தில்,

# சனகராசன் கதை.

### அவதாரிகை.

*முற்பிரகரணத்திற் சித்துவிலாசமே சகமென விளங்குமென்பதை நன்றாயுணர்த்தி அச்சித்தே சகமாகவிளங்குதலா லச்சக மெப்போது மின்றெனத்தெரிவிக்கு நிமித்தமொன்பது கதைகளாநிறைந்த வுபசாந்தப்பிரகரணங் கூறத்தொடங்கி மனவுப சமனார்த்தஞ் சனகராசன் கதையை நிரூபிக்கிறார்.*

---

## சர்வம் பிரமமயமென்பதைப்போதித்து அச்சர்வந் திரிகுணாத்மகமென்றுரைத்தல்—வேறு.

சுரர்குருவின் மகனுரைத்த படியேயிவ் வுலகெலாஞ் சொரூப மாகும், விரவியநீள் பிறப்பிறப்பா மிகுமாயை யிராசததா மதத்தை மேவும், புருடர்தரித் திடவற்றாய்த் தூண்சுமக்கு மண்டபமே போலநிறகும், திரமுளசத் துவகுணத்தின் போல்வார்கள் சநந பயந் தீர்ந்துநிற்பார்.

(இ-ள்.) சுரர்குருவின் - தேவகுருவின், மகனுரைத்தபடியே - புத்திரனாகிய கசமுனிசொல்லிய ப்ரகாரமே, இவ்வுலகெலாம் - இச்சகங்க ளனைத்தும், சொரூபமாகும் - ஆத்ம ஞானஸ்வரூபமாம், விரவிய - கலந்த, நீள் பிறப்பிறப்பாம் - மிகுந்த சநநமரணமென்னும், மிகுமாயை - மிகுந்த மாயையானது, இராசத தாமதத்தை - இராசத தாமதமென்னுங் குணங்களை, மேவும்புருடர் - பொருந்திய புருடர்கள், தரித்திடவற்றாய் - தரிக்கத்தக்கதாய், தூண்சுமக்கு மண்டபமேபோல - தூண்கள் தாங்குகின்ற மண்டபத்தைப்போல, நிறகும் - நிலையாயிருக்கும், திரமுள சத்துவகுணத்து - திரமான சாத்துவித குணத்தையுடைய, உன்போல்வார்கள் - உன்னையொத்தவர்கள், சநநபயந்தீர்ந்து நிற்பார் - பிறவி யச்சநீங்கி யிருப்பார்கள்—எ-று.

(இ-ஙா.) தேவகுருவின் புத்திரனாகிய கசமுனிசொல்லிய ப்ரகாரமே இச்சகங்களனைத்தும் ஆத்மஞான ஸ்வரூபமாம். கலந்த மிகுந்த சநந மரணமென்னும் மிகுந்த மாயையானது இராசத தாமதமென்னுங் குணங்களைப் பொருந்திய புருடர்கள் தரிக்கத் தக்கதாய் தூண்கள் தாங்குகின்ற மண்டபத்தைப்போல நிலையாயிருக்கும். திரமான சாத்துவித குணத்தையுடைய உன்னை யொத்தவர்கள் பிறவி யச்சநீங்கி யிருப்பார்கள்—என்பதாம். (க)

## பிரமத்தி லெதார்த்தமாய்ச் சர்வமுமின்றெனல்.

வழுவறுசத் துவகுணத்தோர் தோலுரிக்கு மரவென்னமா யாபாச, நழுவுவரெல்லாம்பிரம நாமதுவே யென்றெண்ணி நாமும் வேறே, முழுதுலகம் வேறென்னு மோகமழிப் பாய்பிரம மூலச் சித்தி, லெழுவனகற் பனையெல்லாங் கடலிலலைபோல மெய்யா யில் லையென்றே.

(இ-ள்.) வழுவறு சத்துவகுணத்தோர் - குறைவற்ற சாத்துவிதகுண த்தையுடையவர்கள், தோலுரிக்குமரவென்ன - சருமத்தையுரிக்கின்ற சற் பத்தைப்போல, மாயாபாசநழுவுவர் - மாயாபாசத்தினின்றுநீங்குவார்கள், எல்லாம்பிரமம் - சமஸ்தமும் பிரமம், நாமதுவேயென்றெண்ணி - நாமு மந்தப்பிரமமேயென்று சிந்தித்து, நாமும்வேறு - யாமும்வேறு, முழுதுல கம் வேறென்னும் - சகல சகங்களையும் வேறென்கின்ற, மோகமொழிப் பாய் - மயக்கத்தைக்கெடுப்பாய், பிரமமூலச்சித்தில் - காரணமான பிரம ஞானத்தில், எழுவன - உண்டாகின்றனவாகிய, கற்பனையெல்லாம் - கற் பனைகளியாவும், கடலி லலைபோல - சமுத்திரத்திலுண்டாகியதிரையைப் போல், மெய்யாயில்லை - உண்மையாகவில்லை—எ-று.

(இ-ரை.) குறைவற்ற சாத்துவித குணத்தை யுடையவர்கள் சருமத்தை யுரிக்கின்ற சற்பத்தைப்போல மாயாபாசத்தினின்று நீங்குவார்கள். சமஸ்தமும்பிரமம். நாமு மந்தப் பிரமமேயென்று சிந்தித்து யாமும் வேறு, சகல சகங்களையும் வேறென்கின்ற மய க்கத்தைக்கெடுப்பாய். காரணமான பிரமஞானத்தில் உண்டாகின் றனவாகிய கற்பனைக ளியாவும் சமுத்திரத்திலுண்டாகிய திரை யைப்போல உண்மையாகவில்லை—என்பதாம். (உ)

---

### பிரமமேயுண் டேன்றறிந்து வேறுண்டேன்பதைச் சத்துவதுணத்தாற் கெடுப்பாயெனல்.

சோகமிலைமோகமிலை பிறப்பில்லை பிறபிறப்பிற் சுழல்வா ரில்லை, யேகமென விங்கென்று முள்ளபொருளேயுள்ள திரங்கவே ண்டா, மூகமுறவருவனபோ வனநினையேற் றெந்தனைகளொன்று மில்லா, மாகனசத் துவகுணத்தோ டொருவனு யிடரெல்லா மா ற்றிநிற்பாய்.

(இ-ள்.) சோகமிலை - துன்பமுமில்லை, மோகமிலை - இன்பமுமில்லை, பிறப்பில்லை - சநநமுமில்லை, பிறப்பிறப்பிற்சுழல்வாரில்லை - சநநமரண மென்னுஞ்சுழலிற் சுழல்பவர்களுமில்லை, எகமென - ஒன்றென்று, இங் கென்றும் - இவ்விடத்திலெப்போதும், உள்ளபொருளேயுள்ளது - இருக்

கின்ற வஸ்துவேயிருக்கின்றது, இரங்கவேண்டாம் - விசனப்படவேண்டு வதில்லை, ஊகமுற - (அனுபவ) யுத்தி பொருந்தும்படி, வருவன - வருப வைகளையும், போவன - போவனவைகளையும், நினையேல் - சிந்திக்காதே, தொந்தனைகளொன்றுமில்லா - (இராகத் துவேடமென்னுந்) துவிதங்க ளொன்றுமில்லாத, மாகன சத்துவகுணத்தோடு - மிகவு மேன்மையாகிய சாத்துவிதகுணத்துடன், ஒருவனாய் - ஏகனாய், இடரெல்லாம் - துக்கங்க ளனைத்தையும், மாற்றிநிற்பாய் - நீக்கி நிற்பாய்—எ-று.

(இ-ளை.) துன்பமுமில்லை, இன்பமுமில்லை, சநநமுமில்லை, சநநமரணமென்னுஞ் சுழலிற்சுழல்பவர்களுமில்லை, ஒன்றென்று இவ்விடத்தி லெப்போதும் இருக்கின்ற வஸ்துவே யிருக்கின் றது. விசனப்பட வேண்டுவதில்லை. அனுபவயுத்தி பொருந்தும் படி வருபவைகளையும் போனவைகளையும்சிந்திக்காதே. இராகத்து வேடமென்னுந்துவிதங்களொன்றுமில்லாத மிகவுமேன்மையாகிய சாத்துவித குணத்துடன் ஏகனாய் துக்கங்களனைத்தையும் நீக்கி நிற்பாய்—என்பதாம். (ந)

---

## பிரமமாய்நின்று யானெனதென்கின்ற துன்பத்தைக் கெடுக்கவேண்டுமெனல்.

சமமாகிச்சொரூபத்தேநிலையாகித் திரமதியாய்ச் சாந்தனாகி, யமர்மனனமௌனியாய்நன்மணிபோற்றெளிந்து துயரனைத்துந்தீர் வாய், நிமலமுறநிகழ்காலத் தொழிற்செய்தியாவையினு நேயமின் றி, நமதெனக்கொள்ளுதல்விடுத லிரண்டுமறத்துன்பமெலாநாசஞ் செய்வாய்.

(இ-ள்.) சமமாகி - (சர்வத்திர) சமமாய், சொரூபத்தேநிலையாகி-(ஆத் மஞான) ஸ்வரூபத்தி நிச்சயமுடையவனாய், திரமதியாய் - திடஞானமு ள்ளவனாய், சாந்தனாகி - உபசாந்தனாய், அமர்மனன மௌனியாய்-பொரு ந்தின மனதையுடைய மௌனியாகி, நன்மணிபோற்றெளிந்து - நல்ல விரத்தினத்தைப்போலத் தெளிவையடைந்து, துயரனைத்துந்தீர்வாய் - துன்பங்களியாவையும் விடுவாய், நிமலமுற - நிருமலமானது பொருந்த, நிகழ்காலத்தொழி லியாவையினும் - வர்த்தமானகாலத்தொழில்களனைத் திலும், நேயமின்றி - இச்சையில்லாமல், செய்தி - செய்வாய், நமதெனக் கொள்ளுதல் - எனதென்று கொள்ளுதலும், விடுதல் - விடுதலும், இரண் டுமற - (இவ்) விரண்டுமில்லாமல், துன்பமெலா நாசஞ்செய்வாய் - துயர னைத்தையும் (ஸ்ரீராமா நீ) கெடுப்பாய்—எ-று.

(இ-ளை.) சர்வத்திரசமமாய் ஆத்மஞானஸ்வரூபத்தி நிச்சய முடையவனாய் திடஞானமுள்ளவனாய் உபசாந்தனாய் பொருந்தின மனதையுடையமௌனியாகி நல்ல விரத்தினத்தைப்போலத்தெளி

வையடைந்து துன்பங்களியாவையும்விடுவாய் நிருமலமானதுபொ ருந்த வர்த்தமானகாலத்தொழில்களனைத்திலும் இச்சையில்லாமல் செய்வாய். எனதென்று கொள்ளுதலும், விடுதலும் இவ்விரண்டு மில்லாமல் துயரனைத்தையும் ஸ்ரீராமா நீ கெடுப்பாய்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) சர்வம் பிரமமயமாய் விளங்குவதேயன்றி வேறன்றென் பதாம். (ச)

## பிரமானுபவ முதிக்கும் பக்குவ மறிவித்தல்.

இனிப்பிறவாமுடிவான பிறப்பிலேமெய்ஞ்ஞான மெளிதிலு ண்டாம், பனிச்சுடர்வெண்ணித்திலங்க ளுத்தமமா மூங்கிலல்லாற் படுவதுண்டோ, செனித்தவரின் மேலோராய் நல்லோராய் மித்தி ரராய்த்தெளிந்தோராகி, யனித்தமறுமுத்தராய்ஞானிகளாங்குண மெல்லா மவரைச்சேரும்.

(இ-ள்.) இனிப்பிறவா - மேற்சநநமில்லாத, முடிவான பிறப்பில் - அந்தமான சநநத்தில், மெய்ஞ்ஞானம் - ஆத்மஞானமானது, எளிதிலுண் டாம் - எளிதிலுதயமாம், பனிச்சுடர் வெண்ணித்திலங்கள்-குளிர்ந்த ப்ர காசத்தையுடைய வெண்முத்துகள், உத்தமமாமூங்கிலல்லால் - உத்தம மானவேணுவையன்றி, படுவதுண்டோ - உண்டாவதுண்டோ, செனித் தவரில் - பிறந்தவர்களில், மேலோராய் - மேன்மையுள்ளவர்களாகியும், நல்லோராய் - நன்மையுள்ளவர்களாகியும், மித்திரராய் - அன்புள்ளவர்க ளாகியும், தெளிந்தோர்ரகி - தெளிந்தவர்களாகியும், அனித்தமறுமுத்த ராய் - நித்தியமானசீவன்முத்தர்களாகியும், ஞானிகளாம் - (ஆத்ம) ஞானி களாயுமிருக்கின்ற, குணமெல்லாமவரைச்சேரும் - குணங்களம்முடிவான பிறப்புள்ளவர்களைச்சேரும்—எ-று.

(இ-ா·) மேற்சநநமில்லாத அந்தமானசநநத்தில் ஆத்மஞான மானது எளிதிலுதயமாம். குளிர்ந்தப்ரகாசத்தையுடைய வெண் முத்துகள் உத்தமமான வேணுவையன்றி உண்டாவதுண்டோ. பி றந்தவர்களில் மேன்மையுள்ளவர்களாகியும்,நன்மையுள்ளவர்களா கியும்அன்புள்ளவர்களாகியும், தெளிந்தவர்களாகியும், நித்தியமான சீவன்முத்தர்களாகியும், ஆத்மஞானிகளாயு மிருக்கின்ற குணங்க ளம்முடிவானபிறப்புள்ளவர்களைச்சேரும்—என்பதாம். (ரு)

## பவந்தீர்ப்பதற் கிரண்டுமொர்க்கமுண்டெனல்.

மெத்தென்றசரித்திரத்தி னவர்தம்மையுலகெலாம் விரும்புந் தன்மை, கொத்தொன்றுவனமூங்கிற் குழலிசையான் மகிழ்விலங் கின் கூட்டம்போலு, மித்தன்மையாவருக்கும் பொதுமையினலிய

ம்பியதா மிதனில்வேறுஞ், சத்தென்றவழியிரண்டேழ் பவந்தீர்ப் பவர்க்கவற்றைச் சாற்றக்கேண்மோ.

(இ-ள்.) மெத்தென்ற சரித்திரத்தின் - மிருதுவான நடையுள்ள, அவர்தம்மை - அச்சத்துக்களை, உலகெலாம்-சகமனைத்தும், விரும்புந்தன்மை - விரும்புகின்றகுணமானது, வனம் - கானகத்தில், கொத்தொன்று- ஒருகொத்தில், மூழ்கிற்குழலிசையால் - வேணுவினுற்செய்தபிள்ளாங்குழலின திராகத்தினுல், மகிழ்விலங்கின்கூட்டம்போலும் - களிக்கின்றபசுவினிரையைப்போலும், இத்தன்மை - இக்குணமானது, யாவருக்கும்-சகலருக்கும், பொதுமையின் - பொதுவாக, இயம்பியதாம் - சொல்லியதாம், இதனில்வேறாய் - இக்குணங்களிற்றனிமையாக, எழ்பவந்தீர்ப்பவர்க்கு - எழுவகைப்பிறப்பையுங் கெடுப்பவர்களுக்கு, சத்தென்றவழியிரண்டு- மோக்ஷமார்க்கமிரண்டு, அவற்றைச்சாற்றக்கேண்மோ - அம்மார்க்கஞ்சொல்லக்கேளும்—எ-று.

(இ-ரை.) மிருதுவான நடையுள்ள அச்சத்துக்களை சகமனைத்தும் விரும்புகின்றகுணமானது கானகத்தில் ஒருகொத்தில் வேணுவினுற்செய்தபிள்ளாங்குழலினதிராகத்தினுல் களிக்கின்ற பசுவினிரையைப்போலும். இக்குணமானது சகலருக்கும் பொதுவாகச் சொல்லியதாம். இக்குணங்களிற் றனிமையாக எழுவகைப் பிறப்பையுங் கெடுப்பவர்களுக்கு மோக்ஷமார்க்கமிரண்டு. அம்மார்க்கஞ் சொல்லக்கேளும்—எனபதாம். (சு)

## சத்மார்க்கமிரண்டிற் சூளுவேன்பதையும் பளுவேன்பதையும் பகுத்துக்கூறல்.

தேசிகன்சொற்பிழையாம லனுட்டிக்கிற் பையப்பையத்தியக்கநீங்கிப், பேசியசென்மத்தாத லடுத்தசில பிறப்பினுலாதல்பேரும், மாசறுவிற்பத்திசிறி துண்டாகுமனத்தாற்றன் மனனத்தாலே, யேசறுமா காசபலம் வீழ்வதுபோன் மெய்ஞ்ஞான மெளிதிலுண்டாம்.

(இ-ள்.) தேசிகன்சொல் - ஆசாரியருபதேசவாக்கியங்கள், பிழையாமலனுட்டிக்கில் - தவறாமலற்பியாசஞ்செய்யில், பையப்பையத்தியக்கநீங்கி- மெல்லமெல்லமயக்கம்விட்டு, பேசியசென்மத்தாதல் - (ஆசாரிய) ரனுக்கிரகஞ்செய்த சென்மத்திலாவது, அடுத்த சிலபிறப்பினுல் - (அதற்கடுத்த) சில சநநங்களிலாவது, ஆதல்பெறும் - (வீ) டானதுண்டாம், மாசறுவிற்பத்தி - களங்கமற்ற விற்பன்னமானது, சிறிதுண்டாகும் - கொஞ்சமுண்டாகிய, மனத்தால் - மனதினுல், தன்மனனத்தால் - தான்மனனஞ்செய்வதினுல், ஏசறுமாகாசபலம் - குற்றமற்றவியோமக்கனியானது, வீழவதுபோல் - விழுவதைப்போல, மெய்ஞ்ஞான மெளிதிலுண்டாம் - உண்மைஞானமெளிதிற் கிடைக்கும்—எ-று.

(இ-ள.) ஆசாரிய ருபதேசவாக்கியங்கள் தவறும லற்பியா சஞ்செய்யில் மெல்லமெல்ல மயக்கம்விட்டு ஆசாரியரனுக்கிரகஞ் செய்த சென்மத்திலாவது, அதற்கடுத்த சில சநநங்களிலாவது, வீடானதுண்டாம். களங்கமற்ற விற்பன்னமானது கொஞ்சமுண்டாகிய மனதினல் தான்மனனஞ் செய்வதினல்குற்றமற்ற வியோமக்கனியானது விழுவதைப்போல உண்மைஞான மெளிதிற்கிடைக்கும்—என்பதாம்.

(இ-கூ-க-ம்.) ஆசிரியர் வாக்கியப்படி யனுசந்தித்தலும், அவ்வாக்கியத்திற் சுயவிற்பத்தியுண்டா யனுசந்தித்தலுமாகிய விரண்டையு மறிவித்ததாம். (எ)

ஞானஞ்சுளுவிலுதித்தற்குத் திருஷ்டாந்த மறிவிக்கத்தொடங்குதல்.

இவ்விரண்டிலாகாச பலம்போலமெய்ஞ்ஞான மியைந்ததன்மை. செவ்வியவள்ளான்முன்னோர் கதையாலேயான்செப்பத்திருந்தக்கேட்பாய், தெவ்வுலகிலாபத்தென் றொன்றுமிலோன்விதரணத்தோன்செல்வமிக்கோன், வவ்வியமில்விதேகனுட்டரசாள்வோன் சனகனெனு மரசர்கோமான்.

(இ-ள்.) இவ்விரண்டில் - இந்தவிரண்டு (மார்க்கத்தில்), ஆகாசபலம் போல - ஆகாயக்கனியைப்போல, மெய்ஞ்ஞானம்-தத்துவஞானமானது, இயைந்ததன்மை - பொருந்திய குணத்தை, செவ்விய வள்ளால் - நல்ல வுதாரத்தையுடைய விராமா, முன்னோர்கதையால் - முன்னடந்தவொரு கதையினல், யான்செப்ப - நான்சொல்ல, திருந்தக்கேட்பாய் - (மனந்) திருந்தும்படிகேள், தெவ் - சத்துருவினல், உலகிலாபத்தென்றொன்றுமிலோன் - சகத்திலாபத்தென்ப தொன்றுமில்லாதவன், விதரணத்தோன்-உதாரத்தை யுடையவன், செல்வமிக்கோன் - செல்வத்தின் மிகுந்தவன், அவ்வியமில் - பொறுமையில்லாத, விதேகநாடு - விதேகமென்னும் பூமியை, அரசாள்வோன் - அரசாட்சி செய்பவன், சனகனெனு மரசர்கோமான் சனகனென்னும் பெயரையுடைய விராசராசன்—எ-று.

(இ-ா.) இந்தவிரண்டுமார்க்கத்தில் ஆகாயக்கனியைப்போல தத்துவஞானமானது பொருந்திய குணத்தை நல்லவுதாரத்தையுடைய விராமா! முன்னடந்த வொருகதையினல் நான்சொல்ல மனந்திருந்தும்படிகேள். சத்துருவினல்சகத்திலாபத்தென்பதொன்றுமில்லாதவன், உதாரத்தையுடையவன், செல்வத்தின் மிகுந்தவன், பொறுமையில்லாத விதேகமென்னும் பூமியை அரசாட்சி செய்பவன், சனகனென்னும் பெயரையுடையவிராசராசன்—என்பதாம்.

## சனகராசன் பக்குவமறிவித்தல்.

*சற்குணத்தாற்கடலனையான் சக்கரத்தானெனவுலகந்தாங்கு நீரா, னற்குணஞ்செய்வசந்தநா ணறுமலர் சூழ்நந்தனத்தினயந்து மேவி, தற்குரியதந்திரர்கள் புறநிற்பத்தனியனுய்ச் சரிக்கும்வேலைச், சிற்குரியமனமுடைய சித்தர்கணம்பாடுவபண்செவியிற் கேட்டான்.*

(இ-ள்.) சற்குணத்தால் - சற்குணத்தில், கடலனையான் - சமுத்திரத்துக் கொப்பானவன், சக்கரத்தானென - விஷ்ணுவைப்போல, உலகந்தாங்குநீரான் - பூமியை ரக்ஷிக்கின்ற குணத்தையுடையவன், நற்குணஞ்செய் வசந்தநாள் - நல்லகுணங்களைச் செய்கின்ற வசந்தகாலத்தில், நறுமலர்சூழ் நந்தவனம் - வாசனையுள்ள புட்பங்கணிறைந்த சிங்காரவனத்தில், நயந்துமேவி - சந்தோடத்துடன்போய், தற்குரிய தந்திரர்கள் புறநிற்ப - தனக்குரிய மந்திரிமுதலிய சேனைகள் வெளியினிற்க, தனியனுய்ச் சரிக்கும் வேலை - தனித்துச் சஞ்சரிக்கின்றசமயத்தில், சிற்குரியமனமுடைய - சித்துக்குரித்தான மனதையுடைய, சித்தர்கணம்பாடுவபண் - சித்தர்குழாங்கள் பாடுங்கீதங்களை, செவியிற்கேட்டான் - காதிற்கேட்டான்—எ-று.

(இ-ை.) சற்குணத்தில் சமுத்திரத்துக் கொப்பானவன். விஷ்ணுவைப்போல பூமியை ரட்சிக்கின்ற குணத்தையுடையவன் நல்லகுணங்களைச் செய்கின்ற வசந்தகாலத்தில் வாசனையுள்ள புட்பங்கணிறைந்தசிங்காரவனத்தில்சந்தோடத்துடன்போய் தனக்குரிய மந்திரிமுதலிய சேனைகள் வெளியினிற்கதனித்துச் சஞ்சரிக்கின்ற சமயத்தில் சித்துக்குரித்தான மனதையுடைய சித்தர்குழாங்கள் பாடுங் கீதங்களை காதிற்கேட்டான்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) மகான்களனுபவஞ் சனகனுக்குச் சிரவணமாயிற்றென்பதாம். (க)

## இருக்குவேத மகாவாக்கியார்த்த நிரூபணம்.

*வெறியாரும் பொருப்புறைவோர் விழிப்புலத்தின்மேவாதோர் விளம்புகீத, நெறியார்மன்னவன்கேட்ட படியுரைப்பநெடியவனே நினைவிற்கொள்வா, யறிவானுமறிபொருளுங் கூடியகூட்டரவிலெழு மறிவாநந்தம், பிறியாதவான்மதத்து வத்தெழுந்ததாமதனைப் பேணல்செய்வாம்.*

(இ-ள்.) வெறியாரும் - வாசனைநிறைந்த, பொருப்புறைவோர் - மலையிலிருப்பவர்கள், விழிப்புலத்தின் மேவாதோர் - நேத்திரவிடயத்திற்

பொருந்தாத (சித்தர்கணங்கள்), விளம்புகீதம் - (தங்க ளனுபவத்தைப்) பேசாநின்ற கீதையை, நெறியார்மன்னவன் - நீதிகணிறைந்த சனகராஜன், கேட்டபடியுரைப்ப - கேட்டவண்ணமே (யாஞ்) சொல்ல, நெடியவனே - ஸ்ரீராமா, நினைவிற்கொள்வாய் - மனதிற்றரிப்பாய், அறிவானும்-ஞாதாவும், அறிபொருளும்- திரிஸ்யமும், கூடியகூட்டரவிலெழும்-கூடுங்கூட்டத்தி லுண்டாகின்ற, அறிவாநந்தம் - ஞானசுகமானது, பிறியாத - பிரிவுபடாத, ஆன்மதத்துவத்தெழுந்ததாம் - ஆத்மஞானத்தி லுண்டானதாம், அதனை - அவ்வாத்ம ஞானசுகத்தை, பேணல்வேண்டும் - விரும்பவேண்டுமென் (றொருசித்தர் சொன்னார்)—எ-று.

(இ-ள்.) வாசனைநிறைந்தமலையிலிருப்பவர்கள். நேத்திரவிடயத்திற் பொருந்தாதசித்தர்கணங்கள். தங்களனுபவத்தைப்பேசாநின்ற கீதையை நீதிகணிறைந்த சனகராசன் கேட்டவண்ணமே யாஞ்சொல்ல, ஸ்ரீராமா ! மனதிற் றரிப்பாய். ஞாதாவும் திரிஸ்யமும் கூடுங்கூட்டத்திலுண்டாகின்ற ஞானசுகமானதுபிரிவுபடாத ஆத்மஞானத்திலுண்டானதாம். அவ்வாத்மஞான சுகத்தை விரும்பவேண்டுமென் றொரு சித்தர்சொன்னார்—என்பதாம்.

(ப-ம்.) ப்ரமஞானமென்பார், அறிவானென்றும் பிரமமென்பார், அறிபொருளென்றும் இவ்விரண்டுங்கூடி நசித்தவிடத்துதித்தது கூடஸ்த பிரமமென்பார், கூட்டரவிலெழு மறிவாநந்தமென்றும் அறிவு ஆநந்தமின்றி விளங்காமையால் அவ்வறிவே யாநந்தமும் ஆநந்தம் அறிவையன்றி யாநந்தியாதபடியால் அவ்வாநந்தமே யறிவுமாய்ப் பிரிவற்று விளங்கியதானென்பார், பிரியாத வாத்மதத்துவத்தெழுந்ததாமென்றுங் கூறினர், அறிபொருளென்பதை ஈசனுருவெனக்கொள்க. (௬௦)

---

## எசுர்வேத சாமவேத மகாவாக்கியார்த்த நிருபணம்.

காண்பானுங்காண்பனவுங் காட்சியும்வாதனையுடனே கழலவிட்டுச், சேண்பாவுகாட்சிக்கு முதலொளியாமச்சொருபஞ் சிந்தைசெய்வா, மேண்பாலாமுள்ள திலதெனுமிரண்டினிடையெய்தியிறவிலாதாய், மாண்பானவொளிக்கெல்லா மொளியாய்ச்சொருபத்தை மதித்தல்செய்வாம்.

(இ-ள்.) காண்பானும் - ஞாதாவும், காண்பனவும் - திரியஸ்யமும், காட்சியும் - ஞானமும், வாதனையுடன் - வாசனையோடும், கழலவிட்டு - நீங்கச்செய்து, சேண்பாவுகாட்சிக்கு - உயர்வானபார்வைக்கு, முதலொளியாம் - முதற்ப்ரகாசமாகிய, அச்சொருபம் - அவ் (வாத்ம) ஸ்வரூபத்தை, சிந்தை செய்வாம் - தியானஞ்செய்வோமென் (றொருசித்தரும்), எண்பா

லாம் - நிலையான குணமுடைய, உள்ளதிலதெனும் - சத்தசத்தென்னும், இரண்டினிடையெய்தி - இரண்டினடுவான (வியாபகத்தை) யடைந்து, இறவிலாதாய் - முடிவில்லாததாய், மாண்பான வொளிக்கெல்லாம்-மாட்சிமையான ப்ரகாசங்களுக்கெல்லாம, ஒளியாயச்சொரூபத்தை - ப்ரகாசஞ் செய்விப்பதாகிய (வாத்மஞான) ஸ்வரூபத்தை, மதித்தல் செய்வாம்-சிந்திப்போமென்றொரு சித்தர் சொன்னார்—எ-று.

(இ-ள.) ஞாதாவும், திரிஸ்யமும், ஞானமும், வாசனையோடும் நீங்கச்செய்து உயர்வான பார்வைக்கு முதற் ப்ரகாசமாகிய அவ்வாத்ம ஸ்வரூபத்தை தியானஞ் செய்வோமென்றொரு சித்தரும்நிலையானகுணமுடைய சத்தசத்தென்னும் இரண்டினடுவான வியாபகத்தை யடைந்து முடிவில்லாததாய் மாட்சிமையான ப்ரகாசங்களுக்கெல்லாம் ப்ரகாசஞ்செய்விப்பதாகிய வாத்மஞானஸ்வரூபத்தை சிந்திப்போமென்றொருசித்தர் சொன்னார்—என்பதாம்.

(ப-ம்.) அகமென்பார் காண்பானென்றும், பிரமமென்பார், காண்பனவென்றும் அஸ்மியென்பார், காக்ஷியென்றும் இம்மூன்றினசுத்தமான சீவேஸ்வர பிரமத்தோடும், இவற்றின் சுத்தமான கூடஸ்த பிரமவயிக்கியத்தை நீக்கென்பார், வாதனையுடனே கழலவிட்டென்றும் இவையாவுமாய் விளங்குவது ஸ்வயம்ப்ரகாசமென்பார், முதலொளியாமென்றுங் கூறிப் பின்பு தற்பதமென்பார், உள்ளதென்றும்தொம்பதமென்பார், இலதென்றும் அசிபத மென்பார்இரண்டினிடை யெய்தியென்றும் இச்சீவேஸ்வர கூடஸ்த பிரமமென்கின்ற நான்கு சைதன்யமுநீங்கினசுயஞ்சைதன்யமென்பார்,ஒளிக்கெல்லா மொளியாய்ச்சொரூபமென்றுங்கூறினார். இலதென்பதைசீவசிதாபாசனென்க.

---

**அதர்வணவேத மகாவாக்கியார்த்த நிரூபணஞ்செய் திவைகளைத்தவிர வேறனுபவ'ங் கூடாதெனல்.**

அகமகமென்றனைத்துயிரி னிடத்துமிருந்தனவரத முறைப்பதாகி, நிகழொளியாயான்மதத் துவமானசொரூபத்தை நினைத்தல்செய்வாந், திகழிதயகுகையுறையுந் தேவதையை விட்டயலே தெய்வந்தேடன், மிகவரியகவத்துவத்தை யெறிந்துசிறுமணிதேடும் வேட்கைபோலாம்.

(இ-ள்.) அகமகமென்று - நானெனென்றும், அனைத்துயிரினிடத்துமிருந்து - சகலவாத்மாக்களிடத்துமிருந்து, அனவரதமுறைப்பதாகி-சதாகாலமுஞ் சொல்லுவதாய், நிகழொளியாய் - ப்ரகாசமாக விளங்காநின்ற, ஆன்மதத்துவமான சொரூபத்தை - ஆத்மஞானமாகியவஸ்துவை, நினை

த்தல்செய்வாம் - சிந்திப்போமென் (றொருசித்தர் சொன்னார்), திகழிதய குகையுறையும் - விளங்காநின்ற (தன) துளத்திலெழுந்தருளியிருக்கும், தேவதையைவிட்டு - தெய்வத்தைவிட்டு, அயலேதெய்வந்தேடல் - வேறானதெய்வந்தேடுதல், மிகவரிய கவத்துவத்தையெறிந்து - மிகவுமருமையான (கையிலிருக்குங்) கவஸ்துவ ரத்தினத்தையெறிந்து, சிறுமணிதேடும் - சங்குமணிதேடுகின்ற, வேட்கைபோலாம் - ஆசையை யொத்திருக்கும்—எ-று.

(இ-ள.) நானுனென்றும் சகல வாத்மாக்களிடத்து மிருந்து சதாகாலமுஞ் சொல்லுவதாய் ப்ரகாசமாக விளங்காநின்ற ஆத்ம ஞானமாகிய வஸ்துவை சிந்திப்போமென்றொரு சித்தர்சொன்னார் விளங்காநின்ற தனதுளத்தி லெழுந்தருளியிருக்கும் தெய்வத்தை விட்டு வேறான தெய்வந்தேடுதல் மிகவு மருமையான கையிலிருக்குங் கவஸ்துவரத்தினத்தையெறிந்து சங்குமணிதேடுகின்றஆசையையொத்திருக்கும்—என்பதாம்.

(ப-ம்.) அயமென்பார், அகமகமென்றனைத்துயிரி னிடத்திருந்தென்றும் ஆத்மாவென்பார், அனைத்துயிரென்றும் இவ்விரண்டாகியும் விளங்குகின்ற பிரமமென்பார், திகழொளியா மாத்துமதத்துவமான சொரூபமென்றுங் கூறினார், அனைத்துயிரினிடத்து மிருந்தென்றதை ஈஸ்வரபதமெனக்கொள்க. (கஉ)

## நிராசையுள்ளவர்க்கிவ்வனுபவங் கிடைக்குமேயன்றி யஃதில்லாதவர்க் கின்றெனல்.

மாளாதகாதலெனும் வர்ச்சனுபிக்கொடியின் வனத்தைச்சுட்டு, நீளாசையனைத்துமறுத் தவர்க்கன்றேயிப்பயன்றா னேரா நிற்குங், கோளானபொருளனைத்தின் முன்பொடுபின்பினிமையி லாக் குற்றங்கண்டு, மீளாதபாவனையாற் கட்டுண்பார்வேசரியே வேறொன்றன்றால்.

(இ-ள்.) மாளாதகாதலெனும் - முடிவில்லாதவாசையென்கின்ற, வர்ச்சனுபிக்கொடியின் - விடவல்லியின், வனத்தைச்சுட்டு - காட்டையெரித்து, நீளாசையனைத்தும் - மிகுந்த விச்சைகளியாவையும், அறுத்தவர்க்கன்றே - கெடுத்தவர்களுக்கல்லவா, இப்பயன்றான் - இவ்வாத்மவிலாபமானது, நேராநிற்கும் - கிடைக்கும், கோளானபொருளனைத்தின் - தீமையானவஸ்துக்களனைத்திலும், முன்பொடுபின்பி னிமையிலா - முன்னும் பின்னு மின்பமில்லாமலிருக்கின்ற, குற்றங்கண்டும் - குற்றத்தைப் பார்த்திருந்தும், மீளாதபாவனையால் - திரும்பாத பாவனையினால், கட்டுண்பார் - பந்தப்படுபவர்கள், வேசரியே - கற்றப (மேயல்லாமல்) வேறொன்றன்று - வேறொன்றுமல்ல—எ-று.

(இ-ஸா.) முடிவில்லாத வாசையென்கின்ற விடவல்லியின் காட்டையெரித்து மிருந்த விச்சைகளியாவையும் கெடுத்தவர்களுக்கல்லவா ? இவ் வாத்மவிலாபமானதுகிடைக்கும். தீமையானவஸ்துக்களனைத்திலும் முன்னும் பின்னு மின்பமில்லாமலிருக்கின்ற குற்றத்தைப் பார்த்திருந்தும் திரும்பாத பாவனையினுல் பந்தப்படுபவர்கள் கழுபமேயல்லாமல் வேறொன்றுமல்ல—என்பதாம். ()

## மனது விடயசுகத்தை நீக்கிப் பிரமசுகத்தையடைய வேண்டு மெனல்.

எழுந்தெழுந்துசீறுகின்ற யிந்திரியப்பாம்புகளை யிதயந்தன்னி, லழுந்துவிவேகத்தடியால் வச்சிரங்கொண்டிந்திரன்வெற்படர்வதென்ன, விழுந்திடமோதுறவேண்டுஞ் சாந்தியினுற்சமமேவியிடர்தீர்நெஞ்ச, முழுந்துசுகவடிவாந்தற் பதநிலையைப்பெறுமிதுவே முத்தியென்ன.

(இ-ள்.) எழுந்தெழுந்து சீறுகின்ற - எழும்பியெழும்பி சீறுகின்ற, இந்திரியப்பாம்புகளை - இந்திரியமென்னுஞ் சற்பங்களை, இதயந்தன்னில்- மனதினிடத்தில், அழுந்துவிவேகத்தடியால் - உறுதியான விவேகமென்னுந் தண்டினுல், இந்திரன் - தேவேந்திரன், வச்சிரங்கொண்டு - வச்சிராயுதத்தைக்கொணடு, வெற்படர்வதென்ன-மலைகளைப்புடைப்பதுபோல, விழுந்திடமோதுறவேண்டும் - கெடும்படியாக வடிக்கவேண்டும், சாந்தியினுற்சமமேவி - உபசாந்தத்தினுற் சமபாவத்தையடைந்து, இடர்தீர் நெஞ்சம் - துன்பமில்லாத மனமானது, முழுந்து சுகவடிவாம் - முழுதுஞ் சுகாகாரமானது, தற்பதநிலையைப்பெறும் - தனதாத்மஸ்வரூப ஸ்திதியைப்பெறும், இதுவே முத்தியென்ன - இதுவே மோக்ஷமென்று (பலசித்தர்) சொன்னுர்கள்—எ-று.

(இ-ஸா.) எழும்பியெழும்பி சீறுகின்ற இந்திரியமென்னுஞ் சற்பங்களை மனதினிடத்தில் உறுதியான விவேகமென்னுந்தண்டினுல் தேவேந்திரன் வச்சிராயுதத்தைக்கொண்டு மலைகளைப் புடைப்பதுபோலக் கெடும்படியாக வடிக்கவேண்டும். உபசாந்தத்தினுற் சமபாவத்தை யடைந்து துன்பமில்லாத மனமானது முழுதுஞ் சுகாகாரமான தனதாத்மஸ்வரூப ஸ்திதியைப்பெறும். இதுவே மோக்ஷமென்று பலசித்தர் சொன்னுர்கள்—என்பதாம்.

முழுதுமென்பது முழுந்தெனவிகாரமாயிற்று. (இ-ரு-க-ப்.) நிட்காம புண்ணிய பரிபாகத்தினுற் சித்தசுத்தியும், அச்சித்தசுத்தியாற் சாதனசதுஷ்டயமும், அச்சாதனசதுஷ்டயத்தான் முத்தியையடைவதற்கதிதீவரமுமுண்டா யேகாந்தனுயிருக்குஞ்சமயத்தி லாதிவாஹிக சரீரியான சித்தர்க

ஞசாவிக்கொண்டிருந்த மகாவாக்கியார்த்தங்க ளவனுக்குச் சிரவணமாய் அதனுன்மனன நிதித்தியாசனஞ் சமாதி சாக்ஷாத்கார முண்டாகும்பொருட் டாத்மவிசாரத்தை யறிவே குருவாய் நின்றுணர்த்தியதாம். (கச)

## அவ்வனுபவம் விளங்குநிமித்தம் விசாரத்திற் காரம்பித்தல்.

**தெளிவுடையசித்தர்கணந் திகழ்வுறப்பாடியகீதந் தெளியக்கேட்டுக், களிதருவெஞ்சினக்கருட னொலிகேட்டபாம்பென்னக் கலங்கிமன்னன், குளிர்பொழினின்றகமடைந்தா னனைவரையும் விடைகொடுத்துக் கோயில்புக்கா, னளிர்சுதைசெய்மேனிலத்தி லொருவனேயிருந்துநனி நாடலுற்றான்.**

(இ-ள்.) தெளிவுடையசித்தர்கணம் - தெளிவையுடையசித்தர்குழாங்கள், திகழ்வுற - விளக்கமாக, பாடியகீதம் - பேசிய வனுபவார்த்தங்களை, தெளியக்கேட்டு - தெளிவாகக்கேட்டு, களிதரு - செருக்குகின்ற, வெஞ்சினக்கருடன் - கொடியகோபமுள்ள கருடனது, ஒலிகேட்டபாம்பென்ன - சத்தத்தைக்கேட்ட சற்பத்தைப்போல, மன்னன்கலங்கி - சனகராசன்கலக்கமுற்று, குளிர்பொழினின்று - குளிர்ச்சிபொருந்திய சிங்காரவனத்திலிருந்து, அகமடைந்தான்-தனதரண்மனைக்குவந்து, அனைவரையும்விடைகொடுத்து - மந்திரிமுதலிய யாவர்க்கு முத்தரவுகொடுத்து, கோயில்புக்கான் - தனது வீட்டிற்புகுந்து, நளிர்சுதைசெய் - குளிர்ந்த சுண்ணச்சாந்தினாற்செய்த, மேனிலத்தில் - மேலுப்பரிகையில், ஒருவனேயிருந்து-தனியனாயிருந்து, நனிநாடலுற்றான் - (முன் சிரவணமான வருத்தத்தை) மிகவும் விசாரிக்கத்தொடங்கினான்—எ-று.

**(இ-ரை.) தெளிவையுடைய சித்தர்குழாங்கள் விளக்கமாக, பேசிய வனுபவார்த்தங்களை தெளிவாகக்கேட்டு செருக்குகின்ற கொடியகோபமுள்ள கருடனது சத்தத்தைக்கேட்ட சற்பத்தைப்போல சனகராசன் கலக்கமுற்று குளிர்ச்சிபொருந்திய சிங்காரவனத்திலிருந்துதனதரண்மனைக்குவந்து மந்திரிமுதலிய யாவர்க்கு முத்தரவுகொடுத்து தனது வீட்டிற்புகுந்து குளிர்ந்த சுண்ணச்சாந்தினாற்செய்த மேலுப்பரிகையில் தனியனாயிருந்து முன் சிரவணமான வருத்தத்தைமிகவும் விசாரிக்கத்தொடங்கினான்-எ-ம்.**

(இ-ம்.) ஆத்மாநாத்மவிசாரணைசெய்யத் தொடங்கினதாம். (கரு)

## லோகாகாசார தூடணம்.

**பறக்கின்றபறவைகளின் சிறகென்னவனவரதம் பதைத்துலாவி, யிறக்கின்றவுலகருடை நோக்கிவாய்விட்டிரங்கி யியம்பலு**

**ற்று, னதக்கன்றியவற்றிலுழன் றலமருமிவ் வுலகிடையானந்தோ வந்தோ, நிறக்கின்றமயக்கத்தாற் கல்லிடைகற்போதுருண்டு நெரிந்தேனந்தோ.**

(இ-ள்.) பறக்கின்றபறவைகளின்சிறகென்ன - பறக்கின்ற பக்ஷிகளினிறகைப்போல, அனவரதம்பதைத்துலாவி - சதாகாலமும் பதைத்தலைந்து, இறக்கின்றவுலகநடைநோக்கி - நசிக்கின்ற சகத்தினடையைப்பார்த்து, வாய்விட்டிரங்கி - வாய்விட்டழுது, இயம்பலுற்றான் - சொல்லத்தொடங்கினான், அறக்கன்றி - மிகவுநைந்து, அவத்திலுழன்று - அவத்தைகளிற் சுழன்று, அலமருமிவ்வுலகிடை - சஞ்சலப்படு மிச்சகத்தினிடத்தில், யான் - நான், அந்தோவந்தோ - ஆச்சரியமாச்சரியம், நிறக்கின்ற மயக்கத்தால்-அதிகரிக்கு மயக்கத்தினால், கல்லிடைக்கற்போல்- (பெருங்) கல்லின் மத்தியிலுற்ற (பொடிக்) கற்களைப்போல, அந்தோ வுருண்டுநெரிந்தேன் - அதிசயஞ் சுழன்று வருந்தினேன்—எ-று.

**(இ-சை.) பறக்கின்ற பக்ஷிகளினிறகைப்போலசதாகாலமும் பதைத்தலைந்து நசிக்கின்ற சகத்தினடையைப் பார்த்து வாய்விட்டழுது சொல்லத் தொடங்கினான். மிகவுநைந்து அவத்தைகளிற் சுழன்று சஞ்சலப்படு மிச்சகத்தினிடத்தில் நான் ஆச்சரிய மாச்சரியம்! அதிகரிக்கு மயக்கத்தினால் பெருங்கல்லின் மத்தியிலுற்ற பொடிக்கற்களைப்போல அதிசயஞ்சுழன்று வருந்தினேன்-எ-ம். ()**

## ஆயுடேணம்.

**காலமொருகான்முடியா திதனிடையெண் ணூறுண்டோர் கணமுமில்லைச், சாலவிது தனைமதித்து வன்காத லிடைவீழ்ந்து தளர்வதேனான், றாலமதியாற்கெட்ட வெனைப்போலவீனரார்சொல்லற்பாற்றே, சீலமறுவாணுளைப் பெரிதாகநினைவதேசீசீயந்தோ.**

(இ-ள்.) ஒருகாண்முடியாது - ஒருகாலமு முடியாமலிருக்கின்ற, காலதத்துவமான, இதனிடை - இதனிடத்தில், எண்ணூறுண்டு - எண்ணிக்கையுள்ள (வெனதாயுளென்னு) நூறுவருடமானது, ஓர்கணமுமில்லை - ஒருக்ஷணநேரமுமில்லை, இதுதனை - இந்தவாயுளை, சாலமதித்து - மிகவும் பெரிதாக நிச்சயித்து, வன்காதலிடைவீழ்ந்து - வலிமையுள்ள வாசையினிடத்தில் விழுந்து, நான்றளர்வதேன் - யான்றளர்ச்சியடைவதென்ன, தூலமதியாற்கெட்ட - தூலபுத்தியினாற்கெட்ட, எனைப்போல வீனரார்- என்னைப்போலவிழிவுள்ளவர்களார், சொல்லற்பாற்றே - கூறத்தக்கதோ,

சீலமறுவாணூளை - ஒழுங்கில்லாதவாயுளை, பெரிதாகநினைவது - கனமாக நினைவது, அந்தோ சீசீ - ஐயோ சை சை—எ-று.

(இ-ரை.) ஒருகாலமு முடியாமலிருக்கின்ற காலதத்துவமான இதனிடத்தில் எண்ணிக்கையுள்ள வெனதாயுளென்னு நூறுவருடமானது ஒருக்ஷண நேரமுமில்லை, இந்த வாயுளை மிகவும் பெரிதாக நிச்சயித்து வலிமையுள்ள வாசையினிடத்தில் விழுந்து யான் றளர்ச்சியடையவதென்ன தூலபுத்தியினுற்கெட்ட என்னைப்போல விழிவுள்ளவர்களார்? கூறத்தக்கதோ ஒழுங்கில்லாத வாயுளை கனமாக நினைவது ஐயோ சை சை—என்பதாம். (கஎ)

## இராசபோக தூடணம்.

எல்லையிலாவண்டத்திலியானுளும்புவிநோக்கி லிறையுமில்லை, யல்லலுறுமிதுபெரிதா வாதரித்துநிற்பதே யந்தோவந்தோ, புல்லிமையத்தினிதாகி யுதாரமாச்செயப்படாப் பொருளீதென்னத், தொல்லுலகிலொருபொருளுங் காணேனித்தொடர்ச்சிநிலை யென்னேயென்னே.

(இ-ள்.) எல்லையிலாவண்டத்தில் - அளவில்லாத வடங்களில், யானுளும் புவிநோக்கில் - நானுளுகின்ற பூமியைப்பார்க்குமளவில், இறையுமில்லை - அணுவளவுமில்லை, அல்லலுறுமிது-துன்பம்பொருந்தாநின்ற விச்சகத்தை, பெரிதா யாதரித்து - பெரியதாகவிரும்பி, நிற்பதே யந்தோவந்தோ - நிற்கின்றதே யாச்சரியமாச்சரியம், புல்லிமையத்து - பொருந்துகின்ற விமைப்பில், இனிதாகி - இனிமையாகியும், உதாரமாய் - உதாரமாகியும், செயப்படா - செய்யப்படாததாகியு மிருக்கின்ற, பொருளீதென்ன - பொருளிதுவென்று சொல்லும்படியான, தொல்லுலகில் - பழமையாகிய சகத்தில், ஒருபொருளுங் காணேன் - ஒரு வஸ்துவையாவது கண்டிலன், இத்தொடர்ச்சி நிலை - இத்தொடர்பாகிய் தன்மை, என்னே யென்னே - என்ன வதிசயம்—எ-று.

(இ-ரை.) அளவில்லாத வண்டங்களில் நானுளுகின்ற பூமியைப் பார்க்குமளவில் அணுவளவுமில்லை துன்பம் பொருந்தாநின்ற விச்சகத்தைப் பெரியதாகவிரும்பி நிற்கின்றதே யாச்சரியமாச்சரியம்! பொருந்துகின்ற விமைப்பில் இனிமையாகியும், உதாரமாகியும், செய்யப்படாததாகியுமிருக்கின்ற பொருளிதுவென்று சொல்லும்படியான பழமையாகியசகத்தில் ஒருவஸ்துவையாவது கண்டிலன், இத்தொடர்பாகிய தன்மை என்ன வதிசயம்-எ-ம். ()

## போகதூடணம்.

தலைவர்தலைமேலுறைவோர் நாட்களினற் ருழ்ந்தோர்க்குத் தாழவீழ்வர், நிலையில் பெருமையையுறுதி நினைக்கின்ற நெஞ்சே யின் னினைவீதென்னே, தொலைவில்பெரும்போகங்கள் பெரியோர்கள்கிளையோடுந் தோன்றித்தோன்றி, வுலவுறமாண்டார் முன்னுளின்னுளிங்கிவையனைத்தி னுறுதியென்னே.

(இ-ள்.) தலைவர் - மேலானவர்களுக்கு, தலைமேலுறைவோர்-மேலா யிருப்பவர்களும், நாட்களினல் - தினங்களினல், தாழ்ந்தோர்க்குத் தாழ வீழ்வர் - கீழ்ப்பட்டவர்களுக்குங் கீழாவார்கள், நிலையில்பெருமையை - (இப்படி) நிலையில்லாத செல்வத்தை, உறுதி நினைக்கின்ற நெஞ்சே - உறு தியாக நினைக்கின்றமனமே, இன்னினைவீதென்ன - இன்னினைப்பென்ன காரணம், தொலைவில் பெரும்போகங்கள் - நீங்காத மகாபோகங்களும், பெரியோர்கள் - மகான்களும், கிளையோடும் - சுற்றத்தோடும், தோன்றித் தோன்றி - உண்டாகி யுண்டாகி, முன்னுள் - முற்காலம், உலைவுறமாண் டார் - சஞ்சலமுற்றிரந்தார்கள், இன்னுள் - இப்பொழுது, இங்கிவையனை த்தின் - இவ்விடத்திலுள்ள வஸ்துக்க ளியாவினும், உறுதியென் - நிச்சய மென்ன—எ-று.

(இ-ரை.) மேலானவர்களுக்கு மேலாயிருப்பவர்களும் தினங் களினல் கீழ்ப்பட்டவர்களுக்குங் கீழாவார்கள். இப்படி நிலையில் லாத செல்வத்தை உறுதியாக நினைக்கின்ற மனமே இன்னினைப் பென்ன காரணம். நீங்காத மகாபோகங்களும் மகான்களும் சுற்ற த்தோடும் உண்டாகியுண்டாகி முற்காலம் சஞ்சலமுற்றிரந்தார்கள் இப்பொழுது இவ்விடத்திலுள்ள வஸ்துக்களியாவினும் நிச்சய மென்ன—என்பதாம். (ககூ)

## பிரமன்முதலியோர் பெருஞ்செல்வதூடணம்.

மண்ணுடுமன்னவரு மவர்தனமுமாண்டனனுண் மணலையொக்கும், விண்ணுடுமிந்திரரு மவர்வாழ்வும் போயினவிண்மீனையொக்கு, மெண்ணுடும்பிரமருமண் டமும்பூதங்களுமிறந்த வெல்லையிலைக், கண்ணுடுமவையெங்கே நின்வாழ்க்கைநிலை யென்னே கவலு நெஞ்சே.

(இ-ள்.) மண்ணுடும் - பூலோகமும், மன்னவரும் - (அதையாளு) மர சர்களும், அவர் தனமும் - அவரது செல்வங்களினும், மாண்டன - நசித்த வைகள், நுண்மலையொக்கும் - நுட்பமான மணலுக்கொப்பாகும், விண் ணுடும் - தெய்வலோகமும், இந்திரரும் - (அதற்கரசராகிய) தேவேந்திரர்

களும், அவர்வாழ்வும் - அவரது செல்வங்களும், போயின '- மரித்தவைகள், விண்மீனையொக்கும் - ஆகாயத்தினுடுக்களை யொத்திருக்கும், எண்ணுடும் - எண்ணிக்கையுள்ள சகங்களும், பிரமரும் - பிரமர்களும், அண்டமும் - அண்டங்களும், பூதங்களும் - சீவகோடிகளும், இறந்தவெல்லையில்லை - நசித்த தளவில்லை, கவலுநெஞ்சே-வருத்துமனமே, கண்ணுடுமவையெங்கே - பார்க்கப்பட்டவைகளெங்கே, நின்வாழ்க்கை நிலையென்னே - உனது வாழ்க்கையினது நிலையெங்கே—எ-று.

(இ-ள.) பூலோகமும் அதையாளு மரசர்களும், அவரது செல்வங்களும், நசித்தவைகள் நட்பமான மணலுக்கொப்பாகும். தெய்வலோகமும் அதற்கரசராகிய தேவேந்திரர்களும் அவரது செல்வங்களும் மரித்தவைகள் ஆகாயத்தினுடுக்களை யொத்திருக்கும். எண்ணிக்கையுள்ள சகங்களும் பிரமர்களும் அண்டங்களும் சீவகோடிகளும் நசித்ததளவில்லை. வருத்து மனமே! பார்க்கப்பட்டவைகளெங்கே உனது வாழ்க்கையினது நிலையெங்கே-எ-ம்.

## காலதூடணம்.

செல்லாதமாயையிரு ளிரவிலேதேகமயத் தியக்கமான, பொல்லாத நீள்கனவாஞ் சூனியத்தி லிச்சையிறை பூண்டேனென்னிற், கல்லாதபுல்லியனேன் சீசீநானனவரதங் காணுநாட்க, ளெல்லாம் போயினபோமா லிறவாதொன் றுய்நன்றுமெழினட்காணேன்.

(இ-ள்.) செல்லாதமாயை - ஓர்பொருளாகச்செல்லாத மாயையென்னும், இருளிரவில்-இருண்டவிராத்திரியில், தேகமயத்தியக்கமான தேகாதார மயக்கமென்னும், பொல்லாத நீள்கனவாம் - கொடிய நீண்ட சொற்பனமாகிய, சூனியத்தில்-மித்தையில், இச்சையிறை பூண்டேனென்னில்- ஆசையற்பம் வைத்தேனுயின், கல்லாதபுல்லியனேன் - கற்காத கீழ்மகனுனேன், சீசீ - சைசை, நானனவரதம் - யானெப்போதும், காணுநாட்களெல்லாம் - காண்கின்ற காலங்களனைத்தும், போயினபோம் - நசித்தேபோகும், இறவாதொன்றும் - நசியாமலொன்றுவது, நன்றுமெழினட்காணேன் - நன்மை பொருந்திய வழகுள்ள காலத்தைப் பார்த்திலேன்.

(இ-ளா.) ஓர் பொருளாகச் செல்லாத மாயையென்னும்இருண்ட விராத்திரியில் தேகாகார மயக்கமெ ்னும் கொடியநீண்ட சொற்பனமாகிய மித்தையில் ஆசையற் ம் வைத்தேனுயின் கற்காத கீழ்மகனுனேன். சை சை யானெப்போதும் காண்கின்ற கால

ங்களனைத்தும் நசித்தே போகும். நசியாமலொன்றுவது நன்மை பொருந்திய வழகுள்ள காலத்தைப்பார்த்திலேன்—என்பதாம். ()

## தனதூடணம்.

நடுவின்முடிவினிலடியி னன்றனபொருளொன்று ஞாலத்தில்லைப், படுபொருளெல்லாமிறப்பாமலத்தினுலேபூசப்பட்டதன்றே, கடுவினைகளுடோறுங் காய்துயரநாடோறுங்கரையொன்றில்லாக், கொடுமைகளே நாடோறுஞ் செய்கின்றாரறிவிலார்குரம்பைக் கூத்தால்.

(இ-ள்.) நடுவில் - மத்தியிலாவது, முடிவினில் - அந்தத்திலாவது, அடியில் - ஆதியிலாவது, நன்றான பொருளொன்றும் - நன்மையாகிய வஸ்துக்களொன்றுவது, ஞாலத்தில்லை - பூமியிலில்லை, படுபொருளெல்லாம் - உண்டான வஸ்துக்களியாவும், இறப்பாமலத்தினுல் - நாசமென்னு மலத்தினுல், பூசப்பட்டதன்றே - தடவப்பட்டதல்லவா, நாடோறும் - தினங்கடோறும், கடுவினைகள் - கடுமையான பாவவிருத்திகளையும், நாடோறும் - நாள்கடோறும், காய்துயரம் - வருத்துகின்ற துன்பங்களையும், நாடோறும் - நாள்கடோறும், கரையொன்றில்லாக் கொடுமைகள் - ஓர் வரம்பின்றிய தீமைகளையும், அறிவிலார் குரம்பைக் கூத்தாற்செய்கின்றார் - மூடர்கள் சரீர நடனத்தாற் செய்கின்றார்கள்—எ-று.

(இ-ரை.) மத்தியிலாவது அந்தத்திலாவது ஆதியிலாவது நன்மையாகிய வஸ்துக்களொன்றுவது பூமியிலில்லை. உண்டானவஸ்துக்களியாவும் நாசமென்னு மலத்தினுல் தடவப்பட்டதல்லவா தினங்கடோறும் கடுமையான பாவவிருத்திகளையும் நாள்கடோறும் வருத்துகின்ற துன்பங்களையும் நாள்கடோறும் ஓர் வரம்பின்றிய தீமைகளையும் மூடர்கள் சரீரநடனத்தாற் செய்கின்றார்கள்-எ-ம்.

### புறப்பொருளை நியதிகளைந் தீதற்காதாரமான புறம்பிலுள்ள தேகத்தை நியதிசெய்வான் அதன்பருவங்களைத் தூடித்தல்.

பாலகனுயஞ்ஞானத் தழுந்துவனற்காளையாய்ப் பாவைமாரற், சாலவருந்துவன்விருத்தன்றுணைக்குடும்பத்தாற் றளர்ந்து சாவன், மேலவிவனெக்காலத் தென்செய்வான்மாயக்கூத்திருந்தவாறே, ஞாலமெலாமாடரங்காய்ப் பொறிமேளமாய் மனப்பேய் நடிக்குமன்றே.

(இ-ள்.) பாலகனாய்-பாலப்பருவனாய், அஞ்ஞானத்தழுந்துவன் - அஞ் ஞானத்தி லழுந்துவான், நறகாளையாய்-நல்லவெவ்வனப்பருவனாய்,பாவை யாரால் - ஸ்திரீகளால், சாலவருந்துவன் - மிகவும் வருத்தப்படுவான், விருத்தன்றானகி - மூப்புப்பருவமுடையவனாய், குடும்பத்தால் - சம்சாரத் தினால், தளர்ந்துசாவன் - தளர்ந்து மரணமடைவான், மேலவிவன்-மேலி வன், எக்காலத்து - எந்தக்காலத்தில், என்செய்வான் - என்ன (சற்கிருத் தியத்தைச்) செய்வான், மாயக்கூத்திருந்தவாறு - மாயையினடன மிருந்த வித (மென்ன), ஞாலமெலாமாடரங்காய் - சகங்களனைத்து நடனசபை யாகவும், பொறிமேளமாய் - இந்திரியம் (பல) வாத்தியங்களாகவும், மன ப்பேய்நடிக்கும் - மனப்பாச நடனஞ்செய்யும்—எ-று.

(இ-ரை.) பாலப்பருவனாய் அஞ்ஞானத்தி லழுந்துவான் நல்ல வெவ்வனப்பருவனாய் ஸ்திரீகளால் மிகவும் வருத்தப்படுவான். மூ ப்புப்பருவமுடையவனாய் சம்சாரத்தினால் தளர்ந்து மரணமடை வான். மேலிவன் எந்தக்காலத்தில் என்னசற்கிருத்தியத்தைச் செ ய்வான். மாயையினடன மிருந்தவிதமென்ன? சகங்களனைத்தும் நடனசபையாகவும் இந்திரியம் பலவாத்தியங்களாகவும் மனப்ப சாச நடனஞ்செய்யும்—என்பதாம். (௨௩)

---

அறம்பொருளின்பத்தைநோக்கி

யாவையுங் குற்றமுள்ள வஸ்துக்களெனத் தள்ளுதல்.

உள்ளத்தின்முடிமேலே யில்லாமைவீற்றிருக்கு முலகிலென் றும், தெள்ளுற்றநல்லறத்தின் சிரத்திலேயெப் பொழுதுந்தீமைவா ழு, மெள்ளுற்றவின்பத்தின் றலைமேலேதுன்பங்க ளிருக்குமென் றால், கொள்ளத்தக்கனவான குற்றமிலாப்பொருளேது குறிப்பு ளேற்கே.

(இ-ள்.) உள்ளத்தின் முடிமேல் - சத்தினது சிரசின்மேல், இல்லா மை வீற்றிருக்கும் - அசத்துவீற்றிருக்கும், உலகிலென்றும்-சகத்திலெப் பொழுதும், தெள்ளுற்ற நல்லறத்தின்சிரத்தின் - தெளிந்த நல்லதருமத் தின்முடியில், எப்பொழுதுந் தீமைவாழும் - சதாகாலமும் பொல்லாங்கு வாழ்ந்துகொண்டிருக்கும், எள்ளற்றவின்பத்தின் றலைமேல் - இகழ்ச்சி யற்ற வின்பத்தினது சிரசின்மேல், துன்பங்களிருக்குமென்றால் - துக்கங் களிருக்குமேயானால், குறிப்புளேற்கு - (இக்) குறிப்புள்ள வெனக்கு, கொள்ளத்தக்கனவான - கொள்ளத்தகுதியவான, குற்றமிலாப்பொரு ளேது - குற்றமற்ற வஸ்துவெது—எ-று.

(இ-ரை.) சத்தினதுசிரசின்மேல் அசத்து வீற்றிருக்கும். சக த்தி லெப்பொழுதும் தெளிந்த நல்லதருமத்தின் முடியில்சதாகால

மும் பொல்லாங்கு வாழ்ந்துக்கொண்டிருக்கும். இகச்சியற்ற வின் படத்தினதுசிரசின்மேல் துக்கங்களிக்குமேயானால், இக்குறிப்புள்ள வெனக்கு கொள்ளத்தகுதியவானகுற்றமற்ற வஸ்துவெது—எ-ம்.

## மனமே சுகதுக்கமா மென்பதை விசாரித்தல்.

விழிப்பதுவு மிமைப்பதுவுஞ் சகத்தோற்ற மொடுக்கமாமே லோருண்டாற், பழிப்பரியவன்னார்முன் னென்போல்வாரென்னென்று பகரலாவ, ரிழிப்பரிய விசித்திரமாஞ் சம்பத்துமாபத்தாமிதயங்காயி,லொழிப்பரிய விசித்திரமா மாபத்துஞ்சம்பத்தாமுள்ளம்வேண்டில்.

(இ-ள்.) விழிப்பதுவு மிமைப்பதுவும் - (கண்) விழிக்கின்றது மூடுகின்றதும், சகத்தோற்றமொடுக்கமாம் - சகத்தினுற்பத்திலயமாகப்பெற்ற, மேலோருண்டால் - மேலானபிரமாதிக ளுண்டாயிருக்கின்றதால், பழிப்பரியவன்னாமுன் - நிந்திக்கப்படாத வத்தன்மையுள்ளவர்கண்முன்பு, என்போல்வார் - என்னையொத்தவர்கள், என்னென்றுபகரலாவ - என்னவென்று சொல்லப்படுவார்கள், இழிப்பரிய - இழிவுசொல்லுதற் கரிதாயிருக்கின்ற, விசித்திரமாஞ் சம்பத்தும்-அதிசயமான சம்பத்துகளும், இதையங்காயில் - மனதுவருந்தினல், ஆபத்தாம் - ஆபத்துக்களாம், ஒழிப்பரிய- நீக்குதற்கரிய, விசித்திரமாமாபத்தும் - அதிசயமானவாபத்துகளும், உள்ளம்வேண்டில் - மனதுவிரும்பினல், சம்பத்தாம் - சம்பத்தாகும்—எ-று.

(இ-ளா.) கண்விழிக்கின்றது மூடுகின்றதும் சகத்தினுற்பத்திலயமாகப்பெற்ற மேலான பிரமாதிகளுண்டாயிருக்கின்றதால் நிந்திக்கப்படாத வத்தன்மையுள்ளவர்கண்முன்பு என்னையொத்தவர்கள் என்னவென்று சொல்லப்படுவார்கள். இழிவுசொல்லுதற் கரிதாயிருக்கின்ற அதிசயமான சம்பத்துகளும் மனதுவருந்தினல் ஆபத்துக்களாம். நீக்குதற்கரிய அதிசயமானவாபத்துகளும் மனதுவிரும்பினல் சம்பத்லாகும்—என்பதாம். (உரு)

## மாயாகாரணமனதே யாமென்பதை மன்னித்தல்.

வெம்மாய வாழ்வன்றேதுயர்க்கெல்லாம் பிறப்பிடமாய்விளம்புகின்ற, தம்மாவிங் கிதனிடையே யழுந்துமவர்க்கின்பமுள தாவதெங்ஙன் மைம்மாயை யென்னுமரம் பணையிலைபூக்காய்பழத்தால் வரம்பற்றோங்க, விம்மால்செய் மனம்வேராமிம்மனந்தான் சங்கற்ப மென்பதாகும்.

(இ-ள்.) வெம்மாயவாழ்வன்றோ - வெப்பமுள்ள சம்சாரவாழ்க்கையல்லவா, துயர்க்கெல்லாம்-துன்பங்களனைத்திற்கும், பிறப்பிடமாய் - உற்பத்திஸ்தானமாய், விளம்புகின்றது - சொல்லப்படுகின்றது, அம்மா - ஆச்சரியம், இதனிடை-இந்தச்சகத்தினிடத்தில், அழுந்துமவர்க்கு - முழுகுகின்ற வுயிர்களுக்கு, இன்பமுளதாவதெங்ஙன் - இன்பமுண்டாவதெப்படி, மைம்மாயை யென்னுமரம் - அஞ்ஞானமாகிய சம்சாரமென்கின்ற விருக்ஷமானது, பணையிலைபூக்காய்பழத்தால் - கிளைபத்திரபுட்ப காய்கனிகளாலும், வரம்பெற்றோங்க - அளவில்லாமல் வளரும்படிமாக, இம்மால்செய்-இந்தமயக்கஞ்செய்கின்ற, மனம்வேராம் - மனமேவேராகும், இம்மனந்தான் - இம்மனதுதான், சங்கற்பமென்பதாகும் - சங்கற்பமென்று சொல்லப்படும்—எ-று.

(இ-தா.) வெப்பமுள்ள சம்சாரவாழ்க்கையல்லவா? துன்பங்களனைத்திற்கு முற்பத்தி ஸ்தானமாய் சொல்லப்படுகின்றது. ஆச்சரியம்! இந்தச் சகத்தினிடத்தில் முழுகுகின்றவுயிர்களுக்கு இன்பமுண்டாவதெப்டி? அஞ்ஞானமாகிய சம்சாரமென்கின்ற விருக்ஷமானது கிளைபத்திரபுட்ப காய்கனிகளாலும் அளவில்லாமல் வளரும்படியாகஇந்த மயக்கஞ்செய்கின்றமனமே வேராகும். இம்மனதுதான் சங்கற்பமென்றுசொல்லப்படும்—என்பதாம். (உ௪)

---

## மனதை நிதித்தியிற் காக்ஷிப்படுத்தல்.

சங்கற்பநாசத்தா லெளிதாகமனநாசந் தானேயெய்து, மங்குற்றமனமிறக்கிற் சநநமரணங்களெனு மரமுமாயு, மிங்கிப்பாலெனைத்திருடுங் கள்ளனைக்கண்டேன்கண்டே னிவன்பேர்நெஞ்சம், பொங்குற்றநெஞ்சத்தா னெடுநாணொந்தேனின்று பொன்றுவிப்பேன்.

(இ-ள்.) சங்கற்பநாசத்தால் - சங்கற்பநாசத்தினால், எளிதாக மனநாசந்தானேயெய்தும் - சுலுவாக மனோநாசம் வலியவரும், மங்குற்ற மனமிறக்கில் - கேடுற்ற (வேரான) மனமானதிறந்தால், சநநமரணங்களெனும்-பிறப்பிறப்பென்கின்ற, மரமுமாயும் - விருக்ஷமுநாசமாகும், இங்கிப்பால்-இவ்விடத்தில், எனைத்திருடும் - (ஆத்மரத்தினமான) வென்னைத்திருடுகின்ற, கள்ளனைக்கண்டேன் கண்டேன் - சோரனைப்பார்த்தேன் பார்த்தேன், இவன்பேர் நெஞ்சம் - இவனுமமானது மனமாம், பொங்குற்றநெஞ்சத்தால் - வளராநின்ற விந்தமனதினால், நெடுநாணொந்தேன் - வெகுகாலந் துன்பப்பட்டேன், இன்றுபொன்றுவிப்பேன் - இப்போது கெடுப்பிப்பேன்—எ-று.

(இ-ரை.) சங்கற்ப நாசத்தினால் சுளுவாக மனோநாசம்வலிய வரும். கேடுற்ற வேரான மனமானதிறந்தால் பிறப்பிறப்பென்கி ன்ற விருக்ஷமு நாசமாகும். இவ்விடத்தில் ஆத்ம ரத்தினமான வென்னைத்திருடுகின்ற சோரனைப்பார்த்தேன் பார்த்தேன். இவனு மமானது மனமாம். வளராநின்ற விந்தமனதினால்வெகுகாலந்துன் பப்பட்டேன். இப்போது கெடுப்பிப்பேன்—என்பதாம். (உஎ)

---

## மனதை யடக்குங் காரணந்தெரிதல்.

**இத்தனைநாண் மனமுத்தைந் துளைத்திலே னின்றுதுளைத்தி யைந்தநூலாற், சித்திரமாய்க் கோத்தணிவன் முழுதுணர்ந்ததேசி கராற் றெளிந்தே னெல்லாஞ், சுத்தபர மாநந்தந் தோற்றிவிக்கு நல்லறிவாஞ் சோதிபெற்றேன், மெத்தவிவ னனெனதிங் கிவை யெனும்பொய் யுள்ளொழித்தேன் மீண்டுநாடேன்.**

(இ-ள்.) இத்தனைநாள் - இவ்வளவுகாலம், மனமுத்தைத்துளைத்தி லேன்-மனமென்கின்ற முத்தைச்சிகச்சையென்னுந்தமர்செய்கிலன், இன் றுதுளைத்து - இப்போதுசிகிச்சைசெய்து, இயைந்தநூலால் - பொருந்திய (வனுபவமென்னுஞ்) சூத்திரத்தினால், சித்திரமாய்க்கோத்தணிவன்-அழ காகக்கோவைசெய்துதரிப்பன், முழுதுணர்ந்ததேசிகரால்-சகலமு முணர் ந்த (சித்தர்களான) வாசாரியாரால், எல்லாந்தெளிந்தேன் - (யாவையுந்) தெரிந்தேன், சுத்தபரமாநந்தம் - சுத்தமான பிரமாநந்தை, தோற்றிவிக் கும் - தெரிவிக்கின்ற, நல்லறிவாஞ்சோதிபெற்றேன் - சுகபோதமாகிய ப்ரகாசத்தையடைந்தேன், மெத்த - மெதுவாக, இவன் - இவனென்றும், நான் - நானென்னும், இங்கிவையென தெனும்பொய்-இவ்விடத்திவைக ளென்னதென்னு மசத்தியத்தை, உள்ளொழித்தேன் - மனதிற்கெடுத் தேன், மீண்டுநாடேன்-திரும்பவுந்தேடேன்—எ-று.

(இ-ரை.) இவ்வளவு காலம் மனமென்கின்ற முத்தைச்சிகச் சையென்னுந்தமர்செய்கிலன். இப்போது சிகச்சைசெய்து பொ ருந்தியவனுபவமென்னுஞ் சூத்திரத்தினால் அழகாகக்கோவைசெ ய்து தரிப்பன். சகலமுமுணர்ந்த சித்தர்களானவாசாரியரால் யா வையுந்தெரிந்தேன். சுத்தமான பிரமாநந்தத்தைத் தெரிவிக்கின்ற சுகபோதமாகிய ப்ரகாசத்தையடைந்தேன். மெதுவாகஇவனென் னும் நானென்னும் இவ்விடத்திவைகளென்னதென்னு மசத்திய யத்தை மனதிற்கெடுத்தேன் திரும்பவுந்தேடேன்—என்பதாம். ()

## சுகபோதந் தானுயிருக்கின்ற சமாதியடைதல்.

பேதிக்கு மனமென்னும் பெரும்பகையை முழுவலியாற்பிளந்துவென்றேன், வாதித்த துயரெல்லா மாற்றினே னுபசாந்த வாழ்வுபெற்றேன், சாதித்த விவேகமே யுனைவணங்கி னேனென்று சனகர்கோமான், சேதித்த மனவலைவெல் லாமொழித்துத் தானே சித்திரம்போனின்றான்.

(இ-ள்.) பேதிக்கு மனமென்னும் - (எனதாத்ம ஞானத்தைப்) பேதஞ்செய்யு மனமென்கின்ற, பெரும்பகையை-பெரிதானசத்துருவை, முழுவலியால் - மிகுந்த பலத்தினால், பிளந்து வென்றேன் - பிளந்து வெற்றியடைந்தேன், வாதித்த துயரெல்லா மாற்றினேன் - (என்னை) வாதனை செய்த துன்பங்க ளனைத்தையும் போக்கினேன், உபசாந்தவாழ்வு பெற்றேன் - உபசாந்தவாழ்வையடைந்தேன், சாதித்தவிவேகமே - (இப்படி) சாதிக்கப்பட்ட விவேகஞானமே, உனைவணங்கினேனென்று - உன்னைத் தொழுதேனென்று, சனகர்கோமான் - சனகராசனானவன், சேதித்த - (என்னைக்) கெடுத்த, மனவலை வெல்லாமொழித்து - மனோசஞ்சலங்களனைத்தையுங் கெடுத்து, தானேசித்திரம்போனின்றான் - தானே சித்திரப் பதுமையைப்போலச் (சமாதியிலிருந்தான்)—எ-று.

(இ-ஷா.) எனதாத்மஞானத்தைப் பேதஞ்செய்யு மனமென்கின்ற பெரிதான சத்துருவை மிகுந்த பலத்தினால்பிளந்துவெற்றியடைந்தேன். என்னை வாதனைசெய்ததுன்பங்களனைத்தையும்போக்கினேன். உபசாந்தவாழ்வை யடைந்தேன். இப்படி சாதிக்கப்பட்ட விவேகஞானமே உன்னைத் தொழுதேனென்று சனகராசனானவன் என்னைக்கெடுத்த மனோசஞ்சலங்களனைத்தையுங்கெடுத்துதானே சித்திரப்பதுமைப்போலச் சமாதியிலிருந்தான்—எ-ம். ()

---

## சமாதியிற் சுகம்பெற்றுச் சகசத்தில் வெளிப்படல்.

வாளாசித் திரம்போல நெடிதிருந்து சனகர்பிரான் மாய்ந்த நெஞ்சை, மீளாநல் லுபசாந்த நிறைநெஞ்சா லுலகியல்பைமேவிப் பார்த்தான், றளாண்மை யாலியற்றும் பொருளேதுகைக்கொள்ளத் தக்கதேது, கோளான கற்பனையென் சுபாவவறி வாமெனக்குக் குறிக்குங்காலே.

(இ-ள்.) வாளாசித்திரம்போல - மௌனமாய்ச் சித்திரத்தைப்போல, நெடிதிருந்து - வெகுநேரஞ் (சமாதியி) லிருந்து, சனகர்பிரான்-சனகராசன், மாய்ந்தநெஞ்சை - நாசமான மனதை, மீளாநல்லுபசாந்தம்-திரும்

பாத நல்ல வுபசாந்தமுள்ள, நிறைநெஞ்சால் - பூரணமனதினால், உலகி யல்பை - சகத்தின்குணத்தை, மேவிப்பார்த்தான் - பொருந்திப்பார்த் தான், தாளாண்மையாலியற்றும்-முயற்சியாற்செய்யப்பட்ட, பொருளேது- பொருளியாது, கைக்கொள்ளத்தக்கதேது - கைவசமாக்கத்தக்கபொருளி யாது, கோளானகற்பனையென் - குற்றமுள்ள கற்பனையாது, குறிக்குங்கா லெனக்குச்சுபாவவறிவாம் - குறிக்கும்போதெனக்கி (யாவுஞ்)சுபாவஞான மாம்—எ-று.

(இ-ளா.) மௌனமாய்ச் சித்திரத்தைப்போல வெகுநேரஞ் சமாதியிலிருந்து சனகராசன் நாசமானமனதை திரும்பாதநல்லவுப சாந்தமுள்ள பூரணமனதினால் சகத்தின்குணத்தைப் பொருந்திப் பார்த்தான். முயற்சியாற் செய்யப்பட்ட பொருளியாது? கைவச மாக்கத்தக்க பொருளியாது? குற்றமுள்ள கற்பனையானது? குறி க்கும்போ தெனக்கியாவுஞ் சுபாவஞானமாம்—என்பதாம். (ங0)

## சாக்ஷாத்கார வனுபவ விலாசங்கூறல்.

சுத்தமாய்ச்சொரூபமா மென்னுருவ லான்வேறு தோன்றக் காணேன், வத்தியான் வாராத பொருணயவென் வந்தபொரு ள த்துந்தள்ளேன், னித்தமாய்த் தன்னிலையி னிற்குமெனதறிவுருவி னிலையானிற்பே, னுத்தவா றேதுவரு மதுவருகவென்றமுழ்ந்தி யொருமையானான்.

(இ-ள்.) சுத்தமாய் - பரிசுத்தமாய், சொரூபமாம் - (ஆத்மஞான)ஸ்வ ரூபமாகிய, என்னுருவலால் - எனது ஸ்வரூபத்தையல்லாமல், வேறுதோ ன்றக்காணேன் - வேறுபொருள் தோற்றக்கண்டிலன், வத்தியான் - வள ராநின்ற நான், வாராதபொருணயவேன் - வாராத வஸ்துக்களை விரும் பேன், வந்தபொருளனைத்துந் தள்ளேன் - வாராநின்ற வஸ்துக்க ளியா வையும் வெறுக்கேன், நித்தமாய் - சதாகாலமும, தன்னிலையினிற்கும் - தன்னிலையி லிருக்கின்ற, எனதறிவுருவின் - எனதாத்ம ஞானஸ்வரூபத் தில், நிலையாநிற்பேன் - திரமாயிருப்பேன், உத்தவாறேதுவரும் - சொன் னபடி யெதுவருகின்றதோ, அது வருகவென்று-அது வரக்கடவதென்று (சொல்லி), அழுந்தி - (பிரமாநந்தத்தின்) முழுகி, ஒருமையானான்-சனக ராசனொருமைப்பட்டான்—எ-று,

(இ-ளா.) பரிசுத்தமாய் ஆத்மஞஸ்வரூபமாகிய எனதுஸ்வரூ பத்தையல்லாமல், வேறுபொருள் தோற்றக்கண்டிலன். வளராநி ன்ற நான் வாராத வஸ்துக்களை விரும்பேன். வாராநின்ற வஸ்துக் களியாவையும் வெறுக்கேன். சதாகாலமும் தன்னிலையிலிருக்கின் ற எனதாத்மஞான ஸ்வரூபத்தில்திரமாயிருப்பேன். சொன்னபடி

பெறுவருமின்றதோ அது வரக்கடவதென்று சொல்லி பிரமாநந்தத்தின்முழுகி சனகராசனொருமைப்பட்டான்—என்பதாம். (ருக)

## சகநிஷ்டையிற் ஜீவன்முத்தனாய்ச் சஞ்சரித்தல்.

**வானேகு கதிரிரவிநாளியற்றும் வாறென்ன வந்துவந்து, தானேதோன் றியதொழிலைப் பற்றின்றிச் செய்துமெனச் சனகனெண்ணித், தீனேய வருகாலஞ் செல்கால மிமையளவுஞ் சிந்தைசெய்யா, னூனேறு நிகழ்காலத் தோரிமைப்பி னகைதலோ டுலாவலுற்றான்.**

(இ-ள்.) வானேகு - ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற, கதிரிரவி - ப்ரகாசத்தையுடைய சூரியன், நாளியற்றும் வாறென்ன - தினங்களை (யிச்சாவெத்தனமில்லாம) னடப்பிக்கின்றதுபோல, வந்துவந்து - அடிக்கடிவந்து, தானே தோன்றியதொழிலை - தானேயுண்டாகிய கிருத்தியங்களை, பற்றின்றிச்செய்துமென - பற்றில்லாமற்செய்வோமென்று, சனகனெண்ணி - சனகராசன் சிந்தித்து, தீனேயவருகாலம் - தீமையேநேயமாகவருகின்ற வெதிர்காலத்தையும், செல்காலம் - இறந்தகாலத்தையும், இமையளவுஞ் சிந்தைசெய்யான் - அற்பமாகிலுஞ்சிந்திக்காமல், ஊனேறுநிகழ்காலத்து - ஈனமுள்ளவர்த்தமானகாலத்தின் (றொழிலில்), ஓரிமைப்பில்-ஒரு நிமிட நேரத்தில், நகைதலோடு - மந்தகாசத்தோடும், உலாவலுற்றான் - சஞ்சரிக்கத்தொடங்கினான்—எ-று.

(இ-ஸ்.) **ஆகாயத்திற்சஞ்சரிக்கின்ற ப்ரகாசத்தையுடைய சூரியன் தினங்களையிச்சாவெத்தனமில்லாமனடப்பிக்கின்றதுபோல அடிக்கடி வந்து தானே யுண்டாகிய கிருத்தியங்களை பற்றில்லாமற் செய்வோமென்று சனகராசன் சிந்தித்து தீமையே நேயமாக வருகின்ற வெதிர்காலத்தையும்இறந்தகாலத்தையும் அற்பமாகிலுஞ் சிந்திக்காமல் ஈனமுள்ள வர்த்தமான காலத்தின்றொழிலில் ஒரு நிமிடநேரத்தில் மந்தகாசத்தோடும் சஞ்சரிக்கத்தொடங்கினான் ()**

(இ-கள-க-ம்.) சனகராஸ்மீகமா யாசிரியர் வாக்கியங்களைக்கேட்டுச் சுகுணவாகப்பெற்ற ஸ்வானுபவத்தாற் சர்வம் பிரமமயமாமென்பதை யுணர்ந்ததுவாக விளங்கினரென்பதாம். (ரு௨)

**சனகா தனுபவத்தைக்கூறி யிவ்வனுபவம் வருவ தாத்ம விசாரத்தா லன்றி யேனையவற்றா் கூடாதேனல்.**

**பேசியதன் விசாரத்தாற் சனகர்பிரான் பெறும்பேறுபெற்ற தல்லால், வாசியுள மற்றொன்றால் வந்ததல்ல வாரீச மலர்க்கண் மாலே, யாசிலதாய்ச் செவ்வியதாய்த் தனதான விசாரத்தாலடை வதல்லாற், றேசிகரில் லாவீனர் செய்தொழிலாற்பெறலாமோ சிற் சொரூபம்,**

(இ-ள்.) பேசிய - (சித்தர்களாற்) சொல்லப்பட்ட, தன் விசாரத்தால்- ஆத்மவிசாரணையினால், சனகர்பிரான் - சனகராசனானவர், பெறும்பேறு- அடையத்தக்க வாத்மலாபத்தை, பெற்றதல்லால் - அடைந்ததே யல்லா மல், வாசியுளம் - உபசாந்தமுள்ளமனது, மற்றொன்றால் வந்ததல்ல - வே றொன்றினால் வந்ததன்று, வாரீசமலர்க்கண்மாலே - தாமரைக்கண்ணையு டையஸ்ரீராமா, ஆசிலதாய் - குற்றமற்றதாகியும், செவ்விதாய் - அழகாகியு (மிருக்கின்ற), தனதானவிசாரத்தால்-தனதாத்மவிசாரணையினால், அடை வதல்லால் - (பரமபதத்தை) யடைவதேயன்றி, தேசிகரில்லாதவீனர்செய் தொழிலால் - ஆசாரியரில்லாத வீனர்செய்யுங் கிரியையால், சிற்சொரூபம் பெறலாமோ - ஆத்மஞானஸ்வரூபத்தை யடையலாகுமோ—எ-று.

**(இ-ம.) சித்தர்களாற் சொல்லப்பட்ட ஆத்மவிசாரணையி னால் சனகராசனானவர் அடையத்தக்க வாத்மலாபத்தை அடைந் ததேயல்லாமல் உபசாந்தமுள்ளமனது வேறொன்றினால் வந்த தன்று, தாமரைக்கண்ணையுடைய ஸ்ரீராமா! குற்றமற்றதாகியும் அழகாகியுமிருக்கின்ற தனதாத்ம விசாரணையினால் பரமபதத்தை யடைவதே யன்றி ஆசாரிய ரில்லாத வீனர்செய்யுங் கிரியையால் ஆத்மஞான ஸ்வரூபத்தையடையலாகுமோ—என்பதாம். ()**

## நிட்காமகன்மம் வேண்டுமெனல்.

**புறப்பேறுகளைவேண்டி யியற்றுகின்ற புண்ணியத்தைப்புவி யிலுள்ளோர், சிறப்பான நல்லறிவு மிகவேண்டு மென்னுமுதற் செய்யிற் பேறும், விறப்பான வாபத்து விளைநிலமாயிருந்துதுயர் வேலையாகிப், பிறப்பான நச்சுமற வித்தாகும் பேதமையைப் பிள க்கல் வேண்டும்.**

(இ-ள்.) புறப்பேறுகளைவேண்டி-(ஆத்மாவுக்குப்) புறம்பானபதப்ராப் திகளைவிரும்பி, இயற்றுகின்றபுண்ணியத்தை-முயற்சிக்கின்ற தருமத்தை, புவியிலுள்ளோர்-பூமியின்கண்ணுள்ளவர்கள், சிறப்பானநல்லறிவு-விசேட

மான சுகபோதமானது, மிகவேண்டுமென்று - மிகவு (முண்டாக) வேண்டுமென்று, முதற்செய்யிற்பேறும் - முன்புசெய்தா (லாத்ம)லாபமாம், இறப்பானவாபத்து - அச்சமாகிய வாபத்துக்கள், விளைநிலமாயிருந்து-விளைகின்ற பூமியாயிருந்து, துயர்வேலையாகி - துன்பசமுத்திரமாய், பிறப்பான நச்சுமரவித்தாகும் - பவமானவிடவிருக்ஷங்களுக்கு விதையாயிருக்கின்ற, பேதைமையைப் பிளக்கல் வேண்டும் - அஞ்ஞானத்தைக்கெடுக்கவேண்டும்—எ-று.

(இ-ரை.) ஆத்மாவுக்குப் புறம்பான பதப்பிராப்திகளை விரும்பி முயற்சிக்கின்ற தருமத்தை பூமியின்கண்ணுள்ளவர்கள் விசேடமான சுகபோதமானது மிகவுமுண்டாக வேண்டுமென்றுமுன்புசெய்தாலாத்மலாபமாம், அச்சமாகியவாபத்துகள் விளைகின்றபூமியாயிருந்து துன்பசமுத்திரமாய் பவமான விடவிருக்ஷங்களுக்கு விதையாயிருக்கின்ற அஞ்ஞானத்தைக்கெடுக்கவேண்டும்—எ-ம். ( )

அந்நிட்காமயத்தாலுண்டாயின விசாரணையின் பலனைக்கூறல்.

இலங்கியசிந் தாமணியா மிதயமெனுஞ் சரக்கறையிலிருக்கும் போதங், கலங்கலிலாவிவேகியர்க்குக் கருதுபொருள்கறபகம்போற் கணத்தினல்குந், துலங்குவிசார ரம்படைத்துப்பேதைமைபோய் நல்லறிவு தோன்றினோரை, விளங்குகவ சத்தோரை யம்புகள், போற் காமாதி விகற்பந்தாக்கா.

(இ-ள்.) இலங்கிய சிந்தாமணியாம்-ப்ரகாசிக்கின்ற சிந்தாமணியாகிய இதயமெனுஞ் சரக்கறையில் - இருதயமென்னும் பெட்டியில், இருக்கும் போதம் - இருக்கின்ற ஞானமானது, கலங்கலிலா விவேகியர்க்கு - கலக்கமில்லாத ஞானிகளுக்கு, கருதுபொருள் - சிந்திக்கப்பட்ட பொருள்களை, கற்பகம்போல் - கற்பகவிருக்ஷத்தைப்போல, கணத்தினல்கும் - க்ஷணத்திற்கொடுக்கும், துலங்குவிசாரம்படைத்து - ப்ரகாசிக்கின்ற வாத்மவிசாரணையைப்பெற்று, பேதைமைபோய் - அறியாமைகெட்டு,நல்லறிவுதோன்றினோரை - சுகபோதமுதயமானவர்களை, இலங்கு கவசத்தோரை-ப்ரகாசிக்கின்ற வச்சிரகவசந் தரித்தவர்களை, அம்புகள்போல் - பாணங்களைப் போல, காமாதிவிகற்பந்தாக்கா - இராகத்துவேடமுதலிய விகற்பந்தாக்காது—எ-று.

(இ-ரை.) ப்ரகாசிக்கின்றசிந்தாமணியாகியஇருதயமென்னும் பெட்டியில்இருக்கின்ற ஞானமானது கலக்கமில்லாதஞானிகளுக்கு சிந்திக்கப்பட்ட பொருள்களை கற்பகவிருக்ஷத்தைப்போல க்ஷணத்திற்கொடுக்கும். ப்ரகாசிக்கின்ற வாத்மவிசாரணையைப்பெற்று அறியாமை கெட்டு சுகபோத முதயமானவர்களை ப்ரகாசிக்கின்ற

வச்சிரகவசந் தரித்தவர்களை பாணங்களைப்போல இராகத்துவேட முதலிய விகற்பந்தாக்காது—என்பதாம். (௩௫)

அவ்விசாரமில்லாமையா லகங்கார நீங்கி ஞான முதிக்கு மெனல்.

பரமாதித் தனைமறைத்துக் கறுத்தறிவற் றுக்களித்துப்படர் ந்துமீண்டு, திரமான வகங்கார முகில்விவே கக்காற்றாற் சிதறிப் போகும், வரமான பதம்வேண்டிற் றன்மனத்தி னுசைமுதன் மாற்றல்வேண்டு, முரமான புவியைமுத லுழுதன்றோ விளைபயன்க ளுறுகின்றாரே.

(இ-ள்.) பரமாதித்தனை மறைத்து - பிரமசூரியனை மறைத்து, கறுத்தறிவற்றுக்களித்து - களங்கமாயறிவின்றி மதர்த்து, படர்ந்து - விரிந்து, மீண்டுதிரமான - திரும்பவுரமாகியிருக்கின்ற, அகங்காரமுகில்-அகம்பாவ மென்னு மேகமானது, விவேகக்காற்றால் - ஞானமென்னுஞ் சண்டமாருதத்தினால், சிதறிப்போகும் - சின்னபின்னமாகும், வரமானபதம்வேண்டில் - மேன்மையான (பரம) பதத்தை விரும்பினால், தன்மனத்தினுசை-தனது மனதின்கண்ணுள்ள விச்சையை, முதன்மாற்றல்வேண்டும்-முன்னங்கெடுக்கவேண்டும், உரமானபுவியை-பலமான பூமியை, முதலுழுதன்றோ - முந்தினதாக வுழுதல்லவா, விளைபயின்களுறுகின்றார் - விளையாநின்ற தானியலாபத்தையடைகின்றார்கள்—எ-று.

(இ-ரை.) பிரமசூரியனை மறைத்து களங்கமா யறிவின்றிமதர்த்து விரிந்து திரும்பவுரமாகி யிருக்கின்ற அகம்பாவமென்னுமேகமானது ஞானமென்னுஞ் சண்டமாருதத்தினால் சின்னபின்னமாகும். மேன்மையான பரமபதத்தை விரும்பினால் தனது மனதின் கண்ணுள்ள விச்சையை முன்னங்கெடுக்கவேண்டும். பலமானபூமியை முந்தினதாக வுழுதல்லவா? விளையாநின்ற தானியலாபத்தை யடைகின்றார்கள்—என்பதாம்.

(இ-சு-க-°.) ஞானமுதிக்குங் கிரமங்களை முறையே யுணர்த்தியதாம். (௩௬)

சனகராசன்கதை முற்றிற்று.

ஆக் கதை ௧௧-க்கு கவிதை அ௦௨.

# புண்ணிய பாவனன் கதை.

அவதாரிகை.

முன்கதையிற் சிதாநந்தாகாரமே யாவுமா மென்பதனு லெளிதிற் சித்தோபசாந்தியைக்கூறி இவ்வனுபவங் கொஞ்சம் வருத்தத்திலும் வருமென்பதை யறிவிக்கு நிமித்தஞ் சநநாந்தரங்களைப்போதித்த வதனு லனுபவ முதித்த புண்ணியபாவனன் கதையை நிரூபிக்கிறார்.

இப்பிராமாணுபவ மாயாநாசத் துதிக்குமெனல்-வேறு.

மோகவற்சனுபிக்கொடிமுளைத்தெழுமூலஞ்
சோகமாசுணமிருந்தரசாள்வதோர்சூழ
லாகமேமுதலியானெனக்காணுமஞ்ஞான
மேகமாகியபராபரந்தோன்றிறுலிறக்கும்.

(இ-ள்.) மோகவற்சனுபிக்கொடி-மோகமென்னும் வத்சனுபிக்கொடியானது, முளைத்தெழுமூலம் - உண்டாகி வளர்தற்குக் காரணமாகியும், சோகமாசுணம்-துக்கமென்னுஞ்சற்பமானது, இருந்தரசாள்வதோர்சூழல்-தனித்திருந்தரசாக்ஷிசெய்வதற் கொப்பற்றவிடமான, ஆகமுதல் - தேகாதிகளை, இயானெனக்காணுமஞ்ஞானம் - நானென்றுபார்க்கு மஞ்ஞானமானது, ஏகமாகிய பராபரந் தோன்றினுலிறக்கும்-ஒன்றான வாத்மஞானமுதயமானுனசிக்கும்—எ-று.

(இ-ள்.) மோகமென்னும் வற்சனுபிக்கொடியானது உண்டாகி வளர்தற்குக் காரணமாகியும் துக்கமென்னுஞ் சற்பமானது தனித்திருந் தரசாக்ஷிசெய்வதற் கொப்பற்ற விடமானதேகாதிகளை நானென்று பார்க்கு மஞ்ஞானமானது ஒன்றானவாத்மஞானமுதயமானு னசிக்கும்—என்பதாம். (க)

மாயாநாச வுபாயங்கூறல்.

அனித்தமிச்சகமென்பதைநாடொறுமகற்றி
நுனித்துநோக்கினர்சனகனைப்போலநுண்ணறிவாற்
றனித்தமெய்ப்பொருள்பக்குவத்திருவர்தனத்தால்
மனித்தராற்கருமத்திற்றேவரால்வாரா.

(இ-ள்.) இச்சகம் - இந்தவுலகம், அனித்தமென்பதை - அசத்தென்பதை. நாடோறுமகற்றி - எப்பொழுதுங் (கண்டு) நீக்கி, நுனித்துநோக்கி

னர் - நுண்மையாகப் பார்க்கின்றவர்கள், சனகனைப்போல-சனகராசனைப் போல, நுண்ணறிவால் - சூட்சுமவறிவினால் தனித்த மெய்ப்பொருள்-தனிமையான பரமார்த்தத்தை, பக்குவத்தறிகுவர் - பருவகாலத்தி லறிவார்கள், (அஃதன்றி) தனத்தால் - திரவியங்களினாலும், மனித்தரால் - மானிடர்களினாலும், கருமத்தினால் - கிரியைகளினாலும், தேவரால்-வானவர்களினாலும், வாரா - வரமாட்டாது—எ-று.

(இ-ள.) இந்தவுலகம் அசத்தென்பதைஎப்பொழுதுங்கண்டு நீக்கி நுண்மையாகப் பார்க்கின்றவர்கள் சனகராசனைப்போலசூட்சும வறிவினால் தனிமையான பரமார்த்தத்தை பருவகாலத்திலறிவார்கள் அஃதன்றி திரவியங்களினாலும், மானிடர்களினாலும், கிரியைகளினாலும், வானவர்களினாலும் வரமாட்டாது—எ-ம். (உ)

முயற்சியாற் பேததிருஷ்டிநீங்கி லாத்மதரிசன முண்டாமெனல்.

சனனமஞ்சினர்க்கவருடைமுயற்சியேசரணுந்
தினமுமிங்கிவனெனுஞ்சிறுமைதான்சிதையி
லனகமாயுலகெங்குமாம்விசாலமுண்டாகு
மனனுறத்தனதுயர்ச்சிதான்காண்புறவருமால்.

(இ-ள்.) சனனமஞ்சினர்க்கு - பிறப்பிற்பயந்தவர்களுக்கு, அவருடை முயற்சியே சரணும் - தங்கண்முயற்சியே கதியாம், இங்கு தினமும்-இவ்விடத்தினடோறும், இவனெனும் - இவனென்கின்ற, சிறுமைதான் சிதையில் - அற்ப (வுணர்வு) கெடுமானால், அனகமாய் - களங்கமில்லாததாய், உலகெங்குமாம் - சகத்தனைத்துமான, விசாலமுண்டாகும்-வியாபக (ஞான) முண்டாயிருக்கும், மனனுற-மனது (விசாரணையைப்) பொருந்த, தனதுயர்ச்சிதான் காண்புறவரும் - தனதுமேலான (வாத்மஞானந்) தெரிசிக்கவரும்—எ-று.

(இ-ள.) பிறப்பிற் பயந்தவர்களுக்கு தங்கண்முயற்சியே கதியாம். இவ்விடத்தினடோறும் இவனென்கின்ற அற்பவுணர்வு கெடுமானால்களங்கமில்லாததாய் சகத்தனைத்துமானவியாபகஞான முண்டாயிருக்கும். மனது விசாரணையைப்பொருந்த தனது தனது மேலான வாத்மஞானந்தெரிசிக்கவரும். (ங)

விருப்புவெறுப்பறிப் பேதநீங்கி யசையற்றிருக்குமெனல்-வேறு.

பற்றுவீடென்றிரண்டிற் பற்றலும்விடுதலுனு
முற்றவைமனத்திரூப முயர்பந்தமதுவேறில்லை

முற்றுறுபற்றுவீட்டின் மோகமுந்துயரும்விட்டு
துற்றுளபற்றுவீடு துடைத்தசையாதுநிற்பாய்.

(இ-ள்.) பற்றுவீடென்றிரண்டில் - பற்றுதலும் விடுதலுமென்று சொல்லப்பட்ட விரண்டில், பற்றலும் விடுதருனுமுற்றவை - பற்றுவதும் விடுவதும் பொருந்தின வவ்விரண்டும், மனத்துரூபம் - மனதின்வடிவமாம், அதுவுயர்பந்தம் - அதுவே மகாபந்த (மன்றி), வேறில்லை-வேறேயில்லை, முற்றுறுபற்றுவீட்டின் மோகமுந் துயரும்விட்டு - முதிர்ந்த விராகத்துவேடங்களால் வருமாசையையுந் துன்பத்தையுநீக்கி, துற்றுளபற்றுவீடு - நிறைந்த விருப்பு வெறுப்பை, துடைத்தசையாது நிற்பாய்-கெடுத்துச் சலியாதிருப்பாய்—எ-று.

(இ-ா.) பற்றுதலும் விடுதலுமென்று சொல்லப்பட்ட விரண்டில் பற்றுவதும் விடுவதும் பொருந்தின வவ்விரண்டும்மனதின் வடிவமாம். அதுவே மகாபந்தமன்றி வேறேயில்லை. முதிர்ந்தவிராகத்துவேடங்களால் வருமாசையையுந் துன்பத்தையுநீக்கிநிறைந்த விருப்பு வெறுப்பை கெடுத்துச் சலியாதிருப்பாய்—என்பதாம். ()

## அச்சமதிருஷ்டியின் குணமுணர்தல்.

மயலின்மையநித்தமின்மை மடமின்மைவருத்தமின்மை
செயலின்மைகருமமின்மை தியக்கின்மைவிகற்பமின்மை
பயமின்மை துவட்சியின்மை பகையின்மை குறைவொன்றின்மை
கயமின்மைகடினமின்மை குடிலமாய்க்கழறலின்மை.

(இ-ள்.) மயலின்மை - மயக்கமில்லாமையும், அநித்தமின்மை-அநித்திய மில்லாமையும், மடமின்மை - அஞ்ஞானமில்லாமையும், வருத்தமின்மை - துன்பமில்லாமையும், செயலின்மை - (வேண்டுந்) தொழிலில்லாமையும், கருமமின்மை - (நீக்குந்) தொழிலில்லாமையும், தியக்கின்மை-தியக்க மில்லாமையும், விகற்பமின்மை - (ஒரு) விகற்பமுமில்லாமையும், பயமின்மை - அச்சமில்லாமையும், துவட்சியின்மை - வாட்டமில்லாமையும், பகையின்மை - வெகுளலில்லாமையும், குறைவொன்றின்மை-குறைவொன்று மில்லாமையும், கயமின்மை - கீழ்மையில்லாமையும், கடினமின்மை - கொடுமையில்லாமையும், குடிலமாய்க்கழறலின்மை - வஞ்சகமாய்ப் பேசலில்லாமையும்—எ-று.

(இ-ா.) மயக்கமில்லாமையும், அநித்தியமில்லாமையும், அஞ்ஞான மில்லாமையும், துன்பமில்லாமையும், வேண்டுந்தொழி லில்லாமையும், நீக்குந்தொழிலில்லாமையும், தியக்கமில்லாமையும், ஒரு விகற்பமுமில்லாமையும், அச்சமில்லாமையும், வாட்டமில்லாமையும், வெகுளலில்லாமையும், குறைவொன்று மில்லாமையும், கீழ்

மையில்லாமையும், கொடுமையில்லாமையும், வஞ்சகமாய்ப் பேச லில்லாமையும்—என்பதாம். (ரு)

---

விருப்பு வெறுப்பறும்படி வாசனுத்தியாகம் வரவேண்டுமேனல்.

வீடுபற்றிரண்டுநீற்ற மேலவரிடத்துமேவி
நீடுவாதனைகளின்றி நிகழ்த்தியகுணங்கணிற்கும்
பீடுறு நினைவாநூலாற் பிணிப்புற்றுப்பிறவிவேலை
யூடுறமயன்மீன்வாரு முயர்ந்தவாதனையாஞ்சாலம்.

(இ-ள்.) வீடுபற்றிரண்டுநீற்ற - ஏயோபதேயங்களான விரண்டையு நீக்கின, மேலவரிடத்து - சத்துக்களிடத்தில், நீடுவாதனைகளின்றி-நீண்ட வாசனைக ளில்லாமல், நிகழ்த்திய குணங்கள் - முன்சொல்லிய குணங்க ளானவை, மேவிநிற்கும் - பொருந்தியிருக்கும், பீடுறு நினைவாநூலால் - வலிமையுள்ள சிந்தனையென்னுஞ் சூத்திரத்தால், பிணிப்புற்று - கட்டுப் பட்டு, பிறவிவேலையூடுற - பவசாகரத்தி னிடையிற்பொருந்த, மயன்மீன் வாரும் - மயக்கமென்னு மச்சங்களைப் பிடிக்கின்ற, உயர்ந்த வாதனையாஞ் சாலம் - பெரிதாகிய வாசனையென்று சொல்லப்பட்டவலை—எ-று.

(இ-ரை) ஏயோபதேயங்களான விரண்டையு நீக்கின, சத்துக்களிடத்தில் நீண்டவாசனைகளில்லாமல் முன்சொல்லிய குணங்களானவை பொருந்தியிருக்கும். வலிமையுள்ள சிந்தனையென்னுஞ் சூத்திரத்தால் கட்டுப்பட்டு பவசாகரத்தினிடையிற்பொருந்த மயக்கமென்னு மச்சங்களைப்பிடிக்கின்ற பெரிதாகிய வாசனையென்று சொல்லப்பட்ட வலை—என்பதாம். (சு)

---

வாசனுநாச வுபாயங்கூறல்.

வாதனையென்னுமிந்த வலைபுந்திவாளாலீர்ந்து
மோதுசூறைக்காற்சிந்து முகிலெனச்சிந்திநிற்பாய்
பாதவங்குடாரத்தாலே படுப்பபோனெஞ்சைநெஞ்சாற்
றீதரமாய்துமேலாம் பதத்திலேதிரமாய்நிற்பாய்.

(இ-ள்.) வாதனையென்னும் - வாதனையென்கின்ற, இந்த வலை-இந்த வலையை, புந்திவாளாலீர்ந்து - ஞானமென்னுங் கத்தியினு லறுத்து, மோதுசூறைக்கால் - அடிக்காநின்ற சுழற்காற்றினுல், சிந்துமுகிலென - சிதறுநின்ற மேகத்தைப்போல, சிந்திநிற்பாய் - (மன) மிறந்திருப்பாய், பாதவம் - விருக்ஷத்தை, குடாரத்தால் - கோடாலியினுல், படுப்பபோல்- கெடுப்பதுபோல, நெஞ்சை - (களங்கமான) மனதை, நெஞ்சால் - (பரிசு

த்த) மனதினுல், தீதறமாய்த்து - குற்றமில்லாமற்கெடுத்து, மேலாம்பத த்தில் - மேலான பரமபதத்தில், திரமாய்நிற்பாய் - திடமாக விருப்பாய்.

(இ-ரை.) வாதனையென்கின்ற இந்தவலையை ஞானமென்னுங் கத்தியினு லறுத்து அடிக்காநின்ற சுழற்காற்றினுற்சிதருநின்றமேகத்தைப்போல மனமிறந்திருப்பாய். விருக்ஷத்தைக் கோடாலியினுல் கெடுப்பதுபோல களங்கமான மனதைபரிசுத்தமனதினுல்குற்றமில்லாமற் கெடுத்து மேலான பரமபதத்தில் திடமாகவிருப்பாய்.

(இ-எ-க-ம்.) ஸ்வானுபவமுதித்தற் கஞ்ஞானமுதலிய வாசனையை நீக்கு முபாயத்தை யறிவித்ததாம். (எ)

---

பின்னுமவ்வாசனையை நீக்கவேண்டி வைப்புறுத்திக்கூறல்.

ஏகுகல்வருதறுஞ்சல் விழித்திடலிருத்தனிற்ற
லாகியவெல்லாம்பொய்யென் றழுந்தியுள்ளாசைதீர்வாய்
சேகுறவலையுஞ்சித்தப் பகுதியாற்சித்தின்பின்னே
போகலூன்மணத்தாற்சிங்கந் தனைத்தொடர்பூசைபோலாம்.

(இ-ள்.) ஏகுதல்வருதல் - போதல்வருதலும், துஞ்சல் விழித்திடல்- உறங்குதல் விழித்தலும், இருத்தனிற்றல் - இருப்பதும்நிற்பதும், ஆகிய வெல்லாம் பொய்யென்று - ஆகிய (சகத்தொழி) லனைத்து மித்தையென்று, அழுந்தி - அழுத்தமாய், உள்ளாசை தீர்வாய் - அகத்திச்சையை விட்டுவிடுவாய், சேகுறவலையுஞ்சித்தம் - திடமாக வலைகின்றமனமானது, பகுதியால் - இயல்பானவாசனையினுல், சித்தின்பின்னேபோகல் - ஞானத்தின்பின்செல்லுதல், ஊன்மணத்தால் - மாமிசவாசனையினுல், சிங்கந்தனை - கேசரியை, தொடர்பூசைபோலாம் - தொடருகின்ற பூனையை யொப்பாகும்—எ-று.

(இ-ரை.) போதல்வருதலும், உறங்குதல், விழித்தலும், இருப்பதும், நிற்பதும். ஆகிய சகத்தொழி லனைத்து மித்தையென்று அழுத்தமாய் அகத்திச்சையை விட்டுவிடுவாய், திடமாகவலைகின்ற மனமானது இயல்பானவாசனையினுல் ஞானத்தின்பின் செல்லுதல் மாமிசவாசனையினுல் கேசரியைத்தொடருகின்ற பூனையை யொப்பாகும்—என்பதாம். (அ)

---

மனோநாசத்தில் வாசனுக்ஷயமு முத்தியு முண்டாமெனல்.

மடங்கல்வீரியத்தாற்பெற்ற தசைதின்னுமாற்சாலம்போற்
றொடர்ந்துசென்மனனுஞ்சித்தாற் றேன்றியபொருளைப்பற்றும்

படர்ந்துகாண்பவற்றைப்பற்றின் மனங்கெடாப்பந்தம்போகா
திடங்கொள்காண்பவற்றைநீக்கிற் சித்தம்போய்முத்தியாகும்

(இ-ள்.) மடங்கல் வீரியத்தால் - சிம்மத்தின் வீரத்தினால், பெற்ற தசைதின்னும் - கிடைத்த வூனைத்தின்னுகின்ற, மாற்சாலம்போல்-பூனையைப்போல, தொடர்ந்துசென்மனனும் - தொடர்பாகச்செல்லுகின்ற மனதும், சித்தால் - அறிவினால், தோன்றியபொருளைப்பற்றும் - உண்டாகி விடயவஸ்துக்களைப் பிடித்துக்கொள்ளும், படர்ந்து காண்பவற்றை - விஸ்தாரமாகக் காணப்பட்ட திரிஸ்யத்தை, பற்றின்மனங்கெடா - பிடிக்கின் மனநாசமாகாது, பந்தம்போகா - பந்த நீங்காது, திடங்கொள் - திடங்கொண்ட, காண்பவற்றை நீக்கில்-திரிஸ்யத்தை நீக்கினால், சித்தம்போய் முத்தியாகும் - மனோநாசம்வந்து நிருவாணமாகும்—எ-று.

(இ-ா.) சிம்மத்தின் வீரத்தினால் கிடைத்த வூனைத்தின்னுகின்ற பூனையைப்போல தொடர்பாகச் செல்லுகின்ற மனதும் அறிவினால் உண்டாகியவிடய வஸ்துக்களைப் பிடித்துக்கொள்ளும். விஸ்தாரமாகக் காணப்பட்ட திரிஸ்யத்தைப்பிடிக்கின் மனநாசமகாது. பந்தநீங்காது திடங்கொண்டதிரிஸ்யத்தைநீக்கினால் மனோநாசம் வந்து நிருவாணமாகும்—என்பதாம். (௯)

---

## ஆத்ம தரிசன மறிவித்தல்.

யானிவையிரண்டுமில்லென் றெண்ணிமேருவைப்போனிற்பா
யூனிறமில்லாவிண்போ லுளத்தனாய்நல்லுளத்தே
தானும்வையமுமாய்க்காண்பாய் காண்பனதம்மினூடே
மேனிகழ்காட்சியென்னு நின்னைநீவிடாதுதேர்வாய்.

(இ-ள்.) யானிவை-நானிவைகளென்பதாகிய, இரண்டுமில்லென்று-இரண்டுமில்லையென்று, எண்ணி - சிந்தித்து, மேருவைப்போனிற்பாய் - மகாமேருவைப்போல ஸ்திரமாயிருப்பாய், ஊனிறமில்லா விண்போல் - களங்கமற்ற வாகாயத்தைப்போல, உளத்தனாய் - (நின்மல) மனதுடையவனாய், நல்லுளத்து - நன்மையானமனதில், தானும் - ஆத்மாவும், வையமுமாய் - உகமுமா (யிருக்கின்ற,) காண்பான் - ஞாதாவும், காண்பனதம்மினூடு - ஞேயங்களின்மத்தியில், மேனிகழ் - மேலாக விளங்கிய, காட்சியென்னு நின்னை - ஞானமென்கின்ற வுனதாத்மஸ்வரூபத்தை, நீவிடாது தேர்வாய் = நீவிடாமற்றெரிந்துகொள்வாய்—எ-று.

(இ-ா.) நானிவைக ளென்பதாகிய இரண்டு மில்லையென்று சிந்தித்து மகாமேருவைப்போல ஸ்திரமாயிருப்பாய். கள

ங்கமற்ற வாகாயத்தைப்போல நின்மல மனதுடையவனாய்நன்மை யான மனதில் ஆத்மாவும் சகமுமாயிருக்கின்ற ஞாதாவும்ஞேயங் களின் மத்தியில் மேலாகவிளங்கிய ஞானமென்கின்றவுனதாத்மஸ் வரூபத்தை நீ விடாமற்றெரிந்துகொள்வாய்—என்பதாம். (கo)

இனியனவினிமைகொள்வா னிரண்டும்விட்டிவற்றினூடே
தனிநிகழினிமைநாடி தற்பரமயமாய் நிற்பாய்
நனிபலதுய்ப்பான்றுய்ப்ப திரண்டுக்குநடுவேதானே
யனிசம்பற்றின்றிநிற்கு மதுபற்றியதனுணிற்பாய்.

(இ-ள்.) இனியன - இனிமையானவஸ்துவும், இனிமைகொள்வான்- இனிமையைக்கொள்கின்றவனுமாகிய, இரண்டும்விட்டு-இவ்விரண்டையு நீக்கி, இவற்றினூடே - இவைகளின்மத்தியில், தனிநிகழினிமைநாடி-தனி மையாக ப்ரகாசிக்கின்ற வின்பத்தையாராய்ந்து, தற்பரமயமாய்நிற்பாய் - ஆத்மஸ்வரூபமாயிருப்பாய், நனிபலதுய்ப்பான் - மிகவும் பலவற்றைப்புசி ப்பவனும், துய்ப்ப-பொசிக்கப்பட்டவஸ்துவும், இரண்டுக்குநடுவேதானே- இரண்டின்மத்தியில், அனிசம்பற்றின்றி நிற்கும் - எப்போதும் பற்றில்லா மலிருக்கின்ற, அதுபற்றி - அதைப்பிடித்து, அதனுணிற்பாய்-அதற்குள் ளிருப்பாய்—எ-று.

(இ-கா.) இனிமையானவஸ்துவும் இனிமையைக்கொள்கின் றவனுமாகிய இவ்விரண்டையு நீக்கி இவைகளின்மத்தியில் தனி மையாக ப்ரகாசிக்கின்ற வின்பத்தை யாராய்ந்து ஆத்மஸ்வரூபமா யிருப்பாய். மிகவும் பலவற்றைப் புசிப்பவனும் பொசிக்கப்பட்ட வஸ்துவும் இரண்டின்மத்தியில் எப்போதும் பற்றில்லாமலிருக்கி கின்ற அதைப்பிடித்து அதற்குள்ளிருப்பாய்—என்பதாம். (கக)

## இச்சையையு மகம்பாவத்தையு நீக்கவேண்டுமெனல்.

காதலாற்கட்டிலுய்யார் கயிற்றினூற்கட்டிலுய்வா
ராதலாலாசைக்கட்டை யசங்கற்பத்தறுப்பாய்நானென்
றோதுபாவனையைநானென் றுதகோர்வாளால்வீட்டி
யேதமில்சுபாவம்பாவித் தெழுபவமிலாவிடெய்தி.

(இ-ள்.) காதலாற்கட்டிலுய்யார் - ஆசையினுற் கட்டுப்பட்டாலுயிர் வாழமாட்டார்கள், கயற்றினுற்கட்டிலுய்வார் - கயற்றினுற்கட்டி லுயிர்வா ழவார்கள், ஆதலால் - ஆகையினுல், ஆசைக்கட்டை - இச்சாபந்தத்தை, அச்சங்கற்பத்தறுப்பாய் - சங்கற்ப நாசத்தாற்கெடுப்பாய், நானெனறோது பாவனையை - நானென்று சொல்லப்பட்ட பாவனையை, நானென்றுத தோர் வாளால் வீட்டி - நானென்று சொல்லப்படாதவொரு கத்தியினுற்

கெடுத்து, ஏதமில் சுபாவம் பாவித்து - குற்றமற்ற வாத்மபாவனைசெய்து, எழுபவமிலாவீடெய்தி-எழுபிறப்பில்லாத மோக்ஷத்தையடைந்து—எ-று.

(இ-ரை.) ஆசையினாற்கட்டுப்பட்டாலுயிர்வாழமாட்டார்கள். சுபற்றினாற்கட்டிலுயிர்வாழ்வார்கள் ஆகையினால் இச்சாபந்தத்தை சங்கற் பசத்தாற்கெடுப்பாய். நானென்றுசொல்லப்பட்ட பாவனையை நானென்று சொல்லப்படாத வொரு சத்தியினாற்கெடுத்து குற்றமற்ற வாத்மபாவனைசெய்து எழுபிறப்பில்லாத மோக்ஷத்தை யடைந்து—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) மனோவாசனை யகம் பாவமென்னு மிரண்டினையு நீக்கி வீடடையவேண்டுமென்பதாம். (கஉ)

## அகங்காரத்தியாகத்திலு மாகத்தியாக நன்றெனல்.

அனைத்துயிர்க்கச்சமில்லா நிலைநிற்பாயதுலவென்ன
வினைத்தொடரகம்பாவத்தின் வேட்கைதீரென்றநின்சொன்
னினைத்திடின்மிகவுமாழ நீடகங்காரநாசந்
தனைச்செயினுடலமென்னு மேதுவைத்தவிர்க்கின்றேனல்.

(இ-ள்.) அனைத்துயிர்க்கு - சகலவுயிர்களுக்கும், அச்சமில்லாதநிலை - பயமில்லாதநிலையில், அதுல - சமானமில்லாத(ஸ்ரீராமா), நிற்பாயென்ன- இருப்பா (யென்றுவசிட்டர்) சொல்ல, வினைத்தொடர் - தொழில்கடொடர்ந்திருக்கின்ற, அகம்பாவத்தின் - நானென்னும்பாவனையின், வேட்கை தீரென்ற நின்சொல் - ஆசையைத்தீர்ப்பாயென்று சொல்லிய வுமது வாக்கியத்தை, நினைத்திடில் - கருதுமிடத்தில், மிகவுமாழம் - மிகவுமாழமாம், நீடகங்கார நாசந்தனைச்செயின் - நெடிய வகங்கார நாசத்தைச் செய்வதைவிட, உடல மெனனுமேதுவைத் தவிர்க்கின்றேன் - சரீரமென்னுங்காரணமொழிக்கின்றேன்—எ-று.

(இ-ரை.) சகலவுயிர்களுக்கும் பயமில்லாதநிலையில் சமானமில்லாத ஸ்ரீராமா! இருப்பாயென்று வசிட்டர் சொல்ல, தொழில்கடொடர்ந்திருக்கின்ற நானென்னும் பாவனையின் ஆசையைத் தீர்ப்பாயென்று சொல்லிய வுமது வாக்கியத்தைக் கருதுமிடத்தில் மிகவுமாழமாம், நெடியவகங்கார நாசத்தைச்செய்வதைவிட சரீரமென்னுங் காரணமொழிக்கின்றேன்—என்பதாம். (கங)

### அகங்காரத்தியாகத்துக் கிரண்டுபாய முண்டெனல்

அகமெனலொழிக்கிற்றூனே யங்கமுமடியிலீர்ந்த
நகமெனவிறக்குமன்றே யென்றுயர்நாதன்கூற

மகமுனியுரைப்பான்வள்ளால் வாதனைமாற்றுமாறு
நிகழ்வுறுதேயஞேய மிரண்டெனநினைப்பர்கற்றோர்.

(இ-ள்.) அகமெனலொழிக்கில் - நானென்பதைக்கெடுத்தால், அங்கமும் - சரீரமும், அடியிலீர்ந்த நகமென - வேரோடறுத்த விருக்ஷத்தைப்போல, இறக்குமென்று - நசிக்குமென்று, உயர் நாதன்கூற - உயர்வான ஸ்ரீராமன்சொல்ல, மகமுனியுரைப்பான் - வசிட்டமாமுனி சொல்லுவார், வள்ளால் - ஸ்ரீராமா, வாதனைமாற்றுமாறு - (அகங்கார) வாசனையை நீக்கும் விதம், நிகழ்வுறுதேயம் - ப்ரகாசிக்கின்ற தேயமென்றும், ஞேயம் - ஞேயமென்றுஞ் சொல்லப்பட்ட, இரண்டென - இரண்டுவிதமாக, கற்றோர் - ஓதியுணர்ந்தவர்கள், நினைப்பர் - சிந்திப்பார்கள்—எ-று.

(இ-ரை.) நானென்பதைக்கெடுத்தால் சரீரமும் வேரோடறுத்த விருட்சத்தைப்போல நசிக்குமென்று உயர்வான ஸ்ரீராமன் சொல்ல, வசிட்டமாமுனிசொல்லுவார். ஸ்ரீராமா! அகங்காரவாசனையை நீக்கும் விதம், ப்ரகாசிக்கின்ற தேயமென்றும், ஞேயமென்றுஞ் சொல்லப்பட்ட இரண்டுவிதமாக ஓதியுணர்ந்தவர்கள் சிந்திப்பார்கள்—என்பதாம். (கச)

## அவ்விரண்டிற் றேயத்தியாக மறிவித்தல்.

இந்தநம்பொருட்குவாழ் ளிபாமிவையெமக்குவாழ
ணந்துறுமிவற்றலன்றி நாமில்லைநம்மாலன்றி
வந்தவிப்பொருள்களில்லை யெனுமனத்துறுதிமாற்றிப்
புந்தியாலுசாவியாமும் பொருள்களும்வெவ்வேறென்றே.

(இ-ள்.) இந்தநம்பொருட்கு-இந்தநமதுபொருளுக்கு, வாழ்வியாம் - சீவிதநாம், இவை-இந்தவஸ்துக்கள், எமக்கு வாழ்வு - நமக்கு சீவிதம், நந்துறு மிவற்றலன்றி-செல்வமான விப்பொருளை யல்லாமல், நாமில்லை-நாமென்பதில்லை, நம்மாலன்றி - நம்மையல்லாமல், வந்த விப்பொருள்களில்லை-கிடைத்த விப்பொருள்களில்லை, எனு மனத்துறுதிமாற்றி-என்னு மனத்தி னிச்சயத்தை நீக்கி, புந்தியாலுசாவி - புத்தியால் விசாரித்து, யாமும் பொருள்களும் - நாமும் விடயங்களும், வெவ்வேறென்று - வேறுவேறென்று—எ-று.

(இ-ரை.) இந்த நமதுபொருளுக்கு சீவிதநாம். இந்தவஸ்துக்கள் நமக்குசீவிதம். செல்வமான விப்பொருளையல்லாமல்நாமென்பதில்லை. நம்மையல்லாமல் கிடைத்தவிப்பொருள்களில்லை என்னு மனத்தினிச்சயத்தை நீக்கி புத்தியால் விசாரித்துநாமும் விடயங்களும் வேறுவேறென்று—என்பதாம். (கரு)

பொருளினேமல்லநாமு நமதல்லப்பொருளுமன்றே
தெருளுற்றுட்குளிர்ந்தியாவும் விநோதமாய்ச்செய்யுநெஞ்சான்
மருளறுநிச்சயத்தால் வாதனைவிடுதருனே
யருள்பொழிமேகமொப்பாய் நேயமென்றறிவாயன்றே.

(இ-ள்.) நாமும்பொருளினே மல்ல - யாமும் பொருள்களுக்குடையோமல்ல, பொருளு நமதல்லவென்று - பொருளு நம்முடையதல்லவென்று, தெருளுற்றுட்குளிர்ந்து - தெளிவடைந்துள்ளங்குளிர்ந்து, யாவும் - யாவையும், விநோதமாய் - லீலையாக, செய்யுநெஞ்சால் - செய்கின்றமனதினாலும், மருளறு நிச்சயத்தால் - மயக்கமில்லாத நிச்சயத்தினாலும், வாதனைவிடுதருனே-வாசனையை விடுகின்றதே, அருள்பொழிமேகமொப்பாய்- அருளைவருஷிக்கின்ற மேகத்துக்குச்சமானமான (ஸ்ரீராமா), நேயமென்றறிவாய் - நேயமென்றுணர்வாய்—எ-று.

(இ-ணா.) யாமும் பொருள்களுக்குடையோமல்ல. பொருளு நம்முடையதல்லவென்று தெளிவடைந்துள்ளங்குளிர்ந்து யாவையும் லீலையாகச்செய்கின்றமனதினாலும் மயக்கமில்லாத நிச்சயத்தினாலும் வாசனையைவிடுகின்றதே அருளைவருஷிக்கின்ற மேகத்துக்குச்சமானமான ஸ்ரீராமா நேயமென்றுணர்வாய்—என்பதாம்.

(இ-சு-க-ம்) சேடசித்தின் சம்பந்தங்களைப்பிரித் தச்சேடவாசனாநாசமே-நேயத்தியாகமாம். (௧௬)

## நேயத் தியாகங் கூறல்.

தனதுவாதனைமாண்டெல்லாஞ் சமமதாநெஞ்சாற்பண்ணி
யெனதெனுதுடலைநீக்கி னிந்தவாசனைநாசந்தா
னனகமாநேயமாகு மகங்கரமயமாந்தன்னை
வினவுவாதனையேமுற்றும் விநோதமாய்விட்டோர் மேலோர்

(இ-ள்.) தனதுவாதனைமாண்டு - தன்னுடையவாசனைகெட்டு, எல்லாம் - அனைத்தையும், சமமதாநெஞ்சாற்பண்ணி-சமமானபுத்தியினாற்பார்த்து, எனதெனுதுடலை நீக்கின் - நானென்று சொல்லப்படாத சரீரத்தைத்தள்ளினால், இந்தவாசனை நாசந்தான் - இவ்வாசனாக்ஷயமே, அனகமாநேயமாகும் - களங்கமில்லாத ஞேயமாம், அகங்கரமயமாந்தன்னை-அகங்காரவடிவமான, வினவுவாதனையை - சொல்லப்பட்ட வாசனையை, முற்றும் விநோதமாய் - முதிர்ந்த லீலையாக, விட்டோர் மேலோர் - விட்டவர்கள் மேலான சத்துக்கள்—எ-று.

(இ-ணா.) தன்னுடைய வாசனைகெட்டு அனைத்தையும் சமமான புத்தியினாற்பார்த்து நானென்று சொல்லப்படாத சரீரத்தைத் தள்ளினால் இவ்வாசனாக்ஷயமே களங்கமில்லாத ஞேயமாம். அகங்

கார வடிவமான சொல்லப்பட்ட வாசனையை முதிர்ந்தலீலையாக விட்டவர்கண் மேலான சத்துருக்கள்—என்பதாம்.

(இ-ம்.) தோகோகவாசனையைக் கெடுப்பதே நேயத்தியாக மென்பதாம். (கஎ)

## இவ்விரண்டு தியாகத்தின் பெருமை கூறல்.

தீரராமவரேதேயத் தியாகஞ்செய்சீவன்முத்தர்
வேரறத்தொழில்களோடே வாதனைவிட்டுள்ளாறி
தூரமாஞேயம்விட்டோர் துகளறுமுத்தராகும்
வீரனேயிவையிரண்டின் விடுதியுந்தம்மிலொக்கும்.

(இ-ள்.) தீரராமவரே-தீரரான வவர்களே, தேயத்தியாகஞ்செய்-தேயத்தியாகத்தைச செய்கின்ற, சீவன் முத்தர் - சீவன் முத்தர்களாம், தொழில்களோடு-கிரியைகளோடும், வேரற-மூலங்கெடும்படி, வாதனைவிட்டு - வாசனையைக்கெடுத்து, உள்ளாறி - மனஞ்சாந்தமடைந்து, தூரமாஞேயம் விட்டோர் - சேய்மையான ஞேயத்தியாகஞ் செய்தவர்கள், துகளறு முத்தராகும்-குற்றமற்ற விதேகமுத்தராம், வீரனே-வெற்றியையுடைய ஸ்ரீராமா, இவை யிரண்டின் - இந்த விரண்டினுடைய, விடுதியும் - தியாகமும், தம்மிலொக்கும் - ஒன்றுக்கொன்று சமானமாகும்—எ-று.

(இ-ரை.) தீரரானவர்களே தேயத்தியாகத்தைச்செய்கின்ற சீவன்முத்தர்களாம். கிரியைகளோடும் மூலங்கெடும்படி வாசனையைக்கெடுத்து மனஞ்சாந்தமடைந்து சேய்மையான ஞேயத்தியாகஞ்செய்தவர்கள் குற்றமற்றவிதேகமுத்தராம். வெற்றியையுடைய ஸ்ரீராமா! இந்த விரண்டினுடைய தியாகமும் ஒன்றுக்கொன்று சமானமாகும்—என்பதாம். (கஅ)

### இதுவுமது - வேறு.

தேயஞேயத்தின்றியாங்கண்முத்தர்பாற்செறிவ
தேயஞேயத்தின்றியாகங்கள்பிரமத்தைச்சேர்ந்த
தேயஞேயத்தின்றியாகங்களிடரெலாந்தீர்ந்த
தேயஞேயத்தின்றியாகங்கள்தேடருஞ்செல்வம்.

(இ-ள்.) தேயஞேயத்தின்றியாகங்கள் - தேயத்தியாகமும் ஞேயத்தியாகமும், முத்தர்பாற்செறிவ - சீவன்முத்தர் விதேகமுத்தரிடத்தினெருங்கியிருப்பன, தேயஞேயத்தின்றியாகங்கள் - தேயத்தியாகஞேயத்தியாகங்கள், பிரமத்தைச்சேர்ந்த - பிரமத்தையடைந்தன, தேயஞேயத்தின்றியாகங்கள் - தேயத்தியாக ஞேயத்தியாகங்கள், இடரெலாந்தீர்ந்த-துன்பமனைத்தையு நீங்கின, தேயஞேயத்தின்றியாகங்கள்-தேயத்தியாக ஞேயத்தியாகங்கள், தேடருஞ்செல்வம் - தேடுதற்கரிய மோக்ஷமாம்—எ-று.

(இ-ள.) தேயத்தியாகமும், ஞேயத்தியாகமும், சீவன்முத்தர் விதேகமுத்தரிடத்தி னெருங்கியிருப்பன. தேயத்தியாக ஞேயத்தியாகங்கள் பிரமத்தையடைந்தன. தேயத்தியாக ஞேயத்தியாகங்கள் துன்பமனைத்தையுநீங்கின. தேயத்தியாக ஞேயத்தியாகங்கள் தேடுதற்கரிய மோட்சமாம்—என்பதாம்.

(இ-உ-க-ீ.) தேயத்தியாக ஞேயத்தியாகமென்னு மிரண்டுமேசீவன் முத்தி விதேகமுத்திகளாகுமென்பதாம். (கக)

## சீவன்முத்த ரிலக்கணங் கூறல்.

சூழுறுமின்பதுன்பந் தொடர்வுறிலொருகாலத்து
மாழுதன்மிதத்தலில்லா வவர்களேசீவன்முத்தர்
கேழுயர்மகிழ்ச்சியச்சஞ் சினமின்மைபொறாமைகேத
மூழுறுமிவற்றைநோக்கா வுளத்தினர்சீவன்முத்தர்.

(இ-ள்.) சூழுறுமின்பதுன்பம்-சூழ்ந்திருக்கின்ற சுகதுக்கங்கள், தொடர்வுறில் - (தன்னைத்) தொடர்ந்தால், ஒருகாலத்தும் - ஒருபோதிலும், ஆழுதல்-அழுந்துதலும், மிதத்தலில்லா - மிதத்தலுமில்லாத, அவர்களே சீவன்முத்தர் - அவர்களே சீவன்முத்தர்களாம், கேழுயர் மகிழ்ச்சி - விளங்கிய மேலானகளிப்பும், அச்சம் - பயமும், சினம் - கோபமும், இன்மை - தரித்திரமும், பொறாமை-அழுக்காறும், கேதம் - துன்பமுமாகிய, ஊழுறு மிவற்றைநோக்காவுளத்தினர் சீவன்முத்தர்- ஊழினாலடையுமிவைகளைப் பாராத மனத்தோரே சீவன்முத்தராம்—எ-று.

(இ-ள.)சூழ்ந்திருக்கின்ற சுகதுக்கங்கள் தன்னைத் தொடர்ந்தால் ஒருபோதிலும் அழுந்துதலும் மிதத்தலு மில்லாத அவர்களே சீவர்முத்தர்களாம். விளங்கிய மேலானகளிப்பும், பயமும், கோபமும், தரித்திரமும், அழுக்காறும், துன்பமுமாகிய, ஊழினாலடையு மிவைகளைப் பாராத மனத்தோரே சீவன்முத்தராம். ()

சுழுத்திபோலாறிநின்ற பாவனைத்தொழிலினாலே
பழுத்தநெஞ்சதனினீங்காச் சாக்கிரம்பயில்வோர்நாளும்
விழுத்தகுகலைகள்சூழ்ந்த மதியெனமேலோர்மேவ
முழுத்தமும்பிரிவிலோரே முத்தரென்றுரைக்கத்தக்கோர்.

(இ-ள்.) சுழுத்திபோல் - சுழுத்தியவத்தையைப்போல, ஆறிநின்ற பாவனைத்தொழிலினால் - சாந்தமானபாவனாவிருத்தியினால்,பழுத்தநெஞ்சதனால் - பக்குவமான மனதினால், நீங்காச்சாக்கிரம்பயில்வோர் - தீர்க்க

சொற்பனத்திற்பழகுபவர்கள், நாளும் - எப்போதும், விழுத்தகு கலைகள் சூழ்ந்த மதியென - சிறந்த கலைகணிறைந்த பூர்ணசந்திரனைப்போல, மேலோர்மேவ - சத்துக்கள் விரும்ப, முழுத்தமும் பிரிவிலோரே - முழுதும் பிரிவில்லாதவர்களே, முத்தரென் றுரைக்கத் தக்கோர் - சிவன் முத்தர்களென்று சொல்லத் தருக்தவர்கள்—எ-று.

(இ-ரை.) சுழுத்தியவத்தையைப்போல சாந்தமானபாவனுவிருத்தியினுல்பக்குவமானமனதினுல் தீர்க்கசொற்பனத்திற்பழகுபவர்கள் எப்போதும் சிறந்த கலைகணிறைந்த பூர்ணசந்திரனைபபோல சத்துக்கள் விரும்ப முழுதும் பிரிவில்லாதவர்களே சீவன்முத்தர்களென்று சொல்லத்தருந்தவர்கள்—என்பதாம். (உக)

## இச்சையை முழுதுங் கெடுக்கவேண்டுமெனல்.

புறப்பொருள்விட்டாலுள்ளே பூண்டமாலென்றுசொல்வர்
மறப்பறவனைத்தும்விட்டான் மாண்டமாலென்றுசொல்வர்
திறப்படவெனக்கீதாக வென்றெழுஞ்சிந்தையாசை [டும்.
துறப்பில்பொன்விலங்காமித்தைத் துவக்கறத்துடைத்தல்வேண்

(இ-ள்.) புறப்பொருள்விட்டால் - புறம்பிலுள்ள வஸ்துக்களின் (பற்றை) விடுத்தால், உள்ளேபூண்டமாலென்றுசொல்வர் - அகப்பற்ற திருஷ்டினியென்று சொல்லுவார்கள், மறப்பறவனைத்தும்விட்டால்-மறப்பின்றி (வஸ்துக்களில்ருக்கின்ற) சகல விச்சையையு நீக்கினுல், மாண்டமா லென்று சொல்வர் - முத்ததிருஷ்டினியென்று சொல்லுவார்கள் திறப்படவெனக்கீதாகவென்று - திரமாயெனக்கிதுவாகுமென்று, எழுஞ்சிந்தையாசை-உண்டாகின்ற (பாவனையே) திருஷ்டினயாகும், துறப்பில்-விடுக்கக் கூடாத, பொன்விலங்காமித்தை - சொர்ன விலங்காகிய வித்திருஷ்டினியை, துவக்கறத்துடைத்தல்வேண்டும் - தொந்தமறக்கெடுக்கவேண்டும்.

(இ-ரை.) புறம்பிலுள்ள வஸ்துக்களின் பற்றைவிடுத்தால் அகப்பற்ற திருஷ்டினியென்று சொல்லுவார்கள். மறப்பின்றிவஸ்துக்களி லிருக்கின்ற சகல விச்சையையு நீக்கினுல் முத்ததிருஷ்டினியென்று சொல்லுவார்கள். திரமா யெனக்கிதுவாகுமென்று உண்டாகின்ற பாவனையே திருஷ்டினயாகும் விடுக்கக்கூடாதசொர்னவிலங்காகிய வித்திருஷ்டினியை தொந்தமறக்கெடுக்கவேண்டும்.

சத்தசத்தென்னப்பட்ட சகலபாவனையிலென்றுங்
கொத்தறவாசைமாற்றிக் குறைவில்பேருளத்தனுகிச்

சுத்தநல்லுதாரமான சொரூபத்தினிற்பாய்பெத்த
முத்தமாமாசையின்ப துன்பங்கண்முழுதுநீக்கி.

(இ-ள்.) சத்தசத்தென்னப்பட்ட - உள்ளதில்லதென்று சொல்லப்பட்ட, சகலபாவனையில் - சமஸ்த பாவனைகளிலும், என்றுங்கொத்தற - எப்பொழுதுமிகாமல், ஆசைமாற்றி - இச்யையைக்கெடுத்து, குறைவில் பேருளத்தனுகி - பூரணமான மனதுடையவனாய், பெத்தமுத்தமாமாசை-பந்தவிச்சையு மோக்ஷவிச்சையுமாகிய (விவைகளையும்), இத்துன்பங்கள் - சுகதுக்கங்களையும், முழுதுநீக்கி-முழுமையுந்தள்ளி, சுத்தநல்லுதாரமான-பரிசுத்தமுள்ள நல்லகெம்பீரமாகிய, சொரூபத்தினிற்பாய் - (ஆத்மஞான) ஸ்வரூபத்தி லிருப்பாய்—எ-று.

(இ-ா.) உள்ளதில்லதென்று சொல்லப்பட்ட சமஸ்தபாவனைகளிலும் எப்பொழுதுமிகாமல் இச்சையைக்கெடுத்து பூரணமானமனதுடையனாய் பந்தவிச்சையு மோட்சவிச்சையுமாகிய விவைகளையும் சுகதுக்கங்களையும் முழுமையுந்தள்ளி பரிசுத்தமுள்ள நல்ல கெம்பீரமாகிய ஆத்மஞானஸ்வரூபத்திலிருப்பாய்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) முத்தர்கலின் சிறப்பையும் பெத்த விடுதியையுங் கூறினதென்பதாம். (௨௫)

---

ஆத்மவிசாரமுள்ளவர்களுக்குரிய நான்குநிச்சயமறிவிக்கத்தொடங்கி
முதலாவது நிச்சயத்தி னிலக்கண மறிவித்தல்.

பேனமுந்திரையுமில்லாப் பெருங்கடல்போலநிற்பாய்
மானவகேண்மற்றொன்றுமாசிலாவிசாரமுள்ளோர்க்
கானநிச்சயநாலுண்டா மடிதலைமட்டுநானே
யீனலுற்றவர்தாய்தந்தை யென்பதோரறுதிதானே.

(இ-ள்.) பேனமுந்திரையுமில்லா - நுரையுமலையுமின்றிய, பெருங்கடல்போல நிற்பாய்-மகோததியைப்போல (வசைவற்) றிருப்பாய், மானவ மனிதவடிவமுடைய ஸ்ரீராமா, மற்றொன்றுகேள் - வேறொன்றை யாஞ் சொல்லக்கேட்பாய், மாசிலாவிசாரமுள்ளோர்க்கு - குற்றமற்ற விசாரணையுள்ளவர்களுக்கு, ஆனநிச்சய நாலுண்டாம் - ஆகிய நிச்சங்க ணான்குண்டாகும், அடிதலைமட்டுநானே-பாதமுதற்சிரசந்தமானசரீரநான், தாய்தந்தை - மாதாபிதாக்கள், ஈனலுற்றவர் - (என்னைப்) பெற்றவர்கள், என்பதோரறுதிதான் - என்பதொருநிச்சயம்—எ-று.

(இ-ா.) நுரையுமலையுமின்றிய மகோததியைப்போல வசைவற்றிருப்பாய், மனிதவடிவமுடைய ஸ்ரீராமா! வேறொன்

றை யாஞ் சொல்லக்கேட்பாய் குற்றமற்ற விசாரணை யுள்ளவர்களுக்கு ஆகிய நிச்சயங்களுன்குண்டாகும். பாதமுதற் சிரசந்தமான சரீரநான், மாதாபிதாக்கள், மாதாபிதாக்கள் என்னைப் பெற்றவர்கள் என்பதொரு நிச்சயம்—என்பதாம். (உச)

இரண்டாவது நிச்சயத்தி னிலக்கண மறிவித்தல்.

கன்றியபந்தமாகு மிதுமெய்ம்மைக்கருதாவாற்று
னின்றனவனைத்தின்மேலோ னெல்லின்வாலினுஞ்சற்றேநா
னென்றிரண்டாவதான நிச்சயமெய்துமென்னி
லொன்றியமுத்தியுண்டா முத்தமர்க்குடைமையாகும்.

(இ-ள்.) மெய்ம்மைக்கருதாவாற்றால் - உண்மையை நினையாதபடியினல், இது-இந்நிச்சயம், கன்றிய பந்தமாகும் - கொடிய பந்தத்தையுடையதாம், நின்றன வனைத்தின்மேலோன் - இருக்கின்ற சகலவஸ்துக்களினும் தீதனுகியும், நெல்லின்வாலினுஞ்சற்றே நானென்று - நெல்லினது வாலினுஞ் சூட்சுமமாகியு மிருக்கின்றவனே யானென்று (சொல்லப்பட்ட), இரண்டாவதான நிச்சயம் - இரண்டாவதாகிய நிச்சயமானது, எய்துமென்னில் - அடையுமானல், ஒன்றிய முத்தியுண்டாம் - பொருந்திய மோக்ஷமுண்டாகும், உத்தமர்க்குடைமையாகும்-சத்துக்களுக்குள்ளதாகும்-எ-று.

(இ-ரை.) உண்மையை நினையாதபடியினல் இந்நிச்சயம்கொடிய பந்தத்தையுடையதாம். இருக்கின்ற சகலவஸ்துக்களினும்தீதனுகியும் நெல்லினது வாலினுஞ் சூட்சுமமாகியு மிருக்கின்றவனே யானென்று சொல்லப்பட்ட இரண்டாவதாகிய நிச்சயமானது அடையுமானல் பொருந்திய மோக்ஷமுண்டாகும் சத்துக்களுக்குள்ளதாகும்—என்பதாம். (உரு)

மூன்றாவதுநிச்சய நான்காவது நிச்சயமென்னு மிரண்டி
விலக்கண மறிவித்தல்.

புவியெலாமெனதுரூபம் பொன்றுதலிலனுனென்று
குவிவறக்காண்டன்மூன்ற நிச்சயந்துறைவில்வீடா!
மவியுறுமுலகுநானு மனைத்தும்பொய்விண்போலென்றுந்
தவிர்கிலமென்றனுலா நிச்சயந்தனிவீடாகும்.

(இ-ள்.) புவியெலாமெனதுரூபம் - சகங்களனைத்து மெனதுஸ்வரூபம், நான்பொன்றுத லிலனுனென்று - யானழிவில்லாதவனென்று, குவிவறக்காண்டல் - சங்கோசமில்லாமற்காணபது, மூன்று நிச்சயம் - மூன்று

வது நிச்சயமாம், குறைறில்வீடாம் - (அது) குறைவற்றமோக்ஷமாம், அவி யுறு முலகும் - கெடுதலடைகின்றசகமும், நானும் - (அறிகின்ற) யானு (மாகிய), அனைத்தும்பொய் - சகலமு மசத்தியமே, விண்போலென்றுந் தவிர்கிலமென்றல் - ஆகாயம்போல (யா) மெப்போது நீங்கிலமென்பது, நாலாநிச்சயம் - நான்காநிச்சயமாம், தனிவீடாகும் - ஈதொப்பற்ற மோக்ஷ மாம்—எ-று.

(இ-ள்.) சகங்களனைத்து மெனதுஸ்வரூபம், யானழிவில்லா தவனென்று சங்கோசமில்லாமற்காண்பது மூன்றுவது நிச்சயம் அது குறைவற்ற மோக்ஷமாம். கெடுதலடைகின்ற சகமும் அறிகி ன்ற யானுமாகிய சகலமும் சத்தியமே. ஆகாயம்போல யாமெப் போது நீங்கிலமென்பது நான்கா நிச்சயமாம். ஈதொப்பற்ற மோ க்ஷமாம்—என்பதாம். (உசா)

## இந்நான்கு நிச்சயத்தின் பலாபலனைக் கூறல்.

பெத்தவாசையதாமுன்னே பேசுநிச்சயமதொன்றுஞ்
சுத்தவாசைகளாமூன்று நொய்யவாய்த்துகளில்சீவன்
முத்தர்பால்விளங்குமிந்த மூன்றினுளெல்லாநானென்
றொத்ததோர்நிச்சயத்தை யுறிற்பின்னையுள்ளஞ்சோரா.

(இ-ள்.) முன்னேபேசு நிச்சயமதொன்றும் - முன்புசொல்லப்பட்ட நிச்சயமொன்றும், பெற்றவாசையதாம் - பத்த திருஷ்டினியையுடையதாம், சுத்தவாசைகளா மூன்றும் - பரிசுத்த (முத்த) திருஷ்டினியை யுடைய மூன்றும், நொய்யவாய் - சொச்சமாய், துகளில் சீவன் முத்தர்பால் விளங் கும் - குற்றமற்ற சீவன் முத்தர்களிடத்தில் ப்ரகாசிக்கும், இந்த மூன்றி னுள் - இம்மூன்றுக்குள், எல்லா நானென்று - சகலமு நானென்று, ஒத்த தோர் நிச்சயத்தை யுறில் - பொருந்திய வொப்பற்ற நிச்சயத்தைப் பொரு ந்துவானுயின், பின்னை யுள்ளஞ்சோரா - பின்புமனமானதுசுகதுக்கங்களை யடையாது—எ-று.

(இ-ள்.) முன்பு சொல்லப்பட்ட நிச்சயமொன்றும் பத்ததி ருஷ்டினியையுடையதாம். பரிசுத்தமுத்த திருஷ்டினியையுடைய மூன்றிம் சொச்சமாய் குற்றமற்ற சீவன்முத்தர்களிடத்திற்ப்ரகா சிக்கும் இம்மூன்றுக்குள் சகலமுநானென்று பொருந்திய வொப் பற்ற நிச்சயத்தைப் பொருந்துவனுயின் பின்புமனமானது சுகது க்கங்களை யடையாது—என்பதாம்.

(இ-ச-க-ம்.) முதனிச்சயத்துக்குப்பந்தமும் மற்ற மூன்று நிச்சயத்து க்கு முத்தியும் ப்ரயோசனமாமென்பதாம். (உஎ)

## ஆத்மாநாத்ம விலக்கண மறிவித்தல்.

சூனியம்பகுதிமாயை பிரமஞ்சிற்சோதிஞான
மீனமில்புருடனுன்மா வீசானன்சிவமேநித்த
மானவையென்னலாமொன் றிரண்டெனுமகல்பேதத்தால்
வானுயர்சகம்படைக்கும் விநோதத்தால்வளருமன்றே.

(இ-ள்.) சூனியம் - சூனியமும், பகுதி - ப்ரகிருதியும், மாயை-மாயையும், பிரமம் - பிரமமும், சிற்சோதி - சிற்ப்ரகாசமும், ஞானம் - அறிவும், ஈனமில் புருடன் - குறைவில்லாத புருடனும், ஆன்மா - ஆத்மாவும், ஈசானன்-ஈசானனும், சிவம் - சிவமும், நித்தமானவை-நித்தியமுமானவிவைகளே, என்னலாம் - (பிரமமென்று) சொல்லலாகும், ஒன்றிரண்டெனுமகல் பேதத்தால் - ஒன்றென்னு மிரண்டென்னும் விரிந்த வேற்றுமையினால், வானுயர் சகம்படைக்கும் - உயர்வான சகத்தை யுண்டாக்குகின்ற, விநோதத்தால் - விளையாட்டினால், வளரும் - பிரமசத்தி வளரும்—எ-று.

(இ-ை.) சூனியமும், ப்ரகிருதியும், மாயையும், பிரமமும், சிற் ப்ரகாசமும், அறிவும், குறைவில்லா புருடனும், ஆத்மாவும், ஈசானனும், சிவமும், நித்தியமுமான விவைகளே பிரமமென்று சொல்லலாகும். ஒன்றென்னு மிரண்டென்னும்விரிந்தவேற்றுமையினால் உயர்வான சகத்தையுண்டாக்குகின்ற விளையாட்டினால் பிரமசத்தி வளரும்—என்பதாம். (உஅ)

---

## ஒன்றிலும் பற்றற்றிருக்கவேண்டுமெனல்.

ஒன்றெனும்பரமரூபத் தொருசத்தியொருமையாலே
நின்றெழுகின்றதன்றே நின்னதுபிறரதென்றும்
பொன்றியதிருந்ததென்று ம் பொருள்களிற்கருமந்தன்னி
லென்றுமின்பத்துன்பங்க ளிதயத்திலூன்றவேண்டாம்.

(இ-ள்.) ஒன்றெனும் பரமரூபத்து - ஏகமென்கின்ற பிரமஸ்வரூபத்தி (லுள்ள), ஒருசத்தி - ஒப்பற்றசத்தியானது, ஒருமையால் - (அத)னொருமையினால் நின்றதெழுகின்றது-இருந்துவளருகின்றது, நின்னது - (ஸ்ரீராமா) வுனதென்றும், பிறரதென்றும் - அன்னியரதென்றும், பொன்றியது - இறந்ததென்றும், இருந்ததென்றும் - இருப்பதென்றுஞ் (சொல்லப்பட்ட), பொருள்களில் - விடயங்களிலும், கருமந்தன்னில் - தொழில்களிலும், என்றும் - எப்போதும், இன்ப துன்பங்கள் - சுகதுக்கங்கள்,இதயத்தி லூன்றவேண்டாம் - மனதிற்றரிக்கவேண்டாம்—எ-று.

(இ-ரை.) ஏகமென்கின்ற பிரமஸ்வரூபத்திலுள்ள ஒப்பற்ற சத்தியானது அதனொருமையதினால் இருந்து வளருகின்றது. ஸ்ரீ ராமா! வுனதென்றும் அன்னியரதென்றும் இறந்ததென்றும் இருப்பதென்றுஞ் சொல்லப்பட்ட விடயங்களிலும் தொழில்களிலும் எப்போதும் சுகதுக்கங்கள்மனதிற்றரிக்கவேண்டாம்-எ-ம். ()

## செனியாதவரிலக்கணங்கூறல்.

யாதினுமுயர்ந்துமாளாப் பதம்பற்றியிதயமென்னுஞ்
சீதமாயின்பதுன்பஞ் சேர்கிலாற்பிறப்பிற்சேரார்
சாதுகொள்பகைகொளொத்தல் தஞ்சம்வல்லபங்களுள்ளோ
ரோதியநெறியிற்செல்லு முத்தமர்பிறப்பிற்சேரார்.

(இ-ள்.) யாதினுமுயர்ந்து - எல்லாவற்றிலுமதீதமாய், மாளாப்பதம் பற்றி - கெடாத பரமபதத்தைப்பிடித்து, இதயம்-மனமானது, என்றுஞ் சீதமாய் - எப்போதுங்குளிர்ச்சியாய், இன்பதுன்பஞ்சேர்கிலார் - சுகதுக்கங்களடையாதவர்கள், பிறப்பிற்சேரார் - பிறவியை யடையார்கள், சாதுகொள் - சற்குணமுள்ள (மித்திரனிடத்திலும்), பகைகொள் - துற்குணமுள்ள (சத்துருவினிடத்திலும்), ஒத்தல் - சமத்துவமாகி, தஞ்சம்வல்லபங்களுள்ளோர் - தயாதாக்ஷணியங்களுள்ளவர்களே, ஓதியநெறியிற்செல்லும் - சொல்லியமுறையிற் செல்கின்ற, உத்தமர் பிறப்பிற்சேரார் - உத்தமர்கள் பவத்தை யடையார்கள்—எ-று.

(இ-ரை.) எல்லாமவற்றிலுமதீதமாய் கெடாத பரமபதத்தைப்பிடித்து மனமானது எப்போதுங் குளிர்ச்சியாய் சுகதுக்கங்களடையாதவர்கள் பிறவியை யடையார்கள். சற்குணமுள்ள மித்திரனிடத்திலும் துற்குணமுள்ள சத்துருவினிடத்திலும் சமத்துவமாகி தயாதாக்ஷணியங்களுள்ளவர்களே சொல்லியமுறையிற் செல்லுகின்ற உத்தமர்கள் பவத்தை யடையார்கள்—என்பதாம்.

இழிவுயர்விரண்டுமெண்ணா ரிச்சைகோபங்களெய்தார்
தொழிறொழிலிலாமைவிட்டோர் துன்னியபிறப்பிற்சேரா
ரெழில்பெறவிளங்கியார்க்கு மினியனவினிதிற்சொல்வோ
ரழிபொருளனைத்தின்சால்பை யறிந்துளோர்பிறப்பிற்சேரார்.

(இ-ள்.) இழிவுயர் - தாழ்வு மேன்மையுமாகிய, இரண்டுமெண்ணார் - இரண்டையு நினையார்கள், இச்சைகோபங்களெய்தார் - விருப்புவெறுப்படையார்கள், தொழிறொழிலிலாமைவிட்டோர் - கிரியாக்கிரியைகளை

நீக்கினவர்கள், துன்னிய பிறப்பிற்சேரார் - செறிந்தபிறவியிற்சேரார்கள், எழில்பெறவிளங்கி - அழகாக ப்ரகாசித்து, யார்க்கு மினியன - யாவர்க்கு மின்பமானவைகளை, இனிதிற்சொல்வோர் - இனிமையாகப் பேசுகின்றவர்கள், அழிபொருளனைத்தின் - கெடாநின்ற (பூதவஸ்துக்களி) லெல்லாவற்றின், சால்பை யறிந்துளோர் - குணத்தையறிந்தவர்கள், பிறப்பிற் சேரார் - பவத்தை யடையார்கள்—எ-று.

(இ-ரை.) தாழ்வுமேன்மையுமாகிய இரண்டையுநினையார்கள். விருப்பு வெறுப்படையார்கள். கிரியாக்கிரியைகளை நீக்கினவர்கள் செறிந்தபிறவியிற் சேரார்கள். அழகாக ப்ரகாசித்து யாவர்க்கு மின்பமானவைகளை இனிமையாகப்பேசுகின்றவர்கள் கெடாநின்ற பூதவஸ்துக்களிலெல்லாவற்றின் குணத்தை யறிந்தவர்கள் பவத்தையடையார்கள்—என்பதாம். (கூக)

---

## அநுபவியினது லீலையை நிரூபித்தல்—வேறு.

தேயவாதனைநீங்கிப் பூர்ணமாகித் தெளிந்தவிழி யிமையாமற் சீவன்முத்தி, யாயபாவனையாலே சொரூபமேவி யனவரதமுலகில் விளை யாடுவீரா, மாயவாசையைநீங்கிப் பற்றறுத்து வாதனைபோ யுள்வெளியாய் வாகியத்தே, மேயவாசாரமெலா மியற்றியென் றும் வேண்டியவா றுலகில்விளை யாடுவீரா.

(இ-ள்.) தேயவாதனைநீங்கி - தேயவாதனையைவிட்டு, பூர்ணமாகித் தெளிந்தவிழி - பூரணமாகித்தெளிந்த திருட்டி, இமையாமல் - மறையாமல், சீவன் முத்தியாயபாவனையால் - சீவன் முத்தியாகிய பாவனையினால், சொரூபமேவி - (தனதாத்மஞான) ஸ்வரூபமடைந்து, அனவரதம் - சதாகாலமும், வீரா - ஸ்ரீராமா, உலகில் விளையாடு - உலகத்தின்கண்விளையாடுவாய், மாயவாசையை நீங்கி-பொய்யான விச்சையைவிட்டு, பற்றறுத்து-பற்றுதலைக்கெடுத்து, வாதனைபோய் - வாசனையைவிட்டு, உள்வெளியாய்-உள்ளே சிதாகாசமாய், வாகியத்துமேயவாசாரமெலாமியற்றி - புறத்திலுள்ளவாசாரங்களனைத்துஞ்செய்து, என்றும் - எக்காலத்தும், வேண்டியவாறு - வேண்டின ப்ரகாரம், வீரா - ஸ்ரீராமா, உலகில் விளையாடு - சகத்தில் விளையாடுவாய்—எ-று.

(இ-ரை.) தேயவாதனையைவிட்டு பூரணமாகத்தெளிந்த திருட்டி மறையாமல் சீவன் முத்தியாகிய பாவனையினால் தனதாத்மஞானஸ்வரூபமடைந்து சதாகாலமும் ஸ்ரீராமா! உலகத்தின்கண் விளையாடுவாய். பொய்யானவிச்சையைவிட்டு பற்றுதலைக்கெடுத்து வாசனையைவிட்டு உள்ளே சிதாகாசமாய் புறத்திலுள்ள வாசாரங்களனைத்துஞ்செய்து எக்காலத்தும் வேண்டினப்ரகாரம் ஸ்ரீராமா! சகத்தில் விளையாடுவாய். (கூஉ)

சகத்திலே புறத்தொழிலி லாரம்பித்துத் தனியிதயத் தாரம் பஞ் சற்றுமின்றி, யகத்திலே செயாதோனுய் புறத்தேசெய்வோ னுகியேயுலகில்விளையாடுவீரா, வகுத்தவகங் காரம்போய்ச் சித்தந் தேறி வானம்போனெய்தாகி மாசொன்றற்று, வெகுத்துவமா மடையாள மனைத்துமின்றி வேண்டியவா றுலகில்விளை யாடுவீரா.

(இ-ள்.) சகத்தில் - உலகத்தில், புறத்தொழிலி லாரம்பித்து - புறம் பிலுள்ள கிரியைகளி லாரம்பஞ்செய்து, தனியிதயத்து - தனித்தமன தில், ஆரம்பஞ்சற்றுமின்றி - ஆரம்பமெவ்வளவு மில்லாமல், அகத்திலே செயாதோனுய் - உள்ளே செய்யாதவனுய், புறத்து செய்வோனுகி - புறம் பிற் செய்பவனுய், வீரா - ஸ்ரீராமா, உலகில்விளையாடு - உலகத்தின் கண் விளையாடுவாய், வகுத்த வகங்காரம்போய் - (தேகநானென்று) பகுத்த வகம்பாவங்கெட்டு, சித்தந்தேறி - மனந்தெளிந்து, வானம்போல் - ஆகாய த்தைப்போல, நொய்தாகி - சொச்சமாய், மாசொன்றற்று - களங்கமொ ன்று மின்றி, வெகுத்துவமா மடையாளமனைத்துமின்றி - பலசின்னங்க ளின்றி, வீரா - ஸ்ரீராமா, வேண்டியவாறு - வேண்டியபடி, உலகில்விளை யாடு - சகத்தின்கண் விளையாடுவாய்—எ-று.

(இ-ை.) உலகத்தில் புறம்பிலுள்ள கிரியைகளி லாரம்பஞ் செய்து தனித்த மனதில் ஆரம்ப மெவ்வளவு மில்லாமல் உள்ளே செய்யாதவனுய் புறம்பிற்செய்பவனுய் ஸ்ரீராமா! உலகத்தின்கண் விளையாடுவாய். தேகனுனென்று பகுத்த வகம்பாவங்கெட்டுமனந் தெளிந்து ஆகாயத்தைப்போல சொச்சமாய் களங்கமொன்று மி ன்றி பல சின்னங்களின்றி ஸ்ரீராமா! வேண்டியபடி சகத்தின்கண் விளையாடுவாய்—என்பதாம். (ஙு)

இதமான வுதாரியாய்க் கடினுசாரமின்றியா சாரங்கட்கெளி துபின்போய், விதமான வனைத்துக்குஞ் சார்பைநோக்கி வேண்டி யவா றுலகில்விளை யாடுவீரா, புதனுகி நிராசைதனை யுள்ளேதே க்கிப் புறத்தேயா சையிற்றெழில்கள் பூண்டான்போலா, யதனு ளுட் சீதளமாய்ப் புறம்வெய்தாகி யனவரதமுலகில்விளை யாடு வீரா.

(இ-ள்.) இதமானவுதாரியாய் - உரிமையுள்ள வுதாரத்தை யுடையவ னுய், கடினுசாரமின்றி - கடினமானவாசாரமில்லாமல், ஆசாரங்கட்கு - ஆசாரங்களுக்கு, எளிதுபின்போய் - எளிதாகப்பின்சென்று, விதமான வனைத்துக்கும் - பலவிதமாகியசகல (வஸ்துக்களுக்) கும், சார்பைநோக்கி- ஆதாரத்தைப்பார்த்து, வேண்டியவாறு - வேண்டிய ப்ரகாரம், வீரா - ஸ்ரீ ராமா, உலகில்விளையாடு - சகத்தின்கண்விளையாடுவாய், புதனுகி-அறிவை யுடையவனுய், நிராசைதனையுள்ளே தேக்கி - நிராசையுள்ளே நிறைத்து,

புறத்து - வெளியில், ஆசையிற்றொழில்கள் பூண்டான்போலாய் - காமக்கிரியைகளைத் தரித்தவன்போல, அதனு ளுட்சீதளமாய் - அதனுள்ளே குளிர்ந்தவனாய், புறம் வெய்தாகி - வெளியில் வெப்பமுள்ளவனாய், அனவரதம் - சதாகாலமும், வீரா - ஸ்ரீராமா, உலகில் விளையாடு - சகத்தின்கண் விளையாடுவாய்—எ-று.

(இ-ரை.) உரிமையுள்ள வுதாரத்தையுடையவனாய் கடினமான வாசாரமில்லாமல் ஆசாரங்களுக்கு எளிதாகப் பின்சென்று பலவிதமாகிய சகல வஸ்துக்களுக்கும் ஆதாரத்தைப்பார்த்து வேண்டிய ப்ரகாரம் ஸ்ரீராமா! சகத்தின்கண் விளையாடுவாய். அறிவையுடையவனாய் நிராசையுள்ளே நிறைத்து வெளியில் காமக்கிரியைகளைத் தரித்தவன்போல அதனுளுள்ள குளிர்ந்தவனாய் வெளியில் வெப்பமுள்ளவனாய் சதாகாலமும் ஸ்ரீராமா! சகத்தின்கண் விளையாடுவாய்—என்பதாம்.

(இ-எ-க-ம்.) வாசனுக்ஷயஞ்செய்து பூரணாநந்தவேத்தியமாய் விளங்கிய ஸ்வரூபானுபவத்தின லுலகத்தி லிச்சையானபடி சஞ்சரிக்கலாம். ()

---

## திருக்குதிருஷ்டியிற் சகலமும் பிரிய வடிவாமெனல்.

இவன்சுற்ற னிவன்பகைவ னிவனெனென்னு மிவ்வெறும்பொய் யிராமநீ யிறையுமெண்ணே, லவம்பற்று நொய்யமனத்தவர்க் கிவ்வாறு மறிந்தோர்க்குச் சகமுழுது மகலாச்சுற்ற, நிவந்துற்ற பலகோடி பவமோகத்தா னீபகைநீ யுறவென்பர் நிமிடந்தோறு, முவந்துற்ற மயக்கிதுவாம் பரமார்த்தத்தா லுலகெல்லாம் பகையாகு முறவுமாகும்.

(இ-ள்.) இவன் சுற்றன் - இவனுறவன், இவன்பகைவன்-இவன்பகைஞன், இவனெனென்னும் - இவனெனென்கின்ற, இவ்வெறும்பொய்-இந்த மிகுந்தபொய்யை, இராமநீ மிறையுமெண்ணேல் - இராமா நீ சற்றுநினையாதே, அவம்பற்றுநொய்யமனத்தவர்க்கு - பயனின்மையைப்பிடித்த வற்பமனதுடையவர்களுக்கு, இவ்வாறும்-இந்தப்ரகாரமாம், அறிந்தோர்க்கு-அறிஞருக்கு, சகமுழுதுமகலாச்சுற்றம் - உலகமுழுது நீங்காதவுறவாகும், நிவந்துற்ற பலகோடி - ஓங்கியளவில்லாத, பவமோகத்தால் - சநநமயக்கத்தினால், நீ பகை - நீபகைவனென்றும், நீயுறவென்பர் - நீயுறவென்றுஞ் சொல்லுவார்கள், நிமிடந்தோறும் - க்ஷணந்தோறும், உவந்துற்றமயக்கிது வாம் - களிப்புற்ற மயக்கமான திதுவேயாகும், பரமார்த்தத்தால் - எதார்த்த திருஷ்டியினால், உலகெலாம் - சகங்களனைத்தும், பகையாகும் - பகையுமாம், உறவுமாகும் - உறவுமாகும்—எ-று.

(இ-ரை.) இவனுறவன், இவன்பகைஞன், இவனெனென்கின்ற இந்த மிகுந்த பொய்யை இராமா! நீ சற்றுநினையாதே பயனின்

மையைப்பிடித்த வற்ப மனதுடையவர்களுக்கு இந்த ப்ரகாரமாம். அறிஞருக்கு உலகமுழுது நீங்காத வுறவாகும். ஓங்கியளவில்லாத சநநமயக்கத்தினால் நீபகைவனென்றும் நீயுறவென்றுஞ் சொல்லுவார்கள். க்ஷணந்தோறும் களிப்புற்றமயக்கமான திதுவேயாகும். எதார்த்ததிருஷ்டியினால் சகங்களனைத்தும் பகையுமாம் உறவுமாகும்—என்பதாம்.

(இ-ஃ.) சகல சீவர்களுந் தன தம்சமாயிருக்கின்றபடியா லவை தனக்குறவாகுமென்பதாம். (௩௫)

---

### இவ்வனுபவநிச்சயங்கூறி யிஃதுறுதிப்படுத்துநிமித்தம் புண்ணியபாவனன் ஞானமடைந்ததைத் திருஷ்டாந்தமாகக் கூறல்.

இதுபொருட்டா லிதிகாசமொன்றுகேள்பண்டியைந்த துகங்கையின்கரையி னிருடிமைந்த, ரதுலமையேந்திரகிரியி னயலேவாழ்வோ ரருந்தவத்தோர் தீர்க்கதவனளிக்கவந்தோர், சதுமறைதேர் புண்ணியபா வனனென்றுள்ளார் தந்தையொடு கங்கையின்பாற் றவஞ்செய்நாளிற், பொதுவுறச்செய் தவப்பயனாற் காலமுற்றிப் புண்ணியனும் புண்ணியவான் போதம்பெற்றான்.

(இ-ள்.) இதுபொருட்டு - இவ்வனுபவம் விளங்கும்பொருட்டு, பண்டியைந்தது - முன்னுள்ளதாகிய, இதிகாசமொன்றுகேள் - ஒருகதையைக்கேட்பாய், கங்கையின்கரையின் - கங்காதீரத்தில், இருடிமைந்தர் - இருடியுத்திரரும், அதுலமயேந்திரகிரியின் - சமானமற்ற மயேந்திரமலையினது, அயலேவாழ்வோர் - பக்கத்தில் வாழுகின்றவர்களும், அருந்தவத்தோர் - அரிய தவத்தையுடையவர்களும், தீர்க்கதவன் - தீர்க்கதவனென்னு நாமத்தையுடைய ரிஷியானவர், அளிக்கவந்தோர் - பெறவந்தவர்களுமாகிய, சதுமறைதேர் - நான்கு வேதங்களையு மாராய்ந்தறிந்த, புண்ணியபாவனனென்றுள்ளார் - புண்ணியனென்றும் பாவநென்று நாமத்தையுடையவர்கள், தந்தையொடு - பிதாவுடன், கங்கையின்பால் - கங்காதீரத்தில், தவஞ்செய்நாளில் - தவமியற்றுங்காலத்தில், பொதுவுறச்செய் தவப்பயனால் - நிட்காமியமாகச்செய்த தபோபலத்தால், காலமுற்றி-காலமுதிர்ந்து, புண்ணியனும் புண்ணியவான் - புண்ணியனென நாமமுள்ள புண்ணியவான், போதம்பெற்றான் - ஞானமடைந்தான்—எ-று.

(இ-ரை) இவ்வனுபவம் விளங்கும்பொருட்டு முன்னுள்ளதாகிய ஒரு கதையைக் கேட்பாய். கங்காதீரத்தில் இருடி புத்திரரும் சமானமற்ற மயேந்திரமலையினது பக்கத்தில் வாழுகின்றவர்களும், அரியதவத்தையுடையவர்களும், தீர்க்க தவனென்னு நாமத்

தையுடைய ரிஷியானவர் பெறவந்தவர்களுமாகிய நான்கு வேதங் களையு மாராய்ந்தறிந்த புண்ணியனென்றும் பாவனென்று நாமத் தையுடையவர்கள். பிதாவுடன் கங்காதீரத்தில் தவமியற்றுங் கால த்தில் நிட்காமியமாகச்செய்த தபோபலத்தால் காலமுதிர்ந்துபுண் ணியனென நாமமுள்ள புண்ணியவான் ஞானமடைந்தான்-எ-ம். ()

## பாவனனது பக்குவங்கூறல்.

அங்கவன்பின் னவனனபாவனென்போ னறிவுடைமை பாதி யளவாதலாலே, செங்கதிரோ னுதிப்பதன்மு னருணன்றோன்றச் செங்கமலங் கிண்கிணிவாய்ச் செய்வதொத்து, துங்கவறியாமையு மெய் வீடுமின்றித் தோளாவெந்திரம்போலத் துவண்டுநின்றான், பொங்குதவத் தீர்க்கதவ னென்னுந்தந்தைபோகத்தி லிச்சையெ லாம் புந்திதீர்ந்தான்.

(இ-ள்.) அங்கவன்பின்னவனன - அவன்றம்பியாகிய, பாவனென் போன் - பாவனென்னும் பெயரையுடையவன், அறிவுடைமை - ஞானம டைந்தது, பாதியளவாதலால்-அரைவரிசையானபடியினால், செங்கதிரோ னுதிப்பதன்முன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனுதிப்பதற்கு முன் னம், அருணன்றோன்ற - அருணோதயமாக, செங்கமலம் - செந்தாமரை ப்பூ, கிண்கிணிவாய் செய்வதொத்து - சதங்கையின் வாய்க்கொப்பாய், துங்கவறியாமையும் - அதிகவறியாமையும், மெய்வீடுமின்றி - உண்மை ஞானமுமில்லாமல், தோளாவெந்திரம்போல - ஊசலைப்போல, துவண்டு நின்றான் - துவள்வுற்றுநின்றான், பொங்குதவம் - மிகுந்த தவமுடைய, தீர்க்க தவனென்னுந்தந்தை - தீர்க்க தவனென்கின்ற பிதாவானவர், போகத்தி லிச்சையெலாம் - விடயபோகத்திலாசைக ளனைத்திலும், புந்தி தீர்ந்தான் - புத்திவிடுத்தான்—எ-று.

(இ-ா.) அவன்றம்பியாகிய பாவனென்னும் பெயரையுடை யவன் ஞானமடைந்தது அரவரிசையானபடியினால், சிவந்தகிரண ங்களையுடைய சூரியனுதிப்பதற்கு முன்னம் அருணோதயமாக செ ந்தாமரைப்பூ சதங்கையின்வாய்க்கொப்பாய், அதிக வறியாமை யும் உண்மைஞானமு மில்லாமல் ஊசலைப்போல துவள்வுற்று நின் றான். மிகுந்த தவமுடைய தீர்க்க தவனென்கின்ற பிதாவானவர் விடயபோகத்தி லாசைக ளனைத்திலும் புத்திவிடுத்தான்-எ-ம். ()

## விதேகமுத்தியடைதல்.

காலமே காரணமாய்க் குடும்பவாழ்விற் காதலொழித்தறச் செறிந்த காயந்தன்னைச், சாலமிகுதொழிற்பறவைக் கிடமாங்கூட்டைச் சானவியின் கரைவரையிற் றானேதீர்ந்தான், கோலியொரு சுமைசுமப்பான் குறித்தவெல்லைக் கொண்டுபோய்ப்போடுவபோற் குரம்பைப்போட்டு, மாலுறுபற்றொன்றின்றிப் பூவினாற்றம் வானுறல்போற் பரமபத வாழ்வுபெற்றான்.

(இ-ள்.) காலமே காரணமாய் - காலங்காரணமாக, குடும்பவாழ்வில் - சமுசாரவாழ்க்கையில், காதலொழித்து - ஆசையைவிட்டு, சாலமிகுதொழிற்பறவைக்கு - மிகுந்ததொழிலென்னு மகங்கரப்பக்ஷிகளுக்கு, இடமாங்கூட்டை - இடமாகுங் கூடுபோன்ற, அறச்செறிந்த காயந்தன்னை - மிகவு நெருங்கின சரீரத்தை, சானவியின்கரைவரையில் - கங்காதீரத்திருக்கின்ற மலையினிடத்தில், தானேதீர்ந்தான் - தானே விட்டுவிட்டான், கோலியொரு சுமைசுமப்பான் - சங்கற்பித்தொரு சுமையைச்சுமப்பவன், குறித்தவெல்லை - குறித்தவிடத்தில், கொண்டுபோய்ப்போடுவபோல் - கொண்டுபோய்ப் போடுவதுபோல, குரம்பைப்போட்டு - சரீரத்தைவிட்டு, மாலுறுபற்றொன்றின்றி - ஆசைபொருந்தின பற்றுக்களொன்றுமில்லாமல், பூவினாற்றம் வானுறல்போல் - புட்பவாசனை யாகாயத்திற் பொருந்துவதுபோல, பரமபதவாழ்வுபெற்றான் - பிரமாநந்தத்தை யடைந்தான்—எ-று.

(இ-கா.) காலங்காரணமாக சமுசாரவாழ்க்கையில் ஆசையை விட்டு மிகுந்த தொழிலென்னு மகங்கரப்பக்ஷிகளுக்கு, இடமாகுங்கூடுபோன்ற மிகவு நெருங்கின சரீரத்தை கங்காதீரத்திருக்கின்ற மலையினிடத்தில் தானேவிட்டுவிட்டான். சங்கற்பித்தொரு சுமையைச் சுமப்பவன். குறித்தவிடத்தில் கொண்டுபோய்ப் போடுவதுபோல சரீரத்தைவிட்டு ஆசைபொருந்தின பற்றுக்களொன்று மில்லாமல் புட்பவாசனை யாகாயத்திற் பொருந்துவதுபோல பிரமாநந்தத்தை யடைந்தான்—என்பதாம். (௩அ)

## புண்ணியபாவ வனுபவங்கூறல்.

தொழிலின்றிக் காட்சியெனுந் துன்பமின்றித் தொல்லறிவு தோன்றிடமாஞ் சொரூபம்பெற்ற, வழிவின்முனி யிறத்தலும்பா யவன்றன்பன்னி யம்புயநின் றகலளிபோ லங்கம்விட்டாள், விழிகணிகர் தாய்தந்தை யிறப்பக்கண்டு மேற்செயவேண்டியகிரியை

விதியிற் செய்வான். வழிபடுபுண் ணியன்முயன்றான் பாவன்றானும் வருத்தமெனுங் கடற்புகுந்து மயங்கலுற்றான்.

(இ-ள்.) தொழிலின்றி - தொழிலில்லாததாகியும், காட்சியெனுந் துன்பமின்றி - சகமென்னுந்துன்பமில்லாததாகியும், தொழில்லறிவுதோன்றிடமாம் - பழமையான ஞாதுருஞேயமாதற்கிடமாகியு மிருக்கின்ற, சொரூபம்பெற்ற - (தனதாத்ம) ஸ்வரூபத்தைப்பெற்ற, அழிவின்முனியிறத்தலும் - கெடாத (சத்துவடிவமான) முனி (யுடன்) மரிக்கவும், அவன்றன் பன்னி - அவனது பாரியானவள், அம்புயசின் றகலளிபோல் - தாமரைப் பூவிலிருந்து நீங்குகின்ற வண்டைப்போல, அங்கம்விட்டாள் - சரீரத்தை நீங்கினாள் விழிகணிகர் - கண்களையொத்த, தாய்தந்தை யிறப்பக்கண்டு - மாதாபிதாக்கண் மரிக்கப்பார்த்து, மேற்செயவேண்டிய கிரியை - இனிச் செய்யவேண்டிய கருமங்களை, விதியிற்செய்வான் - விதிப்படி செய்யும் பொருட்டு, வழிபடு புண்ணியன் முயன்றான் - வழிபடுகின்ற புண்ணியனைத்தனஞ்செய்தான், பாவன்றானும் - பாவனனும், வருத்தமெனுங் கடற்புகுந்து - துக்கமென்னுஞ் சமுத்திரத்திலழுந்தி, மயங்கலுற்றான் - மயக்கமடைந்தான்—எ-று.

(இ-ளை.) தொழிலில்லாததாகியும், சகமென்னுந் துன்பமில்லாததாகியும், பழமையான ஞாதுருஞேயமாதற் கிடமாகியுமிருக்கின்ற தன தாத்மஸ்வரூபத்தைப்பெற்ற கெடாத சத்துவடிவமான முனியுடன் மரிக்கவும், அவனது பாரியானவள் தாமரைப்பூவிலிருந்து நீங்குகின்ற வண்டைப்போல சரீரத்தை நீங்கினாள். கண்களையொத்த மாதாபிதாக்கண் மரிக்கப்பார்த்து இனிச்செய்யவேண்டிய கருமங்களை விதிப்படி செய்யும்பொருட்டு வழிபடுகின்ற புண்ணியனைத்தனஞ்செய்தான். பாவனனும் துக்கமென்னுஞ் சமுத்திரத்திலழுந்தி மயக்கமடைந்தான்—என்பதாம். (ருக)

அன்னேயன் னேயென்னு மென்னையீன்ற வையாவையாவென்னு மந்தோவந்தோ, வென்னேயென் னேயென்னு மாற்றாகி யெரிமிதித்தாற் போற்கான மெங்குமோடுந், தன்னேரின் முன்னவனை நோக்கித்தேறான் றம்பிமிகத் தளர்வுற்றான் றளராமுன்னோன், மின்னேரு முடற்கிறத்த லியல்பேயென்று வேறொன்று நினையாமல் விதியேசெய்தான்.

(இ-ள்.) தம்பி - பாவனனவன், என்னையீன்ற-என்னைப்பெற்ற, அன்னே யன்னேயென்னும் - தாயேதாயேயென்பன், ஐயாவையாவென்னும் - பிதாவே பிதாவேயென்பான், அந்தோவந்தோ - ஐயோ வையோவென்பான், என்னேயென்னேயென்னும் - இதென்ன விதென்னவென்பவன், ஆற்றாகி - (துன்பத்துக்குச்) சகிக்க மாட்டாதவனாய், எரிமிதித்தாற்

போல் - நெருப்பை மிதித்தவனைப்போல, கானமெங்குமோடும் - வனங்க ளெல்லா மோடுவான், தன்னேரில் - தனக்கெதிரிலிருக்கின்ற, முன்ன வனைநோக்கித்தேறுன் - தமையனைப்பார்த்துத் தெளியான், மிகத்தளர் வுற்றுன் - மிகவுந் தளர்வையடைந்தான், தளராமுன்னேன் - தளர்ச்சி யில்லாத தமையனுனவன், மின்னேருமுடற்கு - மின்னலையொத்த சரீர த்துக்கு, இறத்தவியல்பேயென்று - மரிப்பது சுபாவமேயென்று, வேறொ ன்று நினையாமல் - மற்றொன்றையுஞ் சிந்தியாமல், விதியேசெய்தான் - (கருமத்தை) விதிப்படி செய்தான்—எ-று.

இ-ரை.) பாவனுனவன் என்னைப்பெற்றதாயே தாயேயென் பன். பிதாவே பிதாவே யென்பான். ஐயோவயோ வென்பான். இதென்ன விதென்ன வென்பவன். துன்பத்துக்குச் சகிக்கமாட் டாதவனுய் நெருப்பை மிதித்தவனைப்போல வனங்களெல்லா மோ டுவான். தனக்கெதிரிலிருக்கின்ற தமையனைப்பார்த்துத்தெளியான் மிகவுந்தளர்வை யடைந்தான். தளர்ச்சியில்லாத தமையனுனவன் மின்னலையொத்த சரீரத்துக்கு மரிப்பது சுபாவமேயென்று மற் றொன்றையுஞ் சிந்தியாமல் கருமத்தை விதிப்படி செய்தான்-எ-ம்.

---

## ஞானேபதேசங் கூறல்.

மறைநெறிகண் முடித்ததற்பின் சோகத்தாலோ வாய்மூடா விளவறனை வந்துசார்ந்து, நிறையறிவாம் புண்ணியன்பாவனனை நோக்கி நெஞ்சழிக்குந் துயரமைந்தா நீத்தலென்னப், பொறை மிகுநின் பிதாநின்னதன்னையோடும் பொருந்தியிருந்துளபதத்தில் பொலிவைக்கேளாய், குறைவுநிறை விலதென்றுந் தனதாய்த்தா ணுய்க் கோதிலதாம் வீடெனும்பேர் கூறவற்றும்.

(இ-ள்.) மறைநெறிகண் முடித்ததற்பின் - வேதமார்க்கத்தின்படி (கரும) நிறைவேற்றினபின்பு சோகத்தால் - துன்பத்தினல், வாய்மூடா விளவறனை - வாய்மூடாமலழுகின்ற தம்பியை, வந்துசார்ந்து - வந்தடை ந்து, நிறையறிவாம் புண்ணியன் - பூரணஞானத்தையுடைய புண்ணியனு னவன், பாவனனைநோக்கி - பாவனனைப்பார்த்து, நெஞ்சழிக்குந்துயரம் - மனதை வருத்துகின்ற துன்பத்தை, மைந்தா - குழந்தாய், நீ நீத்தலெ ன்ன - நீயேனீக்கவில்லை, பொறைமிகு நின்பிதா - பொறுமைமிகுந்த உனது தந்தையானவர், நின்னதன்னையோடும் - உனது மாதாவோடும், பொருந்தியிருந்துள - அமைந்திருக்கின்ற, பதத்தின் பொலிவைக்கே ளாய் - இடத்தின்சிறப்பைக் கேட்பாய், குறைவு நிறைவிலது - அற்பமு

மகத்துமென்பதின்று, என்றும் - எப்போதும், தனதாய் - தனதிடமாய், தானாய் - தன்மயமாய், கோதிலதாம் - குற்றமில்லாததான, வீடெனும் பேர் கூறவற்றாம் - மோக்ஷமென்னு நாமத்தினாற் சொல்லத்தக்கதாம்.

(இ-ள்.) வேதமார்க்கத்தின்படி கரும நிறைவேற்றினபின்பு துன்பத்தினால் வாய்மூடாம லழுகின்ற தம்பியை வந்தடைந்து பூரணஞானத்தையுடைய புண்ணியனானவன் பாவனனைப்பார்த்து, மனதைவருத்துகின்ற துன்பத்தை குழந்தாய்! நீயேனீக்கவில்லை பொறுமை மிகுந்த வுனது தந்தையானவர் உனது மாதாவோடும் அமைந்திருக்கின்ற இடத்தின் சிறப்பைக்கேட்பாய். அற்பமு மகத்து மென்பதின்று எப்போதும் தனதிடமாய் தன்மயமாய் குற்றமில்லாததான மோக்ஷமென்னு நாமத்தினாற் சொல்லத்தக்கதாம்.

(ப-ம்.) அணுத்துவ மகத்துவமில்லையென்பார், குறைவு நிறைவிலதென்றும், தானேதானாய் விளங்குகின்றதுவீடென்பார், தனதாய்த்தானாயென்றுங் கூறினார். (௪௧)

---

## வீட்டினதிலக்கணங்கூறி யஃதுறுதிப்படு நிமித்தஞ் சநநபரம்பரையை யறிவிக்கத்தொடங்குதல்.

அனைவருக்கு மேவுமிட மதுவேயாகு மறிஞருக்கு மெய்யுருவ மதுவேயாகுந், தனையகலா வப்பதத்தில் வாழுந்தாதைதனை நோக்கித் தளருமது தகவோதம்பி, துனைபுனலி னோட்டத்துக் கெய்தும்பள்ளத் தொகுதிபோற் பிறவிதொறுந் தொடர்பாய்ப் போன, வனையுறுநின்றாய்தந்தைக் கிலக்கமுண்டோ மனைமக்கள் சுற்றமொரு மட்டுண்டாமோ.

(இ-ள்.) அனைவருக்கும் - யாவருக்கும், மேவுமிடமதுவேயாகும் - அடையத்தக்கவிட மப்பதமேயாகும், அதுவே அறிஞருக்கு மெய்யுருவமாகும் - அதுவே ஞானவான்களுக்குத் தத்துவஸ்ரூபமாயிருக்கும், தனையகலா - தன்னைவிட்டு நீங்காத, அப்பதத்தில் - அப் (பரம) பதத்தில், வாழுந்தாதை தனைநோக்கி - வாழாநின்ற பிதாவைப்பார்த்து, தம்பிதளருமதுதகவோ - தம்பி நீ தளர்வடைவது ஞாயமோ, துனைபுனலினோட்டத்துக்கு - ஆற்றினீரோட்டத்துக்கு, எய்தும்பள்ளத்தொகுதிபோல் - அடையும்பள்ளத்தின் திரளைப்போல, பிறவிதொறும்-சநநங்கடோறும், தொடர்பாய்ப்போன - தொடர்பாய் நீங்கின, வனையுறுநின்றாய் தந்தைக்கு-பெற்றவுனது மாதாபிதாக்களுக்கு, இலக்கமுண்டோ - கணக்குண்டோ, மனைமக்கள் சுற்றம் - மனைவிபுத்திரர் (முதலிய) வுறவினருக்கு, ஒருமட்டுண்டாமோ - ஓரளவுண்டாமோ—எ-று.

(இ-ரை.) யாவருக்கும் அடையத்தக்கவிட மப்பதமேயாகும். அதுவே ஞானவான்களுக்குத் தத்துவஸ்ரூபமாயிருக்கும். தன்னை விட்டு நீங்காத அப்பரமபதத்தில் வாழாநின்ற பிதாவைப்பார்த்து தம்பி நீ தளர்வடைவது ஞாயமோ? ஆற்றினீரோட்டத்துக்கு அடையும்பள்ளத்தின் றிரளைப்போல சநநங்கடோறும் தொடர் பாய்நீங்கின பெற்ற வுனது மாதாபிதாக்களுக்கு கணக்குண்டோ மனைவி புத்திரர் முதலிய வுறவினருக்கு ஓரளவுண்டாமோ-எ-ம்.

(ப-ம்.) பரமாநந்தமே யாத்மாதாரமாமென்பார், அனைவருக்கு மேவு மிடமதுவென்றும், அவ்வாநந்தமே ஞானத்திற் குருவமாமென்பார். அறிஞருக்கு மெய்யுருவ மதுவேயென்றும், தானாய் விளங்குஞ் சத்தென்பார், தனையகலாவப்பதமென்றுங்கூறினர். (சஉ)

## சநநத்தின் பந்துக்களுக் களவின்றெனல்

பருவங்க டொறும்பெரிய வனத்திற்காய்க்கும் பலங்கள்போ ற்பவங்கடொறும் பரந்தசுற்றங், கருதுங்கா லிறந்தவவர்க்கிரங்க வேண்டிற் கற்பமள வலறினுமோர் கரையுண்டாமோ, சொருப மிலா வஞ்ஞானக் கானன்மேட்டிற் றொடர்ந்தவாதனைக்கோடைச் சுழல்வெங்கானற், பெருகுநீர்ச் சுகாசுகமாந்திரைகண்மோதிப் பேதமொரு கரையின்றிப் பிறழுமன்றே.

(இ-ள்.) பருவங்கடொறும் - காலங்கடோறும், பெரியவனத்தில்-மகாடவியில், காய்க்கும் பலங்கள்போல் - காய்கின்ற கனிகளைப்போல, பவங்கடொறும் - சநநங்கடோறும், பரந்தசுற்றம் - மிகுந்த வுறவினர்களை, கருதுங்கால் - நினைக்கின்றகாலத்தில், இறந்தவவர்க்கு-மரணமடைந்த வவர்களுக்கு, இரங்கவேண்டில் - விசனப்படவேண்டினால் கற்பமளவலறினும்-கற்பகாலமட்டுங் கதறினாலும், ஓர் கரையுண்டாமோ - ஒரு வரம்புண்டாயிருக்குமோ, சொருபமிலா - உருவமில்லாத, அஞ்ஞானக்கானன்மேட்டில்-அறியாமையென்னுங்கானற்றிடலில், தொடர்ந்தவாதனைக்கோடை-தொடர்ந்து வராநின்ற வாசனையென்னும் வெனிற்காலத்தில், சுழல்வெங்கானற் பெருகுநீர் - சுழலுகின்ற வெவ்விய கானற்ப்ரவாகசலமானது, சுகாசுகமாந்திரைகண்மோதி - சுகதுக்கமென்னு மலைகளையடித்துக்கொண்டு, பேதமொருகரையின்றிப் பிறழும் - வேற்றுமையோர் வரம்பில்லாமற்பிரளும்—எ-று.

(இ-ரை.) காலங்கடோறும் மகாடவியில் காய்க்கின்றகனிகளைப்போல சநநங்கடோறும் மிகுந்த வுறவினர்களை நினைக்கின்ற காலத்தில் மரணமடைந்தவர்களுக்கு விசனப்பட வேண்டினால் கற்ப

தாலமட்டுங் கதறினும் ஒரு வரம்புண்டாயிருக்குமோ? உருவ மில்லாத அறியாமையென்னுங் கானற்றிடலில் தொடர்ந்து வரா நின்ற வாசனையென்னும் வெனிற்காலத்தில் சுழலுகின்றவெவ்விய கானற்ப்ரவாகசலமானது, சுகதுக்கமென்னு மலைகளை யடித்துக் கொண்டு வேற்றுமையோர் வரம்பில்லாமற்பிரளும்-எ-ம். (௨௩)

## பாவனையே சுகதுக்கமாமெனல்.

இல்லுறவு பகைநேயங் கோபமாசை யிழிவுயர்வா திகள்வடி வா யெழுந்தஞாலம், புல்லுறுதன் னாமமாத்திரத்தினலே பொலி விந்துவிரி கின்றதலாற் புறனிலுண்டோ, நல்லுறவா நினைத்திடி னல் லுறவேயாவர் நண்ணராய்ப் பாவிக்கி னண்ணராவர், கொல் லுறுநஞ் சமுதிரண்டின் குணங்கள்போலுங் குறித்திடுபா வனைக் கட்டுக் கொலைந்தா லுண்டோ.

(இ-ள்.) இல்லுறவு - மனைவிமுதலிய பந்துவும், பகைநேயம்- திவேட முஞ் சினேகமும், கோபமாசை - வெறுப்பு விருப்பும், இழிவுயர்வாதிகள்- தாழ்வு மேன்மை முதலியவைகளையே, வடிவாயெழுந்தஞாலம் - உருவமா யுண்டான சகமானது, புல்லுறுதன்னாமமாத்திரத்தினல் - பொருந்திய தனது பெயர் மாத்திரத்தினல், பொலிந்து விரிகின்றதலால் - மிகுந்து பரவுகின்றதே யல்லாமல், புறனிலுண்டோ-வேறொன்றினுலுண்டாமோ, நல்லுறவாநினைத்திடில் - நல்லபந்துவாக நினைத்தால், நல்லுறவேயாவர் - நல்லுறவே யாவார்கள், நண்ணராய்ப்பாவிக்கில் - பகைவராகநினைத்தால், நண்ணராவர் - பகைவராவார்கள், கொல்லுறு நஞ்சு - கொல்லுகின்றவிட மும், அமுது - (பிழைப்பிக்கின்ற) வமுதமுமாகிய, இரண்டின்குணங்கள் போலும் - இரண்டின் குணங்களைப்போலவும், குறித்திடு பாவனைக்கட்டு- குறித்திடுகின்ற பாவனுபந்தமானது, கொலைந்தாலுண்டோ - கெட்டா லுண்டாகுமோ—எ-று.

(இ-ரை.) மனைவிமுதலிய பந்துவும், திவேடமுஞ்சினேகமும், வெறுப்பு விருப்பும், தாழ்வுமேன்மை முதலியவைகளையே உருவ மாயுண்டான சகமானது பொருந்திய தனதுபெயர் மாத்திரத்தி னல் மிகுந்து பரவுகின்றதே யல்லாமல் வேறொன்றினு லுண்டா மோ? நல்ல பந்துவாக நினைத்தால் நல்லுறவேயாவார்கள். பகை வராக நினைத்தால் பகைவராவார்கள். கொல்லுகின்ற விடமும் பிழைப்பிக்கின்றவமுதமுமாகிய இரண்டின்குணங்களைப்போலவும் குறித்திடுகின்றபாவனுபந்தமானதுகெட்டா லுண்டாகுமோ-எ-ம்.

## பேதபாவத்தை யபேதஞானத்தைக்கூறல்.

ஒன்றிலேதோன்றியனைத் துருவமான வுணர்வுக்குப்பகையுற வென் றுரைப்பதெங்ங, னின்றியொழி தசைபுண்ணீர் தோல்கண் மேய்ந்த வெலுப்புப்பஞ் சரந்தன்னி லியாமாரென்று, நின்றிவனீ நின்மனத்தா னினைந்து நோக்காய் நிமலமாம் பரமவிழி நெறியா நோக்கிற், பொன்றுதுயர் நீயில்லை நானுமில்லைப் புண்ணியபாவன னெனல்போய்ப் போதந்தோன்றும்.

(இ-ள்.) ஒன்றிலேதோன்றி - ஒன்றான (வாத்மாவி) லுண்டாய், அனைத்துருவமான - சகல வடிவங்களுமாகிய, உணர்வுக்கு - அறிவுக்கு, பகையுறவென்று - பகையென்று முறவென்றும், உரைப்பதெங்ஙன் - சொல்லுவதெப்படி, இன்றியொழி - இல்லாமற்கெடுக்கின்ற, தசை - ஊன்களினாலும், புண்ணீர் - உதிரங்களினாலும், தோல்கள் - சருமங்களினாலும், மேய்ந்த - கட்டியிருக்கின்ற, எலுப்புப்பஞ்சரந்தன்னில்-அஸ்திக்கூடான (சரீர) த்திலிருக்கின்ற, இயாமாரென்று - நாமாரென்று (விசாரிக்கின்), நின்றவனீ - இருந்தவனீயே, நின்மனத்தால் - உன்மனதினால், நினைத்து நோக்காய் - சிந்தித்துப் பார்ப்பாய், நிமலமாம்பரமவிழி - மாசற்ற பிரம திருஷ்டியினது, நெறியானோக்கில் - கிரமமாகப்பார்த்தால், பொன்றுதுயர் நீயுமில்லை - நசிக்கின்ற துன்பமுள்ள நீயென்பதுமில்லை, நானுமில்லை - நானென்பதுமில்லை, புண்ணியபாவன னெனல்போய் - புண்ணியனென்றும் பாவனென்றுஞ் சொல்லப்பட்ட நாமமும்போய், போதந்தோன்றும் - ஞானந்தோற்றும்—எ-று.

(இ-ரை.) ஒன்றான வாத்மாவிலுண்டாய் சகல வடிவங்களுமாகிய அறிவுக்கு பகையென்று முறவென்றும் சொல்லுவதெப்படி? இல்லாமற் கெடுக்கின்ற ஊன்களினாலும், உதிரங்களினாலும், சருமங்களினாலும் கட்டியிருக்கின்ற அஸ்திக்கூடான சரீரத்திலிருக்கின்ற நாமாரென்று விசாரிக்கின் இருந்தவனீயே உன்மனதினால் சிந்தித்துப்பார்ப்பாய். மாசற்ற பிரமதிருஷ்டியினது கிரமமாகப் பார்த்தால் நசிக்கின்ற துன்பமுள்ள நீயென்பதுமில்லை. நானென்பது மில்லை. புண்ணியனென்றும் பாவனென்றுஞ் சொல்லப்பட்ட நாமமும்போய் ஞானந்தோற்றும்—என்பதாம். (௫௫)

### சநநமித்தையாமென் றறிவிக்குநிமித்த மச்சநநாந்தரங்களைக்கூறல்.

ஏகிபதீ வுகடோறும் பிறந்தசென்ம மெண்ணவொண்ணு வின்னுவற் பெருந்தீவத்திற், கோகிலமாய் முன்பிறந்தாய் விலங்குமேகங் குன்றுமர மூர்வனபுட் குலங்கடம்மிற், போகிய சென் மத்தொகுதி புகலவொண்ணுப் பொருந்துமவற் றுன்

கிளையாய்ப் போனூர்க்கெல்லா, மாகுலமுற் றிலயென்னீ யவற்றின் மட்டோ வனந்ததேசப்பிறவி யறையக்கேளாய்.

(இ-ள்.) ஏகிய தீவுகடோறும் - போனதீவுகடோறும், பிறந்தசென்மம் - (நீ) செனித்த சென்மமானது, எண்ணவொண்ணு - எண்ணமுடியாது, இன்னுவற்பெருந்தீவத்தில் - இந்த நாவலென்னு மகாதீவில், முன் கோகிலமாய்ப் பிறந்தாய் - முன்னங் குயிலாகப்பிறந்தாய், விலங்கு - (பின்பு) மிருகங்களும், மேகம் - மேகங்களும், குன்று - மலைகளும், மரம் - விருக்ஷங்களும், ஊர்வன - ஊர்வனங்களும், புட்குலங்கள் - பறவையினங்களுமாகிய, தம்மில் - இவைகளிடத்தில, போகிய சென்மத்தொகுதி - கழிந்தபிறப்பின் றிரளானது, புகலவொண்ணு - சொல்லமுடியாது, பொருந்து மவற்று - பொருந்தாநின்ற வவைகளில், உன்கிளையாய்ப் போனூர்க்கெல்லாம் - உனதுறவினர்களா யிறந்துபோனவர்களுக்கெல்லாம், நீ யாகுலமுற்றிலயென் - நீ விசனப்படாததென்ன, அவற்றின்மட்டோ-அதுமட்டுந்தானே, அனந்த தேசப்பிறவி - இன்ன மளவற்ற தேசங்களிற் செனித்த பவங்களை, அறையக்கேளாய் - சொல்லக்கேட்பாய்—எ-று.

(இ-ரை.) போனதீவுகடோறும் நீ செனித்த சென்மமானது எண்ணமுடியாது. இந்த நாவலென்னு மகாதீவில் முன்னங் குயிலாகப்பிறந்தாய். பின்பு மிருகங்களும், மேகங்களும், மலைகளும், விருக்ஷங்களும், ஊர்வனங்களும், பறவையினங்களுமாகிய இவைகளிடத்தில் கழிந்த பிறப்பின் றிரளானது சொல்லமுடியாது. பொருந்தாநின்ற வவைகளில் உனதுறவினர்களா யிறந்துபோனவர்களுக்கெல்லாம் நீ விசனப்படாததென்ன? அதுமட்டுந்தானே இன்னமளவற்ற தேசங்களிற் செனித்த பவங்களை சொல்லக்கேட்பாய்.

கோசலத்துந் தெசார்ணவத்தும் பௌண்டரத்துங் குச்சரத்துந் துழாரத்துங் கோகனத்தும், போசலத்து மேகையத்துஞ் சாளுவத்தும் பூபதியாய்வானரமாப் புழுவாய்ப்புல்வாய், மாசலத்திற் காண்டமாய்ப் பதங்கமாகி மாசுணமாய் வேசரியாய் மட்டில சென்ம, நீசகல வாதனையாற் பிறந்தபோ தினின்கிளைஞர்க் கிரங்காத நீதியென்னே.

(இ-ள்.) கோசலத்தும் - கோசலதேசத்திலும், தெசார்ணவத்து - தெசார்ணவதேசத்திலும், பௌண்டரத்தும் - பௌண்டரதேசத்திலும், குச்சரத்தும் - குச்சரதேசத்திலும், துழாரத்தும் - துழாரதேசத்திலும், கோகனத்தும் - கோகன்னதேசத்திலும், போசலத்தும் - போசலதேசத்திலும், ஏகையத்தும் - ஏகையதேசத்திலும், சாளுவத்தும - சாளுவதேசத்

திலும், பூபதியாய் - அரசனாகவும், வானரமாய் - குரங்காகவும், புழுவாய்-கிருமியாகவும், புல்வாய்-கலைமானாகவும், மாசலத்திற் கரண்டமாய் - பெருநீரி னீர்காக்கையாகவும், பதங்கமாகி - பக்ஷியாகவும், மாசுணமாய் - சற்பமாகவும், வேசரியாய் - கழுதையாகவும், மட்டில்சென்மம் - அளவற்ற பிறவிகளை, நீ சகலவாதனையால் - நீ சமஸ்த வாசனைகளினால், பிறந்தபோதில் - செனித்தபோதில் (உண்டாகிய,) நின்கிளைஞர்க்கு - உனதுறவினர்க்கு, இரங்காத நீதியென்னே - விசனப்படாத ஞாயமென்ன—எ-று.

(இ-ள்.) கோசல தேசத்திலும், தெசார்ணவ தேசத்திலும், பௌண்டரதேசத்திலும், குச்சரதேசத்திலும், துஷாரதேசத்திலும், கோகன்னதேசத்திலும், போசலதேசத்திலும், ஏகையதேசத்திலும், சாளுவதேசத்திலும், அரசனாகவும், குரங்காகவும், கிருமியாகவும், கலைமானாகவும், பெருநீரி னீர்க்காக்கையாகவும், பக்ஷியாகவும், சற்பமாகவும், கழுதையாகவும், அளவற்ற பிறவிகளை நீ சமஸ்த வாசனைகளினால் செனித்தபோதிலுண்டாகிய உனதுறவினர்க்கு விசனப்படாத ஞாயமென்ன—என்பதாம். (௪௭)

இச்சநநமரணமற்ற வாத்மாவைத் தெரிசிக்கவேண்டுமெனல்.

அளவிறந்த பிறவிதொறும் பிறந்தோர்க்கெல்லா மன்னைதாதையையெண்ணி லகன்றகானிற், கிளர்மரங்க டருஞ்சருகையெண்ணவற்றாங் கேதமுறக்கணக்கில்லைக் கேளாய்மைந்தா, தளர்வின்றிப் பாவாபாவனைகளின்றிச் சராமரண மற்றவுனைச்சங்கியாதே, யுளமுறநோக்காய்துயர்விட் டஞ்ஞானத்தை யொழித்துணரி லுள்ளபடி யுன்னைக்காண்டி.

(இ-ள்.) அளவிறந்த பிறவிதொறும் - அளவற்ற சநநங்கடோறும், பிறந்தோர்க்கெல்லாம் - செனித்தவர்க்கெல்லாம், அன்னைதாதையையெண்ணில் - மாதாபிதாக்களையெண்ணுமிடத்தில், அகன்றகானில் - விசாலமானவனத்தில், கிளர்மரங்கடருஞ்சருகை-ளங்கிய விருக்ஷங்கள் கொடுக்கின்றசருகை, எண்ணவற்றாம் - எண்ணினத்துக்கொப்பாம், கேதமுறக்கணக்கில்லை - துன்பமடையஞாயமில்லை, கேளாய் மைந்தா - கேள் குழந்தாய், தளர்வின்றி - தளர்ச்சியில்லாமல், பாவாபாவனைகளின்றி - பாவமும் பாவமுமில்லாமல், சராமரணமற்ற - சரையுமரணமுமில்லாத, உனைச்சங்கியாது - உன (தாத்மஸ்வரூபத்) திற்றடையின்றி, உளமுறநோக்காய்-மனம் பொருந்தப்பாராப்பாய், துயர்விட்டு - துன்பத்தைவிட்டு, அஞ்ஞானத்தையொழித்துணரில் - அறியாமையை நீக்கி யறியில், உள்ளபடி யுன்னைக்காண்டி-உள்ளபடியாக வுன (தாத்மஸ்வரூபத்) தைக்காண்பாய்-எ-று

(இ-ள்.) அளவற்ற சநநங்கடோறும் செனித்தவர்க் கெல்லாம் மாதாபிதாக்களை யெண்ணுமிடத்தில் விசாலமான வனத்தில் விளங்கிய விருக்ஷங்கள் கொடுக்கின்ற சருகை எண்ணினத்தாக் கொ. பாம். துன்பமடைய ஞாயமில்லை. கேள் குழந்தாய் தளர்ச்சியில்லாமல் பாவமு மபாவமுமில்லாமல் சரையுமரணமுமில்லாத உனதாத்ம ஸ்வரூபத்திற் றடையின்றி மனம்பொருந்தப் பார்ப்பாய். துன்பத்தைவிட்டு அறியாமையைநீக்கி யறியில் உள்ளபடியாக உனதாத்மஸ்வரூபத்தைக்காண்பாய்—என்பதாம். (௪அ)

## தன்னைத்தெரிசிக்கி லாநந்தவடிவ யாவாயெனல்.

உன்னுருவைநீகாணு ஞானக்கண்ணி லொன்றலா வாசையெனுங்காசமூறு, மன்னதுதீர்த் துளக்கமலத் துள்ளேநொய்ய வறிவுடைய வுன்மனத்தா லுன்னலுன்னை, யின்னபடி யெனநோக்கிமயக்கமெல்லா மிறையுமற வொழித்தின்ப மெய்திநிற்பாய், பின்னவனே யென்முன்னோ னுரைத்தானென்று பெருந்தகைக்கு வசிட்டமுனி பேசினனே.

(இ-ள்.) உன்னுருவை - உன(தாத்ம)ஸ்வரூபத்தை, நீ காணுஞானக்கண்ணில் - காண்கின்ற ஞான திருஷ்டியில், ஒன்றலாவாசையெனும் - பலவான விச்சையென்னும், காசமூறும் - படலமுண்டாகும், அன்னது தீர்த்து - அதைநீக்கி, உளக்கமலத்துள் - இருதயதாமரையில், நொய்ய வறிவுடைய - சொச்சமான வுணர்வையுடைய, உன்மனத்தால் - உனதுமனதினல், உன்னலுன்னை - உன்னலுனது ஸ்வரூபத்தை, இன்னபடி யென நோக்கி - இப்படிப்பட்டதென்று பார்த்து, மயக்கமெல்லாம் - மயக்கங்களனைத்தையும், இறையுமறவொழித்து - இறையளவேனுமில்லாமற்கெடுத்து, இன்பமெய்தி நிற்பாய் - நிருவாணசுகத்தை யடைந்திருப்பாய், பின்னவனேயென - தம்பியேயென்று, முன்னோ னுரைத்தானென்று - தமையன்சொன்னனென்று, பெருந்தகைக்கு - (ஸ்ரீராமனென) வரசனுக்கு, வசிட்டமுனி பேசினன் - வசிட்டமுனி சொன்னன்—எ-று.

(இ-ள்.) உனதாத்ம ஸ்வரூபத்தை நீ காண்கின்ற ஞானதிருஷ்டியில் பலவான விச்சையென்னும் படலமுண்டாகும். அதை நீக்கி இருதய தாமரையில் சொச்சமான வுணர்வையுடைய உனது மனதினல் உன்னலுனது ஸ்வரூபத்தை இப்படிப்பட்டதென்று பார்த்து மயக்கங்களனைத்தையும் இறையளவேனு மில்லாமற்கொடுத்து நிருவாண சுகத்தை யடைந்திருப்பாய். தம்பியே யென்று தமையன் சொன்னனென்று ஸ்ரீராமனென வரசனுக்கு வசிட்ட முனி சொன்னன்—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) மாதாபிதாக்கள் பிரிவிற்படுந் துன்பத்தை முன்னிட்டவர்களும், நாமும் மித்தையே யாமென் றறிவித் தவையறிந்த ஞானமே சர்வமுவாய் விளங்குகின்ற நம தாத்வஸ்வரூபமாமென் றுநந்திக்கும்படி யனுக்கிர கித்ததாம். (சகூ)

**புண்ணியபாவனன்கதை முற்றிற்று.**

ஆக கதை உ0-க்கு கவிதை அறுக.

# மாவலிகதை.

**அவதாரிகை.**

முன்கதையிற் றிரிஸ்யத்தி லகம்பாவ நிவிர்த்தியையுந் திருக்குவிலகம்பாவத்தையுஞ் செய்வதனுற் சர்வமுந் தன்மயமாய் விளங்கு மனுபவத்தைக்கூறி மேசிட்காமபுண்ணியத்தினுல் விடயாநந்த மிகுதி பிரமாநந்தத்தின் பொருட்டாகுமென்பதை யறிவிக்கு நிமித்த மாவலிகதையை நிரூபிக்கிறுர்.

## பாவனன் ஞானமடைதல்-வேறு.

புண்ணியனுணர்ந்தஞானம் பொலிந்தபாவனன் றனுள்ள
நண்ணியவிடியற்கண்ட ஞாலம்போல்விளங்கித்தோன்ற
திண்ணியவிருவர்தாமுஞ் சித்தராய்விவேகஞானத்
தெண்ணியகரையையெய்தி யியம்பியவனத்திருந்தார்.

(இ-ள்.) புண்ணியனுணர்ந்த - புண்ணியமுனிவன்போதிக்க, ஞானம் பொலிந்த - ஞானமப்ரகாசித்த, பாவனன்றனுள்ளம் - பாவனனுடைய விருதயமானது, நண்ணிய விடியற்கண்ட - பொருந்தியவைகறைக்காலங் கண்ட, ஞாலம்போல் - சகத்தைப்போல, விளங்கித்தோன்ற - ப்ரகாசித்துத்தோற்ற, திண்ணிய விருவர்தாமும் - திடஞானமுடைய விரண்டுபேர்களும், சித்தராய் - சித்த புருடர்களாய், விவேகஞானத்து - விவேகஞானத்தினது, எண்ணிய கரையையெய்தி - சிந்தித்த வாத்மஞானத்தையடைந்து, இயம்பிய வனத்திருந்தார்-முன்சொல்லிய வனத்தில் வசித்தார்-எ-று.

(இ-ளா.) புண்ணியமுனிவன்போதிக்க ஞானம் ப்ரகாசித்த பாவனனுடைய விருதயமானது பொருந்திய வைகறைக்காலங்கண்ட சகத்தைப்போல ப்ரகாசித்துத்தோற்ற திடஞானமுடைய விரண்டுபேர்களும் சித்தபுருடர்களாய் விவேகஞானத்தினது சிந்தித்த வாத்மஞானத்தை யடைந்து முன்சொல்லிய வனத்தில் வசித்தார்கள்—என்பதாம். (க)

## விதேகமுத்தியடைதல்.

வேண்டியகாலமெல்லாம் விநோதமாம்விளையாட்டெய்தி
யீண்டியகாலஞ்செல்ல யாக்கைதீர்வீட்டிலெய்தி
தூண்டிடுதிரிநெய்யில்லாச் சுடர்கள்போற்சாந்தமுற்றார்
மாண்டிடுமுயிர்கட்கெல்லா மரபிந்தமரபுபோலாம்.

(இ-ள்.) வேண்டியகாலமெல்லாம் - (தங்களுக்கு) வேண்டிய காலங்களனைத்தும், விநோதமாம்விளையாட்டெய்தி - விநோமாகவிளையாடி, ஈண்டியகாலஞ்செல்ல - வெகுகாலஞ்செல்ல, ஆக்கைதீர்வீட்டிலெய்தி-விதேக முத்தியை யடைந்து, தூண்டிடுதிரிநெய்யில்லா - தூண்டப்பட்ட திரியு நெய்யுமில்லாத, சுடர்கள்போல் - தீபங்களைப்போல, சாந்தமுற்றார் - உப சாந்த மடைந்தார்கள், மாண்டிடு முயிர்கட்கெல்லாம் - மரணமடைகின்ற சீவர்களனைவர்க்கும், மரபிந்த மரபுபோலாம் - குணங்களிம்முறைமையை ப்போலவாகும்—எ-று.

(இ-ரை.) தங்களுக்குவேண்டிய காலங்களனைத்தும் விநோத மாக விளையாடி வெகுகாலஞ்செல்ல விதேக முத்தியையடைந்து தூண்டப்பட்ட திரியுநெய்யுமில்லாத தீபங்களைப்போல உபசாந்த மடைந்தார்கள். மரணமடைகின்ற சீவர்களனைவர்க்கும் குணங்க ளிம்முறைமையைப்போலவாகும்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) இவ்விருவருஞ் சீவன்முத்தராயிருந்து விதேக முத்தியை யடைந்தன ரென்பதாம். (உ)

---

சர்வமுந் தன்து பிரிய வடிவமாமென் றறிவித் தவ்வனுபவ முதிப்பதற் கிச் சாந்தியாகம்வேண்டு மெனல்.

அனந்தமாம்பிறப்புற்றாருக் ககிலமுமயலன்றாகிற்
சினந்திடனயத்தல்வேண்டா வாதலாற்செறிந்தவாசை
கனந்தனைவிடுவதல்லாற் கதித்துறவளர்க்கலாகா
மனந்தனில்வளர்க்கிற்சிந்தை வன்னிக்குவிறகாமன்றே.

(இ-ள்.) அனந்தமாம் பிறப்புற்றாருக்கு - அளவற்ற சநந மடைந்த வர்களுக்கு, அகிலமு மயலன்றாகில் - சமஸ்தமும் பந்துவாயிருக்குமானால், சினந்திடனயத்தல்வேண்டா - பகைத்தலும் விரும்புதலும் வேணடுவ தென்ன, ஆதலால் - ஆகையினால், செறிந்தவாசை - மிகுந்தவாசையின், கனந்தனை விடுவதல்லால் - பாரத்தை விடுவதேயன்றி, கதித்துற வளர்க் கலாகா - பெருக வளர்க்கக்கூடாது, மனந்தனில் வளர்க்கில் - மனதிலா சையை வளர்த்தால், சிந்தைவன்னிக்கும் - சிந்தனையென்னு மக்கினிக்கு, விறகாம் - (ஆசையானது) விறகாகும்—எ-று.

(இ-ள.) அளவற்ற சநநமடைந்தவர்களுக்கு சமஸ்தமும் பந்துவாயிருக்குமானுல் பகைத்தலும் விரும்புதலும் வேண்டுவதென்ன? ஆகையினுல் மிகுந்த வாசையின் பாரத்தை விடுவதேயன்றி பெருக வளர்க்கக்கூடாது. மனதிலாசையை வளர்த்தால் சிந்தனையென்னு மக்கினிக்கு ஆசையானது விறகாகும்—என்பதாம். (ந)

## அவ்விச்சாத்யாகத்திற் சுகமுதிக்குமெனல்.

இச்சையாம்விறகுமாண்டா லெண்ணமாம்வன்னிமாளு
நிச்சயமாகுந்தேயத் தியாகமாநெடுந்தேரேறி
மெச்சியவுதாரக்கண்ணுல் வேட்கையான்மிகவும்வாடுங்
கொச்சைஞாலத்தைநோக்கிக் குறைவறவிருப்பாய்தீரா.

(இ-ள்.) இச்சையாம் விறகுமாண்டால் - ஆசையென்னு விறகு நசித்தால், எண்ணமாம் வன்னிமாளும் - சிந்தையென்னு மக்கினி நசிக்கும், நிச்சயமாகும் - இதுவுண்மையாகும், தேயத்தியாகமாம் - தேயத்தியாகமாகிய, நெடுந்தேரேறி - மகாரதத்திலேறி, மெச்சிய வுதாரக்கண்ணுல் - சகலருந் துதித்த வுதாரமான (கருணு) திருஷ்டியினுல், வேட்கையான் மிகவும்வாடும் - ஆசையினுன் மிகவும் வாடாநின்ற, கொச்சை ஞாலத்தை நோக்கி - அற்பமான சகத்தைப்பார்த்து, தீரா-தீரத்தையுடைய ஸ்ரீராமா, குறைவறவிருப்பாய் - குறைவில்லாமலிருப்பாய்—எ-று.

(இ-ள.) ஆசையென்னும் விறகுநசித்தால் சிந்தையென்னும் அக்கினி நசிக்கும். இது உண்மையாகும். தேயத்தியாகமாகிய மகாரதத்திலேறி சகலருந்துதித்த வுதாரமான கருணுதிருஷ்டியினுல் ஆசையினுன் மிகவும் வாடாநின்ற அற்பமான சகத்தைப்பார்த்து தீரத்தையுடைய ஸ்ரீராமா! குறைவில்லாம விருப்பாய்-எ-ம். (ச)

## இதுவுமது - வேறு.

நொய்யதாயொரு மயலின்றிநோயெலா நீங்கி
மெய்யதாகிய பிரமமாநிலையிது வீரா
வையமின்றியிந் நிலையுறிலறிவில ரேனு
மையன்மேவல ரிராமநீயிவ்வகை வாழ்வாய்.

(இ-ள்.) வீரா - ஸ்ரீராமா, நொய்யதாய் - சொச்சமாகியும், ஒருமயலின்றி - ஒருமயக்கமு மில்லாததாகியும், நோயெலாநீங்கி - வியாதிகளனைத்து மிலலாததாகியுமிருக்கின்ற, மெய்யதாகிய - சத்தியமான, பிரமமாநிலையிது - பிரமமான நிச்சயமிதுவாகும், ஐயமின்றி - சந்தேகமில்லாமல்,

இந்நிலையுறில் - இந்தநிலையை யடைந்தால், அறிவிலரேனும் - அறிவில்லாதவர்களாயினும், மையன்மேவலர்-மயக்கத்தை யடையார்கள், இராம - ஸ்ரீராமா, நீ யிவ்வகைவாழ்வாய் - நீயிந்தப்ரகாரம் வாழக்கடவாய்—எ-று.

(இ-ள.) ஸ்ரீராமா! சொச்சமாகியும், ஒரு மயக்கமுமில்லாததாகியும், வியாதிகளனைத்து மில்லாததாகியு மிருக்கின்ற சத்தியமான பிரமமான நிச்சயமிதுவாகும் சந்தேகமில்லாமல் இந்த நிலையையடைந்தால் அறிவில்லாதவர்களாயினும் மயக்கத்தை யடையார்கள். ஸ்ரீராமா! நீ யிந்தப்பகாரம் வாழக்கடவாய்—என்பதாம்.

(இ-நு-க-ம்.) விடயவிச்சையினது நீக்கத்திற் பிரமநிச்சய முதிக்குமென்பதாம். (ரு)

## இச்சைநீங்குதற்குரிய சகாயங்கூறல்.

நல்லபுந்தியும் விவேகமுமெனவிருநண்பா
லல்லறீர்ந்திடு மொருவரையென்னினுமணுகிற்
சொல்லுபல்பொருட் சுற்றங்கடொடக்கறத்தீர்ந்து
புல்லுதிண்மையி னலன்றித்துயரெலாம்போகா.

(இ-ள்.) நல்ல புந்தியும் - நல்லவறிவும், விவேகமும் - நல்ல விவேகமும், எனவிருநண்பால் - என்கின்ற விரண்டுநட்பினால், அல்லறீர்ந்திடும்- துன்பநீங்கும், ஒருவரையென்னினு மணுகில் - ஒருவரையாவ தடைந்தாலும், சொல்லுபல்பொருள் - சொல்லப்பட்ட பலவஸ்துக்களையும், சுற்றங்கள் - உறவுகளையும், தொடக்கறத்தீர்ந்து - தொடர்பில்லாமல் கெடுத்து, புல்லு திண்மையினலன்றி - பொருந்துகின்றதனது தயிரியத்தினலல்லாமல், துயரெலாம் போகா - துன்பங்க ளனைத்து நீங்காவாம்—எ-று.

(இ-ள.) நல்லவறிவும் நல்ல விவேகமும் என்கின்ற விரண்டு நட்பினால் துன்பநீங்கும். ஒருவரையாவ தடைந்தாலும் சொல்லப்பட்ட பலவஸ்துக்களையும் உறவுகளையும் தொடர்பில்லாமற் கெடுத்து பொருந்துகின்ற தனது தயிரியத்தினலல்லாமல் துன்பங்களனைத்து நீங்காவாம்—என்பதாம். (சா)

## நிராசையுள்ள மனதின் பெருமையைக்கூறல்.

மயலிலாமையா னூல்களான்மகத்துவ முதலா
முயர்குணங்களால் வருந்தியுமனத்தினை யுய்க்கிற்
றுயாசணீங்குமூ வுலகுறுசெல்வமுந் தொக்கு
பயனளிக்கினு முயர்வுறுமனமெனப் பயிலா.

(இ-ள்.) மயலிலாமையால் - வைராக்கியத்தினாலும், நூல்களால் - ஞானசாத்திரங்களினாலும், மகத்துவமுதலாம் - மகத்துவமுதலான, உயர் குணங்களால் - மேன்மையான குணங்களினாலும், வருந்தியும் - வருத்தப்பட்டு, மனத்தினையுய்க்கில் - மனதை யாத்ம வாழ்வடைச்செய்தால், துயர்கணீங்கும் - துக்கங்கள்போகும், மூவுலகுறுசெல்வமும்-மூன்றுலகங்களிலுண்டான செல்வங்களும், தொக்கு - தொகுத்து, பயனளிக்கினும் இலாபத்தைக்கொடுத்தாலும், உயர்வுறு மனமெனப்பயிலா - கைவல்லியத்தையடைகின்ற மனதுக்கொப்பென்று சொல்லமாட்டார்கள் — எ-று.

(இ-ரை.) வைராக்கியத்தினாலும், ஞானசாத்திரங்களினாலும், மகத்துவமுதலான மேன்மையான குணங்களினாலும், வருத்தப்பட்டுமனதை யாத்மவாழ்வடையச்செய்தால் துக்கங்கள்போகும். மூன்றுலகங்களிலுண்டான செல்வங்களும் தொகுத்து இலாபத்தைக் கொடுத்தாலும் கைவல்லியத்தை யடைகின்ற மனதுக்கொடபென்று சொல்லமாட்டார்கள் — என்பதாம். (எ)

### மனதிற்துரிய விச்சாவநிச்சையின் பலாபலனைக்கூறல்.

மனநிறைந்திடி லமுதமாய்நிறைந்திடும் வையந்
தனதுதாட்செருப் புலகெலாந்தோன்முச்சூந் தரம்போற்
கனநிராசையா னிறையுநெஞ்சாசையிற் கவிழா
தினமுமாசையா னிறைமனங்குறைவென்றுந் தீரா.

(இ-ள்.) தனது தாட்செருப்பு - தன்பாதத்திலிருக்கின்ற செருப்பானது, உலகெலாம் - சகங்களனைத்தும், தோல்முச்சுந்தரம்போல் - தோலால் மூடுந்தன்மையைப்போல, மனநிறைந்திடில் - மனதுபூரணமானால், வையம் - சகமானது, அமுதமாய் நிறைந்திடும் - அமுதமாக நிறையும், கனநிராசையால் - கனமுள்ள நிராசையினால், நிறையுநெஞ்சு - நிறைந்த மனமானது, ஆசையிற் கவிழா - ஆசையின்மூழ்காது, தினமு மாசையானிறைமனம் - எப்போது மிச்சையினானிறைந்தமனமான்து, குறைவென்றுந்தீரா - குறையெப்போதுந்தீராது — எ-று.

(இ-ரை.) தன்பாதத்திலிருக்கின்ற செருப்பானது சகங்களனைத்துந் தோலால்மூடுந் தன்மையைப்போல மனது பூரணமானால் சகமானது அமுதமாக நிறையும். கனமுள்ள நிராசையினால் நிறைந்த மனமானது ஆசையின் மூழ்காது. எப்போது மிச்சையினானிறைந்த மனமானது குறையெப்போதுந்தீராது — எபதாம். (அ)

## இச்சையாற் கெடாத மனதி னுயர்வைக்கூறல்.

அகத்தியன்கவர்கடலெனநன்னெஞ்சையழிக்கு
மிகுத்தமாலிலாமனமெனநிறைமதிவிளங்காப்
பகுத்தபாற்கடனிறைவுறாப்பரிமளக்கோக
னகத்திறையகிதிருமுகநலம்பெறத்தோன்றா.

(இ-ள்.) அகத்தியன் கவர்கடலென - குறுமுனி நுகர்ந்த வுததியைப் போல, நன்னெஞ்சையழிக்கும் - நல்லமனதைக்கெடுக்கின்ற, மிகுத்தமாலிலா மனமென - மிகுந்தவாசையில்லாத மனதைப்போல, நிறைமதிவிளங்கா - பூரணசந்திரனும் ப்ரகாசியாது, பகுத்தபாற்கடனிறைவுறா - (சுகத்தைக்) கொடுத்த பாற்சமுத்திரமு நிறையமாட்டாது, பரிமளக்கோகனகத்திறையகி - வாசனைபொருந்திய தாமரையிலிருக்கின்ற விலக்குமி, திருமுகம் - சிறப்புள்ள முகமும், நலம்பெறத்தோன்றா - நன்மையாக வுண்டாகாது—எ-று.

(இ-ளா.) குறுமுனிநுகர்ந்த வுததியைப்போல நல்ல மனதைக்கெடுக்கின்ற மிகுந்த வாசையில்லாத மனதைப்போல பூரணசந்திரனும் ப்ரகாசியாது சுகத்தைக்கொடுத்த பாற்சமுத்திரமு நிறையமாட்டாது. வாசனை பொருந்திய தாமரையிலிருக்கின்ற விலக்குமி சிறப்புள்ள முகமும் நன்மையாக வுண்டாகாது—என்பதாம்.

## மனதிற் கிச்சாபந்த நீங்கலே முத்தியாமெனல்.

மதியைமேகம்போல்வெண்டலச்சுதயினைமைபோ
லதிகநன்னெஞ்சையாசையாம்பேயழகழிக்கும்
பொதியுமாலெலாநீக்கிவன்பவப்பயன்போக்கி
முதிர்மனத்தின்மால்பிணிப்பறின்முத்திவேறுளதோ.

(இ-ள்.) மதியைமேகம்போல் - சந்திரனை மேகமறைகின்றதுபோலும், வெண்டலச்சுதயினை - வெண்மையானவிடத்திற்றீற்றிய சுண்ணச்சாந்தைக் (கொடுக்கும்) மைபோல் - மையைப்போலவும், அதிக நன்னெஞ்சை - மிகவு நல்லமனதை, ஆசையாம்பேய் - இச்சாபசாசமானது, அழகழிக்கும் - தேயுசைக்கொடுக்கும், பொதியமாலெலாநீக்கி - அடைந்த வாசைகளனைத்தையுங்கெடுத்து, வன்பவப்பயன்போக்கி - வலியஜனனத்தினச்சத்தைக்கெடுத்து, முதிர்மனத்தின் - பக்குவமானமனத்தின், மால்பிணிப்பறில் - ஆசைக்கட்டானது நாசமானல், முத்திவேறுளதோ - மோக்ஷம் வேறுண்டோ—எ-று.

(இ-ளா.) சந்திரனை மேகமறைகின்றதுபோலும் வெண்மையானவிடத்திற்றீற்றிய சுண்ணச்சாந்தைக் கெடுக்கும் மையைப்

போலவும் மிகவு நல்லமனதை இச்சாபசாசமானது தேயுசைக்கெடுக்கும். அடைந்த வாசைகளனைத்தையுங் கெடுத்து வலியசநநத்தினச்சத்தைக்கெடுத்து பக்குவமான மனத்தின் ஆசைக்கட்டானது நாசமானல் மோக்ஷம் வேறுண்டோ—என்பதாம்.

(இ-ௗ-க-ம்) மனமானது சிற்சுவமாய்ச்சகவிச்சையை நீக்குதலே மோக்ஷமாமென்பதாம். முன்கதையிற்கூறவேண்டிய விப்பத்து கவிதையை யிந்நூலாசிரிய ரிக்கதையிற் கூறினதென்னவெனிற் சமாதிக்கருளிய வில்விச்சாத்தியாகஞ் சகசத்துக்கு வரும்பொருட்டெனக்கொள்க. (க௦)

## இச்சையைசுருக்கிற் கெடுப்பதை யறிவித் திஃது பெருக்கிற் கெடுப்பதையுமறிவிக்கத்தொடங்கல்.

இன்னதன்றெனிலிராகவமாபலியென்ன
நன்னதாகியபுந்தியான்ஞானமேநேர்வா
யன்னதேநலனென்றலுமனையதேதென்று
சொன்னமாமுனிதன்னையேயிராமனுஞ்சொன்னன்.

(இ-ள்.) இன்னதன்றெனில் - இத்தன்மை கூடாவிடின், இராகவ - ஸ்ரீராமா, மாபலியென்ன - மாவலியைப்போல, நன்னதாகிய புந்தியால் - நன்மையான புத்தியினல், ஞானமே நேர்வாய் - ஞானத்தையேயடைவாய், அன்னதே நலனென்றலும் - அத்தன்மையதே நன்மையென்று சொல்லவும், அனையதேதென்று - அப்படிப்பட்ட தெதுவென்று, சொன்னமாமுனிதன்னை - சொல்லிய மகாமுனியைப்பார்த்து, இராமனுஞ்சொன்னன் - ஸ்ரீராமனுங் கேட்டார்—எ-று.

(இ-ரை.) இத்தன்மை கூடாவிடின் ஸ்ரீராமா! மாவலியைப்போல நன்மையான புத்தியினல் ஞானத்தையே யடைவாய். அத்தன்மையதே நன்மையென்று சொல்லவும் அப்படிப்பட்ட தெதுவென்று சொல்லிய மகாமுனியைப்பார்த்து ஸ்ரீராமனுங் கேட்டார்—என்பதாம். (கக)

## மாவலியின் பெருமையுரைத்தல்.

வினையவள்ளலுக்கருந்தவனுத்தரம்விளம்பும்
தனுதுதோள்களாலுலகெலாமுஞ்சுறச்சயித்தோன்
பினகிசார்ங்கியைமுதலினர்தாழ்வுறப்பெரியோ
னனுதியாமெனப்பாதலத்தரசுசெய்பதுலன்.

(இ-ள்.) வினையவள்ளலுக்கு - இப்படிகேட்ட வுதாரமுள்ள ஸ்ரீராமனுக்கு அருந்தவன் - அரியதவத்தையுடைய வசிட்டமுனி, உத்தரம்விளம்

பும் - உத்தரஞ்சொல்லுவார், தனுதுதோள்களால் - தனது புயங்களினுல், உலகெலாமஞ்சுறச்சயித்தோன் - சகங்களனைத்து நடுங்கும்படி சயஞ்செய்தவன், பிஞகி - ஈஸ்வரனும், சார்ங்கியைமுதலினர் - விஷ்ணுமுதலிய சகலரும், தாழ்வுறப்பெரியோன் - தாழும்படி பெருமையுள்ளவன், அனுதியாமெனப் பாதலத்தரசுசெய்ய துலன் - அநாதியாமெனக்கூறப் பாதாளலோகத்தரசுசெய்யுஞ் சமானமற்ற (வசுர) ராசன்—எ-று.

(இ-ள.) இப்படிகேட்ட வுதாரமுள்ள ஸ்ரீராமனுக்கு அரிய தவத்தையுடைய வசிட்டமுனி உத்தரஞ்சொல்லுவார். தனது புயங்களினுல் சகங்களனைத்து நடுங்கும்படி சயஞ்செய்தவன். ஈஸ்வரனும் விஷ்ணுமுதலிய சகலருந்தாழும்படி பெருமையுள்ளவன் அநாதியாமெனக்கூறப் பாதாளலோகத்தரசுசெய்யுஞ் சமானமற்ற வசுரராஜன்—என்பதாம். (௧௨)

## மாவலி தனித்திருத்தல்.

மாவலிப்பெயரானுயர்விரோசனன்மைந்த
ஞவலிப்புறுகோடிபத்தாண்டரசானேன்
காவலித்திகழ்மேருவின்சிரமணிக்கதுவு
மேவலிற்பொலிசாளரமேனிலமேவி.

(இ-ள்.) மாவலிபெயரான் - மகாபலிச் சக்கரவர்த்தியென்னு நாமமுடையவன், உயிர்விரோசனன்மைந்தன் - மேன்மையான விரோசனனுடைய புத்திரன், ஆ - ஆச்சரியம், வலிப்புறு - வலிமையுள்ள, பத்துகோடியாண்டு - பத்துகோடிவருடம், அரசானேன் - இராசாவானவன், காவலிற்றிகழ் - காவலினுல்விளங்குகின்ற, மேருவின்சிரம் - மகாமேருவினுடைய முடியிலிருக்கின்ற, மணிக்கதுவும் - இரத்தினங்களைப்பதித்த, மேவலிற்பொலி - மேவுதற்கரிய ப்ரகாசம்பொருந்திய, சாளரம் - பலகணிகளையுடைய, மேனிலமேவி - மேல்வீடடைந்து—எ-று.

(இ-ள) மகாபலிச் சக்கரவர்த்தியென்னு நாமமுடையவன். மேன்மையான விரோசனனுடைய புத்திரன் ஆச்சரியம்! வலிமையுள்ள பத்துகோடிவருடம் இராசாவானவன். காவலினுல் விளங்குகின்ற மகாமேருவினுடையமுடியிலிருக்கின்ற இரத்தினங்களைப் பதித்த மேவுதற்கரிய ப்ரகாசம்பொருந்திய பலகணிகளையுடைய மேல்வீடடைந்து—என்பதாம். (௧௩)

(இ-ச-க-ம்.) புண்ணியபரிபாகத்தினுற் சித்தசுத்தியும்,அச்சித்தசுத்தியாற் சாதன சதுஷ்டயமும், அச்சாதன சதுஷ்டயத்தான்முத்தியையடை

வதற் கேதுவான வாத்மவிசாரமு முதித்ததனு லனித்திய வஸ்துவை நிந்திக்கத் தொடங்கினதாம். (கங)

## அரசை வெறுத்தல்.

ஒருபகற்றனியிருந்தனனிவையிவையுணர்ந்தான்
பெருகுபோகங்கண்முனிந்தனன்பிறவியைநினைந்தான்
பொருவின்மூவுலகங்களிற்போகங்கணெடுநாட்
பருகநல்குநம்பேரரசாலென்கொல்பயனே.

(இ-ள்.) ஒருபகற்றனியிருந்தனன் - ஒருநாடனியேயிருந்தவனுய், இவை யிவையுணர்ந்தான் - இவையிவைகளை யெண்ணினுன், பெருகுபோகங்கள் - மிகுந்த போகங்களை, முனிந்தனன் - வெறுத்து, பிறவியைநினைந்தான் - சம்சாரத்தை நினைத்தான், பொருவின்மூவுலகங்களில் - சமானமற்ற மூன்றுலகங்களிலுள்ள, போகங்கள் - செல்வங்களை, நெடுநாட்பருக நல்கும் - வெகுகாலமா யனுபவிக்கக்கொடுக்கின்ற, நம்பேராசால் - நமது மகாராசாங்கத்திஞல், என்கொல்பயன் - என்னப்ரயோசனம்—எ-று.

(இ-ரை.) ஒருநாடனியே யிருந்தவனுய் இவையிவைகளை யெண்ணினுன். மிகுந்த போகங்களை வெறுத்து சம்சாரத்தை நினைத்தான். சமானமற்ற மூன்றுலகங்களிலுள்ள செல்வங்களை வெகுகாலமா யனுபவிக்கக் கொடுக்கின்ற நமது மகாராசாங்கத்திஞல் என்ன ப்ரயோசனம்—என்பதாம். (கச)

## போகத்தை வெறுத்தல்.

எய்துபோதினிலினியவாயெங்ஙனேயெனினு
நொய்தினீங்குமிப்போகத்தினின்பமேநுவலி
னெய்தநோக்கியநின்பமுநெருநல்போலின்றுஞ்
செய்தசெய்வதேயல்லதுகண்டிலஞ்செயல்கள்.

(இ-ள்.) எய்துபோதினில் - அடைந்தகாலத்தில், இனியவாய்-இன்பமாய், எங்ஙனேயெனினும் - எவ்விடத்திலாஞலும், நொய்தினீங்கும்-அற்பநேரத்தினீங்குகின்ற இப்போகத்தின் - இச்செல்வத்தினது, இன்பமே நுவலின் - இன்பத்தைச் சொல்லுமிடத்தில், எய்தநோக்கிய நின்பமும் - அடையப் பார்க்கின்ற சுகமும், நெருநல்போல் - நேற்றைப்போல, இன்றும் - இன்றைக்கும், செய்தசெய்வதேயல்லது - செய்ததைச் செய்வதே யல்லாமல், செயல்கள் கண்டிலம் - (வேறு) செயல்களைப்பார்த்திலம்-எ-று.

(இ-ரை.) அடைந்த காலத்தில் இன்பமாய் எவ்விடத்திலாறு லும் அற்பநேரத்தினீங்குகின்ற இச்செல்வத்தினது இன்பத்தைச் சொல்லுமிடத்தில் அடையப்பார்க்கின்ற சுகமும்நேற்றைப்போல இன்றைக்கும் செய்ததைச் செய்வதேயல்லாமல் வேறு செயல் களைப் பார்த்திலம்—என்பதாம். (கரு)

## போக்கியத்தை வெறுத்தல்.

உண்டவின்பமேமீளவுமுண்கின்றதொருநாட்
கண்டகாட்சியேமீளவுங்காண்கின்றதுவந்து
கொண்டகோலமேமீளவுங்கொள்கின்றதென்றால்
விண்டமேலவர்நாணுறுதொழிவரோவெறுத்து.

(இ-ள்.) உண்டவின்பமே - புசித்தசுகமே, மீளவுமுண்கின்றது-திரு ம்பவும் புசிக்கப்படுகின்றது, ஒருநாட்கண்டகாட்சியே-ஒருநாட்காணப்பெ ற்றகாட்சியே, மீளவுங்காண்கின்றது - திரும்பவுங்காணப்படுகின்றது, உவந்துகொண்டகோலமே - மகிழ்ச்சியாகக்கொண்ட வலங்காரமே, மீள வுங்கொள்கின்றது - திரும்பவுந்தரிக்கப்படுகின்றது, என்றால் - என்று சொன்னால், விண்டமேலவர் - சொல்லியமேன்மையான சத்துகள், வெறு த்து - வெறுப்புற்று, நாணுறுதொழிவரோ - வெட்கப்படாமற் போவார் களோ—எ-று.

(இ-ரை.) புசித்தசுகமே திரும்பவும் புசிக்கப்படுகின்றது. ஒருநாட்காணப்பெற்ற காட்சியே திரும்பவுங் காணப்படுகின்றது. மகிழ்ச்சியாகக்கொண்ட வலங்காலமே திரும்பவுந் தரிக்கப்படுகின் றது என்று சொன்னால் சொல்லிய மேன்மையான சத்துக்கள் வெறுப்புற்று வெட்கப்படாமற்போவார்களோ—என்பதாம்(கசு)

## காலத்தை வெறுத்தல்.

அருந்துமட்டினியென்றதேமீண்டுமீண்டருந்தி
திருந்திடாதபுன்சிறுவர்போற்செயலறியாது
வருந்துகின்றனநாள்பக்கம்மாதமாண்டுகங்கள்
பொருந்திவந்ததேயல்லதுபுதிதொன்றும்வாரா.

(இ-ள்.) அருந்துமட்டு - புசிக்கின்றவளவும், இனியென்றதே - இன் பமென்றுசொல்லுவதையே, மீண்டுமீண்டருந்தி - திரும்பத்திரும்பப் புசி த்து, திருந்திடாத - (அறிவு) திருத்தமில்லாத, புன்சிறுவர்போல் - அற்ப மான குழந்தைகளைப்போல, செயலறியாது - ஒழுக்கந்தெரியாமல், வரு ந்துகின்றனம் - வருத்தப்படுகின்றோம், நாள் - தினமும், பக்கம் - பக்ஷ

மும், மாதம்- திங்களும், ஆண்டு - வருடமும், உகங்கள் - யுகங்களும், பொருந்திவந்ததேயல்லது - முன்பொருந்தி வந்ததேயன்றி, புதிதொன்றும் வாரா - புதிதாக வேறொன்றும் வராது—எ-று.

(இ-ரை.) புசிக்கின்றவளவும் இன்பமென்று சொல்லுவதையே திரும்பத்திரும்பப் புசித்து அறிவு திருத்தமில்லாத அற்பமான குழந்தைகளைப்போல ஒழுக்கந்தெரியாமல் வருத்தப்படுகின்றோம். தினமும், பக்ஷமும், திங்களும், வருடமும், யுகங்களும், முன்பொருந்தி வந்ததேயன்றி புதிதாக வேறொன்றும் வராது. ()

## நித்திய வஸ்துவை விசாரித்தல்.

செய்யத்தக்கனயாவையுஞ்செய்துமிச்செயலா
லுய்யப்பெற்றதென்செயன்மறுத்திலாததொன்றுலகி
லையப்பாடறயாதினுலெய்துமப்பொருடான்
மையப்போகத்தாலொழிந்துமேல்வருநெறியாதே.

(இ-ள்.) செய்யத்தக்கன - செய்யத்தக்கனவாகிய, யாவையுஞ்செய்தும் - அனைத்தையுஞ்செய்தும், இச்செயலால் - இச்செய்கையினால், உய்யப்பெற்றதென் - உயிர்வாழப்பெற்றதென்ன, செயன்மறுத்திலாத-தொழில்கள் பின்பில்லாத, ஒன்று - ஒருபொருளானது, உலகில் - சகத்தின்கண், ஐயப்பாடற - சந்தேகமில்லாமல் யாதினுலெய்தும்-எதினுற்கிடைக்கும், அப்பொருடான் - அவ்வஸ்துவானது,மையப்போகத்தாலொழிந்து- மயக்கமுள்ள - (விடய) போகத்தினுல் விடுபட்டு, மேல்வருநெறியாது - மேலேவருமார்க்கமெது—எ-று.

(இ-ரை.) செய்யத்தக்கனவாகிய அனைத்தையுஞ் செய்தும் இச்செய்கையினுல் உயிர்வாழப்பெற்றதென்ன? தொழில்கள் பின்பில்லாத ஒருபொருளானது சகத்தின்கண் சந்தேகமில்லாமல் எதினுற்கிடைக்கும். அவ்வஸ்து வானது மயக்கமுள்ள விடயபோகத்தினுல் விடுபட்டு மேலேவரு மார்க்கமெது—என்பதாம்.

(இ-ரு-க-ர்) சகலமுமனித்திய வஸ்துவென்றறிந்து நீக்கி நித்தியவஸ்துவை விசாரிக்கத் தொடங்கினதாம். (கஅ)

## முன்பிதா போதித்த வனுபவம் ஞாமுகப்படல்.

அழிவிலாததாயன்னியமாகியவதுசேர்
வழியதேதெனச்சிந்திப்பான்மனத்தொன்றைநினைந்து

மொழியலுற்றனனறிந்தனமென்ெறொருநொடியில்
விழிபெருத்திடப்புருவமேலேற்றினன்வியந்தான்.

(இ-ள்.) அழிவிலாததாய் - அழிவற்றதாகியும், அன்னியமாகிய-விடயத்துக்கயலாகியு மிருக்கின்ற, அதுசேர் - அப்பொருளைச்சேருகின்ற, வழியதேதென - மார்க்கமெதுவென்று, சிந்திப்பான் - சிந்திக்கும்பொருட்டு, மனத்தொன்றைநினைந்து - மனதிலொன்றைச்சிந்தித்து,விழிபெருத்திட-கண்கள்மலர, புருவமேலேற்றினன் - புருவத்தைநெறித்து, வியந்தான்-அதிசயித்து, ஒருநொடியில் - ஒருகணத்தில், அறிந்தனமென்று - அறிந்தோமென்று, மொழியலுற்றனன் - சொல்லத்தொடங்கினன்—எ-று.

(இ-ரை.) அழிவற்றதாகியும் விடயத்துக்கயலாகியு மிருக்கின்ற அப்பொருளைச்சேருகின்ற மார்க்கமெதுவென்று சிந்திக்கும் பொருட்டு மனதிலொன்றைச்சிந்தித்து கண்கள் மலர புருவத்தை நெறித்து அதிசயித்து ஒருகணத்தில் அறிந்தோமென்று சொல்லத்தொடங்கினன்—என்பதாம். (௧௯)

## அஃதை யாலோசனை செய்தல்.

தன்னதுள்ளுறநினைத்ததுவிளம்பினன்றனே
முன்னமிங்கியான்கேட்டனன்முழுதுணர்முதன்மை
யென்னரும்பிதாவிரோசனன்றனையிப்படியே
யன்னவனபுகன்றனனெனவிவையெலாமறைவான்.

(இ-ள்.) தன்னதுள்ளுற - தனதுள்ளத்திற்பொருந்த, நினைத்தது - நினைத்ததை, தானேவிளம்பினன் - தானே சொல்லினன், முழுதுணர் முதன்மை - எல்லாமுணர்ந்த முதன்மையான, என்னரும்பிதா - எனதரிய பிதாவாகிய, விரோசனன்றன்னை - விரோசனனை, முன்னமிங்கியானகேட்டனன் - பூர்வமிவ்விடத்தில் யான்கேட்டேன், இப்படியே - இந்தப்ரகாரமே, அன்னவன் புகன்றனனென-அவருஞ்சொன்னாரென்று, இவையெலாமறைவான் - (மாபலியானவ) னிவைகளனைத்தையுஞ்சொல்லுவான்—எ-று.

(இ-ரை.) தனதுள்ளத்திற் பொருந்த நினைத்ததைத்தானே சொல்லினன், எல்லாமுணர்ந்த முதன்மையான எனதரிய பிதாவாகிய விரோசனனை பூர்வமிவ்விடத்தில் யான் கேட்டேன், இந்தப்ரகாரமே அவருஞ் சொன்னாரென்று மாபலியானவனிவைகளனைத்தையுஞ்சொல்லுவான்—என்பதாம். (௨௰)

நித்தியவஸ்து யாதென விசாரித் ததனை மனனஞ்செல்தல்.

*அய்ய துன்பமுமின்பமுமென்பனவனைத்தின்*
*மையலியாவையுமடிந்ததோரிடமெதுமனத்தின்*
*வெய்யமோகந்தீரிடமெதுவேட்கைகளெல்லாங்*
*கையறப்பட்டவிடமெதுகருணையாலுரையாய்.*

(இ-ள்.) அய்ய - (எனது) பிதாவே, துன்பமும் - துக்கமும், இன்பமும் - சுகமும், என்பன - என்று சொல்லப்படுவனவாகிய, அனைத்தின் - சகலத்தினுடைய, மையலியாவையும் - மயக்கங்களனைத்தும், மடிந்ததோரிடமெது - இறந்த வொப்பற்ற விடமியாது, மனத்தின் வெய்யமோகம் - மனதின்கொடிய மோகமானது, தீரிட மெது - தீர்கின்ற விடமியாது, வேட்கைகளெல்லாம் - ஆசைகளனைத்தும், கையறப்பட்ட விடமெது - பற்றற விடுபட்ட விடமியாது, கருணையாலுரையாய் - தயவாக வனுக்கிரகஞ்செய்வாய்—எ-று.

(இ-ஶா.) எனது பிதாவே! துக்கமும் சுகமும் என்றுசொல்லப்படுவனவாகிய சகலத்தினுடைய மயக்கங்க ளனைத்தும் இறந்த வொப்பற்றவிடமியாது? மனதின் கொடியமோகமானது தீர்கின்ற விடமியாது? ஆசைகளனைத்தும் பற்றறவிடுபட்ட விடமியாது? தயவாக வனுக்கிரகஞ் செய்வாய்—என்பதாம். (உக)

*நிராசையாகியிளைப்பெலாநீங்கிடமேது*
*விராவுபேரின்பத்தழகிதாய்விரிவிடமேது*
*பராபரந்தெளிந்துணர்ந்தநீபகர்தியென்னெஞ்சை*
*யராவுதுன்பம்விட்டிளைப்பெலாமாறுதற்கென்றேன்.*

(இ-ள்.) நிராசையாகி - ஆசையற்றதாய், இளைப்பெலாநீங்கிடமேது - இளைப்புகளனைத்துவிடுபடும் (விஸ்ராந்திஸ்தான) மியாது, விராவுபேரின்பத்தழகிதாய் - மிகுந்த பேரானந்தச்சுந்தரமாகி, விரிவிடமேது - வியாபித்திருக்கின்ற விடமியாது, பராபரம் - பராபரத்தை, தெளிந்துணர்ந்தநீ - தெளிந்தறிந்திருக்கின்றநீர், என்னெஞ்சை - என்மனதை, அராவுதுன்பம் விட்டு - அறுத்துக்கொண்டிருக்கின்ற துன்பத்தைவிடுத்து, இளைப்பெலா மாறுதற்கு - இளைப்புகளனைத்து நீங்குதற்கு, பகர்தியென்றேன் சொல்லென்று கேட்டேன்.

(இ-ஶை.) ஆசையற்றதாய் இளைப்புகளனைத்தும் விடுபடும் விஸ்ராந்திஸ்தான மியாது? மிகுந்த பேரானந்தச் சுந்தரமாகிவியாபித்திருக்கின்றவிடமியாது? பராபரத்தைதெளிந்தறிந்திருக்கின்ற நீர் என்மனதை அறுத்துக்கொண்டிருக்கின்ற துன்பத்தை விடுத்து இளைப்புகளனைத்து நீங்குதற்குச்சொல்லென்று கேட்டேன்

(இ-ச-க-ம்) துக்கநிவர்த்தியாய்த் தடையற்ற வாநந்தத்தை யடைய விரும்பினதாம். (உஉ)

சித்தை யரசாங்கமாகத் தோகுத்துக்கூறத் தோடங்கித் தேயவிலக்கணங்கூறல்.

எந்தையப்பொழுதுரைசெய்வான் மைந்தகேளியம்ப
வந்தமற்றறவிசாலமாயளவறகன்று
சுந்தரத்ததாந்தேசமுண்டண்டத்தின்றொகுதி
வந்துதித்திருந்திறப்பதற்கிடமதாய்வயங்கும்.

(இ-ள்.) எந்தை - எனது பிதாவானவர், அப்பொழுதுரைசெய்வான்- அப்போது சொல்லுவார், இயம்ப - (யான்) சொல்ல, மைந்தாகேள் - மகனே கேட்பாய், அந்தமற்று - முடிவில்லாமல், அறவுசாலமாய் - மிகவும் வியாபகமாகியும், அளவறகன்று - மட்டின்றி விஸ்தாரமாகியும், சுந்தரத்ததாம் - அழகுள்ளதாகியு மிருக்கின்ற, தேசமுண்டு - ஓர் தேயமுள்ளது, அண்டத்தின்றொகுதி - அண்டத்தினது கூட்டங்கள், வந்துதித்து - வந்துண்டாகி, இருந்து - விளங்கி, இறப்பதற்கு நசிப்பதற்கு, இடமதாய்வயங்கும் - (அதுவே) யிடமாக ப்ரகாசிக்கும்—எ-று.

(இ-கா.) எனது பிதாவானவர் அப்போது சொல்லுவார். யான் சொல்ல மகனே கேட்பாய். முடிவில்லாமல் மிகவும் வியாபகமாகியும், மட்டின்றி விஸ்தாரமாகியும், அழகுள்ளதாகியு மிருக்கின்ற ஓர் தேயமுள்ளது. அண்டத்தினது கூட்டங்கள வந்துண்டாகி விளங்கி நசிப்பதற்கு அதுவேயிடமாக ப்ரகாசிக்கும்—எ-ம்.

அரச னிலக்கணங்கூறல்.

ஆயதேயத்திலைம்பெரும்பூதமுமில்லைச்
சேயகுன்றில்லைவனமில்லைத்தீர்த்தங்களில்லைச்
தூயதேவரேமுதலியதொல்லுயிரில்லை
நாயகன்பெருஞ்சுடரெனுமொருவனேநண்ணும்.

(இ-ள்.) ஆயதேயத்தில் - (இப்படி) யாகிய தேசத்தில், ஐம்பெரும்பூதமுமில்லை - பஞ்சமகாபூதங்களுமில்லை, சேயகுன்றில்லை - நீண்டமலைகளுமில்லை, வனமில்லை - (நீண்ட) காடுகளுமில்லை, தீர்த்தங்களில்லை - (நீண்ட) தீர்த்தங்களுமில்லை, தூயதேவரே முதலிய-பரிசுத்தமுள்ள தேவர்கண் முதலாகிய, தொல்லுயிரில்லை - பழமையானவாத்மாக்களுமில்லை, பெருஞ்

சுடரெனும் மகா ப்ரகாசமென்கின்ற, நாயகன் - அரசன், ஒருவனே நண்ணும் - ஒருத்தனே யிருக்கின்றான்—எ-று.

(இ-ரை) இப்படியாகிய தேசத்தில் பஞ்சமகா பூதங்களுமில்லை. நீண்டமலைகளுமில்லை. நீண்டகாடுகளுமில்லை. நீண்ட தீர்த்தங்களுமில்லை பரிசுத்தமுள்ள தேவர்கண் முதலாகிய பழமையான வாத்மாக்களுமில்லை. மகாப்ரகாசமென்கிற அரசன் ஒருத்தனேயிருக்கின்றான்—என்பதாம். (உச)

## அமைச்ச னிலக்கணங்கூறல்.

முழுதுங்காண்பவன்முழுதினுஞ்செறிபவன்முதல்வன்
பழுதில்சாந்தனாய்நிறைந்துவாளாவுறைபண்போன்
வழுவிலாவிவனுக்கியமந்திரிவசத்தாற்
றழுவுசெய்கைகளியாவையுநடத்திடுந்தானே.

(இ-ள்.) முழுதுங்காண்பவன் - சர்வஞ்ஞனாகியும், முழுதினுஞ் செறிபவன் - சர்வவியாபகனாகியும், முதல்வன் - சர்வ காரணனாகியும், பழுதில் சாந்தனாய் - குற்றமற்ற வுபசாந்தனாகியும், நிறைந்து - பரிபூரணமாய், வாளாவுறை - மௌனமாயிருக்கின்ற, பண்போன் - குணத்தையுடையவன், வழுவிலாவிவனுக்கிய - தவறில்லாத வில்வரசனாலமைத்த, மந்திரி வசத்தால் - மந்திரியினது வசமாக, தழுவுசெய்கைகளியாவையும் - தழுவாநின்ற தொழில்களனைத்தையும், தானே நடத்திடும் - தானே நடத்திவிக்கும்—எ-று.

(இ-ரை.) சர்வஞ்ஞனாகியும், சர்வவியாபகனாகியும், சர்வகாரணனாகியும், குற்றமற்ற வுபசாந்தனாகியும், பரிபூரணமாய் மௌனமாயிருக்கின்ற குணத்தையுடையவன். தவறில்லாத வில்வரசனாலமைத்த மந்திரியினது வசமாக தழுவாநின்ற தொழில்களனைத்தையும் தானே நடத்திவிக்கும்—என்பதாம். (உரு)

இல்லதுள்ளதாமுள்ளதுமில்லதாமிமைப்பிற்
புல்லுமந்திரிநினைத்திடிலிவனொன்றும்புசிக்க
வல்லதில்லையொன்றறிகிலன்மன்னனைவிடாது
செல்லுந்தன்மையாற் கேவலமனைத்தையுஞ்செய்யும்.

(இ-ள்.) புல்லுமந்திரி நினைத்திடில் - பொருந்திய மந்திரியானவன் சிந்தித்தால், இமைப்பில் - நிமிடத்தில், இல்லதுள்ளதாம் - இல்லதுள்ளதாகும், உள்ளதுமில்லதாம் - உள்ளது மில்லாததாகும், இவன் - இந்த மந்திரிக்கு, ஒன்றும் புசிக்க வல்லதில்லை - ஒன்றாகிலு மனுபவிக்க வல்லமையில்லை, ஒன்றறிகிலன் - ஒன்றையு மறிந்திலன், மன்னனைவிடாது -

அரசனைவிடாமல், செல்லுந்தன்மையால் - நடக்கின்ற குணத்தினல், சேவல மனைத்தையுஞ்செய்யும் - மிகவுஞ் சகலத்தையுஞ்செய்யும்—எ-று.

(இ-ரை.) பொருந்திய மந்திரியானவன் சிந்தித்தால் நிமிடத்தில் இல்ல துள்ளதாகும். உள்ளது மில்லாதாகும். இந்த மந்திரிக்கு ஒன்றுகிலு மனுபவிக்க வல்லமையில்லை. ஒன்றையுமறிந்திலன் அரசனை விடாமல் நடக்கின்ற குணத்தினல் மிகவுஞ் சகலத்தையுஞ் செய்யும்—என்பதாம்.

(இ-சு-க-ம்) பிரமத்தை யுருவகப்படுத்தி தொகுத்துச் சொன்ன தென்பதாம். (உ௬)

இவ்வரசாங்கத்தைப் பதுத்து வினவுதல்.

இந்தமந்திரிதன்னெதிரியாவையுமியற்ற
வந்தமன்னவனென்றுமேகாந்தத்தனுகு
மைந்தவென்றுரைத்தருளியபிதாவைநான்மகிழ்ந்து
புந்தியாலந்தவகையெலாம்வினவினேன்புகழ்ந்து.

(இ-ள்.) இந்தமந்திரி - இந்தமந்திரியானவன், தன்னெதிர் - இராசாவினுடைய சந்நிதியில், இயாவையுமியற்ற - சகலத்தையு நடத்த, அந்த மன்னவன் - அந்த வரசனுனவன், என்று மேகாந்தத்தனுகும் - எப்போதுந்தனிமையாகவேயிருப்பன், மைந்தனென்று - குழந்தாயென்று, உரைத்தருளிய பிதாவை - அருளிச்செய்த (வெனது) தந்தையை, நான் மகிழ்ந்து - யான் மகிழ்ச்சியுற்று, புந்தியால் அறிவினுல், அந்த வகையெலாம் - முன் சொல்லப்பட்ட விதங்களனைத்தையும், புகழ்ந்துவினவினேன் -துதித்துக்கேட்டேன்—எ-று.

(இ-ரை.) இந்த மந்திரியானவன் இராசாவினுடைய சந்நிதியில் சகலத்தையு நடத்த அந்தவரசனுனவன் எப்போதுந் தனிமையாகவே யிருப்பன். குழந்தாயென்று அருளிச்செய்த வெனது தந்தையை யான் மகிழ்ச்சியுற்று அறிவினுல் முன்சொல்லப்பட்ட விதங்களனைத்தையும் துதித்துக்கேட்டேன்.—என்பதாம். (உஎ)

அறவிலாசமாபாதியும்வியாதியுமின்றி
நிறைவிதானவத்தேசமேததுதனைநேருந்
திறவியாததுயாதினுலெய்துமத்தேசத்
திறவிலாதவம்மன்னனுர்மந்திரியாவன்.

(இ-ள்.) அறவிலாசமாய் - மிகவும் விஸ்தாரமாய், ஆதியும் வியாதியுமின்றி - ஆதிவியாதிகளில்லாமலிருக்கின்ற, நிறைவிதான-ப்ரகாசமாகிய, அத்தேசமேது - அத்தேசமெப்படிப்பட்டது, அதுதனை நேரும் - அதை

யடைகின்ற, திறவியாது - காரணமெது, அதுயாதினுலெய்தும்- அதெதினுற் கிடைக்கும், அத்தேசத்து - அந்தத்தேசத்தில், வறவிலாத இம்மன்னுர்-நாசமில்லாத வந்தவரசனுர், மந்திரியாவன் - மந்திரியெவன்-எ-று.

(இ-ள.) மிகவும் விஸ்தாரமாய் ஆதிவியாதிக ளில்லாமலிருக்கின்ற ப்ரகாசமாகிய அந்தத் தேச மெப்படிப்பட்டது. அதை யடைகின்ற காரணமெது? அதெதினுற் கிடைக்கும்? அந்தத்தேசத்தில் நாசமில்லாதவந்தவரசனுர்? மந்திரியெவன்.

(இ-உ-க-ம்.) இத்தேச முதலியவற்றைச் செயிக்கப்பகுத்துச் சொல்லும்படி கேட்டதென்பதாம். (உஅ)

## மந்திரியின் வலிமை கூறல்.

புவனமியாவையும்விநோதத்தாலடர்ந்தவென்புயத்தா
லவனம்மந்திரியுடனடர்ப்புருவலியமர்ந்த
தெவனறைந்தருள்கென்றலுமென்பிதாவிசைப்பான்
கவனநீள்வலிமந்திரிவேகமார்கடப்பார்.

(இ-ள்.) புவனமி[illegible]வையும் - பூமிகளனைத்தையும் விநோதத்தால் - விளையாட்டினுல், அடர்ந்த வென்புயத்தால்-செயஞ்செய்த வெனது புயத்தினுல், அவன் - அவ்வரசன், அம்மந்திரியுடன் - அவ்வமைச்சனேடும், அடர்ப்புரு - சயிக்கக்கூடாமல், வலியமர்ந்தவெவன் - வலிமையுண்டாயிருக்கின்றவனியார், அறைந்தருள்கென்றலும் - கிருபை செய்வாயென்று நான் கேட்கவும், என்பிதா விசைப்பான் - எனது தந்தையானவர் சொல்லுவார், கவனநீள்வலி - வேகத்தையுடைய மிகுந்த வலிமை பொருந்திய, மந்திரி வேகமார் கடப்பார் - மந்திரியினதுகடுமையை யார்தான் தாண்டவல்லவா—எ-று.

(இ-ள.) பூமிகளனைத்தையும் விளையாட்டினுல் செயஞ்செய்த வெனது புயத்திறுல் அவ்வரசன் அவ்வமைச்சனேடும் சயிக்கக்கூடாமல் வலிமையுண்டாயிருக்கின்றவனியார், கிருபைசெய்வாயென்று நான்கேட்கவும் எனது தந்தையானவர் சொல்லுவார். வேகத்தையுடைய மிகுந்த வலிமைபொருந்திய மந்திரியினது கடுமையை யார்தான் தாண்டவல்லவர்—என்பதாம். (உகூ)

தேவர்தானவரெண்ணறுகோடிகடிரண்டு
மேவவென்றலர்சூலநேமிகண்முதலென்ற
மேவரும்படைக்கலமெலாமவன்மிசைவிட்டான்
மாவருங்கல்லிலறைந்தபூவெனமுனைமடியும்.

(இ-ள்.) தேவர்தானவர் - தேவருமசுரரும், எண்ணறு கோடிகடிரண்டு - அளவற்ற கோடிகளொன்றாய்க்கூடி, மேவவென்றலர் - மேவினும் வென்றவர்களல்ல, சூலநேமிகள் முதலென்ற - சூலஞ் சக்கர முதலாகச் சொலலப்பட்ட, மேவரும் படைக்கலமெலாம் - பொருந்துதற்கரிய வாயுதங்களனைத்தையும், அவன்மிசைவிட்டால் - அவன்மேல் விடுத்தால், மாவருங்கல்லில் - மிகவுமரிதானகல்லில், அறைந்தபூவென - மோதிய பூவைப் போல, முனைமடியும் - நுனியானதுகெடும்—எ-று.

(இ-கை.) வேதரு மசுரரும் அளவற்ற கோடிகளொன்றாய்க் கூடிமேவினும்வென்றவர்களல்ல சூலஞ்சக்கரமுதலாகச் சொல்லப்பட்ட பொருந்துதற்கரிய வாயுதங்களனைத்தையும் அவன்மேல்விடுத்தால் மிகவுமரிதானகல்லில் மோதிய பூவைப்போல நுனியானது கெடும்—என்பதாம். (௩௦)

## அம்மந்திரியை வெல்லுமுபாயங்கூறல்.

விளிவருந்திறலந்தமந்திரியந்தவேந்தா
லெளிதுவென்றிடில்வணங்குறுமிவ்வகையின்றே
லளியமேருவையசைப்பினுமசைப்பரிதாகு
மொளிகொளூகபுந்தியினலால் வெலப்படானொருங்கே.

(இ-ள்.) விளிவருந்திறலந்தமந்திரி - கெடுதற்கரிய பலமுள்ள வவ்வமைச்சன், அந்த வேந்தாலெளிதுவென்றிடில் - அவ்வரசனு லெளிதாகச் செயித்தால், வணங்குறும்- (அவனுக்கு)வணங்குவான், இவ்வகையின்றேல் - இப்படியிலாவிடின், அளியமேருவை - குளிர்ந்த மகாமேருவை, அசைப்பினும் - அசைத்தாலும், அசைப்பதாகும் - (இவனை)யசைக்கக்கூடாததாம் ஒளிகொள் - ப்ரகாசம் பொருந்திய, ஊகபுந்தியினலால் - அனுப வயுத்தியையுடைய வறிவினலல்லாமல், ஒருங்கு வெலப்படான் - முழுதுஞ்செயிக்கப்பட்டான்—எ-று.

(இ-கை.) கெடுதற்கரிய பலமுள்ள வவ்வமைச்சன் அவ்வரசனு லெளிதாகச் செயித்தால் அவனுக்கு வணங்குவான். இப்படியிலாவிடின் குளிர்ந்த மகாமேருவை அசைத்தாலும் இவனையசைக்கக்கூடாததாம், ப்ரகாசம்பொருந்திய அனுபவ யுத்தியையுடைய வறிவினலல்லாமல் முழுதுஞ் செயிக்கப்படான்—என்பதாம் (௩௧)

### சித்துருவகத்தை வெளிப்படுத்திச் சொல்லத் தொடங்கல்.

ஊகபுந்தியாலல்லதவ்வமைச்சனையுற்றால்
வேகநாகம்போலெரித்திடும்வேந்தனேடமைச்ச

னேகராச்சியஞ்செய்யுமத்தேசமுமியாவுஞ்
சோகமற்றிடக்கேளெனவிரித்திதுசொன்னான்.

(இ-ள்.) ஊகபுந்தியாலல்லது - அனுபவயுத்தியையுடைய வறிவினாலல்லாமல், அவ்வமைசசனையுற்றால் - அந்த மந்திரியைப் பொருந்தினால், வேகநாகம்போல் - கோபத்தையுடைய சற்பத்தைப்போல, எரித்திடும் - எரிப்பான், வேந்தனோடு - அரசனோடும், அமைச்சன் - மந்திரியானவன், ஏகராச்சியஞ்செய்யும் - தனியேயரசாக்ஷிசெய்கின்ற, அத்தேசமுமியாவும்- அந்தத்தேசமு (மதிலுள்ள) சகலமும், சோகமற்றிடக்கேளென - (உனது) துன்ப மறும்பொருட்டு கேட்பாயென்று, விரித் திதுசொன்னான் - பிரித்திதைச் சொன்னான்—எ-று.

(இ-ரை.) அனுபவயுத்தியையுடைய வறிவினாலல்லாமல் அந்த மந்திரியைப் பொருந்தினால் கோபத்தையுடையசற்பத்தைப்போல எரிப்பான். அரசனோடும் மந்திரியானவன் தனியே யரசாக்ஷி செய்கின்ற அந்த தேசமூ மதிலுள்ள சகலமும் உனது துன்பமறும்பொருட்டு கேட்பாயென்று பிரித்திதைச் சொன்னான்—எ-ம்.

## தேயமுதலிய மூன்றையுங் கூறல்.

முன்னநாஞ்சொன்னதேசமோர்முடிவிலாமுத்தி
மன்னனென்றதுமாசிலாமணியெனவயங்கும்
தன்னில்வேறிலாவாத்துமதத்துவந்தானே
யன்னவேந்தனாலமைத்தமந்திரிமனமாகும்.

(இ-ள்.) முன்னம் - முன்னமே, நான்சொன்னதேசம் - யாஞ்சொல்லிய தேயமானது, ஓர் முடிவிலாமுத்தி - ஒப்பற்ற முடிவிறந்த மோக்ஷமாகும், மன்னனென்றது - இராசாவென்று சொல்லியது, மாசிலாமணியென - களங்கமற்ற விரத்தினத்தைப்போல, வயங்கும் ப்ரகாசிக்கின்ற, தன்னில் வேறிலா - தன்னிடத்தில் வேறுபடாத, ஆத்தும தத்துவந்தானே - ஆத்ம தத்துவமேயாகும், அன்னவேந்தனால் - அப்படிப்பட்ட வரசனால், அமைந்தமந்திரி-படைத்தமந்திரியானவன், மனமாகும்-மனமாகும்-எ-று.

(இ-ரை.) முன்னமே யாஞ்சொல்லிய தேயமானது ஒப்பற்ற முடிவிறந்த மோக்ஷமாகும். இராசாவென்று சொல்லியது களங்கமற்ற விரத்தினத்தைப்போல ப்ரகாசிக்கின்றதன்னிடத்தில் வேறுபடாத ஆத்ம தத்துவமே யாகும். அப்படிப்பட்டவரசனால் படைத்த மந்திரியானவன் மனமாகும்—என்பதாம். (நந)

## யூகமென்பதைக் கூறல்.

விடையம்யாவையுமொருப்படவொருக்கிநல்விராக
முடைமையாவதுபரமமாம்யூகமென்றுரைத்தேந்
தடையிலாமனம்விராகத்தால்வெலப்பட்டதன்மை
படைசெய்மத்தமாதொழுவத்துளகப்பட்டபண்பே.

(இ-ள்.) விடமியாவையும் - விடயங்களனைத்தையும், ஒருப்படவொருக்கி - ஒருமிக்கக்கெடுத்து, நல்ல விராகம் - நல்ல வயிராக்கியத்தை, உடைமையாவது - உடையதாவதே, பரமமாம் யூகமென்றுரைத்தேம் - மேலான யுத்தியென்று சொன்னேம், தடையிலாமனம் - தடையற்றமனமானது, விராகத்தால் - நிராசையினல், வெலப்பட்ட தன்மை - வெல்லலப்பட்ட குணமானது, படைசெய்மத்தமா-சண்டைசெய்கின்ற மதத்தையுடைய யானையானது, தொழுவத்துள் - தொழுவதினுள், அகப்பட்ட பண்பு-அகப்பட்ட தன்மையாம்—எ-று.

(இ-கா.) விடயங்களனைத்தையும் ஒருமிக்கக் கெடுத்துநல்ல வயிராக்கியத்தை உடையதாவதே மேலான யுத்தியென்று சொன்னேம். தடையற்ற மனமானது நிராசையினல் வெல்லலப்பட்ட குணமானது சண்டைசெய்கின்ற மதத்தையுடைய யானையானது தொழுவத்தினுள் அகப்பட்ட தன்மையாம்—என்பதாம். "

(இ-சூ-க-?) தேயமுதலிய நான்கையு முத்திமுதலிய நான்காகப்பிரித்துச் சொன்னதாம். (௩௪)

---

பிரமத்தை யாசாங்கமாக வுருவகப்படுத்தியதைச் சேவிக்த முத்தியை மூன்றுவிதமாகக் கூறத்தோடங்கி முதலுத்தியைக்கூறல்.

கற்றறிந்திலார்மனத்தைநாற்கூறெனக்கற்பித்
துற்றபோகத்திலுபயமுநூல்வழியொன்றும்
பெற்றதேசிகன்பூசையிலொன்றுமாய்ப்பேணிற்
றுற்றகங்குல்போய்விவேகமாஞ்சுடர்வந்துதோன்றும்.

(இ-ள்.) கற்றறிந்திலார் மனத்தை - (ஞானநூலை) யுணர்ந்தறியாதவர்கண் மனதை, நாற்கூறெனக்கற்பித்து - நான்குபங்காகப்பிரித்து, உற்றபோகத்திலுபயமும் - அடைந்த விடயபோகங்களி லிரண்டுபங்கும், நூல்வழியொன்றும் - (ஞான) சாஸ்திரமார்க்கத்திலொருபங்கும், பெற்றதேசிகன் பூசையிலொன்றுமாய் - (அனுக்கிரகம்)பெற்ற வாசாரிய ராராதனையிலொருபங்காகவும், பேணில் - செலுத்திஞல், துற்றகங்குல்போய் - நிறை

ந்த (வஞ்ஞா) ஞந்தகாரம்போய், விவேகமாஞ்சுடர்-ஞானப்ரகாசமானது, வந்துதோன்றும் - வந்துநிற்கும்—எ-று.

(இ-ள.) ஞானநூலே யுணர்ந்தறியாதவர்கண் மனதை நான் குபங்காகப் பிரித்து அடைந்த விடயபோகங்களி லிரண்டு பங்கும் ஞானசாஸ்திர மார்க்கத்தி லொருபங்கும் அனுக்கிரகம் பெற்ற வாசாரிய ராராதனேயி லொருபங்காகவும் செலுத்திஞல் நிறை ந்த வஞ்ஞாஞந்த காரம்போய் ஞானப்ரகாசமானது வந்து நிற் கும்—என்பதாம். (௯௫)

## இரண்டாவது யுத்தியைக்கூறல்.

சிறிதறிந்தவர்மனத்தைநாற்கூறெனச்செய்து
பொறிவசத்தொன்றுந்தேசிகர்பூசையிலிரண்டு
மறியுநூற்பொருண்மனனத்தோர்கூறுமேயாகி
னெறிவிவேகத்தாலொன்றுணர்ஞானமேநிரம்பும்.

(இ-ள்.) சிறிதறிந்தவர் மனத்தை - கொஞ்சமறிந்தவர்கள் மனதை, நாற்கூறெனச்செய்து - நான்கு பங்காகச்செய்து, பொறிவசத்தொன்றும்- இந்திரிய வசத்திற் (செல்லுகின்ற போகங்களி) லொருபங்கும், தேசிகர் பூசையிலிரண்டும் - ஆசாரிய வாராதனேயிலிரண்டுபங்கும், அறியுநூற்பொ ருண் மனனத்து - விசாரித்தறிகின்ற ஞானசாஸ்திரார்த்தங்களைமனனஞ் செய்வதில், ஓர் கூறுமேயாக்கில் - ஒரு பங்காகவுஞ்செய்தால், நெறிவிவே கத்தால் - செவ்வையான விவேகத்திஞல், ஒன்றுணர் ஞானமே நிரம்பும்- பரதத்துவமறியு ஞானமே நிறையும்—எ-று.

(இ-ள.) கொஞ்சமறிந்தவர்கள் மனதை நான்கு பங்காகச் செய்து இந்திரியவசத்திற் செல்லுகின்ற போகங்களிலொருபங் கும், ஆசாரிய வாராதனேயிலிரண்டு பங்கும், விசாரித்தறிகின்ற ஞானசாஸ்திரார்த்தங்களை மனனஞ்செய்வதில் ஒரு பங்காகவுஞ் செய்தால் செவ்வையான விவேகத்திஞல் பரதத்துவமறியு ஞான மே நிறையும்—என்பதாம். (௯௬)

## மூன்ருவது யுத்தியைக்கூறல்.

ஞானமுற்றவர்மனத்தைநாற்கூறெனநாட்டி
யானநூலினும்விராகத்துமனுபவந்தனிலு
மானநற்குருபூசையின்வழியினுஞ்செலுத்தி
லீனமற்றநன்முத்திவந்தெய்திடுமெளிதின்.

(இ-ள்.) ஞானமுற்றவர் மனத்தை - ஞானத்தையடைந்தவர்கண்மனத்தை, நாற்கூறெனநாட்டி - நான்குபங்காக நிறுத்தி, ஆனநூலினும் - அயிக்கிய (ஸ்வரூபத்தையறிவிக்கும்) ஞானசாஸ்திரங்களிலும், விராகத்தும் - நிராசையிலும், அனுபவந்தனிலும் - ஸ்வானுபவத்திலும், மானநற்குருபூசையின் - மகானுகிய சற்குரு வாராதனையின், வழியினுஞ்செலுத்தில் - மார்க்கத்திலுஞ் செலுத்தினல், ஈனமற்ற நன்முத்தி - குற்றமற்றதாயிருக்கின்ற நல்ல மோக்ஷமானது, எளிதின் வந்தெய்திடும் - எளிதாகவேவந்து கிடைக்கும்—எ-று.

(இ-ஸா.) ஞானத்தையடைந்தவர் கண்மனதை நான்கு பங்காகநிறுத்தி அயிக்கியஸ்வரூபத்தையறிவிக்கும் ஞான சாஸ்திரங்களிலும் நிராசையிலும் ஸ்வானுபவத்திலும் மகானுகிய சற்குரு வாராதனையின் மார்க்கத்திலுஞ்செலுத்தினல் குற்றமற்றதாயிருக்கின்ற நல்லமோக்ஷமானது எளிதாகவே வந்துகிடைக்கும்-எ-ம.

மனதை நாற்கூறு செய்யென்றது அதன் விரித்தியை. (கூஎ)

## இவ்வுத்திக்குச் சகாயங்கூறல்-வேறு.

மிக்கவறிவால் விசாரத்தான் மெய்ம்மையுணர்வு நிராசையுநீ
யொக்கவென்றுங் கைக்கொள்வா யூற்றமான நிராசையினுற்
றக்கவிசாரம் விசாரத்தாற்றவிராநிராசை தம்மாற்றுந்
தொக்குநிரம்பும் வாரிதியுந்தொடர்மேகமுந் துன்னுதல்போலாம்.

(இ-ள்.) மிக்கவறிவால் - மிகுந்த வறிவினுலும், விசாரத்தால் - விசாரணையினுலும், மெய்ம்மையுணர்வும் - ஆத்மதரிசனமும், நிராசையும்-விராகமும், நீயொக்க - நீயொருமிக்க, என்றுங்கைக்கொள்வாய் - எப்போதுங் கைவசமாக்குவாய், ஊற்றமான நிராசையினுல்-நிலையாகியவிராகத்தினுல், தக்கவிசாரம் - தகுந்த (வாத்ம) விசாரணையும், விசாரத்தால் - (அவ்வாத்ம விசாரணையினுல்.) தவிராநிராசை - ஒழிவில்லாதவிராகமும், தம்மாற்றும்- ஒன்றுக்கொன்று, தொக்கு நிரம்பும் வாரிதியும் - தொகுப்பாய் நிறைந்த சமுத்திரமும், தொடர்மேகமும்- தொடர்பானமேகமும், துன்னுதல்போலாம் - அமைவதுபோலவாம்.—எ-று.

(இ-ஸா.) மிகுந்தவறிவினுலும் விசாரணையினுலும் ஆத்மதரிசனமும் விராகமும் நீயொருமிக்க எப்போதுங் கைவசமாக்குவாய் நிலையாகிய விராகத்தினுல் தகுந்த வாத்மவிசாரணையும் அவ்வாத்ம விசாரணையினுல் ஒழிவில்லாத விராகமும் ஒன்றுக்கொன்றுதொகுப்பாய் நிறைந்த சமுத்திரமும் தொடர்பாண மேகமும் அமைவது போலவாம்—என்பதாம். (கூஅ)

### இச்சகாயத்தோடு முத்தியையடையு மாபுகூறல்.

நாட்டினியல்பு வழுவாம னட்டோர்க்கிதமா நற்பொருள்க
ளீட்டிமுன்ன மதனாலே யினியகுணத்தி லுயர்ந்தோரைக்
கூட்டியவரா னிராசையினைக் கூடியதனால் விசாரத்தைத்
தீட்டியதனான் மெய்ஞ்ஞானந் தெளிந்தான்முத்தி சித்திக்கும்.

(இ-ள்.) நாட்டினியல்பு வழுவாமல் - தேசசாரந்தவறாமல், நட்டோர்க்கிதமாம் - உறவினர்க்குரித்தான, நற்பொருள்களீட்டி - நல்ல திரவியங்களைச் சம்பாதித்து, முன்னமதனால் - முன்பப்பொருளினால், இனிய குணத்தில் - இனிமையான (சாத்மீக) குணத்தில், உயர்ந்தோரைக்கூட்டி - மேன்மையான சத்துக்களைச்சேர்ந்து, அவரால்-அவர்களால், நிராசையினைக் கூட்டி - வயிராக்கியத்தையடைந்து, அதனால் - அந்தவயிராக்கியத்தினால், விசாரத்தைத்தீட்டி-(ஆத்ம) விசாரணையைச்செய்து, அதனால்-அந்தவிசாரணையினால், மெய்ஞ்ஞானந் தெளிந்தால் - உண்மைஞானத்தைத் தெளிவுற்றால், முத்தி சித்திக்கும் - மோக்ஷமுண்டாகும்—எ-று.

(இ-பொ.) தேசசாரந்தவறாமல் உறவினர்க் குரித்தான நல்ல திரவியங்களைச் சம்பாதித்து முன்பப்பொருளினால் இனிமையான சாத்மீககுணத்தில் மேன்மையான சத்துக்களைச் சேர்ந்து அவர்களால் வயிராக்கியத்தை யடைந்து அந்த வயிராக்கியத்தினால் ஆத்மவிசாரணையைச்செய்து அந்த விசாரணையினால் வுண்மை ஞானத்தைத் தெளிவுற்றால் மோக்ஷமுண்டாகும்—என்பதாம். (௩௯)

---

### முன்விசாரித்த வனுபவத்தை மனனஞ் செய்ததினாற் சுகித்தல்.

என்றுமுன்ன மென்றந்தை யிசைத்தான்றெய்வ சகாயத்தா,
லொன்றுமொழியா தின்றுணர்ந்தே னுணர்வு பெற்றேன் போகத்தி,
னின்றவாசை யின்றொழித்து நிராசையென்னு நிதியாலே,
துன்றிநொய்தா யுபசாந்தச் சுதையிற்குளிர்ந்த சுகம்பெற்றேன்.

(இ-ள்.) என்று முன்னமென்றந்தை - இப்படியென்று முன்னமே யெனது பிதாவானவர், இசைத்தான் - சொன்னார், தெய்வ சகாயத்தால் - தெய்வசகாயத்தினால், ஒன்று மொழியாது - ஒன்றையும்விடாமல், இன்றுணர்ந்தேன் - இப்பொழுதறிந்தேன், உணர்வுபெற்றேன் - ஞானத்தையடைந்தேன், போகத்தினின்றவாசை - போகத்திலிருந்தவிச்சையை, இன்றொழித்து - இப்போது நீக்கி, நிராசையென்னு நிதியாலே துன்றி - விராகமென்கிற செல்வத்தினானிறைந்து, நொய்தாய் - சொச்சமாய், உபசாந்த

ச்சுதையில் - உபசாந்தமென்னுமமிர்தத்தினால், குளிர்ந்தசுகம்பெற்றேன்-சீதளமான பரமசுகத்தையடைந்தேன்—எ-று.

(இ-ளா.) இப்படியென்று முன்னமே யெனது பிதாவானவர் சொன்னார். தெய்வ சகாயத்தினால் ஒன்றையும் விடாமல் இப்பொழுதறிந்தேன், ஞானத்தை யடைந்தேன். போகத்திலிருந்த விச்சையை இப்போதுநீக்கி விராகமென்கின்றசெல்வத்தினானிறைந்து சொச்சமாய் உபசாந்தமென்னு மமிர்தத்தினால் சீதளமான பரம சுகத்தை யடைந்தேன்—என்பதாம். (௬0)

## நிதித்தியிற் காட்சிப்படல்.

அந்தோவந்தோ விதுநெடுநா ளறிந்திலேனின் றறிவுற்ற
சந்தோடத்தை யென்சொல்வேன் சகலநினைவுஞ் சமித்தாறி
நொந்தோரின்ப துன்பத்தா னோவாதிருக்கு மிடமிதுவே
யுய்ந்தோருறையும் பதமிதுவே யுபசாந்தத்தி னுயர்விதுவே.

(இ-ள்.) அந்தோவந்தோ - அகோவகோ, இது - இவ்வனுபவத்தை, நெடுநாளறிந்திலன் - வெகுநாளறியாதவனானேன், இன்றறிவுற்ற சந்தோடத்தை - இப்போதறிந்தமகிழ்ச்சியை, என்சொல்வேன் - என்னவென்று சொல்லுவேன், சகலநினைவுஞ் சமித்தாறி - எல்லாநினைவுகளு முபசாந்தமாய், இன்பதுன்பத்தால் - சுகதுக்கங்களில், நொந்தோர் - துன்பமுற்றவர்கள், நோவாதிருக்குமிடமிதுவே - வருந்தாமலிருக்கின்ற விடமிதுதான், உய்ந்தோருறையும் பதமிதுவே - ஆத்மவாழ்வையடைந்தவர்கள் பொருந்தாநின்ற பதமிதுதான், உபசாந்தத்தின் - உபசமனத்தினுடைய, உயர்விதுவே - மாக்ஷிமையிதுதான்—எ-று.

(இ-ளா.) அகோவகோ! இவ்வனுபவத்தை வெகுநாளறியாதவனானேன். இப்போதறிந்த மகிழ்ச்சியை என்னவென்றுசொல்வேன். எல்லாநினைவுகளு முபசாந்தமாய் சுகதுக்கங்களினால் துன்பமுற்றவர்கள்வருந்தாமலிருக்கின்றவிடமிதுதான். ஆத்மவாழ்வையடைந்தவர்கள் பொருந்தாநின்ற பதமிதுதான். உபசமனத்தினுடைய மாக்ஷிமையிதுதான். (௬௧)

பரோக்ஷார்த்தத்திற் சந்தேகநீங்கிய பரோக்ஷமா யதனினிற்
றற்பொருட்டாசிரியரைச் சிந்தித்தல்.

என்னவுரைத்து நானாரென் னுருவமேதென் றியான் விளங்கத், தன்னையறியுஞ் சுக்கிரனைத் தாழ்ந்துவினவி தத்துவத்தை,

யுன்னும்பொழுதே யஞ்ஞான மோடுமென்ன வுசனைவை, முன்ன வேண்டு மெனக்கண்கண் முகிழ்ந்து நினைந்தான் முழுதன்பால்.

(இ-ள்.) என்னவுரைத்து - இப்படியென்றுசொல்லி, யானுர்-யானுர், என்னுருவமேதென்று - எனதுஸ்வரூப மியாதென்று விசாரித்து, இயான் விளங்க - நான் ப்ரகாசிக்கும்படி, தன்னையறியுஞ் சுக்கிரனை - தனது ஸ்வரூபத்தை யுணர்ந்திருக்கின்ற (நமது குருவாகிய) சுக்கிராசாரியரை, தாழ்ந்து - வணங்கி, வினவி - விசாரித்து, தத்துவத்தை - உண்மையை, உன்னும்பொழுது - நினைக்குமளவில், அஞ்ஞானமோடுமென்ன- அஞ்ஞானங்கெடுமென்று (நினைத்து) உசனைவை - சுக்கிராசாரியரை, முன்னவேண்டுமென - நினைக்கவேண்டுமென்று, கண்கண்முகிழ்த்து-கண்களைக்குவித்து, முழுதன்பால்-பூரணமான வன்பினுல், நினைந்தான்-தியானித்தான்-எ-று.

(இ-ரை.) இப்படியென்று சொல்லி யானுர் ? எனதுஸ்வரூப மியாதென்று விசாரித்து நான் ப்ரகாசிக்கும்படி தனது ஸ்வரூபத்தை யுணர்ந்திருக்கின்ற நமதுகுருவாகிய சுக்கிராசாரியரை வணங்கி விசாரித்து உண்மையை நினைக்குமளவில் அஞ்ஞானங்கெடுமென்று நினைத்து சுக்கிராசாரியரை நினைக்கவேண்டுமென்று கண்களைக்குவித்து பூரணமான வன்பினுல் தியானித்தான்-எ-ம்.

(இ-கு-க-ம்.) முத்தியை யடைதற் குத்தியு மவ்வுத்திக்குச் சகாயமு மச்சகாயத்துக்குச் சாதனமுமாகிய விவைகளை யறிவித்ததாம். (௬௨)

---

## ஆசிரியரைத் தரிசித்துத்துதித்தல்.

மெய்யாகிய சச்சிதானந்த வெளியேவடிவாகியவெள்ளி, யுய்யாநின்ற மாவலிமுன்னுதிப்பவவனுமுவந்திறைஞ்சிக்,கையார்மணியா லுயர்மலராற் காலிலருச்சித் துரைசெய்வா, னையாநின்னன் பெனயெழுப்ப வடியேனுரைப்ப தறிந்தருள்வாய்,

(இ-ள்.)மெய்யாகிய - உண்மையான, சச்சிதானந்த வெளியே - சச்சிதானந்தகாயமே - வடிவாகியவெள்ளி - ஸ்வரூபமாயிருக்கின்ற சுக்கிராசாரியார், உய்யாநின்ற - ஆத்மவாழ்வை யடையாநின்ற, மாவலிமுன்னுதிப்ப - மாவலியின் முன்னேதோன்ற, அவனு முவந்திறைஞ்சி - அவ்வரசனு மகிழ்ச்சியோடும் வணங்கி, கையார்மணியால் - கையினிறைந்த விரத்தினங்களினுலும், உயர்மலரால்-நல்லபுட்பங்களினுலும், காலிலருச்சித்து- பாதத்திலருச்சனை செய்து, உரைசெய்வான் - (மாவலி) சொல்லுவான், ஐயா - எனதாச்சாரியரே, நின்னன்பெனயெழுப்ப - தேவரீரருளானதெ

ன்னைத்தூண்ட, அடியேனுரைப்பது - அடியேன் சொல்லுவதை, அறிந்த ருள்வாய் - கேட்டனுக்கிரகஞ்செய்வாய்—எ-று.

(இ-ரை.) உண்மையான சச்சிதாநந்த வாகாயமே ஸ்வரூபமாயிருக்கின்ற சுக்கிராசாரியார் ஆத்மவாழ்வை யடையாநின்ற மாவலியின் முன்னேதோன்ற அவ்வரசனு மகிழ்ச்சியோடும் வணங்கி கையினிறைந்த விரத்தினங்களினாலும் நல்ல புட்பங்களினாலும் பாதத்தி லருச்சனைசெய்து மாவலிசொல்லுவான், எனதாசாரியரே தேவரீரருளான தென்னைத்தூண்ட அடியேன் சொல்லுவதை கேட்டனுக்கிரகஞ்செய்வாய்—என்பதாம். (௪௩)

---

உலகமுதலிய வேழிலுமிருக்கின்ற தியாதென விசாரித்தல்.

என்னிங்குள்ள தப்பாலென் னெல்லைசொல்லப் பட்டுளதென்
றுன்னுமெல்லை யில்லாதென் சொல்லுநானார் நீயாரிம்
மன்னுமுலக மேதென்று மயக்கந்தீர வருளென்ன
வன்னதெல்லாந்தெரியவிரித் தவனுக்கிவனன் றறிவித்தான்.

(இ-ள்.) இங்குள்ளதென் - இவ்விடத்துள்ளதென்ன, அப்பாலென்- அப்பாலிருக்கின்றதென்ன, எல்லை சொல்லப்பட்டுளதென் - அளவுசொல்லப்பட்டதென்ன, துன்னுமெல்லையில்லாதென்-நெருங்கிய வளவில்லாததென்ன, சொல்லு நானார்-பேசுகின்ற யானார், நீயார் - (கேட்கின்ற) நீரார், இம்மன்னு முலகமேதென்று - இந்த நிலைபெற்ற சகமியாதென்று, மயக்கந்தீர வருளென்ன - மயக்கந்தீரும்படி யனுக்கிரகஞ்செய்வாயென்று கேட்க, அன்னதெல்லாம் - அவன்கேட்டசகலமும், தெரியவிரித்து-தெரியும்படி பகுத்து, அவனுக்கு - அந்த மாவலிக்கு, இவன் - இச்சுக்கிராசாரியானவர், நன்றறிவித்தான் - நன்றாகத் தெரிவித்தார்—எ-று.

(இ-ரை.) இவ்விடத்துள்ளதென்ன? அப்பாலிருக்கின்றதென்ன? அளவு சொல்லப்பட்டதென்ன? நெருங்கியவளவில்லாததென்ன பேசுகின்ற யானார்? கேட்கின்ற நீரார்? இந்த நிலைபெற்ற சகமியாதென்று மயக்கந்தீரும்படி யனுக்கிரகஞ்செய்வாயென்று கேட்க, அவன்கேட்ட சகலமும் தெரியும்படிபகுத்து அந்த மாவலிக்கு இச்சுக்கிராசாரியானவர் நன்றாகத்தெரிவித்தார்—எ-ம். ()

### இவ்வேழுமுதலியயாவுஞ் சின்மாத்திரமேயென வுபதேசித்தல்.

வருங்கற்பகவிண் விரைந்தேக வந்தேன்பலசொல் லியும்பயனென்
சுருங்கச்சொல்லும் பயன்கேளாய் தோன்றவிங்குள்ளதுவுஞ்சித்
தொருங்கப்புறத்துஞ்சித்தெல்லை யுள்ளதுஞ்சித்தெல்லையற
நெருங்குற்றதுஞ்சித் தியான்சித்து நீசித்துலக நிறைசித்தே.

(இ-ள்.) வருங்கற்பகவிண் - வளருகின்ற கற்பக விருக்ஷத்தையுடைய தேவலோகத்துக்கு, விரைந்தேகவந்தேன் - விரைவோடுஞ்செல்ல வந்தேன், பலசொல்லியும் பயனென் - பலவாகப்பேசியும் ப்ரயோசனமென்ன, சுருங்கச்சொல்லும் - சுருக்கமாகச்சொல்லுகின்ற, பயன்கேளாய் - ப்ரயோசனத்தைக்கேட்பாய், தோன்ற விங்குள்ளதுவும் - தோற்றமாக விவ்விடத்துள்ளதுவும், சித்து - ஞானமே, ஒருங்கப்புறத்தும் - சமஸ்தமான புறம்பிலுள்ள விடங்களும், சித்து - ஞானமே, எல்லையுள்ளதும் - அளவுள்ளதும், சித்து - ஞானமே, எல்லையற நெருங்குற்றதும் - அளவில்லாமற் செறிவுள்ளதும், சித்து - ஞானமே, யான்சித்து - (சொல்லுகின்ற) யானுஞானமே, நீசித்து - (கேட்கின்ற) நீயுஞானமே, உலக நிறை சித்தே - சகலமும் பூரணஞானமே—எ-று.

(இ-ரை.) வளருகின்ற கற்பகவிருக்ஷத்தையுடைய தேவலோகத்துக்கு விரைவோடுஞ் செல்லவந்தேன். பலவாகப்பேசியும் ப்ரயோசனமென்ன, சுருக்கமாகச்சொல்லுகின்ற ப்ரயோசனத்தைக் கேட்பாய். தோற்றமாக விவ்விடத்துள்ளதுவும் ஞானமே, சமஸ்தமான புறம்பிலுள்ள விடங்களும் ஞானமே. அளவுள்ளதும் ஞானமே, அளவில்லாமற் செறிவுள்ளதும் ஞானமே, சொல்லுகின்ற யானு ஞானமே, கேட்கின்ற நீயு ஞானமே, சகலமும் பூரண ஞானமே—என்பதாம். (சரு)

---

## இவ்வனுபவத்தி லழுந்தென்றருளி யேகுதல்.

இதுவேசுருக்க மிவ்வறுதி யிதயங்கொண்டிவ் வகைக்கேற்ற
மதியானின்னை நினைநீயே மாறாதுணர்ந்து நோக்குதியே
லதனாலந்த மாம்பதத்தை யடைதியோரே ழுருந்தவரும்
புதிதோர்தெய்வ காரியத்திற் புகுந்தாரியாமும் போகுதுமால்.

(இ-ள்.) இதுவேசுருக்கம் - இந்நிலையே சுருக்கமாம், இவ்வுறுதி - இச்சித்தாந்தத்தை, இதயங்கொண்டு - மனதிற்றரித்துக்கொண்டு, இவ்வகைக்கேற்றமதியால் - இவ்வகைகளுக்குரிய வறிவினால், நின்னை - உனதுஸ்வரூபத்தை, நீயேநினை - நீயேசிந்திப்பாய், மாறாதுணர்ந்து - திரிவின்றியறி

ந்து, நோக்குதியேல் - பார்ப்பாயானல், அதனல் - அதினல், அந்தமரம் பதத்தையடைதி - முடிவான பரமபதத்தை யடையக்கடவாய், ஒரேழருந் தவரும் - ஒப்பற்ற வரியதவத்தையுடைய சத்தரிஷிகளும், புதிதோர் தெய் காரியத்தில் - நூதனமாயொரு தெய்வகாரியத்தில், புகுந்தார் - ப்ரவேசித் தார்கள், இயாமும்போகுதும் - நாமும்போவோம்—எ-று.

(இ-ள.) இங்கிலேயே சுருக்கமாம். இச் சித்தாந்தத்தை மன திற் றரித்துக்கொண்டு இவ்வகைகளுக்குரியவறிவினல் உனதுஸ்வ ரூபத்தை நீயே சிந்திப்பாய். திரிவின்றி யறிந்து பார்ப்பாயானல் அதினல் முடிவான பரமபதத்தை யடையக்கடவாய். ஒப்பற்ற வரிய தவத்தையுடைய சத்தரிஷிகளும் நூதனமாயொரு தெய்வ காரியத்தில் ப்ரவேசித்தார்கள். நாமும்போவோம்-எ-ம். (சகூ)

## இவ்வனுபவத்தை மன்னித்தல்.

என்னவெள்ளி யேகியபின் னெல்லாமறிவா முலகினைப்பார்த்
துன்னவொக்கு மொக்குமெனக் குசனனுரைத்ததுண்மையதே
முன்னமவனி சித்துலகு மூன்றுஞ்சித்து நான்சித்து
நன்னலான திசைசித்து நாட்டுகின்றதெலாஞ்சித்தே.

(இ-ள்.) என்ன - (இப்படி) யென்றுசொல்லி, வெள்ளி யேகியபின் - சுக்கிராசாரியர் போனபின்பு, எல்லாமறிவாம் - சகலமுஞானமாகிய, உல கினைப்பார்த்து - சகத்தைப்பார்த்து, உன்ன - நினைத்து, ஒக்குமொக்கும் - ஒவ்வுமொவ்வும், எனக்கு - என்றனக்கு, உசனனுரைத்தது - சுக்கிராசாரி யராற் சொல்லியது, உண்மையதே - எதார்த்தமே, முன்னமவனிசித்து - முதன்மையாகிய பூமியுஞானமே, உலகமூன்றுஞ்சித்து - திரிலோகமுஞா னமே, நான் சித்து - எனது ஸ்வரூபமு ஞானமே, நன்னலான திசைசித் து - நல்ல நான்கு திக்குகளுஞானமே, நாட்டுகின்றதெலாஞ்சித்தே - ஸ் தாபிக்குங் கிரியைகளனைத்து ஞானமே-எ-று.

(இ-ள.) இப்படி யென்று சொல்லி சுக்கிராசாரியர் போன பின்பு சகலமு ஞானமாகிய சகத்தைப்பார்த்து நினைத்து ஒவ்வு மொவ்வும் என்றனக்கு சுக்கிராசாரியராற் சொல்லியது எதார்த் தமே, முதன்மையாகிய பூமியுஞானமே, திரிலோகமு ஞானமே, எனது ஸ்வரூபமுஞானமே, நல்ல நான்குதிக்குகளுஞானமே, ஸ்தா பிக்குங் கிரியைகளனைத்து ஞானமே—என்பதாம். (சஎ)

## நிதித்தியிற் காட்சிப்படலம்.

தெரிக்கும்பொருளுந் தரிசனமுந் தீர்ந்துவெறுநின் மலவடிவாய்ப், புரிக்குமுதயம் விடாதென்றும் பொலியும் பரமப் பொருளானேன், வரிக்குங்காட்சி யிலாவறிவே வடிவாயொருகா லேயெங்கும், விரிக்குநிறைவா யுபசாந்த வெளியா யறிவாமிகுபொருணன்.

(இ-ள்.) தெரிக்கும்பொருளும்-காணப்படுந்திர்ஸ்யமும், தரிசனமும்-காக்ஷியும், தீர்ந்து - ஒழிந்து, வெறு நின்மலவடிவாய் - கேவலகளங்கமற்ற ஸ்வரூபமாய், புரிக்குமுதயம்விடாது - விளங்குகின்ற சதோதயமாய், என்றும் - எப்பொழுதும், பொலியும்பரமப் பொருளானேன் - ப்ரகாசிக்கின்ற பிரமவஸ்துவானேன், வரிக்குங் காட்சியிலா - பந்தப்படுத்துகின்ற விடயமில்லாத, அறிவேவடிவாய் - ஞானமேயுருவமாய், ஒருகால்-ஏககாலத்தில், எங்கும் - எவ்விடத்தும், விரிக்குநிறைவாய் - வியாபகமாகியும், உபசாந்த வெளியாய் - உபசமனமான ஞானாகாசமாகியும், அறிவாம் - அறிவாகியுமிருக்கின்ற, மிகுபொருணன் - மகத்தாகிய பூரணவஸ்துவேயான்-எ-று.

(இ-ஸா) காணப்படுந் திரிஸ்யமும், காக்ஷியும் ஒழிந்து கேவல களங்கமற்ற ஸ்வரூபமாய் விளங்குகின்ற சதோதயமாய் எப்பொழுதும் ப்ரகாசிக்கின்ற பிரமவஸ்து வானேன். பந்தப்படுத்துகின்ற விடயமில்லாத ஞானமே யுருவமாய் ஏககாலத்தில் எவ்விடத்தும் வியாபகமாகியும், உபசமனமான ஞானாகாசமாகியும், அறிவாகியுமிருக்கின்ற மகத்தாகிய பூரணவஸ்துமேவ யான்-எ-ம். (௪௮)

## சமாதி யடைதல்.

ஓங்குஞ்சின்மாத் திரப்பொருளா மோங்காரத்தை யுண்ணினைந்து, தூங்குந்தியான பரனாகித் தொடர்சங்கற்ப மெல்லாம்போய், வாங்குந்தொழிலேடணையைய மனனஞான ஞேயமிவை, தாங்குஞாதா வனைத்துமறத் தனிச்சித்திரம்போ னெடிதிருந்தான்.

(இ-ள்.) ஓங்கும் - ஓங்காநின்ற, சின்மாத்திர பொருளாம் - ஞானமாத்திரார்த்தமாகிய, ஓங்காரத்தை - ப்ரணவஸ்வரூபத்தை, உண்ணினைந்து-மனதிற் சிந்தித்து, தூங்குந் தியானபரனாகி - அறிதுயிலான தியானனாருடனாய், தொடர்சங்கறபமெல்லாம்போய் - தொடராநின்ற சங்கற்பங்களனைத்தும் விடுபட்டு, வாங்குந்தொழில்-கொள்ளாநின்றசெயல்களும், ஏடணை-

ஈடணத்திரியமும், ஐயம்-சந்தேகமும், மனனம்-மனனமும், ஞானம்-அறிவும்,ஞேயம்-விடயமும், இவைதாங்குஞாதா-இவைகளைத்தாங்குகின்றஞாதாவுமாகிய, அனைத்துமற - சகலமு நீங்க, தனிச்சித்திரம்போல்-தனித்த சித்திரத்தைப்போல, நெடிதிருந்தான் - வெகுநேரஞ் (சமாதியி) லிருந்தான்—எ-று

(இ-ள.) ஓங்காநின்ற ஞானமாத்திரார்த்தமாகிய ப்ரணவஸ்வரூபத்தை மனதிற்சிந்தித்து அறிதுயிலானதியானரூடனாய் தொடராநின்ற சங்கற்பங்களனைத்தும் விடுபட்டு கொள்ளாநின்ற செயல்களும், ஈடணத்திரியமும், சந்தேகமும், மனனமும், அறிவும், விடயமும் இவைகளைத் தாங்குகின்ற ஞாதாவுமாகிய சகலமுநீங்க தனித்த சித்திரத்தைப்போல வெகுநேரஞ்சமாதியிலிருந்தான். ()

## சச்சிதானந்தமாய் விளங்குதல்.

காற்றிலாதவிளக்கொளிபோற் கலங்காதிருந்தமாவலிதான்
சீற்றமயறீர்ந்தறநிறைந்து சிந்தையென்னுமாசின்றித்
தோற்றுஞ்சத்தாமாத்திரத்தாற் சுடர்விட்டெறித்தபடிசொல்லி
லாற்றமுகிறீர்சரற்காலத் தறவேதெளிந்தவிண்போலும்.

(இ-ள்.) காற்றிலாத விளக்கொளிபோல் - வாயுவில்லா(விடத்துள்ள) தீபப்ரகாசத்தைப்போல, கலங்காதிருந்த-சலனமற்றிருந்த, மாவலிதான்-மாவலிச்சக்ரவர்த்தியானவன், சீற்றமயறீர்ந்து-இராகத்துவேடநீங்கி, அறநிறைந்து - மிகவும் பூரணமாய், சிந்தையென்னுமாசின்றி - சிந்தையென்கின்ற களங்கமில்லாமல், தோற்றுஞ் சத்தாமாத்திரத்தாற் சுடர்விட்டெறித்தபடி சொல்லில் - தோன்றுஞ்சத்தாமாத்திரத்தினலொளிவிட்டு ப்ரகாசித்த விதத்தைக்கூறில், ஆற்றன்முகிறீர் சரற்காலத்து - வலிமையுள்ள மேகங்களில்லாதசரற்காலத்தில், அறவேதெளிந்த விண்போலும் - மிகவுந்தெளிந்த வாகாயத்தைப்போலுமாம்—எ-று.

(இ-ள.) வாயுவில்லாவிடத்துள்ள தீபப்ரகாசத்தைப்போல சலனமற்றிருந்த மாவலிச்சக்ரவர்த்தியானவன் இராகத்துவேடநீங்கி மிகவும்பூரணமாய் சிந்தையென்கின்றகளங்கமில்லாமல்தோன்றுஞ் சத்தாமாத்திரத்தினலொளிவிட்டு ப்ரகாசித்த விதத்தைக்கூறில் வலிமையுள்ள மேகங்களில்லாத சரற்காலத்தில் மிகவுந்தெளிந்த வாகாயத்தைப்போலுமாம்—என்பதாம். (௩௰)

## சகசத்துக்கு வெளிப்படல்.

ஆங்கப்படியேயவனிருப்ப வவனதேவற்புரியசுர
ரோங்கற்கோயின்மேனிலத்தை யுற்றாருயர்மாவலிதானு
நீங்கற்கரிய நிருவிகற்ப நிலைகூர் சமாதிநெடும்போது
தேங்குற்றதற்பின்விழித்துணர்ந்து மமதைதீர்ந்தசிந்தையனாய்.

(இ-ள்.) ஆங்கப்படியே - அவ்விடத் தந்தப்ரகாரமே, அவனிருப்ப - அந்தமாவலியானவர் (சமாதியி) லிருக்க, அவனதேவற்புரியசுரர் - அவனது பணியைச்செய்கின்றவவுணர்கள், ஓங்கற்கோயின்-அரண்மனையினது, மேனிலத்தையுற்றார் - மேல்வீட்டையடைந்தார்கள், உயர்மாவலிதானும்-மேன்மையான மகாபலியும், நீங்கற்கரிய - நீங்குதற்கரிய, நிருவிகற்பம் - நிருவிகற்பமான, நிலைகூர் சமாதி - நிலைமிகுந்தசமாதியில், நெடும்போது-வெகுநேரம், தேங்குற்று - தங்கிநின்று, அதற்பின் - அதன்பின்பு, விழித்து - விழித்துக்கொண்டு, உணர்ந்து - அறிந்து, மமதைதீர்ந்த சிந்தையனாய் - மமதையற்ற மனதுடையவராய்—எ-று.

(இ-ள்) அவ்விடத் தந்தப்ரகாரமே அந்த மாவலியானவர் சமாதியிலிருக்க அவனது பணியைச்செய்கின்ற வவுணர்கள் அரண்மனையினது மேல்வீட்டை யடைந்தார்கள். மேன்மையான மகாபலியும் நீங்குதற்கரிய நிருவிகற்பமான நிலைமிகுந்த சமாதியில்வெகுநேரம் தங்கிநின்று அதன்பின்பு விழித்துக்கொண்டு அறிந்து மமதையற்ற மனதுடையவராய்—என்பதாம். (௫௧)

## சாக்ஷாத்கார மடைதல்.

பற்றிலாதமனத்தாலே பயின்றிராசகாரியங்கண்
முற்றுமியற்றியாபத்து முதிர்சம்பத்துஞ்சமமாகக்
குற்றமில்லாக்குறிப்பாலே குறிப்புற்றின்பதுன்பத்திற்
சற்றுமிதவாதமிழாது சமபாவனையிற்றானான்.

(இ-ள்.) பற்றிலாதமனத்தால் - நிராசைபொருந்திய மனதினால், பயின்ற - சொல்லிய, இராசகாரியங்கள் - இராசகாரியங்கள், முற்று மியற்றி - முழுதுஞ்செய்து, ஆபத்து - ஆபத்துக்களிடத்திலும், முதிர்சம்பத்தும் - மிகுந்த சம்பத்துக்களிடத்திலும், சமமாக - சமதிருஷ்டியாக, குற்றமில்லாக்குறிப்பால் - குற்றமற்றகருத்தினால், குறிப்புற்று - ஒருமைப்பாடாய், இன்பதுன்பத்தில் - சுகதுக்கங்களில், சற்றும் - எவ்வளவேனும், மிதவாதமிழாது - மிதவாமலு மழியாமலும், சமபாவனையிற்றானான் - சமபாவனையிற்றானாகவிளங்கினான்—எ-று.

(இ-ஸா.) நிராசைபொருந்திய மனதினால் சொல்லிய இராசகாரியங்கள் முழுதுஞ்செய்து ஆபத்துக்களிடத்திலும் மிகுந்த சம்பத்துக்களிடத்திலும் சமதிருஷ்டியாக குறறமற்ற கருத்தினால ஒருமைப்பாடாய் சுகதுக்கங்களில் எவ்வளவேனும் மிதவாமலுமமிழாமலும் சமபாவனையிற் றூணுகவிளங்கினான்—என்பதாம்.

(இ-ய-க-ம்) சிரவணமுதற் சாக்ஷாத்கார பரியந்தமுள்ள வனுபவத்தைக் கூறியதாம். (ருஉ)

மாவலி ஞானவரசனுய் மனதை மந்திரியாக்கிச் சகலமுந் தன்வசமாயரசாக்ஷிசெய்ததுபோலச் செய்வாயெனல்.

ஓவாதவன்றனுள்ளொழுந்த ஊகாபோகம்பலகோடி
பாவாபாவம்பலகோடி பரந்ததெல்லாமிளைப்பாறி [ற்
மேவாநின்றானெவ்விடத்தென் விண்ணின்மண்ணில் வேட்கைகளி
றாவாநின்றமனந்தன்னைத் தன்னதிதயத்துள்வைப்பாய்.

(இ-ள்.) ஓவாது - ஒழியாமல், அவன்றன் - அவனுடைய, உள்ளொழுந்த - மனதிலுண்டாகிய, ஊகம் - இஷ்டசிந்தனையும், அபோகம் - அனுஷ்டசிந்தனையும், பலகோடி - அளவில்லாததாகவும், பாவம் - உண்டானதும், அபாவம் - இல்லாததுமான (பதார்த்தங்கள்), பலகோடி - அளவில்லாததாகவும், பரந்ததெல்லாம் - விரிந்திருக்கின்றவனைத்திலும், இளைப்பாறி - விஸ்ராந்தியடைந்து. (பின்பு) எவ்விடத்தென் - எந்தவிடத்திலெலதை, மேவாநின்றான் - பொருந்தினான், விண்ணில்-பரத்திலும், மண்ணில் - இகத்திலுமுள்ள, வேட்கைகளில் - ஆசைகளில், தாவாநின்றமனந்தன்னை - பாயாநின்றமனதை, தன்னதிதயத்துள் வைப்பாய் - தன திதயாம்பரத்தில் வைப்பாய்—எ-று.

(இ-ஸா.) ஒழியாமல் அவனுடைய மன[illegible]ண்டாகிய இஷ்டசிந்தனையும், அனுஷ்ட சிந்தனையும், அளவில்லாத தாகவும் உண்டானதும் இல்லாததுமான பதார்த்தங்கள் அளவில்லாததாகவும் விரிந்திருக்கின்ற வ[illegible]த்திலும் விஸ்ராந்தி யடைந்து [illegible] எந்தவிடத்திலெலதைப்பொருந்தினான். பரத்திலும் இகத்திலுமுள்ள ஆசைகளில் பாயாநின்ற மனதை தன திதயாமபரத்தில் வைப்பாய்—என்பதாம். (ருங)

மனதைச்செயித்து முத்தியடைவாயெனல்.

எங்கேயெங்கேமனமோடி யிளைப்பாறொன்னவிழ்ந்தழுந்தி
மங்கையங்கேநின்றெழுப்பி யகண்டவறிவிலடைவிப்பாய்

சங்கேதமதாயிவ்வாறு சாதித்துளமாமதகரியை
வெங்கேதமறத்தளைத்தெல்லா விசாரத்தாலும்வீடணைவாம்.

(இ-ள்.) எங்கேயெங்கே - எவ்விடத்தி லெவ்விடத்தில், மனமோடி - மனது சென்று, இளையோரென்ன - குழந்தைகளைப்போல, வீழ்ந்தழுந்தும் - (விடயங்களில்) விழுந்தழுந்தாநின்றது, அங்கேயங்கேநின்று - அவ்விடத்தி லவ்விடத்திலிருந்து, எழுப்பி - கிளப்பி, அகண்டவறிவில் - அகண்டாகாரஞானத்தில், அடைவிப்பாய் - அடையச்செய்வாய், சங்கேதமதாய் - குறிப்பாய், இவ்வாறு சாதித்து - இந்தப்ரகாரஞ் சாதனைசெய்து, உளமா மதகரியை - மனமென்னு மதர்த்தயானையை, வெங்கேதமற - கொடியதுன்பமறும்படி, தளைத்து - கட்டி, எல்லா விசாரத்தாலும் - சகல விசாரணையினுலும், வீடணைவாம் - மோக்ஷமடையப்படுவதாம்—எ-று.

(இ-ா.) எவ்விடத்தி லெவ்விடத்தில் மனது சென்று குழந்தைகளைப்போல விடயங்களில் விழுந் தழுந்தாநின்றது. அவ்விடத்தி லவ்விடத்திலிருந்துகிளப்பி அகண்டாகார ஞானத்தில் அடையச்செய்வாய். குறிப்பாய் இந்தப்ரகாரஞ் சாதனைசெய்து மனமென்னு மதர்த்த யானையை கொடிய துன்பமறும்படி கட்டி சகல விசாரணையினுலும் மோக்ஷமடையப்படுவதாம்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) இ[illegible]மாக மனோவிச்சையை நீக்கி ஞானம் பெறுவாயென்பதாம். (௫௪)

மாவலிகதை முற்றிற்று.

ஆக கதை உக-க்கு கவிதை கூ௱௫.

# பிரகலாதன் கதை.

### அவதாரிகை.

முன்கதையி னிச்சாத்தியாக பலத்தினுலுண்டான விசாரத்தாற் சடவரசாங்கஞ் சித்தரசாங்கமான வனுபவத்தை யறிவித்து விவ்வனுபவ மீஸ்வரானுக்கிரகத்தினுலும் வருமென்பதை யறிவிக்கு நிமித்தம் பிரகலாதன் கதையை நிரூபிக்கிறுர்.

### பகையை வசப்படுத்த வாலோசித்தல்.

பின்னுமீதோர்கதைகேட்பாய் பிரகலாதப்பெயரோனுந்
தன்னதுணர்வான்மெய்ஞ்ஞான தத்துவத்தைச்சாதித்தா

**னன்னதுரைப்பாமிரணியனு மசுரவேந்தனிறந்தளவே**
**யின்னல்கூருமவன்மைந்த னிதயநடுங்கியிவையுணர்ந்தான்.**

(இ-ள்.) பின்னும் - பின்பும், ஈதோர் கதைகேட்பாய் - இந்தவொரு கதையைச்சொல்லக்கேட்பாய், பிரகலாதப்பெயரோனும் - பிரகலாதனென்னும்நாமத்தையுடையவனும், தன்னதுணர்வால்-தனதறிவினுல், மெய்ஞ்ஞானதத்துவத்தை-மெய்ஞ்ஞானமானதத்துவஸ்வரூபத்தை, சாதித்தான் - அடைந்தான், அன்னதுரைப்பாம்-அதைச்சொல்லுவோம், இரணியனும்- இரணியனென்னு நாமத்தையுடைய, அசுரர்வேந்தன் - தானவர்களுக்கரசன், இறந்தளவே - மரணமடைந்தமாத்திரத்தில், இன்னல்கூரும் - துன்பமிகுந்த, அவன் மைந்தன் - அவனது புத்திரன், இதயநடுங்கி - மனநடுக்கமுற்று, இவையுணர்ந்தான் - இவையெண்ணினுன்—எ-று.

(இ-ரை.) **பின்பும் இந்த வொருகதையைச் சொல்லக்கேட்பாய். பிரகலாதனென்னு நாமத்தையுடையவனும், தனதறிவினுல் மெய்ஞ்ஞானமான தத்துவஸ்வரூபத்தை அடைந்தான். அதைச் சொல்லுவோம் இரணியனென்னு நாமத்தையுடைய தானவர்களுக்கரசன் மரணமடைந்தமாத்திரத்தில் துன்பமிகுந்த அவனது புத்திரன் மனநடுக்கமுற்று இவையெண்ணினுன்—என்பதாம்.** (க)

---

## பகைவன் வலிமையை யுணர்தல்.

**எனதுதாதைமுதலசுர ரெனதுகுலத்தோ ரெண்ணிறந்தோர்**
**கனகமேரு வனுவென்னக் காயநிலைமைப் பெரிதுடையோர்**
**வனசயோனியதிகார மாற்றவல்லோர் தரவல்லோர் [தார்.**
**புனைவண்டுளவோ னெனுங்கனலிற் பூளைவீபோற்போயொழிந்**

(இ-ள்.) எனதுதாதைமுதலசுரர் - என்னுடையபிதாமுதலியதானவர்கள், எனதுகுலத்தோர் - என்குலத்திலுள்ளவர்கள், எண்ணிறந்தோர் - அளவற்றவர்கள், கனகமேருவனுவென்ன - மகாமேருவற்பமென்னும்படி, காயநிலைமை - சரீரநிலையை, பெரிதுடையோர் - பெரிதாகவுடையவர்கள், வனசயோனியதிகாரம் - தாமரையிடமாகப்பிறந்த பிரமாவினதிகாரத்தை, மாற்ற வல்லோர் - கெடுக்கவல்லவர்கள், தரவல்லோர் - கொடுக்கவல்லவர்கள், புனைவண்டுளவோனெனுங்கனலில் - தரிக்கும்வளப்பம் பொருந்திய துளசிமாலையையுடைய விஷ்ணுவென்னு மக்கினியில், பூளைவீபோல் - இலவம்பஞ்சி கெடுதல்போல, போயொழிந்தார் - நசித்தார்கள்—எ-று.

(இ-ரை.) **என்னுடைய பிதாமுதலிய தானவர்கள் என்குலத்திலுள்ளவர்கள் அளவற்றவர்கள் மகாமேரு வற்பமென்னும்படி**

சரீர நிலையை பெரிதாக வுடையவர்கள். தாமரையிடமாகப்பிறந்த பிரமாவி னதிகாரத்தைகெடுக்கவல்லவர்கள். கொடுக்கவல்லவர்கள் தரிக்கும் வளப்பம்பொருந்திய அளசிமாலையையுடைய விஷ்ணு வென்னு மக்கினியில் இலவம்பஞ்சி கெடுதல்போல நசித்தார்கள். (அ)

## பகைவனைச்செயிக்கு முபாயமுணர்தல்.

அன்னரொக்கும்பேரசுர ரழியுமூழிப்பெருங்காற்றாற்
சின்னகங்கள்போன்மடிந்தார் செறிநுண்மணலிற்பலகோடி
யின்னளவனுக்கஞ்சாதா ரியாருமில்லையெம்பகையா
மின்னார்நேமிப்படையோனை வெல்வானுபாயமீதொன்றே.

(இ-ள்.) அன்னரொக்கும் - அவர்களுக்கொப்பான, பேரசுரர் - பெரிதானவவுணர்கள், ஊழிப்பெருங்காற்றால்-கறபாந்த சண்டமாருதத்தால், அழியுஞ்சின்னகங்கள்போல - கெடுகின்ற சிறுமலைகளைப்போல, மடிந்தார் - இறந்தவர்கள், செறிநுண்மணலில் - நெருங்கிய பொடிமணலைப்போல பலகோடி - அளவில்லனவாம், இன்னாள் - இக்காலம், அவனுக்கஞ்சாதார் - அம்மாலுக்குப் பயப்படாதவர்கள், யாருமில்லை - ஒருவருமில்லை, எம்பகையா - எமக்குப்பகையாகிய, மின்னார்நேமிப்படையோனை - ஒளிநிறைந்த சக்கராயுதத்தையுடைய விஷ்ணுவை, வெல்வானுபாய மீதொன்றே - செயித்தற்குபாய மீதொன்றே—எ-று.

(இ-ள்) அவர்களுக்கொப்பான பெரிதான வவுணர்கள் கற்பாந்த சண்டமாருதத்தால் கெடுகின்ற சிறுமலைகளைப்போல இறந்தவர்கள் நெருங்கிய பொடிமணலைபபோல அளவில்லனவாம். இக்காலம் அம்மாலுக்குப்பயப்படாதவர்கள் ஒருவருமில்லை. எமக்குப் பகையாகிய ஒளிநிறைந்த சக்கராயுதத்தையுடைய விஷ்ணுவை செயித்தற் குபாயமீதொன்றே—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) முன்னுள்ளயாவு மனித்தியமாய்ப் போனது காரணமாகச் சித்தசுத்தியுண்டாயதனு னித்தியததையடைய விவேக முதித்த தென்பதாம். (ரு)

## மூர்த்தியுபாசனைசெய்யச் சிந்தித்தல்.

எத்தன்மையினுலெண்ணுகினு மிதில்வேறுயர்ந்தநெறியில்லை
தத்துந்திரைப்பாற்கடலுறைவோன் சரணமன்றிச்சரணில்லை
சித்தமிந்தக்கணந்தொடங்கிச் சேர்கநாராயணன்சரணம்
பத்தனகிநானவனைப் பகிராதொழிகபாவனையே.

(இ-ள்.) எத்தன்மையினுல் - எந்தப்பிரகாரமாக, எண்ணுகினும்-நினைத்தாலும், இதில்வேறு - இதற்குவேருக, உயர்ந்தநெறியில்லை - மேலான கதியில்லை, தத்துந்திரை - தாவாநின்ற வலைகளையுடைய, பாற்கடலுறைவோன் - திருப்பாற்கடலில்வசிக்கும் விஷ்ணுவினது, சரணமன்றிச்சரணில்லை - அடைக்கலமன்றிவேறடைக்கலமில்லை, சித்தம் - மனமானது, இந்தக்கணந்தொடங்கி - இந்தக்ஷணந்தொடங்கி, நாராயணன்சரணஞ்சேர்க- நாராயணனது பதத்தைச்சேரக்கடவது, பத்தனுகி - பத்தியையுடையவனுய், பாவனை - பாவனையினுல, நானவனுய் - நானேயவனுகி, பகிராதொழிக - பிரியாதிருக்கக்கடவன்—எ-று.

(இ-ரா.) எந்தப்பிரகாரமாக நினைத்தாலும் இதற்கு வேருக மேலான கதியில்லை. தாவாநின்ற வலைகளையுடைய திருப்பாற்கடலில் வசிக்கும் விஷ்ணுவினது அடைக்கலமன்றி வேறடைக்கலமில்லை. மனமானது இந்தக்ஷணந்தொடங்கி நாராயணனது பதத்தைச்சேரக்கடவது. பத்தியையுடையவனுய் பாவனையினுல நானேயவனுகி பிரியாதிருக்கக்கடவன்—என்பதாம். (ச)

## அஷ்டாக்ஷரத்தின் பெருமையை யுணர்தல்.

நயந்ததெல்லாமெளிதருளு நாராயணுயநமவென்னு
முயர்ந்ததிருமந்திரமென்ற னுளத்தில்விண்ணின்மாருதம்போற்
பெயர்ந்துநீங்காதுள்ளுறைக பேணியரியைப்பூசிப்போ
ரியைந்தவரிதாமப்பூசை யியற்றிற்பலனுமலதில்லை.

(இ-ள்.) நயந்ததெல்லாம் - இச்சித்த சகலமும், எளிதருளும் - எளிதிற்கொடுக்கின்ற, நாராயணுயநமவென்னும் - நாராயணுயநமவென்கின்ற, உயர்ந்த திருமந்திரம் - மேலான திருமந்திரமானது, என்றனுளத்தில்- என்மனதில், விண்ணின்மாருதம்போல் - ஆகாயத்தி (நிறையுங்) காற்றைப்போல, பெயர்ந்து நீங்காது - விட்டு நீங்காமல், உள்ளுறைக - உள்ளே சேர்ந்திருக்கக்கடவது, அரியைப்பேணி - விஷ்ணுவைவணங்கி, பூசிப்போர் - ஆராதனை செய்பவர்கள், இயைந்த-இசைந்த, அரி - விஷ்ணுவே, தாமப்பூசை - தாமாகவந்த வாராதனையை, இயற்றிற்பலனும் - செய்யின் (முத்தி) லாபம், அலதில்லை - அல்லாவிடிலில்லை—எ-று.

(இ-ரா.) இச்சித்தசகலமும் எளிதிற்கொடுக்கின்ற நாராயணுயநமவென்கின்ற மேலான திருமந்திரமானது என்மனதில் ஆகாயத்தில் நிறையுங்காற்றைப்போல விட்டு நீங்காமல் உள்ளே சேர்ந்திருக்கக்கடவது. விஷ்ணுவை வணங்கி ஆராதனைசெய்பவர்கள் இசைந்த விஷ்ணுவே தாமாகவந்த வாராதனையைச் செய்யின் முத்திலாபமாம். அல்லாவிடிலில்லை—என்பதாம். (ரு

## மூர்த்தியின் சகுணவுருவத்தைச் சிந்தித்தல்.

**அந்தநெறியாலரியுருநா ளுகியரியைப்பூசிப்ப**
**னிந்தவுடன்மாதவன்வடிவா மிதனில்வாயுவடிவாகிப்**
**பந்தமுறுவோன்பராபரனு மிவனேபிராணபவனத்தின்**
**முந்துமோட்டத்தாலிரண்டா முகுந்தனுகிப்புறத்துறைவான்.**

(இ-ள்.) *அந்தநெறியால்* - அந்தமார்க்கத்தினுல், *அரியுரு நானுகி* - விஷ்ணுஸ்வரூபமே நானுய், *அரியைப்பூசிப்பன்* - விஷ்ணுவையாராதனே செய்வன், *இந்தவுடல்* - இச்சரீரமானது, *மாதவன் வடிவாம்* - விஷ்ணுவினது ஸ்வரூபமாம், *இதனில்* - இந்த வடிவத்தில், *வாயுவடிவாகி* - பிராணவாயுவின் வடிவமாய், *பந்தமுறுவோன்* - கட்டுப்படுவோன், *பராபரனுமிவனே* - பராபரனுகிய விந்தவிஷ்ணுவே, *பிராணபவனத்தின்* - பிராணவாயுவின், *முந்துமோட்டத்தால்* - முன்செல்லுதலால், *இரண்டா முகுந்தனுகி* - இரண்டாவது விஷ்ணுவாய், *புறத்துறைவான்* - புறம்பில் வசிப்பான்—எ-று.

**(இ-ரை.) அந்தமார்க்கத்தினுல் விஷ்ணுஸ்வரூபமே நானுய் விஷ்ணுவை யாராதனேசெய்வன். இச்சரீரமானது விஷ்ணுவினது ஸ்வரூபமாம். இந்தவடிவத்தில் பிராணவாயுவின் வடிவமாய் கட்டுப்படுவோன் பராபரனுகிய விந்த விஷ்ணுவே பிராணவாயுவின் முன்செல்லுதலால் இரண்டாவது விஷ்ணுவாய்புறம்பில் வசிப்பான்—என்பதாம்.**

**(இ-ங-க-ம்.)** *மூர்த்தியைத் தியானிக்கு முறைமையை யுணர்ந்ததாம்.* (சு)

## அகத்திலாராதித்தல்.

**அவ்வாறுனவிவ்வரியை யகிலவுபசாரங்களேயுந்**
**தவ்வாமனத்தாலுளதாக்கிச் சதாபூசனேயேசமைப்பனெனு**
**விவ்வாறெண்ணிப்பாரமெலா மெடுத்துச்சுமக்குமனத்தாலே**
**செவ்வான்மணிப்பாத்திரதூப தீபங்கந்தமெலாஞ்செறித்து.**

(இ-ள்.) *அவ்வாறுன* - அந்தப்ரகாரமாகிய, *இவ்வரியை* - இந்தவிஷ்ணுவை, *அகிலவுபசாரங்களேயும்* - சமஸ்தவுபசார (வஸ்துக்க) ளேயும், *தவ்வாமனத்தால்* - தவருத மனதினுல், *உளதாக்கி* - கற்பித்து, *சதாபூசனேயே சமைப்பனென* - எப்போது மாராதனேயைச்செய்வேனென்று, *இவ்வாறெண்ணி* - இந்தப்ரகாரநினேத்து, *பாரமெலாமெடுத்து* - (பூசாதிரவியமான) பாரங்களனேத்தையு மெடுத்து, *சுமக்கு மனத்தால்* - தாங்குகின்ற மனதினுல், *செவ்வான்* - சிவந்ததான, *மணிப்பாத்திரம்* - இரத்தினபாத்

திரங்களும், தூபம் - தூபங்களும், தீபம் - தீபங்களும், கந்தமெலாஞ்செறித்து - வாசனுத் திரவியங்களனைத்தையு நிறைத்து—எ-று.

(இ-ளா.) அந்த ப்ரகாரமாகிய இந்த விஷ்ணுவை சமஸ்த வுபசார வஸ்துக்களையும் தவருத மனதினுல் கற்பித்து எப்போது மாராதனையைச் செய்வேனென்று இந்தப்ரகார நினைத்து பூசாதிரவியமான பாரங்களனைத்தையு மெடுத்து தாங்குகின்றமனதினுல் சிவந்ததான இரத்தினபாத்திரங்களும், தூபங்களும், தீபங்களும், வாசனுத்திரவியங்களனைத்தையு நிறைத்து—என்பதாம். (எ)

## புறத்திலாராதித்தல்.

மணிப்பூண்களும்பீதாம்பரமும் வாடாமலருநல்லமுதுங்
கணிப்பிலாதபொருளெல்லாங் கருத்தாற்பாவித்தரிச்சித்துத்
தணிப்பிலாதவன்பான்முன் றந்தப் புறத்தின்பொருட்டிரளாற்
பணிப்பாயவனையுட்போலப் பரிந்துபுறத்தும்பூசித்தான்.

(இ-ள்.) மணிப்பூன்களும் - இரத்தினுபரணங்களும், பீதாம்பரமும் - சொன்னவஸ்திரங்களும், வாடாமலரும் - வாடாத (சொன்ன) புஷ்பங்களும், நல்லமுதும் - நல்லவடிசில்களுமாகிய, கணிப்பிலாதபொருள்ளெல்லாம் - எண்ணிக்கையற்ற பூசாதிரவியங்களனைத்தையும், கருத்தாற்பாவித்து - மனதினுற் பாவனைசெய்து, அரிச்சித்து-ஆராதனைசெய்து, தணிப்பிலாதவன்பால் - தணிவில்லாதவன்பினுல், முன்றந்த - முன்னேகொடுத்த, புறத்தின் பொருட்டிரளால் - புறம்பிலுள்ள திரண்ட திரவியங்களினுல், பணிப்பாயவனை - சற்பசயனத்தையுடையவிஷ்ணுவை, உட்போல-அகத்திற் (பூசித்தது) போல, பரிந்து புறத்தும்பூசித்தான் - அன்புற்று புறத்திற் (றேவக்கிரகத்திலு) மாராதனைசெய்தான்—எ-று.

(இ-ளா.) இரத்தினுபரணங்களும், சொன்னவஸ்திரங்களும், வாடாத சொன்னபுஷ்பங்களும், நல்ல வடிசில்களுமாகிய எண்ணிக்கையற்ற பூசாதிரவியங்களனைத்தையும் மனதினுற் பாவனைசெய்துஆராதனைசெய்து தணிவில்லாதவன்பினுல் முன்னேகொடுத்த புறம்பிலுள்ளதிரண்ட திரவியங்களினுல் சற்பசயனத்தையுடைய விஷ்ணுவை அகத்திற்பூசித்ததுபோல அன்புற்று புறத்திற்றேவக்கிரகத்திலுமாராதனை செய்தான்—என்பதாம். (அ)

## அசுரரியாவரு மாராதித்தல்.

ஆயவாறக்கணந்தொடங்கி யகண்டவடிவப்பரம்பொருளா
மாயனடிகளருச்சித்தா னவனைப்போலவாளசுரர்

தீயகுணம்விட்டெல்லோருந் திருமாற்கடிமைத்திறம்பூண்டார்
மேயமன்னன்குணமன்றோ விரிந்தவுயிரின்குணந்தானே.

(இ-ள்.) ஆயவாறு - அருச்சித்தபடியே, அக்கணந்தொடங்கி - அந்த க்ஷணந்தொடங்கி, அகண்டவடிவம் - அகண்டாகாரஸ்வரூபமாகிய, பரம்பொருளாம் - பிரமவஸ்துவான, மாயனடிகள் - விஷ்ணுவினுடைய பதங்களை, அருச்சித்தான் - ஆராதனைசெய்தான், அவனைப்போல - அப்பிரகலாதனனைப்போல, வாளசுரர் - வாளாயுதத்தையுடைய வவுணர்களும், தீயகுணம் விட்டு - தீமையானகுணங்களைநீக்கி, எல்லோரும் - சகலரும், திருமாற்கடிமைதிறம்பூண்டார் - அரிக்கடிமைப்பட்டார்கள், மேயமன்னன் குணமன்றோ-பொருந்திய வரசனதுகுணமல்லவா, விரிந்த வுயிரின்குணந்தான் - பரந்தசீவர்களின்குணங்கள்—எ-று.

(இ-வா.) அருச்சித்தபடியே அந்தக்ஷணந்தொடங்கி அகண்டாகார ஸ்வரூபமாகிய பிரமவஸ்துவான விஷ்ணுவினுடைய பதங்களை ஆராதனை செய்தான். அப்பிரகலாதனனைப்போல வாளாயுதத்தையுடைய வவுணர்களும், தீமையான குணங்களைநீக்கி சகலரும் அரிக்கடிமைப்பட்டார்கள். பொருந்திய வரசனது குணமல்லவா! பரந்த சீவர்களின் குணங்கள்—என்பதாம்.

(இ-ந-க-ம்.) பிரகலாதன் முதலிய யாவரு மூர்த்தியை யுபாசித் தம்மூர்த்திவடிவ மானார்களென்பதாம். (க)

## தேவர்களையமுறல்.

திதிகாதலருமவர்க்கரசுஞ் செங்கண்மான்மேற்சினந்தீர்ந்து
புதிதாகியபத்தியிலடிமை புக்காரென்றும்புரந்திரனுந்
துதிவானவருங்கேட்டலுமே துணுக்கமோடுவியப்பெய்தி
யதிபாதகர்களெம்பெருமாற்கன்பாகியதென்னெனவயிர்த்தார்.

(இ-ள்.) திதிகாதலரும் - திதிபுத்திரர்களாகியவசுரர்களும், அவர்க்கரசும் - அவர்க்கரசாகியபிரகலாதனும், செங்கண்மான்மேல் - சிவந்தகண்களையுடைய விஷ்ணுவினிடத்தி (லிருக்கின்ற), சினந்தீர்ந்து - கோபம் விட்டு, புதிதாகிய பத்தியில் - நூதனமான பக்தியினால், அடிமைபுக்காரென்று - அடிமைபுகுந்தார்களென்று, புரந்தரனும் - தேவேந்திரனும், துதிவானவரும் - துதிக்கின்ற தேவர்களும், கேட்டலும் - கேட்கவும், துணுக்கமோடு வியப்பெய்தி - அச்சத்துடனாச்சரியமடைந்து, அதிபாதர்கள் - மிகுந்த பாவத்தையுடையவர்கள், எம்பெருமாற்கன்பாகியது - எமதுபெருமானுக்கன்பானது, என்னெனவயிர்த்தார்-என்னவென்று சந்தேகமடைந்தார்கள்—எ-று.

(இ-வா.) திதிபுத்திரர்களாகிய வசுரர்களும், அவர்க்கரசாகிய பிரகலாதனும், சிவந்த கண்களையுடைய விஷ்ணுவினிடத்திலி

ருக்கின்ற கோபம்விட்டு நூதனமான பக்தியினுல் அடிமை புகுந்தார்களென்று தேவேந்திரனும் துதிக்கின்ற தேவர்களும் கேட்கவும், அச்சத்துடனுச்சரியமடைந்து மிகுந்த பாவத்தையுடையவர்கள் எமது பெருமானுக்கன்பானது என்னவென்று சந்தேகமடைந்தார்கள்—என்பதாம். (ய)

## தேவர்கள் வினுவுதல்.

திருப்பாற்கடலிற்கண்வளருந் திருமான்முன்புசென்றணுகி
விருப்பாற்றுதித்திந்திரன்முதலோர் மேகமேனியனைநோக்கி
நெருப்பாந்தன்மையசுரரெலா நினைப்பாவித்துநின்வடிவா
யிருப்பாரானுன்மாயையென வெண்ணினேமீதென்னென்னு.

(இ-ள்.) திருப்பாற்கடலில் - அழகிய க்ஷீரசமுத்திரத்தில், கண்வளரும் - நித்திரைசெய்கின்ற, திருமான்முன்பு சென்றணுகி - விஷ்ணுவின் முன்னேபோய்ச்சேர்ந்து, விருப்பாற்றுதித்து - விருப்பத்தினுற் ஸ்ரோத்திரஞ்செய்து, இந்திரன் முதலோர் - தேவேந்திரன் முதலிய தேவர்கள், மேகமேனியனை நோக்கி - மேக நிறத்தையுடைய விஷ்ணுவைப்பார்த்து நெருப்பாந்தன்மை - அக்கினியானசுபாவத்தையுடைய, அசுரரெலாம் - தயித்தியரனைவரும், நினைப்பாவித்து - உன்னைப்பாவனைசெய்து, நின்வடிவாயிருப்பாரானுல் - உனதுருவமாயிருப்பார்களானுல், மாயையென வெண்ணினேம் - (இதை) வஞ்சகமாக நினைத்தோம், ஈதென்னென்னு-இதென்னவென்று—எ-று.

(இ-ரை.) அழகிய க்ஷீரசமுத்திரத்தில் நித்திரை செய்கின்ற விஷ்ணுவின் முன்னேபோய்ச்சேர்ந்து விருப்பத்தினுற் ஸ்ரோத்திரஞ்செய்து தேவேந்திரன் முதலிய தேவர்கள் மேகநிறத்தையுடைய விஷ்ணுவைப்பார்த்து அக்கினியான சுபாவத்தையுடைய தயித்திய ரனைவரும் உன்னைப் பாவனைசெய்து உனதுருவமாயிருப்பார்களானுல் இதைவஞ்சகமாக நினைத்தோம் இதென்னவென்று-எ-ம்.

கொடியகொலைசெய்வல்லசுரர் குணங்களெங்கேபெறவரிய
முடிவதானபிறப்பெங்கே முகுந்தன்பத்திப்பேறெங்கே.
கடியதீயோர்நற்குணங்கள் கலவாரென்றுகதையல்லா
னெடியமாலேநின்பத்தி நீசர்க்கெல்லாநேருமதோ.

(இ-ள்.) கொடியகொலைசெய் - கொடிதானகொலையைச்செய்யும், வல்லசுரர் - வல்லமையுள்ள அவுணர்கள், குணங்களெங்கே - குணங்களெவ்விடம், பெறவரிய - பெறுதற்கரிய, முடிவதானபிறப்பெங்கே - முடிவாகிய

சநநமெவ்விடம், முகுந்தன் பத்திப்பேறெங்கே- விஷ்ணுவின் பத்தியைப் பெறுவதெவ்விடம், கடியதீயோர் - கொடிதான தீமையையுடையவர்கள், சற்குணங்கள் - சற்குணங்களை, கலவாரென்று - கலந்தார்களென்று(சொல்லுவது), கதையல்லால் - சொல்லேயல்லாமல், நெடியமாலே - வியாபகமுள்ள விஷ்ணுவே, நின்பத்தி - உனது பத்தியானது, நீசர்க்கெல்லாநேருமோ - சண்டாளருக்கெல்லாங் கிடைக்குமோ—எ-று.

(இ-ரை.) கொடிதான கொலையைச்செய்யும் வல்லமையுள்ள வவுணர்கள் குணங்களெவ்விடம்? பெறுதற்கரிய முடிவாகிய சநநமெவ்விடம்? விஷ்ணுவின்பத்தியைப் பெறுவதெவ்விடம்? கொடிதான தீமையை யுடையவர்கள் சற்குணங்களைக் கலந்தார்களென்று சொல்லுவது சொல்லேயல்லாமல், வியாபகமுள்ளவிஷ்ணுவே உனது பத்தியானது சண்டாளருக்கெல்லாங் கிடைக்குமோ-எ-ம்.

---

## சுவாமியானவ ருண்மையைக்கூறல்.

என்றவிண்ணோர்க்கெம்பெருமா னிமையோரஞ்சாதொழிமின்கள்
வென்றிபயிலும்ப்ரகலாதன் மீண்டும்பிறவாப்பிறப்புற்றான்
கன்றுதுயர்போய்மெய்ஞ்ஞானக் கண்ணால்வீடுகாண்குவனு
லொன்றுமிதனிற்கைதவமென் றுணரற்பாலதிலதாகும்.

(இ-ள்.) என்றவிண்ணோர்க்கு - (இப்படி) யென்றுசொல்லியதேவர்களுக்கு, எம்பெருமான் - எமது பெருமானாகியவிஷ்ணு, இமையோர்-தேவர்களே, அஞ்சாதொழிமின்கள் - அச்சப்படாதிருங்கள், வென்றிபயிலும் - சயஞ்செய்கின்ற, ப்ரகலாதன் - பிரகலாதனானவன், மீண்டும்பிறவா-திரும்பவுஞ்செனியாத, பிறப்புற்றான் - சநநத்தையடைந்தான், கன்றுதுயர்போய் - கொலைசெய்கின்ற துன்பநீங்கி, மெய்ஞ்ஞானக்கண்ணால்- தத்துவஞானதிருஷ்டியினால், வீடுகாண்குவன் - மோக்ஷத்தையடைவ (னாகையால்), ஒன்றுமிதனிற்கைதவமென்று - ஒன்றுமிதனில் வஞ்சகமென்று, உணரற்பாலதிலதாகும் - அறியத்தக்க தில்லையாம்—எ-று.

(இ-ரை.) இப்படியென்று சொல்லிய தேவர்களுக்கு எமது பெருமானாகிய விஷ்ணு தேவர்களே! அச்சப்படாதிருங்கள். சயஞ்செய்கின்ற பிரகலாதனானவன் திரும்பவுஞ் செனியாத சநநத்தையடைந்தான். கொலை செய்கின்ற துன்பநீங்கி தத்துவஞான திருஷ்டியினால் மோக்ஷத்தை யடைவனாகையால் ஒன்று மிதனில் வஞ்சகமென்று அறியத்தக்கதில்லையாம்—என்பதாம். (௯௩)

## தேவரு மசுரரு முறவாதல்.

நல்லோர்தீமையுறிற்கேடாந் தீயோர்நன்மையுறினன்று
மெல்லோரும்போமெனவருளி யெம்மானுங்கேமறைதலுமே
கல்லோலஞ்சூழ்கடனின்றுங் ககனலயஞ்சேர்ந்தமரரெலாம்
புல்லாரென்றவசுரருடன் புரையிலாததமரானார்.

(இ-ள்.) நல்லோர் - நன்மையுள்ளவர்கள், தீமையுறிற்கேடாம்-பொல்லாங்கைப் பொருந்தினற் கெடுதலாகும், தீயோர் - தீமையுள்ளவர்கள், நன்மையுறினன்றும் - நன்மையைப்பொருந்தின னன்மையேயாகும், எல்லோரும்போமெனவருளி-சகலரும்போமினென்றனுக்கிரகித்து, எம்மான் -எமதுமகானுகியவிஷ்ணுவும், ஆங்கேமறைதலும்-அவ்விடத்துமறையவும், கல்லோலஞ்சூழ் - பேரலைசூழ்ந்திருக்கின்ற, கடனின்றும் - (திருப்பாற்) கடலிலிருந்தும், ககனலயஞ்சேர்ந்து - விண்ணுலகத்தையடைந்து, அமரரெலாம் - தேவர்களனைவரும், புல்லாரென்றவசுரருடன்-பகைவரென்று சொல்லப்பட்டதானவருடன், புரையிலாத தமரானார் - குற்றமற்றவுறவானார்கள் —எ-று.

(இ-ள.) நன்மையுள்ளவர்கள் பொல்லாங்கைப்பொருந்தினற் கெடுதலாகும். தீமையுள்ளவர்கள் நன்மையைப்பொருந்தின னன்மையேயாகும். சகலரும் போமினென்றனுக்கிரகித்து எனது மகானுகிய விஷ்ணுவும் அவ்விடத்துமறையவும் பேரலைசூழ்ந்திருக்கின்ற திருப்பாற்கடலிலிருந்தும் விண்ணுலகத்தை யடைந்துதேவர்களனைவரும் பகைவரென்று சொல்லப்பட்டதானவருடன் குற்றமற்றவுறவானார்கள் —என்பதாம்.

(இ-ரு-க ம்.) அரியினற் றேவர்களு மசுரர்களுந் தமதிடத்துள்ள வையநீங்கி யன்பிற் கலந்தனரென்பதாம். (கச)

## நிராசை யுண்டாதல்.

என்புகுளிரும்பத்தியினு லிமைப்போதொழியாதெப்போது
மன்புகூரநெடுமாலை யசுரர்வேந்தனருச்சித்தான்
வன்புபயிலுமுக்கரணம் வழுவாபூசாபலத்தாலே
முன்புவிவேகமாநந்த முதிர்வும்விராகமுளைத்தெழுந்த.

(இ-ள்.) என்புகுளிரும்பத்தியினால் - அஸ்திகுளிர்கின்ற பரபத்தியினால், இமைப்போதொழியாது - இமைநேர நீங்காமல், எப்போதும் - சதாகாலமும், அன்புகூரநெடுமாலை - அன்புபெருக வியாபகமுள்ள விஷ்ணுவை, அசுரர்வேந்தன்-அவுணர்க்கரசனாகிய பிரகலாதன், அருச்சித்தான் - ஆராதனைசெய்தான், வன்புபயிலு முக்கரணம் வழுவா - வலிமையிற் சுழ

லுகின்ற திரிகரணங்களுந்தவறாத, பூசாபலத்தால் - பூசாபலத்தினுல், முன்புவிவேகம் - முதன்மையானவிவேகமும், ஆநந்தமுதிர்வும் - ஆநந்தமுதிர்ச்சியும், விராகம் - வயிராக்கியமும், முளைத்தெழுந்த - உண்டாய்வளர்ந்தன—எ-று.

(இ-ளை.) அஸ்திகுளிர்கின்றபரபத்தியினுல் இமைநேரநீங்காமல் சதாகாலமும் அன்புபெருக வியாபகமுள்ள விஷ்ணுவை அவுணர்க்கரசனுகிய பிரகலாதன் ஆராதனைசெய்தான். வலிமையிற் சுழலுகின்ற திரிகரணங்களுந் தவறாத பூசாபலத்தினுல் முதன்மையான விவேகமும் ஆநந்தமுதிர்ச்சியும் வயிராக்கியமும் உண்டாய் வளர்ந்தன—என்பதாம். (கரு)

## போகப்பற்று நீங்கல்.

சாதனங்கண்முதற்குணங்கள் சாலவுண்டாயிவனெஞ்சங்
காதலானபோகத்திற் கவலும்பற்றுகழன்றனவாற்
சீதமுத்துமுத்துடனே சேர்ந்தாற்பற்றுசேர்வுறுமோ
வாதலாலேபோகத்தி லழுந்தாதுள்ளமாறினதே.

(இ-ள்.) சாதனங்கண் முதற்குணங்கள்-நான்குசாதன முதலிய குணங்கள், சாலவுண்டாய்-மிகவுமுண்டாய், இவனெஞ்சம்-இவன்மனது, காதலானபோகத்தில் - ஆசையாகிய போகங்களில், கவலும்பற்று கழன்றன - வருந்துகின்ற பற்றுக்கணீங்கின, சீதமுத்து - குளிர்ச்சியையுடைய முத்தானது, முத்துடன்சேர்ந்தால் - தரளத்தோடுஞ்சேரில், பற்றுசேர்வுறுமோ-பற்றுதலுண்டாகுமோ, ஆதலால் - ஆதலினுல், போகத்திலழுந்தாது-போகங்களிலழுந்தாமல், உள்ளமாறினது-மனது விஸ்ராந்தியடைந்தது-எ-று.

(இ-ளை.) நான்கு சாதனமுதலிய குணங்கள் மிகவுமுண்டாய் இவன் மனது ஆசையாகிய போகங்களில் வருந்துகின்ற பற்றுக்கணீங்கின. குளிர்ச்சியையுடைய முத்தானது தரளத்தோடுஞ் சேரில் பற்றுதலுண்டாகுமோ? ஆதலினுல் போகங்களி லழுந்தாமல் மனது விஸ்ராந்தி யடைந்தது—என்பதாம். (கசா)

## மூர்த்தி ப்ரசன்னமாதல்.

பூன்றவடிவுங்காணுமற் போகத்துள்ளுமழுந்தாம
லூன்றவூசலாடுவபோ னல்லோனுள்ளந்திரிவதனை
மூன்றுசகத்தின்சான்றுன முகுந்தன்றிருவுள்ளத்துணர்ந்து
சான்றகுணத்தோன்பூசிக்குந் தனிமாமனையிற்றுனடைந்தான்.

(இ-ள்.) பூன்றவடிவங்காணமல் - பூரணவடிவையுந்தரிசியாமல், போகத்துள்ளு மழுந்தாமல்-போகத்தினிடத்திலு மழுந்தாமல், நான்ற ஆசலாவெபோல் - தொங்கின ஆச லலைவதுபோல, நல்லோனுள்ளம் - நன்மையுள்ள பிரகலாதனுடைய மனமானது, திரிவதனை - சுழலுவதை, மூன்று சகத்தின் சான்றான - மூன்றுலகத்துக்குஞ் சாக்ஷியாகிய, முகுந்தன்-திருமாலானவர், திருவுள்ளத்துணர்ந்து - திருவுளத்திலறிந்து, சான்றகுணத்தோன்பூசிக்கும் - அறிவானகுணத்தை யுடையவனாராதிக்கின்ற, தனிமாமனையில் - ஏகாந்தமான பூசாக்கிரகத்தில், தானடைந்தான் - தான்வந்து சேர்ந்தார்—எ-று.

(இ-ரை.) பூரணவடிவையுந் தரிசியாமல் போகத்தினிடத்திலு மழுந்தாமல் தொங்கின ஆசலலைவதுபோல நன்மையுள்ள பிரகலாதனுடைய மனமானது சுழலுவதை மூன்றுலகத்துக்குஞ் சாக்ஷியாகிய திருமாலானவர் திருவுளத்தி லறிந்து அறிவான குணத்தையுடையவ னாராதிக்கின்ற ஏகாந்தமான பூசாக்கிரகத்தில் தான்வந்து சேர்ந்தார்—என்பதாம்.

(இ-ரு-க-ம்.) பக்குவிக் கனுக்கிரகஞ்செய்ய வுபாசனமூர்த்தி யெழுந்தருளினதாம். (கஎ)

## ப்ரத்யக்ஷமான மூர்த்தியை யாராதித்துத் துதித்தல்.

மூவராகிநின்றமுதன் மூலமடைந்தபடியறிந்து
தேவதேவன்றனைமுன்னே செயலினிரட்டிப்பூசனைசெய்
தியாவராலுங்காண்பரிய வெம்மானம்மாவெதிர்ந்தனனென்
றுவதானபடியன்பா லவனைத்துதித்தானசுரேசன்.

(இ-ள்.) மூவராகிநின்ற-மும்மூர்த்தியாய்நின்ற, முதன்மூலம்-முதன்மையான காரணமானது, அடைந்தபடி யறிந்து - வந்தடைந்தவிதத்தைப் (பிரகலாத) னறிந்து, தேவதேவன்றனை - தேவதேவனாகியவிஷ்ணுவை, முன்னேசெயலின் - முன்னேசெய்ததிலும், இரட்டிப்பூசனைசெய்து - இரட்டித் தாராதனைசெய்து, இயாவராலுங்காண்பரிய - எவர்களாலுந்தரிசிப்பதற்கரிய, எம்மான் - எமதுசுவாமி, அம்மா - ஆச்சரியம், எதிர்ந்தனனென்று - ப்ரசன்னமானரென்று, ஆவதானபடியன்பால் - ஆகின்றப்ரகாரமன்பினால், அசுரேசனவனைத்துதித்தான் - அசுரேசனந்த விஷ்ணுவைத் தோத்திரஞ்செய்தான்—எ-று.

(இ-ரை.) மும்மூர்த்தியாய்நின்ற முதன்மையான காரணமானது வந்தடைந்த விதத்தைப் பிரகலாதனறிந்து தேவதேவனாகிய விஷ்ணுவை முன்னேசெய்ததிலும் இரட்டித்தாராதனைசெய்து எவர்களாலுந் தரிசிப்பதற்கரிய எமது சுவாமி ஆச்சரியம்

ப்ரசன்னமாஞரென்று ஆகின்றப்ரகாரமன்பினல் அசுரேசனந்த விஷ்ணுவைத் தோத்திரஞ்செய்தான்—என்பதாம். (கஅ)

அண்டமென்னுமொருவீட்டி லரியபொருள்சேர்சரக்கறையே
சண்டபானுவெனவுதயாத் தமமற்றொளிருந்தற்பரமே
கண்டவுயிர்களனைத்திற்குங் களைகணனவான்றுணேயே
புண்டரீகைநாயகமே போற்றிபோற்றிமிகப்போற்றி.

(இ-ள்.) அண்டமென்னு மொருவீட்டில் - அண்டமென்கின்ற வொப்பற்றவீட்டில், அரியபொருள்சேர்-அரிதானபொருள் சேர்ந்திருக்கின்ற, சரக்கறையே - பண்டாரமே, சண்டபானுவென - சூரியனைப்போல, உதயாத்தமமற்று - உதயாத்த மனமில்லாமல், ஒளிருந்தற்பரமே - ப்ரகாசிக்கின்ற பிரமமே, கண்ட வுயிர்களனைத்திற்கும் - தரிசித்த வாத்மாக்களனைவர்க்கும், களைகணனவான்பொருளே - கருணைக்கண்ணுகிய பரவஸ்துவே, புண்டரீகைநாயகமே - இலக்குமிக்கு நாயகனுனவரே, போற்றி போற்றி - வந்தனம் வந்தனம், மிகப்போற்றி - மிகவும் வந்தனம்—எ-று.

(இ-ஸா.) அண்டமென்கின்றவொப்பற்றவீட்டில் அரிதான பொருள் சேர்ந்திருக்கின்ற பண்டாரமே சூரியனைப்போல உதயாத்த மனமில்லாமல் ப்ரகாசிக்கின்ற பிரமமே! தரிசித்த வாத்மாக்களனைவர்க்கும் கருணைக்கண்ணுகிய பரவஸ்துவே! இலக்குமிக்கு நாயகனுனவரே! வந்தனம் வந்தனம் மிகவும் வந்தனம்—எ-ம். ()

மேலோனுகிச் சகம்படைக்கும் விளையாட்டுடையவித்தகனே
நாலோடொருபதெனுமுலகி னண்ணுவுயர்ந்தநற்பொருளே
யாலோனுகிக்கண்வளர்ந்த வையாமெய்யாவருணன்மூர்த்தி
பூலோகத்திநுயகமே போற்றிபோற்றிமிகப்போற்றி.

(இ-ள்.) மேலோனுகி - மேலானவனுய், சகம்படைக்கும்-உலகத்தை யுண்டாக்குகின்ற, விளையாட்டுடைய-லீலையையுடைய, வித்தகனே-ஞானமுடையவனே, நாலோடொருபதெனுமுலகின் - பதினுன்குலகத்திலும், நண்ணுவுயர்ந்த நற்பொருளே - சாராதமேலான நல்ல வஸ்துவே, ஆலோனுகி - ஆலிலையின்கண்ணுள்ளவனுய், கண்வளர்ந்தவையா - நித்திரைசெய்த கடவுளே, மெய்யா - தத்துவமே, அருண்மூர்த்தி - தயாஸ்வரூபமே, பூலோகத்துநாயகமே-பூலோகங்களுக்குநாயகனுனவரே, போற்றிபோற்றி-வந்தனம் வந்தனம், மிகவும்போற்றி - மிகவும் வந்தனம்—எ-று.

(இ-ஸா.) மேலானவனுய் உலகத்தை யுண்டாக்குகின்ற லீலையையுடைய ஞானமுடையவனே! பதினுன் குலகத்திலும்

சாராத மேலான நல்லவஸதுவே. ஆலிலையின்கண்ணுள்ளவனுய் நித்திரைசெய்த கடவுளே! தத்துவமே, தயாஸ்வரூபமே, பூலோகங்களுக்கு நாயகனுனவரே, வந்தனம் வந்தனம் மிகவும்வந்தனம்.

(இ-ள்.) கேதமிகுந்த வசுரரெனும் - துன்பமிகுந்தவவுணர்களென்கின்ற, கிளைத்தாமரைக்கு - கிளைகளையுடைய தாமரைப்பூவிற்கு, நெடும்பனியே - நீண்டபனியானவரே, வேதநெறிச்செல் லமரரெனும் - வேதமார்க்கத்திற்செல்லுந் தேவர்களென்கின்ற, விரிதாமரைக்கு - விகசிதமான தாமரைப்பூவுக்கு, வெய்யோனே - சூரியனுனவரே, பேதமறுத்தோர் - வேற்றுமையைக்கெடுத்தவர்கள், உள்ளமெனும் - இருதயமென்கின்ற, பெருந் தாமரையிற் பிரமரமே - பெரிய தாமரைப்பூவிற்கு வண்டானவரே, பூதமனைத்திறுயகமே - ஆத்மாக்களுக்கெல்லா நாயகனுனவரே, போற்றிபோற்றி - வந்தனம் வந்தனம், மிகப்போற்றி - மிகவும் வந்தனம்—எ-று.

கேதமிகுந்தவசுரரெனுங் கிளைத்தாமரைக்குநெடும்பனியே
வேதநெறிச்செலலமரரெனும் விரிதாமரைகருவெய்யோனே
பேதமறுத்தோருள்ளமெனும் பெருநதாமரையிற்பிரமரமே
பூதமனைத்திறுயகமே போறறிபோறறிமிகபபோற்றி.

(இ-ணா.) துன்பமிகுந்த வவுணர்களென்கின்ற கிளைகளையுடைய தாமரைப்பூவிற்கு நீண்ட பனியானவரே, வேதமார்க்கத்திற்செல்லுந் தேவர்களென்கின்ற விகசிதமான தாமரைப்பூவிற்கு சூரியனுனவரே, வேற்றுமையைக்கெடுத்தவர்கள் இருதயமென்கின்ற பெரியதாமரைப்பூவிற்கு வண்டானவரே, ஆதமாக்களுக்கெல்லா நாயகனுனவரே வந்தனம் வந்தனம் மிகவும் வந்தனம்-எ.

## பிரமாநந்தம்வேண்டல்.

என்பதானதுதிபலவு மிசைப்பவிதயங்குளிர்ந்தருளி
யன்பமறுத்துப்பிறவாவா ருயவரங்கேளெனக்கருணை
முன்பனுரைப்பவனைத்திதய முளரியினுஞ்சேர்முதற்பொருளே
துன்பமில்லாவுயர்பதமே தருவேயருள்வாயெனச்சொன்னுன்.

(இ-ள்.) என்பதான - (இப்படி) யென்றுசொல்லிய, துதிபலவுமிசைப்ப - பலதோத்திரங்களைப் பிரகலாதன் சொல்ல, இதயங்குளிர்ந்தருளி - மனங்களித்தருள்செய்து, அன்ப-அன்பையுடைய பிரகலாதனு, மறுத்து-திரும்பவும், பிறவாவாருயவரங்கேளென - செனியாததான வரத்தைக் கேளென்று, கருணைமுன்பனுரைப்ப - கருணையின் முதல்வனுனவிஷ்ணுவானவர்சொல்ல, அனைத்திதய முளரியெனுஞ்சேர் - சகல இருதயகமலங்களிலும் வசிக்கின்ற முதற்பொருளே - முதன்மையான வஸ்துவே. துன்

பமில்லா - துக்கமற்ற, உயர்பதமேது - மேலானவாநந்த மியாது, அதுவே யருள்வாயெனச் சொன்னான் - அதையே யனுக்கிரகஞ்செய்வாயென்று (பிரகலாதன்) சொன்னார்—எ-று.

(இ-ள.) இப்படியென்று சொல்லிய பலதோத்திரங்களைப் பிரகலாதன் சொல்ல, மனங்களித்தருள்செய்து அன்பையுடைய பிரகலாதனை திரும்பவும் செனியாததான வரத்தைக்கேளென்று கருணையின் முதல்வனான விஷ்ணுவானவர்சொல்ல, சகல இருதய கமலங்களிலும் வசிக்கின்ற முதன்மையான வஸ்துவே துக்கமற்ற மேலானவானந்தமியாது? அதையேயனுக்கிரகஞ்செய்வாயென்று பிரகலாதன் சொன்னார்—என்பதாம். (௨௨)

## அனுக்கிரகஞ்செய்தல்.

சித்தப்பிரமமெல்லாம்போய்த் தெளிந்தபரமசுகம்பெற்றுச்
சுத்தப்பிரமத்திளைப்பாற முடிவாம்விசாரந்தோன்றுகவென்
றத்தப்பதுமமமைத்தருளி யமலனேகவவன்றுதியான்
மெத்தப்பரவிமலர்தூவித் தொழுதான்விவேகிகளின்மிக்கோன்.

(இ-ள்.) சித்தப்பிரமமெல்லாம்போய் - மனதிலுள்ள மயக்கங்களனைத்துநீங்கி, தெளிந்த பரமசுகம்பெற்று-தெளிவான பிரமாநந்தத்தையடைந்து, சுத்தபிரமத்திளைப்பாற - சுத்தபிரமத்தில விஸ்ராந்தியடையும்பொருட்டு, முடிவாம் விசாரம் - முடிவான (வாதம) விசாரம், தோன்றுகவென்று - உண்டாகக்கடவதென்று, அந்தப்பதுமமமைத்தருளி - கரகமலத்தைச் (சிரசின்மேல்) வைத் தனுக்கிரகஞ்செய்து, அமலனேக - நின்மலனை விஷ்ணுவெழுந்தருள, அவன்றுதியால-அவனைத்தோத்திரத்தினால், மெத்தப்பரவி - மிகவும்வணங்கி, மலர்தூவி - புட்பத்தை வருஷித்து, விவேகிகளின் மிக்கோன் - விவேகிகளுக்கு மேலானபிரகலாதன், தொழுதான் - வணங்கினான்—எ-று.

(இ-ள.) மனதிலுள்ள மயக்கங்களனைத்து நீங்கி தெளிவான பிரமாநந்தத்தை யடைந்து சுத்தப்பிரமத்தில் விஸ்ராந்தியடையும் பொருட்டு முடிவான வாதமவிசாரம் உண்டாகக்கடவதென்று கரகமலத்தைச் சிரசினமேல்வைத் தனுக்கிரகஞ்செய்து நின்மலனை விஷ்ணுவெழுந்தருள, அவனைத் தோத்திரத்தினால் மிகவும் வணங்கி புட்பத்தை வருஷித்து விவேகிகளுக்கு மேலான பிரகலாதன் வணங்கினான்—என்பதாம்.

(இ-சு-க-ம்.) உபாசித்தவன் வேண்டிய பரமசுக முதிப்பதற் கேதுவானவிசாரமுதிக்கக்கடவதென் றருளினரென்பதாம். (௨௩)

## தனித்திருந் தாத்மவிசாரத்துக் காரம்பித்தல்.

**பனிவார்கடலிற்றிரையென்னப் பரமபுருடன்மறைந்ததற்பின்**
**னினிதாம்பதுமாதனத்திலிருந் திறைவன்றுதிகளேத்தியபின்**
**சனியாவிசாரந்தளித்தான் சநநமறுக்குந்தனிமூர்த்தி**
**நனிநானம்மையாரென்று நாடுவோமுள்ளெனநினைவான்.**

(இ-ள்.) பனிவார்கடலில் - குளிர்ச்சிபொருந்திய நீண்டசமுத்திரத்தில், திரையென்ன - அலையைப்போல. பரமபுருடன் - புருடோத்தமன், மறைந்ததற்பின் - மறைந்ததன்பின்பு, இனிதாம்பதுமாதனத்திலிருந்து- இனியபதுமாசனத்திலிருந்து, இறைவன்றுதிகள் - கடவுளினது தோத்திரங்களை, ஏற்றியபின் - துதித்தபின், சநநமறுக்குந்தனிமூர்த்தி - பிறவியைக்கெடுக்கின்ற வொப்பற்ற சுவாமியானவர், சனியாவிசாரம்-பிறவாத (வாத்ம) விசாரணையை, தந்தளித்தான்-கொடுத்திரட்சித்தான், நனிநான்-மிகவுமியான், நம்மை யாரென்று - நாமாரென்று. உண்ணுடுவோமென - உள்ளே விசாரிப்போமென்று, நினைவான் - சிந்திப்பான்—எ-று.

(இ-ள்.) குளிர்ச்சிபொருந்திய நீண்ட சமுத்திரத்தில் அலையைப்போல புருடோத்தமன் மறைந்தன்பின்பு இனியபதுமாசனத்திலிருந்து கடவுளினது தோத்திரங்களைத் துதித்தபின் பிறவியைக்கெடுக்கின்ற வொப்பற்ற சுவாமியானவர் பிறவாத வாத்ம விசாரணையைக் கொடுத்திரட்சித்தான். மிகவு மியான் நாமாரென்று உள்ளே விசாரிப்போமென்று சிந்திப்பான்—என்பதாம். ()

## பஞ்சபூதவடிவமான சகத்தியானன்றெனல்.

**யானுர்முன்னமெவனுனே னிந்தப்புவியாடம்பரத்தி**
**லானுதிருந்துநின்றோடி யழுதுசிரித்துமகிழ்ந்தயர்ந்தே**
**னுனுவானசகமல்லே னங்கல்புல்லுமண்மரங்க**
**டானுய்ப்புறம்பாய்ச்சேதனமாஞ் சகநானென்னத்தக்கதுவோ.**

(இ-ள்.) முன்னம் - முன்னமே, எவனுனேன் - எவனுயிருந்த யான், இந்தப்புவியாடம்பரத்தில் - இச்சகதாடம்பரத்தில், ஆனுதிருந்தும் - நீங்காமலிருந்தும், நின்று - நினறும், ஒடி-ஓடியும், அழுது-அழுதும், சிரித்து - நகைத்தும், மகிழ்ந்து - களித்தும், அயர்ந்தேன் - வருந்தினவனுகிய, யானுர் - நானெனத்தன்மையன், நானுவான - நாநாவிதமாகிய, சகமல்லேன் - உலகநானல்லன், நகம் - மலைகளும், கல் - கற்களும், புல் - திரணங்களும், மண் - மண்களும், மரங்கடானுய் - மரங்களுமாகியும், புறம்பாய் - புறம்பாகியும், அசேதனமாம் - சடமாகியு மிருக்கின்ற, சகம் - (இச்) சகத்தை, நானென்னத் தக்கதுவோ - யானென்று சொல்லத்தகுந்ததோ—எ-று.

(இ-ணா.) முன்னமே எவனாயிருந்த யான் இச்சகத்தாடம்பரத்தில் நீங்காமலிருந்தும் நின்றும், ஓடியும், அழுதும், நகைத்தும், களித்தும் வருந்தினவனாகிய நானெத்தன்மையான நாநாவிதமாகிய உலகநானல்லன். மலைகளும், கற்களும், திரணங்களும், மண்களும், மரங்களுமாகியும், புறம்பாகியும், சடமாகியு மிருக்கின்ற இச்சகத்தை யானென்று சொல்லத்தகுந்ததோ—என்பதாம். ()

### பௌதிகமாகிய தேகமுஞ் சத்தவிடயமு மியானன்றெனல்.

இல்லாவிடத்துண்டாய் மூகமெனலாய்க்காற்றிலியங்குவதாய்ச்
செல்லாநின்றசிலநாளிற் சிதைந்துசடமாமுடனே
நில்லாதாய்ப்பொய்க்கேதோன்றி நிராகாரமதாயறிவின்றிப்
புல்லாவறிவிற்செவிக்குணவாய்ப் பொன்றுஞ்சத்தநானோமோ.

(இ-ள்.) இல்லாவிடத்துண்டாய் - அசத்தினிடத்தி லுண்டானதாகியும் மூகமெனலாம்-மூடமென்பதாகியும், காற்றிலியங்குவதாய் - (பிராண) வாயுவினாற் சஞ்சரிப்பதாகியும், செல்லாநின்ற சிலநாளிற் சிதைந்து - செல்லுகின்ற வற்பகாலத்தி னசிப்பதாயுமிருக்கின்ற, சடமாமுடனே-சடமானசரீரநானுவனே, நில்லாதாய - நிலையில்லாததாகியும், பொய்க்கே தோன்றி - சூனியத்திலுண்டானதாகியும், நிராகாரமதாய் - ஆகாரமில்லாததாகியும், அறிவின்றி - அறிவில்லாததாகியும், புல்லாவறிவில் - அற்பவுணர்வில், செவிக்குணவாய் - காதுக்கு புசிப்பாகியு மிருக்கின்ற, பொன்றுஞ்சத்த நானுமோ - கெடுக்கின்ற சத்தவிடய மியானுகுமோ—எ-று.

(இ-ணா.) அசத்தினிடத்தி லுண்டானதாகியும், மூடமென்பதாகவும், பிராணவாயுவினாற் சஞ்சரிப்பதாகியும், செல்லுகின்ற வற்பகாலத்தினசிப்பதாகியுமிருக்கின்ற சடமான சரீரநானுவனோ? நிலையில்லாதாகியும், சூனியத்திலுண்டானதாகியும், ஆகாரமில்லாததாகியும், அறிவில்லாததாகியும், அற்பவுணர்வில் காதுக்குப்புசிப்பாகியுமிருக்கின்ற கெடுக்கின்ற சத்தவிடயமியானுகுமோ?-எ-ம்.

### பரிசவிடயமும் ரசவிடயமு மியானன்றெனல்.

தோலிலன்றியறவரிதாய்த் தோற்றமின்றிக்கணத்திறந்து
கோலுமறிவாலறிந்தறிவு கூடாப்பரிசநானல்ல
காலிலசைந்துவசித்துருவாய்க் காதன்மிக்குகணத்திறக்குந்
தாலுவுணவாய்த்திரவியத்திற் சனித்துச்சடமாஞ்சுவைநானோ.

(இ-ள்.) தோலிலன்றி - தொக்கினாலல்லாமல், அறிவரிதாய் - அறியக்கூடாததாகியும், தோற்றமின்றி (சனித்து) தோற்றமில்லாமல், கணத்திறந்து - கணநேரத்தி னசித்து, கோலுமறிவாலறிந்து - வியாபகஞான த்தி லறிந்து, அறிவுகூடா - (தனக்) கறிவில்லாமலுமிருக்கின்ற, பரிச நானல்ல - பரிசவிடயநானுவனு, காலிலசைந்து - காற்றில்லாமற்சஞ்சல மாகியும், அசித்துருவாய் - சடரூபமாகியும், காதன்மிக்கு - ஆசைமிகுந்த தாகியும், கணத்திறக்கும்-க்ஷணத்திலிறக்கின்றதாகியும் தாலுவுணவாய் - நாவிற்குப்புசிப்பாகியும், திரவியத்திற்சனித்து-பதார்த்தங்களிலுண்டான தாகியுமிருக்கின்ற, சடமாஞ்சுவைநானே - சடமான ரசவிடயமானதியா னுவனே—எ-று.

(இ-ா) தொக்கினாலல்லாமல் அறியக்கூடாததாகியும் தனித்து தோற்றமில்லாமல் கணநேரத்தினசித்து வியாபகஞானத்தினு லறிந்து தனக்கறிவில்லாமலுமிருக்கின்ற பரிசவிடய நானுவனு? காற்றில்லாமற் சஞ்சலமாகியும், சடரூபமாகியும், ஆசைமிகுந்ததாகியும்,க்ஷணத்திலிறக்கின்றதாகியும், நாவிற்குப்புசிப்பாகியும், பதார்த்தங்களிலுண்டானதாகியு மிருக்கின்ற சடமான ரசவிடயமான தியானுவனே?—என்பதாம். (௨எ)

உருபவிடயமுங் கந்தவிடயமு மியானன்றெனல்.

கணத்தினிறக்குங்காண்பவற்றிற் காக்ஷிதன்னிற்பற்றுகிப்
புணர்ப்பில்காண்பானிடத்திறக்கும் போதமில்லாவொளிநானே
குணக்குமூக்காஞ்சேதனத்தாற் குறிப்பதாகிச்சடமாகி
மணக்குநொய்ம்மைநியமங்கண் மருவுகந்தநானுமோ.

(இ-ள்.) கணத்தினிற்கும் - கணத்திலிறக்கின்ற, காண்பவற்றில் - சக திலும், காக்ஷிதன்னில் - பார்வையிலும், பற்றுகிப்புணர்ப்பில்- புணர்ந்தும் புணராத, காண்பானிடத்திறக்கும் - ஞாதாவினிடத்திலிறக்கின்ற, போத மில்லாவொளிநானே - சடமானவுருபவிடயநானுவனே, குணக்குமூக் காம் - வளைவானமூக்காகும், அசேதனத்தால் - அறிவில்லாமையினால், குறிப்பதாகி - குறிக்கப்படுவதாகியும், சடமாகி - (தனக்) கறிவில்லாததா கியும். மணக்குநொய்ம்மை நியமங்கண்மருவு - வாசனையிலற்பமுறைமைக ளைப் பொருந்தினதாகியுமிருக்கின்ற, கந்தநானுமோ - (சடமான) கந்தவி டயநானுமோ—எ-று.

(இ-ா.) கணத்திலிறக்கின்ற சகத்திலும் பார்வையிலும் புணர்ந்தும் புணராத ஞாதாவினிடத்திலிறக்கின்ற சடமான வுருபவிடய நானுவனே? வளைவானமூக்காகும். அறிவில்லாமையினால் குறிக்கப்படுவதாகியும், தனக்கறிவில்லாததாகியும், வாசனையிலற்ப முறைமைகளைப் பொருந்தினதாகியு மிருக்கின்ற சடமான கந்தவி டய நானுமோ?—என்பதாம். (௨அ)

## ஆத்மதரிசனமாதல்.

எனதற்றெண்ணமெல்லாம்போயிளைப்பற்றைந்துபொறிமயல்போ
யனகவறிவாய்த்தொழிலின்றி யறியும்பொருடீரறிவேயாய்க்
கனமாயுள்ளும்புறம்பினுநிட் களமாயுண்டாமாத்திரமாய்ச்
சநநமரணமிலாவென்னைத் தயங்கக்கண்டேன்சத்தியமே.

(இ-ள்.) எனதற்று - மமகாரமிறந்து, எண்ணமெல்லாம்போய் - சங்கற்பமனைத்தும்விட்டு, இளைப்பற்று - இளைப்பில்லாமல், ஐந்துபொறிமயல் போய் - பஞ்சேந்திரியமயக்கம்விட்டு, அனகவறிவாய் - மாசற்றஞானமாகியும், தொழிலின்றி - செயலின்றி, அறியும்பொருடீரறிவேயாய் - அறிகின்ற விடயநீங்கிய ஞானமாத்திரமாகியும், கனமாயுள்ளும்புறம்பும் - கனமான வுள்ளிலும்புறம்பிலும், நிட்களமாய் - நிட்களமாகியும், உண்டாமாத்திரமாய் - சத்தாமாத்திரமாகியும் சநநமரணமிலா - பிறப்பிறப்பில்லாததாகியு மிருக்கின்ற, என்னை - எனது ஸ்வரூபத்தை, தயங்கக்கண்டேன் சத்தியம் - ப்ரகாசிக்கக்கண்டே (னிது) நிச்சயம்—எ-று.

(இ-ஙா.) மமகாரமிறந்து சங்கற்பமனைத்தும்விட்டு இளைப்பில்லாமல் பஞ்சேந்திரிய மயக்கம்விட்டு மாசற்றஞானமாகியும், செயலின்றி அறிகின்றவிடயநீங்கி ஞானமாத்திரமாகியும்கனமானவுள்ளிலும் புறம்பிலும் நிட்களமாகியும், சத்தாமாத்திரமாகியும், பிறப்பிறப்பில்லாததாகியுமிருக்கின்ற எனது ஸ்வரூபத்தை ப்ரகாசிக்கக்கண்டே னிது நிச்சயம்—என்பதாம்.

(இ-சு-க-ம்) அநாத்மவஸ்துவை நியதிகளைந்தாத்மவஸ்துவான கூடஸ்தரைத் தரிசித் ததுவாயினு ரென்பதாம். (உக)

## ஆத்மவியாபகமான பிரமத்தைத் தரிசித்தல்.

ஆவாவிப்போதுள்ளபடி யறியுநெறியிலென்னையறிந்தே
னோவாவிகற்பமற்றறிவுள் ளொளியாஞ்சீவ னுருவிதுவே
தாவாதெங்குமுளனாந் தத்துவத்திற்சகமெல்லா
மேவாநின்றவிரவிமுதற் கடமீருகவிளங்கியதால்.

(இ-ள்.) ஆவா - ஆச்சரியமாச்சரியம், என்னையறிந்தே னிப்போது-இந்த வேளையி லென்னைத் தெரிந்துகொண்டேன, உள்ளபடி - உள்ளப்ரகாரமாய், அறியுநெறியில் - அறிகின்ற மார்க்கத்தில், ஓவாவிகற்பமற்று - நீங்காதவேற்றுமைகெட்டு, அறிவுள்ளொளியாம் - அறிவுக்குட்ப்ரகாசமான, சீவ னுருவிதுதா - ஆத்மஸ்வரூப மிதுதானே, தாவாதெங்குமுள - சலனமின்றி யெங்கும் (வியாபகமா) யிருக்கின்ற, நானுந்துவத்தில் - யானாகிய

தத்துவஞானத்தில், சகமெல்லாம் - உலகங்க ளனைத்தும், மேவாநின்ற விரவிமுதல் - பொருந்தாநின்ற சூரியன்முதல், கடமீருக விளங்கியது - கடபரியந்தம் ப்ரகாசித்தது—எ-று.

(இ-ஙா.) ஆச்சரியமாச்சரியம் இந்தவேளையி லென்னைத்தெரிந்துகொண்டேன். உள்ளப்ரகாரமாய் அறிகின்ற மார்க்கத்தில் நீங்காத வேற்றுமைகெட்டு அறிவுக்குட் ப்ரகாசமான ஆத்மஸ்வரூப மிதுதானே சலனமின்றி யெங்கும் வியபாகமாயிருக்கின்ற யானகிய தத்துவஞானததில் உலகங்க ளனைத்தும் பொருந்தாநின்ற சூரியன் முதல் கடபரியந்தம் ப்ரகாசித்தது—என்பதாம். ()

## சுயஞ்சத்தைத் தரிசித்தல்.

உள்ளிலொளிபாற்கனற்பொறிக ளொளிர்வதென்னவம்பொறியுந்
தெள்ளியறியுமென்னுலே செறிசித்திரமாய்த்திகழ்ந்தனவாற்
றள்ளிலயனேடுப்பட்ட தனிக்கற்பாந்தத்துயிரனைத்தும்
வெள்ளவெளியாமப்போது மீளாதொளிருமெனவடிவே.

(இ-ள்.) உள்ளிலொளியால் - உள்ளேயிருக்கின்ற ப்ரகாசத்தினல், கனற்பொறிகள் - அக்கினிப்பொறிகளானவை, ஒளிர்வதென்ன - ப்ரகாசிப்பதுபோல, ஐம்பொறியும் - பஞ்சேந்திரியமும், தெள்ளியறியுமென்னுல்- தெளிவாக வறிகின்ற வென்னுல், செறிசித்திரமாய் - மிகுந்த விசித்திரமாகி, திகழ்ந்தன - ப்ரகாசித்தன, தள்ளிலயனேடுபட்ட - தள்ளப்படாத பிரமா முதலான, தனிக்கற்பாந்தத்து - தனிமையானகற்பமுடிவில், உயிரனைத்தும் - சீவர்களெல்லாம், வெள்ளவெளியாமப்போதும் - வெட்டவெளியான வப்பிரளயகாலத்திலும், எனவடிவே - எனதுஸ்வரூபமே, மீளாதொளிரும் - திரும்பாமற ப்ரகாசிக்கும்—எ-று.

(இ-ஙா.) உள்ளேயிருக்கின்ற ப்ரகாசத்தினல் அக்கினிப்பொறிகளானவை ப்ரகாசிப்பதுபோல பஞ்சேந்திரியமும் தெளிவாக வறிகின்ற வென்னுல் மிகுந்த விசித்திரமாகி ப்ரகாசித்தன. தள்ளப்படாத பிரமா முதலான தனிமையான கற்பமுடிவில் சீவர்களெல்லாம் வெட்டவெளியான வப்பிரளயகாலத்திலும் எனதுஸ்வரூபமே திரும்பாமற் ப்ரகாசிக்கும்—என்பதாம். (௱க)

## சுயஞ்சித்தைத்தரிசித்தல்.

இவனுனென்றுள்ளேபற்ற மெண்ணமெங்கேயெல்லையறப்
புவனமெல்லாநிறைந்தொளிரும் போதவடிவாமென்றனக்குக்

கவருமனப்பாவனைதானே கருதிலுண்டோமுடிவில்சுகத்
துவமையில்லாவுபசாந்த வுணர்வாங்கண்ணேயுலகெங்கும்.

(இ-ள்.) இவனுனென்றும் - இவனென்றுயானென்றும், உள்ளேபற்றும் - மனதிற்பற்றுகின்ற, எண்ணமெங்கே - நினைப்பெங்கே, எல்லையற - அளவில்லாமலிருக்கின்ற, புவனமெல்லாம் - சகங்களனைத்தும், நிறைந்தொளிரும் - பூரணமாய் ப்ரகாசிக்கின்ற, போதவடிவாம் - ஞானஸ்வரூபமாகிய, என்றனக்கு-எனக்கு, கவருமனப்பாவனைதானேகருதிலுண்டோ - கிரகிக்கின்ற மனோபாவனை நினைக்குமிடத்துண்டோ, முடிவில் சுகத்துவமையில்லா - முடிவிலலாதவாநந்தமுடைய சமானமில்லாத, உபசாந்தவுணர்வாம் - உபசாந்த ஞானமாகிய, கண்ணே - (எனது) திருஷ்டியே, உலகெங்கும் - சகங்களனைத்திலுமாம்—எ-று.

(இ-ள.) இவனென்று மியானென்றும், மனதிற்பற்றுகின்ற நினைப்பெங்கே? அளவில்லாமலிருக்கின்ற சகங்களனைத்தும் பூரணமாய் ப்ரகாசிக்கின்ற ஞானஸ்வரூபமாகிய எனக்குகிரகிக்கின்ற மனோபாவனை நினைக்குமிடத்துண்டோ! முடிவில்லாத வாநந்தமுடைய சமானமில்லாத உபசாந்தஞானமாகிய எனது திருஷ்டியே சகங்களனைத்திலுமாம்—என்பதாம். (௯௨)

## ஒன்றுன தன்னை யனனஞ்செய்தல்.

நோக்கப்பட்டநோக்கெல்லா நுண்மையறிவாநோக்கொன்றே
யாக்கப்பட்டவுயிரனைத்து மகத்தாயறிவதிலாவறிவாய்த்
தாக்கப்பட்டதொனறில்லாத் தனித்தத்துவமாய்த்தனையன்றிப்
போக்கப்பட்டதில்லாவெம்பொருட்டுவணங்கிப்புகழுதுமால்.

(இ-ள்.) நோக்கப்பட்ட நோக்கெல்லாம் - பார்க்கப்பட்டபார்வைகளனைத்தும், நுண்மையறிவாம் - சூட்சுமவறிவாகிய, நோக்கொன்றே-பார்வையொன்றேயாம், ஆக்கப்பட்ட - உண்டாக்கப்பட்ட, உயிரனைத்தும் - சீவர்களியாவையும், அகத்தாய் - அகமாகியும், அறிவதிலா வறிவாய்-திரிஸ்ய சம்பந்தமில்லாத ஞானமாகியும், தாக்கப்பட்டதொன்றில்லா-தாக்குதற்குவேறொரு வஸ்துவில்லாத, தனித்தத்துவமாய் - ப்ரத்யகாத்மாவாகியுமிருக்கின்ற, தனையன்றிப்போக்கப்பட்டதில்லா - என்னையன்றி நீக்கப்பட்டதில்லாத, எம்பொருட்டு வணங்கிப்புகழுதும் - எமது நிமித்தம் வந்தித்துத் துதிப்போம்—எ-று.

(இ-ள.) பார்க்கப்பட்ட பார்வைகளனைத்தும் சூட்சுமவறிவாகிய பார்வையொன்றேயாம் உண்டாக்கப்பட்ட சீவர்களியாவையும் அகமாகியும் திரிஸ்ய சம்பந்தமில்லாத ஞானமா

கியும், தாக்குதற்கு வேறொரு வஸ்துவில்லாத ப்ரத்தியகாத்மாவா கியு மிருக்கின்ற என்னையன்றி நீக்கப்பட்டதில்லாத எமது நிமித் தம் வந்தித்துத் துதிப்போம்—என்பதாம். (௩௩)

## ஆத்மாவிற் சத்திகளனைத்து முண்டாதல்.

அறவுநொய்தாய்ச்சமமாகி யவிகாரமதாயதீதமதா
யிறவுநிகழ்வோடெதிர்வென்னவெண்ணுங்காலமூன்றிலதாய்ப்
பிறவுநினைக்குநினைவின்றிப் பேதமற்றவறிவாலே
நிறைவிதானசத்தியெலா நேரேசெய்யப்பட்டனவே.

(இ-ள்.) அறவுநொய்தாய் - மிகவுஞ்சொச்சமாய், சமமாகி - சமதத்து வமாய், அவிகாரமதாய் - விகாரமில்லாததாய், அதீதமதாய் - அதீதமாய், இறவு நிகழ்வோ டெதிர்வென்ன - செல்கால நிகழ்கால வருகாலமென்று, எண்ணுங்காலமூன்றிலதாய் - நினைக்கின்ற மூன்றுகாலமுமில்லாததாய், பிறவு நினைக்கு நினைவின்றி - வேறாகநினைக்கின்ற நினைவில்லாமல், பேத மற்ற வறிவால் - அபேதஞானத்தினால், நிறைவிதான சத்தியெலாநேரே செய்யப்பட்டன - மாக்ஷிமையான நாநாவித சத்திகளனைத்து நேரேயுண் டாக்கப்பட்டன—எ-று.

(இ-ா.) மிகவுஞ்சொச்சமாய், சமத்துவமாய், விகாரமில் லாததாய், அதீதமாய், செல்கால நிகழ்கால வருகாலமென்று நினை க்கின்ற மூன்றுகாலமு மில்லாததாய் வேறாக நினைக்கின்ற நினைவி ல்லாமல் அபேதஞானத்தினால் மாக்ஷிமையான நாநாவிதசத்திக ளனைத்து நேரே யுண்டாக்கப்பட்டன—என்பதாம். (௩௪)

## அ தீ த த ரி ச ன ம்.

தாக்கற்றொன்றிலறிவுக்குச் சமமேயொழிந்துகண்டதிலை
வாக்குக்கெட்டாமையினாலே வசனங்களினாற்சமந்தோன்றா
நோக்கற்கரிதாம்பொய்ப்பொருள்போ லெய்தாயழியாநிராசைத
தேக்கிற்சமபாவனைதானே திரைதீர்கடல்போற்சேடிக்கும். [னைத்

(இ-ள்.) ஒன்றில் - ஒன்றிலும், தாக்கற்று - பற்றில்லாதிருக்கின்ற, அறிவுக்கு - ஞானத்திற்கு, சமமேயொழிந்து - சமமேயல்லாமல், கண்ட திலை - (வேறு) காணப்பட்டதில்லை, வாக்குக்கெட்டாமையினால் - வசனத் திற்கெட்டாதபடியினால், வசனங்களினாற் சமந்தோன்றா - வார்த்தைகளி னாற் சமமானவாத்மாதோன்றமாட்டாது, நோக்கற்கரிதாய் - பார்ப்பதற் கரிதாகியும், பொய்ப்பொருள்போல் - மித்தையாகிய வஸ்துவைப்போல,

நொய்தாகி - சொச்சமாகியுமிருக்கின்ற, அழியாதநிராசைதனை - கெடாத நிராசையை, தேக்கில் - நிறைத்தால். சமபாவனைதானே - சமபாவனையானது. திரைதீர்கடல்போல் - அலையில்லாத சமுத்திரத்தைப்போல, சேடிக்கும் - மிஞ்சும்—எ-று.

(இ-கா.) ஒன்றிலும் பற்றில்லாதிருக்கின்ற ஞானத்திற்கு சமமேயல்லாமல் வேறுகாணப்பட்டதில்லை. வசனத்திற் கெட்டாதபடியினல் வார்த்தைகளினுற் சமமான வாத்மா தோன்றமாட்டாது. பார்ப்பதற்கரிதாகியும் மித்தையாகிய வஸ்துவைப்போல சொச்சமாகியுமிருக்கின்ற கெடாத நிராசையை நிறைத்தால் சமபாவனையானது அலையில்லாத சமுத்திரத்தைப்போல மிஞ்சும்-எ.

## பந்தமடையு முயிர்களுக்கிரங்கல்.

செயலுஞ்செயலிலாமையுமாய்த் தியங்குஞ்செயலிற்சேரறிவு
பயிலும்வலையிற்புட்போலப் பந்தமடையுமாதலினுன்
மயல்வெங்கோபமிரண்டாலும் வருந்தொந்தனையாமயக்காலே
யுயிர்களெல்லாநிலப்புழுப்போ லொன்றுமகலாதாகுவதாம்.

(இ-ள்.) செயலுஞ் செயலிலாமையுமாய் - தொழிலுந் தொழிலில்லாமையுமாகி, தியங்குஞ்செயலில் - மயங்குகின்ற தொழில்களில், சேரறிவு-சேர்ந்தவறிவானது, பயிலும் வலையிற் புட்போல - கூறும் வலையிகப்பட்ட பக்ஷியைப்போல, பந்தமடையும் - கட்டுப்படும், ஆதலினுல் - ஆகையினுல், மயல்வெங்கோபமிரண்டாலும் - இராகத்துவேடமாகிய விரண்டினுலும், வருந்தொந்தனையாம் - வருகின்ற தொந்தமான, மயக்கால் - மயக்கத்தினுல், உயிர்களெல்லாம் - சீவர்களனைத்தும், நிலப்புழுப்போல் - பூமிக்குள்ளிருக்கின்ற கிருமியைப்போல, ஒன்று மகலாதாகுவதாம் - ஒன்று நீங்காமலாகும்—எ-று.

(இ-கா.) தொழிலுந் தொழிலில்லாமையுமாகி மயங்குகின்ற தொழில்களில் சேர்ந்த வறிவானது கூறும் வலையிலகப்பட்ட பக்ஷியைப்போல கட்டுப்படும். ஆகையினுல் இராகத்துவேடமாகிய விரண்டினுலும் வருகின்ற தொந்தமான மயக்கத்தினுல் சீவர்களனைத்தும் பூமிக்குள்ளிருக்கின்ற கிருமியைப்போல ஒன்று நீங்காமலாகும்—என்பதாம். (ருசா)

## தன்னைத் தானுய்த் துதித்தல்.

நீடத்தகுமன்னுயிர்க்கெல்லா நெஞ்சத்துறைவாய்நெடுநாளாக்
கூடப்பெற்றேனுனையிந்தக் குறைவில்பேற்றையார்பெற்றுர்

தேடப்பட்டாய்பெறப்பெற்றாய் தெரியநின்றாய்விகற்பமெலாம்
வீடப்பட்டாயெதுவானு யதுவாய்நின்றாய்மிகத்துதிப்பாம்.

(இ-ள்.) நீடத்தகும்-மிகவுந்தெளிவாக, மன்னுயிர்க்கெல்லாம்-நிறைந்தவாத்மாக்களனைத்திற்கும், நெஞ்சத்துறைவாய் - மனதிலுறைபவனே, நெடுநாள் - வெகுகாலத்தின் (பின்பு), உனைக்கூடப்பெற்றேன் - உன்னையடையப்பெற்றேன், இந்தக்குறைவில்பேற்றை - இப்பூரணப்ரயோசனத்தை, யார்பெற்றார் - யார்பெற்றார்கள், தேடப்பட்டாய் - (சுருதிகுருவாக்கியங்களினால்) விசாரிக்கப்பட்டாய், பெறப்பெற்றாய் - (கூடஸ்த பிரமவயிக்கியத்தை) யடையப்பெற்றாய், விகற்பமெலாம் - வேற்றுமைகளனைத்தையும், வீடப்பட்டாய் - நீக்கினாய், தெரியநின்றாய் - சச்சிதாநந்தஸ்வரூபமாகப்ரகாசிக்கின்றாய், எதுவானாய் - யாதானாயோ, அதுவாநின்றாய்-அதுவாக நின்றவுன்னை, மிகத்துதிப்பாம் - மிகவுந்தோத்திரஞ்செய்வாம்-எ-று.

(இ-ளா ) மிகவுந்தெளிவாக நிறைந்த வாத்மாக்க ளனைத்திற்கும் மனதிலுறைபவனே! வெகுகாலத்தின் பின்பு உன்னை யடையப்பெற்றேன், இப்பூரண ப்ரயோசனத்தை யார்பெற்றார்கள். சுருதி குருவாக்கியங்களினால் விசாரிக்கப்பட்டாய், கூடஸ்த பிரமவயிக்கியத்தை யடையப்பெற்றாய், வேற்றுமைகளனைத்தையும் நீக்கினாய், சச்சிதாநந்தஸ்வரூபமாக ப்ரகாசிகின்றாய் யாதானாயோ? அதுவாக நின்றவுன்னை மிகவுந்தோத்திரஞ்செய்வாம்-எ-ம்.

---

## ஐக்கிய வஸ்துவான தன்னைத்தரிசித்தல்.

நானேநீயாய்நீநானாய் ஞானவடிவாய்முடிவின்றித்
தானேயாகியண்டத்தின் றலையாய்ப்பரமதத்துவமாங் [போ
கோனேயுன்னைத்தொழுகின்றேன் கொண்டன்மறையாநிறைமதி
லூனேர்நினைவுகளின்மறையா வொளியாமுருவேயுனைப்பணிகேன்.

(இ-ள்.) நானே நீயாய் - நானே நீயாகியும், நீநானாய் - நீயேநானாகியும், ஞானவடிவாம் - ஞானஸ்வரூபமாகியும், முடிவின்றித் தானேயாகி-முடிவில்லாது தான்மாத்திரமாகியும், அண்டத்தின் - அண்டத்தி(லுள்ள தேவர்களுக்கு), தலையாய் - தேவனாகியுமிருக்கின்ற, பரமதத்துவமாம்-பரமாத்மாவான, கோனே - இறைவனே, உன்னைத்தொழுகின்றேன் - உன்னைவணங்குகின்றேன், கொண்டன் மறையா - மேகங்களின் மறையாத, நிறைமதிபோல்-பூர்ணசந்திரனைப்போல, ஊனேர் நினைவுகளின்மறையா-ஈனமானநினைவுகளின் மறைபடாத, ஒளியாமுருவே - ப்ரகாசஸ்வரூபமே, உனைப்பணிகேன் - உன்னை வந்தனஞ்செய்வேன்—எ-று.

(இ-ளா.) நானே நீயாகியும், நீயே நானாகியும், ஞானஸ்வரூபமாகியும், முடிவில்லாது தான்மாத்திரமாகியும், அண்டத்திலுள்ள

தேவர்களுக்குத் தேவனுகிய மிருக்கின்ற பரமாத்மாவான இறைவனே! உன்னைவணங்குகின்றேன். மேகங்களின்மறையாத பூர்ண சந்திரனைப்போல ஈனமான நினைவுகளின் மறைபடாத ப்ரகாசஸ்வரூபமே உன்னைவந்தனஞ்செய்வேன்—என்பதாம். (ҧ அ)

## பிரமாநந்தத்தி லியாவுமிருந்து மில்லையெனல்.

உன்னலென்னுமாவரண மொன்றுமில்லாவெளியாகித்
தன்னதானசுகவடிவிற் றானேவிளங்கித்தன்வசமா
மென்னதுருவையான்பணிகே னிருந்துநடந்துஞ்சாந்தமுற்று
மன்னதன்னதிலதாகு மனைத்துஞ்செய்தும்பற்றிலதாம்.

(இ-ள்.) உன்னலென்னும் - நினைவென்கின்ற, ஆவரணமொன்றும்-மறைப்பொன்றும், இல்லாவெளியாகி - இல்லாத சிதாகாயமாய், அன்னதான - அத்தன்மையதாயிருக்கின்ற, சுகவடிவில் - ஆநந்தஸ்வரூபத்தில், தானேவிளங்கி - தானுகப்ரகாசித்து, தன்வசமா மென்னதுருவை-தனது வசமாகிய வெனதுஸ்வரூபத்தை, யான்பணிகேன் - நான்வணங்குவேன், இருந்தும் - (அசையா) திருந்தும், நடந்துஞ்சாந்தமுற்றும் - நடந்துஞ்சாந்தமடைந்தும், அன்னதன்ன திலதாகும்-அந்தந்தத்தொழிலில்லாததாம், அனைத்துஞ்செய்தும் பற்றிலதாம்-சகல (தொழில்களைச்) செய்து (மந்தப்) பற்றில்லாததாம்—எ-று.

(இ-கை.) நினைவென்கின்ற மறைப்பொன்றும் இல்லாத சிதாகாயமாய் அத்தன்மையதா யிருக்கின்ற ஆநந்தஸ்வரூபத்தில் தானுகப்ரகாசித்து தனதுவசமாகிய வெனதுஸ்வரூபத்தை நான் வணங்குவேன். அசையாதிருந்தும் நடந்துஞ் சாந்தமடைந்தும் அந்தந்தத்தொழிலில்லாததாம். சகல தொழில்களைச்செய்து மந்தப் பற்றில்லாததாம்—என்பதாம். (ҧ க)

## சகலமு மாத்மாவினுல் விளங்குமெனல்.

பல்லவங்கடனையசைக்கும் பவனன்போலமனமுதலாய்ச்
செல்லுங்கரணங்களையிந்தச் சித்தாம்புருடனசைத்திடுமால்
வல்லபாகர்நடத்துகின்ற வாசித்திரள்போற்றனதான
வல்லன்மேவப்பொறியெல்லா மவனேபரிக்குமநவரதம்.

(இ-ள்.) பல்லவங்கடனையசைக்கும் - தளிர்களையசைக்கின்ற, பவனன்போல - காற்றைப்போல, மனமுதலாய் - மனமுதலாக, செல்லுங்கரணங்களை - நடக்கின்ற வந்தக்கரணங்களை, இந்தச்சித்தாம்புருடன் - இந்த

ஞானத்மாவானவன், அசைந்திடும் - அசைப்பான், வல்லபாகர் நடத்து கின்ற - வல்லமையையுடைய சாரதிநடத்தாநின்ற, வாசித்திரள்போல் - குதிரைக்கூட்டங்களைப்போல, தனதானவல்லன்மேவ - தன்னுடையதாகிய துன்பம்பொருந்த, பொறியெல்லாம் - இந்திரியங்க ளனைத்தையும், அநவரதம் - சதாகாலமும், அவனேபரிக்கும் - அவனேதாங்கும்—எ-று.

**(இ-ள்.) தளிர்களையசைக்கின்ற காற்றைப்போல மனமுதலாக நடக்கின்ற வந்தக்கரணங்களை இந்த ஞானத்மாவானவன் அசைப்பான். வல்லமையையுடைய சாரதிநடத்தாநின்ற குதிரைக்கூட்டங்களைப்போல தன்னுடையதாகிய துன்பம் பொருந்த இந்திரியங்களனைத்தையும் சதாகாலமும் அவனே தாங்கும்-எ-ம். ()**

## எவற்றினுள்ளும் விளங்குகின்றதெனல்.

**இவனேதேடப்படுகிற்போ னிவனேதுதிக்கப்படுகிற்போ
னிவனேதியானிக்கப்படுவோ னிவனன்மரணமயக்கொழிந்த
திவனேயெளிதினெய்திடுவோ னிவனேனன்றுயறிகிற்போ
னிவனேயல்லார்மனக்கமலத் திடையிலிருக்குமிசைவண்டே.**

(இ-ள்.) இவனேதேடப்படுகிற்போன் - இவனே (தேகேந்திரியங்களாற்) றேடப்படுகின்றவன், இவனே துதிக்கப்படுகிற்போன் - இவனே (வாக்கினாற்) றுதிக்கப்படுகின்றவன், இவனேதியானிக்கப்படுவோன்-இவனே (மனதினாற்) றியானிக்கப்படுவென், இவனன்மரணமயக்கொழிந்த - இவனன் மரணமயக்கங்கணீங்கின, இவனே யெளிதி னெய்திடுவோன் - இவனேயெளிதி லடையத்தக்கவன், இவனேநன்றுயறிகிற்போன் - இவ நன்றுயறியத்தக்கவன், இவனே யெல்லார் மனக்கமலத்திடையில் - இவனியாவரிருதயகமலமத்தியில், இருக்குமிசைவண்டு - இராநின்ற கானத்தையுடைய வண்டாம்—எ-று.

**(இ-ள்.) இவனே தேகேந்திரியங்களாற் றேடப்படுகின்றவன், இவனே வாக்கினாற் றுதிக்கப்படுகின்றவன், இவனே மனதினாற்றியானிக்கப்படுபவன், இவனன் மரணமயக்கங்க ணீங்கின, இவனே யெளிதி லடையத்தக்கவன், இவ நன்றுபறியத்தக்கவன், இவனியாவ ரிருதயகமலத்தியிலிராநின்ற கானத்தையுடைய வண்டாம்—என்பதாம். (சக)**

### முன்மறைந்தபொரு ளிப்பொழுது வெளிப்பட்டதெனல்.

**மேவலுற்றபோகத்தில் விருப்புவெறுப்புமெனக்கில்லை
யாவதெய்துமதுவருக யாதுபோகுமதுபோகப்**

**பாவமிகுமிவ்வஞ்ஞானப் பகைவனுலேவிவேகமெனு**
**மேவமில்லாப்பொருளெல்லா மிழந்தேனுணர்வாலவைபெற்றேன்.**

(இ-ள்.) மேவலுற்ற போகத்தில் - விருப்பமுற்ற போகங்களில், விருப்பு வெறுப்புமெனக்கில்லை - இராகத்துவேடமுமெனக்கில்லை, யாவதெய்தும் - எதுவரத்தக்கதுவோ, அதுவருக - அதுவரக்கடவது, யாதுபோகும்-எதுபோகத்தக்கதோ, அதுபோக - அதுபோகக்கடவது, பாவமிகும்-பாவமிகுந்த, இவ்வஞ்ஞானப்பகைவனுல் - இந்தவஞ்ஞானமென்னுஞ் சத்துருவினுல், விவேகமெனும் - விவேகமென்கின்ற, ஏவமில்லா - வருத்தமற்ற, பொருளெல்லாமிழந்தேன் - வஸ்துக்களனைத்தையு நீங்கினேன், உணர்வாலவைபெற்றேன் - ஞானத்தினுலந்த வஸ்துக்களைப்பெற்றேன்—எ-று.

**(இ-ள.) விருப்பமுற்ற போகங்களில் இராகத்துவேடமுமெனக்கில்லை. எதுவரத்தக்கதுவோ அதுவரக்கடவது, எதுபோகத்தக்கதோ அதுபோகக்கடவது, பாவமிகுந்த இந்தவஞ்ஞானமென்னுஞ் சத்துருவினுல் விவேகமென்கின்ற வருத்தமற்ற வஸ்துக்களனைத்தையு நீங்கினேன். ஞானத்தினு லந்த வஸ்துக்களைப் பெற்றேன்—என்பதாம்.**

(இ-ம்.) பொருளெல்லா மென்பது, சமாதியின்கண் ணவநவமாய் விளங்காநின்ற வானந்த மெனக்கொள்க. (சஉ)

---

## பிரமஸ்வரூபமே தனது ஸ்வரூபமாமெனல்.

**துனையுமனத்தான்மனமறுத்து துயர்செய்யகங்காரந்தீர்ந்து**
**நினைவாநினைவுபோயசையா நிலைக்கேதனிக்கேவலநின்றேன்**
**வினையாநினைவற்றகங்கரம்போய் மேவுமனம்போய்த்தொழிலின்றி**
**தனையேநிகர்கேவலத்தொடர்ச்சி தத்துவத்தென்வடிவிருக்கும்.[த்**

(இ-ள்.) துனையுமனத்தால் - (சாத்திரங்களின்) வருந்திய விவேகமுள்ள மனதினுல், மனமறுத்து - (சம்சாரத்திலழுந்திய) மனதைக்கெடுத்து, துயர்செய்யகங்காரந்தீர்ந்து - துன்பஞ்செய்கின்ற வகம்பாவநீங்கி, நினைவானினைவுபோய் - அத்துவிதநியானத்தினுற் றுவிதபாவனைவிட்டு, அசையாநிலைக்கு - அசைவற்றநிலையில், தனிக்கேவலநின்றேன்-ஒப்பற்ற கேவலமாயிருந்தேன், வினையாநினைவற்று - வினையானபாவனையற்று, அகங்காரம்போய் - அகம்பாவநீங்கி, மேவுமனம்போய் - பொருந்தாநின்றமனம்போய், தொழிலின்றி - ஒருசெயலுமில்லாமல், தனையேநிகர் - தனக்குத்தானே சமானமான, கேவலத்தொடர்ச்சி - கேவலமாகிய, தத்துவத்து-பரிபூரணமான ஞானத்மாவில், என்வடிவிருக்கும் - எனது ஸ்வரூபமிருக்கும்—எ-று.

(இ-ள்.) சாத்திரங்களின் வருந்திய விவேகமுள்ள மனதினால் சம்சாரத்திலழுந்திய மனதைக்கெடுத்து துன்பஞ்செய்கின்ற வகம்பாவநீங்கி அத்துவித தியானத்தினாற் றுவிதபாவனைவிட்டு அசைவற்ற நிலையில் ஒப்பற்ற கேவலமாயிருந்தேன். வினையான பாவனையற்று அகம்பாவநீங்கி பொருந்தாநின்ற மனம்போய் ஒரு செயலுமில்லாமல் தனக்குத்தானே சமானமான கேவலமாகியபரிபூரணமான ஞானாத்மாவில் எனதுஸ்வரூபமிருக்கும்—என்பதாம்.

## அகம்பாவ நீங்கி யைக்கிய மானேமெனல்.

காதலென்னுங்கட்டறுத்துக் காயமென்னுங்கூடகன்று
சாதன்மேவுமகங்கரமாந் தனிப்புள்ளெங்கேபறந்துளதோ
யேதமறுநீநானுநீயென்னு மொருமையிருமையதா
யோதும்விதியான்மீண்டொன்றி யுயர்நீநானுனீயானேம்.

(இ-ள்.) காதலென்னுங்கட்டறுத்து - ஆசையென்கின்ற பந்தத்தைக் கெடுத்து, காயமென்னுங்கூடகன்று-சரீரமென்னுங்கூண்டைநீங்கி, சாதனமேவுமகங்கரமாம் - இறப்பையடைகின்ற வகம்பாவமென்னும், தனிப்புள் - தனித்தபக்ஷியானது, எங்கே பறந்துளதோ - எங்கே பறந்துபோயிற்றோ, எதமறுநீநான் - குற்றமற்ற நீயே நானாகும், நானீயென்னும் - நானே நீயாகுமென்கின்ற, ஒருமையிருமையதாய் - ஒன்றிரண்டாக, ஓதும் விதியான் மீண்டொன்றி - கூறும் நியதியினாற்றிரும்பவுமொன்றாய், உயர் நீநான் - மேலான நீயே நானாகவும், நானீ - நானே நீயாகவும், ஆனேம்-அயிக்கியமானோம்—எ-று.

(இ-ள்.) ஆசை யென்கின்ற பந்தத்தைக் கெடுத்து சரீரமென்னுங் கூண்டைநீங்கி இறப்பையடைகின்ற வகம்பாவமென்னும் தனித்தபக்ஷியானது எங்கே பறந்துபோயிற்றோ! குற்றமற்ற நீயேநானாகும் நானேநீயாகுமென்கின்ற ஒன்றிரண்டாகக்கூறும் நியதியினாற்றிரும்பவுமொன்றாய் மேலான நீயேநானாகவும் நானே நீயாகவும் அயிக்கியமானோம்—என்பதாம். (௪௪)

## ஆத்மாவை வாழ்த்துதல்.

ஒழிவி லுலகின்சீரெல்லா முண்டாயிருந்துநீயிலையேல்
விழியிலவர்க்குப்பேரெழில்கூர் மின்னாரைப்போல்விளங்காதால்
வழுவிறேவேசயசாந்தி மன்னுமிடமேசயவேத
முழுதுக்கயலேசயவேத முளைத்தவிடமேசயவென்ன.

(இ-ள்.) ஒழிவிலுலகின் சீவரெல்லாம் - நீங்காதசகத்தின் செல்வங்களனைத்தும், உண்டாயிருந்தும் - உடையதாயிருந்தும், நீயிலையேல்-நீயில்லாமற்போனால், விழியிலவர்க்கு - கண்ணில்லாதவர்களுக்கு, பேரெழில்கூர் - பெரிதானவழகுமிகுந்த, மின்னாரைப்போல் ஸ்திரீகளைப்போல, விளங்காது - ப்ரகாசிக்கமாட்டாது, வழுவிறேவேசய - நாசமில்லாததெய்வமேசய, சாந்திமன்னுமிடமேசய-உபசாந்தம்பொருந்துமிடமேசய, வேதமுழுதுக்கயலேசய - வேதங்களனைத்திற்கு மதீதமானதேசய, வேதமுளைத்த - வேதங்களுண்டான, இடமே சயவென்று - ஸ்தானமே செயவென்று—எ-று.

**(இ-னா.) நீங்காத சகத்தின்செல்வங்களனைத்தும் உடையதாயிருந்தும் நீயில்லாமற்போனால் கண்ணில்லாதவர்களுக்கும் பெரிதானவழகுமிகுந்த ஸ்திரீகளைப்போல ப்ரகாசிக்கமாட்டாது. நாசமில்லாத தெய்வமேசய, உபசாந்தம் பொருந்துமிடமேசய, வேதங்களனைத்திற்கு மதீதமானதேசய, வேதங்களுண்டான ஸ்தானமே சயவென்று—என்பதாம்.**

(இ-கசு-க-ம்.) விசாரத்திலுதித்த ஸ்வானுபூதியை மனனஞ்செய்ததை நிதித்தியிற் காட்சிப்பட்டுத் துதித்ததென்பதாம். (சரு)

## சமாதியடைதல்.

**பிறக்குமுதலேசயவென்றும் பிறவாமுதலேசயநாளு
மிறக்குமுதலேயவென்று மிறவாமுதலேசயவென்று
சிறக்குமினத்தாற்சிந்தித்துச் செம்பொற்பெயரோன்றிருமதலைப்
பறக்கும்விகற்பமில்லாத பரமசமாதிச்சுகமுற்றான்.**

(இ-ள்.) பிறக்குமுதலேசய - உண்டாகுங்காரணமேசய, என்றும் பிறவாமுதலேசய - எப்பொழுது முண்டாகாத காரணமேசய, நாளுமிறக்குமுதலேசய - எந்நாளுமிறக்கின்றகாரணமேசய, என்று மிறவாமுதலேசய-எப்போது மிறவாதகாரணமேசய, என்று - (இப்படி) யென்று, சிறக்குமனத்தாற் சிந்தித்து - சிறக்கின்ற மனதினாற்றியானித்து, செம்பொற்பெயரோன் றிருமதலை-இரணியனதழகியபுத்திரன், பறக்கும்விகற்பமில்லாத பரமசமாதிச் சுகமுற்றான் - பரவிய பேதமற்ற மேலான நிருவிகற்பசமாதியினாநந்தத்தை யடைந்தான்—எ-று.

**(இ-னா.) உண்டாகுங் காரணமேசய, எப்பொழுதுமுண்டாகாதகாரணமேசய, எந்நாளுமிறக்கின்ற காரணமேசய, எப்பொழுது மிறவாத காரணமேசய, இப்படியென்று சிறக்கின்ற மனதினாற்றியானித்து இரணியனதழகிய புத்திரன் பரவிய பேதமற்ற மேலான நிருவிகற்ப சமாதியினாநந்தத்தை யடைந்தான் எ-ம். ()**

### சமாதியனுபவத்தைக் காண்டல்.

*நிருவிகற்பசமாதியிலே நிகழ்சித்திரம்போனிலைபெற்று*
*வருடமையாயிரஞ்செல்ல மாறுவொருபார்வையினிற்ப*
*வருணமணிசூழ்பாதலத்தி லரசிலாமலசுரரெலாங்*
*கருடன்முதற்புள்ளினங்கவறக் கலங்குகுளமீனினமொத்தார்.*

(இ-ள்.) நிருவிகற்பசமாதியில் - நிருவிகற்பமானசமாதியில், நிகழ்சித்திரம்போல் - பிரகாசிக்கின்ற சித்திரத்தைப்போல, நிலைபெற்று - திரமடைந்து, வருடமையாயிரஞ்செல்ல - ஐயாயிரவருடங்கழிய, மாறுவொருபார்வையினிற்ப - மாறுதவொரேதிருஷ்டியிலிருக்க, அருணமணிசூழ் - மாணிக்கங்கள் சூழ்ந்திருக்கின்ற, பாதலத்தில் - பாதாளலோகத்தில், அரசில்லாமல் - வேந்தனில்லாமல், அசுரரெல்லாம் - அவுணர்களனைவரும், கருடன்முதல் - கலுழன்முதலான, புள்ளினங்கவர-பரவைக்கூட்டங்கள் கிரிகிக்க, கலங்குகுளமீனினமொத்தார் - கலங்காநின்ற தடாகத்திலுள்ள மஙஷங்களின் கூட்டத்துக்குச் சமானமானார்—எ-று.

(இ-ஊ.) நிருவிகற்பமானசமாதியில் ப்ரகாசிக்கின்ற சித்திரத்தைப்போலதிரமடைந்து ஐயாயிரவருடங்கழிய மாறுதவொரே திருஷ்டியி லிருக்க மாணிக்கங்கள் சூழ்ந்திருக்கின்ற பாதாளலோகத்தில் வேந்தனில்லாமல் அவுணர்களனைவரும் கலுழன்முதலான பரவைக்கூட்டங்கள் கிரிகிக்க கலங்காநின்றதடாகத்திலுள்ள மஙஷங்களின் கூட்டத்துக்குச் சமானமானார்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) ஸ்வானுபூதி மாத்திரமாய் விளங்கினு ரென்பதாம். ()

---

### திருமால் சகநீதியை யாலோசித்தல்.

*ஆவதாயகாலத்தி லனைத்தாமுலகினெறியனைத்துங்*
*காவல்புரியுந்திருநெடுமால்கடல்வாய் விழித்துக்கண்வளர்வான்*
*றாவல்வருடக்கார்நாளின் றுயிலைத்தவிர்ந்துவொருகாலைச்*
*சேவல்கூருந்திருவுளத்திற் செகத்தினெறியைச்சிந்தித்தான்.*

(இ-ள்.) ஆவதாயகாலத்தில்-இப்படியானகாலத்தில், அனைத்தாமுலகின் - சகலமாகியசகங்களினது, நெறியனைத்து - நீதிகளியாவையும், காவல்புரியும் - இரட்சிக்கின்ற, திருநெடுமால் - ஸ்ரீவிஷ்ணுவானவர், கடல்வாய் - திருப்பாற்கடலில், விழித்துக்கண்வளர்வான் - அறிதுயிற்செய்து, தூவல் வருடங்கார்நாளின் - துளிக்கின்ற மழையையுடையகார்காலத்திற் செய்யும், துயிலைத்தவிர்ந்து - நித்திரையைநீங்கி, ஒருகாலை - ஒருக்கால், சேவல்கூருந் திருவுளத்தில் - இரட்சிப்புள்ள திருவுள்ளத்தில், செகத்தினெறியை - உலகத்தினடக்கையை, சிந்தித்தான்-ஆலோசனைசெய்தான்.

(இ-ரை.) இப்படியான காலத்தில் சகலமாகிய சகங்களினது நீதிகளியாவையும் இரட்சிக்கின்ற ஸ்ரீ விஷ்ணுவானவர் திருப்பாற் கடலில் அறிதுயிற்செய்து துளிர்க்கின்ற மழையையுடைய கார் காலத்திற்செய்யும் நித்திரையை நீங்கி ஒருக்கால் இரட்சிப்புள்ள திருவுள்ளத்தில் உலகத்தினடக்கையை ஆலோசனை செய்தான். ()

பேதமில்லாச்சாந்திபதம் பிரகலாதன்பெற்றிருப்ப
வேதன்சிருஷ்டியழிந்துளவால் வெவ்வாளசுரரிலாமையினு
லேதவசுரரில்லையெனி லிகலற்றிமையோரெல்லோரும்
போதவுபசாந்தியராகிப் பொருவில்வீடுபொருந்துவரால்.

(இ-ள்.) பேதமில்லாத - வேற்றுமையில்லாத, சாந்திபதம் - உபசாந் தபதத்தை, பிரகலாதன்பெற்றிருப்ப - பிரகலாதனடைந்திருக்க, வேதன் சிருஷ்டி - பிரமதேவன் சிருஷ்டியானது, அழிந்துள - அழிவுற்றன, வெ வ்வாளசுரர் - கொடிய வாளையுடைய நிசாசுரர்கள், இலாமையினுல் - இல் லாததினுல், ஏதவசுரரில்லையென-குற்றமுள்ள தானவர்களில்லையென்று, இகலிற்றிமையோரெல்லோரும் - போரற்று தேவர்களனைவரும், போதவு பசாந்தியராகி - மிகவு முபசமமடைந்து, பொருவில் வீடுபொருந்துவர் - ஒப்பற்ற மோக்ஷமடைவார்கள்—எ-று.

(இ-ரை.) வேற்றுமையில்லாத உபசாந்தபதத்தைபிரகலாதன டைந்திருக்க பிரமதேவன் சிருஷ்டியானது அழிவுற்றன கொடிய வாளையுடைய நிசாசுரர்கள் இல்லாததினுல் குற்றமுள்ள தானவர் களில்லையென்று போரற்று தேவர்க ளனைவரும் மிகவு முபசம மடைந்து ஒப்பற்ற மோக்ஷமடைவார்கள்—என்பதாம். (சகூ)

தேவருபசாந்தியையடையிற் செந்தீவேள்விதவமெல்லாம்
போவதாகிப்பயனெல்லாம் பொருந்தாதெவையும் பொன்றிடுமா
லோவலுற்றகிரியையெலா மொழிந்தாற்பூமியொடுங்கிடுமாற்
கேவலத்திற்புவியொடுங்கிற் கிளருஞ்சிருட்டியற்றிடுமால்.

(இ-ள்.) தேவருபசாந்தியை யடையில்-அமரர்களுபசாந்தத்தையடை ந்தால், செந்தீவேள்வி - (பூமியிற்)சிவந்ததீயை (முன்னிட்டுச்செய்கின்ற) யாகங்களும், தவமெல்லாம் - தவங்களனைத்தும், போவதாகி-கெடுவதாய், பயனெல்லாம் - ப்ரயோசனங்களனைத்தும், பொருந்ாது-பொருந்தாமல்' எவையும்பொன்றிடும் - எல்லாநசிக்கும், ஓவலுற்ற கிரியையெலாம் - ப்ர யாசமாகச் செய்யப்பட்ட யாகாதிகிரியைகளனைத்தும், ஒழிந்தால் - நீங்கி னுல், பூமியொடுங்கிடும் - சகமானதடங்கிடும், கேவலத்திற்புவியொடுங் கில் - தனிமையிற் சகமடங்கினுல், கிளருஞ்சிருட்டியற்றிடும் - விளங்கு கின்ற சிருஷ்டியழிந்திடும்—எ-று.

(இ-ா.) அமரர்களுபசாந்தத்தை யடைந்தால் பூமியிற்சிவந்தீயை முன்னிட்டுச்செய்கின்றபாகங்களும் தவங்களனைத்தும் கெடுவதாய்ப் பரயோசனங்க ளனைத்தும் பொருந்தாமல் எல்லாம் நசிக்கும். ப்ரயாசமாகச் செய்யப்பட்ட யாகாதிகிரியைக ளனைத்தும் நீங்கினால் சகமான தடங்கிடும். தனிமையிற் சகமடங்கினால் விளங்குகின்ற சிருஷ்டி யழிந்திடும்—என்பதாம். (௩௦)

இன்னசிருட்டிசூனியமா யிரவிமதியோடெலாமிறக்கிற்
பின்னர்யாமும்வடிவொழித்துப் பேதமில்லாப்பதமடைவோஞ்
சொன்னகாலத்தலாதிடையே தொல்லைஞாலமெலாமிறக்கி
லுன்னநலன்காண்கிலமிதனுக் குறுதியுபாயமுணர்ந்தனமால்.

(இ-ள்.) இன்னசிருட்டிசூனியமாய் - இப்படிப்பட்டசிருஷ்டியில்லாமல், இரவிமதியோடு - சூரியசந்திரர்களோடும், எல்லாமிறக்கின் - யாவுமிறந்தால் பின்னர் - பின்பு, இயாமும்வடிவொழித்து - நாமு(மிந்த)வுருவத்தைவிட்டு, பேதமில்லாப் பதமடைவோம் - பேதமற்ற (தற்) பதத்தையடைவோம், சொன்னகாலத்தலாது - நியமித்தகாலத்தைவிட்டு, இடை - மத்தியில், தொல்லை ஞாலமெலாமிறக்கில் - (பழமையான) சகங்களனைத்து நாசமானால், உன்ன - நினைக்க, நலங்காண்கிலம் - நன்மையைக்கண்டிலம், இதனுக்குறுதியுபாயம் - இதற்குத் திரமான வுபாயத்தை, உணர்ந்தனம் - அறிந்தனம்—எ-று.

(இ-ா.) இப்படிப்பட்ட சிருஷ்டி யில்லாமல் சூரிய சந்திரர்களோடும் யாவு மிறந்தால் பின்பு நாமுமிந்த வுருவத்தைவிட்டுபேத மற்றதற்பதத்தையடைவோம். நியமித்தகாலத்தைவிட்டு மத்தியில் பழமையான சகங்க ளனைத்து நாசமானால்நினைக்க நன்மையைக்கண்டிலம். இதற்குத் திரமான வுபாயத்தை அறிந்தனம்—எ-ம்.

இதுவுமது - வேறு.

தானவருய்கவுய்ந்தாற் சமருண்டாஞ்சமருமுண்டேல்
வானவருண்டாமுண்டேன் மகந்தவமுண்டாமுண்டே
லானதோர்சிருட்டியுண்டா மன்றெனிற்சிருட்டிமாளு
மூனமிலசுரர்கோனிவ் வுடலொடுமூழிவாழ்க.

(இ-ள்.) தானவருய்க - அசுரர்கள் வாழக்கடவது, உய்ந்தால் - வாழ்ந்தால், சமருண்டாம் - யுத்தமுண்டாகும், சமருமுண்டேல் - யுத்தமுமுண்டானால், வானவருண்டாம் - தேவர்களுண்டாவார்கள், உண்டேல் - (தேவர்க) ளுண்டானால், மகந்தவமுண்டாம் - யாகமுந் தவசுமுண்டாகும், உண்டேல் - (அவைக) ளுண்டானால், ஆனதோர் சிருட்டியுண்டாம்-ஆகிய வொப்பற்ற சிருட்டியுண்டாகும், அன்றெனில் - (இவைக) ளெல்லாவிடின்,

சிருட்டிமாளும் - சிருட்டியுங்கெடு (மாதலால்), ஊனமிலசுரர்கோன் - குறைவற்ற வசுரேந்திரனுகிய (பிரகலாதன்), இவ்வுடலொடும் - இச்சரீரத்தோடும், ஊழிவாழ்க - ஊழிகாலம் வாழக்கடவன்—எ-று.

(இ-ரை.) அசுரர்கள்வாழக்கடவது, வாழ்ந்தால் யுத்தமுமுண்டாகும், யுத்தமுண்டானுல் தேவர்களுண்டாவார், தேவர்களுண்டானுல் யாகமுந்தவசுமுண்டாகும், அவைகளுண்டானுல் ஆகியவொப்பற்ற சிருஷ்டியுண்டாகும், இவைகளெல்லாவிடின் சிருஷ்டியுங் கெடுமாதலால் குறைவற்ற வசுரேந்திரனுகியபிரகலாதன்இச்சரீரத்தோடும் ஊழிக்காலம் வாழக்கடவன்—என்பதாம். (ருஉ)

பரமமாமீசனுலே பாலிக்குங்கடவணீதி
திரமுறவிவ்வாறென்று சிந்தித்தசெங்கண்மாய
னரவணைப்பாயனீங்கி யசுரர்கோனருகுசேர்ந்தான்
பிரமலோகத்தையொக்கும் பெரியபாதலநகர்க்கே.

(இ-ள்.) பரமமாமீசனுல் - பரமேஸ்வரனுல், பாலிக்குங்கடவுணீதி - இரட்சிக்கின்ற தெய்வநீதியானது, திரமுற - ஸ்திரம் பொருந்தும்படி, இவ்வாறென்று - இந்தப்ரகாரஞ்செய்யவேண்டுமென்று, சிந்தித்த செங்கண்மாயன் - சிந்தனைசெய்த சிவந்த கண்களையுடைய விஷ்ணுவானவர், அரவணைப்பாயனீங்கி - சற்பசயனத்தைவிட்டு, பிரமலோகத்தை யொக்கும் பெரிய பாதலநகர்க்கு - சத்தியலோகத்தையொத்த பெரிதானபாதாளலோகத்தில், அசுரர்கோனருகு சேர்ந்தான் - அசுரர்க்கரசனுன (பிரகலாதனது) சமீபத்தி லடைந்தார்—எ-று.

(இ-ரை.) பரமேஸ்வரனுல் இரட்சிக்கின்றதெய்வநீதியானது ஸ்திரம்பொருந்தும்படி இந்தப்ரகாரஞ் செய்யவேண்டுமென்று சிந்தனைச்செய்த சிவந்தகண்களையுடைய விஷ்ணுவானவர் சற்பசயனத்தைவிட்டு சத்தியலோகத்தையொத்த பெரிதானபாதாளலோகத்தில் அசுரர்க்கரசனுன பிரகலாதனது சமீபத்தி லடைந்தார்.

(இ-சூ-க-ம்) சீவன்முத்தனுன பிரகலாதன் விவேகமுத்தியை யடைந்தாற் பரமேஸ்வரநியதி தவறிப்போமென்றுலோசித்தவ னெப்போதுஞ் சீவன் முத்தனு யரசிலிருக்கும்படி மனதிற் சிந்தித்தவனிருக்குமிடத்துக்கெழுந்தருளினு ரென்பதாம். (ருந)

சமாதியினின்றுஞ் சாக்ஷாத்காரத்துக்த வெளிப்படுத்தல் - வேறு.

கருடவாகனத்துறைபவன்கவரிசேர்செங்கைத்
திருமடந்தைவாழ்வலத்தினனம்படைசெறியு

*மிருபுறத்தினன்றேவருமுனிவருமிறைஞ்ச*
*வருளுநாயகவசுரனையுணர்தியென்றருளி.*

(இ-ள்.) கருடவாகனத்துறைபவன்-கருடவாகனத்தில் வசிப்பவனும், கவரிசேர் - வெண்சாமரஞ் சேர்ந்திருக்கின்ற, செங்கைத்திருமடந்தை - சிவந்த கரங்களையுடைய விலக்குமி, வாழ்வலத்தினன் - வாழ்கின்ற வலது பக்கத்தையுடையவனும், ஐம்படைசெறியும்-பஞ்சாயுதங்கணிறைந்த, இருபுறத்தினன் - இருபுறத்தை யுடையவனுமாகிய, தேவருமுனிவருமிறைஞ்ச - தேவர்களு முனிவர்களும் வணங்க, அருளுநாயகன் - அருள்செய்யுந்தலைவனனவிஷ்ணு, அசுரனை யுணர்தியென்றருளி - பிரகலாதனை யறிவாயென் றனுக்கிரகித்து—எ-று.

**(இ-ரா.) கருடவாகனத்தில்வசிப்பவனும், வெண்சாமரஞ்சேர்ந்திருக்கின்ற சிவந்தகரங்களுடைய விலக்குமி வாழ்கின்ற வலது பக்கத்தை யுடையவனும், பஞ்சாயுதங்கணிறைந்த இருபுறத்தை யுடையவனுமாகிய தேவர்களு முனிவர்களும்வணங்க, அருள்செய்யுந் தலைவனன விஷ்ணு பிரகலாதனை யறிவாயென்றனுக்கிரகித்து—என்பதாம்.** (௫௪)

## சமாதியினின்றும் வெளிப்படல்.

**வலம்புரித்தொனிகிளப்பினன்மாதிரம்பிளப்ப**
**நிலம்பிளப்புறநெடுந்திசைபிளப்புறநிமிர்ந்த**
**வலம்புமோதையான்மெல்லெனமெல்லெனவறிந்தா**
**னலம்பயப்புறுதற்பதத்தோன்றியநல்லோன்.**

(இ-ள்.) வலம்புரித்தொனி கிளப்பினன்-பாஞ்சசன்னியத்தொனியை யெழுப்பினன், மாதிரம்பிளப்ப - ஆகாயம்பிளக்கும்படியாகவும், நிலம்பிளப்புற - பூமி பிளக்கும்படியாகவும், நெடுந்திசை பிளப்புற - நீண்ட திக்குகள் பிளக்கும்படியாகவும், நிமிர்ந்த - ஓங்கிய, அலம்புமோதையால் - அதிராநின்ற பேரொலியினல், நலம்பயப்புறு - நன்மையை யுண்டாக்குகின்ற, தற்பதத்தோன்றிய - தற்பதத்திற்கலந்த, நல்லோன்- நன்மையையுடைய பிரகலாதன், மெல்லென மெல்லென - மெல்ல மெல்ல, அறிந்தான்-அறிவுற்றான்—எ-று.

**(இ-ரா.) பாஞ்சசன்னியத் தொனியை யெழுப்பினன். ஆகாயம் பிளக்கும்படியாகவும், பூமி பிளக்கும்படியாகவும், நீண்டதிக்குகள் பிளக்கும்படியாகம், ஓங்கிய அதிராநின்ற பேரொலியினல் நன்மையையுண்டாக்குகின்ற தற்பதத்திற்கலந்த நன்மையையுடைய பிரகலாதன் மெல்ல மெல்ல அறிவுற்றான்—என்பதாம்.** ()

பிராணசத்திதான்பிரமரந்திரநின்றுபெயர்ந்து
புராதனப்படிநாடிகளாலெங்கும்பொருந்தி
விராவலுற்றனவொன்பதுதுவாரத்துமேவப்
பராபரத்தினையறிந்துளோனறிவுசம்பவித்த.

(இ-ள்.) பிராணசத்திதான் - சைதன்ய சத்தியானது, பிரமரந்திரநின்று - பிரமரந்திரத்தினின்றும், பெயர்ந்து - பிரிந்து, புராதனப்படி - முன்னுள்ள ப்ரகாரம், நாடிகளால் - நாடிகளினால், எங்கும்பொருந்தி - எவ்விடத்து மமைந்து, விராவலுற்றன - கலத்தலையுற்றனவாய், ஒன்பது துவாரத்துமேவ - நவத்துவாரங்களினும்பொருந்த, பராபரத்தினை யறிந்துளோன் - பராபரத்தையறிந்த பிரகலாதனது, அறிவுசம்பவித்த - அறிவுண்டாயிற்று—எ-று.

(இ-ா.) சைதன்ய சத்தியானது பிரம ரந்திரத்தினின்றும் பிரிந்து முன்னுள்ள ப்ரகாரம் நாடிகளினால் எவ்விடத்துமமைந்து கலத்தலையுற்றனவாய் நவத்துவாரங்களினும் பொருந்த பராபரத்தை யறிந்த பிரகலாதனது அறிவுண்டாயிற்று—என்பதாம். ()

அறிவுதோன்றியுட்பிராணதற்பணநிழலாகி
யறிவுதாம்பொருளைநோக்குற்றதன்னதாமறிவு
பிறிவதாமறிபொருளிலேமனத்தன்மைபெற்ற
பிறிவிலாமுகந்தற்பணத்திருமைபெற்றதுபோல்.

(இ-ள்.) அறிவுதோன்றி - அறிவுண்டாய், உன்பிராணன் - உள்ளிற்பிராணனென்றும், தற்பணநிழலாகி - கண்ணாடியின்சாயையாகப்பிரதிபலித்து, அறிவதாம்பொருள் - விடயவஸ்துக்களை, நோக்குற்ற - பார்த்தது, அன்னதாமறிவு - அவ்வறிவானது, பிறிவதாமறிபொருளில் - வேறான விடயத்தில், பிரிவிலாமுகம் - பிரிவற்றமுகமானது, தற்பணத்து - கண்ணாடியினால், இருமை பெற்றதுபோல் - இரண்டாதலை யடைந்ததுபோல, மனத்தன்மைபெற்ற - மனக்குணத்தை யடைந்தது—எ-று.

(இ-ா.) அறிவுண்டாய் உள்ளிற்பிராணனென்னும் கண்ணாடியின் சாயையாகப் பிரதிபலித்துவிடய வஸ்துக்களைப்பார்த்தது. அவ்வறிவானது வேறானவிடயத்தில் பிரிவற்ற முகமானது கண்ணாடியினால் இரண்டாதலை யடைந்ததுபோல மனக்குணத்தை யடைந்தது—என்பதாம். (ருஎ)

அற்பமுள்ளமங்குரித்தலுமரும்பவிழ்வுற்ற
வுற்பலங்கள்போன்மெல்லெனமலர்வுற்றவொண்கண்
ணிற்பதாய்நரம்புறுபொறியறிவுகணிறைய
நற்பிராணனும்பானனுமெங்கணுநடந்த.

(இ-ள்.) அற்பமுள்ள மங்குரித்தலும் - அற்பமாகமனது முளைத்தமாத்திரத்தில், அரும்பவிழ்வுற்ற - முகைவிரிந்த, உற்பலங்கள்போல்-நீலோற்பலத்தைப்போல ஒண்கண் - அழகிய கண்கள் மெல்லெலன மலர்வுற்ற - மெள்ளவிழித்தன, நிற்பதாய் - நிற்பதாகியிருக்கின்ற, நரம்பு - நரம்புகளிலும், உறுபொறி - பொருந்தியவிந்திரியங்களிலும், அறிவுகணிறைய-உணர்வுகணிறைய, நற்பிராணனு மபானனு மெங்கணுநடந்த - நல்லபிராணவாயுவு மபானவாயுவு மெங்கு நடந்தன—எ-று.

**(இ-வா.) அற்பமாக மனது முளைத்த மாத்திரத்தில் முகைவிரிந்த நீலோற்பலத்தைப்போல அழகிய கண்கள் மெள்ளவிழித்தன. நிற்பதாகி யிருக்கின்ற நரம்புகளிலும் பொருந்திய விந்திரியங்களிலும் உணர்வுகணிறைய நல்ல பிராணவாயுவு மபானவாயுவு மெங்கு நடந்தன—என்பதாம்.** (ருஅ)

> **அமைவில்காற்றுற்ற பதுமம்போலசைவினையடைந்தா**
> **னிமைகளுக்கிடை யளவிலேமனந்தடித்தெழுந்த**
> **சமைவுறத்தெரி கண்மனம்பிராணன்மெய்தயங்கக்**
> **கமையின்மிக்கவன் விளங்கினன்கருணைமால்காண.**

(இ-ள்.) அமைவில்காற்றுற்ற - அமைதியான தென்றற்காற்றி லகப்பட்ட, பதுமம்போல் - தாமரைப்பூவைப்போல, அசைவினையடைந்தான்-(பிரகலாத) னசைந்தான், இமைகளுக்கிடையளவில் - இமைநேரத்தினுள் மனந்தடித்தெழுந்த - மனதுதடித்துண்டாயிற்று, சமைவுறத்தெரி - உண்டாய்த்தெரிகின்ற, கண் - கண்ணும், மனம் - மனமும், பிராணன் - பிராணனும், மெய் - சரீரமும், தயங்க - ப்ரகாசிக்க, கமையின்மிக்கவன் - பொருமையின் மிகுந்த பிரகலாதன், கருணைமால்காண - அருள்வடிவமுள்ள விஷ்ணுகாணும்படி, விளங்கினன் - ப்ரகாசித்தான்—எ-று.

**(இ-வா.) அமைதியான தென்றற்காற்றிலகப்பட்ட தாமரைப்பூவைப்போல பிரகலாத னசைந்தான். இமைநேரத்தினுள் மனது தடித்துண்டாயிற்று. உண்டாய்த்தெரிகின்ற கண்ணும், மனமும், பிராணனும், சரீரமும் ப்ரகாசிக்க பொருமையின் மிகுந்த பிரகலாதன் அருள்வடிவமுள்ள விஷ்ணு காணும்படி ப்ரகாசித்தான்—என்பதாம்.** (ருக)

> பரந்துநாட்டங்களேனுக்கினமனமும்பருமை
> நிரந்தரித்தனவவ்வயினவன்றனைநெடுமால்
> சுரந்தவன்புடனேனுக்கியேயருள்செய்வான்றாயோய்
> புரந்தரன்புகழுனதுசீர்நோக்குவாய்புரிந்து.

(இ-ள்.) பரந்துநாட்டங்களுேக்கின-விகசிதமாய் கண்கள்பார்த்தன, மனனமும் - மனதும், பருமை நிரந்தரித்தன - பூரணமாக நிறைந்தது, அவ்வயின் - அப்பொழுது, அவன்றனைநெடுமால் - அப்பிரகலாதனைவிஷ்ணுவானவர், சுரந்தவன்புடநோக்கி - மிகுந்தகிருபையுடன்பார்த்து, அருள்செய்வான் - அனுக்கிரகஞ்செய்வார், தூயோய் - பரிசுத்தமான பிரகலாதனே, புரந்தரன்புகழ் - தேவேந்திரன்றுதிக்கின்ற, உனதுசீர் - உனதுசெல்வத்தை, புரிந்துநோக்குவாய் - விரும்பிப்பார்ப்பாய்—எ-று.

(இ-ளை.) விகசிதமாய் கண்கள்பார்த்தன. மனதும் பூரணமாக நிறைந்தது. அப்பொழுது அப்பிரகலாதனை விஷ்ணுவானவர் மிகுந்த கிருபையுடன் பார்த்து அனுக்கிரகஞ்செய்வார். பரிசுத்தமான பிரகலாதனே! தேவேந்திரன் றுதிக்கின்ற உனது செல்வத்தை விரும்பிப் பார்ப்பாய்—என்பதாம்.

(இ-சூ-கி-ம்.) சமாதியினின்றுந் திரும்பினவனைச் சகசத்திற் சர்வம் பிரமமயமாய் விளங்காநின்ற நிரதிசயாநந்தமான வுனது செல்வத்தைப் பாரென்றனுக்கிரகஞ் செய்தாரென்பதாம். (சுo)

## சகநிஷ்டையை யனுக்கிரகித்தல்.

**உடலைநோக்குதி யகாலத்திலுன்னுடையுடலை**
**விடநினைப்பதென் பற்றுதல்விடுதல்சங்கற்பம்**
**படர்கிலாவுனக் கபாவமும்பாவமுமுடலிற்**
**றொடரிற்சேதமென் னெழுதியாலிருத்தியாற்றாயோய்.**

(இ-ள்.) உடலைநோக்குதி - சரீரத்தைப்பார்ப்பாய், அகாலத்தில்-காலமல்லாதகாலத்தில், உன்னுடையுடலை-உனதுசரீரத்தை, விடநினைப்பதென் - விட்டுவிட நினைப்பதென்ன, பற்றுதல் - பற்றுதலும், விடுதல்-விடுதலுமாகிய, சங்கற்பம் - சங்கற்பமானது, படர்கிலாவுனக்கு - வளராதவுனக்கு, அபாவமும் - அபாவமும், பாவமும் - பாவமும், உடலிற்றொடரில் - சரீரத்திற்றொடர்ந்தால், சேதமென் - குறைவென்ன, எழுதி-(சாமாதியைவிட்) டெழுந்திருப்பாய், தூயோயிருத்தி - பரிசுத்தமானபிரகலாதனே (சீவன்முத்திபதத்தி) லிருப்பாய்—எ-று.

(இ-ளை.) சரீரத்தைப்பார்ப்பாய், காலமல்லாதகாலத்தில்உனது சரீரத்தை விட்டுவிட நினைப்பதென்ன? பற்றுதலும் விடுதலுமாகிய சங்கற்பமானது வளராதவுனக்கு அபாவமும், பாவமுஞ்சரீரத்திற்றொடர்ந்தால் குறைவென்ன? சமாதியை விட்டெழுந்திருப்பாய் பரிசுத்தமான பிரகலாதனே! சீவன்முத்தி பதத்திலிருப்பாய்—என்பதாம். (சுக)

### சீவன்முத்தனுக்கு மரணஞ் சிறப்பாமெனல்.

சீவன்முத்தனு நீயிந்தவுடலொடுஞ்செங்கோற்
காவலாளனாய்ச் சுமையறக்கற்பமட்டிருப்பாய்
பாவகன்சுடப் பன்னிருகதிர்சுடவுலகம்
யாவதுங்கெடா திருப்பநீயிறப்பதென்வாளா.

(இ-ள்.) சீவன்முத்தனும் - சீவன்முத்தனாகிய, நீயிந்த யுடலொடும் - நீயிந்தச் சரீரத்தோடும், செங்கோற் காவலாளனாய் - நீதியைக் காக்கின்றவனாய், சுமையற - (சம்சார) பாரமில்லாமல், கற்பமட்டிருப்பாய் - கற்பமளவுமிருக்கக்கடவாய், பாவகன்சுட - அக்கினியானதெரிக்க, பன்னிருகதிர்சுட - பன்னிரண்டுசூரியரெரிக்க, உலகமியாவதும் - சகமனைத்தும், கெடாதிருப்ப - கெடாமலிருக்க, வாளா - வீணாக, நீயிறப்பதென் - நீ மரணமடைவானேன்—எ-று.

**(இ-ளா.) சீவன்முத்தனாகிய நீயிந்தச்சரீரத்தோடும் நீதியைக்காக்கின்றவனாய் சம்சாரபாரமில்லாமல் கற்பமளவுமிருக்கக்கடவாய், அக்கினியானதெரிக்க, பன்னிரண்டு சூரியரெரிக்க, சகமனைத்தும் கெடாமலிருக்க வீணாக நீ மரண மடைவானேன்—எ-ம். ()**

### பெத்தனுக்கு மரணஞ் சிறப்பாமெனல்.

ஓங்குமாசையாம் பாசத்தாலுறப்பிணிப்புண்டு
வீங்குமுள்ளுணர் வதன்வழியோடியேமெலிந்து
தாங்குசெய்கையான் மனமிகச்சலிப்பவர்க்கன்றே
தீங்குமேவிய மரணந்தான்சிறப்பதுசகத்தில்.

(இ-ள்.) ஓங்குமாசையாம் - வளராநின்றவாசையாகிய, பாசத்தால் - கயற்றினால், உறப்பிணிப்புண்டு - பொருந்தக்கட்டுப்பட்டு, வீங்குமுள்ளுணர்வு - பருக்கின்றவந்தக்கரணமானது, அதன்வழியோடி - அப்பாசமார்க்கத்திற்சென்று மெலிந்து - இளைத்து, தாங்குசெய்கையால் - (சம்சாரத்தைச் சுமக்கின்ற தொழிலினால், மனம் - மனமானது, மிகச்சலிப்பவர்க்கன்றே-மிகவுஞ்சஞ்சலமானவர்களுக்கல்லவா, தீங்குமேவிய மரணந்தான்- தீமைபொருந்திய மரணமானது, சகத்தில் - உலகத்தின்கண், சிறப்பது - சிறந்திருப்பது—எ-று.

**(இ-ளா.) வளராநின்ற வாசையாகிய கயற்றினால்பொருந்தக் கட்டுப்பட்டு பருக்கின்ற வந்தக்கரணமானது அப்பாசமார்க்கத்திற் சென்று இளைத்து சம்சாரத்தைச்சுமக்கின்ற தொழிலினால் மனமானது மிகவுஞ் சஞ்சலமானவர்களுக் கல்லவா தீமைபொருந்திய மரணமானது உலகத்தின்கண் சிறந்திருப்பது—என்பதாம் (கூங)**

### சீவன்முத்தனதாயுளே சிறப்பாமெனல்.

அகங்கரத்தினை யகற்றியோர்பற்றின்றியனைத்துஞ்
சுகந்தருஞ்சம மானவராயுவேசுகமா
முகந்தவாசையுஞ் சினமுமற்றுட்குளிர்மதியாற்
செகங்களின்கரி யானவராயுவேசிறக்கும்.

(இ-ள்.) அகங்கரத்தினையகற்றி-அகம்பாவத்தைநீக்கி, ஓர்பற்றின்றி-ஓர்பற்றில்லாமல், அனைத்தும்-சகலமும், சுகந்தருஞ்சமமானவர்-சுகத்தைக்கொடுக்கின்ற சமத்துவமானவர்கள், ஆயுவேசுகமாம் - ஆயுளேசுகமாம், உகந்தவாசையும் - மிகுந்தராகமும், சினமுமற்று-துவேடமுமில்லாமல், உட்குளிர்மதியால் - உள்ளே குளிர்கின்ற வறிவினல், செகங்களின் கரியானவர் - உலகங்களுக்குச் சாட்சியானவர்களுடைய, ஆயுவேசிறக்கும்-ஆயுளேசிறப்பாம்—எ-று.

(இ-ள.) அகம்பாவத்தை நீக்கி ஓர் பற்றில்லாமல் சகலமும் சுகத்தைக்கொடுக்கின்ற சமத்துவமானவர்கள் ஆயுளேசுகமாம். மிகுந்தராகமும் துவேடமுமில்லாமல் உள்ளே குளிர்கின்ற வறிவினல் உலகங்களுக்குச் சாட்சியானவர்களுடையஆயுளேசிறப்பாம்.

### பட்டாபிடேகஞ் செய்துகொள்ளெனல்-வேறு.

பற்றுவான்பற்றுபொருளிரண்டும்பயில்பந்த
மற்றபோதுபசாந்திதோன்றிடுமதுநிலைமை
பெற்றபோதுவீடெனும்பெயரந்நிலைபெறுமால்
வெற்றிவீரசிங்காதனத்திருத்தியால்விளங்க.

(இ-ள்.) பற்றுவான் - பற்றுகின்றவனும், பற்றுபொருள் - பற்றுகின்றவிடயங்களுமாகிய, இரண்டும் - (இவ்)விரண்டும், பயில்பந்தம் - சொல்லுகின்றபந்தமாம், அற்றபோது-அதறுபட்டபோது, உபசாந்திதோன்றிடும்-உபசாந்தமுண்டாகும், அது நிலைமைபெற்றபோது - அவ்வுபசாந்தநிலையாக வடைந்தபோது, வீடெனும்பெயர் - மோக்ஷமென்னும்பெயராம், அந்நிலைபெறும்-அந்த நிலையை நீயடைந்தபடியால், வெற்றிவீரசிங்காதனத்து-வெற்றியுள்ள வீரசிங்காசனத்தினிடத்தில், விளங்க-ப்ரகாசிக்கும்படியாய், இருத்தி - இரு—எ-று.

(இ-ள.) பற்றுகின்றவனும், பற்றுகின்ற விடயங்களுமாகிய இவ்விரண்டும் சொல்லுகின்ற பந்தமாம். அதறுபட்டபோது உபசாந்தமுண்டாகும். அவ்வுபசாந்தநிலையாக வடைந்தபோது மோக்ஷமென்னும் பெயராம். அந்த நிலையை நீயடைந்தபடியால் வெற்றியுள்ள வீரசிங்காசனத்தினிடத்தில் ப்ரகாசிக்கும்படியாய் இரு.

## பட்டாபிடேகஞ் செய்யத்தொடங்கல்.

குரைசெய்சங்கின தோசையாற்குமுறுறவந்த
புரையில்வானவர் மங்கலப்பணிசெய்துபுகழ
விரைவின்றுனே மாமுடிமிலேச்சுவனுனே
யரசுசெய்கநீ யூழினளவெனவருளி.

(இ-ள்.) குரைசெய் - ஒலியைச்செய்கின்ற, சங்கினதோசையால்-சங்கத்தொனியினுல், குமுறுறவந்த புரையில்வானவர் - சத்திக்கவந்த குற்றமற்றதேவர்கள், மங்கலப்பணிசெய்துபுகழ - மங்கலத்தொழிலைச்செய்துதுதிக்க, விரைவின்று - சீக்கிரத்தி லிப்போது, நானே - யானே, உனே - உனக்கு, மாமுடிமிலேச்சுவன்-மகாமுடியைத்தரிப்பன், ஊழினளவென-கற்பகாலபரியந்தம், நீயரசுசெய்க-நீயரசாக்ஷிசெய்யக்கடவாயென்று, அருளி - அனுக்கிரகித்து—எ-று.

(இ-ா.) ஒலியைச்செய்கின்ற சங்கத்தொனியினுல் சத்திக்கவந்த குற்றமற்ற தேவர்கள் மங்கலத்தொழிலைச்செய்து துதிக்க. சீக்கிரத்திலிப்போது யானே உனக்கு மகாமுடியைத் தரிப்பன். கற்பகால பரியந்தம் நீயரசாக்ஷி செய்யக் கடவாயென்று அனுக்கிரகித்து—என்பதாம். (கூகூ)

## பட்டாபிடேகந் தரித்தல்.

மங்கலப்புனல் கொணர்கெனமஞ்சனமாட்டி
சங்குசக்கரந் தரித்தனகைகளாற்றுனே
புங்கவதித்திரள் போற்றிடப்பொன்முடிசூட்டி
யங்கணச்சுத னசுரர்கோனுக்கிவையறைந்தான்.

(இ-ள்.) மங்கலப்புனல் - மங்கலதீர்த்தங்களை, கொணர்கென - கொண்டுவருகவென்று(சொல்லி), மஞ்சனமாட்டி-அபிடேகஞ்செய்வித்து, சங்கு சக்கரம் - சங்குசக்கரத்தை, தரித்தன கைகளால் - தரித்திருக்கின்றகரங்களினுல், தானே - சுயமாக, புங்கவத்திரள்போற்றிட - தேவர்குழாங்கள் டோத்திரஞ்செய்ய, பொன்முடிசூட்டி - அழகிய (விரத்தின) கிரீடத்தைத்தரித்து, அங்கணச்சுதன் - அழகிய கண்களையுடைய விஷ்ணுவானவர், அசுரர்கோனுக்கு - அசுரேசனுன பிரகலாதனுக்கு, இவை யறைந்தான் - இவைகளைச்சொன்னுர்—எ-று.

(இ-ா.) மங்கலதீர்த்தங்களை கொண்டு வருகவென்றுசொல்லி அபிடேகஞ்செய்வித்து சங்குசக்கரத்தைத்தரித்திருக்கின்றகரங்களினுல் சுயமாக தேவர்குழாங்க டோத்திரஞ்செய்ய அழகிய

விரத்தின கிரீடத்தைத்தரித்து அழகிய கண்களையுடைய விஷ்ணுவானவர் அசுரேசனான பிரகலாதனுக்கு இவைகளைச்சொன்னார்.

எப்பொழுதுஞ் சீவன்முத்தனா யிருக்கும்படி யனுக்கிரகித்தல்.

தள்ளின்மேருவும் புவனமுமருக்கனுஞ்சசியு
முள்ளநாளெலா மச்சுசெய்துயர்கெனவருளி
கள்ளமாயையின் சிருட்டியொன்றொளித்தல்போற்கணத்தில்
வெள்ளவானவர் குழாத்தொடுமறைந்தனன்விண்டு.

(இ-ள்.) தள்ளின்மேருவும் - அசைத்தற்கரியமகாமேருவும், புவனம்-பூமியும், அருக்கனும் - சூரியனும், சசியும் - சந்திரனு (மாகிய விவர்கள்), உள்ளநாளெலாம் - உள்ளங்கால்களெல்லாம், அரசுசெய்து -அரசாக்ஷிசெய்து, உயர்கெனவருளி-உயர்வாகக்கடவாயென் றனுக்கிரகஞ்செய்து, கள்ளமாயையின் - பொய்யாகிய மாயையினது, சிருட்டியொன்று-ஒருசிருஷ்டியானது, ஒளித்தல்போல் - மறைதலைப்போல, கணத்தில்-க்ஷணநேரத்தில், வெள்ளவானவர் - மிகுந்ததேவர்கள், குழாத்தொடும்-கூட்டத்தோடும், விண்டுமறைந்தனன் - விஷ்ணுமறைந்தார்—எ-று.

(இ-ரை.) அசைத்தற்கரிய மகாமேருவும், பூமியும் சூரியனும் சந்திரனுமாகிய விவர்கள் உள்ளகாலங்களெல்லாம் அரசாக்ஷிசெய்து உயர்வாகக் கடவாயென் றனுக்கிரகஞ்செய்து பொய்யாகிய மாயையினது ஒரு சிருஷ்டியானது மறைதலைப்போல க்ஷணநேரத்தில் மிகுந்த தேவர்கள் கூட்டத்தோடும் விஷ்ணுமறைந்தார்.

(இ-அ-க-ம்.) நியதிப்படி யித்தேகத்தோடுஞ் சீவன்முத்தனாய்ச் சுகசாநந்தாம் புதியாகச் சுகித்திருக்கும்படி யனுக்கிரகித்தெழுந் தருளினாரென்பதாம். (சுஅ)

ஆத்மாவிற்கரைந்த மனமெங்ஙனம் வெளிப்பட்ட தெனின்.

என்னவோதிய வசிட்டனையிராகவனோக்கி
யன்னதானவர்க் கரசனாய்வீடுற்றவறிஞன்
றன்னதுள்ளமெய்ப் பரத்திலேதன்மயமான
பின்னர்மால்சங்கி னோசையாற்பிறந்ததெப்பரிசோ.

(இ-ள்.) என்னவோதிய வசிட்டனை - (இப்படி) யென்றுசொல்லிய வசிட்டமுனியை, இராகவனோக்கி-இராமன்பார்த்து, அன்னதானவர்க்கு-அப்படிப்பட்டவசுரர்களுக்கு, அரசனாய் - இராசாவாய், வீடுற்றவறிஞன் - மோக்ஷமடைந்தஞானவான், தன்னதுள்ளம் - அவனதுமனம், மெய்பரத்

தில் - உண்மையானபிரமத்தில், தன்மயமானபின்னர் - தன்மயமானபின்பு, மால்சங்கினேசையால் - விஷ்ணுவினுடைய சங்கத்தொனியில், பிறந்ததெப்பரிசு - உண்டான தெந்தப்ரகாரம்—எ-று.

(இ-ள்.) இப்படியென்று சொல்லிய வசிட்டமுனியை இராமன்பார்த்து அப்படிப்பட்ட வசுரர்களுக்கு இராசாவாய் மோக்ஷமடைந்த ஞானவான் அவனது மனம் உண்மையானபிரமத்தில் தன்மயமானபின்பு விஷ்ணுவினுடைய சங்கத்தொனியில் உண்டான தெந்தப்ரகாரம்—என்பதாம். (கூகூ)

மனதுநுவந ாசமா யநுவந்தோடு மிலாபாலாபங்களின்றிச் சீவன்முத்தரிடத்திற் சுத்தவாசனையாகத் தங்கியிருக்குமெனல்.

ஏனவினுவலு மிராமனுக்கருந்தவனுரைப்பா
னனல்பயின்றவித் தாமெனவமலவாதனைதான்
கனமில்சீவன்முத் தருக்கெலாமிதயத்தின்கண்ணே
சனனவங்குர மீண்டிலதாகியேசாரும்.

(இ-ள்.) எனவினுவலும் - என்றுகேட்டமாத்திரத்தில், இராமனுக்கு-இராகவருக்கு, அருந்தவனுரைப்பான் - அரியதவமுடைய வசிட்டர்சொல்லுவார், அனல்பயின்றவித்தாமென - அக்கினியில்வறுக்கப்பட்ட விதையாமென்றுசொல்லும்படி, அமலவாதனைதான்-சுத்தவாதனையானது, கனமில் - (சம்சார) பாரமில்லாத, சீவன் முத்தருக்கெலாம் - சீவன்முத்தர்களனைவர்க்கும், இருதயத்தின்கண் - இருதயத்தினிடத்தில், சனன வங்குரம் - சநநமென்னு முளையானது, மீண்டிலதாகியேசாரும் - திரும்பவில்லாததாகவேயிருக்கும்—எ-று.

(இ-ள்.) என்று கேட்டமாத்திரத்தில் இராகவருக்கு அரிய தவமுடைய வசிட்டர் சொல்லுவார், அக்கினியில் வறுக்கப்பட்ட விதையாமென்று சொல்லும்படி சுத்தவாதனையானது சம்சார பாரமில்லாத சீவன்முத்தர்க ளனைவர்க்கும் இருதயத்தினிடத்தில் சநநமென்னு முளையானது திரும்பவில்லாததாகவே யிருக்கும். ()

சுத்தவாசனையிருக்கின்ற கிரமத்தைப் போதித்தல்-வேறு.

சுத்தமாய்ப்பரமமாகித் தோற்றஞ்சாலுதாரமாகிச்
சுத்தமாஞ்சாத்திகத்தைத் துன்றியேவிடாமலொன்றிச்
சுத்தவாத்துமத்தியான மயமதாய்த்துவக்கொன்றில்லாச்
சுத்தவாதனைகணித்தஞ் சுழுத்திவாதனைபோனிற்கும்.

(இ-ள்.) சுத்தமாய் - பரிசுத்தமாகியும், பரமமாகி-பிரமமாகியும், தோற்றம் - உண்டாதல், சாலுதாரமாகி - மிகுந்தவுதாரமாகியும், சுத்தமாஞ் சாத்திகத்தை - சுத்தமான சாத்துவிதகுணத்தை, துன்றியேவிடாமலொன்றி - பொருந்திவிட்டுவிடாமற் கலந்ததாகியும், சுத்தம் - பரிசுத்தமான, ஆத்துமத்தியானமயமதாய் - ஆத்துமத்தியான மயமாகியும், துவக்கொன்றில்லா - ஓராரம்பமு மில்லாததாகியுமிருக்கின்ற, சுத்தவாதனையானது, நித்தம் - எப்போதும், சுழுத்திவாதனைபோனிற்கும் - சுழுத்திவாதனையைப்போலச் (சீவன்முத்தர்களிடத்தி) லிருக்கும்—எ-று.

(இ-ா.) பரிசுத்தமாகியும், பிரமமாகியும் உண்டாதல், மிகுந்த வுதாரமாகியும், சுத்தமானசாத்துவித குணத்தைப்பொருந்திவிட்டுவிடாமற்கலந்ததாகியும், பரிசுத்தமான ஆத்துமத்தியானமயமாகியும் ஓராரம்பமு மில்லாததாகியுமிருக்கின்ற சுத்தவாதனையானது எப்போதும் சுழுத்தி வாதனையைப்போலச் சீவன்முத்தர்களிடத்திலிருக்கும்—என்பதாம். (எக)

## அடங்கியிருந்த சுத்தவாசனை வெளிப்படுமெனல்.

ஆயிரவருடஞ்சென்று மங்கமேயிருக்கிலுள்ளே
மேயதாமவ்வவத்தை மெல்லெனவொருபானின்று
தேயலதாகித்தோன்றுஞ் செறியுமவ்வவத்தையாலே
தூயநற்சீவன்முத்த ருணர்ச்சியைத்தொடர்வரென்றான்.

(இ-ள்.) ஆயிரவருடஞ்சென்று-ஆயிரவருடமானாலும், அங்கமேயிருக்கில் - சரீரமானதிருந்தானால், உள்ளமேயதாம் - உள்ள மேவியிருக்கின்றதாகிய, அவ்வவத்தை - அச்சுத்தவாதனையானது, மெல்லென - மிருதுவாக, ஒருபானின்று - ஒருபக்கத்திலிருந்து, தேயலதாகி - சீரணத்தையடையாததாய், தோன்றும் - உண்டாகும், செறியுமவ்வவத்தையால் - மிகுந்தவவ்வசுத்தவாதனையினால், தூயநற்சீவன்முத்தர் - பரிசுத்தமான நன்மையையுடையசீவன்முத்தர்கள் (மனது), உணர்ச்சியைத் தொடர்வரென்றான் - அறிதலைத்தொடருமென்று வசிட்டமுனிசொன்னார்—எ-று.

(இ-ா.) ஆயிரவருடமானாலும் சரீரமான திருந்தானால் உள்ளமேவியிருக்கின்றதாகிய அச்சுத்தவாதனையானது மிருதுவாக ஒருபக்கத்திலிருந்து சீரணத்தை யடையாததாய் உண்டாகும். மிகுந்த வவ்வசுத்தவாதனையினால் பரிசுத்தமான நன்மையையுடைய சீவன்முத்தர்கள் மனது அறிதலைத் தொடருமென்று வசிட்ட முனி சொன்னார்—என்பதாம்.

(இ-ச-க-ம்.) சீவன்முத்தனது பிராரத்த மனுபவிக்கு நிமித்தம் பரத்திற் கலந்த மனது பரமாகவே வெளிப்படுமென்பதாம். (எஉ)

பிரகலாதன்கதை முற்றிற்று.

ஆக கதை உஉ-க்கு கவிதை கூஎஎ.

# காதிகதை.

அவதாரிகை.

முன்கதையி னுபாசனமூர்த்தி யனுக்கிரகத்தி லுண்டான விசாரத்தாற் சுவானுபூதி ப்ரத்யக்ஷமாய்த் தன்னைத்தவிர சகமில்லையென்றறிந்ததையறிவித்து, இவ்வாத்மானுபவ முண்டாதற்கிடரான மித்தையா மாயைத் தரிசித்ததை நீக்கவேண்டுமென்பதை யறிவிக்கு நிமித்தங் காதிகதையை நிரூபிக்கிறார்.

## மாயாவிசித்திர மறிவிக்கத்தொடங்கல்.

பிறப்பிறப்பாம் பெயருடைய விந்தமாயைப் பெருமையினை முடிவுபெறப் பேசவொண்ணா, வறப்பெரியதன்மனத்தை வென்றுன்மாளு மல்லதொருவகையாலு மகற்றலாகாச், சிறப்புடைய வன்மாயை விரிவினுள்ளச் சித்திரந்தோன்றிடவுனக்குச் செப்புங்காதை, மறப்பறுசிந்தையனாகிக் கேட்டியென்று மனுகுலநாயகனுக்கு வசிட்டன்சொல்வான்.

(இ-ள்.) பிறப்பிறப்பாம் - சநநமரணமென்னும், பெயருடைய - நாமத்தையுடைய, இந்தமாயைப்பெருமையினை - இம்மாயையினது பெருமையை, முடிவுபெறப்பேசவொண்ணா-முடிவுண்டாகச்சொல்லக்கூடாததாம், அறப்பெரியதன்மனத்தை - மிகவும் பெரிதாகிய தனது மனதை, வென்றுன்மாளும் - செயித்தானுசமாம், அல்லது - அப்படியல்லாமல், ஒருவகையாலும் - மற்றொருவகையினாலும், அகற்றலாகா - தள்ளக்கூடாது, சிறப்புடைய வன்மாயை - சிறப்புள்ள வலிய சகத்மாயையின், விரிவினுள்ள- மிகுதியிலிருக்கின்ற, சித்திரந்தோன்றிட - அதிசயந்தோற்றும்படி, உனக்குச்செப்புங்காதை - நினக்குச்சொல்லுங்காதையை, மறப்பறு சிந்தையனாகி - மறதியற்ற சித்தத்தையுடையவனாய், கேட்டியென்று - கேட்பாயென்று, மனுகுலநாயகனுக்கு - மனுகுலத்திறைவனான ஸ்ரீராமனுக்கு, வசிட்டன்சொல்வான் - வசிட்டமுனிசொல்லத்தொடங்கினார்—எ-று.

(இ-கை.) சநநமரணமென்னு நாமத்தையுடைய இம்மாயையினது பெருமையை முடிவுண்டாகச் சொல்லக்கூடாததாம். மிக

வும் பெரிதாகிய தனது மனதை செயித்தானுசமாம். அப்படியல்லாமல் மற்றொருவகையினாலும் தள்ளக்கூடாது. சிறப்புள்ள வலிய சகத்மாயையின் பிருதியிலிருக்கின்ற அதிசயந் தோற்றும்படி நினக்குச் சொல்லுங்காதையை மறதியற்ற சித்தத்தையுடையவனாய் கேட்பாயென்று மனுகுலத்திறைவனான ஸ்ரீராமனுக்கு வசிட்டமுனி சொல்லத்தொடங்கினார்—என்பதாம். (க)

காதி தவத்துக்காக மகாவிஷ்ணு ப்ரசன்னமாதல்.

மண்ணுலகிற்கோசலமா மண்டலத்தின் மறையவர்கோன்காதியென வழங்கும்பேரோ, னுண்ணினைந்தோர் கருமத்தைக்கிளையைநீங்கி யொருவனம்புக் கொருவாவியுதகத்தூடே, நண்ணியணிகழுத்தளவா யமிழநின்று நற்றவஞ்செய் தெண்டிங்க ணடந்தவெல்லை, கண்ணருளான்மாயவன்வந் தவன்முன்றோன்றிக் கருத்தென்கொ லளித்துமெனக் கழறலோடும்.

(இ-ள்.) மண்ணுலகில் - பூலோகத்தில், கோசலமா மண்டலத்தின்- கோசலமென்னுந்தேசத்தில், மறையவர்கோன் - பிரமாண சிரேஷ்டன், காதியென வழங்கும்பேரோன் - காதியென்று வழங்குகின்ற நாமத்தையுடையவன், ஓர் கருமத்தை - ஒருகாரியத்தை, உண்ணினைந்து - மனதினினைத்து, கிளையைநீங்கி - உறவினரைவிட்டு, ஒருவனம்புக்கு - ஒருவனத்திற்புகுந்து, ஒருவாவியுதகத்தூடு - ஒருதடாக சலமத்தியில், நண்ணி-பொருந்தி, அணிகழுத்தளவாய் - அழகியகண்டமட்டும், அமிழநின்று - முழுகநின்று, நற்றவஞ்செய்து - நல்லதவத்தைச்செய்து, எண்டிங்கண்டத்தவெல்லை - எட்டுமாதஞ்சென்றகாலத்தில், கண்ணருளால் - பெருமைபொருந்திய கிருபையினால், மாயவன்வந்து - விஷ்ணுவந்து, அவன்முன்றோன்றி- அக்காதியின்முன் ப்ரத்யக்ஷமாய், கருத்தென்கொல் - (உனது) கருத்தென்ன, அளித்துமென - தருகின்றோமென்று, கழறலோடும் - சொல்லவும்.

(இ-ரை.) பூலோகத்தில் கோசலமென்னுந் தேசத்தில் பிராமணசிரேஷ்டன் காதியென்று வழங்குகின்ற நாமத்தையுடையவன். ஒருகாரியத்தை மனதினினைத்து உறவினரைவிட்டு ஒருவனத்திற்புகுந்து ஒருதடாக சலமத்தியில் பொருந்தி அழகிய கண்டமட்டும் முழுகநின்று நல்லதவத்தைச்செய்து எட்டுமாதஞ்சென்ற காலத்தில் பெருமைபொருந்திய கிருபையினால் விஷ்ணுவந்து அக்காதியின்முன் ப்ரத்யக்ஷமாய் உனது கருத்தென்ன தருகின்றோமென்று சொல்லவும்—என்பதாம். (உ)

## மாயையைத் தரிசிக்கவேண்டல்.

**சலநின்றுங்கரையேறிக் காதியென்னுந் தவமறையோன் கைதொழுது சகமண்டத்தி, லலகிலுயிர்மனக்கமலத் தகலாவண்டேயச்சுதனேயனந்தாவென் றன்பாற்போற்றிச், சலனமறுதற்பரத்திற் சம்பந்தித்துச் சநநமரணத்துருவாற் சகங்களாகி, யலமருநீடாச்சரியஞ் செய்வதாய்நீ யளித்தமாயையைக் காணவருடியென்றான்.**

*(இ-ள்.) சலநின்றுங் கரையேறி - (தடாக) சலத்தினின்றுங்கரையில் வந்து, காதியென்னும் - காதியென்கின்ற, தவமறையோன் - தவத்தையுடைய பிராமணனவன், கைதொழுது - நமஸ்கரித்து, சகமண்டத்தில் - உலகமென்னு மண்டலத்தில், அலகிலுயிர்-அளவற்ற வாத்மாக்களுடைய, மனக்கமலத்து-இருதயதாமரையில், அகலாவண்டே-நீங்காதிருக்கின்றபிரமமே, அச்சுதனே-அச்சுதா, அநந்தாவென்று-அனந்தனேயென்று, அன்பாற்போற்றி-அன்பினுற்றுதித்து,சலனமறுதற்பரத்திற்சம்பந்தித்து-நிச்சலமானபிரமதிற்கலந்திருந்து. சநநமரணத்துருவால் - பிறப்பிறப்பின்வடிவத்தினுல், சகங்களாகி - உலகங்களாய், அலமருநீடாச்சரியம் - சஞ்சலப்படாநின்றமிகுந்த வதிசயத்தை, செய்வதாய் - செய்வதாயிருக்கின்ற, நீயளித்தமாயையை - நீபடைத்தமாயாஸ்வரூபத்தை, காணவருடியென்றான்- தரிசிக்கும்படியருள்வாயென்றுகேட்டார்—எ-று.*

**(இ-ா.) தடாகசலத்தி னின்றுங் கரையில்வந்து காதியென்கின்ற தவத்தையுடைய பிராமணனவன் நமஸ்கரித்து உலகமென்னு மண்டலத்தில் அளவற்ற வாத்மாக்களுடைய இருதயதாமரையில் நீங்காதிருக்கின்ற பிரமமே, அச்சுதா, அநந்தனேயென்று அன்பினுற்றுதித்து நிச்சலமான பிரமத்திற் கலந்திருந்து பிறப்பிறப்பின் வடிவத்தினுல் உலகங்களாய் சஞ்சலப்படாநின்ற மிகுந்த வதிசயத்தை செய்வதாயிருக்கின்றநீபடைத்த மாயாஸ்வரூபத்தை தரிசிக்கும்படி யருள்வாயென்று கேட்டார்—என்பதாம். (௩)**

### மாயையைத் தரிசித்ததை நீக்துவாயென்றருளி யேததல்.

**அந்தணன்வேண் டலுமாயை காண்டிகண்டா லகத்துதியேலகற்றுகென வருளிமாயன், கந்திருவர்நகரம்போன் மறைதலோடுங் கருணைமூர்த்தியைக்கண்ட களிப்பினாலே, சந்ததமுட்குளிர் காதி யந்தக்கானிற் றவத்தொடுசின்னாளிருந்து தானேயோர்நாட்,**

சிந்தனையிலரியுரைத்த வுரையைநாடித் தேமலரோடையின்மூழ் கச் சென்றானன்றே.

(இ-ள்.) அந்தணன் வேண்டலும் - பிராமணன் பிராத்தித்தவளவில், மாயைகாண்டி - (அப்படியே) மாயையைக்காணக்கடவாய், கண்டால்-பார்த்தையேயானால், அகத்துதியே லகற்றுகென வருளி - தள்ளுவாயானாற்றள்ளக் கடவாயென்றனுக்கிரகித்து, மாயன் - திருமாலானவர், கந்திருவ நகரம்போல் - கந்திருவநகரத்தைப்போல, மறைதலோடும் - மறையவும், கருணைமூர்த்தியை - கருணாஸ்வரூபியை, கண்டகளிப்பினால் - தரிசித்த சந்தோடத்தினால், சந்ததமுட்குளிர்காதி - எப்போது மகமகிழ்ச்சியடைந்த காதியானவர், அந்தக்கானில் - அவ்வனத்தில், தவத்தோடு சின்னாளிருந்து - தவசுடன் சிறிதுநாளிருந்து, தானே யோர்நாள் - தானேயொருதினம், சிந்தனையில்-மனதில், அரியுரைத்த வுரையைநாடி - விஷ்ணுவானவ ரருளிச்செய்த வாக்கியத்தைச் சிந்தித்து, தேன்மலரோடையின் - தேனுள்ள தாமரைப்பூக்கணிறைந்ததடாகத்தில், மூழ்கச்சென்றான்-மூழ்கும்படி போயினான்—எ-று.

(இ-ளை.) பிராமணன் பிரார்த்தித்தவளவில் அப்படியே மாயையைக் காணக்கடவாய். பார்த்தையேயானால், தள்ளுவாயானாற்றள்ளக்கடவாயென் றனுக்கிரகித்து திருமாலானவர் கந்திருவ நகரத்தைப்போல மறையவும் கருணாஸ்வரூபியை தரிசித்த சந்தோடத்தினால் எப்போது மகமகிழ்ச்சியடைந்த காதியானவர் அவ்வனத்தில் தவசுடன் சிறிதுநாளிருந்து தானேயொருதினம் மனதில் விஷ்ணுவானவ ரருளிச்செய்த வாக்கியத்தைச் சிந்தித்து தேனுள்ள தாமரைப்பூக்கணிறைந்த தடாகத்தில் மூழ்கும்படி போயினான்—என்பதாம். (௪)

## மாயையைத் தரிசித்தல்.

வனம்படிந்தங் கதனுட்செய் விதிக்கேவேத மந்திரமுந்தியானமுந்தான் மறந்துகாதி, யினம்பயிறன் மனைக்கேதான் றன்னைநோயா லிறந்தவனாகக்கண்டா னினத்தோரெல்லாங், கனம்படமொய்த்திருபுறத்து மலறதேவி காற்கடைக்கே விழுந்தலறக் காதன் மாதா, தனம்பருகத் தருவனபோ லணைத்துக்கொண்டு தழன்மிதித்தாள போற்பதைத்துத்தளரக்கண்டான்.

(இ-ள்.) வனம்படிந்து - தீர்த்தத்தின்மூழ்கி, அங்கதனுள் - அச்சலத்தில், செய்விதிக்கு - செய்யப்பட்ட விதிப்படிக்கு, வேதமந்திரமும் - வேதமந்திரங்களையும், தியானமும் - தியானங்களையும், காதி-காதியானவன்,

மறந்து - மறந்துவிட்டு, இனம்பயில்-பந்துக்களிருக்கின்ற, தன்மனைக்கு-தனது வீட்டில், தன்னை நோயால் - தன்னைவியாதியினால், இறந்தவனை க்கண்டான் - மரித்தவனைப்பார்த்தான், இனத்தோரெல்லாம் - பந்துக்களனைவரும், இருபுறத்தும்-இரண்டுபக்கத்திலும், கனம்படமொய்த்தலற - மிகவு மொய்த்துக்கொண்டு கதறவும், தேவி - பாரியாள், காற்கடைக்கே விழுந்தலற-காற்கடையில்விழுந்தலறவும், காதன்மாதா - புத்திரவாஞ்சையையுடைய வன்னையானவள், தனம்பருகத்தருவனபோல் - தன்னியபானம்பண்ணக்கொடுப்பனபோல, அணைத்துக்கொண்டு - கட்டிக்கொண்டு, தழன்மிதித்தாள்போல் - அக்கினியைமிதித்தவள்போல, பதைத்துத்தளரக்கண்டான் - பதைபதைத்துத்தளர்ச்சியடையப்பார்த்தான்—எ-று.

**(இ-ரை.) தீர்த்தத்தின்மூழ்கி அச்சலத்தில்செய்யப்பட்ட விதிப்படிக்கு வேதமந்திரங்களையும் தியானங்களையும் காதியானவன் மறந்துவிட்டு பந்துக்களிருக்கின்ற தனதுவீட்டில் தன்னை வியாதியினால் மரித்தவனைப் பார்த்தான். பந்துக்களனைவரும் இரண்டு பக்கத்திலும் மிகவு மொய்த்துக்கொண்டு கதறவும், பாரியாள்காற்கடையில் விழுந்தலறவும், புத்திரவாஞ்சையையுடைய வன்னையானவள் தன்னியபானம் பண்ணக்கொடுப்பனபோல கட்டிக்கொண்டு அக்கினியை மிதித்தவள்போல பதைபதைத்துத் தளர்ச்சியடையப் பார்த்தான்—என்பதாம்.** ௧(ரு)

**ஆமளவிலடுத்தனசெய் தழுஞ்சுற்றத்தா ரனல்கொளுத்தசாம்பரா யங்கமெல்லா, மீமமுறக்கண்டானச் சலத்தினூடே யிருக்கின்ற காதிதன திதயத்துள்ளே, தோமுறுமாகுலமிகுந்த புந்தியாலே துகளறத்தன்பாற்றன்னுற் றோன்றக்கண்டே, யேமுறுசெய் கைகண்மேலு முள்ளதெல்லா மிராகவகேள் ளெனமுனிவனிசைப்பதானன்.**

(இ-ள்.) ஆமளவில் - (இப்படி) யாகின்றசமயத்தில், அடுத்தனசெய்து - (அதற்) கடுத்தகாரியங்களைச்செய்து, அழுஞ்சுற்றத்தார் - அழாநின்றவுறவினர்கள், அனல்கொளுத்த - அக்கினியையிட்ட, அங்கமெல்லாம் - சரீரமியாவும், சாம்பராய் - சாம்பலாகி, ஈமமுறக்கண்டான் - மயானத்திற்பொருந்தப்பார்த்தான், அச்சலத்தினூடு - அந்தத்தீர்த்தமத்தியில், இருக்கின்றகாதி - இராநின்றகாதியானவன், தனதிதயத்துள் -தன்மனதினுள் தோமுறுகுலமிகுந்த - குற்றம்பொருந்தியவருத்தமிகுந்த, புந்தியால் - புத்தியினால், துகளறுதன்பால் - குற்றமற்றதன்னிடத்தில், தன்னுற்றோன்றக்கண்ட - தன்னாலுண்டாகப்பார்த்த, ஏமுறுசெய்கைகள் - மயக்கம்பொருந்திய கிரியைகள், மேலுமுள்ளதெல்லாம் - மேனடக்கின்றயாவையும், இராகவகேளென - ஸ்ரீராமாகேட்பாயென்று, முனிவனிசைப்பதானான் - வசிட்டமுனிசொல்லத்தொடங்கினர்—எ-று.

(இ-ள.) இப்படியாகின்ற சமயத்தில் அதற்கடுத்த காரியங்களைச்செய்து அழாநின்ற வுறவினர்கள் அக்கினியைமீட்ட சரீரமியாவும் சாம்பலாகி மயானத்திற் பொருந்தப்பார்த்தான். அந்தத் தீர்த்த மத்தியில் இராநின்ற காதியானவன் தன்மனதினுள் குற்றம்பொருந்திய வருக்கமிகுந்த புத்தியினால் குற்றமற்ற தன்னிடத்தில் தன்னாலுண்டாகப்பார்த்த மயக்கம்பொருந்திய கிரியைகள் மேனடக்கின்ற யாவையும் ஸ்ரீராமா கேட்பாயென்று வசிட்டமுனி சொல்லத்தொடங்கினார்—என்பதாம். (சா)

இப்பாரிலூணநாட்டோ ருநரிநெல்லை யிருக்கின்றநீசனாய்க்கெரிப்போர் தங்கண், மைப்பாவை யொருத்திவயற் றொருசூலாகி வருந்திவளர்ந் துறுகாலம் வந்தவெல்லை, கைப்பாலனாய்ப்பிறந்து வளர்ந்துவெந்த கரிக்கட்டை போனிறத்துக்காளையாகி, யொப்பாகி நாய்க்கெரிப்போர் குலத்தில்வந்த வொருகடைச்சி தனைமணஞ்செய் தொருமையானான்.

(இ-ள்.) இப்பாரில் - இந்தப்பூமியில், ஊணநாட்டு-ஊணதேசத்தின், ஒருநரிநெல்லை-ஒருநகரத்தின்முடிவில், இருக்கின்ற நீசன் - இராநின்றநீசனென்னும், நாய்க்கெரிப்போர்தங்கள் - நாய்க்கெரிப்போர்கள் குலத்தில், மைப்பாவையொருத்தி - கரியப்ரதமைபோன்ற ஒருபெண்ணினது, வயற்றொருசூலாகி - வயற்றிலொரு கருப்பமாய், வருந்தி - வருத்தமுற்று, வளர்ந்துறுகாலம் - வளர்ந்து சனிக்கும்பருவம், வந்தவெல்லை-வந்தபொழுது, கைப்பாலனாய்ப்பிறந்து - கைக்குழந்தையாகப்பிறந்து, வளர்ந்து-வளர்வுற்று, வெந்தகரிக்கட்டைபோல் - வெந்துபோனகரிக்கட்டைப்போல, நிறத்துக்காளையாகி-நிறத்தையுடையவாண்மகனாய், ஒப்பாகி - (இழிவிற்றனக்குத்தானே) சமானமாகி, நாய்க்கெரிப்போர்குலத்தில்-நாய்க்கெரிப்போருடையவமிசத்தில், வந்தவொருகடைச்சிதனை-பிறந்தவொருநீசப்பெண்ணை, மணம்செய்தொருமையானான் - கலியாணஞ்செய்தொற்றுமையானான்.

(இ-ள.) இந்தப்பூமியில் ஊணதேசத்தின் ஒருநகரத்தின்முடிவில் இராநின்ற நீசனென்னும் நாய்க்கெரிப்போர்கள் குலத்தில் கரியப்ரதமைபோன்ற வொருபெண்ணினது வயற்றிலொருகருப்பமாய் வருத்தமுற்று வளர்ந்து சனிக்கும் பருவம் வந்தபொழுது கைக்குழந்தையாகப்பிறந்து வளர்வுற்று வெந்துபோன கரிக்கட்டைபோல நிறத்தையுடைய வாண்மகனாய் இழிவிற் றனக்குத்தானே சமானமாகி நாய்க்கெரிப்போருடைய வமிசத்தில் பிறந்த வொரு நீசப்பெண்ணை கலியாணஞ்செய் தொற்றுமையானான். ()

வரைகளினும் வனங்களினு முதலாயெங்கு மனமுமுயிரும் போல வாழுநாளிற், றரைமிசைதன்குலம்விளங்கமைந்தர் தம்மை ச்சனிப்பித்தான் சிலநாளிற் சரைவந்தெய்தி, நரைபெருக வருத லுமே தழையாற்செய்யு நன்மனை தூரத்தியற்றி நண்ண லுற்றான், புரையறுமாதவர்போலங் குறையுநாளிற்புத்திரர்க்குஞ்சரைவந்து புகுந்ததன்றே.

(இ-ள்.) வரைகளினும் - மலைகளிலும், வனங்களினும் - கானகங்க ளிலும், முதலாயெங்கும் - முதலியவெவ்விடத்திலும், மனமும் முயிரும் போல - மனதும் பிராணனும்போல, வாழுநாளில் - ஒத்துவாழ்கின்றகா லத்தில் தரைமிசை - பூமியின்மேல், தன்குலம்விளங்க - தனதுவமிசம் விளங்கும்படி, மைந்தர்தம்மைச்சனிப்பித்தான் - பிள்ளைகளைப்பெற்றான், சிலநாளிற் சரைவந்தெய்தி - சிறிதுநாளின் மூப்புவந்தடைந்து, நரைபெ ருகவருதலும் - நரைமிகவுண்டாகவும், தழையாற்செய்யும்-பன்னகத்தாற் செய்கின்ற, நன்மனை தூரத்தியற்றி - நல்லவீடு தூரத்திற்கட்டி, நண்ண லுற்றான் - வாசஞ்செய்தான், புரையறுமாதவர்போல் - குற்றமற்ற மகா தபசிகளைப்போல, அங்குறையுநாளில் - அவ்விடத்தில் வசிக்கின்றகாலத் தில், புத்திரர்க்கும் - (தனது) பிள்ளைகளுக்கும், சரைவந்துபுகுந்தது-மூப் புவந்து பொருந்திற்று—எ-று.

(இ-ரை.) மலைகளிலும், கானகங்களிலும் முதலிய வெவ்விட த்திலும் மனதும் பிராணனும்போல ஒத்துவாழ்கின்ற காலத்தில் பூமியின்மேல் தனதுவமிசம் விளங்கும்படி பிள்ளைகளைப்பெற்றான் சிறிதுநாளின் மூப்புவந்தடைந்து நரைமிகவுண்டாகவும் பன்னகத் தாற்செய்கின்ற நல்லவீடு தூரத்திற்கட்டி வாசஞ்செய்தான். குற் றமற்ற மகா தபசிகளைப்போல அவ்விடத்தில் வசிக்கின்றகாலத் தில் தனது பிள்ளைகளுக்கும் மூப்புவந்து பொருந்திற்று-எ-ம். ()

மனையவட்கும் புத்திரர்க்குந் தனக்குஞ்சேர வார்த்திகம் வந் ததுநோக்கி வருந்துநாளிற், றனையொழியவனைவரையுங் காலன் மாய்ப்பச் சந்ததம்வாய்விட்டலறித் தனியாற்றாது, நினைவழிந் தோராசையுமற்றநேகதேச நெடிதுழல்வான்கீரமெனு நீதிநாட் டிற், புனைமுடிமன் னவநகரிற் புகுந்துவானிற் பொற்றெருப்போ லொருதெருவிற் போகும்போதில்.

(இ-ள்.) மனையவட்கும் - பாரியாளுக்கும், புத்திரர்க்கும் - பிள்ளைக ளுக்கும், தனக்கும் - தனக்கும், சேரவார்த்திகம்வந்ததுநோக்கி - ஒருமி த்துமூப்புவந்ததைப்பார்த்து, வருந்துநாளில் - வருத்தப்படுகின்றகாலத் தில், தனையொழிய - தன்னைநீங்கலாக, அனைவரையுங்காலன்மாய்ப்ப -

எல்லாரையுங்காலன்கொல்ல, சந்ததம்வாய்விட்டலறி-எப்பொழுதும்வாய்விட்டழுது, தனியாற்ருது - தனிமையைச்சகிக்கமாட்டாமல், நினைவழிந்து - நினைவுகெட்டு, ஓராசையுமற்று - ஓராசையுமில்லாதவனுய், அநேகதேசம் - அளவற்றதேசங்களில், நெடிதுழல்வான்-வெகுகாலஞ்சுழல்கின்றவன், கீரமெனுநீதிநாட்டில் - கீரமென்கின்றநீதியையுடையதேசத்தில், புனைமுடிமன்னவன் - தரிக்கப்பட்ட கிரீடத்தையுடையவரசனது, நகரம்புகுந்து - பட்டணத்திற்புகுந்து, வானிற்பொற்றெருப்போல் - விண்ணுலகத்திற்சொன்னமயமான வீதியைப்போலிருக்கின்ற, ஒருதெருவிற்போகும்போதில் - ஒருவீதியிற்செல்லும்போதில்—எ-று.

(இ-ளை.) பாரியாளுக்கும், பிள்ளைகளுக்கும், தனக்கும், ஒருமித்து மூப்புவந்ததைப்பார்த்து வருத்தப்படுகின்ற காலத்தில் தன்னை நீங்கலாக எல்லாரையுங் காலன் கொல்ல, எப்பொழுதும் வாய்விட்டழுது தனிமையைச் சகிக்கமாட்டாமல் நினைவுகெட்டு ஓராசையு மில்லாதவனுய் அளவற்ற தேசங்களில் வெகுகாலஞ் சுழல்கின்றவன் கீரமென்கின்ற நீதியையுடைய தேசத்தில் தரிக்கப்பட்ட கிரீடத்தையுடைய வரசனது பட்டணத்திற்புகுந்துவிண்ணுலகத்திற் சொன்னமயமான வீதியைப்போலிருக்கின்ற ஒருவீதியிற் செல்லும்போதில்—என்பதாம். (௬)

இறைபவன்மாண்டனனுலகங் காக்கவேறு ரிறைவனைக்கொண்டெகுதியென் றேவிச்செம்பொ, னிறைமணிபா லலங்கரித்து விடுத்ததந்தி நிருபதியாரெனத்தேடி. நேரேபோதக். கறைவடிவோடிவன்கண்டா னிவனையந்தக் கறைபடிகாணலுங் கரத்தாற் கழுத்திலேற்றி, யுறைதருபானுவினுடன்செல்லுதயனுக மொத்ததுபல்லியஞ்சூழ்ந்த துவரியொத்த.

(இ-ள்.) இறையவன் மாண்டனன் - (இந்நகரத்)தரசன் மரணமடைந்தனன், உலகங்காக்க - பூமியையிரக்ஷிக்க, வேறிறைவனை - வேருரசனை, கொண்டெகுதியென்றேவி - எடுத்துக்கொண்டு வாவென்றுசொல்லி, செம்பொன் - சிவந்தசொன்னங்களினுலும், நிறைமணியால் - நிறைந்தவிரத்தினங்களினுலும், அலங்கரித்து - அலங்காரஞ்செய்து, விடுத்த தந்தி - அனுப்பிய (பட்டத்து) யானையானது, நிருபதியாரென - அரசனுரென்று, தேடி நேரேபோத - தேடிக்கொண்டு நேரேவர, கறைவடிவோடிவன்கண்டான் - கறுத்தவுருவத்தோடிருக்கின்ற விந்தநீசன் யானையைக் கண்டான், இவனை - இந்தநீசனை, அந்தக்கறையடிகாணலும்-அந்தயானை பார்க்கவும், கரத்தாற்கழுத்திலேற்றி - துதிக்கையினுன் மத்தகத்திலேற்றிக்கொண்டு, உறைதரு - வாசஞ்செய்தல், பானுவினுடன்செல் - சூரியனேடுஞ்செல்லுகின்ற, உதயநாகமொத்தது - உதயமலைக்கொப்பாயிற்று, பலலியஞ்சூழ்ந்தது - பலவாத்தியங்கள் சூழ்ந்தது, உவரியொத்த - சமுத்திரத்துக்கொப்பாயிற்று—எ-று.

(இ-ள.) இங்கராத்தரசன் மரணமடைந்தனன். பூமியைஇர க்ஷிக்க வேறோரசனை எடுத்துக்கொண்டு வாவென்று சொல்லி சிவந்த சொன்னங்களினுலும், நிறைந்த விரத்தினங்களினுலும், அலங்காரஞ்செய்து அனுப்பிய பட்டத்து யானையானது அரசனை ரென்று தேடிக்கொண்டு நேரேவர கறுத்த வுருவத்தோடிருக்கி ன்ற விந்த நீசன் யானையைக்கண்டான். இந்த நீசனை அந்த யானை பார்க்கவும் துதிக்கையினுல் மத்தகத்தி லேற்றிக்கொண்டு வாசஞ் செய்தல் சூரியனோடுஞ் செல்லுகின்ற உதயமலைக்கொப்பாயிற்று. பலவாத்தியங்கள் சூழ்ந்தது சமுத்திரத்துக்கொப்பாயிற்று-எ-ம்.

எண்டிசையுஞ்சயசயவென் றிறைஞ்சவந்தா னிவனிறையெ ன்றலங்கரித்தா ரெழில்கொண்மாஞர், பண்டையமைச்சருஞ் சே னைத்தலைவர்தாமும் பணிதலைக்கொண்டார் தரணிபாலனுகி, மண் டலமெங்கணுஞ் செங்கோன்முறையினேச்சி மரபினுற் கவலனெ னும் வண்பேர்பெற்றுத், தொண்டையிதழார்விரும்பக்கீரநாட்டிற் சுடர்மணிச்சிங்காதனமேற் றேற்றமிக்கான்.

(இ-ள்.) எண்டிசையும் - எட்டுத்திக்குகளும், சயசயவென்று - சயசய வென்று, இறைஞ்சவந்தான் - வணங்கும்படிவந்தவனை, இவனிறையெ ன்று-இவனே வரசனென்று, எழில்கொண்மாஞர் - அழகையுடைய ஸ்தி ரீகள், அலங்கரித்தார் - அலங்காரஞ்செய்தார்கள், பண்டையமைச்சரும் - பழகியமந்திரிகளும், சேனைத்தலைவர்தாமும் - சேனுதிபதிகளும், பணிதலை க்கொண்டார் - பணியைத்தலைமேற்கொண்டார்கள், தரணிபாலனுகி - பூ மிபாலனுய், மண்டலமெங்கணும்-பூமியெங்கும், செங்கோன்முறையினே ச்சி - நீதியை முறைமையிற்செலுத்தி, மரபினுல் - முறைமையினுல், கவ லனெனும் வண்பேர்பெற்று - கவலனென்கின்ற வளப்பமுள்ள நாமந்தரி த்து, தொண்டை யிதழாற்விரும்ப - கோவைப்பழத்தையொத்த வதரத் தையுடைய மாதர்களிச்சிக்கும்படி, கீரநாட்டில்-கீரதேசத்தில், சுடர்மணி ச்சிங்காதனமேல் - விளங்குகின்றவிரத்தின சிம்மாதனத்தின்மேல், தோ ற்றமிக்கான் - விளக்கத்தின்மிகுந்தான்—எ-று.

(இ-ள.) எட்டுத்திக்குகளும் சயசயவென்று வணங்கும்படி வந்தவனை இவனே வரசனென்று அழகையுடைய ஸ்திரீகள் அல ங்காரஞ்செய்தார்கள். பழகிய மந்திரிகளும் சேனுதிபதிகளும்பணி யைத் தலைமேற்கொண்டார்கள். பூமிபாலனுய் பூமியெங்கும் நீதி யை முறையிற்செலுத்தி முறைமையினுல் கவலனென்கின்ற வள ப்பமுள்ள நாமந்தரித்து கோவைப்பழத்தையொத்த வதரத்தை யுடைய மாதர்க ளிச்சிக்கும்படி கீரதேசத்தில் விளங்குகின்ற விர த்தின சிம்மாசனத்தின்மேல் விளக்கத்தின் மிகுந்தான்-எ-ம் (கக)

நாலிரண்டு வருடமுயர் கவலனென்னு நாய்க்கெரிக்குங்கடையனர பதியாய்வாழ்ந்து, மேலிதற்பின்னொருநாளிற் றனியனுகி மெய்யலங்காரங்களெல்லாம்விட்டுத்தானே, காலினடந்துயர்மனையின்புறமுற்றத்திற்கடைவேடத்துடனுலவுகாலையாங்கே, நீலிமையானிறத்தோர்நாய்க்கெரிக்குநீசர் நேர்வந்தார் வீணையிசைநிரப்புங்கையார்.

(இ-ள்.) நாலிரண்டுவருடம் - எட்டுவருடம், உயிர்கவலனென்னு-மேலானகவலனென்னு நாமத்தையுடைய, நாய்க்கெரிக்குங்கடையன்-நாய்க்கெரிக்குநீசனுனவன், நரபதியாய்வாழ்ந்து - நரேந்திரனுகவாழ்ந்து, மேலதற்பின் - மேலதற்குப்பின்பு, ஒருநாளிற்றனியனுகி - ஒருதினத்திற்றனித்தவனுய், மெய்யலங்காரங்களெல்லாம்விட்டு - சரீரத்திலுள்ள வாபரணங்களனைத்தையுநீக்கி, தானேகாலினடந்து - தானேகானடையாகநடந்து, உயர்மனையின் - மேலானவீட்டினது, புறமுற்றத்தில் - தெருப்புறத்தில், கடைவேடத்துடன் - நீசவேடத்தோடும், உலவுகாலை - உலாவுஞ்சமயத்தில், ஆங்கு - அவ்விடத்தில், நீலிமையாநிறத்தோர் - கரியநிறத்தையுடையவர்கள், வீணையிசைநிறப்புங்கையார் - வீணகானத்தைநிறைக்கின்ற கையையுடையவர்கள், நாய்க்கெரிக்குநீசர் - நாய்க்கெரிக்குஞ்சண்டாளர்கள், நேர்வந்தார் - எதிரேவந்தார்கள்—எ-று.

(இ-ள்.) எட்டுவருடம் மேலான கவலனென்னு நாமத்தையுடைய நாய்க்கெரிக்கு நீசனுனவன் நரேந்திரனுகவாழ்ந்து மேலதற்குப்பின்பு ஒருதினத்திற்றனித்தவனுய் சரீரத்திலுள்ள வாபரணங்களனைத்தையு நீக்கி தானே கானடையாகநடந்து மேலான வீட்டினது தெருப்புறத்தில் நீசவேடத்தோடும் உலாவுஞ்சமயத்தில் அவ்விடத்தில் கரிய நிறத்தையுடையவர்கள் வீணகானத்தை நிறைக்கின்ற கையையுடையவர்கள் நாய்க்கெரிக்குஞ் சண்டாளர்கள் எதிரேவந்தார்கள்—என்பதாம். (கஉ)

யாழுடையகாளைக்குண்மேலாமற்றோ ரிருண்டநிறச் சிவந்தவிழி விருத்தனெய்திக், காழுடையநற்கீரமகிபன்றன்னைக் காண்டலுமே காதலுடன்கடைஞ்சனென்னு, ஒழுறுதொல்பெயர்வினவி நெடுங்காலத்தி னுறவாநீ யெங்ககன்று யுறைவதெங்ஙன், சூழுறு நல்விதியாலே கண்டேனென்னுத் தொடர்பெல்லாமுள்ளபடி தோன்றச்சொன்னன்.

(இ-ள்.) யாழுடையகாளைக்குள் - வீணகானஞ்செய்கின்ற கடைமார்க்குணின்றும், ஒரிருண்டநிறம் - ஒப்பற்கரியநிறத்தையும், சிவந்தவிழி-சிவந்தநேத்திரங்களுமுடைய, மேலாம்விருத்தனெய்தி - மிகவுமூப்புள்ளவன் வந்து, காழுடைய - விளக்கமுடைய, நற்கீரமகிபன்றன்னை-நல்லகீரநாட்

டுக்கதிபதியானவனே, காண்டலும் - பார்த்தமாத்திரத்தில், காதலுடன்- ஆசையோடும், கடைஞ்சனென்னும் - கடைஞ்சனென்கின்ற, ஊழுறுதொல்பெயர்வினவி - விதியினாலுற்ற பழையநாமத்தைச்சொல்லி, நெடுங் காலத்தினுறவாநீ - பழையவுறவாயிருக்கின்ற நீ, எங் ககன்றாய் - எங் கேபோனாய், உறைவதெங்ஙன் - வாசஞ்செய்வதெவ்விடம், சூழுறுநல் விதியால் - சூழ்ந்திருக்கின்ற நல்ல ஊழினால், கண்டேனென்று - (இப் பொழுது) பார்த்தேனென்று, தொடர்பெல்லாம் - (இவன் வம்மிசத்தின்) கிரமங்க ளனைத்தையும், உள்ளபடி - உள்ளப்ரகாரம், தோன்றச்சொன்னான் - தெளியச்சொன்னான் —எ-று.

(இ-ள்.) வீணாகானஞ்செய்கின்ற கடைமகர்க்கு ணின்றும் ஒப்பற்கரிய நிறத்தையும் சிவந்த நேத்திரங்களையுமுடைய மிகவு மூப்புள்ளவன் வந்து விளக்கமுடைய நல்ல கிரநாட்டுக் கதிபதியா னவனை பார்த்தமாத்திரத்தில் ஆசையோடும்கடைஞ்சனென்கின்ற விதியினாலுற்ற பழைய நாமத்தைச்சொல்லி பழைய வுறவாயிருக் கின்ற நீஎங்கேபோனாய்? வாசஞ்செய்வதெவ்விடம்? சூழ்ந்திருக் கின்ற நல்லவூழியினால் இப்பொழுது பார்த்தேனென்று இவன் வம்மிசத்தின் கிரமங்க ளனைத்தையும் உள்ளப்பிரகாரம் தெளியச் சொன்னான்—என்பதாம். (௧௩)

அதுபுகன்றவவன்றன்னைக்கவலனான வரசனிகழ்ந்ததிர்ந்துரப்பினவணின்றங்கே, கதுமெனவுள் ளேகுதலு மிவற்றை யெல் லாங் கனங்குழையார் சாளரத்திற் கண்ணிற்கண்டார், புதுமையி னானின்றார்நின் றுழியேகண்டு பூபதியாமிவன்கடைஞ்சப்புலையனு மே, லெதுசெயப்பாற் றினியென்றே துணுக்குற்றேங்கி யிடருற் றாரிவன்கலங்கா திதயத்தெண்ணி.

(இ-ள்.) அதுபுகன்ற-தனதுநீசத்தன்மையைச்சொல்லி, அவன்றனை- அந்த நீசனை, கவலனான வரசன் - கவலனென்னு மன்னனானவன், இகழ்ந்ததிர்ந்துரப்பி-நிந்தித்துப்பெருஞ்சத்தத்துடன்தட்டி, அவணின்று-அவ் விடத்தினின்றும், கதுமெனவுள்ளேகுதலும் - சீக்கிரமாக வந்தப்புரத்துக் குச்செல்லுதலும், இவற்றையெல்லாம்-இவைகளனைத்தையும், கனங்குழை யார்-கனம்பொருந்திய குண்டலத்தையுடைய விராசஸ்திரீகள், சாளரத்தில் - பலகணிவாசலினின்றும், கண்ணிற்கண்டார் - ப்ரத்தியக்ஷமாகப்பார்த்தார்கள், புதுமையினால் - அதிசயத்தினால், நின்றார் - (அவ்விடத்) திருந்த (மந்திரிமுதலிய) வர்கள், நின்றுழியேகண்டு-நின்றவிடத்திலேகண்டு, பூபதியாமிவன் - பூமிக்கரசனானவிவன், கடைஞ்சப்புலைனும் - கடைய னாகியசண்டாளனாகும், மேலெதுசெயப்பாற்று - மேலென்னசெய்யத்தக் கது, என்று துணுக்குற்று - என்றுதிடுக்குற்று, ஏங்கி - ஏக்கமுற்று, இட

ருற்றுர் - துன்பத்தை யடைந்தார்கள், இவன் கலங்காது-இவ்வரசன் கலங்காமல், இதயத்தெண்ணி - மனதிற் சிந்தித்து—எ-று.

(இ-ள.) தனது நீசத்தன்மையைச்சொல்லி அந்த நீசனைக் கவலனென்னு மன்னனனவன் நிந்தித்துப் பெருஞ் சத்தத்துடனதட்டி அவ்விடத்தினின்றும் சீக்கிரமாக வந்தப்புரத்துக்குச்செல்லுதலும் இவைகளனைத்தையும் கனம்பொருந்திய குண்டலத்தையுடைய விராசஸ்திரீகள் பலகணி வாசலினின்றும்ப்ரத்தியக்ஷமாகப் பார்த்தார்கள். அதிசபத்தினுல் அவ்விடத்திருந்த மந்திரி முதலியவர்கள்நின்றவிடத்திலேகண்டு பூமிக்கரசனுனவிவன்கடையனுகிய சண்டாளனுகும். மேலென்ன செய்யத்தக்கது என்று திடுக்குற்று ஏக்கமுற்று துன்பத்தை யடைந்தார்கள். இவ்வரசன் கலங்காமல் மனதிற் சிந்தித்து—என்பதாம். (கச)

அறியான்போலவற்றையெல்லா மறைத்துமுன்போ லாதனத்தி லிருக்கவுமங் கவனைமுன்னஞ், செறிவான வஞ்சியர்மந்திரியர் யாருந் தீண்டாதசவத்தைப்போற்றெரிசியாராய்ப், பிறியாதுநின்றனரச் சனத்துட்சேர்ந்தும் பேதமா யிவன்றனித்த பெற்றிகூறில், பொறியாருங் கல்விதன மியாதுமின்றிப் புறநாட்டி லுறும்பதிகன் போலுமன்றே.

(இ-ள்.) அவற்றையெல்லாம்-அவைகளனைத்தையும், அறியான்போல் - அறியாதவனைப்போல, மறைத்து - மறைத்துக்கொண்டு, முன்போல - முன்னையைப்போல, ஆதனத்திலிருக்கவும் - சிம்மாதனத்திலிருக்கவும், அங்கவனை - அவ்விடத்திலுள்ள வவ்வரசனை, முன்னஞ்செறிவான்-முன்னநெருக்கமாகிய, வஞ்சியர் மந்திரியர்யாரும் - மாதருமமைச்சரு மற்றுள்ளவர்களும், தீண்டாத சவத்தைப்போல் - பரிசிக்கக்கூடாத பிரேதத்தைப்போல, தரிசியாராய் - பார்க்காதவர்களாய், பிறியாது நின்றனர் - அவ்விடம்விட்டு நீங்காமலிருந்தார்கள், அச்சனத்துட் சேர்ந்தும் - அந்தச்சனங்களோடு கூடியிருந்தும், பேதமாய்-வேற்றுமையாகி, இவன்றனித்த - இவன்றனியேயிருந்த, பெற்றிகூறில் - குணத்தைச்சொல்லில், பொறியாருங் கல்வி-அறிவுநிறைந்தவித்தையும், தனம் - திரவியமும், யாதுமின்றி-எதுவுமில்லாமல், புறநாட்டில் - மறுதேயத்தில், உறும்பதிகன்போலும்-பொருந்தியவழிநடப்பதனைப்போலுமாம்—எ-று.

(இ-ள.) அவைகளனைத்தையும் அறியாதவனைப்போலமறைத்துக்கொண்டு முன்னையைப்போல சிம்மாதனத்திலிருக்கவும் அவ்விடத்திலுள்ள வவ்வரசனை முன்ன நெருக்கமாகியமாதரு மமைச்சரு மற்றுள்ளவர்களும் பரிட்சிக்கக்கூடாத பிரேதத்தைப்போல

பார்க்காதவர்களாய் அவ்விடம்விட்டு நீங்காமலிருந்தார்கள். அந் தச்சனங்களோடு கூடியிருந்தும் வேற்றுமையாகி இவன்றனியே யிருந்த குணத்தைச்சொல்லில் அறிவுநிறைந்த வித்தையும் திரவி யமும் எதுவுமில்லாமல் மறுதேயத்தில் பொருந்திய வழிநடப்ப வனைப்போலுமாம்—என்பதாம். (௧௫)

ஆயிடையாவரும்புலைநாய்க்கெரிப்போனாலே யநேகநாட்பாத கமே யடைதலானோம், போயினியோர்சாந்தியினு முய்யமாட் டோம் புனிதமாம்படிதீயிற் புகுதுமென்னாத், தீயில்விழநிச்சயித் தந் நகரோரெல்லாஞ் சிசுக்கண்முதல் விருத்தர்கடைசேரக்கூடி, வீயிலுறைவண்டுகள்போ லெரியில்வீழ்ந்தார் வேந்தனும்புலைக்க டைஞ்சன்மிகவுநொந்தான்.

(இ-ள்.) ஆயிடையாவரும் - அத்தருணத்திற் சகலரும், புலைநாய்க்கெ ரிப்போனால் - புலையனாகிய நாய்க்கெரிப்போனென்பவனால், அநேகநாள்- வெகுநாள், பாதகமே யடைதலானோம் - பாவத்தையே யடைந்தோம், போய் - பாவம்போய், இனியோர் சாந்தியினும் - இனிமேலொரு பிராசித் தத்தினாலும், உய்யமாட்டோம் - கதியையடையமாட்டோம், புனிதமாம் படி - பரிசுத்தமாகும்பொருட்டு, தீயிற்புகுதுமென்னா - அக்கினியிற் ப்ர வேசிப்போமென்று, தீயில்விழ நிச்சயித்து - அக்கினியிற் ப்ரவேசிக்க நிச்ச யஞ்செய்து, அந்நகரோரெல்லாம் - அப்பட்டணத்திலுள்ள சகலரும், சிசு க்கண் முதல் - குழந்தைகள்முதலாக, விருத்தர்கடை - வார்த்திகர்கள்பரி யந்தம், சேரக்கூடி - ஒருமிக்கக்கூடி, வீயிலுறை வண்டுகள்போல் - சண்ப கப்பூவின் மொய்க்கின்ற ஞிமிறுகளைப்போல, எரியில் வீழ்ந்தார்-அக்கினி யிற் ப்ரவேசித்தார்கள், வேந்தனும்புலைக்கடைஞ்சன் மிகவுநொந்தான் - அரசனாகிய சண்டாளன் மிகவுந்துன்பமுற்றான்—எ-று.

(இ-கா.) அத்தருணத்திற் சகலரும் புலையனாகிய நாய்க்கெரி ப்போனென்பவனால் வெகுநாள் பாவத்தையே யடைந்தோம். பாவம்போய் இனிமேலொரு பிராச்சித்தத்தினாலும் கதியை யடையமாட்டோம். பரிசுத்தமாகும்பொருட்டு அக்கினியிற் ப்ர வேசிப்போமென்று அக்கினியிற் ப்ரவேசிக்க நிச்சயஞ்செய்து அப்பட்டணத்திலுள்ள சகலரும் குழந்தைகள் முதலாக வார்த்தி கர்கள் பரியந்தம் ஒருமிக்கக்கூடி. சண்பகப்பூவின் மொய்க்கின்ற ஞிமிறுகளைப்போல அக்கினியிற் பிரவேசித்தார்கள். அரசனாகிய சண்டாளன் மிகவுந் துன்பமுற்றான்.—என்பதாம். (௧௬)

நல்வினைஞ்சேர்தலிற்சித்தந் தெளிந்துநன்று நாய்க்கெரிக்கும் புலைநிருப னுடுகிற்பான், புல்லியநந்தொடர்பாலித் தேசத்துள் ளோர் பூரியராயனல்புகுந்துபொன்றிப்போனா, ரல்லலுடனினி

யமையு மென்னநாடி யாவிவிடத் துணிந்தனலில் வீழும்போதிற்,
பல்லவம்போலெரிகடைஞ்ச னுடலிற்றுக்கப் படிபுனலுட்காதியு
டல் பதைத்ததன்றே.

(இ-ள்.) நல்லினஞ்சேர்தலில் - நன்மையான கூட்டத்தைச்சேர்ந்தத்திஞல், சித்தந்தெளிந்து-மனந்தெளிந்து, நன்றும்-நன்மையுண்டான, நாய்க்கெரிக்கும் புலை நிருபன் - நாய்க்கெரிக்கின்ற நீசராசன், நாடுகிற்பான்-சிந்திப்பான், புல்லியநந்தொடர்பால் - கீழ்மையான நமது தொடர்ச்சியிஞல், இத்தேசத்துள்ளோர்-இந்தத்தேயத்திலுள்ளவர்கள், பூரியராய்-கீழ்மக்களாகி, அனல்புகுந்து - அக்கினியிற் ப்ரவேசமாய், பொன்றிப்போஞர் - நாசமடைந்தார்கள், அல்லலுடன் - துன்பத்தோடும், இனியமையுமென்னநாடி - இனியிருந்தென்னவென்று சிந்தித்து, ஆவிவிடத்துணிந்து - உயிரைவிடும்படி நிச்சயித்து, அனலில் வீழும்போதில் - அக்கினியிற ப்ரவேசிக்கும்போது, பல்லவம்போல் - (அனலிற்) றளிரைப்போல, எரி-சிவந்த வக்கினியானது, கடைஞ்சனுடலிற்றுக்க - கடைஞ்சன் சரீரத்திலெரிக்க, புனலுட்படி - சலத்தின்முழுகியிருக்கின்ற காதியுடல் பதைத்தது - காதியின்சரீரமானது பதைபதைத்தது—எ-று.

(இ-வா.) நன்மையான கூட்டத்தைச் சேர்ந்தத்திஞல் மனந்தெளிந்து நன்மையுண்டான நாய்க்கெரிக்கின்ற நீசராசன் சிந்திப்பான் கீழ்மையான நமது தொடர்ச்சியிஞல் இந்தத் தேயத்திலுள்ளவர்கள் கீழ்மக்களாகி அக்கினியிற் ப்ரவேசமாய் நாசமடைந்தார்கள். துன்பத்தோடும் இனியிருந்தென்னவென்று சிந்தித்து உயிரைவிடும்படி நிச்சயித்து அக்கினியிற் ப்ரவேசிக்கும்போது அனலிற் றளிரைப்போல சிவந்த வக்கினியானது கடைஞ்சன் சரீரத்திலெரிக்க சலத்தின் முழுகியிருக்கின்ற காதியின் சரீரமானது பதைபதைத்தது—என்பதாம். (கஎ)

மாமாயைநின்றகன்றதெளிந்தகாதி வருமுகுர்த்தமோரிரண்
டின்மயக்கநீங்கி, யாமாரென்காண்கின்றேமென் செய்தோமென்
றெல்லா முண்ணினைந்துசலத்திடைநின்றேறி, ஆமாயிப்படியன்
றோ வுயிர்களெல்லா மரணிபத்துட் சினப்புலிப்போலவாவியோ
டித், தோமாறுநெடுமயக்கின்மனமோகித்துத் துவள்கின்றாரெனக்
கருதித் துயரந்தீர்ந்தான்.

(இ-ள்.) மாமாயை நின்றகன்று - மகாமாயையினின்றுநீங்கி, தெளிந்தகாதி - தெளிந்தகாதியானவர், வருமுகுர்த்தமோரிரண்டில் - வருகின்ற நான்குகடிகையில், மயக்கநீங்கி-பிராந்திவிட்டு, யாமார் - நாமார், என்காண்கின்றேம் - என்னபார்த்தோம், என்செய்தோமென்று - என்ன செய்தோமென்று, எல்லாமுண்ணினைந்து-சகலத்தையு மனதி னினைத்து, சலத்திடைநின்றேறி - நீரினின்றுங்கரையேறி, ஆமா - ஆச்சரியமாச்சரியம்,

இப்படியன்ருே-இப்படியல்லவா,உயிர்களெல்லாம்-சீவர்களனைத்தும்,அரணியத்துள்-காட்டினுளிருக்கின்ற, சினப்புலிபோல-கோபமுள்ளவியாக்கிரமத்தைப்போல, அவாவியோடி-தாவிச்சென்று, தோமாருநெடுமெயக்கில்-குற்றநிறைந்தமிகுந்தபிராந்தியில்,மனமோகித்து-மனமயங்கி, துவள்கின்ருரெனக்கருதி - சஞ்சலப்படுகின்ருரென்றுநினைத்து, துயரந்தீர்ந்தான்-துன்பநீங்கினுன்—எ-று.

(இ-ள.) மகாமாயையினின்றுநீங்கி தெளிந்த காதியானவர் வருகின்ற நான்குகடிகையில் பிராந்திவிட்டு நாமார்? என்னபார்த்தோம்? என்னசெய்தோமென்று சகலத்தையு மனதினினைத்து நீரினின்றுங்கரையேறி ஆச்சரிய மாச்சரியம்! இப்படியல்லவா? சீவர்களனைத்தும் காட்டினுளிருக்கின்ற கோபமுள்ள வியாக்கிரமத்தைப்போல தாவிச்சென்று குற்ற நிறைந்த மிகுந்த பிராந்தியில் மனமயங்கி சஞ்சலப்படுகின்ருரென்று நினைத்து துன்ப நீங்கினுன்—என்பதாம். (கஅ)

(இ-கஅ-க-ம்.) காதி முனியிஸ்வபானுக்கிரகத்தினுன் மாயை நீங்கும்பொருட்டதன்துற்கடஞகடஞசாமார்த்தியத்தைத்தரிசித்தாரென்பதாம்.

## காதிமுனிகண்ட சாக்கிரசொற்பனந்தீர்க்க

### சொற்பனமா யறிவிக்குநிமித்தம் வந்த வதிதியை வினவுதல்.

அக்கருத்தி னுடன்சிலஞு ளகற்றிநின்ருு ஞச்சிரமத் தவ்வையினுே ரதிதியெய்த, மிக்கமகிழ்வுடன்றேன்காய் விரும்பியூட்டிவெய்யவன்போஞ் சந்தியிற்றம் விதிகள்செய்து, தக்க சயனங்கள்பயின்றிருவர்தாமுந் தத்துவநூற் கதைகண்மொழிசமயந்தன்னி,லொக்கவுறை யதிதிதனைக் காதிநோக்கி யுத்தநின் னுடலுணங்கியோய்ந்ததென்னுே.

(இ-ள்.) அக்கருத்தினுடன்-அந்தநினைவோடும், சிலநாளகற்றி-சிலதுநாட்டள்ளி, ஆச்சிரமத்து - தனதிடத்தில், நின்ருன் - இருந்தான், அவ்வயின்-அவ்விடத்தில், ஒ ரதிதி யெய்த - ஒ ரதிதி வர, மிக்கமகிழ்வுடன்-மிகுந்தமகிழ்ச்சியோடும், தேன் - தேனும், காய் - பழங்களும், விரும்பியூட்டி - விருப்பத்துடன் புசிப்பித்து, வெய்யவன்போஞ்சந்தியில் - சூரியாஸ்தமனமான சந்தியாகாலத்தில், தம் விதிகள் செய்து - தங்க ணியமங்களைச்செய்து, தக்கசயனங்கள் பயின்று - தகைமையான சயனங்களைச்சேர்ந்து, இருவர்தாமும் - இரண்டுபேர்களும், தத்துவநூற்கதைகள் - ஆத்மஞான சாஸ்திரங்களிலுள்ளகதைகளை, மொழி சமயந்தன்னில் - பேசுகின்ற சமயத்தில், ஒக்கவுறை யதிதிதனை - கூடச் சயினித்திருக்கின்ற வதிதியை, காதிநோக்கி - காதிமுனியானவர்பார்த்து, உத்தம - உத்தமமாகிய முனியே, நின்னுடலுணங்கி - உனதுசரீரமுலர்ந்து, ஒய்ந்ததென்னுே - தளர்வடைந்ததென்ன—எ-று.

(இ-ரை.) அந்த நினைவோடும் சிலதுநாட்டள்ளி தனதிடத்தில் இருந்தான். அவ்விடத்தில் ஓரதிதிவர மிகுந்தமகிழ்ச்சியோடும் தேனும் பழங்களும் விருப்பத்துடன் புசிப்பித்து சூரியாஸ்தமனமான சந்தியாகாலத்தில் தங்கணியமங்களைச்செய்து தகைமையான சயனங்களைச்சேர்ந்து இரண்டுபேர்களும் ஆத்மஞான சாஸ்திரங்களிலுள்ள கதைகளைப்பேசுகின்ற சமயத்தில்கூடச் சயினித்திருக்கின்ற வதிதியை காதிமுனியானவர் பார்த்து உத்தமமாகிய முனியே உனதுசரீரமுலர்ந்து தளர்வடைந்ததென்ன-எ-ம். (ககூ)

## முனிவினவுக் கதிதி யுத்தரங்கூறல்

கூறுவாயெனுங்காதிக் கதிதிசொல்வான் குவலயத்துத்தரதிசையிற்குலவுசெல்வந், தேறுபுகழ்கீரமெனுந்தேசந்தன்னிலியான் மாதமொன்றிருந்தே னினியோர்வேண்ட, வாறுறயானுறைநகரிலொருவனென்பா னணுகியுரைப்பானின்னாட்டரசாயிவ்வூர், மாறுபடாதெட்டாண்டிங் கொருவன்வாழ்ந்துமற்றவனுப்க்கெரிப்பவனு மரபுதோன்ற.

(இ-ள்.) கூறுவாயெனுங்காதி - சொல்லுவாயென்று கேட்ட காதிமுனிக்கு, அதிதி சொல்வான் - அதிதியானவர் சொல்லுவார், குவலயத்து- இப்பூமண்டலத்தில், உத்தரதிசையில் - வடதிக்கில், செல்வங்குலவு - செல்வம் விளங்கிய, தேறுபுகழ்க்கீரமெனும் - தெளிவானபுகழையுடைய கீரமென்கின்ற, தேசந்தன்னில் - தேயத்தில், இனியோர்வேண்ட - அன்புள்ளவர்கள் விரும்ப, யான் மாதமொன்றிருந்தேன் - நானொருமாதமிருந்தேன், ஆறுற - சிரமந்தீர, யானுறைநகரில்-யான்வசிக்கின்றவூரில், ஒருவனென்பானணுகி - ஒருவ னென்னிடத்தில்வந்து, உரைப்பான் - சொல்லுவான், இன்னாட்டரசாய் - இந்த நாட்டுக்கிராசாவாய், இவ்வூர் மாறுபடாது - இந்தவூர் மாறுபட்டுப் போகாமல், எட்டாண்டு - எட்டுவருடம், இங்கொருவன்வாழ்ந்து - இவ்விடத்தொருவனரசபோக மனுபவித்து, மற்றவன் - பின்பவனது, நாய்க்கெரிப்பவனு மரபுதோன்ற - நாய்க்கெரிக்கு நீசனென்கின்ற மரபுதெரிய—எ-று.

(இ-ரை.) சொல்லுவாயென்றுகேட்ட காதிமுனிக்கு அதிதியானவர் சொல்லுவார். இப்பூமண்டலத்தில் வடதிக்கில் செல்வம் விளங்கிய தெளிவான புகழையுடைய கீரமென்கின்ற தேயத்தில் அன்புள்ளவர்கள் விரும்ப நானொருமாதமிருந்தேன், சிரமந்தீர யான் வசிக்கின்றவூரில் ஒருவ னென்னிடத்தில்வந்து சொல்லு

வான். இந்த நாட்டுக்கிராசாவாய் இந்தவூர் மாறுபட்டுப் போகாமல் எட்டுவருடம் இவ்விடத்தொருவ னரசபோகமனுபவித்து பின்பவனது நாய்க்கெரிக்கு நீசனென்கின்ற மரபுதெரிய-எ-ம். ()

இதுவுமது-வேறு.

அனையவன்கனல்புக் கிறந்தனனாங்கே யந்தணரனல்புகுந்த விந்தா, ரெனையரென்றிசைக்கே னென்றலுமதுகேட் டியம்பிய தேசம்விட்டேகி, கனதிரைக்கடலுட் புனற்பிறையாகைக் கரையிலப்பாதகங் கழிப்பான், றனைநிகர்மறையாற் சாந்திகள்செய்து சாந்தராயணஞ்சரித் திளைத்தேன்.

(இ-ள்.) அனையவன் - அவ்வரசன், அனல்புக்கு-அக்கினியிற் ப்ரவேசித்து, இறந்தனன் - மரணமடைந்தான், ஆங்கு - அவ்விடத்தில், அந்தணர் - பிராமணர்கள், அனல்புகுந்தவிந்தார் - அக்கினியிற் ப்ரவேசித்திறந்தார்கள், எனையரென்றிசைக்கேன்-எத்தன்மையென்று சொல்லுவேன், என்றலு மதுகேட்டு - என்றுசொல்லவு மதை யான்கேட்டு, இயம்பியதேசம்விட்டேகி - சொல்லிய தேயத்தை விட்டுப்போய், கனதிரைக் கடவுட் புனல் - மிகுந்த வலைகளையுடைய தேவதீர்த்தமான, பிரையாகக்கரையில்-பிரையாகையென்னு நதிதீரத்தில், அப்பாதகங்கழிப்பான் - அப்பாவத்தை நீக்கும்பொருட்டு, தனைநிகர்மறையால் - தனக்குத்தானே சமானமான வேதவிதியினால், சாந்திகள்செய்து-பிராச்சித்தங்கள்செய்து, சாந்தராயணஞ்சரித்திளைத்தேன்-சாந்தராயண விரதஞ்செய்திளைத்தேன்-எ-று.

(இ-வா.) அவ்வரசன் அக்கினியிற் ப்ரவேசித்து மரணமடைந்தான். அவ்விடத்தில் பிராமணர்கள் அக்கினியிற் ப்ரவேசித்திறந்தார்கள். எத்தன்மையென்று சொல்லுவேன் என்றுசொல்லவு மதையான்கேட்டு சொல்லிய தேயத்தை விட்டுப்போய் மிகுந்த வலைகளையுடைய தேவதீர்த்தமான பிரையாகையென்னு நதிதீரத்தில் அப்பாவத்தை நீக்கும்பொருட்டுதனக்குத்தானே சமானமான வேதவிதியினால் பிராச்சித்தங்கள்செய்து சாந்தராயண விரதஞ்செய்திளைத்தேன்—என்பதாம். (உக)

## முனியானவர் நீசனாய்ச்செனித்த விடங்கண்டல்.

என்றுகொண்டடகிதி யியம்பலுங்காதி யெம்முடைச் சரிதையீ தென்னாத், தன்றனியுளத்தி லதிசயமிக்குத் தன்னுடைப் புலைச்சரித் திரமாய், முன்றிகழியற்கைக் காண்பது விரும்பி முந்துளநாடுக ளகன்று, சென்றுபுக்கூண மண்டலந்தனிற்றான் செனித்துறை யிடமெலாங் கண்டான்.

(இ-ள்.) என்றுகொண்டு - இப்படியென்றுகொண்ட, அதிதி யியம்பலும்-அதிதிசொல்லவும், காதி-காதிமுனி, எம்முடைச்சரிதையீதென்ன-நமது சரித்திரமிதுவென்று, தன்றனியுளத்தில்- தனதுதனிமையானமனதில், அதிசயமிகுத்து - ஆச்சரியமிகுந்து, தன்னுடைப்புலைச்சரித்திரமாய்-தனக்குள்ள நீசநடையாய், முன்றிகழியற்கைக் காண்பதுவிரும்பி - முன்விளங்கிய வியல்பைக்காணயாசித்து, முந்துளநாடுக ளகன்றுசென்று - முன்னுள்ள தேசங்களை நீங்கிப்போய், ஊணமண்டலந்தனிபுக்கு - ஊணமண்டலத்திற்புகுந்து, தான்செனித்துறவிடமெலாங்கண்டான் - தான்பிறந்து வாசஞ்செய்தவிடங்களனைத்தையும் பார்த்தார்—எ-று.

(இ-ரை.) இப்படியென்று கொண்ட அதிதிசொல்லவும், காதிமுனி நமதுசரித்திரமிதுவென்று தனதுதனிமையானமனதில்ஆச்சரியமிகுந்து தனக்குள்ள நீசனடையாய் முன்விளங்கிய வியல்பைக்காண யாசித்து முன்னுள்ள தேசங்களை நீங்கிப்போய் ஊனமண்டலத்திற்புகுந்து தான்பிறந்து வாசஞ்செய்த விடங்களனைத்தையும் பார்த்தார்—என்பதாம். (உஉ)

## முனியானவர் நீசனு யரசுசெய்த விடங்காண்டல்.

முந்துதான்கண்ட படியெலாங்கண்டு மொய்சடைமுடிமிகத் துளக்கிச், சிந்தையில்வியந்து நான்முகன்விதிதச் செய்கையை நோக்கிமேற் சென்று, னந்தநல்லூண மண்டலநீங்கி யணிதிகழ் கீரநாடணுகி, வந்துதான்முன்னஞ் செய்தனவெல்லாம் வழுவறக் கண்டுகேட் டறிந்தான்.

(இ-ள்.) முந்து தான்கண்டபடி-முன்பு தான்பார்த்தவண்ணம்,எலாங்கண்டு - சகலத்தையும்பார்த்து, மொய்ச்சடை முடிமிகத்துளக்கி - நெருங்கிய சடாமகுடத்தை மிகவு மசைத்து, சிந்தையில்வியந்து - மனதிலதிசயித்து, நான்முகன் - பிரமதேவனது, விதிதச்செய்கையைநோக்கி - நானுவிதமான தொழிலைப்பார்த்து, மேற்சென்றுன் - மேனடந்தான், அந்த நல்லூணமண்டலநீங்கி-அந்த நன்மையுள்ள வூணமண்டலத்தைக்கடந்து, அனிதிகழ் - அழகுவிளங்கிய, கீரனுடணுகிவந்து - கீரநாட்டைநெருங்கிவந்து, தான்முன்னஞ்செய்தனவெல்லாம் - தான் முன்னரசுசெய்த சகலத்தையும், வழுவறக்கண்டு - குறைவில்லாமற்கண்டு, கேட்டறிந்தான் - கேட்டுமுணர்ந்தான்—எ-று.

(இ-ரை.) முன்புதான் பார்த்தவண்ணம் சகலத்தையும் பார்த்து நெருங்கிய சடாமகுடத்தை மிகவு மசைத்து மனதிலதிசயித்து பிரமதேவனது நானுவிதமான தொழிலைப்பார்த்துமே னடந்தான். அந்தநன்மையுள்ள வூணமண்டலத்தைக்கடந்து அழகு

விளங்கிய கிரநாட்டை நெருங்கிவந்து தான் முன்னரசுசெய்த சகலத்தையும் குறைவில்லாமற்கண்டு கேட்டு முணர்ந்தான்—எ-ம்.

(இ-ரு-க-ப்.) முனியானவர்கண்ட சாக்கிரசொற்பனத்தைச் சாக்கிரமாகவதிதி சொல்லியதைக்கேட்டதை ப்ரத்யக்ஷத்திற்பார்த் திதுதான்மாயாவிசித்திரமென் றறிந்தா ரென்பதாம். (உரு)

சாக்கியசோற்பனமானது சாக்கிரமாயினதை
விசாரித்தங்ஙனந் தோற்றுவித்த மாயைநீக்கி ஞானமடையு
நிமித்த மூர்த்தியுபாசனை செய்தல்.

இதுகொலோமுன்ன மியம்பியமாயோ னெமக்கறிவித்த மாமாயை, புதுமையாமிதனை நன்குறவறிந்தோம் புந்தியாலென்பது கருதிக், கதுமெனவந்தத் தேசநின் றகன்று கனவரைச் சாரலினணுகி, யதுலமாதவனோ ரங்கைநீருணவா யரிமகிழருந்தவம்புரிந்தான்.

(இ-ள்.) முன்னமியம்பியமாயோன் - முன்சொல்லிய விஷ்ணுவானவர், எமக்கறிவித்த மாமாயை - எமக்குத்தெரிவித்த மகாமாயையானது, இதுகொலோ - இதுதானோ, புதுமையாமிதனை - ஆச்சரியமானவிதை, புந்தியால் - அறிவினால், நன்குறவறிந்தோம் - நன்றாகத்தெரிந்தனம், என்பது கருதி - என்று நினைத்து கதுமென - சீக்கிரமாக, அந்தத்தேசநின்றகன்று - அத்தேசத்திலிருந்து நீங்கி, கனவரைச்சாரலினணுகி - பெரியமலைச்சார்பில் வந்து, அதுலமாதவன் - ஒப்பற்ற தவத்தையுடையவன, ஓரங்கை நீருணவாய் - ஒருவுள்ளங்கை தீர்த்தம் புசிப்பாகி, அரிமகிழ்-விஷ்ணு சந்தோஷிக்கின்ற, அருந்தவம்புரிந்தான் - அரிய தவத்தைச்செய்தான்.

(இ-ள.) முன்சொல்லிய விஷ்ணுவானவர் எமக்குத் தெரிவித்த மகாமாயையானது இதுதானோ! ஆச்சரியமான விதை அறிவினால் நன்றாகத்தெரிந்தனம் என்று நினைத்து சீக்கிரமாக அத்தேசத்திலிருந்து நீங்கி பெரிய மலைச்சார்பில் வந்து ஒப்பற்ற தவத்தையுடையவன் ஒருவுள்ளங்கை தீர்த்தம்புசிப்பாகி விஷ்ணு சந்தோஷிக்கின்ற அரிய தவத்தைச்செய்தான்—என்பதாம். (உச)

மூர்த்தி ப்ரசன்னமாய் மாயையைத் தெரிவித்தோம்
மேல்வேண்டிய தியாதென்று வினவுதல்.

ஆண்டுசென் றளவே யம்மலைச்சார லருந்தவனாச்சிரமத்தி, னீண்டமானீல முகிலெனத்தோன்றி நிறைதவக்காதியை நோக்கி, யீண்டியவெமதுமாயையின்பெருமை யியல்புறக்கண்டனையினிமேல், வேண்டியதென்னைக் கிரித்தடத்தியற்று மெய்த்தவமெதுபொருட்டென்ன.

(இ-ள்.) ஆண்டுசென்றளவே-ஒருவருடஞ்சென்றமாத்திரத்தில், அம்மலைச்சாரல் - அந்த மலையினதுபக்கத்தில், அருந்தவனுச்சிரமத்தின்-அரியதவத்தையுடைய காதியினுச்சிரமத்தில், நீண்டமால் - நெடுமாலானவர், நீலமுகிலெனத்தோன்றி - நீலமேகத்தைப்போற் ப்ரத்தியக்ஷமாய், நிறைதவம் - மிகுந்ததவசையுடைய, காதியைநோக்கி-காதிமுனியைப்பார்த்து, ஈண்டியவெமது - இவ்வண்ணமாக நிறைந்த வெம்முடைய, மாயையின் பெருமை - மாயையினதுமகிமையை, இயல்புறக்கண்டனை - சுபாவமாகப் பார்த்தாய், இனிமேல் வேண்டியதென்னை - இனிமேல் வேண்டுவதென்ன, கிரித்தடத்தியற்றும் - மலையிற்செய்கின்ற, மெய்த்தவமெதுபொருட்டென்ன - மெய்யான தவமியாது நிமித்தமென்று கேட்க—எ-று.

(இ-ஙா.) ஒருவருடஞ்சென்றமாத்திரத்தில் அந்தமலையினது பக்கத்தில் அரியதவத்தையுடைய காதியினுச்சிரமத்தில் நெடுமாலானவர் நீலமேகத்தைப்போற் ப்ரத்தியக்ஷமாய் மிகுந்த தவசையுடைய காதிமுனியைப்பார்த்து இவ்வண்ணமாக நிறைந்த வெம்முடைய மாயையினது மகிமையை சுபாவமாகப்பார்த்தாய் இனிமேல் வேண்டுவதென்ன மலையிற்செய்கின்ற மெய்யானதவ மியாது நிமித்தமென்று கேட்க—என்பதாம். (உரு)

## சாக்கிரசொற்பனஞ் சாக்கிரமான வந்தரங்க மியாதென முனி வினவுதல்.

துதித்தனனிறைஞ்சித் தொழுதனன்கரிய துங்கமாமுகிலினைக்கண்டு, கதித்தசாதகம்போற் களிப்புறுகாதி கருணையங் கண்ணனைநோக்கி, விதித்துநீகாட்டும் வினையிருண்மாயை விளங்குறவிதுவெனக் கண்டேன், மதித்தவம்மாயை மருமநானறியேன் மயக்கமெய்யானதென் னென்றான்.

(இ-ள்.) துதித்தனன் - தோத்திரஞ்செய்து, இறைஞ்சித்தொழுதனன் - வணங்கி நமஸ்காரஞ்செய்து, கரியதுங்கமாமுகிலினைக்கண்டு - கரியவுயர்வுள்ள மேகத்தைப்பார்த்து, கதித்தசாதகம்போல் - பூரித்தசாதகப்பக்ஷியைப்போல, களிப்புறுகாதி-மகிழ்ச்சியையுடைய காதிமுனியானவன், கருணையங்கண்ணனைநோக்கி - அழகியகிருபாதிருஷ்டியையுடையவிஷ்ணுவைப்பார்த்து, விதித்து - நியமித்து, நீகாட்டும் - நீகாட்டிய, வினையிருண்மாயை - கன்மாந்தகாரமானமாயை, விளங்குற - ப்ரகாசமாக, இதுவெனக்கண்டேன் - இப்படிப்பட்டதென்றறிந்தேன், மதித்தவம்மாயை - வரையறுத்தறிந்த வந்தமாயையினது, மருமநானறியேன்-அந்தரங்கத்தையானறியவில்லை, மயக்கம் - பிராந்தியானது, மெய்யானதென்னென்றான்-சத்தியமானதென்னவென்று கேட்டான்—எ-று.

(இ-ஙா.) தோத்திரஞ்செய்து வணங்கி நமஸ்காரஞ்செய்து கரியவுயர்வுள்ள மேகத்தைப்பார்த்து பூரித்த சாதகப்பக்ஷியைப்

போல மகிழ்ச்சியையுடைய காதிமுனியானவன் அழகிய கிருபா திருஷ்டியையுடைய விஷ்ணுவைப்பார்த்து நியமித்து நீகாட்டிய கன்மாந்தகாரமான மாயை ப்ரகாசமாக இப்படிப்பட்டதென்றறிந்தேன். வரையறுத்தறிந்த வந்த மாயையினது அந்தரங்கத்தை யானறியவில்லை. பிராந்தியானது சத்தியமான தென்னவென்று கேட்டான்—என்பதாம். (உசு)

மாயையின்ந்தரங்கத்தைப் போதிக்கத்தொடங்கல்.

மாலதற்குரைப்பா னந்தணுவிந்த மண்முதலியாவையு மனத்தின், பாலுறவிருப்ப தன்றியேபுறத்திற் பயில்வதோர்காலமுமில தா, மூலமில்கனவு மயக்கமுமதமு முதலியநெறிகளி லியாருஞ், சீலமாய்நோக்கி யனுபவிக்கின்றார் சிந்தையுட்சகமிருப்பதுவே.

(இ-ள்.) மால் - விஷ்ணுவானவர், அதற்குரைப்பான் - அதற்குச்சொல்லுவார், அந்தணு - பிராமணு, இந்தமண்முதலியாவையும் - இப்பூமிமுதலிய சகலமும், மனத்தின்பாலுற - மனதினிடத்திற்பொருந்த, இருப்பதன்றி - இருப்பதேயல்லாமல், புறத்திற்பயில்வது - புறம்பிலிருப்பதுஓர்காலமுமிலதாம் - ஒருகாலத்திலு மில்லாததாம், மூலமில்கனவும் - காரணமில்லாத சொற்பனமும், மயக்கமும் - பிரமையும், மதமுமுதலிய - மதமுமுதலாகிய, நெறிகளிலியாரும்-மார்க்கங்களிலியாவரும், சீலமாய்நோக்கி - ஒழுங்காகப்பார்த்து, அனுபவிக்கின்றார் - அனுபவிக்கின்றார்கள், சிந்தையுட்சகமிருப்பது - சித்தத்தினுள் சகமிருப்பதாம்—எ-று.

(இ-ரை.) விஷ்ணுவானவர் அதற்குச் சொல்லுவார். பிராமணு! இப்பூமிமுதலிய சகலமும் மனதினிடத்திற்பொருந்த விருப்பதேயல்லாமல் புறம்பிலிருப்பது ஒருகாலத்திலு மில்லாததாம். காரணமில்லாத சொற்பனமும் பிரமையும் மதமு முதலாகிய மார்க்கங்களிலியாவரும் ஒழுங்காகப்பார்த்து அனுபவிக்கின்றார்கள், சித்தத்தினுள் சகமிருப்பதாம்—என்பதாம்.

(இ-மு-க-.) மயக்கத்திற்றோற்றிய ப்ரபஞ்சஞ் சத்தியமாகத் தோற்றினதையறிவிக்குள்மித்யைமித்தையான மனமே ப்ரபஞ்சமாமென் றறிவித்ததாம். (உஎ)

அனந்தமாய்விரிந்த சகத்திரளெல்லா மயர்வறவமர்வதற்கிடமா, மனந்தனுலிந்த நாய்ப்புலைத்தன்மை வெளிசெயின் மற்றிதில் வியப்பென், கனந்தருபத்திப் பாச்சலின் வயத்தாற் கவடப்புலைத் திறந்தெரிந்துளதா, முனந்தொடரதிதி தானுமப்படியே மோகங் கண்முழுவதுங் கண்டான்.

(இ-ள்.) அனந்தமாய்விரிந்த - அளவின்றிப்பரந்திருக்கின்ற,சகத்திரளெல்லாம் - சகக்கூட்டங்களனைத்தும், அயர்வற - தளர்வில்லாமல், அம

ர்வதற்கிடமாம் - அமர்ந்திருப்பதற்கிடமான, மனந்தனுல் - மனதினுல், இந்நாய்ப்புலைத்தன்மை - இக்கடையனுன நீசத்தன்மையை, வெளிசெயின் - வெளிப்படுத்தினுல், இதில்வியப்பென் - இதிலதிசயமென்ன, கனந்தரு-மிகுதியான, பத்திபாச்சலின் - ப்ரதிபாமாத்திரத்தின், வயத்தால் - வசத்தினுல், கடைப்புலைத்திறம் - கடையான நீசத்தன்மையை, தெரிந்துளதாம் - அறிந்துளதாம், முனந்தொடரதிதிதானும் - முன்புதொடர்ந்துவந்தவதிதியும், அப்படியே-அந்தப்பிரகாரமே, மோகங்கண்முழுதுங் கண்டான் - மயக்கங்களனைத்தையும் பார்த்தான்—எ-று.

(இ-ள்.) அளவின்றிப் பரந்திருக்கின்ற சகக்கூட்டங்களனைத்தும் தளர்வில்லாமல் அமர்ந்திருப்பதற் கிடமானமனதினுல் இக்கடையனுன நீசத்தன்மையை வெளிப்படுத்தினுல் இதிலதிசயமென்ன? மிகுதியான ப்ரதிபாமாத்திரத்தின் வசத்தினுல் கடையான நீசத்தன்மையை அறிந்துளதாம். முன்பு தொடர்ந்துவந்த வதிதியும் அந்தப்ரகாரமே மயக்கங்களனைத்தையும்பார்த்தான்-எ-ம். ()

கண்டவப்படியே நாய்ப்புலைத்தன்மை காகதாலீயயோகத்தால், வண்டுறைறையூண கிரமண்டலத்தோர் மனத்தினும் பத்திபாய்ந் துளதா, லெண்டிருபத்தி பாச்சலென்றொருகா லெண்ணறு பெயர்க்குமுன் ரேன்றும், விண்டநெஞ்சியற்கை காகதாலீயநிலைமைபோல்விசித்திர கதியாம்.

(இ-ள்.) கண்டவப்படியே - பார்த்தவந்த ப்ரகாரமே, நாய்ப்புலைத்தன்மை - நாய்க்கெரிக்கு நீசத்தன்மையை, காததாலீயயோகத்தால் - காகதாலீய சம்பந்தத்தினுல், வண்டுறை - வண்டுகள்வாசஞ்செய்கின்ற, ஊணகிர மண்டலத்தோர் - ஊணமண்டலத்துக்குங் கிரமண்டலத்துமுள்ளவர்களுடைய, மனத்தினும்-மனதிலும், பத்திபாய்ந்துளது-பத்திபாய்ந்துள்ளது, எண்டிருபத்திபாச்சல் - எண்ணுகின்ற விரண்டுபத்திபாச்சலும், ஒருகால் - ஏககாலத்தில, எண்ணறுபெயர்க்கும் - அளவற்ற பெயர்களுக்கும், முன்ரேன்றும் - முன்னேதோற்றும், விண்டநெஞ்சியற்கை - சொல்லப்பட்ட மனத்தன்மையானது, காகதாலீயநிலைமைபோல் - காகதாலீயஞாயத்தைப்போல, விசித்திரகதியாம் - அதிசயமான நடையாம்—எ-று.

(இ-ள்.) பார்த்தவந்த ப்ரகாரமே நாய்க்கெரிக்கு நீசத்தன்மையை காகதாலீய சம்பந்தத்தினுல் வண்டுகள்வாசஞ்செய்கின்ற ஊணமண்டலத்துக்குங் கிரமண்டலத்து முள்ளவர்களுடைய மனதிலும் பத்திபாய்ந்துள்ளது. எண்ணுகின்ற விரண்டுபத்திபாச்சலும் ஏககாலத்தில் அளவற்றபெயர்களுக்கும் முன்னேதோற்றும். சொல்லப்பட்ட மனத்தன்மையானதுகாகதாலீயஞாயத்தைப்போல அதிசயமானநடையாம்—என்பதாம். (உக)

அப்படியன்றோ சொற்பனமொன்றை யநேகமானிடர் தனி காண்பர், கைப்படுவிநோத மொன்றிலேமகிழ்வர் காதலரநேகமானவர்கள், செப்பியகடைஞ்ச னுனவப்புலையன் திருமனையூணமண்டலத்தே, தப்பறவந்தக் குறியினுன்முன்னே சனித்துள னப்படிதானே.

(இ-ள்.) அப்படியன்றோ - அப்படியல்லவா, சொற்பனமொன்றை - ஒரு சொற்பனத்தையே, அநேகமானிடர் - அளவற்ற மனிதர்கள், தனிகாண்பர்-தனித்தனிப்பார்ப்பார்கள், கைப்படுவிநோதமொன்றில்-கைவசமானவொருவிளையாட்டினுல், காதலரநேகமானவர்கள்-குழந்தைகள்பலர், மகிழ்வர் - களிப்பார்கள், செப்பியகடைஞ்சனுனவப்புலையன் - சொல்லிய கடைஞ்சனுகிய வந்தநீசனுனவன், ஊணமண்டலத்து - ஊணமண்டலத்திலுள்ள, திருமனை - அழகியவீட்டில், தப்பறவந்தக்குறியினுல் - தவருமலக்குறிப்பினுல், அப்படிதானே முன்னேசனித்துளன் - அந்தப்ரகாரமே முன்னேபிறந்திருந்தான்—எ-று.

(இ-ரை.) அப்படியல்லவா ஒருசொற்பனத்தையே அளவற்ற மனிதர்கள் தனித்தனி பார்ப்பார்கள். கைவசமான வொருவிளையாட்டினுல் குழந்தைகள் பலர் களிப்பார்கள். சொல்லிய கடைஞ்சனுகிய வந்தநீசனுனவன் ஊணமண்டலத்திலுள்ள அழகிய வீட்டில் தவருமலக்குறிப்பினுல் அந்தப்ரகாரமே முன்னே பிறந்திருந்தான்—என்பதாம். (ககய)

அத்திறந்தானே தமரெலாமிறப்ப வன்னியதேசத்தையடைந்தான், சத்திரநிழற்ற கிரதேசத்திற்றலைவனுய்ப்பின்கனல்புக்கா, னுத்தமமாநின் னுளத்திலேவெறிதே யுன்னுசம்பந்தமாயதனுற், பத்திபாய்த்துளதா லப்படியாகப் பகர்புலைக்கடைஞ்சனதியற்கை.

(இ-ள்.) அத்திறம் - அக்காரணத்தினுல், தமரெலாமிறப்ப - உறவினரனைவரு மரணமடைய, அன்னியதேசத்தை யடைந்தான் - அயலான நாட்டையடைந்தான், சத்திரநிழற்ற - வெண்கொற்றக் கொடைநிழலைச் செய்ய, கிரதேசத்தில் - கிரமண்டலத்தில், தலைவனுய் - இராசாவாகி,பின்கனல்புக்கான் - பின்பக்கினியிற் ப்ரவேசித்து, உத்தமமாம்-உத்தமமான, நின்னுளத்தில் - உன்மனதில், வெறிதேயுன்னும் - வீணுகநினைக்கின்ற, சம்பந்தமாயதனுல் - சம்பந்தமாயிருக்கின்ற வதனுல், பகர்புலைக்கடைஞ்சனதியற்கை - சொல்லப்பட்ட நீசனியல்பானது, அப்படியாக - அந்தப்ரகாரமாக, பத்திபாய்ந்துளது - ப்ரதிபலித்தது—எ-று.

(இ-ரை.) அக்காரணத்தினுல் உறவினரனைவரு மரணமடைய அயலான நாட்டையடைந்தான். வெண்கொற்றக் கொடைநிழலைச் செய்ய கிரமண்டலத்தில் இராசாவாகி பின்பக்கினியிற் ப்ரவேசி

த்து உத்தமமான உன்மனதில் வீணாக நினைக்கின்ற சம்பந்தமாயிருக்கின்ற வதனால் சொல்லப்பட்ட நீசனியல்பானது அந்த ப்ரகாரமாக ப்ரதிபலித்தது—என்பதாம்.

(இ-சு-க-ம்.) சகலகற்பனையும் வைத்திருக்கின்ற மனமோர்காலத்திலொன்றை வெளிப்படுத்தி லதிலென்ன வியப்பென்றும், காகதாலீயஞாயத்தைப்போல வுன்மனதி னீசத்தன்மை பற்றிபாய்ந்தபடியே யதிமனத்திலுங் கீரமண்டலத்தார் மனத்தினு மேககாலத்திற் பத்திபாய்ந்தபடியால் விசித்திரமாகக்காணப்பட்டதென்றும், அநேகரொருசொற்பனங் கண்டதுபோலச் சொல்லப்பட்ட யாவரு மேககாலத்திற் றீர்க்கசொற்பனமென்னு முனது நீசப்பிறப்பையு மரசாக்ஷியையு மக்கினிப்ரவேசத்தையுங் கண்டார்களென்றுஞ் சொற்பனங்கண்ட தொருவனேக தேசத்திற் சாக்கிரமாய்க்காணப்படுவதுபோல, வுனக்குத்தோற்றின சாக்கிரசொற்பனஞ் சாக்கிரமாகத் தோற்றினதென்று மறிவாயென்பதாம்.

---

## இம்மாயையின் மயங்கினவர்க ளஞ்ஞானியென்றும், மயங்காதவர்கள் ஞானியென்று மறிவித்தல்.

இவனவனானீ யதுவெனதென்றே யிடரின்மூழ்குவ ரறிவில்லா, ரவனியாமுழுது நாமெனுமுண்மை யறிந்தவரழுங்கிநின்றயரார், பவனமார்பொருளிற் பகிர்வுறுமனத்தாற் பாவனைபுந்தியிற் பொருந்திக், கவருறாரதனி லிவர்கண்மோகத்திற் கவல்வுறார்தத் துவங் கண்டோர்.

(இ-ள்.) இவன் - இவனென்றும், அவன் - அவனென்றும், நான்-நானென்றும், ஈது - இதுவென்றும், அது - அதுவென்றும், எனதென்று - எனதென்றுஞ் சிந்திக்கின்ற, அறிவில்லார் - அறிவில்லாதவர்கள், இடரின் மூழ்குவர் - துன்பத்தி லழுந்துவார்கள், அவனியாமுழுதும் - பூமிமுதலிய வனைத்தும், நாமெனுமுண்மையறிந்தவர் - யாமென்கின்றவுண்மையையறிந்தவர்கள், அழுங்கிநின்றயரார்-துன்பப்பட்டுத் தளர்ச்சியையடையார்கள், பவனமார்பொருளில் - பூமியினிறைந்தவஸ்துக்களில், பகிர்வுறு மனத்தால் - வேற்றுமையுள்ள மனதினால், பாவனை- - பாவனையோடு, புந்தியிற்பொருந்தி - புத்தியிற்பொருத்தமாகி, அதனில் - அதில், கவருறார்- ஆசையையடையமாட்டார்கள், இவர்கண்மோகத்தில் - இவ்வஞ்ஞானிகள் மயக்கத்தில், தத்துவங்கண்டோர் - தத்துவஞானத்தை யறிந்தவர்கள், கவல்வுறார் - வருத்தமடையார்கள்—எ-று.

(இ-ரை.) இவனென்றும், அவனென்றும், நானென்றும், இதுவென்றும், அதுவென்றும், எனதென்றுஞ் சிந்திக்கின்ற அறிவில்லாதவர்கள் துன்பத்தி லழுந்துவார்கள். பூமி முதலிய வனைத்தும் யாமென்கின்ற வுண்மையை யறிந்தவர்கள் துன்பப்பட்டுத் தளர்

சியை யடையார்கள். பூமியினிறைந்த வஸ்துக்களில் வேற்றுமையுள்ள மனதினால் பாவனையோடு புத்தியிற் பொருத்தமாகி அதில் ஆசையை யடையமாட்டார்கள். இவ்வஞ்ஞானிகள் மயக்கத்தில் தத்துவஞானத்தை யறிந்தவர்கள் வருத்தமடையார்கள்-எ-ம். ()

ஞானபூரணமெய் தாமையான்மனத்தி னண்ணியமோகத்தைநாடி
யீனமென்றகற்ற வறிகிலையிதனு லிந்தமோகத்திலேகணத்தி
னீநனியமிழ லுற்றனையிந்த நெடியமோகத்திகி ரிக்கு
மானதந்தானே யச்சதாமதனை வலிந்திடர்வுறிலது நலிபா.

(இ-ள்.) ஞானபூரணமெய்தாமையால் - ஞானமானது பூரணத்தை யடையாததினால், மனத்தில்-மனதில், நண்ணியமோகத்தைநாடி-பொருந்திய மயக்கத்தைப்பார்த்து, ஈனமென்றகற்றவறிகிலை - இழிவென்றுதள்ளவறிந்தாயில்லை, இதனுலிந்தமோகத்தில் - இதனாலிம்மயக்கத்தில், கணத்தினீநனியமிழலுற்றனை - க்ஷணத்தினீ மிகவுமமிழ்ந்தினாய், இந்த நெடியமோகத்திகிரிக்கு - இம்மிகுந்த மோகமென்னுஞ்சக்கரத்துக்கு, மானதந்தானேயச்சதாம் - மனதே யச்சமாகும், அதனை - அம்மனதை, வலிந்தடர்வுறில் - (விவேக) வல்லமையினாற்கெடுக்கில், அது நலியா - அம்மாயை வருத்தமாட்டாது—எ-று.

(இ-தை.) ஞானமானது பூரணத்தை யடையாததினால் மனதில் பொருந்திய மயக்கத்தைப்பார்த்து இழிவென்று தள்ளவறிந்தாயில்லை. இதனா லிம்மயக்கத்தில் க்ஷணத்தினீ மிகவு மமிழ்ந்தினாய், இம்மிகுந்த மோகமென்னுஞ் சக்கரத்துக்கு மனதே யச்சமாகும். அம்மனதை விவேக வல்லமையினாற்கெடுக்கில் அம்மாயை வருத்தமாட்டாது—என்பதாம். (ஙுஙு)

(இ-உ-க-ம்.) மாயாரூபமான மனதைக்கெடுக்கி லஃது கெடுமென்பதாம்.

தவஞ்செய்யி னிம்மாயை நீங்கி
ஞான முதிக்குமென் றனுக்கிரகித் தேததல்.

எழுதிநீகிரியின் முழையிடைவருட மீரைந்து தவநனி யியற்றின், முழுதுமாய்முடிவொன் றிலாதமெய்ஞ்ஞான முற்றுதியென்றுபின்முகுந்தன், றொழுதகுதோற்ற மெழுந்துழிமறையத் துயருறுமோகங்கணீங்கிப், பழுதறுகாதி கற்பனையெல்லாம் பற்றறுத்தருந்தவம் புரிந்தான்.

(இ-ள்.) நீயெழுதி - நீயெழுந்திருந்து, கிரியின்முழையிடை - மலையின் குகையினிடத்தில், வருடமீரைந்து - பத்துவருடம், தவநனியியற்றின் - தவத்தை மிகவுஞ்செய்தால், முழுதுமாய-பூரணமாய், முடிவொன்றிலாத - முடிவொன்றுமில்லாத, மெய்ஞ்ஞான முற்றுதியென்று - மெய்ஞ்ஞான முதிரக்கடவாயென் (றனுக்கிரகஞ்செய்து), பின்முகுந்தன் - பின்பு விஷ்ணுவானவர், தொழுதகு - வணங்குதற்குரிய, தோற்றம் - தோற்றமான்வடிவம், எழுந்துழிமறைய - எழுந்தவிடத்தின் மறைந்துபோக, துயருறும் - துன்பம்பொருந்திய, மோகங்கணீங்கி-மயக்கங்கள்விடுபட்டு, பழுதறுகாதி - குற்றமற்ற காதிமுனியானவர், கற்பனையெல்லாம் - கற்ப

னைகளனைத்தையும், பற்றறுத்து - பற்றில்லாமற்கெடுத்து, அருந்தவம்புரிந்தான் - அரியதவத்தைச் செய்தான்—எ-று.

(இ-ரை.) நீபெழுந்திருந்து மலையின் குகையினிடத்தில்பத்து வருடம் தவத்தை மிகவுஞ் செய்தால் பூரணமாய் முடிவொன்றுமில்லாத மெய்ஞ்ஞான முதிரக்கடவாயென் றனுக்கிரகஞ்செய்து பின்பு விஷ்ணுவானவர் வணங்குதற்குரிய தோற்றமான வடிவம் எழுந்தவிடத்தின் மறைந்துபோக துன்பம் பொருந்திய மயக்கங்கள் விடுபட்டு குற்றமற்ற காதிமுனியானவர் கற்பனைகளனைத்தையும் பற்றில்லாமற் கெடுத்து அரியதவத்தைச்செய்தான்-எ-ம். ()

## ஞானமடைதல்.

வருடமோர்பத்தின் ஞானபூரணனுய் வாழ்ந்தனன் பின்னரேதனதாம், பொருவில் சற்பாவ மடைந்துயர் தோனுய்ப்பொருந்திய பயந்துயர் நழுவிப், பருகுறுபோகத் திச்சையற்றுள்ளபடியிலேசந்ததஞ் சுகமே, யுருவமாஞ்சீவன் முத்தனுயாறி யுவாமதியெனவுள நிறைந்தான்.

(இ-ள்.) வருடமோர்பத்தின் - பத்துவருடத்தில், ஞானபூரணனுய்-ஞானத்தாற் பூரணமானவனுய், வாழ்ந்தனன் - (காதிமுனியானவன்)வாழ்ந்தான், பின்னர் - பின்பு, தனதாம் - தன்னதான, பொருவில்-ஒப்பில்லாத, சற்பாவமடைந்து - சற்பாவத்தையடைந்து, உயர்ந்தோனுய் - மேலானவனுய், பொருந்தியபயம் - பொருந்தியவச்சமும், துயர்நழுவி - துன்பமுநீங்கி, பருகுறுபோகத்து - அனுபவிக்கின்றபோகத்தில், இச்சையற்று - இச்சையில்லாமல், உள்ளபடியில் - உள்ளப்பிரகாரமாய், சந்ததம்-எப்போதும், சுகமேயுருவமாம் - ஆநந்தமே ஸ்வரூபமாகிய, சீவன்முத்தனுயாறி - சீவன் முத்தியை யடைந்தவனுய் விஸ்ராந்தியடைந்து, உவாமதியென - பூரணசந்திரனைப்போல, உளநிறைந்தான் - மனது பூரணமானுன்—எ-று.

(இ-ரை.) பத்துவருடத்தில் ஞானத்தாற் பூரணமானவனுய் காதிமுனியானவன் வாழ்ந்தான். பின்பு தன்னதான ஒப்பில்லாத சற்பாவத்தை யடைந்து மேலானவனுய் பொருந்திய வச்சமும் துன்பமுநீங்கி அனுபவிக்கின்ற போகத்தில் இச்சையில்லாமல் உள்ளப்ரகாரமாய் எப்போதும் ஆநந்தமே ஸ்வரூபமாகிய சீவன் முத்தியை யடைந்தவனுய் விஸ்ராந்தியடைந்து பூரணசந்திரனைப் போல மனது பூரணமானுன்—என்பதாம்.

(இ-உ-க-ம்.) சமாதியின்கண் ணுதிக்கு மனோவிசித்திரத்தைப்பார்த்த ... தயதின்காரணமான சைதன்யத்திற் கரைக்க வச்சைதன்ய மொன்றே ப்ரகாசிக்குமென்றறிந் தாநந்தித் ததனுற் பூரணமானுரென்பதாம். ()

காதிகதை முற்றிற்று.

ஆக கதை உங-க்கு கவிதை கoகஉ.